சைவ ஆதீனங்கள்



ஊரன் அடிகள்

சைவ ஆதீனங்கள்

சைவ ஆதீனங்கள்

ஆசிரியர்

சன்மார்க்க தேசிகன்

ஊரன் அடிகள்

சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம்

தபால் பெட்டி எண். 2

மனை எண் 64, முருகேசன் சாலை

என்.எல்.சி. ஆபிசர்ஸ் நகர்

வடலூர் - 607 303, கடலூர் மாவட்டம்

தொலைபேசி : (04142) 259 382 செல் : 9443729881

நூற் குறிப்பு

நூற் பெயர் : சைவ ஆதீனங்கள்

முதற் பதிப்பு : 22.05.2002 ஆசிரியரின் 70-ஆம் அகவைத் தொடக்க நாள்

இரண்டாம் பதிப்பு : 29.09.2009

நூற் பொருள் : வரலாறு

வெளியீடு : சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம்
தபால்பெட்டி எண் 2
மனை எண் 64, முருகேசன் சாலை
என்.எல்.சி. ஆபிசர்ஸ் நகர்
வடலூர் - 607 303, கடலூர் மாவட்டம்
தொலைபேசி : (04142) 259 382
செல் : 9443729881

பக்கங்கள் : xxxii + 920 + 32 வண்ணப்படங்கள் = 984

நூல் அளவு : டெம்மி 1/8

எழுத்து : 12.5 புள்ளி

அச்சுத் தாள் : மேப்லித்தோ

விலை : ரூ. 400.00

கணினி அச்சு & அச்சிட்டோர் : சபாநாயகம் பிரிண்டர்ஸ், 176, கீழ வீதி, சிதம்பரம் - 608 001.
தொலைபேசி : (04144) 223020, 223040
39, மில்லர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010
தொலைபேசி : (044) 26401807

சமர்ப்பணம்

திருக்கயிலாய பரம்பரை
மெய்கண்ட சந்தானம்
தருமபுர ஆதீனம்
26-ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
அவர்களது
செங்கமலப் பொற்பாதங்களில்
இந்நூல்
காணிக்கையாக
நாற்பதாண்டு கால
நட்பின் அடையாளமாகச்
சமர்ப்பிக்கப் பெறுகிறது

சைவ ஆதீனங்கள்

இரண்டாம் பதிப்பின் முன்னுரை

உ
திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி
வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே

சைவ ஆதீனங்கள் எல்லாவற்றின் வரலாற்றையும் கூறும் இந்நூலின் சிறப்பை முதற்பதிப்பின் முன்னுரையால் அறியலாம்.

இதன் முதற்பதிப்பு 22-05-2002-இல் எமது 70-ஆம் அகவைத் தொடக்கநாளில் சென்னை தியாகராயநகர் சர் பிட்டி தியாகராயர் கலையரங்கில் மிகச் சிறந்த வெளியீட்டு விழா நடத்தி வெளியிடப் பெற்றது. விழா அழைப்பிதழை இந்நூலின் பின்னிணைப்பில் காணலாம்.

21 ஆதீனங்களின் குருமகாசந்நிதானங்களை அழைத் திருந்தோம். 13 குருமகாசந்நிதானங்கள் எழுந்தருளிச் சிறப்பித்தனர். பத்மபூஷண் அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம், முன்னாள் அமைச்சர் அருளாளர் இராம. வீரப்பன், பத்மஸ்ரீ நல்லி குப்புசாமி செட்டியார் ஆகிய பெருந்தகையாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். எழுந்தருளிச் சிறப்பித்த சந்நிதானங்களின் திருப்பெயர் களையும் நூலின் பின்னிணைப்பில் காணலாம்.

அருட்செல்வர் மகாலிங்கம் அவர்கள் உரையாற்றத் தொடங்குமுன், தோளில் இருந்த மேலாடையை எடுத்து இடுப்பில் சுற்றிக் கட்டிக்கொண்டு, சந்நிதானங்கள் அனைவரின் திருமுன்னர் மேடையில் நிலந்தோயக் கீழே விழுந்து வணங்கி எழுந்து,''இந்த மேடை சிவலோகம் போலக் காட்சி யளிக்கிறது'' என்று கூறிப் பேச்சைத் தொடங்கினார். அருட்செல்வரின் இவ்வருஞ்செயல் அவையோர் அனைவரின் உள்ளத்தையும் தொட்டது. உண்மையிலேயே அவர் ஒரு பெரிய மனிதர் (பெருந்தகை) என்பதை அவையோர் அனைவரும் அறிந்து மகிழ்ந்தனர். '' பணியுமாம் என்றும் பெருமை '' என்னும் குறட்பாவை (978) மேடையில் ஒருவர் நினைவு கூர்ந்தார். விழாத் தொடக்கத்தில் நிகழ்ந்த அருட்செல்வரின் இச்செயலும், விழா நிறைவில் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் ஆற்றிய சிறப்புரையும் விழாவுக்கு மகுடம் வைத்தாற்போல் அமைந்தன.

சைவ ஆதீனங்கள் 18, வீரசைவ ஆதீனங்கள் 12, கௌமார மடங்கள் 2 ஆக 32 ஆதீனங்களையும் ஒரே நூலாக வெளியிடுவது என்பதுதான் தொடக்க காலத் திட்டம். அப்படித்தான் முன்னறிவிப்புச் செய்யப்பெற்றது; விழா அழைப்பிதழிலும் அச்சிடப் பெற்றது. நூல் அச்சுப் பணிக்காகத் திருச்சிராப்பள்ளியில் தங்கியிருந்தபோது குளியலறையில் வழுக்கி விழுந்து காலில் அடிபட்டு மருத்துவம் செய்ய நேர்ந்ததால் திட்டமிட்டிருந்தவாறு நூற்பணியை முழுமையாக முடிக்க முடியவில்லை. சைவ ஆதீனங்கள் 18-இன் வரலாற்றை மட்டுமே தனி ஒரு நூலாக வெளியிடும் நிலை ஏற்பட்டது.

வீரசைவ ஆதீனங்கள் கௌமார மடங்கள் எழுத்துப் பணி முழுமை பெறாமல் பாதியிலேயே நின்றுவிட்டது. அடுத்தடுத்த ஆண்டுகளில் தொடர்ந்து எழுதி முடித்து வெளியிட எண்ணியும் முடியாமற் போயிற்று. சைவ

ஆதீனங்கள் அச்சிட்டபடிகள் விற்பனையாகித் தீர்ந்து விட்டன. இரண்டாம் பதிப்பு வெளியிட வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனோடு வீரசைவ ஆதீனங்கள் முதற் பதிப்பையும் ஒரு தனி நூலாக வெளியிட்டு விடவேண்டும் என்று இருந்தோம்.

ஐந்து ஆண்டுகள் கடந்தன. 2007 நவம்பர் மாதத்தில் மலேசியாவுக்கு நான்காவது முறையாகச் சென்றிருந்தோம். அனைத்துலக சைவ சித்தாந்த நான்காவது மாநாட்டை தருமபுர ஆதீனம் 2008 மார்ச் 21; 22; 23 தேதிகளில் மதுரையில் நடத்தவிருக்கும் செய்தியை மலேசியத் தமிழ் நாளிதழ்களில் கண்டோம். சைவ ஆதீனங்கள் இரண்டாம் பதிப்பையும் வீரசைவ ஆதீனங்கள் முதற்பதிப்பையும் மதுரை மாநாட்டில் வெளியிட்டுவிட் வேண்டுமென அங்கேயே அப்போதே முடிவு செய்து கொண்டோம். நவம்பர் இறுதி யில் தமிழ்நாட்டுக்குத் திரும்பியபின் அதற்குரிய ஏற்பாடு களைத் தொடங்கினோம்.

மதுரை மாநாட்டில் நூல்களை வெளியிடுவதற்கான முன்பதிவுச் சலுகைவிலைத் திட்டம் ஒன்றை அறிவித்தோம். நூற்பணியை முடிப்பதில் தாமதம் தவிர்க்க இயலாத தாயிற்று. அறிவித்தவாறு மதுரை மாநாட்டில் நூல்களை வெளியிட இயலாது தவிர்ந்தது.

2008 மே 22-இல் சென்னையில் ஆழ்வார்பேட்டை நாரத கான சபா அரங்கில் நிகழ்வதற்கு ஏற்பாடு செய்யப் பெற்றிருந்த எமது 75-ஆம் அகவை நிறைவுப் பவள விழாவில், நூல் வெளியீட்டையும் சேர்த்து நடத்திவிட வேண்டும் என்று திட்டமிட்டோம். திட்டம் நிறைவேற வில்லை. இரண்டாம் முறையாகவும் தவிர்ந்தது. பவள விழாவே நிகழாமல் காலவரம்பின்றி ஒத்திவைக்க நேரிட்டு விட்டது.

2008 மார்ச் 21;22;23-இல் மதுரை மாநாட்டில் வெளியிடத் திட்டமிட்டிருந்ததை, சரியாக ஓராண்டுத் தாமதத்திற்குப் பின் 2009 மார்ச் 22-இல் சென்னையில் ஒரு வெளியீட்டு விழா, முதற்பதிப்பின் வெளியீட்டுவிழாவைப் போன்றே சிறப்பாக நடத்தி, வெளியிட்டுவிடுவதென முடிவுசெய்து, நாரத கான சபா அரங்கம் ஏற்பாடு செய்தாயிற்று. விழாவிற் கலந்து கொள்ள ஆதீன குருமகா சந்நிதானங்கள் சிலரது இசைவையும் பெற்றாயிற்று. ஆயினும் நூற்பணியை முடிக்க இயலவில்லை. மூன்றாவது முறையாகவும் தவிர்ந்தது.

இவ்வாறு மூன்று முறை தவிர்ந்துபோய் 18 மாதங்கள் காலதாமதமானதற்குக் காரணம் இதன் முதற்பதிப்பு வெளியான 2002-க்குப்பின் சைவ ஆதீனங்களின் வரலாற்றிற்கும் வீரசைவ ஆதீனங்களின் வரலாற்றிற்கும் இடையே காலக் கணிப்பு, வரலாறு ஆகியவற்றில் எழுந்த ஓரிரு ஆய்வுச் சிக்கல்களே ஆகும். அச்சிக்கல்களைக் களைய வேண்டும், தெளிவுபடுத்த வேண்டும், சிக்கறுக்க வேண்டும் என்ற எண்ணம் விவரம் தெரிந்த இரண்டொருவருக்கும் எமக்கும் ஏற்பட்டது. ஆயினும் அதற்கேற்ற கருவிகளும் சூழலும் அமையவில்லை. மன உளைச்சலே மிச்சமாயிற்று. அலை ஓய்ந்தபின் நீராடுவோம் என்று இருந்தால் நீராடாமலேயே போய்விடலாம் என்பது போன்ற ஒரு நிலையில் சிக்கல்களுக்குள் அதிகம் நுழையாமல் மேலும் கால தாமதப்படுத்தாமல் ஒருவாறு நூலை முடிக்க வேண்டியதாயிற்று.

2002-இல் முதற்பதிப்பு வெளிவந்த ஏழு ஆண்டுகளுக்குப் பின் 2009-இல் இவ்விரண்டாம் பதிப்பு வெளிவருகிறது. வீர சைவ ஆதீனங்கள் முதற்பதிப்பும் இதனோடு வெளியாகிறது. முதற்பதிப்பின் வெளியீட்டு விழாவைப் போலவே இவ் விரண்டாம் பதிப்பிற்கும் இதனோடு சேர்ந்து தனி நூலாக வெளியாகும் வீரசைவ ஆதீனங்கள் முதற் பதிப்புக்கும் சென்னையில் ஆழ்வார்பேட்டை, நாரத கான சபா அரங்கில்

29.09.2009 செவ்வாய்க்கிழமை மாலை ஒரு சிறந்த வெளியீட்டு விழா ஏற்பாடு செய்து ஆதீன குருமகாசந்நிதானங்கள் அனைவரின் திருமுன்னர் இரு நூல்களும் வெளியிடப் பெறுகின்றன. இவ்வெளியீட்டு விழா அழைப்பிதழையும் நூலின் பின்னிணைப்பில் சேர்த்திருக்கிறோம். நூல் வெளியீட்டு விழாவோடு எமது பவள விழாவும் சேர்க்கப் பெற்றது. இரண்டாவது சிவலோகக் காட்சி இது.

சைவ ஆதீனங்கள் முற்பாதி 369-ஆம் பக்கம்வரை எமது சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையத்தின் கணினியிலும், அதற்குமேல் பிற்பாதி சிதம்பரம் சபாநாயகம் அச்சக கணினி யிலும் செய்யப் பெற்றன. நூல் முழுவதும் சென்னை யுனைடெட் பிரிண்டர்ஸ் அச்சகத்தில் அச்சிடப்பெற்றது. கணினி அச்சுப் பணியைச் செம்மையாகச் செய்துதவிய, எமது ஆராய்ச்சி நிலையத்தில் கணினிப் பணியாற்றும் செல்வி **தி. சுபா**, நூல் அச்சுப் பணியைச் செம்மையாகச் செய்துதவிய சிதம்பரம் **சபாநாயகம் பிரிண்டர்ஸ்**, சென்னை **யுனைடெட் பைண்டு கிராபிக்ஸ்** ஆகியவற்றின் உரிமையாளர் திரு. **கௌதமசங்கர்**, அவர்தம் துணைவியார் திருமதி **ஜெயநந்தினி** ஆகியோருக்கு எமது அன்பான பாராட்டும் வாழ்த்துகளும் உரியன. எமதன்பர்கள் முனைவர் புலவர் **சி.வெ. சுந்தரம்** (சென்னை), அவர் நண்பர் **பால. கோபாலன்** (சென்னை), ஆசிரியர் **கோ. வேங்கடாசலம்** (ஆர்க்காடு), புலவர் **மு. வைத்தியநாதன்** (திருச்சிராப்பள்ளி) ஆகிய நால்வரும் நன்கு மெய்ப்புப் பார்த்துதவியமைக்கு நமது அன்பான பாராட்டும் வாழ்த்துகளும் உரியன. எம் பணிகளில் அவ்வப் போது உதவிவரும் திரு **குறிஞ்சி ஞான. செல்வநாதன்**, எமது வாகன ஓட்டுநர் திரு. **மா. சு. மணி**, எம்மிடம் இருபத்தைந் தாண்டுகளுக்கு மேலாகச் சமையற் பணியாற்றிவரும் திரு. **கி. குப்புசாமி** ஆகியோரும் இப்பணியில் மிகவும் உதவியாக இருந்தனர். இவர்களுக்கும் எமது அன்பான பாராட்டும் வாழ்த்துகளும் உரியன.

இந்நூற்பணிக்கு ஆதீனங்கள் சில, சில படிகளுக்கு முன்பணம் அளித்ததுதவிர மேலும் பொருளுதவி தேவைப் பட்டபோது கோயம்புத்தூர் ஆனைக்கட்டியிலுள்ள ஆர்ஷ வித்யா குருகுலம் அதிபர் **பூஜ்யஸ்ரீ சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள்** தமது சுருதி சேவா அறக்கட்டளையிலிருந்து ரூபாய் ஒரு இலட்சம் நன்கொடை வழங்கியருளினார்கள். இப் பேருதவிக்கு எமது உளமார்ந்த நன்றியைச் சுவாமிகளுக்கும் ஆதீனங்களுக்கும் புலப்படுத்திக் கொள்கிறோம்.

இறுதியாக, வாசக அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்: இந்நூலை வாங்கிப் படிக்கத் தங்கள் அன்பர்களுக்குப் பரிந்துரை செய்யுங்கள். எமது நூல்கள் எவ்வளவுக்கெவ்வளவு பரவுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு எமது ஆய்வுகளும் வெளியீடுகளும் மிகுவதற்குத் துணையாகும்.

எல்லார்க்கும் எல்லா நலன்களும் பெருக வாழ்த்துகள்.

அன்பன்

வடலூர்

29.09.2009

ஊரன் அடிகள்

முதற் பதிப்பின் முன்னுரை

உ
திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி
வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே

சமய நிறுவனங்கள் இருவகை.

1. கோயில்கள் 2. மடங்கள்.

பின்னாளில் சங்கங்கள், சபைகள், மன்றங்கள் என்ற மூன்றாவது வகையும் தோன்றிற்று.

கோயில்களின் வரலாறு தனித்தனியாகவும் தொகுப்பாகவும் வழங்குகிறது. கோயில் வரலாறுகளை அவ்வக் கோயிலார் எழுதி வெளியிட்டுள்ளனர். வ. சு. செங்கல்வராயபிள்ளை எழுதிய சிவஸ்தலமஞ்சரி, காஞ்சிபுரம் ஸ்ரீகாமகோடி பீடம் சங்கர மடத்தின் ஆஸ்தான வித்துவான் புலவர் பு. மா. ஜயசெந்தில்நாதன் எழுதிய திருமுறைத்தலங்கள், டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகம் வெளியிட்டுள்ள திருத்தலங்கள் வரலாறு முதலியன திருக்கோயில் வரலாற்றுத் தொகுப்பு களாக வெளிவந்துள்ளன.

கோயில்களின் வரலாறு பரவியுள்ள அளவுக்கு மடங் களின் வரலாறு பரவவில்லை. மடங்களின் ஆதீனங்களின் வரலாறு அவ்வவ்வாதீனத்தாரால் வெளியிடப் பெற்றுள்ளது. அவையும் புத்தகக் கடைகளில் கிடைப்பது அரிது.

ஆதீனங்கள் அனைத்தின் வரலாறுகளும் ஒரே நூலாக இதுவரை வெளிவந்ததில்லை. இப்போது முதன்முதலாக நாம் தான் இந்நூலை எழுதி வெளியிடுகிறோம். சைவ ஆதீனங்கள் பதினெட்டின் வரலாறுகளும் இந்நூலிற் கூறப் பெறுகின்றன.

சைவ மடங்கள் 18 என்று காளமேகப்புலவர் பாடிய திருவானைக்கா உலாவில்தான் முதன்முதலிற் குறிப்பிடப் பெறுகிறது. பின்பு திருக்காளத்திநாதர் உலா, திருப்பூவணநாதர் உலா ஆகிய உலா நூல்களிலும் சைவ மடங்கள் பதினெட்டு என்று கூறப்பெற்றுள்ளது. உலா நூல்கள் மூன்றும் சைவ மடங்கள் 18 என்று கூறின.

மடங்கள் என்றே கூறப்பெற்றுள்ளது. ஆதீனங்கள் என்று கூறப்பெறவில்லை. மடங்கள் என்ற பெயர்தான் பழைய வழக்கு. ஆதீனம் என்று கூறும் வழக்கம் பிற்காலத்தில் ஏற்பட்டதே. பெரியபுராணத்திலும், பழைய நூல்கள் பலவற்றிலும் ஆதீனம் என்ற பெயர் வழக்கே இல்லை. சம்பந்தர், அப்பர், நாயன்மார்கள் தங்கியிருந்த இடங்களெல்லாம் மடங்கள் என்றே சொல்லப்பெறுகின்றன.

1910-இல் வெளிவந்த அபிதான சிந்தாமணியில் தான் சுத்தசைவ பதினெண் ஆதீனங்கள் என்ற பெயர்ப் பட்டியல் முதன்முதலாகக் காணப்பெறுகிறது. அபிதான சிந்தாமணி ஆசிரியரின் காலத்திற்கு முன்பே ஆதீனம் என்ற பெயர் வழக்கம் ஏற்பட்டுவிட்டதென்று தெரிகிறது.

பழைய நூல்களில் பண்டாரம் என்ற பெயர் வழக்கே காணப்பெறுகிறது. பண்டார சந்நிதி, பண்டார சந்நிதிகள் என்ற பெயர் கௌரவம் கருதிப் பின்னாளில் உண்டாயிற்று. பண்டார சந்நிதி என்பதைவிடக் குருமகாசந்நிதானம் என்பது இன்னும் கௌரவமானதாக எண்ணிப் பின்னாளில் ஏற்பட்டது.

அபிதான சிந்தாமணிப் பட்டியலில் காணப்பெறும் 18 ஆதீனங்களிற் சில இன்று இல்லை, அழிந்துவிட்டன. சில விளக்கங்குன்றிப் பெயரளவில் உள்ளன.

அபிதான சிந்தாமணியின் பட்டியலில் திருப்பனந்தாள் காசிமடம் சேரவில்லை. ஏன் சேர்க்காமல் விட்டார் என்பதற்குச் சரியான காரணத்தைக் கண்டறிய வேண்டும். ஒருவேளை அது தருமபுரத்தின் சீடமடம் என்றெண்ணி விட்டிருக்கலாம். அல்லது வடநாட்டில் காசியில் உள்ள மடத்திற்குக் கிளை மடம் என்று கருதித் தமிழ்நாட்டு மடங்களின் பட்டியலில் சேர்க்காமல் விட்டிருக்கலாம். திருநெல்வேலியில் செப்பறை மடம் என்று பழமையான ஒரு மடம் உண்டு. 16-ஆம் நூற்றாண்டு மடம். இலக்கிய உலகிலும் சமய உலகிலும் இடம்பெற்ற அம்மடம் அபிதானசிந்தாமணிப் பட்டியலில் இடம்பெறவில்லை. அடியவர்களின் இல்லங்களெல்லாம் மடங்கள் எனவும் வழங்கப்பெற்றன. இல்லறவாசிகளான அடியார்களின் இல்லங்களும் மடங்கள் என வழங்கப் பெற்றுள்ளன. பழைய நூல்களிலும் கல்வெட்டுகளிலும் நூற்றுக்கணக்கான மடங்கள் காணப்பெறுகின்றன.

திருவாவடுதுறை, தருமபுரம் போன்று கிளைமடங்கள் பலவற்றுடன், பெரிய கோயில்களின் நிர்வாகங்களுடன், ஏராளமான நிலச்சொத்துகளுடன் சமஸ்தானம் ஆஸ்தானம் போன்று பெரிய மடங்களாக உள்ளவற்றை ஆதீனம் எனல் பொருந்தும். எல்லாவற்றையுமே ஆதீனம் எனல் பொருந்தாது. சிறிய மடங்கள் சிலவும் ஆதீனம் என்ற பெயருடன் பட்டியலில் சேர்க்கப்பெற்றுள்ளன. 18 என்ற எண்ணிக்கையும் பொருந்தாது. ஆதீனம் என்ற பெயரும் பெரிய ஆதீனங்களுக்குப் பொருந்துமே தவிரச் சிறிய மடங்களுக்குப் பொருந்தாது.

அபிதானசிந்தாமணிப் பட்டியலை நாம் அப்படியே பின்பற்றவில்லை. நிலைக்கேற்ப ஒருவாறு மாற்றியமைத் திருக்கிறோம். நாம் கொண்டுள்ள வரிசை பின்வருமாறு.

1. திருவாவடுதுறை ஆதீனம்
2. தருமபுர ஆதீனம்
3. திருப்பனந்தாள், காசிமடம்

4. சூரியனார்கோயில் ஆதீனம்
5. தொண்டமண்டல ஆதீனம் - காஞ்சிபுரம்
6. மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம்
7. குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்
8. செங்கோல் ஆதீனம்
9. துழாவூர் ஆதீனம்
10. வேளாக்குறிச்சி ஆதீனம்
11. நாச்சியார் கோயில் ஆதீனம்
12. வரணி ஆதீனம்
13. வள்ளலார் ஆதீனம்
14. சொர்க்கபுர ஆதீனம்
15. ஆகம சிவப்பிரகாசர் ஆதீனம்
16. தாயுமானவர் ஆதீனம்
17. நீலப்பாடி ஆதீனம்
18. இராமேச்சுர ஆதீனம்

இவற்றுள் 1. திருவாவடுதுறை, 2. தருமபுரம், 3. திருப்பனந்தாள், 4. சூரியனார்கோயில், 5. தொண்டை மண்டலம், 6. மதுரை, 7. குன்றக்குடி ஆகிய ஏழு ஆதீனங்களும் நன்கு விளக்கமாக விளங்குபவை.

இவற்றுள்ளும் திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் முதலான மூன்றும் மிகப் பெரிய ஆதீனங்கள். சூரியனார் கோயிலும் தொண்டமண்டலமும் ஒருவகை. மதுரையும், குன்றக்குடியும் ஒருவகை.

துழாவூர், வேளாக்குறிச்சி, நாச்சியார்கோயில், வரணி, வள்ளலார் ஆகிய ஐந்து ஆதீனங்களும் இல்லறத்தார் ஆதீனங்கள். இவற்றுள் வள்ளலார் ஆதீனம் அழிந்து விட்டது. ஏனைய நான்கும் நன்கு விளங்குகின்றன.

வரணி ஆதீனம் கடல்கடந்த இலங்கையில் யாழ்ப்பாணத்தில் உள்ளது. அதன் கிளைமடம் வேதாரண்யத்தில் உள்ளது. வேதாரண்யம் கோயில் அவர்களின் நிர்வாகத்திலுள்ளது.

சொர்க்கபுரம், அன்னப்பன்பேட்டை, நீலப்பாடி ஆகிய மூன்றும் பெயரளவில் உள்ளன. ஆகம சிவப்பிரகாசர் ஆதீனமும், இராமேச்சுவர ஆதீனமும் அழிந்தே போயின.

முற்காலத்தில் முடியுடை மூவேந்தர்கள் தமிழையும் கலைகளையும் வளர்த்தார்கள். பிற்காலத்தில் குறுநில மன்னர்களும் ஆதீனகர்த்தர்களும் வளர்த்தார்கள். ஆதீனங்களுக்கு அரசர்கள் ஏராளமான நிலக்கொடைகளை அளித்ததே அறம் வளர்ப்பதற்குத்தான். அறம் வளர்ப்பதோடு மொழி, கலை, பண்பாடுகளையும் ஆதீனங்கள் வளர்த்தன. ஆதீனங்கள் பெரிய சமஸ்தானங்கள் போன்றவை. இராமநாதபுரம் புதுக்கோட்டை சமஸ்தானங்கள் போன்று திருவாவடுதுறை தருமபுரம் ஆதீனங்கள் மிகப்பெரிய சமய நிறுவனங்கள். திருவாவடு துறைக்குத் தென்மாவட்டங்களில் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள், 20 பெரிய கோயில்கள். தருமபுரத்திற்கு 27 கோயில்கள். மடத்துச் சொத்தை 12 ஆயிரம் வேலி நிலங்கள் என்று குறிப்பிடுவதுண்டு. ஒருவேலி ஏறத்தாழ 6 ஏக்கர். 12 ஆயிரம் வேலி 72000 ஏக்கர். தருமபுர ஆதீனத்திற்குக் கோயிற் சொத்து மிகுதி. திருவாவடுதுறை ஆதீனத்திற்கு மடத்துச் சொத்து மிகுதி. ஆதீனங்களுக்கு ஏராளமாக சொத்துகள் நிலங்கள் இருந்தும் வருமானம் இல்லை. நிலக்குத்தகைச் சட்டங்கள் போன்றவற்றால் உரிய வருமானம் கிடைக்கப் பெறாத நிலை. இந் நிலையில் சைவ ஆதீனங்களைப் பற்றிய அறிவு அறிஞர்களிடையேயும் பொதுமக்களிடையும் பரவவேண்டும், அரசு, அதிகாரிகள், அறிஞர்கள், பொதுமக்கள் முதலிய அனைத்துத் துறையினரும், சமயப் பண்பாட்டு நிறுவனங்களாகிய சைவ ஆதீனங்களின் பணிகளுக்கு ஆதரவாகத் திகழ்ந்து பயன் பெறவேண்டும் என்ற எண்ணத்தால்தான் நாம் இந்நூலை எழுதித் தமிழ் மக்களுக்கு வழங்கலானோம்.

''சைவமும், தமிழும் தழைத்தினிதோங்குக '' என்பது சைவ உலகில் வழங்கிவ்ரும் ஒரு பழமொழி. சைவம் இல்லாமல் தமிழ் இல்லை. தமிழ் இல்லாமல் சைவம் இல்லை. சங்க இலக்கியங்களுக்குப்பின்பு சமய இலக்கியங் களே, சைவ இலக்கியங்களே, தமிழில் மிகுதி. சங்க காலத் திற்குப் பின்பு, சமயகுரவர் காலத்திற்குப் பின்பு, தமிழை வளர்த்த பெருமை சைவ ஆதீனங்களையே சாரும். திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் ஆகிய ஆதீனங்கள் தமிழுக்கு அளப்பரிய பெருந்தொண்டுகளைச் செய்துள்ளன. திருவாவடுதுறை ஆதீனமும் தருமபுர ஆதீனமும், சைவப் பல்கலைக்கழகங்களாக, தமிழ்ப் பல்கலைக்கழகங்களாக விளங்கின. திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களும், ஆறுமுகநாவலரும், வள்ளலாரும் சென்ற நூற்றாண்டின் தமிழ் மூவராக விளங்கினர். இவர்களுள் பிள்ளையவர்கள் திருவாவடுதுறை ஆதீன வித்துவானாகவே திகழ்ந்தார். ஆறுமுகநாவலர் திருவாவடுதுறை ஆதீனத்தால் ''நாவலர்'' பட்டம் கொடுக்கப் பெற்றார். தருமபுர ஆதீனமும் நாவலரைப் பாராட்டிற்று. குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனமும் நாவலருக்குப் பல்லக்கு மரியாதை செய்தது. பல்லக்கில் அமர்த்திப் பட்டினப்பிரவேசம் செய்வித்தது. பிள்ளையவர்கள் ஆதீனத்தின் ஓர் அங்கமாகவே விளங்கினார். நாவலருக்கு ஆதீனங்களுடன் நேர் தொடர்பு இருந்தது. இவ்விருவரையும் போன்று வள்ளலாருக்கு ஆதீனங்களுடன் நேர் தொடர்பு அவ்வளவாக இல்லை. எனினும் ஆதீன அடியார்களுக்கும் வள்ளற் பெருமானுக்கும் நல்ல தொடர்பு இருந்தது. வள்ளற் பெருமான் இளமையில் 35-ஆம் ஆண்டு வரையில் சென்னையில் வதிந்தார்கள். அப்போது ஆதீன அடியவர்களின் தொடர்பு வள்ளற் பெருமானுக்கு இருந்தது.

1. சென்னையில் திருவாவடுதுறை ஆதீனக் கிளை மடத்தில் வித்துவான் தாண்டவராயத் தம்பிரான் சுவாமிகள் என்றொரு சிறந்த, புலமைமிக்க தம்பிரான் சுவாமிகள் இருந்தார்கள். அவர்களுடன் வள்ளற்

பெருமானுக்கு நல்ல தொடர்பு நேர் தொடர்பு இருந்தது. வள்ளற்பெருமான் தாண்டவராயத் தம்பிரான் சுவாமிகளுக்கு வரைந்த செய்யுட் கடிதம் ஒன்றை யும் சில தனிப் பாடல்களையும் இந்நூலிற் காட்டி யுள்ளோம்.

2. வள்ளற்பெருமான் வைத்தீஸ்வரன் கோயிலுக்குச் சென்றிருந்தபோது வைத்தியநாதர்மீது ஒரு பதிகம் பாடித் துதித்தார். வைத்தீஸ்வரன் கோயில், தருமபுர ஆதீனக் கோயில். தருமபுரஆதீனத் தம்பிரான் சுவாமிகள் உலகநாதத் தம்பிரான் என்பவர் அப்போது வைத்தீசுவரன் கோயிலில் கட்டளைத் தம்பிரானாகப் பணியாற்றி வந்தார். அவருடைய அருமைப் பணி களையும் குணநலன்களையும் கண்டுகளித்த வள்ளற் பெருமான் தாம் பாடிய வைத்தியநாதர் பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும், ''தவசிகாமணி உலகநாத வள்ளல் மகிழவருவேளூரில் அன்பர் பவரோகமற வளர் வைத்திய நாதனே'' என்று உலகநாதத் தம்பிரான் சுவாமிகளின் பெயரைப் பாடலிற் பதித்துப் பாடினார்கள். வள்ளலார் வைத்தியநாதப் பெருமானைப் பாடினார். அதில் தருமபுர ஆதீனத் தம்பிரானையும் வைத்துப் பாடினார். தருமபுர ஆதீனத் தம்பிரான் ஒருவர் வள்ளற்பெருமானால் பாடப் பெற்றிருக் கிறார். பாடப்பெறும் அளவுக்குத் தகுதி திறமை குணங்களுடன் விளங்கியிருக்கிறார்.

3. மதுரை ஆதீனத்தில் 288-ஆம் பட்டம் குருமகா சந்நிதானமாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகத் திருஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளுக்கும் வள்ளற் பெருமானுக்கும் கடிதத் தொடர்பு இருந்திருக்கிறது. சுவாமிகளுக்கு வள்ளற்பெருமான் எழுதிய நீண்ட செய்யுள் திருமுகத்தை இந்நூலில் எடுத்துக்காட்டி யுள்ளோம் (1854).

மதுரை ஆதீன முனிவர் சிதம்பர சுவாமிகள் வள்ளற் பெருமானுக்கு நெருங்கிய நண்பராக விளங்கி யிருக்கிறார். சிதம்பரசுவாமிகள் சிதம்பரபுராணத்தை அச்சிற் பதிப்பித்தபோது வள்ளற்பெருமான் அதற்குச் சாற்றுக் கவிகளை அருளியிருக்கிறார் (1855).

வள்ளற்பெருமான் அருளிய திருவருட்பா முதன் முதலாக அச்சிடப்பெற்றபோது அதற்கு மதுரை யாதீனம் சிதம்பர சுவாமிகள் சிறப்புப் பாயிரமாகத் ''திருவருட்பா மகிமை'' என்றொரு வெண்பாவை அருளியுள்ளார். வள்ளலாரின் திருவருட்பாவுக்குச் சிறப்புப் பாயிரம் பாடியது மதுரை ஆதீனம் சிதம்பர சுவாமிகள். பின்னும் கருங்குழி புருஷோத்தம ரெட்டியார் விஷயமாக வள்ளற் பெருமானுக்கும் மதுரை ஆதீனத்திற்கும் கடிதத் தொடர்பு இருந்திருக் கிறது. வள்ளற் பெருமானுடைய தொடர்பு குறித்து மதுரை யாதீனத்தார் இன்றும் மகிழ்ச்சி கொள்கின்றனர்.

4. சீர்காழியில் வள்ளலார் ஆதீனம் என்றே ஒரு பழைமையான ஆதீனம் இருந்து பிற்காலத்தில் அண்மையில் அழிந்துவிட்டது. காழிக் கண்ணுடைய வள்ளலார் என்பவர் நிறுவிய ஆதீனம் அது. அக் கண்ணுடைய வள்ளலார் ஒழிவிலொடுக்கம் என்ற ஒரு அருமையான ஞானநூலைச் செய்துள்ளார். அந் நூலை வள்ளற்பெருமான் முதன்முதலில் அச்சிற் பதிப்பித்தார். ஒழிவிலொடுக்கத்தின் பாயிரச் செய்யுளுக்கு வள்ளற்பெருமான் ஒரு விருத்தியுரை யும் எழுதியுள்ளார். அதுவும் அப்பதிப்பிற் சேர்ந்துள்ளது.

இவையெல்லாம் வள்ளற்பெருமானுக்கும் சைவ ஆதீனங் களுக்கும் இருந்த தொடர்புகள். இவையெல்லா வற்றையும் இந்நூலில் ஆங்காங்கே எடுத்துகாட்டியுள்ளோம்.

திருவாவடுதுறை ஆதீனத்தின் ஒடுக்கத் திருப்பணியைச் செய்த ஆவுடையப்பப் பிள்ளையும் திருவானைக்காவில் பாப்பம்மாள் சத்திரத்தைக் கட்டிக்கொடுத்த பாப்பம்மாளும் எமது முன்னோர்கள். எல்லா ஆதீனங்களுடன் எமக்கு ஏறத்தாழ முப்பத்தைந்தாண்டுகாலத் தொடர்புண்டு. திருவாவடுதுறை ஆதீனத்திற்கும் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்திற்கும் நாம் இளவரசுப் பட்டத்திற்கு அழைக்கப் பெற்றதுண்டு.

இளமை முதலே தமிழ், சைவம், சன்மார்க்கம் இம் மூன்றையும் படித்தும் ஆராய்ந்தும் வரும் எமக்குச் சைவ ஆதீனங்கள் அனைத்தைப் பற்றியும் ஒரு நல்ல அறிமுக நூல் எழுதி வெளியிட வேண்டும் என்ற எண்ணம் பல காலமாக இருந்து வந்தது. இப்பணியை 1991-இல் தொடங்கினோம். பல்வேறு பணிகளுக்கிடையே அவ்வப்போது இப்பணியும் நடந்தது. பதினொரு ஆண்டுகளுக்குப்பின்பு இப்பணி இவ்வளவில் நிறைவேறி இந்நூல் வெளிவருகிறது. வீரசைவ ஆதீனங்கள் - நூல் அடுத்து வெளிவரும்.

ஏறத்தாழ 40 - ஆண்டுகளாகச் சமயப்பணியும் சன்மார்க்கப் பணியும் செய்துவருகிறோம். விசுவ இந்து பரிஷத்தின் துறவியர் பேரவைக்குப் பேரூர் அடிகளாரும் நாமும் அமைப்பாளர்களாக இருக்கிறோம். தமிழக இந்து துறவியர் பேரவைக்குப் பேரூர் அடிகளார் தலைவராகவும் நாம் துணைத் தலைவராகவும் இருக்கிறோம். ஆதீன குருமகா சந்நிதானங்கள் பலருடன் நமக்குப் பழக்கம் உண்டு. எனினும் நீண்டகாலப் பழக்கம் தருமபுரம் சந்நிதானம் அவர்களுடன்தான். ஏறத்தாழ 35 - ஆண்டுகாலப் பழக்கம். அப்போது அவர்கள் சென்னை யில் தருமபுர ஆதீன சமயப்பிரச்சார நிலையத்தில் தம்பிரான் சுவாமிகளாக இருந்தார்கள். அக்காலமுதலே பழக்கம். அக் காலத்தில் சென்னையிலிருந்து திருவாரூருக்கு இருவரும் 81 - பேர் கொண்ட சிவனடியார் திருக்கூட்டமாகப் பாத யாத்திரை செய்தோம். சந்நிதானம் திருவாரூரில் திருநாவுக்கரசர் திருக்கோயிலைக் கட்டுவதற்கென்றே வந்த பிறவி. அன்று

தொடங்கிய திருவாரூர்த் தொடர்பு இன்றுவரை தொடர்கிறது. எனவே நீண்டகாலப் பழக்கமுடைய தருமபுரம் சந்நிதானத்திற்கு இந்நூலைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று ஓர் எண்ணம் உள்ளத்தில் உதித்தது. அவ்வாறே இந்நூலைத் தருமபுரம் சந்நிதானத்தின் செங்கமலப் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கலானோம்.

இந்நூல் எழுதுங்காலத்தும் அச்சிடுங்காலத்தும் எமதன்பர் குறிஞ்சி. ஞான. செல்வநாதன், இருபதாண்டுகளாக எமது தனிப்பணியாளராக இருந்து உதவி வரும் திரு. இரா. இராஜேந்திரன் ஆகிய இருவரும் மிக்க ஆர்வத்துடன் இரவு பகல் பாராது உடனிருந்து உதவினர்.

வழக்கமாக எமது நூல்களை அச்சிடும் திருச்சிராப்பள்ளி ஜோதி பிரிண்டர்ஸ் உரிமையாளர்கள் திரு. ஆர். சந்திரசேகரன் பி.ஏ., திரு. ஆர். ஞானசேகரன் பி.எஸ்சி., இருவரும் மிகக் குறுகிய காலத்தில் அழகாக அச்சிட்டுக் கொடுத்தனர்.

இவர்கள் அனைவருக்கும் நம் நன்றியும் வாழ்த்தும் உரிய, அன்பர்கள் இந்நூலை வாங்கிப் பயின்று பயன் பெறுவார்களாக.

வடலூர் — அன்பன்

22.05.2002 — **ஊரன் அடிகள்**

பொருளடக்கம்

பின் இணைப்புகள்



திருவாவடுதுறை ஆதீனம் - நுழைவாயில்




திருவாவடுதுறை ஆதீனம் முன்தோற்றம் - தெற்கு முகப்பு



திருவாவடுதுறை ஆதீன நிறுவனர்
குருமுதல்வர் ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள்



திருவாவடுதுறை ஆதீனம்
21 - ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள்




திருவாவடுதுறை ஆதீனம்
22 - ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்



திருவாவடுதுறை ஆதீனம்

23 - ஆவது குருமகாசந்நிதானம்

சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்



திருவாவடுதுறை ஆதீனம்
23 - ஆவது குருமகாசந்நிதானம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்



திருவாவடுதுறை ஆதீனம் ஒடுக்கத்தில் சந்நிதானம் வீற்றிருத்தல்,
ஒடுக்கத்தில் வாயிலின் இருபுறமும் ஆவுடையப்ப பிள்ளை சோமசுந்தரம்பிள்ளை சிலைகள்
இவ்விருவரும் இந்நூலாசிரியர் ஊரன் அடிகளாரின் முன்னோர்



தருமபுரம் ஆதீனம் - நுழைவாயில்



தருமபுரம் ஆதீனம் - ஆதீன முகப்புத் தோற்றம்



திருவாவடுதுறை ஆதீனம் ஒடுக்கத்தில் சந்நிதானம் வீற்றிருத்தல்,
ஒடுக்கத்தில் வாயிலின் இருபுறமும் ஆவுடையப்ப பிள்ளை சோமசுந்தரம்பிள்ளை சிலைகள்
இவ்விருவரும் இந்நூலாசிரியர் ஊரன் அடிகளாரின் முன்னோர்



தருமபுரம் ஆதீனம் - நுழைவாயில்



தருமபுரம் ஆதீனம் - ஆதீன முகப்புத் தோற்றம்




தருமபுர ஆதீன நிறுவனர் குருமுதல்வர்
ஸ்ரீ குருஞானசம்பந்தர்



தருமபுர ஆதீனம் 24 - ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்




தருமபுர ஆதீனம் 25 - ஆவது குருமகாசந்நிதானம்
கயிலைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணியதேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



தருமபுர ஆதீனம்

26 - ஆவது குருமகாசந்நிதானம்


ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



தருமபுர ஆதீனம் 26 - ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்




காசித்திருமடம், திருப்பனந்தாள் - முகப்புத்தோற்றம்



குமாரசாமி மடம் - வாரணாசி (காசி)

காசித்திருமடம் - திருப்பனந்தாள்

நிறுவனர் குருமுதல்வர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்



குமாரசாமி மடம் - வாரணாசி (காசி)

காசித்திருமடம் - திருப்பனந்தாள் 20 - ஆவது அதிபர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்



குமாரசாமி மடம் - வாரணாசி (காசி)

காசித்திருமடம் - திருப்பனந்தாள் 21 - ஆவது அதிபர்

கயிலைமாமுனிவர் திருவளர்திரு காசிவாசி

முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்



கயிலைமாமுனிவர்

திருவளர்திரு காசிவாசிமுத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்


அதிபர் காசித்திருமடம் - திருப்பனந்தாள்



திருப்பனந்தாள் காசித்திருமடம்

இளைய அதிபர்

ஸ்ரீமத் சுந்தரமூர்த்தித் தம்பிரான் சுவாமிகள்




சூரியனார்கோயில் ஆதீனம் - முகப்புத்தோற்றம்



சூரியனார்கோயில் ஆதீனம்

27 - ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சங்கரலிங்கதேசிக பரமாசாரிய சுவாமிகள்



தொண்டைமண்டல ஆதீனம்
காஞ்சிபுரம் 229 - ஆவது குருமகாசந்நிதானம்
சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்




தொண்டைமண்டல ஆதீனம்
காஞ்சிபுரம் 232 - ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ திருவம்பல தேசிக ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள்




மதுரை . ஆதீனம் - முகப்புத் தோற்றம்



மதுரை ஆதீனம் 292 - ஆவது குருமகாசந்நிதானம்
லோககுரு ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத
ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்



குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்
45 - ஆவது குருமகாசந்நிதானம் திருவருள்திரு தெய்வசிகாமணி
அருணாசலதேசிக பரமாசாரிய சுவாமிகள்
(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)



குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்
46-ஆவது குருமகாசந்நிதானம் திருவருள்திரு தெய்வசிகாமனி
பொன்னம்பலதேசிக பரமாசாரிய சுவாமிகள்
(தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்)





செங்கோல் ஆதீனம் 102 - ஆவது குருமகாசந்நிதானம்
சீர்வளர்சீர் கல்யாணசுந்தர சத்தியஞானதேசிக பரமாசாரிய சுவாமிகள்





துழாவூர் ஆதீனம் 29 - ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ நிரம்பஅழகிய ஞானப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள்



வேளாக்குறிச்சி ஆதீனம்
கல்லிடைக்குறிச்சித் தலைமைமடம்



வேளாக்குறிச்சி ஆதீனம் 17 - ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அஜபா நடேஸ்வர பண்டார சந்நிதிகள்





வேளாக்குறிச்சி ஆதீனம் 18 - ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சந்தியஞான மகாதேவதேசிக பரமாசாரிய சுவாமிகள்



நாச்சியார்கோயில் ஆதீனம் – முகப்புத்தோற்றம்



நாச்சியார்கோயில் ஆதீனம் 6 – ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ மருதவாணதேசிக சுவாமிகள்



சைவ ஆதீனங்கள் - முதற்பதிப்பு வெளியீட்டு விழா 22.05.2002
சர் பிட்டி தியாகராயர் கலையரங்கம், தியாகராயநகர், சென்னை - 18



நூல் வெளியீட்டு நிகழ்ச்சி - திருப்பனந்தாள் காசித்திருமடம் அதிபர் நூலை வெளியிடுதல்

பத்மபூஷண் அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள் முதற்படியைப் பெறல்



பத்மஸ்ரீ டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார் அவர்கள் இரண்டாம் படியைப் பெறல்



விழா நிறைவில் அடிகளாருடன் விழா ஒருங்கிணைப்பாளர்கள், விழாத் தொண்டர்கள்

சைவ ஆதீனங்கள்

சுத்தசைவப் பதினெண் ஆதீனங்கள்

சைவமடங்களின் பட்டியலொன்று "சுத்தசைவ பதினெண் ஆதீனங்கள்" என்ற தலைப்பில் அபிதான சிந்தாமணியிற் காணப்பெறுகிறது.

அபிதானசிந்தாமணி

முதற்பதிப்பு 1910 *	இரண்டாம் பதிப்பு 1933 *

சுத்தசைவ பதினெண் ஆதீனங்கள்

1. திருஆவடுதுறை	*1. திருஆவடுதுறை*
2. காஞ்சிபுரம்	*2. காஞ்சிபுரம்*
3. தருமபுரம்	*3. தருமபுரம்*
4. சூரனார் கோவில்(ஆடுதுறை)	*4. சூனா கோவில்(ஆடுதுறை)*
5. ஆகமசிவப்பிரகாசாதீனம் (சிதம்பரம்)	*5. ஆகமசிவப்பிரகாசாதீனம் (சிதம்பரம்)*
6. செங்கோலாதீனம் (பெருங்குளம் திருநெல்வேலி)	6. செங்கோலாதீனம் (பெருங்குளம்திருநெல்வேலி)
7. திருஞானசம்பந்தராதீனம் (மதுரை)	7. திருஞானசம்பந்தராதீனம் (மதுரை)
8. திருவண்ணாமலை	8. திருவண்ணாமலை ஆதீனம் (குன்றக்குடி)
9. இராமேச்வராதீனம்	9. இராமேச்வராதீனம்
10. நீலப்பாடி(தஞ்சாவூர்)	*10. நீலப்பாடி(தஞ்சாவூர்)*
11. தாயுமானசுவாமிகளாதீனம் (அன்னப்பன்பேட்டை)	*11. தாயுமானசுவாமிகளாதீனம்*
12. சாரமாமுனி ஆதீனம்	*12. சாரமாமுனி ஆதீனம்*

அபிதானசிந்தாமணி - 1910 முதற்பதிப்பு - மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு
- 1933 இரண்டாம்பதிப்பு - ஆசிரியரின் சொந்த வெளியீடு

13. சொக்கபுர ஆதீனம்	13. சொர்க்கபுர ஆதீனம் (அம்பர் திருமாகாளம்)
14. வேளாகுறிச்சி ஆதீனம் (திருவாரூர்)	14. வேளாகுறிச்சி ஆதீனம் (திருவாரூர்)
15. வள்ளலார் ஆதீனம்	15. வள்ளலார் ஆதீனம் (சீகா ழி)
16. இருளஞ்சேரி(கூவத்தருகு)	16. வருணை ஆதீனம் (வேதாரண்யம்)
17. வருணை ஆதீனம் (வேதாரண்யம்)	17. நாய்ச்சியார்கோயில் ஆதீனம் (கும்பகோணம்)
18. நாய்ச்சியார்கோவில் ஆதீனம் (கும்பகோணம்)	18. நிரம்ப அழகிய தேசிகர் ஆதீனம் (மதுரை - துழாவூர்)
19. நிரம்ப அழகிய தேசிகர் ஆதீனம்(மதுரை-துலாவூர்)	

முதற்பதிப்பிற் கூடுதலாக இருந்த ஓர் ஆதீனம் (16 இருளஞ்சேரி) இரண்டாம் பதிப்பில் நீக்கப்பெற்று ஆதீனங்களின் தொகை சரியாகப் பதினெட்டாக்கப் பெற்றுள்ளது.

தொண்ணூற்றெட்டு ஆண்டுகளுக்குமுன் 1910-இல் வெளிவந்த அபிதானசிந்தாமணி இன்றைய கலைக் களஞ்சியம் போன்றது. தனி ஒருவராக அரிதின் முயன்று அதனை இயற்றி வெளியிட்டவர் சென்னை பச்சையப்பன் கலாசாலைத் தமிழாசிரியர் ஆ.சிங்காரவேலு முதலியார். முதலியார் வழங்கும் இப்பட்டியலே ஆதீனங்களின் பெயர் தொகைகளைத் தெரிவிக்கும் முதற்பட்டியல். இப்பட்டிய லுக்கு அவர் கொண்ட மூலம் இன்னதெனத் தெரியவில்லை. இப்போது அறியப்பெறும்வரை முதன்முதலாகக் காணப் பெறும் இப்பட்டியலையே பின்வந்தோர் பலரும் பின்பற்றினர்.

இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை ச.சோமசுந்தர தேசிகர் எழுதிய தமிழ்ப்புலவர்கள் வரலாறு - பதினேழாம் நூற்றாண்டு (முதற்பதிப்பு 1937; இரண்டாம் பதிப்பு 1943) 10-ஆம் பக்கத்தில், துறைசை அம்பலவாணதேசிகர் வரலாற்றில், அடிக்குறிப்பாகப் பதினெட்டு மடங்களின் பட்டியலொன்று பின்வருமாறு காணப்பெறுகிறது.

சுத்தசைவப் பதினெண் மடங்களாவன:

1. திருவாவடுதுறை, 2. காஞ்சிபுரம், 3. தருமபுரம், 4. சூரியனார் கோயில், 5. ஆகம சிவப்பிரகாச ராதீனம், சிதம்பரம், 6. செங்கோலாதீனம், பெருங்குளம் 7. திருஞான சம்பந்தராதீனம், மதுரை, 8. திருவண்ணாமலையாதீனம், குன்றக்குடி, 9. இராமேச்சுர ஆதீனம், 10. நீலப்பாடி யாதீனம், 11. தாயுமான சுவாமிக ளாதீனம், அன்னப்பன் பேட்டை, 12. சாரமாமுனிவர் ஆதீனம், 13. சொர்க்கபுர ஆதீனம், 14. வேளாகுறிச்சி ஆதீனம், 15. வள்ளலார் ஆதீனம், சீகாழி, 16. வரணியாதீனம், 17. நாய்ச்சியார் கோவிலாதீனம், 18. துழாவூராதீனம்.

"சைவ மார்க்கப் பதினெண் மடத்தாரும்" என்பது திருப்பூவணநாதருலா. அதீனம் என்பது வழக்கத்தில் முதல் நீண்டது.

அபிதானசிந்தாமணிப் பட்டியலும் தேசிகர் பட்டியலும் ஒன்றே. தேசிகர் திருப்பூவணநாதருலாவை மேற்கோள் காட்டுகிறார்.

உலா நூல்களில்
பதினெண் மடங்கள் பற்றிய குறிப்பு

காளமேகப்புலவர் பாடிய திருஆனைக்கா உலா, சேறைக் கவிராசபிள்ளை பாடிய திருக்காளத்திநாதர்உலா, திருப்பூவணம் கந்தசாமிக் கவிராயர் பாடிய திருப்பூவணநாதர் உலா ஆகிய மூன்று உலா நூல்களிலும் சைவ மடங்கள் பதினெட்டு என்று கூறப்பெறுகிறது.

''பதினெண் மடத்திற் பயிலு முதலிகளும்'' - திருவானைக்கா வுலா

''வெண்ணீற்று வண்டற் பதினெண் மடத்தாரும்'' -
- திருக்காளத்திநாதருலா

''சைவமார்க்கப் பதினெண் மடத்தாரும்'' - திருப்பூவணநாதருலா

திருக்காளத்திநாதருலாவுக்கும் திருப்பூவணநாதருலா வுக்கும் அரும்பதவுரையெழுதும் டாக்டர் உ.வே.சாமிநாதையர்

‘பதினெண் மடத்தார்’ என்பதற்குப் பின்வருமாறு உரையெழுதுகிறார்.

பதினெண் மடத்தார் - சிவாகம பத்ததிகள் பதினெட்டும் இயற்றிய சிவாசாரியர்கள் பதினெண்மர்களுடைய பரம்பரையினர்; அப்பதினெண்மர்களாவார்; துர்வாஸ சிவர், பைங்களசிவர், உக்ரஜ்யோதி, ஸ்ரீகண்டர், விஷ்ணு கண்டர், ஸூபோதர், வித்யாகண்டர், இராமகண்டர், ஞானசிவர், ஞானசங்கரர், ஸோமசம்பு, ப்ரஹ்மசம்பு, திரிலோசனசிவர், அகோரசிவர், வருணசிவர், ப்ரஸாத சிவர், இராமநாதசிவர், ஈசானசிவரென்பவர்கள். “பதினெண் மடத்திற் பயிலு முதலிகளும்” என்றார் திருவானைக்காவுலா வுடையாரும்.

- திருக்காளத்திநாதருலா
டாக்டர்.உ.வே.சா.பதிப்பு, அரும்பத உரை

18 மடங்கள் - ஒரு விளக்கம்

தமிழ்ச்சைவமடங்கள் வேறு. வடமொழிப் பத்ததிகள் செய்த சிவாசாரியர் பதினெண்மர் வழிவந்த மடங்கள் வேறு. அபிதானசிந்தாமணி ஆசிரியரும் சோமசுந்தர தேசிகரும் தமிழ்ச் சைவமடங்களைக் குறிக்கின்றனர். உலா நூல்கள் மூன்றும் வடமொழிப் பத்ததிகள் செய்த சிவாசாரியர் பதினெண்மர் வழிவந்த மடங்களைக் குறிக்கின்றன. இவ்வேறுபாட்டைத் தெளிவாக உணர வேண்டும்.

மேற்குறித்த உலாநூல்கள் மூன்றிலும் காலத்தால் முற்பட்டது திருஆனைக்கா உலா. காலம் பதினைந்தாம் நூற்றாண்டு. அக்காலத்தில் பதினெண் மடங்கள் என்பது பத்ததி ஆசிரியர் பதினெண்மர் பரம்பரை மடங்களையே குறித்தது. சுத்தசைவ பதினெண் ஆதீனங்கள் என்ற பட்டியலிற் காணப்பெறும் மடங்களிற் பல அக்காலத்தில் தோன்றவில்லை. பிற்காலத்தில் தோன்றியனவும் பட்டியலிற் சேர்க்கப்பெற்றுள்ளன. தாயுமானவர் காலம் பதினெட்டாம்

நூற்றாண்டு. பதினெட்டாம் நூற்றாண்டுத் தாயுமானவர் மடம்(அன்னப்பன்பேட்டை) பதினைந்தாம் நூற்றாண்டு உலாவிற் குறிப்பிடப்பெறுவதில் ஒன்றாகுமா? காளமேகப் புலவர் திருவானைக்காவுலாப் பாடிய பதினைந்தாம் நூற்றாண்டில் பதினெண்மடங்கள் என்றால் பத்ததிகள் செய்த சிவாசாரியர் பரம்பரை மடங்களே. பிற்காலத்தில் அவை இல்லாது போயின. பின்வந்தோர் அவை இன்னதென (பத்ததி ஆசிரியர் வழிவந்தவை என) அறியாத நிலையில், தம் காலத்தில் வழக்கிலுள்ள தமிழ்ச் சைவ மடங்கள் எனக் கருதினர். ஒரு நூலிலன்றி, மூன்று(உலா) நூல்களில் சைவ மடங்கள் பதினெட்டு எனக் கூறப்பெற்று விட்டதால், தம் காலத்திலுள்ள மடங்களிற் பதினெட்டைப் பட்டியலிட்டு விட்டனர். அபிதான சிந்தாமணிப் பட்டியல் இவ்வாறெழுந்ததே.

தமிழ்மரபு வடமொழி மரபு ஆகிய இரண்டிலுமே பதினெட்டு ஒரு குழூஉக்குறியாக வழங்குவதைக் காணலாம்.

தேவாசுரப்போர் பதினெட்டு ஆண்டுகள்,
இராமாயணப்போர் பதினெட்டு மாதங்கள்,
பாரதப்போர் பதினெட்டு நாள்கள்,
பதினெண் புராணங்கள்,
பதினெட்டு ஸ்மிருதிகள்,
பகவத்கீதை பதினெட்டு அத்தியாயங்கள்,
பதினெண் கணங்கள்,
பாட்டும் தொகையுமாகச் சங்க இலக்கியங்கள் பதினெட்டு.
பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு,
பதினெண் நிலங்கள்,
பதினெண் மொழிகள்,
பதினெண் மடங்கள்,
பதினெண் சித்தர்கள்,
பதினெட்டுப் படிகள்,
பதினெட்டுச் சாதிகள்,
ஆடி, பதினெட்டாம் பெருக்கு,

இப்படிப் பற்பல பதினெட்டுகள் வழக்கிலுள்ளன.

மேற்கண்ட பல பதினெட்டுகளைப் போன்றே பதினெண் பத்ததிகள், பதினெண் மடங்கள் என்ற வழக்குத்தோன்றி, அவை இன்னதென அறியாத பிற்கால நிலையில் "**சுத்த சைவ பதினெண் ஆதீனங்கள்**" என்ற பொருந்தாப் புது வழக்கு ஏற்பட்டுவிட்டது.

தமிழ்ச் சைவமடங்கள் இத்தனை என்ற கணக்கு இல்லை, வேண்டுவதுமில்லை. உலா நூல்களிற் குறிப்பிடப் பெற்ற, அந்நாளிலிருந்த, பதினெண்மடங்கள் இன்னவை எனத் தெரியாத பின்னாளில், இருக்கும் மடங்களிற் பதினெட்டின் பெயர்கள் பட்டியலிடப் பெற்றுவிட்டன என்பதே உண்மை. இவ்வுண்மையைச் சைவ உலகும் தமிழுலகும் தெளிவாக நன்கு உணர்தல் வேண்டும்.

மேலும், '**சிவன்**', '**சிவர்**', '**சிவம்**' என்ற பெயர் **பிராமண குரு**வினர்க்கும், '**தேவர்**' என்பது **பிராமணரல்லாத ஏனைய குரு**வினர்க்கும் வழங்குவது அக்காலப் பத்ததி முறை. இதனாலும் அவை **வடமொழிச் சிவப்பிராமண மடங்கள்,** இவை **சைவவேளாளத் தமிழ்மடங்கள்** என்பதை அறியலாம். மெய்கண்டார் வேளாளர் ஆதலின் மெய்கண்டதேவர் என வழங்கப் பெற்றார். அருணந்திசிவம் உமாபதிசிவம் இவ்விருவரும் சிவாசாரிய மரபினர் ஆதலின் சிவம் என வழங்கப் பெற்றனர்.

சைவப்பதினெண் ஆதீனங்கள் என்று கூறாமல், "**சுத்த**" என்ற ஒரு சொல்லை அடைமொழியாகச் சேர்த்துச் "**சுத்த சைவப்** பதினெண் ஆதீனங்கள்" என்று குறிப்பிட்டதேன்? "சுத்த" என்ற சொல் இங்கு ஏன் வந்தது? "சுத்தசைவ" என்பதால் வேறு ஆதீனங்களும் உண்டா? என்பதையும் இங்குச் சிந்திக்கவேண்டும். பத்ததி ஆசிரியர் வழிவந்த மடங்களிலிருந்து வேறு பிரித்துக் காட்டவும், வீரசைவ மடங்களிலிருந்து வேறு பிரித்துக் காட்டவும் "சுத்தசைவ" என்று குறிப்பிடப்பெற்றது.

அகோரசிவாசாரிய பத்ததி கூறும் மடங்கள்

அகோரசிவாசாரிய பத்ததி மகோத்சவ விதிப்படலத்தில் பதினைந்து மடங்களின் பெயர்கள் கூறப்பெறுகின்றன.

1. கைலாச மடம், 2. பௌண்ட்ரக மடம், 3. வலாக மடம், 4. கற்பகிராம மடம், 5. பதரீ மடம், 6. தேவ தாருவன மடம், 7. கந்தர்ப்ப மடம், 8. உத்தராரண்யகம், 9. தக்ஷிணாரண்யகம், 10. கோவிதார மடம், 11. ஆமந்தக மடம், 12. மத்த மடம், 13. மாயூர மடம், 14. ரணபத்ர மடம், 15. சோழக மடம்.

இவை அந்நாளில் இந்திய நாடு முழுவதிலும் இருந்த மடங்களாகலாம்.

இவற்றிற் பல இந்நாளில் இருப்பதாகத் தெரியவில்லை. (5) பதரீ மடம், வடக்கே இமயமலையில் பத்ரீநாதத்தில் உள்ள பத்ரீகாஸ்ரமமாக இருக்கலாம். (8) உத்தராரண்யகம், (9) தக்ஷணாரண்யகம் என்ற பெயர்கள் உத்தர ஆரண்யகம், தக்ஷிண ஆரண்யகம் என உத்தர, தக்ஷிண(வடக்கு, தெற்கு) திசைகளைக் குறிக்கின்றன. 13. மாயூர மடம், 15. சோழக மடம் என்பன தமிழ்நாட்டுப் பெயர்களாக உள்ளன. இவற்றைப் பற்றிய விரிவான செய்திகள் இன்று அறிய வியலவில்லை.

திருமூலர் கூறும்
குருபாரம்பரியம், குருமடவரலாறு

திருமூலர் அருளிய திருமந்திரத்தின் பாயிரத்தில் "குரு பாரம்பரியம்", "குருமட வரலாறு" என்ற தலைப்புகளில் பின்வரும் பாடல்கள் உள்ளன.

குருபாரம்பரியம்

நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோ(டு) எண்மரும் ஆமே. 67

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்சமலைய னோ(டு)
இந்த எழுவரும் என் வழி யாமே. 69

குருமட வரலாறு

வந்த மடமேழு மன்னுஞ்சன் மார்க்கத்தின்
முந்தி உதிக்கின்ற மூலன் மடவரை
தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்
சுந்தர ஆகமச் சொல்மொழிந் தானே. 101

கலந்தருள் காலாங்கர் தம்பால் அகோரர்
நலந்தரு மாளிகைத் தேவர் நாதாந்தர்
புலங்கொள் பரமானந்தர் போக தேவர்
நிலந்திகழ் மூவர் நிராமயத் தோரே. 102

"நந்திகள் நால்வர்: 1. சனகர், 2. சனத்குமாரர், 3. சனந்தனர், 4. சனாதனர், இந்நால்வரோடு, 5. சிவயோக மாமுனி, 6. பதஞ்சலி, 7. வியாக்கிரபாதர், 8. திருமூலர் ஆகிய எண்மரும் திருநந்தி தேவரின் அருள்பெற்ற நாதர்கள்.

1. சனகரால் சம்புசந்தானம் மலையமான் சந்தானம் என இரு சந்தானங்கள் உண்டாய்ப் பின் பலவாயின.

2. சனத்குமாரரால் விஞ்ஞானதேவர் மெய்கண்ட தேவர் என இரு சந்தானங்கள் உண்டாய்ப் பின் பலவாயின.

3. சனந்தனரால் உபமன்னியதேவர் பரமதேவர் சிவானந்த போதர் என மூன்று சந்தானங்கள் உண்டாய்ப் பின் பலவாயின.

4. சனாதனரால் பிரமதேவர் சிங்கநாததேவர் என இரண்டாய்ப் பின் பலவாயின.

5. சிவயோகமாமுனிகளால் வாமதேவ சந்தானம் ஒன்றாய்ப் பின் பலவாயின.

6. பதஞ்சலிகளால் நிறைந்தநாயனார் சந்தானம் ஒன்றாய்ப் பின் பலவாயின.

7. வியாக்கிரபாதரால் சத்தியோசாதர் சந்தானம் ஒன்றாய்ப் பின் பலவாயின.

8. திருமூலதேவரால் எழுவகைச் சந்தானமாகிப் பின் பரம்பின.

பிரமதேவர், இந்திரதேவர், விட்டுணுதேவர், உருத்திர தேவர், கந்துருமகாஇருடிகள், காலாக்கினி உருத்திரர், கஞ்சனூர் மலையமான் என்னும் எழுவரையும் அறிக. இவர்வழி அளவின்றிப் பரம்பிற்றாதலின் ஈண்டு எழுதிற் பெருகும். அது சந்தான வரலாற்றில் காண்க ''

என வெள்ளியம்பலவாண முனிவர் முத்திநிச்சயப் பேருரையிற்* கூறுகிறார். சந்தான வரலாறு என்றொரு நூல் இப்போது இருப்பதாகத் தெரியவில்லை.

மேற்குறித்த சந்தானங்கள் பலவற்றில் இப்போது இருப்பது - விளங்குவது - மெய்கண்ட(தேவர்) சந்தானம் ஒன்றே. ஏனையவை இப்போது இருப்பதாகத் தெரியவில்லை.

மெய்கண்டசந்தானமே திருக்கயிலாய பரம்பரை என்றும் மெய்கண்டசந்தானம் என்றும் இப்போது வழங்குவது. சுத்தசைவப் பதினெண்ஆதீனங்கள் திருக்கயிலாய பரம்பரையாகிய இம் மெய்கண்ட சந்தானத்தில் வருவதே.

---

*முத்தி நிச்சயம் என்பது தருமபுர ஆதீனப் பண்டார சாத்திரங்களுள் ஒன்று. தருமபுர ஆதீன நிறுவனரும் குருமுதல்வருமான குருஞானசம்பந்தர் செய்தது. அதன் உரையாகிய ''முத்திய நிச்சயப் பேருரை '' தருமபுர ஆதீன அடியவர் வெள்ளியம்பலவாணமுனிவர் செய்தது. வெள்ளியம்பலவாண மாபாடியம் எனவும் அது வழங்கும். மேலெடுத்துக்காட்டிய செய்திகள் போன்றவற்றுக்கு இது ஒரு களஞ்சியம்.

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம்

சைவ ஆதீனங்களின் குருபரம்பரை திருக்கயிலாயத்திலிருந்து தொடங்குகிறது. திருக்கயிலாயத்திலிருந்து தொடங்குவதால் **திருக்கயிலாய பரம்பரை** என வழங்கப் பெறும். பூவுலகில் மெய்கண்டார் முதலாகத் தொடங்குவதால் **மெய்கண்ட சந்தானம்** எனவும் வழங்கப்பெறும். சந்தானம் - பரம்பரை. ஈண்டு சீடபரம்பரை.

திருக்கயிலாய மலையிலே, கல்லால மர நிழலிலே, தட்சிணாமூர்த்தியாய்(தென்முகப் பரமாசாரியராய்) எழுந்தருளிய **ஸ்ரீகண்டபரமசிவ**னிடத்திலே உபதேசம் பெற்றவர் **திருநந்தி தேவர்**. திருநந்திதேவரிடம் உபதேசம் பெற்றவர்கள் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்னும் **சனகாதி நால்வர்**. சனற்குமாரரிடம் உபதேசம் பெற்றவர் **சத்திய ஞானதரிசினிகள்**. சத்தியஞானதரிசினிகளிடம் உபதேசம் பெற்றவர் **பரஞ்சோதி மாமுனிவர்**.

பரஞ்சோதி மாமுனிவரிடம் உபதேசம் பெற்றவர் **மெய்கண்டார்**. மெய்கண்டாரிடம் உபதேசம் பெற்றவர் **அருணந்தி சிவம்**. அருணந்திசிவத்திடம் உபதேசம் பெற்றவர் **மறைஞான சம்பந்தர்**. மறைஞான சம்பந்தரிடம் உபதேசம் பெற்றவர் **உமாபதி சிவம்**.

திருநந்திதேவர், சனற்குமாரர், சத்தியஞானதரிசினிகள், பரஞ்சோதிமாமுனிகள் ஆகிய நால்வரும் கயிலாயவாசிகள்; **தேவபரம்பரை; அகச்சந்தானகுரவர்கள்.**

மெய்கண்டார், அருணந்தி, மறைஞானர், உமாபதியார் ஆகிய நால்வரும் பூவுலக வாசிகள்; **பூதபரம்பரை, புறச் சந்தானகுரவர்கள்.**

உமாபதிசிவத்தின் சீடபரம்பரையில் வருபவைதான் இன்றுள்ள **திருஆவடுதுறை தருமபுரம்** முதலிய சைவ ஆதீனங்கள்.

ஸ்ரீகண்டபரமசிவன்

திருநந்திதேவர்

சனகர் சனந்தனர் சனாதனர் சனத்குமாரர்

சத்தியஞானதரிசினிகள்

பரஞ்சோதிமாமுனிவர்

மெய்கண்டார்

அருணந்திசிவம்

மறைஞானசம்பந்தர்

உமாபதிசிவம்

இதுவே திருக்கயிலாய பரம்பரை. இவர்கள் சந்தான குரவர் எனப்பெறுவர். இவர்களுள்:

1. திருநந்தி தேவர் 2. சனற்குமாரர் 3. சத்தியஞான தரிசினிகள் 4. பரஞ்சோதி மாமுனிகள்	இந்நால்வரும் கயிலாயவாசிகள். தேவபரம்பரை. அகச்சந்தானகுரவர்கள்.

1. மெய்கண்டார் 2. அருணந்தி சிவம் 3. மறைஞான சம்பந்தர் 4. உமாபதி சிவம்	இந்நால்வரும் பூவுலகவாசிகள். பூதபரம்பரை. புறச்சந்தானகுரவர்கள்.

இவர்களும், உமாபதிசிவத்துக்குப்பின் ஆதீன நிறுவனர்கள் வரை வரும் சீடர்களும், உபதேச பரம்பரை. ஆதீன நிறுவனர்கள் முதலாக இன்றுவரை வளர்ந்துவருவது அபிஷேக பரம்பரை.

சமயகுரவர்களும் சந்தானகுரவர்களும்

சைவத்தில், சமயகுரவர் சந்தானகுரவர் என ஆசாரியர் இருவகையர். ஒவ்வொரு வகையிலும் நால்வர். சமயகுரவரும் நால்வர். சந்தானகுரவரும் நால்வர்.

சமயகுரவர் நால்வர்	சந்தானகுரவர் நால்வர்
1. திருஞானசம்பந்தர்	1. மெய்கண்டார்
2. திருநாவுக்கரசர்(அப்பர்)	2. அருணந்திசிவம்
3. சுந்தரமூர்த்திகள்	3. மறைஞானசம்பந்தர்
4. மாணிக்கவாசகர்	4. உமாபதிசிவம்

சமயகுரவர் நால்வரும் ஒருவருக்கொருவர் சீடர் அல்லர். நால்வரும் தனித்தனி ஆசாரியர்கள்.
சந்தானகுரவர் நால்வரும் ஒருவருக்கொருவர் சீடர்.

சமயகுரவர்கள் தோத்திரங்களை அருளினார்கள்.
சந்தானகுரவர்கள் சாத்திரங்களைச் செய்தார்கள்.

சமயகுரவர்களால் திருமுறைகள் தோன்றின.
சந்தானகுரவர்களால் சித்தாந்த சாத்திரங்கள் தோன்றின.

சமயகுரவர்களால் கோயில்கள் விளக்கம் பெற்றன.
சந்தானகுரவர்களால் மடங்கள் உண்டாயின.

சமயகுரவர்கள் கோயில் கோயிலாக நாடெங்கும் சென்று பாடினார்கள். இவர்களால் பாடப்பெற்றபின் அவை பாடல் பெற்ற தலங்களாயின.
சந்தானகுரவர்கள் மடங்களில் இருந்துகொண்டு பாடஞ் சொன்னார்கள்.

சமயகுரவர்கள் பாடியருளிய திருமுறைகள் இன்றும் திருக் கோயில்களில் இறைவன் திருமுன்னர் வழிபாட்டுக் காலங்களில் ஓதப்பெறுகின்றன.

சந்தானகுரவர்கள் செய்தருளிய சாத்திரங்கள் மடங்களில் பாடஞ்சொல்லப் பெறுகின்றன. கோயில்களில் இறைவன் திருமுன்னர் ஓதப்பெறுவதில்லை.

கோயில் கோயிலாகச் சென்று பாடி வழிபட்ட சமய குரவர்களுக்குக் கோயில்களில் தனிச்சந்நிதி ஏற்பட்டு வழிபடப்பெறுகின்றன.

சந்தான குரவர்களுக்குக் கோயில்களுக்கு வெளியே திருவீதியில் மடவளாகம் அமைந்தது.

சமயகுரவர்கள் கோயில்களில் வழிபடப்பெறுகிறார்கள்.

சந்தானகுரவர்கள் மடங்களில் வழிபடப் பெறுகிறார்கள்.

சமயகுரவர் திருவுருவங்கள் நின்ற கோலத்தில் விளங்கும்.

சந்தானகுரவர் திருவுருவங்கள் அமர்ந்த கோலத்தில் விளங்கும்.

கோயில்தோறும் சென்றும் நின்றும் பாடியவர்களுக்கு நின்ற திருக்கோலம்.

மடங்களில் அமர்ந்து பாடஞ்சொன்னவர்களுக்கு அமர்ந்த திருக்கோலம்.

சமயகுரவர்களைக் கோயில் நால்வர் என்றால், சந்தானகுரவர்களை மடத்து நால்வர் எனலாம்.

சமயகுரவர்கள் வளர்த்த சைவம், சந்தானகுரவர்களால் சைவ சித்தாந்தமாயிற்று. சமயகுரவர்கள் சமயாசாரியர்கள்(சமய ஆசாரியர்கள்).

சமயம் - ரிலிஜன். Religion

சந்தானகுரவர்கள் மதாசாரியர்கள்(மத ஆசாரியர்கள்)

மதம் - பிலாசபி. Philosophy

சமயகுரவர்களுக்குச் சந்தானம்(சீட பரம்பரை)இல்லை.

சந்தானகுரவர்களுக்குச் சந்தானம்(சீட பரம்பரை)உண்டு. பெயரே சந்தானகுரவராயிற்றே. சந்தானகுரவர்களின் சந்தானமே அபிடேக பரம்பரையாக, பல்வேறு திருமடங்களாக, இன்றளவும் வளர்ந்து பணிசெய்து வருகின்றன.

கோயில்களில் சந்தானகுரவர்களுக்குச் சந்நிதி இன்றேனும், இறைவன் திருமுன்னர் சாத்திரங்கள் ஓதுவது இன்றேனும், மடங்களில் சமயகுரவர் வழிபாடும், திருமுறை ஓதலும் பாடஞ்சொல்வதும் உண்டு.

சமயகுரவர்கள், கோயில்கள் மடங்கள் இவ்விருவகைக்கும் உரியர். பொது.

திருமுறைகள், கோயில்கள் மடங்கள் இவ்விருவகைக்கும் உரியன. பொது.

கோயில், சமய நிறுவனம்(சமய ஸ்தாபனம்)

மடம், மத நிறுவனம்(மத ஸ்தாபனம்)

சமயம், கோயில் மடம் இரண்டுக்கும் உரியது. பொது.

மதம் மடத்திற்கே உரியது. சிறப்பு.

சமயம் இன்றி மதம் இல்லை.

ஆதலின் மடம் சமயத்தை வளர்க்கும், மதத்தை விளக்கும்.

திருமுறைகள் இலக்கியம் போன்றவை.

சித்தாந்த சாத்திரங்கள் இலக்கணம் போன்றவை.

வைணவத்திலும் இவ்வாறே ஆழ்வார்கள் ஆசாரியர்கள் என இருவகை உண்டு.

ஆழ்வார்கள் சமயாசாரியர்கள்.

ஆசாரியர்கள் மதாசாரியர்கள்.

நாலாயிர திவ்வியப் பிரபந்தம் இலக்கியம்.

அட்டாதசரகசியகிரந்தங்கள் போன்ற சாத்திரங்கள் இலக்கணம்.

இவ்வாறு இன்னும் எவ்வளவோ சொல்லிக்கொண்டு போகலாம். ஓரளவில் நிறுத்த விரும்புதலின் இவ்வளவில் நிறுத்தினோம். இவற்றையெல்லாம் சைவ மெய்யன்பர்கள் நுட்பதிட்பமாகக் கூர்ந்து உணர்தல் வேண்டும்.

இனி, சந்தானகுரவர் நால்வர் வரலாறு கூறுவோம்.

சந்தானகுரவர் நால்வர் வரலாறு

1. மெய்கண்டார்

பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டஇரு தயகமல முகைக ளெல்லாம்
கண்திறப்பக் காசினிமேல் வந்தஅருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவும்
மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்.

- அருணந்திசிவம்; சிவஞானசித்தியார்.

இன்றைய சைவசித்தாந்த சாத்திர மரபையும் குரு மரபையும் தோற்றுவித்தவர் மெய்கண்டார். சந்தான குரவரில் முதல்வர்.

மெய்கண்டாரின் காலம் 13-ஆம்நூற்றாண்டு; கி.பி.1223.

மெய்கண்டார் பிறந்த ஊர் பெண்ணாகடம். பழைய நாட்டுப்பிரிவிணையில் நடுநாட்டுத்தலம். கடலூர் மாவட்டத்தில் விருத்தாசலத்திற்கு அண்மையிலுள்ளது. விருத்தாசலம் பெண்ணாகடம் திட்டக்குடி வழியாகத் தொழுதூர் சென்றால் சென்னை நெடுஞ்சாலையை அடையலாம். விருத்தாசலத்திற்கும் திட்டக்குடிக்கும் இடையிலுள்ள பெண்ணாகடம் இப்போது பெண்ணாடம் என்று வழங்குகிறது. சமயச் சிறப்புமிக்க பெண்ணாகடம் இப்போது தொழில்களால் சிறப்புற்றுச் சிறந்த தொழிற்சாலை நகரமாகத் திகழ்கிறது. சர்க்கரை ஆலை, சிமெண்ட் ஆலை முதலியவை உள்ளன. சம்பந்தர், அப்பர், தேவாரப் பாடல் பெற்ற தலம். அப்பராகிய திருநாவுக்கரசர் சூலக்குறியும் இடபக்குறியும் பொறிக்கப்பெற்ற இடம்.

மெய்கண்டாரின் தந்தையார் அச்சுதகளப்பாளர். பரம்பரைச் சுத்தசைவ வேளாளராகிய அவர் பெண்ணா கடத்தில் பெருநிலக்கிழார்; குறுநிலமன்னரென வாழ்ந்தார். மகப்பேறு இல்லாக்குறையால் மனம் வருந்திய அவர் தம்

குலகுருவாகிய திருத்துறையூர் சகலாகம பண்டிதரிடம் சென்று குறையிரந்தார். பண்டிதர் இறைவன் திருவுள்ளத்தை அறிவோம் என்று, மூவர் தேவார அடங்கன்முறை ஏட்டில் கயிறு சாத்திப் பார்த்தார். கயிறு சாத்திய இடத்தில் சம்பந்தருடைய திருவெண்காட்டுத் தேவாரப்பதிகம் இரண்டாவது திருப்பாடல் காணப்பட்டது. பாடலைக் கண்ட பண்டிதனார்,

பேயடையா பிரிவெய்தும்; பிள்ளையினோ டுள்ளம்நினை
வாயினவே வரம்பெறுவர்; ஐயுறவேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே

என்ற அத்திருப்பாடலில், "பிள்ளையினோடு உள்ளம் நினைவாயினவே, வரம்பெறுவர், ஐயுறவேண்டா ஒன்றும்", "வெண்காட்டு முக்குளநீர் தோய்வினையார் அவர் தம்மைத் தோயாவாம் தீவினையே" என்ற தொடர்களைச் சுட்டிக் காட்டி விளக்கித் திருவெண்காட்டுக்குச் சென்று அங்குள்ள முக்குளங்களிலும் நீராடி வழிபட்டால் பிள்ளைவரம் கிடைக்கும், குறை நீங்கும், ஒன்றும் ஐயுறவேண்டாம், உடனே செல்க! என்று அச்சுதகளப்பாளருக்கு அறிவுறுத்தி யனுப்பினார்.

அச்சுதகளப்பாளர், மனைவியாருடன் திருவெண்காட்டுத் தலத்திற்குச் சென்று சில காலம் தங்கிச் சோம, சூரிய, அக்கினி தீர்த்தங்களாகிய மூன்று குளங்களிலும் நீராடி வழிபட்டு வந்தார். திருவெண்காடு காவிரிப்பூம்பட்டினத் திற்கு அருகிலுள்ளது. சிலப்பதிகாரம் கனாத்திறமுரைத்த காதையில் "கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றின் மடலவிழ் நெய்தலங்கானற் றடமுள சோமகுண்டஞ் சூரிய குண்டந் துறை மூழ்கி" எனவரும் அடிகளிற் குறிப்பிடப் பெறும் சோமகுண்டமும் சூரியகுண்டமும் திருவெண் காட்டு முக்குளங்களில் இரண்டான சோம சூரிய தீர்த்தங்களே. வெண்காட்டு முக்குளங்களில் நீராடி வெண்காடரை வழிபட்டதன் பயனாக அச்சுதகளப்பாளர் மெய்கண்டாரைப் பிள்ளையாகப்பெறும் பேறு பெற்றார். பிறந்த பிள்ளைக்குச்

சுவேதவனப்பெருமாள் என்று பேரிட்டார். சுவேதவனம் - வெண்காடு.

பெண்ணாகடத்திற் பிறந்த பிள்ளை திருவெண்ணெய் நல்லூரில் மாமன் காங்கேயபூபதியின் வளமனையில் வளர்ந்தது. அகவை இரண்டு நிறைவேறி மூன்றாம் அகவை தொடங்கிற்று. அப்போது ஓர் அற்புதம் நிகழ்ந்தது.

கயிலாயத்தில் உபதேசம் பெற்ற பரஞ்சோதி முனிவர் ஒருநாள் கயிலையிலிருந்து பொதியைக்கு அகத்திய முனிவரைக் காண வானவீதியில் (ஆகாய மார்க்கமாக) சென்று கொண்டிருந்தார். குழந்தை சுவேதவனப்பெருமாள் திருவெண்ணெய்நல்லூரில் தம் வீட்டு வாசற்கெதிரே தெருவில் விளையாடிக் கொண்டிருந்தார். வானவீதியில் சென்று கொண்டிருந்த பரஞ்சோதிமுனிவர், குழந்தை விளையாடும் அவ்விடத்திற்கு நேர்மேலே வந்ததும், அவரது வான்வழிச் செலவு தடைப்பட்டது. உடனே கீழே பூமியை நோக்கினார். விளையாடிக் கொண்டிருந்த குழந்தையைக் கண்டார். அது உபதேசத்திற்கான பக்குவத்தோடு காத்திருப்பதை ஞான திருஷ்டியால் உணர்ந்தார். விண்வெளியிலிருந்து கீழே மண்ணுக்கு இறங்கினார். குழந்தையை எடுத்தணைத்துப் பரிச, திருநோக்க தீக்கைகளும் சிவஞான உபதேசமும் செய் தருளினார். தமது ஆசிரியராகிய சத்திய ஞான தரிசினிகளின் பெயரையே தமிழ்ப்படுத்தி மெய்கண்டார் என்று குழந்தைக்குத் தீக்ஷாதிருநாமமும் இட்டுத் தம் வான்வழிச் செலவைத் தொடர்ந்தார். பரஞ்சோதி முனிவரின் அருள்பெற்ற சுவேதவனப் பெருமாள் அதன்பின் மெய்கண்டார் ஆனார்.

சமயகுரவரில் முதல்வர் சம்பந்தர். அவர் சீகாழியில் ஞானப்பால் அருளப்பெற்றபோது அகவை மூன்று. சந்தான குரவரில் முதல்வர் மெய்கண்டார். இவர் திருவெண்ணெய் நல்லூரில் பரஞ்சோதி முனிவரால் ஞானோபதேசம் அருளப் பெற்றபோது இவர்க்கும் அகவை மூன்று. இருவரும் குழவிப் பருவத்திலேயே அருள் பெற்றவர்கள். சம்பந்தர்

சமயகுரவராதலின் அவர்க்கு ஞானம் அம்மையப்பரிடமிருந்து நேரே வரப்பெற்றது. இவர் சந்தானகுரவராதலின் இவர்க்குக் குருமுகமாக வந்தது. இவர்க்கு முந்திய குருமார்கள் தேவபரம்பரை, அகச்சந்தானம். இவர் தொடங்கி, இவர் முதலாகப் பூதபரம்பரை, புறச்சந்தானம்.

கயிலைக் குருகுலத்து ஞானம் மெய்கண்டார் வழியாகத் தமிழகத்துக்கு வந்தது. முன்னரே இங்கு விளங்கிய, சமயகுரவர் நால்வர் விளக்கிய, சைவத்தைச் சைவ சித்தாந்தமாக விரித்து விளக்கிச் சைவசித்தாந்த குருபீடங்களாய், குருமடங்களாய், சந்தான பரம்பரையாய், பரவத் தொடங்கிற்று. இன்றைய சைவசித்தாந்த சாத்திர மரபை, குருமரபைத் தொடங்கி வைத்தவர், தோற்றுவித்தவர் மெய்கண்டார்.

தோத்திரத்தில் முதல் நூல் செய்தவர் சம்பந்தர். சாத்திரத்தில் முதல்நூல் செய்தவர் மெய்கண்டார். இருவருமே குழந்தைப் பருவத்தில் ஞானம் பெற்றவர்கள்; குழந்தை ஞானிகள்; ஓதாதுணர்ந்தவர்கள். மெய்கண்டார் செய்த ஒரே சாத்திர நூல், ஒப்பற்ற நூல், சிவஞானபோதம். 12 சூத்திரங்கள், 40 அடிகள், 216 சொற்கள், 624 எழுத்துகள் என்று இதற்கு எழுத்துக்கணக்கும் சொல்வதுண்டு. அளவாற் சிறுநூல், பொருளாற் பெருநூல். பின்வந்த நூல்களுக்கெல்லாம் இதுவே முதல்நூல். பின்னாளில் மாதவச் சிவஞானமுனிவரால் பேருரை - மாபாடியம் - மகாபாஷ்யம் செய்யப்பெற்ற ஒப்பற்ற பெருநூல்.

மெய்கண்டாரின் புகழ் பரவிற்று. மாணவர் பலர் வந்தடுத்தனர். மாணவர் தொகை பெருகி 48 வரை நீண்டது. குலகுருவாகிய சகலாகம பண்டிதரே 49-ஆவது மாணவரானார். நாற்பத்தொன்பதின்மரிலும் தலைமாணாக்கராக, முதல் மாணாக்கராக ஆனார். மெய்கண்டாரிடம் பாடங்கேட்டதோடு உபதேசமும் பெற்று அவருக்குப்பின் இரண்டாவது சந்தான குரவராகவும் ஆனார்.

மெய்கண்டார் . எவ்வளவு காலம் நிலவுலகில் நிலவினார் என்பது தெரியவில்லை. ஒரு நன்னாளில் திருவெண்ணெய்நல்லூரில் முத்திபெற்றார். அவரது சமாதிக் கோயில் திருவாவடுதுறை ஆதீனத்தின் கிளைமடமாகத் திருவெண்ணெய்நல்லூரில் இன்றும் திகழ்கிறது.

பெண்ணாகடத்தில் மெய்கண்டார் பிறந்த இடம் களப்பாளர்மேடு என்று வழங்கிய அடையாளத்தைக் கொண்டு பின்னாளில் கண்டுபிடிக்கப்பெற்றது. அவ்விடத்தில் சுமார் 1 ஏக்கர் 15 செண்ட் நிலம் மெய்கண்டாருக்காக விலைக்கு வாங்கப்பெற்று, அதில் மெய்கண்டார் நிலையம் என்றோர் கட்டிடம் கட்டி, மெய்கண்டார் விக்கிரகம் நிறுவப் பெற்று 01.05.1952 (நந்தன - சித்திரை-1)-இல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. திருவெண்ணெய்நல்லூரில் உள்ள சமாதித் தலத்தைப் போன்று இதுவும் திருவாவடுதுறை ஆதீன நிர்வாகத்திலுள்ளது.

2. அருணந்தி சிவம்

அருள் நந்தி என்று பிரித்துச் சொல்வதைக் காட்டிலும் அருணந்தி எனக் கூட்டிச் சொல்வதில், சந்தி சேர்த்துச் சொல்வதில், ஓர் இனிமை, இன்னோசை உள்ளது.

அருணந்திசிவம் வேறு யாருமல்லர். அச்சுதகளப்பாள ருக்குக் குலகுருவாக இருந்தவரும், மெய்கண்டார் பிறப்பதற்கு முன் திருமுறை ஏட்டில் கயிறுசார்த்திப் பார்த்துச் சொன்ன வருமான சகலாகமபண்டிதரேதான். அச்சுதகளப்பாளருக்குக் குலகுருவாக விளங்கிய சகலாகம பண்டிதர், அச்சுதகளப் பாளரின் மகனார் மெய்கண்டாருக்குச் சீடராகி அருணந்தி சிவம் எனப் பெயர்பெற்றது சுவையான ஒரு வரலாறு.

அருணந்தியாரின் ஊர் திருத்துறையூர். திருவெண்ணெய் நல்லூருக்குச் சிறிது தொலைவில் உள்ளது. அருணந்தியாரின் இயற்பெயர் இன்னதெனத் தெரியவில்லை. சிவாசாரியர் மரபினராகிய இவர் தம் பிறப்பிற்கேற்ப ஆகமங்கள் பலவற்றிலும் பெரும்புலமை பெற்றுத் திகழ்ந்ததால்

சகலாகம பண்டிதர் என வழங்கப் பெற்றார். சகல ஆகமங்களிலும் பண்டிதரான இவர் செல்லுமிடங்களுக் கெல்லாம் சாத்திர ஏட்டுச்சுவடிகளையும் தம்முடன் வண்டியில் ஏற்றிச் செல்வாராம். நடமாடும் பல்கலைக் கழகம் என்று நாம் இந்நாளிற் சொல்கிறோமன்றோ? அதுபோல் அந்நாளில் நடமாடும் நூலகமாகத் திகழ்ந்த இவர் செல்லுமிடமெல்லாம் ஒரு நூலகத்தையும் வண்டியில் ஏற்றிச் சென்றுள்ளார். உண்மையில் வண்டி இவருக் கில்லை; இவர் ஏற்றிச்செல்லும் ஏராளமான ஏட்டுச் சுவடிகளுக்கே. சுவடிகளோடு இவரையும் வண்டி சுமந்து சென்றது என்று சொல்ல வேண்டும். ஆர்வமும் அறிவாற்றலும் பெருமையும் அவ்வளவு இருந்தது இவருக்கு.

தாம் சொல்லிப் பிறந்த குழந்தை சுவேதவனப் பெருமாள் மெய்கண்டாராய்க் குழந்தைப் பருவத்திலேயே குருவாகிச் சீடர் பலரோடு திகழ்வதைக் கேள்வியுற்ற சகலாகம பண்டிதர் ஒருநாள் திருவெண்ணெய்நல்லூருக்குச் சென்று அச்சுதகளப்பாளரையும் குழந்தை மெய்கண்டாரையும் பார்த்துவர எண்ணிச் சென்றார். இவர் சென்று கண்டபோது மெய்கண்டார் ஆணவமலத்தைப்பற்றி மாணவர் குழாத்துக்கு உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார்.

வாயிலில் நின்றவாறே அக்காட்சியைக் கண்ட சகலாகம பண்டிதரின் ஆணவம் அவரைச் சும்மா இருக்க விடவில்லை. நாம் சொல்லிப் பிறந்த குழந்தை, மூன்றாண்டுச் சிறுவன், இவ்வளவு பேரைக் கூட்டிவைத்துக் கொண்டு ஆணவத்தைப் பற்றிப் பேசுகிறானே, என்ன ஆணவம் இவனுக்கு, இவனை ஒரு கேள்வி கேட்டு மடக்கிவிடுவோம் என்று எண்ணினார். அவரது ஆணவம் அவ்வாறு எண்ணச்செய்தது. எண்ணிய வேகத்திலேயே கேள்விக்கனை ஒன்றைத் தொடுத்தார். ஆணவமலத்தின் சொரூபம் யாது? என்று ஓங்கிய குரலில் மெய்கண்டாரைப் பார்த்து வினவினார்.

உரை நிகழ்த்திக் கொண்டிருந்த மெய்கண்டாரின் கவனம் இவர்பக்கம் திரும்பிற்று. ஆணவமலத்தின் சொரூபம் யாது என்ற கேள்விக்கு மெய்கண்டார் வாயால் விடை கூறவில்லை. கையால் காட்டினார். தமது சுட்டுவிரலை நீட்டி இவரையே சுட்டிக் காட்டினார். விரலை உயர்த்தி இவரது உச்சந்தலைக்கும், விரலைத் தாழ்த்தி இவரது உள்ளங்காலுக்குமாக விரலை ஆட்டிக் காட்டினார். சமயகுரவர்களுள் முதல்வரான சம்பந்தர் எவ்வாறு தம் தந்தையாருக்குப் பெம்மான் ' இவனன்றே ' என்று இறைவனை அண்மைச்சுட்டால் சுட்டிக் காட்டினாரோ அவ்வாறே, சந்தானகுரவருள் முதல்வரான மெய்கண்டாரும், தம் குலகுருவுக்கு, தம் வருங்கால மாணவருக்கு, ஆணவமலத்தைச் சுட்டிக் காட்டினார். சகலாகமபண்டிதரின் ஆணவம் அடங்கிற்று. அதுவரை பண்டிதராக மட்டும் இருந்த அவருக்குப் பரிபக்குவம் உண்டாகும் காலம் வந்தது. விரைந்து சென்று மெய்கண்டாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். மாணாக்கராக ஏற்று ஆட்கொள்ள வேண்டினார். மெய்கண்டாரும் சகலாகமபண்டிதரை ஆட்கொண்டு ஞானோபதேசம் வழங்கி அருள்நந்தி என்ற தீட்சாநாமத்தையும் சூட்டினார். அதுமுதல் சகலாகம பண்டிதர் அருணந்தி ஆனார். நாற்பத்தெட்டு மாணாக்கர்களோடு இருந்த மெய்கண்டாருக்கு நாற்பத்தொன்பதாம் மாணவர் ஆனார். சின்னாளில் முதல் மாணவரும் ஆனார். மெய்கண்டாரை அடுத்துச் சந்தானகுரவரில் இரண்டாமவரும் ஆனார்.

குழந்தைப்பருவக் குருவுக்குப் பாட்டனார் வயதில் சீடர். சமயகுரவருள் முதல்வராகிய சம்பந்தர் சிறுவர். இரண்டாமவராகிய அப்பர் அவரினும் பல ஆண்டுகள் மூத்தவர். எனினும் ஒருவருக்கொருவர் சீடரல்லர். இருவரும் நண்பர்களாகவே பழகினர். சம்பந்தர் பல்லக்கை அப்பர் சுமந்தார். சந்தானகுரவருள் முதல்வர் மெய்கண்டார் சிறுவர். இரண்டாமவர் அருணந்திசிவம் அவரினும் பல ஆண்டுகள் மூத்தவர். அன்றியும் குலகுரு. மூத்தவர் இளையவரின் சீடரானார். ஞானம் அகவை மூப்பில் இல்லை. அனுபவ

மூப்பில், பக்குவ முதிர்ச்சியில் இருக்கிறது. குலகுருவாக இருப்பதினும் ஞானகுருவாக ஆவதன்றோ சிறப்பு. குலகுரு சகலாகமபண்டிதர் அருணந்தியாய் ஞான குருவானார்.

திருவெண்ணெய்நல்லூரில்மெய்கண்டார் முத்திபெற்ற பின் அருணந்திசிவம் ஆசாரியராகிச் சைவசித்தாந்தம் விளக்கலுற்றார்.

மெய்கண்டார் அருளிய முதல்நூல் சிவஞானபோதத்திற்கு வழிநூலாகச் சிவஞானசித்தியார் என்னும் ஓர் அருமையான ஞானநூலை இயற்றினார். சிவஞானசித்தியின் சிறப்புக்கு அதுபெற்று ''ஆர்'' அடைமொழியே போதுமானது. நீதி நூல்களில் நாலடியாரும், திருமுறைகளில் திருக்கோவை யாரும், சாத்திரங்களில் திருவுந்தியாரும் திருக்களிற்றுப் படியாரும் ''ஆர்'' பெற்றுச் சிறந்தனபோன்று அருணந்தியாரின் சிவஞானசித்தியும் ''ஆர்'' பெற்றுச் சிவஞானசித்தியாராகச் சிறந்தது. சிவஞானசித்தியார் எனாது சித்தியார் என்றாலே அது, இதனைக் குறிப்பதாயிற்று.

சித்தியார் சாத்திரநூல் மட்டுமன்று, முழுஅளவு இலக்கிய நூலாகவும் கொள்ளத்தக்கது; ஓரளவு தோத்திர நூலும் ஆகும். தொட்ட தொட்ட இடமெல்லாம் சாத்திரச் சிறப்போ டு இலக்கியச் சிறப்பும் கமழும்.

மெய்கண்டாரின் சிவஞானபோதம் முதல் நூல். அருணந்தியாரின் சிவஞானசித்தியார் வழிநூல். இரண்டும் சிவஞான நூல்கள். ஒன்று போதம். மற்றொன்று சித்தி. பெயர்களே அருமையாக அமைந்துள்ளன. பொருத்தமாக அமைந்துள்ளன. சிவஞானபோதம் போதத்தை நல்கும். சிவஞான சித்தி, சித்தியைத் தரும். முதலில் போதம் பெற வேண்டும். பின்னர் அப்போதத்தால் சித்தியைப் பெறவேண்டும். சிவஞான போதத்தால் சிவஞானபோதம் பெற்று, அதன்பின்னர் சிவஞானசித்தியால் சிவஞானம் சித்திக்கப்பெற வேண்டும்.

சிவஞானசித்தியார் பரபக்கம், சுபக்கம் என்ற இரண்டு பாகங்களாகச் செய்யப்பட்டுள்ளது. முதலில் பரபக்கம்.

அடுத்து சுபக்கம். பக்கம் - பக்ஷம், பட்சம். சுபக்கம் - தம் பக்கத்தை (சைவசித்தாந்தத்தை) விரித்துரைப்பது. பரபக்கம் பிறர்பக்கத்தை(ஏனைய சமயவாதிகளின் பக்கத்தை) மறுத் துரைப்பது. பரபக்கம் 301 பாடல்கள். சுபக்கம் 328 பாடல்கள். பரபக்கத்தில் பாயிரம் 11 பாடல்கள். பாயிரப் பகுதி மிகவும் சிறப்பானது. பாயிரத்திலுள்ள மெய்கண்டார் துதி ஆசிரியரின் உள்ளத்தைப் பிழிந்து தருவதாக உள்ளது. படிப்போர் உள்ளத்தையும் பிழிகிறது; பிணிக்கிறது. "பண்டை மறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம் பரிந்தொழுக" என்னும் அப்பாடலை மெய்கண்டார் வரலாற்றின் தொடக்கத்தில் முன்னர் எடுத்துக் காட்டியுள்ளோம். (பக்கம் 17.) மெய்கண்டாரைத் துதிப்பதற்கு இதைவிடச் சிறந்த செய்யுள் வேறொன்றில்லை.

"அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்"

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத் தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்"

என்னும் சித்தியாரின் வரிகள் வைரவரிகள். இவற்றைப் போல் ஆங்காங்கே பல உள்ளன. எடுத்துக்காட்ட ஈண்டு இடம் போதா.

தரம்உயர்ந்த தமிழ்நூல்கள் என்று, தரமறிந்த தமிழறிஞர் ஒருவர் ஆறு நூல்களைக் குறிப்பிட்டுக்கூறும் தரமான பழஞ்செய்யுளொன்று உண்டு. அது கூறும் தண்டமிழின் மேலாம் தரமான ஆறில் சித்தியாரும் ஒன்று.

வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம் தொல்காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை - ஒன்றியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாம் தரம்.

1. வள்ளுவர் சீர் - திருவள்ளுவரின் திருக்குறள்
2. அன்பர் மொழி வாசகம் - மணிவாசகரின் திருவாசகம்
3. தொல்காப்பியம் - தொல்காப்பியம்
4. பரிமேலழகர் செய்த உரை - திருக்குறள், பரிமேலழகர் உரை
5. சீர்த்தொண்டர் புராணம் - பெரியபுராணம்
6. தொகுசித்தி - சிவஞானசித்தியார்

இவ்வாறும் தண்டமிழின் மேலாம் தரம். சித்தியாரின் தரத்திற்கு மேலும் ஒரு சான்று-

உலகத்திலுள்ள விரிந்த பல நூல்களை யெல்லாம் பார்த்து அறிந்தால் சித்தியாரின் ஒரு பாடலில் பாதியே போதும் என்கிறார் தருமபுர ஆதீன நிறுவனரும் குருமுதல்வருமான குருஞானசம்பந்தர்.

"பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியின் சித்தியிலே
ஓர்விருத்தப் பாதி போதும்"

என்பது குருஞானசம்பந்தர் செய்த சிவபோகசாரம்(23). குருஞானசம்பந்தர் முன்மொழிந்த இதனை அப்படியே தாயுமானவரும் வழிமொழிகிறார்.

"பாதிவிருத்தத்தால் இப்பார் முழுவதும் ஆக உண்மை
சாதித்தார் பொன்னடியைச் சாரும்நாள் எந்நாளோ?"

என்பது தாயுமானவர் பாடல் எந்நாட்கண்ணி (குருமரபின் வணக்கம்-5). குருஞானசம்பந்தரும் தாயுமானவரும் பாராட்டிக் கூறும் பாதிவிருத்தம், சிவஞானசித்தியாரில் சுபக்கம் 282, எட்டாம் சூத்திரம் முப்பதாவது செய்யுள் 'அறியாமை அறிவ கற்றி' என்ற தொடக்கமுடைய விருத்தத்தின் முதற் பாதியாகும்.

சிவஞானசித்தியார் தோன்றிய பிறகு சித்தி என்று பெயர்கொண்ட பல நூல்கள் தோன்றின. பேரானந்த சித்தி, அறிவானந்த சித்தி, ஞான சித்தி, சன்மார்க்க சித்தி என்பன சில. பின்வந்த ஆசிரியர் பலர் இவ்வாறு தம் நூல்களுக்குச் சித்திப் பெயரிட்டனர் என்றால் மூலமாகிய சித்தியாரின் பெருமை என்னே!

சித்தியார்தவிர இருபாஇருபஃது என்ற இன்னொரு நூலையும் அருணந்தியார் அருளினார். மெய்கண்ட நூல்கள் பதினான்கில் அருணந்தியார் அருளியவை இரண்டு. 1. சிவஞான சித்தியார். 2. இருபா இருபஃது.

இவ்விரு சாத்திரங்களையும் அருளிய அருணந்தியார் மறைஞானசம்பந்தருக்கு உபதேசம் செய்து திருத்துறையூரில் முத்தி பெற்றார்.

திருத்துறையூரில் இவர் முத்தியடைந்த தலம் (சமாதிக் கோயில்) திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானதாகப் பராமரிக்கப்பெற்று வருகிறது.

3. மறைஞானசம்பந்தர்

சைவஉலகில் சம்பந்தர் என்ற பெயர் மிகவும் சிறப்புடையது. சம்பந்தப் பெயர் கொண்டோர் பலர். அவருள் மூவர் முக்கியமானோர்.

1.திருஞானசம்பந்தர். சமயகுரவருள் முதல்வர்.

2. மறைஞானசம்பந்தர். சந்தானகுரவருள் மூன்றாமவர்.

3. குருஞானசம்பந்தர். தருமபுரஆதீனநிறுவனர், குருமுதல்வர்.

மறைஞானசம்பந்தர், மெய்கண்டாரின் அவதாரத் தலமாகிய பெண்ணாகடத்தில் , அந்தணர் குலத்தில், சாம வேத மரபில், பராசர கோத்திரத்தில் பிறந்தவர். அருணந்தி சிவாசாரியரிடம் உபதேசம் பெற்று அவருக்குப்பின் சந்தான குரவரில் மூன்றாமவராகத் திகழ்ந்தவர். தில்லைச் சிதம்பரத்திற்கு வடகிழக்கிலுள்ள திருக்களாஞ்சேரி இவர் வாழ்ந்த இடம். சிங்காரத் தோப்பு என்றும் அதற்குப் பெயருண்டு. திருக்களாஞ்சேரியில் சிவன்கோயிலொன்றும் இவரது மடமும் உள்ளன. கோயிலுக்குத் திருக்களாஞ் செடியுடைய மகாதேவர் கோயில் என்று பெயர்.

சிறந்த ஞானியாகவும் அதிவர்ணாச்சிரமியாகவும் திகழ்ந்த மறைஞானசம்பந்தரிடம் உபதேசம் பெற்றவர்களிற் சிறந்தோர் இருவர். ஒருவர் மச்சுச்செட்டியார் என்னும் அருணமச்சி வாயர்(அருள்நமச்சிவாயர்). இன்னொருவர் உமாபதி சிவாசாரியர்.

மறைஞானசம்பந்தர் நூல் எதுவும் செய்யவில்லை என்று அறிஞர் பலரும் கூறுகின்றனர். சதமணிக்கோவை என்றொரு நூல் செய்ததாகத் திருச்சிற்றம்பலம் மு.அருணாசலம் ஒருவர் மட்டும் அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறார்.

மறைஞானசம்பந்தர் திருக்களாஞ்சேரியிலேயே முத்தி பெற்றார். அவரது மடத்திலேயே சமாதி உள்ளது. மடமும் சமாதியும் திருவாவடுதுறை ஆதீனப் பராமரிப்பில் உள்ளன.

4. உமாபதி சிவம்

சந்தானகுரவர் நால்வரில் இவர் நான்காவது ஆசாரியர். சிதம்பரத்தில் தில்லைவாழந்தணர் மரபில் தோன்றியவர். தில்லைச் சிற்றம்பலத்தில் நடராசப்பெருமானைத் திருமேனி தீண்டி வழிபாடாற்றும் தீட்சிதர்களுள் ஒருவர். அவருள்ளும் சிறந்த நிலையில் இருந்தவர்.

சிறந்த தகுதி காரணமாகச் சிவிகை(பல்லக்கு) ஏறிச் செல்லும் சிறப்பைப் பெற்றவர். ஒருநாள் இவர் தில்லைத் திருவீதியில் சிவிகையில் சென்றுகொண் டிருந்தபோது மூன்றாம் சந்தானகுரவராகிய மறைஞானசம்பந்தர் அவ்வீதியில் பிச்சை ஏற்றுக்கொண்டு வந்தார். உமாபதியார் பகல்தீவர்த்தி முதலிய விருதுகளுடன் சிவிகையூர்ந்து செல்வதைக் கண்ட அவர் ''பட்ட கட்டையிற் பகற் குருடு போகுது பாரீர்'' என்று கூவினார். பட்டகட்டை - பட்டுப்போன மரக்கட்டை - பல்லக்கைக் குறிப்பது. பகற்குருடு - பகலில் கண் தெரியாது தீவர்த்தி பிடித்துச்செல்லும் குருடு - உமாபதி சிவத்தைக் குறிப்பது. தெருவில் பிச்சையெடுத்துக்கொண்டு செல்லும் ஒருவர், பல்லக்கில் பகல் தீவர்த்தி விருதோடு செல்லும் தம்மைப் பார்த்துப் பட்டகட்டையில் பகல் குருடு போகுது பாரீர் என ஏளனமாகச் சொன்னசொல் சுரீர் எனத் தைத்தது. ஞான உபதேசம் பெறும் நல்ல காலமும் வந்தது. பல்லக்கினின்றும் குதித்து ஞானசம்பந்தரை நோக்கிச் சென்றார். இவர் வருவதைக் கண்ட அவர் ஓடினார். ஓடிய அவர்பின் இவரும் ஓடினார். சிலதூரம் ஓடியபின் ஓரிடத்தில் தெரு ஓரத்தில் நெசவுசெய்வோர் பாவுக்குக் கஞ்சி போட்டுக் கொண்டிருந்தனர். மறைஞானர் அவ்விடம் சென்று அருந்தக் கஞ்சிகேட்டார். நெசவாளரும் பாவு கஞ்சியை அவர் கையில் வார்த்தார். அதை மறைஞானர் அருந்த, அவர் முழங்கையினின்றும் வழிந்த கஞ்சி எச்சத்தை உமாபதியார் கையேந்தி ஏற்று வாயிலிட்டுக் கொண்டார். இச்செயலால் இவரது பக்குவநிலையை அறிந்த மறைஞானர் இவரைச் சீடராக ஏற்று உபதேசம் செய்தார். மறைஞானரிடம்

உபதேசம் பெற்ற உமாபதியார் நடராசரின் பூசையோடு மறைஞானரின் வழியில் தவவாழ்விலுந் தலைப்பட்டார்.

இவரது இச்செயல்கள் தில்லைவாழந்தணர்களாகிய தீட்சிதர்களுக்குப் பிடிக்கவில்லை. இவரைத் தங்கள் கூட்டத்திலிருந்து விலக்கிவிட்டனர். கோயிற் பூசையும் செய்யலாகாதெனத் தடுத்துவிட்டனர். பூசைமுறையை இழக்கநேர்ந்த உமாபதியார் சிதம்பரத்திற்குக் கிழக்கே உள்ள கொற்றவன்குடிக்குக் குடிபெயர்ந்தார். அங்கு, இருந்த இடத்திலிருந்தவாறே நடராசப்பெருமானை மானசீகமாகப் பூசை செய்துவந்தார். சில நாள்களுக்குப்பின் ஒருநாள் தில்லைத் திருக்கோயிலில் பூசைப் பெட்டகத்தினுள்ளிருந்த பெருமானைக் காணவில்லை. தீட்சிதர்கள் திகைத்து வருந்திய போது, ''நாம் உமாபதியின் பூசையில் இருக்கிறோம்'' என்ற அசரீரிவாக்கு எழுந்தது. தீட்சிதர்கள் உமாபதியாரின் பெருமையை உணர்ந்து அவரை அழைத்து வந்து மீண்டும் கோயிற் பூசையைச் செய்துவரக் கேட்டுக்கொண்டனர்.

ஒருசமயம் உமாபதியார் இல்லாமலேயே கோயிலில் கொடிஏற்றுவிழா நிகழ்ந்தபோது கொடிஏறாமல் தடைப் பட்டது. தீட்சிதர்கள் கவலையடைந்தனர். '' உமாபதி வந்தால் கொடி ஏறும் '' என்றொரு அசரீரி எழுந்தது. தீட்சிதர்கள் சென்று உமாபதியாரை வேண்டவும் அவர் வந்து கொடிக்கவி நான்கு பாடல்களையும் பாடக் கொடியேறிற்று.

பெற்றான் சாம்பான் என்றொருவர் நந்தனார் மரபினர் அக்காலத்தில் தில்லையில் வாழ்ந்தார். தாழ்ந்த வகுப்பினராகிய அவர் கோயில் மடைப்பள்ளிக்கு விறகு வெட்டிக் கொண்டு வந்து கொடுக்கும் பணியைச் செய்துவந்தார். அவரது பரிபக்குவ நிலையைக்கண்ட நடராசப்பெருமான் அவருடைய கனவில் தோன்றி

அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதிய கைச்சீட்டு - படியின்மிசைப்
பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை.

என்று எழுதிய சீட்டைக் கொடுத்து, அதனை உமாபதியாரிடம் கொடுத்துப் பேறு பெற உத்தரவிட்டார். சாம்பானார் உமாபதியாரை நேரிற்காண்பது எளிதாக இல்லாமையால் உமாபதியாரின் திருமடத்திற்கும் விறகுவெட்டிக் கொடுக்கும் பணியைத் தொடங்கினார். சில நாள்கள் சென்றன. ஒருநாள் மழை. விறகு கொண்டுவந்து கொடுக்க இயலவில்லை. உணவு வேளை காலங்கடந்து சென்றது. உமாபதியார் காரணம் வினவினார். நாள்தோறும் விறகு கொண்டுவந்து கொடுக்கும் விறகுவெட்டி இன்று விறகு கொண்டுவரவில்லை என்றனர். நாளை அவர் வரும்போது நம்மிடம் அவரைக் கொண்டுவருக என்று உமாபதியார் கட்டளையிட்டார்.

மறுநாள் சாம்பானார் இரண்டு நாள்களுக்குரிய விறகுடன் வந்தார். பணியாளர்கள் அவரை உமாபதியார்முன் அழைத்து வந்தனர். உமாபதியாரை நேரில் தரிசிக்கப்பெற்ற சாம்பானார் நடராசப்பெருமான் கனவில் அருளிய திருமுகச் சீட்டை அவர்முன் வைத்து வணங்கினார். சிற்றம்பலவரின் கைச் சீட்டைக் கண்ட உமாபதியார் அதன்படி அப்போதே பெற்றான் சாம்பானார்க்குச் சத்தியோநிர்வாண தீக்கை செய்து முத்தி யளித்தருளினார். சாம்பானார் உடம்போடு ஒளிமயமாக மறைந்துவிட்டார்.

இதன் உண்மையை அறிய இயலாத சாம்பானாரின் மனைவியும் சுற்றத்தாரும் உமாபதியார் சாம்பானை மந்திரத்தால் எரித்துவிட்டார் என்று அரசனிடம் சென்று முறையிட்டனர். அரசன் இதன் உண்மையை அறிய எண்ணி உமாபதியாரின் மடத்துக்கு வந்து விசாரிக்கலானான். உமாபதியார் உண்மையை விளக்கினார். அரசன் அதை ஏற்றாலும், மற்றவர்களும் ஏற்கும்படி, எல்லாரும் பார்க்கும் படி, இன்னொருமுறை அப்படி ஒரு தீட்சை செய்துகாட்ட வேண்டினான். இம்முறை தீக்கை பெறுவதற்குப் பக்குவ முடைய அடியவர்கள் யாரும் இல்லை. பூசையிலிருந்த நடராசமூர்த்தியின் திருமஞ்சன நீரால் வளர்ந்த முள்ளிச்செடி ஒன்று கோமுகையின் அருகே

இருந்தது. இந்த முள்ளிச் செடிக்கு முத்தியளிப்போம் காண்மின் என்று அச்செடிக்குத் தீக்கையளித்தார். யாவரும் கண்காண இருந்த அம் முள்ளிச்செடி ஒளிமயமாய் மின்னி யாவராலும் காணப்படாது மறைந்தது. உண்மையை அனைவரும் உணர்ந்து தெளிந்தனர்.

உடம்போடு மறையும் முத்தியை அப்பொழுதே அளிக்கும் தீட்சையின் பெயர் சத்தியோ நிர்வாண தீக்கை என்பது. அத்தீக்கையைச் செய்யும் வல்லமையை உமாபதி சிவம் பெற்றிருந்தார்.

இவ்வாறு தவம்வல்ல அருளாளராய்த் திகழ்ந்த உமாபதிசிவனார் நூல்கள் பலவற்றைச் செய்தார். சந்தானகுரவர் நால்வரில் அதிகமான நூல்களைச் செய்தவர் உமாபதியாரே. சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கில் எட்டு நூல்கள் உமாபதியார் செய்தவை.

1. சிவப்பிரகாசம்
2. திருவருட் பயன்
3. வினா வெண்பா
4. போற்றிப் பஃறொடை
5. கொடிக்கவி
6. நெஞ்சுவிடு தூது
7. உண்மைநெறி விளக்கம்
8. சங்கற்ப நிராகரணம்

இவ்வெட்டும் சித்தாந்த அட்டகம் எனச் சிறப்பித்துக் கூறப்பெறும். இவ்வெட்டு நூல்களைத் தவிரக் கோயிற் புராணம், திருப்பதிக்கோவை, திருப்பதிகக் கோவை, திருமுறை கண்ட புராணம், சேக்கிழார் புராணம், சிவத்தல சிவநாம சத்திநாமக் கலிவெண்பா ஆகியவையும் உமாபதியார் செய்தவை. தமிழ் வடமொழி, இரண்டிலும் உமாபதியார் வல்லவர். சமஸ்கிருத நூல்கள் சிலவற்றையும் உமாபதியார் செய்துள்ளார்.

உமாபதியார் சங்கற்ப நிராகரணம் நூலைச் செய்த காலம் கி.பி.1313 எனத் திட்டமாகத் தெரிகிறது. எனவே இவர் காலம் 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி, 1313-க்கு முன்னும் பின்னுமான காலம் என்பது உறுதியாகிறது.

தகுதி வாய்ந்த சீடர் பலர் உமாபதியாரை அடுத்து உபதேசம் பெற்றனர். அருள்நமச்சிவாயர் குறிப்பிடத்தக்கவ ராவார்.

உமாபதியார் கொற்றவன்குடியில் தாம் வாழ்ந்த இடத்திலேயே, இன்று அவர் பெயரால் விளங்கும் மடத்திலேயே முத்தியடைந்தார். அவர் சமாதியும் அம்மடத்தில் உள்ளது. திருவாவடுதுறை ஆதீனத்திற்கு உரியதாயிருந்த கொற்றவன் குடி மடம், திருவாவடுதுறையிலிருந்து பிரிந்த திருத்துறையூர் வீரசைவ ஆதீனத்திற்கு(விருத்தாசலம் குமாரதேவர் மடத் திற்கு) இப்போது சொந்தமாக உள்ளது.

கொற்றவன்குடிக்குக் குடிபெயருமுன் சிதம்பரம் மாலைகட்டித் தெருவில் உமாபதிசிவம் வாழ்ந்த வீடும் மெய்கண்டார் மடம் என்ற பெயருடன் திருவாவடுதுறை ஆதீனத்தின் கிளைமடமாக இப்போது விளங்குகிறது.

உமாபதியாரின் நூல்கள் எட்டனுள் மிகவும் சிறந்தது சிவப்பிரகாசம். '' வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறன் இங்குத் தெரிக்கல் உற்றாம் '' என்று கூறிச் சைவ சித்தாந்தத் திறனைப் பிரகாசிக்கச் செய்கிறது.

சிவஞானபோதம் முதல்நூல்.
சிவஞானசித்தியார் வழிநூல்.
சிவப்பிரகாசம் சார்புநூல்.

முதல்நூல் செய்தவர் மெய்கண்டார். சந்தானகுரவருள் முதல்வர். வழிநூல் செய்தவர் அருணந்தியார். சந்தான குரவருள் இரண்டாமவர். சார்புநூல் செய்தவர் உமாபதியார். சந்தானகுரவருள் நான்காமவர்.

சந்தானகுரவர் நால்வரும் பிறந்த இடங்கள் முத்தி பெற்ற இடங்கள் திருவாவடுதுறை ஆதீனத்திற்கே உரியனவாக இருத்தல் அதன் சிறப்புகளில் ஒன்றாகும். கொற்றவன்குடியி லுள்ள உமாபதிசிவம் மடம் மட்டும் திருவாவடுதுறையிலிருந்து பிரிந்த துறையூர் வீரசைவ ஆதீனத்திற்குக் கொடுக்கப்பெற்று விட்டது.

சந்தானகுரவரின் தரம்

சந்தான குரவர்களின் தரத்தைச் சைவர்களும் தமிழன்பர்களும் தெரிந்து கொள்ள வேண்டும். சந்தான குரவர்களின் **தரம்** யாது? வடமொழிப் பத்ததிகளும் நூல்களும் செய்த உக்கிரச்சோதி, சத்தியோசோதி, ஞானசிவர், அகோர சிவர், ராமகண்டர் முதலியவர்களுக்கும், தமிழ்ச் சைவ சித்தாந்த சாத்திரங்களை அருளிய மெய்கண்டாராதி நால்வருக்கும் உள்ள **தாரதம்மியம்** என்ன? இவர்களின் **தராதரம்** என்ன? என்பதை வெள்ளியம்பலவாண முனிவர் முத்திநிச்சயப் பேருரையில் அருமையாகத் தெளிவுபடுத்துகிறார்.

குருஞானசம்பந்தர் அருளிய முத்திநிச்சயத்தில் "சந்தான நற்குரவர், தக்கோர், பிறர் சமயம் நந்தாது தோற்றுவித்த நற்குரவர்" என்னும் இரண்டாம் பாட்டுக்குப் பேருரை வரையும் வெள்ளியம்பலவாணர் வடமொழி ஆகமங்கள் உள்ளிட்ட பற்பல நூல்களிலிருந்து எடுத்துக்காட்டுகள் காட்டி விளக்குகிறார். சமஸ்கிருத மேற்கோள் பகுதிகளை ஈண்டெடுத்துக் காட்டுவது இயலாமையின் தமிழ்ப் பகுதிகள் சிலவற்றை மட்டும் எடுத்துக்காட்டுகிறோம்.

இனி, சந்தானகுரவர், **கன்மசித்தாந்தகுரவர் ஞான சித்தாந்த குரவர் என இருவகையர்.** இவருள் கன்மா வரண சித்தாந்த குரவரியல்பு வருமாறு. .... இவ்வாறு வரும் கன்மாவரண சித்தாந்த குரவருள் இக்காலம் அடுத்து நின்றார் யாரெனில் உக்கிரச்சோதி, சத்தியோசோதி, அகோர சிவாசாரியர், நாராயணகண்டர், இராமகண்டர், போசராசர் முதலியோ ரென்க. இவர்களாற் பண்ணப்பட்டன அஷ்டப் பிரகரணமும் கிரியாக்கிரமமும் சித்தாந்தசாராவளியும் பிறவுமாம்.

இனி, ஞானசித்தாந்த குரவரியல்பு வருமாறு .... இந்நந்திகேசுர சந்தான வரலாறு .... எனவும் வருதலான் உணர்ந்து கொள்க. இவருள் நந்திகணால்வ

ராவார் சநகர், சநற்குமாரர், சநந்தனர், சநாதனர் என்போராவர். **திருமூலதேவர்க்குச் சதாசிவமுனிக ளென்றும் பெயர்** .... இச்சந்தானம் விரிந்தவாறு .... அவற்றுள் மெய்கண்ட சந்தானம் வருமாறு.......... இச்சந்தானத்தார் .தமிழாற் செய்தவை சிவஞான போதம், சிவஞானசித்தியார், இருபா விருபஃது, பஃறொடை, உண்மைநெறிவிளக்கம், கொடிக் கவி, நெஞ்சுவிடுதூது, சங்கற்பநிராகரணம், ஞானபூசா கரணம், ஞானபூசை, ஞானதீக்கை, ஞானாந்தியேட்டி, போசன விதி, துகளறுபோதம், சதமணிக்கோவை, சிவானந்த போதம் முதலாயின. .... கன்ம சித்தாந்த குரவர்பால் அடைந்தார் ஞானசித்தாந்த குரவரை யடையலாம்............**கன்ம சித்தாந்தகுரவரினும் ஞான சித்தாந்தகுரவர் உயர்ந்தோர்** என்றதாயிற்று.

. . . .

இத்தனையும் கன்ம சித்தாந்த குரவர் ஞான சித்தாந்த குரவரான சந்தானகுரவ ரியல்பு கூறியது. ''தக்கோர் பிறர்'' என்றது **பட்டினத்துப்பிள்ளை** முதலியோரை, **இவர்** சிவன்றானே முன்னின்றருள அருள்பெற்றவராகலின் இக்காலத்துப் பரம்பரையான் அருள்பெற்றுவந்த **சந்தான குரவரினும் உயர்ந்தோரென்க.** இவராற் செய்யப் பெற்றன கோயினான்மணிமாலை, திருவிடைமருதூர் மும்மணிக் கோவை முதலாயின. **சமயகுரவர்** திருஞானசம்பந்த மூர்த்தி, திருநாவுக்கரசுமூர்த்தி, சுந்தரப்பெருமான் மூர்த்தி, மாணிக்கவாசகமூர்த்தி என்னும் நால்வருமாம் .... **நால்வரும் எல்லோரினும் உயர்ந்தவர்.** சிவன்றன்னாலே அருள் பெற்றுத் தெய்வத் தன்மையுடையராய்ச் சைவ சமயத்தாபனம் பண்ணினாராதலின் என்க. இவராற் செய்யப்பட்டன தேவாரம் திருவாசகம் திருக்கோவையார் என்பனவாம். திருவிசைப்பாச் செய்த **கருவூர்த்தேவர் திருமாளிகைத்தேவர் முதலாயினோர்** யாரெனின் அவரும்

போகநாதசித்தர் சம்பிரதாயிகள்ாகலின் சந்தான வரலாற்றிற் கூறியவாறே **ஞானசித்தாந்த குரவரான சந்தான குரவராமென்க.**

.... இவ்வாற்றாற் போந்தது, கன்ம சித்தாந்த குரவரான சத்தியோசோதி, அகோரசிவாசாரியர், நாராயண கண்டர், ராமகண்டர் முதலியோர் வாய்மொழியினும், ஞான சித்தாந்த குரவரான திருமூலதேவர் மெய்கண்ட தேவசிவாசாரியர் அருணந்திதேவ சிவாசாரியர் முதலியோர் வாய்மொழி வலியுடைத்து. அவ் வாய்மொழியினும் பட்டினத்துப்பிள்ளை முதலியோர் வாய்மொழி வலியுடைத்து. அதனினுஞ் சம்பந்தமூர்த்தி முதலியோர் வாய்மொழி வலியுடைத்து.

.... சந்தானகுரவருள் கன்ம சித்தாந்த குரவரினும் ஞானசித்தாந்த குரவர் உயர்ந்தோரென்பது ....அவர் பெரும்பான்மையும் ஞானாதிகாரிகளின்றி யிருத்தலானும், தாம் கற்றறிதலன்றி மெய்கண்ட தேசிகர் முதலான இவர்போல் தெய்வத்தன்மை யானுணரும் உணர்வினரல்ல ராகலானும் என்க. **அவரினும் பட்டினத்துப்பிள்ளை முதலியோர் உயர்ந்தோ ரென்பது** அவர்போற் பரம்பரையானன்றிச் சிவன்றானே அருளுந் தெய்வத் தன்மையானும் பிறவாற்றாலும் என்க. **அவரினும் சமயகுரவர் உயர்ந்தோரென்பது** சிவன்றன்னானே அருளப் பெற்றதேயன்றிச் சமய பரிபாலனம் பண்ணுகையாலும் பரமசிவன் எளிதில் எஞ்ஞான்றும் வெளிப்படுதலாலும், நிக்கிரகானுக் கிரகம் உடைமையாலும் பிறவாற்றானும் என்க. **இதனானேயன்றே சமயாசாரியரைச் சிவாலயத்தும் பூசை செய்வதும்** என்க. இது பற்றியன்றே "சந்தான நற்குரவர் தக்கோர் பிறர் நந்தாது தோற்றுவித்த நற்குரவர் " என அவருயர்வு தகுதியிற்றோன்றக் கூறியதூஉ மென்க.

இவ்வளவும் வெள்ளியம்பலவாண முனிவர் முத்தி நிச்சயப் பேருரையிற் கூறுவது. கர்மசந்தானகுரவர், ஞான சந்தானகுரவர், பட்டினத்தார் போன்றோர், சமயகுரவர் நால்வர் ஆகியோரை எவ்வாறு தரம் பிரித்து அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறார் என்பதைப் பாருங்கள். யார் யாரை எங்கெங்கே எப்படி எப்படி வைக்கிறார் என்பதைப் பாருங்கள். இன்றைய தமிழ்உலகம் சைவஉலகம் இவற்றை யெல்லாம் அறிய வேண்டாமா? அறிந்து தெளிய வேண்டாமா?

குருமார்களையும் நூல்களையும் தரம் பிரித்து அறிய வேண்டும். அறிவிக்கிறார் வெள்ளியம்பலவாணர்.

சமயகுரவர் நால்வர் - **முதல் தரம்.**

பட்டினத்தார் போன்றோர் - **இரண்டாம் தரம்.**

திருமூலர், திருமாளிகைத்தேவர், கருவூர்த்தேவர், மெய்கண்டார் முதலிய ஞானசந்தானகுரவர்கள் - **மூன்றாம் தரம்.**

அகோரசிவாசாரியர், சோமசம்பு சிவாசாரியர், ராமகண்டர் உக்கிரச்சோதி, சத்தியோசோதிமுதலிய கன்ம (கர்ம) சித்தாந்த குரவர்கள் - **நான்காம் தரம்.**

தேவார திருவாசகம் முதலிய 12 திருமுறைகள் - **முதல் தரம்.**

பட்டினத்தார் பாடல்கள் போன்றவை - **இரண்டாம் தரம்.**

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு - **மூன்றாம் தரம்.**

அஷ்டப்பிரகரணம், பத்ததிகள் போன்றவை - **நான்காம் தரம்.**

இப்போது காலம் எப்படி இருக்கிறது? கன்மத்துக்கு இருக்கிற மதிப்பும் செல்வாக்கும் ஞானத்துக்கு இல்லையே. சைவஉலகம் தமிழுலகம் இவற்றையெல்லாம் அறிந்து உணர்ந்து தெளிக!

சமய உலகில் ஆன்மிக உலகில் இப்போது தெளிவு குறைவாகத்தான் இருக்கிறது. குழப்பங்களே மிகுதியாக உள்ளன. அடிப்படைத் தெளிவு இன்றியமையாத் தேவை. அதற்கு இதுபோன்ற நூல்களை அன்பர்கள் ஊன்றிப் படித்து உணரவேண்டும். அறிஞர்கள் உணர்த்த வேண்டும்.

கோயில்களும் மடங்களும் மிகுந்த தமிழ்நாடு

உலகத்திலேயே **தமிழ்நாட்டில்**தான் கோயில்கள் மிகுதி. மடங்கள் மிகுதி.

உலகம் பல கண்டங்களாகப் பிரிக்கப்பெற்றிருக்கிறது.

எல்லாக் கண்டங்களையும்விட **ஆசியாக் கண்டத்தில்**தான் கோயில்கள் மிகுதி.

ஆசியாக் கண்டத்திலும் பாரத புண்ணிய பூமியாகிய **இந்திய நாட்டில்**தான் கோயில்கள் மிகுதி.

இந்தியநாட்டிலும் வடஇந்தியாவைவிடத் **தென்னிந்தியாவில்**தான் கோயில்கள் மிகுதி.

தென்னிந்தியாவிலும் ஏனைய மாநிலங்களைவிடத் **தமிழ்நாட்டில்**தான் கோயில்கள் மிகுதி.

தமிழ்நாட்டு அரசின் முத்திரைச்சின்னமே கோபுரச் சின்னம்தான்.

தமிழ்நாட்டிலும் சேர சோழ பாண்டிய என்னும் முந்நாடுகளில் **சோழநாட்டில்**தான் கோயில்கள் மிகுதி.

சோழநாட்டிலும் தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி என்னும் இரு மாவட்டங்களில் **தஞ்சாவூர் மாவட்டத்தில்**தான் கோயில்கள் மிகுதி.

தஞ்சாவூர் மாவட்டத்திலும் **காவிரிக்கரையில்**தான் கோயில்கள் மிகுதி. **கும்பகோணம் வட்டத்தில்தான்** கோயில்கள் **மிகுதி**.

பாடல்பெற்ற சிவத்தலங்கள், மங்களாசாசனம் பெற்ற வைணவத் திருப்பதிகள் இத்தனை என்ற கணக்குண்டு, பட்டியலுண்டு. அவற்றில் வரிசைக்கிரமமும் உண்டு. நாடு வாரியாகப் பிரித்து அவை வரிசைப்படுத்தப் பெற்றுள்ளன.

பாடல்பெற்ற சிவத்தலங்கள் 274.

இவற்றுள்

1.	சோழநாட்டுத் தலங்கள்	190	(இவற்றுள் காவிரி வடகரைத் தலங்கள் 63 தென்கரைத் தலங்கள் 127)
2.	ஈழநாட்டுத் தலங்கள்	2	(ஈழநாடு - இலங்கை)
3.	பாண்டிநாட்டுத் தலங்கள்	14	
4.	மலைநாட்டுத் தலம்	1	(மலைநாடு -சேரநாடு)
5.	கொங்குநாட்டுத் தலங்கள்	7	
6.	நடுநாட்டுத் தலங்கள்	22	
7.	தொண்டநாட்டுத் தலங்கள்	32	
8.	துளுநாட்டுத் தலம்	1	
9.	வடநாட்டுத் தலங்கள்	5	
	ஆக	274	

இவை நாடு வரிசையும் எண்ணிக்கையும் ஆகும். இது பழைய கணக்கு. கல்வெட்டின் மூலம் சில காலத்திற்குமுன் தெரியவந்த திருவிடைவாய் என்ற தலம் இக்கணக்கிற் சேரவில்லை. மேலும் திருக்கிளியன்னவூர் என்றொரு தலம் அண்மைக்காலத்தில் தெரியவந்துள்ளது. இவ்விரண்டையும் சேர்த்தால் பாடல்பெற்ற தலங்களின் எண்ணிக்கை இப்போது 276. திருவிடைவாய் சோழநாட்டுத்தலத்தில் காவிரி தென்கரைத் தலத்தில் சேரும். சோழநாட்டுத் தலங்களின் எண்ணிக்கை 191 ஆகும். அதில் காவிரி தென்கரைத் தலங்களின் எண்ணிக்கை 128 ஆகும். கிளியன்னவூர் தொண்டநாட்டுத்தலத்தில் சேரும். தொண்ட நாட்டுத் தலங்களின் எண்ணிக்கை 33 ஆகும். ஆகப் பாடல் பெற்ற தலங்களின் எண்ணிக்கை இப்போது 276 ஆகும்.

இவ்வாறே ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற திவ்யதேசங்கள் (திவ்வியப்பிரபந்தப் பாடல்பெற்ற வைணவத் திருப்பதிகள்) 108-க்கும் ஒரு பட்டியல் உண்டு, வரிசைக்கிரமமும் உண்டு.

பாடல்பெற்ற சிவத்தலங்களையும், மங்களாசாசனம் பெற்ற வைணவத் திருப்பதிகளையும், வகை தொகை வரிசைப்படுத்துவதில் சோழநாட்டை முதலில் வைத்தும், வடநாட்டை ஈற்றில் வைத்தும், வரிசைப்படுத்துவதே வழக்கம்.

சைவத்தில் சோழநாட்டுத் தலங்களில் முதலாவது தில்லை(சிதம்பரம்).

வைணவத்தில் சோழநாட்டுத் திருப்பதிகளில் முதலாவது திருஅரங்கம்(ஸ்ரீரங்கம்).

சைவத்தில் வடநாட்டுத் தலங்களில் ஈறானது கயிலை.

வைணவத்தில் வடநாட்டுத். திருப்பதிகளில் ஈறானது பரமபதம்(வைகுந்தம்).

சைவத் தலவரிசை தில்லையில் தொடங்கிக் கயிலையில் நிறைவு பெறுகிறது.

வைணவத் தலவரிசை திருவரங்கத்தில் தொடங்கி வைகுந்தத்தில் நிறைவு பெறுகிறது.

சைவம் வைணவம், இரண்டிலுமே சோழநாட்டுத் தலங்கள்தான் மிகுதி. சைவத்தில் 191. வைணவத்தில் 40.

பாடல்பெற்ற சிவத்தலங்கள் 276-இல் பாதிக்குமேல் சோழநாட்டில்தான் இருக்கிறது. பாதிக்குமேல் 191 தலங்கள் சோழநாட்டில் இருக்க, ஏனைய 85 தலங்களே வடக்கே இமயம் முதல் தெற்கே இலங்கை ஈழம் வரை பரவியுள்ளன. இலங்கையைச் சிவபூமி என்கிறார் திருமூலர்(திருமந்திரம் 2747). காஷ்மீரம் சைவநாடு. காஷ்மீரத்தில் சைவம் பழங் காலந் தொட்டே இருந்துவருகிறது. காஷ்மீர் சைவம் என்றொரு சைவப்பிரிவு தற்போதும் வழங்குகிறதன்றோ!

வைணவம் கடல்கடந்து சென்றது குறைவு. சைவம் கடல்கடந்து சென்றது மிகுதி. உதாரணம் ஈழநாட்டுப் பாடல் பெற்ற தலங்கள். சைவம் ஒருகாலத்தில் உலக முழுவதும் பரவியிருந்தது; இன்றும் உலகமுழுதும்

பரவிக் கொண்டிருக்கிறது. சைவம் உலக சமயம். அதன் தலைநகரம் தமிழ்நாடு.

" தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறை "
என்றார் மாணிக்கவாசகர்.

" மாதவம் செய்த தென்திசை, " தென்திசையே வென்றேற "
என்றார் சேக்கிழார்.

" வடக்கிலும் தெற்குச் சிறந்தது " என்றார் வள்ளலார்.

சைவ சமயகுரவர் நால்வரும், நாயன்மார் அறுபத்து மூவரும், ஆழ்வார்கள் பன்னிருவரும், ஆசாரியர்கள் பலரும் இங்கே தமிழ்நாட்டில்தான் தோன்றினார்கள்.

இந்திய தரிசனங்களில் சிறந்தவை முக்கியமானவை எல்லாம் இங்கே தமிழ்நாட்டில்தான் தோன்றின. இவற்றை விளக்கிய ஞானிகளெல்லாம் இங்கே தமிழ்நாட்டில்தான் தோன்றினார்கள்.

1. **அத்வைதம்**(வேதாந்தம்). இதனை விளக்கிய சங்கரர் காலடியில் தோன்றினார். காலடி இன்று கேரளத்தில் இருப்பினும் சங்கரர் காலத்தில் அது தமிழ்நாடே. 2. **விசிட்டாத்வைதம்**(வைணவம்). இராமானுஜ தரிசனம் என்றே ஒரு பெயரையும் பெற்றது. விசிட்டாத்துவைதத்தை விளக்கிய இராமானுசர் தோன்றிய திருப்பெரும்பூதூர் (ஸ்ரீபெரும்புதூர்) தமிழ் நாட்டிலுள்ளதே. 3. **துவைதம்** (மாத்வம்). இதனை விளக்கிய மத்வர் தோன்றிய உடுப்பி இன்று கர்நாடக மாநிலத்தில் இருப்பினும் மத்வர் காலத்தில் அது தமிழ்நாடே. பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில்கூட அது சென்னை ராஜதானி, சென்னை மாகாணத்தைத்தான் சேர்ந்திருந்தது. 4. **சுத்தாத்வைதம்** (சைவ சித்தாந்தம்)விளக்கிய மெய்கண்டார் தோன்றிய பெண்ணாகடம் தமிழ்நாட்டின் நடுப்பகுதியாகிய நடுநாடே.

தென்னாட்டில், தமிழ்நாட்டில், தோன்றிய **1. சங்கரர், 2. இராமானுசர், 3. மத்வர், 4. மெய்கண்டார்** ஆகிய நால்வரும்

விளக்கிய வேதாந்த சித்தாந்தமே - சங்கர வேதாந்தம், இராமாநுஜ வேதாந்தம், மத்வ வேதாந்தம், மெய்கண்ட சித்தாந்தம் ஆகியனவே - இந்தியநாடு முழுவதும் பரவி, இன்று காணப்பெறும் பல்வேறு சமயப்பிரிவுகளுக்கும் மரபுகளுக்கும் (சம்பிரதாயங்களுக்கும்) அடிப்படையாக விளங்குகின்றன.

தமிழ்த் தத்துவஞானம், இந்திய தத்துவஞானம் உலகுக்கு வழங்கிய கொடை மிகப்பெரிது.

தமிழகம் ஞானபூமி. ஞானத் திறத்தில் ஞானிகளை விளைவிக்கும் திறத்தில் தமிழ்மண் இந்தியமண் ஒன்றே நன்செய்நிலம்; ஏனையனவெல்லாம் புன்செய்க்காடுகளே; பாலைவனங்களே.

வள்ளுவரும் வள்ளலாரும் தமிழ்நாட்டில்தான், சைவ சமயத்தில்தான் தோன்றமுடியும். வேறு நாடுகளும் வேறு சமயங்களும் ஒரு வள்ளுவரை ஒரு வள்ளலாரைத் தோற்றுவிக்க இன்னும் பன்னூறாயிரம் ஆண்டுகள் ஆகும். **காந்தியடிகள் இந்தியநாட்டில்தான் இந்து சமயத்தில்தான் தோன்றமுடியும்.** வேறுநாடுகளும் வேறு சமயங்களும் ஒரு காந்தியடிகளைத் தோற்றுவிக்க இன்னும் பன்னூறாயிரம் ஆண்டுகள் ஆகும்.

தமிழ்நாடு, கோயில்கள் மிகுந்ததோடு மட்டுமின்றி மடங்களும் மிகுந்தது. சைவ மடங்கள், வைணவ மடங்கள், வேதாந்த மடங்கள் எனப் பெரியனவாகவும் சிறியன வாகவும் நூற்றுக்கணக்கான மடங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. தமிழ்நாட்டிலும் தஞ்சாவூர் மாவட்டத்தில்தான் கோயில்களைப் போன்றே மடங்களும் மிகுதியாக உள்ளன.

இந்நூலிற் கூறப்பெறும் **சைவ ஆதீனங்கள் பதினெட்டில் பத்து ஆதீனங்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில்தான் உள்ளன.** திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், சூரியனார் கோயில் ஆகிய நான்கு பெரிய ஆதீனங்களும் தஞ்சாவூர்

மாவட்டத்தில்தான் உள்ளன. அதிலும் கும்பகோணத்தைச் சுற்றித்தான் உள்ளன. வீரசைவ மடங்களிலும் ஒட்டக் கூத்தரால் தக்கயாகப்பரணியிற் குறிப்பிடப் பெற்ற பழைமையான குடந்தைப் பெரியமடம், தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்தில்தான் உள்ளது. வேதாந்த மடங்களில் முதன்மையான காஞ்சி காமகோடி பீடத்தின் முக்கிய கிளைமடம் இருப்பதும் கும்பகோணத்திலேயே.

திருவாவடுதுறை ஆதீனம்

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையில் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழில்திருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

- ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்

திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை

திருவே என்செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற்சோதி மிக்க
உருவே என்உறவே என்ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவே என்கற்பகமே **கண்ணே கண்ணிற்**
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண்துறை உறையும் அமரர் ஏறே.

- திருநாவுக்கரசர் தேவாரம்
திருவாவடுதுறைத் திருத்தாண்டகம்.

சைவ ஆதீனங்களின் வரிசையில் முதலில் வைத்து எண்ணப்பெறுவது **திருவாவடுதுறை ஆதீனம்.** '' **சிவராஜதானி** '' என்று இதனைப் பெருமையோடு பாராட்டுகிறார் டாக்டர் உ.வே. சாமிநாதையர். '' **சிவஞானப்பண்ணை**'', ''**சிவஞானப்பேரரசு**'' என்கிறார் ஆதீன வித்துவான் த .ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை (த.ச.மீ). ''**தான மொடு தவமோங்கும் தமிழ்த் திருவாவடுதுறை**'' என்பது பிள்ளையவர்கள் பாடிய அம்பலவாண தேசிகர் கலம்பகம் (33). இச்சிறப்புகளெல்லாம் இதற்கு முற்றிலும் பொருந்தும்.

இவ்வாதீனம் திருவாவடுதுறை என்ற ஊரில் அமைந் துள்ளதால் திருவாவடுதுறை ஆதீனம் எனப் பெயர் பெற்றது.

திருவாவடுதுறை - இருப்பிடம்

திருவாவடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை கும்பகோணம் சாலையில் உள்ளது. அருகிலுள்ள இருப்புப்பாதை நிலையம் நரசிங்கன்பேட்டை.

பெயர்க்காரணம்

இறைவி பசு வடிவுடன் வழிபட்டதால் இத்தலம் திருவாவடுதுறை எனப் பெயர் பெற்றது.

திரு+ஆ+அடுதுறை =திருஆவடுதுறை. ஆக்கள் அடுத்த துறை - ஆவடுதுறை. ஆ-பசு. துறை - ஆற்றுத்துறை. பசுக்கள் நிறைந்துள்ளதும் காவிரிக்கரையில் ஆற்றுத்துறையில் அமைந்துள்ளதுமான ஊர். சோழநாடு காவிரியால் வளம் பெற்றது. காவிரியாற்றின் இருகரையிலும் உள்ள தலங்கள் பல, துறை என்றே பெயர்பெற்றன. தவத்துறை, மாந்துறை, பராய்த்துறை, கடம்பந்துறை முதலிய பெயர்களைக் காண்க. ஆவடுதுறை முற்காலத்தில் ஆக்கள்(பசுக்கள்) நிறைந்த தலமாக, பசுவளம் மிக்க ஊராக இருந்திருக்கலாம். அதனால் ஆ அடுதுறை (ஆக்கள் அடுத்த துறை) எனப் பெயர் பெற்றிருக்கலாம். சோழநாடு மருதநிலம். மருதநிலத்து ஊர்கள் நிலவளம் நீர்வளம் மிக்கவை. நன்செய் நிலங்கள் நிறைந்தவை. ஆறுகள் பலவற்றால் வளம் பெற்றவை. ஆதலின் பசுவளமும் இயல்பாகவே மிகுந்திருக்கும். திருமூலர் திருவாவடுதுறைக்கு வந்த காலத்தில் ஆயன் மூலனுக்குப் பதிலாக ஆநிரை(பசு) மேய்க்கலானார் என்ற வரலாறு இத்தலத்தின் பசுவளத்தைக் காட்டும். வடக்கே கங்கைக்கரையில் ஆயர்பாடியில் கோகுலத்தில் கண்ணபிரான் மாடுமேய்த்தார். தெற்கே காவிரிக்கரையில் திருஆவடுதுறையில் திருமூலர் மாடுமேய்த்தார். இருவரும் நல்ல மேய்ப்பர்கள். ஆவூர் போன்ற தலப்பெயர்களும் ஆவளத்தைக் குறிக்கும். ஆவளம் மிக்க இவ்வூர்களில் இறைவி ஆவடிவங் கொண்டு பூசித்தாள். கோமுத்தி, கோகழி என்ற பெயர்களும் திருவாவடு துறைக்கு உண்டு. கோ-பசு.

தலச்சிறப்பு

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரமூர்த்திகள் ஆகிய மூவரும் வழிபட்டுத் **தேவாரம் பாடியருளிய தலம். சேந்தனார்** வழிபட்டுத் **திருவிசைப்பாப்** பாடிய தலம். **திருமூலர் வாழ்ந்த தலம்,** தவம் செய்த தலம், திருமந்திரம்

பாடியருளிய தலம். **திருமாளிகைத்தேவர் வாழ்ந்த தலம்,** தவம் செய்த தலம், முத்திபெற்ற தலம்.

திருமூலர் தவம் செய்தது

கயிலாயத்திலிருந்து தென்னாடு போந்த திருமூலர் திருவாவடுதுறையில் நெடுங்காலம் தங்கித் தவமிருந்தார். அவர் தங்கியதும் தவமிருந்ததும் திருவாவடுதுறைக் கோயில் ; அதன் அரசமரத்தடி. **அரசமரம்** மரங்களுக்கெல்லாம் அரசு (King of Trees). அதனால்தான் அரசமரம் என்று பெயர் பெற்றது. '**மரங்களில் நான் அரசமரமாக இருக்கிறேன்**' என்று கண்ணபிரான் **கீதை**யிற் கூறுகிறார். மரங்களில் **அரசு, வேம்பு, ஆல்,** இம்மூன்றும் சிறந்தவை. **அரசு ஆண்மை** உடையது. **வேம்பு பெண்மை** உடையது. **ஆல் இருதன்மையும்** உடையது. **அரசு சிவத்துக்கு** உரியது. **வேம்பு சத்திக்கு** உரியது. **ஆல் சிவம் விஷ்ணு இரண்டுக்கும்** உரியது. அரசடியில்தான் பகவான் புத்தர் ஞானம் பெற்றார். அரசுக்குப் **போதி** என்று ஒரு பெயர். போதம் என்றால் ஞானம். **புத்தர்** போதி மரத்தடியில் தவமிருந்து ஞானம் பெற்றதால் **போதிமாதவர்** எனப் பெயர் பெற்றார், போதிசத்துவர் எனப் பெயர் பெற்றார். பௌத்தர்கள் போதிவிருட்சத்தை மிகவும் சிறப்பாகப் போற்றுவர். பௌத்த சங்கத்தை **மகாபோதி சங்கம்** என்றே வழங்குவர். ஆங்கிலத்தி லும் " மகாபோதி சொசைட்டி " என்பர். புத்தகயையிலிருந்து போதி மரத்தின் கிளையொன்று இலங்கைக்குக் கொண்டு செல்லப் பெற்று இலங்கையில் பௌத்தம் பரவக் காரணமாயிற்று. புத்தர் அரசமரத்தடியில் தவஞ்செய்தார், ஞானம் பெற்றார், புத்தர் போதிமாதவர் என்பது உலகம் நன்கறிந்தது. திருமூலர் அரசடியில் தவஞ்செய்தார், ஞானம் பெற்றார், **திருமூலரும் ஒரு போதிமாதவர்** என்பது அந்த அளவுக்கு உலகம் அறியாதது.

> சேர்ந்திருந்தேன் சிவன்ஆவடு தண்துறை
> சேர்ந்திருந்தேன் **சிவபோதி**யின் நீழலில்

என்று திருமூலரே திருமந்திரத்திற் கூறுகிறார் (மந்திரம் 79). போதியைச் சிவபோதி என்கிறார்.

திருவாவடுதுறையின் தலமரம் அரசு ; **படர் அரசு.** அருகிலுள்ள மண்டபத்தின் மேலும் மதிலின்மேலும் அது படர்ந்திருப்பதை இன்றுங் காணலாம். கிளைகள் விரிந்து படர்ந்திருப்பதால் படர்அரசு என்று பெயர்பெற்றது. இங்குள்ள நந்தி பெரியது. **தருமநந்தி** என்று பெயர். படர்ந்த அரசு, வளர்ந்த ரிஷபம் என்பது இங்கு வழங்கும் பழமொழி. திருவாவடுதுறைக்கு **அரசவனம்** என்று ஒரு பெயர். இங்குள்ள அம்பலம் **அரசம்பலம், போதியம்பலம்.** திருவாவடுதுறை ஆதீன வரலாறு எழுதிய ஆதீனவித்துவான் 'தசமீ' அந்நூலுக்கு அரசவனத்து அறநிலையம் என்றே பேரிட்டார்.

அரசவனமாகிய திருவாவடுதுறையில், அரசம்பலமாகிய திருக்கோயிலில், படரரசின்கீழே தவஞ்செய்தார் திருமூலர். ஊரின் பெயர் சாத்தனூர், கோயிலின் பெயர் திருஆவடுதுறை. கோயிலின் பெயரே இப்போது ஊர்ப் பெயராகவும் வழங்கு கிறது என்றும் ஒரு வழக்குண்டு. இவ்வாறு வழங்குமிடங்கள் பல. அரசடியில் தவமிருந்து ஞானம் பெற்ற திருமூலர், ஞானம்பெற்றபின் எழுந்தருளியிருந்த இடம் கோயிலின் மேலைத் திருச்சுற்றில் இப்போது திருமூலர் சந்நிதியாக உள்ள குகை. இக்குகையிலும் படரரசின் கீழும் இருந்தே திருமூலர் திருமந்திரத்தைச் செய்தருளினார். **திருமூலர், திருமந்திரத்தை அருளிய இடம்,** திருவாவடுதுறைக் கோயிலின் படரரசமரத்தடி, மேற்குப் பிராகாரத்தில் உள்ள திருமூலர் சந்நிதி குகை ஆகிய இரண்டுமாம்.

திருமாளிகைத்தேவர் முத்தி பெற்றது

திருமூலரைப்போன்றே திருமாளிகைத்தேவர் சைவ சித்தாந்தியும் சித்தரும் ஆவார். திருவிசைப்பாவைப் பாடிய அவர் போகரின் மாணாக்கர் என்பர். திருமாளிகைத்தேவர் செய்த அற்புதங்கள் பல. சிறந்த சிவயோகியாராகிய இவரது திருமேனி அழகைக் கண்டு வியந்து மயங்கிய மகளிர் சிலர் இவரைப் போன்றே தோற்றமுள்ள பிள்ளைகளைப் பெற்றனராம். அம்மகளிரின் கற்பில் ஐயம் எழுந்து அரசன் நரசிங்கன்வரை செய்தி சென்றதாம். திருவாவடுதுறைக்கு

அருகிலுள்ள நரசிங்கன்பேட்டை, அரசன் நரசிங்கனின் பேரால் அமைந்ததென்பர். நரசிம்மம் வழிபட்டதாகப் புராண ஐதீகம். அரசன் தேவரை விசாரணைக்கு அழைத்தானாம். இவர் அரசன் அழைப்பிற்குச் செல்லாது நாமார்க்கும் குடியல்லோம் என்றிருக்கவே இவரை வலியக் கொணரும் படிப் படைவீரர்களை அரசன் ஏவினானாம். படைவீரர்கள் தம்மீது வரக்கண்ட திருமாளிகைத்தேவர் மதிலிலிருந்த கல் நந்திகளையெல்லாம் உயிர்பெற் றெழச்செய்து படை வீரர்கள் மீது ஏவினராம். இப்போதும் கோயில் மதில்களின்மேல் நந்தி உருவங்கள் இல்லை. இதற்குக் காரணமாகச் சொல்லப் பெறும் வரலாறு இது. **திருமாளிகைத் தேவர்** திருவாவடுதுறையில் தாம் தவஞ்செய்த இடத்திலேயே முத்திபெற்றார். அவரது **சமாதிக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குள் உள்ளது.**

திருவாவடுதுறை ஆதீனத்திற்குள், ஆதீன நிறுவனரும் குருமுதல்வருமான **நமச்சிவாயமூர்த்திகளின் சமாதிக்கோயிலும் திருமாளிகைத்தேவரின் சமாதிக்கோயிலும் அடுத்து அடுத்து உள்ளன.** திருமாளிகைத்தேவரின் மாளிகைமடம் இருந்த இடத்திலேயே, அவரது சமாதியை ஒட்டியே பிற்காலத்தில் திருவாவடுதுறை ஆதீனம் ஏற்பட்டுள்ளது.

திருவாவடுதுறைக் கோயிலும் திருவாவடுதுறை ஆதீனமும் அடுத்தடுத்து ஒன்றைஒன்று ஒட்டினாற்போல் உள்ளன. இரண்டுக்கும் இடையே வாயிலும் உண்டு. கோயிலிலிருந்து ஆதீனத்திற்குச் செல்லலாம். ஆதீனத்திலிருந்து கோயிலுக்குச் செல்லலாம். குறுக்கு வழிபோன்று அமைந் துள்ளது. கோயிலில் கோமுத்தீசுவரருக்கு வழிபாடு நடந்த உடனே ஆதீனத்திற்குள் இருக்கும் திருமாளிகைத்தேவர் சந்நிதியில் வழிபாடு நிகழும். கோயிற்பூசை செய்யும் சிவாசாரியரே ஆதீனத்திற்குச் சென்று திருமாளிகைத்தேவர் சந்நிதியில் ஆராதனை செய்வார். அதன் பின்னரே நமச்சிவாய மூர்த்திகளுக்கு வழிபாடு நிகழும். அதன்பின்னரே மாகேஸ்வர பூசை ஆகும். இதுவே திருவாவடுதுறை ஆதீனத்தில் கடைப்பிடிக்கப் பெற்று வரும் மரபு. இம்மரபு ஒரு சமயம் வழுவ நேர்ந்தபோது ஆதீன மகாவித்துவான் திரிசிரபுரம்

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மரபைச் சுட்டிக்காட்டி ஒரு பாடலைப் பாடினாராம்.

பேசு புகழ்ச்சுப் பிரமணியதேசிகன் பொன்
வீசு கழற்கடியேன் விண்ணப்பம் - நேசம்
வருதிரு மாளிகைத்தே வன்பூசை யாயே
கருதுபந்தி யாதல் வழக்கம்.

என்று பாடி, திருமாளிகைத்தேவருக்குப் பூசை ஆனபின்பே பந்தி ஆவது வழக்கம் என்று வழக்கத்தை நினைவூட்டி னாராம். இன்றும் இவ்வழக்கம் கடைப்பிடிக்கப் பெற்று வருகிறது. ஆதீனத்தில் திருமாளிகைத்தேவருக்கு உள்ள முதன்மையை இதனால் அறியலாம்.

திருவாவடுதுறை முத்திநகரம், சித்திபுரம். நவகோடி சித்திபுரம் என்றொரு பெயரும் உண்டு. சித்தர்கள் தவஞ் செய்தது. திருவாவடுதுறைத் திருக்கோயிலில் திருமூலர் தவஞ்செய்தார். பின்பு திருமாளிகைத்தேவர் வந்தார். அவரது மாளிகை மடம் திருக்கோயிலை அடுத்து அமைந்தது. அதிலேயே அவர் கோயில் கொண்டார். அவ்விடத்திலேயே பின்னாளில் திருவாவடுதுறை ஆதீனம் அமைந்தது.

திருவாவடுதுறைக் கோயில், திருமூலர் குகை, திருமாளிகைத்தேவரின் மாளிகை மடம், திருவாவடுதுறை ஆதீனம் **ஆகிய நான்கும் ஒன்றுசேர்ந்த சைவக்கோட்டை,** சித்தர்கோட்டை, இன்றைய **திருவாவடுதுறையாதீனம்.**

கோமுத்தீஸ்வரர் சந்நிதி விசேடம், திருமூலர் சந்நிதி விசேடம், திருமாளிகைத்தேவர் சந்நிதி விசேடம், நமச்சிவாய மூர்த்திகள் சந்நிதி விசேடம் **ஆகிய நான்கு சந்நிதி விசேடங் களையும் கொண்டது** இன்றைய **திருவாவடுதுறையாதீனம்.**

திருவாவடுதுறை ஆதீன குருமரபு

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம்

திருவாவடுதுறை ஆதீன குருபரம்பரை திருக்கயிலாயத் திலிருந்து தொடங்குகிறது. ஆதலின் திருக்கயிலாய பரம்பரை எனப் பெயர்பெற்றது. கயிலையில் **ஸ்ரீகண்டபரமசிவத்திடம்**

உபதேசம் பெற்றவர் **திருநந்திதேவர்**. திருநந்திதேவரிடம் உபதேசம் பெற்றவர்கள் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்னும் **சனகாதி நால்வர்**. சனற்குமாரரிடம் உபதேசம் பெற்றவர் **சத்தியஞான தரிசினிகள்**. சத்தியஞான தரிசினிகளிடம் உபதேசம் பெற்றவர் **பரஞ்சோதிமுனிவர்**. பரஞ்சோதிமுனிவர் வரை அனைவரும் கயிலாய வாசிகள், தேவபரம்பரை, அகச்சந்தானகுரவர்கள்.

பரஞ்சோதிமுனிவரிடம் உபதேசம் பெற்றவர் **மெய்கண்டார்**. மெய்கண்டாரிடம் உபதேசம் பெற்றவர் **அருணந்திசிவம்**. அருணந்திசிவத்திடம் உபதேசம் பெற்றவர் **மறைஞானசம்பந்தர்**. மறைஞானசம்பந்தரிடம் உபதேசம் பெற்றவர் **உமாபதிசிவம்**. மெய்கண்டார் முதல் உமாபதி சிவம் வரை நால்வரும் பூவுலகவாசிகள், பூதபரம்பரை, புறச்சந்தானகுரவர்கள்.

உமாபதிசிவத்திடம் உபதேசம் பெற்றவர் **அருணமச்சி வாயர்**. அருணமச்சிவாயரிடம் உபதேசம் பெற்றவர் **சித்தர் சிவப்பிரகாசர்**. சித்தர் சிவப்பிரகாசரிடம் உபதேசம் பெற்றவர் **நமச்சிவாயமூர்த்திகள்**. நமச்சிவாயமூர்த்திகளே **திருவாவடு துறை ஆதீனத்தை நிறுவியவர்**, குருமுதல்வர்(முதலாவது குருமகாசந்நிதானம்). இவர்கள் வரை உபதேச பரம்பரை. இவர்களுக்குப்பின் இன்றுவரை தொடர்ந்துவருவது - இனி என்றும் தொடரவிருப்பது - அபிஷேக பரம்பரை.

திருக்கயிலாயத்திலிருந்து தொடங்கிய கயிலாய பரம்பரை, பூவுலகில் மெய்கண்டாருக்குப்பின் அவர் பெயரால் மெய்கண்ட சந்தானம் என்றும் வழங்குவதாகி, இப்போது திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் என வழங்கிவருகிறது.

ஆதீனங்களின் பெயர்களுக்குமுன் திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் என்பதைச் சேர்த்துக் கொள்ள வேண்டும், சேர்த்துச் சொல்லவேண்டும். திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் திருவாவடுதுறை ஆதீனம், திருக்கயிலாய பரம்பரை மெய்கண்டசந்தானம் தருமபுர ஆதீனம் என்று

வழங்குவது மரபு. சுருக்கங்கருதி மெய்கண்டசந்தானம் என்பதை விடுத்து, திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம்; திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனம் என்று வழங்குவதே இப்போது பெரிதும் வழக்கமாக உள்ளது.

இக் கயிலாய பரம்பரையில் உமாபதிசிவம் வரையிலுள்ள வரலாற்றை மேலே கண்டோம். உமாபதிசிவத்துக்குப் பின்னும் திருவாவடுதுறை ஆதீனம் தோன்றுவதற்கு முன்னும் உள்ள இடைக்கால வரலாற்றை இனிக் காண்போம். இவ்விடைக்காலத்தில் ஆசாரியர் இருவர் இருந்துள்ளனர். 1.அருணமச்சிவாயர் 2.சித்தர்சிவப்பிரகாசர்.

அருணமச்சிவாயர்

அருள் நமச்சிவாயர் பிறந்த ஊர் சீகாழி. சைவ வேளாளர். இளமையிலேயே ஞான நாட்டங்கொண்ட அருள்நமச்சிவாயர் சிதம்பரத்திற்குச் சென்று சந்தான குரவரில் மூன்றாமவராக விளங்கிய மறைஞானசம்பந்தரை அடுத்து அவருடைய சீடரானார். இவரோடு உமாபதிசிவமும் மறைஞானசம்பந்தரின் சீடராக இருந்தார். உமாபதிசிவம் இவரைவிடத் தீவிரதர பக்குவியாக இருந்ததால் மறைஞானசம்பந்தர் முத்திபெற்றபின் நான்காவது சந்தான ஆசாரியர் ஆனார். தம்முடன் பயின்ற ஒருசாலை மாணாக்கர் ஆசாரியராகிவிட்ட நிலையில் அருள்நமச்சிவாயர் உமாபதியாரிடமும் சீடரானார். முதலில் மறைஞான சம்பந்தரின் சீடராக இருந்து, பின்பு உமாபதிசிவத்திற்கும் சீடரான அருள்நமச்சிவாயர், பெயருக்கேற்ப அருளியலி லேயே மிகுந்த நாட்டங்கொண்டிருந்தார்.

உலகியல் வாழ்வின் அவலங்களைக் காண அஞ்சி அருள்நமச்சிவாயர் தாம் உறைந்த கட்டிடத்தின் மேன்மாடி யிலேயே இருந்தார். கீழே அதிகம் வருவதில்லை. பெரும்பாலும் மச்சிலேயே இருந்ததால் அன்பர்கள் இவரை **மச்சுச் செட்டியார்** என்று வழங்கலாயினர். சைவவேளாளர்களில் செட்டியார்களும் உண்டு. சைவச்செட்டியார், வேளாஞ் செட்டியார் (வெள்ளாஞ்

செட்டியார்) எனப்படுவர். இவர் சைவ வேளாஞ் செட்டியாராதலின் அம்மரபிற்கேற்பவும், மச்சிலேயே உறைந்த நிலைக்கேற்பவும் மச்சுச் செட்டியார் என வழங்கப்பெற்றார். மேன்மாடியை மச்சு என்பது பேச்சு வழக்கு. **மச்சுறைவார், மச்சுறை வணிகயோகி** என இவர் பெயரை நூல்கள் அழகாகக் கூறுகின்றன.

உலகியலைக் காண்பதில் உவப்பின்றி மச்சிலேயே இருந்த இம்மச்சுறைவார் போன்றே சிறிது பிற்காலத்தில் இன்னொருவர் இருந்தார். அவர் பெயர் மறைஞானசம்பந்தர். உலகியலைக் காண அஞ்சிய அவர் தம் கண்களைத் துணியால் மறைத்துக் கட்டிக்கொண்டிருந்தார். அதனால் **கண்கட்டி மறைஞானசம்பந்தர்** என்றொரு பெயரையும் பெற்றார். மச்சுச்செட்டியாரை மச்சுறைவார் என வழங்கியமை போலக் கண்கட்டி மறைஞானசம்பந்தரைக் **கண்கட்டியார்** என நூல்கள் வழங்கின. மச்சுறைவாரையும் கண்கட்டியாரையும் போலவே இன்னொருவர் சிற்றம்பலவர் என்பவர் இருந்தார். கால்களில் பழுதையைக் கட்டிக்கொண்டிருந்தார். பழுதை - வைக்கோற்புரி. வைக்கோற் பழுதையைக் கழல்களாக அணிந்திருந்த அவர் **பழுதை கட்டிச் சிற்றம்பலவர்** என வழங்கப்பெற்றார். இவையெல்லாம் அக்காலத்தில் உண்மைத் துறவிகள் இருந்த நிலை. இக்காலத்தில் இவர்களைப் போன்றோரைக் காண்பது அரிதினும் அரிது, காண இயலாதென்றே கூறலாம்.

மச்சுச்செட்டியார் என்று பேரோடும் புகழோடும் விளங்கிய நம் அருணமச்சிவாயர் தில்லையில் உமாபதிசிவம் முத்தியடைந்தபின் அவருக்கு அடுத்த ஆசாரியரானார். மாணாக்கர் பலருக்குச் சாத்திரபாடம் போதித்துச் சைவப் பயிர் வளர்த்தார். இவ்வாறு பல காலம் பணிசெய்திருந்த அருணமச்சிவாயர் இறுதிக்காலத்தில் சித்தர் சிவப்பிரகாசருக்கு ஞானோபதேசம் வழங்கி, உரிய காலத்தில் முத்தியடைந்தார். **அருள்நமச்சிவாயர்பால் ஞானோபதேசம் பெற்றார் இருவர்.** ஒருவர் **சித்தர் சிவப்பிரகாசர்.** இன்னொருவர் **காழிக்கங்கை**

மெய்கண்டார். சித்தர் சிவப்பிரகாசர் வழியில் திருவாவடுதுறை ஆதீனம் உண்டாயிற்று. காழிக் கங்கை மெய்கண்டார் வழியில் சில தலைமுறைகளுக்குப்பின் தருமபுரஆதீனம் உண்டாயிற்று.

சித்தர் சிவப்பிரகாசர்

இவர் திருவாவடுதுறையினர். தலயாத்திரையாக வேதாரண்யத்திற்குச் சென்று சில காலம் தங்குவதுண்டு. இவரிடம் சித்தாற்றல் இருந்தமையால் சித்தர் சிவப்பிரகாசர் என வழங்கப்பெற்றார். திருவாவடுதுறையிலும் வேதாரண்யத்-திலுமாக இருந்த இவர் ஞானாசிரியரைத் தேடி உமாபதியாரின் பெருமையைக் கேள்வியுற்று, தில்லைக்குச் சென்று அங்கு உமாபதியாருக்குப் பின்பு ஆசாரியராய் விளங்கிய அருணமச்சிவாயரை அடுத்துச் சீடரானார். பலகாலம் அவருடனிருந்து பணிபுரிந்தார். இவரது பரிபக்குவ நிலையைக் கண்ட அருணமச்சிவாயர் உரிய காலத்தில் இவருக்கு ஞானோ பதேசஞ் செய்து, உமாபதியாரிடம் தாம் பெற்ற ஆன்மார்த்த வழிபடு மூர்த்தியாகிய நடராசப் பெருமானையும் இவருக்கு அளித்து சிவஞானப் பயிர் வளர்க்கக் கட்டளையிட் டருளினார். அவ்வாறே சிலகாலஞ் சென்றபின் அருள் நமச்சிவாயர் முத்தி பெற்றார்., அதன்பின் இவர் முன்னைய வழக்கம்போல் மீண்டும் தலயாத்திரையைத் தொடங்கினார். வழியில் திருவாவடுதுறைக்கு அருகில் மூவலூரில் வைத்தியநாதர் என்ற இளைஞரைக்கண்டு அவரை ஆட்கொண்டு ஞானோ பதேசம் செய்து நமசிவாயம் எனத் திருநாமஞ் சூட்டித் திருவாவடுதுறையில் இப்போது ஆதீனம் உள்ள இடத்தில் ஒரு அறை கீறி அதில் இருந்து சைவப்பயிர் வளர்த்துவரப் பணித்து, யாத்திரையைத் தொடர்ந்து வேதாரண்யம் சென்றார். உரிய காலத்தில் முத்தியடைந்தார். இவர் சித்தராதலின் மற்றவர்போல் பூமியில் சமாதியாகாது உருக்கரந்தார் என்பது பெரியோர் கொள்கை. இவர் முத்திபெற்றது இன்ன இடம் இன்னநாள் (நட்சத்திரம்) என்று வழங்குவதில்லை. இன்றும் இருப்பதாகப் போற்றுதல் மரபு.

இச்சித்தர் சிவப்பிரகாசரிடம் ஞானோபதேசம் பெற்றவரே திருவாவடுதுறையாதீன நிறுவனர் நமசிவாய மூர்த்திகள்.

திருவாவடுதுறை ஆதீன நிறுவனர், முதற்குரவர் ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள்

திருவாவடுதுறை ஆதீனத்தின் நிறுவனரும் முதற் குரவரு மாகிய நமசிவாயமூர்த்திகள் **பிறந்த ஊர்** திருவாவடுதுறைக்கு அருகிலுள்ள **மூவலூர். பிள்ளைத்திருநாமம் வைத்தியநாதர்.**

மூவலூரிலிருந்த வேளாளரொருவர் தமக்கு மகப்பே றின்மையால் வருந்திப் புள்ளிருக்குவேளூர் வைத்தீஸ்வரன் கோயிலுக்குச் சென்று வைத்தீசுவரப்பெருமானை வணங்கிக் குறையிரந்தார். வைத்தீசுவரன் அருளால் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு வைத்தியநாதன் என்று பெயரிட்டனர். குழந்தைக்கு ஐந்து வயதானபோது பெற்றோர்கள் குழந்தையுடன் புள்ளிருக்குவேளூர் சென்று வைத்தீசுவரரை வழிபட்டனர். வைத்தீசுவரர் சந்நிதியில் வழிபாடு முடிந்தபின் பிரகாரத்தைச் சுற்றிக்கொண்டு சண்டேசுவரர் சந்நிதிக்குச் சென்றனர். குழந்தை வைத்தியநாதனைக் காணவில்லை. குழந்தை வைத்தீசுவரர் சந்நிதியிலேயே நின்றுவிட்டது. சண்டீசர் சந்நிதிவரை சென்றுவிட்ட பெற்றோர் குழந்தையைக் காணாமல் தேடிக்கொண்டு வைத்தீசுவரர் சந்நிதிக்கு வந்தனர். கையில் ஒரு சிவலிங்கத்தை வைத்துக்கொண்டு குழந்தை அங்கு நிற்பதைக் கண்டனர். சிவலிங்கம் ஏது? யார் கொடுத்தது? என்று கேட்டதற்கு, சந்நிதியினுள்ளிருந்து வந்த சிவாசாரியர் ஒருவர் கொடுத்தார், அன்போடு பூசித்து வரும்படிச் சொன்னார் என்று குழந்தை சொல்லிற்று. கொடுத்த சிவாசாரியரைக் காணவில்லை. பெற்றோர் வியந்தனர். வீடு திரும்பிய பின் வீட்டிலேயே ஒரு சிறு மாடம் சமைத்து, வைத்தியநாதப்பெருமான் அருளால் குழந்தை வைத்தியநாதனுக்குக் கிடைக்கப்பெற்ற சிவலிங்கத்திற்கு வைத்தியநாதர் என்றே பெயரிட்டுக் குழந்தையும் தாமுமாகப் பூசித்து வந்தனர். இவ்வாறு இரண்டாண்டுகள் சென்றன.

சிறுவர் வைத்தியநாதனுக்கு அகவை ஏழு இருக்கும். ஒரு நாள் சித்தர் சிவப்பிரகாசர் மூவலூரில் இவர்கள் இருக்கும் வீதிவழியே வந்தார். சிறுவர் வைத்தியநாதர் சித்தர் சிவப்பிரகாசரைக் கண்டார். காந்தங்கண்ட இரும்பானார். வீட்டின் மாடத்தில் பூசையிலிருந்த வைத்தியநாதரை எடுத்துக்கொண்டு வீதிக்கு வந்து சித்தர் சிவப்பிரகாசரைப் பின்தொடர்ந்தார். சித்தர் சிவப்பிரகாசரின் பின்னே சிறுவர் வைத்தியநாதர் சிவலிங்க வைத்தியநாதரைக் கையிலேந்திக் கொண்டு தொடர்கிறார். வீட்டுத்தொடர்பு நீங்குகிறது. வீதியிற் செல்லும் குருநாதர் தொடர்பு நெருங்குகிறது. இக்காட்சியைக் கண்ட பெற்றோர்கள் ஒருபுறம் வியக்கிறார்கள், ஒருபுறம் திகைக்கிறார்கள். தாமும் சிறுவரைத் தொடர்கிறார்கள். எல்லாரும் திருவாவடுதுறைக் கோயிலுக்கு வருகிறார்கள்.

ஞானாசிரியராகிய சித்தர் சிவப்பிரகாசர் சிறுவரின் பெற்றோரை நோக்கி, இதுவரை வைத்தியநாதன் உங்கள் குழந்தையாக வளர்ந்துவந்தான், இனி அவன் நமது ஞானக்குழந்தையாக வளர்வான், அவனைப்பற்றி இனி நீங்கள் கவலைப்படவேண்டாம், நாம் கவனித்துக் கொள்வோம். அவனால் வீட்டுக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை, நாட்டுக்கு ஆகவேண்டியவை, உலகுக்கு ஆகவேண்டியவை எவ்வளவோ உள்ளன, அவன் நம்மிடமே இருக்கட்டும், நீங்கள் கவலையின்றி ஊர் திரும்புங்கள் என்று தேறுதலும் ஆறுதலும் சொல்லி அனுப்பிவைத்தார். சின்னாளில் சிறுவர் வைத்தியநாதரை அழைத்துக்கொண்டு வேதாரண்யம் சென்றார்.

தாம் மரபுவழிப் பெற்ற சிவஞானத்தைச் சிறுவர்க்கு உபதேசித்தார். ஞானதீக்கை செய்தருளினார். தமது குருநாதரின் பெயராகிய **நமச்சிவாயர்** என்பதையே தீட்சா திருநாமமாகச் சாத்தியருளினார்.

நமச்சிவாயராகிய வைத்தியநாதன் சிவஞானபோதம் முதலான சித்தாந்த சாத்திரங்களிலும் திருமுறைகளிலும் சிறந்த தேர்ச்சி பெற்றார். பக்குவம் முதிரப்பெற்றார். சில

காலத்துக்குப்பின் சித்தர் சிவப்பிரகாசர் நமச்சிவாயரையும் அழைத்துக்கொண்டு திருவாவடுதுறையை அடைந்தார்.

இருவருமாகத் திருவாவடுதுறையில் இருந்தனர். தாம் ஞானசித்திபெறும் காலம் நெருங்குவதை உணர்ந்த சித்தர் சிவப்பிரகாசர் திருவாவடுதுறைக் கோயிலை அடுத்துத் திருமாளிகைத்தேவர் சமாதிக்கோயிலை ஒட்டி ஒரு அறை கீறி இதிலே மடம் அமைத்து நமது ஆசாரிய பரம்பரையை வளர்த்து வருவாயாக எனக்கூறி வாழ்த்தி, வேதாரண்யம் சென்றார்.

ஆசாரியர் அறை கீறிய இடமே இன்றைய திருவாவடுதுறை ஆதீனமாக வளர்ந்தது. அதன் நிறுவனர், குருமுதல்வர், முதல் குருமகாசந்நிதானம் நமசிவாய மூர்த்திகளே. நமசிவாயம் பஞ்சாக்கரமாதலின் பஞ்சாக்கர தேசிகர் என்ற பெயரும் இவர்களுக்கு வழங்கிற்று. ஆதீனத்திற்கும் பஞ்சாக்கரதேசிகர் ஆதீனம் என்றொரு பெயர் ஏற்பட்டது.

நமசிவாயமூர்த்திகளின் சீடர்கள்

நமசிவாய மூர்த்திகளின் சீடர்கள் நால்வர்.

1. குடந்தைச் சிவப்பிரகாசர்
2. மறைஞான தேசிகர்
3. அம்பலவாண தேசிகர்
4. தட்சிணாமூர்த்தி தேசிகர்

1.குடந்தைச் சிவப்பிரகாசர்

கும்பகோணத்தில் சைவ வேளாளர் மரபில் தோன்றியவர். நமசிவாயமூர்த்திகளின் அருட்செயல்களைக் கேள்வியுற்றுத் திருவாவடுதுறைக்கு வந்து நமசிவாயமூர்த்திகளிடம் அருளுபதேசம் பெற்று அணுக்கத் தொண்டராய் அமர்ந்திருந்தார். நமசிவாய மூர்த்திகளுக்குப்பின் இரண்டாவது பட்டம் குருமகா சந்நிதானமாக வரவேண்டிய இவர் வீரசைவராகிப் பிரிய நேர்ந்தது சுவையான ஒரு வரலாறு.

தில்லைத் திருக்கோயிலில்
சைவ வைணவ வழிபாட்டுப் பூசலும்
குடந்தைச் சிவப்பிரகாசர் வீரசைவராகிப் பிரியநேர்தலும்

தில்லைச் சிதம்பரம் சைவத்தலம். சைவ உலகின் தலைமைத் தலம், முதன்மைத் தலம். சைவ சமயகுரவர் நால்வராலும் பாடப்பெற்ற தலம். பாடல்பெற்ற சிவத் தலங்களுள் முதன்மையான சிதம்பரம், ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற(பாடப்பெற்ற) நூற்றெட்டு வைணவத் திருப்பதிகளுள் ஒன்றும் ஆகும். நடராசப் பெருமான் எழுந்தருளியுள்ள சிற்சபைக்கு மிக அருகிலேயே கோவிந்தராசப்பெருமாள் சந்நிதி உள்ளது. வைணவ உலகில் அது திருச்சித்ரகூடம் என வழங்கப்பெறும். தில்லைத் திருச்சித்ரகூடத்தைக் குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய இருவரும் பாடியுள்ளனர்.

ஆதியில் தில்லை சிவத்தலமாகவே இருந்தது. திருமாலின் திருவுருவம் தில்லைக் கோயிலுக்குள் எழுந் தருள்விக்கப் பெறவில்லை. கி.பி.எட்டாம் நூற்றாண்டில் இரண்டாம் நந்திவர்ம பல்லவ மன்னன் தில்லையம்பல முன்றிலில் கோவிந்தராசர் திருவுருவத்தை நிறுவினான். முதலில் அத் திருவுரு திண்ணையொன்றின்மீதே நிறுவப் பெற்றது. நந்திவர்மன் வைணவபக்தன். காஞ்சிபுரத்தில் வைகுண்டப்பெருமாள் கோயிலைக் கட்டியவன். தில்லைத் திருச்சித்ரகூடம் பல்லவ மன்னனாற் கட்டப்பட்டதென்பது

பைம்பொன்னு முத்தும் மணியும் கொணர்ந்து
படைமன்ன வன்பல் லவர்கோன் பணிந்த
செம்பொன் மணிமாடங் கள்சூழ்ந்த தில்லைத்
திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே. 1160

என்னும் திருமங்கையாழ்வார் பாசுரத்தால் அறியப்பெறும்.

தில்லையம்பலத்தின் எதிரே முற்றத்தில் திருமால் கிடந்த திருக்கோலத்தில் காட்சியளிப்பதனை மாணிக்க வாசகர் தமது திருக்கோவையாருள், தில்லையம்பலமுன்றில் திருமால் வரங்கிடப்பதாக அழகாக வருணித்துக் கூறுகிறார்.

புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா
திரங்கிடெந் தாயென் றிரப்பத்தன் னீரடிக் கென்னிரண்டு
கரங்கடந் தானொன்று காட்டமற் றாங்கதுங் காட்டிடென்று
வரங்கிடந் தான்தில்லை யம்பல முன்றிலம் மாயவனே. 86

புரம் கடந்தான் - புரங்களைக் கடந்த சிவபெருமானது, அடி காண்பான் - திருவடிகளைக் காணவேண்டி, புவிவிண்டு - பூமியைப் பிளந்துகொண்டு, புக்கு அறியாது - புகுந்தும் காணாது, இரங்கிடு எந்தாய் என்று இரப்ப - பின் வழிபட்டு நின்று, எந்தாய் அருளவேண்டும் என்று இரப்ப, தன் ஈரடிக்கு - தன்னுடைய இரண்டு திருவடிகளையும் தொழுவதற்கு, என் இரண்டு கரங்கள் தந்தான் - என்னுடைய இரண்டு கரங்களையும் தந்தவனாகிய அவன், ஒன்றுகாட்ட - சிறிது இரங்கி ஒரு திருவடியைக் காட்ட, மற்று ஆங்கதும் காட்டிடு என்று - மற்றொரு திருவ்டியையும் காட்டிடல் வேண்டு மென்று, தில்லை அம்பல முன்றில் - தில்லை அம்பல முற்றத்தின்கண், வரங்கிடந்தான் அம்மாயவனே - மாயவனாகிய அத்திருமால் வரங்கிடக்கிறான்.

சைவர் சிவனைப் பெருமைப்படுத்தியும் திருமாலை இழிவுபடுத்தியும் கூறுவர். அதைப்போல் வைணவர் திருமாலைப் பெருமைப்படுத்தியும் சிவனை இழிவுபடுத்தியும் கூறுவர். இதுவே எங்கும் எப்போதும் பெருவழக்கு. மாறாக ஒரோவழி ஒப்புமைப்படுத்திக் கூறுவதும் சிறுபான்மை உண்டு.

முற்காலத்தில் தில்லையில் நடராசரைப் பூசிக்கும் தில்லை மூவாயிரவரே கோவிந்தராசரையும் பூசித்து வந்தனர். இவ்வுண்மை

செந்தளிர்வாய் மலர்நகைசேர் செழுந்தண் சோலைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
அந்தணர்க ளொருமூவா யிரவ ரேத்த
அணிமணியா சனத்திருந்த வம்மான் றானே. 742

என்னும் குலசேகராழ்வார் பாசுரத்தாலும்

மூவா யிரநான் மறையாளர் நாளும்
முறையால் வணங்க அணங்காய சோதி
தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே. 1165

என்னும் திருமங்கையாழ்வார் பாசுரத்தாலும் நன்கறியப் பெறும்.

சிவன் கோயில்கள் சிலவற்றில் திருமாலுக்கும் இடங்கொடுக்கப் பெற்றிருக்கிறது, திருமால் சந்நிதி உள்ளது. தில்லைத் திருச்சித்திர கூடம் போன்றே காஞ்சிபுரத்தில் கச்சிஏகம்பம் எனப்படும் ஏகாம்பரேசுவரர் கோயிலுக்குள் உள்ள "நிலாத்திங்கள் துண்டம்" என்னும் திருமால் சந்நிதியும் 108 வைணவத் திருப்பதிகளுள் ஒன்றாகும். திருமங்கை யாழ்வாரால் பாடப் பெற்றதாகும்.

கி.பி.12-ஆம் நூற்றாண்டில் இரண்டாம் குலோத்துங்க சோழன் தில்லைத் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்தபோது கோவிந்தராசப்பெருமாளைப் பூசிக்கும் வைணவர்களால் சில தடைகள் ஏற்படவே கோபமுற்ற குலோத்துங்கன் கோவிந்தராசப் பெருமாளைப் பெயர்த்துக் கடலில் எறிந்துவிட நேர்ந்தது. ஒட்டக்கூத்தர் இயற்றிய குலோத்துங்கசோழன் உலா, இராசராசசோழன் உலா, தக்கயாகப்பரணி ஆகிய நூல்களில் இச்செய்தி கூறப்பெறுகிறது. திருமால் அவரது முன்னைய இடமாகிய கடலுக்கே அனுப்பப்பட்டார் என்று இவை கூறுகின்றன.

தில்லைத் திருமன்ற முன்றிற் சிறுதெய்வத்
தொல்லைக் குறும்பு தொலைத்தெடுத்து - குலோத் - உலா 39

பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பெறிந்து
முன்னிற் கடலகழின் மூழ்குவித்த - சென்னி. - இராச - உலா 33

முன்றிற் கிடந்த தடங்கடல்போய்
முன்னைக் கடல்புகப் பின்னைத்தில்லை
மன்றிற் கிடங்கண்ட கொண்டன்மைந்தன்
மரகத மேருவை வாழ்த்தினவே. - தக்கயாகப்பரணி 777

தில்லையினின்றும் கோவிந்தராசர் அகற்றப்பெற்ற இச்செய்தியைக் குருபரம்பரை, பிரபன்னாமிர்தம், வாசுதேவ சரிதை, இராமானுஜ திவ்யசரிதை ஆகிய வைணவ நூல்களும் கூறுகின்றன.

நானூறு ஆண்டுகள் தில்லையில் கோவிந்தராஜர் வழிபாடு இல்லாதிருந்தது. பிற்காலச்சோழர் காலத்தில் நின்றுபோன வழிபாடு விஜயநகர நாயக்கர்கள் காலத்தில் தலையெடுக்கத் தொடங்கிற்று. 16-ஆம் நூற்றாண்டில் விஜயநகர மன்னர் அச்சுதராயர் காலத்தில் கி.பி.1539-இல் கோவிந்தராசர் மீண்டும் நிறுவப் பெற்றார். வைகானச ஆகம முறைப்படி வழிபாடுகள் ஏற்படுத்தப்பெற்றன. வேங்கடபதி தேவமகாராயரின் ஆட்சிக்காலத்தில் அவருடைய பிரதிநிதியாகச் செஞ்சியில் இருந்து ஆட்சிபுரிந்த வையப்ப கிருஷ்ணப்ப கொண்டம நாயக்கர் சிதம்பரத்தில் கோவிந்தராசப் பெருமாள் சந்நிதியைப் பரப்பியும் உயர்த்தியும் ஒரு தனி உட்கோயிலாகவே கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். தனி வாயில், துவஜஸ்தம்பம், தனிக்கோபுரம் முதலியவற்றை உண்டாக்கத் திட்டமிட்டுப் பணிகளைத் தொடங்கினார். சித்ரகூடத்தின் எதிரே கருடத்தூணை நிறுவினார். பரிவார தெய்வம் போன்று ஒரு புறமாக இருந்த கோவிந்தராசப் பெருமாளுக்குப் பல்வேறு அங்கங்களுடன் தனிக்கோயில் ஏற்படுவது, பிரதானமான நடராசர் வழிபாட்டுக்கு இடையூறாக இருந்தது. கருடத்தூண் நடலாகாது, பிற பணிகளும் செய்யலாகாதெனத் தீட்சிதர்கள் தடுத்தனர். நாயக்க மன்னன் தன் திட்டத்தில் உறுதியாக இருந்தான். மீறிச்செய்தால் தங்களிற் பலர் கோபுரத்திலேறிக் கீழே குதித்து இறப்பதாகக் கூறினர். அப்பாவத்திற்கு மன்னன் ஆளாகவேண்டு மென்றனர். இவ்வச்சுறுத்தலுக்கு மன்னன் செவிசாய்க்க வில்லை. இருபதுபேர் கோபுரத்திலேறி வீழ்ந்து உயிர் துறந்தனர். கோபமுற்ற மன்னன் தடை செய்வோரைக் கொல்ல உத்தரவிட்டான். அவர்கள் அங்குமிங்கும் ஓடி ஒளிந்தனர். ஒரு பெண் தன் கழுத்தைத் தானே அறுத்துக் கொண்டு உயிர் துறந்தாள். இந்நிகழ்ச்சிகளையெல்லாம் 1597-இல் சிதம்பரம் வழியாக யாத்திரை செய்த பிமெந்தா என்ற பாதிரியார் (Father N. Pimenta) எழுதியுள்ளார்.

நாம் எழுதியுள்ள இராமலிங்க அடிகள் வரலாறு - பெரு நூலில் சிதம்பர வரலாறு கூறும் பகுதியில் சிதம்பரம் கோயில்

சைவ வைணவப் பூசலைப் பற்றி விரிவாக எழுதியுள்ளோம். வி.ஜி. இராமகிருஷ்ணஐயர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள சிதம்பரம் கோயில் வரலாறு THE ECONOMY OF A SOUTH INDIAN TEMPLE என்ற அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீட்டு நூலிலும் (1946) இதைப் பற்றிய செய்திகள் உள்ளன. தில்லைச் சிற்றம்பலப் பெருங்கோயிலின் பழமையும் திருச்சித்ரகூட அமைப்பும் என்றொரு சிறுநூலைச் சிதம்பரம் தில்லைத் திருமுறைக் கழகத்தார் 1953-இல் வெளியிட்டிருக்கிறார்கள். தொல்லியல் அறிஞர் திரு.ச.கிருஷ்ணமூர்த்தியும் திருவாவடு துறை ஆதீன வரலாறு - நூலில் எழுதியுள்ளார் (1999).

இவ்வாறு சிதம்பரம் கோயிலில் காலந்தோறும் அவ்வப்போது நிகழ்ந்து கொண்டிருந்த சைவ வைணவப் பூசல், திருவாவடுதுறை ஆதீன நிறுவனர் நமசிவாய மூர்த்திகள் காலத்திலும் பெரிதாக எழலாயிற்று. மன்னனது நடவடிக்கைகளே நடராசர் வழிபாட்டுக்கு எதிரானதாகவும் இடையூறானதாகவும் இருந்ததால் தில்லைக் கோயில் பூசகர்களாகிய தீட்சிதர்கள் யாரிடம் சொல்லிக்கொள்வோம் என்று எண்ணி, உமாபதிசிவத்தின் மரபில் சைவ குருநாதராக எழுந்தருளியுள்ள திருவாவடுதுறை ஆதீனகர்த்தரிடம் முறையிடுவதே முறை என்று கருதி அவ்வாறே திருவாவடு துறைக்கு வந்து நமசிவாய தேசிகரிடம் முறையிட்டுக் கொண்டனர். நமச்சிவாயமூர்த்திகளும் குறைகளைக் களையத் தம் மாணாக்கர் குடந்தைச் சிவப்பிரகாசரைத் தில்லைக்கு அனுப்பிவைத்தார்.

தீட்சிதர்களுடன் தில்லைக்குச் சென்ற சிவப்பிரகாசர் கொற்றவன்குடியில் உமாபதிசிவத்தின் மடத்தில் தங்கினார். சிதம்பரம் கோயில் நிலையை நன்கு ஆராய்ந்தார். வேலூரி லிருக்கும் அரசப் பிரதிநிதி இலிங்கண்ணா என்னும் இலிங்கம நாயக்கரிடம் சென்று நிலையை எடுத்துக்கூறித் தீர்வுகாண எண்ணினார். இலிங்கண்ணா வீரசைவர் என்பதை அறிந்தார். வீரசைவக் கோலத்துடன் சென்றால் அவருக்கு உவப்பாக இருக்கும், காரியமும் எளிதிற் கைகூடும் என்றெண்ணித் தம்

மார்பில் இலிங்கத்தை அணிந்துகொண்டு வீரசைவக் கோலத்துடன் சென்று இலிங்கண்ணாவைக் கண்டு, வந்த காரியத்தைப் பக்குவமாக எடுத்துக்கூறினார். சிவப்பிரகாசரின் தோற்றப்பொலிவும் சிறந்த அறிவுடைமையும் வீரசைவத் திருக்கோலமும் இலிங்கண்ணாவைக் கவர்ந்தன. சென்ற காரியம் வெற்றியுடன் நிறைவேறிற்று. அத்துடன் நிற்கவில்லை. சிவப்பிரகாசருக்குத் திருவண்ணாமலையில் இலிங்கண்ணா ஒரு மடம் கட்டிக் கொடுத்தார்; அதன் ஆட்சிக்கு வேண்டிய பொருளையும் நிலங்கள் முதலியவற்றையும் காணிக்கையாகக் கொடுத்தார். வழியில் துறையூரில் ஜமீன்தார் இலிங்கா ரெட்டியாரும் மடம் ஒன்றைக் கட்டிக்கொடுத்தார். ஒன்றுக்கு இரண்டாகத் திருவண்ணாமலையிலும் துறையூரிலும் உண்டான மடங்களில் சில காலம் தங்கியிருந்த சிவப்பிரகாசர் அமைச்சரும் ஜமீன்தாரும் கொடுத்த ஏராளமான காணிக்கைப் பொருள்களுடன் திருவாவடுதுறைக்குத் திரும்பினார்.

சித்தாந்த சைவராகத் திருவாவடுதுறையினின்றும் புறப்பட்ட தம் சீடர் சிவப்பிரகாசர் வீரசைவராகத் திரும்பி வந்திருப்பதைக் கண்ட நமசிவாயமூர்த்திகள், இதுவும் திருவருட்செயல் போலும் என்றெண்ணி, நீர் வீரசைவராகவே திருவண்ணாமலையிலும் துறையூரிலும் உமக்குண்டான மடங்களில் இருந்துகொண்டு, நீர் மேற்கொண்ட வீரசைவ நெறியை வளர்த்துவருவீராக என வாழ்த்தி அனுப்பினார். சித்தாந்த சைவத்திலிருந்து வீரசைவத்திற்கு மாற நேரிட்ட இக் குடந்தைச் சிவப்பிரகாசரின் வழியில் தோன்றி வளர்ந்ததே இன்றைய துறையூர் வீரசைவ ஆதீனமும் விருத்தாசலம் குமாரதேவர் மடமும் ஆகும். குடந்தைச் சிவப்பிரகாசரின் பின் வரலாறு பின்னே வீரசைவ ஆதீனத்தின் வரலாற்றில் விரிவாகக் கூறப்பெறும்.

சிதம்பரம் கோயில் சைவ வைணவப் பூசலின் பிற்கால நிலையைக்கூறி இப்பகுதியை நிறைவு செய்யவேண்டும். அதன் பின்னும் சிதம்பரத்தில் சைவ வைணவத் தகராறுகளுக்குக் குறைவேயில்லை. அவ்வப்போது

எழுவதும் அடங்குவதுமாக இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் பூசல்கள் நடந்தன. நீதிமன்ற வழக்குகளும் நிகழ்ந்தன. காலந்தோறும் சிறிது சிறிதாகத் திருச்சித்திரகூடம் விரிவடைந்து இறுதியாக 1934-ஆம் ஆண்டில் செட்டி நாட்டரசர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களால் திருப்பணி செய்யப்பெற்று இப்போதுள்ள நிலையில் புதுப்பிக்கப் பெற்றது.

காலம் மாறிவிட்டது. சைவ வைணவப் பூசல்கள் இப்போது நாட்டில் மிகவும் குறைந்துவிட்டன என்றாலும் சிதம்பரத்தில் அவ்வப்போது தலைதூக்கிக் கொண்டுதான் உள்ளது. அண்மையில் இரண்டு திங்களுக்குமுன்கூட (2008 ஏப்ரல்) சைவ வைணவப் பூசல் எழுந்து அறநிலையத்துறை அதிகாரிகள் விசாரணைவரை வந்துவிட்டது.

2. மறைஞான தேசிகர்

முற்கூறியவாறு முதற்சீடர் குடந்தைச் சிவப்பிரகாசர் வீரசைவராகிப் பிரிய நேர்ந்தபின், இரண்டாம் சீடர் மறைஞான தேசிகர் இளவரசுப்பட்டத்தில் அமர்த்தப் பெற்றுப் பின்னாளில் இரண்டாம் பட்டம் குருமகாசந்நிதானமானார்.

3. அம்பலவாண தேசிகர்

மறைஞானதேசிகர் இரண்டாம் பட்டத்திலிருந்த காலத்தில் இவர் இளவரசுப் பட்டத்திலிருந்து அவருக்குப் பின் மூன்றாவது குருமகாசந்நிதானமாக விளங்கினார்.

4. தட்சிணாமூர்த்தி தேசிகர்

அம்பலவாணதேசிகரும் இவரும் நமசிவாய மூர்த்திகளிடம் ஒன்றாக ஏக காலத்தில் உபதேசம் பெற்றவர்கள். அம்பலவாணதேசிகர் மூன்றாம் பட்டத்திற்கு வருவதற்கு முன்பே, நமச்சிவாயமூர்த்திகள் காலத்திலேயே இவர் முத்தி பெற்றுவிட்டார். குருமகாசந்நிதானமாகப் பட்டத்திற்கு வரவில்லை.

நமசிவாயமூர்த்திகளின் அருட்சிறப்பு

மேற்கூறியவாறு நால்வர் சீடர்களுக்கு அருள்செய்த நமசிவாய மூர்த்திகள் நெடுங்காலம் குருமுதல்வராக எழுந்தருளியிருந்து அருள்பாலித்தார்கள். நூல் எதுவும் செய்ய வில்லை எனினும் சிறந்த சீடர்களை உருவாக்கினார்கள். நூல் எதுவும் செய்யாத இவர்களின் மீது பின்வந்தோர் பலர் பல நூல்களைச் செய்துள்ளனர். அவற்றுள் ஆசிரியர் பெயர் தெரியாத முத்திபஞ்சாக்கரமாலையும் சிவஞான முனிவர் அருளிய பஞ்சாக்கரதேசிகர் மாலையும் முக்கியமானவை.

இவ்வாறு மிகப்பெரிய ஒரு திருமரபை உண்டாக்கிய குருமுதல்வராகிய பஞ்சாக்கர தேசிக பரமாசாரியராம் நமசிவாயமூர்த்திகள் ஒரு தைத்திங்கள் அசுபதி நாளில் முத்தி பெற்றருளினார்கள். நமச்சிவாயமூர்த்திகள் குருபூசை, மகரத் தலைநாள் குருபூசை விழா என ஆண்டுதோறும் தைத் திங்கள் அசுபதி நட்சத்திரத்தில் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது.

ஆதீன மடாலயத்துள் நுழைந்ததும் விளங்குவது நமசிவாயமூர்த்திகளின் சந்நிதியே. இதுதான் ஆதீனத்தின் உயிர்நிலை. கருவறை. அர்த்தமண்டபம், மகாமண்டபம் முதலிய அமைப்புகளுடன் இது கருங்கற் கோயிலாகவே கட்டப்பெற்றுப் பொலிவோடு விளங்குகிறது. இங்கு நமசிவாயமூர்த்தியை வழிபடுவோர் நோய் நீங்கி எல்லா வளங்களும் பெற்று நல்வாழ்வு எய்துவர் என்பது அடியவர்களின் நம்பிக்கை. இந்நம்பிக்கை இன்றும் கண்கூடாகப் பலன்நல்கி வருவதைக் காணலாம்.

நமசிவாய மூர்த்திகளுக்குப்பின் இன்றுவரை 23 பட்டங்களாகக் குருமரபு வளர்ந்து வருகிறது. இப்போது எழுந்தருளியுள்ள குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் 23-ஆம் பட்டம் குருமகாசந்நிதானமாக எழுந்தருளி விளங்குகிறார்கள்.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் குருபரம்பரை விளக்கம்

ஸ்ரீகண்டபரமசிவன்

திருநந்திதேவர்

சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர்

சத்தியஞானதரிசினிகள்

பரஞ்சோதிமாமுனிவர்

மெய்கண்டதேவநாயனார்

அருணந்தி சிவாசாரியர்

மறைஞானசம்பந்த சிவாசாரியர்

உமாபதி சிவாசாரியர்

அருணமச்சிவாயர்(மச்சுச்செட்டியார்)

சித்தர் சிவப்பிரகாசர்

ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள்

(திருஆவடுதுறை ஆதீன நிறுவனர், குருமுதல்வர்)

குருமகாசந்நிதானங்களின் பெயரட்டவணை

1. ஸ்ரீலஸ்ரீ நமசிவாய மூர்த்திகள் (ஆதீன நிறுவனர், குரு முதல்வர்)
2. ஸ்ரீலஸ்ரீ மறைஞான தேசிகர்
3. ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்
4. ஸ்ரீலஸ்ரீ உருத்திரகோடி தேசிகர்
5. ஸ்ரீலஸ்ரீ வேலப்ப தேசிகர்
6. ஸ்ரீலஸ்ரீ குமாரசாமி தேசிகர்

7. ஸ்ரீலஸ்ரீ (பின்) குமாரசாமி தேசிகர்	1622	1625
8. ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர்	1625	1658
9. ஸ்ரீலஸ்ரீ இராமலிங்க தேசிகர்	1658	1678
10. ஸ்ரீலஸ்ரீ வேலப்ப தேசிகர்	1678	1700
11. ஸ்ரீலஸ்ரீ (பின்) வேலப்ப தேசிகர்	1700	1730
12. ஸ்ரீலஸ்ரீ திருச்சிற்றம்பல தேசிகர்	1730	1770
13. ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்	1770	1789
14. ஸ்ரீலஸ்ரீ (வேளூர்) சுப்பிரமணிய தேசிகர்	1789	1845
15. ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்	1845	1869
16. ஸ்ரீலஸ்ரீ (மேலகரம்) சுப்பிரமணிய தேசிகர்	1869	07-01-1888
17. ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்	07-01-1888	15-04-1920
18. ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்	15-04-1920	05-02-1922
19. ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகர்	05-02-1922	1937
20. ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்	1937	13-04-1951
21. ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்	13-04-1951	23-09-1967
22. ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்	23-09-1967	07-04-1983

23. சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 07-04-1983 முதல் 23-ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்து இப்போது அருளாட்சி செய்து வருகிறார்கள்.

இரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ மறைஞான தேசிகர்

ஆதீன நிறுவனரும் முதற்குருமகாசந்நிதானமும் ஆகிய ஸ்ரீ நமசிவாயமூர்த்திகளுக்கு (1) குடந்தைச் சிவப்பிரகாசர், (2)மறைஞானதேசிகர், (3) அம்பலவாண தேசிகர், (4) தட்சிணா மூர்த்திதேசிகர் எனச் சீடர்கள் நால்வர் என்பதை முன்பே கூறினோம்.

முதற்சீடரும், பின்னே இரண்டாவது பட்டம் குருமகாசந்நிதானமாக வருவதற்குரியவருமான, குடந்தைச் சிவப்பிரகாசர் வீரசைவராக மாறிப் பிரிய நேர்ந்தது. அதன் பின் இரண்டாவது சீடர் மறைஞான தேசிகருக்கு ஆசாரிய அபிடேகமும் சிவஞான உபதேசமும் செய்து தமக்குப்பின் ஞானாசிரியராக வருவதற்குரிய சடங்குகளை நமசிவாய மூர்த்திகள் செய்தருளினார்கள். மறைஞானதேசிகர் திருவாவடு துறையிலேயே தோன்றியவர். பரம்பரைச் சைவ வேளாள மரபினர். முற்பிறவித் தவப் பயனால் இளமையிலேயே அதிதீவிர பக்குவியாகத் திகழ்ந்த மறைஞானதேசிகர் ஞானோபதேசம் பெற்றபின் இடையறாது நிட்டையில் அமர்ந்து உலகியற் செயல்களில் செயலற்றிருப்பவ ரானார். முதற்சீடரோ வீரசைவராகிப் பிரிய நேர்ந்தது. இரண்டாவது பட்டத்திற்கு வைக்கப்பெற்ற இவரோ இப்படிச் சதாகால நிட்டையாய் உலகியலில் பராமுகராக இருக்கிறார். இந்நிலையில் ஆதீன ஆட்சி தொடர்ந்து நடைபெற வேண்டுமே என்று சிந்தித்த பரமாசாரியர் நமசிவாய மூர்த்திகள், ஒருவருக்கு இருவராக மற்றும் இரண்டு சீடர்களுக்கு ஞானோபதேசமும் ஆசாரியா பிடேகமும் செய்தருளி அம்பலவாணதேசிகரைச் சின்னப் பட்டத்தில் அமர்த்தினார்கள். தட்சிணாமூர்த்தி தேசிகருக்குச் சங்காபிஷேகம் செய்வித்துத் துவிதீய ஆசிரியராக அம்பலவாண தேசிகருக்கு அடுத்த நிலையில் இருக்கச் செய்தார்கள்.

பரமாசாரியர் ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள்
2-ஆம் பட்டம் ஸ்ரீ மறைஞான தேசிகர்
சின்னப்பட்டம் ஸ்ரீ அம்பலவாண தேசிகர்
ஸ்ரீ தட்சிணாமூர்த்தி தேசிகர்

என இவ்வாறு நால்வரும் ஒரே சமயத்தில் அடுத்தடுத்த நிலையில் விளங்கினார்கள்.

காஞ்சி காமகோடி பீடத்தில் பெரியவர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் பரமாசாரியராகவும், அதே சமயம் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பீடாதிபதிகளாகவும், ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் இளையபட்டம் பீடாதிபதிகளாகவும் ஏககாலத்தில் மூவர் விளங்கியதை இதனோடு நினைந்து பார்க்கலாம். காஞ்சியில் ஒரேசமயம் மூவர் குருமார்கள். இங்கு, திருவாவடுதுறையில் ஒரே சமயத்தில் நால்வர் குருவாக விளங்கியிருக்கிறார்கள்.

நமசிவாயமூர்த்திகள் பரமாசாரியராகவும்
மறைஞானதேசிகர் இரண்டாம் பட்டமாகவும்
அம்பலவாணதேசிகர் சின்னப்பட்டமாகவும்
தட்சிணாமூர்த்திதேசிகர் அம்பலவாண தேசிகரின்கீழ் அவருக்கு அடுத்த நிலையிலும் விளங்கியிருக்கிறார்கள். மறைஞானதேசிகர் பெயருக்குத்தான் பட்டத்திலிருந்திருக்-கிறார். சதாகால நிட்டையிலிருந்த அவர் செய்ய வேண்டிய காரியங்களையெல்லாம் சின்னப்பட்டம் அம்பலவாண தேசிகரே செய்திருக்கிறார்.

சதாகால நிட்டாபரராக விளங்கிய இரண்டாவது பட்டம் குருமகாசந்நிதானம் சில காலத்திற்குப்பின் ஒரு தைமாதத்துச் சுவாதிநாளில் சிவப்பேறு பெற்றார்கள்.

மூன்றாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்

இரண்டாம் பட்டம் மறைஞானதேசிகர் காலத்தில் சின்னப் பட்டத்திலிருந்த அம்பலவாண தேசிகரே மூன்றாம் பட்டம் குருமகாசந்நிதானமாகப் பரமாசாரியர் நமசிவாய தேசிகரால் அமர்த்தப்பெற்றார்.

இவர் காலத்தில், முன்சொன்ன நால்வரில், ஏனைய மூவருடைய அன்பையும் பெற்று இவர் சிறந்து விளங்கினார்.

பிரதம பரமாசாரியர் நமசிவாயமூர்த்திகள்
மூன்றாம் பட்டம் குருமகாசந்நிதானமாக அம்பலவாண தேசிகர், சின்னப்பட்டமாக தட்சிணாமூர்த்தி தேசிகர்.

ஆதீன நிறுவனரும் குருமுதல்வரும்(அதாவது முதல் குருமகாசந்நிதானமும்) ஆகிய ஸ்ரீநமசிவாயமூர்த்திகள் தம் காலத்திலேயே இரண்டாவது குருமகாசந்நிதானமாக மறைஞான தேசிகரை அமர்த்தி விளங்கச்செய்து அவர்காலம் முழுவதும் இருந்து, அவருக்குப்பின் மூன்றாவது குருமகா சந்நிதானமாக அம்பலவாணதேசிகரை அமர்த்தி விளங்கச் செய்து, இவர்காலத்திலும் சில காலம் இருந்து ஒரு தை மாதம் அசுபதி நாளில் திருவாவடுதுறையிலே சிவப்பேறெய்தினர்.

நிறுவனர் நமசிவாயமூர்த்திகள் மூன்றாம் குருமகா சந்நிதானம் காலத்தில்தான் முத்திபெற்றார்கள், அதுவரை நீண்டகாலம் விளங்கினார்கள். தம் காலத்திலேயே இரண்டாம் மூன்றாம் சந்நிதானங்களை அமர்த்திப் பார்த்து விட்டார்கள் என்ற செய்தி அன்பர்கள் நன்கறியத்தக்கது.

திருவாவடுதுறை ஆதீன குருமகாசந்நிதானங்களில் அதிகமான நூல்களைச் செய்தவர் மூன்றாம் பட்டம் அம்பலவாணதேசிகரே. திருவாவடுதுறை ஆதீன பண்டார சாத்திரம் பதினான்கில் 10 நூல்கள் இவராற் செய்யப்பெற்றவை.

1. அம்பலவாணதேசிகர் தசகாரியம்
2. சன்மார்க்க சித்தியார்
3. சிவாச்சிரமத் தெளிவு
4. சித்தாந்தப் பஃறொடை
5. சித்தாந்த சிகாமணி
6. உபாயநிட்டைவெண்பா
7. உபதேச வெண்பா
8. நிட்டை விளக்கம்
9. அதிசயமாலை
10. நமச்சிவாய மாலை

இவருடைய சிவபூசைக்குப் பூப்பறித்துக் கொடுக்கும் தவசிப்பிள்ளைக்குப் **பூப்பிள்ளை** என்றே பெயர் உண்டாகி விட்டது. பூப்பிள்ளையின் பணிவிடைகளில் மகிழ்ந்து, அவரது அன்பான வேண்டுகோளுக்கிரங்கி, மிக எளிய உரைநடையில் இவர் அருளிச்செய்த உயிரட்டவணை என்னும் சிறுநூல் **பூப்பிள்ளை அட்டவணை** என்றே வழங்கு

கிறது. அருமையான சிறுநூல். மிகமிக எளிய நடை. மாணாக்கரின் அறிவுத் தரத்திற்கேற்ப குரு இரங்கிவந்து, இறங்கிவந்து, மிக எளிய நடையில மிகச் சுருக்கமாக அருளிச் செய்தது. பிற்காலத்தில் திரு.வி.க. இந்நடையைத்தான் பின்பற்றினரோ என்று எண்ணத் தோன்றும்.

வைணவ அந்தணர் ஒருவர் இவரிடம் சரணாக வந்தடைந்து சைவ சந்நியாசமும் ஞானோபதேசமும் **உலகுடையநாயனார்** என்னும் தீட்சாதிருநாமமும் பெற்றுச் சிறந்து விளங்கினார். அவர் இவர் மீது பாடிய தோத்திரப் பாடல்கள் பத்தும் ‘ உலகுடைய நாயனார் திருவிருத்தங்கள் ’ என வழங்குகின்றன.

சிவபுரம் பெரியபிள்ளை என்னும் சைவ மெய்யன்பரொருவர் இவரிடம் ஞானதீக்கையும் சிவஞானோபதேசமும் பெற்று, இவர்மீது தோத்திரமாகப் பாடிய பத்துத் திருவெண் பாக்கள் ‘சிவபுரம் பெரியபிள்ளை பாடல்கள்’ என வழங்குகின்றன.

இவர் காலத்தில் சின்னப்பட்டமாக இருந்த தட்சிணா மூர்த்தி தேசிகர் பின்பு பட்டத்திற்கு வர நேரவில்லை. இவர் காலத்திலேயே சிவப்பேறெய்திவிட்டார். சின்னப்பட்டம் தட்சிணாமூர்த்தி தேசிகரும் இருநூல்களைச் செய்தார். 1. தட்சிணாமூர்த்தி தேசிகர் தசகாரியம். 2. உபதேசப் பஃறொடை. அம்பலவாண தேசிகர் செய்த நூல்கள் பத்துடன் இவ்விரண்டும் பண்டார சாத்திரம் பதினான்கில் சேர்ந்தன.

அம்பலவாணதேசிகர் காலம் பண்டாரசாத்திரம் 14-இல் 12 உண்டான காலம். நூற்றிறத்தால் ஆதீனத்தை ஒளிரச் செய்தவர் அம்பலவாணதேசிகர்.

நான்காவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ உருத்திரகோடி தேசிகர்

இவர்களது ஆட்சிக்காலம் **ஆதீனத்தின் பொற் காலங்களில்** ஒன்று. **தமிழ்நாடு முழுவதும் விரிவாகத் தல யாத்திரை மேற்கொண்ட முதல் சந்நிதானம் இவரே.** ஈசானத்

தம்பிரான் என்றொரு தம்பிரான் சுவாமிகள் இவர்கள் காலத்தில் சிறந்து விளங்கினார். அவரால் ஆதீனத்திற்கு ஏற்பட்ட ஆக்கங்கள் பல. ஈசானத் தம்பிரான் சுவாமிகளின் வரலாறும் பணிகளும் விரிவாக அறியத் தக்கவை. சிறந்து விளங்கிய தம்பிரான்கள் என்ற தலைப்பில் பின்னே இவரைப்பற்றிக் கூறுவோம். தென்பாண்டி நாட்டில், இன்றைய தென்மாவட்டங்களில், கிளைமடங்கள் பலவும் ஆதீன கிராமங்கள் பலவும் இவர்களது காலத்தில்தான் உண்டாயின.

இவர்கள் காலத்தில் மதுரை மாவட்டத்தில் **கிறித்துவ மதப்பரப்பலும் மதமாற்றமும்** மிகுந்திருந்தன. மன்னர் முத்துவீரப்ப நாயக்கரின் ஆதரவுடன் ஈசானத்தம்பிரானைக் கொண்டு, கிறித்துமதப் பரப்பலையும் மதமாற்றத்தையும் தடுத்து நிறுத்துவதற்கான பணிகள் செய்யப்பெற்றன.

தென்பாண்டிநாட்டுக்குப் பலமுறை யாத்திரைசெய்த சந்நிதானம் உருத்திரகோடி தேசிகர் இறுதியில் மதுரையில் தங்கியிருந்த காலத்தில் சிவப்பேறெய்தினார்கள். அதுவே இவர்களது இறுதியாத்திரை யாயிற்று. இவர்களது சமாதிக் கோயில் மதுரையில் மேல வெளிவீதியை அடுத்த தெருவிலுள்ள செண்ட்ரல் தியேட்டர் திரைப்பட மாளிகையின் பின்புறம் சிறிய கட்டிடமாகக் கட்டப் பெற்றுள்ளது. செண்ட்ரல் தியேட்டர் அமைந்துள்ள இடம் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானதே.

ஐந்தாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ வேலப்ப தேசிகர்

வேலப்ப தேசிகர் சிவஞானசித்தியார் பரபக்கத்திற்கு உரை எழுதியுள்ளார். இவரது அடியார் திருக்கூட்டத்தில் ஒருவராகிய நமச்சிவாயத்தம்பிரான் திருவருட்பயன், வினா வெண்பா ஆகிய இரண்டு சாத்திரங்களுக்கும் எழுதிய உரை ஆதீனப் பதிப்பாக வெளிவந்துள்ளது. வேலப்பதேசிகரும் நமச்சிவாயத் தம்பிரானும் மெய்கண்டசாத்திரம் பதினான்

குக்குமே உரை எழுதினர் என்பர். சுமார் ஓராண்டு காலமே அருளாட்சி புரிந்த இவர்கள் தென்னாட்டு யாத்திரையில் திருப்பூவணத்தில் சிவப்பேறு எய்தினார்கள்.

ஆறாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ குமாரசாமி தேசிகர்

இவர்கள் ஞானபீடத்தில் எழுந்தருளியிருந்த சில நாள்களிலேயே அதிதீவிர பக்குவமுடைய தம்பிரான் ஒருவருக்கு ஆசாரிய அபிடேகம் செய்து இரண்டாம் குருநாதராக இருத்தி, தலயாத்திரையாகச் சுசீந்திரம் சென்றவர்கள் அங்கேயே சிவப்பேறு எய்தினார்கள்.

ஏழாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ பிற்குமாரசாமி தேசிகர்

இவர்களும் குறுகிய காலம் சில ஆண்டுகளே பட்டத்திலிருந்து ஆட்சிசெய்து யாத்திரையாகச் சென்ற இடத்தில் சுசீந்திரத்தில் சிவப்பேறெய்தினார்கள்.

எட்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர்
(1625-1658)

ஏழாவது குருமகாசந்நிதானத்தின் காலத்தில் இவர் சின்னப்பட்டத்தில் இருந்தார். அக்காலத்திலேயே இலக்கணக் கொத்துச் சுவாமிநாததேசிகர் இவரது ஆதரவைப் பெற்று அடியவராய் இருந்தார் என்பர். எட்டாவது பட்டமாக வந்தபின் 33 ஆண்டுகள் இவர்கள் ஆட்சி செலுத்தினர் என்பர்.

திருவெண்காட்டில் பிறந்த இவர்கள் அடிக்கடி திருவெண்காட்டிற்குச் சென்று தரிசிப்பதிலும் நிட்டை கூடுவதிலும் விருப்பமிக்கவர்கள். திருவெண்காடு இவர்களுக்கு மிகவும் உவப்பான தலம். அதற்கேற்ப இறுதியில் திருவெண்காட்டிலேயே சிவப்பேறு பெற்றார்கள். இவர்களைப் பற்றிய செய்திகள் மூன்று முக்கியமானவை.

1. அரசனின் அன்னதான சோதனை

அன்னதானத்தில் விருப்பமும் புகழும் உடையவராகத் திகழ்ந்த இவர்களது அன்னதானத் திறத்தை அக்காலத்திய தஞ்சாவூர் மராட்டிய மன்னர் சோதித்தறிய விரும்பினார். ஒருநாள் நள்ளிரவில் தீண்டத்தகாதவராக வேடம்பூண்டு மடத்தின் புறத்தே தூரத்தே நின்று பசி வருத்துவதைப் பேரொலியுடன் கூவிச் சோறு கேட்டார். அப்போது ஒடுக்கத்தில் அறிதுயிலில் இருந்த சந்நிதானம் தாமே எழுந்து மடைப் பள்ளிக்குச் சென்று ஒரு பாத்திரத்தில் அன்னமும் கறியும் நிறைய எடுத்துச்சென்று வழங்கிப் பசிதீரப் பணித்தார்கள். ஆசாரியரின் இரக்கத்தை நேரில்கண்டு மகிழ்ந்த மராட்டிய மன்னர் மறுநாள் இதனை அரசவையிற் கூறிப் போற்றிப் புகழ்ந்தார்.

2. அந்தணர்க்கு அருத்தலும் அடியார்களுக்கு அருத்தலும். பிராமணபோசனமும் மாகேசுவரபூசையும். "பரிகலக் கிணறு"

ஒரு புண்ணிய காலத்திலே காவிரிசங்கமத்தில் நீராடத் திருவெண்காட்டுக்கு எழுந்தருளினார்கள். தஞ்சை மன்னரும் பரிவாரங்களுடன் வந்து தங்கினார். மன்னர் ஒரு மண்டலம் வரை சிறப்பாகப் பிராமணபோஜனம் செய்வித்தார். உண்ட எச்சில் இலைகளைக் குடிநீருக்குப் பயன்படாத ஓர் உவர்நீர்க் கேணியில் போடச் செய்தார். முடிவில் கேணி தூர்வை எடுத்த போது உவர்நீருடன் புழுக்களும் நிறைந்திருக்கக் கண்டார். சந்நிதானம் ஒரு மண்டலம்வரை மாகேஸ்வர பூஜை சிறப்பாக நடத்தினார்கள். அரசர் செய்தது போன்றே எச்சில் இலைகளை உபயோகமற்ற உவர்நீர்க் கேணி ஒன்றில் போடச் செய்தார்கள். முடிவில் தூர்வையெடுத்தபோது உவர் நீர் நன்னீராக மாறி யிருக்கக் கண்டனர். புழுக்களும் உண்டாகியிருக்கவில்லை. பிராமண போஜன எச்சில் இலைகள் போடப்பட்ட உவர்நீர்க் கேணியில் புழுக்கள் புழுத்தன. மாகேஸ்வரபூஜை எச்சில் இலைகள் போடப்பட்ட உவர்நீர்க் கேணியில் புழுக்கள் தோன்றவில்லை. உவர்நீரும் நன்னீராயிற்று. பிராமண போஜனமே சிறந்ததென்று கருதியிருந்த மன்னர் மாகேசுவர

பூஜையின் சிறப்பை உணர்ந்தார். சந்நிதானத்தின் மாகேஸ்வர பூசைக்காக நிலபுலன்களை வழங்கிப் புண்ணியம் பெற்றார். மாகேஸ்வரபூசை எச்சில் இலைகள் போடப்பெற்றதால் தூய்மையான அக்கிணறு **"பரிகலக் கிணறு"** என்று அதிலிருந்து வழங்கலாயிற்று. இன்றும் திருவெண்காட்டில் அப் பரிகலக் கிணறும் அரசர் அளித்த நிலங்களும் ஆதீனத்திற்கு உரிமையாக உள்ளன.

3. நரிப்பண்டார சந்நிதிகள்

அடிக்கடித் திருவெண்காட்டுக்குச் சென்று அங்கே தோட்டத்தில் நிட்டைகூடும் வழக்கமுடைய சந்நிதானம் அவ்வாறு ஒருமுறை நிட்டைகூடி யிருந்தபொழுது இரவு நேரம் ஆகிவிடவே நரிகள் வந்து சூழ்ந்துகொண்டு, நிட்டை யிலிருந்த இவர்களைக் கடித்துக் குதறத் தொடங்கிவிட்டன. பொறிபுலன்கள் மனம் ஆகிய கருவி கரணங்களை அடக்கி நிட்டையிலிருந்த சந்நிதானத்திற்கு நரிகள் கடிப்பது தெரிய வில்லை. நிட்டையிலேயே இருந்தார்கள். அவ்வழியாக வந்தவர்கள் நரிகள் ஊளையிடும் குரலைக் கேட்டுச் சந்நிதானம் நிட்டையிலிருப்பதையும் நரிகள் கடிப்பதையும் கண்டு நரிகளைத் துரத்திவிட்டுச் சந்நிதானத்தை நிட்டை யினின்றும் எழுப்பி நிகழ்ந்ததைக் கூறினார்கள். நரிகள் கடித்துக் குதறுவதையும் அறியாது நிட்டை கூடியிருக்கும் சந்நிதானத்தின் யோகாதிசயங்களை என்னென்று கூறுவது! இதனால் இவர்களுக்கு நரிப் பண்டார சந்நிதிகள் என்று ஒரு பெயரே ஏற்பட்டு வழங்கலாயிற்று.

திருவெண்காட்டில் பிறந்து, துறைசை ஆதீன கர்த்தராகத் திகழ்ந்து, மாகேசுவர பூசைச் சிறப்பைத் திருவெண் காட்டிலேயே நிரூபித்து விளக்கி, நரிகள் கடிப்பதையும் கவனியாது திருவெண்காட்டில் நிட்டை கூடியிருந்த சந்நிதானம், இறுதிக்காலத்தில் திருவெண்காட்டிலேயே சிவப்பேறெய்திற்று. சந்நிதானத்தின் சமாதி திருவெண் காட்டில் கிளை மடத்தில் உள்ளது.

ஒன்பதாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ இராமலிங்க தேசிகர்
(1658-1678)

திருமழபாடியில் ஆளுடையபண்டாரம் என்பவரின் இரண்டாவது மகனாராகத் தோன்றியவர். இளமையிலேயே திருவாவடுதுறையாதீனத்தை அடைந்து துறவுபெற்று சின்னப் பட்டமாக இருந்தவர். ஆதீனநிர்வாகத்தில் பலவிதமான ஒழுங்குமுறைகள் இவர்களால் ஏற்படுத்தப்பெற்றன. திருமுறைப் பயிற்சியும் இசையறிவும் மிக்க இவர்கள் தாம் பிறந்த ஊராகிய திருமழபாடியிலிருந்த சிறந்த ஓதுவார் குடும்பம் ஒன்றை வருவித்து ஆதீன ஓதுவாராக நியமித்தார்கள். பிற்காலத்தில் மிகவும் புகழ்பெற்ற **பொன்னோதுவாமூர்த்திகள்** அக்குடும்ப மரபில் வந்தவரே. இப்போதும் அம்மரபில் வந்த இராமசாமி ஓதுவார் ஆதீனத்தில் பணியாற்றி வருகிறார்.

இருபது ஆண்டுகள் அருளாட்சி செய்த இவர்கள் 1678-இல் திருவாவடுதுறையிலேயே சிவப்பேறு எய்தினார்கள்.

பத்தாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ வேலப்ப தேசிகர்
(1678-1700)

இவர்கள் காலத்தில்தான் **சிவஞானமுனிவர்** திருவாவடுதுறைக்கு **வந்துசேர்ந்தார்.** அக்காலத்தில் பேரூர் வேலப்பதேசிகர் என்பவர் சுசீந்திரம் கிளை மடத்தில் சின்னப் பட்டத்தி லிருந்தார். விக்கிரமசிங்கபுரத்தி லிருந்து தம்பிரான்களுடன் புறப்பட்டு வந்த சிவஞானமுனிவர் சுசீந்திரத்திற்கு வந்து பேரூர் வேலப்பதேசிகரிடம் உபதேசமும் துறவும் பெற்று அவர் வழியாகவே திருவாவடுதுறைக்கு வந்து சந்நிதானம் வேலப்பதேசிகரின் அருளுக்குப் பாத்திரரானார்.

இத்தேசிகர் காலத்தில்தான் சாஸ்திரம் சாமிநாதமுனிவர் என்பவர் திருவாவடுதுறைப் புராணம், திருப்பெருந்துறைப் புராணம் ஆகிய இரண்டையும் இயற்றினார். இவற்றின் செய்யுட்தொகை முறையே 2600; 1270. திருப்பெருந்துறைக்

கலம்பகம் என்றொரு பிரபந்தமும் சாஸ்திரம் முனிவரால் இயற்றப்பெற்றது. அது இப்பொழுது கிடைக்கவில்லை. இத்தேசிகர் சங்கரன்கோயிலில் சிவப்பேறு பெற்றார். சங்கரன் கோயில் கிளைமடத்தில் சமாதி உள்ளது.

பதினொன்றாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ பின் வேலப்ப தேசிகர்
(1700-1730)

இவர்களது ஆட்சிக் காலத்தில்தான் சிவஞான முனிவரின் **சிவஞானமாபாடியம் அரங்கேற்றம்** செய்யப் பெற்றது. அப்பொழுது (12-ஆவது) திருச்சிற்றம்பலதேசிகர் சின்னப் பட்டத்திலிருந்தார்கள். கவிராட்சச **கச்சியப்பமுனிவர்,** மதுரகவி **தொட்டிக்கலை சுப்பிரமணியமுனிவர்** ஆகியோரும் இவர்கள் காலத்தில் விளங்கியவர்களே. இவர்கள் திருப்பெருந்துறையில் சிவப்பேறு பெற்றார்கள்.

பன்னிரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ திருச்சிற்றம்பல தேசிகர்
(1730-1770)

சென்னைக்கு அருகிலுள்ள அரும்பாக்கம் இவர்கள் பிறந்த ஊர். மாதவச் சிவஞானமுனிவரின் மாணவர்களுள் இவர்களும் ஒருவர். இவர்கள் சின்னப்பட்டத்திலும் பதினொன்றாவது பின்வேலப்ப தேசிகர் பெரிய பட்டத்திலும் இருந்தபோதுதான் சிவஞானபாடியம் அரங்கேற்றம் செய்யப் பெற்றது.

நான்காவது பட்டம் உருத்திரகோடி தேசிகர் காலத்திற்குப் பின்னர் இவர்கள் காலத்தில்தான் ஆதீனத்திற்குத் தென்னாட்டில் மிகுதியான ஊர்கள் கிடைக்கப்பெற்றன. ஏறக்குறைய 14 செப்பேட்டுச் சாசனங்கள் இவர்கள் காலத்தில் ஏற்பட்டுள்ளன. நாலாம் பட்டத்திற்குப்பின் இவர்களது காலம் ஒரு **பொற் காலம்.** தென்னாட்டு யாத்திரையின்போது சேதுபதிமன்னர் பொற்கோட்டை என்ற ஊரைத் தானமாக வழங்கியுள்ளார். அந்நாளில் இராமநாதபுரம் வட்டாரத்தில் மழையின்மையால்

வறட்சியும் பஞ்சமும் நிலவின. சேதுபதி மன்னரின் வேண்டுகோளுக்கு இரங்கிய சந்நிதானம், மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் அமைந்த தேவாரப் பதிகங்களைப் பண்ணோடு பாடும்படி ஓதுவார்களுக்குக் கட்டளையிட்டுத் தாம் பஞ்சாக்கர செபத்துடன் நெடுநேரம் சிவானந்த நிட்டையில் இருந்தார்கள். நிட்டையின் நிறைவில்

சைவ சமயம் சமயமெனின் அச்சமயத்
தெய்வம் பிறைசூடும் தெய்வமெனின் - ஐவரைவென்
றானந்த இன்பில் அழுந்துவது முத்தியெனின்
வானங்காள் பெய்ம்மின் மழை.

என்று மழைபெய்யப் பாடியருளினர். வானம் மழை பொழிந்தது, வறட்சி நீங்கிற்று. வளம் பெருகிற்று. மன்னன் உள்ளமும் மக்கள் உள்ளமும் குளிர்ந்தன. சேதுவேந்தர் பொற்கோட்டை என்னும் ஊரைத் தானமாகத் தந்தார். பொற்கோட்டையைத் தானமாகப் பெற்ற சந்நிதானம்

நதியாம் விரிசிலை நன்னகர்பொற் கோட்டை
பதியாம் துறைசைப் பதிக்கு - விதியாகத்
தானமிட்டான் சேதுபதி தாரணிதா னுள்ளளவும்
ஊனமில்லை யெந்தநா ளும்.

என்றொரு பாடலைப் பாடியருளினார்கள். இவ்விரு வெண்பாக்களும் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் சேது நாட்டில் மழைபெய்யப் பாடியது, மழைபெய்து தம் நாடு வளம் பெற்றதற்கு உவந்து பொற்கோட்டை என்னும் ஊரைச் சேது வேந்தர் திருவாவடுதுறை மடத்துக்கு முற்றூட்டாக அளித்த போது அவ்வாதீனகர்த்தர் பாடியது என்ற தலைப்புகளுடன் பெருந்தொகையில் மு.இராகவையங்காரால் 1918, 1919-ஆம் எண் பாடல்களாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. (பெருந் தொகை - செந்தமிழ்ப் பிரசுரம் 1935-36. பக்கம் 448). சைவ சமயம் சமயமெனில் என்னும் வெண்பா தாயுமானவரால் ஒருசமயம் பாடப் பெற்றதென்றும் சொல்வதுண்டு.

சேதுபதி மன்னர்கள் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு ஏராளமான நிலங்களைத் தாராளமாக வழங்கினர்.

திருவாவடுதுறைக்குத் தென்மாவட்டங்களில்தான் கிளை மடங்களும் சொத்துகளும் மிகுதி. திருவாவடுதுறை மடத்து அன்னம் சேதுபதிகளின் கொடை . இதனால் "**சேது அன்னமும், காவிரி நீரும், ஆவுடையப்பன் நிழலும்** இருக்கின்றவரை நமக்கென்ன குறை" என்றொரு வசனமும் திருவாவடுதுறை ஆதீன கர்த்தர்களின் வாய்மொழியாக வழங்கி வருவதாயிற்று.

காசியில் கண்ணப்பசாமி மடம் என்னும் கிளைமடம் இவர்கள் காலத்தில் உண்டாயிற்று. திருவாவடுதுறையில் ஆதீன மடாலயத்தின் ஆன்மார்த்த வழிபடுமூர்த்தி ஞானமா நடராசப்பெருமான் எழுந்தருளி விளங்கும் வெள்ளித் தேர் வடிவப் பேழை முதன்முதலில் இவர்கள் காலத்தில்தான் செய்யப்பெற்றது. இவர்கள் திருவாவடுதுறையிலேயே ஒரு ஆனிப் பரணி நாளில் சிவப்பேறு அடைந்தார்கள்.

பதின்மூன்றாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்

(1770-1789)

இவர்கள் திருநெல்வேலி மாவட்டம் கடையநல்லூரில் தோன்றியவர்கள். முதலில் தம்பிரானாக இருந்து பின் சின்னப்பட்டமானவர்கள். இவர்கள் சின்னப் பட்டத்திலிருந்த காலத்தில்தான், சின்னப்பட்டத்திற்குரிய இடம் சுசீந்திரத்தி லிருந்து கல்லிடைக்குறிச்சிக்கு (திருத்தளிச்சேரி என்னும் தளிகை மடத்திற்கு) மாற்றப்பெற்றது. **சிவஞானமுனிவர்** இவர்கள் காலத்தில்தான் **முத்திபெற்றார்(1785).**

பதினான்காவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ வேளூர் சுப்பிரமணிய தேசிகர்

(1789-1845)

புள்ளிருக்குவேளூர் என்னும் வைத்தீஸ்வரன்கோயில் இவர்கள் பிறந்த ஊர். ஆதலின் வேளூர் சுப்பிரமணிய தேசிகர் என வழங்கப்பெற்றார்கள். பதின்மூன்றாம் பட்டம் அம்பலவாணதேசிகர் காலத்தில் சின்னப்பட்டத்தில் நியமிக்கப்பெற்றுக் கல்லிடைக்குறிச்சியில் தங்கிப்

பணியாற்றியவர்கள். பின்னர் 13-ஆம் பட்டம் ஆதீனகர்த்தராகி 1789 முதல் 1845 வரை நீண்ட காலம் 55 ஆண்டுகள் ஆட்சி செய்தவர்கள்.

திருக்கழுக்குன்றம் கிளைமடம் இவர்கள் காலத்திற் கட்டப்பெற்றது. **ஆதீனத்தின் ஒடுக்கம்** இவர்கள் காலத்தில் **மண்ணச்சநல்லூர் ஆவுடையப்ப பிள்ளையால் கருங்கல் கட்டிடமாகக் கட்டப்பெற்றது.**

மண்ணச்சநல்லூரில் சிறந்த சைவ மெய்யன்பராகவும் நிறைந்த செல்வராகவும் சந்திரசேகரம்பிள்ளை என்பவர் விளங்கினார். மன்னவரொப்ப வாழ்ந்தவர் என்று திருவாவடுதுறை ஆதீன குருபரம்பரை விளக்கம் கூறுகிறது. சந்திரசேகரம்பிள்ளையின் இருமகனார்களான ஆவுடையப்ப பிள்ளையும் சொக்கலிங்கம் பிள்ளையுமே திருவாவடுதுறை ஆதீன ஒடுக்கத்தின் கருங்கற்கட்டிடப் பணியைச் செய்தவர்கள். இவ்விருவரின் திருவுருவச்சிலைகள் ஒடுக்கத்தின் வாயிலுக்கு இருபுறமும் உள்ளன. குருமகாசந்நிதானங்கள் தங்கள் காவி உத்தரீயங்களை(மேலாடைகளை)க் களைந்து வைக்கும் போது இவ்விருவர் திருவுருவச் சிலைகளின் சிரத்தின் மீது வைப்பதே வழக்கம். படம் காண்க. ஆவுடையப்பப் பிள்ளைக்கு ஆளுடையபிள்ளை என்றும் பெயருண்டு. **திருவானைக்காவில் உள்ள பாப்பம்மாள் சத்திரமும்** ஆவுடையப்ப பிள்ளையின் குடும்பத்தைச் சேர்ந்த பாப்பம்மாளால் கட்டப் பெற்றுத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குக் கொடுக்கப் பெற்றதே. மண்ணச்சநல்லூர்ப் பகுதிகளில் ஏராளமான நிலங்கள் ஆவுடையப்பபிள்ளை குடும்பத்தாரால் திருவாவடுதுறை ஆதீனத்திற்குக் கொடுக்கப்பெற்றன. ஆதீன ஒடுக்கத் திருப் பணியை ஆவுடையப்பபிள்ளை செய்ததால் '' **ஆவுடையப்பன் நிழலும் சேது அன்னமும் காவிரி நீரும் இருக்கின்ற வரை நமக்கென்னகுறை** '' என்று குருமகாசந்நிதானங்கள் அவ்வப்போது சொல்லிக்கொள்ளும் வழக்கம் ஏற்பட்டது. ஆவுடையப்பப்பிள்ளை எம் முன்னோர் ஆவார். அவரது குடும்ப மரபில் வரும் பெருமையுடையவர் யாம்.

திருவானைக்காவில் சத்திரம் கட்டியளித்த பாப்பம்மாளும் எம் முன்னோரே. **திருச்சிராப்பள்ளியில் கீழைச் சிந்தாமணியில் பாப்பம்மாள் சத்திரம்** என்றொரு சத்திரம் உள்ளது. அதைக் கட்டிய பாப்பம்மாளும் ஆவுடையப்பபிள்ளை குடும்பத்தைச் சேர்ந்தவரே. அச்சத்திரம் இன்றும் எமது பூர்வாசிரமச் சம்பந்தி குடும்பத்தாரின் நிர்வாகத்திலுள்ளது. **இந்நூலாசிரியராகிய யாம் (ஊரன் அடிகள்) திருவாவடுதுறை ஆதீன ஒடுக்கத் திருப் பணியைச் செய்த ஆவுடையப்பப்பிள்ளை மரபில் வரும் துறவி** என்பதை அடக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இவர்கள் காலத்திலேதான் **மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்** முதன்முதலில் திருவாவடுதுறை யாதீனத்திற்குச் சென்று இவர்களுடன் பழக்கஞ் செய்து கொண்டார். வேளூர் சுப்பிரமணிய தேசிகர் இயல்பு என்ற தலைப்பில் டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்கள் பிள்ளை யவர்கள் சரித்திரம் முதற்பாகம் பக்கம் 34-இல் எழுதியுள்ளதை அப்படியே இதனடியில் எடுத்துக் காட்டுகிறோம். அது வருமாறு:

> “ அப்பொழுது , ஸ்ரீநமச்சிவாய மூர்த்திக்குப்பின் 14-ஆம் பட்டத்தில் வேளூர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ரென்பவர் ஆதீனகர்த்தராக வீற்றிருந்தார். அவர் வடமொழி தென்மொழி நூல்களிலும் சிவாகமங்களிலும் மெய்கண்ட சாஸ்திரம் பண்டாரசாஸ்திரம் சித்த நூல்கள் முதலிய வற்றிலும் பயிற்சி மிக்கவர்; பரம்பரையே பாடங் கேட்டவர்; பாடஞ் சொல்லுதலில் மிக்க ஆற்ற லுடையவர்; பிரசங்க சக்தி வாய்ந்தவர்; வடமொழி வித்துவான்கள் தென்மொழிவாணர் பலருடைய இடையே இருந்து தினந்தோறும் அவர்களுடன் சல்லாபம் செய்துகொண்டு மகிழ்ச்சியோடு காலங்கழிப்பவர். அவர் அப்பொழுதப்பொழுது சமயோசிதமாகப் பேசிவந்த வார்த்தைகளும், சிலேடையான மொழிகளும் வாக்கியங்களும் இன்றும் அங்கங்கே பலரால் பாராட்டி வழங்கப்படுகின்றன. அம்மடத்தில் இப்பொழுது

பலவகையாக எழுதப்படும் திருமுக சம்பிரதாயங்களும், கடித வக்கணைகளும், உள்ள சட்டதிட்டங்களும் அவர் புதுப்பித்தனவே யென்பர். தமக்குப் பட்டமாவதற்கு முந்திய வருஷத்தில் ஸ்ரீ கச்சியப்பமுனிவரால் நன்கு படித்து வரும் படி செவியறிவுறுத்தப் பெற்றவரென்று கேள்வி ''.

இவ்வளவும் ஐயரவர்கள் எழுதுவது. இவர்களைப் பற்றி அறிய இதுவே போதும் என்று எண்ணுகிறோம்.

வேலாயுதமுனிவர், அம்பலவாணமுனிவர், **வித்துவான் தாண்டவராயத்தம்பிரான்,** கந்தசாமிக்கவிராயர், சரவண ஓதுவார் முதலியோர் இவர்கள் காலத்தில் ஆதீனப் புலவர்களாக விளங்கினர்.

80 ஆண்டுகள் வாழ்ந்திருந்த இவர்கள் எண்பது திருநட்சத்திரப் பண்டார சந்நிதிகள் என்று வழங்கப் பெற்றார் கள். எண்பதாண்டு வாழ்நாளில் ஐம்பத்தாறு ஆண்டுகள் (1789 - 1845) பட்டத்தில் இருந்தார்கள். 1845 குரோதன ஆண்டு கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாளில் திருவாவடுதுறை யிலேயே சிவப்பேறு அடைந்தார்கள்.

பதினைந்தாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்

(1845-1869)

தம்பிரானாகவும் சின்னப்பட்டமாகவும் நீண்டகாலம் இருந்த இவர்கள் 1845-இல் பெரியபட்டத்திற்கு வந்தார்கள்.

இவர்களது காலம் ஆதீன வரலாற்றில் **தமிழ் இலக்கியப் பொற்காலம்.**

இவர்கள் பன்னிரண்டு திருமுறைகளிலும், மெய்கண்ட நூல்களிலும், பண்டார சாத்திரங்களிலும் நல்ல பயிற்சி யுடையவர்கள். இடைவிடாமல் படிப்பதும் படித்தவற்றைச் சிந்திப்பதும், ஆராய்ந்து பேசுதலுமே இவர்கள் பொழுது போக்கு. இவர்கள் காலத்தில் ஆதீனத்திலிருந்த முனிவர்கள்

அனைவரும் நல்ல படிப்பாளிகள். அதனால் அவர்களிடம் பாடம்கேட்பவர்களும், பாடம் கேட்பவர்களிடம் பாடங் கேட்பவர்களுமாகப் பலர் இருந்தார்கள்.

இவர்கள் காலத்தில் இலங்கை யாழ்ப்பாணத்து நல்லூரிலிருந்து தமிழகத்திற்கு வந்த **ஆறுமுகநாவலருக்கு நாவலர் பட்டம் வழங்கப்பெற்றது(1849).** அப்போது மேலகரம் சுப்பிரமணியதேசிகர் சின்னப்பட்டத்திலிருந்தார். அவரது பரிந்துரையின்பேரில் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் **பிள்ளையவர்கள் ஆதீன மகாவித்துவானாக அமர்த்தப் பெற்றார் (1860).** பிள்ளையவர்கள் அம்பலவாண தேசிகரின்மீது ஒரு கலம்பகமும் பிள்ளைத்தமிழும் பாடினார். அம்பலவாணதேசிகர் கலம்பகம், அம்பலவாணதேசிகர் பிள்ளைத்தமிழ் எனும் அவை இலக்கண இலக்கியச் சிறப்புகளோடு தோத்திர சாத்திரச் சிறப்பும் மிகுந்தவை; மிகவும் சுவையுடயவை. பிள்ளையவர்களின் அருமை பெருமைகளை நன்குணர்ந்த சந்நிதானம் அம்பலவாண தேசிகர் பிள்ளையவர்களுக்கு **மகாவித்துவான்** பட்டத்தை அளித்துச் சிறப்பித்தார்கள்.

இவர்கள் திருவாவடுதுறையிலேயே சிவப்பேறெய்தி னார்கள்.

பதினாறாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ மேலகரம் சுப்பிரமணிய தேசிகர்
(1869 - 07.01.1888)

மேலகரம் சுப்பிரமணிய தேசிகரின் காலம் தமிழிலக்கியப் **பொற்காலத்திலும் பொற்காலம்.** குற்றாலக் குறவஞ்சியை இயற்றிய திரிகூடராசப்பக்கவிராயரின் மரபில் வந்தவர் மேலகரம் சுப்பிரமணியதேசிகர். இயற்பெயர் குற்றாலலிங்கம். இயல்பிலேயே தமிழார்வமிக்கவர்கள். வித்துவான் தாண்டவ ராயத்தம்பிரானவர்களிடத்துப் பாடங் கேட்டுச் சிறந்தவர்கள். வித்தியாகுருவைத் தெய்வமாகவே மதித்தவர்கள். ஆதீன குலதெய்வமான சிவஞான சுவாமிகளிடத்திலே அளவற்ற அன்புடையவர்கள். சுவாமிகளைத் தமது வழிபடு கடவுளாகவே

கொண்டு போற்றியவர்கள். பாடஞ் சொல்வதும் ஆதீன மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுடன் உரையாடுவதுமே இவர்கள் பொழுதுபோக்கு. வித்துவான் களுடைய திறமையை நன்கு அறிந்து பாராட்டும் நுண்மா ணுழைபுலமுடையவர்கள். தாம் சின்னப் பட்டத்திலிருந்த போதே தம் வித்தியாகுரு தாண்டவராயத் தம்பிரானவர்கள் முகமாகப் பிள்ளையவர்களை அறிந்து,பெரிய பட்டத்திலிருந்த அம்பலவாணதேசிகரவர்களுக்குப் பரிந்துரைத்து ஆதீன வித்துவானாக அமர்த்தச் செய்து தமிழகம் பெரிதும் பயன் பெறச் செய்தவர்கள். **டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்கள்** இவர்கள் காலத்திலேதான் ஆதீனத்திலிருந்து மகாவித்துவான் பிள்ளையவர்களிடமும் மகாசந்நிதானத்திடமும் பாடங் கேட்டார்கள். பாடஞ் சொல்லுவதில் ஆற்றல்மிக்க இத்தேசிகர் சிவஞானசித்தியார் சுபக்கத்திற்குப் பதவுரை ஒன்றும் எழுதியருளினார்கள்.

ஐயரவர்களின் என்சரித்திரம் அத்தியாயம் 49 கலைமகள் திருக்கோயில் என்பதில் சர்வகலாசாலை என்னும் உட்டலைப்பில் 423; 424-ஆம் பக்கங்களில் எழுதுவது பின்வருமாறு:

> “மடத்தின் விஷயம் ஒன்றும் தெரியாத அயல்நாட்டார் ஒருவர் வந்து பார்த்தால் அவ்விடம் ஒரு **சர்வகலாசாலையோ** என்று எண்ணும்படி இருந்தது அக்காலத்திய நிலை. அங்கே ஆடம்பரம் இல்லை; பெரிய விளம்பரங்கள் இல்லை; ஊரறியச்செய்யும் பிரசங்கங்கள் இல்லை; வேறு வேறாகப் பிரித்து வகுக்கும் பிரிவுகள் இல்லை. பொருள் இருந்தது; அதைத் தக்கவழியில் உபயோகிக்கும் தாதா இருந்தார்; அவர் உள்ளத்தில் அன்பு நிறைந்திருந்தது; வயிற்றுப் பசியையும் அறிவுப் பசியையும் போக்கி வாயுணவும் செவியுணவும் அளிக்கும் நித்தியோத்ஸவம் அங்கே நடந்துவந்தது. அத்தகைய இடத்திலே கல்வி விளைந்து பெருகுவதற்குத் தடை என்ன? **கலைமகள்** களிநடம் புரியும் **திருக்கோயிலாகவே** அது விளங்கியது.”

இவ்வாறு எழுதுகிறார் ஐயரவர்கள். மாநிலத்திலேயே பெரிய அரசுக் கல்லூரியான, அந்நாள் பிரசிடென்சி காலேஜில், இந்நாள் மாநிலக் கல்லூரியில் பணியாற்றியும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் சிறப்புச் சொற்பொழிவாற்றியும் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பலரோடு பழகியும், பல்கலைக் கழகம் பற்றி நன்கறிந்த ஐயரவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சர்வகலாசாலையோ என்கிறார், கலைமகள் கோயில் என்கிறார்.

திருவாவடுதுறை ஆதீனம் உண்மையிலேயே ஒரு பல்கலைக் கழகமாக, சைவத் தமிழ்ப் பல்கலைக் கழகமாகத் திகழ்ந்தது. முற்காலத்திய நாளந்தா, தட்சசீலம், காஞ்சி பல்கலைக் கழகங்களைப் போன்று ஒரு பல்கலைக் கழகமாகத் திகழ்ந்தது. குருமகாசந்நிதானங்கள் அதன் வேந்தர்களைப் போன்று திகழ்ந்தார்கள். பிள்ளையவர்கள் போன்றோர் அதன் துணைவேந்தர்கள் போன்று விளங்கினார்கள். **திருவாவடுதுறை யாதீனம் தமிழுக்குத் தந்த கொடை டாக்டர் உ.வே. சாமிநாதையர்.**

தமிழ்க்கொடையைப் போன்றே இவர்களது சைவக் கொடையும் குறிப்பிடத்தக்கது. மூன்று ஆதீனங்களுக்கு மடாதிபதிகளைக் கொடுத்தவர் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர். இவர்கள் காலத்திலே சிறந்த வித்வான்களாக இருந்தவர்களான குமாரசாமித்தம்பிரான் திருப்பனந்தாள் காசிமடத்து அதிபராகவும், ஆறுமுகத்தம்பிரான் குன்றக்குடி ஆதீன கர்த்தராகவும் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சூரியனார்கோயில் ஆதீனகர்த்தராகவும் அனுப்பப் பெற்றனர்.

பதினேழாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்

(07.01.1888 - 15.04.1920)

இவர்கள் பிறந்த ஊர் துழாவூர். தந்தையார் வடுகநாத பண்டாரம். பிள்ளைத்திருநாமம் அருணாசலம். சென்னை நாட்டுப்பிள்ளையார் கோயில் கிளைமடத்திலிருந்த ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகளிடம் பாடங்கேட்டுக் கொண்டிருந்த

நிலையில் இளமையிலேயே மேலகரம் சுப்பிரமணிய தேசிகரை அடைந்து சின்னப்பட்டத்தில் அமர்த்தப் பெற்றவர்கள். அவர்களுக்குப்பின் 17-ஆம் பட்டமாக ஆனார் கள்.

தமிழ் வடமொழி ஆகிய இருமொழிப்புலமையும் உடைய இவர்கள் இசைப்புலமையிலும் சிறந்து விளங்கினார்கள். திருமுறைகளில் நல்ல ஆராய்ச்சியுடைய இவர்கள் எழுதி வைத்த திருமுறைக் குறிப்புகள் ஆதீனத் திங்களிதழான 'மெய்கண்டார்' இதழ்களில் பல மாதங்களாக அண்மையில் வெளியிடப்பெற்றன. திருமுறைக் குறிப்புகள் போன்றே இசைக் குறிப்புகளையும் எண்ணற்ற அளவில் எழுதி வைத்திருக்கிறார்கள். ஆதீன நூல்நிலையத்திலுள்ள ஏட்டுச் சுவடிகளில் பலவற்றைத் தமது திருக்கரத்தாலேயே காகிதப் படிகளாகப் பெயர்த்தெழுதி உயர்ந்த பட்டுக் கட்டிடங் கட்டி அழகாகப் பொன்முலாம் பூசி நன்கு பாதுகாத்து வைத்தார்கள். மாதவச் **சிவஞானசுவாமிகள்** அவர்களது **திருக்கரத்தாலேயே** ஏட்டுச் சுவடிகளில் **எழுதியுள்ள** சிவஞான **மாபாடியத்தை** இவர்கள் காகிதப்படிகளாக **மூன்றுபடிகள்** தம் கரத்தாலேயே **எழுதி** வைத்திருக்கிறார்கள் என்றால் இவர்களது ஆர்வத்தை என்னென்பது? **பஞ்சாக்கர மந்திரத்தை ஒரு கோடி முறை எழுதித்** தொகுத்து அச்சிட்டுக் கட்டிடஞ் செய்து அழகாக வைத்திருக்கிறார்கள்.

ஆதீன நூல்நிலையம் இவர்கள் காலத்தில் வித்தியாநிதி என்ற பெயருடன் விரிவுபடுத்தப்பெற்றது(1895). புகழ்பெற்ற பொன்னோதுவாமூர்த்திகள் நூல் நிலையக் காப்பாளராகவும் ஆதீன வித்துவானாகவும் விளங்கினார்.

கொடைத்திறத்தில் இவர்களைப் **போஜமகாராஜன்** என்று பாராட்டுவார்கள். எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சி. வயதுமுதிர்ந்த புலவர் ஒருவர் தமது பெண்ணின் திருமணத்தை முன்னிட்டு நூறு ரூபாய் பரிசு பெறலாம் என்று எண்ணி வடமொழிச் சுலோகம் ஒன்றை இயற்றிக் கொண்டு வந்தார். அச்சுலோகத்தின் சொல்நயத்திலும்

பொருளாழத்திலும் உள்ளத்தைப் பறிகொடுத்த இவர்கள் இரண்டாயிரம் ரூபாய் சன்மானம் வழங்கினார்கள். வெள்ளி ரூபாய் நாணயங்களாக இரண்டு பைகளில் போட்டுக் கட்டிப் புலவர்பால் கொடுக்கப்பெற்றது. மேலும் பொன்னாடைகளும் பட்டாடைகளும் வழங்கப்பெற்றன. எல்லாவற்றையும் மூட்டையாகக் கட்டிப் புலவரிடம் தந்தனர். பெற்றுக் கொண்ட புலவர் சந்நிதானத்தில் யான் எண்ணிவந்த பரிசு நூறு ரூபாய்களே, இவ்வளவு வேண்டா, என்னால் எடுத்துக் கொண்டு செல்லவும் இயலாது, வைத்துக் காப்பாற்றவும் இயலாது, இவை சந்நிதானத்திலேயே இருக்கட்டும், நூறு ரூபாய் கொடுத்து அனுப்பினால் போதும் என்று விண்ணப்பித்தார். சந்நிதானமோ இதைக்கேட்டபின் பின்னும் ஒரு ஆயிரம் ரூபாய் சேர்த்து வழங்கினார்கள். ஆதீனப் பணியாளர் ஒருவரைப் புலவருடன் உதவியாகவும் பாதுகாப் பாகவும் அனுப்பி அவரது பெண்ணின் திருமணத்தைச் சிறப்பாக நடத்துவிக்கச் செய்தார்கள். **கொடையென்றால் இதுவன்றோ கொடை.**

இப்படி வாரிவாரி வழங்கிய கொடைத்திறத்தால் ஆதீனத்திற்கு, இவர்களுக்கு முன்பே ஏற்பட்டிருந்த கடன், இவர்கள் காலத்தில் மிகுந்தது.

பதினெட்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்
(15.04.1920 - 05.02.1922)

பிறந்த ஊர் திருக்கழுக்குன்றம். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிப்புலமையும், உலகியல் அறிவும், நிர்வாகத்திறனும் நிரம்பியவர்கள். 17-ஆம் பட்டம் அம்பலவாணதேசிகரிடம் பல காலம் ஒடுக்கத்திலே இருந்து அவர்களது கொடைத்திறனை நன்கறிந்தவர்கள் ஆதலின் இவர்கள் பட்டமேற்ற பின்பு கொடையினால் புகழெய்தி னார்கள். பட்டத்திலிருந்தது இரண்டே ஆண்டுகளாயினும் மிகு புகழோடு விளங்கினார்கள்.

பத்தொன்பதாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகர்

(05.02.1922 - 1937)

பட்டத்திற்கு வருவதற்குமுன் தம்பிரானாகவும் தட்சிணம் காறுபாறாகவும் நீண்டகாலம் இருந்தவர்கள். சுப்பிரமணிய மந்திர சித்தியும் வாக்குப் பலிதமும் உடையவர்கள். 15 ஆண்டுகால ஆட்சிக்குப்பின் 1937 ஈஸ்வர ஆண்டு ஐப்பசித் திங்கள் 26-ஆம் நாள் வியாழக்கிழமை மயிலாடுதுறையில் சிவப்பேறெய்தினார்கள்.

இருபதாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்

(1937 - 13.04.1951)

கொற்கையில் பிறந்தவர்கள். பிள்ளைத் திருநாமம் வைகுண்டம்பிள்ளை. பத்தொன்பதாம் அகவையிலேயே செவ்வந்திபுரத்திலே தட்சிணம் காறுபாறாக அப்போது எழுந்தருளியிருந்த வைத்தியலிங்கத்தம்பிரான் சுவாமிகளிடம் உபதேசமும் துறவும் பெற்றார்கள். திருவாவடுதுறையில் 17-ஆம் பட்டம் அம்பலவாணதேசிகரின் அணுக்கத் தொண்டராக இருந்து ஆதீன மரபுகள் அனைத்தையும் நன்கறிந்தவர்கள். சேற்றூர் சுப்பிரமணியக்கவிராயரிடம் இலக்கண இலக்கிய பாடங் கேட்டவர்கள். **திருமந்திரத்தில் இவர்களுக்குத் தனிப்பற்று.** திருப்பெருந்துறையில் கட்டளைத் தம்பிரானாக இருந்தபோது இவர்களுக்குத் திருமந்திர உபதேசம் கிடைத்தது.

சைவ ஆதீனங்கள் அனைத்தும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டுமென்ற சிந்தனை படைத்தவர்கள். மற்ற ஆதீன கர்த்தர்களை மடத்திற்கும் கோயில்களுக்கும் அழைத்து மகிழ் வித்தார்கள். அங்ஙனமே தாமும் மற்ற ஆதீனங்களுக்கும் கோயில்களுக்கும் சென்று இணைப்பை வலுப்படுத்தினார்கள்.

1947 ஆகஸ்ட் 15-இல் இந்தியா சுதந்தரம் பெற்றபோது இவர்கள் பட்டத்தில் இருந்தார்கள். 1947 ஆகஸ்ட் 14 இரவு

11.45 மணிக்கு பண்டித ஜவஹர்லால் நேரு இந்திய நாட்டின் முதல் பிரதமராகப் பொறுப்பேற்றார். டெல்லியில் அதற்குரிய விழா நிகழ்ந்தது. அவ்விழாவில் திருவாவடுதுறை ஆதீனம் செய்தளித்த செம்பொற் செங்கோல் பிரதமர் நேருவுக்கு வழங்கப்பெற்றது. ஆதீனம் பெரிய காறுபாறு குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள், ஆதீன ஓதுவார் மாணிக்க ஓதுவார், ஆதீன நாதசுர வித்துவான் திருவாவடுதுறை டி.என்.இராஜ ரத்தினம்பிள்ளை ஆகியோர் தங்கச் செங்கோலை டெல்லிக்குக் கொண்டு சென்று கொடுத்தனர். டி. என். இராஜரத்தினம் பிள்ளை நாதசுரம் வாசிக்க, ஓதுவாமூர்த்திகள் ''அரசாள்வர் ஆணை நமதே'' என்னும் திருஞானசம்பந்தர் தேவாரப் பாசுரத்தைப் பண்ணோடு பாட, காறுபாறு தம்பிரான் சுவாமிகள் ''தங்கச் செங்கோல் தங்கள் செங்கோல், தங்கள் செங்கோல் எங்கள் ஆட்சிச் சின்னம்'' என்று சொல்லி நேருவின் கையில் கொடுத்தார்.

கஸ்தூர்பா நிதி திரட்டுவதற்காக இராஜேந்திரப் பிரசாத் தமிழ்நாட்டுக்கு வந்தபோது ஆதீனத்திற்கு வந்தார். சந்நிதானம் ரூ.35,000 நிதியளித்துச் சிறப்பித்தார்கள்.

இவர்கள் காலத்தில் **கரந்தைப் புலவர் கல்லூரியின் நிர்வாகத்தைக்** கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினிடமிருந்து ஏற்று நான்காண்டுகள் நடத்திப் பின்னர் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினிடமே திரும்பக் கொடுக்கப்பெற்றது. 1937-இல் **வி.சிதம்பரராமலிங்கம் பிள்ளையும்**, 1948-இல் **த.ச.மீனாட்சி சுந்தரம் பிள்ளையும்** ஆதீன வித்துவான்களாக நியமிக்கப் பெற்றனர். **நாகர்கோயில் ஆறுமுகம் பிள்ளையும்**(இவருக்கு ஆறுமுகநாவலர் என்றும் பெயர்) வித்துவானாக இருந்தார்.

முன்னைய நான்கு சந்நிதானங்களின் காலங்களில் ஆதீனத்திற்கு ஏற்பட்டிருந்த கடன்கள் இவர்களது திறமையான ஆட்சியால் தீர்க்கப்பெற்றன.

திருவிடைமருதூர் மகாலிங்கப் பெருமான்மீது பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த இவர்கள் அதற்கேற்பத் திருவிடை

மருதூரிலேயே 13.04.1951 விகுர்தி ஆண்டு பங்குனித்திங்கள் 30-ஆம் நாள் வியாழக்கிழமை சிவப்பேறு அடைந்தார்கள்.

இருபத்தொன்றாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்
(13.04.1951 - 23.09.1967)

இவர்கள் காலத்தில்தான் ஆதீனத்திற்கு **முதன்முதலில் கார் வாங்கப்பெற்றது**. பல்லக்கிலேயே செய்துகொண்டிருந்த பயணம் கார்ப்பயணமாக மாறிற்று.

நமசிவாயமூர்த்தி அச்சகம் என்ற பெயரில் அச்சகம் **நிறுவப்பெற்றது**. திருவெண்ணெய்நல்லூரில் **சித்தாந்த சைவ மாநாடு**, ஆவுடையார்கோயிலில் **திருவாசக மாநாடு**, திருவாவடுதுறையில் **திருமந்திர மாநாடு** ஆகியவை தொடங்கி ஆண்டு தோறும் தொடர்ந்து நடத்தப்பெற்றன.

காசியில் கண்ணப்பசாமி மடம் புதுப்பிக்கப்பெற்றது. **திருவிடைமருதூரில்** கோயில்வாசலில் இராசகோபுரத்தை ஒட்டி, **விருந்தினர் விடுதி** யொன்று நவீன வசதியுடன் கூடியதாகக் கட்டப்பெற்றது.

இவர்கள் காலத்தில்தான் திருவாவடுதுறை ஆதீனத்துடன் நமக்கு நேர் பழக்கம் ஏற்பட்டது.

திருமந்திர மாநாடுகள்

இவர்கள் காலத்தில் திருமந்திர மாநாடுகள் பதினொன்று நடைபெற்றன.

முதலாவது மாநாடு 1954 ஜனவரி 31;பிப்ரவரி 1;2;3
இரண்டாவது மாநாடு 1955
மூன்றாவது மாநாடு 1956 ஜனவரி 12;13;14
நான்காவது மாநாடு 1957 ஜனவரி 28;29;30
ஐந்தாவது மாநாடு 1958 ஜனவரி 18;19;20
ஆறாவது மாநாடு 1959 ஜனவரி 18;19;20
ஏழாவது மாநாடு 1960 ஜனவரி 25;26;27
எட்டாவது மாநாடு 1961 ஜனவரி 14;15;16

ஒன்பதாவது மாநாடு 1962

பத்தாவது மாநாடு 1963 ஜனவரி 22;23;24

பதினொன்றாவது மாநாடு 1964 ஜனவரி 13;14;15

மகரத்தலைநாள் குருபூசையை ஒட்டியே இம்மாநாடுகள் நிகழ்ந்தன. மிகப்பெரிய ஏற்பாடு. மிகப்பெரிய மனிதர்கள் தலைமை வகித்தார்கள், மிகப்பெரிய அறிஞர்கள் சொற் பொழிவாற்றினார்கள்.

தலைமை வகித்தவர்கள்:

நாகர்கோயில் ஆறுமுகநாவலர்
பழனி ஈசான சிவாசாரியார்
டாக்டர்.பா.நடராஜன்
தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்
டி.எம்.பி.மகாதேவன்
அறநிலையத்துறை அமைச்சர் வேங்கடசாமிநாயுடு
மேயர் எஸ்.இராமசாமிநாயுடு
வி.சந்தானம்,பொறுப்பாசிரியர்,தினமணி.
கருமுத்து தியாகராச செட்டியார்
சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம்

சொற்பொழிவாற்றியவர்கள்

ச.தண்டபாணி தேசிகர்
த.ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை
தே.ஆ.ஸ்ரீநிவாசாச்சாரியார் (கடலூர்)
தி.சா. தியாகராஜதேசிகர்(கடலூர்)
க.வச்சிரவேல் முதலியார்
அருணைவடிவேல் முதலியார்
முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்
கோ. சுப்பிரமணியபிள்ளை
ஈ.எஸ். வரதராஜையர்
இளவழகனார் (அழகரடிகள்)
கி.வா.ஜகந்நாதன்
பாலகவி வயிநாகரம் இராமநாதன் செட்டியார்
தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்
டாக்டர் டி.எம்.பி. மகாதேவன்

டாக்டர் வ.ஆ. தேவசேனாபதி
டாக்டர்.மா. இராசமாணிக்கனார்
லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார்
ஜி.வரதராஜ பிள்ளை
பாலூர். கண்ணப்ப முதலியார்
ரா.விசுவநாத ஐயர்(அடையாறு)
மீ.பா.சோமு
கா.பொ.இரத்தினம் (இலங்கை)
ந.ரா.முருகவேள்
ச.சிவகுமார்
ஔவை சு. துரைசாமிபிள்ளை
அ.ச.ஞானசம்பந்தன்

முதலிய அறிஞர்கள் உரையாற்றினர்.

மாநாட்டு நிகழ்ச்சிகளும் சொற்பொழிவுகளும் முழுமையாகத் தொகுக்கப்பெற்று மலர்களாக வெளியிடப் பெற்றன. முதல் மாநாட்டு மலர் அடுத்த ஆண்டு மாநாட்டில் அனைவருக்கும் வழங்கப்பெற்றது. இப்படிப் பதினோரு மலர்கள் வெளிவந்தன. ஒன்பது மலர்கள் எமக்குக் கிடைத்து எமது நூலகத்திலுள்ளன. இம்மலர்களே ஒரு களஞ்சியம். பற்பல அரிய செய்திகளும் விளக்கங்களும் இம்மலர்களால் அறியப்பெறுகின்றன. இம்மாநாடுகள் சிலவற்றை யாம் கண்டும் கேட்டும் பயன்பெற்றது இன்றும் நினைவிலுள்ளது.

இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்
(23.09.1967 - 07.04.1983)

இவர்கள் கோயம்புத்தூருக்கு அருகிலுள்ள பேரூரில் பரம்பரைச் சைவமுதலியார் குடும்பத்திற் பிறந்தவர்கள். இயற்பெயர் சுப்பிரமணி. கோவை. சி. கே. சுப்பிரமணிய முதலியாரின் தூரத்து உறவினர். இவர்கள் காலத்தில் 15.07.1970-இல் திருவிடைமருதூர்க் கோயில் குடநீராட்டும், 27.08.1972-இல் திருவாவடுதுறைக் கோயில் குடநீராட்டும் சிறப்பாக நிகழ்ந்தன. **திருவிடைமருதூரில்** ஆண்டுதோறும்

மூன்று நாள்கள் **திருமுறைக் கருத்தரங்கம்** நடத்தப்பெற்றது. 1971 பிப்ரவரி 12;13;14 மூன்று நாளிலும் நிகழ்ந்த கருத்தரங்கத்தின் உரைகள் " திருவிடைமருதூர் திருமுறைக் கருத்தரங்கம் 1971 - கருத்தரங்க ஆய்வுரைகள், தொகுதி I" என 1973-ஆம் ஆண்டில் திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்கப் பெருமான் திருக்கோயில் வெளியீடாக வெளியிடப் பெற்றது. 18.01.1979-இல் நிகழ்ந்த கருத்தரங்கில் இந்தியப் பிரதம அமைச்சர் **மொரார்ஜிதேசாய்,** தமிழக முதலமைச்சர் **எம்.ஜி. இராமச்சந்திரன்** இருவரும் கலந்துகொண்டனர்.

இப்போது 23-ஆம் பட்டம் குருமகாசந்நிதானமாகத் திகழும் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் 1979-இல் ஆதீனத்திற்கு வந்துசேர்ந்து தம்பிரானாகி 1980-இல் இளவரசாக நியமிக்கப்பெற்றார்கள். ஆதீனத் **திங்களிதழ் " மெய்கண்டார் "** 12.12.1982-இல் இளவரசின் ஆலோசனையின்பேரில் தொடங்கப் பெற்றது. தம் காலத்திலேயே இளவரசை நியமித்து மன நிறைவு பெற்ற அம்பலவாணதேசிக குருமூர்த்திகள் 07.04.1983-இல் சிவப் பேறடைந்தார்கள். இவர்களிடம் நமக்கு நன்கு பழக்க முண்டு.

இவர்கள் சிவப்பேறடைந்தபின், இளவரசுப் பட்டத்தி லிருந்த சுவாமிகள் 07.04.1983-இல் 23-ஆவது குருமகா சந்நிதானமாகப் பட்டமேற்று அருளாட்சி செய்து வருகி றார்கள். இவர்களது வரலாற்றையும் பணிகளையும் பின்னர்க் காண்போம்.

திருவாவடுதுறை ஆதீனப் பண்டார சாத்திரங்கள்

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு.

உந்தி [1] களிறு [2] உயர்போதம் [3] சித்தியார் [4]
பிந்திருபா [5] உண்மை [6] பிரகாசம் [7] - வந்த அருட்
பண்பு [8] வினா [9] போற்றி [10] கொடி [11] பாசமிலா நெஞ்சுவிடு [12]
உண்மை நெறி [13] சங்கற்ப [14] முற்று.

என்னும் வெண்பா சித்தாந்த சாத்திரம் பதினான்கின் பெயர்களையும் கூறுகிறது.

1. திருஉந்தியார்
2. திருக்களிற்றுப்படியார்
3. சிவஞானபோதம்
4. சிவஞானசித்தியார்
5. இருபா இருஃபது
6. உண்மை விளக்கம்
7. சிவப்பிரகாசம்
8. திருஅருட்பயன்
9. வினா வெண்பா
10. போற்றிப் பஃறொடை
11. கொடிக்கவி
12. நெஞ்சுவிடுதூது
13. உண்மைநெறிவிளக்கம்
14. சங்கற்ப நிராகரணம்

இப்பதினான்கையும் சித்தாந்த சாத்திரங்கள் என வழங்குவதைப் போன்று மெய்கண்ட சாத்திரங்கள் என்றும் வழங்குவதுண்டு. சித்தாந்தத்தைக் கூறுவதனால் சித்தாந்த சாத்திரங்கள் எனப் பெயர்பெற்றன. மெய்கண்டார் முதலிய ஆசிரியர்களால் செய்யப் பெற்றதால் மெய்கண்ட சாத்திரங்கள் எனப் பெயர் பெற்றன. சித்தாந்த சாத்திரம் என்பது நுதலிய பொருளாற் பெற்ற பெயர். மெய்கண்ட சாத்திரம் என்பது செய்த ஆசிரிய மரபாற் பெற்ற பெயர்.

சித்தாந்த சாத்திரம் 14-இல் முதலில் வைக்கப் பெற்றுள்ள திருஉந்தியார், திருக்களிற்றுப்படியார் என்னும் இரண்டும் மெய்கண்டார் காலத்துக்கு முந்தியன, சிவஞான போதத்திற்கு முந்தியன.

1. திருவுந்தியார் - திருவியலூர் உய்யவந்ததேவரால் செய்யப் பெற்றது.
2. திருக்களிற்றுப்படியார் - திருக்கடவூர் உய்யவந்த தேவரால் செய்யப்பெற்றது.

இவ்விரண்டின் ஆசிரியர் பெயர் ஒன்றாக இருந்தபோதிலும் இவர் வேறு, அவர் வேறு. ஒருவர் திருவியலூர். மற்றொருவர் திருக்கடவூர். முந்திய உய்யவந்ததேவர் திருவியலூர். பிந்திய உய்யவந்ததேவர் திருக்கடவூர். ஒரே பெயரால் ஆள் மாறாட் டம் தோன்றாதிருக்க இருவருக்கும் ஊர்ப்பெயரைச் சேர்த்துப் பெயர் வழங்கப்பெற்றது.

3. சிவஞானபோதம் - மெய்கண்டதேவர் அருளிச் செய்தது
4. சிவஞானசித்தியார், 5. இருபது இருபஃது - இவ்விரண்டும் மெய்கண்டாரின் மாணவர் அருணந்திசிவாசாரியர் அருளியவை.

6. உண்மைவிளக்கம் - திருவதிகை மனவாசகங் கடந்தார் அருளியது. இவர் மெய்கண்டாரின் மற்றொரு மாணவர்.

7.சிவப்பிரகாசம்	சிவப்பிரகாசம் முதலாகச் சங்கற்ப நிராகரணம் ஈறாக உள்ள 8 நூல்களும் சித்தாந்த அட்டகம் என்றொரு தொகைப் பெயராலும் வழங்கப் பெறும். இவ்வெட்டு நூல்களும் மறைஞான சம்பந்தரின் மாணவர் உமாபதி சிவாசாரியரால் செய்யப் பெற்றவை.
8. திருவருட்பயன்	
9. வினாவெண்பா	
10. போற்றிப் பஃறொடை	
11. கொடிக்கவி	
12. நெஞ்சுவிடுதூது	
13. உண்மைநெறி விளக்கம்	
14. சங்கற்ப நிராகரணம்	

சைவ சித்தாந்த சாத்திரங்கள் (மெய்கண்ட சாத்திரங்கள்) பதினான்கு என்பதைப் போலத் திருவாவடுதுறை ஆதீனத்தில் **பண்டாரசாத்திரம் பதினான்கு** உண்டு. சித்தாந்த சாத்திரங்கள் 14. பண்டார சாத்திரங்கள் 14. அதுவும் பதினான்கு. இதுவும் பதினான்கு. அதைக்கொண்டுதான் இது அமைத்துக்கொள்ளப் பெற்றது. சித்தாந்த சாத்திரம் பதினான்கின் பெயரையும் கூறுவதற்கு ஒரு பாடல் (வெண்பா) செய்யப்பெற்றது போலப் பண்டாரசாத்திரங்கள் பதினான்கின் பெயரையும் கூறுவதற்கு ஒரு பாடல் (விருத்தம்) செய்யப் பெற்றுள்ளது.

தரசமயத் தசகாரி யங்கள் மூன்று
சன்மார்க்க சித்திசிவாச் சிரமத் தேற்றம்
பரசமயப் பற்றொழிபஃ றொடைகள் மூன்று
பகருஞ்சித் தாந்தசிகா மணிய தொன்று
முரசமையச் சித்தாந்த வுபாய நிட்டை
முயல்நிட்டை விளக்குமுப தேச வெண்பா
அரசமயத் ததிசயமைந் தெழுத்தின் மாலை
அருள்தருமெய்ப் **பண்டார நூல்க ளாமே.**

என்னும் பாடல் பண்டார சாத்திரம் பதினான்கின் பெயரையும் கூறுகிறது.

பண்டாரங்களால் செய்யப்பெற்ற சாத்திர நூல்கள் பண்டார சாத்திரங்கள் எனப் பெயர் பெற்றன. சைவத்

துறவிகள் பண்டாரம் என வழங்கப் பெறுவர். சைவ மடங்களின் தலைவர்கள் '' பண்டார சந்நிதி '', '' பண்டார சந்நிதிகள் '' என வழங்கப்பெறுவர். குருமகாசந்நிதானம் என்பது பிற்கால வழக்கு. பண்டாரம், பண்டார சந்நிதி, பண்டார சந்நிதிகள் என்பதே பழைய வழக்கு. '' பண்டார மும்மணிக் கோவை '' என்ற நூற்பெயரை எண்ணுக. பண்டாரம் - பண்டக சாலை, கருவூலம். இவ்விடத்தில் ஞானக் கருவூலம். ஆதீன குருமகாசந்நிதானங்களாகிய பண்டார சந்நிதிகள் அருளிய ஞானக்கருவூலங்கள் பண்டார சாத்திரங்கள் எனப் பெயர் பெற்றன.

டாக்டர் பட்டம் பெற்றவர்களை ''முனைவர்'' என்று இப்போது வழங்குகிறோம். சில காலத்துக்குமுன் ''பண்டாரகர்'' என்று வழங்கும் வழக்கம் இருந்தது. பின்னர் அது தவிர்ந்து போயிற்று. ''முனைவர்'' வந்ததும் ''பண்டாரகர்'' போயிற்று. ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற்றவர்களே பண்டாரகர் என்றால், மூலங்களைச் செய்த பண்டார சந்நிதிகள் பண்டாரகர்கள் அல்லவா? மடம் பல்கலைக் கழகம் போன்றது என்றால், மடாதிபதிகள், மடத்துப் புலவர்கள், குறிப்பாக அவர்களுள் நூல் செய்தவர்கள் அந்நாளைய டாக்டர்கள், பி.எச்.டி.க்கள் அல்லவா? இலக்கியம் தத்துவம் ஆகிய இரண்டிலுமே அவர்களுக்கு டாக்டர் பட்டம் அளிக்கலாம். டாக்டர் ஆப் பிலாசபி, டாக்டர் ஆப் லிட்டரேச்சர் ஆகிய இரண்டுக்குமே அவர்கள் தகுதி மிகுதியும் உடையர்.

இனித் திருவாவடுதுறை ஆதீனப் பண்டார சாத்திரங்களுக்கு வருவோம்.

தசகாரியங்கள் 3
சன்மார்க்க சித்தியார்
சிவாச்சிரமத் தெளிவு
பஃறொடைகள் 3
சித்தாந்த சிகாமணி
உபாயநிட்டை வெண்பா
நிட்டை விளக்கம்

உபதேச வெண்பா
அதிசயமாலை
நமச்சிவாய மாலை

என்ற வரிசையில் பண்டார சாத்திரங்களை மேற்பாடல் கூறுகிறது. இவ்வரிசை கால வரிசையுமன்று. ஒருவாறு பொருள்வரிசை எனலாம். தசகாரியம் என்ற பெயரில் மூன்று நூல்கள் உள்ளன. வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு ஆசிரியராற் செய்யப்பெற்றவை. பெயரொற்றுமை கருதிப் பாடலில் தொகுத்துக் கூறப்பெற்றது.

தசகாரியம் மூன்று என்பது, அம்பலவாணதேசிகர் செய்த தசகாரியம், தட்சிணாமூர்த்திதேசிகர் செய்த தசகாரியம், சுவாமிநாததேசிகர் செய்த தசகாரியம் ஆகிய மூன்று. இம்மூன்றும் அவரவர் பெயரால் அம்பலவாண தேசிகர் தசகாரியம், தட்சிணாமூர்த்திதேசிகர் தசகாரியம், சுவாமிநாததேசிகர் தசகாரியம் என வழங்கும். இவ்வாறே பஃறொடை மூன்றும் மூன்று வெவ்வேறு ஆசிரியரால் செய்யப்பெற்றவை. ஆதலின் பாடல்கூறும் வரிசையை விடுத்துக், காலவரிசையிலும் ஆசிரியர் வரிசையிலும் பண்டார சாத்திரங்களைக் காண்போம்.

1. அம்பலவாணதேசிகர் தசகாரியம்
2. சன்மார்க்க சித்தியார்
3. சிவாச்சிரமத் தெளிவு
4. சித்தாந்தப் பஃறொடை
5. சித்தாந்த சிகாமணி
6. உபாயநிட்டை வெணபா
7. நிட்டை விளக்கம்
8. உபதேச வெண்பா
9. அதிசய மாலை
10. நமச்சிவாய மாலை

இவை பத்தும் மூன்றாம் பட்டம் அம்பலவாணதேசிகர் செய்தவை.

11. தட்சிணாமூர்த்திதேசிகர் தசகாரியம் 12. உபதேசப் பஃறொடை

இவை இரண்டும் தட்சிணாமூர்த்தி தேசிக ர் செய்தவை .

அம்பலவாணதேசிகரும் தட்சிணாமூர்த்திதேசிகரும் ஏக காலத்தில் உபதேசம் பெற்றதைப்போன்றே ஏக காலத்தில் நூல்களைச் செய்யத் தொடங்கிச் செய்தார்கள். அம்பலவாணர் பட்டத்திற்கு வருமுன்பே, தட்சிணாமூர்த்திகள் முத்திபெற்று விட்டார். பின்னாளில் பட்டத்திற்கு வரும் வாய்ப்பு நேர வில்லை. பட்டத்தில் இருந்த சிறப்பைக் கருதி அம்பலவாணரின் நூல்கள் முதலில் வைக்கப்பெற்றன.

13. சுவாமிநாததேசிகர் தசகாரியம் — இது 8-ஆம் பட்டம் மாசிலாமணி தேசிகர் காலத்தில் அவரால் சங்காபிஷேகமும் ஈசானதேசிகர் என்ற தீட்சா திருநாமமும் பெற்றுத் திருதீயகுரவராய்த் திகழ்ந்த சுவாமிநாததேசிகர் செய்தது.

14. பஞ்சாக்கரப் பஃறொடை — 10-ஆம் பட்டம் வேலப்பதேசிகர் காலத்தில் துவிதீய பட்டத்தில் இளவரசாக விளங்கிய பேரூர் வேலப்ப தேசிகர் செய்தது.

பாஷண்ட நிராகரணம், அநுபோகவெண்பா, ஞானத் தாராட்டு, (தாராட்டு - தாலாட்டு), உற்சவவிளக்கம், முத்தி பஞ்சாக்கரமாலை என்ற ஐந்து நூல்களையும் கூடப் பண்டார சாத்திரம் பதினான்குடன் சேர்த்து வழங்குவதும் உண்டு.

பண்டாரசாத்திரங்கள் பதினான்கில் மூன்று நூல்கள் தசகாரியமாக இருத்தலின் ''**தசகாரியம்**'' என்பதைப் பற்றி மட்டும் ஒரு குறிப்பைக்கூறி இப்பகுதியை நிறைவு செய்வோம்.

தசகாரியம் என்பதில் தசம் - பத்து; காரியம் - செயல். தசகாரியம் என்பன 10 செயல்கள். அவையாவன:

1. தத்துவ ரூபம் 2. தத்துவ தரிசனம் 3. தத்துவ சுத்தி
4. ஆன்ம ரூபம் 5. ஆன்ம தரிசனம் 6. ஆன்ம சுத்தி
7. சிவ ரூபம் 8. சிவ தரிசனம் 9. சிவயோகம்
10. சிவபோகம்

தத்துவம், ஆன்மா, சிவம் எனப் பொருள்கள் மூன்று. ரூபம், தரிசனம், சுத்தி என அனுபவநிலைகள் மூன்று, ஆக 3×3= 9. சிவத்தில் மட்டும் சிவசுத்தி என்று சொல்லப்பெறாது அவ்விடத்தில் சிவயோகம் என்று சொல்லப்பெறும். இவ்வொன்பதின் பயனாகப் பத்தாவது சிவபோகம் (சிவானுபவம்).

ரூபம் - தரிசனம் - சுத்தி - யோகம் - போகம் - என ஐந்து அனுபவ நிலைகளும் பத்தாகத் திகழ்வது தசகாரியம்.

தசகாரியம் பற்றி ஒன்றுக்கு மூன்றாக மூன்று நூல்கள் செய்யப்பெற்றுள்ளன. பண்டாரசாத்திரம் 14-இல் 3 நூல்கள் தசகாரியங்கள்.

அம்பலவாணதேசிகர் தசகாரியம்
தட்சிணாமூர்த்திதேசிகர் தசகாரியம்
சுவாமிநாததேசிகர் தசகாரியம்

ஒன்றுக்கு மூன்றாக மூன்று தேசிகர்கள் தசகாரிய நூல் செய்துள்ளனர். சைவ சித்தாந்த நூல்கள் பலவற்றுள்ளும் தசகாரியம் கூறப்பெறும். **சித்தாந்த தசகாரியக் கட்டளை** என்றே ஒரு கட்டளை நூல்(உரைநடைச் சிறுநூல்) உண்டு. **தசகாரியம் என்பது சைவத்தில் மிகவும் முக்கியமான ஒன்று.** தசகாரியம் பற்றி ஒரு தனிநூலே எழுதலாம், எழுத வேண்டும். கட்டுரையாயின் பெருங்கட்டுரையாகவும் நூலாயின் சிறு நூலாகவும் அமையும்.

திருவாவடுதுறை ஆதீனக் கோயில்கள்

கோயில்களும் மடங்களும்

கோயில்களும் மடங்களும் மிகுந்த தமிழ்நாடு என்ற பகுதியைக் காண்க(பக்கம் 37). மிகப் பழங்காலத்தில் மரங்களின் நிழலே கோயில்களாகத் திகழ்ந்தன. மரத்தடியில் மக்கள் தெய்வ வழிபாடு செய்தார்கள். தெய்வத் திருமேனிகளை வைத்து வழிபட்டார்கள். தல விருட்சங்கள் உண்டான வரலாறு இதுவே. விருட்சங்களே, அவற்றின் அடி நிழலே, தலமாக இருந்தன. பின்பு மண்ணாற் கோயில்கள் கட்டப்பெற்றன. கால அடைவில் மட்கோயில்கள் அழியும் நிலை உண்டாகவே அவற்றைச் செங்கற்கோயில்களாக மன்னர்கள் புதுப்பித்தார்கள். புதிதாக செங்கற் கோயில்களையும் கட்டினார்கள். பின் ஒரு காலத்தில் செங்கற் கோயில்க ளெல்லாம் கருங்கற்கோயில்களாக மாற்றப்பெற்றன. புதிய கருங்கற்கோயில்களும் கட்டப்பெற்றன. இன்றுள்ள பெரிய பெரிய கருங்கற் கோயில்களை மன்னர்களே கட்டினார்கள்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரும் சோழப் பெருவேந்தருமாகிய கோச்செங்கட்சோழ மன்னர்

சிவபெருமானுக்கு எழுபது கோயில்களைக் கட்டினார் என்பது வரலாறு.

இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோ ளீசற்கு
எழில்மாடம் எழுபதுசெய் துலகாண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே.

என்று திருமங்கையாழ்வார் பாடுகின்றார்(நாலாயிரம் 1505)

கோயில்களைக் கட்டிய மன்னர்கள் அவற்றிற்கு ஏராளமான சொத்துகளை - நிலங்களை - எழுதிவைத்தார்கள். தங்கள் ஆட்சியிலேயே கோயில்களை நிர்வகித்தார்கள். மடங்கள் தோன்றிய பின்னர் கோயில்கள் பலவற்றின் ஆட்சியை அக்காலத்தில் ஆண்ட மன்னர்கள் மடாதிபதிகளிடம் ஒப்படைத்தார்கள். நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான கோயில்களில் ஏறத்தாழ நூறு கோயில்கள் வரை இவ்வாறு ஆதீனங்களின் ஆட்சிக்கு வந்தன.

திருவாவடுதுறை ஆதீனத்தின் ஆட்சியிலுள்ள கோயில்கள் இருபது. தருமபுர ஆதீன ஆட்சியிலுள்ளவை இருபத்தேழு. மதுரையாதீனத்தில் நான்கு. குன்றக்குடிக்கு ஐந்து. வேளாக் குறிச்சி ஆதீனத்தில் நான்கு. வரணி ஆதீனத்தில் ஒன்று. சைவ மடங்களைப் போன்றே வைணவ மடங்களின் ஆட்சியிலும் சில பல கோயில்கள் உண்டு.

திருவாவடுதுறை ஆதீனக் கோயில்கள்

தேவாரப் பாடல் பெற்ற திருக்கோயில்கள் ஒன்பது, திருவாசகத் தலம் ஒன்று, ஏனைய பெருங்கோயில்கள் சிறுகோயில்கள் பத்து, ஆக இருபது கோயில்கள் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமாக அதன் ஆட்சியில் உள்ளன.

தேவாரப் பாடல்பெற்ற திருக்கோயில்கள் 9

1. திருஆவடுதுறை
2. திருஇடைமருதூர்
3. மயிலாடுதுறை

4. திருவீழிமிழலை
5. பழமண்ணிப்படிக்கரை
6. திருமாந்துறை
7. திருமங்கலக்குடி
8. திருநீலக்குடி
9. திருநல்லூர்

திருவாசகத்தலம் 1

1. திருப்பெருந்துறை

ஏனைய பெருங்கோயில்கள் சிறுகோயில்கள் 10

1. சூரியனார்கோயில்
2. வாணாபுரம்
3. தென்திருவாலங்காடு
4. அட்சயநாதசுவாமி திருக்கோயில், நரசிங்கன்பேட்டை
5. சுயம்புநாதசுவாமி திருக்கோயில், நரசிங்கன்பேட்டை
6. கஸ்தூரியம்மன் திருக்கோயில், நரசிங்கன்பேட்டை
7. விஸ்வநாதசுவாமி திருக்கோயில், கரைகண்டம்
8. சோமநாதசுவாமி திருக்கோயில், ஆறுமுகனேரி
9. சந்திவிநாயகர் திருக்கோயில், திருநெல்வேலி
10. சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், குறுக்குத்துறை.

இவ்விருபது கோயில்களின் வரலாற்றை விரிவாகக்கூற இந்நூலில் இடம் போதாது. ஆதலின் முக்கிய செய்திகள் சிலவற்றை மட்டும் குறிப்பிடுவோம்.

1. திருஆவடுதுறை

சம்பந்தர் அப்பர் சுந்தரர் மூவராலும் பாடப்பெற்றது. ஞானசம்பந்தருக்கு இறைவன் 1000 பொன் பொற்கிழி அளித்தது, திருமாளிகைத்தேவர் தவமிருந்தது, அவர் சமாதியுள்ளது. திருமூலர் தவஞ்செய்தது, திருமந்திரம் பாடியது. பழைமையான பெருங்கோயில். கோயிலும் ஆதீனமும் ஒன்றைஒன்று அடுத்து அமைந்துள்ளன. இரண்டுக்கும் இடையில் ஒரு சந்து. ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குச் செல்ல வழி உண்டு.

2. திருஇடைமருதூர்

மயிலாடுதுறை - கும்பகோணம் பேருந்துச்சாலையில் உள்ளது. மயிலாடுதுறை - கும்பகோணம் இருப்புப் பாதையில் ஒரு நிலையமாகவும் உள்ளது. அருகிலுள்ள பெரிய தலம் கும்பகோணம். மருதமரம் தலமரமாகையால் மருதூர் எனப் பெயர் பெற்றது. தலைமருது, இடைமருது, கடைமருது என மூன்று மருதூர்கள். அவற்றுள் இது இடைமருது. வடக்கே ஆந்திரத்தில் உள்ள ஸ்ரீசைலம்(மல்லிகார்ச்சுனம்) தலைமருது. தெற்கே திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்திற்கு அருகிலுள்ள திருப்புடைமருதூர்(புடார்ச்சுனம்) கடைமருது. இவ்விரண்டுக்கும் இடையே உள்ள திருவிடைமருதூர் இடைமருது(மத்தியார்ச்சுனம்). அர்ச்சுனம் - மருதமரம்.

மூவர் தேவாரமும் பெற்ற தலம். கருவூர்த்தேவர், மாணிக்கவாசகர், பட்டினத்தார் ஆகியோராலும் பாடப் பெற்ற தலம். கிழக்குக் கோபுர வாயிலில் பட்டினத்தாரும் மேற்கு வாயிலில் பத்திரகிரி(பர்த்ருஹரி)யாரும் தவமிருந்தனர். தைப்பூசவிழா(காவிரியில் ஐராவணத் துறையில் தீர்த்தவாரி) மிகச் சிறப்பு.

இத்தலத்தைச் சுற்றியுள்ள ஒன்பது பெருந்தலங்கள் இதன் பரிவாரத் தலங்களாகக் கொள்ளப்பெறுவது இதன் தனிச்சிறப்பு.

1. திருவலஞ்சுழி - விநாயகர்
2. சுவாமிமலை - முருகன்
3. தில்லை(சிதம்பரம்) - நடராசர்
4. சூரியனார்கோயில் - நவக்கிரகம்
5. ஆலங்குடி - தட்சிணாமூர்த்தி
6. சீர்காழி - பைரவர்
7. திருவாவடுதுறை - நந்தி
8. திருவாரூர் - சோமாஸ்கந்தர்
9. திருவாய்ப்பாடி - சண்டேஸ்வரர்

திருவலஞ்சுழியில் விநாயகர் சிறப்பு. திருவலஞ்சுழி, திருவிடைமருதூருக்குப் பரிவார விநாயகர் தலமாகக்

கொள்ளப்பெறுகிறது. சுவாமிமலை முருகன் தலம். அது திருவிடைமருதூருக்குப் பரிவார முருகன் தலமாகக் கொள்ளப் பெறுகிறது. தில்லை(சிதம்பரம்) நடராசத்தலம். அது திருவிடைமருதூருக்குப் பரிவார நடராசத் தலமாகக் கொள்ளப் பெறுகிறது. இப்படியே சூரியனார்கோயில், ஆலங்குடி, சீர்காழி, திருவாவடுதுறை, திருவாரூர், திருஆய்ப்பாடி ஆகிய தலங்கள் முறையே பரிவார நவக்கிரகம், தட்சிணாமூர்த்தி, பைரவர், நந்தி, சோமாஸ் கந்தர், சண்டேஸ்வரர் தலங்களாகக் கொள்ளப் பெறுகின்றன. சுவாமிமலை, சிதம்பரம், சீர்காழி, திருவாவடுதுறை, திருவாரூர் முதலிய பெருந்தலங்கள் திருவிடைமருதூருக்குப் பரிவாரத் தலங்களாகப் கொள்ளப் பெறுகின்றன, அவற்றுக்கெல்லாம் இடைமருது மூலமூர்த்தி என்றால், திருவிடைமருதூர் இத்திறத்தில் எவ்வளவு பெருஞ்சிறப்பு வாய்ந்தது என்பதை உணரலாம். மகாலிங்கம், மகாலிங்கேஸ்வரர் எனத் திருவிடைமருதூர்ப் பெருமானுக்குப் பெயர் வந்ததும் இச்சிறப்பினாலேயே. இவ்வளவு சிறப்பு வாய்ந்த தலம், மிகப்பெரிய கோயில், திருவாவடுதுறை ஆதீனக்கோயில் என்றால் ஆதீனத்தின் சிறப்பைக் கூறவும் வேண்டுமோ?

3. மயிலாடுதுறை

இருப்புப்பாதைச் சந்திப்பு நிலையம்(ரயில்வே ஜங்ஷன்). மிகப் பெரிய கோயில். சம்பந்தர் அப்பர் இருவராலும் பாடப்பெற்றது. கோயில் திருவாவடுதுறை ஆதீனத்திற்கும் கோயிலுக்குள் உள்ள முருகன் சந்நிதி(குமரக் கட்டளை) மட்டும் தருமபுர ஆதீனத்திற்கும் உரியது. கோயில் ஓர் ஆதீனத்திற்கும் அதன் ஒரு சந்நிதி மட்டும் வேறோர் ஆதீனத்திற்கும் உரியதாக இருப்பது வியப்பல்லவா? வேற்றுமையில் ஒற்றுமை. மயிலாடுதுறையின் ஒரு பகுதி என்றே சொல்லும்படியாக அதனை ஒட்டினாற்போல் அடுத்திருப்பதுதான் தருமபுரம். புகழ்பெற்ற தருமபுர ஆதீனம் அங்குள்ளது.

4. திருவீழிமிழலை

வீழிச்செடிகள் நிறைந்ததால், அது தலமரம் ஆனதால், வீழிமிழலை என்று பெயர். சம்பந்தர், அப்பர், சுந்தரர் - மூவராலும் பாடப்பெற்ற மிகப்பெரிய கோயில். சம்பந்தரும் அப்பரும் சேர்ந்து தலயாத்திரை செய்தபோது இத்தலத்தில் தங்கிப் பஞ்ச நிவாரணப்பணி செய்தனர். இவர்களது பஞ்ச நிவாரணப் பணிக்காக, அன்னம்பாலிப்புப் பணிக்காக, வீழிமிழலை இறைவன் இவ்விருவர்க்கும் படிக்காசு அளித்தார். பசித்தோரெல்லாரும் புசிக்க வருக என வாயாற் சொல்லி அழைத்தும் ஆங்காங்கே பறைசாற்றி அழைத்தும் சோறிட்டுப் பஞ்சந்தீர்த்தனர் சம்பந்தரும், அப்பரும்.

வீழிமிழலைக் கோயிலின் விமானம் "விண்ணிழி விமானம்". திருமாலால் விண்ணின்றும் இறக்கப்பெற்றது. திருமால் சக்கரப்பேறு பெற்ற தலம். சிவபிரானை ஆயிரம் தாமரையால் அர்ச்சிக்கும் திருமால் ஒரு நாள் ஒரு பூக்குறையத் தன் கண்ணையே பெயர்த்து அர்ச்சித்துச் சக்கரம் பெற்றார் என்பது வரலாறு. இக்கோயிலில் உள்ள ஓர் மண்டபம், வௌவால் நத்தி மண்டபம் எனப் பெயருடையது, மிகவும் வேலைப்பாடு மிக்கது.

5. பழமண்ணிப்படிக்கரை

மயிலாடுதுறை வட்டத்தில் வைத்தீஸ்வரன் கோயிலுக்குச் சற்று தொலைவில் உள்ளது. இப்போது இலுப்பைப்பட்டு என்று வழங்குகிறது. இலுப்பை - தலமரம். சுந்தரர் பாடியது.

6. திருமாந்துறை

திருமாந்துறை என்ற பெயரில் இரண்டு தலங்கள் உள்ளன. ஒன்று தஞ்சாவூர் மாவட்டம் திருமங்கலக்குடிக்கு அண்மையில் உள்ளது. சம்பந்தர் வழிபட்டுப் பாடியதாகச் சேக்கிழார் குறிப்பிடுகிறார். ஆனால் பதிகம் கிடைக்க வில்லை. இம்மாந்துறையே திருவாவடுதுறை ஆதீன ஆட்சியிலுள்ளது. இன்னொரு மாந்துறை திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடி வாளாடி ஊர்களுக்கு அண்மையில்

உள்ளது. சம்பந்தர் பாடியது. பதிகம் கிடைத்துள்ளது. பதிகம் கிடைக்காததும் திருவாவடுதுறை ஆதீன ஆட்சியுலுள்ளதுமான மாந்துறை வைப்புத் தலங்களின் பட்டியலில் சேர்ந்துள்ளது.

7. திருமங்கலக்குடி

சம்பந்தரும் அப்பரும் பாடியது. சூரியனார்கோயில் அருகில் உள்ளது. தலமரம் வெள்ளெருக்கு.

8. திருநீலக்குடி

கும்பகோணத்திற்கு அருகிலுள்ளது. அப்பர் பாடல் பெற்றது. இப்போது வழங்கும் பெயர் தென்னலக்குடி. திருநீலக்குடி என்பதன் திரிபு.

9. திருநல்லூர்

கும்பகோணம் தஞ்சாவூர் சாலையில் சுந்தரப்பெருமாள் கோயில் என்னும் ஊருக்கு அருகிலுள்ளது. சம்பந்தர் அப்பர் பாடல்பெற்றது. அப்பருக்கு(திருநாவுக்கரசருக்கு) இறைவன் திருவடிதீக்கை செய்தருளிய தலம். ''நனைந்தனைய திருவடி என் தலை மேல் வைத்தார் நல்லூர் எம்பெருமானார் நல்லவாறே'' என்பது திருநாவுக்கரசர் தேவாரத் திருவாக்கு. நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவராகிய அமர்நீதி நாயனாரை ஆட்கொண்டருளிய தலம்.

10. திருப்பெருந்துறை

தேவார வைப்புத்தலம். திருவாசகத்தலம். பாண்டிய நாட்டில் மிழலைக் கூற்றத்தில் வெள்ளாற்றங்கரையில், இன்றைய புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கிக்கு அண்மையில் உள்ளது. குதிரை வாங்கச் சென்ற அமைச்சர் திருவாதவூரரை இறைவன் குருவாக வந்து குருந்த மரத் தடியில் ஆட்கொண்டருளிய தலம். அமைச்சர் வாதவூரர், அடியார் மாணிக்கவாசகராக மாறியதலம். மாணிக்கவாசகர் கட்டிய கோயில். திருவாசகப் பதிகங்கள் ஐம்பத்தொன்றில் இருபது பதிகங்கள் பாடப்பெற்ற இடம்.

ஊர்: பெருந்துறை (திருப்பெருந்துறை). *கோயில்:* ஆவுடையார்கோயில். கோயிற் பெயரே இன்று ஊர்ப் பெயராக விளங்குகிறது. திருப்பெருந்துறை என்பதைவிட ஆவுடையார்கோயில் என்பதே இன்று பெருவழக்காக உள்ளது.

பெருந்துறைக் கோயிலில் லிங்கம் இல்லை. ஆவுடையார் (பீடம்) மட்டுமே உண்டு. அதனால் ஆவுடையார்கோயில் எனப் பெயர்பெற்றது பொருத்தமே. இறைவனும் இறைவியும் இங்கு உருவமின்றி அருவ வடிவிலேயே எழுந்தருளியுள்ளனர். ஏனைய கோயில்களின் அமைப்பினின்றும் இக்கோயில் அமைப்பு பெரிதும் மாறுபட்டது. வழிபாட்டு முறைகளும் வேறுபட்டது. இக்கோயிலில் கொடிமரம் இல்லை, பலிபீடம் இல்லை, நந்தி இல்லை. விநாயகர், முருகன், நடராசர் மட்டுமே உண்டு. ஏனைய பரிவார மூர்த்தங்கள் இல்லை. இக்கோயில் முழுவதும் தத்துவ அமைப்பு.

இக்கோயிலில் ஆறு சபைகள் உண்டு.

1. ஆனந்த சபை - இது கர்ப்பக்கிருகம்(கருவறை)
2. சித்சபை - அர்த்த மண்டபம்
3. சத்சபை - நிவேதன மண்டபம், அமுது மண்டபம்
4. தேவசபை - யாவரும் நின்று தரிசனம் செய்யும் இடம்
5. நிருத்தசபை - இரண்டாம் திருச்சுற்று சந்நிதி மண்டபம்
6. கனகசபை - மூன்றாம் திருச்சுற்று சந்நிதி மண்டபம்

சந்நிதியில் நின்று தரிசிக்கும் நம் நிழல் கருவறையில் உள்ள ஆவுடையாரின்மீது(பீடத்தின்மீது) விழும். கோயிலின் வெளி வாயிலில் நின்றாலே, வாயிலின் வழியாகச் சென்றாலே, நம் நிழல் கருவறையில் விழுவதைக் காணலாம்.

ஏனைய கோயில்களிலெல்லாம் பச்சரிசிச் சோறே படைப்பு. இங்கு புழுங்கலரிசிச் சோறு படைப்பு. அதுவும் சோறு படைப்பன்று; சோற்று ஆவிதான் படைப்பு. அர்த்தமண்டபத்திற்கு வெளியே உள்ள அமுது மண்டபம் எனும் நிவேதன மண்டபத்தில் சந்நிதிக்கு எதிரே உள்ள

நீண்டசதுரப் படைகல்லில் சோறு பரவலாகக் கொட்டப் பெறும். பானைகளிலிருந்தே கைபடாமல் சூடாகக் கொட்டப் பெறும். சோற்றிலிருந்து அதிக அளவில் ஆவி எழுந்து மண்டபம் முழுவதுமே புகைமயமாகக் காணப்பெறும். அச் சோற்றாவியே ஆத்ம நாதருக்கு நைவேத்தியம். அரைக்கீரைச் சுண்டலும் பாகற்காய்ப் புளிங்கறியும் நைவேத்தியம். இத்தகைய நைவேத்தியங்கள் வேறு எக்கோயிலிலும் இல்லை. இவை இத்தலத்திற்கே உரிய தனிச்சிறப்பு.

இங்கு எல்லாமே தத்துவமயம், ஞானமயம். கலாத்துவா ஐந்தையும் குறிக்கும் வகையில் கலாதீபங்கள் ஐந்து, மந்திராத்துவா பதினொன்றுக்கும் மந்திரதீபங்கள் பதினொன்று, இவ்வாறே புவனதீபங்கள் 204, வர்ண தீபங்கள் 51, பததீபங்கள் 81, தத்துவதீபங்கள் 36, நட்சத்திர தீபங்கள் 27, சூரிய சந்திர அக்கினி தீபங்கள் 3 என்று கோயிலெங்கும் அங்கங்கே தீப மயமாகவே இருக்கும்.

சுவாமி ஆத்மநாதரைத் தரிசிக்க நேர்வாயில் வழியாகப் புகுவதில்லை. பக்கங்களில் உள்ள வாயில்களின் வழியாகவே செல்வதும் மீள்வதும் மரபு. அம்பிகை சிவயோக நாயகியைத் தரிசிப்பதும் கற்பலகணி வாயிலாகவே.

மேளம் முதலிய வாத்தியங்கள் வாசிப்பது வழக்கமில்லை. சின்னம், சங்கு, மணி ஓசைகளே இங்கு கேட்கப்படும்.

வாகனஏற்றம், தேர்த் திருவிழா எல்லாம் மணிவாசகருக்கே.

பூசை செய்பவர்கள் தில்லைவாழந்தணர்கள்போல ஒரு தனிக் கூட்டத்தார். தில்லையில் தீட்சிதர்கள். திருப்பெருந் துறையில் நம்பியார்கள். தில்லையில் மூவாயிரவர். அவருள் ஒருவர் நடராசர். திருப்பெருந்துறையில்(நம்பியார்) முந்நூற்றுவர். அவருள் ஒருவர் ஆன்மநாதர்.

சிற்பவேலைப்பாடுகள், ஓவியங்கள் மிகவும் சிறப்பு. இக்காலத்துக் கட்டிட வேலைகளில் கான்க்கிரீட்டுக்கு உபயோகிக்கும் முறுக்குக்கம்பி, திரணைக்கம்பிகளோடு,

நான்குபட்டைக் கம்பி, ஆறுபட்டைக் கம்பி முதலியவற்றை இங்குள்ள கல்வேலைப் பாடுகளிற் காணலாம். இக்காலத்தில் பெண்கள் அணியும் புடவைகளின் கரைகளைவிட அதிகக் கோலங்களை(பார்டர் டிசைன்களை) இங்குள்ள ஓவியங்களிற் காணலாம்.

ஆவுடையார்கோயில் மண்டபத்தின் கொடுங்கை வேலைப்பாடு மிக்கது. மிக மெல்லியது, பாறாங்கல்லைப் பலகைக்கல்லாகச் செதுக்கி வேலை செய்திருக்கிறார்கள். மரவேலைப்பாட்டின் அளவுக்குக் கல்வேலைப்பாட்டைச் செய்திருக்கிறார்கள். மெல்லிய கொடுங்கையின் கனஅளவைக் கூறக்கேட்டு வியந்த வெள்ளைக்கார அதிகாரிகள் அதன் உண்மையைக் கண்டறிவதற்காகத் துப்பாக்கியால் சுட்டுப் பார்த்தார்களாம். துப்பாக்கிக் குண்டுகள் துளைத்த இடமென்று கொடுங்கையிலுள்ள இரு துளைகளை இன்றும் காட்டுகிறார்கள். துளையிட்ட அவ்விடங்கள் கொடுங்கையின் மென்மையைக் காட்டுகின்றன. சிற்பிகளேகூட மாதிரிக்காகத் துளையிட்டிருக்கலாம். சிற்பிகள் வேலை ஒப்பந்தம் செய்து கொள்ளுங் காலங்களில் ஆவுடையார்கோயில் கொடுங்கை, திருவீழிமிழலை வௌவால்நத்தி மண்டபம், கடாரங் கொண்டான் மதில் இவைகளைத்தவிர மற்றப் பணிகளைப் போலச் செய்துகொடுப்போம் என்று ஒப்பந்தஞ் செய்து கொள்வார்களாம். இவ்வேலைப்பாடுகள் அவ்வளவு அரியவை.

கட்டிடம், சிற்பம், ஓவியம் முதலிய கலைகளுக்குத் திருப்பெருந்துறை ஒரு சுரங்கம், ஒரு களஞ்சியம். தத்துவங் களுக்கும் ஞானத்துக்கும் களஞ்சியம் என்பது முன்கூறிய செய்திகளால் விளங்கும்.

சுருங்கக்கூறின் இது சரியை கிரியை யாளர்களுக்கு உரிய தலமன்று. யோகிகளுக்கும் ஞானிகளுக்கும் உரிய தலம்.

பிற்காலத்தில் வடலூரில் வள்ளலார் அமைத்த சத்திய ஞானசபைக்கு இது ஒரு வகையில் முன்னோடி எனலாம்.

வடலூர் சத்தியஞானசபையின் அமைப்பும் வழிபாடும் முற்றிலும் தத்துவ அமைப்பு. ஞான வழிபாடு.

11. சூரியனார்கோயில்

இது சூரியன் தலம். நவக்கிரகத்தலம். வடக்கே சூரியனுக்கு ஒரு கோயில் கோணாரக். தெற்கே சூரியனுக்கு ஒரு கோயில் இச்சூரியனார்கோயில். திருப்பனந்தாளிலிருந்து ஆடுதுறை வழியாகக் கும்பகோணம் செல்லும் சாலையில் உள்ளது. அடுத்துள்ள தலம் திருமங்கலக்குடி. அருகிலுள்ள பெருந்தலம் கும்பகோணம். சூரியனார்கோயிலின் பிரதான மூர்த்தி சூரியன். நடுவில் சூரியனுக்குக் கோயில். சுற்றிலும் மற்ற எட்டுக் கிரகங்களுக்கும் சிறு சிறு கோயில்கள். ஏனைய பெருங்கோயில்களில் நவக்கிரகங்கள் பரிவார தெய்வங்களாக இருக்கும். இங்கு அவை மூலமூர்த்திகளாகவே கோயில் கொண்டுள்ளன. சூரியன் நடுநாயகமாக, சுற்றிலும் எட்டுக் கிரகங்களைப் பரிவாரங்களாகக் கொண்டு விளங்குகிறார். ஆதலின் சூரியனார்கோயில் எனப் பெயர் பெற்றது.

சூரியனார்கோயில் என்பதே ஊர்ப்பெயராகவும் விளங்குகிறது. சூரியனார்கோயிலில் ஓர் ஆதீனம் உண்டு. அதற்குச் சூரியனார்கோயில் ஆதீனம் என்று பெயர். சூரியனார்கோயில் என்பது அப்பெயர் கொண்ட கோயிலுக்கும், அக்கோயில் அமைந்த ஊருக்கும், அவ்வூரிலுள்ள ஆதீனத்திற்கும் பெயராக விளங்குகிறது. கோயில், ஆதீனம், ஊர் மூன்றுக்கும் ஒரே பெயராகச் சூரியனார்கோயில் விளங்குகிறது.

சூரியனார்கோயிலின் ஆட்சி, அவ்வூரிலுள்ள சூரியனார் கோயிலாதீனத்திற்குச் சொந்தமாக இல்லாமல், திருவாவடு துறையாதீனத்திற்குச் சொந்தமாக உள்ளது. சூரியனார்கோயி லாதீனம் ஒரு தனிவகை ஆதீனம். திருவாவடுதுறை முதலிய மெய்கண்ட சந்தானத்தினின்றும் வேறுபட்டது. அதைப் பற்றி அதன் வரலாற்றைக் கூறுமிடத்திற் காண்போம்.

12. வாணாபுரம்

திருவிடைமருதூருக்குக் கிழக்கே ஒருகல் தொலைவில் உள்ளது. கல்வெட்டுகளில் மானாபரணபுரம் என்று பெயர். இப்போது வழங்கும் பெயர் வாணாபுரம்.

13. (தென்) திருவாலங்காடு

திருவாவடுதுறைக்குக் கிழக்கே ஒரு கல் தொலைவு. காரைக்காலம்மையாரால் பாடப் பெற்றதும், தேவாரப் பாடல் பெற்றதும், ஐந்து சபைகளுள் இரத்தினசபையும் ஆகிய திருவாலங்காடு வடக்கே காஞ்சிபுரம் அருகே உள்ளது. அது வடதிருவாலங்காடு என்றும் வழங்கப் பெறும். அதை எண்ணி அமைந்தது இத் (தென்) திருவாலங் காடு. இது பாடல் பெறாதது.

14, 15, 16. நரசிங்கன்பேட்டையிலுள்ள மூன்று கோயில்கள்

திருவாவடுதுறைக்கு அடுத்துள்ள நரசிங்கன்பேட்டை இருப்புப்பாதை நிலையம். இந்நரசிங்கம்பேட்டையிலுள்ள அட்சயநாதசுவாமி திருக்கோயில், சுயம்புநாதசுவாமி திருக் கோயில், கஸ்தூரியம்மன் கோயில் ஆகிய மூன்று கோயில்களும் திருவாவடுதுறை யாதீனத்திற்குரியவை.

17. விஸ்வநாதசுவாமி திருக்கோயில், கரைகண்டம்

திருவாவடுதுறைக்கு அருகே உள்ள பழங்கோயில்.

18. சோமநாதசுவாமி திருக்கோயில், ஆறுமுகனேரி

திருச்செந்தூருக்கு வடமேற்கே ஏழுகல் தொலைவில் ஆறுமுகனேரி என்னும் ஊரிலுள்ள பழமையான கோயில்.

19. சந்திவிநாயகர் கோயில், திருநெல்வேலி

திருநெல்வேலி நகரில் மேலைத்தேர்வீதி தென்மூலை யிலுள்ள பிள்ளையார் கோயில்.

20. சுப்பிரமணிய சுவாமி கோயில், குறுக்குத்துறை

திருநெல்வேலி மாவட்டத்தில் புகழ்பெற்ற முருகத் தலம். தாமிரவருணி ஆற்றின் நடுவில் உள்ளது. பாறையில்

குடைந்து அமைக்கப்பெற்றது. இப்பாறைக்குத் "திருவுரு மாமலை" என்று பெயர். கந்தர்சஷ்டி, வைகாசி விசாகம் முதலிய விழாக்கள் சிறப்பாக நிகழும்.

இவ்விருபது கோயில்களைத் தவிர அங்கங்கே பல ஊர்களில் சிறிய கோயில்கள் ஐம்பதிற்குமேல் உண்டு. அவற்றை எல்லாம் சேர்த்தால் திருவாவடுதுறை ஆதீனக் கோயில்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 75 ஆகும்.

கோயில்கள் தவிர நூற்றுக்கணக்கான கட்டளைகளும் உண்டு. நாடெங்குமுள்ள பல கோயில்களில் அவை நடைபெறுகின்றன.

கிளைமடங்கள்

திருவாவடுதுறையில் உள்ளது ஆதீனத் தலைமை மடம். ஆதீனக் கிளைமடங்கள் காசி முதல் கன்னியாகுமரி வரை நாடெங்கும் 130-க்கு மேற்பட்டவை உள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம்

திருவாவடுதுறை (ஆதீனத் தலைமை மடம்)

கிளை மடங்கள்

1. மூவலூர் (ஆதீன குருமுதல்வர் அவதாரத் தலம்)
2. நரசிங்கன்பேட்டை
3. திருவிடைமருதூர் - கிளைமடம்
4. திருவிடைமருதூர் - கட்டளை மடம்
5. கும்பகோணம் - மகாமகக் குளக்கரை மடம்
6. கும்பகோணம் - செட்டித்தெரு (பேட்டை நாணயக்காரத் தெரு) மடம்
7. சுவாமிமலை மடம்
8. பட்டீஸ்வரம் மடம்
9. சீர்காழி மடம்
10. வைத்தீஸ்வரன்கோயில் மடம்
11. மயிலாடுதுறை கட்டளைமடம்
12. திருவையாறு மடம்
13. திருவாரூர் மடம்

14. கீவளூர் மடம்
15. திருவெண்காடு மடம்
16. வேதாரண்யம் மடம்
17. யானையடி மடம்
18. மன்னார்கோயில் மடம்
19. காலக மடம்
20. புழுதிக்குடி மடம்
21. நாட்டுச்சாலை மடம்
22. எடுத்தணிவயல் மடம்

புதுக்கோட்டை மாவட்டம்

23. திருப்பெருந்துறை - ஆளுடை தெற்குமடம்

கடலூர் மாவட்டம்

24. சிதம்பரம் - மாலைகட்டித்தெரு - மெய்கண்டார் மடம் (உமாபதிசிவம் வாழ்ந்த இல்லம்)
25. சிதம்பரம் - சிங்காரத்தோப்பு - மறைஞானசம்பந்தர் சமாதிக் கோயில்
26. சிதம்பரம் ஞானப்பிரகாசர் கட்டளை மடம் (ஞானப்பிரகாசர் குளம் அருகில்)
27. திருப்பாதிரிப்புலியூர் மடம்
28. திருவதிகை - அப்பர் சுவாமிகள் மடம் (திலகவதியார் வதிந்து தொண்டாற்றியது)
29. விருத்தாசலம் மடம்
30. திருவெண்ணெய்நல்லூர் மடம்(மெய்கண்டார் முத்தித் தலம்)
31. திருத்துறையூர் மடம் (அருணந்திசிவம் அவதாரம், முத்தி, தலம்)

திருவண்ணாமலை மாவட்டம்

32. திருவண்ணாமலை மடம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

33. கீழைச்சிந்தாமணி காவிரிக்கரை மடம்
34. திருவானைக்கா மடம்
35. திருவானைக்கா - பாப்பம்மாள் சத்திரம்
36. திருவாசி மடம்
37. திருப்பைஞ்ஞீலி மடம்
38. கடம்பர்கோயில் மடம்

கரூர் மாவட்டம்

39. கரூர் மடம்

கோயம்புத்தூர் மாவட்டம்

40. பேரூர் மடம் (வேலப்பதேசிகர் மடம்.
அவர் சமாதிக் கோயில் உள்ளது)

மதுரை மாவட்டம்

41. தான கோனேரியப்ப முதலியார் கட்டளைமடம்
42. திருப்பரங்குன்றம் மடம்
43. திருப்பூவணம் மடம்
44. நெட்டூர் மடம்

இராமநாதபுரம் மாவட்டம்

45. இராமநாதபுரம்(கஸ்பா) மடம்
46. உத்தரகோசமங்கை மடம்
47. இராமேஸ்வரம்(விபூதிக் கட்டளை மடம்)

விருதுநகர் மாவட்டம்

48. விருதுப்பட்டி மடம்(விருதுப்பட்டி - இந்நாளைய விருது நகர்)
49. ஸ்ரீ வில்லிப்புத்தூர் மடம்
50. இராசபாளையம் மடம்
51. கூனங்குளம் - ஸ்ரீநமசிவாயபுரம் மடம்

சிவகங்கை மாவட்டம்

52. சிவகங்கை மடம்
53. திருப்பொற்கோட்டை மடம்

திருநெல்வேலி மாவட்டம்

54. திருக்குற்றாலம் மடம்
55. கம்பனேரி புதுக்குடி மடம்
56. காசி தர்ம மடம்
57. கனகசபாபதிபேரி மடம்
58. விஜயநாராயணம் மடம்
59. ஊரல்வாய்மொழி மடம்
60. பத்தைவடகரை மடம்

61. திருநெல்வேலி ஈசானமடம்
62. கல்லிடைக்குறிச்சி மடம்
63. விக்கிரமசிங்கபுரம் மடம் (சிவஞானமுனிவர் அவதாரத் தலம்)
64. திருப்புடைமருதூர் மடம்
65. சிவந்திபுரம் மடம்
66. பாபவிநாசம் ஈசானமடம்
67. ஆழ்வார்குறிச்சி மடம்
68. புளியங்குடி மடம்
69. வாசுதேவநல்லூர் மடம்
70. சங்கரநயினார்கோயில் மடம்
71. கழுகுமலை மடம்
72. மேக்கரை மடம்
73. பண்பொழி - வண்டாடும் பொட்டல் சமாதிமடம்

தூத்துக்குடி மாவட்டம்

74. முறப்பநாடு மடம்
75. ஸ்ரீ வைகுண்டம் மடம்
76. தென்திருப்பேரை மடம்
77. காந்தீசுவரம் மடம்
78. பராங்குசநல்லூர் மடம்
79. திருச்செந்தூர் அருட்பணிக்கட்டளை மடம்
80. திருச்செந்தூர் அன்னதானக் கட்டளை மடம்
81. திருச்செந்தூர் பிரதோஷக் கட்டளை மடம்
82. திருச்செந்தூர் விசாகக் கட்டளை மடம்
83. திருச்செந்தூர் கார்த்திகைக் கட்டளை மடம்
84. திருச்செந்தூர் திருப்பணிக் கட்டளை மடம்
85. திருச்செந்தூர் அறுபத்துமூவர் மடம்

கன்னியாகுமரி மாவட்டம்

86. வீமநகரி மடம்
87. சுசீந்திரம் மடம்
88. சுசீந்திரம் கீழமடம்
89. சுசீந்திரம் அக்கரை மடம்
90. கன்னியாகுமரி மடம்
91. பறக்கை மடம்
92. ஆரல்வாய்மொழி அகலிகைஊற்று மடம்

93. பானந்திட்டு மடம்
94. ஆச்சிராமம் மடம்
95. ஆளூர் மடம்
96. புத்தேரி மடம்
97. அருமைநல்லூர் மடம்
98. சிறா மடம்
99. தெரிசனம்கோப்பு மடம்
100. அழகியபாண்டியபுரம் மடம்

(தென் மாவட்டங்களில் தொல்லியல் அறிஞர் திரு ச.கிருஷ்ண மூர்த்தி குறிப்பிடும் மடங்கள்)

101. வல்லக்குளம் மடம்
102. முன்னாளிமுத்து நாளை மடம்
103. தோளங்குளம் கரிசல்பட்டி மடம்
104. மேலடி பிருஞ்சி கீழ்பிடாகை மேல்பிடாகை மடம்
105. கொட்டாகுளம் மடம்
106. ஆரடியூர் மடம்
107. மேலச்சேவல் மடம்
108. கீழைச்சேவல் மடம்
109. ஊர்க்காடு மடம்
110. தென்காசி மடம்
111. கடையநல்லூர் மடம்
112. புலியக்குறிச்சி மடம்
113. கரிசல்குளம் மடம்
114. மாயமான்குறிச்சி மடம்
115. அனவரதநல்லூர் மடம்
116. ஆத்தூர் சோமநாதசுவாமி பிச்சைக் கட்டளை மடம்
117. ஆறுமுகனேரி மடம்
118. தாமரை மொழி என்கிற தட்டாமடம்
119. குலசேகரன்பட்டினம் மடம்
120. வீரவநல்லூர் அன்னதானக்கட்டளை மடம்
121. பீகாம்பாள் மடம்
122. வள்ளியூர் மடம்
123. குமாரகோயில் மடம்
124. வடசேரி மடம்

125. வீராணமங்கலம் மடம்

126. தோவானை மடம்

(இவ்வளவு மடங்களும் ஆதீனப் பட்டியலில் இல்லை. ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தியே இவற்றைப் பட்டியலிடுகிறார். இவை இக்காலத்தில் செயற்படாது அழிந்துபட்டவை போலும்).

செங்கற்பட்டு மாவட்டம்

127. திருக்கழுக்குன்றம் மடம்

128. காஞ்சிபுரம் மடம்

129. திருவொற்றியூர் மடம்

130. அச்சிறுபாக்கம் மடம்

131. வெள்ளப்பந்தல் மடம்

சென்னை நகர மடங்கள்

132. கோவிந்தப்பநாயக்கன் தெரு கிளைமடம்

133. நாட்டுப்பிள்ளையார்கோயில் தெரு கிளைமடம்

ஆந்திர மாநிலம்

134. திருக்காளத்தி கிளைமடம்

உத்தரப்பிரதேசம்

135. வாரணாசி(காசி) - கண்ணப்பசுவாமி மடம்

திருவாவடுதுறை ஆதீன வெளியீட்டில், திருவாவடு துறையில் உள்ள தலைமை மடம் உட்பட நாடெங்கும் உள்ள கிளைமடங்களின் எண்ணிக்கை 69 என்று ஒரு பட்டியல் கொடுக்கப்பெற்றுள்ளது. ஆய்வாளர் திரு ச.கிருஷ்ண மூர்த்தி எழுதிய திருவாவடுதுறை ஆதீன வரலாற்று நூலில் "130 கிளைமடங்கள் இருந்த விபரம் கிடைக்கிறது" என்று கூறித் தலைமைமடம் உட்பட 131 மடங்களைப் பட்டிய லிட்டுக் காட்டியுள்ளார். இருந்த கிளைமடங்கள் 130. ஆனால் இப்போது நல்ல நிலையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் மடங்கள் தலைமைமடம் உட்பட 69 தான். 62 மடங்கள் அழிந்துவிட்டன அல்லது செயற்பாட்டி லில்லாதன என்று கொள்ளவேண்டும்.

சென்னையில் சிறந்து விளங்கிய கிளைமடங்கள்

சென்னை நகரில் கோவிந்தப்பநாயக்கன் தெருவில் ஒன்றும், நாட்டுப்பிள்ளையார் கோயில் தெருவில் ஒன்றுமாக இரண்டு கிளைமடங்கள் இருந்தன. இரண்டும் சிறந்து விளங்கின.

கோவிந்தப்பநாயக்கன் தெருவிலுள்ள கிளைமடத்தில் வித்துவான் தாண்டவராயத் தம்பிரான் சுவாமிகள் இருந்தார் என்பது ஐயரவர்கள் எழுதிய மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் சரித்திரத்தில் குறிப்பிடப் பெற்றுள்ளது.(பாகம் 1, பக்கம் 59).

தொட்டிக்கலைக் கேசவமுதலியாரும் அவர் மரபினரும் தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவரை ஆதரித்தவர்கள். துளுவ வேளாளர்களில் பூவிருந்தவல்லி வகுப்பினர். கேசவ முதலியார் மிக்க செல்வர். கிழக்கிந்தியக் கம்பெனியில் சம்பிரதியாக இருந்தவர். தொழுவூர் ஆர்க்பாக்கம் முதலிய பல கிராமங்கள் அவருக்குச் சொந்தமானதாக இருந்தன. அவர் ஆட்சிக்குட்பட்டவை கேசவமுதலியார் சமஸ்தானம் என வழங்கப்பட்டன. கேசவமுதலியாருடைய குமாரர் தெய்வசிகாமணி முதலியாரும் கிழக்கிந்தியக் கம்பெனியில் பெரிய உத்தியோகத்தில் இருந்தவர். அவருடைய மூத்த குமாரர் வேதாசல முதலியாரும் அக்கம்பெனியில் உத்தியோகம் வகித்து வந்தார். தொட்டிக்கலைக் கேசவ முதலியார் பரம்பரையினர் இப்பொழுது சென்னை கோவிந்தப்பநாயக்கன் தெருவில் திருவாவடுதுறையாதீனத் துக்குரியதாக உள்ள மடத்தை அவ்வாதீனத்திற்கு வழங்கினர். அவ்விடம் முன்பு யானைக் கொட்டகை என்னும் பெயருடையதாக இருந்ததாம் என்று கலைசைக் கோவைப் பதிப்பில் நூலாசிரியர் தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் வரலாற்றைக் கூறுமிடத்தில் ஐயரவர்கள் எழுதுகிறார்.

ஐயரவர்களின் இவ்வெழுத்துகளால் சென்னை கோவிந்தப்பநாயக்கன் தெரு கிளைமடத்தின் வரலாறு ஓரளவு தெரிகிறது. ஜார்ஜ் டவுனில் கொத்தவால்சாவடிப்

பகுதியில் கோவிந்தப்பநாயக்கன் தெரு உள்ளது. நேதாஜி சுபாஸ் போஸ் சாலையிலிருந்து அது பிரிகிறது. இதற்குச் சிறிது அப்பால் யானைக்கவுனி(எலிபெண்ட் கேட் Elephant Gate) என்றொரு பகுதி இப்போதும் விளங்குகிறது. '' கேசவ முதலியார் சமஸ்தானம் '', என்றும் '' யானைக் கொட்டகை '' என்றும் ஐயரவர்கள் கூறியுள்ளதற்கு இது பொருத்தமாக உள்ளது.

நாட்டுப் பிள்ளையார்கோயில் தெரு கிளைமடத்தில் 16-ஆம் பட்டம் மேலகரம் சுப்பிரமணியதேசிகர் காலத்தில் வித்துவான் ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் இருந்து வந்ததாக ஆதீன வரலாறு அரசவனத்து அறநிலையம் எழுதிய த.ச.மீ. கூறுகிறார்(பக்கம்129). நாட்டுப்பிள்ளையார்கோயில் தெருவும் ஜார்ஜ் டவுனில் சௌகார்ப்பேட்டைப் பகுதியில் தங்க சாலைத் தெருவை(மிண்ட் ஸ்ட்ரீட் Mint Street) அடுத்து உள்ளது. என்.பி . கோயில் தெரு என்று இன்று சுருக்கமாக வழங்கப் பெறுகிறது. சென்னை நகர வரைபடங்களிலும் என்.பி. தெரு என்றே இருக்கிறது. என்.பி- நாட்டுப் பிள்ளையார்.

சென்னையில் ஒன்றுக்கு இரண்டாக, இரண்டு கிளை மடங்கள் இருந்திருக்கின்றன. பெரும் வித்துவான்களாகிய தம்பிரான்கள் இருவர் அவற்றில் இருந்திருக்கிறார்கள். 16-ஆம் பட்டம் மேலகரம் சுப்பிரமணியதேசிகர் காலம்வரை இவ்விரு கிளைமடங்களும் நன்றாக இருந்திருப்பதாகத் தெரிகிறது. அதன்பின் செயலிழந்து விட்டன.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்திற்கும் விருத்தாசலம் குமாரதேவர் மடத்திற்கும் சென்னை மயிலாப்பூரில் தெற்கு மாட வீதியில் பழைமையான கிளை மடங்கள் உள்ளன. தருமபுர ஆதீனத்திற்குத் தியாகராயநகர் உஸ்மான் சாலையில் அகன்ற நிலப்பரப்புடன் உள்ள பெரிய கட்டிடமொன்று இராசகோபாலாச்சாரியார் முதலமைச்சராக விளங்கிய காலத்தில் விலைக்கு வாங்கப்பெற்றது. சென்னையில் திருவாவடுதுறை ஆதீனத்தின் பழைய கிளைமடங்கள் இரண்டும் அண்மையில் நூற்றைம்பது

ஆண்டுகளுக்குள் செயலிழந்து போனமை வருத்தந் தருகிறது. தாண்டவராயத் தம்பிரான் இருந்த மடம் இன்றில்லையே என்பதை எண்ணும் போது கண்ணீர் வருகிறது.

" திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சென்னையில் கட்டிடம் ஏதுமில்லை. மடத்திற்குச் சொந்தமான இடமும் பிரச்சனையில் இருப்பதை இங்கே குறிப்பிடவேண்டும்" என்று தொல்லியல் அறிஞர் திரு ச. கிருஷ்ணமூர்த்தி குறிப்பிடுகிறார்.

ஆதீனத்தில் வெளியிடப்பெற்றுள்ள கிளை மடங்களின் பட்டியலிலும் சென்னைக் கிளை மடங்கள் இடம் பெற வில்லை. நடைமுறையில் இல்லாமையாற் போலும்*.

காசியில் சோனார்புரம் என்ற பகுதியில் உள்ள கண்ணப்ப சாமி மடமும் சில ஆண்டுகளுக்குமுன் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பெற்று இப்போது நன்னிலையில் இருந்து வருகிறது.

சிறந்து விளங்கிய தம்பிரான்கள்

தம்பிரான்கள்

ஆதீனத் தலைவர்களான குருமகாசந்நிதானங்களின்கீழ் , பயிற்சி பெறுபவர்களும் பணிசெய்பவர்களுமான துறவிகள் தம்பிரான் எனப் பெயர் பெறுவர். இவர்கள் ஆசாரிய அபிடேகம் பெறாது, துறவும், சாதாரண, விசேட, நிர்வாண தீக்கைகளும் பெற்றுள்ள திருத்தொண்டர்களாவர். தம்பிரான்களில் குட்டித் தம்பிரான், கட்டளைத் தம்பிரான், ஒடுக்கத்தம்பிரான், காறுபாறு தம்பிரான், பெரிய காறுபாறு தம்பிரான் எனப் பணிகளுக்கும் பதவிகளுக்கும் ஏற்பப் பெயர்கள் வழங்கும்.

---

* கோவிந்தப்பநாயக்கன் தெரு மடம் ஆதீனத்தின் உபயோகத்தில் இல்லாதிருந்ததால் 1970-இல் அரசாங்கத்தார் பள்ளிக் கூடத்திற்காக ஆர்ஜிதம் செய்துவிட்டார்கள்.

சென்னை கோயம்பேடு பேருந்துநிலையம் அருகில் அரும்பாக்கத்தில் ஆதீன நிலத்தில் ஒரு கிளைமடமும் விநாயகர் கோயிலும் இப்போதிய 23ஆவது குருமகாசந்நிதானம் அவர்களால் அண்மைக்காலத்தில் ஏற்படுத்தப் பெற்றுள்ளது. சென்னையில் திருவாவடுதுறைக்கு ஒரு கிளை மடம் அமைந்து விட்ட செய்தி மகிழ்ச்சியளிக்கிறது.

புதிதாக வந்த இளைய தம்பிரான்கள் குட்டித் தம்பிரான்கள். இவர்கள் பயிற்சி பெறுபவர்கள், பணிவிடை செய்பவர்கள். இளைஞர்கள், புதிதாக வந்தவர்கள் ஆதலின் குட்டித் தம்பிரான் என இவர்கள் வழங்கப்பெற்றனர். இக்காலத்தில் ''ஜூனியர்'', ''இளநிலை'' என்பதுபோல. ''சீனியர்'' களை, பயிற்சிமூப்பு, பணிமூப்பு உடையவர்களைக் குட்டித் தம்பிரான் என்பதில்லை. தம்பிரான் என்று மட்டுமே வழங்கப்பெறுவர். பெரியவர்களான சந்நிதானங்களும் பிள்ளையவர்களும் சிலசமயம் குட்டித்தம்பிரான்களைக் குட்டித்தம்பிரான் என்று முழுமையாகக் குறிப்பிடாமல் ''குட்டி'' என்று மட்டும் செல்லமாக(செல்வமாக)க் கூறுவதுண்டு. குட்டிகள் என்ன செய்கிறார்கள் என்று சந்நிதானம் கேட்கும். புதிதாக வந்த குட்டிகள் பாடங்கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று பிள்ளையவர்கள் சொல்வார். டாக்டர் உ.வே.சாமி நாதையர் ஆதீனத்திற்கு வந்து பிள்ளையவர்களிடம் பாடங் கேட்கத் தொடங்கிய புதிதில் பிள்ளையவர்கள் இப்படிக் ''குட்டி'' என்று சொன்னதைக் கேட்டு, ஆதீனத்திற்கும் குட்டிகளுக்கும் என்ன சம்பந்தம் என்று திகைத்து விட்டாராம். அக்காலத்தில் பெண்பிள்ளைகளில் சிறுமிகளைக் குட்டி என்று அழைப்பது பேச்சுவழக்கம். கிராமங்களில் வீடுகளிலும் விவசாயப் பண்ணைகளிலும் பெரியவர்கள் சிறுமிகளை(சிறுபெண்களை)க் குட்டி என்று குறிப்பதும் அழைப்பதும் சர்வ சாதாரணமாக வழங்கிய பெருவழக்கம். ஆதீனத்தில் பெண்பிள்ளைகளுக்கு இடமில்லை. ஆதலின் குட்டி என்ற பெயரை முதன்முதலில் ஆதீன வளாகத்தினுட் பயிலக்கேட்டபோது ஐயரவர்கள் திகைத்துவிட்டார். அவர் எண்ணியது சிறுவயதுப் பெண்குட்டிகளை. பிள்ளையவர்கள் குறிப்பிட்டது குட்டித் தம்பிரான்களை. பிள்ளையவர்கள் விளக்கங்கூறிய பின்னர்தான் ஐயருக்குக் குட்டி என்பதன் இப்புதிய பொருள் விளங்கிற்றாம். கூர்த்த மதியும் சுறுசுறுப்பும் மிகுந்த குட்டித்தம்பிரான் ஒருவர் புலிக்குட்டித்தம்பிரான் என்றே வழங்கப் பெற்றுள்ளார். வயதுமுதிர்ந்த சந்நிதானம் ஒருவர் குட்டித் தம்பிரான்களை மிகவும் செல்வமாக,

'' குட்டிகளா! '' என்று அழைப்பதுண்டாம். இவையெல்லாம் ஆதீனக் குட்டிகளின் கதை! செல்லக்குட்டிகள் . குட்டிகளை விடுத்து இனித் தம்பிரான்களுக்கு வருவோம்.

அரசின் அறநிலையத்துறைக் கோயில்களில் செயல் அலுவலர்(நிர்வாக அதிகாரி, எக்சிகியூடிவ் ஆபீசர்) செயற்படுவது போல, ஆதீனக் கோயில்களின் நிர்வாகியாக இருந்து பணியாற்றுபவர்கள் கட்டளைத் தம்பிரான்கள். குன்றக்குடி அடிகளார், இப்போதுள்ள தருமபுரம் சந்நிதானம், காசிமடம் அதிபர் முதலியவர்கள் முன்னம் கட்டளைத் தம்பிரான்களாக இருந்தவர்களே. ஆதீனப் பணிகளில் மட்டுமன்றி ஆதீனகர்த் தர்களின் சொந்தப்பணிகளிலும் உதவியாக இருப்பவர்கள் ஒடுக்கத்தம்பிரான். நேர்முக உதவியாளர், செயலாளர் (பர்சனல் அசிஸ்டெண்ட், பர்சனல் செகரட்டரி) என்று இக்காலத்தில் சொல்லப் பெறுவதுபோல ஆதீனகர்த்தருக்கு நெருக்கமாக இருந்து பணியாற்றும் அணுக்கப் பணியாளர்கள், அணுக்கத் தொண்டர்கள். அலுவலக மேலாளர் போன்றவர் காறுபாறு தம்பிரான். அதிலும் பணிமூப்பும் முதன்மையும் உடையவர் பெரிய காறுபாறு தம்பிரான்.

தம்பிரான்களுள் சிறந்து விளங்குபவர்கள் பின்னர் ஆசாரியாபிஷேகம் பெற்று இளவரசுப் பட்டத்திற்கும் அதன்பின் ஆதீனத் தலைவர்களாக, சந்நிதானங்களாகப் பெரிய பட்டத்திற்கும் வருவர். ஆசாரிய அபிடேகம் பெற்றவர்கள் **தேசிகர்** என வழங்கப்பெறுவர். அதற்குமுன் தேசிகர் என வழங்குவது வழக்கமில்லை. தம்பிரான்கள் என்றே வழங்கப் பெறுவர்.

இக்காலத்தைவிட முற்காலத்தில் ஆதீனங்களில் தம்பிரான்களின் எண்ணிக்கை மிகுதியாக இருந்தது. தலைமை மடத்தில் குறைந்தது ஏழெட்டுத் தம்பிரான்கள், கிளை மடங்களுக்கு ஒவ்வொருவர், ஆதீனக் கோயில்களுக்கு ஒவ்வொருவர் என்று கணக்கிட்டாலே திருவாவடுதுறை ஆதீனத்திற்கு நூறு தம்பிரான்கள் போதாது, நூற்றுக்கு மேற்பட்ட தம்பிரான்கள் வேண்டும். அந்நாளில் இருந்தனர்.

இந்நாளில் தம்பிரான்களின் தொகை குறைந்துவிட்டது. தம்பிரான் ஒருவரே, பல பணிகளை, ஒன்றுக்கு மேற்பட்ட கோயில்களை, ஒன்றுக்கு மேற்பட்ட கிளைமடங்களை, கட்டளைகளை, நிர்வகிக்கும் நிலை உள்ளது. **துறவுக்குப் பஞ்சம்.** துறவுக்கு வருவோர் தொகை குறைந்து வருகிறது என்று அனுபவம் மிக்க துறவி ஒருவர் சில ஆண்டுகளுக்கு முன் எம்மிடம் அளவளாவும்போது குறைபட்டுக்கூறி வருந்தியதுண்டு.

திருவாவடுதுறை ஆதீனத்தில் முற்காலத்தில் தம்பிரான்கள் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்தனர். அவர்களுள் வரலாற்றில் இடம்பெற்றுள்ள சிலரது பெயர்களை மட்டும் அகர வரிசையில் இங்கெடுத்துக் காட்டுகிறோம்.

ஆறுமுகத் தம்பிரான்	சுப்பிரமணியத் தம்பிரான்
ஈசானத் தம்பிரான்	தாண்டவராயத் தம்பிரான்
கந்தசாமித் தம்பிரான்	நமச்சிவாயத் தம்பிரான்
கண்ணப்பத் தம்பிரான்	பழனிக்குமாரத் தம்பிரான்
கனகசபைத் தம்பிரான்	பரமசிவத் தம்பிரான்
குமாரசாமித் தம்பிரான்	பன்னிருகைத் தம்பிரான்
சங்கரலிங்கத் தம்பிரான்	புலிக்குட்டி இராமலிங்கத் தம்பிரான்
சாமிநாதத் தம்பிரான்	முத்துக்குமாரசாமித் தம்பிரான்
சிதம்பரநாதத் தம்பிரான்	விசுவலிங்கத் தம்பிரான்
சுந்தரலிங்கத் தம்பிரான்	வேணுவனலிங்கத் தம்பிரான்

பெரிய காறுபாறு, காறுபாறு நிலைகளில் இருந்த தம்பிரான்கள் சிலர் குருமகாசந்நிதானங்களின் அளவுக்குச் சிறந்து விளங்கியுள்ளனர். பிற்காலத்தில் இளவரசாகவும் சந்நிதானங்களாகவும் ஆகியுள்ளனர். இத்தகைய சிறந்த தம்பிரான்களால் ஆதீனத்திற்குப் பல வகையான ஆக்கங்கள் ஏற்பட்டுள்ளன. சிலர் சொத்துகளை (நிலங்களை) வாங்கி ஆதீனத்துக்குச் சேர்த்துள்ளனர். மன்னர்களிடமிருந்து பெருமளவில் நிலக்கொடைகள், கிராமங்கள், மகமை போன்ற பிறவருவாய்கள் ஆதீனத்திற்குக் கிடைப்பதற்குக் காரணமாக விளங்கியுள்ளனர். சிறந்து விளங்கிய தம்பிரான்கள் சிலரைப் பற்றிய குறிப்புகளை இவண் காண்போம்.

சிறந்து விளங்கிய தம்பிரான்கள் சிலரைப் பற்றிய குறிப்புகள்

ஈசானத் தம்பிரான்

நான்காவது பட்டம் உருத்திரகோடி தேசிகர் காலத்தில் தம்பிரானாக விளங்கியவர். ஐந்தாம் பட்டம் சந்நிதானத்தின் காலத்திலும் இருந்தவர். திருவாவடுதுறையில் ஒரு நாள் காலையில் காவிரிக்கு நீராடச் செல்லும்போது மருதமரச் சாலையில் பசிக்களைப்புடன் படுத்துக்கிடந்த ஒருவரைக் கண்டார். அவர் நிலையைக் கண்டு இரங்கி, பூசையில் நிவேதித்த பழங்களை உண்ணக் கொடுத்ததோடு ஆதீன மடைப்பள்ளியிலிருந்து உணவு கொண்டு சென்று கொடுத்தார். பசிக்களைப்பு நீங்கியபின் விசாரித்தபோது அவர் மதுரை நாயக்க மன்னர் முத்துவீரப்பநாயக்கரின் ஒன்றுவிட்ட அண்ணன் செவ்வந்தியப்பநாயக்கர் என்பது தெரிந்தது. தம்பியுடன் கருத்து வேறுபட்டுப் பகைமை உண்டாகி அஞ்சி வெளியே புறப்பட்டு வந்துவிட்டவர் வந்த இடத்தில் பசிக்களைப்பால் இப்படிப் படுத்துக் கிடந்திருக்கிறார். ஈசானத்தம்பிரான் அவரை ஆதீனத்திற்கு அழைத்துச் சென்று சிலநாள் தங்கியிருக்கச் செய்தார். நாளடைவில் முத்துவீரப்ப நாயக்கருக்கும் செவ்வந்தியப்பருக்கும் நல்லுறவு ஏற்பட்ட நிலையில் செவ்வந்தியப்பர் மதுரைக்குத் திரும்பினார். ஆபத்துக்காலத்தில் ஆதரித்து உதவிய திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் செவ்வந்தியப்பரும் முத்துவீரப்பரும் பின்னாளில் பெரும் நிலக்கொடைகளை நல்கினர். முத்துவீரப்ப நாயக்கர் கிராமம் கிராமமாக வளமான விளை நிலங்களை அளித்தார். திருநெல்வேலி, பாவநாசம், திருப்புடைமருதூர், செவ்வல், முரப்பநாடு, வள்ளியூர், சுசீந்திரம், கன்னியாகுமரி ஆகிய எட்டு ஊர்களில் கிளைமடங்கள் முத்துவீரப்பரின் கொடையால் ஏற்பட்டன. ஈசானத்தம்பிரான் பெயரால் இவை **ஈசான மடங்கள்** என்றே வழங்கப்பெறுகின்றன.

'' செவ்வந்தியப்ப நாயக்கரென்பவரால் மடத்திற்கு விடப்பட்ட கிராமங்கள் எட்டுள் முக்கியமானது செவந்திபுரம்''

என்று டாக்டர் உ.வே.சாமிநாதையர் என் சரித்திரத்திற் கூறுகிறார்(பக்.621). பூமிதானம், கிராமதானம் என்பனவற்றை அண்மையில் ஆசாரிய வினோபா அவர்களின் வரலாற்றிலும் தொண்டுகளிலும் கண்டோம். முற்காலத்தில் நாயக்க மன்னர்களும் சேதுபதி மன்னர்களும் திருவாவடுதுறை ஆதீனத்திற்குக் கிராமம் கிராமமாகப் பல கிராமங்களைத் தானம் செய்துள்ளனர். அத் தானசாசனச் செப்பேடுகள் பல இன்றும் ஆதீனத்திலுள்ளன. கிராமங்கள் பல, பரந்த விளை நிலங்கள் பல, ஆதீனத்தின் சுவாதீனத்தில் இன்றும் உள்ளன.

திருநெல்வேலி நகரில் மேல ரதவீதியில் ஈசான மடம் உள்ளது. ஆதீனத்தின் தென்மண்டல அலுவலகமாகவும் அது உள்ளது. ஈசானத் தம்பிரான் அதில் தக்ஷிணம் காறுபாறு தம்பிரானாக, தென்னாட்டிலுள்ள கிளைமடங்கள், சொத்துகள் ஆகியவற்றின் கண்காணிப்பாளராக, இருந்து சிறந்து விளங்கினார். இறுதி நாளில் அங்கேயே சமாதிக்கோயில் கொண்டார். முத்துவீரப்பநாயக்கர், செவ்வந்தியப்ப நாயக்கர் இவ்விருவரும் ஈசானத்தம்பிரானை வணங்கும் நிலையில் உள்ள சிற்பங்கள் நெல்லை ஈசான மடத்தில் உள்ளன.

கண்ணப்பத் தம்பிரான்

திருவாவடுதுறை ஆதீனத்திற்குக் காசியில் உள்ள கிளை மடம் கண்ணப்பசாமி மடம் என்று வ்ழங்கப் பெறுகிறது. கண்ணப்பத் தம்பிரான் காசிக் கிளைமடத்தில் பல ஆண்டுகள் தங்கியிருந்து பணிசெய்ததோடு அதை இன்றுள்ள பெரு நிலைக்கு விரிவுபடுத்தியதால் அக் கிளைமடம் அவர் பெயரால் கண்ணப்பசாமி மடம் என்றே வழங்குவதாயிற்று. ஒரு கிளை மடத்திற்கு, அதுவும் காசியில் உள்ள கிளை மடத்திற்கு, பெயர் வழங்குமளவுக்குக் கண்ணப்பத் தம்பிரான் - கண்ணப்பசாமி - சிறந்து விளங்கியிருக்கிறார்.

வேணுவனலிங்கத் தம்பிரான்

சிவஞானமுனிவர் பிறந்த விக்கிரமசிங்கபுரத்தில் சிவஞானமுனிவர் பிறந்த குடியிலேயே பிறந்த இவர் 15-ஆம்

பட்டம் அம்பலவாணதேசிகர் காலத்தில் தம்பிரானாகவும் 16-ஆம் பட்டம் சுப்பிரமணியதேசிகர் காலத்தில் காறுபாறு சுவாமிகளாகவும் சிறந்து விளங்கினார். விக்கிரமசிங்கபுரத்தில் சிவஞானமுனிவர் பிறந்த இல்லத்தில் அவருக்குக் கோயில் அமைத்துத் திருவுருவப்பிரதிட்டை செய்து, அவ்வில்லத்தைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்கே சேர்ப்பித்தார். இன்றும் அது ஆதீனக் கிளைமடமாக விளங்குகிறது.

வேணுவனலிங்கத் தம்பிரான் ஆதீனகர்த்தர் சுப்பிரமணிய தேசிகரிடம் மிகவும் பக்திபூண்டவர். தம் குருபக்தியின் அடையாளங்களாகத் தென்னாட்டில் சிவந்திபுரம் கிளை மடத்திலும் திருவாவடுதுறையில் ஆதீனத் தலைமை மடத்திலும் கொலு மண்டபங்களை ஆதீனகர்த்தர் சுப்பிர மணிய தேசிகருக்காக, தேசிகர் பெயரிலேயே அமைத்தார். சிவந்திபுரத்தில் அமைத்த மண்டபத்திற்குச் " சுப்பிரமணிய தேசிக விலாசம் " என்று பெயரிட்டார். திருவாவடுதுறையில் அமைத்த கொலு மண்டபத்திற்கு, தேசிகர் விருப்பப்படி "வேணுவனலிங்க விலாசம்" என்று தம்பிரான் பெயரையே சூட்டப்பெற்றது. வேணுவனலிங்க விலாசத்தின் கல்வெட்டில் "ஆதீனத்து பாரங்களை யெல்லாந் தாங்கிப் பாதுகாக்கிற தக்ஷிணம் பெரிய காறுபாறு குருபுத்திர சிரோண்மணி வேணுவனலிங்கத் தம்பிரானவர்கள் " என்று இவர் பெயரும் பணியும் சிறப்பித்துக் குறிப்பிடப் பெற்றுள்ளன. வேணு வனம் என்றால் மூங்கில் காடு. வேணு- மூங்கில். வேணுவன லிங்கம் என்பது அரிய பெயர். வேணுவனலிங்கத்தம்பிரான் "காணுவன, பூணுவன, பேணுவன யாவும் ஞானாசிரியன் திருவடிகளே என்னும் உறைப்பு மிக்கவர்" என்று த.ச.மீ. சுவையாக எழுதுவது உண்மையாகும். வேணுவனலிங்க விலாசக் கொலுமண்டபம் வேலைப்பாடு மிக்கது. சேற்றூர் சிவகிரி ஜமீன்தார் உபகரித்த உயர்ந்த தரத் தேக்குமரங்களால் புதியவன் ஆசாரியார் என்ற சிறந்த தச்சாசாரியாரைக் கொண்டு அமைக்கப்பெற்றது. சிவந்திபுரம் சுப்பிரமணிய விலாசம், திருவாவடுதுறை வேணுவனலிங்க விலாசம் இவ்விரண்டும் திறக்கப்பெற்ற காலங்களில் புலவர்கள்

இவற்றைப் பற்றிப் பாடிய பாடல்களையெல்லாம் சேர்த்து ஒரு நூலாக அந்நாளில் அச்சிடப்பெற்றதாம். ஐயரவர்கள் முதன் முதலில் அச்சிற் பதிப்பித்த நூல் அதுதானாம். ஐயரவர்களே என்சரித்திரத்தில் சுவையாக எழுதுகிறார்.

தாண்டவராயத் தம்பிரான்

திருவிடைமருதூரிலே பரம்பரைச் சைவவேளாளர் குலத்திலே தோன்றியவர். திருவாவடுதுறை ஆதீனத்தில் தம்பிரான் வித்துவான் என இரு வகையிலும் சிறந்து விளங்கியமையால் **வித்துவான் தாண்டவராயத் தம்பிரான்** என வழங்கப்பெற்றவர். 14-ஆம் பட்டம் வேளூர் சுப்பிரமணியதேசிகர், 15-ஆம் பட்டம் அம்பலவாண தேசிகர் 16-ஆம் பட்டம் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் ஆகிய மூன்று சந்நிதானங்களின் காலங்களிலும் விளங்கியவர். வேளூர் சுப்பிரமணிய தேசிகரிடத்து, சமய விசேட நிர்வாணமென்னும் மூவகைத் தீட்சைகளையும் முறையே பெற்றுச் சைவ சந்நியாசமும் தாண்டவராயத்தம்பிரான் என்னும் தீட்சாதிருநாமமும் பெற்றவர். பெரும்பாலும் சென்னையில் கோவிந்தப்பநாயக்கன் தெருவிலுள்ள திருவாவடுதுறை ஆதீனக் கிளைமடத்திலேயே இருந்து விளங்கியவர். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை சென்னைக்குச் சென்றிருந்த சமயம் அவருக்கும் இவருக்கும் நெருங்கிய பழக்கம் உண்டாயிற்று. இருவருமாக, காஞ்சிபுரம் சபாபதிமுதலியாரிடம் பல நூல்களைப் பாடங் கேட்டுத் தங்கள் ஐயங்களை நீக்கிக் கொண்டனர். பிள்ளையவர்கள் இயற்றிய அகிலாண்டநாயகி பிள்ளைத் தமிழ் சென்னையில் அச்சிடப்பெற்ற காலத்தில்(1842) அதற்குச் சிறப்புப்பாயிரம் வழங்கியவர்களுள் இவரும் ஒருவர். பின்னாளில் பிள்ளையவர்களை 15-ஆம் பட்டம் அம்பலவாணதேசிகருக்கு அறிமுகப்படுத்தி ஆதீன வித்துவானாக ஆவதற்குக் காரணமாக இருந்தவர் இவரே. 16-ஆம் பட்டம் மேலகரம் சுப்பிரமணியதேசிகர் சின்னப் பட்டத்திலிருந்த காலத்தில் இவரிடம் படித்தவரே. ஆதலின் வித்தியாகுருவாகிய இவரிடம் சுப்பிரமணியதேசிகருக்குப்

பெரிதும் மதிப்புண்டு. பின்னாளில் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் தாண்டவராயத் தம்பிரானைப் பற்றிக் கூற நேரும்போது ''நாம் வழிபடு தெய்வம் பிரத்தியட்சமாகி என்ன வேண்டுமென்று கேட்டால் தாண்டவராயத் தம்பிரானவர்களை நாம் பார்க்கும்படி செய்யவேண்டு மென்று கேட்போம்'' என்று சொல்வதுண்டு என ஐயரவர்கள் பிள்ளையவர்களின் சரித்திரத்தில் ஓரிடத்திற் குறிப்பிடு கிறார்கள்(பாகம் 2, பக்கம் 251, அடிக்குறிப்பு).

இவ்வாறு இலக்கண இலக்கிய சைவநூற் புலமையுடன் சிறந்த வித்துவானாகவும் சைவத்துறவியாகவும் புகழ்பெற்ற ஆதீனத்தின் தம்பிரானாகவும் சென்னையிற் சிறந்து விளங்கிய தாண்டவராயத் தம்பிரானுடன் அக்காலத்தில் சென்னையில் வதிந்த **வள்ளலார்** இராமலிங்க சுவாமிகளுக்குத் **தொடர்பு** இருந்திருக்கிறது.

வள்ளலார் இளம்போதில் சென்னையில் வதிந்த காலத்தில் சிறுவர்களுக்குக் கல்வி கற்பித்திருக்கிறார். வித்துவான்கள் சிலருக்குப் பெருநூல்களைப் பாடஞ் சொல்லியிருக்கிறார். தாமே நூல்களை இயற்றியிருக்கிறார். முன்னோர் நூல்கள் சிலவற்றைப் பதிப்பித்திருக்கிறார். பிறர் இயற்றிய நூல்களுக்குச் சாற்றுக்கவிகள் அளித்திருக்கிறார். இளையஞானியாக அருட்பாடல்களைப் பாடிப் பத்தி செய்து கொண்டிருந்த காலத்திலேயே வித்துவானாகவும் சிறந்து விளங்கியிருக்கிறார். சிறு பருவத்தில் வள்ளலாரை அவரது தமையனார் சபாபதிபிள்ளை தமதாசிரியர் காஞ்சிபுரம் சபாபதி முதலியாரிடம கல்விகற்க அனுப்பியிருக்கிறார். காஞ்சிபுரம் சபாபதி முதலியாருடன் பழக்கமிக்கவராகவும், பாடங் கேட்டு ஐயந்தெளிந்தவராகவும் தாண்டவராயத்தம்பிரான் இருந்திருக்கிறார். இந்நிலையில் வள்ளலாருக்கும் தாண்டவ ராயத்தம்பிரானுக்கும் தொடர்பு ஏற்பட்டிருப்பதில் வியப் பில்லை. வள்ளலார் தாண்டவராயத்தம்பிரானுக்கு வரைந்த நீண்ட செய்யுட்கடிதம் ஒன்றும் வேறு சில பாடல்களும், இளம்போதில் பாடிய திருவருட்பாப் பாடல்களுடன் சேர்ந்து கிடைத்துள்ளன.

அவை வருமாறு:

வள்ளலார் இராமலிங்க சுவாமிகள்
இளமையில்சென்னையில் வசித்த காலத்தில்
திருவாவடுதுறை ஆதீனம்
வித்துவான் தாண்டவராயத் தம்பிரான் சுவாமிகளுக்கு
வரைந்த திருமுகப் பாசுரங்கள்

நூற்றுப் பன்னிரு சீரான் வந்த கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

அணிவளரும் உயர்நெறிகொள் கலைகள்நிறை மதிமகிழ்வை
அடையும்ஒளி யுடைய சடையோய்!
அருளொழுக அமுதொழுக அழகொழுக இளநிலவின்
அளியொழுக ஒளிர்மு கத்தோய்!
அமலநிலை உறவும்உறு சமலவலை * அறவும் உணர்
வருள்கருணை மிகுகு ணத்தோய்!
அடியர்வினை அகலஒரு பரமசுக நிலையருளு
மதுகருது திருவு ளத்தோய்!
அநகசுப விபவசுக சரிதரக சிரகமந
அதுல அதுலித் பதத்தோய்!
அகிலசர அசரஅப ரிமிதமித அணுவும்அணு
வணுவும்இவை எனஉ ரைத்தோய்!
அகிதவித விவிதபரி சயசகல விகலஜக
வரஸரஜ தளம்இ ழைத்தோய்!
அகளமன ரமணவபி நிகடவபி நிபிடதட
அநதிசய சுகம்அ ளித்தோய்!
அணுபக்ஷம் இதுசம்பு பக்ஷம்இது காண்களென்
றன்புடன் உரைத்த பெரியோய்!
அதிக்கிராந் தத்தியல்பு திக்கிராந் தத்தியல்பின்
அமைதிஇஃ தென்ற அறவோய்!
அதிகார போகஇல யங்கள்இரு வகைஇயல்
அறிந்திட உணர்த்தும் உணர்வோய்!
அருவம் இஃதுருவம்இஃதருவுருவம் இஃதென
அறைந்தறி வுறுத்தும் அறிவோய்!

* சமலம் - மும்மலம்

அபேதசம் வேதந சுயஞ்சத்தி இயல்எலாம்
அலைவற விரித்த புகழோய்!
அநநிய பரிக்கிரக சத்திவிளை வெல்லாம்கை
ஆமலகம் எனஇ சைத்தோய்!
அத்துவா நெறிஆறும் ஒத்துவா னெறியா
றடைந்திடுக என்ற பரிசோய்!
அவுத்திரியின் உத்தரம் உனக்கிசைவு றுத்துதும்
அமர்ந்திடுக என்ற இனியோய்!

பணிவளரும் நிபுணகண பணகரண பரணவண
பரதயுக சரண புரண
பரம்பர சிதம்பர திகம்பர நிரந்தர
பரந்தர விளங்கு பரம
படகபட தடவிகட கரடகட கரியுரிகொள்
பகவ அரகர என்னவே
பவன்தகு சிவன்தனை உவந்தனை சுவந்தனை
பகர்ந்திடுக என்ற அமுதே!
பகர்அகர உகரபர மகரகுண குணிகள்உறு
பரிசறிய உரைசெய் அரசே!
பயன்தரு வயிந்துவ துவந்திகழ் சிவம்புகல்
பதம்தெளிய அருள்செய் இறையே!
பதசிகர வகரநெறி அகரநக ரமகரஉ
பயஅபய நிலைசொல் மலையே!
பவந்தெறு நவந்தரு குவம்பரி பவம்பொடி
படும்படி எனும் புனிதமே!
பதியுதவு பதிதனது பரிசும்அஃ தடையும்ஒரு
பசுஇயலும்அருள்செய் பொருளே!
பந்தநிலை அந்தநிலை இந்தநிலை என்றுபர
பந்தமொழி தந்த மணியே!
படியும்இடர் வடியும்இருள் விடியுமணி மொழிமறைகள்
படியும்என நொடிம ருந்தே!
பஞ்சமல கஞ்சுகமும் எஞ்சும்வகை பஞ்சம்இலை
பஞ்சமகம் என்ற நிதியே!
பதிதநெறி விடுகஒரு பதிதனெறி தொடுகஒளி
படரும்வகை எனும்என் உறவே!
பங்கம்அற அங்குமுள இங்குமுள எங்குமுள
பண்டைவெளி என்ற ஒளியே!

பலிதஅநு சிதஉசித யுகளஇக பரம்இரவு
பகல்என விளம்பு வளமே!
பன்னிலையும் முன்னிலையும் நின்னிலையும் என்னிலை
படிந்துவிடு கென்ற நன்றே!

திணிவளரும் அறிவுகொடு தொடர்வரிது பெரிதுபர
சிவம்அது வெனும் செல்வமே!
சிவசா தனம்பெறார் பவசா தனம்பெறுவர்
தெளிகஎனும் அளிகொள் குருவே!
திருநீறு காண்நினது கருநீறு காணுவது
தேர்ந்துணர்க என்ற தெளிவே!
சிவமேவு சமயம்அது தவமேவு சமயம்இது
சித்தம்என ஓது முதலே!
சிவனடியை வாழ்த்தாத வாய்ஊத்தை வாய்கொடிய
செவ்வாய் எனச்சொல் நிறைவே
சிவமான்மி யம்புகாக் காதுகா தென்னும்
தெலுங்கமொழி என்ற ஒன்றே!
சிவனடி வணங்காத தலைசிதலை, அவன்விழாத்
தெரிசியாக் கண்கள் புண்கள்,
சிவனைநினை யாச்சிந்தை நிந்தையாம், இது நமது
சித்தாந்தம் என்ற திருவே!
திகழ்பரம னடவும்விடை மனையினமும் அவன்முனோர்
செறிகமரின் அமுதுண்ட நாள்
சேர்வுற விடேல்என்ற ஒருமரக் கறியும் [1]
சிவபிரான் விடய மாகத்
திருவாத வூரடிகள் திருவாய் மலர்ந்தருள்
திருக்கோவை யார்செய் கையுஞ்
செப்புகள னக்கடாஅய் நின்றவர்க் கிறைமொழி
தெரிக்கும் சிறப்பு வாய்ந்தே
சீரைந் தெழுத்தினால் இலகுநக ரின்கண்ஓர்
திருவைந் தெழுத்தின் ஓங்கும்
தேசிகத் [2] தண்ணமுத வான்கடல் படிந்தருள்
தெள்ளமுதம் உண்டு தேக்கிச்

1. அரிவாட்டாயநாயனார் வரலாற்றைக் குறிப்பது.
2. சீரைந் தெழுத்தினால் இலகும்நகர் - (திரு) ஆவடுதுறை
திருவைந்தெழுத்தின் ஓங்கும் தேசிகர் - நமசிவாய தேசிகர்
திருவாவடுதுறை ஆதீனத்தின் ஆதி குருமூர்த்திகள்

செறிபவக் கோடையற அருண்மழை பொழிந்தொளி
சிறந்தோங்கு சீர்க் கொண்டலே!
செய்யதாண் டவராய தூயவாழ் வே! நினது
திருவடிக் கன்பு கொண்டே

தணிவளர் விராகமது பெற்றிலேன் காமரந்
தானும்அறி யேன் துன்பினைத்
தலிதஞ்சே யேன்மங்கு லங்கொண்டு நகபதந்
தன்னிற் பருத்து வினையைத்
தாங்குசும் மாடாயி னேன்நவ விராகமுதல்
சாற்றுசும் மாடு மட்டுந்
தங்குமொழி முதலைஉடை யேன்முதற் கயலில்
தயங்குமொரு நாமம் உடையேன்
தகுமுறைக் கடைமூன்றி னுஞ்சுவசி யுற்றிலேன்
சதுரிலேன் பஞ்ச நயவேன்
சட்டியில் இரண்டின்ஒன் றேய்ந்திலேன் ஒன்றுபோற்
றானுழைத் துழலு கின்றேன்
தண்டன் ஆயிரமிட் டுரைக்கும்விண் ணப்பமது
தான்என்னை யெனில் உன்னடியார்
சைவயோ கஞ்செய்வர் யானுமொரு கால்போன
சைவ யோகஞ் செய்குவேன்
தட்டுறா ஞானம்உடை யார்நினது தொண்டர்யான்
தானும்அது சுட்ட உடையேன்
சாந்தநெஞ் சுடையர்நின தன்பர்யான் மணம்வீசு
சாந்தநெஞ் சதுவும் உடையேன்
சகசநிய மம்பெறுவர் நின்அடியர் அடிமையும்
சகச நியமம் பெற்றுளேன்
தனிவீடு விழைவர்நின் அன்பர்யான் பலகூட
சாலையுள வீடு விழைவேன்
சார்புலக் கள்வர்வரின் அஞ்சுவர்நின் அடியர்யான்
தனிவரினும் மிக அஞ்சுவேன்
தாழ்பொறி அடக்குவர்நின் அன்பர்யான் உயர்பொறிகள்
தமைஅகம் அடக்க வல்லேன்
தமியனேன் தன்னைநீ கைவிடேல் விடினும்நின்
தன்னைநான் விடுவ னல்லேன்
தகுவழக் கிட்டெனினும் நின்பால் எனக்குமொரு
சார்புறச் செய்கு வேனே. 1

பண்டு குலம்பேசப் பரிந்ததில்லை ஈண்டென்னைக்
கொண்டு குலம்பேசக் குறிப்பானோ - தொண்டுசெய
நீண்டவரா யப்பெருமா னீக்குந் **திருத்துறைசைத்**
தாண்டவரா யப்பெருமான் றான். 2

கட்டளைக் கலித்துறை

வானேர் அமரர் வருந்திக் கடைந்த மருந்துவந்து
தானே ஒருசிறு நாய்க்குக் கிடைத்த தகவெனஎம்
மானேர் **துறைசைநற் றாண்டவ ராய மணி**எனது
பானேர் கிடைத்தும் பயன்கொள்கி லேன்வெறும் பாவியனே. 3

மின்னேர் சடைமுடித் **தாண்டவ ராய** வியன்றவநின்
றன்னேர் அடைதற் கெளிதாக நான்பெற்றுந் தாழ்த்துகின்றேன்
பொன்னே கொடுத்தும் எனுநா லடியின்* பொருட்கிலக்காய்
என்னே இருந்துழல் என்ஏழை வன்மதி என்மதியே. 4

வருந்துக் கனவினுஞ் சோறறி யானை மணத்தி. . .
விருந்துக் கழைப்பது போலேநின் பொற்பத. . .
மருந்துக்கு மெய்சொல வாராத வென்றனை. . .
தருந்துக்க ஊழ்விட மாட்டாது தாண்டவ . . . 5

வாய்மட் டுமோமன மட்டோஎன் ஆருயிர்ம . . .
போய்மட் டுறுமின் சுவைமய மாக்குநின் பொன்மலர் . . .
ஆய்மட் டமுதஞ் செவிக்கேற முன்முய லாமையிந. . .
நாய்மட் டுமோந்ததை தாய்மட்டு மாஞ்சைவ நி ... 6

திருச்சிற்றம்பலம்

இந்த ஆறு பாடல்களில் முதல் இரண்டு பாடல்களும் (நான்கு பக்கங்களுக்கு நீண்ட விருத்தமும், அதைத் தொடர்ந்த வெண்பாவும்) ஒரு திருமுகம். பின் நான்கு பாடல்களும் வேறோர் சமயம் எழுதியவை போலும். 5,6-ஆம் பாடல்களில் புள்ளியிட்ட இடங்களில் ஏடுகள் சிதைந்துள்ளதாக இவற்றை

இங்கு மேற்கொண்டுள்ள நாலடியார்ச் செய்யுள்:

பொன்னே கொடுத்தும் புணர்தற் கரியாரைக்
கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்தும் - அன்னோ
பயனில் பொழுதாக் கழிப்பரே நல்ல
நயமில் அறிவி னவர். (162)

- பெரியாரைப் பிழையாமை 2

முதன்முதலில் அச்சுக்குக் கொண்டுவந்த திருவருட்பாப் பதிப்பாசிரியர் திரு ஆ.பாலகிருஷ்ணபிள்ளை குறிப்பிடுகிறார். நாம் எழுதிய இராமலிங்க அடிகள் வரலாற்றில் தாண்டவரா யத்தம்பிரான் சுவாமிகள் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறி இத் திருமுகப் பாசுரங்களை வள்ளற்பெருமானின் கையெழுத்து மூலங்களிலிருந்தே எடுத்துக் காட்டியுள்ளோம். நாம் பதிப்பித்த திருவருட்பாப் பதிப்பில் இப்பாசுரங்களை வள்ளற்பெருமானின் கையெழுத்து மூலங்களுடன் ஒப்புநோக்கி உரிய தலைப்புடன் சந்தி பிரித்துத் தெளிவுபடுத்திப் பதிப்பித்துள்ளோம்.

தாண்டவராயத்தம்பிரான் சுவாமிகளிடம் வள்ளற் பெருமான் கொண்டிருந்த பெருமதிப்பை இப்பாடல்கள் காட்டுகின்றன. சைவசித்தாந்தச் செம்பொருள்கள் பலவற்றின் விளக்கமாகவும் இத்திருமுகப் பாசுரங்கள் திகழ்கின்றன. சைவ உலகுக்கு இஃதோர் புதுச்செய்தியாகும். திருஅருட்பா பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பால் இது முதன்முதலில் வெளிப்பட்டதேனும், யாம் எழுதிய இராமலிங்க அடிகள் வரலாற்றாலும் எமது திருவருட்பாப் பதிப்பாலும் பெரிதும் விளக்கமாயிற்று. இப்போது இந்நூலால் இச்செய்தி வள்ளலார் - தாண்டவராயத் தம்பிரான் சுவாமிகள் தொடர்பு சைவ உலகுக்கு மிகப் பரவலாக நன்கு அறிமுகமாகிறது. **சைவ மெய்யன்பர்கள் வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கத்தை நன்கு கற்றறிவதும், அதேபோல் சன்மார்க்க அன்பர்கள் சைவ சித்தாந்தத்தை நன்கு கற்றறிவதும் நலமாகும்.** அதற்கு இவ்விரு பெரியோர்களின் தொடர்பு தூண்டுகோலாகும்.

திருவாவடுதுறை ஆதீன முனிவர்கள்

தம்பிரான்கள் எல்லாரும் வித்துவான்கள் அல்லர். வித்துவான்கள் எல்லாரும் தம்பிரான்கள் அல்லர். தம்பிரான் வித்துவான் என்னும் இரு நிலையையும் பெற்றுச் சிறந்து விளங்கியோர் மிகச் சிலர். அச்சிலருள்ளும் தம்பிரான் வித்துவான் என்ற நிலைகளுக்கு மேலும் உயர்ந்து, முனிவர்களாய் விளங்கியோர் சிலர். அவருள் முக்கியமானவர் மூவர். 1. **சிவஞானமுனிவர் 2.கச்சியப்பமுனிவர் 3.சுப்பிரமணிய முனிவர்**. இவர்களைத் தம்பிரான் வரிசையிலும் சேர்க்கலாம்.

வித்துவான் வரிசையிலும் சேர்க்கலாம். ஆயினும் இவ்விரு வரிசையினரையும்விட இவர்கள் மேலாகச் சிறந்து விளங்கிய வர்கள். இவர்களை வித்துவான் என்ற முன்மொழியோடும், தம்பிரான் என்ற பின்மொழியோடும், வழங்கும் வழக்க மில்லை. வித்துவான் சிவஞானத் தம்பிரான், வித்துவான் கச்சியப்ப முனிவர், வித்துவான் சுப்பிரமணியத் தம்பிரான் என்று வழங்கும் வழக்கமில்லை. மூவரையும் முனிவர் என்று வழங்குவதே வழக்கம். சிவஞானமுனிவர், கச்சியப்ப முனிவர், சுப்பிரமணிய முனிவர் ஆகிய இம்மூவரும் ஆதீனத் தம்பிரான்களாயினும், வித்துவான்களாயினும், அவ்விரு வகைக்கும் மேலானவர்களாவர். ஆதலின் இவர்களைத் தம்பிரான்கள் வரிசையிலும், வித்துவான்கள் வரிசையிலும் சேர்ப்பதற்கஞ்சித் திருவாவடுதுறை ஆதீன முனிவர்கள் என்று ஒரு தனி வரிசையில் வைத்துக் கூறலானோம். இதுவே முறை எனவும் கருதுகின்றோம்.

சிவஞானமுனிவர்

முனிவரின் பெயர்ச் சிறப்பு:

சிவஞான முனிவரின் பெயரே சிறப்புமிக்கது.
சிவஞான முனிவர், சிவஞான யோகிகள்,
மாதவச் சிவஞான முனிவர், மாதவச் சிவஞான யோகிகள்,
சிவஞான முனிவர், சிவஞான முனிவரர், சிவஞான முனிவரனார்,
திராவிட மாபாடிய கர்த்தர்,

என்றெல்லாம் முனிவர் வழங்கப்பெறுவர். ஏனைய எல்லாரையும் போல் சிவஞானசுவாமிகள் என்று வழங்குவது சாதாரணப் பொதுவழக்கு, அதிகம் வழக்கில்லாதது. சிவஞான முனிவர் என்றும் சிவஞான யோகிகள் என்றும் வழங்குவதே சிறப்பு வழக்கு, பெரிதும் வழக்கிலுள்ளது. அதுவும் மாதவ என்ற அடைமொழி சேர்த்து வழங்குவதே பெருவழக்கு. முனிவர் தவச்செல்வர். அவரது தவம் சாதாரணத் தவமன்று, பெருந்தவம், மா தவம். எனவே மாதவச் சிவஞானமுனிவர் என வழங்கப்பெற்றார். முனிவரனார் என்றும் விகுதி மேல் விகுதியிட்டுச் சிறப்போடு வழங்கப்பெற்றார்.

முனிவர்

முனிவர் +அர் = முனிவரர்.

முனிவர் + அர் +ஆர் =முனிவரனார்.

பிறந்த ஊரின் சிறப்பு

சிவஞானமுனிவர் பிறந்த திருஊர் விக்கிரமசிங்கபுரம். தென்பாண்டி நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் பொதிய மலைச் சாரலில் பாவநாசம் அருகே உள்ளது. முனிவர் பிறந்ததால் விக்கிரமசிங்கபுரம் சிறந்தது. தென்பாண்டி நாட்டில் கட்டபொம்மன் பிறந்த மண் வீர மண் என்றால், சிவஞானமுனிவர் தோன்றிய மண் ஞான மண், சிவஞான மண். திருநெல்வேலி மண்ணின் மணம் தமிழ்மணம். திருநெல்வேலித் தாமிரவருணி ஆற்று நீரின் சுவை தமிழ்ச் சுவை. பொதியமலைக் காற்றின் மணம் தமிழ்மணம். திருநெல்வேலி மண்ணிற் பிறந்து, தாமிரவருணித் தண்ணீரைக் குடித்து, பொதியமலைத் தென்றற்காற்றைச் சுவாசித்து வளர்ந்தவர் சிவஞானமுனிவர்.

சிவஞான முனிவர் காலம்

சிவஞானமுனிவர் காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு. 1753-1785. பிறந்த ஆண்டு 1753 என்று கொள்ளப்பெறுகிறது. முத்திபெற்ற காலம் 17.04.1785 விசுவாவசு ஆண்டு சித்திரைத் திங்கள் எட்டாம் நாள் ஞாயிற்றுக்கிழமை பகல் 1.40 மணி ஆயிலிய நட்சத்திரம் என்பது தெளிவாகத் தெரிகிறது. முனிவரின் சமாதிக் கோயில் திருவாவடுதுறையில் ஆதீனத் தோட்டத்தில் உள்ளது. விக்கிரமசிங்கபுரத்தில் சிவஞான முனிவர் பிறந்த இல்லம் கோயிலாகக் கட்டப்பெற்று இன்றும் வழிபாடு நிகழ்கிறது. இப்போது திருவாவடுதுறை ஆதீனத்தின் கிளைமடமாக, ஆதீனத்திற்குச் சொந்தமானதாக, ஆதீனத்தின் ஆட்சியில் உள்ளது. பல்வேறு சைவப் பணிகள் அங்கு நிகழ்ந்து வருகின்றன. சிவஞானமுனிவர் முத்திபெற்ற இரண்டாம் நூற்றாண்டு விழா 26.04.1985-இல் விக்கிரம சிங்கபுரத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. நம்முடைய சிறப்புச் சொற்பொழிவும் அதில் இடம் பெற்றது.

சிவஞானமுனிவர் நிலவுலகில் நிலவிய காலம் மிகக் குறுகிய காலமே. 32 ஆண்டுகள் என்று கூறப்பெறுகிறது. இதைக்கொண்டுதான் பிறந்த ஆண்டு 1753 என்று கொள்ளப்பெறுவதாகத் தெரிகிறது. ஞானிகள் பலர் மிகக் குறைந்த காலமே நிலவுலகில் நிலவியுள்ளனர். மாணிக்கவாசகர் 32ஆண்டுகள். ஆதிசங்கரர் 32 ஆண்டுகள். இயேசுநாதர் 32 ஆண்டுகள். மாதவச் சிவஞான முனிவரனாரும் 32 ஆண்டுகள். இக்குறுகிய காலத்தில், 32 ஆண்டுகளில், முனிவரனார் சாதித்தது மிகுதி.

முனிவரின் பிறப்பு வளர்ப்பு

அகத்திய முனிவரின் வரத்தினால் ஏழு தலைமுறை அருட்புலமை நிரம்பப்பெற்ற பரம்பரைச் சைவவேளாளர் குலத்திற் பிறந்தவர் சிவஞானமுனிவர். முனிவரின் பெற்றோர் ஆனந்தக்கூத்தர், மயிலம்மை. முனிவருக்குப் பெற்றோர் இட்ட பெயர், பிள்ளைத் திருநாமம், **முக்களாலிங்கர்.**

ஐந்து ஆண்டுப் பருவத்தில் பள்ளிக்கு வைக்கப் பெற்ற சிறுவர் முக்களாலிங்கர் ஒருநாள் பகல் உணவுக்குப் பள்ளியிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தார். அப்போது திருவாவடுதுறை ஆதீனத்துத் தம்பிரான்களும் அடியவர் களுமான சிலர் பாவநாசத்திலிருந்து விக்கிரமசிங்கபுரம் வீதி வழியே யாத்திரையாகச் சென்று கொண்டிருந்தனர். அவர்களின் சைவப்பொலிவு சிறுவர் முக்களாலிங்கரைக் கவர்ந்தது. தம்முடன் தமதில்லத்திற்கு வந்து அமுதருந்திச் செல்ல வேண்டுமென அழைத்தார். சிறுவரின் அன்பு அழைப்பு சிவனடியார்களைக் கவர்ந்தது. சிறுவருடன் ஆனந்தக் கூத்தர் இல்லத்திற்கு வந்தனர். கூத்தர் அச்சமயம் வெளியே சென் றிருந்தார். மயிலம்மையார் மட்டுமே இல்லத்தில் இருந்தார். சிறுவர் முக்களாலிங்கர் அழைத்து வந்த அடியவர்களை அன்போடு வரவேற்று அமுது படைத்து ஆசி பெற்றார். சிறுவரது பேரார்வத்தையும் அன்னையாரது பேரன்பையும் கண்டு மகிழ்ந்த அடியவர் திருக்கூட்டத்துத் தம்பிரான் ஒருவர்

அருந்ததி யென்அம்மை அடியவர்கட் கென்றும்
திருந்த அமுதளிக்கும் செல்வி - பொருந்தவே
ஆனந்தக் கூத்தர் அகமகிழத் தொண்டுசெயும்
மானந் தவாத மயில்

என்னும் வெண்பாவைப் பாடிப் புகழ்ந்தார். தமது ஆர்வத்திற்கு ஈடு கொடுத்த அன்னையின் அருஞ்செயலைப் பாராட்டிச் சிறுவர் முக்களாலிங்கரே இப்பாடலைப் பாடியதாகவும் சிலர் கூறுவர்.

பின்பு தம்பிரான்களும் அடியவர்களும், அம்மையாரையும் முக்களாலிங்கரையும் வாழ்த்தி விடைபெற்று அருகிலிருந்த ஒரு மடத்திற்குச் சென்று தங்கியிருந்தனர். சிறிது நேரம் சென்றபின், வெளியே சென்றிருந்த ஆனந்தக்கூத்தர் திரும்பி வந்து, தம் மனைவியாரால் அங்கு நிகழ்ந்த செய்தியை அறிந்து தம் அருமை மகனாரின் நற்பண்பைப் புகழ்ந்து பாராட்டினார். சிறுவரையும் அழைத்துக்கொண்டு தம்பிரான்கள் தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்று அவர்களைக்கண்டு வணங்கினார்.

அப்பொழுது சிறுவர் முக்களாலிங்கர், தம்பிரான்களுடன் தாமும் அவர்களிடத்திற்குச் சென்று அவர்களைப்போல ஆக விரும்புவதாகத் தெரிவித்தார். தம்பிரான்களைக் கண்ட மாத்திரத்திலேயே அவர்களிடம் சென்ற உள்ளம் நிரந்தரமாகவே அவர்களுடன் செல்வதை விரும்பிற்று. மகனாரைப் பிரிவது தந்தையாருக்கு வருத்தந்தருவதாக இருப்பினும் மகனாரின் நற்கருத்துக்கு இடையூறாய்த் தாம் நிற்பது சரியன்று என்று ஒருவாறு தேறி மகனாரைத் தம்பிரான்களிடம் ஒப்புவித்துத் தமதில்லத்திற்குத் திரும்பினார். இதனையறிந்த தாயாரும் முதலில் வருந்தினாரெனினும் பின்பு ஒருவாறு உளந்தேறி மகனாரைச் சென்று கண்டு விடைகொடுத் தனுப்பினார்.

ஞானாசிரியரை அடைதல்

தம்பிரான்கள் முக்களாலிங்கரைத் தம்முடன் அழைத்துக் கொண்டு கன்னியாகுமரிக்கு அருகிலுள்ள சுசீந்திரத்திற்குச் சென்றனர். சுசீந்திரத்தில் ஈசான மடம் என்ற பெயருடன்

திருவாவடுதுறை ஆதீனத்தின் கிளைமடம் உள்ளது. அதில் அப்போது திருவாவடுதுறை ஆதீன சின்னப்பட்டம் வேலப்ப தேசிகர் எழுந்தருளியிருந்தார். அனைவரும் சென்று தேசிகரை வணங்கினர். தேசிகர், தம்பிரான்களுடன் வந்த முக்களா லிங்கரை யாரென வினவியறிந்து, இளம்பருவத்திலேயே அவருக்குள்ள அறிவு முதிர்ச்சியைக்கண்டு வியந்து, தீக்கையும் உபதேசமும் செய்து சிவஞானசுவாமிகள் என்று பெயரிட்டு மேலும் பல நூல்களைக் கற்பித்தார்.

திருவாவடுதுறையை அடைதல்

சுசீந்திரத்தில் சில காலம் இருந்தபின் சிவஞானமுனிவர் திருவாவடுதுறைக்கு வந்துசேர்ந்தார். முதலில் எளிய பணியாளராகப் பணியாற்றினார். எளிய பணியாளராகப் பணியாற்றிக்கொண்டே கல்வி கேள்விகளிற் சிறந்து தம்பிரானாக ஆனார். தம்பிரான்களுள்ளும் சிறந்து விளங்கலானார். எளிய பணியாளர் தம்பிரானானதைப் பொறுக்கமாட்டாதவராய்ச் சிலர் பலர் அழுக்காறுற்றனர். தம் முன்னேற்றத்திற்கு அச்சூழல் ஏற்றதாயில்லை என்பதை உணர்ந்த முனிவர் சந்நிதானத்தை வணங்கி விடைபெற்றுத் தலயாத்திரை புறப்பட்டார்.

தலயாத்திரை, காஞ்சிக்குச் சென்று தங்கல்

பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு காஞ்சிபுரம் சென்றார். அங்கு பிள்ளையார்பாளையத்திலுள்ள திருவா வடுதுறை ஆதீனக் கிளைமடத்தில் தங்கினார். பிள்ளையார் பாளையம் காஞ்சிபுரம் நகரின் ஒரு பகுதி. பிள்ளையார் பாளையம் என்ற அப்பெயரில் உள்ள 'பிள்ளையார்' விநாயகரைக் குறிப்பதன்று. ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்தரைக் குறிப்பது. திருஞானசம்பந்தருக்கு அங்கு ஒரு தனிக்கோயில் பிள்ளையார்பாளையம் கிருஷ்ண ராயர் தெருவின் நடுவில் திருமேற்றளிவீதியின் கீழமுனையில் உள்ளது. ஆதலின் அப்பகுதி பிள்ளையார்பாளையம் எனப் பெயர் பெற்றது.

பிள்ளையார்பாளையத்தில் புதுப்பாளையத்தெருவின் தென்கோடியில் திருவாவடுதுறை ஆதீனக் கிளைமடம் மெய்கண்டார் மடம் என்ற பெயரோடு இப்போது விளங்குகிறது. இங்குதான் சிவஞானமுனிவர் பலகாலம் உறைந்தார். பலருக்குப் பாடஞ்சொன்னார். பற்பல நூல்களை இயற்றினார். காஞ்சிபுரம், சென்னை, குளத்தூர், இளங்காடு(இளசை) தொட்டிக்கலை முதலிய தொண்டமண்டலத்து ஊர்களிலேயே முனிவர் பல காலம் வதிந்தார்.

காஞ்சிபுரத்தில் வசித்த காலத்தில் ஒருநாள் தவசிப் பிள்ளை(சமையற்காரர்) இன்று என்ன சமையல் செய்வது என்று கேட்டாராம். முனிவரும் தொடக்க நாளில் எளிய பணியாளராக இருந்து சமையற்கலையில் தேர்ந்தவராயிற்றே. ஆதலின் சில சமயம் முனிவரைக் கேட்டுச் செய்வது வழக்கம்போலும். தவசிப்பிள்ளையின் கேள்விக்கு முனிவர் ஒரு செய்யுளாகவே விடை கூறினாராம். அவ்வினிய வெண்பா வருமாறு:

சற்றே துவையல்அரை தம்பிஒரு பச்சடிவை
வற்றலே தேனும் வறுத்துவை - குற்றமிலை
காயமிட்டுக் கீரைகடை கம்மென வேமிளகுக்
காயரைத்து வைப்பாய் கறி.

ஒரு துவையல், ஒரு பச்சடி, ஒரு வற்றல், கீரைக்கடைசல், ஒரு கறி. துவையல்: அரைப்பது, பச்சடி: வைப்பது, வற்றல் : வறுப்பது, கீரை: கடைவது. உணவு வகைகளின் பெயர், செய்யும் பக்குவம் ஆகிய எல்லாமே இனிமையாக இருக்கிறது. காயம்(பெருங்காயம்) இட்டுக் கீரைகடை, காயம் சேர்ப்பதால் குற்றமில்லை என்கிறார். மிளகு காயை அரைத்து, மிளகை அரைத்து அல்லது மிளகாயை அரைத்து, கம் என்ற வாசனையோடு, வாசத்தோடு, கறி செய்துவைக்கச் சொல்கிறார். சமையல் இனிமையோடு, செய்யுள் இனிமையும் போட்டி போடுகிறது. முனிவர் காஞ்சியில் வதிந்த காலத்தில் தான் வடமொழி நூல்கள் பலவற்றைக் கற்று வடமொழிப் புலமையிலும் சிறந்தார்.

முனிவர் இயற்றியருளிய நூல்கள்

முனிவர் இயற்றிய நூல்களின் தொகை 29 (இருபத் தொன்பது). இலக்கணம் இலக்கியம் தருக்கம் சமயம் என அவற்றை வகைப்படுத்திக் காணலாம்.

இலக்கணம்

1. தொல்காப்பியச் சூத்திரவிருத்தி
2. இலக்கண விளக்கச் சூறாவளி
3. சங்கர நமச்சிவாயப் புலவர் நன்னூல் விருத்தியுரைத் திருத்தம்

இலக்கியம்

4. காஞ்சிப்புராண முதற்காண்டம்
5. சோமேசர் முதுமொழி வெண்பா
6. குளத்தூர்ப் பதிற்றுப்பத் தந்தாதி
7. இளசைப் பதிற்றுப்பத் தந்தாதி
8. கலைசைப் பதிற்றுப்பத் தந்தாதி
9. கச்சி ஆனந்தருத்திரேசர் பதிகம்
10. திருவேகம்பர் ஆனந்தக்களிப்பு
11. கலைசைச் செங்கழுநீர்விநாயகர் பிள்ளைத்தமிழ்
12. குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்
13. இராசவல்லிபுரம் அகிலாண்டேசுவரி பதிகம்
14. திருவேகம்பரந்தாதி
15. திருமுல்லைவாயிலந்தாதி
16. திருத்தொண்டர் திருநாமக்கோவை
17. பஞ்சாக்கரதேசிகர் மாலை
18. கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தி

தருக்கம்

19. தருக்கசங்கிரகமும் அன்னம்பட்டீயமும்

சமயம்

20. சிவஞானபாடியம்
21. சிவஞானபோதச் சிற்றுரை
22. சிவஞானசித்திப் பொழிப்புரை(சுபக்கம்)
23. சித்தாந்தப் பிரகாசிகை

24. என்னை யிப்பவத்தில் என்னும் செய்யுட் சிவசமவாதவுரை மறுப்பு
25. எடுத்து என்னுஞ் சொல்லுக்கிட்ட வைரக்குப்பாயம்
26. சிவசமவாத வுரை மறுப்பு
27. அரதத்தாசாரியர் சுலோகபஞ்சக மொழிபெயர்ப்பு
28. சிவதத்துவவிவேகம்
29. சித்தாந்த மரபு கண்டனக் கண்டனம் முதலியவை.

மாபாடிய கர்த்தர்

முனிவரது நூல்கள் அனைத்திலும் சிறந்தது சிவஞான மாபாடியம்; மெய்கண்டாரின் சிவஞான போதத்திற்கு முனிவர் வரைந்த பேருரை.

தமிழில் பேருரை என்பதை வடமொழியில் பாஷ்யம் என்பர். வேதாந்த உலகில் உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம் (வேதாந்த சூத்திரம்), பகவத்கீதை இம்மூன்றையும் பிரஸ்தானத் திரயம் என்று முக்கியமாகக் கொள்வர். பிரஸ்தானம் - பிரதானம். திரயம் - மூன்று. பிரதானமான மூன்று, முக்கியமான மூன்று என்று பொருள். முக்கியமான மூன்று நூல்களில் ஒன்றாகிய பிரம்மசூத்திரம் வேதவியாசர் இயற்றியது. அதற்குச் சங்கரர், இராமானுஜர், மத்வர் ஆகிய மூவருமே பாஷ்யம் இயற்றியுள்ளனர். அவை சங்கர பாஷ்யம், இராமானுஜ பாஷ்யம், மத்வ பாஷ்யம் என வழங்கப்பெறும். சங்கர பாஷ்யம் அத்வைதக் கருத்திலும், இராமானுஜ பாஷ்யம் விசிட்டாத்வைதக் கருத்திலும், மத்வ பாஷ்யம் துவைதக் கருத்திலும் செய்யப்பெற்றவை. இவைதவிர நீலகண்ட சிவாசாரியரால் செய்யப்பெற்ற பாஷ்யம் ஒன்று உண்டு. நீலகண்டபாஷ்யம் எனும் அது சிவாத்வைதக் கருத்தில் செய்யப்பெற்றது. இவை பிரம்மசூத்திர பாஷ்யங்கள். ஒரே பிரம்ம சூத்திரத்திற்கு நால்வரும் நான்கு அடிப்படையில் பேருரை கண்டுள்ளனர். பாஷ்யம் செய்துள்ளனர்.

சங்கர பாடியம்	-	கேவலாத்துவிதம்
இராமானுச பாடியம்	-	விசிட்டாத்துவிதம்
மத்வ பாடியம்	-	துவைதம்
நீலகண்ட பாடியம்	-	சிவாத்துவிதம்

மூலம் ஒன்றே. உரைகள் வெவ்வேறு. ஒரே மூலம் வெவ்வேறு கொள்கை கொண்டோரால் வெவ்வேறு அடிப்படையில் விளக்கஞ் செய்யப்பெற்றது.

பாணினியின் இலக்கண நூலுக்குப் பதஞ்சலியார் ஒரு பாஷ்யம் இயற்றினார். அது பதஞ்சலி பாஷ்யம், பதஞ்சலி மகாபாஷ்யம் என வழங்கும்.

சிவஞான மாபாடியும் - திராவிட மாபாடியம்

வேதாந்தத்திற்கு வேதாந்த சூத்திரங்கள் (பிரம்ம சூத்திரம்) முக்கியமாதல் போல, சைவசித்தாந்தத்திற்குச் சைவ சித்தாந்த சூத்திரமாகிய சிவஞானபோதம் முக்கியமான முதல் நூல். மெய்கண்டார் அருளிய இச் சிவஞான போதத்திற்கு நம் சிவ்ஞானமுனிவரனார் இயற்றியருளிய பேருரையே சிவஞான பாடியம், சிவஞான மாபாடியம். பாஷ்யம், மகா பாஷ்யம் என வடமொழியாற் கூறுவதை அப்படியே பாடியம், மாபாடியம் எனத் தமிழ்ப்படுத்திச் சொல்லுகின்றனர். பெயர் விளக்கம் இவ்வளவே.

தமிழில் உள்ள ஒரே பாடியம்(சைவசித்தாந்த பாடியம்) சிவஞானபாடியம். திராவிட மாபாடியம். தமிழில் மாபாடியம் செய்ததால், முனிவர் திராவிடமாபாடியகர்த்தர் என வழங்கப் பெறுகிறார்.

வைணவ உலகம் இராமானுஜரை ''பாஷ்யகாரர்'' என்று சிறப்பித்துச் சொல்லும், ''பாஷ்ய சக்ரவர்த்தி'' என்று கூறும். வைணவர்கள் பாஷ்யம் என்று பெயரிட்டுக்கொள்ளல் பெரு வழக்கு. வைணவத்தில் பாஷ்யகாரர் இராமானுசர் என்றால் சைவத்தில் பாஷ்யகாரர் சிவஞானமுனிவர். வைணவத்தில் பாஷ்யசக்ரவர்த்தி இராமானுசர் என்றால் சைவத்தில் பாஷ்யசக்ரவர்த்தி சிவஞானமுனிவர். திராவிட மாபாடியம், திராவிட மாபாடியகாரர், திராவிட மாபாடிய கர்த்தர் என்பதன் பெயர்ப்பொருத்தம் இப்போது விளங்குகிறதல்லவா?

சிவஞான மாபாடியம் (திராவிட மாபாடியம்) ஒரு பெருங் களஞ்சியம், தத்துவக் களஞ்சியம்; ஒரு பெருஞ் சுரங்கம்,

தத்துவச் சுரங்கம்; ஒரு பெருங்கடல், தத்துவக் கடல். தமிழில் இப்படி ஒருநூல், ஒரு பேருரை, இதற்கு முன் தோன்றியதில்லை, இதற்குப் பின்னும் தோன்றியதில்லை.

'' சிவஞான பாடியம் தத்துவ ஆராய்ச் சிக்கு ஒரு கருவூலம் . . . . . . சிவஞானபாடியம் தமிழ்ச்செல்வம்; கற்பகம்; காமதேனு'' என்று திரு.வி.க. கூறுவது முற்றிலும் உண்மை.(சமாஜப்பதிப்பு 1936 - அணிந்துரை).

ஒரு காலத்தில் சிவஞானபோதம் வடமொழியில் மொழிபெயர்க்கப் பெற்றது. அதற்கு வடமொழியில் ஒரு பேருரையும் செய்யப்பெற்றது. சிவாக்கிர பாடியம் என்று அதற்குப் பெயர். அதைச் செய்தவர் சிவாக்கிரயோகிகள். சூரியனார்கோயில் ஆதீன நிறுவனர். அக்கிரம் - கொழுந்து, சிவாக்கிரம் -சிவக்கொழுந்து.

வடமொழிச் சிவஞானபோதம் தமிழ்ச் சிவஞான போதத்திற்குப் பிந்தியது; தமிழ்ச் சிவஞானபோதத்தின் மொழிபெயர்ப்பு. ஆனால் அதன் பாடியமாகிய சிவாக்கிர பாடியம் சிவஞானபாடியத்திற்கு முந்தியது. சிவஞான முனிவர் தமிழில் மாபாடியம் செய்வதற்கு வடமொழிச் சிவாக்கிரபாடியமே தூண்டுகோலாக இருந்தது. வடமொழியில் பாடியம் செய்தவர் பெயரும் யோகிகள்(சிவாக்கிர யோகிகள்). தமிழில் பாடியம் செய்தவரும் யோகிகள்(சிவஞானயோகிகள்). சிவஞானமுனிவருக்கு யோகிகள் என்று பெயர் வந்தது இதனாலேயே யாகலாம்.

வடமொழிச் சிவஞானபோதமே மூலம், தமிழ்ச் சிவஞானபோதம் அதன் மொழிபெயர்ப்பே என்று கூறும் தவறான நிலை பிற்காலத்தில் ஏற்பட்டது. சிவஞான முனிவரேகூட அவ்வாறு நம்பினார். அது அவரது கால நிலை; அக்காலநிலை. அண்மைக் காலத்தில் சிவஞானபோதம் முதல் நூலே, வடமொழியினின்றும் மொழிபெயர்க்கப் பெற்றதன்று என்ற உண்மை பல்வேறு ஆதாரங்களால் 120 காரணங்களைக் காட்டி நிலைநிறுத்தப் பெற்று விட்டது.

(சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே, மொழி பெயர்ப்பல்ல, 120 காரணங்கள் - ம . பாலசுப்பிரமணிய முதலியார் பி.ஏ., பி.எல். - சைவ சித்தாந்த மகா சமாஜம் - வைரவிழா வெளியீடு 1965. இது இரண்டாம் பதிப்பு. இதன் முதற்பதிப்பு ம . பா . காலத்திலேயே வந்துவிட்டது. அதற்கு முன்பே 1949 சித்தாந்தம் இதழில் கட்டுரையாக வெளியாயிற்று).

சிவஞான பாடியம் கடவுள் வாழ்த்தும், குருமரபு வாழ்த்தும்

முனிவரனார் மாபாடியத் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்தாக எடுத்து எழுதிக் கொண்டிருக்கும் தேவார, திருவாசக, திருக்குறட் பாக்களும், விநாயகர் துதியாகவும் குருமரபு வாழ்த்தாகவும் பாடியுள்ள இரு பாடல்களும் ஒருவகைத் தனி அமைப்பாகத் திகழ்கின்றன.

ஞானசம்பந்தர் தேவாரத்திலிருந்து "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என்னும் திருப்பாசுரத்தை முதற்கண் எழுதிக் கொண்டிருக்கிறார். திருவாசகம் சிவபுராணம் "நமச்சிவாய வாஅழ்க! நாதன்றாள் வாழ்க" என்பது முதல் "முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்" என்பது வரை 20 அடிகளையும் இரண்டாவதாக எழுதிக் கொண்டிருக்கிறார். "அகர முதல எழுத்தெல்லாம் " என்னும் முதற்குறளை மூன்றாவதாக எழுதிக்கொண்டிருக்கிறார். இத்திருக்குறளை அடுத்து நான்காவதாகத் தாமே ஒரு குறள் வெண்பாவைக் கற்பகவிநாயகர் துதியாகப் பாடியிருக்கிறார். இதனை அடுத்து ஐந்தாவதாகக் "கயிலாய பரம்பரையில் " என்று தொடங்கும் குருமரபு வாழ்த்து விருத்தம் முனிவரனாரே பாடியது. இவை ஒவ்வொன்றின் ஈற்றிலும், "திருச்சிற்றம்பலம் " என்னும் மங்கல மந்திர மொழியை ஒரு முறைக்கு மும்முறையாக " **திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம்** " என அடுக்கி வரைந் திருக்கிறார்.

அழகிய இவ்வமைப்பை 1921; 1936 சமாஜப் பதிப்புகளில் காணப்பெறுமாறு அப்படியே எடுத்துக் காட்டுவோம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவஞான பாடியம்

திருப்பாசுரம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம்

திருவாசகம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
ஏக னநேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி யெந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத வின்ப மருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையு ணின்ற வதனால்
அவனரு ளாலே யவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய வுரைப்பனியான்.

திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம்

திருக்குறள்

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம்

கற்பகவிநாயகர் துதி

பொற்பொதுக் குடபாற் பொற்புற நடிக்குங்
கற்பகத் திருதாள் கற்பவர் நமரே.

திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம்

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்ப்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம்

கடவுள் வாழ்த்துக்குத் தேவார திருவாசகங்களை எடுத்துக் கொண்டிருப்பதுடன் **திருக்குறளையும்** எடுத்துக் கொண்டிருப்பதைக் கவனிக்கவேண்டும்.

ஒவ்வொன்றன் நிறைவிலும் திருச்சிற்றம்பலத்தை **மும்முறை அடுக்கி** வரைந்திருப்பதை ஊன்றிக் கவனிக்க வேண்டும். ஐந்து வாழ்த்துகள். அவற்றுள் முதன்மூன்றும் முன்னோர் மொழிகள். பின் இரண்டும் தம் வாக்கு. ஒவ்வொன்றன் நிறைவினும் மும்முறை திருச்சிற்றம்பலம் ஆக $5\times3=15$ முறை திருச்சிற்றம்பலம். என்ன அருமையான அமைப்பு.

குருமரபு வாழ்த்து அருமையிலும் அருமை. இப்படி ஒரு குருமரபு வாழ்த்து வேறு எந்த ஆதீனத்திற்கும் கிடைக்கவில்லை. திருவாவடுதுறைக்குக் கிடைத்த திருவாபரணங்களில் இதுவே முடிமணியானது. தருமபுர ஆதீனம் இதனையே சிறிது மாற்றி

அணிந்துகொண்டதென்றால் இக் குருமரபு வாழ்த்தின் அருமை பெருமைகளை என்னென்பது! சிவஞான முனிவரனாரை ஆதீன குலதெய்வம் என்று திருவாவடுதுறை யாதீனத்தார் போற்றிவருவதற்கு இஃதொன்று மட்டுமே போதாதோ?

முனிவரின் மாணவர்கள்

அகத்தியனார்க்கு மாணவர் பன்னிருவர். நம் முனிவரனார்க்கும் மாணவர் பன்னிருவர் . பன்னிருவர் எனின் பன்னிருவர் மட்டுமே எனக் கருதற்க. பயின்ற மாணவர் பலர். அவர்களிற் சிறந்தோர் பன்னிருவர் என்க.

திருத்தணிகைக் **கச்சியப்பமுனிவர்**
தொட்டிக்கலைச் **சுப்பிரமணியமுனிவர்**
காஞ்சிச் சிதம்பரமுனிவர்
இலக்கணம் சிதம்பரநாதமுனிவர்
காஞ்சி முத்துக்குமாரசாமி தேசிகர்
காஞ்சிச் சரவணபத்தர்
இராமநாதபுரம் சோமசுந்தரப் பிள்ளை
திருமுக்கூடல் சந்திரசேகர முதலியார்
கரவாந்தண்டலம் அடைக்கலங்காத்த முதலியார்
கடம்பர்கோயில் கலியாணசுந்தர உபாத்தியாயர்

முதலியோர் அப்பன்னிருவராவர்.

அகத்தியனாரின் மாணவர் பன்னிருவரில் முதல்வர் தொல்காப்பியர். அதுபோன்றே நம் முனிவரனாரின் மாணவர் பன்னிருவரில் முதல்வர் கச்சியப்பர்.

முனிவர் மீண்டும் திருவாவடுதுறையை அடைதல்

இருபத்தொன்பது நூல்கள், பன்னிருவரின் மேற்பட்ட மாணவர்கள். முனிவரின் புகழ் நாடெங்கும் பரவிற்று. ஆவடுதுறைக்குச் செல்லவேண்டும், குருமகாசந்நிதானத்தைக் காணவேண்டும் என்ற ஆர்வம் மீதூர்ந்தது. ஆவடுதுறையிலும் முனிவரின் வருகையை எதிர்நோக்கியிருந்தனர். முனிவர் ஆவடுதுறைக்கு வந்தார். குருநாதரைப் பணிந்தார். சிவஞான பாடியம் நமச்சிவாயமூர்த்திகளின் சந்நிதியில் குருமகா சந்நிதானத்தின் திருமுன்னர் அரங்கேற்றஞ் செய்யப்பெற்றது.

ஆதீனத்தில் முனிவர் துவிதீய குரவராக அமர்ந்திருக்க வேண்டு மெனவும், அடுத்த பட்டம் சந்நிதானமாக வரவேண்டுமெனவும் குருமகாசந்நிதானமும் தம்பிரான்களும் அடியவர்களும் விரும்பினர். "யாம் வணங்கப் பிறந்தோமல்லது வணங்கப் பெறுவதற்குப் பிறந்தோமல்லோம்" என முனிவர் அடக்கமாக மறுத்துவிட்டார். வாழ்நாளளவும் திருவாவடுதுறையிலேயே இருந்து தம்பிரான்களுக்கும் ஏனையோருக்கும் பாடஞ் சொல்லல் முதலிய பணிகளில் ஈடுபட்டிருந்து திருவாவடு துறையிலேயே முத்திபெற்றார்.

ஆதீன குலதெய்வமாக விளங்கல்

சிவஞானமுனிவரின் சமாதித் திருக்கோயில் திருவாவடு துறையில் ஆதீனத் தோட்டத்தில் உள்ளது. ஆதீன குல தெய்வமாக இன்றும் இவர் கொண்டாடப் பெறுகிறார். முனிவரின் குருபூஜை, அவர் தோன்றிய விக்கிரமசிங்கபுரம், துறவு பெற்ற சுசீந்திரம், நெடுநாள் தங்கியிருந்த காஞ்சிபுரம், முத்திபெற்ற திருவாவடுதுறை ஆகிய நான்கு இடங்களிலும் சிறப்பாக நடைபெறுகிறது. **முனிவரது அருள்வாழ்வில் விக்கிரம சிங்கபுரம் சரியை, சுசீந்திரம் கிரியை, காஞ்சிபுரம் யோகம், திருவாவடுதுறை ஞானம்.** முனிவர் பிறந்த விக்கிரமசிங்க புரத்தில் முனிவரின் திருக்கோயிலை இடமாகக் கொண்டு சைவநெறிக் கழகம் சிறப்பாகச் சைவப் பணியாற்றி வருகிறது.

கச்சியப்ப முனிவர்

சிவஞானமுனிவரின் மாணவர் பன்னிருவருள் முதல் மாணவர். கவிராக்ஷஸர் எனப் பெயர் பெற்றவர், உண்மை யிலேயே கவிராக்கதர். திருத்தணிகையில் பரம்பரைச் சைவ வேளாளர் குலத்தில் அபிஷேகஸ்தர் மரபிற் பிறந்தவர். தணிகைப்புராணம், திருவானைக்காப்புராணம், பூவாளூர்ப் புராணம், பேரூர்ப்புராணம், விநாயகபுராணம் ஆகியவற்றை இயற்றியவர். கச்சி ஆனந்த ருத்திரேசுவரர் வண்டுவிடுதூது, பதிற்றுப்பத்தந்தாதி, திருத்தணிகைப் பதிற்றுப்பத்தந்தாதி முதலிய பல பிரபந்தங்களை இயற்றியவர். திருத்தணிகைச் சரவணப்பெருமாளையர் விசாகப்பெருமாளையர் என்னும் இருபெரும் புலவர்களுடைய தந்தையார் கந்தப்பையர்

இவருடைய மாணவர். கச்சியப்பர் வாக்குவன்மை மிக்கவர். வாதம் செய்வதில் வல்லவர். பழம் பாடல்களை மனப்பாடம் செய்து ஒப்புவிப்பதுபோலப் புதிய செய்யுள்களை அவ்வளவு எளிதாக இயற்றுவாராம்.

இவரது வாத வன்மைக்கு எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சியைக் கூறுவதுண்டு. சிவஞானமுனிவர் தாம் இயற்றிய காஞ்சிப் புராணத்தைக் காஞ்சிபுரத்தில் அரங்கேற்றம் செய்த போது தொடக்கத்தில் கடவுள் வாழ்த்தை அரங்கேற்றும் போதே உள்ளூர்ப் புலவர் ஒருவர் அழுக்காற்றால் தல ஓதுவார் ஒருவரைத் தூண்டிவிட்டு, அவரைக்கொண்டு தடை நிகழ்த்தச் செய்தாராம். கடவுள் வாழ்த்து நடராசர் துதியாக அமைந் துள்ளதே! ஏகாம்பரேசுவரருக்குப் புராணம் பாட வந்த நீர் முதலில் கடவுள் வாழ்த்தாக ஏகாம்பரேசர் துதியைப் பாடாமல், நடராசர் துதியை எப்படிப் பாடலாம் என்பதே அவ்வழுக் காற்றுப் புலவருக்காகத் தல ஓதுவார் எழுப்பிய தடை. அழுக்காறு காரணமாக எழுந்த இப்பொருளற்ற தடைக்கு என்ன விடை கூறுவது என்று முனிவருக்குத் தோன்ற வில்லையாம். இந்நிலையில் கச்சியப்பர் இதை என்னிடம் விட்டுவிடுங்கள் என்று தாம் விடைகூற முன்வந்தாராம். ஓதுவாரை நோக்கி, தலத் தேவாரத்தை ஓதக் கேட்டுக் கொண்டாராம். தல ஓதுவார் ''திருச்சிற்றம்பலம்'' என்று கூறித் தலத் தேவாரப்பதிகத்தை ஓதத் தொடங்கினாராம். ஓதுவார் ''திருச்சிற்றம்பலம்'' என்று கூறிய உடன் அவ்வளவிலேயே நிறுத்தச் செய்து, காஞ்சித் தேவாரத்தை ஓதப் புகுந்த நீர் ''திருஏகாம்பரம்'' என்று சொல்லித் தொடங்காமல் ''திருச்சிற்றம் பலம்'' என்று கூறித் தொடங்குவதேன்? என்று வினவினாராம். எத்தலத்துப் பதிகத்தை ஓதத் தொடங்கினாலும் எழுவாயாகவும் இறுவாயாகவும் ''திருச்சிற்றம்பலம்'' என்பதை ஓதித் தொடங்குவதே முறை என்பது தாங்கள் அறிந்ததுதானே? என்று தல ஓதுவார் விடையிறுத்தாராம். நாம் அறிவோம், அனைவரும் அறிவர், உங்கள் உள்ளூர்ப்புலவர்க்குச் சொல்லும் என்று கச்சியப்பர் கூறவே அவையினர் பேராரவாரம் செய்து அவ்வழுக்காற்றுப் புலவரை நோக்கி நகையாடினராம். புலவர் வெட்கித் தலைகுனிந்து அதனோடு அடங்கிவிட்டாராம்.

அப்புறம் புராண அரங்கேற்றம் தடையின்றி நிகழ்ந்ததாம். கச்சியப்பரின் சமயோசித அறிவு இதனால் வெளிப்படுவதோடு, திருமுறை ஓதுவதில் திருச்சிற்றம்பலம் சொல்லித் தொடங்கும் வரன்முறையும் வெளிப்படுகிறது.

கச்சியப்பரின் வாதத்திறமைக்கு இன்னொன்றையும் கூறுவர். அவருக்குச் சடைமுடி பெரிதாக இருக்குமாம். படம் காண்க. நீராடி வழிபாடு முடித்துப் பாடம் சொல்லத் தொடங்குமுன் தம் சடைமுடியை விரித்துத் துணியுலர்த்து வதற்காகக் கட்டியிருக்கும் கொடியில் போட்டுத் தரையில் ஆசனத் தமர்வாராம். அவ்வளவு நீண்ட சடை. சடையைக் கொடியில் உலரப்போட்டுவிட்டுக் கீழே ஆசனத்தில் அமர்ந்து கொண்டு, "கொடி கட்டியிருக்கிறோம், வாதத்திற்கு வருவோர் வரலாம்" என்று வேடிக்கையாகக் கூவிவிட்டு மாணாக்கர் களுக்குப் பாடஞ்சொல்லத் தொடங்குவாராம்.



கவிராக்ஷஸ ஸ்ரீ கச்சியப்ப முனிவர்

காஞ்சிபுரத்தில் பிள்ளையார்பாளையத்திலுள்ள திருவாவடுதுறையாதீனக் கிளைமடத்தில் ஆசிரியர் சிவஞான முனிவரும் மாணவர் கச்சியப்ப முனிவரும் பல காலம் தங்கியிருந்திருக்கிறார்கள். சிவஞானமுனிவர் கச்சியப்பரை மட்டும் உடன் வைத்துக்கொண்டு உணவுண்ணும் பழக்க முடையவராம். ஆசிரிய மாணவர் உறவு அவ்வளவு நெருக்கமாக இருந்திருக்கிறது. ஒருசமயம் கச்சியப்பர் அட்டநாகபந்தம் ஒன்றைப் பாடிச் சித்திரத்தில் அடைக்கும் போது ஓர் எழுத்துத் தடைப்பட்டதாம். கச்சியப்பர் செய்வதறியாது வருந்தி யிருந்தனராம். ஒருநாள் நண்பகல் இருவரும் உணவு கொண்டிருந்தபோது சிவஞானமுனிவர் கச்சியப்பரை நோக்கி நீ சென்று ' த' கரத்தைப் போட்டுவிட்டு வா என்றாராம். கச்சியப்பர் சித்திரத்தில் அவ்வெழுத்தை இட அட்டநாக பந்தம் நிறைவாகிப் பொருள்நலமும் சிறந்தமைந்ததாம். ஆசிரியரின் ஆற்றலைக்கண்டு வியந்து அகமகிழ்ந்து கச்சி யப்பர் மீண்டும் ஆசிரியரிடம் வந்து போற்றி வணங்கி உடனிருந்து உண்டாராம்.

திருவாவடுதுறை ஆதீனத்தின் காஞ்சிபுரம் கிளைமடம் சிவஞானமுனிவரும் கச்சியப்பமுனிவரும் பலகாலம் உறையும் சிறப்பைப் பெற்றது. சிவஞானமுனிவர் நிறுவி வழிபட்ட சிவலிங்க சந்நிதி உள்ள சிறப்பைப் பெற்றது. சிவஞான முனிவர் மாபாடியத்தை எழுத இடமாக இருந்த சிறப்பைப் பெற்றது. கச்சியப்பமுனிவர் சமாதிக்கோயில் உள்ள சிறப்பைப் பெற்றது. கச்சியப்பமுனிவர் இங்கே தான் சமாதியடைந்தார். கச்சியப்பமுனிவர் முத்தி பெற்ற காலம் 20.04.1870 சாதாரண ஆண்டு சித்திரைத் திங்கள் 11-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை புனர்பூச நன்னாள். அவருக்கு அங்கேயே சமாதிக்கோயில் கட்டப்பெற்று, சமாதி மேடையில் திருவடி நிறுவப் பெற்றுள்ளது. **புலமைத்திறம் வளர வேண்டுவோர், ஞானமுதிர்வு வேண்டுவோர், கச்சியப்பர் சமாதிக்கோயிலை வலம்வந்து வழிபடும் வழக்கம் இன்றும் உள்ளது.**

காஞ்சிக் கிளைமடம் அண்மையில் திருப்பணி செய்யப் பெற்றுப் புதுப்பொலிவுடன் இப்போது அழகாகத் திகழ்கிறது. பெரும்பாலும் திறந்தவெளி. அங்கங்கே சிறு கோயில்கள், மண்டபங்கள், கட்டிடங்களாக உள்ளன. அழகிய நந்தவனமும் உள்ளது. அமைதியான இடம். அருமையான சூழல். தேர்வுக் காலங்களில் மாணவர்கள் கச்சியப்பர் சமாதிக்குச் சென்று வழிபட்டபின் தேர்வு எழுதுகின்றனர். நன்முறையில் தேர்ச்சி பெறுகின்றனர். திறந்தவெளியில் பள்ளி மாணவர்கள் கல்லூரி மாணவர்கள் தேர்வுக்காகப் படிக்கின்றனர். ஓய்வு நேரத்தில் விளையாடி மகிழ்கின்றனர். ஆதீனகர்த்தர் வரும்போது தங்குவதற்கென ஒரு சிறுகுடில் நவீன முறையில் கட்டப்பெற்றுள்ளது. தம்பிரான் சுவாமிகள் ஒருவர் நிலையாக இருந்து எல்லாவற்றையும் நன்கு கவனித்துக் கொள்ளுகிறார். இப்போது தம்பிரானாக உள்ளவர்கள் **ஸ்ரீமத் சுந்தரமூர்த்தித் தம்பிரான் சுவாமிகள்.**

நாம் காஞ்சிபுரம் செல்லுங் காலங்களி லெல்லாம் பிள்ளையார்பாளையம் கிளைமடத்திற்குச் சென்று சிவஞான முனிவர் வழிபட்ட மூர்த்தியையும், கச்சியப்பமுனிவர் சமாதியையும் வழிபடுவதுண்டு. இதில் நமக்கு விருப்பம் மிகுதி. சிலசமயம் தங்கி மகிழ்வதும் உண்டு.

திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் கச்சியப்பரிடம் மிகவும் ஈடுபாடு கொண்டவர். சிவஞானமுனிவரின் நூல்களிலும் கச்சியப்பமுனிவர் நூல்களிலும் பெரிதும் விருப்பமுடையவர். கச்சியப்பமுனிவரை வழிபடு குருவாகவே கருதியிருந்தவர். செய்யுள் செய்யும்பொழுதும் பாடஞ் சொல்லும்பொழுதும் தடைப்பட்டால் கச்சியப்பமுனிவரைத் தியானிப்பாராம். உடனே விரைவாகக் கருத்துகளும் சொற்களும் தடையின்றி எழுமாம். இவ்வனுபவத்தைப் பிள்ளையவர்களே கூறக் கேட்டதாக ஐயரவர்கள் எழுதுகிறார் (மீனாட்சிசுந்தரம்

பிள்ளையவர்கள் சரித்திரம் பாகம் 2, பக்கம் 277). கச்சியப்ப முனிவரின் பெருமைதான் என்னே!*

தொட்டிக்கலை சுப்பிரமணியமுனிவர்

முனிவர் இயற்றிய திருவாவடுதுறைக் கோவை கலைசைக் கோவை ஆகிய இரு நூல்களையும் 1903; 1935-ஆம் ஆண்டுகளில் அரும்பதவுரை குறிப்புரைகளுடன் ஐயரவர்கள் மிகச் சிறப்பாகப் பதிப்பித்துள்ளார். திருவாவடுதுறைக் கோவையின் இரண்டாம் பதிப்பு 1926-இலும் வெளிவந்துள்ளது. இவற்றுள் நூலாசிரியர் சுப்பிரமணிய முனிவரின் வரலாற்றை ஐயரவர்கள் மிக அருமையாக எழுதியுள்ளார். முனிவரின் வரலாறு மட்டுமின்றி வேறு பல அரிய செய்திகளும் அதனால் தெரிகின்றன. அதை அப்படியே முழுமையாக இங்கு எடுத்துக்காட்ட விரும்பினும் இடம் போதாமையால் இயல வில்லை எனினும் முனிவரின் வரலாற்றுச் செய்திகளை மட்டும் ஐயரவர்கள்' எழுதியுள்ளதனின்றும், வேறு சிலவற்றினின்றும் சுருக்கமாகக் கூறுவோம்.

"இந்நூலாசிரியராகிய சுப்பிரமணிய முனிவர் சிதம்பரத்தைச் சார்ந்த காட்டுமன்னார்கோயிலில் ஸ்ரீவீர நாராயணப்பெருமாள் கோயில் மேலை வீதியின் கீழ்சிறகி லுள்ளதொரு வீட்டிற் கார்காத்த வேளாளர் குலத்திற் பூநொடையார் கோத்திரத்திற் பிறந்தவர்" என்று ஊர் பேர் குலம் கோத்திரத்தோடு வீதியையும் வீட்டையுங்கூட அடையாளங் காட்டி ஐயரவர்கள் எழுதுகிறார். சுப்பிரமணியமுனிவர் சிவஞான முனிவரின் மாணாக்கர். சிவஞான முனிவரின் மாணாக்கர் பன்னிருவருள் கச்சியப்ப முனிவரோடு வைத்து

*கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாசாரியரையும் கச்சியப்ப முனிவரையும் ஒருவராகக்கருதிக் குழப்பிக் கொள்ளக்கூடாது. இருவர் பெயரும் கச்சியப்பர் எனினும் கந்தபுராணம் பாடியவர் காஞ்சி புரத்தினர், குமரகோட்டத்து அர்ச்சகர், கச்சியப்ப சிவாசாரியர். நம் கச்சியப்பமுனிவர் திருத்தணிகைப்பதியினர். காஞ்சியில் வதிந்தவர், திருவாவடுதுறையாதீன முனிவர். இவர் வேறு. அவர் வேறு. தமிழன்பர்கள் இதனை நன்கறிந்து பெயர்க் குழப்பத்தைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அவருக்கு அடுத்தபடியாக எண்ணப்பெறும் சிறப்பைப் பெற்றவர். 12-ஆம் பட்டம் திருச்சிற்றம்பல தேசிகர் காலத்தில் சின்னப்பட்டத்தில் இருந்த அம்பலவாணதேசிகரிடம் சைவ சந்நியாசமும் சிவதீட்சையும் ஞானோபதேசமும் பெற்றவர். இவரது செய்யுள்களின் இனிமை கருதி **''மதுரகவி''** சுப்பிரமணியமுனிவர் என வழங்கப்பெற்றார். பெரும்பாலும் தொட்டிக்கலையிலேயே இருந்தமையின் தொட்டிக்கலைச் சுப்பிரமணியத்தம்பிரான் என வழங்குவதுண்டு. தொட்டிக்கலை முன்னாள் செங்கற்பட்டு மாவட்டத்தில், இப்போது திருவள்ளூர் மாவட்டத்தில் திருவள்ளூர் வட்டத்தில் உள்ளது. ''சென்ன பட்டணத்துக்குச் சமீபமாயுள்ள ஆவடி ஸ்டேஷனில் இறங்கி இவ்வூர்க்குச் செல்ல வேண்டும்'' என்று ஐயரவர்கள் அடிக்குறிப்பெழுதுகிறார். தொட்டிக் கலையைக் கலைசை என்பது நூல் வழக்கு. முனிவரின் நூல்கள் பல கலைசையைப் பற்றியனவே. தொட்டிக்கலைக் கேசவ முதலியாரும் அவரது மரபினரும் முனிவரை ஆதரித்தவர்கள். தொட்டிக்கலையில் சிதம்பரேசர் கோயிலுக்கு அருகே முனிவருக்கு மடம் ஒன்று கட்டிக் கொடுத்தனர். முனிவர் வாழ்ந்த அம்மடம் இப்பொழுதும் சாமியார் மடம் என்று வழங்கப்படுவதாக ஐயர் எழுதுகிறார் (1935).

காட்டுமன்னார் கோயிலில் தோன்றி, துறைசையில் அருள்பெற்று, கலைசையில் உறைந்த முனிவர், தொண்டை நாட்டிலும் பாண்டிய நாட்டிலும் பல ஊர்களுக்கு யாத்திரை செய்து பற்பல பிரபந்தங்களைப் பாடினார்.

இவர் இயற்றிய நூல்கள் பல. அவற்றுள் இப்பொழுது தெரிந்தவை என்று 25 நூல்களை ஐயர் பட்டியலிட்டுக் காட்டுகிறார். அவை வருமாறு:

1. திருவாவடுதுறைக் கோவை
2. கலைசைக் கோவை
3. கலைசைச் சிலேடை வெண்பா
4. கலைசைச் சிதம்பரேசர் சந்நிதிமுறை
5. கலைசைச் சிதம்பரேசர் வண்ணம்
6. கலைசைச் சிதம்பரேசர் பஞ்சரத்தினம்

7. கலைசைச் சிவகாமியம்மை பஞ்சரத்தினம்
8. கலைசைச் சிதம்பரேசர் பரணி
9. கலைசைச் சிதம்பரேசர் கட்டியம்
10. திருக்குற்றாலச் சித்திரசபைத் திருவிருத்தம்
11. பழநிக் குழந்தைவேலர் பஞ்சரத்தினமாலை
12. ஸ்ரீசுப்பிரமணியர் திருவிருத்தம்
13. திருத்தணிகைத் திருவிருத்தம்
14. வடதிருமுல்லைவாயிற் கொடியிடையம்மைப் பிள்ளைத்தமிழ்
15. ஆயலூர் முருகர் பிள்ளைத்தமிழ்
16. திருச்செந்திற் சந்தவிருத்தம்
17. ஆவினன்குடிக்* கைலாசநாதர் பதிற்றுப்பத்தந்தாதி
18. திருமாளிகைத்தேவர் திருவிருத்தங்கள்
19. திருச்சிற்றம்பலதேசிகர் சிந்து
20. திருச்சிற்றம்பலதேசிகர் சந்தவிருத்தம்
21. அம்பலவாணதேசிகர் பஞ்சரத்தினமாலை
22. அம்பலவாணதேசிகர் வண்ணம்
23. அம்பலவாணதேசிகர் ஆநந்தக்களிப்பு
24. சிவஞானமுனிவர் துதி விருத்தங்கள்
25. சிவஞானமுனிவர் கீர்த்தனை

திருவாவடுதுறை ஆதீனப் புலவர்கள்

அரசவைகளும் ஆதீனங்களும் புலவர்களைக் கொண்டிருப்பது பண்டைக் காலந் தொட்டே வழக்கம். ஆஸ்தான கவிஞர்கள், ஆஸ்தான வித்துவான்கள், ஆஸ்தானப் புலவர்கள், ஆதீன வித்துவான்கள், ஆதீனப் புலவர்கள் என வழங்கப்பெறுவர். ஆஸ்தானங்களாலும் ஆதீனங்களாலும் புலவர்களுக்குச் சிறப்பு. புலவர்களால் ஆஸ்தானங்களுக்குப் பெருமை. அரசர்களும் ஆதீனங்களும் புரவலர்களாக விளங்கினர். புலவர்களைப் புரந்தனர். புலவர்களைப் புரந்தனர் என்றால் அதன்மூலம் மொழிகளையும் கலைகளையும் புரந்தனர் என்று பொருள். இத்தகைய புரவலர் புலவர் கூட்டுறவால்

* 17-வது நூல் - இவ் ஆவினன்குடி பழனியன்று. இது வேறு. தொண்டநாட்டிலுள்ளது.

நாட்டில் மொழிவளமும் கலைவளமும் செழித்தன. இலக்கணப் புலவர்கள், இலக்கியப் புலவர்கள், கவிஞர்கள், இசைப்புலவர்கள் எனப் பல்வேறு வகைப் புலவர்கள் அரசர்களாலும் ஆதீனங்களாலும் ஆதரிக்கப் பெற்றனர். அரசவையாவது ஆட்சி நிறுவனம். ஆதீனங்களோ சமய நிறுவனங்கள். ஆதலின் அரசவைகளைவிட ஆதீனங்களில் புலவர்களுக்கும் புலமைக்கும் மிகுந்த இடமுண்டு.

திருவாவடுதுறை ஆதீனப்புலவர்கள் வித்துவான்கள் என்றால், ஆதீனகர்த்தர்கள் சிலரும் தம்பிரான்கள் பலருமே புலவர்களாக விளங்கியிருக்கிறார்கள்.

சிவஞானமுனிவர்
கச்சியப்பமுனிவர்
தொட்டிக்கலைச் சுப்பிரமணியமுனிவர்
வேலாயுதமுனிவர்
இலக்கணம் சிதம்பரநாதமுனிவர் - ஆகிய முனிவர்களும்
வித்துவான் தாண்டவராயத் தம்பிரான் சுவாமிகள்
இலக்கணம் முத்துக்குமாரத் தம்பிரான்
பழனிக்குமாரத் தம்பிரான்
தருமபுரம் பரமசிவத் தம்பிரான் - ஆகிய தம்பிரான்களும்
சண்முகக் குற்றாலக் கவிராயர்
சேற்றூர் கந்தசாமிக் கவிராயர்
சேற்றூர் சுப்பிரமணியக் கவிராயர்
மு.ரா.அருணாசலக் கவிராயர்
அனந்தகிருஷ்ண கவிராயர் - ஆகிய கவிராயர்களும்
சர்க்கரைப் புலவர்
அவரது மகன் சீனிப்புலவர்
சிலேடைப்புலி பிச்சுவையர்
இராயசம் பொன்னுசாமி செட்டியார்
மதுரை இராமசாமிபிள்ளை - ஆகியோரும்
திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை
டாக்டர்.உ.வே. சாமிநாதையர்
பொன்னோதுவாமூர்த்திகள்
வி.சிதம்பரராமலிங்கம் பிள்ளை
த.ச.மீனாட்சிசுந்தரம் பிள்ளை
மகாவித்துவான் ச.தண்டபாணி தேசிகர்

நாகர்கோயில் ஆறுமுகம் பிள்ளை
தே.ஆ.ஸ்ரீநிவாசாசாரியார் - ஆகிய புலவர்களும்

திருவாவடுதுறை ஆதீன வித்துவான்களாக விளங்கியிருக்கிறார்கள்.

முனிவர்கள் தம்பிரான்களாகவும் புலவர்களாகவும் இருந்த போதிலும், புலவர், தம்பிரான் என்ற நிலைகளுக்கு மேம்பட்ட நிலையில் முனிவர்களாகத் திகழ்ந்தமையான் அத்தகையோரை ஆதீன முனிவர்கள் என்று தனியே எடுத்துக் கூறினோம். தாண்டவராயத் தம்பிரான் சுவாமிகளையும் அவ்வாறே, சிறந்து விளங்கிய தம்பிரான்கள் வரிசையில் வைத்துத் தனியே கூறினோம்.

ஏனைய புலவர்கள் பலரையும் பற்றி ஈண்டு விரிவாகக் கூறற்கு இடம் போதாமையின், பிள்ளையவர்கள், ஐயரவர்கள், பொன்னோதுவாமூர்த்திகள், வி.சிதம்பர ராமலிங்கம்பிள்ளை, த.ச.மீ., ச.தண்டபாணிதேசிகர், தே.ஆ.ஸ்ரீ. ஆகிய சிலரைப் பற்றி மட்டும் சுருக்கமாகக் கூறுவோம்.

பிள்ளையவர்கள்
(1815-1876)

அக்காலத் தமிழுலகில் **பிள்ளையவர்களும் நாவலரும் வள்ளலாரும் தமிழ் மூவராக விளங்கினார்கள்.**

பிள்ளையவர்கள் என்றால் திருவாவடுதுறையாதீன மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள். நாவலர் என்றால் யாழ்ப்பாணத்துநல்லூர் ஆறுமுக நாவலர். வள்ளலார் என்றால் வடலூர் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள்.

நாவலர் என்றால் எப்படி ஆறுமுகநாவலரைக் குறிக்குமோ, பாரதியார் என்றால் எப்படி மகாகவி சுப்பிரமணிய பாரதியாரைக் குறிக்குமோ, ஐயரவர்கள் என்றால் எப்படி டாக்டர். உ.வே.சாமிநாதையரவர்களைக் குறிக்குமோ அப்படிப் பிள்ளையவர்க ளென்றால் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களையே குறிக்கும்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போலப் பிள்ளையவர்களும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் போல நாவலரும், சென்னைப் பல்கலைக் கழகம் போல வள்ளலாரும் நடமாடும் பல்கலைக்கழகங் களாகத் திகழ்ந்தார்கள். இம்மூவரோடு நான்காமவராக ஒருவரைச் சேர்க்க வேண்டுமென்றால் மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளையைச் சேர்க்கலாம்.

இந்நால்வரில் மூவர் திருவாவடுதுறையாதீனத்தோடு நேர் தொடர்புகொண்டவர்கள். பிள்ளையவர்கள் திருவாவடு துறையாதீன வித்துவான். நாவலர் திருவாவடுதுறையாதீனத்தால் அப்பெயர் பெற்றவர், நாவலர் பட்டம் வழங்கப் பெற்றவர். வேதநாயகம்பிள்ளை கிறிஸ்துவராயினும் சமரசக் கிறிஸ்துவர். சர்வசமய சமரச கீர்த்தனைகள் பாடிய அவர் திருவாவடுதுறை யாதீனத்தினிடம் உள்ளன்போடு பழகினார் , மிகவும் தொடர்பு வைத்திருந்தார். வள்ளலார் ஒருவருக்குத்தான் திருவாவடுதுறை யாதீனத்திடம் நேர் தொடர்பு இல்லை. நேர்தொடர்பு இல்லா விடினும் இளமையில் சென்னையில் உறைந்த காலத்தில் சென்னையில் திருவாவடுதுறையாதீனக் கட்டளை மடத்தி லிருந்த வித்துவான் தாண்டவராயத்தம்பிரான் சுவாமிகளுடன் நல்ல தொடர்பு இருந்தது.

பிள்ளையவர்களின் காலம் 06.04.1815 - 01.02.1876. 61 ஆண்டுகாலம் தமிழ் வாழ்வு வாழ்ந்திருந்த பிள்ளையவர்கள் அதில் பாதிக் காலத்திற்குமேல் திருவாவடுதுறை ஆதீனத்துடன் தொடர்பு கொண்டிருந்தார். 14-ஆம் பட்டம் குருமகாசந்நிதானம் வேளூர் சுப்பிரமணியதேசிகர் காலத்தில் திருவாவடுதுறைக்கு வந்து ஆதீனத் தொடர்பு பெற்ற பிள்ளையவர்கள் 15-ஆம் பட்டம் குருமகாசந்நிதானம் அம்பலவாணதேசிகர் காலத்திலும் 16-ஆம் பட்டம் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் காலத்திலும் ஆதீன மகாவித்துவானாகச் சிறந்து விளங்கினார். இறுதிக் காலம்வரை ஆதீன மகாவித்துவானாகவே திகழ்ந்தார். திருவாவடுதுறையிலேயே ஆதீனவளாகத்தில் தாம் வசித்த ஆதீனக் கட்டிடத்திலேயே இறைவன் திருவடி நீழலை யடைந்தார்.

இப்போது இருபத்துமூன்றாவது குருமகாசந்நிதானமாக அருளாட்சி செலுத்தி வரும் சீர்வளர்சீர் சிவப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள் பிள்ளையவர்கள் வசித்த இல்லத்தை அவர் பேரால் நினைவில்லமாக ஆக்கியருளியிருக்கிறார்கள். 1993-ஆம் ஆண்டு முதலாகத் தொடர்ந்து ஆண்டுதோறும் ஆதீன குருமுதல்வரின் மகரத்தலைநாள் குருபூசை விழாவில் ஐந்தாம் திருநாளில் தமிழ்ப் புலமையும் தமிழ்த் தொண்டும் ஆற்றிவரும் முதுபெரும்புலவர் ஒருவருக்குப் பிள்ளை யவர்களின் பேரால் பொற்கிழி வழங்கியும் பொற்கணையாழி யணிவித்தும் பொன்னாடை போர்த்தியும் சிறப்பித்து வருகிறார்கள்.*

பிள்ளையவர்களின் வரலாற்றை ஐயரவர்கள் 1933, 1934-ஆம் ஆண்டுகளில் இரண்டு பாகங்களாக, இரண்டும் சேர்ந்து 767 பக்கங்கள் கொண்ட பெருநூலாக, எழுதி வெளி யிட்டார். 1933-ஆம் ஆண்டு யாம் பிறந்த ஆண்டு. 1954-இல் எமது இருபத்தோராம் அகவையில் யாம் பிள்ளை யவர்களின் சரித்திர நூலை வாங்கினோம். இன்று பதினைந்தாயிரம் நூல்களை, பெரும்பாலும் கருவி நூல்களையே, ஆய்வு நூல்களையே கொண்டுள்ள எமது நூலகத்தில் பிள்ளை யவர்கள் சரித்திரம் 99-ஆம் எண்ணையுடையது. அதன்பின் இவ்வைம்பத்துநான்கு ஆண்டுகளில் குறைந்தது ஆண்டுக்கு ஒருமுறையாவது ஏறத்தாழ அறுபது முறைக்குமேல் அதனைப் படித்திருப்போம். அவ்வாறே ஐயரவர்களின் என் சரித்திரமும். என்சரித்திரத்தை ஐயரவர்கள் நிறைவு செய்யாக் குறை எமக்குப் பெருங்குறை. பின்னாளில் கி.வா. ஜகந்நாதையரவர்கள் ''என் ஆசிரியப்பிரான்'' என்று ஐயரவர்களின் பின்னாளைய

* திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தார் 1976ஆம் ஆண்டு தொடங்கி ஆண்டுதோறும் மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் பெயரால் விழா நடத்தித் தக்க தமிழறிஞர் ஒருவருக்கு விருதும் பொற்கிழியும் வழங்கி வருகிறார்கள். இதுவரை 32 அறிஞர்களுக்கு வழங்கியுள்ளனர். இவ் 2008ஆம் ஆண்டு 33வது ஆண்டாக விழா நடத்தி விருதும் பொற்கிழியும் வழங்கப்பெற்றது.

வரலாற்றை எழுதி ஒருவாறு நிறைவு செய்தார். பிள்ளையவர்களின் சரித்திரத்தையும் ஐயரவர்களின் என்சரித்திரத்தையும் தமிழன்பர்கள் தவறாது படிக்க வேண்டும். ஒருமுறை இருமுறை படித்தாற்போதாது. அவ்வப்போது எடுத்துப் படிக்க வேண்டும். பலமுறை படிக்கவேண்டும். இவற்றைப் படிப்பதைப் பொழுது போக்காகவும் கொள்ளவேண்டும். யாம் அப்படித்தான். அந்நாளைய தமிழுலகின் வரலாறுகள் இவை. பார்வை நூலாக (ரெபரன்ஸ் புக்காக) எந்நாளும் கையிலிருக்க வேண்டும்.

பிள்ளையவர்களின் சரித்திரத்திலும் சரி, ஐயரவர்களின் என் சரித்திரத்திலும் சரி பாதிக்குமேல் திருவாவடுதுறையாதீன வரலாறுதான். "**தில்லை பாதி திருவாசகத்தில்**" என்பதுபோல, "**பிள்ளைபாதி பெரியபுராணத்தில்** (பிள்ளை பாதி புராணம் பாதி)" என்பதுபோல, **திருவாவடுதுறை பாதி பிள்ளையவர்கள் சரித்திரத்தில்**, திருவாவடுதுறை பாதி **ஐயரவர்களின் என்சரித்திரத்தில்.** பிள்ளையவர்களின் சரித்திரத்தை வெளியிடும் உரிமையைத் திருவாவடுதுறை ஆதீனமே ஏற்று எக்காலத்திலும் தடைபடாமல் நூல் கிடைக்கும்படிச் செய்து கொண்டிருக்க வேண்டும் என்பது எம் எண்ணம்.

அண்மையில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஓலைச் சுவடித்துறை இணைப் பேராசிரியர் முனைவர் வே.இரா. மாதவன் எழுதிய " பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை " என்ற 112 பக்க நூல் மணிவாசகர் பதிப்பக வெளியீடாக 25.11.2000-த்தில் வெளிவந்தது. ஐயரது பெருநூலின் பிழிசாறாக அமைந்த இச் சிறுநூலை யாம் ஒரே மூச்சில் படித்து முடித்து விட்டோம். அவ்வளவு அருமையாக இருக்கிறது.

பிள்ளையவர்கள் "பாடம் சொல்லப் பிறந்தவர்" என்றே ஐயரவர்கள் எழுதுகிறார். பாடம் சொல்வதில் பிள்ளையவர்களுக்குச் சலிப்பே ஏற்படவில்லை. உண்ணும்போதும் உறங்கும்போதும் பயண காலங்களிலும் கூடப் பாடஞ் சொல்வார். பாடம் சொல்லும்போது பெரும்பாலும் கையில் நூல்களையோ ஏடுகளையோ வைத்துக்கொள்வதில்லை. அனைத்தும் பெரும்பாலும் மனப்பாடம். மாணாக்கர்களுக்கு

உண்டி, உடை, உறையுள் கொடுத்துப் பாடம் சொன்னார். மாணாக்கர்கள் தங்கிப் பாடம் கேட்பதற்காகவே மயிலாடு துறையில் வீடு ஒன்றை விலைக்கு வாங்கினார். மாணவர் சிலருக்குத் திருமணமும் செய்து வைத்தார். சைவரென்றும், வைணவரென்றும், கிறிஸ்துவரென்றும் பாராது அனைவ ருக்கும் பாடம் சொல்லியிருக்கிறார். சவேரிநாதபிள்ளை என்றொரு கிறிஸ்துவர் பிள்ளையவர்களிடம் இறுதிவரை பாடங்கேட்டிருக்கிறார். இறுதிநாளில் சவேரிநாத பிள்ளையின் மார்பின்மீது சாய்ந்தபடியேதான் பிள்ளையவர்களின் உயிர் பிரிந்தது. சவேரிநாது! சவேரிநாது! என்று பிள்ளையவர்கள் அவரை அன்போடு அடிக்கடி அழைப்பாராம். பிள்ளை யவர்களின் மாணாக்கராக மட்டுமின்றிப் பணிவிடையாகவும் சவேரிநாது விளங்கியிருக்கிறார். புதுச்சேரி சவரிராயலுநாயக்கர் என்ற கிருஸ்தவரும் நாகூர் குலாம்காதர் நாவலர் என்ற இஸ்லாமியரும் பிள்ளையவர்களிடம் பாடங்கேட்டனர். **பிள்ளையவர்களின் இல்லம் ஒரு குருகுலமாகவே திகழ்ந்தது.** மாணாக்கர் நலமே தம்முடைய நலம் என்று வாழ்ந்தவர் பிள்ளையவர்கள். கிடைக்கும் பணத்தை மாணாக்கர் நலனுக்கே செலவிட்டுவிடுவார். இதனால் பல சமயங்களில் வறுமையில் வாடுவார். கடன்கள் ஏற்பட்டு வருந்துவார்.

திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் பிள்ளை யவர்கள், தருமபுரம் திருப்பனந்தாள் மதுரை குன்றக்குடி ஆதீனங்களாலும் பாராட்டப் பெற்றவர்.

பிள்ளையவர்கள் இருப்பது ஆதீனத்திற்கே கௌரவம் என்று திருவாவடுதுறை ஆதீனகர்த்தர்கள் எண்ணினார்கள். அதை வெளிப்படையாகவே காட்டினார்கள். அதற்கேற்பப் பிள்ளையவர்களை அன்புடன் நடத்தினார்கள். பிள்ளை யவர்களிடம் அன்புடன் நடந்துகொண்டார்கள். பந்திக் கட்டில் இல்லறத்தார் வரிசையில் பிள்ளையவர்களுக்கு முதல் இடம். அவ்வளவு சிறப்பு அவருக்கு. துறவறத்தார் வரிசையில் ஆதீனகர்த்தருக்கு முதலிடம் என்பது சொல்லாமலே விளங்கும். கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. பிள்ளையவர்கள் எங்கிருந்தாலும் அவருக்குச் சிறப்பு.

ஆனால் அவர் திருவாவடுதுறையில் இருப்பது ஆதீனத்திற்குச் சிறப்பு.

பிள்ளையவர்களின் நூல்கள்

பிள்ளையவர்கள் **"புராணம் பாடும் புலவர்"** என்றே வழங்கப் பெற்றிருக்கிறார். தலபுராணங்களுக்கு அக்காலத்தில் மதிப்பு மிகுதி. பிள்ளையவர்கள் பாடியவற்றில் தல புராணங்களும் பல்வேறு பிரபந்தங்களுமே மிகுதி.

பிள்ளையவர்கள் பாடியன–

தலபுராணங்கள்	22	கலம்பகம்	2
சரித்திரம்	3	கோவை	3
காப்பியங்கள்	2	உலா	1
பதிகங்கள்	4	தூது	2
பதிற்றுப்பத்தந்தாதிகள்	6	குறவஞ்சி	1
திரிபந்தாதிகள்	4	சிலேடை	1
யமக அந்தாதிகள்	3	வேறு நூல்கள்	பல
வெண்பா அந்தாதி	1	சிறப்புப் பாயிரங்கள்	23
மாலைகள்	7	தனிச் செய்யுள்கள்	48
பிள்ளைத்தமிழ்	10		

இது மாதவன் பட்டியலின் சுருக்கம். பிள்ளையவர்களின் பிரபந்தங்களை யெல்லாம் திரட்டித் திருவாவடுதுறை யாதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு என ஐயரவர்கள் பதிப்பித்திருக்கிறார்(1910). எமது நூலகத்தில் 100-ஆவது புத்தகம். பிள்ளையவர்கள் இயற்றிய நூல்களிற் பல அவர் காலத்திலேயே அச்சிற் பதிப்பிக்கப்பெற்று வெளிவந்து புகழோடு விளங்கின. அம்முதற்பதிப்புகள், பழம் பதிப்புகளில் சிலவும் எம்மிடமுண்டு. **யாம் சேர்த்து வைத்துள்ள செல்வம்** இவை போன்ற பழம்பெரும் **நூல்களே; எமது நூலகமே.**

பிள்ளையவர்களின் பெரும்பணி ஐயரை உருவாக்கியது
பிள்ளையவர்களும் ஐயரவர்களும்

பிள்ளையவர்களின் தமிழ் வாரிசு கல்வி வாரிசு ஐயரவர்கள். பிள்ளையவர்களின் பணிகளிளெல்லாம் பெரும்பணி ஐயர வர்களை உருவாக்கியதே. **சங்கத்தமிழ் தந்தவர் சாமிநாதையர்.**

சாமிநாதையரைத் தந்தவர் பிள்ளையவர்கள். ஐயர் இன்றேல் சங்கத்தமிழ் எங்கே? பிள்ளையவர்கள் இன்றேல் ஐயரவர்கள் எங்கே?

பிள்ளையவர்களின் காலத்தில் சங்க இலக்கியங்களைப் பாடஞ்சொல்லும் வழக்கமில்லை. சங்க இலக்கியங்களுக்குப் பிற்பட்ட காலத்தனவான காப்பியங்களும் புராணங்களும் சமய இலக்கியங்களும் பிரபந்தங்களுமே பாடஞ்சொல்லப் பெற்றன. சங்க நூல்கள் பெயரளவில் கூடப் புலவர் பலரால் அறியப்பெறாத காலம். சங்க இலக்கியங்களில் ஒரோ வழி அறக்கருத்துகள் இருப்பினும், காதலும் வீரமுமே (போருமே) மிகுந்திருந்ததையும், தொட்ட இடமெல்லாம் மதுவும் மாமிசமும் (கள்ளும் புலாலும்) தட்டுப்பட்டதையும் அங்கங்கே பரத்தமை தலை காட்டியதையும் கண்ட இடைக் காலத் தமிழுலகம், புலவருலகம், சமயஉலகம், குறிப்பாகச் சைவஉலகம், சங்க இலக்கியப் பயிற்சியைக் குறைத்துக் கொண்டது. சங்க இலக்கியங்களுக்கு இறைச்சி நூல்கள் (இறைச்சி - புலால்) என்றொரு இரகசியக் குறிப்புப் பெயரையும் மறைவாக வழங்கிக் கொண்டிருந்தது. சமய இலக்கியங்களிலேயே ஆழ்ந்தது. சங்க இலக்கியங்களெல்லாம் புலவர் வீட்டுப் பரணிகளில் ஆதீனப் பரணிகளில் கட்டிக் கிடந்தன, கட்டுண்டு கிடந்தன. பாடம் சொல்வோர் பாடம் கேட்போர் கைகளில், நாவில், உதட்டில், உள்ளத்தில் தவழ வில்லை. சில தலைமுறைகளுக்கு அவை தலைமறைவாக இருந்தன. பரணிகளில் இருந்தன. பயிற்சியில் இல்லை.

திருவாவடுதுறை ஆதீனத்திலும் சங்கஇலக்கிய ஏடுகள் இருந்தன. பிள்ளையவர்களும் அவற்றை அறிவார். ஆயினும் சங்க நூல்களில் ஒன்றையாவது அவர் பாடம் சொல்ல வில்லை. சங்கநூல்களில் ஒன்றைக்கூட சாமிநாதையர் பாடம் கேட்டதில்லை. கேட்டதெல்லாம் காப்பியங்கள், புராணங்கள், வண்டிக்கணக்கில் பிரபந்தங்கள்.

ஐயரவர்களின் அறிவுக் கண்களைத் திறந்துவிட்டவர் பிள்ளையவர்கள். ஐயரவர்களுக்கு முதன்முதலில் சங்கநூற்

களஞ்சியக் கதவைத் திறந்துவிட்டவர் சேலம் இராமசாமி முதலியார், கும்பகோணம் மாவட்ட முன்சீப். பிள்ளையவர்களின் மறைவுக்குப்பின் ஐயரவர்கள் கும்பகோணம் அரசினர் கல்லூரியில் தமிழாசிரியப் பணியாற்றுங் காலத்தில் 21.10.1880-இல் சேலம் இராமசாமி முதலியாரைக் காண நேரிட்டது. சங்க நூல்களுக்கும் ஒரு நல்ல காலம் நேரிட்டது. ஐயரவர்கள் அதுவரை அறியாதிருந்த ஒரு புது உலகத்தை இராமசாமி முதலியார் காட்டினார். அவ்வுலகத்தில் புகுந்து விளையாடுவதற்குரிய தகுதியையும் திறமையையும் பிள்ளையவர்களாற் பெற்றிருந்த ஐயரவர்கள் சங்கத்தமிழ் தந்த சாமிநாதையரானார். அந்த அளவுக்கு ஐயரை ஆளாக்கிய அருமையும் பெருமையும் பிள்ளையவர்களுக்கே உரியது.

சேலம் இராமசாமி முதலியாரால் தாம் ஒரு புதிய உலகத்தைக் காண நேர்ந்ததை, மறைந்திருந்த பழைய தமிழ் உலகத்தைப் புதிதாகக் காணநேர்ந்ததை, "என்ன பிரயோசனம்" என்ற தலைப்பில் என்சரித்திரத்தில் 86-ஆம் அத்தியாயமாக எழுதியிருக்கிறார் ஐயரவர்கள்.

மீண்டும் சொல்லுகிறோம். பிள்ளையவர்களின் சரித்திரத்தைப் படியுங்கள். ஐயரவர்களின் என்சரித்திரத்தைப் படியுங்கள். அக்காலத் தமிழுலகம் தெரியும். திருவாவடுதுறை ஆதீனத்தின் அருமை பெருமைகள் தெரியும்.

ஐயரவர்களும் திருவாவடுதுறை ஆதீனமும்

உ.வே.சாமிநாதையர் என்பதில் உ- உத்தமதானபுரம். தஞ்சாவூர் மாவட்டத்தில் பாபநாசம் அருகில் உள்ளது. 14.02.1969-இல் நாம் உத்தமதானபுரத்தைப் பார்வையிட்டோம். ஐயரவர்களின் வீட்டைத் தரிசித்தோம். ஐயரவர்களின் பாட்டனார் துணி துவைத்த "சோமப்பாட்டா கல்"லில் சிரத்தைத் தாழ்த்தி முன்நெற்றியை உரசி மகிழ்ந்தோம். ஐயரவர்களின் வீட்டில் வசித்த அவரது உறவினர்களால் சிற்றுண்டியும் காபியும் அளித்து உபசரிக்கப்பெற்றோம். ஐயரவர்களின் சாய்வு மேசையை(டெஸ்க்கை)த் தொட்டுக்

கண்களில் ஒற்றிக் கொண்டோம். அதில் தலை தாழ்த்தி முன்நெற்றியை உரசி இன்புற்றோம். ஐயரவர்களின் அன்னையார் சரஸ்வதி யம்மையார் பெயரால் சரஸ்வதி விலாசம் என்று அவ்வீடு விளங்கிற்று. ஐயரவர்களின் பிறந்த பெரு நாள் 1855 பிப்ரவரி 19 ஆனந்த, மாசி 9, திங்கட்கிழமை. பிள்ளைத் திருநாமம் வேங்கடராமன்.

ஏழாம் அகவையில் அரியலூர்ச் சடகோபையங்காரிடம் தமிழ் கற்கப் புகுந்தார். ''சடகோபையங்காரிடம் என்று நான் மாணாக்கனாகப் புகுந்தேனோ அன்றே தமிழ்த்தாயின் அருட்பரப்பிற் புகுந்தவனானேன். எனக்குத் தமிழில் சுவை உண்டாகும் வண்ணம் கற்பித்த முதற்குரு சடகோபையங்காரே. .... என் உள்ளத்துக்குள் அந்த இளம்பருவத்தில் தமிழ்விதையை விதைத்தவர் அவரே .... ஏழாம் பிராயத்திலே அவர் சிறிது சிறிதாக ஊட்டிய தமிழமுதத்தின் சுவை இன்றும் எனக்கு மறக்கவில்லை'' என்று என்சரித்திரத்தில் ஐயர்'எழுதுகிறார்(பக்கம் 103; 112).

பின்பு குன்னம் என்ற ஊரில் சிலரிடம் பாடங்கேட்டார். பதினான்காம் அகவையில் 16.06.1868 விபவ , ஆனி, 4-இல் திருமணம். மனைவியார் மதுராம்பிகை. திருமணமான புதிதில் தமக்கிருந்த மனநிலையை ஐயர் பின்வருமாறு எழுதுகிறார். ''**தமிழ்தான் எனக்குச் செல்வம்;** அதுதான் என் **அறிவுப்பசிக்கு உணவு; எவ்வளவுக் கவ்வளவு நான் அதன் தொடர்பை அதிகப்படுத்திக் கொள்கிறேனோ அவ்வளவுக் கவ்வளவு** எனக்கு **உத்**ஸாகம், நல்லது செய்தோமென்ற **திருப்தி,** லாபமடைந்தோமென்ற உணர்ச்சி உண்டாகின்றன. அன்றும் சரி, இன்றும் சரி, இந்த நிலை மாறவே இல்லை''. என்சரித்திரம்(பக்கம் 187)

திருமணமான அடுத்த ஆண்டு 15-ஆம் அகவையில் 1869-இல் செங்கணம் விருத்தாசல ரெட்டியாரிடம் பாடங் கேட்கச் சென்றார். ரெட்டியார் தமிழ்க்கல்வியோடு, வசிக்க வீடும், செலவுக்குப் பணமும், உணவுப் பொருள்களும் கொடுத்து ஆதரித்தார். ஒவ்வொரு மாதத் தொடக்கத்திலும்

இரண்டு கல நெல்லும் இரண்டு ரூபாயும் ஐயரவர்களின் தந்தையாருக்கு அனுப்பிவிடுவார். 1871 மார்ச் வரை செங்கணத்தில் விருத்தாசல ரெட்டியாரிடம் பாடங் கேட்டார். அரியலூர் சடகோபையங்காரிடம் கற்றது உயர்நிலைப்பள்ளிக் கல்வி போன்றது என்றால், செங்கணம் விருத்தாசல ரெட்டியாரிடம் கற்றது கல்லூரிக்கல்வி போன்றது எனலாம். தம்மாலான சிறந்த தமிழ்ப் பயிற்சியை அளித்த விருத்தாசல ரெட்டியார் பிள்ளையவர்களைப் பற்றிக்கூறி, 'உமக்குத் திருப்தி உண்டாகும்படி பாடம் சொல்லக்கூடிய பெரியார் அவர் ஒருவரே', 'அவரிடம் போங்கள்' என்று பிள்ளையவர்களிடம் போகச்சொன்னார்.

அரியலூரிலும் செங்கணத்திலும், இடையே சில இடங்களிலும் பாடங்கேட்ட காலங்களில் ஐயரவர்கள் பெற்றோருடன் வசித்த ஊர்கள், பழகிய ஊர்கள் உடையார் பாளையம், அரியலூர், மறவநத்தம், செங்கணம், களத்தூர், வெண்பாவூர், வெங்கனூர், துறைமங்கலம், பெரம்பலூர், ஊற்றத்தூர், திருப்பிடவூர் என்பனவாம். திருப்பிடவூரை மட்டும் நாம் இங்கு சேர்த்துச் சொல்லியுள்ளோம். இஃதொன்று தவிர ஏனைய யாவும் ஐயரவர்களின் என்சரித்திரத்தில் இடம் பெற்ற ஊர்களே. இவையெல்லாம் அன்றைய திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காவிரி வடகரைப் பகுதியில் அமைந்த ஊர்கள். திருச்சிராப்பள்ளி மாவட்டம் சமயபுரத்தில் பிறந்து வளர்ந்து திருஅரங்கத்திலும் திருச்சிராப் பள்ளியிலும் படித்துப் பணியாற்றிய யாம் அக்காலத்தில் சமயம் நேரும்போதெல்லாம் இவ்வூர்களைச் சுற்றிப்பார்த்து அலைந்து திரிந்து மகிழ்வதுண்டு.வெண்பாவூர் என்ற பெயர் இலக்கணப் பெயரல்லவா? பாடல் பெற்ற தலங்கள் என்பது போல ஐயரவர்கள் பாடங்கேட்ட தலங்களல்லவா இவை. ஐயரவர்கள் படித்த, பழகிய, வசித்த இவ்வூர்களைச் சுற்றிப் பார்த்தல் ஒரு தமிழ் உலா, தமிழ் யாத்திரை. "திருச்சிராப்பள்ளி மாவட்டம் காவிரி வட கரை நாட்டில் சங்ககாலம் முதல் சாமிநாதையர் காலம் வரை தமிழ் வளர்த்த ஊர்கள்" என இவற்றை யாம் செல்லமாகக் குறிப்பிடுவதுண்டு.

ஐயரவர்கள் 1871-இல் பிள்ளையவர்களிடம் சென்று பாடங்கேட்கத் தொடங்கினார். 01.02.1876-இல் பிள்ளையவர்கள் இறைவன் திருவடி நீழலைச் சேரும்வரை ஆறு ஆண்டுகள் பிள்ளையவர்களின் தலைமாணாக்கராக இருந்து பாடங் கேட்டார். பாடங்கேட்கச் சென்ற புதிதில் வேங்கடராமன் என்ற பெயரைச் சாமிநாதன் என்று பிள்ளைவர்கள் மாற்றினார். ஐயரை அவரது வீட்டில் "சாமா" என்று செல்லமாக அழைப்பார்களாம். சாமா என்ற மரூஉப் பெயரின் முழுவடிவமான சாமிநாதன் என்பதையே புதிய பெயராகப் பிள்ளையவர்கள் சூட்டினார். வேங்கடராமன் சாமிநாதன் ஆனார். பிள்ளையவர்கள் அவ்வாறு ஆக்கினார். இது பிள்ளையவர்கள் ஐயருக்குச் செய்த (சைவத்)தமிழ்த் தீக்கை எனலாம். வீட்டில் வழங்கிய செல்லப்பெயரே ஆசிரியரால் தீட்சா திருநாமமாகி இறுதிவரை நிலைப்பதாயிற்று.

பிள்ளையவர்களிடம் 1871-இல் பாடங்கேட்கத் தொடங்கிய ஐயரவர்கள் பிள்ளையவர்களின் வாழ்நாள் முழுவதும், அதாவது பிள்ளையவர்களின் இறுதிக் காலம் (01.02.1876) வரை ஆறு ஆண்டுகள் பாடங்கேட்டார். பிள்ளையவர்கள் மயிலாடுதுறையில் வசித்த காலத்திலும் திருவாவடுதுறை ஆதீன வித்துவானாகத் திருவாவடுதுறையில் வசித்த காலத்திலும் பாடங்கேட்டார். பிள்ளையவர்கள் இறைவன் திருவடிநிழலை அடைந்தபின் 16-ஆம் பட்டம் மேலகரம் சுப்பிரமணிய தேசிகரிடமும் பாடங்கேட்டார். பிள்ளை யவர்களுக்குப்பின் திருவாவடுதுறை ஆதீன வித்துவானாகவும் நியமிக்கப்பெற்று விளங்கினார். இவ்வாறாக ஐயரவர்களின் தொடர்பு மாணவராகவும் ஆசிரியராகவும் திருவாவடு துறையில் பிள்ளையவர்களுக்குப் பின்பும் தொடர்ந்தது.

இந்நிலையில், பிள்ளையவர்களின் மாணவர்களில் ஐயரவர்களுக்கு மூத்தவரான பூவாளூர் தியாகராசச் செட்டியார், கும்பகோணம் அரசினர் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராகப் பணியாற்றியவர். ஓய்வுபெற்றார். அவர் தமக்குப்பின் தம் பணியில் ஐயரவர்களை அமர்த்த விரும்பித்

திருவாவடுதுறைக்கு வந்து சந்நிதானம் மேலகரம் சுப்பிரமணிய தேசிகரைத் தரிசித்து, நிலையைப் பக்குவமாக விளக்கி வற்புறுத்திக்கூறி இசைவு பெற்று, ஐயரவர்களை அழைத்துச் சென்று, கும்பகோணம் அரசினர் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் பணியில் அமர்த்தச்செய்தார். 14.02.1880 -இல் கும்பகோணம் அரசினர் கல்லூரிப் பணியிற் சேர்ந்தார்.

பிள்ளையவர்களிடம் ஆறு ஆண்டுகளும் அதன்பின் தேசிகரிடம் நான்கு ஆண்டுகளும் ஆக ஏறத்தாழப் பத்து ஆண்டுகள் திருவாவடுதுறையே கதியாகக் கிடந்த ஐயரவர்களுக்குத் திருவாவடுதுறையை விட்டுப் பிரிய மனமில்லை. மிகவும் கலங்கினார். ''எனக்கு உலக மெல்லாம் திருவாவடுதுறை மடத்திலே இருந்தது. அங்குள்ள பொருள்களைப் பிரியும்போது உலகத்தையே பிரிவது போன்ற உணர்ச்சிதான் எனக்கு ஏற்பட்டது'' என்று எழுதுகிறார் (என் சரித்திரம், பக்கம் 672).

குடந்தைக் கல்லூரியில் 1880 முதல் 1903 வரை இருபத்துமூன்றாண்டுகள் பணியாற்றினார். அதன்பின் சென்னைக்கு மாநிலக்கல்லூரிக்கு மாற்றலாகி 1903 முதல் 1919 வரை பதினாறு ஆண்டுகள் பணியாற்றி ஒய்வுபெற்றார்.

ஐயரவர்களைப் பதவிகள் தேடி வந்ததுபோன்றே பட்டங்களும் தேடிவந்தன. அரசாங்கத்தார் 1906-ஆம் ஆண்டில் ''மகாமகோபாத்தியாய''ப் பட்டத்தை அளித்துச் சிறப்பித்தனர். அதுவரை அப்பட்டம் வடமொழி வித்துவான்களுக்கே வழங்கப்படுவதாயிருந்தது. முதன்முதலில் மகாமகோ பாத்தியாயப் பட்டம் பெற்ற தமிழ்வித்துவான் ஐயரவர்களே. காசியிலுள்ள பாரத தர்ம மண்டலத்தார் ''திராவிட வித்தியா பூஷணம்'' என்ற பட்டத்தை 1917-இல் வழங்கிச் சிறப்பித்தனர். காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீசங்கராசாரியசுவாமிகள் 1925-இல் ''தாக்ஷிணாத்ய கலாநிதி'' என்ற பட்டத்தை அருளினார்கள். 1932-இல் சென்னைப் பல்கலைக்கழகம் ''டாக்டர்'' பட்டம் அளித்தது. 1935 மார்ச் 6-ஆம் நாள் ஐயரவர்களின் 80 நிறைவு சதாபிஷேக விழா சென்னையில்

பல்கலைக்கழக மண்டபத்தில் மிகமிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

ஐயரவர்களின் தன்வரலாறு ஆனந்தவிகடன் வார இதழில் 06.01.1940 முதல் 1942 மே மாதம்வரை வாரந் தோறும், 122 அத்தியாயங்கள்வரை, வெளிவந்தது. ஐயரவர்கள் 1942 ஏப்ரலில் அமரராகிவிட்டார்கள். 122 அத்தியாயங்களோடு வரலாறு நின்றுவிட்டது. 41 ஆண்டுகளுக்குப்பின் 1983-இல் "என் ஆசிரியப்பிரான்" என்ற தலைப்பில் ஐயரவர்களின் மாணவர் கி.வா.ஜகந்நாதன் அவர்களால் எழுதப்பெற்று, ஐயரவர்களின் நூல்நிலைய வெளியீடாக வெளிவந்து, ஐயரவர்களின் வரலாறு நிறைவுபெற்றது.

எனக்கு உலகமெல்லாம் திருவாவடுதுறை மடத்திலேயே இருந்தது என்று எழுதும் ஐயரவர்களுக்கு, இறுதிக்காலமும் திருவாவடுதுறை ஆதீனத்தின் திருக்கழுக்குன்றக் கிளை மடத்திற்குரிய வீட்டிலேயே நேர்ந்தது. இரண்டாவது உலகப் பெரும்போர் நிகழ்ந்தபோது 1942-ஆம் ஆண்டில் ஐயரவர்கள் தம் குடும்பத்துடன் சென்னைநகரை விட்டுத் திருக்கழுக் குன்றம் சென்று அங்குள்ள திருவாவடுதுறை ஆதீனக் கிளை மடத்து வீட்டில் தங்கினார்கள். அங்கேயே 28.04.1942-இல் இறைவன் திருவடி நீழலை அடைந்தார்கள்.

1948 மார்ச் 6-ஆம் தேதி சென்னை மாநிலக்கல்லூரி வளாகத்தில் ஐயரவர்களின் முழு உருவச்சிலை நிறுவப் பெற்றது.

ஐயரவர்களின் பதிப்புகள், நூல்கள்

ஐயரவர்களின் பதிப்புகளும் நூல்களுமே ஒரு சிறு நூலகம் ஆகும். அவற்றின் பெயர் அனைத்தையும் குறிப்பிடின் நீளுமாதலின் அவற்றின் வகை தொகைகளை மட்டும் கீழே கொடுக்கிறோம்.

சங்க நூல்கள்	8	பிரபந்தத்திரட்டு	3
காவியங்கள்	7	விருத்தம்	2
இலக்கணம்	4	வெண்பா	3

தல புராணங்கள்	13	மாலை	2
கோவைகள்	6	அந்தாதி	4
உலாக்கள்	9	இரட்டை மணிமாலை	2
தூது	6	மும்மணிக்கோவை	2
குறவஞ்சி	1	பஞ்சரத்தினம்	1
கலம்பகம்	1	கீர்த்தனை	2
பரணி	2	பிற	1
பிள்ளைத்தமிழ்	1	உரைநடை நூல்கள்	20
		தன்வரலாறு(என்சரித்திரம்)	1

இவை எல்லாவற்றுள்ளும் மிகச் சிறந்தவை சங்கநூற் பதிப்புகளும், காப்பியப் பதிப்புகளும், உரைநடை நூல்கள் சிலவும், பிள்ளையவர்கள் சரித்திரமும், என் சரித்திரமுமே.

பத்துப்பாட்டு எட்டுத்தொகை ஆகிய சங்கநூல்கள் 18-இல் பத்துப்பாட்டு முழுவதையுமே(பத்தையுமே) உரையுடன் பதிப்பித்துள்ளார். எட்டுத்தொகையில் ஐந்து நூல்களை உரை யுடன் பதிப்பித்துள்ளார். 1. குறுந்தொகை, 2.ஐங்குறு நூறு, 3. பதிற்றுப்பத்து, 4. பரிபாடல், 5.புறநானூறு. நற்றிணை, கலித் தொகை, அகநானூறு ஆகிய மூன்றையும் பதிப்பிக்கவில்லை. அவற்றைப் பிறர் பதிப்பிக்கத் தலைப்பட்டிருந்ததால் விட்டு விட்டார். அவற்றையும் ஐயரவர்கள் பதிப்பிக்காதது நமக்கு நட்டமே, இழப்பே. பதிப்புலகில் நாவலரையும் சி.வை.தாமோ தரம்பிள்ளையையும் ஐயருக்கு முற்பட்டவர்களாகக் கூறுவர். காலத்தால் ஐயரவர்கள் பிற்பட்டவராகலாம். ஆனால் தரத்தால் ஐயரவர்கள் யாருக்கும் பிற்பட்டவராகார். **ஐயரவர்களது பதிப்பின் தரம் வேறு எப்பதிப்பிற்கும் வராது.** ஐயரவர்களின் பதிப்புகள் ஒப்புயர்வற்றவை; ஈடிணையற்றவை. ஆங்கிலம் கற்றறியாத ஐயரவர்களின் பதிப்புகள் ஆங்கிலம் கற்ற அறிஞர்களையும் வியப்புறச் செய்வன. பதிப்புக்குரிய சிறப்புகளாகச் சொல்லப் பெறும் ஆய்வுப்பதிப்பு செம்பதிப்பு என்பன போன்றதெல்லாம் ஐயரவர்கள் பதிப்புகளுக்கே முற்றிலும் பொருந்தும். **ஒரு நூலுக்கு ஒரு சிறந்த பதிப்பை வாங்கவேண்டுமெனில் முதலில் ஐயரவர்களின் பதிப்பைத்**

தான் வாங்கவேண்டும். ஐயரவர்களின் பதிப்பு அந்நூலுக்கு இல்லாவிட்டால்தான் வேறு பதிப்புகளுக்குச் செல்ல வேண்டும். ஐயரவர்களின் பதிப்பு இருந்தால் முதலில் அது, அதன்பின் கழகப்பதிப்பு, அதன்பின் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு, பிற பதிப்புகள் என்ற வரிசையே நூல்களை வாங்குவதில் அறிவு வந்த நாள்தொட்டு நாம் பின்பற்றும்முறை. இந்நாளில் பல்கலைக்கழகங்கள் பலவும் பதிப்பகங்கள் பலவும் நல்ல பதிப்புகளை வெளியிடுகின்றன. எனினும் அவையெல்லாம் ஐயரவர்களின் பதிப்புகளுக்கு இணையாகா. ''பிள்ளையவர்கள் பாடஞ்சொல்லப் பிறந்தவர்'' என்று ஐயரவர்கள் கூறுவது போன்று, **''ஐயரவர்கள் பதிப்பிக்கப் பிறந்தவர்''** என்று நாம் கூறலாம்.

''இருந்தமிழே உன்னால் இருந்தேன்'' என்ற தமிழ்விடு தூதின் பொன்மொழியை ஐயரவர்கள் தம் குறிக்கோள் மொழியாகக் கொண்டிருந்தார். அகவை முதிர்ந்த காலத்தில் சிரமமான ஆய்வுப்பணியை விடுத்து ஈசுவர பக்தி முதலியவற்றில் ஈடுபட்டு இன்புறலாம் என்று அன்பர் ஒருவர் கடிதம் எழுதியபோது, ''**தமிழ் ஆராய்ச்சிப் பணியே** எனக்கு மிக உயர்ந்த **மோட்ச சாதனம்**'' என்று பதில் எழுதினார்.

எம் இளம்பருவத்தில் சென்னைக்குச் செல்லும் போதெல்லாம் மாநிலக் கல்லூரி வளாகத்திற்குச் சென்று ஐயரவர்களின் திருவுருவச் சிலைக்குமுன் நின்று! சிந்தித்து வணங்கி உள்ளத்திற்கு உரமேற்றிக் கொள்ளுவது வழக்கம்.

ஐயரவர்கள் உருவாக உதவியது, ஆளாக உதவியது, திருவாவடுதுறை ஆதீனம். திருவாவடுதுறை ஆதீனத்தின் அருமை பெருமைகளைத் தமிழுலகில் எந்நாளும் வழங்கும் எழுத்தோவியமாகத் தீட்டி ஆதீனத்திற்குப் புகழ் சேர்த்தவர் ஐயரவர்கள்.

'நிதியறியோம், இவ்வுலகத் தொருகோடி
இன்பவகை நித்தம் துய்க்கும்
கதியறியோம்' என்றுமனம் வருந்தற்க;
குடந்தைநகர்க் கலைஞர் கோவே!

பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய்; அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்;
இறப்பின்றித் துலங்கு வாயே.

- மகாகவி பாரதியார்

பொன்னோதுவாமூர்த்திகள்

ஒன்பதாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ இராமலிங்க தேசிகர் திருமழபாடியிலிருந்து சிறந்த ஓதுவார் குடும்பம் ஒன்றைத் திருவாவடுதுறைக்கு அழைத்துவரச் செய்து ஆதீன ஓதுவார் பணிக்கு அமர்த்திக் கொண்டார்கள் என்பதை முன்னமே கண்டோம். அந்தக் குடும்பத்திலே அப்போதிருந்த முதல்வர் அம்மையப்ப பண்டார ஓதுவாமூர்த்தி.

அவர் குமாரர் நமசிவாய பண்டார ஓதுவாமூர்த்தி
அவர் குமாரர் மாறியாடும் பண்டார ஓதுவாமூர்த்தி
அவர் குமாரர் ஆளுடைய பண்டார ஓதுவாமூர்த்தி
அவர் குமாரர் வைத்தியலிங்க பண்டார ஓதுவாமூர்த்தி
அவர் குமாரர் குருசாமி ஓதுவாமூர்த்தி.
அவர் குமாரர் வைத்தியலிங்க ஓதுவாமூர்த்தி.
அவர் குமாரர் சுப்பிரமணிய ஓதுவாமூர்த்தி.
அவர் குமாரர் பொன்னோதுவாமூர்த்தி.

அம்மையப்ப பண்டார ஓதுவாமூர்த்தியிலிருந்து குருசாமி ஓதுவாமூர்த்தி வரை ஆறு தலைமுறை ஆகிறது. குருசாமி ஓதுவார்வரை தேவார இசைப்புலமை மட்டும் இருந்து வந்தது. அதன்பின் வந்தவர்கள் இசைப்புலமையோடு தமிழ்ப் புலமையிலும் சிறந்து விளங்கினர். ஒன்பதாவது தலைமுறையினரான பொன்னோதுவாமூர்த்திகள் பெரும் புலவராக விளங்கினார். பொன்னோதுவாமூர்த்திகளின் தந்தையார் சுப்பிரமணிய ஓதுவாமூர்த்திகள் சாரங்கி வாத்தியத்தில் வல்லவர்; மிகச்சிறந்த ஓதுவார். யாழ்ப் பாணத்துநல்லூர் ஆறுமுகநாவலர் சுப்பிரமணிய ஓதுவா மூர்த்திகளை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் சென்று பலருக்குத் தேவாரம் பண்ணோடு பயிற்றுவிக்கச் செய்தார். தந்தையார் சுப்பிரமணிய ஓதுவாமூர்த்திகளுடன் யாழ்ப் பாணத்துக்குச் சென்ற பொன்னோதுவாமூர்த்திகள் அங்கே

தொல்காப்பியம் கம்பராமாயணம் முதலிய நூல்களை ஸ்ரீ பொன்னையா பிள்ளையவர்களிடம் முறையாக முழுவதும் கற்றார். யாழ்ப்பாணம் செல்லுமுன்பே சே.ரா. சுப்பிரமணியக் கவிராயரிடம் இலக்கிய இலக்கணங்களையும் சித்தாந்த சாத்திரங்களையும் கற்றவர்.

சீர்காழி முதலியார் உயர்நிலைப்பள்ளி, காரைக்குடி உயர்நிலைப்பள்ளிகளில் தமிழாசிரியராக இருந்தார். 18-ஆம் சந்நிதானத்தின் காலத்தில் ஆதீன நூல் நிலையத்தையும் பார்த்துக்கொண்டு மாணவர்களுக்கும் பாடம் சொல்லி வந்தார். 1926-ஆம் ஆண்டு சிதம்பரம் மீனாட்சி தமிழ்க் கல்லூரியில் ஆசிரியராகவும் பின்பு முதல்வராகவும் இருந்து, அக்கல்லூரி அண்ணாமலைப் பல்கலைக்கழகமானவுடன் அதிலும் தமிழாசிரியராக இருந்து ஓய்வு பெற்ற பின்பு 1935-இல் இறைவன் திருவடி நீழலை அடைந்தார். துறைசைச் சிலேடைவெண்பா, யமகவந்தாதி, இங்கித மாலை இவற்றிற்கு உரைகண்டார் என்று த.ச.மீ. குறிப்பிட் டுள்ளார். மேற்குறித்த இங்கிதமாலை, வள்ளற் பெருமான் இராமலிங்க அடிகள் அருளிய இங்கிதமாலையே யாகலாம். இங்கிதமாலைக்குக் காஞ்சிபுரம் இராமசாமிநாயுடு உரையும், க. வ. திருவேங்கட நாயுடு உரையுமே வழங்குகின்றன. பொன்னோதுவா மூர்த்திகள் இயற்றியதாகச் சொல்லப்பெறும் உரை அச்சிடப்பெற்றதாகத் தெரியவில்லை.

வி.சிதம்பரராமலிங்கம் பிள்ளை

இவர் பிறந்த ஊர் விக்கிரமசிங்கபுரம். மாதவச் சிவஞான யோகிகளிடம் பக்திமிக்கவர். தமிழ் வடமொழி ஆகிய இரண்டிலும் வல்லவர். மேலகரம் செ.சுப்பிரமண்ணியக் கவிராயர்பால் கற்றுப் பெரும்புலமை பெற்றவர். ஆங்கிலத்திலும் ஓரளவு நல்ல பயிற்சியுடையவர். அந்தக் காலத்து எப்.ஏ.(F.A.) படித்தவர். சித்தாந்த சாத்திரங்களில் நுணுக்கமான அறிவு படைத்தவர். பல்கலைப் புலவர். தர்க்க சாத்திர அறிவும் உண்டு. திருநெல்வேலி இந்து கல்லூரியில் 1937-ஆம் ஆண்டுவரை வேலைபார்த்து ஓய்வுபெற்று, அதன்பின்

ஆதீன வித்துவானாக நியமிக்கப் பெற்றார். ஆதீன வித்துவானாக விளங்கிய காலத்தில் சில நூல்களுக்கு உரை எழுதியும் சிலவற்றிற்குக் குறிப்புரை எழுதியும், நூல்களைப் பரிசோதித்தும் ஆதீன வெளியீடுகளாகப் பதிப்பித்தார். அறுபத்து நான்கு ஆண்டுகள் வாழ்ந்த இவர் 1948-ஆம் ஆண்டில் சிவபதம் அடைந்தார்.

த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை

இருபதாம் பட்டம் அம்பலவாணதேசிக குருமூர்த்திகளின் காலத்தில் 1948-இல் இவர் ஆதீன வித்துவானாக நியமிக்கப்பெற்றார். இவர் பொன்னோதுவா மூர்த்திகளின் மாணவர். பொன்னோதுவாமூர்த்திகள் யாழ்ப்பாணம் சென்றிருந்த சமயம் பொன்னையா பிள்ளையிடம் பாடங் கேட்டபோது இவரது தந்தையார் த.ஆ.சபாபதிபிள்ளையும் அவருடன் பாடங்கேட்டதாக இவர் பொன்னோதுவா மூர்த்திகளைப் பற்றி எழுதும்போது குறிப்பிட்டுள்ளார்.

இவர் எழுதிய நூல்கள் சில. பதிப்பித்த நூல்கள் பல. அவையெல்லாம் ஆதீன வெளியீடுகளாக வெளிவந்துள்ளன.

திருவாவடுதுறை ஆதீன வரலாறு (1950); இருபதாம் பட்டம் அம்பலவாண தேசிக பரமாசாரியசுவாமிகள் நினைவு மலர் (1951); அரசவனத்து அறநிலையம் (1962); என்பன இவர் எழுதிய ஆதீன வரலாறுகளாம். முன்னைய இரண்டும் சுருக்கமானவை. அரசவனத்து அறநிலையம் விரிந்தது.

திருமந்திரம் கயிலாயசித்தர் உரை(1954); திருமந்திரம் சிவயோகப்பகுதி(1955); திருமந்திரம் சிவயோக சிந்தனை (1956); முதலியன இவரால் பதிப்பிக்கப் பெற்றவை. 1971-இல் யாம் இராமலிங்க அடிகள் வரலாறு பெருநூலை எழுதுங்காலத்தில் ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கம் என்ற தலைப்பிலுள்ள பகுதியை எழுதும்போது ஆறந்தமுறை வைப்பைப் பற்றி எமக்கிருந்த ஐயம் திருமந்திரம் - சிவயோகப்பகுதி (1955) பதிப்பால் தெளிந்தது. மேலும் சில விளக்கங்களை அறியவேண்டி அதன் பதிப்பாசிரியர் த.ச.மீ. அவர்களை, அப்போது அவர்கள் வசித்துவந்த கும்பகோணம்

பேட்டை நாணயக்காரத் தெருவிலுள்ள திருவாவடுதுறை ஆதீனக் கிளைமடத்திற்குச் சென்று கண்டு உரையாடினோம். பல்வேறு நுட்பமான செய்திகளும் விளக்கங்களும் அவர்களால் தெரியலாயின. திருவாவடுதுறைக்கும் அழைத்துச் சென்று நூலகத்திலிருந்த ஓலைச் சுவடிகள் பலவற்றைக் காட்டி விளக்கினார்.

ச. தண்டபாணி தேசிகர்

பிறப்பு: 15.06.1907. பிறந்த ஊர்: சிதம்பரம். தந்தையார் வானூர் சடையப்பதேசிகர், தொண்டைமண்டலம் முதலியார் மரபிற்கு ஞானாசிரியராக இருந்தவர். தமிழ், சமஸ்கிருதம், தேவாரப் பண்ணிசை ஆகியவற்றில் சிறந்த தேர்ச்சி பெற்றவர். படித்த கல்விநிலையங்கள் - சைவப்பிரகாச வித்தியா சாலை, பச்சையப்பன்உயர்நிலைப்பள்ளி, ஆறுமுகநாவலர் செந்தமிழ்க் கல்லூரி(சிதம்பரம்); அரசர் கல்லூரி (திருவையாறு); மீனாட்சி தமிழ்க்கல்லூரி(சிதம்பரம்). மீனாட்சி தமிழ்க் கல்லூரியில் இவருக்கு ஆசிரியராயிருந்தவர் டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்கள். பெற்ற பட்டம்: வித்துவான். மீனாட்சி தமிழ்க் கல்லூரி சிதம்பரம், திருப்பனந்தாள் காசிமடம், தருமபுர ஆதீனம் தமிழ்க் கல்லூரிகளிலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் தமிழ்ப் பேராசிரியர். திருவாவடுதுறை தருமபுரம் ஆகிய இரு ஆதீனங்களிலுமே வெவ்வேறு காலங்களில் ஆதீன வித்துவானாக விளங்கிப் பல்வேறு பெரும் பணிகளைச் செய்தார். இவரது திருக்குறள் உரைவளம் பதிப்பு தருமபுர ஆதீன வெளியீடு. திருவாசகம் (முழுதும்) குருவருள் விளக்கம் என்னும் உரை, திருமந்திரம் (முழுதும்)பஞ்சாட்சர தீபம் என்னும் உரை திருவாவடுதுறை ஆதீன வெளியீடுகள். இவரது நூற்பணிகள் மிகப் பல. நூல் , உரை, பதிப்பு, ஆய்வு எனப் பல வகையில் விரியும். இவண் விரிக்கிற் பெருகும். தமிழ்உலகம், சைவஉலகம் ஆகிய இரு உலகுகளிலும் இவர் சிறப்பானதோர் இடத்தைப் பெறுகிறார். இவரது பணிகளை இன்றைய தலைமுறை நன்கறியும் எனலாம். வி.சா. குருசாமி தேசிகர் இவருடைய மருமகனார்.

தே. ஆ. ஸ்ரீநிவாஸாசாரியர்

கடலூரினராகிய இவர் கட்டுரை வல்லார். சித்தாந்த சாத்திரங்களுக்கும் திருமந்திரத்திற்கும் இவர் கட்டுரை வடிவில் விளக்க நூல்களை எழுதியுள்ளார். சித்தாந்த சாத்திர விளக்கக் கட்டுரை நூல்களின் பெயர்களே எடுப்பாக அழகாக அமைந்துள்ளன. திருவுந்தியார் தெளிவுக் கட்டுரை, திருக்களிற்றுப்படியார் விளக்கக் கட்டுரை, இருபா இருபஃது விரிவுக் கட்டுரை, உண்மை விளக்கம் உதவிக் கட்டுரை, சிவப்பிரகாசம் சீர்மைக்கட்டுரை, வினாவெண்பா விடைவிளக்கக் கட்டுரை, போற்றிப் பஃறொடை ஏற்புக் கட்டுரை, நெஞ்சுவிடுதூது நீர்மைக் கட்டுரை - என்ற பெயர்களே எவ்வளவு எடுப்பாகவும் அழகாகவும் இருக்கிறதென்று பாருங்கள். பெயருக்கேற்ப உட்பொருளும் நுட்பதிட்பமாய் அதேசமயம் எளிதாய் இனிதாய் விளங்குவனவாக அமைந்துள்ளன. திருமந்திரக்கட்டுரை பகுதி பகுதியாகப் பல பகுதிகள் வெளிவந்துள்ளன. 21-ஆம் பட்டம் சுப்பிரமணியதேசிகர் காலம்வரை (1967) இவரது கட்டுரை நூல்கள் வெளிவந்துள்ளன.

இவர் அந்தணர். ஆத்திரேய கோத்திரம். நூல்களின் முன்னுரையில் இவரது கடலூர் முகவரி முழுமையாகக் கொடுக்கப்பெற்றுள்ளது. பல ஆண்டுகளுக்குமுன் இவரது கடலூர் முகவரிக்கு ஒரு கடிதம் எழுதினோம். பதில் வந்தது. நாம் என்ன எழுதினோம், என்ன பதில் வந்தது என இப்போது நினைவில்லை. 39 ஆண்டுகளுக்கு முன்பே 1969-இல் நாம் வடலூருக்கு வந்துவிட்டபோதிலும் அப்போதே கடலூரில் இவரிடம் தொடர்புகொள்ளாது போனமையை இப்போது எண்ணும்போது ஆராமை மீதூர்கிறது, வருந்தவேண்டி யுள்ளது. காலத்தாலும் இடத்தாலும் அண்மையிலிருந்தும் விட்டுவிட்டோமே என்பதை எண்ணுந்தோறும் மனம் கவல் கிறது. அவ்வளவு நன்றாக இருக்கின்றன இவரது கட்டுரை நூல்கள். அங்கங்கே காணப்படும் வடமொழி ஆங்கில மேற்கோள்கள் இவரது மும்மொழிப் புலமையைக் காட்டு கின்றன. செய்யுள் செய்யும் ஆற்றலும் உடையவர் என்பது

முன்னுரையிலும் முன்னும் பின்னும் உள்ள பாடல்கள் மிகச் சிலவற்றால் தெரிகிறது.

புலவர்களின் ஒழுக்கத் தகுதி

கல்வித் தகுதியோடு ஒழுக்கத் தகுதியும் உடையவர் களையே ஆதீனப் புலவர்களாக நியமிப்பதென்பது ஆதீன மரபாகவே கடைப்பிடிக்கப்பெற்று வருகிறது. '' சம்பிரதாய முறை வழுவாமல் கல்வி கற்று தீட்சை சிவபூசை முதலியன உடையவராய் நிர்வாண தீட்சையும் பெற்ற வித்துவான் களையே இவ்வாதீனத்திலே ஆதீன வித்துவான்களாக நியமித்தல் இவ்வாதீன சம்பிரதாயம்'' என்று ஆதீன வித்துவான் த.ச.மீ. எழுதுவது உண்மை. ''ஓதலிற் சிறந்தன்று ஒழுக்க முடைமை'' என்பது முதுமொழியன்றோ. பொன்மலர் நாற்ற முடைத்தாற் போன்று கல்வித் தகுதியோடு ஒழுக்கத் தகுதியும் உடையவர்களே ஆதீனப் புலவராதற்குரியவர் என்பது எப்பேர்ப்பட்ட கொள்கை. ஆதீனங்களின் இக்கொள்கை கல்வி நிலையங்களிலும் இன்று இருந்தால் எப்படி இருக்கும்!

திருவாவடுதுறை ஆதீனத்தால் பாராட்டப்பெற்றோர்

திருவாவடுதுறை ஆதீனத்தால் பாராட்டப்பெற்றோர் பலர். அப்பலருள்ளும் நாவலர் பட்டம் பெற்றோர் மூவர். ஒருவர் ஆறுமுக நாவலர். மற்றொருவர் சபாபதி நாவலர். மூன்றாமவர் அம்பலவாண நாவலர். இம்மூவருமே இலங்கையைச் சேர்ந்தவர்கள்.

ஆறுமுக் நாவலர்
1822-1879

19-ஆம் நூற்றாண்டுத் தமிழுலகின் மும்மூர்த்திகளில் ஒருவர் நாவலர். பிள்ளையவர்கள், நாவலர், வள்ளலார் ஆகியோர் அம்மும்மூர்த்திகள்.

தமிழ்ப் பதிப்புலக மும்மூர்த்திகளில் ஒருவர் நாவலர். நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, டாக்டர் உ.வே.சாமி நாதையர் என்போர் அம்மும்மூர்த்திகள்.

நாவலருக்குச் சைவமும் தமிழும் இரு கண்கள். சைவமும் தமிழும் தழைக்கப் பிறந்தவர் நாவலர். நாவலர் இல்லாவிட்டால் இலங்கை கிறித்தவ நாடாக ஆகியிருக்கும்.

தமிழ்ப்பணி, சைவப்பணிகளோடு, பொதுப்பணிகள் பலவற்றையும் நாவலர் செய்தார். நாவலரது பொதுப் பணிகளால் யாழ்ப்பாணம் பலவகையிலும் முன்னேறியது.

இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் நாவலர் திட்டமிட்டுப் பணியாற்றினார். இலங்கையில் வித்தியாசாலை (பாட சாலை)யும் அச்சியந்திரசாலையும் (அச்சகமும்) நிறுவினார். அதேபோன்று சிதம்பரத்தில் வித்தியா சாலையையும் சென்னையில் அச்சியந்திர சாலையையும் (அச்சகத்தையும்) நிறுவினார்.

சென்னையில் வித்தியானுபாலன அச்சியந்திரசாலை 1850.

சிதம்பரத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலை 1864.

நாவலர் காலத்தில் இலங்கையில் கிறித்தவ மதப் பிரச்சாரமும் மதமாற்றமும் அளவுகடந்து மிகுந்திருந்தன. சைவத்தை இழிவுபடுத்தும் கொடுமையையும் மதமாற்றக் கொடுமையையும் கண்டு அனுபவித்த நாவலர் அக்கொடுமைகளை நீக்கவும், சைவமும் தமிழும் தழைத்தினி தோங்கவும் நன்கு திட்டமிட்டுத் தமிழ்ப்பணிகளையும் சைவப்பணிகளையும் செய்தார்.

நூற்பதிப்பு, செய்யுள் நூல்களுக்கு உரை எழுதுதல், புதிய உரைநடை நூல்களை எழுதுதல் ஆகிய மூவகையிலும் அவர் பணியாற்றினார். நாவலர் பதிப்புகளுக்கு அன்றும் புகழ், இன்றும் புகழ். " வசனநடை கைவந்த வல்லாளர்" என்று பரிதிமாற்கலைஞர் சூரியநாராயண சாத்திரியார் நாவலரைப் போற்றிப் புகழ்ந்தார். நாவலரின் சைவ வினா விடை, பாலபாடம் போன்ற நூல்கள் அன்றைய சைவ உலகில், தமிழுலகில், புதிய முயற்சிகள்; போற்றத்தக்க பணிகள்.

எழுதுவது போன்றே சொற்பொழிவாற்றுவதிலும் நாவலர் வல்லவர். நாவலரின் சொற்பொழிவுகளைக் கேட்டுப் பலர்

மது மாமிசங்களை நீத்தார்கள்; பல கோயில்களில் உயிர்ப் பலி நின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து சைவப்புலவராக, தமிழ்ப் புலவராக, சைவப் பெரும் பணியாளராக, தமிழ்ப் பெருந் தொண்டராகத் தமிழகத்திற்கு வந்த யாழ்ப்பாணம் ஆறுமுகம் பிள்ளையை ஆறுமுகநாவலராக ஆக்கியது திருவாவடுதுறை ஆதீனம். திருவாவடுதுறை ஆதீனத்தால் ஆறுமுகம் பிள்ளை ஆறுமுக நாவலரானார். நாவலரின் நாவன்மையையும் செயல்வன்மையையும் கண்ட திருவாவடுதுறை ஆதீனம் அவருக்கு நாவலர் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது.

ஆறுமுக நாவலருக்கு முன்னும் நாவலர்கள் சிலருண்டு, பின்னும் சில நாவலர்களுண்டு. ஆயினும் நாவலர் என்றால் இவர் ஒருவரே, ஆறுமுக நாவலரே என்ற நிலை இவரால் ஏற்பட்டு விட்டது. பிள்ளையவர்கள் என்றால் எப்படி மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களை மட்டும் குறிக்குமோ, பாரதியார் என்றால் எப்படி மகாகவி தேசியகவி சுப்பிரமணிய பாரதியார் ஒருவரை மட்டும் குறிக்குமோ, அப்படி நாலவர் என்றால் இவர் ஒருவரை மட்டுமே, ஆறுமுகநாவலரை மட்டுமே குறிப்பதாயிற்று.

மாம்பழக் கவிச்சிங்க நாவலர், சைவ எல்லப்ப நாவலர், வெள்ளியம்பலவாண நாவலர் என முன் நாவலர்கள், சபாபதி நாவலர், குலாம்காதர் நாவலர், நாவலர் வேங்கடசாமி நாட்டார், நாவலர் சோமசுந்தர பாரதியார், நாகர்கோயில் ஆறுமுக நாவலர், நாவலர் நெடுஞ்செழியன் எனப் பின் நாவலர்கள் பலர் இருப்பினும், நாவலர் என்றால் ஆறுமுக நாவலரே என்பது நிலைத்துவிட்டது. இனி நாவலர் பட்டம் யாருக்கும் கொடுக்காதிருப்பது நலம். நெடுஞ்செழியனோடாவது நிற்க வேண்டும். நீடித்தலாகாது. எடுபடாது. ஆறுமுகநாவலரும் நாவலர், மற்றவர்களும் நாவலர்களா? ''காந்தி'' ''பாரதியார்'' பட்டங்களைக் கண்டவர் கடையவர்க ளெல்லாம் ஆள் ஆளுக்குத் தங்களுக்குத் தாங்களாகவே சூட்டிக் கொள்கி

றார்கள். எடுபடுவதில்லை. சகிக்கவில்லை. நாவலருக்குப் பின்பு அப்பட்டம் வேறு யாருக்கும் சிறக்கவில்லை. "நாவலர் என்னும் சொல்லுக்கு வாழ்வு தந்தவர் ஆறுமுக நாவலர்" என்று பதிப்புச்செம்மல் முனைவர் ச.மெய்யப்பனார் "ஆறுமுக நாவலர் வரலாறு" நூற் பதிப்புரையிற் கூறியிருப்பது உண்மை.

ஆறுமுக நாவலர் அறக்கட்டளையும் மேனிலைப் பள்ளியும் இப்போதும் சிதம்பரத்தில் சிறந்து விளங்குகின்றன. சென்னையில் ஆறுமுகநாவலர் அச்சகம் சிறந்து விளங்குகிறது.

ஆறுமுக நாவலரைப் பற்றிப் பல நூல்கள் இலங்கையிலும் தமிழகத்திலும் வெளிவந்துள்ளன. பழைமையானவை சில, அண்மையில் வெளிவந்த, புதுநூல்கள் சில. அவற்றுள் ஒன்று மணிவாசகர் பதிப்பகம் ஆறுமுகநாவலர் வரலாறு (ஆகஸ்ட் 2000).

ஆறுமுகநாவலரின் சைவத்தமிழ் வாழ்வில் ஒரே ஒரு குறை, கறை, வள்ளலார் விஷயத்தில் அவர் அபசாரப்பட நேர்ந்ததே. அது அன்றைய சூழல். காலத்தின் கோலம். நாவலரைப் போன்றவர்கள் வள்ளலாரைப் புரிந்து கொள்ளக் கூடிய காலம் அதுவன்று. இன்று நிலைமை மாறிவிட்டது. வள்ளலாரும் நாவலரும் இன்று வந்தால் நண்பர்களாக இருப்பார்கள்.

இலங்கை அரசு பல ஆண்டுகளுக்கு முன்பே நாவலருக்குத் தபால் தலை வெளியிட்டுச் சிறப்பித்தது. உருவச்சிலை நிறுவிச் சிறப்பித்தது. இந்திய அரசு அண்மை யிற்றான் வள்ளலாருக்குத் தபால் தலை வெளியிட்டது.

வள்ளலாரும் நாவலரும் என்றே விரிவான நூல் ஒன்றை நாம் எழுத எண்ணியிருப்பதால், நாவலர் வரலாற்றை ஈண்டு விரிவின்றிச் சுருங்கக் கூறினோம்.

சபாபதி நாவலர்
1844-1903

இவர் இலங்கை யாழ்ப்பாணம் வடகோவையில் 1844-இல் பிறந்தவர். பரம்பரைச் சைவ வேளாளர். பெற்றோர் சுயம்புநாதபிள்ளை, தெய்வயானை அம்மையார். நீர்வேலி சங்கரபண்டிதரிடம் தமிழும் வடமொழியும் கற்றுத் தேர்ந்தார். ஆங்கிலமும் தக்கவர்களிடம் சிலகாலம் பயின்றறிந்தார். தமிழ்நாட்டுக்கு வந்து ஆறுமுகநாவலரின் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் சிலகாலம் தலைமைத் தமிழாசிரியராக விளங்கினார்.

அதன்பின் திருவாவடுதுறைக்கு வந்து பன்னிரண்டு ஆண்டுகள் 16-ஆம் பட்டம் சுப்பிரமணியதேசிகரிடம் சைவசித்தாந்த நூல்களைப் பாடங்கேட்டு அவரது மாணவராகவும் ஆதீனவித்துவானாகவும் விளங்கினார். ஆறுமுகநாவலருக்கு " நாவலர் " பட்டம் வழங்கப்பெற்றது போன்றே இவருக்கும் திருவாவடுதுறை ஆதீனத்தில் நாவலர் பட்டம் வழங்கப்பெற்றது, நாவலர், மகாவித்துவான், வித்துவசிரோமணி என்ற பட்டங்களுடன் இவர் சிறந்து விளங்கினார். மாதவச் சிவஞான யோகிகள் தம் கரத்தால் எழுதிய சிவஞான மாபாடிய மூல ஓலைச்சுவடியை ஆதீனகர்த்தர் யாருக்கும் பார்க்கவும் படிக்கவும் கொடுப்பது பழக்கமில்லையாம். ஆனால் இவருக்குப் படிக்கக் கொடுத்தார்களாம். அவ்வளவு மதிப்பை ஆதீனத்தில் இவர் பெற்றிருந்தார். திருவாவடுதுறை ஆதீனத்தால் பாராட்டப் பெற்றது போன்றே பாஸ்கர சேதுபதி மன்னராலும் மிகவும் பாராட்டப்பெற்றார்.

இவர் செய்த நூல்கள் சிதம்பர சபாநாத புராணம், ஏசுமத சங்கற்ப நிராகரணம், **திராவிடப் பிரகாசிகை** முதலிய பல. ஏசுமத சங்கற்ப நிராகரணம் கிறிஸ்துவத்திற்கு மறுப்பு. திராவிடப் பிரகாசிகை, பின்னாளைய தமிழ் வரலாறு, இலக்கிய வரலாறுகளுக்கு ஒரு முன்னோடி எனலாம். இந்நூலை இயற்றிய சிறப்பால் இவர் திராவிடப் பிரகாசிகைச்

சபாபதி நாவலர் என்றும் வழங்கப் பெற்றார். திராவிடப் பிரகாசிகையில் இவர் வள்ளலாரையும் திருவருட்பாவையும் இழித்துரைக்கிறார். காலத்தின் கோலம், நாவலர் பரம்பரைக்கே உரிய வழக்கம் என்று நாம் விட்டுவிடுவோம். காலம் மாறி விட்டது.

அரதத்தாசாரியரின் சதுர்வேத தாத்பரிய சங்கிரகம், அப்பையதீட்சிதரின் சிவகர்ணாமிர்தம், இராமாயண தாத்பரிய சங்கிரகம், பாரத தாத்பரிய சங்கிரகம் ஆகிய வடமொழி நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தார்.

சென்னையில், "சித்தாந்த வித்யானுபாலன யந்திர சாலை" என்றொரு அச்சகத்தை நிறுவினார். ஞானாமிர்தம் என்னும் சைவத்தமிழ் இதழ் ஒன்றையும் தொடங்கி நடத்தினார். தமிழகத்தில் முப்பத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்த இவரிடம் மாகறல் கார்த்திகேய முதலியார், மாவை விசுவநாத பிள்ளை முதலிய மாணவர்கள் பலர் கற்றுத் தேர்ந்தனர். இறுதிக்காலத்தில் யாழ்ப்பாணத்திற்குச் சென்று 1903-இல் 58-ஆம் அகவையில் இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

வேதநாயகம் பிள்ளையின் தொடர்பும் பாராட்டும்

19-ஆம் நூற்றாண்டின் வரலாற்றில் நீதிபதி வேதநாயகம் பிள்ளைக்கு நீங்காததோர் இடமுண்டு. புகழ்பெற்ற நீதிபதியாகவும், தமிழறிஞராகவும் அந்நாளில் அவர் சிறந்து விளங்கினார். பிள்ளையவர்கள், நாவலர், வள்ளலார் என்ற அக்காலத் தமிழ் மூவரோடு வேதநாயகரை நான்காவதாகச் சேர்க்கலாம் என்று முன்பே பிள்ளையவர்கள் வரலாற்றில் சொல்லியிருக்கிறோம்.

வேதநாயகரின் காலம் 1826-1889. திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள குளத்தூரில் 11.10.1826-இல் வேதநாயகர் பிறந்தார். திருச்சிராப்பள்ளி - மதுரை இருப்புப்பாதையில் குளத்தூர் ஒரு நிலையமாக உள்ளது. திருச்சிராப்பள்ளி

சந்திப்புக்கு அடுத்த நிலையம் பூங்குடி. அதற்கு அடுத்தது குளத்தூர். ''கொளத்தூர் '' என்று பெயர்ப்பலகை இருக்கும். வேதநாயகர் பிள்ளையவர்களுக்கு நண்பரானபின் பிள்ளையவர்கள் குளத்தூரைப் பற்றி ஒரு கோவையே பாடியிருக்கிறார். குளத்தூர்க் கோவை என்பது அதன் பெயர். வேதநாயகர் பிறந்ததால் அவ்வூர் கோவை பாடப்பெற்ற பதியாகிவிட்டது. யாம் உயர்நிலைப்பள்ளி மாணவனாக இருந்த காலத்தில் வேதநாயகர் பிறந்த ஊரைக் காண விரும்பிக் குளத்தூர்க்குச் சென்று பார்த்ததுண்டு. வேதநாயகரின் முன்னோர்கள் சைவ (வேளாள)ர்களாக இருந்தவர்கள் கிறித்துவத்துக்கு மாறினர். தரங்கம்பாடி, சீர்காழி, மாயூரம் (இப்போது மயிலாடுதுறை) ஆகிய நகரங்களில் வேதநாயகர் மாவட்ட நீதிபதியாக (டிஸ்டிரிக்ட் முன்சீப் ஆக) விளங்கினார். திறமையாலும் நேர்மையாலும் நீதித்துறையில் புகழோடு விளங்கினார்.

நீதித்துறையில் புகழ்பெற்று விளங்கிய வேதநாயகர் தமிழ்த் துறையிலும் புகழ்பெற்று விளங்கினார். உரை நடையிலும் செய்யுளாகவும் பல நூல்களை இயற்றினார். அவற்றிற் பெரும்பாலன புதுமையானவை. இவர் எழுதிய '' பிரதாப முதலியார் சரித்திரம் '' நவீனக் கதையுலகில் அந்நாளில் மிகவும் புகழ்பெற்றது. தமிழில் எழுதப்பெற்ற முதல் நவீனம் (நாவல்) என்பர். அதேபோன்று இவர் எழுதிய பெண்மதிமாலையும் அக்காலத்திற்குப் புதுமையானது. பாட்டும் உரைநடையுமாக அமைந்த அது ''உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்'' என்று போற்றத்தக்க வகையில் பெண்கல்வி, பெண்மானம், பெண்மதிமாலை என மூன்று பகுதியாக அமைந்தது. பெண்கள் முன்னேற்றம், பெண்ணுரிமை என்றெல்லாம் பேசத் தொடங்கப்பெறாத அக்காலத்தில் வேதநாயகரின் பெண்மதிமாலை பெண்கல்விக்கும் பெண்கள் முன்னேற்றத்திற்கும் பெரிதும் தூண்டுகோலாக இருந்தது. இவரது நூல்கள் எல்லாவற்றிலும் சர்வ சமய சமரச கீர்த்தனைகள், நீதிநூல் ஆகிய இரண்டும் மிகவும் சிறப்பாகப்

போற்றப்பெறுபவை. இவர் கிறிஸ்துவராயினும் சமரசக் கிறிஸ்துவராகச் சர்வ சமய சமரச நோக்குடன் இருந்தார். அந்நோக்கைப் பரப்பச் சர்வ சமய சமரச கீர்த்தனைகள் என்னும் இசைப்பாடல்களைப் பாடி நூலாக வெளியிட்டார். அந்நாளில் இதுவும் ஒரு புதுமையே. புதுமை பலவற்றைச் செய்த இவர் பொதுமையும் கண்டவர் என்பதற்கு இவருடைய சர்வசமய சமரசக் கீர்த்தனை நூல் ஒன்றே போதும்.

நீதிபதியாக விளங்கிய இவர் "நீதிநூல்" என்றே ஒரு செய்யுள் நூலை இயற்றினார். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுக்குப் பின்னர் இவரது நீதிநூலே அவ்வகையில் பாராட்டப்பெற்றது. நீதிநூலின் முதற்பதிப்பு 1859-இல் வெளியாயிற்று. நானூறு பாடல்களைக் கொண்ட அதனுடன் மேலும் இருநூறு பாடல்களைச் சேர்த்து 1860-இல் இரண்டாம் பதிப்பொன்று வெளியாயிற்று. இந்நீதிநூல் ஆசிரியர் பெயருடன் சார்ந்து "வேதநாயகம் பிள்ளை நீதிநூல்" எனவும் வழங்கும். வேதநாயகம் பிள்ளையின் நீதிநூலுக்கு வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகள் அருமையான சாற்றுக்கவியொன்றை வழங்கியுள்ளார். அது வருமாறு:

வளங்கொள் குளத்தூர் அமர்ந்த வேதநா
  யகன் அருளால் வயங்க முன்னாள்
உளங்கொள் மனுஉரைத் தனன்ஓர் நீதிநூல்
  அந்நூற்பின் உறுநூ லாகத்
துளங்கிடும் அவ்வூர்உறை அத் தோன்றல்ஓர்
  நீதிநூல் சொன்னான் இந்நாள்
விளங்கும் இந்நூல் முன்னர் மற்றை
  நூலெல்லாம் கிழிபடத்தின் வெண்ணூ லன்றே.

நூல் என்றால் இதுதான் நூல், இந்நூலின் முன்னர் மற்ற நூல்களெல்லாம் கிழியக்கூடிய துணியின் வெள்ளை நூல்கள்தான் என்று வள்ளலார் வேதநாயகரின் நீதிநூலைப் புகழ்ந்து போற்றுகிறார்.

பிள்ளையவர்களுக்கும் வேதநாயகருக்கும் முன்னரே ஏற்பட்டிருந்த நட்பு, சீர்காழியிலும் மயிலாடுதுறையிலும்

வேதநாயகர் மாவட்ட முன்சீபாகப் பணியாற்றிய காலத்தில் மிகவும் நெருக்கமாயிற்று. பிள்ளையவர்களால் வேதநாயக ருக்குத் திருவாவடுதுறை ஆதீனத் தொடர்பும் உண்டாயிற்று. ஆதீனத்திற்குப் பலமுறை வந்து அப்போது ஆதீனகர்த்தராக விளங்கிய 16-ஆம் பட்டம் மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர் களுடன் பழகினார். ஆதீனச்சூழலும் அதன் தமிழ்ப் பணிகளும் சமயப் பணிகளும் தேசிகரின் சீரிய ஒழுக்கமும் பழக்க வழக்கங்களும் வேதநாயகரின் உள்ளத்தைக் கவர்ந்தன. மேலும் அப்போது ஒரு பஞ்சம் வந்தது. வேதநாயகர் பாட்டாலும் செயலாலும் பஞ்சநிவாரணப் பணியில் ஈடுபட்டார். திருவாவடுதுறையில் பஞ்சமில்லை; ஆதீனம் இருப்பதால். எனினும் சுற்றுப்புற ஊர்கள் பலவற்றில் பஞ்சம் தீர்வதற்கான பணிகள் பலவற்றைத் தேசிகர் செய்வித்தார். சைவத்திற்குப் பஞ்சநிவாரணப்பணி புதிதன்று. சம்பந்தரும் அப்பரும் செய்ததே. இப்போது சுப்பிரமணிய தேசிகரும் வேதநாயகம் பிள்ளையும் செய்யலாயினர். ஆதீனகர்த்தரின் செயல்களெல்லாம் வேதநாயகரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அடிக்கடித் திருவாவடுதுறைக்கு வந்து தேசிகருடன் அளவளாவி இன்புற்றார். அறிஞர் கூட்டுறவினும் இன்பம் வேறுண்டோ.

ஒருநாள் பிற்பகல் வேதநாயகர் திருவாவடுதுறைக்கு வந்து தேசிகரைக் கண்டு நெடுநேரம் அளவளாவியிருந்து இரவு மயிலாடுதுறைக்குத் திரும்பினார். மறுநாள் காலை ஒரு பாடலைப்பாடித் திருவாவடுதுறைக்கு அனுப்பினார். ''தேவர்களும் வந்து வணங்கும் மேன்மைமிக்க சுப்பிரமணிய தேவனே! தேவரீரை நேர்வந்து கண்டு நேற்று இராத்திரியே ஊர்வந்து சேர்ந்தேன், ஆனால் உள்ளம் வந்துசேரக் காணேன், (அதனை அங்கேயே வைத்துவிட்டு வந்து விட்டேன், பறிகொடுத்துவிட்டு வந்துவிட்டேன், அது அங்கேயே தங்கி விட்டது) அதனை இங்கு அனுப்பிவைக்கவேண்டும் '' என்று வேண்டும் பாட்டு அது.

சூர்வந்து வணங்கு மேன்மைச் சுப்பிர மணிய தேவே
நேர்வந்து நின்னைக் கண்டு நேற்றிராத் திரியே மீண்டேன்
ஊர்வந்து சேர்ந்தேன் என்றன் உளம்வந்து சேரக் காணேன்
ஆர்வந்து சொலினுங் கேளேன் அதனையிங் கனுப்பு வாயே.

வந்த இடத்தில் சிலர் கைப்பையை மறந்து விட்டுவிட்டுச் செல்வார்கள், சிலர் கைப்பிரம்பை மறந்து விட்டுச் செல்வார்கள். வேதநாயகரோ தம் உள்ளத்தையே மறந்துவிட்டுச் சென்றுவிட்டார். வேதநாயகரின் உடம்பு மயிலாடுதுறைக்குத் திரும்பிவிட்டது. அவருடைய உள்ளம் இங்கே திருவாவடுதுறையிலேயே தங்கிவிட்டது. அதற்குத் தேசிகரை விட்டுப் பிரிய மனமில்லை. அதனை அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறார் விட்டுச்சென்ற வேதநாயகர். என்ன கற்பனை! உண்மைக் கற்பனை!! இப்படியும் ஒரு ஆன்மநேயம். நீதிபதி வேதநாயகரின் இச்செய்யுளை உயர்நீதிமன்ற நீதிபதி திரு செங்கோட்டுவேலன் மிகவும் சுவைத்துச் சொல்லிச் சொல்லி மகிழ்வார்; நம்மிடம் தனியாகப் பேசும்போதும் கேட்டிருக்கிறோம். கூட்டங்களிற் பேசும்போதும் கேட்டிருக்கிறோம்.

நீதிபதிப் பதவியை விடுத்து ஓய்வுபெற்றபின் மயிலாடுதுறை நகரசபைத் தலைவராகவும் வேதநாயகம் பிள்ளை விளங்கினார். மயிலாடுதுறையிலேயே 21.07.1889-இல் கர்த்தரின் திருவடி நீழலை அடைந்தார். அவரது கல்லறை மயிலாடுதுறையில் இன்றும் உள்ளது. வேதநாயகரின் மறைவு குறித்துப் புகழ்பெற்ற ஆங்கில நாளிதழ் ''இந்து'' நீண்டதோர் இரங்கலுரையை வரைந்து சிறப்பித்தது. (HINDU 24.07.1889)

சுப்பிரமணியதேசிகரைக் குறித்து வேதநாயகம்பிள்ளை பாடிய பாடல்கள் பல. வேதநாயகம்பிள்ளை திருவாவடுதுறை ஆதீன வரலாற்றில் இடம் பெறுகிறார். திருவாவடுதுறை ஆதீனம் வேதநாயகம்பிள்ளை வரலாற்றில் இடம் பெறுகிறது. வேதநாயகரின் பாராட்டு திருவாவடுதுறை ஆதீனத்திற்கு ஒரு சிறந்த நன்மதிப்பு.

திருவாவடுதுறை ஆதீனத்தின் அன்னக் களஞ்சியம், அணையா அடுப்பு, மாகேஸ்வர பூசை, அன்னதானம்

"அன்னம் பிரம்மம்" என்று வேதங்களும் உபநிடதங்களும் கூறுகின்றன. "அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்" என்று அப்பர் சுவாமிகள் பாடுகிறார். அன்னம் என்பதற்கு உண்ணும்சோறு என்று ஒரு பொருள்; முத்தி என்று ஒரு பொருள். இரு பொருளிலும் அன்னம் பாலிப்பது தில்லைச் சிற்றம்பலம். சோறு என்னும் பொருளிற் கொண்டே இப்பாடலை மாகேவர பூசையிற் பாடிவருதல் வழக்கத்தி லுள்ளது. சிதம்பரத்தில் நாள்தோறும் அன்னாபிஷேகம் உண்டு. படிகலிங்கத்திற்கு உச்சிக்காலத்தில் நாள் தோறும் அன்னாபிஷேகம் செய்யப்பெறும். அன்னப் பாவாடை என்றொரு சிறப்பு நிவேதனமும் தில்லையில் உண்டு.

காசியில் விசாலாட்சிக்கு அன்னபூரணி என்று சிறப்புப் பெயர் உண்டு. அன்னபூரணிக்குத் தனிக்கோயிலும் உண்டு. அன்னபூரணியின் திருவுருவம் தங்கத்தால் ஆனது. அன்னபூரணியின் தங்கத் திருவுருவை ஐப்பசி மாதம் தீபாவளி அன்று ஒருநாள் மட்டுமே தரிசிக்கலாம். மற்ற நாள்களில் அலங்காரத்தால் மறைக்கப் பெற்றிருக்கும். தங்க அன்னபூரணி தங்கப்பாத்திரத்தில் அமுதத்தை ஏந்திச் சிவபெருமானுக்கே பிச்சையிடுவதாகக் காசியில் ஐதீகம். சிவபெருமானுக்குப் பிச்சையிடும் கோலத்தில்தான் அங்கு அன்னபூரணி காட்சியளிக்கிறாள். சிவபெருமான் அன்னபூரணி யிடம் பிச்சை ஏற்கும் கோலமுள்ள படங்களைக் காசியில் வாங்கலாம். சிவபெருமானே பிச்சை வாங்குகிறார் என்றால் பிச்சைபோடும் அன்னபூரணியின் பெருமைதான் என்னே! அன்னபூரணி என்ற பெயரே அன்னதானத்தால் ஏற்பட்டது தானே. சோறு விற்கும் கடைகள் "ஹோட்டல் அன்னபூர்ணா" எனப் பெயர் பெற்றது இவளால்தானே!

அன்னபூர்ணே சதாபூர்ணே சங்கரப் ப்ராண வல்லபே
ஞான வைராக்கிய சித்யர்த்தம் பிக்ஷாம்தேஹிச பார்வதி


என்று ஆதிசங்கரர் அன்னபூரணியிடம் ஞானபிட்சை வேண்டுகிறார். யாம் காசிக்குச் செல்லும் போதெல்லாம் அன்னபூரணியைத் தரிசிப்பதுண்டு. ஆதிசங்கரரின் இந்த அன்ன பூர்ணாஷ்டகச் சுலோகத்தைச் சொல்லி அன்னபிட்சையும் ஞான பிட்சையும் வேண்டுவதுண்டு.


உலகிலேயே அன்னதானம் அதிகமாக நிகழுமிடம் **தர்மஸ்தலம்**. கர்நாடக மாநிலம் தென்கன்னட மாவட்டத்தி லுள்ளது. பெயரே தர்மஸ்தலம். நாள்தோறும் ஏறத்தாழ ஐம்பதாயிரம் பேருக்கு அன்னதானம். வருவோர் அனைவர்க்கும் உணவு. 500 லிட்டர் 1000 லிட்டர் சாம்பார் ரசம் கொதிக்கும் கலன்கள். ''அன்னபூர்ணா'' உணவுக்கூடத்தில் ஆயிரம் பேருக்குமேல் ஒரே சமயத்தில் உணவுகொள்ளலாம்.

அடுத்து, பெரியஅளவில் அன்னதானம் நிகழுமிடம் உடுப்பி. **உடுப்பி** கிருஷ்ணனுக்கு **அன்னப்பிரம்மம்** என்று பெயர். உடுப்பியில் அன்னதானம் தழைக்கிறது. **பண்டரிபுரம்** பண்டரிநாதனுக்கு **நாதப்பிரம்மம்** என்று பெயர். பண்டரி புரத்தில் பஜனை செழிக்கிறது. **திருப்பதி** வேங்கடாசலபதிக்குக் **கனகப் பிரம்மம்** என்று பெயர். திருப்பதியில் செல்வம் கொழிக்கிறது. மத்வர் வைத்திருந்த அட்சய பாத்திரம் உடுப்பியில் இன்றும் வழிபாட்டில் உள்ளது. அவர் ஏற்றிய அணையாதீபம் உடுப்பியில் இன்றும் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. வாழை முகூர்த்தம், அரிசி முகூர்த்தம், விறகுமுகூர்த்தம், நெல் முகூர்த்தம் என்னும் உடுப்பியின் முக்கிய விழாக்கள் அதன் அன்னதானச் செழிப்பைக் காட்டும். உடுப்பியில் விறகு அடுக்கு, தேர் வடிவில் தேர் உயரத்திற்கு, விறகுத் தேராகவே கலசத்துடன் செய்யப்படும். படம் காண்க(பக்கம் 189). இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை யாவது நாம் உடுப்பிக்குச் சென்று வருவதுண்டு.

கொடியவற்றுளெல்லாம் கொடியது பசி. தானங்களி லெல்லாம் சிறந்தது அன்னதானம்.

''உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே'' என்பது புறநானூறு (18)
''உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே'' என்பது மணிமேகலை (11; 96)





"உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே" என்னும் இவ்உயிர்மொழி தமிழுலகில் ஒன்றுக்கு இரண்டாக இரண்டு நூல்களில் வழங்குகிறது. புறநானூறும் கூறுகிறது, மணிமேகலையும் கூறுகிறது.

"உண்டி முதற்றே உணவின் பிண்டம்" என்பது புறநானூறு (18)
"மக்கள் யாக்கை உணவின் பிண்டம்" என்பது மணிமேகலை (11;90)

நம் தூல உடம்புக்கு அன்னமயகோசம் என்று பெயர். உலக வாழ்வே அன்னமயம்; உயிர்வாழ்வே அன்னமயம்.

அன்னதானமே மோட்சவாயில்.
சோறு இட்டால் சோறு கிடைக்கும்
சோறு = அன்னம் - உணவு. சோறு =முத்தி.
சோறு என்னும் சொல்லுக்கு அன்னம் (உண்ணும் சோறு) என்றும், முத்தி என்றும் பொருள்.
அன்னமிட்டால் முத்தி கிடைக்கும்.

அடியவர்களுக்கு அன்னமிட்டு முத்திபெற்ற வரலாறுகள், சோறிட்டுச் சோறு பெற்றவர்கள் பெரியபுராணத்தில் பலர் உண்டு.

சம்பந்தரும் அப்பரும் திருவீழிமிழலையில் பஞ்ச நிவாரணப்பணி செய்தார்கள். பரமன் அடியார் ஆனார்கள் எல்லாம் எய்தி உண்க என இரண்டுபொழுதும் பறை நிகழ்த்திச் சொல்லால் சாற்றிச் சோறிட்டார்கள், துயர்கூர் வறுமையைத் தொலைத்திட்டார்கள். பகல் இரவு இரண்டு வேளையும் பறைசாற்றியும் வாயாற்சொல்லியும் அன்ன தானம் செய்திருக்கிறார்கள். "இரண்டு பொழுதும் பறை நிகழ்த்திச் சொல்லால் சாற்றிச் சோறிட்டார்" என்பதைக் காண்க. இரண்டுபொழுது - பகலும் இரவும். பறைநிகழ்த்தி =பறைசாற்றி, பறையடித்து - தமுக்குஅடித்து - தண்டோரா போட்டு - டாம் டாம் போட்டு - சோறு போட்டிருக்கிறார்கள். சொல்லால் சாற்றி - அக்கம் பக்கத்திலிருந்தவர்களுக்கு வாயால் சொன்னார்கள். தூரத்திலிருந்தவர்கள் அறியப் பறை சாற்றினார்கள். பஞ்ச காலத்தில் பறைசாற்றினால் எவ்வளவு கூட்டம் சேரும். அவ்வளவு பேருக்கும் சோறிட்டார்கள்.

அல்லார் கண்டத் தண்டர்பிரான் அருளால் பெற்ற படிக்காசு
பல்லா றியன்ற வளம்பெருகப் பரமன் அடியா ரானார்கள்
எல்லாம் எய்தி உண்கஎன இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லால் சாற்றிச் சோறிட்டார் துயர்கூர் வறுமை
தொலைத்திட்டார்

என்னும் பெரியபுராணச் செய்யுள் (1529) இன்றும் மாகேசுவரபூசையிற் பாடப்பெறுகிறது. மண்ணில் மக்களாகப் பிறந்ததன் பயன் அடியார்களுக்கு அமுதுசெய்வித்தலே என்கிறார் சம்பந்தர். இந்த உண்மையைக் கூறியே, என்றோ இறந்துபோன பூம்பாவையை ஐந்து ஆண்டுகளுக்குப்பின் எழுப்புகிறார், எலும்பைப் பெண்ணாக்குகிறார், சம்பந்தர்,

மண்ணினில் பிறந்தார் பெரும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மையாம் எனில் உலகர்முன் வருகென உரைப்பார்

என்ற பெரியபுராணப் பாடலும் (2990) மாகேசுவர பூசையிற் பாடப்பெறுகிறது.

நாயன்மார் அறுபத்துமூவருள் இளையான்குடிமாறனார் என்பவர் விதைத்த நெல்லை அரித்துவந்து சமைத்து அடியவர்க்கு அமுதளித்தார். அவ்வற்புத வரலாற்றைக்கூறும்

கொண்டுவந்து மனைப்புகுந்து குலாவுபாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆதனத்திடைவைத் தருச்சனை செய்தபின்
உண்டி நாலுவிதத்தில் ஆறுசுவைத் திறத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுது செய்ய அளித்துளார்.

என்ற பெரியப்புராணப் பாடலும் (443) இன்றும் மாகேசுவர பூசையிற் பாடப்பெறுகிறது.

திருக்கோட்டியூரில் செல்வநம்பி என்னும் வைணவ ஆசாரியரின் பத்தினியார், தம் கணவர் வெளியே சென்றிருந்த சமயத்தில் வீட்டுக்குவந்த அடியவருக்கு அமுதுபடைக்க வேறு வழியின்றி விதைநெல்லைச் சமைத்துப் போட்டாராம். வீடு திரும்பிய கணவர் விதைநெல் குறைகிறதே என்று கேட்டதற்கு ''**வைகுந்தத்தில் வித்தினேன்** '' என்றாராம். அடியவருக்கு அமுதுபடைத்தேன் என்று

சொல்லவில்லை. "வைகுந்தத்தில் வித்தினேன்" என்றார். ஆம் விதைக்கவேண்டிய இடத்தில் விதைத்து விட்டார். இப்படி வைணவ உலகிலும் ஒரு வரலாறு. "அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள் வைப்புழி" என்ற வள்ளுவர் குறளோடு இதனை ஒத்துப் பார்க்க வேண்டும். அற்றாராகிய அடியவர் வந்தார். இந்த அம்மையார் அமுது படைக்க அரிசியோ அல்லது சாப்பாட்டு நெல்லோ பெற்றார் இல்லை. விதை நெல்லே இருக்கப் பெற்றவர் வித்தைக் குற்றிச் சமைத்து உண்பித்தார். "பசித் துன்பமே நரகம், உணவு உண்டு பசி நீங்கிய திருப்தி இன்பமே மோட்சம்" என்கிறார் வள்ளலார். வைகுந்தத்தில் வித்தினேன் என்றதை இதனோடு ஒத்துப் பார்க்க வேண்டும்.

அன்னதானபலன் கயிலாயம் வைகுந்தம் மோட்சம் முத்தி வீடுபேறு பேரின்பம் என்பது இவ்வரலாறுகளால் நன்கு விளங்கும்.

அன்னதானபலன் என்றே நாம் ஒரு சிறுநூல் எழுதி யிருக்கிறோம். முழுவதும் தமிழ் நூல்தான். ஒருவரிகூட ஆங்கிலம் இல்லை. ஆயினும் ஆங்கிலத்தில் OPERATION HUNGER என்றொரு செல்லப் பெயரையும் துணைப் பெயராக அந்நூலுக்கு இட்டிருக்கிறோம். தென்னாப்பிரிக்கா சுற்றுப் பயணத்தில் நெல்சன் மண்டேலாவின் மனைவியார் வின்னி மண்டேலா ஆதரவற்ற ஏழை எளியவர்களுக்காக அமைத்து நடத்தும் அறநிறுவனத்திற்கு OPERATION HUNGER என்று பெயர் வைத்திருப்பதை அறிந்தோம். ஆப்பரேஷன் என்ற ஆங்கிலச்சொல் மருத்துவ உலகிலும் போர் உலகிலும் வழங்கும் சொல். மருத்துவ ஆப்பரேஷன் அனைவரும் அறிந்ததே. "ஆப்பரேஷன் புளூஸ்டார்" "ஆப்பரேஷன் விஜய்" என்பதைப் படையெடுப்புக் காலங்களில் கேட்டி ருக்கிறோம். ஆப்பரேஷன் ஹங்கர் என்றால் பசியின்மீதும் பட்டினியின்மீதும் படையெடுப்பு. அந்த அருமையான பேரை ஆப்பிரிக்க நாட்டில் வின்னி மண்டேலா தன் அறநிலையத்திற்கு வைத்திருக்கிறார். வள்ளற்பெருமான் இராமலிங்கஅடிகள் பசியோடும் பட்டினியோடும் போர்

தொடுத்தவர். அவற்றை இவ்வுலகத்திலிருந்தே விரட்டியடிக்க விரும்பியவர், ஒழிக்க விரும்பியவர். அதற்காகப் பல பாடல் களைப் பாடியவர், அதற்கென்றே ஜீவகாருண்ய ஒழுக்கம் என்று ஒரு உரைநடை நூலை எழுதியவர். அதற்கென்றே வடலூரில் ஒரு தருமச் சாலையைக் கட்டி அதில் அணையா அடுப்பை ஏற்றியவர். அப்பெருமானின் தருமச்சாலைக்குத் தொடர்ந்து முப்பது ஆண்டுகளாக அறங்காவலராகப் பணியாற்றும் பெரும் பேற்றை அடியேமுக்கு அருளி யிருக்கிறார். தென்னாப்பிரிக்காவில் ஆப்பரேஷன் ஹங்கர் என்ற பேரைக் கேட்டதும் ஏற்பட்ட ஓர் இன்ப அதிர்ச்சியால் அப்படியே உறைந்து போனோம். ஆப்பரேஷன் ஹங்கர், ஆப்பரேஷன் ஹங்கர், ஆப்பரேஷன் ஹங்கர் என்று எம்வாய் உச்சரித்துக்கொண்டே இருந்தது. அன்னதானபலன் நூல் இரண்டாம் பதிப்புக்கு OPERATION HUNGER என்று துணைப் பெயரிட்டோம்.

'' **அன்னம் பஹு குர்வீத** '' *(உணவைப் பெருக்கிப் பகிர்ந் துண்ணும் பாரதீய சனாதன தருமம்) என்று ஒரு பெருநூல், கொள்கை ஆய்வுமையம், சென்னை* (CENTRE FOR POLICY STUDIES, CHENNAI) *என்பவர்களால் 1996-இல் ஆங்கிலத்திலும் இந்தியிலும் 1999-இல் தமிழிலும் வெளியிடப் பெற்றது.* காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், சிருங்கேரி சங்கராசாரிய சுவாமிகள், புரி(பூரி) கோவர்த்தன பீடம் சங்கராசாரிய சுவாமிகள், நாங்குநேரி வானமாமலை ஜீயர் சுவாமிகள், சீதாநகரம் திரிதண்டி ஜீயர் சுவாமிகள், உடுப்பி பேஜாவர் மடம் சுவாமிகள், பிருந்தா வனம் ஆனந்தகுடீரம் சுவாமிகள் ஆகிய ஏழு பெரியோர்கள் இந்நூலுக்கு ஆசியுரையளித்துள்ளனர். ஒரு நன்னாளில் இந்நூல் தமிழ்ப்பதிப்பும் ஆங்கிலப் பதிப்பும் எமக்கு அன்பளிப்பாக வழங்கப்பெற்றபோது, அந்நூலைப் புரட்டிப் பார்த்ததும் எமது மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அன்னதான பலன், பஹு குர்வீத போன்ற நூல்களைத் தமிழன்பர்கள் சைவ அன்பர்கள் படிக்கவேண்டும். வள்ளுவர் முதல் வள்ளலார்வரை வாழையடி வாழையாக வரும் தமிழ்ச்

சான்றோர்கள் அற்றார் அழிபசி தீர்த்தல், ஜீவகாருண்யம், பற்றிக் கூறியவற்றை யெல்லாம் படித்துத் தொகுத்து அறிய வேண்டும்.

மேற்கூறியனவற்றை யெல்லாம் நீளநினைந்தபின், அந்தச் சிந்தனையுடனே திருவாவடுதுறை ஆதீனத்தின் அன்னக் களஞ்சியத்தைக் காணவேண்டும். காண்போம்.

திருவாவடுதுறை ஆதீனத்தின் மடைப்பள்ளிக்கும் பந்திக்கட்டுக்கும் **அன்னக்களஞ்சியம்** என்று பெயர். பந்திக் கட்டின் தூண் ஒன்றில் காமதேனு கற்பக விருட்சம் அன்ன பூரணி ஆகிய மூன்றும் புடைப்புச் சிற்பங்களாக உள்ளன. மடைப் பள்ளி - சமையற்கூடம். பந்திக்கட்டு - உணவுக்கூடம். சமையற் கூடம், உணவுக்கூடம் என்பன சாதாரணமாக வீடுகளிலும் சத்திரங்களிலும் வழங்கும் பெயர். மடைப் பள்ளி என்பது கோயில்களிலும் மடங்களிலும், பந்திக்கட்டு என்பது மடங்களிலும் வழங்கும் பெயர். ஆனால் திருவாவடுதுறை ஆதீனத்திலோ மடைப்பள்ளியும் பந்திக் கட்டும் அன்னக் களஞ்சியம் என ஒரு தனிச் சிறப்புப் பெயரைப் பெற்று விளங்குகின்றன.

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் தஞ்சாவூர் மாவட்டம். தஞ்சாவூர் மாவட்டத்தில் அன்னக்களஞ்சியம் திருவாவடுதுறை ஆதீனம்.

அன்னக் களஞ்சியத்தின் அடுப்பு அணையா அடுப்பு. மடைப்பள்ளியும் அதில் கோட்டடுப்பும் உண்டான காலத்தில் மூட்டப்பெற்ற தீ இன்னும் அணைந்ததில்லை. எப்பொழுதும் அடுப்பில் நெருப்பு இருந்துகொண்டே இருக்கும். அணையா அடுப்பாக எரிந்துகொண்டே இருக்கும். இரவிலும் அடுப்பில் நீறுபூத்த நெருப்பு இருக்கும். **மடத்தில் சிகிமுகிக் கற்களோ நெருப்புப் பெட்டியோ வாங்கியதாகக் கணக்கில் இல்லை** என ஆதீன வரலாறு எழுதும் த.ச.மீனாட்சி சுந்தரம் பிள்ளை எழுதுகிறார். ஒரு சமயம் நாம் சென்றிருந்த போது நீண்ட தென்னைமரத் துண்டொன்று அடுப்பில் செருகப் பட்டிருந்ததைக் கண்டோம். அது சமையல்

நேரமன்று. எனினும் அடுப்பில் நீண்ட தென்னந்துண்டு கனிந்து கொண்டிருந்தது. அணையா அடுப்பின் வளம் அது. வடலூரில் வள்ளற்பெருமான் ஏற்றியருளியதும் அணையா அடுப்பே. அதுவும் இதைப்போல் இன்றும் எரிந்து கொண்டிருக்கிறது.

திருவாவடுதுறை மடத்தின் சேகண்டி நாதம் ''வாரும்! வாரும்!!, சபாபதி பூசையை மகிழ்ந்து கும்பிட்டுத் தூபமும் தீபமும் பாரும்! பாரும்!!, சைவாகம மாதவர் பந்தியில் சென்று இருந்து சம்பாஅன்னம் ஆரும்! ஆரும்!!'' என்று அழைப்பது போல் இருக்குமாம். திருச்சிற்றம்பலதேசிகர் கலம்பகப் பாட்டு இது.

திருவாவடுதுறை ஆதீன வரலாற்றை ''அரசவனத்து அறநிலையம்'' என்ற பெயருள்ள நூலாக எழுதும் ஆதீன வித்துவான் த.ச.மீ., நாற்பத்தாறு ஆண்டுகளுக்குமுன் 1962- இல் ''அன்னக்களஞ்சியம்'' ''திருமடைப்பள்ளி'' என்ற தலைப்புகளில் எழுதியுள்ளதை அந்நூலிலிருந்து அப்படியே இதன்கீழ் எடுத்துக்காட்டுகிறோம்.

அன்னக்களஞ்சியம்

''ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகளின் வலது பக்கத்திலிருக்கின்ற பெரிய கட்டு அன்னக்களஞ்சியம். இங்கேதான் தினமும் ஏறுபடி காலங்களிலும் மாகேசுவர பூசை நடைபெறும். தினந்தோறும் இங்கு ஆயிரத்துக்குக் குறையாமல் மக்கள் அன்னம் அருந்துவார்கள். இதில் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளத் தனித்தமேடையும் சித்திராசனமும் இருபக்கங்களிலும் குத்துவிளக்கு மேடைகளும் விளங்கும். மேடையில் குருமகாசந்நிதானம் அவர்கள் வீற்றிருக்க நாற் புறமும் சிவவேடப்பொலிவோடு முனிவர்களும் மற்றவர்களும் ஹரஹர முழக்கோடு அமுது அருந்துவது ஒரு தெய்வக் காட்சியாகவே திகழும். இதனைப் பந்திக்கட்டு என்பர். அமுது அருந்தும் காட்சியைக் கூறும் பாடல்:-''

கதியுதவு துறைசைவரு திருச்சிற்றம்
பலகுரவர் கதிரி னோடு
மதியுலவு திருமடத்தின் பந்தியிலுண்
பவர்களந்த வாணன் கையும்
முதிரறிவு பெறுஞ்சேடன் றிருவாயும்
சிங்கமா முகத்தி னோன்றன்
பொதிவயிறும் புரந்தரனார் திருவிழியும்
வேண்டுமெனப் புகலு வாரே.

வாரும் வாரும்ச பாபதி பூசையை
மகிழ்ந்து கும்பிட்டுத் தூபமுந் தீபமும்
பாரும் பாரும்சை வாகம மாதவர்
பந்தி யிற்சென் றிருந்துசம் பாவன்னம்
ஆரும் ஆரும் எனவேதன் வாய்திறந்து
அழைக்கு மேதிரு வாவடு தண்டுறை
சேரு மாதிருச் சிற்றம் பலகுரு
திரும டத்தினிற் சேகண்டி நாதமே.

- திருச்சிற்றம்பலதேசிகர் கலம்பகம்.

திருமடைப்பள்ளி

இத்தனை பேருக்கும் அன்னம் சமைக்கும் மடைப் பள்ளி இருக்கிறது. இதில் எப்பொழுதுமே உணவு வகைகள் வெந்துகொண்டேயிருக்கும். மூன்றாவது மகாசந்நிதானம் காலத்தில் மடைப்பள்ளியை எடுத்துக் கட்டி இதில் கோட்டையடுப்பைக்கட்டி நமச்சிவாய மூர்த்திகளுக்குக் கற்பூரத்தைக் காட்டித் தீயை உண்டாக்கினார்களாம். 12 ஆண்டுகளாக நாள் பார்த்து நல்முகூர்த்தத்தில் அடுப்பில் தீ மூட்டப்பட்டதென்பர். அதுமுதல் இதுவரையில் அதாவது சுமார் முந்நூறு ஆண்டுகளாக அந்தத்தீ அணைந்ததில்லை. எப்பொழுதும் நெருப்பு இருந்துகொண்டே இருக்கும். மடத்தில் சிகிமுகிக் கற்களோ நெருப்புப் பெட்டியோ வாங்கியதாகக் கணக்கில் இல்லை.

என்று த.ச.மீ. எழுதுகிறார்.

சுமார் முந்நூறு ஆண்டுகளாக அடுப்புத்தீ அணைந்த தில்லை என்கிறார். இது எழுதியது 1962-இல். எழுதி 46 ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போது சுமார் 346 ஆண்டுகளாக என்று வைத்துக்கொள்ளவேண்டும். **இப்படித்தான் வடலூரில் வள்ளற்பெருமான் 141 ஆண்டுகளுக்குமுன் 1867-05-23 பிரபவ வைகாசி 11-ஆம் நாளில் ஏற்றிய அணையா அடுப்பும் 141 ஆண்டுகளாக இன்றும் அணையாது எரிந்து கொண்டிருக்கிறது.** பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்களின் பசித் தீயை அணைத்துக் கொண்டிருக்கிறது. **திருவாவடுதுறை ஆதீன அன்னக் களஞ்சியம் போன்றே வடலூரில் வள்ளலாரின் சத்திய தருமச்சாலையும் ஓர் அன்னக்களஞ்சியம்.** அன்னக் களஞ்சியம் அணையா அடுப்பு ஆகியவற்றின் அருமை பெருமைகளை அன்பர்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற் காகவே ஒருமுறைக்கு இருமுறையாக அழுத்தந் திருத்தமாக இங்கு இதனை இவ்வளவு விரித்தோம்.

திருவாவடுதுறை ஆதீனத்தின் அன்னக்களஞ்சியத்தில் நாள்தோறும் மாகேஸ்வர பூஜை, அன்னம்பாலிப்பு, அன்னதானம் ஆகிய மூன்றும் நிகழும். குருபூசை முதலிய சிறப்பு நாள்களில் பெரியஅளவில் சிறப்பாக நிகழும். அதென்ன மாகேசுவரபூசை, அன்னம்பாலிப்பு, அன்னதானம் என்று மூன்றாகப் பிரித்துக் கூறுகிறோமே என்று அன்பர்கள் எண்ணலாம். அதனையும் சிறிது விளக்க வேண்டும்.

அடியார்களுக்கு அன்னம் படைப்பது **மாகேசுவரபூசை.**

வரும் அன்பர்களுக்கும் பணியாளர்களுக்கும் அன்னமளிப்பது **அன்னம்பாலிப்பு.**

ஏழை எளியவர்களுக்கு அன்னம் வழங்குவது **அன்னதானம்.**

இங்கு இன்னொன்றையும் அன்பர்கள் ஊன்றிக் கவனிக்கவேண்டும். அன்னம் படைப்பது, அன்னம் அளிப்பது, அன்னம் வழங்குவது -படைப்பது - அளிப்பது - வழங்குவது என வெவ்வேறு சொற்களை நாம் ஆண்டிருக்கிறோம்.

ஏழை எளியவர்களுக்கு வழங்குவது தானம்.
அன்பர்களுக்கும் பணியாளர்களுக்கும் அளிப்பது பாலிப்பு.
அடியார்களுக்குப் படைப்பது பூசை.
தானம், பாலிப்பு, படைப்பு (பூசை) என்பதன் வேறுபாடு இதுவே.

ஆதீனத்திற்கு நாள்தோறும் அடியவர்கள் வந்துகொண்டே இருப்பார்கள். விழாக் காலங்களில் மிகுந்த எண்ணிக்கையில் வருவார்கள். அனைவர்க்கும் மாகேசுவர பூசை ஆகும்.

பொதுவாக வரும் அன்பர்கள் அனைவருக்கும் (விருந்தினர்கள் அனைவருக்கும் என்ற வைத்துக்கொள்க) அன்னம்பாலிக்கப்பெறும். ஆதீனத்தில் நூற்றுக்கணக்கான வர்கள் பணிபுரிகிறார்கள். பணியாளர்கள் அனைவருக்கும் இருவேளை உணவு (பகல் இரவு உணவு) ஆதீனத்திலேயே அளிக்கப்பெறுகிறது. பணியாளர்கள் உண்பதோடன்றித் தம் வீட்டிலிருப்பவர்களுக்கும் எடுத்துச்செல்வர், கொடுத்தனுப்பப் பெறும். குடும்பத்தோடு ஆதீன அன்னத்தை அருந்துகின்றனர். பணியாளர்களின் குடும்பம் முழுவதற்கும் ஆதீனம் அன்ன மிடுகிறது. அந்நாளில் திருவாவடுதுறை ஒரு சிற்றூர். அதில் வசித்தவர்களில் பெரும்பாலோர் ஆதீனத்தில் ஏதோ ஒரு வகையில் பணிசெய்பவர்களே. அவர்கள் அனைவருக்கும் ஆதீனமே நாள்தோறும் இருவேளையும் அன்னம் வழங்கியது. பெரும்பாலும் அவர்கள் வீடுகளில் சமையல் அதிகம் இராது, பிள்ளை குட்டிகளோடு ஆதீன உணவையே உண்டு வளர்ந்தனர், வாழ்ந்தனர். முன்பு பழைய காலத்திலும் இப்படி நடந்தது. இப்போது இன்றும் இப்படி நடக்கிறது. இது அன்னம்பாலிப்பு. அந்நாளில் திருவாவடுதுறையில் கடைகளே இல்லையாம். அவசரத்திற்கு, அவசியத்திற்கு ஏதேனும் வேண்டுமென்றால், ஆதீனத்தைச் சார்ந்திருப்பவர்கள், ஆதீன உக்கிராணத்திலேயே கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டுமாம். ஐயரவர்கள் எழுதுகிறார். திருவாவடுதுறை கிராமத்திற்கு ஒரு சமுதாய உணவுக் கூடமாகவே ஆதீன அன்னக்களஞ்சியம் திகழ்ந்திருக்கிறது. ஆதீனப் பணியாளர் களைப் பொறுத்தவரை இப்போதும் ஓரளவுக்கு அப்படியே.

ஏழை, எளியவர்களாக, வறியவர்களாக வரும் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பெறுகிறது.

திருவாவடுதுறை கிராமத்தில் இரண்டே பட்டாக்கள்தான் உண்டு. ஒரு பட்டா கோயில் பட்டா. இன்னொரு பட்டா மடத்துப்பட்டா (ஆதீனப்பட்டா). திருவாவடுதுறை முழுவதுமே ஆதீனத்திற்குச் சொந்தமானது. கோயிலுக்கும் ஆதீனத்திற்குமே பட்டா. வேறு யாருக்கும் பட்டா இல்லை. ஆதீனப் பட்டா நிலங்களில்தான் குடியானவர்கள் குத்தகை சாகுபடி செய்கிறார்கள். ஆதீனப்பட்டா மனைகளில்தான் ஊர்மக்கள் இலவசமாகக் குடியிருக்கிறார்கள். இது அக்காலத்திய நிலை. காலப்போக்கில் இப்போது மாறியிருக்கலாம்.

மடங்களில் குருபூசை முக்கியமானது. குருபூசையில் மாகேசுவரபூசை முக்கியமானது. மாகேசுவரபூசை இன்றிக் குருபூசை இல்லை. குருபூசை மாகேசுவரபூசையுடன்தான் நிறைவுபெறும். திருவாவடுதுறை ஆதீனத்தில் ஆதீன குருமுதல்வர் நமசிவாயமூர்த்திகளின் குருபூசை மகரத் தலைநாள் விழா என மிகச் சிறப்பாக நிகழும். அவ்விழா நாள்களில் ஆதீனத்தின் அன்னக்களஞ்சியம் நிரம்பி வழியும். திருவாவடுதுறை ஆதீன அன்னக்களஞ்சியத்தின் சோற்றுப் பெருக்கைப் பல்லாண்டுகள் நேரிற்கண்டும், உண்டும், மாணாக்கர்களை உண்பித்தும், அனுபவித்த பிள்ளையவர்கள் “ **சோறுமணக்கும் மடங்களெலாம்**” என்று பாடினார். சோறுமணக்கும் மடங்களெல்லாம் என்று பிள்ளையவர்களைப் பாடச்செய்தது திருவாவடுதுறை ஆதீன அன்னக்களஞ்சியத்தின் சோற்று வளமே. இனிப் பாடலுக்கு வருவோம்.

சோறு மணக்கும் மடங்களெலாம்
தூய்மை மணக்கும் சிந்தையெலாம்
சுவண மணக்கும் ஆடையெலாம்
தொங்கல் மணக்கும் தோள்களெலாம்
சேறு மணக்கும் கழனியெலாம்
செல்வ மணக்கும் மாடமெலாம்
தென்றல் மணக்கும் மேடையெலாம்
தெய்வமணக்கும் செய்யுளெலாம்

நீறு மணக்கும் நெற்றியெலாம்
நெய்யே மணக்கும் கறிகளெலாம்
நெருப்பு மணக்கும் குண்டமெலாம்
நேய மணக்கும் வீதியெலாம்
சாறு மணக்கும் குன்றத்தூர்த்
தலைவா தாலே தாலேலோ
சகலா கமபண் டிததெய்வச்
சைவா தாலே தாலேலோ.

திருஆவடுதுறை ஆதீன மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத்தமிழ் மூன்றாவது தாலப்பருவம் ஐந்தாம் செய்யுள் இது.

எங்கெங்கே என்னென்ன மணக்கிறது என்பதை அனுபவித்துச் சொல்கிறார் ஆதீன மகாவித்துவான்.

மடங்களி லெல்லாம் சோறு மணக்கிறது.
சிந்தை (மனங்) களி லெல்லாம் தூய்மை மணக்கிறது.
ஆடைகளி லெல்லாம் சுவர்ணம் (பொற்சரிகை) மணக்கிறது.
தோள்களி லெல்லாம் (உருத்திராக்க) மாலைகள் மணக்கின்றன.
வயல்களி லெல்லாம் சேறு மணக்கிறது.
மாடங் (வீடு) களி லெல்லாம் செல்வம் மணக்கிறது.
மேடைகளி லெல்லாம் தென்றல் மணக்கிறது.
பாடல்களி லெல்லாம் தெய்வமணம் மணக்கிறது.
நெற்றிகளி லெல்லாம் திருநீறு மணக்கிறது.
கறிகளி லெல்லாம் நெய் மணக்கிறது.
ஹோம குண்டங்களி லெல்லாம் நெருப்பு மணக்கிறது.
வீதிகளி லெல்லாம் நேயம் மணக்கிறது.
குன்றத்தூரிலே விழா மணக்கிறது.

" வள்ளால் உன்னைப் பாடப்பாட வாய் மணக்குதே" என்று பாடுகிறார் வள்ளற்பெருமான். திருஅருட்பா 4996. அதைப் போலப் பிள்ளையவர்களின் இப்பாடலைப் பாடப் பாடப் பாடுவார் வாயெல்லாம் மணக்கும். வரிக்கு வரி மணக்கும். மணக்கிறது.

சோறு மணக்கும் மடங்க ளெல்லாம் என்பதைப் பாடலின் இடையிற் கடையிற் கூறாது எடுத்த எடுப்பிலேயே முதலிற் கூறுகிறார். மடங்களிலெல்லாம் சோறு மணப்ப தோடேயே பாடல் தொடங்குகிறது. மடங்களெலாம் என்பதற்கு மடங்கள் எல்லாவற்றிலும், கிளைமடங்கள் எல்லாவற்றிலும், திருவாவடுதுறை ஆதீனக் கிளைமடங்கள் எல்லாவற்றிலும், என்று ஒரு பொருள் கொள்ளலாம். சைவ மடங்கள் எல்லாவற்றிலும், திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், சூரியனார்கோயில், காஞ்சிபுரம், மதுரை, குன்றக்குடி முதலிய மடங்கள் எல்லாவற்றிலும் என்று ஒரு பொருள் கொள்ளலாம்.

வெறும் சோறு மட்டும் மணந்தால் போதுமா? தொட்டுக் கொள்ளத் தொடுகறிகளும் மணக்கவேண்டாமா? மணக்கின்றன. நெய் மணக்கின்றன. நெய்யே மணக்கும் கறிகளெலாம் என்று பாடலிடையிற் கூறுகின்றார். கறிக ளெல்லாம் நெய்யால் தாளிக்கப்பெற்று நெய் மணக்கின்றன. தாளிப்புக்குப் பசு நெய்யைப் பயன்படுத்த வேண்டும் என வள்ளலாரும் ஓரிடத்திற் கூறுகிறார்.

நீறில்லா நெற்றிபாழ்; நெய்யில்லா உண்டிபாழ்;
ஆறில்லா ஊருக்கு அழகுபாழ்; மாறில்
உடன்பிறப் பில்லா உடம்புபாழ்; பாழே
மடக்கொடி இல்லா மனை.

என்று ஒளவையார் ஒரு பாடலைப் பாடுகிறார். எங்கெங்கே என்னென்ன மணக்கிறது என்று பிள்ளையவர்கள் பாடுவது போன்றே, முன்னாளில் ஒளவையார் எது எது இல்லாத எதுஎது பாழ் என்று பாடினார் (நல்வழி 24).

நீறு இல்லா நெற்றி பாழ்
நெய் இல்லா உண்டி பாழ்
ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்
மாறுஇல்லாத உடன்பிறப்பு இல்லா உடம்பு பாழ்
பாழே மடக்கொடி இல்லா மனை.

நீறு இல்லா நெற்றி, நெய் இல்லா உண்டி என்று ஔவையார் நீறில்லா நெற்றியையும் நெய்யில்லா உண்டியையும் அடுத்தடுத்து வைத்ததுபோன்றே பிள்ளையவர்களும் நீறு மணக்கும் நெற்றியையும் நெய்மணக்கும் கறிகளையும் அடுத்தடுத்து வைக்கிறார். என்ன வரிசைப் பொருத்தம்!

நீறில்லா நெற்றி - நெய்யில்லா உண்டி
நீறுமணக்கும் நெற்றி - நெய்யே மணக்கும் கறிகள்

நெற்றிக்கு நீறழகு, உண்டிக்கு நெய்யழகு
நெற்றியில் நீறுமணக்கவேண்டும். உண்டியில் நெய் மணக்கவேண்டும்.

பிள்ளையவர்களின் நெற்றியில் நீறு இல்லாத நாளே இல்லை. ஆனால் நெய்யில்லாத உண்டியை உண்ட நாள்கள் உண்டு. பல நாள்கள் நெய்யில்லாமல் உண்டவர், ஒருநாள் மயிலாடுதுறையில் திருவாவடுதுறை ஆதீனக் கட்டளை மடத்தில் நெய்யோடு உண்டபோது '' இன்று நெய் கிடைத்தது '' என்று சொல்லி மகிழ்ந்தார்.

''இன்று நெய் கிடைத்தது '' என்ற தலைப்பில் பிள்ளை யவர்கள் சரித்திரத்தில் ஐயரவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார்.

இன்று நெய் கிடைத்தது'

அப்புராணத்தைப் படித்து முடிக்கும்பொழுது இரவு 15 நாழிகைக்கு மேலாயிற்று. மடத்திலே ஆகாரம் பண்ணிக் கொள்ளும்படித் தம்பிரான்மார்கள் சொன்னமையால் இவர் அவ்வண்ணமே செய்தார். அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு தம் வீட்டிற்கு இவர் செல்லும்பொழுது நானும் உடன்சென்றேன்; இவர் என்னைப் பார்த்து, '' **மடத்தில் ஆகாரம் பண்ணினமையால், இன்று நெய் கிடைத்தது** '' என்றார்; **அதற்கு முதன் மூன்றுநாளும் நெய்யில்லாமல்** இவர் **உண்டதை** நான் அறிந்தவனாதலால் என்னிடம் சொன்னார். இவர்பால் அன்பும் மதிப்புமுள்ளவர்கள் எத்தனையோ ஆயிரம்பேர் இருந்தும் இவருடைய

குடும்ப நிலைமையை ஒருவரும் கவனிக்கவில்லையே யென்ற எண்ணம் அப்பொழுது உண்டாகி என்னை மிக வருத்தியது. அந்த வறுமை நிலையை ஒரு காலத்தும் இவர் புலப்படுத்தினாரல்லர். சிறந்த கல்விமான்களுக்கு வறுமைத் துன்பமுண்டென்பதை,

(கட்டளைக் கலித்துறை)

"கொடுக்கச் சடைவற்ற வுன்னையும் பாடிக் குலாமர்முன்போய்
இடுக்கட் படுவ தழகல்ல வேயென்னை யீடழிக்கும்
நடுக்கத்தை யாற்றப் படாதுகண் டாயெந்த நாளுமுண்ண
உடுக்கக் குறைவருத் தாதேகுற் றாலத் துறைபவனே "

என்னும் அருமைச் செய்யுளால் அறியலாகும். உடனிருந் தமையால் இதைப்போன்ற சந்தர்ப்பங்கள் பலவற்றை நான் அறிந்திருப்பதுண்டு.

- பிள்ளையவர்கள் சரித்திரம், டாக்டர் உ.வே.சா.

இதே நிகழ்ச்சியை ஐயரவர்கள் என்சரித்திரத்திலும் எழுதியுள்ளார். (அத்தியாயம் 34). '' புலமையும் வறுமையும்'' - ''நெய்யில்லா உண்டி'' ''எண்ணெய் இல்லை'' என்ற உள் தலைப்புகள். பக்கம் 289; 290; 291)

நெய்யில்லா உண்டி

பிற்பகலில் தொடங்கிய கண்ணப்பநாயனார் புராணம் இரவு பன்னிரண்டு மணிக்கு நிறைவேறியது.

அப்பால் மடத்திலேயே ஆகாரம் செய்துகொள்ளும் படி என் ஆசிரியரைத் தம்பிரான் வற்புறுத்திக் கூறினர். அவர் அவ்வாறே இசைந்து அங்கு உணவு உட்கொண்டார். நான் அதற்குள் என் சாப்பாட்டு விடுதிக்குச் சென்று போஜனம் செய்துவிட்டு வந்தேன்.

ஆகாரம் ஆன பிறகு என் ஆசிரியர் தம்பிரான்களிடம் விடைபெற்றுக்கொண்டு தம் வீடு சென்றார். நானும் அவருடன் சென்றேன். அப்போது அவர், '' மடத்தில் ஆகாரம் செய்தமையால் இன்று நெய் கிடைத்தது '' என்றார். அந்த வார்த்தை என் உள்ளத்தை வருத்தியது.

அவர் சில நாட்களாக நெய் இல்லாமல் உண்டுவந்தார். நெய் வாங்குவதற்கு வேண்டிய பணம் கையில் இல்லை. குறிப்பறிந்து யாரேனும் உதவினாலன்றித் தாமாக ஒருவரிடம் இன்னது வேண்டுமென்று சொல்லிப் பெறும் வழக்கம் அவரிடம் பெரும்பாலும் இல்லை. இடைவிடாது பாடம் சொல்லிவந்த அவர் நெய் இல்லாமலே உண்டு வருவதை நான் அறிந்தவனாதலால் ''இன்று நெய் கிடைத்தது '' என்று அவர் கூறும்போது அவர் உள்ளம் எவ்வளவு வெம்பியிருந்த தென்பதை உணர்ந்தேன்.

வறுமையின் கொடுமை எனக்குப் புதிதன்று. அதனால் விளையும் துன்பத்தை அறிவு வந்தது முதலே நான் உணரத் தொடங்கியிருக்கிறேன். ஆயினும் பிள்ளையவர்களிடம் அதனை நான் எதிர்பார்க்க வில்லை. ''பெரிய கவிஞர், தக்க பிரபுக்களால் நன்கு மதிக்கப்படுவர், தமிழுலகமுழுதும் கொண்டாடும் புகழ் வாய்ந்தவர், ஒரு பெரிய சைவ ஆதீனத்துச் சார்பிலே இருந்து வருபவர்,சில நாள் நெய் இல்லாமல் உண்டார், ஒரு வேளை கட்டளை மடத்தில் உண்ட உணவு அவர் நெஞ்சப்புண்ணுக்கு மருந்தாயிற்று '' என்ற விஷயங்களை அவரோடு நெருங்கிப் பழகினவ ரன்றி மற்றவர்களால் அறியமுடியாது. அவரும் அந்நிலையை வெளிப்படுத்திக் கொள்வதில்லை.

அவருடைய வாழ்க்கை நிலையற்றதாகத்தான் இருந்தது; ''இருந்தால் விருந்துணவு; இல்லாவிட்டால் பட்டினி '' என்பதே அக்கவிஞர் பிரானுக்கு உலகம் அளித்திருந்த வாழ்க்கை நிலை. எனக்கு அதனை உணர உணர ஆச்சரியமும் வருத்தமும் உண்டாயின.

'எண்ணெய் இல்லை'

ஒருநாள் காலையில் அவர் எண்ணெய் தேய்த்துக் கொள்ள எண்ணி ஒரு பலகை போட்டுக்கொண்டு

அதன் மேல் அமர்ந்தார். ஒரு வேலைக்காரன் அவருக்கு எண்ணெய் தேய்ப்பது வழக்கம். அவன் உள்ளே சென்று தவசிப் பிள்ளையை எண்ணெய் கேட்டான். எண்ணெய் இல்லை.

என் ஆசிரியர் எந்தச் சமயத்திலும் பாடம் சொல்லும் வழக்கமுடையவராதலின் எண்ணெய் தேய்த்துக் கொள்ள உட்கார்ந்தபடியே பாடம் சொல்லத் தொடங்கினார். நானும் பிறரும் புஸ்தகத்தோடு அருகில் இருந்தோம். எண்ணெய் வருமென்று அவர் எதிர்பார்த்திருந்தும் பாடம் சொல்லும் ஞாபகத்தில் அதை மறந்துவிட்டார்.

நான் அதைக் கவனித்தேன். எண்ணெய் இல்லையென்பதை அறிந்து கொண்டேன். உடனே மெல்ல ஏதோ காரியமாக எழுபவன் போல எழுந்து வேகமாகக் காவிரிக் கரையிலுள்ள கடைக்கு ஓடிப்போய் என்னிடமிருந்த ரூபாயிலிருந்து எண்ணெய் வாங்கிக் கொண்டு வந்து சமையற்காரனிடம் கொடுத்துவிட்டு மீண்டும் பாடம் கேட்பதற்கு வந்து அமர்ந்தேன். சிறிது நேரம் கழித்துக் காய்ச்சின எண்ணெய் வந்தது. அவர் தேய்த்துக்கொண்டார்.

இப்படி இடையிடையே நிகழும் சில நிகழ்ச்சிகளால் அவருடைய நிலையை அறிந்தபோது என் மனம் புண்ணாகிவிடும். "புலமையும் வறுமையும் சேர்ந்து இருப்பது இந்நாட்டிற்கு வாய்ந்த சாபம் போலும்!" என்று எண்ணினேன்.

- பிள்ளையவர்கள் சரித்திரம், டாக்டர் உ.வே.சா.

திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களே சிலநாள் நெய்யில்லா உண்டியை உண்டிருக்கிறார். பிள்ளையவர்களுக்கு ஆதீனத்தில் போதுமான வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். அதிகபட்ச ஊதியம் பெறுபவர்களில் அவரும் ஒருவர். அப்படியிருந்தும் நெய்யில்லா உண்டி. காரணம் என்ன? பிள்ளையவர்களின் இல்லம் எப்போதும் ஒரு **தமிழ்க் குருகுலம்** போன்று விளங்கும்.

தமது சக்திக்குமீறி மாணாக்கர்களுக்காகச் செலவு செய்வார். அவர் மாணாக்கர்களுக்குச் செய்யும் உதவி திருமணம் செய்து வைத்தல், வாழ்க்கை வசதிகளை அமைத்துத் தருதல் வரை செல்லும். பிள்ளையவர்கள் புலவராக மட்டுமில்லை. புரவலராகவும் இருந்தார். இவ்வள்ளன்மையால் தயாள சிந்தையால் சில பல சமயங்களில் அவர் இவ்வாறு துன்புற நேரிட்டது. கடன் ஏற்பட்டதும் உண்டு. அவர் அவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்பட்டதில்லை. அவரது கவலைக ளெல்லாம் தமிழ் பரப்புதல், தமிழ் பரப்புதல், ஆழப் பரப்புதல். அகலப் பரப்புதல், அவ்வளவே. அதற்காக அவர் சொந்த வசதிகளையும் தியாகம் செய்தார். அதில் சிலநாள் நெய் யில்லாமல் உண்டதும் அடங்கும்.

திருவாவடுதுறை ஆதீனத்தில் தலைமை மடத்தில் மட்டுமன்றிக் கிளைமடங்களிலும் நெய்யோடு அன்னம் பாலிக்கப்பெற்றது. சோறு மணக்கும் மடங்களெலாம்; நெய்யே மணக்கும் கறிகளெலாம்.

ஆதீன நூலகம் - சரஸ்வதி மகால்

தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகத்தைத் தமிழுலகம் நன்கறியும். ராஜா சரபோஜியால் அது ஏற்படுத்தப்பெற்றது. அதன் நூல்கள் ஒவ்வொன்றன் முகப்பேட்டிலும் தன் பெயரைத் தன் கைகளாலேயே எழுதியிருப்பார், அதாவது கையொப்பமிட்டிருப்பார். தெளிவாக அழகாக இருக்கும். சரசுவதி மகால் நூலகத்திற்குச் செல்வோர் கவனிக்க வேண்டிய முதற்செய்தி இது.

திருவாவடுதுறை ஆதீன நூலகத்திற்கும் **சரஸ்வதி மகால்** என்று பெயர். ஆனால் இது பின்னாளில் ஏற்பட்ட பெயரே. முன்னாளில் தொடக்க காலத்தில் அது ஒரு தனிப் பெயரின்றியே விளங்கிற்று. தொடக்க காலத்தில் பனை ஓலைச் சுவடிகளாய், காகிதப்படிகளாய், அச்சுப்புத்தகங்கள் வரத்தொடங்கியபின் அச்சிட்ட நூல்களாய், நாளடைவில் வரவரப் பெருகிற்று.

17-ஆம் பட்டம் அம்பலவாணதேசிகர் காலத்தில் அதை விரிவாக்கிப் பெயர் சூட்டி ஒரு தனி அமைப்பாக ஆக்கும் எண்ணம் உண்டாயிற்று. 1895-ஆம் ஆண்டில் நிகழ்ந்த நமசிவாயமூர்த்திகள் குருபூசைக்கு இராமநாதபுரம் சேதுபதி மன்னர் பாஸ்கர சேதுபதி வரவழைக்கப் பெற்றார். அவரை வரவழைக்கும் பணியும், அவர் வரும்போது திறக்க இருக்கும் நூலகத்திற்குச் சென்னையிலிருந்து புதிய நூல்களை வாங்கி அனுப்பும் பணியும் ஐயரவர்களிடம் ஒப்படைக்கப்பெற்றன. ஐயரவர்கள் அப்போது சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தார். அதுசமயம் சென்னைக்கு வந்திருந்த பாஸ்கர சேதுபதியைக் கண்டு, திருவாவடுதுறைக் குருபூசைக்கு வர ஒப்புதல் பெற்றார். சென்னையில் ஐயாயிரம் ரூபாய்க்குப் பல மொழிகளில் பல்வேறு வகையான புதிய நூல்களை வாங்கி ரயில் வண்டிமூலம் திருவாவடுதுறைக்கு அனுப்பினார். ரூ.5000 அக்காலத்தில் பெரிய தொகை. ரூபாய் ஐயாயிரத்துக்குப் புதிய நூல்களை வாங்கினர். வாங்கியவையும் பலவகை நூல்கள், பலமொழி நூல்கள். புத்தகம் வாங்கும் விஷயத்தில் வை. மு. சடகோபராமானுஜாசாரியர் உடனிருந்து உதவி செய்தார் என்று ஐயரவர்களே எழுதியுள்ளார். பாஸ்கர சேதுபதி 1895 - ஜனவரி 31-ஆம் தேதி திருவாவடுதுறைக் குருபூஜைக்கு வருவதாக ஏற்பாடு. அதற்கு முன்பே நூல்நிலையத்தைத் திறந்துவிட நிச்சயித்து நாள்பார்த்த போது ஜனவரி 30-ஆம் தேதி நல்ல நாளாக இருந்தது. ஐயரவர்கள் சொன்னபடி "**வித்தியாநிதி**" என்ற பெயருடன் நூலகம் ஜனவரி 30-ஆம் தேதியன்று நல்லநாளில் திறக்கப் பெற்றுவிட்டது. அடுத்தநாள் 31-1-1895 இல் பாஸ்கர சேதுபதி திருவாவடுதுறைக் குருபூஜைக்கு வந்தார். நூலகத்தைப் பார்வையிட்டு மகிழ்ந்து தொடங்கிவைத்தார். "பாஸ்கர விலாசம்" என்ற பெயருடன் பெரிய கீற்றுக் கொட்டகை போடப்பெற்று, பெரிய மாளிகை போன்று அலங்காரங்கள் செய்யப்பெற்று, அதில் வரவேற்பும் உபசாரங்களும் நிகழ்ந்தன. சென்னையிலிருந்து ஐயரவர்களும் வந்திருந்தார். தமிழருமை

அறிந்த சேதுவேந்தரும் மாபெரும் தமிழறிஞரான ஐயரவர்களும் திருமகளும் கலைமகளும் போல் சேர்ந்திருக்க, மலைமகள் போன்ற சந்நிதானத்தின் முன்னிலையில் அன்று புதிய கட்டிடத்தில் அமைந்து தொடங்கப்பெற்ற "வித்தியாநிதி" நூல் நிலையம் நாளடைவில் இன்றுள்ள அளவுக்கு வளர்ந்து, வித்தியாநிதி என்ற பெயர் "சரஸ்வதி மகால்" என்று மாற்றம் பெற்று ஞானக்களஞ்சியமாய்த் திகழ்கிறது.

வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், இலக்கணம், இலக்கியம், பிரபந்தங்கள், இசை, நாடகம், நாட்டியம், சிற்பம், மருத்துவம், சோதிடம், சைவத் திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், பண்டார சாத்திரங்கள், பல்வேறு சைவநூல்கள், தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம் முதலிய பல மொழிகளில், பனை ஓலை ஏட்டுச்சுவடிகளாய், காகிதப்பிரதிகளாய், அச்சிட்ட நூல்களாய், நூலகம் நிறைந்துள்ளது. ஓலைச்சுவடிகள் மட்டுமே ஆயிரத்திற்கு மேற்பட்டன. அச்சு நூல்கள் பல ஆயிரம்.

பிள்ளையவர்களும், ஐயரவர்களும், சிதம்பர இராமலிங்கம் பிள்ளை, த.ச.மீனாட்சிசுந்தரம் பிள்ளை, ச.தண்டபாணிதேசிகர் முதலிய பின்வந்த ஆதீனப் புலவர்கள் பலரும் பயன்படுத்திய இச் சரஸ்வதி மகால் நூலகம் இப்போது ஓர் ஆய்வு மையமாகவும் திகழ்கிறது. தமிழகம் மட்டுமன்றி அயல்நாடுகளிலிருந்து வரும் பல்கலைக்கழக ஆய்வு மாணவர்களின் ஆய்வுக்கும் பயன்படுகிறது.

இருபத்துமூன்றாவது குருமகாசந்நிதானம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள்
07-04-1983 முதல் இப்போது அருளாட்சி செய்துவருபவர்கள்

சிவஞானமுனிவர் பிறந்த விக்கிரமசிங்கபுரத்தில் பிறந்தவர்கள். பெற்றோர்: கோமதிநாயகம் பிள்ளை, கோமதி அம்மாள். பிறந்தநாள்: *15-11-1949* - விரோதி, ஐப்பசி 29, பூரநாள். பிள்ளைப்பெயர்: சிவசுப்பிரமணியன். கல்வி:

பள்ளியிறுதித் தேர்வில் தேர்ச்சி. கூட்டுறவுத் துறை ஆய்வாளர் தேர்வில் தேர்ச்சி. பணி: மதுரைகோட்ஸ் ஆர்.வி. மில்லில் கூட்டுறவுப் பண்டக சாலையில் சிலகாலம் பணி. இவை பூர்வாசிரமச் செய்திகள்.

இளமை முதலே ஆன்மிகத்தில் பற்று. சாதுக்கள் சார்பு. கணபதி பூஜை. கணபதி மந்திரப் பயிற்சி. உத்தியோகத்திலும் உலகியலிலும் பற்றின்மை. ஞானநாட்டம். திருவாவடு துறை ஆதீனத்தில் சேர்ந்து பணிசெய்யப் பெருவிருப்பு. ஒருநாள் உலகியற் பணியை உதறிவிட்டுத் திருவாவடு துறையை நோக்கிப் புறப்பட்டார். திருவாவடுதுறையை அடைந்து 22-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகளை வணங்கி ஆசிபெற்றார். தேசிகரின் ஆணைப்படி ஆதீனத்தில் தொண்டுபுரிந்து வந்தார். 24.09.1979-இல் யாத்திரை காஷாயமும், 21.02.1980 -இல் மந்திர காஷாயமும், 17.05.1980-இல் நிர்வாண தீட்சையும் அருளப்பெற்றார். சிவசுப்பிரமணியனாக வந்த இளைஞர் சுப்பிரமணியத் தம்பிரான் ஆனார். பின்பு பெரியபூசை சுப்பிரமணியத் தம்பிரானாக உயர்ந்தார். இவர்களது தகுதி, திறமை, பரிபக்குவ நிலைகளைக் கண்ட சந்நிதானம் இவர்களைச் சிவப்பிரகாசதேசிகர் என்ற பெயருடன் 06.08.1980-இல் இளவரசுப் பட்டத்தில் நியமித்தருளினார்கள். இளவரசுப்பட்டம் ஏற்ற நாளிலேயே பெரும்பாலும் பொறுப்புகளை இவர்களிடமே ஒப்படைத்துவிட்டார்கள். மூன்றாண்டு காலம் இளவரசுப் பட்டத்தில் இருந்தார்கள். சந்நிதானம் மிகவும் வயது முதிர்ந்தவர்கள். இளவரசுப் பட்டத்திலுள்ள இவர்கள் இளைஞர். அக்காலத்திலேயே பற்பல சீர்திருத்தங்களையும் அபிவிருத்திகளையும் செய்தார்கள்.

07.04.1983-இல் 22-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக குருமூர்த்திகள் சிவப்பேறெய்தினார்கள். இளவரசாக இருந்த இவர்கள் 23-ஆம் குருமகாசந்நிதானமாக 07.04.1983-இல் பட்டமேற்றார்கள்.

இளவரசுப் பட்டத்தில் இருந்த காலத்திலும், பட்டத்திற்கு வந்த பின்பும் காசி முதல் கன்னியாகுமரிவரை யாத்திரை செய்து கிளை மடங்கள் எல்லாவற்றையும் பார்வையிட்டு, செய்ய வேண்டிய சீர்திருத்தங்களை யெல்லாம் செய்தார்கள். செய்யவேண்டிய திருப்பணிகள் எல்லாம் செய்தார்கள். காசியில் கண்ணப்பசுவாமி மடத்தை ஆக்கிரமிப்பினின்று மீட்டுத் திருப்பணி செய்து செம்மைப் படுத்தினார்கள்.

ஆதீனகர்த்தர், மடாதிபதி ஒருவர் ஆதீனத்திற்குச் செய்ய வேண்டிய பணிகள் என்னென்ன உண்டோ, எவ்வளவு உண்டோ அவ்வளவையும் குறைவறச் செய்து வருகிறார்கள். முக்கியமாக இங்கு நாம் குறிப்பிடவேண்டியது மூன்று பெரும் பணிகள்.

1. "மெய்கண்டார் " திங்களிதழ் தொடங்கியது (1982)

தருமபுர ஆதீனத்திலிருந்தும் திருப்பனந்தாள் காசி மடத்தி லிருந்தும் திங்களிதழ்கள் பல ஆண்டுகளாகவே வெளிவந்து கொண்டுள்ளன. திருவாவடுதுறை ஆதீனத்திற்கு ஒரு திங்களிதழ் இல்லாதிருந்தது ஒரு பெருங்குறையாகவே இருந்தது. இளவரசுப் பட்டத்திற்கு வந்து சில காலத்துக்குள்ளாகவே அக்குறையை இவர்கள் நீக்கியருளினார்கள். "மெய்கண்டார்" என்ற பெயருடன் ஒரு திங்களிதழை 12.12.1982-இல் தொடங்கி யருளினார்கள். இருபத்தாறு ஆண்டுகளாக " மெய்கண்டார் " திங்களிதழ் சிறப்பாகச் சைவம் பரப்பும் பணியைச் செய்து வருகிறது. 2007 ஜனவரி இதழ் வெள்ளிவிழா மலராக வெளிவந்தது.

2. சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம் தொடங்கியது (1992)

சைவ சித்தாந்தம் கற்க விரும்பும் அனைவரும் பயிற்சி பெறுவதற்காக 23-ஆவது பட்டமாக இப்போது விளங்கும் குருமகாசந்நிதானம் அவர்கள் இந்நேர்முகப் பயிற்சி மையத்தை 1992 ஜனவரி மாதத்தில் தொடங்கியருளினார்கள். தொடக்க முதல் 2003 வரை இது மூன்றாண்டுப் பயிற்சியாக இருந்தது. 2004 முதல் இரண்டாண்டுப் பயிற்சியாக மாற்றப் பெற்றது.

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்த ஆண் பெண் அனைவரும் இப்பயிற்சியில் சேரலாம். கல்வித் தகுதியோ வயது வரம்போ இல்லை. சாதி மதம் இனம் என்ற வேறுபாடின்றி எல்லாரும் இதில் சேரலாம். பல்கலைக் கழகங்கள் நடத்தும் தொலைதூரக் கல்வித் திட்டம், அஞ்சல்வழிக் கல்வி போன்ற இதற்கு நாட்டில் நல்ல வரவேற்பிருக்கிறது.

தொடங்கப்பெற்றபோது 1000 மாணவர்கள் சேர்ந்தார்கள். இப்போது நடைபெறும் ஏழாவது (குரூப்) தொகுதியில் (2008 - 2009) 6017 பேர் பயிற்சி பெறுகிறார்கள். பயிற்சி மையத்தின் தலைமையகம் திருவிடைமருதூரிலுள்ள திருவாவடுதுறை ஆதீனத்துக் கட்டளை மடத்தில் உள்ளது. தமிழ்நாடு முழுவதும் பல மாவட்டங்களில் பல நகர்களிலும், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் முதலிய அண்டை மாநிலங்களிலும் மலேசியா ஆஸ்திரேலியா ஆகிய கடல்கடந்த நாடுகளிலும் பயிற்சி மையங்கள் உள்ளன.

தொகுதி எண்ணிக்கை	பயிற்சி ஆண்டு	பயிற்சி மாணவர்களின் எண்ணிக்கை	பயிற்சி மையங்களின் எண்ணிக்கை
1	1992-1994	1081	20
2	1995-1997	1463	27
3	1998-2000	2500	36
4	2001-2003	3900	48
5	2004-2005	3785	49
6	2006-2007	5200	56
7	2008-2009	6017	61
மலேசியா, ஆஸ்திரேலியா		145	3
		24,091	

தொடக்கத்தில் 20 பயிற்சி மையங்கள். இன்று 61 பயிற்சி மையங்கள். தொடக்கத்தில் பயிற்சி பெற்றோர் 1081 பேர். இன்று பயிற்சி பெறுவோர் 6017 பேர். பயிற்சி மையங்களின் எண்ணிக்கை பதினைந்து மடங்கு பெருகியுள்ளது. பயிற்சி பெறுவோர் எண்ணிக்கை ஒன்றுக்கு ஆறாகியுள்ளது. ஆறு மடங்கு வளர்ச்சி.

இளைஞர்களே அன்றி முதியோர்களும் சேர்ந்து பயிற்சி பெறுகின்றனர். வயது வரிசையில் எண்ணிக்கை-

20 வயதுக்கு உட்பட்டவர்கள்	710 பேர்
21 முதல் 40 வயது வரை	10,962 பேர்
41 முதல் 60 வயது வரை	11,533 பேர்
60 வயதுக்கு மேற்பட்டவர்கள்	886 பேர்
	24,091 பேர்

மணிவிழாக் கண்டவர்களும் சைவ சித்தாந்தம் பயில் கிறார்கள்.

பயிற்சிபெறும் மாணவர்களின் செய்தி இதுவென்றால், பயிற்சியளிக்கும் ஆசிரியர்களின் செய்தி இதைவிடப் பெரிது. 61 பயிற்சி மையங்களிலும் 64 அமைப்பாளர்கள் உள்ளனர். இவர்களுள் பெரும்பாலோர் அரசுப் பணிகளில் உயர் பதவியில் உள்ளவர்கள். டி.ஆர்.ஓ., ஆர்.டி.ஓ. முதலிய பணிகளிலிருந்து ஓய்வுபெற்ற அரசு அலுவலர்களும் அமைப்பாளர்களாக உள்ளனர்.

இப்போது 35 பேராசிரியர்கள் பயிற்சி வகுப்புகளை நடத்துகிறார்கள். இவர்களுள் 8 பேராசிரியர்கள் டாக்டர் பட்டம் பெற்ற ஆய்வறிஞர்கள். எம்.டி. பட்டம் பெற்ற ஆங்கில மருத்துவர் ஒருவரும் பேராசிரியராக இருக்கிறார். பி.இ., பட்டம் பெற்ற அரசுப் பொறியாளர்கள் ஐவர் பேராசிரியர்களாகப் பணியாற்றுகின்றனர். வேறு பல அரசுப் பணிகளில் உள்ளவர்களும், ஓய்வுபெற்ற அரசு அலுவலர்களும், ஆசிரியர்களும் பேராசிரியர்களாக உள்ளனர்.

சேலத்தில் தே.ம.பூதலிங்கம் என்ற ஒருவர். மிகச் சிறந்த, மூத்த, சமயப் பிரச்சாரகர். சங்கராசாரியர், குன்றக்குடி அடிகளார், கிருபானந்தவாரியார் ஆகிய மூன்று பெரியோர்களிடமும் நற்பெயர் பெற்றவர், பாராட்டுப் பெற்றவர். மூவர் ஆசியையும் முழுமையாகப் பெற்றவர். அவர் சேலத்தில் பயிற்சி மைய அமைப்பாளராக/ பேராசிரியராகப் பெரும்பணியாற்றுகிறார்.

பண்ணுருட்டியில் பணிஓய்வு பெற்ற ஓர் அஞ்சலக அதிகாரி (போஸ்ட் மாஸ்டர்). **வை.ஆறுமுகம்** என்னும் பெயரினர். சைவ வாழ்வினர். வீட்டு வாசலில் நந்திக் கொடி பறந்து கொண்டிருக்கும். இவர் பண்ணுருட்டி கிளை மையத்தின் அமைப்பாளர்.

பூதலிங்கம், ஆறுமுகம் ஆகிய இவ்விரு மெய்யன்பர்களும் நமக்கு நன்கு பழக்கமானவர்கள். அண்மையில் பூதலிங்கம் அமரராகிவிட்டார் (25-12-2008).

எல்லாவற்றிலும் சிறந்த செய்திகள் இரண்டு-

1. வேற்றுச் சமயத்தாரும் சைவசித்தாந்தம் பயில்வது; பயிற்றுவிப்பது.

2. பயிற்சி மையத்திற் சேர்ந்து பயிற்சி பெற்றவர்கள் பலர் புலால் மறுத்துச் சைவ உணவினராகிச் சிவதீக்கை பெற்றுச் சைவ நெறியில் ஒழுகிவருவது.

நூற்றுக்கணக்கான கிறிஸ்துவர்களும் இஸ்லாமியர்களும் பயிற்சி மையத்தில் பயிற்சி பெறுபவர்களாகவும் பயிற்சி யளிப்பவர்களாகவும் இருந்து சிறந்துள்ளமை அவர்கள் வாழ்வில் பெற்ற பேறு. அதைவிடச் சிறந்த பேறு, பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றவர்கள் பலர் புலால் மறுத்துச் சைவ உணவினரானது. மேலும் ஒரு பெரும்பேறு சிவதீக்கை பெற்றுச் சைவ வாழ்வினரானது.

புலவர் ஞா. அந்தோணிராசு என்றொரு தமிழாசிரியர். விழுப்புரம் மாவட்டம் விரியூர் என்னும் ஊரினர். வள்ளலார் அன்பர். சற்றேறத் தாழப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு எம்மைக் காண வடலூருக்கு வந்தார். அச்சமயம் யாம் வெளியூர் சென்றிருந்தமையால் காண இயலாது திரும்பி விட்டார். யாம் ஊர் திரும்பியபின் எம் நண்பர் துறவி கந்தசாமி அவர்கள் வாயிலாக அவரது வருகையை அறிந்தோம். அந்தோணிராசுவைப் பற்றிச் சிறப்பாகக் கூறினார். கிறிஸ்துவர் தமிழாசிரியர் வள்ளலாரிடம் ஈடுபாட்டுடன் இருக்கிறார் என்றதும் அவரது உணவுப்பழக்க வழக்கத்தையும் சாதியைப்

பற்றியும் வினவி அவருக்கே கடிதம் எழுதினோம். யாம் யாரிடமும் சாதி கேட்டுப் பழகியதில்லை. இவர் கிறிஸ்துவர் என்பதாலும் வள்ளலாரிடம் ஈடுபாடு கொண்டவர் சைவ உணவினராக இருக்கவேண்டுமே என்பதாலும் இவருக்கு எழுதினோம். யாம் சாதி கேட்டது இவர் ஒருவரே ஒருவரைத்தான். சுருக்கமாக பதில் வந்தது. சைவ உணவினர் வன்னியக் கிறிஸ்துவர் என்று எழுதியிருந்தார். சில நாள்களுக்குப்பின் நேரிலும் வந்து கண்டார். அதன்பின் பலமுறை சந்திப்பு நேரிட்டது. திருச்சிராப்பள்ளிக் கல்லூரி ஒன்றில் தம் மகளாரைச் சேர்த்தபோது சைவசித்தாந்தம் பாடம் உள்ள வகுப்பில் சேர்த்தார். முன்னமே இவர் திருவாவடுதுறையாதீன சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையத்தில் பேராசிரியர். எம்.ஏ., எம்.எட். படித்துப் பட்டம் பெற்ற புலவர் அந்தோணிராசு திருவாவடுதுறையாதீன குருமகாசந்நிதானமவர்களிடம் சமய விசேட தீட்சைகளையும் சிவஞானம் என்ற தீட்சாதிருநாமத்தையும் பெற்றிருக்கிறார். பண்ணுருட்டி நெய்வேலி கிளை மையங்களில் இவர் சைவ சித்தாந்தம் பயிற்றும்பணி மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. பயிற்சி பெறுவோர் இவரைப் பற்றிச் சிறப்பாகப் பாராட்டிச் சொல்லுகின்றனர். வள்ளலாரைப் பற்றியும் திருவருட்பாவி லிருந்தும் அவ்வப்போது தேவையான சந்தர்ப்பங்களில் மேற்கோள் காட்டுகிறார் என்றும், பயிற்சி வகுப்பை எல்லார்க்கும் எளிதில் விளங்குமாறு நன்கு நடத்துகிறார் என்றும் கூறுகின்றனர்.

வன்னியர், கிறிஸ்துவர், சைவ உணவினராக இருக்கிறார், சைவ சித்தாந்தம் படித்திருக்கிறார். மகளையும் படிக்க வைத்திருக்கிறார். சைவ சித்தாந்தப் பயிற்சி மையத்தில் பயிற்றுவிக்கும் பேராசிரியராக இருக்கிறார். சிவதீட்சை பெற்றிருக்கிறார். சிவஞானம் என்ற தீட்சா திருநாமமும் பெற்றிருக்கிறார். வள்ளலார் சன்மார்க்கத்திலும் பேரீடுபாடு கொண்டிருக்கிறார். இப்படி எத்தனை பேர் இருப்பார்கள்!? புலவர் அந்தோணிராசு போன்ற சைவ உணவு வன்னியக் கிறித்துவ சிவஞான சன்மார்க்க அன்பர்கள் தொகை (எண்ணிக்கை) பெருகுவது நாட்டுக்கு நல்லதன்றோ!

அன்பர் அந்தோனிராசுவும் அண்மையில் அமரராகி விட்டார். இளைஞரும் முதியோரும் மூத்த குடிமக்களும் வேற்றுச் சமயத்தாரும் சைவசித்தாந்தம் பயில, பயிற்றுவிக்க, சைவ உணவு கொள்ள - இவ்வளவுக்கும் - மூலகாரணம் திருவாவடுதுறை ஆதீனத்தின் சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையமன்றோ!

இப்பயிற்சி மையத்தை அமைக்கத் தூண்டியதோடு அதன் இயக்குநராக இருந்து செம்மையாக நடத்தியும் வருபவர் சைவ சித்தாந்த அறிஞர் **கு.வைத்தியநாதன்** அவர்களுக்குச் சந்நிதானம் **''மெய்ஞ்ஞான வள்ளல்''** எனப் பட்டமளித்துச் சிறப்பித்திருக்கிறார்கள்.

மலேசியாவிலுள்ள இரண்டு பயிற்சி மையங்களில் 100-க்கு மேற்பட்டோரும் ஆஸ்திரேலியாவிலுள்ள மையத்தில் பலரும் பயில்கின்றனர். பயிற்சி நிறைவில் தேர்வில் தேர்ச்சி பெறுவோருக்குச் **'' சித்தாந்த இரத்தினம் ''** என்ற விருதுடன் சான்றிதழ் வழங்கப்பெறுகிறது. 25,000 அன்பர்களைச் சித்தாந்த இரத்தினங்களாக ஆக்கியுள்ள பெருமையும் புகழும் புண்ணியமும் 23-ஆவது குருமகாசந்நிதானமவர்களையே சேரும்.

3. செங்கோலாதீனத்தைச் செம்மை செய்தது (1996)

ஏறத்தாழ 35 ஆண்டுகளாக ஆதீனகர்த்தரின்றி அழிந்த நிலையில் இருந்த பெருங்குளம் செங்கோல் ஆதீனத்திற்குத் தகுந்த ஒருவரை ஆதீனகர்த்தராக ஏற்படுத்திச் செம்மை செய்தருளிய பெருமை,புகழ், புண்ணியம் இவர்களுக்குரியது. விரிவு செங்கோலாதீன வரலாற்றிற் காண்க.

மலேசிய விஜயம் (2000 ; 2007)

இலங்கை விஜயம் (2003ஆகஸ்ட்; 2003 டிசம்பர்)

மலேசியாவில் சைவக் கோயில்கள் பல உள்ளன. பழங்கோயில்களும் உள்ளன. புதுக்கோயில்களும் உள்ளன. மலேசியா இந்து சங்கம், தெய்வீக வாழ்க்கைச் சங்கம் (சிவானந்த ஆசிரமம்) மலேசியக் கிளை, மலேசியா அருள் நெறித் திருக்கூட்டம், மலேசியா திருமுறை மன்றம், மலேசிய சைவசித்தாந்த மன்றம், மலேசியத் தமிழ்ப் பண்பாட்டு

இயக்கம், வள்ளலார் மன்றம், சன்மார்க்க சங்கம், வள்ளலார் ஆன்மநேய ஒருமைப்பாட்டுக்கழகம் முதலிய பல சைவ அமைப்புகள், சன்மார்க்க அமைப்புகள், தமிழ் அமைப்புகள் உள்ளன. நாம் 1980-இல் முதன் முறையாக மலேசியா சென்று வந்தோம். இரண்டாம் முறை 2000 ஜூலை மாதத்தில், மூன்றாம் முறை 2007 மே, நான்காம் முறை 2007 டிசம்பர் ஆக நான்குமுறை சென்று வந்துள்ளோம்.

சந்நியாசிகள் (துறவிகள்) கடல்கடந்து செல்லலாகாது என்பது பழங்கால மரபு. இப்போதெல்லாம் காலத்தை அனுசரித்துத் துறவிகள் பலர் கடல்கடந்த நாடுகளுக்குச் சென்றுவரும் பழக்கம் பல ஆண்டுகளுக்குமுன்பே ஏற்பட்டு விட்டது. திருவாவடுதுறை ஆதீனகர்த்தர்களாக இருந்தவர்கள் யாரும் கடல்கடந்து சென்றதில்லை. திருவாவடுதுறை ஆதீன வரலாற்றிலேயே முதல்முதலில் கடல்கடந்து பயணம் சென்றுவந்த புகழ் இப்போது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருப்பவர்களுக்கே உரியது. மலேசியா அருள் நெறித் திருக்கூட்டத்தினர் முதலாவது மலேசிய திருமந்திர மாநாட்டை மலேசியா கோலாலம்பூரில் 10.03.2000 - 12.03.2000 மூன்று நாள்கள் மிகச் சிறப்பாக நடத்தினர். மலேசியா அருள்நெறித் திருக்கூட்டத்தின் தலைவர் டான்ஸ்ரீ மு.சோமசுந்தரம் அவர்கள் திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானத்தைத் திருமந்திர மாநாட்டிற் கலந்துகொள்ள அழைத்தார்கள். சந்நிதானமவர்களும் அவ்வழைப்பை ஏற்று மலேசியாவுக்குச் சென்று திருமந்திர மாநாட்டில் தலைமை வகித்தும் ஆசி கூறியும் சிறப்பித்தார்கள். திருமந்திரம் தோன்றிய திருவாவடுதுறையிலிருந்து சந்நிதானம் மலேசியாவுக்கு வந்து ஆசியருளியது மலேசிய சைவப் பெருமக்களுக்குப் பெரிதும் மகிழ்ச்சியளித்தது. திருமந்திர மாநாடு முடிந்த மூன்று மாதங்களுக்குப் பின் 2000 ஜூலையில் நாம் மலேசியா சென்றிருந்தபோது, சந்நிதானத்தின் மலேசிய வருகையைப் பற்றி மலேசிய சைவ அன்பர்கள் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார்கள். நமக்கும் மகிழ்ச்சியாக இருந்தது.

இரண்டாவது முறையாக 2007 ஏப்ரல் மாதத்தில் சந்நிதானம் மலேசியாவுக்குச் சென்றுவந்தார்கள். பயிற்சி மைய இயக்குநர் கு.வைத்தியநாதன் அவர்களும் பயிற்சி பெறும் அன்பர்கள் ஐம்பத்தைந்து பேரும் சந்நிதானத்துடன் சென்றனர். மலேசிய நாட்டில் பல இடங்களில் பல அமைப்புகளில் பல நிகழ்ச்சிகளில் ஆசியுரை வழங்கினார்கள். ஆதீனத்து சைவ சித்தாந்தப் பயிற்சி மையத்தில் சித்தாந்தம் பயின்ற மலேசிய அன்பர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கியருளினார்கள். எல்லாவற்றையும்விடப் பெரிய செய்தி, ஆதீனப் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற மலேசிய அன்பர்களுள் மது மாமிசம் விடுத்துச் சைவநெறியில் நிற்பேன் என்று உறுதி யளித்த 23 பேருக்குச் சமயதீட்சை வழங்கியருளினார்கள்.

இலங்கை விஜயம்

இலங்கையைச் சிவபூமி என்கிறார் திருமூலர்.

மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூருமிவ் வானின் இலங்கைக் குறியுறுஞ்
சாருந் திலைவனத் தண்மா மலயத்து
டேறுஞ் சுழுனை இவைசிவ பூமியே. -2747

என்பது திருமூலர் திருமந்திரம்.

பாடல்பெற்ற தலங்கள் 275இல் இரண்டு தலங்கள் இலங்கையில் உள்ளன. 1.திரிகோணமலை. 2.திருக்கேதீச்சுரம். இலங்கையில் யாழ்ப்பாணம் தமிழுக்கும் சைவத்துக்கும் பெயர் பெற்றது. யாழ்ப்பாணத் தமிழும் யாழ்ப்பாணச் சைவமும் தனித்தன்மையன. இலங்கையில் யாழ்ப்பாணத்தில் இரண்டு சைவ ஆதீனங்கள் உள்ளன. 1.வரணி ஆதீனம், ஏறத்தாழ இருநூறாண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையுடையது. தமிழ்நாட்டில் வேதாரண்யம் கோயிலை நிர்வகிக்கும் உரிமை பெற்றது. 2. நல்லை ஆதீனம், அண்மையில் மதுரை ஆதீனம் முந்தைய சந்நிதானம் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளால் நிறுவப்பெற்றது. இலங்கையில் இன்றும் (இக்கஷ்டகாலத்திலும்) சைவமும் தமிழும் சிறந்து விளங்கி வருகின்றன. இலங்கையில் இராமகிருஷ்ணமடத்தின் கிளை

மடம் ஒன்றும் உள்ளது. நாம் இலங்கைக்கு இரண்டு முறை சென்றுள்ளோம். முதன்முறை 1994இல்; இரண்டாம் முறை 2005இல். இரண்டு முறையும் இலங்கை அரசின் இந்து சமய அலுவல்கள் அமைச்சின் அழைப்பின் பேரில்தான் சென்றோம். இலங்கைச்சைவம் இலங்கைத்தமிழ் பற்றி ஒரு நூலே எழுதக் கூடிய அளவுக்கு எம்மிடம் ஆய்வுச் செய்திகள் உண்டு.

திருவாவடுதுறை ஆதீன குருமகாசந்நிதானம் அவர்கள் 2003 ஆகஸ்டில் முதல்முறையாகவும் டிசம்பரில் இரண்டாவது முறையாகவும் இலங்கைக்குச் சென்று வந்தார்கள். முதல் முறை இலங்கை அன்பர்கள் அழைப்பின் பேரில்; இரண்டாம் முறை இந்து சமய அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில். இரண்டு முறையும் விரிவான சுற்றுப்பயணம். யாழ்ப்பாணப் பகுதிக்கும் சென்று வந்தார்கள். பல தலங்களில் தரிசனம். பல நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல். சந்நிதானத்துக்குச் சைவ அன்பர்களிடையேயும் அமைப்புகளிடையேயும் அமைச்சினிடையேயும் மிகச் சிறந்த வரவேற்பு. சந்நிதானத்தின் மலேசியப் பயணங்கள் இரண்டு, இலங்கைப் பயணங்கள் இரண்டு ஆகிய நான்குமே பயனுள்ள பயணங்கள், வெற்றிப் பயணங்கள்.

இதுபோன்று கடல் கடந்த நாடுகள் இன்னும் பலவற்றுக்குச் சந்நிதானம் விஜயம் செய்யவேண்டுமென்பதும் ஒரு உலக சுற்றுப் பயணமே செய்து உலகெங்குமுள்ள சைவப் பெரு மக்களை நேரில் வாழ்த்தியருளி ஆங்காங்கே நிகழும் சைவப் பணிகளை ஊக்குவிக்க வேண்டும் என்பதும் எம் விருப்பம்.

நூல் வெளியீடுகள்

முந்தைய காலத்தைவிட இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நூல் வெளியீடுகள் மிகுதி. ஆடல்வல்லான், கணபதி, முருகன் முதலிய பெருநூல்கள் பல்வேறுவகைப் படங்களோடும் விளக்கங்களோடும் படவிளக்க நூல்களாக முந்தைய காலத்தில் வெளிவந்து அறிஞர் பலராலும்

பாராட்டப் பெற்றன. இவர்களது ஆட்சிக் காலத்தில் அவற்றைப் போன்ற படவிளக்க நூல்கள் பல பெரு நூல்களாக அதிக எண்ணிக்கையில் வெளி வந்துள்ளன. ஆதீன வெளியீடுகளாக இதுவரை 600 நூல்கள் வெளி வந்துள்ளன. இவற்றில் நான்கில் ஒரு பங்குக்குமேல் 165-க்கு மேற்பட்ட நூல்கள் இவர்கள் காலத்தில் வெளி வந்தவையே. சிறு சிறு நூல்கள் பிரசாதமாக, அன்பளிப்பாக, வழங்கப் பெறுகின்றன. பெரிய புத்தகங்கள் விலைக்குக் கொடுக்கப் பெறுகின்றன.

விழாக்கள், பட்டம், பரிசு, பாராட்டு, விருது வழங்கல்

பொதுவாக இந்து பண்டிகைகள், சைவ விரதங்கள் விழாக்கள் அனைத்தும் ஆதீனத்தில் கொண்டாடப்பெறும். ஆதீன நிறுவனரும் முதல் குருமகாசந்நிதானமுமாகிய நமச்சிவாய மூர்த்திகள் குருபூஜையே ஆதீனத்தின் பெரிய திருவிழா, முதன்மையான விழா. ஆண்டுதோறும் தை மாதம் அசுபதி நட்சத்திரத்தில் நிகழும் இவ்விழாவுக்கு '' மகரத் தலைநாள் விழா '' என்றொரு சிறப்புப் பெயரும் உண்டு. இது பத்துநாள் விழாவாகச் சொற்பொழிவு, இசையரங்கு, கருத்தரங்கு, பட்டமளிப்பு, பரிசுவழங்கல், ஆதீனகர்த்தரைக் கொலுவில் இருத்தி வழிபடல், பட்டினப்பிரவேசம் முதலிய பல நிகழ்ச்சிகளுடன் மிகச் சிறப்பாக நிகழும்.

நூல் வெளியீடுகள் இவர்கள் காலத்தில் மிகுதி என்பதைப்போலப், பட்டம், பரிசு, பாராட்டு, விருதுகள் வழங்குவதும் இவர்கள் காலத்தில் மிகுதியாக நிகழ்ந்து வருகின்றன.

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை, பாகம்பிரியாள் மாதர் கழகம், திரிசிரபுரம் சைவசித்தாந்த சபை, பாளையங்கோட்டை சைவசபை, வெளிப்பாளையம் (நாகை) சைவ சித்தாந்த சபை, திருவனந்தபுரம் சைவப்பிரகாச சபை, சென்னை சிவனடியார் திருக்கூட்டம், சைவசித்தாந்தப் பெருமன்றம் முதலிய அமைப்புகளுக்கு விருது வழங்கிப் பாராட்டி

யிருக்கிறார்கள். இவையெல்லாம் நூறாண்டுகளுக்கு மேலாகச் சிறப்பாகப் பணியாற்றிவரும் நாடறிந்த நல்ல அமைப்புகள் என்பது குறிப்பிடத்தக்கது.

பன்னிரண்டு திருமுறைகளுக்கும் உரையெழுதிய தமிழ்ப் புலவர் சைவ அறிஞர் திருச்சிராப்பள்ளி திரு.பி.ரா. நடராசன், திருமந்திரம் முழுமைக்கும் உரையெழுதிய அறிஞர் சென்னை கவிஞர்கோ. ஞா. மாணிக்கவாசகன் ஆகிய இருவரும் பாராட்டி விருது வழங்கப் பெற்றுள்ளனர். இவ்விருவர் நூல்களும் உமா பதிப்பகம் (சென்னை) வெளியீடுகளாக வெளிவந்துள்ளன. புலவர். பி. ரா. நடராசன் அவர்களின் பெரியபுராணஉரை நம்முடைய அணிந்துரையுடன் வெளிவந்தது.

நாளிதழ்களில் தினமணி தினமலர் ஆகிய இரண்டும் நல்ல நாளிதழ்கள். நன்கு தமிழ் வளர்ப்பவை. நாம் தினமணியின் ஐம்பத்துமூன்று ஆண்டுகாலவாசகர், தினமலரின் நாற்பத்து மூன்று ஆண்டுகால வாசகர். தினமலர் ஆசிரியர் இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நாணய இயல் அறிஞர். அத்துறையில் மிகவும் வல்ல பேரறிஞர். நமக்குப் பழக்கமானவர். தினமணியின் தலையங்கம் (ஆசிரியர் உரை), நடுப்பக்கக் கட்டுரைகள் மிகவும் நல்லன. இவற்றை யெல்லாம் நாம் தனியாக எடுத்து "பேப்பர் கட்டிங் ஆல்பம்" என்று ஒட்டி வைத்துப் பல்லாண்டுகளாக நமது ஆய்வகத்தில் பாதுகாத்து வருகிறோம். தினமணி ஆசிரிய பரம்பரை மிகவும் பாராட்டத்தக்க பரம்பரை. ஏ.என்.சிவ ராமன், ஐராவதம் மகாதேவன் என்ற பாரம்பரியத்தில் இன்று தினமணி ஆசிரியராக விளங்கும் சிறந்த தமிழ்ப் பற்றாளர், சமூக சிந்தனையாளர் தினமணி ஆசிரியர் கே. வைத்திய நாதன் அவர்கள் அண்மையில் திருவாவடுதுறை ஆதீனத்தால் பாராட்டப்பெற்றார் என்பது நமது பாராட்டுக்குரிய செய்தியாகும்.

இயல், இசை, நாடகம், வேதம், ஆகமம், புராணம், இதிகாசம்,கல்வெட்டு, தொல்லியல், கலைகள், சமூகப் பணி ஆகிய பல்வேறு துறைகளிலும் நல்லவர்கள் வல்லவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுப் பாராட்டப் பெறுகின்றனர். விரிக்கிற் பெருகும். ஆதலின் சுருங்கக் குறிப்பிட்டு அமைகிறோம்.

குணநலன்கள்

சந்நிதானம் வரவர எளிமையை விரும்புபவராக ஆகி விட்டார்கள். இராமகிருஷ்ண மடத்துத் துறவியைப் போலத் தோற்றமளிக்கிறார்கள். பல்லக்கில் பட்டினப் பிரவேசம் செய்வது போன்றவற்றைத் தவிர்த்து விட்டார்கள். எளிமையாகச் சிறிய காரில் எங்கும் செல்கிறார்கள். பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்கள். மக்களுடன் அன்பாக, எளிமையாகப் பழகு கிறார்கள். ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும் சென்று ஆசி கூறும் அளவுக்குச் சந்நிதானத்தின் பணிகள் சில பல சமயங்களில் அமைந்ததுண்டு. காட்சிக்கு எளியவர். வன்சொல் வழங்காதவர். இளைய பட்டமாக அம்பலவாணதேசிகர் என்பவர்களை நியமித்துவிட்டுக் காசிக்குச் சென்று கண்ணப்ப சுவாமி மடத்தில் மாதக் கணக்கில் தங்கினார்கள். தமிழ்நாட்டிலும் எளிமையாகப் பல இடங்களுக்கும் சென்று வந்தார்கள். இளவரசாக இருந்த அம்பலவாணதேசிக சுவாமிகள் தென்னாட்டு யாத்திரை சென்றவர் கல்லிடைக் குறிச்சியிலே சிவப்பேறடைய நேர்ந்தது. அதன்பின்பே சந்நிதானம், காசியில் தங்குவதைக் குறைத்துக்கொண்டு, தலைமை மடமாகிய திருவாவடுதுறையிலேயே தங்கலானார்கள்.

குருவாரம் வியாழக்கிழமைதோறும் மௌன விரதத்தைக் கடைப்பிடிக்கிறார்கள். திருவாவடுதுறை தருமபுரம் சந்நிதானங்கள், திருப்பனந்தாள் காசிமடத்தின் அதிபர் ஆகிய மூவருமே வியாழக்கிழமை மௌனவிரதம்.

பட்டமேற்ற வெள்ளி விழா
(பீடாரோகண வெள்ளிவிழா)
01.04.2008

07.04.1983-இல் சந்நிதானமவர்கள் 23-ஆவது குருமகா சந்நிதானமாகப் பட்டமேற்றார்கள்.

பட்டமேற்று 25 ஆண்டுகள் (ஒரு வெள்ளிவிழாக் காலம்) சீரோடும் சிறப்போடும் நிறைவேறியிருக்கிறது. 25 ஆண்டுகள் நிறைவுபெறுவதை வெள்ளிவிழாவாகக் கொண்டாடுதல் மரபு.

சந்நிதானமவர்களின் பட்டமேற்பு வெள்ளிவிழா 01.04.2008 செவ்வாய்க்கிழமையன்று திருவாவடுதுறையில் ஆதீனக் கொலுமண்டபத்தில் சந்நிதானம் கொலுவீற்றிருந்து அடியார்களுக்கும் அன்பர்களுக்கும் ஆசி வழங்கும் அளவில் அடக்கமாகக் கொண்டாடப்பெற்றது.

22-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகளின் 25-ஆவது ஆண்டு குருபூசை நாள் 01-04-2008இல் வந்தமையால் அந்நாளிலேயே, இன்றைய 23ஆவது சந்நிதானத்தின் பட்டமேற்பு பீடாரோகண வெள்ளி விழாவையும் கொலுக்காட்சி அளவில் எளிமையாக வைத்துக் கொள்ளலாம் என்று சந்நிதானத்தின் திருவுள்ளம் கருதியது போலும்.

சொற்பொழிவுகள், கருத்தரங்கம், நூல் வெளியீடு, விழா மலர் வெளியீடு, அறிஞர்களுக்குப் பாராட்டு, பட்டம் பரிசுகள் விருதுகள் வழங்கல் முதலிய பல்வகைச் சிறப்பு நிகழ்ச்சிகளுடன் பின்னர் நடத்தத் திட்டமிடப்பட்டு அதற்குரிய பணிகளை ஆதீன அடியவர்களும் அன்பர்களும் தொடங்கியிருக்கிறார்கள்.

வெள்ளிவிழாவில் சந்நிதானம் கனகாபிடேகம் கண்டருள வேண்டுமென்பது அடியார்கள் அன்பர்களது விருப்பம். அதற்குப் பதிலாக அன்பர்கள் பெருந் தொகைகளாகவும் சிறு தொகைகளாகவும் கணிசமான

அளவு நன்கொடை (காணிக்கை) வழங்கினால் அத்தொகையைச் சேர்த்து முதலீடாக்கி அதன் வட்டியைக் கொண்டு சைவ சமய வளர்ச்சிக்கு நிலையான சில நற்செயல்களைச் செய்ய ஏதுவாகும் என்பது சந்நிதானத்தின் திருவுள்ளம்.

இரண்டுமே செய்யலாம் (சந்நிதானத்திற்குக் கனகாபி டேகம், சைவ சமய வளர்ச்சிக்கு ஒரு நிரந்தர நிதிவைப்பு) என்பது எம் கருத்து.

ஒரு வெள்ளிவிழாக் காலம் நிறைவேறிவிட்டது. இது சென்ற காலத்தின் பழுதிலாத்திறம். இரண்டாவது வெள்ளி விழாக் காலம், பொன்விழாவை நோக்கிச் செல்லும் காலம் தொடங்கிவிட்டது. இது எதிர்காலத்தின் சிறப்பு.

சந்நிதானம் பட்டமேற்ற வெள்ளிவிழா எல்லா அங்கங்களோடும் மிகச் சிறப்பாக நிகழவும் சந்நிதானம் பொன்விழாக் காணவும் அதை நாமெல்லாம் கண்டு களிக்கவும் ஞானமாநடராசப்பெருமான் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

"இன்னுமொரு நூற்றாண்டு இரும்" என்பதுபோல இன்னொரு வெள்ளிவிழாவையும் காணும்.

ஆதீனப் பணிகள்

ஆதீன நிர்வாகம் - 69 கிளைமடங்களின் நிர்வாகம் - ஆதீனக்கோயில்கள் பெரிதும் சிறிதுமாக 50-இன் நிர்வாகம் - நாடெங்கும் பரவியுள்ள பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நில நிர்வாகம், பல இடங்களில் தேவார பாடசாலை - திருவிடைமருதூரில் மேல்நிலைப்பள்ளி - திருவாவடுதுறையில் மெட்ரிகுலேஷன் பள்ளி - பல ஊர்களில் பல்வேறு நிலைகளில் பல பள்ளிகள் - பல்வேறு ஊர்களில் நூல் நிலையங்கள் - தட்டச்சுப் பயிற்சி நிலையங்கள் - சுருக்கெழுத்துப் பயிற்சி நிலையங்கள் - அன்னப்பன் பேட்டை தாயுமான சுவாமிகள் ஆதீனம், சொர்க்கபுர ஆதீனம், இருளஞ்சேரி ஆகிய நலிவடைந்த மடங்களுக்கு உதவி - கீழக்கொட்டையூர் வள்ளலார் குருகுலம்,

வேதாரணியம் கஸ்தூரிபாகாந்தி கன்யா குருகுலம், கும்ப கோணம் அன்னை கருணை இல்லம் (ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம்) முதலிய பல நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் உதவித்தொகை, நூல் வெளியீடு, இதழ் வெளியீடு இப்படிப் பல்வேறு வகையில் நூற்றுக்கணக்கான சமய சமுதாயப் பணிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன.

திருவாவடுதுறை ஆதீனத் தம்பிரான்கள்

சீர்மன்னு மீனாட்சி சுந்தரத்தம்பிரான் சுவாமிகள்
சீர்மன்னு அம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள்
சீர்மன்னு மாசிலாமணித் தம்பிரான் சுவாமிகள்
சீர்மன்னு புலவர் சுயம்புநாதத்தம்பிரான் சுவாமிகள்
சீர்மன்னு சுந்தரமூர்த்தித் தம்பிரான் சுவாமிகள்
சீர்மன்னு சுப்பிரமணியத் தம்பிரான் சுவாமிகள்

என்று தம்பிரான்கள் அறுவர் திருவாவடுதுறை ஆதீனத் திருக்கூட்டத்தில் இன்று விளங்குவோராவர்.

இவர்களுள் சீர்மன்னு மீனாட்சிசுந்தரத் தம்பிரான் திருவிடைமருதூர் கட்டளை ஸ்தானீகமாகவும், சுந்தர மூர்த்தித் தம்பிரான் காஞ்சிபுரம் கிளை மடத்தின் பொறுப்பாள ராகவும், சுப்பிரமணியத் தம்பிரான் ஆதீனக் கல்வி நிலையங்களின் பொறுப்பாளராகவும் ''மெய்கண்டார் '' இதழின் ஆசிரியராகவும், பணி செய்து வருகின்றனர்.

தருமபுர ஆதீனம்

கயிலாய பரம்பரையில் சிவஞான
சித்திநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழில்தருமை வாழ்
ஞானசம்பந்தக் குரவன் மேலாஞ்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

தருமபுர ஆதீனம்

தருமபுரம்

தமிழ்நாட்டிலுள்ள சைவ ஆதீனங்களில் திருவாவடுதுறை ஆதீனமும் தருமபுர ஆதீனமும் பெரிய ஆதீனங்கள். ஆதீனங்களின் வரிசையில் முதலில் இடம்பெறுபவை. திருவாவடுதுறை ஆதீனம் முதலில் தோன்றியது. சில காலத்திற்குப்பின் அடுத்து இரண்டாவதாகத் தோன்றியது தருமபுர ஆதீனம். ஆதலின் திருவாவடுதுறை முதலாவதாகவும் தருமபுர ஆதீனம் இரண்டாவதாகவும் வைத்து எண்ணப் பெறுகின்றன.

திருவாவடுதுறை ஆதீனம் புலமையாற் சிறந்தது. தருமபுர ஆதீனம் தவத்தாற் சிறந்தது. பதினாறொடுக்கம் தருமபுர ஆதீனத்தின் தவச்சிறப்பைக் காட்டும். திருவாவடுதுறை ஆதீனம் பாடஞ் சொல்லும் இடமாக விளங்கியது. தருமபுர ஆதீனம் பயிற்சியளிக்கும் இடமாக விளங்கியது. அதனால்தான் பதினாறொடுக்கம் அமைந்தது.

தருமபுர ஆதீன குருபரம்பரை

கயிலாய பரம்பரை மெய்கண்டசந்தானத்தில் சந்தான குரவர்களில் நான்காமவரான உமாபதிசிவம் வரை எல்லா ஆதீனங்களுக்கும் பொது. உமாபதிசிவத்துக்குப் பின்பு வரும் குருமரபு பல்வேறு ஆதீனங்களாகப் பரவுகிறது.

உமாபதிசிவத்தின் மாணாக்கர் மச்சுச்செட்டியார் என்னும் அருள் நமச்சிவாயர். அவர் மாணாக்கர் சித்தர் சிவப்பிரகாசர். அவர் மாணாக்கர் நமசிவாயமூர்த்திகளே திருவாவடுதுறை ஆதீன நிறுவனர் என்பதை முன்பு கண்டோம்.

மச்சுச்செட்டியாரின் மற்றொரு மாணாக்கர் காழிக் கங்கை மெய்கண்டார். இவரது மாணாக்க பரம்பரையில் வரும் குருஞானசம்பந்தரால் தருமபுர ஆதீனம் நிறுவப் பெற்றது.

மச்சுச்செட்டியாரின் மாணாக்கர் காழி கங்கை மெய்கண்டார்.
அவர் மாணாக்கர் காழி பழுதைகட்டி சிற்றம்பலநாடிகள்.
அவர் மாணாக்கர் காழி பழுதைகட்டி சம்பந்தமுனிவர்.
அவர் மாணாக்கர் சிவபுரம் ஞானப்பிரகாசர்.
அவர் மாணாக்கர் சிவபுரம் தத்துவப்பிரகாசர்.
அவர் மாணாக்கர் திருவாரூர் செட்டித்தெரு பழுதைகட்டி ஞானப்பிரகாசர்.
அவர் மாணாக்கர் கமலை ஞானப்பிரகாசர்.
அவர் மாணாக்கர் குருஞானசம்பந்தர். தருமபுர ஆதீன நிறுவனர்.

உமாபதிசிவத்தின் மாணாக்க பரம்பரையில் மூன்றாவது தலைமுறையில் நமசிவாய மூர்த்திகளால் நிறுவப்பெற்றது திருவாவடுதுறை ஆதீனம், எட்டாவது தலைமுறையில் குருஞானசம்பந்தரால் நிறுவப்பெற்றது தருமபுர ஆதீனம். திருவாவடுதுறை ஆதீனத்திற்குக் காலத்தாற் சிறிது பிற்பட்டது தருமபுர ஆதீனம். 16-ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் சுமார் 1560-இல் தருமபுர ஆதீனம் நிறுவப்பெற்றது.

வெள்ளியம்பலவாண முனிவர் முத்திநிச்சயப் பேருரையில் தருமபுர ஆதீன குருமரபை மிக அழகிய நடையிற் கூறுகின்றார். அவரது நடை வசன கவிதை போல இனிமையாக அழகாக அமைந்துள்ளது. முத்தி நிச்சயப் பேருரையில் பெரிதும் ஈடுபாடு கொண்ட எமக்கு அதிலிருந்து அப்பகுதியை எடுத்துக் காட்டாமலிருக்க மனமில்லை. ஆதலின் அதனை அப்படியே எடுத்துக்காட்டுகிறோம்.

> " உமாபதி சிவாசாரியரும், மச்சுச்செட்டியாரும், மறைஞான சம்பந்ததேசிகர்பால் அருள்பெற்றார். அவருள், மச்சுச்செட்டியார்பால் அருள்பெற்றார் காழிக் கங்கை மெய்கண்டார். அவர்பால் அருள்பெற்றார் காழிப் பழுதைகட்டிச் சிற்றம்பலநாடி பண்டார முதலியோர். அப்பழுதை கட்டிச் சிற்றம்பலநாடி பண்டாரத்தின் பால் அருள்பெற்றார் பழுதை கட்டிச் சம்பந்தபண்டார முதலியோர். அப்பழுதைகட்டிச் சம்பந்த பண்டாரத்தின் பால் அருள்பெற்றார் சிவபுரம்

ஞானப்பிரகாச பண்டார முதலியோர். அச்சிவபுரம் ஞானப்பிரகாச பண்டாரத்தின் பால் அருள்பெற்றார் சிவபுரம் தத்துவப் பிரகாச பண்டாரம். அவர்பாலருள் பெற்றார் திருவாரூர்ச் செட்டித் தெருப் பழுதைகட்டி ஞானப்பிரகாச பண்டார முதலியோர். அச்செட்டித் தெரு பழுதைகட்டி ஞானப்பிரகாச பண்டாரத்தின் பால் அருள்பெற்றார் இந்நூல் செய்த குரவர்க்குங் குரவரான சிதம்பரநாத மாசிலாமணிக் கமலை ஞானப் பிரகாச பண்டார முதலியோர். அச்சிதம்பரநாத மாசிலா மணிக் கமலை ஞானப்பிரகாச பண்டாரத்தின்பால் அருள்பெற்றார் இந்நூல் செய்த குருஞானசம்பந்த பண்டார முதலியோர் ".

- முத்திநிச்சயப் பேருரை, வெள்ளியம்பலவாண முனிவர்.

இப்பரம்பரையைப் பட்டியலாகக் காணவேண்டின் பின்வருமாறு:

மெய்கண்டார்
|
அருணந்தி சிவம்
|
மறைஞானசம்பந்தர்
|
உமாபதி சிவம் —— அருள்நமச்சிவாயர் (மச்சுச்செட்டியார்)

காழிக் கங்கை மெய்கண்டார்
காழிப் பழுதைகட்டிச் சிற்றம்பலநாடி பண்டாரம் முதலியோர்
பழுதைகட்டிச் சம்பந்தபண்டாரம் முதலியோர்
சிவபுரம் ஞானப்பிரகாச பண்டாரம்
சிவபுரம் தத்துவப்பிரகாச பண்டாரம்
திருவாரூர்ச்செட்டித்தெருபழுதைகட்டி ஞானப்பிரகாசபண்டாரம்
சிதம்பரநாத மாசிலாமணிக் கமலை ஞானப்பிரகாச பண்டாரம்.
குரு ஞானசம்பந்தர்

மச்சுச்செட்டியார் என்னும் அருள்நமச்சிவாயருக்குப்பின் எட்டாவது தலைமுறையில் தருமபுர ஆதீன நிறுவனர்

குருஞானசம்பந்தர் வருகிறார். மச்சுச்செட்டியாருக்கும் குருஞானசம்பந்தருக்கும் இடையே எழுவர் உளர். அவ்வெழுவர் வரலாற்றையும் சுருக்கமாகக் காண்போம்.

காழிக்கங்கை மெய்கண்டார்

சீகாழியில் தோன்றிய இவர் கங்கைகொண்ட சோழேச்சரத்தில் சில காலம் எழுந்தருளியிருந்தமையால் காழிக்கங்கை மெய்கண்டார் என்னும் திருப்பெயர் பெற்றார். மறைஞான சம்பந்தரிடம் மச்சுச்செட்டியார் சீடராக இருந்த காலத்திலேயே இவர் மச்சுச்செட்டியாரின் தொண்டராகவும் மாணாக்கராகவும் இருந்தார். செட்டியாருக்குப்பின் ஆசிரியரானார். நூல் எதுவும் செய்யவில்லை.

சிற்றம்பலநாடிகள்

சிற்றம்பலநாடிகள் என்ற பெயரே அருமையாக இருக்கிறதல்லவா? அற்புதமாக இருக்கிறதல்லவா! சிற்றம்பலத்தையே நாடியவர், சிற்றம்பலத்திலேயே நாட்டங்கொண்டவர் சிற்றம்பல நாடிகள். சைவ உலகிலேயே ''நாடிகள்'' என்ற பெயர் இவர் ஒருவருக்கே அமைந்துள்ளது. எத்தனையோ பேர் சிற்றம்பலத்தை நாடினார்கள். எல்லாருமே சிற்றம்பலத்தை நாடினார்கள். ஆனால் இவர் ஒருவருக்கு மட்டுமே சிற்றம்பலநாடிகள் என்று பெயர் அமைந்தது! *

சிற்றம்பலநாடிகள் மிகப்பெரிய சித்தர். இவருடைய திருக்கூட்டம் மிகவும் பெரியது. இவருக்கு 63 சீடர்கள். இவரையும் சேர்த்து 64 பேர் ஒரு திருக்கூட்டமாகத் திகழ்ந்தார்கள். அனைவரும், 64 பேரும், ஒரே சமயத்தில் முத்தி பெற்றார்கள். திருஞானசம்பந்தர், அவருடைய திருமண நாளில் முத்தி பெற்றபோது அங்கிருந்த கூட்டத்தார் அனைவரையும் முத்திபெறச் செய்தார். அதன்பின் சிற்றம்பல நாடிகளே தம் திருக்கூட்டத்தார் அனைவருடனும், 63 பேர் களுடன், ஒரே சமயத்தில் (ஏக காலத்தில்) முத்தி பெற்றவர்.

---

* அம்பலத்தில் ஆடுகின்றார் பாங்கிமாரே

அவர் ஆட்டங்கண்டு நாட்டங்கொண்டேன் பாங்கிமாரே. - வள்ளலார்

சிற்றம்பலநாடிகளும் 63 மாணவர்களும் ஒரு நாள் உணவருந்த அமர்ந்தனர். உணவு பரிமாறிய சமையற்காரர் நெய் என்று எண்ணி வேப்பெண்ணெய்யை எடுத்து வந்து ஊற்றிவிட்டார். சிற்றம்பலநாடிகளும் 62 மாணவர்களும் சோற்றைப் பிசைந்து அமைதியாக உண்டனர். கண்ணப்பர் என்ற ஒருவர் மட்டும் உணவை வாயிலிட்டதும் ஓக்களித்து வேப்பெண்ணெய் என்ற சொல்ல எண்ணி ''வே'' என்று வாயைத் திறந்தார். ''வே'' என்றதுதான் தாமதம், சிற்றம்பல நாடிகள் ''நம் திருக்கூட்டத்தில் இப்படிப் பக்குவமில்லாதவர் இருப்பது தகுதியோ?'' என்று கேட்டார். இதைக்கேட்ட கண்ணப்பர் தம் குறைக்கு மனம் வருந்தித் திருக்கூட்டத்தி னின்றும் தாமே நீங்கி வடக்கு நோக்கி யாத்திரை சென்று விட்டார்.

சில காலத்திற்குப் பின்னர் சிற்றம்பல நாடிகள் சமாதியடையத் திருவுளங்கொண்டார். அப்பகுதியை ஆண்ட அரசனை அழைத்து அடுத்த சித்திரைத் திருவோண நாளில் திருக்கூட்டத்தாரோடு சமாதியடையப்போகிறோம் என்று கூறி நாமும் திருக்கூட்டத்தாரும் சமாதியில் இறங்குவதற்காகத் தனித்தனியாக 63 சமாதிகள் அமைக்கக் கட்டளையிட்டார். அரசன் மிகவும் வியப்புற்று 63 சமாதிக் குழிகளை அமைத்தான். சமாதிகள் தயாராயின. இவ்வற்புதத்தைக் காண மக்கள் திரளாக வந்து கூடினார்கள். குறித்த காலத்தில் சிற்றம்பலநாடிகள் திருக்கூட்டத்தாரோடு வந்தார். கூடியிருந்த அனைவரையும் வாழ்த்தி, மூன்று வெண்பாக்களைப் பாடித், தமக்கென்று அமைக்கப்பெற்ற சமாதிக்குழியில் இறங்கி நிட்டைகூடி ஜீவசமாதியடைந்தார். மாணாக்கர்களும் தொடர்ந்து அவரை வணங்கி ஒவ்வொரு வெண்பா பாடித் தத்தமக்கு அமைக்கப்பெற்ற குழிகளில் இறங்கி குருநாதர் திருவடியில் மனம் ஒன்றி நிட்டைகூடிச் சீவசமாதி அடைந்தனர். இவ்வற்புதத்தை அரசனும் மக்களும் பார்த்து வியப்புற்றார்கள். இக்கூட்டத்தாரில் இன்னும் ஒருவரைக் காணோமே? அவர் எங்கு சென்றாரோ? எங்கு உள்ளாரோ? அவருக்கு இச்செய்தி தெரியுமோ? என்று

பலவாறு உரையாடிக் கொண்டிருந்தபோது, வடக்கே சென்ற கண்ணப்பர் திடீரென்று அங்கு வந்து சேர்ந்தார். தமக்கோர் சமாதிக்குழி அமைக்கப்பெறாமை கண்டு குருநாதர் சிற்றம்பல நாடிகளின் சமாதியை வலம் வந்து வணங்கித் தமக்கும் ஓர் இடம் தருமாறு குறையிரந்து ஒரு வெண்பாவைப் பாடினார்.

ஆண்ட குருசிற்றம் பலவா அடியேற்கா
மீண்டும் எழுந்தருள வேண்டாவோ - நீண்டவனும்
ஆரணனும் காணாத ஆனந்த வாரிதியில்
பூரணமாய் வையாத போது.

என்ற வெண்பாவைப் பாடி முடித்தவுடன் சிற்றம்பல நாடிகளின் சமாதி திறந்தது. நாடிகள் கண்விழித்து நோக்கிக் கண்ணப்பரின் கையைப் பற்றி அழைத்துத் தம் மடிமீது இருத்தித் தம்மோடு இரண்டறக் கலக்கச் செய்தார். முன்னரே வியப்பிலாழ்ந்திருந்த மன்னனும் மக்களும் கண்ணப்பர் பெற்ற பெரும்பேற்றைக் கண்டு மேலும் வியந்து போற்றுவா ராயினர். இவ்வற்புதம் நிகழ்ந்த இடம் இன்றும் மயிலாடு துறை கும்பகோணம் சாலையில் மயிலாடுதுறைக்கு மேற்கே சிறிது தொலைவில் சித்தர்காடு (சித்தக்காடு) என்ற ஊராக உள்ளது.

வெள்ளியம்பலவாணத் தம்பிரான் முத்தி நிச்சயப் பேருரையில் சிற்றம்பல நாடிகளைப் பற்றிக் கூறுமிடத்து " ஏககாலத்தின் அறுபத்து மூன்று திருப்பெயருக்குச் சாம்பவதீக்கையாற் சத்தியோ நிர்வாணதானம் பண்ணித் தாமுஞ் சமாதியிருந்து சிவகதியடையும் பெருமையுடைய சிற்றம்பலநாடிப் பண்டாரம் " என்றெழுதுகிறார். இதனா லும்

முத்தர் அறுபத்து மூவர் பணிந்தேத்தும்
சித்தர்வனம் தில்லைச்சிற் றம்பலவா - பத்தர்
பவஇருளை நீக்கிஅருள் பானுவே துய்ய
தவவடிவே நின்தாள் சரண்.

என்னும், பாடியவர் பெயர் அறியப்பெறாத, பழைய வெண்பாவாலும் சிற்றம்பல நாடிகளின் பெருமையை அறியலாம்.

சிற்றம்பலநாடி நூல்கள்:

1. துகளறு போதம், 2. திருப்புன்முறுவல், 3. செல்காலத் திரங்கல்,4. நிகழ்காலத்திரங்கல், 5. வருகாலத்திரங்கல் ஆகிய ஐந்தும் சிற்றம்பலநாடிகள் அருளியனவாம். இவற்றுள் துகளறுபோதம் மிகவும் முக்கியமானது. சித்தாந்த சாத்திரம் பதினான்கில் உண்மை நெறி விளக்கத்திற்குப் பதிலாக அதனுடைய இடத்தில் துகளறு போதத்தைச் சேர்க்கும் பழைய வழக்கமும் உண்டு. இப்போது உண்மை நெறி விளக்கமே சித்தாந்த சாத்திரம் பதினான்கில் சேர்ந்து வழங்குகிறது; துகளறுபோதம் சேர்க்கப்பெறுவதில்லை. எனினும் சித்தாந்த சாத்திரங்களைக் கற்பார், துகளறுபோதம் தத்துவப்பிரகாசம் முதலியவற்றையும் ஏனைய சைவ சித்தாந்தச் சிறு நூல்களையும் கற்பது இன்றியமையாதது. சிற்றம்பலநாடிகளின் மாணாக்கர் செய்த நூல்கள் சிலவும் நாடிகள் செய்ததாக வழங்குகின்றன. திருச்செந்தூர் அகவல் இவர் பாடியதன்று; வேறொருவர் பாடியது. அது இவர் பெயரால் வழங்குகிறது. அதனைப் பாடியவர் இப்பெயர் கொண்ட பிற்காலத்தவர் ஒருவராக இருக்கலாம்.

காஞ்சிபுரத்தில் தொண்டமண்டல ஆதீனத்தை நிறுவிய கச்சிஞானப்பிரகாசர் சிற்றம்பலநாடிகளின் மாணாக்கரே. சிற்றம்பலநாடிகளின் வரலாறு விரிவாக அறிதற்குரியது. ஈண்டுவிரிக்கின் நூல் பெருகுமாதலின் சுருங்கக் கூறினோம்.

காழிப் பழுதைகட்டிச் சம்பந்தமுனிவர்

இவர் காழிப் பழுதைகட்டிச் சிற்றம்பலநாடிகளின் மாணாக்கர். இவரைக் காழிப் பழுதைகட்டிச் சம்பந்த பண்டாரம் என்று வெள்ளியம்பலவாணத்தம்பிரான் குறிப்பிடுகிறார். சிற்றம்பலநாடிகள் திருக்கூட்டத்தோடு சமாதியாகியபின் இவர் ஆசாரியராக விளங்கியிருக்கிறார். சம்பந்தமுனிவர் பாடிய நூல்கள் சிவானந்தமாலை, சிற்றம்பல நாடிகள் வெண்பா, சிற்றம்பல நாடிகள் தாலாட்டு என மூன்று. இவற்றுள் சிவானந்த மாலை மிகச் சிறந்த

சைவ சித்தாந்த நூல். 414 வெண்பாக்களையுடையது. சமய உண்மைகள் பலவற்றைச் சுவையான உவமைகளால் தெளிவாக விளக்குவது. இலக்கியச் சுவை ததும்பும் பாடல்கள் பலவற்றைக் கொண்டது. மதுரைச் சிவப்பிரகாசர், போரூர் சிதம்பர சுவாமிகள், நமசிவாயத் தம்பிரான், ஒருபாவுண்மை உபதேச உரைகாரர் ஆகிய பண்டைய உரையாசிரியர்கள் இதனை ஒரு பிரமாண நூலாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

தில்லையையும் காழியையும் சம்பந்தரையும் சிவானந்த மாலையில் சம்பந்தமுனிவர் மிகவும் போற்றிப் புகழ்ந்து பாராட்டுகிறார்.

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் எம்சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் - முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத் தெங்கே.

என்னும் பாடல் சிவானந்தமாலைப் பாடல்தான். சைவ உலகில் பெருவழக்காயுள்ள இப்பாடல், சொற்பொழிவாளர் பலரது நாவிலும் பயிலும் இப்பாடல், சிவானந்தமாலையில் உள்ளது, பாடியவர் சம்பந்தமுனிவர் என்பதை எத்தனை பேர் அறிவர்?! இதேபோன்று இன்னொரு சுவையான பாடல் மெய்த்தேசிகன் (உண்மைகுரு) யார், பொய்த்தேசிகன் (போலி குரு) யார் என்பதற்கு இலக்கணம் வகுப்பது.

மந்திரப்பேய் புத்தகப்பேய் வாசனைப்பேய் பூசனைப்பேய்
தந்திரப்பேய் பாவகப்பேய் தர்க்கப்பேய் - சிந்தையினின்று
ஆர்த்தவிர தப்பேய் அனைத்துமொரு வார்த்தையிலே
தீர்த்தவனே மெய்த்தே சிகன்.

சிவபுரம் ஞானப்பிரகாசர்

சம்பந்தமுனிவரின் மாணாக்கர். சிவபுரம் கும்ப கோணத்திற்கு அருகிலுள்ளது. இவரைப்பற்றி அதிகம் தெரியவில்லை. நூல் செய்ததாகத் தெரியவில்லை.

சிவபுரம் தத்துவப்பிரகாசர்

சிவபுரம் ஞானப்பிரகாசரின் மாணாக்கர். இவரைப் பற்றியும் அதிகம் தெரியவில்லை. இவரும் நூல் செய்ததாகத் தெரியவில்லை.

திருவாரூர் செட்டித்தெரு பழுதைகட்டி ஞானப்பிரகாசர்

இவர் சிவபுரம் தத்துவப் பிரகாசரின் சீடர். திருவாரூரில் செட்டித்தெருவில் வாழ்ந்தவர். இல்லறத்தார். திருவாரூர்த் திருக்கோயிலின் இராஜாங்கக் கட்டளையை இவர் பரிபாலித்து வந்தார். இன்றும் அக்கட்டளை தருமபுர ஆதீன நிர்வாகத்தில் உள்ளது. இவருக்கு அடுத்து ஆசாரியரான கமலை ஞானப்பிரகாசர் இவரது மகனாரே; தந்தையாரிடமே மாணாக்கராயிருந்து பின்னர் ஆசாரியரானார்.

கமலை ஞானப்பிரகாசர்

முந்திய ஆசாரியராகிய திருவாரூர் செட்டித்தெரு பழுதைகட்டி ஞானப்பிரகாசரின் மகனார் இவர். சிதம்பரநாத மாசிலாமணி கமலை ஞானப்பிரகாச பண்டாரம் என்று இவர் பெயரை வெள்ளியம்பலவாணர் குறிப்பிடுகிறார்.

கமலை என்பது திருவாரூர். திருவாரூர்க் கோயிலுக்குப் பூங்கோயில், கமலாலயம் என்று பெயர். கமலாலயம் என்பதன் குறுக்கம் கமலை. சிதம்பரநாதன் என்பது இயற்பெயர். மாசிலாமணி என்றும் வழங்குவதுண்டு. பின்னாளில் தியாகராசப்பெருமான் திருவருளால் உண்டான தீட்சாதிருநாமம் ஞானப்பிரகாசர். இவை அனைத்தும் சேர்ந்து சிதம்பரநாத மாசிலாமணி கமலை ஞானப்பிரகாசர் என்றும், சுருக்கமாகக் கமலை ஞானப்பிரகாசர் என்றும் வழங்கலாயின. கமலை ஞானப்பிரகாசர், தம் தந்தையாகிய செட்டித் தெரு ஞானப்பிரகாசரிடமே மாணவராயிருந்து கல்வி கற்றும் ஞானநூல்களைப் பாடங் கேட்டும் தேர்ச்சி பெற்றார். உரிய காலத்தில் திருமணம் செய்துகொண்டு, தந்தையாரிடமே உபதேசமும் ஆசாரிய அபிடேகமும் பெற்று சைவாசாரியராக இல்லறஞானியாக விளங்கினார்.

இறைவன் திருவருளை முழுமையாகப் பெற வேண்டும், திருவருள் ஞானம் முழுமையாகக் கைவரப் பெற வேண்டும் என்று எந்நேரமும் தியாகேசன் திருவருளைச் சிந்தித்து மனமுருகி வேண்டியபடி இருந்தார். முப்பதாம் அகவையில் அதற்குரிய காலமும் வந்தது. ஒருநாள் இரவு இவருடைய கனவில் தியாகராசப்பெருமான் தோன்றி " நீ நமது சித்தீசுவரம் வந்து வழிபடு, நீ வேண்டியன யாவும் கிடைக்கும் " என்று அருளினார். மறுநாள் இவர் சித்தீசுவரம் சென்று வழிபட்டார். சித்தீசப் பெருமான் திருவருளால் திருவருள் ஞானம் சித்தித்தது. "இன்று முதல் நீ ஞானப் பிரகாசன் என்று பெயர் பெறுவாய்" எனச் சித்தீசப் பெருமான் அசரீரியாக நின்று அருளினார். சிதம்பரநாத மாசிலாமணியாக இருந்தவர் (கமலை) ஞானப்பிரகாசரானார். சம்பிரதாய ஆசாரியராயிருந்தவர் உண்மை ஞானாசிரியரானார்.

இவரது மாணாக்கர் பலர். அவருள் சிறந்தோர் இருவர். ஒருவர் குருஞானசம்பந்தர் ; தருமபுர ஆதீனத்தை நிறுவியவர். இன்னொருவர் நிரம்ப அழகிய தேசிகர். துழாவூர் ஆதீனத்தை நிறுவியவர். மற்றொரு மாணாக்கர் திருவொற்றியூர் ஞானப் பிரகாசர். ஆன்மலிங்கமாலை என்னும் சிறு நூலின் ஆசிரியரும் இவருடைய மாணாக்கரே. குருஞானசம்பந்தர் இவருடைய சீடராகி அருள்பெற்ற வரலாறு அவருடைய வரலாற்றில் அடுத்துக் கூறப்பெறும்.

கமலை ஞானப்பிரகாசர் சிறப்பான சாத்திரச் சிறு நூல்கள் பலவற்றையும் சிறந்த தலபுராணங்கள் இரண்டையும் செய்திருக்கிறார். சைவானுட்டான அகவல், புட்பவிதி, பூமாலை, சிவபூசை அகவல், பிராசாத மாலை, அத்துவித சாரம் என்பன இவர் செய்த சாத்திரச் சிறுநூல்கள். தியாகராயர் கழிநெடில் என்பது தோத்திர நூல். சாதி நூல் என்பது சாதிகளைப் பற்றிக் கூறுவது. சிவானந்த போத சாரம், ஞானப்பள்ளு, ஆயிரப்பிரபந்தம், அண்ணாமலைக் கோவை , தியாகராசலீலை, அத்துவாக் கட்டளை என்பனவற்றையும் இவர் செய்ததாகக் கூறுவர். இவற்றுட் சில கிடைக்கவில்லை என்றும் கூறுவர்.

இவர் இயற்றிய சிறப்பான தலபுராணங்கள் திருமழுவாடி (திருமழபாடி)ப் புராணம், தந்திவனப்புராணம் என்பனவாம். தந்திவனம் என்பது திருவானைக்கா. தந்தி - யானை. திருவானைக்காப் புராணமாகிய தந்திவனப் புராணம் இருபதாண்டுகளுக்கு முன்புவரை கிடைக்காதிருந்தது. இவர் இயற்றிய தந்திவனப்புராணம் கிடைக்கவில்லை என்றே எழுதிவந்தனர். ஆய்வாளர் திருச்சிற்றம்பலம் மு.அருணாசலம் அவர்களும் அவ்வாறே எழுதினார். அதுவரை அச்சில் வராதிருந்த தந்திவனப் புராணத்தின் ஏட்டுச்சுவடி டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூலகத்திலிருந்து கிடைத்து 1981-இல் சென்னை அடையாறு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. திருமழபாடிப்புராணம் இயற்றப் பெற்ற காலம் சகம் 1488, கி.பி.1566 என்பது அதன் சிறப்புப் பாயிரச் செய்யுளால் தெரிகிறது.

சிக்கல், வடகுடி முதலிய தேவஸ்தானங்களின் பரதேசி முத்திரை, கணக்கு எழுதும் உரிமைகளை இவருக்கு அளிக்கும் சிக்கல் நவநீதப்பெருமான் கோயில் கல்வெட்டின் காலம் சகம் 1483. கி.பி.1561 ஆகும். ஆகவே கமலை ஞானப் பிரகாசரின் காலம் கி.பி. சுமார் 1550, சிறப்புற்று விளங்கிய காலம் கி.பி. சுமார் 1550-75 என்று கொள்ளலாம். இவர் முத்தியடைந்த நாள் ஐப்பசி தேய்பிறைச் சஷ்டி. திருவாரூரில் சிதம்பரநாதன்கொல்லை என்னும் இடத்தில் இவர் சமாதி மண்டபம் உள்ளது.

திருமழபாடிப்புராணம் தந்திவனப்புராணம் இவ்விரண்டின் பாயிரச் செய்யுள்களிலும் குருஞானசம்பந்தரின் சிவபோக சாரம் ஞானப்பிரகாசமாலை ஆகிய இருநூல்களிலும் இவர் "**செங்கமலப் பொற்பாதன்**" என்று போற்றப் பெறுகிறார். "செங்கமலப் பொற்பாதன்" என்பது எப்பேர்ப்பட்ட போற்றி. "இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச் செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை" என்ற திருவாசகத் தொடர் நமக்கு நினைவு வருகிறதல்லவா!

கமலை ஞானப்பிரகாசர், அவருக்கு முந்திய ஆசாரியரும் தந்தையும் ஆகிய செட்டித்தெரு ஞானப்பிரகாசர் ஆகிய இருவரும் இல்லறத்தார், வெள்ளை வேட்டிக்காரர்கள், வெள்ளாடை இல்லறஞானிகள் என்பது சைவஉலகம் ஈண்டறிய வேண்டிய ஒரு குறிப்பிடத்தக்க செய்தியாம். இவ்வாறு இல்லறத்தார் பலர் வெள்ளை வேட்டிக்காரர்களாக அந்நாளில் ஆசாரியராய் இருந்துள்ளனர். இந்நாளிலும் இருக்கின்றனர். வேளாக்குறிச்சி ஆதீனம் துழாவூர் ஆதீனம் இல்லறத்தார் ஆதீனங்களே, வெள்ளாடையே.

கமலை ஞானப்பிரகாசரின் சீடர் குருஞானசம்பந்தர் தருமபுர ஆதீனத்தை நிறுவினார். தருமபுர ஆதீன குருமரபு இவ்வாறு வருகிறது.

தருமபுர ஆதீன நிறுவனர்
முதல் குருமகாசந்நிதானம்
ஸ்ரீகுருஞானசம்பந்தர்

குருஞானசம்பந்தர் தோன்றிய திருவூர் தென்பாண்டிய நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் புகழ்பெற்ற வைணவத் தலமாகிய ஸ்ரீவில்லிப்புத்தூர். பெரியாழ்வாரையும் அவருடைய அருமைத் திருமகளார் ஆண்டாள் நாச்சியாரையும் வைணவ உலகுக்கு வழங்கிய ஸ்ரீவில்லிப் புத்தூர் சைவ உலகுக்குக் குருஞானசம்பந்தரைத் தந்தது.

குருஞானசம்பந்தரின் பெற்றோர் சுப்பிரமணிய பிள்ளை, மீனாட்சி அம்மையார். சைவவேளாளரில் கார்காத்தார் மரபினர். இவர்களது தவப்பயனாய் ஒரு திங்கட்கிழமை சோமவார நன்னாளில் நன்மகனார் ஒருவர் தோன்றினார். சிவபக்தியும் சைவ ஒழுக்கமும் மிக்க பெற்றோர் அக்குழந்தைக்கு ஞானசம்பந்தன் என்று பெயரிட்டனர்.

இவர் பண்டை நற்றவத்தால் தோன்றியவர் ஆதலின் இவருக்குக் கலை ஞானங்க ளெல்லாம் கல்லாமலே கை வந்தன. தமிழும் வடமொழியும் தாமே நன்கு கற்று,

திருமுறைகளையும் சாத்திரங்களையும் தாமே ஓதி உணர்ந்து வளர்ந்து வந்தார்.

இவருடைய பதினாறாண்டுப் பருவத்தில் பெற்றோர்கள் இவரையும் அழைத்துக்கொண்டு மதுரைக்குச் சொக்கநாதனை வழிபடுவதற்காக வந்து சிலநாள் மதுரையிலேயே தங்கி யிருந்து, ஆலவாயண்ணலையும் அங்கயற்கண்ணியையும் வழிபட்டனர். சில காலம் சென்றபின் பெற்றோர்கள் தங்கள் ஊருக்குத் திரும்பும்போது இவர் உடன்வர மறுத்துவிட்டார். இளைஞர் ஞானசம்பந்தருக்கு மதுரை மிகவும் பிடித்துப் போய்விட்டது., மதுரையை விட்டுப்பிரிய மனமில்லை, முக்கியமாக ஆலவாயண்ணலையும் அங்கயற்கண்ணியையும் விட்டுப்பிரிய மனமில்லை. சொக்கநாதரிடம் சொக்கிப் போன இவர் “உயிருக்குத் தாய் தந்தையராகிற சொக்க நாதரும் மீனாட்சியும் இங்கிருப்ப, உடலுக்குத் தாய் தந்தையராகிய உங்களோடு ஊருக்கு வாரேன், வர என்மனம் ஒருப்பட வில்லை, நான் இங்கேயே இருக்கிறேன், நீங்கள் மன அமைதியோடு சென்று வாருங்கள் ” என்று பணிவாகச் சொல்லிவிட்டார், பிடிவாதமாகச் சொல்லிவிட்டார்.

ஆன்மஞானிகள் இப்படித்தான் கருதினார்கள். வள்ளலார் இராமலிங்க அடிகளாரும் உயிருக்குத் தாய் தந்தை இறைவன், உடலுக்குத் தாய் தந்தை பெற்றோர்கள் என்று பாடியிருக்கிறார்.

.... சொல் ஆவி
ஈன்றோன் தனைநாளும் எண்ணாமல் இவ்வுடம்பை
ஈன்றோரை ஈன்றோர்என் றெண்ணினையே -ஈன்றோர்கள்
நொந்தால் உடனின்று நோவார் வினைப்பகைதான்
வந்தால் அதுநீக்க வல்லாரோ - வந்தாடல்

- திருஅருட்பா 1965, (3ஆம் திருமுறை,
நெஞ்சறிவுறுத்தல் 507;508)

மன்உயிர்க்குத் தாய்தந்தை குருதெய்வம்
உறவுமுதல் மற்றும் நீயே
பின்உயிர்க்கோர் துணைவேறு பிறிதிலைஎன்
றியான் அறிந்த பின்பொய்யான

மின்உடற்குத் தாய்தந்தை யாதியரை
மதித்தேனோ விரும்பி னேனோ
என்உயிர்க்குத் துணைவாநின் ஆணைஒன்றும்
அறியேன்நான் இரங்கி டாயே.

- திருஅருட்பா 2741 (4-ஆம் திருமுறை,
தனித்திருவிருத்தம் 13)

குருஞானசம்பந்தர் கூற்றும் வள்ளலார் கூற்றும் ஒன்றாக இருப்பதைப் பாருங்கள். குருஞானசம்பந்தரின் கூற்றைக் கேட்ட பெற்றோர்கள் பிள்ளையின் பிடிவாதத்தைக் கண்டு, வேறு மறுமொழி கூற இயலாதவர்களாய், ஒருகால் காலம் இவருடைய மனத்தை மாற்றலாம் என்ற நம்பிக்கை உடையவர்களாய், ஒருவாறு மனந்தேறி, பிள்ளையை அவருடைய ஆன்மார்த்தப் பெற்றோர்களாகிய மீனாட்சி சொக்கநாதரிடம் ஒப்புவித்துவிட்டு, இதுவும் சரிதான் என்று, பெற்றோர் மீனாட்சியும் சுப்பிரமணியபிள்ளையும் பிள்ளையிடமும் விடைப் பாகரிடமும் பிரியாவிடை பெற்று ஸ்ரீவில்லிப்புத்தூருக்குத் திரும்பினார்கள்.

பெற்றோரைப் பிரிந்த ஞானசம்பந்தர் நாள்தோறும் பொற்றாமரைக் குளத்தில் நீராடி, சொக்கநாதரையும் மீனாட்சியம்மையையும் காலந்தோறும் வழிபட்டு வந்தார். பொற்றாமரைக் குளத்தின் கரையில் சிவனடியார் பலரும் பூவும் நீரும் கொண்டு தங்கள் ஆன்மார்த்த மூர்த்திக்குப் பூசை செய்து தோத்திரம் பாடி ஆனந்தக்கண்ணீர் சொரிந்து பரவச நிலையில் அமர்ந்திருத்தலைக் கண்டார். தாமும் அவ்வாறே சிவபூசை செய்ய வேண்டுமென்று அவரது இளையமனம் விரும்பிற்று. தம் விருப்பத்தைச் சொக்கநாதப் பெருமான் சந்நிதியில் விண்ணப்பித்துக்கொண்டார். சொக்கநாதப் பெருமான் ஒருநாள் இரவில் இவர் கனவில் தோன்றி "ஞானசம்பந்தா, பொற்றாமரைக் குளத்தில் ஈசான திக்கில் நீருக்கடியில் ஒரு பெட்டகத்துள் இலிங்கவடிவில் நாம் எழுந்தருளியிருக்கிறோம், நீ அதனை எடுத்துப் பூசிப்பாயாக" என்று அருளினார். விடியற்காலையில் விழித் தெழுந்ததும்

ஞானசம்பந்தர் பொற்றாமரைக் குளத்திற்குச் சென்று ஈசான (வடகிழக்கு) திசையில் இறங்கி நீருக்குள் மூழ்கிப் பெட்டகத்தைத் தேடினார். பெட்டகம் எளிதில் கைக்கு வந்தது. பெட்டகத்தைப் பெற்ற ஞானசம்பந்தர் சொக்க நாதப்பெருமான் சந்நிதிக்குச் சென்று மகிழ்ச்சியோடு வணங்கி, பெட்டகத்தில் இலிங்கவடிவாய் எழுந்தருளியுள்ள சொக்கலிங்கத்தை நாடோறும் பூசித்து வரலானார்.

கண்ணுக் கினிய பொருளாகி யேஎன் கரத்தில்வந்தாய்
விண்ணும் பரவிடும் அற்புத மேஎன்ன விஞ்சையிதான்
மண்ணும் புகழ்ந்திட என்னையும் பூரண வாரியுள்ளே
நண்ணும் படிசெய் மதுரா புரிச்சொக்க நாயகனே

என்பது குருஞானசம்பந்தர் அருளிய சொக்கநாதக் கலித்துறை 11 பாடல்களில் முதற்பாடல். கண்ணுக்கினிய பொருளாகி அன்று இவர் கரத்தில் வந்த இந்த சொக்கநாதப்பெருமானே தருமபுர ஆதீனத்தின் ஆன்மார்த்த பூஜா மூர்த்தியாய் (வழிபடு கடவுளாய்) இன்றுவரை 26 குருமகாசந்நிதானங்களால் வழிபடப்பெற்று வருகிறார்.

இவ்வாறு தம் ஆன்மார்த்த வழிபாட்டுக்கு ஒரு மூர்த்தியைப் பெற்ற இளைஞர் ஞானசம்பந்தர், தாம் ஞானம் பெறுவதற்குத் தக்க ஒரு குரு வாய்க்கவேண்டுமென்று சொக்கநாதப்பெருமானை வேண்டினார். இவரது வேண்டு தலுக்கு இரங்கிய சொக்கநாதப்பெருமான் ஒருநாள் இரவு இவரது கனவில் தோன்றி, " நாம் உபதேசித்தருளிய ஞானம் பரம்பரையாக வந்து திருவாரூரில் ஞானப்பிரகாசனிடம் உள்ளது. நீ திருவாரூர் சென்று அவனிடம் ஞானோபதேசம் பெற்றுய்வாயாக " என்றருளினார். இவ்வாறு கனவு கண்ட ஞான்சம்பந்தர் சொக்கநாதரின் அருளிச் செயலுக்கு மகிழ்ந்து வணங்கி விடைபெற்றுத் திருவாரூர்க்குப் புறப்பட்டார். இவ்வாறு இவருக்குக் கனவில் தோன்றி அருள்செய்த சொக்கநாதப்பெருமான் திருவாரூரில் கமலை ஞானப் பிரகாசரின் கனவில் எழுந்தருளித் தோன்றி " ஞானப் பிரகாசா! நம் அன்பன் ஞானசம்பந்தன் நம் ஆணையால்

நின்னை நாடி வருகிறான், அவனுக்கு ஞானம் வழங்கி ஆட்கொள்க!'' என்றருளிச் செய்து மறைந்தார். இவ்வாறு கனவுகண்ட கமலை ஞானப்பிரகாசர் திருவாரூரில் தியாகேசப்பெருமான் திருக்கோயிலுள் உட்கோயிலாகிய சித்தீசுவரத்தில் தட்சிணாமூர்த்தி சந்நிதியில் அமர்ந்து ஞானசம்பந்தரின் வரவை எதிர்நோக்கியிருந்தார். மதுரையிலிருந்து திருவாரூருக்குப் புறப்பட்ட ஞானசம்பந்தர் ஆரூரை அடைந்து கோயிலைக்குறுகி அதனுட் புகுந்து ஆரூரப் பெருமானை வழிபட்டு வலம்வந்து சித்தீச்சுரத்தில் தென்முகப் பரமாசாரியர் சந்நிதியில் ஆசாரியர் கமலை ஞானப்பிரகாசர் வீற்றிருத்தலைக் கண்டு அவருடைய செங்கமலப் பொற் பாதங்களில் சரணடைந்தார். சற்சீடரின் வரவை எதிர்நோக்கி யிருந்த ஆசாரியர் ஞானசம்பந்தரை தென்முகப் பரமாசாரியர் சந்நிதியில் வடக்கு நோக்கி இருக்கச் செய்து, தாம் கிழக்கு நோக்கி இருந்து, தென்முகப் பரமாசாரியரின் முன்னிலையில் ஞானசம்பந்தருக்கு நயன, வாசக, பரிச, அத்தமத்தகசையோக, திருவடி தீக்கைகளைச் செய்து ஞானோபதேசம் வழங்கி ஆட்கொண்டருளினார்.

இந்நிலையில் கமலை ஞானப்பிரகாசரையும் குருஞானசம்பந்தரையும் இராமகிருஷ்ண பரமஹம்சருக்கும் விவேகானந்தருக்கும் ஒப்பிடலாம். பின்னாளில் இராம கிருஷ்ணர் விவேகானந்தரை எதிர்பார்த்திருந்தார். அவ்வாறே முன்னாளில் கமலை ஞானப்பிரகாசர் குருஞானசம்பந்தரை எதிர்பார்த்திருந்தார். குருஞானசம்பந்தர் கமலை ஞானப் பிரகாசரைச் சரணடைந்தார். விவேகானந்தர் இராமகிருஷ்ணரைச் சரணடைந்தது போன்று. இராமகிருஷ்ணர் தாமரையிலை மருவூநீர் போன்று இல்லறத்தில் இருந்த ஞானி. விவேகானந்தர் இளந்துறவி. இதுபோன்றே கமலை ஞானப் பிரகாசர் இல்லறஞானி. குருஞானசம்பந்தர் இளந்துறவி. குருஞானசம்பந்தர் விவேகானந்தர் இவ்விருவருமே குருவின் புகழைக் குன்றின்மேல் விளக்காக உலகறியச் செய்தவர்கள். குருஞானசம்பந்தர் ஒரு பெரிய சைவ மடத்தையே நிறுவினார். விவேகானந்தர் தம் குருவின் பேரால் ஒருமடத்தை நிறுவி

அதை உலகளாவியதாக ஆக்கினார். தருமபுர ஆதீனமும் இராமகிருஷ்ண மடமும் இன்றளவும் வளர்ந்து பணி செய்து வருகின்றன.

கமலை ஞானப்பிரகாசரும் குருஞானசம்பந்தரும் குருவும் சீடருமாகத் திருவாரூரில் தியாகேசப்பெருமானை வழிபட்டுக் கொண்டிருந்தனர். சில காலம் சென்றது. ஒருநாள் இரவு அர்த்தசாம பூஜை நள்ளிரவு வழிபாட்டுக்குப் பின் கமலை ஞானப்பிரகாசர் தம் சீடர் குழாத்தோடு இல்லத்திற்குத் திரும்பினார். இரவு நேரம். கைவிளக்குப் பணிபுரியும் பணியாள் எங்கோ அயர்ந்து உறங்கிவிட்டான். சீடர் ஞானசம்பந்தர் கைவிளக்கை ஏந்திக் கொண்டு குருவுக்கு முன்னால் வழிகாட்டிக்கொண்டு வந்தார். சிவதரிசன சிந்தையுடனே இருந்த ஞானப்பிரகாசர், கைவிளக்குப் பணிபுரிவது பணியாளா சீடரா என்பதைக் கவனிக்கவில்லை. இல்லத்தின் வாயிலை அடைந்ததும் பணியாளை நில் என்று சொல்லி உள்ளே செல்வது வழக்கம். அன்றும் அவ்வாறே நிற்க என்று சொல்லி உள்ளே சென்றுவிட்டார். பணியாளாக இருந்தால் அவன் தன் வீட்டுக்குச் சென்று விடுவான். ஞானசம்பந்தரோ, '' நிற்க '' என்பதைக் குருஆணையாகவே கொண்டு, விடிய விடிய, கைப்பந்தத்துடன், குருநாதரின் இல்லத்து வாயிலில் காவல் காப்பவர்போல் நின்றார். இரவு முழுவதும் சென்றது. கைவிளக்குக்கு எண்ணெய்விடாமலே இரவு முழுவதும் எரிந்தது. சோதனை போன்று அன்றிரவு மழைபெய்தது. சாதாரண மழையன்று, சற்று கன மழையே. அம்மழையிலும் ஞானசம்பந்தர் கைவிளக்குடன் நின்று கொண்டிருந்தார். என்ன வியப்பு! ஞானசம்பந்தரின்மீது மழைத்துளி விழவில்லை. அவருடம்பு நனையவில்லை. கைவிளக்கும் அணையவில்லை. ஞானசம்பந்தரைச் சுற்றி ஒரு கோல் வட்டத்திற்குள் மழைபெய்யவில்லை, பூமியும் நனைய வில்லை, ஒருகோல் வட்டத்திற்கு அப்பாலேயே மழை பெய்தது, மழைநீரும் ஒதுங்கி ஓடிற்று. விடியவிடிய அடாது மழை பெய்யினும் விடாது கைவிளக்குடன் நின்று

கொண்டிருந்தார் குருஆணை கடவாத சீடர், பிற்காலத்தில் குரு ஆகப்போகிற சீடர் ஞானசம்பந்தர். பொழுது விடிந்தது. விடியற்காலை நேரம். ஞானப்பிரகாசரின் இல்லக் கிழத்தியார், குருபத்தினியார் திருவலகுப் பணிக்காகக் கதவைத் திறந்து கொண்டு வாசலுக்கு வந்தார். ஞானசம்பந்தர் கைவிளக்கோடு நின்றுகொண்டிருப்பதையும், கைவிளக்கு எரிந்து கொண் டிருப்பதையும், மழைபெய்திருத்தலையும், விளக்கும் அணையாது, இவரும் நனையாது இருத்தலையும் கண்டு வியந்து உள்ளே ஓடிச்சென்று கணவரிடம் கூறினார். அவரும் வெளியே ஓடிவந்து நிலையைக் கண்டு பதறிப்போனார். விடிய விடிய இராமுழுதும் இப்படி நிற்க நேர்ந்ததே, என்ன குருபக்தி! இப்படியும் ஒருவர் உண்டோ! என்று வியந்தார். சீடரை அன்போடு ஆரத்தழுவி, சீடராயிருத்தற்குரிய நிலையைக் கடந்துவிட்டீர், ஆசாரியராயிருக்கும் தகுதியை அடைந்துவிட்டீர்! இனி நீர் சாதாரண ஞானசம்பந்தரன்று, இன்றுமுதல் "குரு" ஞானசம்பந்தராகிறீர்! இனி நீர் தகுந்த இடத்தில் சென்றிருந்து நும்மை வந்தடையும் பக்குவ ஆன்மாக்களுக்குச் சிவஞான உபதேசம் செய்து ஆட்கொண்டு சைவ சமய பரிபாலனம் செய்துவருவீராக! என்று வாழ்த்தியும் கட்டளையிட்டும் அருளினார்.

கேட்ட ஞானசம்பந்தர் தேவரீரை விட்டு அடியேன் எங்ஙனம் பிரிந்திருப்பேன் எங்கே செல்வேன் என்று வருந்தி

> கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ
> எனக்கும் உடற்கும் எனதிச்சை யோஇணங் கார்புரத்தைச்
> சினக்கும் கமலையுள் ஞானப்பிரகாச சிதம்பர, இன்று
> உனக்கிச்சை எப்படி அப்படி யாக உரைத்தருளே.

என்ற பாடலைப் பாடிப் பணிந்தார். இது கேட்டு மகிழ்ந்த ஞானப்பிரகாசர், நல்லது, அண்மையில் காவிரியின் தென்கரையில் மயிலாடுதுறைக்கு அருகே வில்வாரண்யம் என்ற ஒரு தலம் உள்ளது. யமதர்மராசன் வழிபட்டுப் பேறு பெற்றதால் தருமபுரம் என்றும் பெயருண்டு. நீ அங்கே சென்று ஒரு மடம் அமைத்துத் தங்கியிருந்து சைவமும் தமிழும் வளர்த்து வருவாயாக! என்று வாழ்த்தி விடையளித்

தனுப்பினார். அடிக்கடி வந்து ஆசாரியரைத் தரிசிக்க வேண்டும் என்று விண்ணப்பித்த ஞானசம்பந்தருக்கு, குரு வாரந்தோறும் வந்து தரிசிக்கலாம் என்று விடையளித் தனுப்பினார்.

அவ்வண்ணமே குருஞானசம்பந்தர் ஆரூரினின்றும் நீங்கி மயிலாடுதுறையை வழிபட்டுத் தருமபுரத்தை அடைந்தார். தருமபுரீசுவரரையும் அபயாம்பிகையையும் பணிந்து, தாம் தங்கிப் பணிபுரிய ஒருமடமும் அதில் சொக்கலிங்கப்பெருமானுக்கு ஒரு கோயிலும் அமைத்துப் பூசித்துவந்தார். அதுகாறும் தருமபுரீஸ்வரர் கோயிலைப் பரிபாலித்துக் கொண்டிருந்த அகத்தியமுனிவரின் வழிவந்த முனிவர்கள் அந்நிர்வாகத்தை இவரிடம் ஒப்புவித்துவிட்டுத் தென்னாடு சென்றனர். குருஞானசம்பந்தர் நிலையாகத் தருமபுரத்தில் தங்கியிருந்து, குருவாரந்தோறும் திருவாரூர் சென்று ஆரூர்ப்பெருமானையும் தம் குருநாதரையும் வணங்கி வருவாராயினர். குருஞானசம்பந்தரின் ஞானஒளி நாற்றிசையும் பரவிற்று. நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பக்குவமுள்ள சீடர் பலர் வந்து சேரலாயினர். தருமபுர ஆதீனம் நாளுக்குநாள் வளரலாயிற்று.

ஒருசமயம் சிதம்பர வழிபாட்டுக்குச் சென்ற இவர் ஆயிரக்கால் மண்டபத்தில் இரவு பகலாக நிட்டையில் அமர்ந்திருந்தார். அன்று நள்ளிரவில் பள்ளியறையில் நிவேதனமாக வைக்கப்பெற்றிருந்த திருவமுதையும் பாயசத்தையும் சிவகாமியம்மையார் இவருக்குப் பிரசாதமாகக் கொண்டு வந்து கொடுத்தருளினார். இவ்வாறு அற்புதங்கள் பல நிகழ்ந்தன. தருமபுரம் வில்வாரண்யத்தில் இவரது ஞான ஆட்சியில் பசுவும் புலியும் ஒரு துறையில் நீர் பருகின. தருமபுர ஆதீனத்தின் முத்திரைச் சின்னத்தில் இன்றும் இக்காட்சியை ஓவியமாகக் காணலாம்.

தமது ஞானவாழ்வில் குருஞானசம்பந்தர் எட்டு அருள் நூல்களை அருளினார். அவை.

1. சொக்கநாதக் கலித்துறை
2. சொக்கநாத வெண்பா

3. சிவபோக சாரம்
4. பண்டாரக் கலித்துறை என்னும் ஞானப்பிரகாச மாலை
5. நவரத்ன மாலை
6. சோடசகலாப் பிராசாத சட்கம்
7. திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல்
8. முத்தி நிச்சயம்

இவ்வெட்டும் 'குருஞானசம்பந்தர் அட்டகம்' என வழங்கப் பெறும். உமாபதியாரின் நூல்கள் எட்டும் உமாபதிசிவம் அட்டகம் என வழங்கப்பெறுவது போன்று எனலாம். இவ்வெட்டைத்தவிர ஞானாவரண விளக்கம், சிவபூசா பத்ததி என்று வேறு இரண்டு நூல்களும் இவரால் அருளப்பெற்றனவாகத் தெரிகின்றன. குருஞானசம்பந்தரின் நூல்களைக் குறித்துப் பின்னர் ஓரிடத்துக் காண்போம்.

" தருமையுங் கமலையும் விரிதமிழ்க் கூடலும்
திருநக ராக அரசுவீற் றிருக்கும்
மாசி லாமணித் தேசிக ராய "

என்று குமரகுருபர சுவாமிகள் பண்டார மும்மணிக் கோவையில் தருமபுர ஆதீனம் நான்காவது குருமகா சந்நிதானம் மாசிலாமணி தேசிகரைப் போற்றிப் பாடுகின்றார். தருமை, கமலை, விரிதமிழ்க்கூடல் ஆகிய மூன்றும் திருநகராகத் தருமபுர ஆதீனகர்த்தர் அரசு வீற்றிருப்பதாகக் கூறுகிறார். தருமை - தருமபுரம். கமலை - திருவாரூர். விரிதமிழ்க்கூடல் - மதுரை. ஸ்ரீவில்லிப்புத்தூரில் பிறந்த குருஞானசம்பந்தர், மதுரையில் சொக்கநாதரின் திருவருள் பெற்றார். திருவாரூரில் கமலை ஞானப் பிரகாசரின் குருவருள் பெற்றார், தருமபுரத்தில் தாமே குருவாய் எழுந்தருளப் பெற்றார். "தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும் திருநகராக அரசுவீற்றிருக்கும் " என்பது எவ்வளவு பொருத்தமானது, கூடலும், கமலையும், தருமையும் என்று கடைதலையாக மாற்றியமைத்துக் கொள்ளவேண்டும்.

ஸ்ரீவில்லிப்புத்தூரிற் பிறந்து கூடலில் திருவருளும் கமலையில் குருவருளும் பெற்றுத் தருமையில் அரசு வீற்றிருந்த குருஞானசம்பந்தர் தமது முத்திப்பேற்றுக்காலம் நெருங்குவதை உணர்ந்தார். தமக்குப்பின் ஆசிரிய பீடத்தில் அமர்ந்து ஆதீன ஆட்சியை நடத்தும் நிலையில் ஒருவரை அமர்த்த எண்ணினார். தம் மாணாக்கர்களில் சிறந்தவராகத் திகழ்ந்த ஆனந்தபரவசருக்கு ஞானஉபதேசம் செய்து ஆசாரியத் தலைமையும் நல்கி, தாம் புதிதாகக் கட்டிய ஞானபுரீசுவரர் கோயிலில் சிவலிங்கப்பெருமான் திருவடி நீழலில் நிட்டை கூடி முத்திபெற்றார்.

தருமபுர ஆதீனத்திற்குள் அடுத்தடுத்து இரண்டு கோயில்கள் உள்ளன. ஒன்று தருமபுரீசுவரர் கோயில். இது முன்னரே இருந்த பழங்கோயில். மற்றொன்று ஞானபுரீசுவரர் கோயில். இது குருஞானசம்பந்தர் கட்டிய புதுக்கோயில். இதுவே குருஞானசம்பந்தரின் ஜீவசமாதிக் கோயிலும் ஆகும்.

ஆதீன நிறுவனர் குருமுதல்வர் குருஞானசம்பந்தருக்குப் பின் குருமரபு பின்வருமாறு வளர்ந்து வருகிறது.

தருமபுர ஆதீன குருமரபு அட்டவணை

1. ஸ்ரீ குருஞானசம்பந்த குருமூர்த்திகள்
2. ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிகர்
3. ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிகர்
4. ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர்
5. ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்
6. ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிகர்
7. ஸ்ரீலஸ்ரீ திருவம்பல தேசிகர்
8. ஸ்ரீலஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பல தேசிகர்
9. ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு தேசிகர்
10. ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகர்
11. ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிகர்
12. ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார தேசிகர்
13. ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்

14. ஸ்ரீலஸ்ரீ கந்தப்ப தேசிகர்
15. ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர்
16. ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிகர்
17. ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிகர்
18. ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகர்
19. ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிகர்
20. ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகர்
21. ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிகர்
22. ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிகர்
23. ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்
24. ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிகர்
25. ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்

தற்போது 26-வது குருமூர்த்திகளாக எழுந்தருளியிருப்பவர்கள் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**

இரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிகர்

மிகவும் அதிதீவிர பக்குவியாகத் திகழ்ந்த ஆனந்த பரவசர் குருமகாசந்நிதானமாக ஞானபீடம் ஏறிய அன்றே, திருவருள் ஞான மேலீட்டால் இருவினையொப்பும் மலபரி பாகமும் சத்திநிபாதமும் வாய்க்கப்பெற்றவராகி, தம் குருநாதரின் கோயிலான ஞானபுரீசுவரர் கோயிலின் மேற்புறம் அதன் சிகரத்தைப் பார்த்தவண்ணம் அமர்ந்து நிட்டைகூடி முத்திப் பேறு பெற்றார்.

மூன்றாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிகர்

முதலாவது குருமகாசந்நிதானத்தைத் தொடர்ந்து இரண்டாவது குருமகாசந்நிதானமும் அன்றே முத்தி பெற்று விட்ட நிலையில் திருக்கூட்டத்து அடியார்கள் இனித் தலைமைக்கு என்செய்வோம் என்று கவலையுற்றுக் குருமூர்த்திகளின் சமாதியின் முன்னர் வணங்கித் தங்கள் மனக்கவலையை விண்ணப்பித்துக் கொண்டார்கள். தலைமையின்றி ஞானசந்தானம் இடையறவுபடுதலையும்,

அது என்றும் நின்று நிலைவேண்டிய இன்றியமையாமையையும் திருவுளங்கொண்ட குருமூர்த்திகள் சமாதியினின்றும் வெளிப்போந்து அடியார் திருக்கூட்டத்தில் ஆனந்தபரவசருக்கு அடுத்த நிலையில் இருந்த சச்சிதானந்த தேசிகருக்கு ஞானோபதேசம் செய்து ஆசாரியத் தலைமையை நல்க எண்ணி அதற்குரிய தீக்கைகளைச் செய்ய முற்பட்ட போது அவருக்கு அதற்குரிய பக்குவம் போதாதிருத்தலைக் கண்டார்கள். ஒருபுறம் ஆனந்தபரவசர் தேவைக்கு அதிகமான பக்குவமுதிர்ச்சியால் முத்தியடைந்தே விட்டார். மற்றொருபுரம் குருமூர்த்திகள் எதிர்பார்த்த பக்குவம், தேவையான பக்குவம் சச்சிதானந்ததேசிகருக்கு விளையவே யில்லை. அதன்மேல் பரமாசாரியர் இவரை நோக்கி ஆனந்த பரவசர் அப்படி இருக்கிறாரே, அவரைக் கண்டும் நீர் இப்படி இருக்கிறீரே, ஏன் உமக்கு ஞானம் உதிக்கவில்லை என்றொரு பாடலைப்பாடி மீண்டும் இவர்மீது ஞான நோக்கத்தை உருத்துச் செலுத்தினார்.

தானந்தம் ஆதிநடு இல்லா தோங்கும்
சச்சிதா னந்தமயந் தானே ஆன
ஆனந்த பரவசனைக் கண்டும் கண்டும்
அந்தந்தோ! பரகதியை அறிந்தீ ரில்லை
மானந்தான் வடிவாகி நிற்ற லாலோ?
மலமாயை கன்மம்இவை மடியா தாலோ?
ஞானந்தான் உமதுளத்தில் உதியாதாலோ
நாம்அறியோம் உமதுமயல் நவிற்று வீரே!

இப்பாடலைப்பாடி அவர்மீது பரமாசாரியர் தம் ஞான நோக்கை உருத்துச் செலுத்துதலும் சச்சிதானந்தருக்குப் போதிய பக்குவம் விளைந்தது. மகிழ்ந்த ஆசாரியர் அவருக்கு ஞானோபதேசமும் ஆசாரியத் தலைமையையும் நல்கி வாழ்த்தி ஞான சந்தானத்தை வளர்த்துவரக் கட்டளையிட்டு, மீண்டும் தம் ஜீவசமாதிக்கோயிலிற் புகுந்து நிட்டை கூடிப் பரமுத்தி பெற்றார்.

சமாதியில் இருவகை உண்டு. ஒருவகை, இறந்தபின் பூதஉடலைச் சமாதியில் வைப்பது. இதுதான் எங்கும்

நடப்பது. மற்றொரு வகை உயிரோடு தாமே சென்று ஜீவ சமாதியில் அமர்வது. இது மிகச் சிலர்க்கே நிகழ்வது. இயம நியமாதி அட்டாங்க யோகத்துள் எட்டாவதான சமாதி நிலை இது. இந்நிலையே ஜீவசமாதிக்குரிய நிலை. அட்டாங்க யோகத்திலும் மேலான **பிராசாதயோகம்** கைவந்தவர் குருஞானசம்பந்த குருமூர்த்திகள். அவர்கள் ஜீவசமாதி எய்தியதில் வியப்பென்ன?

அன்று சிற்றம்பலநாடிகள் கண்ணப்பரை ஆட்கொண்டு முத்திப்பேறு நல்க ஜீவசமாதியினின்றும் எழுந்தார். பின்பு இப்போது குருஞானசம்பந்த குருமூர்த்திகள் சச்சிதானந்தருக்கு அனுக்கிரகஞ்செய்து குருமரபை வளரச்செய்ய ஜீவசமாதியினின்றும் எழுந்துவந்தார். ஒருவேளை ஓரளவில் இது, இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், கல்லறையினின்று வெளிப்போந்தது போன்றதென்று சொல்லலாமோ?

சச்சிதானந்ததேசிகரும் குருவாணைப்படி சிலகாலம் சமய பரிபாலனஞ்செய்து தமது அடியார்களில் ஒருவராகிய மாசிலாமணி தேசிகருக்கு ஞானோபதேசம் செய்தருளி உரிய காலத்தில் சிவப்பேறெய்தினார்.

நான்காவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர்

தமிழ் இலக்கிய உலகிலும் சைவ உலகிலும் புகழ்பெற்ற குமரகுருபர சுவாமிகளை ஆட்கொண்டவர்கள். தெற்கே ஸ்ரீவைகுண்டம் கயிலாசபுரத்தில் தோன்றிய குமரகுருபரர் இவர்களிடம் வந்து மாணாக்கராகி இவர்களது கட்டளைப்படிக் காசிக்குச் சென்று குமாரசாமி மடத்தை நிறுவினரர். பின்னாளில் அதன் கிளையாகத் திருப்பனந்தாளில் காசிமடம் நிறுவப்பெற்றது. அது தருமபுரத்தின் சீட மடமாக விளங்கிவருகிறது. குமரகுருபரரைப் போன்ற ஒரு சீடர் கிடைப்பது அருமையிலும் அருமை. குமரகுருபரரைச் சீடராகப் பெற்ற பெருமை தருமைக்குருமணி மாசிலாமணி தேசிகருக்கு உரியது. குமரகுருபரர் தேசிகரின்மீது பண்டார

மும்மணிக்கோவை பாடினார். தமிழ் நூற்பரப்பில் குரு தோத்திரமாகப் பாடப்பெற்ற நூல்களுள் இதுவே தலை சிறந்து முன்னிற்கிறது. வெள்ளியம்பலவாண முனிவரும் இவர்களது மாணாக்கரே. சிறந்த மாணாக்கர்களைப் பெற்றுச் சிறந்தவர்கள் நாலாம் பட்டம் மாசிலாமணி தேசிகரவர்கள்.

ஐந்தாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்

விரிவாகத் தென்னாட்டு யாத்திரை செய்தார்கள். அவ்வாண்டு குற்றாலம் அருவியில் அளவுக்குமீறி மிக அதிகமாக நீர்வீழ்ச்சியும் நீரோட்டமும் ஏற்படவே, மக்களின் வேண்டுகோளுக்கிரங்கி நீர்வீழ்ச்சியைத் தம் தவ ஆற்றலால் கட்டுப்படுத்தியருளினார்கள். "கெடுப்பதூஉம், கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை" என்றார் திருவள்ளுவர் (திருக்குறள் 15). மழைபெய்யாது கெடுத்தல் அனாவிருஷ்டி, அதிகம் பெய்து கெடுத்தல் அதிவிருஷ்டி என்பர் வடநூலார். மழைபெய்விக்கும் ஆற்றல், அதிக மழை யை அடக்கும் ஆற்றல், அனாவிருட்டி அதிவிருட்டிகளைச் சமன் செய்யும் ஆற்றல் நம் சைவத் தவசிகளிடம் இருந்தது. அதற்கு இவர்களோர் எடுத்துக்காட்டு. இவர்கள் காலத்தில் மாளவ குமாரசாமி முதலியார் பாபநாசம் சிவசைலம் முதலிய இடங்களில் 96 மடங்களைக் கட்டித் தருமபுர ஆதீனத்திற்கு அளித்தாகக் கல்வெட்டு ஒன்று உள்ளது.

ஆறாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்

இவர்கள் காலத்தில் பதிணாறொடுக்கம் சிறந்து விளங்கியது. சம்பந்த சரணாலயர் ஆதீனப் புலவர் திலகமாக விளங்கினார். தென்னாட்டு யாத்திரையின்போது தமிழாகரர் என்பவரைத் திருத்தி ஆட்கொண்டருளினார்கள். வேள்வி மலையில் முருகனை வழிபட்டபோது வள்ளியம்மையின் திருவுரு கண்ணுக்கு இலக்காகாமையில் "இங்கு வள்ளித்தாய் இல்லையோ" என்றாராக, வள்ளியம்மை "இதோ இருக்கிறேன்" என்று திருமேனி வளைந்து காட்சி அருளினார்.

ஏழாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ திருவம்பல தேசிகர்

இவர்கள் காலத்தில் தஞ்சாவூரை ஆண்ட மன்னன் காவிரிப்பூம்பட்டினத்திற்குக் கடலாடச் சென்றான். தரும புரத்திற்குக் கிழக்கே இப்போது மன்னன்பந்தல் என்னும் இடத்தில் இரவு தங்கினான். தருமபுரம் ஞானபுரீசுவர் கோயிலின் நள்ளிரவு வழிபாட்டு மணிஓசையைக் கேட்டுக் கைகுவித்து வணங்கினான். அருகிலிருந்த அமைச்சரொருவர் ''சூத்திர சமாதி ''யை வணங்கினீர்கள், பாவம் சம்பவித்து விட்டது, பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டும் என்றார். தனக்கு ஏற்பட்ட இந்நிலை மற்றவர்களுக்கு ஏற்படக் கூடாது, சூத்திரசமாதியை இடித்துவிடுவதேமேல் என்று மன்னன் எண்ணி இடிக்க உத்தரவிட்டான். ஏவலாளர்கள் குருஞானசம்பந்தர் கோயிலாம் ஞானபுரீஸ்வரர் கோயிலை இடிக்கத் தொடங்கினர். செய்தி குருமகாசந்நிதானத்திற்கு எட்டிற்று.

ஈசன் பலகீனன் என்றக்கால் ஆலயத்தில்
மோசம் வந்ததென்று மொழியலாம் - ஈசனே
ஆக்குவதும் ஆக்கி அழிப்பதுவும் தானானால்
நோக்குவதென் யாம்பிறரை நொந்து.

என்னும் சிவபோகசாரம் 105-வது வெண்பாவைப் பாடினார்கள். பாடியதும் எம்பெருமான் நடன ஒலி கேட்டது. நடன ஒலியைக் கேட்ட குருமூர்த்திகள் அடுத்த 106-ஆம் வெண்பாவைப் பாடினார்கள்.

தேசஞ் சிவாலயங்கள் சேர வலையஒரு
மோசம்வந்த தையோ முதல்வனே - தேசத்து
மன்னைவெறுப் பேனோ வருவினையை ஊட்டுவிக்கும்
உன்னைவெறுப் பேனோ உரை.

கடப்பாரை பட்ட இடமெல்லாம் கல்லிலிருந்து இரத்தம் பீறிட்டது. இடித்த ஏவலாளர்கள் மூர்ச்சை யடைந்தனர். மன்னனுக்கும் கண்ணொளி மங்கிற்று. மன்னன் பரிவாரங்களோடு ஆதீனத்திற்கு ஓடினான். குருமூர்த்திகளிடம்

மன்னிப்பு, பிராயச்சித்தம், வேண்டினான். இடிபட்டு இரத்தம் பீறிட்ட இடங்களிலும் ஏவலாளர்களின் மீதும் குருமூர்த்திகள் திருநீற்றைத் தெளித்தார்கள். இரத்தம் பீறிடுவது நின்றது, ஏவலாளர்கள் மூர்ச்சைதெளிந்து எழுந்தனர். மன்னனே முன்னின்று கோயிலைத் திருப்பணி செய்து கொடுத்தான். அர்த்தஜாமப்படுகை முதலிய நிலங்களை நிவந்தமாகக் கொடுத்தான். குருநாதரின் அருள் பெற்றுச் சென்றான். மன்னன் தங்கிய இடமே மன்னன்பந்தல் (மன்னம்பந்தல்) என்ற ஊராயிற்று.

சூத்திரர்களுக்குச் சந்நியாசம்பெறும் அதிகாரமில்லை, அதிலும் சூத்திர கிரகஸ்தர்களுக்கு ஆசாரிய பதவி வகிக்கும் அதிகாரமில்லை (அதிகாரம் - தகுதி) என்ற கருத்து அந்நாளில் வைதிக உலகில் மிகுந்திருந்தது. குகையிடி கலகத்தின் காரணம் இதுதான். பிற்காலச் சோழமன்னர்களின் காலங்களில் வடஇந்தியாவிலிருந்து வரவழைக்கப்பெற்ற அந்தண சைவாசாரியர்கள் மடங்கட்டிக் கொடுக்கப்பெற்று அரசியல் செல்வாக்குடன் அரசகுருமார்களாக ராஜகுருவாக விளங்கினர். அவர்களது அழுக்காற்றால், ஏவலால் தமிழ்ச் சைவமடங்கள் (குகைகள்) இடிக்கப்பட்டதே **குகையிடி கலகம்**. அதுபோன்ற ஒரு இடிப்புதான் பின்னாளில் தருமபுரம் ஆதீனம் 7-ஆம் பட்டம் காலத்திலும் நிகழ்ந்தது. பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் ஆங்கிலேயக் கலெக்டர்களால் தொகுத்து வெளியிடப்பெற்ற மாவட்ட கெசட்டீர்களிலும் திருவாவடுதுறை தருமபுர ஆதீனங்கள் சூத்திரமடங்கள் என்று குறிப்பிடப்பெற்றுள்ளன. சைவ மாகேஸ்வர பூஜையை விடப் பிராமணபோஜனத்திற்கு அக்காலத்தில் மதிப்பு மிகுதியாக இருந்தது. அந்தணர் (பிராமணர்) - கல்வித்துறை, அரசர் (க்ஷத்திரியர்) - காவல்துறை (ஆட்சித் துறை), வணிகர் (வைசியர்) - வணிகத்துறை, வேளாளர் (சூத்திரர்) - தொழில் துறை, வேளாண்துறை (விவசாயத் துறை). தொழில் பற்றி அந்நாளில் சாதிப் பிரிவினை ஏற்பட்டது. பின்னாளில் அதுவே தீதாகிவிட்டது. அந்தணர்க்கு அருத்தல் புண்ணியந்தான். கீழோரிலும் கற்று வல்லோர், ஒழுக்கமுடையோர், அந்தண்மை

பூண்டோர், அந்தணராகக் கருதப் பெறவேண்டும்., திருமூலர் தொடங்கித் திரு.வி.க. வரை கபிலர் அகவல் பாடிய கபிலர் உட்படச் சான்றோர் அனைவரும் இருக்கருத்தினரே.

இங்கு நாம் கூறிக்கொண்டிருக்கும் 7-ஆம் பட்டம் திருவம்பலதேசிகர் வருணாச்சிரம சந்திரிகை என்றொரு நூல் இயற்றியருளினார். அக்காலத்தில் அப்படியொரு நூல் தேவைப்பட்டது. சூத்திரர்களுக்குச் சந்நியாசம் உண்டா? இல்லையா? போன்ற ஐயங்களெல்லாம் அதனால் நீங்கின. போகட்டும். இன்று காலம் மாறிவிட்டது. மீனவப் பெண்பால் துறவியும் உலகப்புகழ் பெற்று விளங்கும் காலம் இது. பழங்குப்பைகளை மிகுதியாகக் கிண்டிக் கிளற வேண்டாம் என இவ்வளவில் அமைகிறோம். இவைகூட வரலாறு மறைபடக்கூடாது என்பதாற் கூறினோம். ஒரு காலத்தில் தொழிலால் சாதி. பின்னர்' பிறப்பால் சாதி. இக்காலத்தில் ஒழுக்கத்தால் சாதி என்று அமையின் நலம். எல்லாரும் ஒரு சாதி என்பது அதைவிட நலம்.

இன்று இந்து கோயில்களின் நிலை என்ன? ''ஈசன் பலஹீனன் என்றக்கால் '' . ''தேசஞ் சிவாலயங்கள்'' என்னும் சிவபோகசாரப் பாடல்கள் இன்றைய நிலைக்குப் பொருத்தமாக இல்லையா? 7-ஆம் பட்டம் திருவம்பல தேசிக சுவாமிகள் காலத்து நிகழ்ச்சிகள் இன்றைக்கும் நமக்கு ஒரு பாடமாகத் திகழ்கின்றன. பாடங்கற்க வேண்டியது மக்கள் கடன், அரசின் கடன்.

எட்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பல தேசிகர்

இவர்களது தென்னாட்டு யாத்திரையில் இவர்களுக்குச் செய்யப்பெற்ற சிறப்புகளைக் கண்டு அழுக்காறு கொண்ட சிலர் மலடியான ஓர் பேரிளம்பெண்ணை (வயது முதிர்ந்த வரை) இவர்களிடம் அனுப்பிப் பிள்ளைப்பேறு வேண்டச் செய்தனர். நிகழ்ந்ததை ஞானக்கண்ணால் உணர்ந்த இவர்கள் ''நீ விரும்பியவாறே ஆகுக'' என்று வாழ்த்திப்

பரிகலசேடத்தைக் கொடுத்தருளினார்கள். பரிகலசேடம் - உண்ட அன்னத்தின் எஞ்சிய மிச்சம், எச்சிற்பட்ட மிச்சம். பரிகலசேடமுண்ட அப்பேரிளம்பெண் கருவுற்று அழகிய ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். மகவுக்கு **அழகிய திருச்சிற்றம்பலப் பரிகலம்** என்று பெயரிட்டு மகிழ்ந்து தாயும் பிள்ளையும் கணவனுமாகத் தருமபுரம் வந்து வணங்கி அருள் பெற்றுச் சென்றனர். இப்படிப் பரிகலசேட நிகழ்ச்சிகள் இதற்கு முன்னும் பின்னும் சிலபல நிகழ்ந்ததுண்டு. **வேண்டுவோர் வேண்டுவன அருளும் ஆற்றல் பெற்றவர்களாகச் சைவ மடாதிபதிகள் திகழ்ந்தனர்** என்பதற்கு இவை எடுத்துக்காட்டு.

இவர்கள் காலத்தில் அடியார் திருக்கூட்டத்தில் தம்பிரானாக இருந்த ஒருவர் பிரிந்து சென்று அம்பர் மாகாளத்தில் **சொர்க்கபுர ஆதீனம்** என்றொரு ஆதீனத்தைப் புதிதாக நிறுவி அழகிய திருச்சிற்றம்பலதேசிகர் என்ற பெயருடன் அதன் குருமுதல்வராகத் திகழ்ந்தார்.

ஒன்பதாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு தேசிகர்

இவர்கள் காலத்தில் படிக்காசுப்புலவர் தருமபுர ஆதீனத்துத் தம்பிரான்களுள் ஒருவராகச் சிறந்து விளங்கினார். தருமபுர ஆதீனப் பூம்பொழிலில் பூனைகளும் கிளிகளும், பாம்புகளும் எலிகளும், குயில்களும் செம்போத்துகளும் ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கொண்டு தாமும் துன்புற்றுக் காண்பார்க்கும் துன்பம் விளைப்பதைக் கண்ணுற்ற இவர்கள் அவற்றின்மீது திருக்கடைக்கண் சாத்தி அவற்றின் அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தை அருளினார்கள். ஞானம் பெற்ற அவை பகைமை நீங்கி உறவாடின. இவர்களிடமும் உறவாடின, திருவடிகளில் அடைக்கலம் புகுந்தன. அவ்வஃ றிணை உயிர்களுக்கும் அவர்கள் தீக்கை செய்து நாளடைவில் உரிய காலத்தில் சிவகதியடையச் செய்தார்கள். **சித்தாந்த நிச்சயம்** என்றொரு சாத்திர நூல் இவர்களால் செய்யப்பெற்றது.

பத்தாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிகர்

ஒருநாள் இரவு நிலா வெளிச்சத்தில் சித்தர் ஒருவர் ஆகாயமார்க்கமாகச் சென்று கொண்டிருந்தார். ஆதீனத்திற்கு நேர்மேலே செல்லும்போது அவரது வான்வழிச் செலவு தடைப்பட்டது. திகைத்தார், இங்கு ஏதேனும் ஒரு சிறப்பு இருக்கவேண்டும் என்று கீழே நோக்கினார். கீழே ஆதீன நிலாமுற்றத்தில் அவருடைய நிழல் விழுந்தது. ஒருவர் நிழல் வீழ்வதைக்கண்ட குருமூர்த்திகள் நிழலை நோக்கிச் சுட்டு விரலால் வா என்றழைத்தார்கள். மேலே பறந்து கொண்டிருந்த சித்தர் மந்திரத்தாற் கட்டுண்டவர் போன்று குருமூர்த்திகள் திருமுன் வந்து இறங்கி வணங்கினார். பரவசமானார். சித்துகளும் ஒரு செருக்கைத் தருவதை உணர்ந்தார். ஆசாரியரிடம் தீக்கை பெற்று அடியார் குழாத்தில் சேர்ந்து கொண்டார். காயகற்பங்களை உண்டு பழகிய அவருக்கு ஆதீனத்தின் அறுசுவை உணவு ஒத்துக் கொள்ளவில்லை. உடல்நிலை வேறுபட்டது. அடியார் குறிப்பை உணர்ந்த தேசிகர் திருநீறளித்தார். அதனை அணியவே உடல்நிலை திருந்தி வலுப்பெற்றது. உடல் நிலை வலுப்பெற்ற பயன் குருபணிவிடை செய்தலே என்று குறிக்கொண்டு பணி விடை செய்து கொண்டிருந்து சில காலத்திற்குப்பின் சிவப்பேறெய்தினார். ஆதீனத்தில் சித்தர் வந்து இறங்கிய இடம் **சித்தர்கட்டு** என இன்றும் வழங்கப் பெறுகிறது.

இவர்கள் காசி யாத்திரை சென்று நெடுநாள் காசியிலேயே தங்கினார்கள். **1. காசி துண்டிராஜ கணபதி திருவருட்பா,** *2. காசி விசுவநாதர் திருவருட்பா, 3. காசி கேதாரநாதர் திருவருட்பா, 4. காசி விருத்தகாளேச்சுரர் திருவருட்பா, 5. காசி காலவைரவர் திருவருட்பா, 6.காசி தாரகப்பத்து, 7. காசி அன்னபூரணி திருவருட்பா, 8.காசி கேதாரகௌரி திருவருட்பா, 9.காசி பரகீரதியம்மை திருவருட்பா 10. காசி கதிர்காமவேலர் திருவருட்பா* எனப் பத்து தோத்திரச் சிறு நூல்களைப் பாடினார்கள். ஒவ்வொன்றும் ஒரு பதிகம். எல்லாவற்றுக்கும்

அவ்வம்மூர்த்திகளின் பெயரால் திருவருட்பா என்று பெயர். பத்தாவது குருமகாசந்நிதானம் சிவஞான தேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளிய **திருவருட்பாத் திரட்டு** என இவையனைத்தும் ஒரே நூலாகத் தருமபுர ஆதீனத்தில் வெளியிடப் பெற்றுள்ளன *(1958; 1972)*.

வள்ளலார் இராமலிங்க சுவாமிகளின் திருவருட்பாவுக்குத் திருவருட்பா எனப் பெயரிட்டிருப்பதை மறுக்கும் ஆறுமுக நாவலர், முன்னரே திருவருட்பா என்ற பெயரில் நூல்கள் உள்ளன, ஆதலின் அப்பெயரை வள்ளலார் பாடல்களுக்கும் வழங்குதல் பொருந்தாது என்றுகூறி, இச்சிவஞான தேசிகரின் காசித்திருவருட்பாத் தோத்திர நூல்களின் பெயர்களைத்தான் எடுத்துக்காட்டுகிறார். நாவலர்வாதம் எடுபடாதொழிந்தது.

இக்குருமூர்த்திகளிடம் அருள்பெற்றவர்கள் காசிவாசி தில்லைநாயகத் தம்பிரான், காவை அம்பலவாணமுனிவர், சைவ எல்லப்பநாவலர் முதலிய பலர். **இவர்கள் காலத்தில்தான்** *1720*-இல் **தில்லைநாயகத் தம்பிரான் திருப்பனந்தாளில் காசி மடத்தை நிறுவினார்.**

இவர்கள் காலத்திற்குமுன் ஆன்மார்த்த பூஜைமடம் மேலக்கோயில் என வழங்கப்படும் ஞானபுரீசுவரர் கோயிலில் அமைக்கப் பெற்றிருந்தது. இவர்கள் காலத்தில்தான் **இப்போதுள்ள பூஜைமடம்** ஆதீன மடத்தின் ஒரு பகுதியாகத் திருமாளிகைப் பத்தி, தொட்டிக்கட்டு, சுற்றுப் பிரகாரம் முதலியவற்றுடன் கருங்கற் கட்டிடமாகக் **கட்டப் பெற்றது.**

பதினொன்றாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிகர்

இவர்கள் காலத்தில் தஞ்சாவூர் அரசன் மாறுவேடம் பூண்டு வந்து இரந்து, சோறு பெற்று இவர்களது கருணைப் பெருக்கை அறிந்தான். கடவுள்இல்லை என்று இவர்களிடம் நாத்திகம் பேசிய வஞ்சகர் சிலர் மாகேசுவரபூஜையில் அளித்த நஞ்சுகலந்த பாலையும் உட்கொண்டு ஊறின்றி நலத்துடன் இருந்து அவர்களையும் திருத்தியருளினார்கள்.

பன்னிரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார தேசிகர்

தென்னாட்டு யாத்திரையின்போது, மகப்பேறின்றி வருந்திய ஒருவர் பரிகலசேடம் அருளவேண்ட, அது மாலைக் காலமாக இருந்ததால் மடைப்பள்ளியில் சிதறிக் கிடந்த அன்னத்தைப் பொறுக்கிவரச் செய்து அளித்தார்கள். அதன் பின் முத்துக்குமார பரிகலம் பிறந்தான்.

பதின்மூன்றாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்

கங்கை நீரைத் தருமபுரத்திற்கே கொண்டுவரச் செய்து நீராட விரும்பிய இவர்களுக்கு, அடியவர் கூட்டத்தில் ஒருவராகிய விருத்தாசலத் தம்பிரான் திருவாங்கூருக்குச் சென்று அம்மன்னரின் உதவியால் காசியிலிருந்து கங்கை நீரைத் தருமபுரத்திற்குக் கொண்டுவரச் செய்தார். இராமநாடகம் அருணாசலக்கவிராயர் முதலியோர் இவரது அவையிற் சிறந்து விளங்கினார்கள்.

பதினான்காவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கந்தப்ப தேசிகர்

தென்னாட்டு யாத்திரையில் மழையில்லாதபோது மழை பெய்யச் செய்தார்கள் என்றும், ''சைவசமயம் சமயமெனில்'' என்ற பாடல் இவர்கள் பாடியது என்றும் கூறுவதுண்டு.

பதினைந்தாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர்

இவர்கள் 13-வது குருமகாசந்நிதானத்தின் ஆட்சிக் காலத்தில் கங்கை நீரைத் தருமைக்குக் கொணர்ந்த அருட்பணியில் ஈடுபட்ட விருத்தாசலத்தம்பிரான் சுவாமிகளேயாவர். இவர்கள் தம்பிரான் சுவாமிகளாக இருந்த காலத்தில் ஏற்பட்ட திருவாங்கூர் மன்னரது தொடர்பு, இவர்கள் மகாசந்நிதானமாக அருளாட்சி ஏற்றபின் பன்மடங்கு வளர்ந்து பெருகிற்று. தென்னாட்டிலும் திருவாங்கூர் சமஸ்தான

ஆட்சிப் பகுதிகளிலும் ஆதீனத்திற்கு நிலங்களும் பிற சொத்துகளும் பெருகின.

பதினாறாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிகர்

இவர்கள் காலத்தில், திருவாவடுதுறை ஆதீன மகா வித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், தருமபுரத்திற்கு வந்து இவர்களைத் தரிசித்தார்கள். இவர்களின்மீது பிள்ளையவர்களால் பாடப்பெற்றது சச்சிதானந்ததேசிகர் மாலை. இவர்கள் காலத்தில் ஆதீன மடாலயத்தில் பல இடங்கள் கருங்கற் பணியாகச் செய்யப் பெற்றன. 30-11-1973-இல் இவர்கள் சிவப்பேறு பெற்றார்கள்.

பதினேழாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிகர்

இவர்கள் காலத்தில் திருப்பனந்தாள் **காசிமடம் அதிபர் நியமனம் பற்றி முக்கிய வழக்கு** ஒன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் நடந்து தருமபுர ஆதீனத்தின் பக்கம் தீர்ப்பளிக்கப் பெற்றது. தீர்ப்பளித்த நீதிபதிகள் இருவருள் புகழ்பெற்ற ஜஸ்டிஸ் முத்துசாமி ஐயர் ஒருவராவார்.

திருப்பனந்தாள் காசிமடம் தொடக்க முதலே தருமபுர ஆதீனத்தின் சீடமடம். அதற்குத் தருமபுர ஆதீன அடியவர் கூட்டத்திலிருந்தே அதிபர்களை அளிப்பது தொடக்க கால முதல் பின்பற்றப் பெற்று வரும் வழக்கம். இவர்கள் காலத்தில் திருப்பனந்தாள் காசிமடத்தில் 14-ஆம் பட்டம் அதிபராக இருந்த இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள், வழக்கத்துக்கு மாறாகத் திருவாவடுதுறையிலிருந்து குமாரசாமித் தம்பிரான் என்பவரைத் தமக்கு வாரிசாக நியமித்தார். (1880) இதனை எதிர்த்து இவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள் (1881). வழக்கு தருமபுர ஆதீனத்திற்கு வெற்றியாக முடிந்தது (1887). திருப்பனந்தாள் காசிமடத்து அதிபராக நியமனம் பெறுபவர்கள் தருமபுர ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்களில் ஒருவராக இருக்கவேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பெற்றது.

பதினெட்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிகர்

இவர்கள் காலத்தில் ஆதீன வளாகத்தில் கட்டிடத் திருப்பணிகள் பல செய்யப்பெற்றன. கொள்ளிடம் ஆற்றில் உடைப்பெடுத்த வெள்ளச்சேதத்தால் நிலவருவாய் குன்றியதால் கடன்வாங்கும் நிலை ஏற்பட்டது. சில காலத்திற்குப்பின் காசி யாத்திரை சென்று 30-03-1906-இல் திருப்பனந்தாளுக்கு வந்துசேர்ந்து அங்கேயே தங்கியிருந்து 01-12-1906-இல் திருப்பனந்தாளிலேயே சிவப்பேறுற்றார்கள்.

பத்தொன்பதாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசகதேசிகர்

வழக்குகளாலும், வருவாய் குறைவாலும் இவர்கள் காலத்தில் கடன் தொல்லைகள் அதிகமாயின.

இருபதாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிகர்

இவர்கள் காலத்திலும் கடன் தொந்தரவுகள் தொடர்ந்தன. சில கடன்கள் தீர்ந்தன.

இருபத்தொன்றாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிகர்

இவர்கள் காலத்தில் கடன்களின் பெரும்பகுதி தீர்க்கப்பெற்றன. நிலங்கள் மீட்கப்பெற்றன. ஆட்சியேற்ற சில நாளைக்குள்ளேயே இவர்கள் சிவப்பேறடைந்தார்கள்.

இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசகதேசிகர்

கோயில் திருப்பணியில் விருப்பமிக்க இவர்கள் காலத்தில் பல திருப்பணிகளும் குடநீராட்டு விழாவும் செய்யப்பெற்றன. கடன்களில் பெரும்பகுதி தீர்ந்தது. நிலங்கள் மீட்கப்பெற்றன. புதிதாக நிலங்களும் வாங்கப் பெற்றன. நிர்வாகத்தில் சிக்கனம் சீர்திருத்தம் பல செய்த

இவர்கள் எதிர்பாராத நிலையில் 29-10-1923-இல் சிவப்பே றெய்தினார்கள்.

இருபத்துமூன்றாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகர்
(30.10.1923 - 26.06.1933)

இவர்கள் இளமையிலேயே துறவு பெற்றவர்கள். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் கல்வி பயின்றவர்கள். 16-வது குருமூர்த்திகளுக்குப்பின் தென்னாட்டு யாத்திரையாக குருமூர்த்திகள் யாரும் எழுந்தருளவில்லை என்ற குறையை நீக்கும் வகையில் இவர்கள் நாடு முழுவதும் விரிவாக யாத்திரை செய்தார்கள். திருச்சிராப்பள்ளியில் டி.எம். நாராயணசாமி பிள்ளை, லால்குடி பரமசிவம் பிள்ளை, ஸ்ரீரங்கம் சிங்கம் ஐயங்கார், ராவ் பகதூர் டி.வி.கிருஷ்ணசாமி ஐயர் முதலிய பெருமக்களாலும், மதுரையில் மதுரை ஆதீனகர்த்தர், பி.டி.இராசன், தென் மாவட்டங்களில் திருவாவடுதுறை ஆதீனக் கிளை மடங்கள் உள்ள இடங்களில் அவ்வாதீன அடியவர்களாலும், பிரான் மலையில் குன்றக்குடி திருவண்ணா மலை ஆதீனகர்த்தராலும் வரவேற்கப் பெற்றார்கள். அங்கங்கே பட்டணப்பிரவேசம் மாகேசுவர பூசை முதலிய பல சிறப்புகளுடன் யாத்திரை நிறைவேறித் திரும்பியபோது மயிலாடுதுறையில் நகரப் பெருமக்கள் வரவேற்பிதழ் வாசித்தளித்தனர்.

யாழ்ப்பாணம் சுவாமிநாத பண்டிதர் இவர்கள் காலத்தில் ஆதீன வித்வானாக விளங்கினார். கும்பகோணம் மகாமக காலத்தில் சைவசித்தாந்த மாநாடு ஒன்று கூட்டப் பெற்றது. ஆதீன வித்வான்களாக வித்வத்சிரோமணி ப.அ.முத்துத் தாண்டவராய பிள்ளை, அவர் மகனார் ப.மு.சோமசுந்தரம் பிள்ளை எம்.ஏ.எல்.டி, காழி சிவ.கண்ணுசாமி பிள்ளை பி.ஏ. ஆகியோர் நியமிக்கப்பெற்றுச் சிறந்த நூற் பணிகளைச் செய்தனர். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஜஸ்டிஸ் ராமேசம், சர்.சி.பி.இராமசாமி ஐயர், பி.டி.இராசன் முதலிய பெருமக்கள் ஆதீனத்துக்கு அழைக்கப்பெற்று, வந்து தரிசித்துச் சிறப்பித்தார்கள்.

30-10-1923 இல் *23*-ஆவது குருமூர்த்திகளாக அருளாட்சியை ஏற்ற இவர்கள் பத்தாண்டு காலம் நல்லாட்சி நடத்தி, அடுத்த *24*-ஆவது குருமூர்த்திகளாகச் சண்முகதேசிகஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளுக்கு முறைப்படி அபிடேகம் செய்வித்துப் பீடத்தில் அமர்த்தி *26.6.1933*-ல் சிவப்பேறடைந்தார்கள்.

இருபத்துநான்காவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிகர்
(26.06.1933-20.05.1945)

இவர்களது ஆட்சிக்காலம் ஆதீன வரலாற்றில் குறிப்பிடத் தக்க **பெருஞ்சிறப்புடையது. வளர்ச்சி மிகுதி.**

200 மொழிகளில் *10,000* (பத்தாயிரம்) அரிய நூல்களைக் கொண்ட பெரிய **நூல் நிலையம்** இவர்களால் நிறுவப்பெற்றது (*1940*). *1941*ஆம் ஆண்டு ஒரு பொன்னான ஆண்டு. அவ்வாண்டில் **வேத சிவாகம பாடசாலை, தேவார பாடசாலை,** குருஞானசம்பந்தர் **தொடக்கப்பள்ளி,** ஞானசம்பந்தம் **பதிப்பகம் (அச்சகம்),** ஞானசம்பந்தம் **திங்களிதழ்** ஆகியவை தொடங்கப் பெற்றன.

வேத ஆகமப் பயிற்சிக்கு, சிவாசாரியர்களை முறையாக உருவாக்க வேத சிவாகம பாடசாலை, திருமுறைப் பயிற்சிக்கு ஓதுவாமூர்த்திகளை முறையாக உருவாக்கத் " தேவார பாடசாலை", உள்ளூரிலும் சுற்றுப்புற ஊர்களிலும் உள்ள பிள்ளைகளின் பள்ளிப் படிப்பிற்கு, உலகியற் கல்விக்கு, ஒரு தொடக்கப்பள்ளி; அதுவும் ஆதீன நிறுவனர் குருமுதல்வர் குருஞானசம்பந்தர்பேரால்; தோத்திர சாத்திரங்களை, சமய நூல்களை, பதிப்பித்து அச்சிட்டு வெளியிட'ஒரு பதிப்பகம், அச்சகம், அதுவும் ஞானசம்பந்தர் பேரால்; கட்டுரைகளையும் செய்திகளையும் அவ்வப்போது வெளியிட " ஞானச்ம்பந்தம் " என்றே ஒரு திங்களிதழ்; திட்டமிட்டே தொடங்கப்பெற்ற பணிகள். அதுவும் எல்லாம் ஒரே ஆண்டில், இத்தொடக்கங்களுக்குப்பின் ஆதீனப் பணிகள் மிகவும் விரியலாயின. அதே ஆண்டில் (*1941*-இல்) **மெய்கண்டான் சித்தாந்த மாநாடு** நான்கு நாள் மாநாடாக மிகச்சிறப்பாக நடத்தப்பெற்றது. அப்படி ஒரு மாநாடு

அதற்கு முன்னும் நடந்ததில்லை, அதற்குப் பின்னும் நடந்ததில்லை.

மெய்கண்டான் சித்தாந்த மாநாடு - 1941

67 ஆண்டுகளுக்குமுன் 1941-இல் தருமபுர ஆதீனத்தில் நான்குநாள் மாநாடாக நடைபெற்றது. சைவஆதீனங்களின் வரலாற்றில் இதுவே முதல் மாநாடு. முதன்முதலாக நடந்த மாநாடு.

ஆவணி மூல விழாவை ஒட்டி நடந்ததாதலின் "மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு, ஆவணி மூலத் திருமுறைத் திருநாள்" என்று பெயரிடப்பெற்றது.

1941 ஆகஸ்டு 28; 29; 30; 31 வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நான்கு நாள் மாநாடாக நடைபெற்றது.

முதல் நாள்	28-8-41	சமயாசாரியர் சந்தானாசாரியர் வழிபாடு
2ஆம் நாள்	29-8-41	மாநாடு தொடக்கம். சிவஞானபோதம் முதல் ஆறு சூத்திரக் கட்டுரைகள் பேசுதலும் படித்தலும்
3ஆம் நாள்	30-8-41	மாநாடு. சிவஞானபோதம் பின் ஆறு சூத்திரக் கட்டுரைகள் பேசுதலும் படித்தலும்
4-ஆம் நாள்	31-8-41	ஆவணி மூலத் திருமுறைத் திருநாள், 12 திருமுறைகளையும் பற்றிச் சொற்பொழிவு, இரவு திருமுறை ஊர்வலம்.

முதல்நாள் தலைமை - காசிவாசி சிவஸ்ரீ ஈசானசிவாசாரியார்

2-ஆம் நாள் தலைமை - கோவைகிழார் சி.எம்.இராமச்சந்திரஞ் செட்டியார், இந்து சமய அறநிலைய போர்டு கமிஷனர்.

3-ஆம் நாள் தலைமை - கோவைகிழார் அவர்களே தலைமை

4-ஆம் நாள் தலைமை - கோவை சி.கே.சுப்பிரமணிய முதலியார்

சிவஞானபோதச் சொற்பொழிவுகள்

முதல் சூத்திரம் - முத்து சு.மாணிக்கவாசக முதலியார்
க.வச்சிரவேல் முதலியார்
பாரிப்பாக்கம் கண்ணப்பமுதலியார்
பூ.சமரபுரி முதலியார் (தாம்பரம்)

2-ஆம் சூத்திரம் - திருநெல்வேலி ஏ.முத்தையாபிள்ளை

3-ஆம் சூத்திரம் - சேலம் அ.வரதஞுஞ்சையபிள்ளை

4ஆம் சூத்திரம் - ச.தண்டபாணிதேசிகர்

5;6ஆம் சூத்திரங்கள் - திருநெல்வேலி ஏ.முத்தையா பிள்ளை

7ஆம் சூத்திரம் - திருநெல்வேலி மா.வெ.நெல்லையப்பபிள்ளை

8ஆம் சூத்திரம் - திருவையாறு இராம. கோவிந்தசாமி பிள்ளை,கீ.இராமலிங்க முதலியார். (விழுப்புரம் நகராட்சி ஆணையர்)
குளித்தலை அரங்கசாமி அய்யர்

9ஆம் சூத்திரம் - ஔவை.சு.துரைசாமி பிள்ளை

10ஆம் சூத்திரம் - துடிசைகிழார் அ.சிதம்பரனார்
திருவையாறு கு.சோமசுந்தரதேசிகர்

11ஆம் சூத்திரம் - வச்சிரவேல் முதலியார்

12ஆம் சூத்திரம் - வயிநாகரம் வே.இராமநாதன் செட்டியார்

இரவு 8 மணிக்கு ''சிவகருணை'' இசைச் சொற்பொழிவு சென்னை, திருப்புகழ்மணி டி.எம்.கிருஷ்ணசாமி ஐயர்.

பன்னிரு திருமுறைச் சொற்பொழிவுகள்

முதல் திருமுறை - ம.பாலசுப்பிரமணிய முதலியார்

2-ஆம் திருமுறை - வேங்கடாசலம் பிள்ளை

3-ஆம் திருமுறை - க.வச்சிரவேல் முதலியார்

4-ஆம் திருமுறை - வை.மு. சண்முகதேசிகர்

5-ஆம் திருமுறை - சி.மாணிக்கத் தியாகராஜ பண்டிதர் (யாழ்ப்பாணம்)
6-ஆம் திருமுறை - ரா.ஷண்முகசுந்தரம் செட்டியார்
7-ஆம் திருமுறை - ச.தண்டபாணி தேசிகர்
8-ஆம் திருமுறை - ச.சச்சிதானந்தம் பிள்ளை
9-ஆம் திருமுறை - ச.வையாபுரிப் பிள்ளை
10-ஆம் திருமுறை - மு.அருணாசலம் பிள்ளை
11-ஆம் திருமுறை - டி.கே.சிதம்பரநாத முதலியார்
12-ஆம் திருமுறை - வயிநாகரம் வே.இராமநாதன் செட்டியார் அ.மு.சரவணமுதலியார்

சேக்கிழார் திருமுறைமாட்சி - சோமசுந்தரனார் (சென்னை)

அப்பரடிகளின் அருட்டிறம் - ஆர். பஞ்சநதம்பிள்ளை (திருச்சிராப்பள்ளி)

திருமுறைகளின் பெருமை - கா.சுப்பிரமணியபிள்ளை

பத்தாந்திருமுறையில் மருத்துவ நூல் நுட்பங்கள் - சித்த மருத்துவ நிபுணர் எஸ். ஜி. சுந்தரம் பிள்ளை

இரவு 10 மணிக்குத் திருமுறைத் திருவுலாக் காட்சி

சென்னை மாநிலம் முழுமையும் விளம்பரம் செய்யப் பெற்று மாநாட்டு வேலைகள் நான்கு மாதங்களாக நடைபெற்றன என்று சைவ சித்தாந்தப் பெருமன்றச் செயலாளர் திரு ம. பால சுப்பிரமணிய முதலியார் பெருமன்ற இதழ் "சித்தாந்த"த்தில் எழுதியுள்ளார்.

1. வரவேற்பு
2. உபசரணை
3. திருக்கோயில், திருமடம் (வழிபாடு)
4. சரக்கறை:-
    (அ) அரிசி
    (ஆ) மளிகை
    (இ) காய்கறி, பழம்
    (ஈ) குடிநீர் வகை(Soda, etc.)

5. பித்தளை ஏனங்கள்
6. வெள்ளி ஏனங்கள்
7. வெந்நீரறையும், குடிநீர் தேக்கலும்
8. ஆற்றங்கரையில், திருநீறு, பற்குச்சிகள், பற்பொடிகள், எண்ணெய், சீயக்காய்ப்பொடி முதலியன வழங்கல்
9. சமையல் மேற்பார்வை :-
   (அ) சைவக்கட்டு.
   (ஆ) பிராமணக்கட்டு.
10. காலை மாலை சிற்றுண்டி
11. பந்தி வினாதல்:-
   (அ) சைவக்கட்டு
   (ஆ) பிராமணக்கட்டு

(9–11: ஒவ்வொன்றிலும் காலை, மாலை சிற்றுண்டிகள் சாப்பாடு இவைகளுக்குத் தனித்தனிக் குழுவினர்.)

12. சுகாதாரம்
13. பற்றுத் தேய்த்தலும், அலகிட்டு மெழுக்கிடுதலும்
14. பாதுகாவல்
15. பணியாளர் கூட்டம் (அவர்களின் உணவு உட்பட)
16. வண்டி வாகனாதிகள்
17. ஒலிபரப்பி, மின்னொளிகள்
18. நூல் நிலையம்
19. உசாவு நிலையம்
20. மகாநாட்டுப் பந்தலில் உபசரிப்பு
21. திருமுறை ஊர்வலத்தில்:-
   (அ) ஒளி விளக்கங்களும், எடுபிடிகளும்
   (ஆ) தீவர்த்திகள்
22. பூசைத் திருப்பணிக் குதவுதல்
23. ஒளி விளக்கங்கள்(Gas-light)
24. பொது மேற்பார்வை

என இருபத்துநான்கு குழுக்கள் பணியாற்றின என்று மாநாட்டு நிகழ்ச்சிகள் நூலில் கூறப்பெற்றுள்ளது.

வரவேற்புக்குழுத்தலைவர் - இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள்

உபசாரக்குழுத் தலைவர் - அருணந்தித்தம்பிரான் சுவாமிகள்

பொதுச் செயலாளர் - மௌன சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள்

ஏற்பாடுகள்

தமிழ் ஆங்கில நாளிதழ் வார இதழ்களில் விளம்பரங்கள் வெளியிடப்பெற்றன. சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் திங்களிதழ் சித்தாந்தத்தில் மாநாட்டு அழைப்பிதழும் நிகழ்ச்சி நிரலும் முழுமையாக வெளியிடப்பெற்றது. ஆயிரக்கணக்காக அச்சிட்டுப் பலர்க்கும் மாநிலம் முழுதும் அனுப்பப்பெற்றது. தென்னிந்திய இருப்புப் பாதைத் துறையினர் ஆதீன வேண்டுகோளுக்கிணங்கப் பெரும்பாலான இருப்புப்பாதை நிலையங்களில் சுவரொட்டிகளை ஒட்டி விளம்பரப்படுத்தி உதவினர். அண்மையிலுள்ள பல நிலையங்களில் துண்டு விளம்பரங்களை ஒவ்வொரு வண்டி வந்ததும் கொடுக்க ஏற்பாடாகியிருந்தது. மயிலாடுதுறைச் சாலையில் ஆதீன வளாகத்தின் புகுமுகத்தில் பெரியதோர் அலங்கார வளைவு வேலைப்பாடுமிக்கதாக அமைக்கப்பட்டது. அதனருகே பெரிய எழுத்துகளில் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம்

காகம் உறவு கலந்துஉண்ணக்
கண்டீர்; அகண்டா காரசிவ
போகம் எனும்பே ரின்பவெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்,
ஏக உருவாய்க் கிடக்குது ஐயோ;
இன்புற் றிடநாம் இனிஎடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேர வாரும் ஜகத்தீரே!

என்னும் தாயுமானவர் பாடல் பொறிக்கப் பெற்றிருந்தமை சாலையில் போவோர் வருவோரை இம்மாநாட்டைக் கண்டு களித்துக் கேட்டு இன்புறக் கூவி அழைப்பதுபோல் அமைந்திருந்தது. அதிலிருந்து மாநாட்டுக் கொட்டகை வரையிலும் இருமருங்கிலும் மகர தோரணங்கள் கட்டப் பெற்றிருந்தன. நடுநடுவே தோத்திரப் பாக்களமைந்த வளைவுகள் அமைக்கப்பெற்றிருந்தன.

மாநாட்டுப் பந்தலின் முகப்பு மாளிகைபோல் கோபுரம்போல் சிறந்த வேலைப்பாடுகளுடன் உயர்த்திக் கட்டி அமைக்கப்பெற்றிருந்தது.

ஆதீன நிறுவனர் குருஞானசம்பந்தர் ஆலயத்துள் ஆயிரக்கணக்கான அன்பர்கள் அமைதியாக இருந்து கேட்க வசதியாக ஒரு பெருங்கொட்டகை அமைக்கப் பெற்றிருந்தது. அதில் மேற்கட்டிகளும் தொங்கல்களும் கட்டப் பெற்றிருந்தன. மின்னொளி விளக்குகள் பல ஆங்காங்கே ஒளிர்ந்தன. பெருங் கூட்டத்தினர் நன்கு கேட்டு உணரத்தக்கவாறு இரண்டு இடங்களில் ஒலிபரப்பிகள் அமைக்கப்பெற்றிருந்தன.

மாநாட்டுத் தலைவர் காசிவாசி ஸ்ரீ ஈசான சிவாசாரியார் அவர்கள் மாநாட்டுக்கு ஒரு மாதத்திற்கு முன்பே வரவழைக்கப்பட்டிருந்தமையால் அவர்கள் தங்குவதற்கு ஒரு புதிய வீடு ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. தலைவர்கள் கோவைகிழார் . இராப்பகதூர் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், சிவக்கமணி சி.கே.சுப்பிரமணிய முதலியார் ஆகிய இருவரும் தங்குவதற்கு ஆதீன தேவார பாடசாலை ஒதுக்கப்பட்டிருந்தது. ஏனைய அன்பர்கள் தங்குவதற்கு மெய்கண்டான் நிலையம் சாந்த நிலையம் கட்டிடங்கள் பயன்பட்டன. மற்றும் பல விடுதிகளும் ஏற்பாடாயின. எல்லா இடங்களிலும் மிக்க ஒளியுள்ள மின்விளக்குகளும் காற்றுலாவத்தக்க உயரிய பந்தல்களும் பொலிவளித்தன. இருக்கவும் படுக்கவும் நாற்காலிகளும் மேசைகளும் விசிப்பலகைகளும் வேண்டிய அளவு போடப்பட்டிருந்தன. சமக்காள விரிப்புகளும் பாய்களும் விரிக்கப்பட்டிருந்தன. படுப்பதற்குப் பாயுந் தலையணையும் உதவப்பெற்றன.

மடத்திற்கு முன்புறமுள்ள திருக்குளத்தின் கீழ்புறம் ஏறத்தாழ ஐந்நூறு பேர்களுக்குமேல் ஒரே காலத்தில் அமர்ந்து உணவு கொள்ளத்தக்க ஒரு பெரிய உணவுச் சாலை அமைக்கப்பட்டிருந்தது. இதையொட்டி எல்லா வசதிகளுடனும் பெரிய அளவில் சமையல் விடுதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவை செங்கல் பரப்பிச் சிமெண்ட் பூசி நல்ல தளவரிசையுடன் அமைக்கப்பெற்றிருந்தன. உணவுக்கூடமும் சமையற்கட்டும் குளக்கரையில் அமைக்கப்

பெற்றிருந்தபோதிலும் சுகாதாரங் கருதி ஆழ்குழாய்க் கிணறுகள் (Hand Pumps) இறக்கப் பெற்றிருந்தன.

ஸ்ரீ தருமபுரீசுவரர் ஆலயத்தின் தென்வெளித் திருச் சுற்றில் சிற்றுண்டிச் சாலை ஒரு பெருங்கொட்டகையாக அமைக்கப்பெற்று அதில் பிராமண போஜனத்திற்கு ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது.

காலை 7 மணியிலிருந்து 8 மணிக்குள் சிற்றுண்டி, குடிநீர் வகைகளும் (Coffee, Tea, etc.,) , பகல் 12-30 முதல் 1-30 மணிக்குள் பாயச பலகாரங்களுடன் அறுசுவை உண்டியும், இடைவேளை 3 மணிமுதல் 3-30 மணிக்குள் சிற்றுண்டியும் குடிநீரும் (Coffee, Tea, etc.,) ,இரவு 9 மணிக்கு நல்லுணவும் செவ்வனே வழங்கப்பட்டன. இரவில் ஆவின் பாலும் வேண்டுவோர்க்குக் கொடுக்கப்பட்டது. "சோறு மணக்கும் மடங்களெலாம்" என்ற வாக்கின் உண்மையை மாநாட்டில் கண்டுகொண்டதாக அன்பர்கள் சொல்லிச் சொல்லிக் களித்தார்கள்.

நீராடுவதற்குக் காவித்துறையில் ஆங்காங்கே அதிகமாகக் கற்களிட்டு வைக்கப்பட்டிருந்தன. பற்குச்சி, பற்பொடி வகைகள் வழங்கப்பெற்றன. எண்ணெய் முழுக்குச் செய்வோருக்கு எண்ணெய் வகைகள் சீயக்காய்ப் பொடி முதலியனவும் வழங்கப்பெற்றன. மயிர் வினைஞர்களும் வண்ணார்களும் அமர்த்தப்பட்டிருந்தனர். மயிர் வினைக்காக ஒரு தனியிடமும் அமைக்கப்பட்டிருந்தது. இவைகளெல்லாம் இலவசமாகவும் முகமனுடன் கவனித்து நடத்த ஏற்பாடாயிருந்தன.

வெந்நீரில் குளிப்போர்க்குத் தனியாயும் மேற்சொன்ன எல்லா வசதிகளுடனும் இடம் அமைத்து அதனைக் கவனிக்கத் தனிச் சிப்பந்திகளும் அமர்த்தப்பட்டிருந்தனர்.

குளித்தவுடன் அங்கங்கே திருநீறும் நறுஞ்சந்தனமும் வழங்க ஏற்பாடாகியிருந்தது.

சிவ பூசகர்களாகிய பேரன்பர்களுக்கு, பூசைப் பலகைகளும் மலர்களும், சந்தனம், தூபம், தீபம் முதலியனவும் நைவேத்திய வகைகளும் பிறவும் அவரவர் இருக்கைகளிலேயே உரிய காலத்தில் கொண்டுதரத்தக்க திருப்பணியாளர்கள் நியமிக்கப் பெற்றிருந்தனர்.

எங்கனும் தூய காற்று உலாவத்தக்க வகையில் உயரிய பந்தல்களும் பசுந்தொங்கல்களும் குளக்கரையில் மணல் மேடைகளும் அம்மேடைகளில் இடப்பட்ட விசிப் பலகைகளும், கூட்டங்களிற் கைவிசிறிகளும் பிற வசதிகளும் ஏற்படுத்தப்பெற்றன.

மலசலம் கழித்தற்கும் தனியாக ஆங்காங்கு மறைவுகள் செய்வித்து ஒவ்வோர் இடத்திலும் இரு பணியாளர், ஒருவர் தண்ணீர் தேக்கவும், மற்றொருவர் ஒவ்வொருவரும் வந்து சென்ற பின்னர் தூய்மை செய்து மணல் பரப்பி மருந்து தூவுதற்கும் நியமனம் செய்யப்பெற்றனர்.

மாநாடு கூடுவதற்கு முன்பே கற்சாலைத் திருப்பத்தி லிருந்து காவிரிக்கரை வரையிலும், மற்றும் ஊரிலுள்ள வீதிகளையும், நடப்புக்களையும் சமஞ்செய்து செப்பனிட்டு மணல் பரப்பப் பட்டது. வீதிகளை நாடோறும் இருமுறை துப்புரவு செய்து தண்ணீர் தெளிக்கவும் பிற வசதிகளை மேற்கொண்டற்கும் தக்க சிப்பந்திகள் நியமிக்கப் பெற்றனர். பொதுவாக எல்லா இடங்களிலும் மாசு மறுவின்றி அடுத்தடுத்துத் தூய்மை செய்வதில் மிக விழிப்பாக இருக்கும் படித் திட்டப்படுத்தப்பட்டது. குளங்கள் பலவிருந்தும் சுகாதாரங் கருதிக் குழாய்க் கிணறுகள் நிறுவப்பட்டன.

மயிலாடுதுறை ஜங்ஷன், மயிலாடுதுறை டவுன் ஆகிய இரண்டு ரயில் நிலையங்களிலும் வேண்டிய அளவுக்கு வண்டி வசதிகள்செய்யப்பட்டன. திரும்பச் செல்வோர்க்கும் அவ்வசதிகள் அளிக்கப்பெற்றன. வேண்டும்போது உந்து வண்டிகளும்(Motor Cars) பயன்பட்டன.

வெளியூர் அன்பர்கள் தகவலுக்காக விசாரணை அலுவலகம் (Enquiry Office) அமைக்கப்பட்டது. அன்பர்களுக்கு வரும் கடிதங்களை அவரவர்க்கு சேர்ப்பித்தலோடு, அவர்கள் எழுதும் கடிதங்களையும் அஞ்சலிற் சேர்ப்பித்தலுஞ் செய்து, எழுதுவதற்குரிய எழுதுகோல், தாள்கள் முதலியன உதவ இரு செயலாளர்களும், பணியாளர்களும் சில மிதிவண்டிகளுடன் (Bicycles) அமர்த்தப்பட்டிருந்தனர். அஞ்சல் தலைகளும் உறைகளும் கடிதங்களும் கூட உதவப்பட்டன. செய்தித்தாள்கள் படிக்க விரும்புவோர்க்கு நாள், கிழமை, திங்கள் வெளியீடுகள் (ஆங்கிலம், தமிழ்) இவ்வலுவலகத்தில் வழங்கப்பட்டன.

மாநாடு நிகழ்வதற்கு முன்னரும் நிகழ்ந்த பின்னரும் செய்தித்தாள்கள் இதழ்கள் பல மாநாட்டைப் பாராட்டி எழுதின. நவஇந்தியா *(17-8-41)*, சுதேசமித்திரன் *(31-8-41)*, The Mail *(31-8-41)*, சுதேசமித்திரன் *(3-9-41)*, சித்தாந்தம் *(செப்டம்பர் 1941)*, சுதேசமித்திரன் *(4-9-41)*, The Hindu *(4-9-41)*, நவஇந்தியா *(7-9-41)*, பாரததேவி *(9-9-41)*, நவஇந்தியா (விஷு , புரட்டாசி, 5). பாரதமணி (17-10-41).

நாடெங்குமுள்ள பெரியோர்கள் அறிஞர்கள் பலர் பாராட்டுக் கடிதங்களும் வாழ்த்துக் கடிதங்களும் எழுதினர்.

மாநாட்டில் கலந்துகொண்டு சென்னைக்குத் திரும்பிய ரசிகமணி டி.கே.சி., ''ஆதீனத்தில் நடந்த சைவ மகாநாடு பற்றித் தமிழ்நாடு முழுவதும் உத்ஸாகமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்------------------ வசதிகளும் மற்ற ஏற்பாடுகளும் ரொம்ப அருமையாய் இருந்தன, வந்தவர்கள் எல்லாரும் ஒரேயடியாய் அதிசயித்து அதிசயித்துப் புகழ்ந்தார்கள் -------------- நிச்சயமாகச் சொல்லலாம் தமிழுக்கும் சைவத்துக்கும் புத்துயிர் உண்டாய்விட்டது என்று. மகாசந்நிதானம் எவ்வளவோ சிரமம் எடுத்து மாநாடு நடக்கும்போதெல்லாம் அலங்கரித்த சிறப்பை எளிதில் பாராட்டிவிடமுடியாது ''என்று ஆதீனத்திற்குக் கடிதம் எழுதினார்.

நவஇந்தியா இதழ், "சைவ உலகம் தூக்கத்தினின்றும் விழித்துக்கொண்டது..............ஆதீனப் பணியாளர்கள் வந்தவர்களுக்கு எது தேவை என்பதை உபசரிப்பதில் கண்காணிப்பாய் இருந்தனர். ஒவ்வொருவருக்கும் விசிறி கொடுக்கப்பட்டிருந்தது. வெந்நீர் அறை ஒன்று அமைத்து நீராடுவதற்கும் பல் துலக்குவதற்கும் வேண்டிய கருவிகளுடன் பணியாட்கள் எதிர்நோக்கி நின்றனர். உணவுச்சாலை ----------- தங்குவதற்குத் தனி இடங்களும் பொது இடங்களும் ---------இவைகளைப் பற்றியெல்லாம் நாம் மகிழ்ச்சியடையவில்லை.--------**சொற்பொழிவுகளை**------- **அச்சிட்டு வெளியிட்டது மிகமிகப் பயனுள்ளதாகும்.** --------- **இவைகளையெல்லாம் பார்க்கிலும் நாம் ஆச்சரியப்படும் பெரும் காரியம்** ஒன்று இருக்கிறது. அதுவென்னவென்றால் **சொற்பொழிவுகள் ஒவ்வொரு நாளும் எட்டுமணி நேரத்திற்குக் குறைவில்லாமல் நடந்தது. ஒவ்வொரு நாளும் அவ்வெட்டு மணி நேரமும் மகாசந்நிதானம் தனி ஆசனத்தில் சொற்பொழிவு மண்டபத்தில் வீற்றிருந்து உடல் நிலையை சிறிதும் பொருட்படுத்தாது** அடியார்களுக்கு உணர்வை அளிப்பதில் சனகாதிகளுக்கு நம் முழுமுதற்கடவுள் இருந்து காட்டிய காட்சியைப்போல் சந்நிதானம் இருந்து **காட்டிய கருணைத் திறத்தைச் சைவ நன்மக்களும் தமிழ்மக்களும் மறக்கவேமாட்டார்கள்.**------------------------ இவ்விழாவை அணிபெற நடத்திய திறமை மகாநாட்டின் பொது அமைச்சர் மௌன ஸ்ரீ-ல-ஸ்ரீ சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகளைச் சார்ந்தது என்பதை வாய்கூசாமல் சொல்கிறோம் " என்று எழுதியது. - நவஇந்தியா, விஷு ஆு புரட்டாசி மீ 5உ

அனைத்துச் சொற்பொழிவுகளையும் முன்னரே அச்சிட்டு வைத்து, அவையோர் அனைவருக்கும் சொற் பொழிவுகளின்போது வழங்கப்பெற்ற திறம். ஒவ்வொரு நாளும் எட்டுமணி நேரம் சொற்பொழிவு மேடையில் சந்நிதானம் வீற்றிருந்தருளிய திறம் ஆகிய இவ்விரண்டும் உண்மையிலேயே பெரும் பாராட்டுக்குரியவை.

தமிழ்நாட்டில் சைவ ஆதீனங்களின் வரலாற்றில் இதுவே முதல் மாநாடு, முதன்முதலாக நடந்த மாநாடு எனலாம். தேசிய விடுதலைப் போராட்ட காலம். இந்திய நாடெங்கும் ஆங்காங்கே காங்கிரஸ் மாநாடுகள் சிறப்பாக நடந்தன. அவற்றின் தாக்கம் போலும் தருமபுர ஆதீனத்தின் இச் சைவ சித்தாந்த மாநாடு.

"--------ஆதீனங்கள் செய்யவேண்டிய இச்செய்கையைப் **பல காலமாகத் தமிழ்நாடு எதிர்பார்த்தது. தருமபுர ஆதீனம் முற்பட்டது**------"என்று ஞானியார் சுவாமிகள் எழுதினார்கள்.

"-----------**எனக்குத் தெரிந்த வரையில் இத்தகைய மகாநாடு இதுவரை கூட்டப்பெறவில்லை**--------"என்று டாக்டர்.உ.வே.சாமிநாதையரவர்கள் எழுதினார்கள்.

"----------------- **தென்னிந்தியாவில் முதன்முதலாக** ஸ்ரீ மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு ---------- இன்று காலை 8 மணி முதல் ஆரம்பமாகி நடந்து வருகிறது ------- -" என்று சுதேசமித்திரன் இதழ் எழுதியது (31-08-1941).

மாநாட்டின் மூன்று நாள்களும் முழுமையாகக் கலந்து கொண்டு தலைமை வகித்த கோவைகிழார் **சி.எம்.இராமச் சந்திரஞ் செட்டியார், அக்காலத்தில்** இராவ்பகதூர் பட்டம் பெற்ற பெரிய மனிதர், சென்னை மாநிலத்தின் **இந்துமத தேவஸ்தான போர்டின் அன்றைய கமிஷனர்** என்பது குறிப்பிடத்தக்கது.

"மடங்களைப் பற்றி இம்மகாநாட்டில் பேசுவது பொருத்த மாகாது. இங்கே பிற மடங்களைக் குறைகூற அனுமதிப்பது எங்களுக்கழகல்ல. இதைக் கருத்திற் கொண்டு பேசும்படி விரும்பப்படுகிறது - காரியதரிசி" என்று எழுதப்பட்ட அட்டைகள் மாநாட்டு அரங்கில் தொங்கவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பல்வேறு புதிய புதிய (நவீன) விஞ்ஞான, தொழில்நுட்ப வசதிகள் பெருகிவிட்ட இக்காலத்தில் மாநில மாநாடுகள், நாடுதழுவிய தேசிய மாநாடுகள், உலகளாவிய சர்வதேச (அனைத்துலக) மாநாடுகள், பல்வேறு அங்கங்களுடனும் பல்வேறு சிறப்புகளுடனும் நிகழ்வது எளிதாகிவிட்டது;

சர்வ சாதாரணமாகிவிட்டது. ஆனால் அன்றோ - இன்றைக்கு 67 ஆண்டுகளுக்கு முன்பு- இன்றைய வசதிகள் பற்பல தோன்றாத நிலை. அதிலும் தருமபுரம் ஒரு சிற்றூர். மயிலாடுதுறையே ஒரு சிறு நகரம். அதை அடுத்த சிற்றூர் தருமபுரம். அங்கே இவ்வளவு சிறப்பாக, நாடே போற்றிப் புகழும் நிலையில், ஒரு சமய மாநாடு நடந்ததென்றால், அதை நடத்தியவர்களின் திறத்தை என்னென்பது.

1941இல் நிகழ்ந்த இம்மாநாட்டின் நிகழ்ச்சிகள் முழுவதும் தொகுக்கப்பெற்று 1944-இல் ஒரு நூலாக (மலராக) வெளியிடப் பெற்றுள்ளது. இக்கால மலர்களில் விளம்பரம் மூன்றில் ஒரு பங்கு, வாழ்த்துகள் மூன்றில் ஒரு பங்கு, விடயம் மூன்றில் ஒரு பங்கு என்று இருப்பதைக் காண்கிறோம். பெரும்பாலும் பாதிக்குமேல் விளம்பரங்கள், பாதிக்குக் குறைவான விடயங்கள் என்றிருப்பதையே காண்கிறோம். இம்மாநாட்டு மலரில், மலரில் அல்ல, நூலில், ஆவணத்தில் விளம்பரம் என்பது மருந்துக்குக் கூட இல்லை. முழுவதும், முற்றமுழுவதும், முழுக்க முழுக்க விஷயங்களே. இன்று கிடைத்தற்கரிய இம்மலர் கிடைக்கப் பெற்றவர்கள், வைத்திருப்பவர்கள் பேறு பெற்றவர்கள் (பாக்கியவான்கள்). நூலமைப்பு, அச்செழுத்து, அச்சமைப்பு , உட்பொருள் ஆகிய எல்லாமே அருமையிலும் அருமை. அதனாற்றான் இதனைப் பற்றி நாம் இவ்வளவு தூரம் எழுதினோம். குறைக்க மனமில்லை! விரிக்கிற் பெருகுமென விடுத்தோம்!!

இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
(20.05.1945 - 10.11.1971)

இவர்கள் தோன்றிய திருவூர் சிதம்பரம். பெற்றோர் சுப்பிரமணியபிள்ளை, கணபதிஆச்சி, சிதம்பரம் மேல வீதியில் திருவாதிரை மடம் கட்டிச் சிவனடியார்களுக்கு மகேசுவர பூசையும் தானதருமங்களும் செய்து வாழ்ந்துவந்த பெருங் குடும்பம். தோன்றிய நாள் 1914 ஆனந்த, ஐப்பசி, 2. பிள்ளைத் திருப்பெயர் சிவகுருநாதன். பள்ளிக்கல்வி சிதம்பரம் நாவலர் பள்ளியில். செட்டியார் தேவார பாட சாலையில் முறையாக

ஐந்தாண்டுகள் திருமுறைப் பயிற்சி. தேவாரம் அடங்கன் முறைப் பதிப்பாசிரியர் யாழ்ப்பாணம் சுவாமிநாத பண்டிதரிடம் சமயபாடம். சூரியனார்கோயில் மீனாட்சிசுந்தரசுவாமிகளிடம் சென்று தங்கிச் சித்தாந்த சாத்திர நூற்கல்வி. இத்தனைக்கும் பின்பு தருமபுரம் 24-ஆவது குருமூர்த்திகளை அடுத்து உபதேசம், ஞானத்துறவு. அணுக்கத்தொண்டு. ஆதீனத்தின் அன்றாட நிர்வாகம், குருபூஜைவிழா, மெய்கண்டான் சித்தாந்த மாநாடு, பத்தாண்டு ஆட்சிவிழா முதலியவற்றில் இவர்களின் தகுதி திறமை நன்கு வெளிப்படவே 24-ஆவது குருமகாசந்நிதானம் இவர்களைத் தமக்குப் பிற்றோன்றலாக நியமித்தருளினார்கள். அவர்களுக்குப்பின் இவர்கள் 20-5-1945-இல் 25-ஆவது குருமகாசந்நிதானமாக அருளாட்சி ஏற்றார்கள்.

தருமபுர ஆதீன குருபரம்பரையில் **திருக்கயிலாய யாத்திரை** சென்று வந்தவர்கள் இவர்கள் ஒருவரே. கயிலை சென்றுவந்தமையால் இவர்களின் திருப்பெயருக்குமுன் கயிலை என்பதைச் சேர்த்து ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் என்று வழங்கும் வழக்கம் உண்டாயிற்று. சுருக்கமாகக் **கயிலைக்குருமணி** என்றும் வழங்குவர்.

முன் 24-ஆவது சந்நிதானத்தின் ஆட்சிக்காலமும் இவர்களது ஆட்சிக் காலமும் ஆதீன வரலாற்றில் பொற் காலம் என்றால், இவர்களது அருளாட்சிக்காலம் **பொற் காலத்திலும் பொற்காலம்.**

இவர்கள் 26-ஆண்டுகள் அருளாட்சி செய்து 27-ஆம் ஆட்சியாண்டில் முத்தி பெற்றார்கள். அதற்குள் ஆதீனக் கோயில்கள் 27-க்கும் பலகோடி ரூபாய் செலவில் திருப்பணி செய்து குடநீராட்டுக் கண்டருளினார்கள்.

ஆதீனத்தில் **தமிழ்க்கல்லூரி** ஒன்றை (கீழ்த்திசைப் பல்கலைக்கல்லூரி) 02.08.1946-இல் நிறுவியருளினார்கள். **பன்னிரு திருமுறைகளுக்கும் உரை**வரைந்து வெளியிடும் திட்டத்தைத் தொடங்கி ஒன்பது திருமுறைகளுக்கு

அறிஞர்களைக் கொண்டு உரைவரைந்து வெளியிட்டார்கள் (1953-1969). **திருக்குறளுக்கு உரைவளம்** வெளியிட்டார்கள். ஆண்டுதோறும் குருமுதல்வர் குருபூசையின்போது திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடுகளைக் கூட்டினார்கள். **சென்னையில்** கிளைமடம் இல்லாத குறையைப் போக்க, **சமயப்பிரசார நிலையம்** என்ற பெயரில் ஒரு புதிய அமைப்பை ஏற்படுத்தினார்கள். நூல் வெளியீட்டுத் திறத்தில் இவர்கள் காலத்தில் மட்டும் 562 நூல்கள் அச்சிட்டு வெளியாயின'.

பாடல்பெற்ற தலங்களுக்கெல்லாம் விரிவாக யாத்திரை செய்தார்கள். வடநாட்டுத் திருத்தலங்களுக்குப் பலமுறை சென்று தரிசித்தார்கள். **காசிக்கு ஒன்பது முறை** சென்று தரிசித்தார்கள். யாத்திரை அனுபவங்களை நூல்களாக வெளியிடச் செய்தார்கள். பசுபதிநாத் (நேபாள யாத்திரை) அமரநாதம் (அமரநாத் யாத்திரை) திருக்கயிலாய யாத்திரை என்பன அவ்வாறு வெளிவந்த நூல்கள். 1958,1959,1960-ஆம் ஆண்டுகளில் இவை வெளிவந்தன. திருக்கயிலாய யாத்திரை 656 பக்கப் பெருநூல். 19-6-1959இல் தருமபுரத்திலிருந்து கயிலாய யாத்திரையைத் தொடங்கி நிறைவு செய்து 20.09.1959-இல் மீண்டும் தருமைக்கு வந்துசேர்ந்தார்கள். எல்லா யாத்திரையிலும் பெரிய யாத்திரை இத்திருக்கயிலாய யாத்திரை. அதன் நூலும் பெருநூலாக அமைந்தது.

கயிலைக்குருமணி எல்லாவற்றையுமே பெரிதாகச் செய்பவர். எதையும் சிறிதாகச் செய்தறியாதவர். சிறந்த தோற்றப் பொலிவுடையவர். அவர்கள் காலத்தில் ஆதீனத்திற்கு வருமானமும் அதிகம், செலவும் அதிகம். எல்லா நிலையினராலும் பாராட்டப்பெற்று விளங்கினார்கள். **கனகாபிஷேகம்** கண்டருளியவர்கள். ஒவ்வொன்றும் அரைப் பவுன் எடையுள்ள 1008 பொன்மலர்களால் கயிலைக் குருமணிக்கு 13-3-1961-இல் கனகாபிஷேகம் நடந்தேறியது. "தருமை கனகாபிஷேக மலர் 1961" என்று 300 பக்க மலர் ஒன்று நறுமலராய் வெளிவந்தது. கனகாபிஷேக

மலருக்குக் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் அனுப்பிய வாழ்த்துச் செய்தி கருத்தைக் கவர்வது. அதை அப்படியே முழுமையாக இங்கெடுத்துக் காட்டுகிறோம். இடச்சுருக்கங்கருதி எடுத்துக் காட்டாமல் விட்டுவிட எமக்கு மனமில்லை. அது வருமாறு.

வாழ்த்துச் செய்தி
ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி
ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள்
காஞ்சிபுரம்.

" கயிலாய பரம்பரை என்று இதுவரைக்கும் ஐதீகத்திலும், பெயரளவிலும் இருந்துவந்ததை நிரூபித்துக் காட்டும் வகையில் இவர்கள் செய்த மகா கயிலாய யாத்திரை அமைந்தது. இதுவரை ஏழைகளும் பைராகிகளும்தான் கயிலாய யாத்திரைக்குப் போவது வழக்கமாயிருந்தது. அதைப் பெருமளவில் மாற்றி இவர்கள் மகாகயிலாய யாத்திரை, அமரநாத யாத்திரை, பசுபதிநாத யாத்திரை முதலிய பெரிய யாத்திரைகளைச் செய்து உலகிற்கே வழிகாட்டியிருக்கிறார்கள். **முதன்முதலில்** நம் நாட்டிலிருந்து **மைசூர்** சமஸ்தானம் **மகாராஜாதான்** லௌகிகமான முறையில் **கயிலாய யாத்திரைக்குப் போய் வந்தார்கள்.** பெரிய ஆதீனத் தலைவர்களாயிருப்பவர்கள் இதுவரை யாருமே போய்வந்ததில்லை. மற்றவர்கள் லௌகிகமாகப் போய்வந்ததைவிட ஒரு ஆதீனத் தலைவர் யாத்திரை செய்ததைப் பாராட்ட வேண்டும். கயிலாய பரம்பரையை நிரூபித்து இந்திய நாட்டின் வடகோடிக்கும் தென்கோடியான காவிரி, தாமிரபரணி தீரங்களுக்கும் பெரிய புண்ணிய ஒற்றுமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

வடநாடு தென்னாடு என்ற பிரிவினை உணர்ச்சி சமய நெறியில் கிடையாது. வடநாட்டில் **காஷ்மீரத்தில்** தான் **சைவம்** ஓங்கியிருக்கிறது. காஷ்மீரம், நேப்பாளம் இவை எல்லாவற்றின் குறிக்கோளாக வடக்கே மகா கயிலாயம்விளங்குகிறது. அருள்சம்பந்தமானதொண்டுகளே நாட்டை ஒன்றுபடுத்துவன. லௌகிகமான தொண்டுகள்

பிரிவினைக்குக் காரணமாயிருப்பன. அருள்சம்பந்தமான தொண்டே நம்மை நல்வழிக்குக் கொண்டு செல்லும்.

இவர்கள் செய்த யாத்திரையில் துவாதச ஜோதிர் லிங்க யாத்திரையும் மிகச்சிறந்தது. இந்தத் தலச் சிறப்புகளை எழுதச் செய்து நூலாகவும் வெளியிட்டிருக்கிறார்கள். ஆதி சங்கரர் மூன்று சுலோகங்களில் துவாதச ஜோதிர் லிங்கங்களைப்பற்றி ஸ்தோத்திரம் செய்திருக்கிறார்கள். ஒரு ஸ்லோகத்தில் நான்கு வரிகள். ஒரு வரிக்கு ஒரு ஜோதிர்லிங்கம். மேலும் ஒரு ஸ்லோகத்தில் ஒரு ஜோதிர்லிங்கமாகப் பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்களையும் பாடியிருக்கிறார்கள்.

வங்காளத்திலே தக்ஷிணேஸ்வரம், இராமகிருஷ்ணா ஆசிரமம், கல்கத்தா முதலிய இடங்களில் காளி கோயிலில் காளிக்கு இரண்டு பக்கங்களிலும் ஆறு ஆறு ஜோதிர் லிங்கங்களாகப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். இப்படி இராமர் கோயிலாயிருந்தாலும் சரி, கிருஷ்ணன் கோயிலாக இருந்தாலும் சரி ஜோதிர்லிங்கப் பிரதிஷ்டை இல்லாமல் இல்லை. **இமய முதல் கன்யாகுமரிவரை ஒரே நாடு** என்ற அடிப்படையில் ஜோதிர்லிங்கங்கள் அமைந்துள்ளன. நம் நாட்டில் பல்லவர் கோவிலான காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவிலில் த்வாதச ஜோதிர் லிங்கங்கள் இருக்கின்றன. ஸ்ரீசைலம், இராமேஸ்வரம் முதலிய இடங்கள் தென்னாட்டின் ஜோதிர்லிங்க ஸ்தலங்கள். **இப்படி நம் நாடு முழுவதும் ஈஸ்வரனுடைய ஒரே நாடாக விளங்குகிறது.**

மகாகயிலாய யாத்திரை சென்ற நினைவாக இவர்கள் எழுப்பிய ஞாபகார்த்த வளைவுகள் மகாகயிலாய நிலையம் முதலியவற்றைப் பார்த்தேன். நாள்தோறும் கயிலாய நிலையத்தில் திருக்கயிலாயத் தேவாரத் திருப்பதிகங்களைப் பாராயணம் செய்து வருகிறார்கள் என்பதைக் கேட்க மிக்க சந்தோஷம்.

நான் இவர்களைப் போல மகாகயிலாயம் வரை செல்லவில்லை. நடந்தும் பல்லக்கிலுமாகப் பல

தலங்களைத் தரிசித்துள்ளேன். அதுவும் பூர்த்தியாக வில்லை. இவர்கள் செய்த சிறந்த சிவபுண்ணிய யாத்திரையினால் நமக்கு ஏற்பட்ட ஒரு ஆனந்தம் பெருமிதம் இவைகளைச் சொல்லாமலிருக்கக் கூடாது. சிவபுண்ணியமான இந்த செயலைச் சொல்லாமலிருப்பது குற்றமாகும். சொன்னால் நமக்கும் சிறந்த சிவ புண்ணியம் உண்டாகும். இவர்களுக்கு வாழ்த்துக்களும் பாராட்டுகளும் சொல்வது கடமையாகும். இதனால் சித்தாந்தம், வேதாந்தம் முதலிய சமய நெறிகளெல்லாம் செழித்தோங்கி நம்நாடு சிறந்து விளங்கிச் செழித்து ஈஸ்வரனுடைய அருளைப் பெற்று எல்லாவற்றாலும் ஓங்கி விளங்குவதாக.

''காகமுறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டாகார சிவ
போகமெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமா
யேகவுருவாய்க் கிடக்குதையோ! இன்புற்றிட நாமினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் செகத்தீரே''

என்று தாயுமானவர் சொல்லியதுபோல எல்லோரும் ஒன்றாகத் திருவருளைப் பெற்று ஓங்கவேண்டும். பல மூர்த்திகளுக்குச் சுவர்ண கவசங்களும், கோடி அர்ச்சனை களும் செய்துள்ளார்கள். சைவ சமயத்திற்கும் சமூகத்திற்கும் தொண்டுகள் பல சிறப்பாகச் செய்துள்ளார்கள். இந்நற் பணிகளின் எதிரொலியே ''கனகாபிஷேகமாக'' அமைந்து உள்ளது. எல்லாம் வல்ல சந்திரமௌலீஸ்வரருடைய அநுக்கிரகம் அவர்களுக்குப் பூரணமாக ஏற்படப் பிரார்த்திக்கிறோம்.

விஜய யாத்ராஸ்தானம், மன்னார்குடி
சார்வரி, மாசி 19 நாராயணஸ்மரணை

(இவ்வளவும் சங்கராசாரிய சுவாமிகளின் வாழ்த்துரை)

கயிலாய பரம்பரையில் வந்தவரின் கயிலை யாத்திரையைக் காஞ்சிப் பெரியவர்கள் எவ்வளவு பாராட்டுகிறார்கள். மனந் திறந்து பாராட்டுகிறார்கள்! பாராட்டு மட்டுமன்றிப் பல அரிய செய்திகளுமல்லவா வாழ்த்துரையால் வெளிப்படுகின்றன. ''நான் இவர்களைப்போல மகா கயிலாயம் வரை செல்ல வில்லை . . . . இவைகளைச் சொல்லாமலிருக்கக்கூடாது. . . . .

சொல்லாமலிருப்பது குற்றமாகும் . . . .'' என்று எவ்வளவு அடக்கமாக எழுதுகிறார்கள். பெரியவர்கள் பெரியவர்களே. கயிலை யாத்திரை இன்று ஓரளவு எளிதாகி விட்டது. வருங்காலத்தில் இன்னும் எளிதாகலாம். முற் காலத்தில், கயிலைக்குருமணி யாத்திரை செய்த காலத்தில், அவ்வளவு எளிதன்று-

பிறரால் பெரிதும் பாராட்டப்பெற்ற குருமணி பிறரைப் பாராட்டுவதிலும் வல்லவர்கள். பொருத்தமானவர்களுக்குப் பொருத்தமான பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தார்கள். அந்நாளில் அமைச்சராக இருந்த பக்தவத்சலம் அவர்களுக்கு ''நல்லறங்காவலர்'' என்னும் பட்டத்தை நல்கிச் சிறப்பித் தார்கள்.

ரா.பி.சேதுப்பிள்ளைக்கு	சொல்லின் செல்வர்
தெ.பொ.மீனாட்சிசுந்தரனாருக்கு	பல்கலைச் செல்வர்
கி.வா.ஜகந்நாதனுக்கு	செந்தமிழ்ச் செல்வர்
அ.சிதம்பரநாதன் செட்டியாருக்கு	செந்தமிழ்ச் செல்வர்
டி.எம்.பி. மகாதேவனுக்கு	வேதாந்த வித்தகர்
எம்.கே.தியாகராஜ பாகவதருக்கு	ஏழிசைச் செல்வன்
கே.பி.சுந்தராம்பாளுக்கு	ஏழிசை வல்லபி

இப்படிப் பொருத்தமான பட்டங்களை வழங்கி யருளினார்கள். ஒருவர் பல்வேறு பட்டங்களைப் பெற்றி ருந்தாலும் இவர்கள் கொடுத்த பட்டமே பெரிதும் வழங்குவ தாயிற்று. உதாரணம்: சொல்லின்செல்வர் (ரா.பி.சே), பல்கலைச் செல்வர் (தெ.பொ.மீ.). இவர்கள் பல பட்டங் களைப் பெற்றிருந்தாலும் இப்பட்டங்கள்தானே சிறந்தன.

ஆவணிமூலத் திருநாள் பட்டமளிப்பு விழா

மாணிக்கவாசகருக்காகச் சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடலை நடத்தியருளியது ஓர் ஆவணி மாத மூலநாளில். ஆண்டுதோறும் ஆவணிமூல விழா மூன்று நாள் விழாவாகத் தருமபுர ஆதீனத்தில் கொண்டாடப்பெற்று வருகிறது. ஆதீனக் கல்வி நிலையங்களின்

ஆண்டுவிழாவும் இதனோடு சேர்ந்து நடைபெறும். 1951-இல் இருந்து பட்டமளிப்பு விழாவும் இதனோடு சேர்ந்து சிறப்பதாயிற்று.

		பட்டமளித்துச் சிறப்பிக்கப் பெற்றவர்கள்	பட்டம்
1	1951	ரா.பி.சேதுப்பிள்ளை	சொல்லின் செல்வர்
2	1952	தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்	பல்கலைச்செல்வர்
3	1953	ஈ.த.இராஜேஸ்வரி அம்மையார்	விஞ்ஞானச் செல்வி
4	1954	கி.வா. ஜகந்நாதன்	செந்தமிழ்ச்செல்வர்
5	1955	டாக்டர்.அ.சிதம்பரநாதன் செட்டியார்	செந்தமிழ்க்காவலர்
6	1956	கி.சிவராமன்	சித்தாந்தச் செல்வர்
7	1957	லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார்	முத்தமிழ்வித்தகர்
8	1958	சி.நா.குழந்தையம்மாள்	செந்தமிழ்ச்செல்வி
9	1959	டாக்டர் டி.எம்.பி.மகாதேவன்	வேதாந்தவித்தகர்
10	1960	டாக்டர் அ.சீனிவாசராகவன்	செந்தமிழ்ச்செம்மல்
11	1961	கு.அருணாசலக்கவுண்டர்	பைந்தமிழ்ச்செம்மல்
12	1962	டாக்டர் மா. இராசமாணிக்கனார்	சைவஇலக்கியப் பேரறிஞர்
13	1963	ச.சிவகுமாரன்	பைந்தமிழ்ச்செல்வர்
14	1964	ந.ரா.முருகவேள்	சித்தாந்தப் புலவர்மணி
15	1965	அ.ச.ஞானசம்பந்தம்	செந்தமிழ்வித்தகர்
16	1966	க.வச்சிரவேல் முதலியார்	சித்தாந்தக் கலைச்செல்வர்
17	1967	ச.சச்சிதானந்தம் பிள்ளை	சைவம்பெருக்கும்சீலர்
18	1968	டாக்டர் வ.ஆ.தேவசேனாபதி	சித்தாந்தவித்தகர்
19	1969	க.வெள்ளைவாரணனார்	திருமுறை ஆராய்ச்சிக்கலைஞர்
20	1970	டாக்டர்.ந.சஞ்சீவி	செந்தமிழ்இலக்கியச்செம்மல்
21	1971	ம.ப.பெரியசாமித்தூரன்	செந்தமிழ்க்கலைச்செல்வர்
		(இதுவரை 25ஆவது சந்நிதானத்தின் காலம், இனி இப்போதுள்ள 26ஆவது சந்நிதானத்தின் காலம்)	
22	1972	பெ.திருஞானசம்பந்தம் பிள்ளை	மும்மொழிக்கொண்டல்
23	1973	அ.வெ.ர.கிருஷ்ணசாமி ரெட்டியார்	செந்தமிழ்க்கவிதைச் செம்மல்
24	1974	மீ.ப.சோமசுந்தரம்	பல்கலைவித்தகர்
25	1975	அ.சங்கரநாராயணன்	செந்தமிழ்ச்சிவநெறிச் செல்வர்
26	1976	டாக்டர்.பா.நடராசன்	பொருளியல்தத்துவப் பேரறிஞர்
27	1977	கீ.இராமலிங்கனார்	தமிழ்மொழிக்காவலர்

28	1978	எஸ்.மகராஜன்	இலக்கிய ரசிகமணி
29	1979	டாக்டர் வை.இரத்தினசபாபதி	சித்தாந்தக்கலைஞர்
30	1980	கி.ஆ.பெ.விசுவநாதன்	செந்தமிழ்க் காவலர்
31	1981	சி.பாலசுப்பிரமணியம்	சங்கத்தமிழ்ச்செல்வர்
32	1982	ப.அருணாசலம்	சித்தாந்த கலாநிதி
33	1983	டாக்டர்.டி.பி.சித்தலிங்கையா	சைவசித்தாந்தக் கலாநிதி
34	1984	டி.என்.இராமச்சந்திரன்	சைவசித்தாந்தக் கலாநிதி
35	1985	சௌந்தராகைலாசம்	செந்தமிழ்க் கவியரசி
36	1986	எம்.வி.ஜெயராமன்	செந்தமிழ்ச்செல்வர்
37	1987	கே.எம்.வேங்கடராமையா	செந்தமிழ்க்கலாநிதி
38	1988	என்.ஆர்.பட்	சிவாகமசேகரன்
39	1989	பி.முத்துக்குமாரசாமி முதலியார்	ஆட்சிக்கலை வல்லுநர்
40	1990	அ.மு.பரமசிவானந்தம்	செந்தமிழ்க்கலாநிதி
41	1991	டி.வி.வேங்கடராமன் ஐ.ஏ.எஸ்.	திருமந்திரமணி
42	1992	ஔவை.நடராஜன்	விரிவுரைவேந்தர்
43	1993	தி.வே.கோபாலய்யர்	செந்தமிழ்க்கலாநிதி
44	1994	பி.டி.ஆர்.கமலைத்தியாகராசன்	இயல்இசைவித்தகர்
45	1995	எஸ். தியாகராஜன் பி.ஈ.,	சித்தாந்தச்செல்வர்
46	1996	திருமதி கௌரி ராஜகோபாலன்	இன்னிசைக்கதைவாணி
47	1997	திருமதி கோமதி சூரியமூர்த்தி	சைவசித்தாந்தக் கலாநிதி
48	1998	கே.ஜே. ஜேசுதாஸ்	தருமை ஆதீன இசைப்புலவர்
49	1999	டாக்டர்.ச.முத்துக்குமரன்	தமிழ்க்கலைச்செல்வர்
50	2000	எம்.எஸ். உதயமூர்த்தி	சிந்தனைச்செல்வர்
51	2001	டாக்டர்.ச.மெய்யப்பன்	செந்தமிழ்க்காவலர்
52	2002	தென்கச்சி சுவாமிநாதன்	செந்தமிழ்ச் சிந்தனையாளர்
53	2003	தவத்திரு ஊரன் அடிகள்	சன்மார்க்கசீலர்
54	2004	டாக்டர் ச.அகத்தியலிங்கம்	மொழியியல்வேந்தர்
55	2005	டாக்டர் ஆறு.அழகப்பன்	தமிழ்க்கலைச்செல்வர்
56	2006	இரா.முத்துக்குமாரசாமி	பழந்தமிழ்நூல் பதிப்புக்காவலர்
57	2007	ஐராவதம் மகாதேவன்	செம்மொழிச்செல்வர்
58	2008	டாக்டர்.வா.செ.குழந்தைசாமி	செவ்வியல்மொழிச்செல்வர்
59	2009	கே.சி.லெட்சுமிநாராயணன்	சமய இலக்கிய ஆய்வறிஞர்

இப்பட்டமளிப்பு ஆதீனத்தில் ஸ்ரீசொக்கநாதர் பூஜை மடத்தில் சொக்கநாதர் பூஜையின்போதே நிகழும். சந்நிதானம் பூஜை முடித்தவுடன் சொக்கநாதர் சந்நிதியிலேயே இச்சிறப்பைச் செய்தருளுவார்கள். பூஜையை முடித்து ஆசாரசீலராய்ச் சந்நிதானம் பூசைக்கட்டின் வாயிலுக்கு வந்து வாயிற் படியருகே நின்றிருக்கும் பட்டம் பெறுவோருக்குப் பொன்னாடை போர்த்தி, சிரத்தில் இண்டைமாலையைச் சேர்ப்பித்துப் பட்டம் பொறித்த பதக்கத்தை அணிவித்துப் பிரசாதமளித்து ஆசிர்வதித்தருளுவார்கள். பூஜை முகத்தில் பூஜை செய்த திருக்கோலத்தோடேயே இருந்து சந்நிதானம் செய்தருளும் இச்சிறப்பு, பட்டம் பெறுவோர் வாழ்விலேயே ஓர் அரிய நிகழ்ச்சியாகும். சொக்கலிங்கப்பெருமான் சந்நிதி விசேடத்தோடு பட்டம் பெரும் பெறும் பேறு கிடைக்கிறது.

சைவ ஆதீனங்கள், வைணவ மடங்கள், வேதாந்த மடங்கள் ஆகிய எல்லாவற்றுக்கும் ஓர் இணைப்பாய் மாநில அரசின் அறநிலையத்துறை ஆதரவுடன் **தெய்விகப் பேரவை** என்றொரு பேரமைப்பு 13-06-1966-இல் தொடங்கப்பெற்ற போது அதன் **முதல் தலைவராக** இவர்களே அனைத்து ஆதீனங்களாலும் மடங்களாலும் தெரிந்தெடுக்கப் பெற்றார்கள். 1969 டிசம்பரில் குன்றக்குடி அடிகளார் தலைமைப் பதவியை ஏற்கும்வரை மூன்றாண்டுகள் தெய்விகப் பேரவையின் தலைவராக விளங்கினார்கள். காஞ்சி காமகோடி பீடம் சங்கராசாரிய சுவாமிகள், சிருங்கேரி சங்கராசாரிய சுவாமிகள், ரிஷிகேசம் சுவாமி சிவானந்தர் முதலிய பெரியோர்கள் இவர்கள் காலத்தில் ஆதீனத்திற்கு வந்து சிறப்பித்தார்கள். குருவாரங்களிலும் சஷ்டி ஆறு நாள்களிலும் மௌனவிரதம் இருந்து வந்தார்கள். இப்படி அனுட்டானங்களுக்கும் குறைவில்லை.

இவ்வாறு எல்லா வகையிலும் சிறப்பாக 25 ஆண்டு காலம் அருளாட்சி செய்து வந்தவர்கள் 26-ஆம் ஆட்சியாண்டில், திருச்செந்தூர் சஷ்டி வழிபாட்டுக்குச் சென்று திரும்பியவர்கள் திடீரென்று காசி யாத்திரை மேற் கொண்டார்கள். அன்பர்கள், உதவியாளர்கள், சிவாசாரியர்கள், ஓதுவாமூர்த்திகள் இப்படிச்

சந்நிதானத்தையும் சேர்த்து 32 பேர் கொண்ட திருக்கூட்டமாக 07.11.1971 காலை சென்னையிலிருந்து ரயிலில் புறப்பட்டார்கள். 14.11.1971 ஞாயிற்றுக்கிழமை குருமணியின் பிறந்த நாளை (ஜன்ம நட்சத்திரத்தை) காசி வழிபாட்டோடு கொண்டாட ஏற்பாடு. 10.11.1971 புதன்கிழமை காலை காசி சென்று சேர்ந்தார்கள். குமாரசாமி மடத்திற்கு எழுந்தருளித் தங்கினார்கள். மாலை 7.30 மணியளவில் சிறிது உடல்நலக் குறைவு ஏற்பட்டு, காசியில் குமாரசாமி மடத்திலேயே "முத்தையா" என்று சொல்லிய வண்ணமே சிவப்பேறு பெற்றருளினார்கள். தருமையாதீன வரலாற்றில் **காசியில் முத்திபெற்ற சந்நிதானம் இவர்கள் ஒருவரே. கயிலைச் செலவு காசியில் முத்தி** ஆகிய இரண்டும் தருமைக் குருமரபில் **இவர்கள் ஒருவருக்கே கிடைத்த திருவருள்.**

சந்நிதானமவர்களின் திருமேனி காசியிலிருந்து சென்னைக்கு விமான மூலமும் சென்னையிலிருந்து தரும புரத்திற்குக் கார்மூலமும் எழுந்தருள்விக்கப்பெற்று தரும புரத்தில் ஆதீன வளாகத்தில் உரிய இடத்தில் 12.11.1971-இல் ஞான சமாதியில் எழுந்தருளுவிக்கப் பெற்றது. 25ஆவது குருமகாசந்நிதானமாக 25 ஆண்டுகள் அருளாட்சி புரிந்து 26-ஆம் ஆட்சியாண்டில், 26-ஆவது குருமகாசந்நிதானமாக வர இருப்பவர்களுக்கு அருளாட்சியை விட்டுச் சென்றார்கள்.

தருமையாதீன அடியவர் திருக்கூட்டத்தில் மூத்த தம்பிரான் சுவாமிகளில் ஒருவராகவும் சென்னையில் தரும புர ஆதீன சமயப்பிரச்சார நிலையத்தின் தலைவராகவும் திகழ்ந்துவந்த ஸ்ரீமத் வித்துவான் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 12.11.1971-இல் 26-ஆம் பட்டம் குருமகா சந்நிதானமாக **ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** என்ற திருப்பெயருடன் அருளாட்சி ஏற்றார்கள்.

கயிலைக்குருமணி பரிபூரணம் ஆன பத்தாம் நாட் குருபூசை விழா 19.11.1971-இல் சிறப்பாக நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியின் நினைவுமலர் என்றொரு மலர் அன்றே குருபூசை விழாவில் வெளியிடப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் முதல் ஆண்டுக் குருபூஜை 29.10.1972-இல்

சிறப்புற நிகழ்ந்தது. கயிலைக்குருமணி நினைவுமலரின் இரண்டாம் பதிப்பு அதிக பக்கங்களுடன் அன்பர் பலரது போற்றியுரைகளுடன் வெளியாயிற்று.

கயிலைக் குருமணிகள் பல்வேறு காலங்களில் பல்வேறு இடங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் அவ்வப்போது வழங்கிய அருள்மொழிகள் கட்டுரைகளாகத் தொகுக்கப்பெற்று " செந்தமிழ்ப் பூம்பொழில் " என்று ஐந்து தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

25ஆவது குருமகாசந்நிதானம் கயிலைக்குருமணி அவர்கள் காலத்தில்தான் எமக்குத் தருமபுர ஆதீனப்பழக்கம் ஏற்பட்டது.

தருமபுர ஆதீனப் பண்டார சாத்திரங்கள்

சைவ உலகில் திருமுறைகள் 12; சித்தாந்த சாத்திரங்கள் 14 என்பது போலப் பண்டார சாத்திரங்கள் 14 என்ற ஒரு தொகுதியைத் திருவாவடுதுறை ஆதீனத்தார் அமைத்துக் கொண்டார்கள். அதுபோலத் தருமபுர ஆதீனத்துக்கும் பண்டார சாத்திரங்கள் உள்ளன. ஆனால் அவை இத்தனை என்ற கணக்கு இல்லை. பதினான்குக்கு மேலும் அவை நீள்கின்றன. பண்டார சாத்திரம் முதல் தொகுதி என்று குருஞானசம்பந்தர் நூல்கள் எட்டையும் ஒரே நூலாக 1948-இல் தருமபுர ஆதீனம் வெளியிட்டுள்ளது. பண்டார சாத்திரம் தொகுதி இரண்டு என்று பத்தாவது பட்டம் சிவஞானதேசிகர் செய்த காசித் திருவருட்பாக்களையும் அவரது பிற சிறு நூல்களையும் ஒரு தொகுதியாக வெளியிட்டுள்ளது. முதற்பதிப்பு 1958. 2-ஆம் பதிப்பு 1972. எனினும் குருஞானசம்பந்தர் அருளிய நூல்களே முக்கியமானவை.

குருஞானசம்பந்தரின் நூல்கள்

ஆதீன நிறுவனரும் குருமுதல்வருமாகிய குருஞான சம்பந்தர் அருளிய நூல்கள் எட்டு. அவ்வெட்டும் குருஞான சம்பந்தர் அட்டகம் எனவும் வழங்கும்.

1. **சிவபோகசாரம்**
2. **சொக்கநாதவெண்பா**

3. முத்தி நிச்சயம்
4. திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல்
5. சோசடகலாப் பிராசாத சட்கம்
6. சொக்கநாதக் கலித்துறை
7. பண்டாரக் கலித்துறை என்னும் ஞானப்பிரகாசமாலை
8. நவரத்தின மாலை

இவற்றுள் சிவபோகசாரமும் சொக்கநாதவெண்பாவும் மிகவும் புகழ்பெற்றவை. செல்வாக்கு மிக்கவை. பெரு வழக்காக வழங்குபவை. சைவசித்தாந்தத்தையும், தருமபுர ஆதீனத்தையும், குருஞானசம்பந்தரையும் நன்கு அறியாதவர்களும்கூட இந்நூல்களை நன்கு அறிந்திருப்பர். சித்தாந்த உலகுக்கு அப்பாலும், ஆதீனச் சூழலுக்கு வெளியேயும் இவை பரவலாகப் புகழ்பெற்று வழங்கின. பொது நூல்களாகவே ஆகிவிட்டன எனலாம். பிற்காலத்தில் தொகுக்கப்பெற்ற பதினெண் சித்தர் ஞானக்கோவையில் சிவபோகசாரத்தையும் சொக்கநாதவெண்பாவையும் சேர்த்து விட்டார்கள் என்றால் அதிலிருந்து இவ்விரண்டுக்கும் அக்காலத்தில் இருந்த புகழையும் செல்வாக்கையும் அறியலாம். காரணம் இவற்றின் எளிமை, இனிமை, கருத்துவளம், ஞானத்திறம், இலக்கியச் சுவை. ஞான நூல்களை, சாத்திர நூல்களை இலக்கியச் சுவையோடு செய்தல் அருமை, அரிது. குமரகுருபரரின் நூல்கள் அப்படிப்பட்டவை; அதனால்தான் அவை சைவ உலகுக்கு வெளியே தமிழ் இலக்கிய உலகிலும் ஒரு பேரிடத்தைப் பெற்றிருக்கின்றன. குருஞானசம்பந்தரின் சிவபோகசாரமும் சொக்கநாதவெண்பாவும் அவ்வாறே ஞானத் திறத்தோடு கருத்துவளத்தோடு இலக்கியச் சுவையும் மிக்கவை. எல்லாவற்றையும் முழுமையாக ஈண்டுச் சுவைக்க இடம் போதாது எனினும் இன்றியமையாத சிற்சில பாடல்களைச் சுவைத்து மகிழ்வோம்.

1. சிவபோகசாரம்

139 வெண்பாக்கள். முதற்பாவும் ஈற்றுப்பாவும் பின்வருவன.

சித்தி தருநாதன் தென்கமலை வாழ்நாதன்
பத்திதரு நாதன் பரநாதன் -முத்திப்
பெருநாதன் ஞானப் பிரகாசன் உண்மை
தருநாதன் நங்குருநா தன். 1

தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம் - நெல்லை களர்
காஞ்சி கழுக் குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும். 139

''சித்தி தருநாதன்'' என்று முதற்பாடலைத் தொடங்குபவர் ''முத்திவரும்'' என்று நூற்று முப்பத்தொன்பதாவது ஈற்றுப் பாடலை முடிக்கிறார். இது ஓர் அழகு. தில்லைவனம் என்று தொடங்கும் இவ்ஈற்றுப்பாடலில் 15 தலங்களின் பெயர்கள் சொல்லப்பெறுகின்றன. எல்லாப் பெயர்களும் அடைமொழி யின்றிப் பெயர்களாகவே சொல்லப் பெறுகின்றன. இதுவும் ஓர் அழகு.

குருஞானசம்பந்தர் காலத்தில் உண்மைக் குருமார்கள் பலர் இருந்தனர். போலிக் குருமார்களும் ஏராளமாக முளைத்திருந்தார்கள். அவர்களை எண்ணி மனம் நொந்து குருஞானசம்பந்தர் ஒரு பாடல் பாடுகிறார்.

தன்னை அறியார் தலைவன் தனைஅறியார்
முன்னை வினையின் முடிவறியார் - பின்னைக்
குருக்களென்றும் பேரிட்டுக் கொள்ளுவர்கள் ஐயோ
தெருக்கள் தனிலே சிலர்.

இக்காலத்திலும் குண்டலினி தீட்சைக் குருமார்கள் ஊர் ஊராகத் தெருத்தெருவாக மலிந்திருக்கிறார்கள். நூறு இருநூறு என்று கட்டணம் நிர்ணயித்து ஹோட்டல் அறைகளில் தீட்சை தருகிறார்கள். பழைய காலத்தில் நெற்றிக் கண்ணைத்தான் கேள்விப்பட்டிருக்கிறோம். இவர்களோ பிடரிக்கண்ணைத் திறந்துவைக்கிறார்கள். உலகநலனுக்காக யாகம் செய்கிறேன், அந்த யாகம் இந்த யாகம் என்று கொள்ளையடிக்கிறார்கள். அப்பனும் சாமியார், மகனும் சாமியார். இக்கால ஆன்மிக உலகம் எப்படி எப்படியோ போய்க் கொண்டிருக்கிறது. **தான்தோன்றிக் குருமார்கள் மலிந்து**

விட்டனர். இவர்களையெல்லாம் பார்க்கும்போது குருஞான சம்பந்தரின் இச்**சிவபோகசாரப் பாடல்** அன்றைய நாளைவிட இன்றைக்கு **மிகவும் பொருத்தமாக இருக்கிறது.**

பரபக்க வேண்டாம் பலகாலும் சொன்னேன் என்ற பாடலும் ஆசை அறாய் பாசம்விடாய் என்ற பாடலும் கருத்துவளம் மிக்க சுவையான பாடல்கள். மிகுதியாகப் பயின்று வரும் பாடல்கள்.

பரபரக்க வேண்டாம் பலகாலுஞ் சொன்னேன்
வரவரக் கண்டாராய் மனமே - ஒருவருக்கும்
தீங்கு நினையாதே செய்ந்நன்றி குன்றாதே
ஏங்கி இளையா திரு. - சிவபோகசாரம் 132

எதற்கெடுத்தாலும் பரபரக்கிற காலம் இக்காலம். எங்கும் பரபரப்பு, எதிலும் பரபரப்பு. பரபரக்க வேண்டாம் என்கிறார் குருஞானசம்பந்தர். ஒருகால் (ஒருமுறை) சொல்லவில்லை. பலகாலும் சொன்னேன், பலமுறை சொன்னேன் என்கிறார். யாருக்குச் சொல்லுகிறார்? மனத்துக்குச் சொல்லுகிறார். ஒருவருக்கும் தீங்கு நினையாதே, செய்ந்நன்றி குன்றாதே, ஏங்கி இளையாது இரு என்கிறார். மனத்திற்கு, நெஞ்சுக்கு எப்பேர்ப்பட்ட உபதேசம்.

ஆசைஅறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் சீசீ
சினனே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய் - சிவபோகசாரம் 138

இதுவும் மனத்துக்கு உபதேசம்தான். அரிய உபதேசம் எளிய சொற்களில் எளிய முறையில் சொல்லப்பெறுகிறது.

2. சொக்கநாத வெண்பா

"சொக்கநாதா" என்று முடியும் 100 வெண்பாக்கள். மதுரைச் சொக்கநாதரின் தோத்திரமாகப் பாடப்பெற்றது.

சிவபோகசாரமும் சொக்கநாதவெண்பாவும் பின்வந்த பலருடைய உள்ளத்தைக் கவர்ந்தவை. குமரகுருபரர் தாயுமானவர் போன்றோர் இவற்றை நன்கு பயின்றிருக்

கிறார்கள். இவற்றின் கருத்துகளை எடுத்தாண்டிருக்கிறார்கள். இவ்விரு நூல்களும் பலரால் பலமுறை அச்சிடப் பெற்றுள்ளன. பதினெண்சித்தர் ஞானக் கோவையிலும் சேர்ந்துவிட்டது என்பதை முன்னமே கூறினோம். இக்காலத்தில் இப்படிப்பட்ட நூல்களின் பயிற்சி குறைந்துவிட்டது. **சிவபோகசாரம் சொக்க நாத வெண்பா இவ்விரண்டுக்கும் தற்கால முறையில் விரிவுரை எழுதிப் பதிப்பிக்க வேண்டும்.**

உன்னைச் சிங்காரித் துனதழகு பாராமல்
என்னைச் சிங்காரித் திடர்ப்பட்டேன் - பொன்னை
அரிவையரை யேநினையும் அன்பிலேற் குன்தாள்
தருகுவையோ சொக்கநா தா. 92

என்பது சொக்கநாதவெண்பாவில் ஒரு பாடல். இப்பாடலில் மிகவும் ஈடுபட்ட தாயுமானவர் இதை அப்படியே எடுத்தாள்கிறார்.

உன்னைச் சிங்காரித் துனதழகு பாராமல்
என்னைச் சிங்காரித் திருந்தேன் பராபரமே

என்பது தாயுமானவர் பாடல்.

3. முத்திநிச்சயம்

ஆன்மானந்தவாதம் சிவசமவாதம் கூறும் முத்தி நிலைகளை மறுத்துச் சுத்தாத்துவிதசித்தாந்த முத்தி நிலையை விளக்குவது. 22 வெண்பாக்கள். இதற்கு வெள்ளியம்பல வாணர் செய்த பேருரை வெள்ளியம்பலவாண மாபாடியம் என வழங்கும். இதன் சில பகுதிகளை நாம் இந்நூலில் எடுத்துக் காட்டியுள்ளோம். இதற்கு அருமையான ஒரு பதிப்பு (முத்திநிச்சயப் பேருரை) தருமபுர ஆதீனத்தால் 1946-இல் வெளியிடப் பெற்றது.

4. திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல்

மூன்று அகவற் பாக்களால் ஆன நூல். திரிபதார்த்தம் - முப்பொருள்; பதி, பசு, பாசம். தசகாரியம் - திருவாவடுதுறை ஆதீன தசகாரிய நூல்களைப் பற்றிக்கூறும் போது தசகாரியம் இன்னதென்பதைக் கூறியுள்ளோம். இதுவும் தசகாரியம் கூறும் நூலே.

5. சோடச கலாப் பிராசாத ஷட்கம்

சோடச கலை -16 கலைகள். சோடசகலாப் பிராசாதம் -சோடச கலைகளையும் கண்டு உணர்ந்து செய்யப்பெறும் ஒருவகை யோகம். இதற்குப் பிராசாத யோகம் என்று பெயர். ஷட்கம் - ஆறு பாடல்கள். பிராசாத ஷட்சுலோகி என்ற வடமொழி நூலின் மொழிபெயர்ப்பு.

6. சொக்கநாதக் கலித்துறை

11 பாடல்கள். சொக்கநாதர்மீது பாடப்பெற்ற தோத்திரம்.

7. பண்டாரக் கலித்துறை

36 பாடல்கள். ஞானப்பிரகாச மாலை என்றும் பெயர். குருநாதர் கமலை ஞானப்பிரகாசரின்மீது பாடிய தோத்திரம்.

8. நவரத்தின மாலை

9 பாடல்கள். குருநாதர் கமலை ஞானப்பிரகாசர் சிவப்பேறு எய்தியபோது பாடிய தோத்திரம்.

ஏழாவது குருமகாசந்நிதானம்
திருவம்பலதேசிகர் அருளிய நூல்கள்

9. 1. வருணாசிரம சந்திரிகை

வேளாளருக்கும் சந்நியாசம் உண்டு, குருத்துவம் உண்டு என்பதை ஆகமங்களின் ஆதாரங்களோடு விளக்குவது.

10. 2. சமாதிலிங்கப் பிரதிட்டாவிதி

220 பாடல்கள். சமாதியில் லிங்கம் நிறுவி, பரிவார தெய்வங்களையும் அமைத்து வழிபாடு செய்யும் முறையை விரிவாகக் கூறுவது.

ஒன்பதாவது குருமகாசந்நிதானம்
திருநாவுக்கரசுதேசிகர் செய்த நூல்

11. சித்தாந்த நிச்சயம்

97 பாடல்கள். ஆணவத்தின் மூவகை நிலைகளை விளக்கிச் சித்தாந்த உண்மைகளைக் கூறுவது.

பத்தாவது குருமகாசந்நிதானம் சிவஞானதேசிகர் அருளிய நூல்கள்

12. *1.* வேளூர் செல்வமுத்துக் குமாரசாமி திருவருட்பா
13. *2.* சீகாழி ஆபத்துத்தாரணர் மாலை
14. *3.* சிதம்பரநாதர் பதிகம்
15. *4.* திருவாரூர் தட்சிணாமூர்த்தி திருவருட்பா
16. *5.* திருவாரூர் அசபாநடனப் பதிகம்
17. *6.* காசி துண்டிராஜ கணபதி திருவருட்பா
18. *7.* காசி விசுவநாதர் திருவருட்பா
19. *8.* காசி அன்னபூரணி திருவருட்பா
20. *9.* காசி கேதாரநாதர் திருவருட்பா
21. *10.* காசி கேதார கௌரி திருவருட்பா
22. *11.* காசி விருத்தகாளேசுவரர் திருவருட்பா
23. *12.* காசி காலபைரவர் திருவருட்பா
24. *13.* காசி கதிர்காமவேலவர் திருவருட்பா
25. *14.* காசி பாகீரதியம்மை திருவருட்பா
26. *15.* காசி தாரகப்பத்து
27. *16.* சொக்கநாதர் திருவருட்பா

பத்துநூல்கள் காசியைப் பற்றியவை. ஆறு நூல்கள் பிற இடங்கள். இப்பதினாறையும் சேர்த்து ஒரே நூலாக சிவஞானதேசிகர் திருவருட்பாத் திரட்டு எனப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்கள்.

மேற்கூறிய 27 நூல்களுமே பண்டாரசாத்திரங்களாகக் கொள்ளப் பெறுகின்றன. இவற்றில் பல தோத்திர நூல்கள். பண்டார சந்நிதிகளாகிய குருமகாசந்நிதானங்களாற் செய்யப் பெற்றமையால் இவை பண்டார சாத்திரங்கள் எனப் பெயர் பெற்றன.

தருமபுர ஆதீனக் கோயில்கள்

தருமபுர ஆதீன நிர்வாகத்தில் 27 கோயில்கள் உள்ளன.

பாடல் பெற்ற கோயில்கள்	17
பாடல் பெறாதவை	6
கட்டளைகள்	3
மடம்	1
ஆக	27

பாடல்பெற்ற கோயில்கள் 17

1. திருநல்லூர்ப் பெருமணம் (ஆச்சாபுரம்)
2. தென்திருமுல்லைவாயில்
3. சீகாழி
4. புள்ளிருக்குவேளூர் (வைத்தீஸ்வரன்கோயில்)
5. திருநின்றியூர்
6. திருக்குறுக்கை
7. திருக்கருப்பறியலூர் (தலைஞாயிறு)
8. திருப்பனந்தாள்
9. திருவையாறு
10. கற்குடி (உய்யக்கொண்டார் மலை)
11. திருத்துருத்தி (குத்தாலம்)
12. திருவிளநகர்
13. திருப்பறியலூர்
14. திருக்கடவூர்
15. தருமபுரம்
16. திருநள்ளாறு
17. திருக்கோளிலி

பாடல்பெறாதவை 6

1. மயிலாடுதுறை - வள்ளலார் கோயில்
2. மயிலாடுதுறை - விசுவநாதர் கோயில்
3. திருபுவனம்
4. கருங்குயில்நாதன்பேட்டை
5. மணக்குடி
6. பேரளம்

கட்டளைகள் 3

1. திருவாரூர் - இராஜன் கட்டளை
2. மயிலாடுதுறை - குமரக் கட்டளை
3. திருவிடைமருதூர் - பிச்சக் கட்டளை

மடம் 1

மௌனமடம் - திருச்சிராப்பள்ளி

பாடல்பெற்ற தலங்கள் (கோயில்கள்) 17

1. திருநல்லூர்ப் பெருமணம்

சோழநாட்டில் காவிரி வடகரைத்தலம். ஊரின் பெயர் - நல்லூர். கோயிலின் பெயர் - பெருமணம். நல்லூர்ப் பெருமணம் என்பது தேவாரப் பெயர். இப்போது வழங்கும் பெயர் ஆச்சாபுரம். சிதம்பரம் - சீர்காழி சாலையில் கொள்ளிடம் ஆற்றுப் புதிய பாலத்தைத் தாண்டியதும் கொள்ளிடம் என்ற ஊர் வரும். அதிலிருந்து இடதுபுறம் 8 கி.மீ. தொலைவில் ஆச்சாபுரம், கொள்ளிடக்கரை அண்மையில் உள்ளது. ஞானசம்பந்தர் திருமணம் நிகழ்ந்த தலம். திருமணக் கோலத்துடன் சோதியுள் கலந்து முத்திபெற்ற தலம்.

2. தென் திருமுல்லைவாயில்

திருமுல்லைவாயில் என்ற பெயருடைய தலங்கள் இரண்டு. இரண்டுமே பாடல் பெற்றவை. இரண்டையும் வேறுபடுத்திக்காட்ட வடதிருமுல்லைவாயில், தென்திரு முல்லைவாயில் என வழங்கப் பெறுகின்றன. வட திருமுல்லைவாயில் சென்னைக்கு அருகில் உள்ளது. தொண்டநாட்டுத் தலம். தருமையாதீனக் கோயிலான தென்திருமுல்லை வாயில் சோழநாட்டில் காவிரி வடகரைத் தலம். கடற்கரை யோரத்தில் உள்ளது. சீர்காழியிலிருந்து 13 கி.மீ. பேருந்துப் பாதை. சம்பந்தர் பாடல் பெற்றது.

3. சீகாழி

சீகாழி - ஸ்ரீகாழி. சீர்காழி என இப்போது வழங்குகிறது. சிதம்பரத்துக்கு அண்மையில் உள்ளது. சோழநாட்டு, காவிரி வடகரைத் தலம். திருஞானசம்பந்தர் பிறந்த திருவூர். திருஞானசம்பந்தர் ஞானப்பாலுண்ட அற்புதம் நிகழ்ந்த தலம். சம்பந்தர் முதன்முதலில் பாடியருளிய தலம். தேவாரம் பிறந்த தலம். சைவத் திருமுறைகள் பிறந்த தலம்.

சம்பந்தர் பதிகம் 67, அப்பர் பதிகம் 3. சுந்தரர் பதிகம் 1, ஆக தேவாரப் பதிகங்கள் 71ஐப் பெற்றதலம். திருவாசகம், " பிடித்த பத்து ".

பிரமபுரம் - வேணுபுரம் - புகலி - வெங்குரு - தோணி புரம் - பூந்தராய் - சிரபுரம் - புறவம் - சண்பை - காழி - கொச்சைவயம் - கழுமலம் எனப் 12 பெயர்களைப் பெற்ற தலம்.

கணநாதநாயனார் பூமாலைத் தொண்டு (புஷ்பத் தொண்டு) செய்ததலம். மச்சுச் செட்டியார், காழிக் கங்கை மெய்கண்டார், சீகாழிச் சிற்றம்பல நாடிகள், கண்ணுடைய வள்ளலார், சீகாழி மறைஞான சம்பந்தர். சிதம்பரநாத முனிவர். சீகாழி அருணாசலக் கவிராயர் (இராமநாடகக் கீர்த்தனை பாடியவர்), காழித் தாண்டவராயர்(திருவாசகத்துக்கு அனுபூதி உரை எழுதியவர்) முதலிய சைவப் பெரியோர்கள் பலர் வாழ்ந்த ஊர்.

பட்டினத்தார் திருக்கழுமல மும்மணிக்கோவையும், பிள்ளையவர்கள் சீகாழிக்கோவையும் பாடிய தலம்.

வள்ளலாராதீனம் என்றொரு சைவ ஆதீனமே இருந்த திருவூர்.

குரு, இலிங்கம், சங்கமம் என்னும் மூன்று திருமேனி களாகவும் இத்தலத்தில் இறைவன் எழுந்தருளியுள்ளார்.

இலிங்க வடிவம் - பிரமபுரீஸ்வரர். பிரதானக் கோயிலின் இலிங்க மூர்த்தி.

குரு வடிவம் - தோணியப்பர். கோயிலுக்கு உள்ளே உள்ள கட்டுமலைமீதுஎழுந்தருளி யிருப்பவர். ஞானப்பால் தந்தவர்.

சங்கம வடிவம் - சட்டைநாதர். கட்டுமலையின் உச்சியிலிருப்பவர். விஷ்ணுவின் (வாமன அவதாரத்தின்) தோலைச் சட்டையாகப் போர்த்தியவர்.வீரத் திருக்கோலம். தெற்கு நோக்கிய இவர் சந்நிதியில் தேங்காய் உடைத்துப் படைப்பதில்லை. முழுத் தேங்காயாகவே (பூர்ண பலமாகவே) நிவேதிப்பது

வழக்கம். வெள்ளிக்கிழமைகளில்
நள்ளிரவு அர்த்தசாமபூசை சிறப்பு.

சட்டைநாதருக்கு இத்தலத்தில் தனிச்சிறப்பு. பிரம்மபுரீஸ்வரர் கோயில் '' சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் '' என்று இம்மூர்த்தியின் பேரால் சிறப்பாக வழங்கப் பெறுகிறது.

4. புள்ளிருக்குவேளூர்

வைத்தீஸ்வரன் கோயில் என்பது இப்போது வழங்கும் பெயர். புள்ளிருக்குவேளூர் என்ற பெயர் தேவாரத்திலும் பழைய நூல் வழக்குகளிலும் உள்ளது. சீர்காழிக்கும் மயிலாடுதுறைக்கும் இடையே உள்ள இத்தலம் சிறந்த பிரார்த்தனைத் தலம். சிவத் தலமாயினும் முருகப்பெருமானுக்கு இங்குத் தனிச்சிறப்பு. இத்தலத்தை வழிபட்டவரான முருகப் பெருமான் வழிபடப் பெறுபவராகவும் விளங்குகிறார்.

இறைவன் - வைத்தியநாதன். இறைவி - தையல் நாயகி. முருகப்பெருமான் - முத்துக்குமாரசுவாமி. வெறும் முத்துக் குமாரசுவாமியல்லர். செல்வமுத்துக்குமாரசாமி. செல்வமுத்துக் குமாரசுவாமி என்ற பெயருக்கேற்ப இக்கோயிலுக்கு 6105 ஏக்கர் நன்செய் நிலமும் 1176 ஏக்கர் புன்செய் நிலமும் சொத்தாக இருந்தும் ஆறாயிரம் மூட்டை நெல்கூடக் குத்தகை வருமானம் இல்லை. பொருட்செல்வ வருவாய் குறை வெனினும் ஞானச்செல்வத்துக்கு என்றும் குறைவில்லை.

வைத்தீஸ்வரன் கோயிலில் முதற்பூசை முத்துக்குமார சுவாமிக்கே. முத்துக்குமாரர் பூசைக்குப் பின்பே வைத்திய நாதருக்கும் தையல்நாயகிக்கும் வழிபாடு.

பிறவிப்பிணி மருத்துவராகிய வைத்தீஸ்வரர் உடற்பிணி மருத்துவராயும் விளங்கி அருள் பாலிக்கிறார். '' மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராத நோய் தீர்த்தருள வல்லான்'' என்று திருநாவுக்கரசர் தேவாரம் கூறுவது உண்மை. பச்சைக் கற்பூரமும் குங்குமப்பூவும் சமனெடை வைத்துச் சந்தனத்தில் அறைத்துச் செல்வமுத்துக்குமார சுவாமிக்கு அர்த்தயாம பூசையில் சாத்தப்பெறும் ''நேத்திரப்பிடி சந்தனம்''; அங்க

சந்தான தீர்த்தத்து மண், சடாயுகுண்டத்துத் திருநீறு, சித்தாமிர்த தீர்த்த நீர் இம்மூன்றையும் குழைத்துக் கடுகளவு மாத்திரையாகச் செய்யப்பெறும் " திருச்சாந்துருண்டை " என்ற மண் மருந்து ஆகிய இரண்டும் இத்தலத்து மருந்துப் பிரசாதங்களாம்.

திங்கள்தோறும் கார்த்திகை நாளில் செல்வமுத்துக் குமார சுவாமிக்குச் செய்யப்பெறும் அபிடேகம், தருமையாதீன குருமகாசந்நிதானம் தானே நேரில் இருந்து செய்வது, கண்கொள்ளாக் காட்சி. பன்னீர் அபிடேகம், சந்தனக்குழம்பு அபிடேகம் இங்கு நிகழ்வதுபோல் வேறெங்குமில்லை. சந்நிதானங்களின் பக்தி சிரத்தை மனவளம் ஆகியவற்றின் அறிகுறி இவ்வபிடேகம். இவ்வபிடேகப் பிரசாதம் மறுநாள் சென்னை, தியாகராய நகர், உஸ்மான் சாலையில் அமைந்துள்ள வேளூர் சமயப் பிரசார நிலையத்தில் சென்னை அன்பர்களுக்கு வழங்கப்பெறுகிறது.

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய தேவாரப் பதிகங்கள், அருணகிரிநாதர் திருப்புகழ், குமரகுருபரர் பாடிய முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் பாடிய திருவருட்பாப் பதிகங்கள் ஆகியவற்றைப் பெற்ற இத்தலம் சிறந்த பிரார்த்தனைத் தலமாக விளங்குகிறது.

5. திருநின்றியூர்

சோழநாட்டு, காவிரி வடகரைத்தலம். வைத்தீஸ்வரன் கோயிலுக்கும் மயிலாடுதுறைக்கும் இடையில் உள்ளது. சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப்பெற்றது. இவ்வூர்ப் பெயரைக் கவனித்தறிதல் வேண்டும். இது திருநின்றியூர். திருநின்றவூர் என்ற ஓர் ஊர் பூசலார் நாயனார் பிறந்தது தொண்டநாட்டில் உள்ளது. அது நின்ற ஊர், இது நின்றியூர்.

6. திருக்குறுக்கை

சோழநாட்டு, காவிரி வடகரைத்தலம். மயிலாடு துறைக்கு அருகில் 12 கி.மீ. தொலைவில் உள்ளது. மக்கள் பேச்சு வழக்கில் ' கொருக்கை ' என்று வழங்குகிறது.

அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்று. குறுக்கை வீரட்டம் எனப்படும். மன்மதனை எரித்த தலம். திருநாவுக்கரசரால் பாடப்பெற்றது.

7. திருக்கருப்பறியலூர்

சோழநாட்டு, காவிரி வடகரைத்தலம். வைத்தீஸ்வரன் கோயிலில் இருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ளது. தலைஞாயிறு என்று இப்போது வழங்குகிறது. திருஞான சம்பந்தராலும் சுந்தரராலும் பாடப்பெற்றது. சுந்தரர் பாடலில் இக்கோயில் " கொகுடிக் கோயில் " எனக் குறிப்பிடப் பெறுகிறது. கொகுடிமுல்லை இதன் தலவிருட்சம். "மலர்ச் சோலைக் குயில்பாட மயில்ஆடும் கொகுடிக் கோயில்" என்பது சுந்தரர் வாக்கு.

8. திருப்பனந்தாள்

மயிலாடுதுறை கும்பகோணம் சாலையில் இடையே உள்ள ஆடுதுறையிலிருந்து 9 கி.மீ. தொலைவில் உள்ளது. சோழநாட்டு, காவிரி வடகரைத்தலம். கோயில் பெயர் தாடகையீச்சுரம். தாடகை என்னும் பெண்ணிற்காக வளைந்தும், குங்கிலியக்கலய நாயனாருக்காக நிமிர்ந்தும் அடியவர்க்கு எளியவராய் இறைவன் இரங்கிய தலம். தலமரம் பனை. ஆதலின் பனந்தாள் எனப்பெயர் பெற்றது. திருஞானசம்பந்தர் பாடிய தலம். திருப்பனந்தாள் காசிமடம் உள்ள தலம்.

9. திருவையாறு

சோழநாட்டு, காவிரிவடகரைத்தலம். தஞ்சாவூரிலிருந்து 11 கி.மீ. காவிரிக்கரை. காவிரித்துறை, சிறப்பு. காவிரிக் கோட்டம் என்றே கோயிலின் பெயர். "காவிரிக் கோட்டத்து ஐயாறுடைய அடிகளோ " என்பது சுந்தரர் தேவாரம். சூரியபுட்கரிணி, சந்திரபுட்கரிணி, கங்கை, இறைவனுடைய சடைக்கங்கை, பாலாறு (அம்மையின் திருமுலைப்பால்), நந்திதீர்த்தம் (திருநந்திதேவரின் வாய்நுரை நீர்) ஆகிய ஐந்து தெய்விக தீர்த்தங்களும் நதி வடிவாக விளங்குவதால்

பஞ்சநதீஸ்வரம், ஐயாறு என்று பெயர். மூவராலும் பாடப் பெற்றது. இறைவன் தன்னைத்தானே பூசித்தது. "ஐயாறதனில் சைவனாகியும்" என்பது மாணிக்கவாசகர் வாக்கு, திருவாசகம். சப்த ஸ்தானத் தலங்களுள் ஒன்று. திருப்பழனம், திருச்சோற்றுத் துறை, திருவேதிக்குடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் என்பன மற்ற ஆறு ஊர்கள். ஐயாறப்பர் இவ்வாறு ஊர்களுக்கும் சென்று வருவார். ஆறு ஊர் மூர்த்திகளும் உடன்வர, ஏழு மூர்த்திகளும் ஐயாற்றில் காவிரி மணலில் எழுந்தருளி சப்தஸ்தான உற்சவம் ஏழூர்த்திருவிழா நிகழும்.

கர்நாடக இசைக்குப் புகழ்பெற்ற திருவையாறு தியாகப் பிரம்மம் (தியாகராசசுவாமிகள்) விழாவும் தமிழ்க் கல்விக்குப் புகழ்பெற்ற திருவையாறு அரசர் கல்லூரியும் இத்தலத்தில் சிறந்து விளங்குபவை.

"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே", " திருவையாறகலாத செம்பொற் சோதி" என்பன இத்தலத் தேவாரத்தின் சுவையான தொடர்கள்.

" அதிகாரிச்சி குஞ்சரன் எருதன் குஞ்சரமல்லி, "அதிகாரிச்சி சோமையன் அமித்ரமல்லி" என்று இரண்டு பெயர்களைத் திருவையாற்றுக் கல்வெட்டு ஒன்று குறிப்பிடு கிறது. அதிகாரிச்சி என்று குறிப்பிடுவதைக் கவனிக்க வேண்டும். அதிகாரி - ஆண். அதிகாரிச்சி - பெண். அக்காலத்திலேயே பெண்கள் அதிகாரம் பார்த்திருக் கிறார்கள், அதிகாரிகளாக இருந்திருக்கிறார்கள். அதிகாரிச்சி என்று வழங்கப் பெற்றிருக்கிறார்கள். இன்னொன்றும் கவனிக்க வேண்டும். மகளிர் தம் கணவர் பெயரைத் தம் பெயரோடு சேர்த்து வழங்குவது இக்கால வழக்கம் மட்டுமன்று, அக்காலத்திலேயே உள்ளது என்பதும் இவ்விரு அதிகாரிச்சிகளின் பெயர்களால் தெரியவருகிறது. "சாரதா நம்பியாரூரன்" என இக்காலத்து வழங்குவதுபோல, அக்காலத்தில் " குஞ்சரன் எருதன் குஞ்சரமல்லி ", " சோமையன் அமித்ரமல்லி " என வழங்கினர். இப்போது

கணவர் பெயர் பின்னால் சேர்க்கப்பெறுகிறது. அப்போது முன்னால் சேர்க்கப்பெற்றது.

10.திருக்கற்குடி

இதுவரை சொல்லப்பெற்ற 9 தலங்களும் காவிரி வடகரைத் தலங்கள். இனி வருபவை காவிரி தென்கரைத் தலங்கள்.

கற்குடி. சோழநாட்டு, காவிரி தென்கரைத்தலம். திருச்சிராப் பள்ளிக்கு அருகில் மேற்கே 5 கி.மீ. தொலைவில் உள்ளது. திருச்சிராப்பள்ளியிலிருந்து நகரப் பேருந்தில் செல்லலாம். உய்யக்கொண்டான்மலை என்பது இப்போது வழங்கும் பெயர். அருகில் ஓடும் ஆறு உய்யக்கொண்டான் ஆறு. குடமுருட்டி என்பதும் இவ்வாற்றுக்குப் பெயர். தஞ்சாவூர் மாவட்டத்திலும் குடமுருட்டி ஆறு உண்டு. அது வேறு. இது வேறு. தண்ணீர் முகக்கும் குடங்களை உருட்டிக்கொண்டு செல்லும் அளவுக்கு நீரோட்டம் வேகமாதலின் இவ்வாறுகள் குடமுருட்டி எனப் பெயர் பெற்றன. கல்வெட்டில் இதற்கு **வயிரமேகன் வாய்க்கால்** என்று பெயர்.

கல்லின்மீது - மலையின்மீது - இறைவன் குடி கொண்டிருப்பதால் கற்குடி என்று பெயர். உயரங்குறைந்த மலை. ஏறத்தாழ ஐம்பதடி உயரம் இருக்கும். கோயிலின் பெயர் - உய்யக்கொண்டீச்சரம். இறைவன் - உய்யக் கொண்டார். வடமொழியில் உஜ்ஜீவனநாதர். உய்யக் கொண்டார், உய்யக்கொண்டார்மலை, உய்யக்கொண்டான் ஆறு என்ற (ஊர் - மலை - இறைவன் - ஆறு), இவற்றின் பெயர்கள் ஒன்றை ஒட்டி ஒன்று அமைந்தவை. ‘கற்குடி விழுமியார் ’ என்று அப்பர் தேவாரத்தில் குறிக்கப்பெறும் பெயர் பின்னாளில் கல்வெட்டிலும் ஆளப்பெறுகிறது.

அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பெற்றதும், குமரகுருபாததாசரால் குமரேச சதகம் பாடப்பெற்றதும், கிருபானந்த வாரியார் திருப்பணியால் புகழ்பெற்றதும், கிருபானந்தவாரியாருக்குப் புகழ் அளித்ததுமான முருகன்

தலம் வயலூர் கற்குடிக்கு அருகிலேயே உள்ளது. திருச்சிராப்பள்ளியிலிருந்து வயலூர் செல்வோர் கற்குடி (உய்யக்கொண்டான்மலை) வழியாகவே செல்ல வேண்டும்.

11. திருத்துருத்தி (குத்தாலம்)

சோழநாட்டு, காவிரி தென்கரைத்தலம். குத்தாலம் என்பது இப்போது வழங்கும் பெயர். ஆற்றிடைக்குறைக்குத் துருத்தி என்று பெயர். இத்தலம் ஆற்றிடைக்குறை ஆதலின் திருத்துருத்தி எனப் பெயர் பெற்றது. முன்பு இதன் இருபுறமும் ஓடிய காவிரி இப்போது இதன் வடபுறம் மட்டும் ஓடுகிறது. தலமரம் ஒரு வகை ஆத்திமரம். உத்தாலமரம் என்று பெயர். அது குத்தாலம் என மருவி வழங்குகிறது. மூவர் பாடலும் பெற்ற தலம். மயிலாடு துறைக்கும் கும்பகோணத்துக்கும் இடையில் உள்ளது.

12. திருவிளநகர்

சோழநாட்டு, காவிரி தென்கரைத்தலம். மயிலாடு துறையிலிருந்து 6 கி.மீ. இறைவன் - துறை காட்டும் வள்ளல். இறைவி - வேயுறுதோளி. சம்பந்தரால் பாடப்பெற்றது.

13. திருப்பறியலூர்

சோழநாட்டு,காவிரி தென்கரைத்தலம். இப்போது வழங்கும் பெயர் பரசலூர். மயிலாடுதுறை தரங்கம்பாடிக்கு இடையே செம்பொன்னார் கோயிலுக்கு அருகே 2 கி.மீ. தொலைவில் உள்ளது. அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்று. தக்கனைச் சம்கரித்த தலம். சம்பந்தர் பாடல்பெற்றது.

14. திருக்கடவூர்

சோழநாட்டு, காவிரி தென்கரைத்தலம். மயிலாடுதுறை தரங்கம்பாடி சாலையில் உள்ளது. அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்று. மார்க்கண்டேயருக்காக எமனை உதைத்தருளிய தலம். அமிர்தகடமே சிவலிங்கமாயிருத்தலின் அமிர்த கடேசுவரர் என்பது இறைவன் பெயர். இறைவி அபிராமி. காலசம்காரமூர்த்தி சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது.

குங்குலியக்கலய நாயனாரும் காரிநாயனாரும் தொண்டு செய்து முத்தி பெற்ற தலம். மூவர் தேவாரமும் பெற்ற தலம். திருக்களிற்றுப்படியார் என்னும் சித்தாந்த சாத்திரம் இயற்றிய உய்யவந்த தேவநாயனார் பிறந்த தலம். அபிராமிபட்டர் அபிராமி அந்தாதி பாடி அம்மையின் அருள் பெற்ற தலம். அபிராமி அந்தாதி சிறந்த பாராயண நூல். இத்தலத்தில் நவக்கிரக சந்நிதி இல்லை. கோளிலித் தலம். சிலப்பதி காரத்தில் வரும் மாதவியின் இல்லம் இத்தலத்தில் தேரோடும் வீதியில் உள்ளது. அன்பர்கள் தங்கள் 60ஆம் ஆண்டு நிறைவை, ஆயுள் ஓமம் முதலியன செய்து, இத்தலத்தில் கொண்டாடுவது பெருவழக்காயுள்ளது. இதற்கான நவீன வசதிகள் இப்போது அதிகரித்து வருகின்றன.

15. தருமபுரம்

தருமபுர ஆதீனம் உள்ள தருமபுரம் வேறு. இத்தருமபுரம் வேறு. இது காரைக்காலுக்கு அருகே 1 கி.மீ. தொலைவில் உள்ளது. திருக்கடவூரில் மார்க்கண்டேயரைப் பற்றச் சென்ற எமதருமன் அமிர்தகடேசரின் மீது பாசத்தை வீசிய பாவத்திற்காக இத்தலத்தில் இறைவனைப் பூசித்ததால் தருமபுரம் எனப் பெயர் பெற்றது. இறைவனும் தருமபுரீஸ்வரர் எனப் பெயர் பெற்றார். ஞானசம்பந்தரால் பாடப்பெற்ற தலம். திருநீலகண்ட யாழ்ப்பாணரின் அன்னையார் பிறந்த தலம். திருஞானசம்பந்தரின் இசை, திருநீலகண்ட யாழ்ப்பாணரின் யாழில் அடங்காதுபோனது இத்தலத்தில் தான். அப்பண்ணிசைக்கு "யாழ்முரி" என்று பெயர் உண்டாயிற்று. இறைவனும் யாழ்முரிநாதர் எனப் பெயர் பெற்றார்.

16. திருநள்ளாறு

காரைக்காலிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது. மூவராலும் பாடப்பெற்றது. சம்பந்தரின் பச்சைப்பதிகம் பெற்ற அற்புதத்தலம். மதுரையில் திருஞானசம்பந்தர் அனல்வாதத்தின் போது எழுதியிட்ட "போகமார்த்த பூண்முலையாள்" என் னும்

பதிகஏடு அனலில் வேகாமல் பச்சையாகவே இருந்தமையால் அப்பதிகம் பச்சைப்பதிகம் என்று பெயர் பெற்றது. இது சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று.

இத்தலத்தில் சனைச்சரனின் (சனீஸ்வரன்) சந்நிதியும் சனிப்பெயர்ச்சி விழாவும் மிகச் சிறப்பானவை. சனியின் பெயரான 'சனைச்சரன்' என்பதே மக்களின் அறியாமையால் 'சனீஸ்வரன்' ஆகிவிட்டது.

தன்னைப்பற்றிய சனிதோஷம் நீங்க நளன் வழிபட்ட தலம். சனி வழிபட்டுப் பேறுபெற்ற இத்தலத்தில் இன்று சனி பெரிதும் வழிபடப்பெறுகிறது. சனி வழிபாடு தங்கக் காக்கை வாகனம் அளவுக்குப் பெருகியுள்ளது. சனிப் பெயர்ச்சியன்று நளதீர்த்தத்தில் நீராட மிகப் பெருங்கூட்டம் கூடும். இத்தலத்தில் நவக்கிரக சந்நிதி இல்லை. இதுவும் கோளிலித்தலம். இங்கு சனி அனுக்கிரக மூர்த்தியாக விளங்குகிறார்.

புதுச்சேரி மாநில அரசின் நிர்வாகத்திலுள்ள இக்கோயிலின் அறங்காவலருள் ஒருவராகத் தருமபுர ஆதீனத் தம்பிரான் ஒருவரும் இருக்கிறார். வழிபாடு, விழாக்கள் முதலியன இத்தம்பிரான் சுவாமிகளின் வழி காட்டலிலும் மேற்பார்வையிலுமே நடைபெறுகின்றன.

17. திருக்கோளிலி

சோழநாட்டில் காவிரி தென்கரைத்தலம். திருவாரூரி லிருந்து 19 கி.மீ. தொலைவில் உள்ளது. கோள்களாகிய கிரகங்களுக்கு இங்கு வலிமை இல்லை. நவக்கிரகங்கள் ஒன்பதும் ஒரே திசையை (தென்திசையை) நோக்கியுள்ளன. கோள்கள் தம் குறைகள் நீங்கி இறைவனின் அருள்பெற்ற தலமாதலின் திருக்கோளிலி எனப் பெயர் பெற்றது. திருக்கோளிலி என்பதே மக்களின் பேச்சு வழக்கில் திருக்குவளை என மருவி வழங்குகிறது.

இதுவும் சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. மூவராலும் பாடப்பெற்றது. சுந்தரர் குண்டையூரில் பெற்ற நெல்லை ஆரூரில் பெறச் செய்த அற்புதம் நிகழ்ந்த தலம். குண்டையூர் இங்கிருந்து 5 கி.மீ.

தமிழ்நாட்டின் முதலமைச்சராக விளங்கும் கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள் திருக்குவளை(என வழங்கும் இத்திருக்கோளிலி)யில் பிறந்தவரே. அவரது குடும்ப முன்னோர்கள் திருக்கோளிலிக் கோயிற் பணியாளர்களாக இருந்தவர்களே.

பாடல்பெறாத கோயில்கள் 6

1. மயிலாடுதுறை - வள்ளலார் கோயில்

மயிலாடுதுறை மயூரநாதர் கோயில் பாடல்பெற்ற தலம். இது அதனின் வேறானது: மயிலாடுதுறையிலுள்ள வேறு கோயில்களுள் ஒன்று. சுவாமி பெயர் வழிகாட்டும் வள்ளல். இதனாலேயே வள்ளலார் கோயில் எனப் பெயர் பெற்றது. வடமொழிப் பெயர் வதாந்நியேசுவரர். அம்மை ஞானாம்பிகை. இங்குள்ள தட்சிணாமூர்த்தி நந்தியின்மீது அமர்ந்திருப்பது இத்தலத்தின் தனிச்சிறப்பு.

2. மயிலாடுதுறை - விசுவநாதர் கோயில்

மயிலாடுதுறையில் வள்ளலார் கோயில் போன்றே இதுவும் ஒரு தனிக்கோயில். சுவாமி காசி விசுவநாதர் என்பதால் கோபுரம் முதலியன வடநாட்டு அமைப்பில் அமைந்தது.

3. திருபுவனம்

கும்பகோணம் திருவிடைமருதூர் சாலையில் அவ்விரண்டுக்கும் இடையே உள்ளது. திருபுவனவீரபுரம் என்ற பெயரே திருபுவனம் என்று மருவி வழங்குகிறது. இத்தலத்து இறைவன் பெயர் கம்பஹரேஸ்வர். தமிழில் நடுக்கம் தீர்த்த பெருமான். தேவர்களது நடுக்கத்தைத் தீர்த்ததால் இப்பெயர் ஏற்பட்டது. கம்பம் - நடுக்கம்.

(எடுத்துக்காட்டு: பூகம்பம் - நிலநடுக்கம்). அம்மை அறம் வளர்த்த நாயகி. வடமொழியில் தர்மசம்வர்த்தினி.

இரணிய வதைக்குப்பின்னும் நரசிங்கத்தின் வேகம் அடங்காமல் ஆர்ப்பாட்டம் செய்தபோது இத்தலத்திறைவர் சரபப்பறவை வடிவங்கொண்டு அதை அடக்கியதால் சரபேஸ்வரர் என்றும் பெயர் பெற்றார்.

4. கருங்குயில்நாதன் பேட்டை

மயிலாடுதுறைக்கு அருகில் 2 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்திரன் குயில் வடிவாகிப் பூசித்ததால் இத்தலம் கருங்குயில்நாதன்பேட்டை என்ற பெயரைப் பெற்றது. "புரந்தனார் ஒரு பூங்குயில் ஆகி மரந்தனில் ஏறினார் என்றுந்தீபற " என்னும் திருவாசகம் (302) இவ்வரலாற்றைக் குறிப்பிடுகிறது. கருங்குயில்நாதன்பேட்டை இப்போது கர்ணாப்பேட்டை என மருவி வழங்குகிறது. கருணாபுரம் என்றும் பெயர். மிகச் சிறிய கோயில்.

5. மணக்குடி

கருங்குயில்நாதன் பேட்டைக்குக் கிழக்கே 1 கி.மீ. தொலைவிலும் தருமபுரத்துக்கு அண்மையில் வடகிழக்கு மூலையில் 1 கி.மீ. தொலைவிலும் இத்தலம் உள்ளது. மிகச்சிறிய அழகிய கோயில்.

6. பேரளம்

மயிலாடுதுறை திருவாரூர் சாலையில் இவ்விரண்டுக்கு மிடையே உள்ளது. இது ஓர் இருப்புப்பாதை நிலையமும் ஆகும். பெரிய ஊர். ஒரு காலத்தில் பெரிய உப்பளமாக இருந்திருக்கலாம். பேர்-அளம் - பேரளம். அளம் - உப்பளம். பாடல் பெறாவிடினும் இது பழமையான தலம்.

கட்டளைகள் 3

1. திருவாரூர் - இராஜன் கட்டளை

திருவாரூர் - பஞ்சபூதத்தலங்களுள் ஒன்று. பிருதுவித் தலம். சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. கோளிலித்

தலங்களில் ஒன்று. சோழமன்னர் தலைநகரங்கள் ஐந்தனுள் ஒன்று. மூவராலும் பாடப்பெற்ற தலம். பரவையார் பிறந்த தலம். சுந்தரர் பரவையாரை மணம்புரிந்து வாழ்ந்த தலம். சுந்தரருக்காகப் பரவையாரிடம் இறைவன் தூது சென்ற தலம். சுந்தரர் திருமுதுகுன்றத்தில் பெற்ற பொன்னை அங்கு மணிமுத்தாற்றில் இட்டு, இங்கு திருவாரூரில் கமலாலயக் குளத்தில் எடுத்த அற்புதம் நிகழ்ந்த தலம். சுந்தரரின் அன்னையார் இசைஞானியார் பிறந்த தலம். நமிநந்தியடிகள் நீரால் விளக்கெரித்த தலம். பெரியபுராணம் பாடும் சேக்கிழார், நாட்டுச் சிறப்புக்குச் சோழநாட்டை எடுத்துக் கொண்டவர், அடுத்த நகரச்சிறப்புக்குத் திருவாரூரையே எடுத்துக் கொண்டார். மனுநீதிச்சோழன் நீதி வழங்கிய தலம். வரலாற்றுச் சிறப்பு, இலக்கியச்சிறப்பு, சமயச்சிறப்பு எனத் திருவாரூரின் சிறப்புகள் பலவற்றை அடுக்கிக்கொண்டே போகலாம். திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன் என்று பாடுகிறார் சுந்தரர். தமிழ்த்தென்றல் திரு.வி.க.வின் பூர்விகம் திருவாரூரே. திரு.வி.க. என்பதில் திரு என்பது திருவாரூரைக் குறிப்பது.

சைவ உலகில் மிகச்சிறப்பு வாய்ந்த இத்திருவாரூர்த் திருக்கோயில் தமிழக அரசின் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் நிர்வாகத்தில் உள்ளது. எனினும் இக்கோயில் கட்டளைகளில் ஒன்றான இராஜன் கட்டளை தருமபுர ஆதீனத்திற்குரியது.

திருவாரூர்த் திருக்கோயிலில் 13 கட்டளைகள் இருக்கின்றன. இவற்றுள் அபிஷேகக் கட்டளை,அன்னதானக் கட்டளை, இராஜாங்கக் கட்டளை, உள்துறைக் கட்டளை என்பன மிகச் சிறந்தவை, பெரியவை. இவற்றுள் இராஜாங்கக் கட்டளை (இராஜன் கட்டளை) தருமபுர ஆதீனத்தால் நிர்வகிக்கப்பெறுவது. இக்கட்டளையின் சொத்துகள் தருமபுர ஆதீனத்தின் பொறுப்பிலேயே உள்ளன. இதன் வரவு செலவு நிர்வாகத்தைத் தருமபுர ஆதீனத்தின் கட்டளைத் தம்பிரான் ஒருவர் கவனிக்கிறார்.

2. மயிலாடுதுறை - குமரக்கட்டளை

தருமபுர ஆதீனம் உள்ள தருமபுரத்திற்கு அடுத்த தலமாகிய மயிலாடுதுறை திருவாவடுதுறை ஆதீனத்தின் கோயில். இதைப்பற்றித் திருவாவடுதுறை ஆதீன வரலாற்றில் கூறினோம். இக்கோயிலில் உள்ள சுப்பிரமணியர் சந்நிதி மட்டும் தருமபுர ஆதீனத்தின் பரிபாலனத்திற்குரியது. குமரக்கட்டளை என வழங்கப் பெறுகிறது. கோயில் திருவாவடுதுறை ஆதீனத்திற்கும், கோயிலின் ஒரு பகுதி (குமரன் சந்நிதி) மட்டும் தருமபுர ஆதீனத்திற்கும் உரியதாக அமைந்தது இதன் சிறப்பு.

3. திருவிடைமருதூர் - பிச்சக்கட்டளை

திருவிடைமருதூர்க் கோயில் திருவாவடுதுறை ஆதீனக் கோயிலாகும். அவ்வாதீன வரலாற்றில் இதனைப் பற்றிக் கூறியுள்ளோம். இக்கோயிலில் 'பிச்சைக்கட்டளை' என்ற கட்டளை மட்டும் தருமபுர ஆதீனத்தால் நடத்தப் பெறுகிறது.

தருமபுர ஆதீனக் கிளைமடங்கள்

மௌனமடம் - திருச்சிராப்பள்ளி

சுத்தசைவ பதினெண் ஆதீனங்கள் என்ற பட்டியலில் பன்னிரண்டாவதாக உள்ள சாரமாமுனிவர் ஆதீனம் (திருச்சிராப்பள்ளி) என்பது இதுதான். முற்காலத்தில் தனி ஓர் ஆதீனமாக இருந்த இது பிற்காலத்தில் தருமபுர ஆதீனத்தின் நிர்வாகத்தில் சேர்ந்துவிட்டது. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் 1795 அல்லது அதற்குச் சிறிதுமுன்பு தருமபுர ஆதீன ஆட்சிக்கு வந்திருக்க வேண்டும். இப்போது தருமபுர ஆதீனத்தின் கிளைமடங்களில் ஒன்றாக இருந்து வருகிறது.

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை தெற்கு வீதியில் மௌனமடத்தின் பிரதான வாயில் இருக்கிறது. மடம் மலைச்சரிவில் அமைந்துள்ளது. மலைக்கோயிலுக்கு ஏறிச் செல்லும் படிக்கட்டிலும் மேலே ஒரு வாயில் இருக்கிறது. இவ்விரண்டு வாயில் வழியாகவும் மடத்திற்குட் செல்லலாம்.

மேலே மலைவாசற் படிக்கட்டிலிருந்து நுழையும் வாயிலின் அருகே மடத்தினுள் சுப்பிரமணியர் சந்நிதி ஒரு 'சிறிய கோயிலாக உள்ளது. அதுவே சாரமாமுனிவர் நிட்டைகூடிச் சிவப்பேறு பெற்ற இடம். அவரது ஜீவ சமாதியின் மேல்தான் சுப்பிரமணியர் கோயில் அமைந்துள்ளது.

சாரமாமுனிவரும் அவருக்குப்பின் வந்த மௌன குருவும் திருமூலர் மரபில் வருபவர்கள். "மூலன் மரபில் வரு மௌன குருவே" என்று தாயுமானவர் பாடுகிறார். தாயுமானவர் மௌனகுருவின் மாணாக்கர். தாயுமானவர் மடம் (தாயுமானவர் வசித்த இடம்), மௌன மடம் உள்ள அதே வீதியில்தான் உள்ளது. இப்போது தனியார் சொத்தாக, வீடாக, ஆகிவிட்டது. தாயுமானவர் மடமாக இல்லை. திருச்சிராப்பள்ளி சைவ சித்தாந்த சபையும் அதே வீதியில் உள்ளது. சைவ சித்தாந்த சபைக்கு அடுத்த மேல்புறக் கட்டிடம்தான் தாயுமானவர் மடமாக இருந்தது, இவ்வீதியில்தான் சில காலம் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களும் வசித்தார். மௌன மடம், தாயுமானவர் மடம், பிள்ளையவர்கள் வசித்த இல்லம், சைவசித்தாந்த சபை ஆகிய நான்கும் மலைக் கோட்டை தெற்கு வீதியில் உள்ளன. அண்மைக் காலத்தில் தருமபுர ஆதீனத்தில் சேர்ந்து தம்பிரானாக விளங்கும் ஸ்ரீமத் திருஞானசம்பந்தத் தம்பிரான் சுவாமிகள் எம்.ஏ., மலைக் கோட்டை தெற்கு வீதியில் உள்ள பண்பட்ட பரம்பரைச் சைவக் குடும்பம் ஒன்றிலிருந்து சென்றவரே.

தாயுமானவர் கோயிலுக்குரிய கட்டளைகள் பல மௌன மடத்தில் உள்ளன. மௌனமடம் கட்டளை என்று அதற்குப் பெயர். தருமபுர ஆதீனத்தின் தம்பிரான் சுவாமிகள் ஒருவர் திருச்சிராப்பள்ளி மௌன மடத்தில் இருந்து கொண்டு, மடத்தையும் கட்டளைகளையும் நிர்வகித்து வருவது வழக்கம். இப்போது 26-ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் முன்பு ஒரு சமயம்

மௌனமடம் கட்டளைத் தம்பிரானாக இருந்தவர்களே. மௌனமடம் தம்பிரான்கள் பெயருக்குமுன் "மௌன" என்ற சிறப்பு அடைமொழி சேர்த்து வழங்கப்பெறும். இப்போது கட்டளைத் தம்பிரானாக உள்ளவர்கள் **ஸ்ரீமத் மௌன குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்** அவர்கள். முனைவர் பட்டம் பெற்றவர்.

ஏனைய ஊர்களிலுள்ள கிளைமடங்கள்

தருமபுர ஆதீனக் கோயில்கள் உள்ள எல்லாத் தலங்களிலும் கிளைமடங்கள் உள்ளன. கட்டளை மடங்கள் என அவை வழங்கும். இவை தவிரச் சிதம்பரம், மதுரை, திருநெல்வேலி சிந்துபூந்துறை, திருச்செந்தூர், சுசீந்திரம், பாபநாசம்,சிவசைலம், எருக்கந்துறை, ஆலவேலி முதலிய பல தலங்களிலும் கிளைமடங்கள் உள்ளன. கிளைமடங்கள் நிர்வாகிகளாகத் தம்பிரான்கள் உள்ளனர். தம்பிரான்கள் இல்லாத இடங்களில் தகுந்த சைவ அன்பர்கள் நிர்வாகியாக நியமிக்கப் பெற்றுள்ளனர்.

தருமபுர ஆதீனத் தம்பிரான்கள், முனிவர்கள்

தருமபுர ஆதீனத்தில் தம்பிரான்கள் முனிவர்கள் பலர் சிறப்பாக விளங்கியுள்ளனர். பொதுவாக இவர்களை ஆதீனச் சீடர்கள், திருக்கூட்டத்து அடியார்கள் எனலாம்.

1. ஆபத்துத்தாரணர்
2. குமரகுருபரர்
3. வெள்ளியம்பலவாண முனிவர்
4. சம்பந்த சரணாலயர்
5. படிக்காசுத் தம்பிரான்
6. காவை அம்பலவாணத் தம்பிரான்
7. தமிழாகர முனிவர்
8. அழகிய திருச்சிற்றம்பல தேசிகர்
9. புன்கூர் சிவப்பிரகாச முனிவர்
10. சங்கரகுமார முனிவர்
11. சிவானந்த முனிவர்
12. அட்சயலிங்க சுவாமிகள்

13. சிதம்பரநாத முனிவர்
14. முத்துக்குமாரத் தம்பிரான்
15. தில்லைநாயகத் தம்பிரான்
16. ஆறுமுக சுவாமிகள்
17. உலகநாத வள்ளல்
18. சிதம்பரநாத சுவாமிகள்
19. பரமசிவ சுவாமிகள்
20. சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
21. அருணாசலத் தம்பிரான்
22. பழனியப்பத் தம்பிரான்
23. சிதம்பரநாதத் தம்பிரான்
24. சண்முக சுவாமிகள்
25. சட்டைநாதத் தம்பிரான்
26. காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்
27. காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள்
28. காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்

1. ஆபத்துத்தாரணர்

குருஞானசம்பந்தரது சீடர்கள் பலருள் இவரும் ஒருவர். இவர் பிறந்த ஊர் இராமநாதபுரம் மாவட்டத்து மருதூர். இப்போது நயினார்கோயில் என்று வழங்குகிறது. மருதூர் ஆபத்துத்தாரணர் என இவர் வழங்கப்பெறுவார். **பூகோள விலாசம்** என்றொரு நூலை இவர் இயற்றினார். 899 கண்ணிகளால் இயன்ற கலிவெண்பா. அண்டங்கள், புவனங்கள், கண்டங்கள், திசைக்காவலர்கள், விளை பொருள்கள், மக்களியற்கைகள் முதலியன இந்நூலில் விரிவாகக் கூறப்பெறுகின்றன. யோசனை என்னும் நீட்டலளவையின் விளக்கம் கூறப்பெற்றுள்ளது. பூகோள விலாசம் என்ற பெயரே நன்றாக இருக்கிறதல்லவா? அந்நாளிலேயே மடத்துச் சுவாமிகள் ஒருவர் பூகோள நூல் இயற்றியிருக்கிறார் என்றால் அக்காலத்திய பெரியோர்களுக்கு இயற்கையைப் பற்றிய அறிவு எவ்வளவு இருந்தது என்பதை நன்கறியலாம்.

2. குமரகுருபர சுவாமிகள்

4-ஆம் பட்டம் மாசிலாமணி தேசிகரின் சீடர். சமய உலகம், இலக்கிய உலகம் ஆகிய இரண்டிலும் புகழ் பெற்றவர். அவருடைய பிரபந்தத்திரட்டு மிகவும் புகழ் பெற்றது. காசியில் குமாரசாமி மடத்தை நிறுவியவர். அதன் கிளைமடமாகப் பின்னாளில் திருப்பனந்தாள் காசிமடம் நிறுவப்பெற்றது. குமரகுருபரரின் வரலாற்றை, அடுத்து வரும் திருப்பனந்தாள் காசிமடத்தின் வரலாற்றிற் காண்போம்.

3. வெள்ளியம்பலவாணர்

வெள்ளியம்பலவாண முனிவர் என்றும் வெள்ளியம்பல வாணத் தம்பிரான் என்றும் இவர் வழங்கப் பெறுவார். தருமபுர ஆதீனத்தில் குமரகுருபரருக்கு அடுத்த இரண்டாவது இடம் இவருடையது எனலாம். திருநெல்வேலி மாவட்டத்திற் பிறந்த இவர் இளமையிலேயே தருமபுர ஆதீனத்திற்கு வந்து 4-ஆம் பட்டம் மாசிலாமணி தேசிகரிடம் யாத்திரா காஷாயம் பெற்றார். காசிக்குச் சென்று குமரகுருபரரிடம் இலக்கண இலக்கிய சைவ நூல்களைக் கற்றுத் தமிழிலும் வடமொழி யிலும் வல்லவரானார். மீண்டும் தருமபுரம் வந்து 5-ஆம் பட்டம் ஞானசம்பந்த தேசிகரிடம் மந்திரகாஷாயம் பெற்றுத் தம்பிரான் ஆனார். திருவெண்காட்டிலும் வைத்தீசுவரன் கோயிலிலும் சில திருப்பணிகளைச் செய்தார். வைத்தீசுவரன் கோயிலில் தருமபுர ஆதீனக் கிளைமடத்தில் கட்டளைத் தம்பிரானாகவும் இருந்தார்.

திருநெல்வேலி சிந்துபூந்துறையிலிருக்கும் தருமபுர ஆதீனக் கிளைமடத்தில் தங்கி மாணாக்கர் பலருக்குப் பாடஞ் சொல்லிக் கொண்டிருந்தார். துறைமங்கலம் சிவப்பிர்காச சுவாமிகள் தம் தம்பியார் கருணைப்பிரகாசர் வேலையர் ஆகிய இருவருடனும் வந்து இவரிடம் பாடங் கேட்டார். சம்பந்த சரணாலயரும் காவை அம்பலவாணத் தம்பிரானும் இவரிடம் பாடங்கேட்டவர்களே. இவரியற்றிய நூல்கள்:

1. ஞானசம்பந்த தேசிகர் சமூக மாலை
2. ஞானசம்பந்த தேசிகர் தாலாட்டு
3. ஞானசம்பந்த தேசிகர் திருப்பள்ளி எழுச்சி

(இம்மூன்றும் குருதோத்திரங்கள்)

4. முத்திநிச்சயச் சிற்றுரை
5. **முத்திநிச்சயப் பேருரை** (வெள்ளியம்பலவாண மாபாடியம்)
6. ஞானாவரண விளக்கம் மாபாடியம்
7. மிருகேந்திரம் - தமிழ் மொழிபெயர்ப்பு.

வெள்ளியம்பலவாணர் தமிழிலும் வடமொழியிலும் வல்லவர். பேருரை (பாடியம்) செய்வதில் வல்லவர். இவரது பாடியங்களைப் பார்த்தபின்னரே மாதவச் சிவஞான முனிவர் சிவஞான மாபாடியத்தை எழுதியருளினார் என்பது செவிவழிச் செய்தி.

வெள்ளியம்பலவாண மாபாடியம் பல செய்திகளுக்கு (விஷயங்களுக்கு) ஒரு பெரிய சுரங்கம். சந்தான வரலாறு சந்தானகுரவர் சிறப்பு ஆகிய செய்திகளை முன்னரே எடுத்துக் காட்டியுள்ளோம். தமிழ்நூற் பரப்பையும் வடநூற் பரப்பையும் முனிவர் கரைகண்டவர். தம் காலத்து வழங்காது இறந்துபட்ட நூல்கள் பலவற்றை முத்திநிச்சயப் பேருரையில் ஓரிடத்தில் பட்டியலிட்டுக் காட்டுகிறார். அப்பகுதியை அப்படியே எடுத்துக்காட்டுகிறோம்.

> ''இவருள் திருமூலதேவர் சந்தான நூலாக இக்காலத்தும் அடுத்து வழங்குவது திருமந்திரமாலையாம். இக்காலம் அடுத்து வழங்காது இறந்தன ஆதிமெய்ஞ்ஞானம், பழுதறு மெய்ஞ்ஞானம், ஒளிவிளங்கு மெய்ஞ்ஞானம், சிவாநந்த விளக்கம், நாதாந்தம், அறிவானந்தம், தற்பிரகாசம், பதியோகமாலை, சிவாநந்த நிலயம், அத்துவசித்தி, பிராசாத சித்தி, ஞான சித்தி, சிவானந்த சித்தி, தத்துவ சித்தி, அவத்தா சித்தி, சாம்பவ சித்தி, போதசாரம், அதிசய மாலை, சிவஞானதிட்டி, சிவாநந்த சதகம், போதவமுதம், ஞான சூளாமணி, ஈரடிக்குறள், பரமார்த்த சதகம், சந்தானவகவல், உண்மை மும்மணி முதலான சைவ நூல்கள், மெய்ந்நெறி விளக்கம், பொருநெறிவிளக்கம், மயேச்சரர் யாப்பு,

அணியியல் முதலான கருவி நூல்களும், திருவாவடுதுறை மும்மணிக் கோவை, நான்மணிமாலை, குடந்தைக் கோவை, குடந்தைக் கலம்பகம், ஆளுடைய பிள்ளையார் ஒலிய(ல)ந்தாதி முதலாயின பிரபந்தங்களுமாம். இவற்றுள் ஒலிய(ல)ந்தாதி வழங்குவது போலும். ''

அன்பர்கள் சைவ நூற்பரப்பை அறியவேண்டியே இதனை இங்கெடுத்துக் காட்டினோம். சந்தான வரலாறு எழுது மிடத்தில் '' **திருமூலதேவர்க்குச் சதாசிவமுனிகளென்றும் பெயர்** '' என்றெழுதுகிறார். திருமூலருக்குச் சதாசிவ முனிகள் என்றும் ஒரு பெயருண்டு என்பது இவர் எழுதாவிட்டால் தெரியாது. இப்படிப் பல்வேறு அரிய செய்திகள் இவரது முத்திநிச்சயப்பேருரை வெள்ளியம்பலவாண மாபாடியத்தால் தெரிகின்றன. இக்கால ஆய்வாளர்கள் இவைபோன்ற நூல்களைப் படிக்க வேண்டும்.

வெள்ளிப்பாடல் என்றொரு செய்தியும் இவரைப் பற்றி வழங்குகிறது. பெரியபுராணம் கம்பராமாயணம் முதலிய பெருநூல்களை மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லும் போது செய்தியை நன்கு விளக்குவதற்கு அந்நூல்களின் சில இடங்களில் உள்ள செய்யுள்கள் போதாது என்று எண்ணி இவர் தாமே பொருத்தமாகச் சில செய்யுள்களை இயற்றி இடைச்செருகலாக இடையிடையே அப்பெருநூல்களில் செருகிவிடுவாராம். அப்பாடல்கள் பிற்காலத்தில் வெள்ளிப் பாடல்கள் எனப் பெயர்பெற்றன. அனேகமாக எல்லாப் பெரிய நூல்களிலுமே இடைச்செருகல் எனச் சில பல செய்யுள்களைப் பின்வந்த பெரியவர்கள் எடுத்துக்காட்டக் காண்கிறோம். பெரியபுராணம் கம்பராமாயணம் மட்டுமன் றிப் பல பெருநூல்களிலும் இடைச் செருகலைக் காண்கிறோம். சுந்தரர் தேவாரத்தில்கூட இடைச்செருகல் உண்டு என்கிறார்கள். எல்லா நூல்களிலும் உள்ள இடைசெருகற் பாடல்களை யெல்லாம் வெள்ளிப் பாடல் என்றே கூறுகிறார்கள். அவை யெல்லாம் இவர் (வெள்ளியம்பலவாணர்) பாடி இடைச் செருகலாகச் சேர்த்தவைதானாம். இக்கூற்று முழுவதும்

உண்மையல்லாதிருக்கலாம் அல்லது சில இடங்களில் உண்மையாக இருக்கலாம். பேரறிஞராகிய இவர் பெரு நூல்களின் மூலத்திற்குப் பொருத்தமாகப் பாடி இடைச் செருகல் செய்யக்கூடிய திறமையுடையவராக இருக்கலாம் என்பதில் ஐயமில்லை. ஆனால் அத்தகைய குணமுடைய வராக இருந்திருப்பாரா என்று ஐயுறவேண்டியுள்ளது. சந்தர்ப்ப சூழ்நிலையை, வரலாறுகளை, செய்திகளை நன்கு விளக்கும் நன்னோக்கில் இடைச்செருகல் செய்யப்பெற்றது எனலாமோ? வெள்ளியார்தான் அறிவார்!

குமரகுருபரரும் சிவப்பிரகாசரும் இலக்கிய உலகிலும் சைவ உலகிலும் புகழ்பெற்ற ஒருவகை இரட்டையர்கள். இவர்களில் குமரகுருபரரிடம் பாடங்கேட்டும், சிவப்பிர காசருக்குப் பாடஞ் சொல்லியும், ஒருவர்க்கு மாணவராய், மற்றொருவர்க்கு ஆசிரியராய் இருவர்க்கும் இடைப்பட்ட வராய்ப் புகழோடு விளங்கிய இவர் இறுதிக் காலத்தில் தில்லைச் சிதம்பரத்திற்குச் சென்று வசித்தார். அங்கு இவர்கள் சமாதி ஞானப்பிரகாசக் குளத்துத் தென்மேற்கு மூலையில் இருக்கிறது.

4. சம்பந்த சரணாலயர்

சம்பந்த சரணாலயர். பேரே இனிமையாக எப்படி இருக்கிறது பாருங்கள்! சொல்லிச் சொல்லி இன்புறலாம் போன்று இருக்கிறதல்லவா? வெள்ளியம்பலவாணரின் அருமை மாணவர். ஆறாம் பட்டம் திருஞானசம்பந்த தேசிகரிடம் ஞானோபதேசம் பெற்றவர். கல்வியாலும் ஒழுக்கத்தாலும் விழுப்பம் பெற்ற இவரது பெருமை மைசூர்வரை பரவிற்றாம். மைசூர் மன்னர் இவரைக்காண விரும்பி அழைத்தாராம். இவரது கரிய தோற்றத்தைக் கண்ட மைசூர் மன்னர் இருவருக்குச் சினம் உண்டாகிறதா என்பதைச் சோதிக்க எண்ணி அண்டங்காக்கைக்குப் பிறந்தவர் போல் இருக்கிறாரே என்றாராம். அதனைக் கேட்ட சம்பந்த சரணாலயர் நாம் அண்டங்காக்கைக்குப் பிறந்தவ ரல்லர், தாங்களே அண்டங் காக்கைக்குப் பிறந்தவர்

என்றாராம். அண்டங்காக்கை என்பது ஒருவகைக் காக்கை. அண்டம் - பூமி. காக்கை - காத்தல். அண்டங்காக்கைக்குப் பிறந்தவர் - பூமியைக் காப்பாற்றுவதற்காக, அரசாள்வதற்காகப் பிறந்தவர். இவ்வாறு நகைச்சுவையாகவும் சமயோசிதமாகவும் பேசக்கூடிய இவரது உரையாடலைக் கேட்டு மைசூர் மன்னர் வியந்து மகிழ்ந்தாராம்.

5. படிக்காசுத் தம்பிரான்

தொண்டமண்டல சதகம் இயற்றிய படிக்காசுப் புலவரைத் தமிழுலகும் நன்கறியும். ஆனால் புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் பாடிய படிக்காசுத் தம்பிரானைத் தமிழுலகம் அவ்வளவாக அறியாது. சைவ உலகம் மட்டுமே நன்கறியும். படிக்காசுப்புலவரும் படிக்காசுத் தம்பிரானும் ஒருவரே, வேறு வேறல்லர் என்று தெரிகிறது. பிறந்தது தொண்டநாட்டுப் பொன்விளைந்த களத்தூர். குமரகுருபர சுவாமிகளிடத்தில் வெள்ளியம்பலவாண முனிவரோடு கல்வி பயின்றவர். தருமபுர ஆதீனம் ஆறாவது குருமூர்த்திகள் திருநாவுக்கரசு தேசிகரின் ஆட்சிக்காலத்தில் துறவு பெற்று வேளூர் வைத்தீசுவரன்கோயில் கட்டளைத் தம்பிரானாக விளங்கியவர். புள்ளிருக்குவேளூர்க் கலம்பகம் பாடியவர். சந்தக் கவி பாடுவதில் சிறந்தவர்.

"பண்பாய பகர்சந்தம் படிக்காசலா தொருவர் பகரொணாதே" எனவும்,

> மட்டாரும் தென்களந்தைப் படிக்காசன் உரைத்த தமிழ்
> வரைந்த ஏட்டைப்
> பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்
> பரிந்தவ் ஏட்டைத்
> தொட்டாலும் கைமணக்கும் சொன்னாலும் வாய்மணக்கும்
> தூய சேற்றில்
> நட்டாலும் தமிழ்ப் பயிராய் விளைந்திடுமே
> பாட்டினுறு நளினந்தானே

எனவும் வரும் பாடல்கள் இவரது தமிழ்ப்பாட்டின் சுவையை விளக்குவனவாம். பின்னாளில் வேளூர்

கட்டளை விசாரணை போன்ற பணிகளையெல்லாம் விடுத்துத் தருமபுர ஆதீனத்திலேயே குருமூர்த்திகளுக்கு அணுக்கத் தொண்டராக இருந்துவந்தார். பதினாறொடுக்கச் சமாதி நிலை பயின்று யோக சித்தி கைவரப் பெற்றார்.

6. காவை அம்பலவாணத் தம்பிரான்

வெள்ளியம்பலவாணரிடம் பாடங்கேட்டவர். திருவருட் பயனில் அடங்கியுள்ள உண்மைப் பொருள்களை அமைத்து 100 கலித்துறைப் பாக்களால் ஆகிய நூலொன்றைச் செய்துள்ளார்.

7. தமிழாகர முனிவர்

சிறந்த புலவர். குருராய வட்டகம், சந்திரகலா மாலை, நீதிசாரம், ஆசௌசதீபிகை, பிராயச்சித்த சமுச்சயம் ஆகிய நூல்களைப் பாடியவர்.

8. அழகிய திருச்சிற்றம்பல தேசிகர்

8-ஆவது பட்டம் குருமூர்த்திகளின் காலத்தவர். தருமபுரத்தினின்றும் பிரிந்து சென்று **சொர்க்கபுர ஆதீனத்தை நிறுவியவர்.**

9. புன்கூர் சிவப்பிரகாசமுனிவர்

10-ஆம் பட்டம் குருமூர்த்திகளான சிவஞான தேசிகரிடத்தில் உபதேசம் பெற்றவர். வெள்ளியம்பலவாண முனிவரிடம் இளமையில் கல்வி கற்றவர். இவர் இயற்றிய நூல் **சிவப்பிரகாசக் கட்டளை.** சைவ சித்தாந்தக் கட்டளை நூல்கள் எல்லாவற்றிலும் காலத்தால் முற்பட்டது, சிறந்தது. தருமபுர ஆதீனத்தாரால் பதிப்பிக்கப்பெற்றுள்ளது, முதற் பதிப்பு 1932. இரண்டாம் பதிப்பு 1939. பதிப்பாசிரியர் ஆதீனப்புலவர் ப.அ.முத்துத்தாண்டவராய பிள்ளை. ஆங்கில ஆக்கமும் சேர்ந்த சிறந்த பதிப்பு. சைவசித்தாந்தம் கற்கப் புகுவார் முதலில் கட்டளை நூல்களைக் கற்க வேண்டும். அதிலும் சிவப்பிரகாசக் கட்டளையை முதலிற் கற்றல் நன்று. கட்டளை நூல்கள் அனைத்தும் உரைநடைச்

சிறு நூல்கள். கட்டளை நூல் உலகில் சிறந்து விளங்குபவர் புன்கூர்ச் சிவப்பிரகாசர்.

10. சங்கர குமார முனிவர்

இவரும் 10-ஆவது குருமூர்த்திகளிடம் உபதேசம் பெற்றவர். தருமபுர ஸ்தல புராணம், சச்சிதானந்த விநாயகர் பிள்ளைத்தமிழ் பாடியவர்.

11. சிவானந்த முனிவர்

எட்டாவது பட்டம் அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் காலம் முதல் பத்தாவது பட்டம் சிவஞானதேசிகர் காலம் வரை இவர் இருந்தவர். ஆகவே மூன்று குருமகா சந்நிதானங்களின் அருளையும் அனுபவத்தையும் பெற்றவர். சம்பிரதாய தீபம், சிவானந்தபோத சாரம், **சிவானந்த மாலை** ஆகிய நூல்களை இயற்றியவர்.

12. அட்சயலிங்க சுவாமிகள் (அட்சயலிங்கத் தம்பிரான்)

இவர் வேளூர் வைத்தீஸ்வரன்கோயில் கட்டளைத் தம்பிரானாக விளங்கியவர். புள்ளிருக்குவேளூர்ப் புராணத்தின் சிறப்புப் பாயிரச் செய்யுளில்

"திகழ்சிவஞானதேசிகன்அருளால்தெளிந்துளம்சகலசாத்திரமும்
புகழ்பெற உணர்ந்தோன் **அட்சயலிங்கப் புண்ணிய முனிவரன்**"

என இவர் புகழ்ந்துரைக்கப் பெறுகிறார்.

"**அட்டமாசித்தி வல்ல அட்சயலிங்க சாமி**" என ஒரு செப்புப் பட்டயத்தில் இவர் குறிப்பிடப்பெறுகிறார். இவர் வைத்தீசுவரன் கோயில் கட்டளைத் தம்பிரானாக இருந்த காலத்தில் வைத்தீசுவரன் கோயிலுக்கு இன்றுள்ள அளவுக்கு நிலங்கள் இல்லை. இருந்த நிலங்கள் மிகவும் குறைவு. அவற்றை உழுது பயிரிடுவதற்கும் போதுமான சாதனங்கள் இல்லை. ஒரே ஒரு ஏர் இருந்தது. அதற்கு இரண்டு மாடுகள் இல்லை, ஒரே ஒரு மாடு மட்டுமே இருந்தது. இருந்த ஓர் ஏரில், இருந்த ஒரு மாட்டைப்பூட்டி, இன்னொரு மாட்டுக்குப் பதிலாகத் தாமே தமது கழுத்தை

நுகத்தடியிற் கொடுத்து இழுத்து நிலத்தை உழுதார். அவ்வழியாகச் செல்ல நேர்ந்த அரசன் இவர் ஏருழுத காட்சியைக் கண்டான். வியப்புற்றான். ஏன் ஒரு மாட்டுக்குப் பதிலாக நீங்களே ஏரை இழுத்து உழுகிறீர்கள் என்று கேட்டான். இது கோயில் நிலம். நான் கோயிற் பணிசெய்யும் துறவி. கோயிலுக்கு ஒரு ஏரும் ஒரு மாடும் மட்டுமே உள்ளன. இன்னொரு மாடு வாங்குவதற்குப் போதிய வருமானம் இல்லை. அதனால் ஒரு மாட்டைப்பூட்டி நானே இன்னொரு மாடாக இருந்து உழுகிறேன் என்றார். '' மாடாக உழைக்கிறார் '' என்ற உலகியல் பழமொழி வழங்குவதைக் கேட்கிறோம். அட்டமாசித்தி வல்ல அட்சயலிங்கத் தம்பிரான் அன்று மாடாக உழைத்தார். அற்றன்று, மாடாக உழுதார். **ஓரேருழவர்** (ஓரேருழவனார்) என்ற சங்ககாலப் புலவர் பெயரும் '' ஓரேருழவன் போல '' என்ற அவரது குறுந்தொகைப் பாடலும் (131) நினைவுக்கு வருகின்றன. ஒற்றை ஏரை உடைய உழவன் ஒருவன் (ஓர் ஏர் உழவன்) வருந்தி உழுவதை ஒரு புலவர் அழகாகப் பாடினார். அவர் பெயர் தெரியவில்லை. அவர் பாடலில் வரும் ஓர் ஏர் உழவன் போல என்னும் அருந்தொடரால் அவருக்கு '' ஓரேர் உழவர் '',(ஓரேர் உழவனார்)என்ற பெயர் அமைந்துவிட்டது. அட்சயலிங்கத் தம்பிரானும் ஓரேர் உழவர். அதிலும் ஒரு மாட்டு உழவர். சரியாகச் சொன்னால் **ஓரேர் ஒரு மாட்டு உழவர்**. இவரது உழவுக்காட்சி மன்னனின் உள்ளத்தை உலுக்கிற்று. ஏராளமான விளைநிலங்களையும் பெரும் பொருளையும் கோயிலுக்குக் காணிக்கையாக அளித்தான். அன்று அட்சய லிங்கத்தம்பிரான் மாடாய் உழைத்ததால், மாடாய் உழுததால் கோயிலுக்குச் சொத்து சேர்ந்தது. இன்று வைத்தீசுவரன் கோயிலுக்கு உள்ள சொத்து, நிலங்கள் மட்டும் 6105 ஏக்கர் நன்செய், 1176 ஏக்கர் புன்செய். இருந்தும் போதிய வருமானம் இல்லை. காரணம் நிலக்குத்தகைச் சட்டங்கள். வைத்தீசுவர ன் கோயிலுக்கு மாடாய் உழைத்த மாமனிதர் அட்சயலிங்கப் புண்ணியமுனிவர். புள்ளிருக்கு வேளூருக்கு ஒரு புராணத்தை வடுகநாத தேசிகரைக் கொண்டு இயற்றுவித்தவர்.

13. சிதம்பரநாத முனிவர்

பத்தாவது பட்டம் சிவஞான தேசிகரிடம் உபதேசம் பெற்றவர். திருக்கடவூரிலும் சீகாழியிலும் கட்டளைத் தம்பிரானாக விளங்கியவர். **நித்தியகன்மநெறிக் குறள்** என்ற சிறந்த நூலை இயற்றியவர். தக்கயாகப்பரணி உரையாசிரியரின் பெயர் தெரியவில்லை. அவர் இவரே என்றும் ஒரு கருத்து உண்டு. **சீகாழி அருணாசலக் கவிராயர்** அக்காலத்தில் புகழ் பெற்ற இசைக்கவிஞராக விளங்கினார். இளமையில் இவரோடு உடன் கல்வி பயின்றவர். தில்லையாடியில் பிறந்து வாழ்ந்து வந்த அவரைச் சீகாழிக்கு வந்து வசிக்கச் செய்யத் தந்திரமாக ஒரு ஏற்பாட்டைச் செய்து தில்லையாடி அருணாசலக்கவிராயர் என்ற பெயர் நீங்கிச் சீகாழி அருணாசலக் கவிராயர் என வழங்கச் செய்தவர் இவரே. அது ஒரு சுவையான வரலாறு. அருணாசலக் கவிராயர் சீகாழிப் பள்ளும் சீகாழித் தலபுராணமும் பாடினார். அவரது கீர்த்தனைகள் மிகவும் புகழ்பெற்றவை. அவரது பிற்கால நல்வாழ்வுக்குக் காரணர் இவரே.

14. முத்துக்குமாரத் தம்பிரான்

இவரும் பத்தாவது குருமூர்த்திகளிடம் உபதேசம் பெற்றவர். வைத்தீசுவரன் கோயில் கட்டளைத் தம்பிரானாக விளங்கியவர்.

15. தில்லைநாயகத் தம்பிரான்

குமரகுருபர சுவாமிகளுக்குப்பின் காசி குமாரசாமி மடத்தின் ஆறாம் பட்டம் அதிபராக விளங்கியவர். திருப்பனந்தாளில் காசிமடத்தை நிறுவியவர்.

16. ஆறுமுக சுவாமிகள்

பதினான்காவது குருமூர்த்திகளிடம் உபதேசம் பெற்றவர். கலா வல்லபர். வெள்ளப்பள்ளம் சாஸ்திரிகளை வாதில் வென்றவர்.

17. உலகநாத வள்ளல்

பதினைந்தாவது குருமூர்த்திகளான மாசிலாமணி தேசிகரிடம் உபதேசம் பெற்றவர். வைத்தீசுவரன் கோயில் கட்டளைத் தம்பிரானாகச் சிறந்து விளங்கியவர். வைத்தீசுவரன் கோயிலுக்குப் பெருஞ் சொத்துகளைச் சேர்த்தவர். வைத்தீசுவரன் கோயில் நிர்வாகத்தில் அட்சய லிங்கத் தம்பிரானுக்கு அடுத்தபடியாகச் சொல்லப்பெற வேண்டியவர். **வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் பாடியருளிய** வைத்தியநாதர் பதிகத்தில் பாடல்தோறும் இவர் பெயரையும் குறிப்பிட்டுப் பாடியருளியுள்ளார்.

சிதம்பரம் சீகாழி வைத்தீசுவரன்கோயில் மயிலாடுதுறை இந்நான்கும் அருகருகே அமைந்துள்ள சிவத்தலங்கள். இந்நான்கில் சீகாழி மயிலாடுதுறை ஆகிய இரண்டும் பொதுவாகவும், சிதம்பரம் வைத்தீசுவரன் கோயில் ஆகிய இரண்டும் சிறப்பாகவும் விளங்கும். சிறப்பாக விளங்கும் இவ்விரண்டையும் வள்ளற்பெருமான் இராமலிங்க அடிகள் பாடியருளியுள்ளார். சிதம்பரத்தின்மீது பாடிய பதிகங்கள் நூற்றுக்கு மேற்பட்டவை. புள்ளிருக்கு வேளூராகிய வைத்தீசுவரன் கோயிலின்மீது பாடியவை 12 பாடல்களைக் கொண்ட வைத்தியநாதர் பதிகமும், " நல்ல மருந்திம்மருந்து சுகம் நல்கும் வைத்தியநாத மருந்து " என்ற பல்லவியையும் 29 கண்ணிகளையும் கொண்ட இசைப்பாடலுமாம். வைத்தியநாதர் பதிகம் 12 பாடல்களிலும் "**தவசிகாமணி உலகநாத வள்ளல் மகிழவரு வேளூரில்**" என்று உலகநாதத் தம்பிரான் பெயரையும் பதித்துவைத்துப் பாடியருளியுள்ளார் வடலூர் வள்ளலார். " தவசிகாமணி உலகநாத வள்ளல் மகிழவரு வேளூரில் அன்பர் பவரோகமற வளர் வைத்திய நாதனே " என்பது 12 பாடல்களிலும் - பாடல் தோறும் - மகுடமாக விளங்கும் ஈற்றுத்தொடர்.

வைத்தியநாதர் பதிகத்தின் ஈற்றுப்பாடலாகிய 12-ஆம் பாடலை மட்டும் ஈண்டெடுத்துக் காட்டுகிறோம்.

இளவேனில் மாலையாய்க் குளிர்சோலை யாய்மலர்
இலஞ்சிபூம் பொய்கைஅருகாய்
ஏற்றசந் திரகாந்த மேடையாய் அதன்மேல்
இலங்குமர மியஅணையுமாய்த்
தளவேயும் மல்லிகைப் பந்தராய்ப் பால்போல்
தழைத்திடு நிலாக்காலமாய்த்
தனிஇளந் தென்றலாய் நிறைநரம் புளவீணை
தன்னிசைப் பாடல்இடமாய்
களவேக லந்தகற் புடையமட வரல்புடை
கலந்தநய வார்த்தைஉடனாய்க்
களிகொள இருந்தவர்கள் கண்டசுக நின்னடிக்
கழல்நிழற் சுகநிகருமே
வளவேலை சூழுலகு புகழ்கின்ற **தவசிகா**
மணிஉலக நாதவள்ளல்
மகிழவரு வேளூரில் அன்பர்பவ ரோகமற
வளர்வைத் தியநாதனே. 2429

வள்ளலாரால் பாடப்பெற்ற பின்னரே இவருக்கு உலகநாத வள்ளல் என்று பெயருண்டாயிற்று. அதற்குமுன் இவர் பெயர் உலகநாதத் தம்பிரான் சுவாமிகள் என்றே வழங்கிற்று. வள்ளல் என வள்ளலார் வாக்கால் பாடப் பெறும் புண்ணியம் பெற்றவர் இவர். உலகநாதத் தம்பிரானை உலகநாத வள்ளல் ஆக்கியவர் வடலூர் வள்ளற்பெருமான். வள்ளலார் இவரை உலகநாத வள்ளல் என்று பாடிய காலத்தில் வள்ளலாருக்கே அப்பெயர் (வள்ளலார் என்னும் பெயர்) ஏற்படவில்லை. திருவருட்பா முதன்முதலாக 1867-இல் நூலாகப் பதிப்பிக்கப்பெற்ற போதுதான் வள்ளலார் என்ற பெயர் வழங்கத் தொடங்கியது. ஆனால் அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னமேயே வேளூர் உலகநாதத் தம்பிரானை, உலகநாத வள்ளல் என்று போற்றிப் புகழ்ந்து பாடிவிட்டார் வள்ளலார். தருமபுர ஆதீன அடியவர் திருக்கூட்டத்திலேயே ஒருவரே ஒருவர்தான் வள்ளல் என்று பெயர் பெற்று விளங்குகிறார். அவர்தான் உலகநாத வள்ளல். அவரை வள்ளலாக்கியவர் திருஅருட்பிரகாச வள்ளலார்

இராமலிங்க அடிகளார். எனவே **வள்ளலார் கண்ட வள்ளல்** என்று உலகநாத வள்ளலைக் கூறலாம்.

அது மட்டுமன்று. தவசிகாமணி உலகநாத வள்ளல் என்று போற்றியருளுகிறார். உலகநாதன் என்ற பெயருக்கு முன்னும் பின்னும் இரண்டு பக்கமும் இரண்டு அடை மொழிகள். இருதலை மாணிக்கம்போல. தவசிகாமணி என்பது பெயருக்கு முன்னுள்ள அடைமொழி. வள்ளல் என்பது பெயருக்குப் பின்னுள்ள அடைமொழி. உலகநாதத் தம்பிரான் நிர்வாகத்தில் மட்டுமன்றித் தவத்திலும் சிறந்து விளங்கியிருக்கிறார். தவசிகாமணி என்று வள்ளற் பெருமான் அவரைப் போற்றிப் புகழ்கிறார்.

வள்ளற்பெருமான் அருளிய திருவருட்பாவில் ஆங்காங்கே சிற்சில இடங்களில் "வளர்" என்ற சொல் பொருள் பொதிந்த வகையில் வழங்கப்பெற்றுள்ளது. சென்னை கந்தகோட்டத் தெய்வமணி மாலையில் "சென்னையில் கந்தகோட்டத்தில் வளர் தலம் ஓங்கு கந்தவேளே" என்று பாடியருளியுள்ளார். இங்கு வேளூர் வைத்தியநாதர் பதிகத்திலும் "வேளூரில் அன்பர் பவரோகமற வளர் வைத்தியநாதனே" என்று பாடியருளுகின்றார். அங்கு கந்தகோட்டத்தில் வளர். இங்கு வேளூரில் வளர். அங்கு வளர் கந்தவேளே. இங்கு வளர் வைத்தியநாதனே. ஈரிடத்திலும் வளர். வளர்தலம் என்று வள்ளலாராற் பாடப் பெற்றபின் கந்தகோட்டம் பொன்னாலும் புகழாலும் வளர்ந்தது. வளர் வைத்தியநாதனே என்று வள்ளலாராற் பாடப்பெற்றபின் வைத்தீசுவரன் கோயிலின் புகழ் மேலும் மேலும் வளரலாயிற்று. வள்ளலார் புகழ்ந்த வள்ளல், உலகநாத வள்ளல். அவர் புகழ் வாழ்க.

18. சிதம்பரநாத சுவாமிகள்

பதினாறாவது குருமூர்த்திகளாம் சச்சிதானந்ததேசிகரிடம் உபதேசம் பெற்றவர். திருஞானசம்பந்தரின் திருமணம் நிகழ்ந்த தலமும் முத்தித் தலமுமான ஆச்சாள்புரம் திருப்பெருமணநல்லூரில் கட்டளை விசாரணைத் தம்பிரானாக

விளங்கியவர்கள். மந்திர வலிமை பெற்றவர்கள். இவர்கள் சமாதி ஆச்சாள்புரத்தில் இருக்கிறது. நோயுற்றவர்கள், விடம் தீண்டியவர்கள், பேய் பிடித்தவர்கள் இப்படிப்பட்டோ ரெல்லாம் இவர்களது சமாதியின் முன்னர் இவர்களுக்குப் பிரார்த்தனை செய்து கொண்டால் துன்பம் நீங்கப் பெறுகிறார்கள். இது இன்றும் கண்கூடு. இவர்கள் முத்திபெற்ற நாளன்று விசேட அபிடேக ஆராதனைகளும் மாகேசுவரபூசை முதலியனவும் ஆண்டுதோறும் சிறப்பாக நிகழ்கின்றன.

19. பரமசிவ சுவாமிகள்

ஆதீனப் புலவர் திலகமாக விளங்கியவர்களில் இவர்களும் ஒருவர். திருப்பனந்தாள் காசிமடத்ததிபர் காசிவாசி இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளின் மாணாக்கர். வடநாடு தென்னாடு யாத்திரைகள் செய்து ஆங்காங்கே சைவமும் தமிழும் பரப்பியவர்கள். நேபாளம் பரோடா மைசூர் சமஸ்தானங்களிலிருந்தும் ஆண்டுதோறும் வழக்கமாக இவர்களுக்குச் சன்மானங்கள் வந்து கொண்டேயிருக்கும். குமரகுருபர சுவாமிகள் தோத்திரப் பாமாலை, காசி விசுவேசர் அந்தாதி, பனசை மும்மணிக் கோவை, சிவானு பவசாரம் முதலிய நூல்கள் இவர்களால் இயற்றப்பெற்றன.

20. சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

பதினேழாவது குருமூர்த்திகளிடம் உபதேசம் பெற்றவர்கள். கட்டளை விசாரணையாகப் பல பெருந் தேவஸ்தானங்களில் நியமிக்கப் பெற்றவர்கள். பின்னர் திருப்பனந்தாள் காசி மடத்தின் அதிபராக நியமிக்கப் பெற்றவர்கள். புலவர் சிகாமணியாய் விளங்கிய இவர்களிடம் கல்வி கற்றோர் பலர். அவருள் ஒருவர் காசி மடத்து அதிபர் காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்.

21. அருணாசலத் தம்பிரான்

இவர்களும் பதினேழாம் குருமூர்த்திகளிடம் உபதேசம் பெற்றவர்கள். திருவாரூர் தியாகராஜ சுவாமி திருக்கோயில் இராஜாங்கக் கட்டளை விசாரணையாயிருந்தவர்கள்.

22. பழனியப்பத் தம்பிரான்

ராஜாங்கக் கட்டளை விசாரணை. கட்டளைக் களஞ்சியத்தைக் கட்டியவர். நிலங்கள் பலவற்றை வாங்கி வைத்தவர்.

23. சிதம்பரநாதத் தம்பிரான்

ராஜாங்கக் கட்டளை விசாரணை. நிலங்கள் சில வாங்கிச் சேர்த்தவர்கள்.

24. சண்முக சுவாமிகள்

மகாவித்துவான் பட்டம் பெற்றவர். சிதம்பரம் செந்தமிழ்ச் சங்கத்தின் தலைவராக அமர்ந்து ஆங்காங்கே சமயச் சொற்பொழிவுகள் பல ஆற்றியவர். இயற்றிய செய்யுள் நூல்கள் உரைநடை நூல்கள் பல.

25. சட்டநாதத் தம்பிரான்

புலவர் திலகமாக விளங்கியவர். பண்டார மும்மணிக் கோவைக்குக் குறிப்புரை வரைந்தவர். நூலாராய்ச்சியில் ஈடுபட்டிருந்தவர்.

26. காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்

தருமபுர ஆதீன அடியவர் திருக்கூட்டத்தில் சிறந்து விளங்கித் திருப்பனந்தாள் காசிமடத்தின் 19-ஆவது அதிபராக நியமிக்கப் பெற்றுச் சிறந்து விளங்கியவர்கள்.

27. காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள்

திருப்பனந்தாள் காசிமடத்தின் 20-ஆம் பட்டம் அதிபராக நியமிக்கப்பெற்றுச் சிறந்து விளங்கியவர்கள்.

28. காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்

திருப்பனந்தாள் காசிமடத்தின் 21-ஆம் பட்டம் அதிபராக இப்போது எழுந்தருளி அருளாட்சி செய்து வருபவர்கள்.

பதினாறொடுக்கம்

சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப் பாதங்கள் நான்கு. கலாந்தம், நாதாந்தம், யோகாந்தம், போதாந்தம், வேதாந்தம், சித்தாந்தம் என அந்தங்கள் ஆறு. இவ்வாறு அந்தங்களுள் வேதாந்தம் சித்தாந்தம் ஆகிய இரண்டும் இக்காலத்தில் சிறந்து விளங்குகின்றன. இவ்விரண்டுக்கும் மடங்களும் நூல்களும் உள்ளன. குருமார்களும் உள்ளனர். ஏனைய நான்கு அந்தங்கள் மிகவும் அருகி வழங்குகின்றன. "ஷடாந்தமும் வியாபகமல்லாமல் வேதாந்த சித்தாந்தத்தில் நான்கந்தமும் வியாப்பியமாயிருக்கின்றன. மேற்படி அந்தம் நான்கின் ஐக்கிய விபரம்: வேதாந்தத்தில் போதாந்த யோகாந்தமும் சித்தாந்தத்தில் நாதாந்த கலாந்தமும் அடங்கி யிருக்கின்றன. இந்த ஐக்கியம் பற்றி வேதாந்த சித்தாந்தமே இப்போது சுத்த வேதாந்த சுத்த சித்தாந்தமாய் வழங்குகின்றன" என்பது வள்ளற்பெருமான் இராமலிங்க சுவாமிகளின் உபதேசம்.

ஆறந்தங்களில் கலாந்தம் யோகாந்தம் என்பவை யோகம் சம்பந்தப்பட்டவை. கலாந்தத்தில் யோகம் என்பது பிராசாதயோகம். யோகாந்தத்தில் யோகம் என்பது அட்டாங்க யோகம்,கலாந்தம் பிராசாதயோகமார்க்க முடிவு. யோகாந்தம் அட்டாங்கயோகமார்க்க முடிவு. இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எட்டு உறுப்புகள் கொண்ட அட்டாங்க யோகத்தைப் பலரும் அறிவர். இது வேதாந்த சித்தாந்தம் இரண்டுக்கும் பொது. பிராசாத யோகத்தைப் பலரும் அறியார். அப்படி ஒரு யோகம் உண்டென்பதுகூட இந்நாளைய அறிஞர் பலருக்குத் தெரியாது. பிராசாதயோகம் சித்தாந்தத்துக்கே சிறப்பானது.

அட்டாங்கயோகம் பொது. வேதாந்தம்
பிராசாதயோகம் சிறப்பு. சித்தாந்தம்

பிராசாதம் என்ற சொல்லுக்குச் சிவஞானமாகிய கதியைத் தருவது என்பது பொருள். ப்ரா-சிவஞானம்,ஸா - கதி, த-கொடுப்பது, பிராசாத யோகத்தில் பஞ்சகலைப்

பிராசாதம், அட்டகலைப் பிராசாதம், தசகலைப்பிராசாதம், துவாதசகலைப் பிராசாதம், சோடசகலைப் பிராசாதம் எனப் பலவகை உண்டு. அவற்றுள் சோடசகலாப் பிராசாதம் சிறந்த தென்பர். சோடச கலைகளாவன: 1. மேதைகலை, 2.அர்க்கீச கலை, 3. விஷகலை, 4. விந்துகலை, 5. அர்த்தசந்திரகலை, 6. நிரோதிகலை, 7. நாதகலை, 8. நாதாந்தகலை, 9. சத்திகலை, 10. வியாபினிகலை, 11. வியோமரூபைகலை, 12. அநந்தை கலை, 13. அநாதைகலை, 14. அநாசிருதைகலை, 15. சமனை கலை, 16. உன்மனைகலை.

சோடசகலாப் பிராசாத யோகமாவது: மூலாதாரம் தொடங்கிப் பிரமரந்திரம் வரையுள்ள ஆன்மாவின் சஞ்சாரத்தை மேதை முதல் உன்மனை ஈறான பதினாறு கலைகளாகக் கொண்டு அவற்றின் பெயர், வியாபகம், அளவு, உருவம், ஒளி முதலிய வற்றை அறிந்து அவற்றுக்குரிய அதி தெய்வங்களையும் தத்துவங்களையும் தரிசித்து அவற்றுக் கப்பால் சென்று அங்குள்ள பரம்பொருளிடத்தே நிராதார பாவனையால் தன்னையும் சிவத்தையும் வியாபகமாகப் பாவித்து அந்த நிலையிலே நிற்றல் பிராசாத யோகமாம். பிராசாத யோகத்தைச் சொல்லும் தமிழ் நூல்கள் 1. சீகாழித் தத்துவப் பிரகாசர் செய்த தத்துவப் பிரகாசம், 2. அம்பலவாணத் தம்பிரான் செய்த பிராசாத அகவல், 3. கமலை ஞானப்பிரகாசர் செய்த பிராசாத மாலை, 4. குருஞானசம்பந்தர் செய்த பிராசாத ஷட்கம் (வடமொழி நூலாகிய பிராசாத ஷட்சுலோகியின் மொழி பெயர்ப்பு) 5,6. கண்ணுடைய வள்ளலார் மரபில் ஒருவர் செய்த பிராசாத தீபம், பிராசாத விதி ஆகியனவாம்.

குருஞானசம்பந்தர் அருளிய சோடசகலாப் பிரசாத சட்கம் தருமபுர ஆதீனத்தால் 23-ஆம் குருமூர்த்திகள் சுப்பிரமணிய தேசிகர் காலத்தில் (1931) உரையுடன் வெளியிடப் பெற்றுள் ளது. பதிப்பாசிரியர் ஆதீனவித்துவான் சீகாழி ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளை. கமலை ஞானப்பிரகாசர் செய்த பிராசாதமாலை, குருஞான சம்பந்தரின் பிராசாத சட்கம், காவை அம்பலவாணத் தம்பிரான் செய்த பிராசாத அகவல்,

ஆசிரியர் பெயர் தெரியாத பிராசாத தீபம் ஆகிய நான்கும் ஒரு நூலாக, "பிராசாத நான்மணிகள்" எனத் தருமபுர ஆதீனத்தால் 1972-இல் வெளியிடப்பெற்றுள்ளது. பதிப்பாசிரியர் ஆதீனப் புலவர் அருணைவடிவேலர்.

தருமபுர ஆதீனத்தில் அனுட்டிக்கப்பெறும் யோகம் பிராசாத யோகமே. பிராசாதயோகப் பயிற்சிக்கெனத் தருமபுர ஆதீனத்தில் தனியான ஓர் அமைப்பே உள்ளது. அதற்குப் பதினாறொடுக்கம் (பதினாறு ஒடுக்கம்) என்றே பெயர். ஆன்மார்த்த வழிபடு மூர்த்தியாகிய சொக்கநாதப்பெருமான் திருக்கோயிலின் (பூஜைக்கட்டு) பின்புறம் திருச்சுற்றில் குகை போன்ற சிறுசிறு அறைகள் 16 அமைக்கப்பெற்றுள்ளன. இவைதான் பதினாறொடுக்கம் என்பது. சோடசகலை (16 கலை)ப் பிராசாத யோகத்தை அனுபவமிக்க மூத்த தம்பிரான் சுவாமிகள் பயிலும் 16 சிற்றறைகள் (குகைகள்). இவ்வமைப்பு தருமபுர ஆதீனம் ஒன்றைத் தவிர வேறெங்கும் இல்லை.



பதினாறு ஒடுக்கம், தருமபுர ஆதீனம்

வேத சிவாகம பாடசாலை

வேதங்களிலும் சிவாகமங்களிலும் முறையான பயிற்சியுடையவர்களே கோயிற்பூசை செய்வதற்குரியர், திருக்கோயிற் கிரியைகளைச் செய்வதற்குரியர். முன்பெல்லாம் அது பரம்பரைப் பயிற்சியாக இருந்து வந்தது. தருமபுர ஆதீனத்தில் இதற்கென ஒரு பாடசாலையே 1941-இல் தொடங்கினார்கள், 1941-ஆம் ஆண்டு தருமபுர ஆதீனப் பணிகளில் ஒரு சிறந்த ஆண்டு போலிருக்கிறது. 1941-இல் வேதசிவாகம பாடசாலை, தேவார பாடசாலை, தொடக்கப் பள்ளி, ஞானசம்பந்தம் திங்களிதழ், ஞானசம்பந்தம் பதிப்பகம் ஆகியவற்றைத் தொடங்கி யிருக்கிறார்கள். மெய்கண்டான் சித்தாந்த மாநாடுகூட 1941-இல்தான் நிகழ்ந்தது. 24-ஆம் குருமகாசந்நிதானம் சண்முகதேசிகர் காலம். காலத்திற்கேற்ற நல்ல அமைப்புகள் பல அவர்கள் காலத்தில் 1941 ஆகிய அந்த ஒரே ஆண்டில் தோற்றுவிக்கப் பெற்றன. வேதசிவாகம பாடசாலையில் சேர்ந்து பயில் வதற்குச் சிவாசாரிய மரபினர் மட்டுமே அனுமதிக்கப் பெறுவர். ஐந்தாண்டுகாலப் பயிற்சி. உணவு உடை உறையுள் இலவசம். பயிற்சி இலவசம் என்பது சொல்லாமலே விளங்கும். வேதங்கள் சிவாகமங்கள் மட்டுமன்றி, தமிழ், ஆங்கிலம், பள்ளிப்பாடங்கள் முதலியனவும் கற்பிக்கப் பெறும். பாடசாலை வகுப்புகளில் பயிற்சி பெறுவதோடு ஆதீனத்திலும் ஆதீனக் கோயில்களிலும் நிகழும் விழாக்கள், குடநீராட்டுகள் போன்றவற்றில் நேர்முகப் பயிற்சி பெறுவர். ஐந்தாண்டுப் பயிற்சியை வெற்றியாக முடிப்பவர்களுக்கு “ஆகமப் பிரவீண” என்ற சான்றிதழ் ஆதீனத் தலைவரின் கையொப்பத்துடன் வழங்கப்பெறும்.

தேவார பாடசாலை

தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைகள் இல்லாமல் கோயில் வழிபாடு இல்லை. ஆதலின் திருமுறைகள் வழிபாட்டுக்கு இன்றியமையாதவை. கோயில் வழிபாட்டில் அபிடேகம் அருச்சனை நிவேதனம் தீபாராதனை ஆகியவை நிகழ்ந்தபின் வேதம் ஓதுதல்

திருமுறை ஓதுதல் இவ்விரண்டுடனேயே வழிபாடு நிறைவுபெறும். வேதாகமப் பயிற்சி பெற்ற அந்தணர்கள் வேதம் ஓதுவர். திருமுறைகளில் பயிற்சிபெற்ற ஓதுவார்கள் திருமுறைகளை ஓதுவர். சைவக்கோயில்களில் திருமுறைகளை ஓதுவதற்குத் தகுதியும் உரிமையும் உடையவர்கள் பரம்பரைச் சுத்தசைவ வேளாளர்களாகிய ஓதுவார்களே. இவர்களுக்கு ஓதுவார் என்ற பட்டப்பெயருண்டு. பொன்னோதுவார், வேலாயுத ஒதுவார் முதலிய பெயர்களைக் காண்க. ஓதுவார்களுக்கு ஒரு தனிச்சிறப்பு, ஓதுவார் என்பதோடன்றி, **ஓதுவாமூர்த்திகள்** என்று வழங்கப்பெறுவது. ஆதீன கர்த்தர்களைக் குருமூர்த்திகள் என்பதுபோல ஓதுவார்களை ஓதுவாமூர்த்திகள் என்று வழங்குவது வழக்கம்.

அர்ச்சகர் இல்லாமல் கோயில் இருக்கமுடியாது. அதேபோல் ஓதுவார் இல்லாமல் கோயில்கள் இருக்கக் கூடாது. அபிடேகம் அருச்சனை எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் வேதபாராயணமும் திருமுறைஓதலும். சைவக்கோயில்களிலெல்லாம் ஓதுவார்கள் இருக்க வேண்டும். வைணவக் கோயில்களில் திவ்வியப்பிரபந்தம் ஓதுவதற்குத் தனி மரபு உண்டு. அவ்வாறு ஓதுவதற்குரியவர்கள் இல்லாத இடங்களில் பூசைசெய்யும் பட்டாசாரியர்களே ஓதுவர். முருகன் கோயில்களிலும், சக்தி கோயில்களிலும் ஓதுவார்கள் இருக்க வேண்டும். நாட்டில் ஆயிரக்கணக்கான ஓதுவார்கள் தேவை. முறையாகப் பயிற்சிபெற்ற ஓதுவார்கள் தேவை. அதற்காகத் தான் ஆதீனங்களும், மடங்களும், நகரத்தார்களும் அங்கங்கே தேவார பாடசாலைகளை நிறுவினார்கள்.

தருமபுர ஆதீனத்தில் தேவார பாடசாலை 1941-இல் தொடங்கப்பெற்றது. ஆர்.வேலாயுத ஓதுவார் என்ற தலைசிறந்த ஓதுவார் தொடக்ககாலத் தலைமை ஆசிரியர் . ஐந்தாண்டுப் பயிற்சி. உணவு, உடை, உறையுள், திருமுறை நூல்கள் இலவசம். பயிற்சி நிறைவில் தேர்ச்சி பெற்றவர்களுக்குத் "தேவார இசைமணி " சான்றிதழ் ஆதீனகர்த்தரின் கையொப்பத்துடன் வழங்கப்பெறும்.

ஆதீனப் பஞ்சாங்கம்

தருமபுர ஆதீனம் ஆண்டுதோறும் ஒரு பஞ்சாங்கம் வெளியிடுகிறது. " தருமபுர ஆதீன குருஞானசம்பந்தர் வாக்கிய பஞ்சாங்கம்" என்று அதற்குப் பெயர். 1956- துன்முகி ஆண்டிலிருந்து வெளிவருகிறது. நாயன்மார் குருபூஜை நாள்கள், ஆதீன குருமகாசந்நிதானங்களின் குருபூஜை நாள்கள், ஆதீன விழாக்கள், ஆதீனக் கோயில்களில் நிகழும் விழாக்கள் முதலியனவற்றைப் பற்றிய குறிப்புகள் இப்பஞ்சாங்கத்தில் இடம் பெறுகின்றன. தகுதிமிக்க கணித வல்லுநர்களால் கணிக்கப்பெறுகிறது. தருமபுர ஆதீனம் போன்ற பெரிய சமய நிலயங்களுக்குத் தனிப்பஞ்சாங்கம் இன்றியமையாததே.

" ஞானசம்பந்தம்" திங்களிதழ்

சைவ ஆதீனங்களில் முதன்முதலில் திங்களிதழ் ஒன்றைத் தொடங்கியது தருமபுர ஆதீனம். "ஞானசம்பந்தம்" என்பது திங்களிதழின் பெயர். 1941-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தொடங்கப் பெற்றது. 10.12.1965-இல் ஞானசம்பந்தம் வெள்ளி விழா மலர் வெளிவந்தது. 67 ஆண்டுகளாக "ஞானசம்பந்தம்" தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. இந்த 2009 ஜூலை மாத இதழ் மலர் 68-இதழ் 8 ஆகும்.

பல்கலைக்கல்லூரி

25-ஆம் பட்டம் குருமகாசந்நிதானம் கயிலைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களால் 02.08.1946 விய, ஆடி, 18, பதினெட்டாம் பெருக்கு நன்னாளில் தருமபுர ஆதீனம் ஆதீன தேவஸ்தானங்களின் கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி சென்னைப் பல்கலைக் கழகத்தின் அங்கீகாரத்துடன் தொடங்கப் பெற்றது. அறநிலையத்துறை அமைச்சர் கோட்டி ரெட்டி அவர்களால் 10.08.1946-இல் திறந்துவைக்கப் பெற்றது. தமிழ்வித்துவான் வகுப்புகளும், சமஸ்கிருத சாகித்ய சிரோமணி வகுப்புகளும் நடத்தப்பெற்றன. அப்போது தருமபுர ஆதீனத்தில்

தம்பிரான்களாக இருந்த குன்றக்குடி அடிகளாரும் திருப்பனந்தாள் காசி மடத்து அதிபர் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகளும் தமிழ்வித்துவான் வகுப்பில் படித்தனர். புலவர் கீரனும் இங்கே படித்தவரே. இப்போது தருமபுர ஆதீன குருமகாசந்நிதானமாக இருப்பவர்களும் இக்கல்லூரியில் வித்துவான் படித்தவர்களே. பின்னர் ஓராண்டு கௌரவ ஆசிரியராக இருந்ததும் உண்டு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் போன்ற முதுபெரும் புலவர்கள் ஆசிரியராகப் பணியாற்றிய கல்லூரி இது.

போதிய மாணவர்கள் இன்மையால் வடமொழி சிரோமணி வகுப்பு நின்றுபோயிற்று. தனித்தமிழ்க்கல்லூரி, காலத்திற்கேற்பக் கலைக் கல்லூரியாக உயர்த்தப்பெற்றது. பி.லிட்., எம்.ஏ., பட்டப் படிப்புகள் ஏற்பட்டன. கல்லூரியின் வெள்ளிவிழா 25.10.1972-இல் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. பின்னர் பொன்விழாவையும் கண்டது. இப்போது பாரதிதாசன் பல்கலைக்கழக இணைப்புடன் பல்வேறு உயர்பட்டப் படிப்புகள் நடைபெறுகின்றன.

வைர விழாவை நோக்கி வீறுநடை போட்டுக் கொண்டிருக்கும் இக்கல்லூரிக்கு, ஆதீன வளாகத்திற்கு எதிரே, தனிப்பெருவளாகம் ஒன்றைப் பெரிய பெரிய கட்டிடங்களுடன் மூன்று கோடி ரூபாய் செலவில் அண்மைக் காலத்தில் இப்போதிய 26ஆவது குருமகாசந்நிதானம் ஏற்படுத்தியருளியுள்ளார்கள்.

இருபத்தாறாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
12-11-1971 முதல்
(இப்போது அருளாட்சி செய்துவருபவர்கள்)

இவர்கள் பிறந்த திருவூர் சிறுகாட்டூர். தஞ்சாவூர் மாவட்டத்தில் அணைக்கரை (லோயர் அணைக்கட்டு)க்கு அருகில் உள்ளது. நந்தனார் பிறந்த ஆதனூரும் அருகில்தான் உள்ளது. பெற்றோர்: கந்தசாமிப்பிள்ளை, கல்யாணி அம்மையார். பிறந்த பெருநாள் 21-04-1926, அட்சய, சித்திரை , 9, ஆயில்ய

நாள். பிள்ளைத் திருநாமம் திருஞானசம்பந்தன். திருஞான சம்பந்தப் பெயர் கொண்டார் பின்னாளில் குருஞான சம்பந்தக் குருமரபில் குருமகாசந்நிதானமாக நேர்ந்தது.

ஐந்தாம் வகுப்புவரை பள்ளிக்கல்வி. அதன்பின் ஏழரை ஆண்டுகள் திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) நா.வே.சபாபதி செட்டியார் தேவார பாட சாலையில் தேவாரப்பயிற்சி. தேவாரப் பயிற்சி முடிந்தபின் திருப்பனந்தாள் காசிமடத்தில் ஓதுவார் பணி. அக்காலம் காசிமடத்தில் பத்தொன்பதாம் பட்டம் காசிவாசி சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகளின் ஆட்சிக் காலம். அடுத்து இருபதாம் பட்டத்துக்கு வந்தவர்கள் காசிவாசி அருணந்தித்தம்பிரான் சுவாமிகள். ஓதுவார் திருஞான சம்பந்தம் இவ்விரு சுவாமிகளிடத்திலும் நற்பெயரும் நல்லாசிகளும் பெற்றுப் பணிகளிலும் குணத்திலும் சிறந்து விளங்கினார்.

இவர்களது தகுதி திறமைகள் நற்பழக்க வழக்கங்களைக் கண்டும், இவர்கள் மூன்று சகோதரர்கள் ஒரு சகோதரியுடன் பிறந்திருப்பதை எண்ணியும் இவர்கள் துறவு பூண்டு தம்பிரானாவது இவர்களுக்கும் நல்லது ஆதீனத்திற்கும் நல்லது என்று அருணந்தித்தம்பிரான் சுவாமிகள் கருதினார்கள். தருமபுரம் சந்நிதானத்திடம் அனுப்பிவைத்தார்கள்.

காசிவாசி சுவாமிகளின் பரிந்துரையோடு 1945 ஆனி 30 புதன்கிழமை மாலை தருமபுரத்திற்கு வந்த இவர்கள் 25ஆவது குருமகாசந்நிதானத்தைத் தரிசித்து, தம்மை ஆட்கொண்டருளவேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டார்கள். அடுத்த நாளே குருவாரத்தன்று குருவருள் கிடைத்தது. வடக்கு குருமூர்த்தம் சச்சிதாநந்த விநாயகர் ஆலயத்தில் வைத்து யாத்திரை காஷாயம் வழங்கச் செய்தருளினார்கள். திருப்பனந்தாள் காசிமடத்து ஓதுவார் தருமபுர ஆதீனத்துத் தம்பிரானாக ஆனார். சமயதீக்கையும் சோமசுந்தரத்தம்பிரான் என்ற தீட்சாதிருநாமமும் வழங்கப் பெற்றார்கள். உரிய காலங்களில் விசேட நிர்வாண தீக்கைகள் அருளப்பெற்றார்கள்.

திருப்பனந்தாளில் ஓதுவார் பணியில் இருந்தபோதே, அங்குள்ள காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரியில் வித்துவான் புதுமுக வகுப்பிற் சேர்ந்து பயின்றார்கள். தருமபுர ஆதீனத்திற்குத் தம்பிரானாக வந்தபின்பு தருமபுரம் தமிழ்க்கல்லூரியில் வித்துவான் படிப்பைத் தொடர்ந்து முடித்து வித்துவான் பட்டம் பெற்றார்கள். குன்றக்குடி அடிகளார் (அப்போது கந்தசாமித் தம்பிரான்) சுவாமிநாதத் தம்பிரான், வி.சா.குருசாமிதேசிகர் ஆகியோர் அக்காலத்தில் இவருடன் படித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. புகழ்வாய்ந்த திருவருட்பாப் பாடகர் புலவர். கோ. முருகையா அவர்களும் அக்காலத்தில் இவர்களுடன் படித்தவரே.

அக்காலத்தில் கொரடாச்சேரி வாலையானந்த சுவாமிகள் என்றொருவர் இருந்தார். மிகப் பெரிய தத்துவ அறிஞர். சித்தாந்தப் படம் என்றொரு தத்துவ விளக்கப் படத்தை வரைந்து, பெரிய அளவில் அச்சிட்டு வெளியிட்டதோடு, அதற்கென சித்தாந்தப் பட விளக்கம் என்றொரு நூலையும் எழுதி வெளியிட்டவர். சித்தாந்தப் பட விளக்க பாலபோதம், தத்துவவிளக்கச் சுருக்கம் என்பனவும் அவரியற்றிய நூல்கள். முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களும் பேராசிரியர் உரைவேந்தர் ஒளவை சு.துரைசாமி பிள்ளை அவர்களும் வாலையானந்த சுவாமிகளிடம் தீக்கை பெற்றவர்களே. 1950 ஏப்ரலில் கோடை வகுப்பை வாலையானந்த சுவாமிகளைக் கொண்டு, 25ஆவது சந்நிதானம் நடத்தச் செய்தார்கள். வாலையானந்த சுவாமிகள் நடாத்திய அச்சித்தாந்த சாத்திரப் பயிற்சிக் கோடை வகுப்பில் நம் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளும் கலந்துகொண்டு பயிற்சி பெற்றார்கள்.

1951-இல் தருமபுரம் தமிழ்க் கல்லூரிக்கு ஆசிரியர் ஒருவர் தேவைப்பட்டபோது, இவர்கள் தமிழ்ப் பேராசிரியராக நியமிக்கப் பெற்றுச் சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

1955-இல் 25ஆவது குருமகாசந்நிதானம், திருப்பனந்தாள் காசிவாசி அருணந்தித்தம்பிரான் சுவாமிகள் உடன்வரத் தம் பரிவாரங்களுடன் திருக்கேதார யாத்திரைக்கு எழுந்தருளிய போது சென்ற அடியார்களில் இவர்களும் ஒருவர்.

1959 ஆவணி மூலத்தில் காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளின் மணிவிழா (சஷ்டியப்தபூர்த்தி) காசியில் நிகழ்ந்த போது தருமபுரத்திலிருந்து ஸ்ரீ சொக்கநாதர் பிரசாதத்தைக் கொண்டுசென்று சேர்ப்பிக்கும் பணியைச் சந்நிதானம் இவர்களுக்கே வழங்கியருளினார்கள்.

சந்நிதானம் யாத்திரை செய்யுங் காலங்களில் ஆதீனத்தில் சொக்கநாதர் பூசையைச் செய்யும் பேற்றையும் இவர்களுக்கு அருளினார்கள்.

குறுக்கை வீரட்டானம், திருக்கடவூர் வீரட்டானம், சீகாழி ஆகிய கோயில்களுக்குக் கட்டளைத் தம்பிரானாகப் பணியாற்றும் சிறப்பைப் பெற்றார்கள். 1953-இல் திருச்சிராப் பள்ளி மலைக்கோட்டை மௌனமடம் கட்டளை விசாரணைப் பணியில் அமர்த்தப்பெற்றுச் சிறப்புடன் பணியாற்றினார்கள். ஆறு மாத காலமே அப்பணி நீட்டித்தது. அதன்பின் சென்னைக்குச் செல்ல வேண்டியதாயிற்று.

தருமபுர ஆதீனத்திற்குச் சென்னையில் ஒரு கிளைமடம் இல்லாதிருந்த குறை 1953-இல்தான் நீங்கிற்று. கிளைமடம் போன்ற ஒரு புதிய அமைப்பு உருவாயிற்று. சென்னை மாநகரின் முக்கிய பகுதிகளில் ஒன்றாகிய தியாகராயநகரில் முக்கிய சாலைகளில் ஒன்றாகிய வடக்கு உஸ்மான் சாலையில் மேயர் இராமசாமி நாயுடு அவர்களுக்குச் சொந்தமான ஒரு கட்டிடம் அவரிடமிருந்து விலைக்கு வாங்கப்பெற்றது. நாற்புறமும் போதுமான திறந்த வெளியுடன் கூடிய அப்பெரிய கட்டிடம் புதுப்பிக்கப் பெற்று, ''வேளூர்* இறைபணி மன்றம், தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையம்'' எனப் பெயரிடப்பெற்று அதில் ஆதீனப் பணிகள் தொடங்கப்

* வேளூர் - புள்ளிருக்குவேளூர்(வைத்தீஸ்வரன்கோயில்)

பெற்றன. நிலையத்தின் தொடக்கவிழா, அக்கட்டிடத்தை விலைக்கு வாங்குவதில் உதவிய முன்னாள் முதலமைச்சர் சக்கரவர்த்தி இராஜகோபாலச்சாரியார் அவர்கள் தலைமை யிலேயே நிகழ்ந்தது.

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை மௌனமடத்தில் கட்டளை விசாரணைத் தம்பிரானாக இருந்த மௌன சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் சென்னையில் புதிதாக அமைக்கப்பெற்ற தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்திற்கு நிர்வாகியாக (கட்டளைத் தம்பிரானாக) அனுப்பப் பெற்றார்கள். சென்னை சமயப்பிரசார நிலையத்தின் தொடக்க காலத்திய முதல் கட்டளைத் தம்பிரானும் அதில் கடைசியாகப் பணியாற்றிய தம்பிரானும் இவர்களே. 1953இல் சமயப்பிரசார நிலையம் தொடங்கப் பெற்றபோது நியமிக்கப் பெற்ற இவர்கள், 1971-இல் 25ஆவது சந்நிதானம் காசியில் பரிபூரணமாகி, 26ஆவது சந்நிதானமாக இவர்கள் தருமையில் பட்டமேற்கும்வரை 18 ஆண்டுகள் சென்னையில் பட்டினத்துச் சுவாமிகளாகச் சிறந்து விளங்கினார்கள்.

அப்பதினெட்டு ஆண்டுகளும் புண்ணியப் பதினெட் டாண்டுகள். தேவாசுரப்போர் பதினெட்டு ஆண்டுகள் - இராமாயணப்போர் பதினெட்டு மாதங்கள் - பாரதப்போர் பதினெட்டு நாள்கள்-பதினெண் புராணங்கள்- பதினெட்டு ஸ்மிருதிகள் - பகவத்கீதை பதினெட்டு அத்தியாயங்கள் -பதினெண் கணங்கள்-பாட்டும் தொகையுமாகச் சங்க இலக்கியங்கள் பதினெட்டு-பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு- பதினெண் நிலங்கள் -பதினெண் மொழிகள் -பதினெண் சித்தர்கள் - பதினெட்டுப் படிகள்-பதினெட்டுச் சாதிகள்- ஆடி பதினெட்டாம் பெருக்கு - சைவ மடங்கள் பதினெட்டு என்பன போன்று, சென்னை சமயப்பிரசார நிலையப் பணியும் பதினெட்டாண்டு.

இவர்களுக்குப் பின் வேறு யாரும் அப்பணியில் நியமிக்கப் பெறவில்லை. இன்றுவரை நியமிக்கப் பெறவில்லை.

இவர்களின் இடத்தை நிரப்புவது கடினம், இயலாதது. அவ்விடத்திற்கு இவர்களைப் போன்றார் இன்னொருவர் இலர். மேலாளர் போன்ற அலுவலர்களே இன்றுவரை தொடர்ந்து நிர்வகித்து வருகின்றனர்.

18 ஆண்டுப் பணிகளை விரிக்கின் பதினெண் புராணம் போல விரியும். பதினெட்டு வரிகளில் சுருக்கிக்கூறின் - மாதந்தோறும் ஒரு கோயிலில் அபிடேக ஆராதனையுடன் வழிபாடு; சமயச் சொற்பொழிவு; சென்னையிலுள்ள ஐம்பதிற்கு மேற்பட்ட பேட்டைகளில் சுழற்சி முறையில் வழிபாடும் பிரசாரமும் - அழைக்குமிடமெங்கும் சென்று அறவுரை வழங்குதல், நிலையத்தில் சமயப்பயிற்சி, திருமுறைப் பயிற்சி, இசைப்பயிற்சி வகுப்புகள், விடுமுறை நாள்களிலும் விழா (பண்டிகை) நாள்களிலும் கூட்டங்கள், தொடர் சொற் பொழிவுகள், அவ்வப்போது சிறப்புக் கூட்டங்கள், ஆண்டு விழாக்கள், மாநாடுகள், தமிழ்ப்புலவர் தேர்வுக்குப் பயிற்சி வகுப்புகள் இப்படிப் பற்பல பணிகள். வைத்தீஸ்வரன் கோயில் கிருத்திகைப் பிரசாதம் (அபிடேகப் பன்னீரும் சந்தனக் குழம்பும்) மறுநாளே சென்னையில் சமயப் பிரசார நிலையத்தில் அன்பர்களுக்கு வழங்கப்பெறும். கூட்டு வழிபாடு செய்து அனைவரும் பிரசாதம் பெறுவர்.

தொண்டும் துறவும் இரு கண்கள் எனச் செயலாற்றி வந்த தம்பிரான் சுவாமிகளுக்குத் தருமமிகு சென்னையில் பேரும் புகழும் மிகுந்தது. அந்நாளில் ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் என்ற பேருக்கு நாடெங்கும் ஒரு தனி மரியாதை இருந்தது. சென்னையில் அது சற்று அதிகமாகவே இருந்தது. ராஜாஜி, பக்தவச்சலம், காமராஜர் ஆகிய முதலமைச்சர்களும், பெரிய தொழிலதிபர்களும், உத்தியோகஸ் தர்களும் கல்வியாளர்களும், அறிஞர்களும், போற்றிப் புகழத் தொண்டிலும் துறவிலும் சிறந்து விளங்கினார்கள்.

25-ஆவது பட்டம் கயிலைக்குருமணி காசியில் சிவப்பே றெய்தி, அவர்களது திருமேனி தருமபுரத்துக்கு எழுந்தருளச் செய்யப்பெற்று குருமூர்த்தமாகியபின் அடுத்த 26-ஆம்

பட்டத்திற்கு ஆதீன அடியவர்கள் அன்பர்கள் அனைவரும் ஒரு மனமாக இவர்களையே தெரிந்தெடுத்தனர். ஆதீன மரபின் வண்ணம் ஆதீன நிறுவனர் ஸ்ரீ குருஞான சம்பந்தர் ஜீவசமாதி கொண்டிருக்கும் ஞானபுரீசரின் ஆலயத்தில் ஆதி பரமாசாரிய சுவாமிகளே ஞானாபிடேகம் செய்யும் பாவனையில் இவர்களைக் கோமுகையின்கீழ் இருக்கச் செய்து ஞானபுரீசுவரர் அபிடேக நீரால் ஞானாபிடேகம் செய்வித்தனர். புகழ்பெற்ற கயிலைக் குருமணிக்குப்பின் புகழ்பெற்ற மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 26-ஆம் பட்டம் குருமகாசந்நிதானமாக **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** என்ற திருநாமத்துடன் 12.11.1971-இல் பட்டமேற்றருளினார்கள்.

பட்டமேற்று 37 ஆண்டுகளாக அருளாட்சி செய்து வருகிறார்கள். நிகழும் ஆண்டு இவர்களின் 38-ஆம் ஆட்சியாண்டு. இம்முப்பத்தெட்டு ஆண்டுகளில் எவ்வளவோ அரிய பெரிய பணிகளைச் செய்து வருகிறார்கள். ஆதீன நிர்வாகப் பணிகள், கோயில் திருப்பணிகள், குடநீராட்டுகள் இவைகளைப் போன்ற வழக்கமான பணிகளோடு புதிய பெரும் பணிகள் பலவற்றையும் தொடங்கிச் செய்து வருகிறார்கள்.

திருவாமூரில் திருநாவுக்கரசர் திருக்கோயிலை ஏற்படுத்தியது, அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் ஏற்படுத்தியது, அதன் மாநாடுகள், பன்னிரு திருமுறை மூலமும் உரையும் வெளியீடு ஆகியவை குறிப்பிடத்தக்க பெரும் பணிகளாம்.

கனகாபிஷேகம் சதாபிஷேகவிழா (2006), நான்காவது அனைத்துலக சைவ சித்தாந்த மாநாடு (2008) ஆகியவை அண்மைக்காலப் பெரு நிகழ்ச்சிகள்.

திருவாமூரில் திருநாவுக்கரசர் திருக்கோயில் கட்டியது 1963

சைவசமய குரவர் நால்வரும் அவதரித்த இடங்கள் இன்று கோயில்களாக, வழிபாட்டுத் தலங்களாக விளங்கு கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொருவர் புண்ணியம். திருவாமூரில் அப்பருக்குக் கோயில்கட்டிய புண்ணியம் தருமபுர ஆதீனத்தில் அன்று தம்பிரான் சுவாமிகளாக

இருந்தவர்களும் இன்று 26-ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருப்பவர்களுமான ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுடையது.

திருஞானசம்பந்தரின் அவதாரத்தலம் சீகாழி. சீகாழிக் கோயில் தருமபுர ஆதீனக் கோயில். சீகாழியில் திருஞான சம்பந்தப்பெருமான் அவதரித்தருளிய இல்லம் கோயிலின் பின்புறம் அந்தணர் வீதியில் (அக்கிரகாரத்தில்) உள்ளது. இப்போது திருஞானசம்பந்தர் வீதி என்று பெயரிட்டுள்ளனர். அவ்வில்லத்தைச் சைவஅன்பர் ஒருவர் விலைக்கு வாங்கிக் காஞ்சி காமகோடி பீடம் சங்கர மடத்திற்குக் கொடுத்துள்ளார். அது இப்போது காஞ்சி சங்கரமடத்திற்குச் சொந்தமாக, சீகாழிக் கிளைமடமாக உள்ளது. ஆதிசங்கரர் திருவுருவப் படமும் திருஞானசம்பந்தப்பெருமான் திருவுருவப்படமும் வழிபாட்டிலுள்ளன. வேதபாடசாலை, ஆகமபாடசாலை சிறப்பாக நடைபெறுகிறது.

திருநாவுக்கரசர் அவதரித்த திருவாமூரும் சுந்தரர் அவதரித்த திருநாவலூரும் அருகருகே உள்ளன. இரண்டுக்கும் இடையே உள்ள தூரம் ஏறத்தாழ ஐந்து கிலோமீட்டர். இரண்டு ஊர்களிலுமே பழைமையான சிவன் கோயில்கள் உள்ளன. திருவாமூர்க்கோயில் பாடல் பெற்றதன்று. திருநாவலூர்க் கோயில் பாடல் பெற்றது. திருநாவலூரில் சுந்தரர் அவதரித்தருளிய இடம் சந்நிதி வீதியில் உள்ளூரார் பலரறிய இருந்தது. அண்மையில் சிவாசாரியர்கள் சிலர் பலர் சேர்ந்து அதில் சுந்தரருக்குக் கோயில் கட்டியுள்ளனர். எனினும் திருவாமூரில் திருநாவுக்கரசருக்குக் கட்டியுள்ளதைப் போன்று அவ்வளவு சிறந்த அமைப்பில் இல்லை.

திருவாதவூரில் மாணிக்கவாசகர் அவதரித்த இடத்தில் பழங்காலத்திலேயே கற்கோயில் ஏற்பட்டு இன்றும் வழிபாட்டிலுள்ளது.

சீகாழியில் சம்பந்தர் கோயில் வீட்டின் அமைப்பில் உள்ளது. முகப்பு மட்டும் மடம் போன்ற அமைப்பு.

திருவாமூரில் அப்பருக்குச் சிறப்பான புதிய கற்கோயில்.

திருநாவலூரில் சுந்தரர் கோயில் மண்டப அமைப்பில் உள்ளது.

திருவாதவூரில் வாதவூரர் கோயில் பழமையான கற்கோயில்.

திருவாமூரில் அப்பர் பெருமான் அவதரித்தருளிய இடம் கண்டுபிடிக்கப்பெற்று அதில் கோயில் கட்டப்பெற்ற வரலாறு சென்ற நூற்றாண்டின் அற்புதங்களில் ஒன்று. அப்பர் பெருமான் அவதரித்த இடம் அறுபதாண்டுகளுக்குமுன் மண்மேடாக இருந்தது. மேட்டில் ஒரு வாகை மரம் மட்டும் இருந்தது. அது களரிவாகை என்று அவ்வூராரால் சொல்லப் பட்டு வந்தது. அதுதான் அப்பரின் அவதாரத்தலம், அப்பர் பெருமான் பிறந்தருளிய வீடு அங்குதான் இருந்தது என்பது ஊரிலுள்ள முதியோர்கள் சிலருக்கு மட்டுமே தெரியும். வெளியூரிலிருந்து அப்பர் பிறந்தருளிய குறுக்கையர் குடியினர் அவ்வப்போது வந்து அவ்விடத்தில் வழிபட்டுச்செல்வது வழக்கமாக இருந்தது. இவ்வளவே அப்பர் அவதாரத் தலத்தின் அன்றைய அடையாளங்கள்.

ஒரு நல்ல காலம் வந்தது. பெரியோர் சிலர் இவ்விடத்தைப் பற்றிய செய்தியை அறிந்தனர். அவர்களுள் முக்கியமானவர் இருவர். ஒருவர் தருமபுர ஆதீனத் தம்பிரான் சுவாமிகள். இன்னொருவர் அறநிலையத்துறை ஆணையர். தருமையாதீனத் தம்பிரான் சுவாமிகள் அன்று தருமபுர ஆதீனத்தின் சென்னை சமயப்பிரசார நிலையத்தின் தலைவராக விளங்கிய வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஆவர். அவர்களே இப்போது தருமபுர ஆதீனத்தின் 26-ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி அருளாட்சி செய்துவரும் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் அவர்களாவார்கள். அறநிலையத்துறை ஆணையர், அன்று சென்னை இந்துசமய அறநிலையத்துறையில் ஆணையராகப் பேரோடும் புகழோடும் விளங்கிய திரு அ.உத்தண்டராம பிள்ளை அவர்களாவர்.

இவ்விரண்டு பெரிய இடங்களும் திருவாமூரில் அப்பர் அவதாரத் தலத்தில் கோயில்கட்டும் பணியில் ஈடுபட்டன. உள்ளூர் வெளியூர் சைவ மெய்யன்பர்கள் பலரும் ஒத்துழைக்க முன்வந்தனர். தருமபுர ஆதீனத்தில் அன்று 25-ஆவது குருமகா சந்நிதானமாக விளங்கிய கயிலைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அன்புடன் வழங்கியருளிய 1000 ரூபாயுடனும், அரசு மானியமாக அறநிலையத்துறை ஆணையர் அன்புடன் அளித்த 13,000 ரூபாயுடனும் திருப்பணி தொடங்கிற்று.

அறநிலையத்துறை, ஆதீனத்துறை இரண்டும் சேர்ந்தால் கேட்க வேண்டுமா? உத்தண்டராமபிள்ளை எல்லா ஆணையரையும் போன்ற ஒருவரல்லர். சுற்றுப்பயணமும் களஆய்வும் அவருக்குக் கைவந்த கலை. **அறநிலையத் துறைக்குச் சில பொற்காலங்கள் உண்டு. அமைச்சர் பக்தவத்சலம்** அவர்கள் காலம் ஒரு பொற்காலம். அடுத்து அமைச்சர் **இராம.வீரப்பன்** அவர்கள் காலம் ஒரு பொற்காலம். ஆணையர்களில் **உத்தண்டராமபிள்ளை** காலம் ஒரு பொற்காலம். அவர் இதில் ஈடுபட்டுவிட்டார். தருமபுர ஆதீன வித்துவான் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் சென்னையில் தருமபுர ஆதீனம் சமயப் பிரசார நிலையத்தில் தலைவராக இருந்து சென்னை நகரிலும் செங்கற்பட்டு மாவட்டத்தின் பல ஊர்களிலும் பல்வேறு சமயப் பணிகளைப் பலரும் போற்றும் வண்ணம் முதலமைச்சர்கள் பக்தவத்சலம் காமராசர் ஆகியோரும் போற்றும் வண்ணம் ஆற்றிக் கொண்டிருந்தார்கள்.

இவ்விருவரும் தொடங்கிய, திருவாமூரில் அப்பருக்குக் கோயில் கட்டும் பணிக்கு நாடெங்குமிருந்து நல்லாதரவு கிடைத்தது. தம்பிரான் சுவாமிகளால்தான் கிடைத்தது. ஆர்வமற்றிருந்தவர்களுக்கும் ஆர்வத்தை உண்டாக்கினார் தம்பிரான் சுவாமிகள். தம்பிரான் சுவாமிகள் இல்லையெனின் திருவாமூரில் திருநாவுக்கரசர் திருக்கோயில் இல்லை யெனலாம்.

திருவாமூர் ஸ்ரீ திருநாவுக்கரசுநாயனார் திருக்கோயில் திருப்பணிக்குழு அமைக்கப்பெற்றது.

தலைவர்: திரு ஏ.என்.வீரப்பிள்ளை, இலந்தம்பட்டு.

துணைத்தலைவர்: திரு கே.இராஜாராம் ரெட்டியார், திருவாமூர்.

செயலாளர்கள்: திரு கே.எம்.பெரியதம்பிபிள்ளை, கள்ளக்குறிச்சி.

திரு வி.வெங்கிடுகிருஷ்ணா ரெட்டியார், திருவாமூர்.

பொருளாளர்: திரு என்.நாராயணபிள்ளை, ஏரிப்பாளையம்

உறுப்பினர்கள்: திரு ஏ.அரிகிருஷ்ணபடையாச்சி, திருவாமூர்.
திரு சி.வெங்கிடுசாமி ரெட்டியார், திருவாமூர்.
திரு சி.பட்டாபி ரெட்டியார், திருவாமூர்.
திரு ஆர்.நாராயண ரெட்டியார், திருவாமூர்.
திரு ஏ.இராமமூர்த்தி ரெட்டியார், திருவாமூர்.
திரு தி.பி.வெங்கிடுசாமி ரெட்டியார், திருவாமூர்.
திரு எஸ் .திருநாவுக்கரசு பிள்ளை, ஏரிப்பாளையம்.
திரு என்.சுப்பிரமணியம்பிள்ளை, ஏரிப்பாளையம்.
திரு ஆர்.கோவிந்தசாமிபிள்ளை, கள்ளக்குறிச்சி.

செயலாளர் கள்ளக்குறிச்சி பெரியதம்பிபிள்ளை தேசத் தியாகி, விடுதலைப் போராட்ட வீரர். தம்பிரான் சுவாமிகளின் அணுக்கத் தொண்டர்களுள் ஒருவர். தம்பிரான் சுவாமிகளின் உள்ளத்தை அறிந்து அதற்கேற்பச் செயலாற்றும் தம்பிரான் தோழராகத் திகழ்ந்தவர். நமக்கும் அவர் நண்பர். வள்ளலார் பக்தர். வடலூருக்கும் வந்து வழிபடுவார். நம்முடன் சில பல நாள்கள் தங்குவார். திருவாமூர்த் திருப்பணியில் அவருடைய உழைப்பு மிகுதி.

கோயில் கட்டும் பணி சிறப்பாக நிறைவேறிற்று, பழைய கோயிலாகிய பசுபதீசுவரர் கோயிலுக்கும் திருப்பணி செய்யப்பெற்றது. திருநாவுக்கரசு நாயனார் (புதிய) திருக்கோயில், பசுபதீசுவரர் (பழைய) திருக்கோயில் ஆகிய இரண்டிற்குமே ஒரே நாளில் 14.07.1963-இல் குடநீராட்டு விழா சிறப்பாக நிறைவேறியது.

ஆண்டுதோறும் சித்திரைச் சதயத்தில் திருநாவுக்கரசு நாயனார் குருபூஜை திருவாரூரில் சிறப்பாகக் கொண்டாடப் பெறும் வழக்கம் 1964 முதல் ஏற்பட்டது.

சென்னை - திருவாரூர் பாதயாத்திரை - 1969

1968 குருபூஜை விழாவிற்காகச் சென்னையிலிருந்து அப்பர் சுவாமிகளின் திருவுருவப் படம் ஒரு பெரிய காரில் எழுந்தருள்விக்கப் பெற்று 80 கார்கள் பின்தொடர 81 கார்களின் ஊர்வலமாய் 81 அன்பர்களுடன் திருவாரூரை அடைந்தது.

1969-லும் 81 கார் யாத்திரையே உத்தேசிக்கப் பெற்றது. தம்பிரான் சுவாமிகள் எம்மையும் அழைத்தார்கள். பாத யாத்திரையே நன்று என்று யாம் கூறியதால் முடிவில் பாதயாத்திரையே ஏற்படாயிற்று.

சென்னை - திருவாரூர் பாதயாத்திரை 81 பேர் கொண்டதாய் 30.04.1969 புதன்கிழமை மாலை 6-00 மணியளவில் சென்னை தியாகராயநகர் உஸ்மான் சாலை தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்திலிருந்து தொடங்கிற்று. தொடக்கவிழாத் தலைமை உயர்நீதிமன்ற நீதிபதி திரு கைலாசம். திருமதி சௌந்தரா கைலாசம் குருபூஜை மலரை வெளியிட்டார். டாக்டர்.மு.வரதராசனார் தொடக்கவுரையாற்றினார். பாதயாத்திரை தம்பிரான் சுவாமிகள் தலைமையில் புறப்பட்டது. தியாகராய நகர் சிவவிஷ்ணு ஆலயத்தில் வழிபாடு. இரவு கிண்டியில் மணலி இராமகிருஷ்ண முதலியார் மாணவர் விடுதியில் தங்கல். மறுநாள் தாம்பரம் அன்பர் ஏகாம்பரம், பேராசிரியர் பூ.ஆலாலசுந்தரஞ்செட்டியார் ஆகிய இருவரின் வரவேற்பு உபசரிப்பு. தாம்பரத்தில் அன்பர் ஏகாம்பரம் நவீன் ஸ்டுடிடே யா என்ற பெரிய போட்டோ ஸ்டுடியோ நடத்தினார். அவர் எடுத்த ஒளிப்படம்தான் தம்பிரான் சுவாமிகளும் நாமும் பேரூரடிக ளாரும் உள்ள படம். இப்படம் 30.04.1970 -இல் வெளியான திருவாரூர் அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா மலரிலும் அச்சிடப்பெற்றது. பாத யாத்திரையில் எங்களுடன் பேரூராதீனம்

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் மதுராந்தகம் வரை வந்தார்கள். அதன்பின் எங்களிடமிருந்து விடை பெற்றுப் பேரூர் திரும்பினார்கள்.

சென்னை தியாகராய நகரிலிருந்து *30.04.1969* மாலை புறப்பட்ட பாதயாத்திரை கிண்டி, பல்லாவரம், தாம்பரம், நந்திபுரம், திருக்கச்சூர், செங்கற்பட்டு, மதுராந்தகம், அச்சிறு பாக்கம், பெரும்பேறு, தொழுப்பேடு, திண்டிவனம், விக்கிர வாண்டி, விழுப்புரம், இருவேலிப்பட்டு, திருநாவலூர் ஆகிய ஊர்களின் வழியாக, ஆங்காங்கே தங்கி உழவாரப் பணியாற்றியும், உரையாற்றியும் *08.05.1969* வியாழக்கிழமை காலை *10* மணியளவில் திருவாமூர் வந்தடைந்தது.



யாத்திரை முழுவதும் சைவமயமாக இருந்ததோடு வள்ளலாரின் சன்மார்க்க மயமாகவும் இருந்தது. முன்வரிசையில் கல்லாடையில் தம்பிரான் சுவாமிகள், வெள்ளாடையில்

நாம். நங்கவள்ளி சே.கு.முத்தையா (இப்போது சாது முத்தையா), சிதம்பரம் குங்குலியம் பழ.சண்முகம் செட்டியார் (பிற்காலம் சாது சண்முகனார்) என்னும் இரு சன்மார்க்க மெய்யன்பர்கள், எமது நண்பர்கள் எம்முடன் யாத்திரைப் பயன்பெறக் கருதிக் கலந்து கொண்டனர். யாத்திரையில் நாங்கள் மூவர் சன்மார்க்கிகள். ''அரகர நமப் பார்வதி பதயே, அரகர மகா தேவா'', ''தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என்னும் சைவகோஷங்களோடு, ''அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி'' என்னும் சன்மார்க்க மகா மந்திர கோஷமும் வழிநெடுக முழங்கிற்று.

08.05.1969 சிவபூசகர் மாநாடு. திருச்சிராப்பள்ளி திருக்குறள்வேள் ஜி.வரதராசபிள்ளை தலைமை, அருணை வடிவேல் முதலியார் '' சிவபூஜை விளக்கம்'' என்ற தலைப்பில் உரை. மாலையில் அப்பர் தேவார அருந்தமிழ் மாநாடு. மயிலம் பொம்மபுர ஆதீனம் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் தலைமை. 09.05.1969 காலை: பண்ணா ராய்ச்சி மாநாடு. மாலை: கவியரங்கம். கோயம்புத்தூர் சிரவணபுரம் கௌமார மடாலயம் தவத்திரு சுந்தரசுவாமிகள் தலைமை. 10.05.1969 அப்பர் சுவாமிகள் குருபூசைத் திருநாள். காலையில் திருவாசகமணி கே.எம். பாலசுப்பிரமணியம் தலைமையில் பவானி கண்ணப்பர் இன்னிசைக்கதை '' அப்பரும் அப்பூதி அடிகளும்''. அதன்பின் குருபூசை விழாத் தொடக்கவுரை எம்மால் ஆற்றப்பெற்றது. மாலையில் பட்டிமன்றம். '' அப்பர் தேவாரத்தில் பெரிதும் வலியுறுத்தப் பெறுவது பக்தி நெறியா? தொண்டு நெறியா? '' உயர்நீதி மன்ற நீதிபதி என்.கிருஷ்ணசாமி ரெட்டியார் நடுவர். அருட்செல்வர் திரு நா.மகாலிங்கம் அவர்கள் தொடக்க வுரை. பக்திநெறியே என்னும் அணியில் பேராசிரியர் ஔவை நடராசன், புலவர் இரா.செல்வக்கணபதி, புலவர் ஆறுமுகனார் வாதிட்டனர். தொண்டுநெறியே என்னும் கட்சியில் யாமும் (சமயபுரம் ஊரன் அடிகள்) புலவர் எஸ்.கே.இராமராசன், புலவர் வீர. அரங்கனார் ஆகியோரும்

வாதிட்டோம். இரு கட்சிகளுக்குமே வெற்றி தோல்வி இல்லை. தலைப்புப் பொருந்தாது என்று நடுவர் தீர்ப்பளித்தார். இரவு அப்பர் பெருமான் திருவீதி உலாக்காட்சி.

1969, இந்த ஓராண்டுதான் பாதயாத்திரை. மீண்டும் 1970-இல் 81 பேர் கார் யாத்திரை. அதன்பின் யாத்திரை நின்று விட்டது. ஆண்டுதோறும் சித்திரைச் சதயத்தில் அப்பர் குருபூஜை விழா மிகச் சிறப்பாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மாதந்தோறும் சதயநாளில் மாதாந்திர விழாவும் நிகழ்கிறது. மாதச் சதயநாள்களில் திருமுறைத் தொடர் சொற் பொழிவு பல ஆண்டுகளாக விடாமல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பெரியோர்கள் பலர் தொடர் சொற்பொழிவாற்றினர். இளைஞரான புலவர் வ.ஞானப்பிரகாசமும் (கடலூர்) ஒரு முறை தொடர் சொற்பொழிவாற்றினார். முதுபெரும்புலவர் நூற்கடல் தி.வே.கோபாலையரவர்களின் தொடர் சொற்பொழிவும் நிகழ்ந்தது . அன்பர் பலர் தொடர்ந்து விடாமல் வந்து கேட்டுப் பயன்பெறுகிறார்கள். கேள்விச் செல்வர்களில் எம் உழுவலன்பர் தோட்டப்பட்டு எம்.சீதாராம ரெட்டியாரும் ஒருவர். இவர் திருவாமூர்த் திருப்பணியில் தொடக்கமுதலே ஈடுபட்டவர். அண்மையில் அமரராகி விட்டார்.

ஓதுவார்களுக்குத் " திருமுறைக் கலாநிதி " பட்டமளிப்பு

சந்நிதானம் திருமுறைப்பற்று மிக்கவர்கள், திருமுறைப் புலமையும் மிக்கவர்கள். திருமுறைகளை இசையோடு ஓதவல்லவர்கள். இளமையில் முறையாகத் தேவார பாட சாலையில் பயின்றவர்கள். ஒரு காலத்தில் ஓதுவாராகவே பணியாற்றியவர்கள். ஓதுவாமூர்த்திகளாக இருந்து தம்பிரானாகிக் குருமூர்த்திகளாக எழுந்தருளி விளங்கும் தகுதியும் பேறும் பெற்ற புண்ணியர்கள். திருமுறைகளின் அருமையை நன்கு அறிந்தவர்கள். திருமுறைகளை எவ்வாறெல்லாம் பரப்பமுடியுமோ அவ்வாறெல்லாம் பரப்பும் பணியில் முன்னிற்பவர்கள். ஆண்டுதோறும் திருவாமூரில் அப்பர் குருபூஜை விழாவில் சிறந்த ஓதுவார் ஒருவருக்குத் **திருமுறைக் கலாநிதி** பட்டமும் பொற்கிழியும்

வழங்கும் மரபை 1966-இல் தொடங்கினார்கள். தொடக்கத்தில் பொற்கிழி ரூ.500ஆக இருந்தது. இப்போது ரூ.1001-ஆக இருக்கிறது. 1966-ஆம் ஆண்டிலிருந்து ஓர் ஆண்டுகூடத் தவறாமல் இந்த 2008 வரை 43 ஓதுவா மூர்த்திகள் திருமுறைக் கலாநிதி பட்டம் பெற்றிருக்கிறார்கள்.

திருவாரூரில் ' திருமுறைக் கலாநிதி '' பட்டம் பெற்ற ஓதுவார்கள்

1966 திருவிடைமருதூர்	மு.நடராஜ தேசிகர்
1967 சிதம்பரம்	மு.கனகசபைப் பிள்ளை
1968 திருவீழிமிழலை	மு.சா.சோமசுந்தர தேசிகர்
1969 வேதாரண்யம்	க.மணிதேசிகர்
1970 திருக்கடவூர்	மு.இரத்தினம் பிள்ளை
1971 திருநள்ளாறு	அ.நடேச தேசிகர்
1972 கீழ்ப்பெரும்பள்ளம்	த.சம்பந்தம் பிள்ளை
1973 காரைக்குடி	மு.சொர்ணம் பிள்ளை
1974 திருபுவனம்	க.சாமிஐயா தேசிகர்
1975 திருத்துறைப்பூண்டி	ஆபதோத்தாரண தேசிகர்
1976 திருக்காறாயில்	தெ.நடராஜ தேசிகர்
1977 திருக்களர்	சபாரத்தின தேசிகர்
1978 திருவதிகை	திருஞானசம்பந்த தேசிகர்
1979 மதுரை	சைலப்ப ஓதுவார்
1980 திருவெண்ணெய்நல்லூர்	இராசுப்பிள்ளை
1981 கும்பகோணம்	எஸ்.எஸ்.கல்யாணசுந்தர தேசிகர்
1982 கொள்ளிடம்	சி.எஸ்.குமாரசாமிப்பிள்ளை
1983 திருவையாறு	எம்.முருகையா தேசிகர்
1984 திருவாரூர்	ச.கல்யாணசுந்தர தேசிகர் (தருமையில் அளிக்கப்பட்டது)
1985 திருவாவடுதுறை	டி.எம்.சபாபதி
1986 சங்கரன்கோயில்	அ.திருஞானசம்பந்தம்
1987 காஞ்சிபுரம்	ஆ.விநாயக முதலியார்
1988 திருப்புன்கூர்	கே.சுப்ரமணிய தேசிகர்
1989 மயிலாடுதுறை	வி.சொக்கலிங்க தேசிகர்
1990 வேதாரண்யம்	சு.தியாகராச தேசிகர்
1991 திருச்செந்தூர்	எஸ்.நமச்சிவாய ஓதுவார்
1992 திருவழூவூர்	எஸ்.நாகராச தேசிகர்

1993 புஞ்சைப்புளியம்பட்டி	மா.சம்பந்த ஓதுவார்
1994 கீழ்வேளூர்	ஜி. சோமசுந்தர தேசிகர்
1995 புதுச்சேரி	ந.கிருஷ்ணசாமி செட்டியார்
1996 தருமபுரம்	சா.சங்கரநாராயண ஓதுவார்
1997 திருச்செந்தூர்	ஆ.சங்கர ஓதுவார்
1998 சென்னை	தருமபுரம் ப.சுவாமிநாதன்
1999 வைரவன்பட்டி	டி.எஸ். விசுவநாத தேசிகர்
2000 திருநெல்வேலி	இரா.வள்ளிநாயகம்
2001 திருவாவடுதுறை	அ.இராமசாமி ஓதுவார்
2002 இராமேஸ்வரம்	மு.சொக்கலிங்க ஓதுவார்
2003 திருநள்ளாறு	சோ.வடுகநாத தேசிகர்
2004 விருத்தாசலம்	க.கணபதி ஓதுவார்
2005 திருவாவடுதுறை	ஆ.சங்கரலிங்க ஓதுவார்
2006 திருப்புகலூர்	அ.அருணாசல தேசிகர்
2007 சென்னை	என்.இராமலிங்கம் எம்.ஏ.,பிஎச்.டி.,
2008 விழுப்புரம்	சோ.சம்பந்த ஓதுவார்

திருவாமூரில் அப்பர் சுவாமிகள் தேவார பாடசாலை

நமது நாட்டின் அடிப்படைப் பண்பாடு திருமுறைப் பண்பாடு, திவ்வியப்பிரபந்தப் பண்பாடு. திருவருட்பாப் பண்பாடு போன்றவை இதன் தொடர்ச்சியே. திருமுறைகளில் முதலில் தோன்றியவை தேவாரம். 12 திருமுறைகளில் முதல் 7 திருமுறைகள் தேவாரம். அவற்றை அடங்கன்முறை என்பதுண்டு. திருமுறைப் பாடசாலை என வழங்கும் வழக்க மில்லை. தேவார பாடசாலை என்பதே பெரிதும் வழங்கி வரும் வழக்கமாகும். இப்போது 26-ஆவது பட்டமாக எழுந் தருளியுள்ள குருமகாசந்நிதானம் இளமையில் தேவார பாட சாலையில் படித்தவர்கள். திருவாமூரில் அப்பர் சுவாமிகளின் பேரால் ஒரு தேவார பாடசாலை நிறுவவேண்டும் என்ற பேரார்வம் 25;26 ஆகிய இரண்டு சந்நிதானங்களுக்குமே உண்டு. இப்போது 26-ஆவது சந்நிதானத்தின் ஆட்சிக்காலத்தில் சென்ற 2000-ஆவது ஆண்டில்தான் திருவாமூரில் அப்பர் சுவாமிகள் தேவார பாடசாலை கட்டித் திறப்புவிழாக் காணும் நற்பேறு வாய்த்தது. பாடசாலைக் கட்டிடத் திறப்பு விழாவும் பாட சாலைத் தொடக்கவிழாவும் சந்நிதானமவர்களின் முன்னிலையில்

திருவாமூர் கம்பத்தம் திரு ஆர். நாராயண ரெட்டியார் அவர்கள் தலைமையில் 28.04.2000 அப்பர் குருபூசைநாளில் நிகழ்ந்தன. இசைப் பேரறிஞர் திருமுறைக் கலாநிதி தருமபுரம் திரு ப.சுவாமி நாதன் அவர்கள் தேவார பாடசாலைக் கட்டிடத்தைத் திறந்தும், பாடசாலையைத் தொடங்கியும் வைத்தார்.

தருமபுரம் சுவாமிநாதன் அகில உலகப் புகழ் பெற்ற திருமுறை ஓதுவார். தருமபுரத்தில் ஒரு சைவ ஆதீனம் இருக்கிறது என்பதைத் தெரியாதவர்களும் தருமபுரம் சுவாமிநாதனைத் தெரிந்திருப்பார்கள். அவ்வளவு புகழ் பெற்றவர் அவர். தருமபுர ஆதீனம் 24-ஆம் குருமகா சந்நிதானமவர்களிடம் இளமையில் பணிவிடையாகப் பணியாற்றியவர் அவர். திருப்பனந்தாள் காசிமடம் 20-ஆம் பட்டத்து அதிபர் காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளவர்களால் இளமையில் தேவார இசைப் பயிற்சியைப் பெருக்கிக்கொள்வதில் பெரிதும் ஊக்குவிக்கப் பெற்றவர். ஆதீனப் பணிகளினின்றும் நீங்கி வெளிஉலகில் திருமுறைப் பணியை மேற்கொண்டு நன்கு பரப்பித் தாமும் புகழ் பெற்றவர். ''கலைமாமணி'' ''இசைப்பேரறிஞர்'' முதலிய பல பெரும் பட்டங்களைப் பெற்ற தருமபுரம் சுவாமிநாதன் அவர்களைக்கொண்டு திருவாமூரில் அப்பர் சுவாமிகள் தேவார பாடசாலையைச் சந்நிதானம் திறக்கச் செய்தது மிகவும் பொருத்தமானது.

அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்

அமைப்பு - நோக்கமும் பணிகளும்

சைவம் உலக சமயம். உலகளாவிய நிலையில் சைவ சித்தாந்தத்தைப் பரப்பும் பணிக்காக அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் 1984-இல் தருமபுர ஆதீனத்தில் தொடங்கப்பெற்றது. தொடக்க மூலதனம் 20 இலட்சம் ரூபாய். அனைத்துலக சமய தத்துவங்களோடு சைவசித்தாந்த ஒப்பாய்வு செய்வது இதன் தலையாய நோக்கம். 1. சைவ சித்தாந்த சாத்திர நூல்களின் ஆய்வடங்கல்

தயாரித்தல், 2. சைவசித்தாந்த மரபுச்சொல் அகராதி தயாரித்தல், 3.சைவ சித்தாந்தக் களஞ்சியம் வெளியிடல், 4.அரும்பொருளகம் அருங்கலைக்கண்காட்சி அமைத்தல், 5.பல சமய தத்துவங்கள் பற்றிய கருத்தரங்குகள் நடத்துதல், 6. ஆய்வு நூல்களும் மொழிபெயர்ப்பு நூல்களும் வெளி யிடுதல், 7. நூலகம் அமைத்தல், 8. வெளிநாட்டவர்க்குத் தத்துவநெறி விளக்கம் செய்தல், 9. சமய தத்துவப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல், 10.சமய போதனைப் பாடல் நூல்கள் தயாரித்து வெளியிடுதல் 11. இதழ்வழிச் சமயக்கல்வி அளித்தல், 12. பஞ்சாங்கம், புராணம், இதிகாசம், சங்க இலக்கியம் ஆய்வுசெய்தல் ஆகியவை இதன் பணிகளாகத் திட்டஞ் செய்யப்பெற்றன. பெருந்திட்டம். சிறிது சிறிதாக நடந்துவருகிறது.

தஞ்சாவூர் சைவப் பேரறிஞர் சேக்கிழார்அடிப்பொடி திரு டி.என்.இராமச்சந்திரன் அவர்கள் இயக்குநராகவும் பண்டித வித்துவான் டாக்டர் கு.சுந்தரமூர்த்தி அவர்கள் ஆய்வாளராகவும் இருந்து பணிசெய்து வருகிறார்கள்.

கருத்தரங்கங்கள்

முதலாவது அனைத்துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கம் பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து 1984 மே 11;12;13 தேதிகளில் தருமபுர ஆதீனத்தில் நடத்தப்பெற்றது. அயல்நாடுகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும், தமிழ்நாடு முழுவதும் பல பாகங்களிலிருந்தும் ஏறத்தாழ 1000 பேராளர்கள் கலந்து கொண்டனர். நாமும் கலந்து கொண்டோம். அமைச்சர் இராம.வீரப்பன் அவர்கள் முதன் முதலாகத் தருமபுர ஆதீனத்திற்கு வந்தது இக்கருத்தரங்கிற் கலந்துகொள்ளத்தான். ஆதீன வளாகத்தை அதுவரை பார்த்திராத அவர் முதன்முறையாக அப்போது கண்டபோது மிகவும் வியப்புற்றார். "இவ்வளவு பெரிய நிர்வாகமாக இருக்கும் என்று நான் எண்ணவில்லை, இவற்றை எல்லாம் இக்காலத்தில் எப்படிச் சமாளித்து நடத்துகிறீர்கள்" என்று

சொல்லிச் சொல்லி அயர்ந்து (அசந்து) போனார். மேடையிலேயே சொன்னார். ''நீங்கள் இருந்து ஆட்சி செய்வது சென்னையில் செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, இங்குச் சந்நிதானம் இருந்து சைவம் புரக்கும், அருளாட்சி செய்யும் இது குருஞானசம்பந்தர் கோட்டை, அக்கோட்டைக்கு முன் தோன்றிய இக்கோட்டை அதைவிடப் பரந்த கோட்டை, அதற்கு இது சளைத்ததன்று'' என்று நாம் அன்பர் ஆர்.எம்.வீ.-க்குச் சொன்னோம். உண்மை உண்மை என்று கூறி வியந்து மகிழ்ந்தார்.

இரண்டாவது அனைத்துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கு மலேசியா கோலாலம்பூரில் 1886 நவம்பர் 14; 15;16 தேதிகளில் நடைபெற்றது. குன்றக்குடி அடிகளாரும், தொண்டமண்டல ஆதீன குருமகாசந்நிதானமும், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரும் அறிஞர் பலரும் தமிழ்நாட்டிலிருந்து சென்று கலந்து கொண்டனர். மலேசிய அமைச்சர் டத்தோ ஸ்ரீசாமிவேலு அவர்கள் தொடக்கவுரையாற்றினார். மலேசியாவின் சைவப் பெருந்தொண்டர் சைவபூஷணம் இ.வே.கந்தையா (சைவக் கந்தையா) அவர்களும் மலேசியா அருள்நெறித் திருக் கூட்டத்தின் தலைவர் டான்ஸ்ரீ மு.சோமசுந்தரம் அவர்களும் மாநாட்டு ஏற்பாடுகளைச் செய்து சிறப்புற நடத்தினர்.

அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனமும் தமிழ்நாடு தத்துவக்கழகமும் இணைந்து 1987 டிசம்பர் 19; 20 தேதிகளில் ''பல்வகைச் சைவம்'' என்றொரு கருத்தரங்கைத் தருமபுர ஆதீனத்திலேயே நடத்தின. நாம் முதன்மையுரையாற்றினோம்.

மூன்றாவது சைவ சித்தாந்தக் கருத்தரங்கம் திருப்பனந்தாள் காசிமடத்தின் நிறுவனர் குமரகுருபர சுவாமிகளின் 300ஆவது ஆண்டு நினைவாகக் காசியில் ஆதீன ஆராய்ச்சி நிறுவனம், திருப்பனந்தாள் காசிமடம், திருச்சிராப் பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகம், வாரணாசி வித்யா

பீடம், வாரணாசி சம்பூரணானந்த சமஸ்கிருதப் பல்கலைக் கழகம், வாரணாசி பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களோடு இணைந்து, காசியில், 1988 டிசம்பர் 8, 9, 10 ஆகிய மூன்று நாள்கள் சிறப்பாக நடைபெற்றது.

நான்காவது கருத்தரங்கம், நான்காவது அனைத்துலக சைவ சித்தாந்த மாநாடாகப் மிகப்பெரிய அளவில் 2008 மார்ச் 21;22;23 மூன்று நாள்கள் மதுரையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கடல்கடந்த நாடுகள் பலவற்றிலிருந்து சைவ அறிஞர்கள் சைவ மெய்யன்பர்கள் மிகப்பலர் வந்து கலந்துகொண்ட இம்மாநாடு ஆதீன வரலாற்றில் அண்மையில் நிகழ்ந்த ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகும். இதனைப் பற்றிப் பின்னர்க் கூறுவோம்.

சைவசித்தாந்த மாலைநேரக் கல்லூரி

அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் சைவசித்தாந்த மாலைநேரக் கல்லூரியை 1987-88 கல்வியாண்டில் தொடங்கிற்று. இரண்டாண்டு பட்டப் படிப்பு. முதலாண்டு சைவ சித்தாந்த இளம்புலவர். இரண்டாவது ஆண்டு சைவப்புலவர். சேர்வதற்குரிய குறைந்த அளவு கல்வித்தகுதி. எஸ்.எஸ்.எல்.சி அல்லது பத்தாம் வகுப்பில் தேர்ச்சி. ஆண் பெண் இருபாலரும் வயது வரம்பின்றிச் சேர்ந்து பயிலலாம். சமயநூற் பயிற்சி யுடையோர் விஷயத்தில் இவ்விதி தளர்த்தப்பெறும். மயிலாடுதுறை, திருச்சிராப்பள்ளி, சிதம்பரம், மதுரை, சென்னை ஆகிய ஏழு இடங்களிலும் ஆதீனக் கிளை மடங்களிலும், காரைக்காலில் ஒரு பள்ளியிலும் பாளையங் கோட்டையில் சைவ சபையிலும் வகுப்புகள் நடை பெற்றன. சிறந்த பாடத்திட்டம் அமைக்கப்பெற்றது. இதிற் சேர்ந்து பயன்பெற்றோர் ஓய்வுபெற்ற உத்தியோகஸ்தர்கள் உட்பட மிகப் பலராவர். திருச்சிராப்பள்ளியில் தருமபுர ஆதீனம் மௌனமடத்தில் நடந்த வகுப்புகளில் சில நாள் நாம் பாடம் நடத்தியதுண்டு. இதிற்சேர்ந்து பயிற்சி பெற்றோர்

இப்போது தருமபுர ஆதீனத்தில் தம்பிரான்களாகச் சிறந்து விளங்குகின்றனர்.

பன்னிரு திருமுறை (மூலமும் உரையும்) வெளியீடு

12 திருமுறைகளையும் உரையுடன் 16 பகுதிகளாக (புத்தகங்களாக) வெளியிடுவது இத்திட்டம். மொத்தம் ஏறத்தாழ 17 ஆயிரம் பக்கங்களுக்கு மேல். தமிழ்ப் புலமையும் சைவப்புலமையும் வடமொழியறிவும் உரை வன்மையும் வாய்ந்த சிறந்த அறிஞர் பெருமக்கள் எழுதும் பொழிப்புரை, குறிப்புரை, தலவரலாறு, கல்வெட்டுக் குறிப்பு, புராணக் குறிப்பு, பண்கள், சொல்லாராய்ச்சி, பொருளாராய்ச்சி, அருஞ் சொல்லகராதி, பாட்டு முதற் குறிப்பு அகராதி ஆகியவற்றுடன் அடக்க விலைப் பதிப்பாக, இவை அனைத்தையும் வைத்துப் பாதுகாக்கவும் பூசிக்கவும் வாசிக்கவும் ஏதுவாக ஒரு மரப் பேழையுடன் வழங்கப் பெறுகிறது.

முன்பு 25-ஆவது சந்நிதானத்தின் காலத்தில் இத்திட்டம், இப்போதிய திட்டத்திலும் சிறியஅளவில் தொடங்கப் பெற்று ஒரு பகுதி நிறைவேறிற்று. இப்போது 26-ஆவது குருமகா சந்நிதானத்தின் அருளாட்சியில் இத்திட்டம் மிகப்பெரிய அளவில் தொடங்கப்பெற்று நிறைவேறிக் கொண்டுள்ளது. 10 திருமுறைகள் திருமந்திரம் முடிய வெளியாகிவிட்டன. 11;12-ஆம் திருமுறைப் பணிகள் நடந்து முடிந்துள்ளன.

" திருமுறைகள் ஓதாய் "! என்று அருளாணையிட்டருளி யவர்கள் ஸ்ரீகுருஞானசம்பந்த குருமுதல்வர்கள். அதற்கு ஏதுவாகப் பொருளுணர்ந்து ஓத இப்பெரிய ஏற்பாட்டைச் செய்தருளியவர்கள் இன்றைய நம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களாவர்.

சதாபிஷேக விழா - கனகாபிஷேக விழா - 2006

கனகாபிஷேகம் சதாபிஷேகம் இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டவர்கள், உடன்படாதவர்கள் நம் சந்நிதான மவர்கள். பின் ஏன்? எப்படி! இவை நிகழ்ந்தன. "கரைப்பார் கரைத்தால் கல்லும் தேயும்" என்றொரு பழமொழி உண்டு.

காசிவாசி முதலாக, கடைநிலை ஊழியர்கள் ஈறாக சீடர்கள், அன்பர்கள், தொண்டர்கள் இப்படிப் பற்பலர் கரைக்கக் கரைக்கச் சந்நிதானம் திருவுள்ளம் இரங்கி வந்தது. கனகாபிடேகமும் சதாபிடேக விழாவும் சிறப்புற நிகழ்ந்தன.

திருப்பனந்தாள் காசித்திருமடம் அதிபர் கயிலை மாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில் சதாபிஷேக விழாக்குழு அமைக்கப்பெற்றது.

அறுபதாம் அகவை நிறைவில் சஷ்டியப்தபூர்த்தி (மணிவிழா) எண்பதாம் அகவை நிறைவில் சதாபிஷேகம் (1000 பிறைகண்ட விழா) நிகழ்வது மரபு. பிறந்த நட்சத்திரத்தில் இவை நடத்தப்பெறுவதும் மரபு. அம்மரபை ஒட்டி குருமகாசந்நிதானத்தின் சதாபிஷேக விழா 05-05-2006 விய, சித்திரை, 22, வெள்ளிக்கிழமை ஆயில்ய நாளில் திருக்கடவூரில் அமிர்தகடேசுவரர் அபிராமியம்மை திருக்கோயிலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

60; 80 நிறைவு விழாக்களை நடத்திக்கொள்ளும் சைவ மெய்யன்பர்கள் அவற்றைத் திருக்கடவூரில் நடத்திக் கொள்ளுவதே பெருவழக்கு. காரணம், திருக்கடவூர் எம சம்காரத்தலம், சிவபெருமான் மார்க்கண்டேயருக்காக எமனை உதைத்தருளிய தலம் என்பதே. வாழ்நாள் நீடிக்கவும், எம பயம் நீங்கவும் திருக்கடவூர் வழிபாடு என்பது சைவர் நம்பிக்கை, கடைப்பிடி.

சாதாரணமான சைவக் குடிமக்களுக்கே இப்படி யென்றால், சைவ குருமகாசந்நிதானத்திற்கு, அதுவும் அக்கோயிலையே தமக்குச் சொந்தமாக உடைய ஆதீனகர்த்தருக்கு எப்படி! திருக்கடவூரில் திருக்கடவூர்த் திருக்கோயிலில் சந்நிதானத்தின் சதாபிஷேகம் நிகழ்வது பிறப்புரிமையோடு சிறப்புரிமையும் அன்றோ. சைவராகப் பிறந்த அனைவருக்கும், அது பிறப்புரிமை என்றால் சந்நிதானத்திற்கு அது பிறப்புரிமையோடு சிறப்புரிமையும் அன்றோ!

81 சிவனடியார்கள் சிவபூசை செய்யவும் 81 பசுக்களுக்கும் கன்றுகளுக்கும் கோபூசை செய்யவும், வேத சிவாகம பாராயணம் திருமுறைப் பாராயணம், மிருத்யுஞ்சய ஹோமம், மிருத்யுஞ்சய கலசாபிஷேகம் முதலியவற்றுடன் சந்நிதானத்தின் சதாபிஷேக விழா சிறப்புற நிகழ்ந்தது. அமிர்த்தகடேசுவரருக்கும் அன்னை அபிராமிக்கும் காலசம்ஹாரமூர்த்திக்கும் மகாருத்திராபிஷேகம், அன்பர் அனைவருக்கும் சந்நிதானம் ஆசிவழங்கல், மாகேஸ்வர பூஜை ஆகியவற்றுடன் திருக்கடவூரில் விழா நிறைவு பெற்றது. நண்பகல் தருமபுரம் திரும்பியதும் ஆதீனத் திருமடத்தில் கொலுக்காட்சியுடன் முழு நிறைவு பெற்றது.

இது சதாபிஷேக விழாவின் முதற்பகுதி. வழிபாட்டு விழாவாகத் திருக்கடவூரில் நிகழ்ந்தது. இரண்டாம் பகுதி, பொது விழாவாக ஐம்பெரு விழாவாகத் தருமபுரத்தில் நிகழ்ந்தது.

கனகாபிஷேக விழா, போற்றிவிழா, சதாபிஷேகமலர் வெளியீட்டு விழா, விருது வழங்கும் விழா, குருலிங்க சங்கமவிழா ஆகிய ஐம்பெரு விழா தருமபுரத்தில் ஆதீனத் திருமடத்தில் 29-05-2006 திங்கள், 30-05-2006 செவ்வாய் 31-05-2006 புதன் ஆகிய மூன்று நாள்கள் நிகழ்ந்தது. முதல் இரண்டு நாள் விழாக்கள் தருமபுரத்திலும் மூன்றாம் நாள் விழா சிதம்பரத்தில் தில்லைத் திருக்கோயிலிலும் நிகழ்ந்தன.

முதல்நாள் 29.05.2006 திங்கள்கிழமை முற்பகல் 12 மணிக்குக் கனகாபிஷேகம். தருமபுர ஆதீனத்தின் பிரதம சீடரும் திருப்பனந்தாள் காசித்திருமடத்தின் அதிபருமாகிய கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசாமித்தம்பிரான் சுவாமிகள் தலைமையில் நிகழ்ந்தது. கொலுவீற்றிருந்த சந்நிதானத்திற்குக் காசிவாசி சுவாமிகளே மிகவும் பக்தி சிரத்தையுடன் கனகாபிஷேகம் செய்தார்கள். மதுரை ஆதீனம் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம், செங்கோலாதீனம், திருமுதுகுன்றம் குமாரதேவர் மடம் மடாதிபதிகளும், காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு சங்கராசாரிய சுவாமிகளும்,

நீதிஅரசர்கள் தொழிலதிபர்கள் பலரும், ஆயிரக்கணக்கான அடியார்களும் பக்தர்களும் கண்டுகளித்தனர். யாமும் அவர்களுள் ஒருவராக இருந்து மகிழ்ந்தோம்.

மாலையில் நிகழ்ந்த போற்றியுரைக் கூட்டத்தில் உச்சநீதிமன்ற நீதியரசர் (ஓய்வு) திருD.ராஜு , உயர்நீதிமன்ற நீதியரசர் (ஓய்வு) திரு N.V. பாலசுப்பிரமணியன், சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் திரு M.சொக்கலிங்கம், தொழிலதிபர்கள் இராஜபாளையம் திரு. பி. ஆர். இராமசுப்பிரமணியராஜா, மதுரை கருமுத்து திரு.தி.கண்ணன், கோட்டையூர் திரு.பெ.நா. நாராயணன் செட்டியார், முன்னாள் துணை வேந்தர் டாக்டர். திரு.ச.முத்துக்குமரன், தஞ்சாவூர் வல்லம் சாஸ்திரா நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தலைவர் திரு.ஆர். சேதுராமன், திருச்சிராப்பள்ளி சாரதாஸ் நிறுவன உரிமையாளர் திரு T. மணவாளன் ஆகியோர் போற்றியுரை கூறிச் சிறப்பித்தனர்.

இரண்டாம் நாள் (30-05-2006) விழாவும் உரிய சிறப்புகளுடன் ஆதீனத்திலேயே நிகழ்ந்தது. மூன்றாம் நாள் (31-05-2006) விழா சிதம்பரம் திருக்கோயிலில் வழிபாடாகவும், ஆயிரக்கால் மண்டபத்தில் சந்நிதானத்தின் ஆசியுரை, அன்பர்கள் தில்லை.திரு.எஸ்.திருநாவுக்கரசு, திரு.ஆர்.கே. கணபதி, திரு.ஆர்.கேதாரநாதன், சென்னை திரு.எம்.எஸ். உதயமூர்த்தி ஆகியோரின் போற்றியுரையுடனும் சிறப்புற நிகழ்ந்து, இரவு 8-00 மணியளவில் நாயன்மார் அறுபத்து மூவர் திருவுருவம் தில்லைத் திருவீதிகளில் திருவுலாவுடன் சதாபிஷேக விழா இனிது நிறைவேறிற்று.

நான்காவது அனைத்துலக சைவசித்தாந்த மாநாடு
மதுரை - 2008

இம்மாநாடு நிகழவிருக்கும் செய்தி தமிழ்நாட்டில் வெளியாவதற்கு முன்பே மலேசிய நாட்டில் வெளியாகி விட்டது. 2007 நவம்பர் மாதம் நாம் மலேசியாவுக்குச் சென்றிருந்தோம். அங்கிருந்தபோது மலேசியத் தமிழ் நாளிதழ்களில் மாநாட்டுச் செய்தி வெளிவந்ததைக் கண்டோம்.

''தமிழ்நேசன்'' 25-11-2007 ஞாயிறு இதழிலும், ''மலேசிய நண்பன்'' 26-11-2007 திங்கட்கிழமை இதழிலும் செய்தி வெளிவந்தது. இதழின் முழு அகலத்திற்கும், உயரத்தில் மூன்றில் ஒரு பங்குக்கும் பெரிய அளவில் வெளியாகி யிருந்தது. அரைப்பக்கத்திற்குச் சிறிதுதான் குறைவு. இவ்வளவு பெரிய அளவுக்கு நம் நாட்டில் செய்தியோ அல்லது விளம்பரமோ வெளியிட இயலாது. வெளியிடப் படவும் இல்லை. நம் பொருளாதாரம் அப்படி. மலேசிய இதழ்களில் மாநாட்டுச் செய்தியைக் கண்டவுடனேயே, மாநாட்டிற் கலந்துகொள்ள வேண்டுமென்றும் நம் நூல் **''சைவ ஆதீனங்கள்''** இரண்டாம் பதிப்பையும், **''வீரசைவ ஆதீனங்கள்''** முதற் பதிப்பையும் மாநாட்டின்போது வெளியிட வேண்டுமென்றும் முடிவு செய்துவிட்டோம். மலேசியப் பயணம் முடித்துத் தமிழ்நாட்டுக்குத் திரும்பியதும், மலேசிய இதழ்கள் இரண்டின் ஜெராக்ஸ் படிகளைச் சந்நிதானத்திற்கு அனுப்பிவைத்து எமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டோம். முனைவர் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகளுக்கும் எழுதினோம். ஜெராக்ஸ் காப்பிகளை அனுப்பினோம்.

கடல்கடந்த நாடுகளில் வாழும் சைவ மெய்யன்பர்களின் வேண்டுகோளை முன்னிட்டே இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பெற்றது. சைவர்கள் பல்லாண்டுகளுக்கு முன்பே உலக நாடுகள் பலவற்றில் பரவலாக வாழ்ந்து வருகின்றனர். அங்கங்கே சைவக் கோயில்கள், சைவ சபைகள், மன்றங்கள் அமைத்துச் சைவப் பணியிலும் சைவ வாழ்விலும் ஈடுபட்டுள்ளனர். அண்மைக் காலமாக இது அதிகரித்துள்ளது. கடந்த இருபத்தைந்தாண்டுகளில் இலங்கைப் பிரச்சனைக்குப் பின்பு தமிழர்களின் புலம் பெயர்வு அயல்நாட்டுப் பரவல் மிகவும் அதிகமாகிவிட்டது.

ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும், ஆஸ்திரேலி யாவிலும் தென்னாப்பிரிக்காவிலும் கிழக்கு ஆசிய நாடுகளிலும் சைவக் கோயில்கள், சைவ நிறுவன அமைப்புகள், சைவக் கூட்டங்கள் மாநாடுகள் பெருகிவிட்டன. மேலும் மேலும் பெருகி வருகின்றன.

இந்நிலையில் அங்குள்ளார் இங்குள்ள அறிஞர்களையும் துறவிகளையும் அழைப்பதும், இவர்கள் சென்றுவருவதும் அண்மைக்காலத்தில் வழக்கமாகிவிட்டது. வீரசைவ மடாதிபதியாகிய பேரூர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அண்மைக்காலத்தில் அதிக அளவில் வெளிநாடு சென்று வந்தவர். திருப்பனந்தாள் காசிமடத்து அதிபர் சுவாமிகளும் சிலமுறை சென்று வந்துள்ளார்கள். திருவாவடுதுறை ஆதீனகர்த்தரும் இலங்கை மலேசிய நாடுகளுக்கு இரண்டு இரண்டுமுறை சென்று வந்துவிட்டார்கள். கடல்கடந்து செல்லாதது தருமபுர ஆதீனம்தான். அக்குறையை நீக்கும் வகையில் தருமபுர ஆதீனத் தம்பிரான் சுவாமிகளில் ஒருவராகிய முனைவர் மெளன குமாரசாமித்தம்பிரான் அண்மையில் பல நாடுகளுக்குப் பலமுறை சென்று, சென்ற இடங்களிலெல்லாம் ஒரு கலக்குக் கலக்கி, அலைவீசச் செய்து வந்துள்ளார். தோற்றப்பொலிவும் கூர்த்த அறிவும் சுறுசுறுப்பும் உடைய தம்பிரான் சுவாமிகள் அயல்நாட்டுப் பயணங்களில் அதிகமாக மக்களைக் கவர்ந்ததில் வியப்பில்லை. இன்றைய நிலையில் கடல்கடந்த நாடுகளில் இவர்களுக்கு வரவேற்பு மிகுதி, மதிப்பு மிகுதி.

இவர்கள் தம்பிரானாக உள்ள தருமபுர ஆதீனத்தின் குருமகாசந்நிதானம், தங்கள் தங்கள் நாடுகளில் நிகழும் மாநாடு போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஒருமுறைகூட எழுந்தருளிச் சிறப்பிக்கவில்லையே என்ற ஏக்கம் கடல் கடந்த நாடுகளின் சைவமெய்யன்பர்கள் பலருக்கு ஏற்பட லாயிற்று. சந்நிதானத்தை அன்போடு அழைக்கலாயினர்.

சந்நிதானம் பழைமையான மரபுகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பவர்கள். துறவிகள் கடல்கடந்து செல்லக்கூடா தென்பது பழைமையான ஒரு மரபு. அன்றாட வழிபாடுகளையும் ஆசார சீலங்களையும் துறவொழுக்கத்தையும் இங்குபோல், கடல்கடந்த நாடுகளில் முழுமையாகப் பின்பற்ற இயலாது காப்பாற்ற இயலாது என்பது போன்ற காரணங்களால் துறவிகளுக்குக் கடல்கடந்த பயணம் தவிர்க்கப்பட்டது.

மகளிர்க்கும் அப்படியே. கற்பொழுக்கம் காரணம். "முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை" என்று தொல்காப்பியர் ஒரு சூத்திரமே செய்தார். பத்தினிப் பெண்டிரும் துறவிகளும் கடல்கடந்து செல்லக்கூடாது என்பதற்கு இவையெல்லாம் காரணங்கள். இவை அக்காலத்திய நிலை. இக்காலத்தில் நிலைகள் வேறுபடலாம். காலம் மாற மாறக் கருத்துகளும் மாறுகின்றன. கட்டுப்பாடுகள் நெகிழ்கின்றன.

முதன்முதலில் கட்டுடைத்துக் கடல்கடந்து சென்றவர் குன்றக்குடி அடிகளார். அவருக்கு முன்பே ஞானியார் சுவாமிகளைத் தென்னாப்பிரிக்கா அழைத்தது. பல்லக்குப் பயணமும் கடல்கடவாமையும் தமக்குள்ள தடைகள் என்பதைக் குறிப்பாக உணர்த்திய ஞானியார் சுவாமிகள் இறுதிவரை வெளிநாடுகளுக்குச் செல்ல இயலாது போயிற்று.

ஆதீனகர்த்தர்கள் யாரும் இப்போது பல்லக்கில் பயணம் செய்வதில்லை. விலையுயர்ந்த மோட்டார் கார்களில் விரைவாகவும் வசதியாகவும் செல்கிறார்கள். தருமபுரம் சந்நிதானமேகூட ஒருமுறை ஹெலிகாப்டரில் பயணம் செய்ய வேண்டியதாயிற்று. ஆயினும் அது உள்நாட்டுக்குள்தான். கடல்கடந்த நாடுகள் பலவற்றிலிருந்து அழைத்த அன்பர்கள் பலருக்கும் சந்நிதானம் சமாதானம் சொன்னார்கள்.

சந்நிதானம் எங்கள் நாட்டுக்கு எழுந்தருளா விட்டாலும், நாங்களெல்லாம் பெருந்திரளாக வந்து தரிசித்து ஆசி பெறுவதற்கேற்பத் தமிழ்நாட்டில் ஒரு பெரிய மாநாட்டைக் கூட்டினால், கடல்கடந்த நாடுகளின் சைவப் பெருமக்களுக்கு அது வாய்ப்பாக இருக்கும், பேறாக அமையும் என்று வேண்டினார்கள்.

அவ்வேண்டுகோளுக்கிணங்கவே இந்நான்காவது அனைத்துலக சைவ மாநாடு, தருமபுர ஆதீனத்தின் அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில், மதுரையில் கூட்டப்பெற்றது.

மாநாட்டுக்குழுவும், 20 துணைக் குழுக்களும் அமைக்கப் பெற்றன. மாநாட்டுக்குழு பின்வருமாறு அமைக்கப் பெற்றது.

புரவலர்:	ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம், தருமையாதீனம்
தலைவர்:	ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள், திருப்பனந்தாள்
துணைத்தலைவர்:	திரு பி.டி.ஆர்.கமலைத்தியாகராஜன், மதுரை.
அமைப்பாளர்:	திரு கருமுத்து தி.கண்ணன், மதுரை
பொதுச் செயலாளர்:	முனைவர்.டி.என்.இராமச்சந்திரன். இயக்குநர், அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சிநிறுவனம், தருமபுர ஆதீனம்.
செயலாளர்:	கே.இராஜாபட்டர், திருப்பரங்குன்றம்
இணைச் செயலாளர்கள்:	சிவஸ்ரீ ஏ.வி.சாமிநாத சிவாசாரியார், மயிலாடுதுறை
	முனைவர் திரு மா.திருநாவுக்கரசு முதல்வர், தருமபுர ஆதீனம் கலைக் கல்லூரி, தருமபுரம்
	முனைவர் திரு மு.சிவச்சந்திரன் தமிழ்த்துறைத் தலைவர் (ஓய்வு) த.ஆ.க.கல்லூரி, தருமபுரம்
பொருளாளர்கள்:	திரு இரத்தின பாலசுப்பிரமணியன் செயலர், த.ஆ.க.கல்லூரி, தருமபுரம்.
	திரு ச.பாஸ்கரன் பதிவாளர், அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், தருமபுரம்
ஒருங்கிணைப்பாளர்:	முனைவர் ஸ்ரீமத் குமாரசாமித்தம்பிரான் சுவாமிகள் கட்டளை விசாரணை, திருவையாறு & திருச்சிராப்பள்ளி மௌன மடம்.

சிறப்பு ஆலோசனைக்குழுவில்

குருபக்தமணி திரு பி.ஆர்.இராமசுப்பிரமணியராஜா
தலைவர், இராம்கோ நிறுவனங்கள், இராஜபாளையம்

திரு ஏ.சி.முத்தையா
தலைவர், ஸ்பிக் நிறுவனங்கள், சென்னை

கோட்டையூர் திரு பி.என்.நாராயணன் செட்டியார், சென்னை

திரு ஆர்.சேதுராமன்
துணைவேந்தர், சாஸ்திரா பல்கலைக்கழகம்,
வல்லம், தஞ்சாவூர்

திரு கே.துரைசாமி, மூத்த வழக்கறிஞர், சென்னை

ஆகிய ஐந்து பெருமக்களும் இருந்து சிறப்பித்தனர். இவர்களுள் முதல்வராகிய இராஜபாளையம் இராஜா அவர்கள் மாநாடு நிகழ்ந்த மூன்று நாள்களும் முழுமையாக மாநாட்டு அரங்கில் இருந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டும், பல்வேறு பணிகளைக் கண்காணித்தும் சிறப்பித்தார். ராஜா அவர்கள் தருமபுரம் சந்நிதானத்தின் பேரில் பெரிதும் பக்தியும் மதிப்பும் கொண்டவர். ஆதீனத்தின் முக்கிய நிகழ்ச்சிகளிலெல்லாம் தவறாது பங்குகொண்டு சிறப்பிப்பவர், சந்நிதானத்தைத் தரிசித்து மகிழ்பவர். கனகாபிஷேகதிற்கும் வந்திருந்து தரிசித்தார், சிறப்பித்தார்.

இராஜாவைப் போன்றே, மாநாட்டு அமைப்பாளர் கருமுத்து கண்ணன் அவர்கள் துணைத்தலைவர் கமலைத் தியாகராசன் அவர்கள் ஆகிய மதுரைப் பெருந்தகையாளர்கள் இருவரும் மாநாடு நிகழ்ந்த மூன்று நாள்களும் முழுமையாகக் கலந்துகொண்டு அனைத்தையும் கவனித்துச் செய்துதவினர். முன்னேற்பாடுகள் பலவற்றையும் பல நாள்களுக்குமுன்பே சிறப்பாகச் செய்து மாநாட்டின் வெற்றிக்கு அடித்தளமிட்டிருந்தனர்.

மதுரை மாநகரில் சொக்கிக்குளம் என்னும் பகுதியில் பி.டி.ஆர். மஹால் என்னும் பெரியதொரு மண்டப வளாகத்தில் 2008 மார்ச் 21;22;23 வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாளும் மாநாடு நிகழ்ந்தது.

'' திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம், அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் மதுரையில் நடத்தும் நான்காவது அனைத்துலக சைவ சித்தாந்த மாநாடு '' என்று மாநாட்டுக்குப் பெயரிடப் பெற்றிருந்தது. அறிக்கைகள் அழைப்பிதழ் முதலியவற்றில்

அவ்வாறே அச்சிடப் பெற்றிருந்தது.

மதுரையில் மாநாடு நிகழ்ந்ததில் ஒரு தனிச்சிறப்பு உள்ளது.

" தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும்
திருநக ராக அரசுவீற் றிருக்கும்
மாசி லாமணித் தேசிக ராய "

என்று குமரகுருபர சுவாமிகள் பண்டாரமும்மணிக் கோவையில் பாடுகிறார். தருமை என்பது தருமபுரம். கமலை - திருவாரூர். விரிதமிழ்க்கூடல் - மதுரை. ஸ்ரீவில்லிப் புத்தூரில் பிறந்த குருஞானசம்பந்தர் மதுரையில் திருவருள் பெற்று, திருவாரூரில் குருவருள் பெற்று, தருமபுரத்தில் திருமடம் அமைக்கிறார். தருமபுரம் சந்நிதானங்கள் தருமபுரமும் திருவாரூரும் மதுரையும் திருநகராக ஞான அரசு வீற்றிருக்கிறார்கள். மதுரை திருவாரூர் தருமபுரம் என்பது தருமபுர ஆதீன முதல்வர் கடந்து வந்த பாதை. இம்மூன்றில் முதலாவது மதுரை. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை. விரிதமிழ்க்கூடல் என்கிறார் குமரகுருபரர். கூடல் என்பது மதுரைக்கு ஒரு பெயர். சிவபெருமானின் திருவிளையாடல்களுக்கு இடமான மதுரை, தமிழுக்கும் சைவத்திற்கும் பெயர்பெற்ற மதுரை, அம்மதுரையில் மாநாடு காண்பது ஒரு சிறப்பல்லவா!

மதுரையில் மாநாடு நிகழ்ந்த இடம் பி.டி.ஆர்.மகால். பெரிய இடம். பொருத்தமான இடம். பி.டி.இராஜன் பெயரால் அமைந்த இடம். பி.டி.இராஜன் என்று வழங்கப் பெற்ற சர் பொன்னம்பலத் தியாகராஜன் லண்டன் சென்று பார் அட்லா படித்தவர். நீதிக்கட்சி (ஜஸ்டிஸ் பார்ட்டி)யின் தூணாக விளங்கியவர். சென்னை மாநிலத்தில் அக்காலத்தில் அமைந்த நீதிக்கட்சி ஆட்சியில் அமைச்சராக இருந்தவர். மதுரை மீனாட்சியின் பக்தர். பி.டி.ஆர். பரம்பரையே மீனாட்சி பக்திப் பரம்பரை. பி.டி.ஆரின் மூத்த மகனார் திரு பி.டி.ஆர். கமலைத் தியாகராஜன் மாநாட்டுக் குழுவின்

துணைத்தலைவராக இருக்கிறார். மற்றொரு மகனார் பி.டி.ஆர்.பழனிவேல்ராஜன் திராவிட முன்னேற்றக் கழகத்தவர் எனினும் முழு ஆத்திகராக நெற்றியில் திருநீறு குங்குமப் பொட்டுடன் மதுரை மீனாட்சியம்மன் கோயிலின் வழக்கமான வழிபாட்டுக்காரராக விளங்கியவர். பி.டி.ஆர். மதுரைக் கோயிலுக்குப் பெரிய திருப்பணி ஒன்றைச் செய்து குடநீராட்டு நடத்திய பெருமைக்குரியவர். அவரது பெயரால் அமைந்த பெருமன்றத்தில் மாநாடு நிகழ்வது பொருத்தமானதன்றோ!

மதுரையில் தருமபுர ஆதீனத்தின் கிளைமடம் இருந்த போதிலும் அதில் தங்காமல், மாநாடு நிகழ்விடமாகிய பி.டி.ஆர்.மகாலிலேயே மாடியில் பெரிய அறைகளில் சந்நிதானம் தங்கினார்கள். தருமபுரத்திலிருந்தே புஜையுடன் வந்திருந்ததால், சந்நிதானத்தின் நாட்பூஜைகளும் பி.டி.ஆர். மகால் மாடி அறையிலேயே நிகழ்ந்தன. மாநாட்டுக்கு வந்திருந்த வெளிநாட்டு அன்பர்களும் முக்கிய பிரமுகர்களும் சந்நிதானத்தைத் தனியாகத் தரிசிக்கவும் பூஜையைக் காணவும் ஆசிபெறவும் பிரசாதம் பெறவும் இவ்வேற்பாடு மிகவும் வசதியாயிற்று, அனைவருக்கும் மகிழ்ச்சியளித்தது.

தருமையாதீனம் குருமகாசந்நிதானம் திருப்பனந்தாள் காசிவாசி சுவாமிகள் இவ்விரு சந்நிதானங்களோடு மதுரை ஆதீனம், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம், செங்கோல் ஆதீனம், வேளாக்குறிச்சி ஆதீனம், கூனம்பட்டி ஆதீனம் ஆகிய ஐந்து ஆதீனகர்த்தர்களும் மாநாட்டு நிகழ்ச்சிகளிற் பங்கேற்றுச் சிறப்பித்தனர். மதுரை ஆதீனம் மூன்று நாள் நிகழ்ச்சிகளிலும் முழுமையாகக் கலந்து கொண்டார்கள். துழாவூர் ஆதீனகர்த்தரும் வந்திருந்து கலந்து கொண்டார்.

இலங்கை யாழ்ப்பாணம் நல்லை (நல்லூர்) திருஞான சம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளும், மலேசியா திருமுருகன் திருவாக்கு ஆலயம் ஸ்ரீ பாலயோகி சுவாமிகளும் கடல்கடந்த நாடுகளிலிருந்து வந்து மாநாட்டு நிகழ்ச்சிகளில் முன்னிலை ஏற்று வாழ்த்துரை வழங்கினர்.

ஆதீன குருமகாசந்நிதானங்கள் பலரையும் ஒருசேரக் காண்பதற்கு இம்மாநாடு ஒரு பெரிய வாய்ப்பாக அமைந்தது. அதுவும் கடல்கடந்த நாடுகளில் வாழும் சைவர்களுக்கு இஃதோர் அரிய வாய்ப்பு.

லண்டன், சுவிட்சர்லாந்து, கனடா, ஆஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, தென்னாப்பிரிக்கா ஆகிய கடல் கடந்த நாடுகளிலிருந்து பேராளர்கள் பலர் திரளாக வந்திருந்து மாநாட்டிற் பங்குபெற்றனர். இம்மாநாட்டின் ஒரு தனிச்சிறப்பே வெளிநாட்டுப் பேராளர்கள் அதிகம் என்பதுதான்.

முன்கூட்டியே நன்கு திட்டமிடப்பெற்ற இம்மாநாட்டுக்குப் பன்னாட்டு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக மலேசியா கோலாலம்பூர் ஸ்ரீமகாமாரியம்மன் கோயில் தேவஸ்தானத்தின் தலைவர் திரு டத்தோ ஆர்.நடராஜா அவர்கள் திறம்படச் செயலாற்றினார். மலேசிய நாளிதழ்களில் பெரிய அளவில் செய்தியை வெளியிடச் செய்தவர் டத்தோ நடராஜா அவர்கள்தான். கோலாலம்பூர் மகாமாரியம்மன் கோயில் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பலர் மாநாட்டுப் பேராளர்களாக வந்து கலந்துகொண்டனர். ஸ்ரீ பாலயோகி சுவாமிகள் மலேசியா ஒருங்கிணைப்பாளராகவும், திரு நடராஜா சச்சிதானந்தம் லண்டன் ஒருங்கிணைப்பாளராகவும் செயற்பட்டனர். ஒவ்வோர் நாட்டுக்கும் ஒவ்வோர் அன்பர் அமைப்பாளராக இருந்து செயற்பட்டார். இவ்வாறு பன்னாட்டு ஒருங்கிணைப்புக் குழு விரிவாக நன்கு அமைந்து செயற்பட்டது. பன்னாட்டு ஒருங்கிணைப்புக் குழுவின் அமைப்பு பின்வருமாறு:

பன்னாட்டு ஒருங்கிணைப்புக்குழு:

தலைவர்:

திரு. டத்தோ ஆர்.நடராஜா
தலைவர், ஸ்ரீமகாமாரியம்மன்கோயில்தேவஸ்தானம்
கோலாலம்பூர், மலேசியா.

செயலாளர்கள்:

1. சிவஸ்ரீ நாகநாதசிவம் குருக்கள், லண்டன்

2. சிவஸ்ரீ என்.சிவக்குமார் பட்டர், மலேசியா
3. சிவஸ்ரீ என்.பாலச்சந்திர சிவாச்சாரியார், சிங்கப்பூர்

ஒருங்கிணைப்பாளர்கள்:

1. **ஸ்ரீ பாலயோகி சுவாமிகள், மலேசியா.**
2. திரு.நடராஜா சச்சிதானந்தம், லண்டன்.

அமைப்பாளர்கள்:

1. **திரு டான்ஸ்ரீ சோமசுந்தரம், மலேசியா.**
2. திரு கந்தையா நீலகண்டன், இலங்கை.
3. திரு எஸ்.ஜெ.சர்மாஜி,சிங்கப்பூர்.
4. திரு சிவசின்னப்பா, கனடா.
5. திரு கணபதிபிள்ளை சபாநாதன், ஆஸ்திரேலியா.
6. திரு முருகன் ஏகாம்பரம், தென்ஆப்பிரிக்கா.
7. திரு கே.ராஜாபட்டர், திருப்பரங்குன்றம்,தமிழ்நாடு.

மாநாட்டுக் கருத்தரங்கத்தின் பொதுத்தலைப்பு ''வேத ஆகம புராண இதிகாச சங்க இலக்கிய, திருமுறை சித்தாந்த இலக்கியங்களில் சைவசித்தாந்தச் செம்பொருள்கள்- ஆய்வு'' என்பதாகும்.

இவை ஒவ்வொன்றையும் பற்றித் தனிச் சொற்பொழிவுகளும், கட்டுரை படித்தலும், கலந்துரை யாடலும், கருத்துரை வழங்கலும் நிகழ்ந்தன. கருத்தரங்கக் கட்டுரைகள் அனைத்தும் நான்காவது அனைத்துலக சைவசித்தாந்த மாநாட்டுக் கருத்தரங்க மலர் தொகுதி 1, தொகுதி 2, தொகுதி 3 என மூன்று புத்தகங்களாக அச்சிட்டு, மாநாட்டுப் பேராளர்கள் அனைவருக்கும் வழங்கப் பெற்றன. மூன்று தொகுதிகளிலும் முறையே 63+82+64 ஆக 209 கட்டுரைகள். பெரும்பாலும் தமிழ்க்கட்டுரைகள். ஆங்கிலக் கட்டுரைகளும் சில பல. கடல்கடந்த வெளிநாட்டுப் பேராளர்கள் எழுதிய கட்டுரைகள் பல. அவர்களது சமய அறிவையும் மொழி அறிவையும், அந்நாட்டுச் சமய மொழி நிலைகளையும் நாம் அறிவதற்கு, ஆதாரங்களாகவும் உதவியாகவும் அக்கட்டுரைகள் அமைந்துள்ளன.

"கடல்கடந்த சைவநெறி" *(எஸ்.எஸ்.சர்மா, சிங்கப்பூர்)* என்னும் கட்டுரை *(தொகுதி 1, பக்கம் 302)* ஒரு நல்ல கட்டுரை. நேபாளம், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, மியான்மர், பாலி, இந்தோனேசியா, நாடுகளில் உள்ள சைவக்கோயில்களையும், சைவ சமய நிலையையும் அறிய இக்கட்டுரை உதவுகிறது. **"திருமுறைத் தலங்களின் இன்றைய நிலை"** என்ற கட்டுரையில் *(தொகுதி 1, பக்கம் 380 சிங்கப்பூர் எம்.கே.நாராயணன்)* கட்டுரையின் இறுதியில், **"முடிவுரை: மதுரை மீனாட்சிஅம்மன், சிதம்பரம், இராமேஸ்வரம், திருவண்ணாமலை போன்ற 100 திருத்தலங்கள் செழிப்போடு வானளாவி நிற்கின்றன, தமிழ்நாட்டிலுள்ள மற்ற 166 திருமுறைத் தலங்களின் எதிர்காலம் ------? கேள்விக் குறியாக இருக்கிறது. திருமுறைத் தலங்கள் நம் பாரம்பரிய சொத்து. அதை நாம் காப்போமாக"** என்று முடித்திருப்பது நம் கண்களைக் கலங்கச் செய்கிறது.

" உலகளாவிய சைவமும் இருபத்தோராம் நூற்றாண்டில் அது எதிர்கொள்ளும் சவால்களும்" *(இ. லம்போதரன் லண்டன்)* என்ற கட்டுரை *(தொகுதி 3, பக்கம் 310)* இக்காலத்தில் நம் சிந்தனைக்குரிய ஒரு நல்ல கட்டுரை. சைவ உலகுக்கு இன்றுள்ள சவால்களைக் கட்டுரையாளர் அடுக்கடுக்காகக் கூறிச் சிந்திக்க வைக்கிறார். அறிவார்ந்த, வீறார்ந்த இக்கட்டுரை, இன்றைய நிலையில் மிகவும் பரவலாகப் பரப்பப் பெற வேண்டிய ஒரு கட்டுரை. சில பகுதிகளை எடுத்துக்காட்டி நம் கருத்துகளையும் கூறி விமர்சிக்க மனம் விரும்பினும் நூலில் இடம்போதாத குறையால், விரிப்பிற் பெருகும் என்ற எண்ணத்தால் விடுத்து மேற்செல்கிறோம். இவை போன்ற கட்டுரைகளை, இன்றைய இந்து சைவ தமிழ் இளைஞர் உலகம், படிப்பதும் சிந்திப்பதும் இன்றியமையாததாகும். **"சவால் மட்டுமல்ல சாபக் கேடும்கூட"** என்று கட்டுரை ஆசிரியர் கூறுவது எம் உள்ளத்தைத் தொடுகிறது. இவ்வொரு கட்டுரையை வைத்தே, இவ்வொரு கட்டுரைத் தலைப்பை வைத்தே, ஒரு முழுமையான கருத்தரங்கம் நடத்தலாம், நடத்தவேண்டும்.

மாநாட்டுக் கருத்தரங்க மலர் (கட்டுரைத் தொகுப்பு) இப்படி என்றால், இன்னொரு மலர் மாநாட்டின் சிறப்புமலர் என்ற பெயரில் பொது மலராக மாநாட்டுக்கு வந்த வாழ்த்துகளோடும் கட்டுரைகளோடும் விளம்பரங்களோடும் வெளியிடப்பெற்றது. இம்மலரை மலேசியா கோலாலம்பூர் ஸ்ரீ மகாமாரியம்மன் கோயில் தேவஸ்தானத்தின் தலைவர் டத்தோ ஆர்.நடராஜா அவர்கள் வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார்.

மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் லண்டன் நடராஜா சச்சிதானந்தன் அவர்கள் வெளிநாட்டுப் பேராளர்களை அறிமுகம் செய்துவைத்து உரையாற்றினார். லண்டன் டி.ஆனந்த சேகர், லண்டன் சிதம்பரம்பிள்ளை முன்னிலை ஏற்று வாழ்த்துரை வழங்கினர்.

லண்டன் சிவன் கோயிலில் ஓதுவாராகப் பணியாற்றும் திருமுறைக்கலாநிதி சாமி தண்டபாணி திருமுறை இசை யரங்கு நடத்தினார்.

நாகநாத சிவம், லண்டன்
சம்பத்குமார், லண்டன்
அப்பையா தேவசகாயம், லண்டன்
துரைராஜா ஸ்ரீகந்தராஜா, லண்டன்
கே.ரங்கநாதன், லண்டன்
க.ராஜமனோகரன், லண்டன்
சரவணபவானந்த குருக்கள், சுவிட்சர்லாந்து
சிவ சின்னப்பா, கனடா
ம.ஜெயராமசர்மா, ஆஸ்திரேலியா
க.சபாநாதன், ஆஸ்திரேலியா
டான்ஸ்ரீ சோமசுந்தரம், மலேசியா
தேவபூபதி நடராஜா, மலேசியா
ம.சிவகுமார் பட்டர், மலேசியா
எஸ்.எஸ்.சர்மா, சிங்கப்பூர்
முருகன் ஏகாம்பரம், தென்னாப்பிரிக்கா

ஆகிய வெளிநாட்டுப் பேராளர்கள் அமர்வுத் தலைவராகவும் இணைப்பாளராகவும், கருத்துரையாளராகவும் இருந்து சிறப்பித்தனர்.

உள்நாட்டுப் பேராளர்களில

முனைவர் மா.திருநாவுக்கரசு
முனைவர் மு.சிவச்சந்திரன்
முனைவர் பழ.முத்தப்பன்
முனைவர் திருமதி. சாரதா நம்பியாரூரன்
முனைவர் பா.சுந்தர்
வித்துவான் தா.குருசாமிதேசிகர்
வித்துவான் நீ.சீ.சுந்தரராமன்
புலவர்.மு.,வைத்தியநாதன்

முதலிய அன்பர்கள் தனிச்சொற்பொழிவு, அமர்வுத் தலைமை, இணைப்பாளர் என்ற வகைகளிற் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வேதம் ஆகமம் வல்ல சிவாசாரியர்கள் பலர் பல்வேறு நிலைகளில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பிள்ளையார் பட்டி பிச்சை சிவாசாரியார் அவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர். இவர் பிள்ளையார்பட்டியில் நடத்திவரும் ஆகமக் கல்லூரியில் பயின்ற பலர் கடல்கடந்த நாடுகளில் சிவாசாரியர்களாகச் சிறப்பாகப் பணிசெய்து வருகிறார்கள் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

மூன்றாம் நாள் மாலை நிறைவுவிழா அரங்கம் எல்லாருக்கும் மனநிறைவு தருவதாக அமைந்தது. இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பெரியகருப்பன் அவர்களும் ஆணையர் கு.பிச்சாண்டி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தாயுமான சுவாமிகள் பாடல்திரட்டு பூவை கலியாணசுந்தர முதலியாரின் மெய்கண்ட விருத்தியுரையுடன் அழகிய பெருநூலாகத் திருச்சிராப்பள்ளி மௌனமடம் சார்பில் பதிப்பிக்கப்பட்டதை அறநிலையத்துறை அமைச்சர் வெளியிட, அதன் முதற்பிரதியை வணிக வரித் துறை அமைச்சர் எஸ்.என்.எம். உபயதுல்லா அவர்கள் பெற்றுக் கொண்டு வாழ்த்துரை வழங்கினார். அமைச்சர் உபயதுல்லா அவர்களின் உரை அரசியல் கலப்பில்லாமல் சிறந்த அறவுரையாக இலக்கிய உரையாக அமைந்திருந்தது. தாயுமானவர் பாடல்கள் பலவற்றை எடுத்துக்காட்டி விளக்கித் திருக்குறள் திருமந்திர மேற்கோள்களுடன் இனிமையாக உரையாற்றினார். இஸ்லாமியர் ஒருவர் இப்படி ஒரு இனிய

இலக்கிய உரையை, அதுவும் தாயுமானவர் திருவுள்ளத்தைத் திறந்து காட்டும்படி அருமையாகப் பேசுகிறாரே என்று அனைவரும், குறிப்பாக வெளிநாட்டுப் பேராளர்கள் பலரும் வியந்து போற்றினர். அவரது உரையும் அடுத்து மதுரை ஆதீனத்தின் ஆசியுரையும் முத்திரை பதிக்கும் உரைகளாக அமைந்தன.

உள்நாட்டு, வெளிநாட்டுப் பேராளர்கள் அனைவருக்கும் தங்குமிடம் உணவு சிறப்பாக ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. பார்வையாளர்கள் அனைவருக்குமே மூன்று நாளும் மூன்று வேளையும் அறுசுவை உணவு அளிக்கப்பெற்றது. இடையிடையே சிற்றுண்டி, பால் காபி டீ முதலியனவும் வழங்கப் பெற்றன.

கண்ணாரக் காண, காதாரக் கேட்க, வயிரார உண்ண மிகச்சிறந்த விருந்தாக மாநாடு அமைந்தது.

தருமபுரம், திருப்பனந்தாள், மதுரை, குன்றக்குடி, செங்கோல், வேளாக்குறிச்சி, கூனம்பட்டி ஆகிய ஏழு (உள்நாட்டு) ஆதீனங்களின் சந்நிதானங்கள்-

இலங்கை, மலேசியா ஆகிய இரண்டு (வெளிநாட்டு) ஆதீனங்களின் சந்நிதானங்கள்-

உள்நாட்டு வெளிநாட்டு சிவாசாரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், பார்வையாளர்கள், பெருந்தகையாளர்கள், பேரன்பர்கள்-

இப்படி ஒரு பெரிய திருக்கூட்டத்தின் கூடல் (சங்கமம், சந்திப்பு, அளவளாவல்) அவ்வப்போது அடிக்கடி நேர்வதன்று, எப்போதாவது அரிதாக (அபூர்வமாக) நேர்வதாகும். அப்படி இப்போது நேர்ந்ததுதான் கூடல் மாநகரில் நிகழ்ந்த இச்சைவத் தமிழ்க்கூடல், அனைத்துலக சைவத் தமிழ்ச் சங்கமம்.

மூன்று நாளும் முழுமையாக நாம் (ஊரன் அடிகள்) கலந்துகொண்டோம். மாநாட்டின் நடுநாள் 22-03-08 சனிக்கிழமை காலை பொது அமர்வு உரையரங்கில் முன்னிலை யேற்றுச் சைவ ஆதீனங்கள் என்ற தலைப்பில் வாழ்த்துரை வழங்கினோம்.

இம்மாநாட்டின் மிகச் சிறந்த வெற்றிக்குக் காரணம்:

1. கடல்கடந்த நாடுகளில் வாழும் சைவ மெய்யன்பர்கள் பலரின் அளவற்ற ஆர்வம்.
2. சந்நிதானத்தின் திருவுள்ள இசைவு.
3. திருப்பனந்தாள் அதிபர் சுவாமிகளின் தலைமை.
4. முனைவர் குமாரசாமித்தம்பிரான் அவர்களின் ஆக்கமிகு ஒருங்கிணைப்பு.
5. தருமபுரம் கல்லூரி முதல்வர் திருநாவுக்கரசு, பேராசிரியர் சிவச்சந்திரன் முதலியோரின் ஊக்கமிகு உழைப்பு.
6. இராஜபாளையம் இராஜா, மதுரைப் பெருந்தகையார் இருவர் கருமுத்து, கமலை ஆகிய மூவரின் ஆற்றல்.
7. தொடர்புடைய (சம்பந்தப்பட்ட) அனைவரின் ஈடுபாடு.

8. இவை எல்லாவற்றிற்கும் மேலாகச் சொக்கநாதர் மீனாட்சி திருவருள் என்று கூறி மாநாட்டைப் பற்றிய இப்பகுதியை நிறைவுசெய்வோம்.

தருமபுர ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்கள்

தருமபுர ஆதீனத்தில் இப்போது திருக்கூட்டத்து அடியவர்களாக விளங்கும் தம்பிரான் சுவாமிகளின் திருப்பெயர்கள் வருமாறு.

டாக்டர் ஸ்ரீமத் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள், எம்.ஏ., பிஎச். டி.,
ஸ்ரீமத் திருஞானசம்பந்தத் தம்பிரான் சுவாமிகள், எம்.ஏ.,
ஸ்ரீமத் கந்தசாமித் தம்பிரான் சுவாமிகள்
ஸ்ரீமத் திருநாவுக்கரசுத் தம்பிரான் சுவாமிகள், எம்.ஏ.,
ஸ்ரீமத் மாணிக்கவாசகத்தம்பிரான் சுவாமிகள்

முற்காலத்தில் தம்பிரான் சுவாமிகள் பெரும்பாலும் தமிழ்வித்துவான் பட்டம் பெற்றவர்களாக இருந்தனர். இன்றைய தம்பிரான் சுவாமிகள் சிலர் எம்.ஏ., பட்டம் பெற்றவர்களாக விளங்குகின்றனர். ஒருவர் டாக்டர் பட்டமும் பெற்றுவிட்டார் என்பது மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்கும் உரியது. வருங்கால குருமகாசந்நிதானங்கள் பட்டதாரிகளாக டாக்டர் பட்டம்

பெற்றவர்களாக இருப்பர், முன்னைப் பழைமையைப் போற்றுவதுடன் பின்னைப் புதுமைகளுக்கும் ஈடு கொடுப்பவர்களாக இருப்பர் என்ற அறிகுறி தோன்றுகிறது.

முனைவர் குமாரசாமித்தம்பிரான் திருச்சிராப்பள்ளி மௌனமடத்தின் கட்டளைத்தம்பிரானாகப் பணியாற்றுகிறார், திருஞானசம்பந்தத் தம்பிரான், திருக்குவளை திருக்கடவூர் தேவஸ்தானங்களின் கட்டளைத் தம்பிரானாகவும், கந்தசாமித் தம்பிரான் புதுவை மாநிலம் திருநள்ளாறு தேவஸ்தான அறங்காவலர்களில் ஒருவராகவும், திருநாவுக்கரசுத் தம்பிரான் வைத்தீசுவரன் கோயில் தேவஸ்தானத்தின் கட்டளைத் தம்பிரானாகவும், இவர்கள் எல்லாரினும் இளையவரான மாணிக்கவாசகத் தம்பிரான் ஆதீனத்தின் தலைமை இடமாகிய தருமபுரத்தில் பயிற்சி பெறுபவராகவும் பணியாற்றி வருகின்றனர். இவர்களனைவரும் பண்பாடுமிக்க பரம்பரைச் சைவக் குடும்பத்தில் தோன்றி இளமையிலேயே ஞானவேட்கையும் துறவிச்சையும் உடையவர்களாகிக், கல்வி கேள்வி அன்பறி வொழுக்கங்களிற் சிறந்தவர்களாகி ஆதீனப் பணிகளில் சிறந்து விளங்குகின்றனர்.

ஆதீனப் பணிகளின் வளர்ச்சி

மிகப்பெரிய ஆதீனத்தின் நிர்வாகம், கிளைமடங்களின் நிர்வாகம், 27 பெருங் கோயில்களின் நிர்வாகம், திருப்பணிகள், வேதசிவாகம பாடசாலை, தேவாரபாடசாலை, கல்லூரி, உயர்நிலைப்பள்ளி முதலிய கல்வி நிலையங்கள், அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், சைவ சித்தாந்தக் கோடை கால வகுப்புகள், நூல் வெளியீடு, இதழ் வெளியீடு என்று ஆதீனப் பணிகள் சிறப்புற நிகழ்ந்து வருகின்றன. கோயில் திருப்பணிகள் பல நடந்து குடநீராட்டு விழாக்கள் கண்டுள்ளன. ஆதீன நுழைவாயிலுக்கு எதிரே கல்லூரிக்கு மிகப் பெரிய கட்டிடம் கட்டிமுடிந்து உபயோக த்தில் உள்ளது. பணிகள் வளர்ந்தோங்கி வருகின்றன.

காசித்திருமடம்

திருப்பனந்தாள்

புகழ்பெற்ற பிரபந்தவேந்தர் குமரகுருபர சுவாமிகளால் காசி (வாரணாசி)யில் குமாரசாமி மடம் நிறுவப்பெற்றது. நேபாளத்திலும் கிளை மடம் இருந்தது. குமரகுருபரருக்குப் பின் அவரது சீட பரம்பரையில் திருப்பனந்தாளில் காசிமடம் நிறுவப்பெற்றது. திருப்பனந்தாள் காசித்திருமடம் அகில இந்தியமடம். அதன் பணிகள் தமிழ்நாட்டில் மட்டுமின்றிக் காசியிலும் நடைபெறுகின்றன. அதன் அதிபர்கள் ''காசிவாசி'' என்ற சிறப்புப் பெயருடன் வழங்கப் பெறுகின்றனர். முக்கால்வாசி தமிழகத்திலும் கால்வாசி காசியிலுமாக இருந்து அகில இந்திய அளவில் பணி புரிகிறார்கள்.

குமரகுருபரர் தருமபுர ஆதீனத்தின் சீடர். காசித்திருமடம் தருமபுர ஆதீனத்தின் சீட மடம்.

காசித்திருமடத்தின் அன்னதானமும் ஞான தானமும் தனிச்சிறப்பானவை. வேறு எங்கும் காணப்பெறாதவை.

நிறுவனர் குமரகுருபரர் வரலாறு

குமரகுருபரர் காலம்

குமரகுருபரரின் காலம் பதினேழாம் நூற்றாண்டு. 1625 – 1688. 24.06.1625-இல் பிறந்தாரென்றும் 08.05.1688-இல் முத்தி பெற்றாரென்றும் காசிமடத்தார் கணித்துக் கடைப்பிடித்து வருகின்றனர்.

1988 மே மாதம்முதல் 1989 மே மாதம்வரை ஓராண்டு காலம் குமரகுருபரர் முத்திபெற்ற 300-ஆவது ஆண்டுவிழா, காசி முதல் இராமேசுவரம் வரை காசிமடத்தாரால் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. 1988 ஜூன் 3-ஆம் நாள் குமரகுருபரரின் மூன்றாவது நூற்றாண்டுக் குருபூஜை கொண்டாடப் பெற்றது. 08.06.2008-இல் 320-ஆவது குருபூஜை கொண்டாடப்பெற்றது.

குமரகுருபரரின் தனிச்சிறப்பு

குமரகுருபரரின் தனிச்சிறப்பு, அவர் சைவ உலகில் மட்டுமின்றித் தமிழ் இலக்கிய உலகிலும் பெரியதோர் இடத்தைப் பெற்றுப் பேரோடும் பெரும்புகழோடும் விளங்குவதே. தமிழ் இலக்கிய உலகில், இவ்வளவு பேரும் புகழும் பெற்ற சைவத்துறவி, சைவ மடாதிபதி, இவரைத் தவிர வேறு யாரும் இல்லை. ஆத்திகர் காந்தியடிகள் குமரகுருபரரின் தத்துவத்திற் கட்டுண்டாரெனின் நாத்திகர் பாரதிதாசன் குமரகுருபரரின் தமிழிற் கட்டுண்டார்.

குமரகுருபரர் பிறப்பும் மௌனமும்

குமரகுருபரர் பிறந்த ஊர் தென்பாண்டி நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் (இப்போது தூத்துக்குடி மாவட்டத்தில்) ஸ்ரீவைகுண்டம் நகரத்தின் ஒரு பகுதியாகிய

கயிலாசபுரம். ஸ்ரீவைகுண்டம் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற நூற்றெட்டு வைணவத் திருப்பதிகளில் ஒன்று. பாண்டிய நாட்டு வைணவப்பதிகள் பதினெட்டில் ஒன்று. அவற்றுள் "நவதிருப்பதிகள்" எனச் சிறப்பாக விளங்கும் ஒன்பது ஊர்களில் ஒன்று. விண்ணுலகில் உள்ள வைகுண்டத்தின் திருப்பெயரை மண்ணுலகில் தாங்கி நிற்கும் ஒரே ஊர் இதுதான். ஸ்ரீவைகுண்டம் நகரம் இப்போது தேர்வுநிலைப் பேரூராட்சியாக (நகரப் பஞ்சாயத்தாக) உள்ளது. ஸ்ரீ வைகுண்டத்தின் ஒரு பகுதியே குமரகுருபரர் பிறந்த கயிலாசபுரம். ஸ்ரீவைகுண்டம் - கயிலாசபுரம், பெயரொற்றுமை எப்படி! விண்ணுலகில் வைகுண்டமும் கயிலாசமும் வெவ்வேறாக இருப்பினும் மண்ணுலகில் ஸ்ரீவைகுண்டமும் கயிலாசபுரமும் அடுத்தடுத்து ஒன்றாக உள்ளன.

குமரகுருபரரின் பெற்றோர் சண்முகசிகாமணிக் கவிராயர். சிவகாமசுந்தரி அம்மையார். கவிராயர் என்ற பெயரே அவர் தமிழ்ப் புலமை மிக்கவர் என்பதைக் காட்டும். பரம்பரைச் சைவவேளாளர் மரபினராகிய இவர்கள் திருச்செந்தூர் முருகப்பெருமானை வழிபடு கடவுளாகக் கொண்டு சைவ ஒழுக்கங்குன்றாது வாழ்ந்து வந்தனர். மகப்பேறில்லாக் குறை தவிர வேறு எக்குறையும் இவர்களுக்கு இல்லை. அக்குறையும் திருச்செந்தூர் வேண்டுதலால் நீங்கி அழகிய ஆண் குழந்தை பிறந்தது. குமரகுருபரன் எனப் பெயரிட்டனர்.

பிறந்ததிலிருந்தே குழந்தை அழாமல் இருந்தது. பேசத் தொடங்கும் பருவத்தில் பேசாமல் இருந்தது. அழாமலும் பேசாமலும் இருப்பதைக் கண்ட பெற்றோர்களும் உற்றார் உறவினரும் ஊராரும் குழந்தையை ஊமை என்றெண்ணி வருந்தினர். இவ்வாறு ஐந்து ஆண்டுகள் கடந்தன. ஐந்தாண்டுகள் பொறுத்திருந்தும் குழந்தை பேசாமலிருப்பதைக் கண்ட பெற்றோர் இதுவரை இவ்வைந்தாண்டுகாலம் நாம் பேசாமலிருந்ததுபோல் இனியும் பேசாமலிருப்பது பயனில்லை,

குழந்தையையும் அழைத்துக்கொண்டு திருச்செந்தூர் சென்று முருகப்பெருமானிடம் குறையிரக்க வேண்டும் என்று எண்ணினர். குழந்தையுடன் திருச்செந்தூர் சென்று செந்திலாண்டவன் சந்நிதியிற் பாடுகிடந்தனர். ஒரு மண்டலம் 48 நாள் பாடுகிடப்பதென்றும் அதற்குள் செந்திலாண்டவன் குழந்தைக்குப் பேச்சுத்திறனை அளிக்காவிட்டால், குழந்தையை ஆண்டவன் சந்நிதியிலேயே அவன் பாடென்று விட்டுவிட்டுத் தாமிருவரும் உயிர்துறந்து விடுவதென்றும் அதிதீவிர உறுதி யுடன் வேண்டிக்கொண்டு விரதமிருந்தனர். 47-நாள்கள் கடந்தன. 48-ஆம் நாள் விடியற்காலை செந்திலாண்டவன் இவர்கள் படுத்திருந்த மண்டபத்திற்குக் கோயிற்பூசகர் வடிவில் வந்து, குழந்தையை எழுப்பிக் ''குமரகுருபரா! நம் சந்நிதிக்கு வந்து விசுவரூப தரிசனம் கண்டு நம்மைப் பாடு'' என்று அழைத்தார். குழந்தைக் குமரகுருபரர் பெற்றோரைப் புரட்டி எழுப்பினார். பெற்றோர்கள் திகைத்து எழுந்தனர். பூசகர் வடிவில் வந்தவர் முன்னே செல்ல, குழந்தை குமரகுருபரர் அவரை மௌனமாகப் பின்தொடர, பெற்றோர்கள் திகைப்புடன் குழந்தையைப் பின்தொடர எல்லாரும் செந்திலாண்டவன் சந்நிதிக்கு வந்தனர். பூசகர் வடிவில் வந்தவர் கருவறைக்குட் சென்று செந்திலாண்டவன் திருமேனியிற் கலந்து மறைவதைக் குமரகுருபரர் கண்டார்.

மௌனம் கலைந்து பாடத் தொடங்குதல்

செந்திலாண்டவன் அருளால் மௌனம் கலைந்து பாடத்தொடங்கினார்.

பூமேவு செங்கமலப் புத்தேளுந் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும்

என்று பாடத்தொடங்கி 122 கண்ணிகளில் 244 அடிகளில் **கந்தர் கலிவெண்பாவை** முதன் முதலில் செந்திலாண்டவன் சந்நிதியிற் பாடி முடித்தார்.

ஐந்து வயது வரை பேசாதிருந்தது ஊமையன்று; மௌனம். குமரகுருபரர் பிறவி ஊமையல்லர். மௌனியாகப் பிறந்து ஐந்தாண்டுகள் மௌனம் சாதித்து அதன்பின் செந்திலாண்டவன்

சந்நிதியில் மௌனம் நீத்துப் பாடத்தொடங்கிய பிறவிக் கவிஞர், ஓதாதுணர்ந்தவர், முற்பிறப்புகளிலேயே கல்வி கேள்விகளை முடித்து இப்பிறப்பில் கவிபாடுவதற்கென்றே பிறந்த பிறவிஞானி, சைவமடம் நிறுவுவதற்கென்றே பிறந்த பிறவித்துறவி, சைவம் பரப்பப் பிறந்த சாமுசித்தர்.

பிறந்தது முதல் ஐந்தாம் ஆண்டு வரை ஊமையாக இருந்தார் என்று கூறுவது அறியாமை. பிறப்பு முதல் ஐந்தாமாண்டில் கவிபாடத் தொடங்கும்வரை மௌனமாக இருந்தார், மௌன விரதம் பூண்டிருந்தார், **மௌனம் சாதித்தார்** என்பதே உண்மை. பிறந்த குழந்தை பிறந்ததும் முதன்முதலில் அழும். பிறவிக் கவிஞரும் துறவியுமாகிய இவர் அழாதும் பேசாதும் ஐந்தாண்டுகள் மௌனத்தவமிருந்து ஐந்தாமாண்டில் பள்ளிப் பருவத்தில் பாடத்தொடங்கினார். வரலாறெழுதிய அறிஞர் பலரும் இவ்வுண்மையை உணராது ஊமை ஊமை என்றே எழுதியுள்ளனர். இனி எழுதுவோராவது அவ்வாறெழுதும் பாவத்திற்கு ஆளாகாதிருப்பார்களாக.

ஞானசம்பந்தர் மூவாண்டில் பாடத் தொடங்கினார்
குமரகுருபரர் ஐயாண்டில் பாடத் தொடங்கினார்.
வள்ளலார் ஒன்பதாமாண்டில் பாடத் தொடங்கினார்.

இம்மூவரும் பிறவிக்கவிஞர்கள், பிறவி ஞானிகள், ஓதாது உணர்ந்தவர்கள். சம்பந்தர் பள்ளிப்பருவத்திற்கு முன்பே பாடினார். குமரகுருபரரும் வள்ளலாரும் பள்ளி சென்று பயிலாமலே பாடினர். ஓடி ஆடி விளையாடும் பிள்ளைப் பருவத்தில் இவர்கள் இறைவனைப் பாடிப்பரவும் குழந்தைக் கவிஞர்களாக, குழந்தை ஞானிகளாக விளங்கினர்.

திருச்செந்தூரில் முருகப்பெருமான்மீது கந்தர் கலிவெண்பாவைப் பாடிய குமரகுருபரர் தமது ஊராகிய கயிலாசபுரத்தில் கயிலாசநாதர் கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபிரான் மீது **கயிலைக் கலம்பகம்** பாடினார். கயிலைக் கலம்பகம் பின்னாளில் கிடைக்காது போயிற்று. அது இமயத்துக் கயிலைமீது பாடப்பட்டதன்று. ஸ்ரீ வைகுண்டத்துக்

கயிலாசபுரத்தின்மீது பாடப்பட்டதென்பதை அன்பர்கள் நன்கறியவேண்டும்.

தம்பியார் பிறந்தது

குமரகுருபரருக்கு ஒரு தம்பி பிறந்தார். அவருக்குக் குமாரகவி என்று பெயர் சூட்டி வளர்த்தனர். தம்பியாரும் வளர்ந்து பிள்ளைப்பருவம் எய்தினார்.

குமரகுருபரரும் தம்பி குமாரகவியும் கயிலாசபுரம் கோயிலுக்கு நாள்தோறும் சென்று வழிபட்டனர். திருச்செந்தூருக்கும் அடிக்கடி சென்று வழிபட்டனர். தமக்கு ஒரு ஞானகுரு கிடைக்கவேண்டுமென்றும் ஞானோபதேசம் பெற்று ஞானவாழ்வில் முன்னேற வேண்டுமென்றும் குமரகுருபரர் செந்திலாண்டவனிடம் வேண்டிக்கொண்டே யிருந்தார். ஒருநாள் திருச்செந்தூர் வழிபாட்டின்போது ஓர் அசரீரி எழுந்தது. ''வடதிசை யாத்திரை செல்வாயாக! யாத்திரையில் எவ்விடத்தில் யார் முன்னிலையில் உன் வாக்குத் தடைபடுகிறதோ, அவ்விடமே நீ உபதேசம் பெறுவதற்குரிய இடம், அவரே உன் ஞானகுரு'' என்றது அவ்வசரீரி. சிறந்த வாக்கு வன்மையுடையவர்களை ''வாக்கி'' என்பது வழக்கம். குமரகுருபரர் சிறுவராயிருந்தபோதே, பிள்ளைப் பருவத்திலேயே, இளமையிலேயே சிறந்த வாக்கியாக விளங்கினார். கந்தர் கலிவெண்பாவும் கயிலைக் கலம்பகமும் அவரது வாக்கு வன்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கின. இவ்வளவு சிறந்த வாக்கியாகிய இவருக்கு வாக்குத்தடைபடும் இடமே குருபீடம் என்ற அசரீரி இவரது வாக்கின் அருமையை மேலும் மிகுவிக்கும் நோக்கிலேயே எழுவதாயிற்றுப்போலும்.

தல யாத்திரை

குமரகுருபரர் ஞான யாத்திரை புறப்பட்டார். தம்பி குமாரகவியும் மதுரை வரை உடன் வந்தார். இருவரும் மதுரைக்கு வந்தனர். குமரகுருபரர் தம்மூர்க்குக் கயிலைக் கலம்பகம் பாடியது போன்றே மதுரைக்கு **மதுரைக்கலம்பகம்**

பாடித் துதித்தார். குமரகுருபரர் பாடும் பாடல்களைத் தம்பி குமாரகவி பட்டோலையிட்டு வந்தார்.* மதுரையில் சிலநாள் தங்கி வழிபட்ட குமரகுருபரர் மதுரை **மீனாட்சியம்மை**யின் மீது **பிள்ளைத்தமிழ்** ஒன்று அற்புதமாகப் பாடி முடித்தார்.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் அரங்கேற்றம்

அக்காலம் மதுரையில் திருமலை நாயக்க மன்னரின் ஆட்சிக்காலம். குமரகுருபரர் வந்திருப்பதையும், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் பாடியிருப்பதையும் அறிந்த மன்னர் அதனைத் தம் அரசவையில் அரங்கேற்ற வேண்டினார். தம்பியார் குமாரகவி ஏடுவாசிக்கக் குமரகுருபரர் ஒவ்வொரு பாடலாகப் பாடி விளக்கி உரைக்க அரங்கேற்றம் நிகழ்ந்தது.

வருகைப்பருவத்தின் ஒன்பதாம் பாடலாகிய ‘‘தொடுக்கும் கடவுட் பழம்பாடல் தொடையின் பயனே’’ என்ற பாடலின் அரங்கேற்ற நாளில் ஓர் அற்புதம் நிகழ்ந்தது. மீனாட்சியம்மையே கோயிற் பூசனை புரியும் தலைமைப் பட்டருடைய மகள் ஐந்து வயதுச் சிறுமி வடிவில் அரசவைக்கு வந்து மன்னர் திருமலைநாயக்கரின் மடியில் ஏறி அமர்ந்து கொண்டாள். பட்டரின் மகள் அரசவையில் எல்லாருக்கும் தெரிந்த குழந்தை. பட்டரின் மகளாதலின் மன்னருக்கு அதனிடம் தனித்த அன்பும் உண்டு.

மன்னரின் மடியில் வந்தமர்ந்த குழந்தை பட்டரின் மகள் என்றே எல்லாரும் எண்ணினர். அங்கயற்கண்ணியே அக்குழந்தை வடிவில் வந்திருக்கிறாள் என்பதை ஒருவரும் அறியார். ‘‘தொடுக்கும் கடவுட் பழம்பாடல் தொடையின் பயனே’’ என்ற பாடல் அரங்கேற்றப்பெற்று முடிந்ததும், அதன் சொற்சுவை பொருட்சுவைகளில் ஈடுபட்ட திருமலை மன்னர் அப்பாடலை மீண்டும் ஒருமுறை பாடி விளக்கஞ் செய்தருள வேண்டினார். இரண்டாம் முறை பாடி விளக்கங் கூறி முடிந்ததும், மன்னரின் மடியில் அமர்ந்திருந்த குழந்தை

* பட்டோலை இடுதலாவது, பாடப்பாட அப்பாடல்களைப் பனை ஓலை ஏடுகளில் எழுதிக் கொள்ளுதல்.

மன்னரின் கழுத்திலிருந்த முத்து மாலையை எடுத்துக்கொண்டு கீழே இறங்கிச் சென்று குமரகுருபரரின் கழுத்திலிட்டுவிட்டு உடனே மறைந்துவிட்டது. மன்னரின் கழுத்திலிருந்த முத்து மாலையைக் குழந்தை கழற்றியதை எல்லாரும் கண்டார்கள். அம்முத்துமாலையைக் குமரகுருபரரின் கழுத்திலிட்டதையும் கண்டார்கள். உடனே குழந்தையைக் காணவில்லை. திடீரென மறைந்துவிட்டது. வந்தது பட்டர் மகளன்று, இது அங்கயற்கண்ணியே செய்த அற்புதம் என்று மன்னர் உட்பட எல்லோரும் வியந்தனர்.

நீதிநெறி விளக்கம் பாடியருளுதல்

அரங்கேற்ற நிகழ்ச்சியால் மகிழ்ந்த மன்னர் குமரகுருபரரைத் தம் அரண்மனையில் சிலநாள் தங்கவைத்து உபசரித்து மகிழ்ந்தார். திருக்குறள் முதலிய நீதி நூல்களிலிருந்து பல அரிய நீதிகளைக் குமரகுருபரர் திருமலை மன்னருக்கு அவ்வப்போது எடுத்துரைத்தார். அவற்றையெல்லாம் கேட்ட மன்னர், எளிதாக அனைவரும் அறியும்படிப் பொதுவான நீதிநெறிகளை விளக்கி ஒரு நூல் செய்து தருமாறு வேண்டினார். குமரகுருபரர் **நீதிநெறிவிளக்கம்** என்ற நூலைப் பாடியருளினார்.

யாத்திரை தொடர்தல்

நாள்கள் சில கழிந்தன. குமரகுருபரர் யாத்திரையைத் தொடர எண்ணினார். திருமலை மன்னர் ஏராளமான பொன்னையும் பொருளையும் காணிக்கையாக அளித்து அன்போடு வழியனுப்பினார். குமரகுருபரர் இவ்வளவு நாளும் தமக்குத் துணையாக இருந்த தம்பி குமாரகவியை நோக்கி, ''நான் ஞானாசிரியரைத் தேடிச்செல்கிறேன். நீ ஊருக்குத் திரும்பிச் சென்று பெற்றோர்களுடன் இருந்து, மணம் செய்து கொண்டு, முதுமைப் பருவத்தில் அவர்களுக்கு உதவியாக வாழ்வாயாக'' என்று கூறி வாழ்த்தி, மன்னர் அளித்த பரிசுகளுடன் தக்க துணையோடு ஊருக்கு அனுப்பிவைத்து யாத்திரையைத் தொடர்ந்தார்.

பல தலங்களைத் தரிசித்துத் திருவாரூருக்கு வந்தார். திருவாரூர் சைவ இராசதானி. ஒரு காலத்தில் மன்னர்களுக்கும் இராசதானி. மனுநீதிச்சோழர் ஆண்ட ஊர். சுந்தரரின் திருத்தொண்டத்தொகை பிறந்த இடம். சுந்தரருக்காக இறைவன் பரவையாரிடம் ஒருமுறைக்கு இருமுறை தூது நடந்து தம் அன்பைக் காட்டிய தலம். கமலாலயம் என்ற பெருங்கோயில், கமலாலயம் என்ற பெரிய திருக்குளம், செங்கழுநீரோடை என்ற பெரிய நீரோடை, கோயில் ஐந்து வேலி, குளம் ஐந்து வேலி, ஓடை ஐந்து வேலி என்று ஒவ்வொன்றும் பெரியவை, தேவாசிரியன் என்ற பெயரிய ஆயிரக்கால் மண்டபம், இப்படிப் பெருமை பல பெற்றதும் சம்பந்தர் அப்பர் சுந்தரர் மூவரும் வழிபட்டுப் பாடியருளியதும், விறன்மிண்டர், நமிநந்தியடிகள் செருத்துணையார், தண்டியடிகள், கழற்சிங்கர் ஆகிய நாயன்மார்கள் தொண்டுசெய்து முத்தி பெற்றதுமான திருவாரூரில் சிலநாள் தங்கித் தியாகேசரை வழிபட்டார். **திருவாரூர் நான்மணிமாலை** என்றொரு மாலையையும் பாடிப்பரவினார்.

மெய்கண்டாரின் சந்தான பரம்பரையில் திருவாரூரில் கமலை ஞானப்பிரகாசர் என்றொரு ஞானாசிரியர் விளங்கியதையும் அவரிடம் உபதேசம் பெற்ற குருஞானசம்பந்தர் தருமபுரத்தில் ஒரு மடம் நிறுவி, அது ஞான பரம்பரையாய் வளர்ந்து வருவதையும் கேள்வியுற்றார். ஞானாசிரியரைத் தேடிக்கண்டுபிடிப்பதிலேயே கண்ணாக இருக்கும் குமரகுருபரர் தருமபுரத்திற்குச் சென்று அங்குள்ள சைவ ஆதீனத்தைக் காண விரும்பினார். திருவாரூரிலிருந்து புறப்பட்டு மயிலாடுதுறைக்கு வந்து தருமபுரத்தை அடைந்தார்.

தருமபுர ஆதீனத்தால் ஆட்கொள்ளப்பெறுதல்

தருமபுர ஆதீன வரலாற்றை முன்பே கூறியுள்ளோம். குமரகுருபரர் வரும்போது தருமபுர ஆதீனத்தில் நான்காவது பட்டம் குருமகாசந்நிதானமாக ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் எழுந்தருளியிருந்தார்கள். குமரகுருபரர் ஒரு நன்னாளில் தேசிகரைத் தரிசித்து வணங்கித்

தம்மை ஆட்கொண்டு உபதேசம் அருள வேண்டினார். குமரகுருபரரது அகத்தின் அழகு முகத்தில் தெரிந்தது. இளைஞராய்த் தோற்றப்பொலிவோடு திகழ்ந்த குமரகுருபரரிடமே அவரைப் பற்றிய அனைத்துச் செய்திகளையும் தேசிகர் கேட்டறிந்தார். கந்தர்கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், நீதிநெறிவிளக்கப் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தார். இளைஞரின் தோற்றத்தையும் வாக்கையும், ஞானாசிரியரைத் தேடியடைந்து உபதேசம் பெறும் நோக்கையும் கண்ட தேசிகர், வந்திருக்கும் இளைஞர் நல்ல சற்பாத்திரம் என்று அகமிக மகிழ்ந்தார். குமரகுருபரரைச் சோதித்தறிவதற்காகச் சைவசமய தோத்திர சாத்திரங்கள் தொடர்பான பல வினாக் களை வினவினார். குமரகுருபரரும் சிறந்த முறையில் விடை யளித்துக்கொண்டு வந்தார்.

இறுதியில், சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிதம்பரத்தில் நடராசப் பெருமானைத் தரிசித்தபோது பெற்ற அனுபவத்தைக்கூறும் ''ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள'' என்னும் பெரிய புராணப் பாடலுக்கு அனுபவப் பொருளைச் சொல்லுவீரா? என்று கேட்டார்.

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
    அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
    திருந்து சாத்துவிகமே ஆக,
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
    எல்லைஇல் தனிப்பெரும் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
    மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

என்னும் அப்பாடலுக்குச் சொற்பொருள் கூறுவது எளிது. அனுபவப்பொருள் கூறுவது அரிது. தேசிகரோ அனுபவப் பொருளைக் கேட்கிறார். அனுபவப் பொருளைக் கூறக் குமரகுருபரருக்கு நா எழவில்லை, வாக்குத் தடைப்பட்டது. அதுவரை கேட்ட வினாக்களுக்கெல்லாம் மடமடவென்று விடைகூறி வந்தவர், இவ்வினாவுக்கு விடைகூற, ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள என்ற பாடலின் அனுபவப்

பொருளைக் கூற இயலவில்லை. வாக்குத் தடைபடுவதை உணர்ந்தார். திருச்செந்தூர் அசரீரியை நினைந்தார். தருமையே குருபீடம், மாசிலாமணி தேசிகரே குரு என்றெண்ணி எட்டுறுப்பும் நிலந்தோய மீண்டும் வீழ்ந்து வணங்கி ''அனுபவப் பொருள்கூற அடியேன் ஆற்றேன், சந்நிதானமே கூறியருளி அடியேனை ஆட்கொள்ளவேண்டும்'' என வேண்டினார்.

தேசிகர் குமரகுருபரரைக் காசி யாத்திரை சென்றுவரப் பணித்தார். காசிக்குச் சென்று திரும்புவதன் அருமையையும் காலதாமதத்தையும் குறிப்பாகவும் அடக்கமாகவும் கூறித் தம்மை இப்போதே ஆட்கொண்டருளுமாறு குமரகுருபரர் மீண்டும் வேண்டினார். அப்படியாயின் தில்லைக்குச் சென்று நடராசப்பெருமானைத் தரிசித்து வருக எனத் தேசிகர் கட்டளையிட்டார். சமய தீக்கை செய்தருளி, தில்லையைத் தரிசித்து மீள்க என விடை கொடுத்தனுப்பினார்.

குமரகுருபரர் தில்லைக்குச் செல்லும் வழியில் புள்ளிருக்குவேளூரை (வைத்தீஸ்வரன் கோயிலை)த் தரிசித்து வேளூர்க் குமரன் மீது **முத்துக்குமாரசாமிப் பிள்ளைத்தமிழை** இயற்றிப் பாடித்துதித்தார். தில்லைக்குச் சென்று ஒரு மண்டலம் தங்கி வழிபட்டார். **சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை** என இருபிரபந்தங்களைப் பாடிப்பரவினார். இவ்வாறு ஒரு மண்டலம் தில்லை வாசமும் சிதம்பர தரிசனமும் முடித்து மனநிறைவுடன் தருமபுரத்திற்குத் திரும்பினார்.

தம்பிரானாதலும் பண்டாரமும்மணிக்கோவை பாடலும்

தில்லையை வழிபட்டுத் திரும்பிய குமரகுருபரரின் பக்குவநிலையைக் கண்டும், சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவைப் பாடல்களைக் கேட்டும் மகிழ்ந்த தேசிகர், இனியும் இவரைச் சோதிக்கலாகாது என்று கருதி விசேட நிர்வாண தீக்கைகளும், ஞானோபதேசமும் செய்து தருமபுர ஆதீனத்தின் தம்பிரானாக ஆக்கியருளினார். தருமபுர

ஆதீனத்தின் தம்பிரானான குமரகுருபரர் தம் குருநாதர் மாசிலாமணிதேசிகரின் மீது **பண்டார மும்மணிக்கோவை** என்றொரு மும்மணிக்கோவையைப் பாடிக் குருகாணிக்கை யாகச் சமர்ப்பித்தார். பண்டார மும்மணிக்கோவை அதன் பெயருக்கேற்பச் சைவசிந்தாந்தக் கருவூலமாகவும் சிறந்த குரு தோத்திரமாகவும் திகழ்வது. அதனைப் பற்றிக் குமரகுருபரர் நூல்கள் என்ற தலைப்பிற் பின்னே காண்போம்.

காசியாத்திரை மேற்கொள்ளல்

குமரகுருபரர் காசிக்குச் சென்று, அங்கே கங்கைக் கரையில் இஸ்லாமிய மன்னர்களால் இடித்து அழிக்கப் பெற்ற சிவன்கோயிலைக் கட்டவேண்டும், ஒரு சைவமடத்தை நிறுவவேண்டும், சைவ சித்தாந்தத்தைப் பரப்ப வேண்டும் என்பது திருவருள் திட்டம். அது நிறைவேறுங்காலம் வந்தது. தருமபுரம் சந்நிதானம் மாசிலாமணி தேசிகர் குமரகுருபரரைக் காசியாத்திரை செல்லப் பணிக்கிறார்.

காசியாத்திரை இந்நாளில் எளிது. அந்நாளில் மிக மிக அரிது. இந்நாளைய வசதிகள் அந்நாளில் இல்லை. கட்டை வண்டிக் காலம். துறவிகள் அதிலும் ஏறலாகாது. கால்நடையாக, பாதயாத்திரையாக, நடந்தே காசிக்குச் செல்ல வேண்டும். அன்றைய இந்தியா ஐம்பத்தாறு தேசங்கள். பாண்டிய தேசத்திலிருந்து சோழதேசத்திற்கு வந்திருக்கும் குமரகுருபரர் இன்னும் தொண்டமண்டலம், ஆந்திரம், மகாராட்டிரம், கலிங்கம், வங்கம் முதலிய பல தேசங்களைக் கடந்து காட்டு வழியில் நடந்து காடு மலை பள்ளத்தாக்குகளையெல்லாம் கடந்து ஆயிரம் மைல்களுக்கு மேல் செல்லவேண்டும். வழியில் ஆறலைக் கள்வர்கள் மிகுதி. விலங்கச்சம் மிகுதி. வேற்றுமொழி வழங்கும் தேசங்கள். பிற சமயத்தார் ஆட்சி. சைவ உணவு கிடைப்பது அருமை. இவ்வளவு இன்னல் களுக்கிடையே காசிக்குச் செல்லவேண்டும். சென்றார் குமரகுருபரர்.

காசியில் இஸ்லாமிய மன்னனால் சிறப்பிக்கப்பெறுதல்

காசியில் குமாரசாமிமடம் நிறுவுதல்

குமரகுருபரர் காசிக்குச் சென்ற சமயம் டெல்லி மன்னர் ஷாஜகானின் தம்பி தாராஷுகோ **காசியில் ஒரு சர்வ சமய மாநாட்டைக்** கூட்டியிருந்தார். குமரகுருபரரும் அதற்குச் சென்றார். ''ஒரு சிங்க முதுகின் மேற் கொள்ளலாம்'' என்று தாயுமானவர் குமரகுருபரரை நினைத்துத்தான் பாடினாரோ என்னவோ? கவிச்சிங்கம், கவிராஜ சிங்கம், தவராஜ சிங்கம் குமரகுருபரர் மிருகராஜ சிங்கம் ஒன்றின்மீது ஏறி அமர்ந்து சிம்மவாகனராய்ச் சென்றார். பொம்மைச் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த பாதுஷா உண்மைச் சிம்மவாகனரைக் கண்டு அஞ்சி அடங்கினான். துறவிகளுள் இவர் ஒருவரே **சிம்ம வாகனத்துறவி.** மடாதிபதிகளுள் இவர் ஒருவரே **சிம்மவாகன மடாதிபதி.** பின்னாளில் **விவேகானந்தர் அமெரிக்காவில் வேதாந்த கர்ஜனை** புரிந்தார். அதற்கு முன்பே **குமரகுருபரர் காசியில் சைவசித்தாந்த கர்ஜனை** புரிந்தார். அமெரிக்காவில் வேதாந்த மடம் நிறுவிய **வேதாந்த சிங்கம் விவேகானந்தர்.** காசியில் சைவசித்தாந்த மடம் நிறுவிய **சித்தாந்த சிங்கம் குமரகுருபரர்.** விவேகானந்தர் ஆங்கிலத்தில் பேசினார். குமரகுருபரர் இந்துஸ்தானி (இந்தி)யில் பேசினார். நாடு கடந்து மொழி கடந்து ஆற்றிய அரும்பணி இவ்விருவர் பணி. விவேகானந்தரின் அலை அமெரிக்காவில் வீசியது போல் குமரகுருபரரின் அலை காசி முழுவதும் வீசிற்று. வடநாடெங்கும் வீசிற்று.

காசி சர்வ சமய சபையில் சைவம் முன்னின்றது, வென்றது. உண்மையாகவே சிங்கத்தின்மீது ஏறிச்சென்றாரா? அல்லது இவர் சென்றதே சிங்க ஏறு போன்றிருந்ததா? சிங்கத்தின் மீது ஏறிச்சென்றார் என்று உபசாரமாகச் சொல்லப் பட்டதா? என்ற ஆய்வு இங்கு நமக்கு வேண்டியதில்லை. ஆறறிவு படைத்த மனிதர்கள், அதிலும் அதிகமாகப் படித்தவர்கள், பணம் படைத்தவர்கள், ஐந்தறிவுள்ள அரிமாவின் பேரால் லயன்ஸ்கிளப், அரிமா சங்கம் என்று வைத்துக் கொண்டு நரசிம்மன்களாகப் பெருமையுறும் இந்நாளில், குமரகுருபரர் சிங்கத்தின் மீதேறிச் சென்றார் என்பது

உண்மையா அல்லது உபசார வழக்கா என்று ஆராய வேண்டியது அவசியமில்லை. கவிராஜ சிங்கமாக, தவராஜ சிங்கமாக விளங்கிய இளந்துறவி குமரகுருபரரைக் கண்டு காசி ராஜசபையே அயர்ந்தது. போலிப் புலவர்களுக்கும் போலிச் சமயவாதிகளுக்கும் குமரகுருபரர் சிம்ம சொப்பனமாக விளங்கினார்.

கங்கைக் கரையில் கேதாரப்படித்துறையில் (கேதார கட்டத்தில்) கேதாரநாதர் கோயில் இஸ்லாமிய மன்னர்களால் இடிக்கப்பெற்று மண்மூடி வழிபாடின்றிப் பாழ்பட்டுக் கிடந்தது. குமரகுருபரரின் விருப்பத்திற்கிணங்க மன்னன் தாராஷுகோ கேதாரநாதர் கோயிலை மீண்டும் கட்டி வழிபாட்டைப் புதுப்பித்துக் கொள்வதற்கு வேண்டிய இசைவையும் பொருளையும் அளித்தான். கேதார கட்டத்தில் கேதாரநாதர் கோயிலுக்கு அருகிலேயே குமரகுருபரர் புதிதாக ஒரு மடம் கட்டிக்கொள்வதற்கு வேண்டிய இடத்தையும் பொருளையும் கொடுத்தான். அவ்விடத்தில் குமரகுருபரர் புதிதாக ஒரு மடத்தைக் கட்டினார். குமாரசாமி மடம் என்று அது பெயர்பெற்றது. அரண்மனை சம்பந்தமான கட்டிடங் களைத் தவிர வேறு கட்டிடங்களுக்கு அலங்கார முகப்பு அமைத்துக்கொள்ள அக்காலத்தில் பொதுவாக அனுமதிப்ப தில்லை. ''சர்ஜா'' என்று வழங்கபெறும் அத்தகைய அலங்கார முகப்பு அமைத்துக்கொள்ளுமாறு குமரகுருபரரை மன்னனே கேட்டுக்கொண்டான். காசிக் குமாரசாமிமடம் அலங்கார முகப்புடன் கோட்டை போல எடுப்பாக (கம்பீரமாக) விளங்குவதை இன்றும் காணலாம் குமாரசாமி மடத்தின் அலங்கார முகப்புக்குப் பாலதேவிகாவது என்று பெயர். உண்மையில் காசியில் அது ஒரு சைவக்கோட்டை. வானில் இரண்டு கருடன் இணையாக வட்டமிட்டுப் பறந்த எல்லை யின் அளவுக்குப் பரந்த நிலப்பரப்பையும் குமாரசாமி மடத்திற்கு மன்னன் வழங்கிச் சிறப்பித்தான். பிற்காலத்தில் காசியை இந்து மன்னர்கள் ஆண்டார்கள். அவர்களும் குமாரசாமி மடத்திற்கு நிலக்கொடையளித்தார்கள். அன்றைய காசியில் ஒரு பாதி குமாரசாமி மடத்திற்குரியதாக இருந்தது.

''காசி மகாராஜா பாதி குமாரசாமி மடம் பாதி'' என்ற ஒரு பழமொழியே ஏற்பட்டுவிட்டது.

காசியில் கேதாரநாதர்கோயிலைப் புதுப்பித்துக் கட்டியும் குமாரசாமி மடத்தைப் புதியதாகவே கட்டியும் அதில் வசித்த குமரகுருபரர், காசியிலிருந்து மூன்றுமுறை தருமபுரத்துக்கு வந்து திரும்பினார். தமிழ்நாட்டிலிருந்து காசிக்கு ஒருமுறை சென்று வருவதே அரிது என்ற நிலையில் குமரகுருபரர் மூன்றுமுறை தருமபுரத்திற்கு வந்து திரும்பியிருக்கிறார். எவ்வளவு அரிய செயல்! முதல் முறை தருமபுரம் வந்து திரும்பியது காசியில் கோயில்கட்டச் சிற்பி முதலிய பணி யாளர்களை இங்கிருந்து அழைத்துச்செல்ல. இரண்டாம் முறை வந்தது குரு தரிசனத்திற்காக. மூன்றாவது வருகை வயது முதிர்ந்த காலத்தில் காசிப் பணிகளுக்கு உதவியாகத் தருமபுரத்திலிருந்து தக்கவர் ஒருவரைக் குருநாதரிடம் கேட்டு அழைத்துச்செல்வதற்காக.

மூன்றாம் முறையாகத் தருமபுரத்திற்கு வந்தபோது குருநாதர் மாசிலாமணிதேசிகர் சொக்கநாதத் தம்பிரான் என்பவரைக் குமரகுருபரருக்கு உதவியாக அவருடன் காசிக்கு அனுப்பிவைத்தார். காசியில் குமரகுருபரர் சொக்கநாதத் தம்பிரானுக்கு இந்துஸ்தானி மொழியிலும் மடத்து நிர்வாகத் திலும் பயிற்சியளித்துத் தமக்குப்பின் குமாரசாமி மடத்தின் ஆட்சியை அவரிடம் ஒப்படைத்தருளினார். சில காலம் விசுவநாதரையும் கேதாரநாதரையும் வழிபட்ட வண்ணமிருந்து உரியகாலத்தில் ஒரு நன்னாளில் இருவினைஒப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் வாய்க்கப்பெற்று விசுவநாதரின் திருவடி நீழலை அடையும் முத்திப்பேற்றைப் பெற்றருளினார்.

அந்நாள் 1688.05.08 விபவ ஆண்டு வைகாசித் திங்கள் அமர பட்சத் திருதியை நாளாகும். துறவிகளின் பூத உடலை எரிக்கக்கூடாது, புதைக்க (சமாதி செய்ய) வேண்டும் என்பது ஆகம விதி. ஆனால் காசியில் துறவிகளின் (சந்நியாசிகளின்) உடலைப் பூமியில் சமாதி செய்வது (புதைப்பது) வழக்க மில்லை. துறவிகளின் பூத உடலைக் கங்கை நீரில் விட்டு

விடுவதுதான் அங்கு வழக்கம். அதற்கு ஜலசமாதி என்று பெயர். மண்ணில் புதைப்பது பூசமாதி. கங்கையில் விடுவது ஜலசமாதி. குமரகுருபரரின் பூத உடல் காசியில் கங்கையில் ஜலசமாதி செய்யப்பெற்றது. அவருடைய புகழுடல் தமிழ் கூறு நல்லுலகெங்கும் இன்றும் விளங்கிக் கொண்டிருக்கிறது.

குமரகுருபரரின் நூல்கள்

குமரகுருபரர் இயற்றிய நூல்கள் 12. அவை கால வரிசையில்,

1. கந்தர் கலிவெண்பா
2. கயிலைக் கலம்பகம்
3. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
4. மதுரைக் கலம்பகம்
5. நீதிநெறிவிளக்கம்
6. திருவாரூர் நான்மணிமாலை
7. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்
8. சிதம்பர மும்மணிக்கோவை
9. சிதம்பரச் செய்யுட்கோவை
10. பண்டார மும்மணிக்கோவை
11. சகலகலாவல்லி மாலை
12. காசிக்கலம்பகம்

என்பனவாம். இவற்றுள் (2) கயிலைக் கலம்பகம் கிடைக்க வில்லை. ஏனைய பதினொன்றும் கிடைக்கின்றன. குமரகுருபரர் பாடிய நூல் ஒவ்வொன்றும் ஒரு பிரபந்த மாகும். குமரகுருபரர் நூல்கள் என்று சொல்வதுபோல், குமரகுருபரர் பிரபந்தங்கள் என்றும் சொல்வதுண்டு. தமிழில் சிறு நூல்களைப் பிரபந்தம் என வழங்குவதே பழைய வழக்கு. தமிழில் 96 வகைப் பிரபந்தங்கள் உண்டு. பிள்ளைத் தமிழ், உலா, கோவை, கலம்பகம் முதலியன பிரபந்த வகைகள், பிரபந்தங்களின் பெயர்கள். இடைக்காலத்தில்

தமிழில் தலபுராணங்களும் பிரபந்தங்களுமே மிகுதி. ஆயிரக் கணக்கான பிரபந்தங்கள் உண்டாயின. தமிழில் தலபுராண உலகம் ஒரு தனி உலகம், பிரபந்த உலகம் ஒரு தனி உலகம். பிரபந்தம் என்பதை இக்காலத்தில் சிற்றிலக்கியம் என வழங்குகிறோம்.

குமரகுருபரர் பிரபந்தவேந்தர். பிரபந்தங்கள் பாடுவதில் மிகவும் வல்லவர். அவரவர் பாடிய பிரபந்தங்கள் தொகுக்கப் பெற்று அவரவர் பெயரால் பிரபந்தத் திரட்டு என வழங்கப் பெற்றன. குமரகுருபரர் பாடிய பிரபந்தங்களின் தொகுதி குமரகுருபரர் பிரபந்தத்திரட்டு. சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத் திரட்டு, கொட்டையூர் சிவக்கொழுந்துதேசிகர் பிரபந்தத்திரட்டு, மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு எனப் பிரபந்தத்திரட்டுகள் பல. பிரபந்தத்திரட்டுகள் அனைத்துள்ளும் குமரகுருபரர் பிரபந்தத்திரட்டே புகழ் பெற்றது. சமய உலகில் மட்டுமின்றித் தமிழ் இலக்கிய உலகிலும் பெரிதும் இடம்பெற்றது, பெரிதும் மதித்துப் போற்றப்பெறுவது.

மேற்குறித்த 12 பிரபந்தங்களைத்தவிர, மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை, மீனாட்சியம்மை குறம், சிவகாமியம்மை இரட்டைமணிமாலை என்னும் மூன்று பிரபந்தங்களும் குமரகுருபரர் இயற்றியனவாக வழங்குகின்றன. பெரியோர்கள் இவற்றைக் குமரகுருபரர் வாக்காகக் கருதுவதில்லை. ஆதலின் இம்மூன்றையும் பிரபந்தத்திரட்டில் நூலோடு சேர்க்காமல், பிற்சேர்க்கையாகத் தனியே கொடுப்பது வழக்கம்.

குமரகுருபரரின் பிரபந்தங்கள் பன்னிரண்டையும் பற்றிக் கூறப்புகின் விரியும், இந்நூலில் இடம்போதாது, ஆதலின் சிலவற்றைப் பற்றி மட்டும் சில குறிப்புகளைக் கூறுவோம்.

கந்தர் கலிவெண்பா

குமரகுருபரர் சிறுவராயிருந்தபோது திருச்செந்தூரில் மௌனம் நீத்து முதன்முதலில் பாடிய நூல். சிறந்த

பாராயண நூல். **தமிழில் பக்தி நூல்களில் முருகன் நூல்களே மிகுதி**. முருகனுக்குரிய நூல்கள் பலவற்றினும் மூன்று நூல்கள் சிறந்த பாராயண நூல்களாக வழங்கிவருகின்றன.

1. திருமுருகாற்றுப்படை
2. கந்தர் அனுபூதி
3. கந்தர் கலிவெண்பா

இம்மூன்றையும் முருகன் முந்நூல் என்று சைவசிந்தாந்த மகாசமாஜத்தார் வெளியிட்டிருக்கிறார்கள் (1969).

கந்தர் கலிவெண்பா தோன்றியபின் திருமுருகாற்றுப் படை பாராயணம் குறைந்துவிட்டது. சைவர்களுக்குச் சிவபுராணம் மனப்பாடம். அதுபோல முருக பக்தர்களுக்குக் கந்தர்கலிவெண்பா மனப்பாடம்.

கந்தர் கலிவெண்பா தோத்திரநூல் எனினும் சாத்திரக் கருத்துகளும் முருகன் வரலாறும் கொண்டது. தோத்திரம், சாத்திரம் (தத்துவம்), புராணம் (வரலாறு) ஆகிய மூவளமும் நிறைந்தது. கந்தபுராணம் முருகன் வரலாற்றை விரிவாகக் கூறுகிறது. கந்தர் கலிவெண்பா சுருக்கமாகக் கூறுகிறது. ஆதலின் **குட்டிக் கந்தபுராணம்** என்று ஒரு பேரையும் பெற்றது.

குட்டித் தொல்காப்பியம்	- இலக்கண விளக்கம்
குட்டித் திருவாசகம்	- திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி
குட்டிக் கந்தபுராணம்	- கந்தர் கலிவெண்பா

''யான் எனது என்றற்ற இடமே திருவடி'' என்ற கந்தர்கலிவெண்பாத்தொடர் (34) எப்பேர்ப்பட்ட சாத்திரக் கருத்து. ''பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து, இருவாதனை அகற்றி, மும்மலங்களை மோசித்து, பழைய அடியாருடன் கூட்டி, பரபோகம் துய்ப்பித்து, ஆட்கொண்டு அருள்'' என்பது கந்தர்கலிவெண்பாவின் இறுதி வேண்டுகோள்.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

பிள்ளைத்தமிழ் என்ற பெயர் தோன்றுவதற்கு முன்பு அது பிள்ளைக்கவி என்றும் பிள்ளைப்பாட்டு என்றும் இலக்கண நூல்களில் குறிப்பிடப்பெற்றது. பின்னாளில் ''பிள்ளைத் தமிழ்'' என்ற பெயர் உண்டாயிற்று. 96 வகைப் பிரபந்தங்களில் பிள்ளைத்தமிழ் ஒன்றே ''தமிழ்'' என்ற சொல்லுடன் சேர்த்துப் பெயர்பெற்றது. பெயர்தான் பிள்ளைத் தமிழ், ஆனால் பெருமையிலும் புகழிலும் அது பெரியதமிழ். தமிழில் தோன்றிய முதல் பிள்ளைத்தமிழ் ஒட்டக்கூத்தர் பாடிய குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ். பின்னாளில் தெய்வத்தைக் குழந்தையாகப் பாவித்துப் பிள்ளைத்தமிழ் பாடும் வழக்கம் உண்டாயிற்று. பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங் களுள் முருகன் மீதும் அம்பிகையின் மீதும் பாடப் பெற்றனவே மிகுதி. சிவபெருமான் ''பிறவா யாக்கைப் பெரியோன்' ஆதலின் சிவபிரான் மீது பிள்ளைத் தமிழ் பாடும் மரபு இல்லை. திருமாலின் மீது பிள்ளைத்தமிழ் பாடுவதுண்டு. பெரியாழ்வார் திருமொழியில் அவர் கண்ணனைக் குழந்தையாக அனுபவித்துப் பாடும் பாசுரங்களே பிள்ளைத் தமிழுக்கு மூலம் எனலாம். குமரகுருபரருக்கு முற்பட்ட பிள்ளைத் தமிழ்களுள் பகழிக்கூத்தர் பாடிய திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் சிறந்த பிள்ளைத்தமிழ். அதன்பின் குமரகுருபரர் பாடியருளிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழும் முத்துக்குமாரசாமிப் பிள்ளைத்தமிழுமே சிறந்த பிள்ளைத் தமிழ்களாக விளங்குகின்றன. முதன்முதலில் அம்பிகையின் மீது பிள்ளைத்தமிழ் பாடியவர் குமரகுருபரரே. இவருக்கு முன் அம்பிகையின் மீது யாரும் பிள்ளைத்தமிழ் பாட வில்லை. பெண்பாற் பிள்ளைத்தமிழ் குமரகுருபரருக்கு முன்பு இல்லை. முதன்முதலாகப் பெண்பாற்பிள்ளைத்தமிழ் அம்பிகையின் மீது பாடத் தொடங்கியவர் குமரகுருபரரே.

பிள்ளைத்தமிழ்உலகில் முதல் இடத்தைப் பெறுவது குமரகுருபரர் அருளிய இரு பிள்ளைத்தமிழ்களே, அதிலும் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழே.

சுவாமிகளின் பாடல்கள் அழகொழுகும் பாடல்கள். இனிய சுவை ஊற்றெடுத்து ஓடும் பாடல்கள். பாடுவார் நாவில் தேனூறச்செய்யும் பாடல்கள். சுவாமிகளுடைய செய்யுட்களின் தனிச்சிறப்பு அவற்றின் இன்னோசை. சொற்சுவையும் பொருட்சுவையும் சுவாமிகளுடைய பாடல்களில் போட்டி போடும். அவற்றோடு பக்திச்சுவையும் சேர்ந்துகொள்ளும்.

காலத் தொடுகற் பனைகடந்த
கருவூ லத்துப் பழம்பாடற்
கலைமாச் செல்வர் தேடிவைத்த
கடவுண் மணியே! உயிரால
வாலத் துணர்வு நீர்பாய்ச்சி
வளர்ப்பார்க் கொளிபூத் தளிபழுத்த
மலர்க்கற் பகமே! எழுதாச்சொல்
மழலை ததும்பு பசுங்குதலைச்
சோலைக் கிளியே! உயிர்த்துணையாம்
தோன்றாத் துணைக்கோர் துணையாகித்
துவாத சாந்தப் பெருவெளியில்
துரியங் கடந்த பரநாத
மூலத் தலத்து முளைத்தமுழு
முதலே! முத்தந் தருகவே!
முக்கட் சுடர்க்கு விருந்திடுமும்
முலையாய் முத்தந் தருகவே!

– முத்தப்பருவம் 1

தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கைஅகழ்ந்
தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே! வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே! ஏறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்தில்அழ

கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே! மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்தும் இள
வஞ்சிக் கொடியே! வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே! வருக வருகவே!

- வருகைப்பருவம் 9

இப்பாடல்களின் தொடர்கள் கற்றோர் நாவில் களிநடம் புரியும் செந்தொடர்கள். ''வள்ளால் உன்னைப் பாடப் பாட வாய் மணக்குதே'' என்று வள்ளற்பெருமான் கூறுவது போன்று, பாடப்பாட வாய் மணக்கும் தொடர்கள்.

நீதிநெறி விளக்கம்

பத்துப்பாட்டு எட்டுத்தொகை ஆகிய சங்க இலக்கியங்களுக்குப் பின்பு தோன்றிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பல நூல்கள் நீதிநூல்களாக அமைந்தன. அவற்றுள் தலையானது திருக்குறள். அடுத்தது நாலடியார். தமிழில் நீதிநூல் என்றால் முதன்முதலில் திருக்குறளைத் தான் சொல்ல வேண்டும். அதைவிடச் சிறந்த நீதிநூல் வேறு இல்லை. அதற்கு அடுத்தபடியாகச் சொல்லத்தக்கது நாலடியார். இவ்விரண்டும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிற் சேர்ந்தவை.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுக்குப்பின், திருக்குறள் நாலடியாருக்குப்பின் ஒரு நீதிநூல் என்றால் குமரகுருபரரின் நீதிநெறிவிளக்கத்தைத்தான் சொல்ல வேண்டும். குமரகுருபரர் திருக்குறளில் சிறந்த பயிற்சியுடையவர். திருக்குறளின் கருத்துகளை மட்டுமின்றிச் சொற்றொடர்களையும் சொற்களையும் பொன்னே போற் போற்றி எடுத்தாள்கிறார். ''திருக்குறள் பருவத்திலே பெற்ற பிள்ளை'' என்று வித்துவான் சி. தியாகராச செட்டியார் நீதிநெறி விளக்கத்தைப் பாராட்டுவார் என்று டாக்டர் உ.வே. சாமிநாதையர் எழுதுகிறார்.

நீதிநெறி விளக்கம் 101 வெண்பாக்களால் ஆனது. காப்புவெண்பாவையும் சேர்த்து 102 பாடல்கள். சென்ற தலைமுறையில் தமிழ்மக்களிடம் இந்நூற் பயிற்சி மிகுந்


திருந்தது. பள்ளிகளிலும் மிகுந்திருந்தது. இக்காலத்தில் அவ்வளவுக்கவ்வளவு குறைந்துள்ளது. நீதிநெறிவிளக்கத்துக்கு ஆங்கில மொழிபெயர்ப்புகள் நான்கு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே தோன்றின. அதில் இரண்டு மொழிபெயர்ப்புகள் ஆங்கிலேயரே செய்தது. தமிழில் மூலமும் உரையுமாகப் பல பதிப்புகள் தோன்றின. தமிழ்நூல்கள் அச்சிடப்பெறத் தொடங்கிய காலத்திலேயே முதன்முதலில் அச்சிடப்பெற்ற நூல்களில் நீதிநெறிவிளக்கம் அச்சாயிற்று. இன்றைக்கு 173 ஆண்டுகளுக்கு முன்பே 1835-இல் நீதிநெறிவிளக்கம் காஞ்சிபுரம் சபாபதி முதலியாரால் அச்சிடப்பெற்றது. நீதிநெறி விளக்கத்துக்கு அன்று இருந்த செல்வாக்கு இன்று கற்பனை யிலும் காணொணாதது.

நீதிநெறிவிளக்கம் - மூலமும் உரைவளமும் என்றொரு அருமையான பதிப்பு தருமபுர ஆதீனத்தால் 24-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் காலத்தில் இன்றைக்கு 65 ஆண்டு களுக்கு முன்பே 1943-இல் வெளியிடப்பெற்றது. உரைகள் பலவும் ஆங்கில மொழிபெயர்ப்புகளும் பல நூல்களிலிருந்து மேற்கோள்களும் சேர்ந்த இவ்உரைவளம் அப்போது ஆதீன வித்துவானாக விளங்கிய காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை பி.ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது. நீதிநெறிவிளக்கப் பதிப்புகளில் இதுவே சிறந்த பதிப்பு. அமைப்பு முறையே சிறப்பு; அழகு. அந்நாளைய நேர்த்தியான அச்சு. உறுதியான கட்டிடம். இப்பதிப்பை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இவ்வளவு சிறப்பாக அச்சிடப்பெற்ற வேறு நூல் இல்லை என்று துணிந்து கூறலாம்.

இனி நீதிநெறிவிளக்கப் பாடல்கள் சிலவற்றைக் காண்போம்.

நீரிற் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள் - நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

இது நீதிநெறிவிளக்கத்தின் காப்புச்செய்யுள். இச்செய்யுள் சிதம்பரச் செய்யுட்கோவையிலும் ஒரு பாடலாகச் சேர்க்கப் பெற்றுள்ளது. காசிமடத்திற்குரிய சிதம்பரம் செப்பேட்டில் இப்பாடல் அப்படியே முழுமையாக இடம் பெற்றிருக்கிறது. காந்தியடிகளுக்கு மிகவும் பிடித்தமான தமிழ்ப்பாட்டு இது. அன்பர் ஒருவர் ஒரு சமயம் காந்தியடிகளை ஏதேனும் தமிழில் எழுதிக் கையெழுத்துப் போட்டுக்கொடுங்கள் என்று கேட்டபோது, காந்தியடிகள் ''நீரில் எழுத்தாகும் யாக்கை'' என்று தமிழில் தன் கைப்படவே எழுதி மோ.க. காந்தி என்று தமிழில் தன் கையொப்பத்தை இட்டும் கொடுத்தார்.



நீதிநெறி விளக்கத்தின் தொடக்கத்தில் பல பாடல் களில் கல்வியின் சிறப்பைக் குமரகுருபரர் வற்புறுத்திக் கூறுகிறார், சுவையாகவும் கூறுகிறார்.

> அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
> புறங்கடை நல்லிசையும் நாட்டும் - உறுங்கவலொன்று
> உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியி னூங்கில்லை
> சிற்றுயிர்க்கு உற்ற துணை. *-1*

என்பது முதற்பாடல். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய இந்நான்கும் மக்கள் அடையவேண்டிய உறுதிப்பொருள்கள். இவற்றைப் ''புருஷார்த்தங்கள்'' என்று கூறுவர். இந் நான்கையும் கல்வி தரும் என்கிறார். இந்நான்கையும் இந் நூல் கூறுவதாகவும் அமைகிறது.

பணத்தில் யாரைப் பார்க்கவேண்டும், படிப்பில் யாரைப் பார்க்கவேண்டும் என்று ஒரு பாடலில் அழகாகச் சொல்லு கிறார். செல்வநிலையில் நம்மைவிட எளியவர்களைப் பார்த்து, நாம் அவர்களைவிட நன்றாக இருக்கிறோம் என்று மகிழ்ச்சி

யடைய வேண்டும். திருப்தியடையவேண்டும். கல்வியில் நம்மைவிடச் சிறந்தவர்களை நோக்கி, நாம் கற்றது அவர்களுக்கு ஈடாகுமா என்று ஏங்க வேண்டும். செல்வத்தில் நம்மைவிட எளியவர்களை நோக்கித் திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டும். கல்வியில் நம்மைவிட வலியவர்களை நோக்கி ஏங்க வேண்டும். பணக்காரர்களைப் பார்த்து ஏங்கி என்ன பயன்? படித்தவர்களைப் பார்த்துப் பொறாமைப்பட வேண்டும். பணக்காரர்களைப் பார்த்துப் பொறாமைப்பட்டு என்ன பயன்?

> தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
> அம்மா பெரிதென்று அகமகிழ்க - தம்மினும்
> கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
> ஏற்றே இவர்க்கு நாம் என்று. -14

பொதுவாக இப்போது நாம் என்ன செய்கிறோம். பணக்காரர்களைப் பார்த்து ஏங்குகிறோம். படித்தவர்களைப் பார்த்து ஏங்குவதில்லை. பண விஷயத்தில் நம்மைவிட ஏழைகளைப் பார்த்து, நமது நிலைமை பரவாயில்லை என்று திருப்தியடைய வேண்டும். படிப்பு விஷயத்திலோ நம்மைவிடக் குறைந்தவர்களைப் பார்க்கக்கூடாது, அதிகம் படித்தவர்களைப் பார்த்து ஏக்கமுற வேண்டும். குமரகுருபரர் கூறும் இப்பார்வை இன்றைக்குச் சமுதாயத்தில் பலருக்கு வந்து விட்டால் சமுதாயம் எவ்வளவோ உயர்ந்துவிடும்.

> பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
> மறவாமே நோற்பதொன் றுண்டு - பிறர் பிறர்
> சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
> யார் யார்க்கும் தாழ்ச்சி சொலல். -19

என்ற பாடல் இக்காலத்தில் எல்லாரும் பின்பற்ற வேண்டிய பாடல். பிறருடைய பெருமதிப்புக்கு ஆளாகவேண்டுமானால், பிறர் பிறருடைய (பிறத்தியாருடைய) சிறப்புகளையெல்லாம் பலர் அறியச்சொல்லி, பிறர் பிறர் சிறுமைகளையெல்லாம் வெளியிடாமல் காத்து யாவருக்கும் தாழ்ந்து அன்போடு பேச வேண்டும்.

கண்ணோக்கு அரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா - வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு. -36

என்பது ஒரு பாடல். புதிதாக ஒருவர் இரவலர் வருகிறார். அவரைப் பார்க்கும் பார்வையே இனிமையாக இருக்க வேண்டும். சிரித்தமுகமாக இருக்க வேண்டும். அருகில் வந்தவுடன் இன்சொற் கூறவேண்டும், வந்தபின் அவருக்கு இயன்றதை வழங்கவேண்டும். இப்படிப்பட்டவர்கள்தான் கற்பகமரம் போன்றவர்கள். கண்நோக்கு - அரும்பு. நகை முகம் - நாஸ்மலர், அன்று மலர்ந்த மலர். இன்மொழி - காய். வழங்கும் வள்ளன்மை - கனி. இப்படி இருக்கவேண்டுமாம். இக்காலத்தில் இப்படி இருந்துவிட்டால் சமுதாயம் எப்படி இருக்கும். பலர், பார்க்கும் பார்வையே நன்றாக இல்லை; கிட்டே போகவேண்டாம்போல் தோன்றுகிறது. இந்திரிய ஒழுக்கத்தில் கண்ணின் ஒழுக்கங்கூறும்போது வள்ளலார் குரூரமாகப் பாராதிருத்தல் என்கிறார். முறைத்துப் பார்க்காதே என்கிறார். கண்நோக்கு அரும்பாக இருக்க வேண்டும் என்கிறார் குமரகுருபரர்.

கருமமே கண்ணாக இருப்பவர்கள் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு பாட்டு.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். -52

சென்ற தலைமுறையில் முதியோர் பலர் வாயிலும் பயின்ற பாடல் இது.

கடவுள் உண்டு என்பவர்களுக்குத் துன்பங்கள் வருகின்றன. கடவுள் இல்லை என்பவர்களுக்கு ஒன்றுமே இல்லை என்று சொல்லுபவரை நோக்கி அதற்கு ஒரு காரணம் கூறுகிறார். நம்முடைய பிள்ளைகளை நாம் கண்டிப்போமேயொழிய

புத்தி சொல்வோமோ தவிரப் பிறர் வீட்டுப் பிள்ளைகளைப் பற்றிக் கவலைப்படமாட்டோம். அப்படித்தான் தெய்வமும் தன்னை நம்புபவரை, வழிபடுபவரை, குற்றஞ்செய்யும்போது தண்டிக்கிறது. நம்பாதவரை, வழிபடாதவரை, பின்னே அனுபவித்துக்கொள்ளட்டும் என்று விட்டுவிடுகிறது.

தெய்வம் உளதென்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும் - தெய்வம்
இலதென்பார்க் கில்லை தம்இன்புதல்வர்க் கன்றே
பலகாலும் சொல்வார் பயன். -73

இன்றைய நாத்திக உலகம் உணரவேண்டிய பாடல் இது.

பெண்களின் இன்பத்தை எப்படித் துய்க்க வேண்டும். இல்வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு பாடல். கருமம் சிதையாமல் (காரியம் கெட்டுப் போகாமல்), கல்விகெடாமல் (படிப்புக்கு இடையூறு இல்லாமல்), தருமமும் தாழ்வு படாமல், தம்முடைய உடல்நலமும் குன்றாமல் பெண்மை நலத்தைத் துய்த்தல் நலம் என்கிறார்.

கருமஞ் சிதையாமே கல்வி கெடாமே
தருமமுந் தாழ்வுபடாமே - பெரிதுந்தம்
இன்னலமுங் குன்றாமே ஏரிளங் கொம்பன்னார்
நன்னலந் துய்த்தல் நலம். -77

காமம் அதற்குரிய அளவோடு இருக்க வேண்டும் என்பதற்கு இப்பாட்டு. அளவுகடந்து போனால் எப்படியாகும் என்பது இதற்கு அடுத்த பாட்டு.

கொலைஅஞ்சார் பொய்ந்நாணார் மானமும் ஓம்பார்
களவுஒன்றோ ஏனையவும் செய்வார் - பழியோடு
பாவம்இஃதென்னார் பிறிதுமற்று என்செய்யார்
காமம் கதுவப் பட்டார். -78

பாட்டின் பொருளை அறிவால் எளியவரும் எளிதாக அறிய வேண்டிச் சந்தி பிரித்துக் கொடுக்கிறோம். சந்திசேர்த்துப் படித்தால் தான் பாடலில் ஓசை நயம் பாநயம் தெரியும்.

காமங் கதுவப்பட்டார் - காமத்தால் பற்றப்பட்டவர்கள், காமம் தலைக்கு ஏறியவர்கள் கொலைக்கு அஞ்சமாட்டார்கள், பொய்கூற வெட்கப்படமாட்டார்கள், மரணத்தைப் பற்றியும் கவலைப்பட மாட்டார்கள், களவு ஒன்றுமட்டுமா? ஏனைய எல்லாவற்றையும் செய்வார்கள், பழி என்று பார்க்க மாட்டார்கள். பாவம் என்றும் பார்க்கமாட்டார்கள், இன்னும் என்ன செய்யமாட்டார்கள்.

கற்பழித்துக் கொலைசெய்தல் இந்நாளில் மிகுந்து விட்டதே!? என்ன காரணம்? கீழ்மக்கள் பலருக்குக் காமங் கதுவப் பட்டதே காரணம். கீழ்க்கடைச் சிறுகதைகளால் நாவல்களால், திரைப்படங்களால், தொலைக்காட்சிகளால் பலர் காமங் கதுவப்படுகிறார்கள். கற்பழிப்பு, கொலை, பழி பாவங்கள் மிகுகின்றன. இவைபோன்ற நீதிநெறிப்பாடல்கள் பள்ளிகளில் கல்லூரிகளில் பாடம் வைக்கவேண்டாமா? பல்கலைக் கழகங்களில் ஆராயப்படவேண்டாமா? இல்லையே!

குமரகுருபரர் நல்ல துறவி. நல்ல துறவிகள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்குச் சில பாடல்கள் பாடுகிறார். இரு பாடல்களை மட்டும் இவண் காண்போம்.

பெண்மை வியவார் பெயரும் எடுத்தோதார்
கண்ணொடு நெஞ்சுறைப்ப நோக்குறார் - பண்ணொடு
பாடல் செவிமடார் பண்பல்ல பாராட்டார்
வீடில் புலப்பகையி னார். -84

துறவிகள் : பெண்மை வியவார்	- பெண்மையைப்பற்றி, பெண்களைப் பற்றி வியந்து பேசமாட்டார்கள்.
பெயரும் எடுத்து ஓதார்	- பெண்களின் பெயர்களைக் கூடச் சொல்லமாட்டார்கள்.
கண்ணொடு நெஞ்சு உறைப்ப நோக்குறார்	- கண்ணும் நெஞ்சும் உறைப்பப் பார்க்க மாட்டார்கள். கண்ணால் உற்றுப்பார்க்க

மாட்டார்கள். நெஞ்சில் படும்படி, மனத்தில் படும்படிப் பார்க்க மாட்டார்கள்.

பண்ணோடு பாடல் செவிமடார் - இசையையும் இசைப் பாடல்களையும் கேட்க மாட்டார்கள்.

இன்றைய துறவற உலகம் எப்படியிருக்கிறது! சுவாமிஜீக் களில் பலர் மாதாஜீக்களுடனல்லவா இருக்கிறார்கள். ஆஸ்ரமங் களில் மாதாஜீயை முன்னர் தரிசித்துவிட்டு அதன் பின்பே சுவாமிஜீயைத் தரிசிப்பது பழக்கமாகிவிட்டதே! நல்ல காலம் நம் சைவ மடங்கள், வைணவ மடங்கள், வேதாந்த மடங்கள், பாரம்பரியமான பழைய மடங்கள் ஆதீனங்கள் கெடவில்லை. அன்றும் இன்றும் நன்றாகத்தான் உள்ளன. புதிய போலிச் சந்நியாச உலகம்தான் தானும் கெட்டு உலகத்தையும் கெடுத்துக்கொண்டிருக்கிறது. இசை காமத்தை உண்டு பண்ணும், மிகுவிக்கும். சமணத்துறவிகள் இசை கேட்க லாகாது என்பது இதனால்தான். பண்ணோடு பாடல் செவி மடார் என்பது குமரகுருபரர் சொன்னது. இன்று மடங்கள் பலவற்றில் தொலைக்காட்சிப் பெட்டிகள் இடம்பெற்று விட்டன.

துறவிகளுக்குரிய இலக்கணத்தைக் குமரகுருபரர் கூறும் பாடல்கள் கருத்தாழத்தோடு இலக்கியச் சுவையும் மிக்கவை. பெண்மை வியவார் என்ற மேற்பாடலுக்கு அடுத்த பாடல்

துயிற்சுவையும் தூநல்லார் தோட்சுவையும் எல்லாம்
அயிற்சுவையின் ஆகுவஎன் றெண்ணி - அயிற்சுவையும்
பித்துணாக் கொள்பபோற் கொள்ப பிறர்சிலர்போல்
மொத்துணா மொய்ம்பி னவர். - 85

துயிற்சுவை - தூக்கத்தின் சுவை, தூக்கத்தின் இன்பம். துயில் - தூக்கம்.

அயிற்சுவை - உணவின் சுவை - அயில் - உணவு.

துயிற்சுவையும் அயிற்சுவையும் துறவிகளுக்கு ஆகாது. பேருண்டியும் பேருறக்கமும் காமம் முதலிய தாமச உணர்வு களை உண்டுபண்ணும். ஆகாரம் நித்திரை மைதுனம் பயம் இந்நான்கும் நம்மைக் கெடுப்பன என்பது வள்ளற்பெருமான் உபதேசம். பழைய தமிழ் நூல்கள் வடமொழி நூல்கள் சிலவற்றில் இது முன்னமே சொல்லப்பட்டிருப்பினும் இதனைத் தனியே எடுத்து முக்கியமாக மொழிந்தவர் வள்ளற்பெருமானே. நாம் நீதிநெறிவிளக்கத்தைச் சிறு வயதிலேயே பள்ளிப்பருவத்திலேயே எம் பாட்டனாரிடம் பாடங்கேட்டோம். பின்னர்த் திருவருட்பாவைப் படிக்க நேர்ந்தது. வள்ளற்பெருமான் கூறும் ஆகாரம் நித்திரை மைதுனம் பயம் என்பதை முதல்முதலில் படிக்க நேர்ந்தபோது குமர குருபரர் கூறும் அயிற்சுவை துயிற்சுவைகளே நினைவுக்கு வந்தன. அயிற்சுவை துயிற்சுவைகளைக் குமரகுருபரனார் ஓரிடத்தில் மட்டும் கூறவில்லை. மற்றோரிடத்திலும் சிதம்பரமும் மணிக்கோவை 26-ஆம் செய்யுளில் **''அயிற்சுவை பெறாஅன் துயிற்சுவை உறாஅன்''** என ஒரு வரியில், அடியில், அழகாக அளபெடையுடன் கூறுகின்றார். அயில், துயில், அயிற்சுவை, துயிற்சுவை என்பன அழகான அருமையான தமிழ்ச்சொற்கள். ஆகாரம் நித்திரை மைதுனம் பயம் என்பன வடசொற்கள். அருந்தல் பொருந்தல் அனந்தல் அச்சம் என நல்ல தமிழ்ச் சொற்களால் வள்ளலார் கூறிய இடங்களும் உண்டு.

சகலகலாவல்லி மாலை

கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் 10 கொண்ட ஒரு சிறுநூல். இதன் பெயர் சகலகலாவல்லி மாலை என்றும் சரசுவதி தோத்திரம் எனவும் வழங்கும். சரசுவதி தோத்திரத் திற்கு இதைவிடச் சிறந்த நூல் தமிழில் வேறெதுவும் இல்லை. ''கலைமகளார் துதி'' என்று வள்ளலார் பாடல் ஒன்று உண்டு. அதுவும் இது போன்றது. முற்காலத்தில் பள்ளிப்பிள்ளைகளுக்குச் சகலகலாவல்லிமாலைப் பாடல் ஒன்றிரண்டாவது மனப்பாடத்திலிருக்கும். மாதிரிக்கு இரண்டு பாடல்களைத் தருகிறோம்.

சொல்விற் பனமும் அவதான மும்கவி சொல்லவல்ல
நல்வித்தை யும்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே. -8

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும்விளம்பி-
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே (லுன்போற்
-10

இச்சகலகலாவல்லிமாலையைப் பாடிச் சரசுவதியை வேண்டியே இந்துஸ்தானி மொழிப் புலமையைக் குமரகுருபரர் பெற்றார் என்பது வரலாறு.

காசிமடத்து அதிபர் பரம்பரை

1. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஆதி குமரகுருபர சுவாமிகள்
2. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சொக்கநாத சுவாமிகள்
3. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணாசல சுவாமிகள்
4. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அம்பலவாண சுவாமிகள்
5. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சடையப்ப சுவாமிகள்

(இவ்வைந்து தலைவர்கள் காலம் 1620 - 1720.
ஏறக்குறைய 100 ஆண்டுகள் ஆகலாம்.)

6. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி தில்லைநாயக சுவாமிகள் (1720 - 1756)
7. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி குமரகுருபர சுவாமிகள் (1756 - 1790)
8. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சிதம்பரநாத சுவாமிகள் (1790 - 1798)
9. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சடையப்ப சுவாமிகள் (1798 - 1836)
10. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி கணபதி சுவாமிகள் (1836 - 1838)
11. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி இராமலிங்க சுவாமிகள் (1838 - 1841)
12. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சொக்கலிங்க சுவாமிகள் (1841 - 1852)
13. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி கணபதி சுவாமிகள் (1852 - 1853)

14. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி இராமலிங்க சுவாமிகள் (1853 - 1880)
விவகார காலம் (1853 - 1800)

15. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி பொன்னம்பல சுவாமிகள் (1894 - 1898)

16. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சோமசுந்தர சுவாமிகள் (1898 - 1914)

17. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சொக்கலிங்க சுவாமிகள் (1914 - 1918)

18. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சொக்கலிங்க சுவாமிகள் (1918 - 1930)

19. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் (1930 - 1944)

20. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தி சுவாமிகள் (1944 - 1972)

21. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்
1972-05-16 முதல்

குமரகுருபரசுவாமிகள் வரலாற்றையும் அவர் காசியில் குமாரசாமி மடத்தை நிறுவியதையும் முன்னமே கூறினோம்.

குமரகுருபர சுவாமிகளுக்குப் பின்னர் அவரது சீட பரம்பரையில் ஒருவருக்குப்பின் ஒருவராகப் பட்டத்துக்கு வந்தவர்கள்.

2. சொக்கநாத சுவாமிகள்
3. அருணாசல சுவாமிகள்
4. அம்பலவாண சுவாமிகள்
5. சடையப்ப சுவாமிகள்

என்போர். இந்த ஐந்து தலைவர்களுடைய காலம் 1620 முதல் 1720 வரை ஏறத்தாழ 100 ஆண்டுகள்.

6. தில்லைநாயக சுவாமிகள்

ஆறாம் பட்டமாக வந்த தில்லைநாயக சுவாமிகளின் காலத்தில் காசியில் குமாரசாமி மடம் மிகப்பெரிய வளர்ச்சியைப் பெற்றிருந்தது. தமிழ்நாட்டில் ஒரு கிளைமடம் நிறுவ வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. காசியில் குமாரசாமி மடத்தின் வளர்ச்சியைக் குறித்துச் சிறிது கூறுவோம்.

சைவராகப் பிறந்தவர்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது காசியைத் தரிசிக்க வேண்டும். கங்கையில் நீராட வேண்டும். சைவர் மட்டுமன்றிப் பொதுவாக இந்துக்கள் வாழ்நாளில் ஒருமுறையாவது பிரயாகையில் கங்கை யமுனை சரஸ்வதி இம்மூன்று பேராறுகள் கலக்குமிடமாகிய திரிவேணி சங்கமத்தில் நீராட வேண்டும், கயையில் பிதிரர்களுக்குப் பிண்டம் சமர்ப்பித்துச் சிராத்தம் செய்ய வேண்டும் என்பது நம்பிக்கை. காசி தண்டம், பிரயாகை முண்டம், கயா பிண்டம் என்றே ஒரு பழமொழி உண்டு. காசி விஸ்வநாதரைத் தரிசித்தல் காசிதண்டம். பிரயாகையில் தலைமயிரை மழித்துக் கொள்ளுதல் (மொட்டையடித்துக் கொள்ளுதல்) பிரயாகை முண்டம். கயையில் பிதிரர்களுக்குச் சிராத்தம் செய்தல் கயா பிண்டம். காசியில் இறந்தால் முத்தி என்பது சைவர் நம்பிக்கை. காசியில் இறப்பதை விரும்பிக் கடைசி காலத்தில் காசிக்குச் சென்றுவிடுவதுண்டு.

காசி யாத்திரை செய்யும் தமிழர்களுக்குக் காசியில் குமாரசாமி மடமே தாயகமாக இருந்தது. சாதாரணப் பொதுமக்களன்றி மிராசுதார்களும் ஜமீன்தார்களும் சுதேச சமஸ்தான மன்னர்களும் கூடக் காசிக்குச் சென்றபோது குமாரசாமி மடத்திலேயே தங்கினார்கள். காசியில் அடியார் களுக்கு அன்னதானம் செய்வது சிறப்பு. குமாரசாமி மடம் அன்னதானத்தில் சிறந்து விளங்கிற்று. காசிக்குச் செல்லும் பலரும் ஜமீன்தார்கள் மன்னர்கள் உட்பட அனைவரும் குமாரசாமி மடத்தின் வாயிலாகவே, மடத்திலேயே, தங்கள் அன்னதானத்தைச் செய்வித்தார்கள். தாங்கள் செல்லாத காலங்களிலும், எந்நாளும் அன்னதானம் நடைபெற, சொத்து களை எழுதிவைத்தார்கள். தஞ்சாவூர் மகாராஷ்டிர மன்னர்கள், புதுக்கோட்டைத் தொண்டமான்கள், அறந்தாங்கித் தொண்டமான்கள், இராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள், சிவகங்கைக் குறுநில மன்னர்கள், துறையூர் ஜமீன்தார்கள், கார்வேட்நகர் ராஜா, வேங்கடகிரி ராஜா, திருவாங்கூர் மன்னர்கள் ஆகியோர் காசி குமாரசாமி மடத்திற்கும் திருப்பனந்தாள் காசிமடத்திற்கும் ஏராளமான நிலக்கொடை

களைத் தாராளமாக வழங்கினார்கள். காரணம் காசியில் நடந்த அன்னதான அறம். கடைசி காலத்தில் காசியில் வசிக்கச் செல்பவர்களும் அங்கு அவர்களுக்குச் செலவுக்குப் பணம் போதாவிட்டால், இங்கு, தமிழ்நாட்டில் தங்கள் குடும்பத்தாரிடமிருந்து தேவையான பொருளைக் காசிமடத்தின் மூலம் வருவித்துக்கொள்வர். இவ்வாறு பல வகைகளில் காசியைத் தரிசிக்க விரும்பும், காசியில் தர்மம் செய்ய விரும்பும் தமிழர்களுக்குக் காசிமடம் ஒரு பாலமாக இருந்தது. 5-ஆம் பட்டம் சடையப்ப சுவாமிகள் காலத்தில் தஞ்சாவூர் மன்னர் இரண்டாம் சரபோஜி காசி யாத்திரை சென்றார். குமாரசாமி மடத்தில் தங்கினார். அவர் கொண்டு சென்றிருந்த பணம் செலவுக்குப் போதவில்லை. குமாரசாமி மடத்திலிருந்து கடனுதவி பெற நேர்ந்தது. மன்னருக்கே கடனுதவி செய்த சடையப்பசுவாமிகளை ''ராஜரிஷி'' என்று மன்னர் பட்டம் வழங்கிப் போற்றினார்.

தமிழ்நாட்டுக்கு வெளியே வடநாட்டில் இருந்த ஒரே தமிழ்மடம் காசி குமாரசாமி மடம். ஆதலின் அதற்குத் தமிழ்நாட்டுத் தொடர்பு மிகுதியாக இருந்தது. காவிரி நாட்டுக்கும் கங்கைப் பிரதேசத்திற்கும் அது ஒரு பாலமாக இருந்தது. தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு வடநாட்டில் காசியில் அதுவன்றித் தாயகம் வேறு இல்லை என்ற நிலை இருந்தது. இக்காரணங்களால் அது பெரும் அளவில் வளர்ச்சி பெற்றது. அமோக வளர்ச்சி, அபரிமித வளர்ச்சி என்பார்களே அது போன்ற பெருவளர்ச்சியைப் பெற்றது.

காசியில் குமாரசாமி மடம் வளர்ச்சி பெறப்பெற அதற்குத் தமிழ்நாட்டில் ஒரு கிளை இருந்தால் நல்லது என்ற நிலை ஏற்பட்டது. திருப்பனந்தாளில் கிளைமடம் ஏற்பட்டபின் இருமடங்களும் மேலும் மேலும் வளரலாயின.

காசி குமாரசாமி மடத்தின் நிறுவனர் ஆதிகுமரகுருபர சுவாமிகள் முதலாக ஐந்தாவது பட்டம் சடையப்பசுவாமிகள் வரை ஐவரும் காசியிலே இருந்தனர். அங்கேயே சமாதி யாயினர்.

திருப்பனந்தாளில் காசிமடம் நிறுவப்பெறல்

6–ஆம் பட்டம் தில்லைநாயக சுவாமிகள் காலத்தில் தஞ்சாவூர் சரபோஜி மன்னர் காசியில் அன்னதானம் செய்வதற்காகச் சில கிராமங்களை மானியமாக அளித்தார். குருநாதரைத் தரிசிக்கவும் மன்னரால் அளிக்கப்பெற்ற கிராமங் களைக் காணவும் தில்லைநாயக சுவாமிகள் தமிழ்நாட்டுக்கு வந்து சிதம்பரத்தில் இருந்த ஒரு மடத்தில் தங்கினார். அம் மடத்தின் அதிபதியாக விளங்கிய முத்தையசுவாமிகளின் உதவியோடு தஞ்சைமன்னர் அளித்த கிராமங்களைப் பார்வை யிட்டார். மன்னர் அளித்த இரு கிராமங்களுக்கிடையில் திருப்பனந்தாள் அமைந்திருப்பதைக் கண்டார். திருப்பனந்தாளில் ஒரு கிளைமடம் நிறுவ விரும்பினார்.

தருமபுர ஆதீனத்தில் அப்போது 10–ஆவது பட்டம் சிவஞான தேசிய பரமாசாரிய சுவாமிகள் அருளாட்சி செய்து கொண்டிருந்தார். அவர்களைத் தரிசித்துத் திருப்பனந்தாளில் கிளைமடம் அமைக்கும் விருப்பத்தைத் தெரிவித்து வாழ்த்துப் பெற்றார்.

1720–இல் திருப்பனந்தாளில் காசிமடத்தை நிறுவினார். காசி குமாரசாமி மடத்தின் கிளைமடமாக நிறுவப்பெற்றதால் காசிமடம் எனப்பெயரிட்டார். தமிழ்நாட்டில் காசியின் பெயருடன் காசியின் நேர் தொடர்புடன் அமைந்த மடம் இது ஒன்றே. திருப்பனந்தாளில் கிளைமடம் அமைக்கப் பெற்றபின் நாளடைவில் காசி தலைமை மடமாகவும் திருப்பனந்தாள் கிளைமடமாகவும் இருந்த நிலை மாறித் திருப்பனந்தாள் தலைமையிடமாகவும் காசி கிளைமடம் போன்றும் ஆகும் நிலை உண்டாயிற்று. மடத்தின் அதிபர்களுக்குத் திருப்பனந்தாளே இருப்பிடமாயிற்று. திருப்பனந்தாளில் இருந்துகொண்டு அவ்வப்போது காசிக்குச் சென்று அங்குள்ள நிர்வாகத்தைக் கவனித்து வந்தார்கள். இன்றளவும் அவ்வாறே உள்ளது. தொடக்க கால அதிபர்கள் காசியில் வசித்ததால், பின் வந்தவர்கள் திருப்பனந்தாளில் வசித்தபோதிலும் **"காசிவாசி"** என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது. அதிபர்கள் அனைவரது

பெயருக்கு முன்னும் ''காசிவாசி'' என்ற சிறப்பு அடை மொழி சேர்க்கப்பெற்றே விளங்கும்.

திருப்பனந்தாளில் காசிமடத்தை நிறுவிய ஆறாம் பட்டம் தில்லைநாயக சுவாமிகள் திருப்பனந்தாளிலேயே சிவப்பேறு பெற்றார்கள். அவர்களுக்குப்பின்

7. குமரகுருபர சுவாமிகள்
8. சிதம்பரநாத சுவாமிகள்
9. சடையப்ப சுவாமிகள்
10. கணபதி சுவாமிகள்
11. இராமலிங்க சுவாமிகள்
12. சொக்கலிங்க சுவாமிகள்
13. கணபதி சுவாமிகள்

என்று அதிபர் பரம்பரை வளர்ந்தது.

14-ஆம் பட்டம் இராமலிங்க சுவாமிகள் (1853–1880)

தொடக்க காலத்தில் தோட்டத்தில் கீழைச்சவுக்கண்டி என இப்போது வழங்கப்பெறும் ஒரு சிறிய கட்டிடமே மடத்தின் பிரதான கட்டிடமாக இருந்தது. இராமலிங்க சுவாமிகள் இந்நிலையை மாற்றி இப்போது மடம் அமைந்துள்ள பிரதான கட்டிடமான பெரிய கருங்கற் கட்டிடத்தை அஷ்டலட்சுமி கட்டு, கச்சேரிக்கட்டு, பூசை மடம், பந்திக்கட்டு முதலிய பல கட்டுகள் அமைந்த பெரிய கட்டிடமாகக் கட்டி, கீழைச் சவுக்கண்டியிலிருந்த மடத்தை, இப்பிரதான கட்டிடத்திற்கு மாற்றினார்.

திருப்பனந்தாள் காசிமடத்திற்குத் தருமபுர ஆதீனமே குருபீடம் (குருமடம்). திருப்பனந்தாளுக்கு வேண்டிய தம்பிரான்களை, பின்னால் பட்டத்திற்கு வருவதற்கு உரியவர் களைக் குருபீடமாகிய தருமபுர ஆதீனத்திலிருந்து ஆதீன கர்த்தர்களைக் கேட்டு வரவழைத்துக் கொள்வதே, தொடக்க காலத்திலிருந்து, ஆதிகுமரகுருபர சுவாமிகள் காலத்திலிருந்தே

கடைப்பிடிக்கப்பெற்று வந்த மரபு. இராமலிங்க சுவாமிகள் கடைசி காலத்தில் இம்மரபுக்கு நேர்மாறாக நடந்துகொண்டார்.

திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து தம்பிரான் ஒருவரைக் கேட்டுப்பெற்றுத் தமக்குப் பின் வாரிசாக நியமித்து 1880–இல் சிவப்பேறெய்தினார்.

இந்நியமனத்தை எதிர்த்து அப்போது தருமபுர ஆதீனம் 17–ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கும்பகோணம் நீதிமன்றத்தில் 1881–இல் ஒரு வழக்குத் தொடுத்தார்கள். கும்பகோணம் நீதிமன்றத்தில் வழக்கு வெற்றிபெறாமற் போகவே 1885–இல் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு (அப்பீல்) செய்தார்கள். திருப்பனந்தாள் காசிமடத்தார் தருமபுர ஆதீனத்திலிருந்தே தங்கள் வார்சுகளை நியமிக்க வேண்டும் என்று உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஆர்தர். ஜே.ஹெச். காலின்ஸ், நீதிபதி முத்துசாமி ஐயர் ஆகிய இருவரும் 1887–இல் தீர்ப்பளித்தனர். இவ்வழக்கால் தருமபுரம் திருப்பனந்தாள் குரு சீட உறவும் வாரிசுரிமையும் நிலைநாட்டப் பெற்றது. தருமபுர ஆதீனத்திற்கே வழக்கு வெற்றியாயிற்று இவ்வழக்கு நடந்த காலத்தில் திருப்பனந்தாளில் பட்டத்திலிருந்தவரின் ஆட்சிக்காலத்தை 1880–1894 விவகாரகாலம் என்று குறிப்பிடுவது வழக்கம்.

15-ஆம் பட்டம் பொன்னம்பலத் தம்பிரான் சுவாமிகள் (1894 - 1898)

இவர்களது ஆட்சிக்காலத்தில் மடத்தின் பிரதான கட்டிடமான பெரிய பங்களாவின் மேற்குப்புறம் சின்ன பங்களா என்று வழங்கும் கட்டிடம் கட்டப்பெற்றது.

16-ஆம் பட்டம் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் (1898 - 1914)

பொன்னம்பல சுவாமிகள் காலத்திலேயே இவர்கள் சீடராக இருந்தவர்கள். பைங்காட்டூரில் காறுபாறாக இருந்து

சிறந்த அனுபவம் பெற்றவர்கள். செய்த நிலச்சீர்திருத்தங்கள் மிகப்பல. இவர்கள் தமது குருவின் பெயரால் அமைத்த பொன்னம்புலம் கிராமமும் பொன்னுகொண்டான் வாய்க்காலும் இன்றும் உள்ளன. பட்டத்திற்கு வருமுன் பைங்காட்டூரில் பணிசெய்தமையால் பைங்காட்டூர் சுவாமிகள் என்றும் வழங்கப்பெற்றார்கள்.

இவர்கள் காலத்தில் மடத்தின் நிர்வாகம் நன்கு வரை யறுக்கப்பெற்றது. இரவில் தப்பு, தாரை முதலியவற்றுடன் காவலர்கள் ஊர்காவல் செய்யும் முறை (ரோந்து) இவர்கள் காலத்தில் நடைமுறைக்கு வந்தது. இராமலிங்க சுவாமிகளின் ஆட்சிக்காலத்தில் கட்டப்பெற்ற பெரிய பங்களாவின் இரண்டு மூன்றாவது மாடிகள் இவர்களால் கட்டி முடிக்கப்பெற்றன.

இவர்களது ஆட்சிக்காலத்தில் தருமபுர ஆதீனகர்த்தர் களாக விளங்கிய சிவஞான தேசிக பரமாசாரிய சுவாமிகள் காசி யாத்திரை முடித்து, திருப்பனந்தாள் மடத்துக்கு வந்து ஓராண்டு காலம் தங்கியிருந்து 01.02.1906-இல் திருப்பனந்தாளிலேயே சிவப்பேறு பெற்றார்கள். குருபக்தி மிகுந்த சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் குருநாதரை மடத்தின் கீழ்ப்புறமுள்ள கீழைச் சவுக்கண்டியில் அடக்கம் செய்வித்து, குருமூர்த்தம் அமைத்து வழிபாடு ஏற்படுத்தினார்கள். சிவஞானதேசிகர் குருபூஜை ஆண்டுதோறும் கார்த்திகை மாதத்தில் கொண்டாடப் பெற்று வருகிறது.

இவர்களது ஆட்சிக்காலத்தில் மடத்தில் காசி விசுவநாதர் ஆலயம் கட்டப்பெற்று 1909-இல் குடநீராட்டு விழா நடத்தப் பெற்றது. திருப்பனந்தாள் திருவீதிகளில் ஐந்து தேர்களை ஓட்டிய பெருமை இவர்களையே சாரும். (பிற்காலத்தில் இத்தேர்களில் இரண்டு திருப்பனந்தாள் செஞ்சடையப்பர் கோயிலுக்கும், ஒன்று வீரியம்மன் கோயிலுக்கும், ஒன்று கொட்டையூர் கோடீசுவரர் கோயிலுக்கும், ஒன்று திருப்புறம்பயம் கோயிலுக்கும் சுவாமிநாத சுவாமிகளால் கொடுக்கப் பெற்றன).

17-ஆம் பட்டம் சொக்கலிங்க சுவாமிகள் (1914 - 1918)

வழக்கமான பணிகள் இவர்கள் காலத்திலும் சிறப்பாக நடந்தன.

18-ஆம் பட்டம் சொக்கலிங்க சுவாமிகள் (1918 - 23.02.1930)

பட்டத்திற்கு வருவதற்கு முன்பு, திருப்பனந்தாள் செஞ்சடையப்பர் கோயிலில் தருமபுர ஆதீனத்தால் கட்டளைத் தம்பிரானாக நியமிக்கப்பெற்றுப் பணிபுரிந்தவர்கள். இவ் அனுபவத்தால் இவர்கள் பட்டத்திலிருந்த காலம் நிர்வாகப் பணியிலும் சமயப் பணியிலும் சிறப்பாக அமைந்தது. திருக்குறள் கம்பராமாயணம் சைவசிந்தாந்தம் முதலிய நூல்களைத் திறம்படக் கற்று நாள்தோறும் சமய போதனை வகுப்புகளை நடத்திவந்தார்கள். இவர்களிடம் பாடங் கேட்டவர் களிற் பலர் சிறந்த வித்வான்களாகவும் வேறு பெரிய பதவி களிலும் விளங்கினார்கள். கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் பரம்பரையில் உதித்த சுவாமிநாத சுவாமிகளை இளவரசராக நியமித்து நன்கு பழக்கினார்கள். 1924-இல் கொள்ளிட நதியில் பெருவெள்ளம் ஏற்பட்டு அணைக்கரைப் பகுதி மக்கள் பசியால் வருந்தியபோது அவ்வளவுபேருக்கும் அன்னதானம் செய்து நிவாரணப் பணியாற்றினார்கள்.

பன்னிரண்டாண்டுகள் சிறப்பாக அருளாட்சி செய்து, சுவாமிநாத சுவாமிகளை தமக்குப் பின்வாரிசாக நியமித்து 1930-பிப்ரவரி 23-ஆம் தேதி சிவப்பேறு பெற்றார்கள்.

19-ஆம் பட்டம் அதிபர் காசிவாசி சாமிநாத சுவாமிகள் (1930-1944)

திருப்பனந்தாள் காசிமடத்தின் வரலாற்றில் அவ்வப்போது சில காலங்கள் பொற்காலங்களாகும்.

குமரகுருபர சுவாமிகள் காசியில் குமாரசாமி மடத்தை நிறுவிய காலம் முதற் பொற்காலம்.

ஆறாம் அதிபர் தில்லைநாயக சுவாமிகள் திருப்பணந்தாளில் காசிமடத்தை நிறுவிய காலம் இரண்டாவது பொற்காலம்.

14-ஆவது அதிபர் இராமலிங்கசுவாமிகள் இப்போதுள்ள பிரதான கட்டிடத்தைக் கட்டிப் பல்வேறு அபிவிருத்தி களைச் செய்தகாலம் மூன்றாவது பொற்காலம்.

19-ஆவது அதிபர் சாமிநாத சுவாமிகள் காலமும்

20-ஆவது அதிபர் அருள்நந்தி சுவாமிகள் காலமும் நான்காவது பொற்காலம்.

21-ஆவது அதிபராக இப்போது எழுந்தருளி அருளாட்சி செய்துவருகின்ற கயிலைமாமுனிவர் காசிவாசி முத்துக் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகளின் தற்கால ஆட்சி இன்றைய பொற்காலம்.

இன்றைய பொற்காலம் சாமிநாத சுவாமிகள் காலத்தி லிருந்தே தொடங்குகிறது. 19 சாமிநாத சுவாமிகள், 20 அருள் நந்திசுவாமிகள், 21 கயிலைமாமுனிவர் என்று தொடர்கிறது.



19-ஆம் பட்டம் அதிபர்

காசிவாசி சாமிநாத சுவாமிகள்

சாமிநாத சுவாமிகள்

சாமிநாத சுவாமிகளின் முதற்சிறப்பு, அவர் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் பரம்பரையில் பிறந்தவர் என்பது.

கொட்டையூர் சிவக்கொழுந்துதேசிகர் 19-ஆம் நூற்றாண்டுத் தமிழ் வரலாற்றில் சிறப்பான ஓர் இடத்தைப் பெற்றவர், சிறந்த தமிழ்ப்புலவர், சைவப்புலவர். கோடீச்சுரக்கோவை, தஞ்சைப் பெருவுடையாருலா, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகம் என்ற மூன்று நூல்களைப் பாடியவர். இம்மூன்றையும் டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் "கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள்'' என்று ஓர் அருமையான பதிப்பாகக் காசிவாசி சாமிநாத சுவாமிகளின் பொருளுதவியைக் கொண்டு 1932-இல் வெளியிட்டிருக்கிறார்கள்.

கொட்டையூர் சிவக்கொழுந்துதேசிகர் தஞ்சை சரபோஜி மன்னரின் அரண்மனைப் புலவராக விளங்கியவர். சரபோஜி மன்னர் சரசுவதி மகால் நூல் நிலையத்தைத் தொடங்கிய காலத்தில் உடனிருந்து உதவியவர். முற்கூறிய மூன்று பிரபந்தங் களையன்றி, சரபேந்திரர் வைத்தியமுறைகள், சரபேந்திரர் சன்னிரோக சிகிச்சைகள், சரபேந்திரர் வைத்தியம் என்னும் மூன்று நூல்களையும் இயற்றினார். இவையும் செய்யுள் நூல் களே. ஆச்சாபுரம் என வழங்கும் திருப்பெருமணநல்லூருக்கு ஒரு புராணமும் திருவிடைமருதூருக்கு ஒரு புராணமும் இயற்றினார்.

அக்காலத்தில் சென்னை மாநில அரசாங்கத்தார் கல்விச் சங்கம் என்றொரு சங்கத்தை அமைத்துத் தமிழ்ப்புலவர்கள் பலரை வருவித்துப் பழைய நூல்களை ஆராய்ந்து பதிப்பித்தும் புதிய நூல்களை இயற்றியும் வெளியிட்டனர். அக்கல்விச் சங்கத்தின் தலைமைத் தமிழ்ப்புலவராக வித்துவான் தாண்டவராய முதலியார் என்பவர் இருந்தார். அவருக்கு உதவியாக உடனிருந்து பணிசெய்ய சிவக்கொழுந்து தேசிகரை அனுப்பவேண்டு மென்று சரபோஜி மன்னரைக் கேட்டுக்கொண்டனர். மன்னரும் தேசிகரைச் சென்னைக்கு அனுப்பிவைத்தார். சென்னை

அரசாங்கத்தாரின் கல்விச்சங்கத்தில் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் சிறந்த மதிப்புப்பெற்று விளங்கினார்.

இவை எல்லாவற்றையும் விட ஓர் அரிய பெரிய செய்தி திருவாசகம் இவரால்தான் முதன்முதலில் அச்சிட்டு வெளியிடப் பெற்றதென்பது. 1834-இல் திருவாசகம் முதற்பதிப்பை அச்சிட்டு வெளியிட்டவர் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரே. இம்முதற்பதிப்பை வள்ளற் பெருமான் படித்திருக்கிறார். இது வள்ளற்பெருமானே எமக்குத் தெரிவித்த செய்தி. அம்முதற்பதிப்புப் படியை வள்ளற் பெருமான் எமக்குக் கனவிற் காட்டியருளினார்.

கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் 90 ஆண்டுகள் வாழ்ந்தார். அவருக்கு மனைவியர் இருவர், ஆண்மக்கள் இருவர், பெண்மக்கள் ஐவர். முதல் மனைவியாருக்குப் பிறந்த மகனார் வடுகநாததேசிகர். சீகாழிச் சட்டைநாதர் குலதெய்வ மாதலின் இவர் வடுகநாதர் என்று பெயரிடப் பெற்றார். வடுகநாததேசிகர் தமிழிலும் வடமொழியிலும் நல்ல பயிற்சி யுடையவர். வடுகநாததேசிகரின் குமாரர் குருசாமி தேசிகர். அவருடைய குமாரர்கள் தியாகராஜதேசிகர், சிவக்கொழுந்து தேசிகர், சோமசுந்தர தேசிகர் என்னும் மூவர். சிவக்கொழுந்து தேசிகருடைய குமாரரே காசிவாசி சாமிநாத சுவாமிகள்.

கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரின் முதல் மனைவியார் வழியில் வருபவர் சாமிநாத சுவாமிகள். இரண்டாம் மனைவியாருடைய குமாரர் சாமிநாததேசிகர். இவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் பாடங் கேட்டுச் சிறந்த தமிழ்ப்புலமை வாய்ந்து 1864-இல் கும்பகோணம் அரசினர் கல்லூரியிலும் அதன்பின் திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியிலும் தமிழ்ப்பண்டிதராக இருந்து ஓய்வு பெற்றார். இவருக்குச் சிவராஜ தேசிகர் நடராஜ தேசிகர் என்ற இரண்டு ஆண்மக்கள் உண்டு. இவ்வளவு செய்திகளும் கொட்டையூர் சிவக்கொழுந்துதேசிகர் பிரபந்தங்கள் டாக்டர் உ.வே.சா. பதிப்பில் அவர் எழுதுவனவற்றால் தெரிகின்றன.

கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்

(முதல் மனைவியார்)

வடுகநாத தேசிகர்

குருசாமி தேசிகர்

தியாகராஜ தேசிகர் | சிவக்கொழுந்து தேசிகர் | சோமசுந்தர தேசிகர்

காசிவாசி சாமிநாத சுவாமிகள்
(காசிமடம் 19ஆம் அதிபர்)

(இரண்டாம் மனைவியார்)

சாமிநாத தேசிகர்
(கும்பகோணம் கல்லூரித் தமிழாசிரியர்)

சிவராஜ தேசிகர் | நடராஜ தேசிகர்

காசிவாசி சாமிநாத சுவாமிகளின் பெற்றோர் சிவக்கொழுந்து தேசிகர், சுவர்ணத்தம்மையார். சுவாமிகள் தோன்றியருளிய நாள் 06.07.1893 விஜய, ஆனி, 24. ''குலவிச்சை கல்லாமல் பாகம்படும்'' என்றபடி இயற்கையாகவே இவர்களுக்குத் தமிழின்பால் அளவற்ற அன்பும் பயில்வதில் ஊக்கமும் உண்டாயின. திருப்பனந்தாளில் 18-ஆம் பட்டத்தில் விளங்கியவர்களும் தமிழ்ப்புலமை நிரம்பியவர்களுமாகிய காசிவாசி சொக்கநாத சுவாமிகளை அடுத்துத் தமிழ்ப்பாடங் கேட்டார்கள். 20.5.1920-இல் ஆசிரமம் பெற்ற பிறகு, தருமபுர ஆதீனத்தில் 22-ஆம் பட்டம் குருமகாசந்நிதானமாக எழுந்தருளி யிருந்த மாணிக்கவாசக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளிடத்தில் ஞானோபதேசம் பெற்றார்கள். இவர்களுடைய கூரிய அறிவும் அன்பும் சொக்கலிங்க சுவாமிகளது உள்ளத்தைப் பிணித்தன. தம்முடைய பிற்றோன்றலாக வருவதற்கு எல்லா வகையிலும் தகுதியுடையவர்கள் இவர்களே என்பதை அக் காலத்திலேயே அதிபர் சுவாமிகள் உணர்ந்து கொண்டார்கள். எனவே 23.08.1922-இல் முறைப்படி இவர்களுக்குச் சின்னப் பட்டம் வழங்கி உயில் எழுதி உவப்புற்றார்கள்.

சின்னப்பட்டத்தை ஏற்றுக்கொண்டது முதலே நிர்வாகத்தை யும் சுவாமிகள் ஒப்புக் கொண்டார்கள். இவர்களுடைய

ஆட்சியில் அறம் மலிந்து பொருள் நிரம்பும் என்ற உறுதியால் அதிபர் சுவாமிகள் எல்லாப் பொறுப்புகளையும் இவர்களிடமே விட்டுவிட்டுத் தவத்திலும் தமிழிலும் பொழுதுபோக்கி இன்புற்றுவந்தார்கள்.

நிர்வாகப் பொறுப்பை இவர்கள் ஏற்றுக்கொண்டதும் மடத்துக்குச் சொந்தமான சொத்துகள் தர்மங்கள் முதலிய பலவற்றையும் அணுஅணுவாக ஆராய்ந்து, குறைகளைக் களைந்து, வருவாய் பெருகுவதற்கும், பணிகள் ஒழுங்காக நடைபெறுவதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். இப்படிப்பட்ட நிர்வாக சீர்திருத்தங்கள் ஒரு பெரிய நிர்வாகத்தில் ஒரு மடாதிபதி இயல்பாகச் செய்யவேண்டியவை. இவை போன்றவற்றை விளக்கிச் சொல்லிக்கொண்டு செல்வதை விட, வேறு யாரும் செய்யாத அரிய பெரிய பணிகளை, காலத்துக்கேற்ற புதிய பணிகளைச் செய்த திறத்தை முக்கிய மாகக் கூறவேண்டும்.

திருப்பனந்தாள் காசிமடத்தின் அதிபர்கள் அறக்கட்டளை மன்னர்கள். அதாவது அறக்கட்டளை நிறுவுவதில் மன்னர்கள். இதை நாம் வாய்ப்பு நேரும் போதெல்லாம் சொல்லியும் எழுதியும் வருகிறோம். அறக்கட்டளைப் பத்திரங்களை யெல்லாம் தொகுத்து ''எண்டோமெண்ட்ஸ்'' என்று தனிப் பெரு நூலாகவே வெளியிட்டிருக்கிறார்கள். அறக்கட்டளைப் பத்திரங்களின் அமைப்பும் வாசகங்களுமே ஓர் இலக்கியம். அறக்கட்டளைகள் எப்படி அமைக்கப்பெறவேண்டும் என்பதற்கு இலக்கணம். பக்கத்திலுள்ள பத்திரப்பதிவு அலுவலகத்தில் இவர்களது அறக்கட்டளைப் பதிவே அதிகம். கொடுத்து வைத்த அலுவலகம். புண்ணியம் செய்த அலுவலகம். திருப்பனந்தாள் காசிமடத்திற்கே உரிய தனிச்சிறப்புகளில் ஒன்று அதன் அறக்கட்டளைகள். இப்பேர்ப்பட்ட அறக் கட்டளைகளை, இவ்வளவு அறக்கட்டளைகளை வேறு எந்த ஒரு அறநிலையமும் நிறுவவில்லை.

அறக்கட்டளைகளை நிறுவுவது 19-ஆம் பட்டம் சாமிநாத சுவாமிகள் காலத்திலேயே தொடங்கிவிட்டது. இன்னும்

சொல்லப்போனால் அவர்கள் சின்னப்பட்டத்திலிருந்த காலத்திலேயே தொடங்கிவிட்டது.

1000 ரூபாய் - தமிழ்ப் பரிசு

''சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக'' என்பது தமிழ்நாட்டுச் சைவமடங்களில் வழங்கும் ஒரு பழம்பொன் மொழி. தமிழின் அருமை பெருமைகளையும் தமிழ்நூற் சுவையையும் நன்கு உணர்ந்தவர்கள் சாமிநாத சுவாமிகள். பிறந்த பரம்பரையும் புகுந்த மரபும் - பேச்சுவழக்கில் சொன்னால் பிறந்த இடமும் புகுந்த இடமும் - தமிழ்ப் புலமை நிரம்பியதாதலின் தமிழ்க் கல்வியை வளர்க்க வேண்டும், அதற்கு ஆவன பலவற்றையும் செய்யவேண்டும் என்ற ஆர்வம் இவர்கள் உள்ளத்தில் இடையறாது இருந்து வந்தது. அக்காலத்திய தமிழ்ப்படிப்பு மதுரைத் தமிழ்ச் சங்கத்து பண்டித பட்டமும் சென்னைப் பல்கலைக்கழகத்து வித்துவான் பட்டப்படிப்பும் ஆகும். இங்கிலிஷ் படித்தால் இகத்திற்கு லாபம், சமஸ்கிருதம் படித்தால் பரத்துக்கு லாபம், தமிழ் படித்தால் இரண்டுக்குமே லாபமில்லை என்றிருந்தது அந்தக் காலம். தமிழ் படிக்க வருவோர் குறைவு. தமிழ்வித்துவான் தேர்வில் தேர்ச்சிபெற்றாலும் வேலை வாய்ப்புக் குறைவு. பலருக்கு வேலை கிடைப்பதில்லை. வேலை கிடைத்தாலும் ஊதியம் குறைவு. இந்நிலையில் தமிழ்ப்படிப்பை ஊக்குவிக்கக் கருதிய சுவாமிகள் ஆயிரம் ரூபாய் தமிழ்ப் பரிசை ஏற்படுத்தினார்கள்.

சென்னைப் பல்கலைக்கழகத் தனித்தமிழ் வித்துவான் தேர்வில் ஆண்டுதோறும் முதல் வகுப்பில் முதல்வராகத் தேர்ச்சி பெறுபவருக்கு ரூபாய் 1000 (ஆயிரம்) பரிசளிக்க நிரந்தர ஏற்பாடாக ஓர் அறக்கட்டளையை நிறுவினார்கள்.

இவ்வறக்கட்டளையைப் பற்றி நாம் எழுதுவதைவிட அக்காலத்தில் வெளியிடப்பெற்ற இரண்டு அறிவிப்புகளை அப்படியே எடுத்துக்காட்டுவது, அறக்கட்டளையின் சட்ட திட்டங்கள், அக்காலத்திய உரைநடை (வசனநடை) முதலிய

வற்றை அறிய ஏதுவாகும் என்பதால் அவற்றை அப்படியே தருகிறோம். அவை பின்வருமாறு :

உ

சிவமயம்

ஓர் அறிவிப்பு

தமிழ்ப் பரிசு ரூபாய் ஆயிரம்

இப்போது திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்களாக எழுந்தருளியிருக்கும் **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்வாமிநாத ஸ்வாமிகள்** அவர்கள் தமிழ்ப் பாஷாபிவிருத்தி விஷயமாகச் செய்துள்ள ஒரு சாசுவதமான தருமத்தைத் தெரிவிக்கிறேன்.

சென்னை, ஸர்வகலா சங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஓரியண்டல் டைட்டில் பரீக்ஷைகளுள் **தனித்தமிழ் வித்வான் பரீக்ஷையில் வருஷந்தோறும் முதல்வகுப்பில் முதல்வராகத் தேறும் மாணாக்கருக்கு ரூபாய் ஆயிரம் பரிசாக** அளித்தற் பொருட்டு இவர்கள் 1928-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் அமெரிக்கா கண்டத்தில் டாரண்டோ என்னும் நகரத்திலுள்ள 'தி மானுபாக்ச்சர்ஸ் லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி' (The Manufactures Life Insurance Company) யில் தங்கள் ஆயுளை ரூபாய் 40,000-க்கு இன்ஷ்யூர் செய்து 4,46,416 என்னும் எண்ணுள்ள பாலிஸியை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மூலதனம் ஏறக்குறையப் பன்னிரண்டு வருடங்களில் நிறைவடையும். அதுவரையில் இவர்கள் வேறு வரும்படி யிலிருந்தே ஷ்டி பரிசை வருஷந்தோறும் அளித்துவருவதாக நிச்சயித்து 1929-ஆம் வருஷம் முதற்கொண்டு அளித்து வருகிறார்கள்.

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜில் தமிழ்ப் பண்டிதராக உள்ள ம-ா-ா-ஸ்ரீ வி.மு. சுப்பிரமணிய ஐயரவர்கள் 1929-ஆம் ஆண்டிலும், சிதம்பரம் அண்ணாமலை யூனிவர்ஸிட்டியில் தமிழ்ப் பண்டிதராக உள்ள ம-ா-ா-ஸ்ரீ ஆ. பூவராகம் பிள்ளையவர்கள் 1930-ஆம் ஆண்டிலும், ம-ா-ா-ஸ்ரீ கே. சுந்தரமூர்த்தி ஐயர், எம்.ஏ., அவர்கள் சென்ற

ஆண்டிலும் முறையே இப்பரிசைப் பெற்றிருக்கிறார்கள். இவ்வருஷம் திரிசிரபுரம் நாஷனல் காலேஜிலுள்ள தமிழ்ப் பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ டி.வி. பழனியப்ப பிள்ளையவர்கள் இப்பரிசை அடையக் கூடுமென்று தெரிகிறது.

மேற்கண்ட பரீக்ஷையில் முதல் வகுப்பில் முதல்வராகத் தேறுபவர்களில் ஒருவருக்கு மேற்பட்டவர்கள் சமமான மார்க்குகள் பெற்றிருந்தால் அவர்களுடைய பெயர்களைத் தனித்தனியே சீட்டுக்களில் எழுதித் தக்கவர்கள் முன்னிலையில் ஷை சீட்டுக்களைக் குலுக்கிப் போட்டு எடுப்பதில் தெய்வ சம்மதமாக எவருடைய பெயர் கிடைக்கிறதோ அவரே ஷை பரிசைப் பெறுவதற்கு உரிமையுள்ளவராவர்.

இதனைக் கண்ணுறும் தமிழ் மாணாக்கர்கள் விசேஷமான முயற்சியை மேற்கொண்டு தமிழைப் படித்து இந்தப் பரிசைப் பெறுதற்குரிய வழியைத் தேடிக்கொள்ளும் பொருட்டு இவ்வாறு தெரிவிக்கலானேன்.

ஸ்ரீகாசிமடம், இங்ஙனம்
திருப்பனந்தாள் சுப்பராயபிள்ளை
8.8.32

ஐந்தாம் ஜார்ஜூ மன்னர் ஞாபகார்த்த
தமிழ்ப் பரிசு ரூ. 1000 ஆயிரம்

நம்முடைய அன்பார்ந்த அரசரும், சக்கரவர்த்தியுமான ஐந்தாம் ஜார்ஜு மன்னரவர்களுடைய உதார குணத்தையும், தயாள சிந்தனையையும், இந்தியாவின் பாலிருந்த அன்பையும் கருதி அவர்களுடைய இனிய ஞாபகம் என்றும் குன்றாதிருந்து வரும்பொருட்டு இந்தப் பரிசு திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் ஸ்வாமிகளவர்களால் ஏற்படுத்தப்பெற்றது. இந்தப் பரிசின் நோக்கம் தமிழ்மொழிப் பயிற்சிக்கும் ஆராய்ச்சிக்கும் ஆதரவு அளிப்பதேயாகும். ''ஐந்தாம் ஜார்ஜூ மன்னர் ஞாபகார்த்தத் தமிழ்ப் பரிசு'' என இது வழங்கப்பெறும்.

இந்தப் பரிசுக்குரிய மூலதனமாக இப்பொழுது உள்ள தொகை ரூபாய் முப்பத்தைந்தாயிரம் (35,000). இத்தொகை நூற்றுக்கு வருஷத்துக்கு 3 ½ வட்டியுள்ள காலவரையறை யில்லாத சர்க்கார் கடன் பத்திரமாக உள்ளது. இதிலிருந்து வருஷந்தோறும் கிடைக்கும் வட்டியிலிருந்து ரூபாய் ஆயிரம் (ரூ. 1,000) வருஷந்தோறும் ரொக்கப் பரிசாக அளிக்கப்பெறும். 1935-36-ஆம் வருஷத்துச் சென்னை ஸர்வகலாசாலைக் காலண்டர் தொகுதி 1, பகுதி 2-ல் கண்ட 7-ஈ விதிப்படி யமைந்த **தனித்தமிழ் வித்துவான்** பட்டத்துக்குரிய முடிவுப் **பரீக்ஷையில் முதல்வகுப்பில் முதல்வராகத் தேர்ச்சி பெறுவோர்** இப்பரிசைப் பெறும் தகுதியுடையோராவர். மூலதனத்தின் வட்டியில் இவ்வாறு செலவானதுபோக வருஷந்தோறும் எஞ்சும் தொகை மூலதனம் லக்ஷம் ரூபாய் (1,00,000) ஆகும் வரையில் அதனோடு சேர்க்கப்படும். அதன்பின் மூலதனத் திற்குக் கிடைக்கும் வட்டி முழுதும் வருஷந்தோறும் பரிசுத் தொகையாக உரியவருக்கு அளிக்கப்படும்.

பரிசளிப்பதற்குரிய விதிகளும், நிபந்தனைகளும் வருமாறு:-

1. இப்பரிசு ஆண்பாலர் பெண்பாலராகிய யாவருக்கும் ஜாதிமத வேறுபாடு கருதாமல் அளித்தற்குரியது.
2. ஓரியண்டல் பட்டப் பரீக்ஷகளுள் தனித்தமிழ் வித்துவான் பரீக்ஷயில் தேர்ச்சி பெறுவோர்களுள் முடிவுப் பரீட்சையில் முதல் வகுப்பில் முதல்வராக வருபவர் முதல் முறையிலேயே தேறினவராயின் அவருக்கு இப்பரிசு அளிக்கப்பெறும்.

   எந்த வருஷத்திலாயினும், இருவரேனும் இருவருக்கு மேற்பட்டவரேனும் பரிசுக்குரிய தகுதியைப் பெற்றால் பிரிலிமினரிப் பரீக்ஷயில் பெற்ற அம்சங்களையும் (Marks) சேர்த்துப் பார்த்து மொத்தத்தில் அதிக அம்சம் பெற்றவருக்கு இப்பரிசு அளிக்கப்படும். அவ்வாறு செய்வதிலும் சிக்கல் நேருமாயின், தேர்ச்சி பெற்றவருடைய ஆங்கிலப் பயிற்சியையும் வயதையும் ஆராய்ந்து, அவர் களுள் அதிக ஆங்கிலப் பயிற்சியையும், குறைந்த வயதையும்

உடையவருக்குப் பரிசைக் கொடுக்க ஸிண்டிகேட் சபையார் தீர்மானிப்பார்கள்.

3. ஸெனெட் சபைக் கூட்டமொன்றில் இந்தப் பரிசு உரியவருக்கு வழங்கப்பெறும். எந்த வருஷத்திலேனும் பரிசுக்கு உரியவர் நேரில் வந்து பரிசைப் பெற்றுக் கொள்ள முடியாமற் போனால் ஸிண்டிகேட் சபையார் பரிசுத்தொகையை அவருக்கு அனுப்புவதற்குரிய ஏற்பாட்டைச் செய்வார்கள். பரிசு வழங்குவதற்கு முன் அப்பரிசுக்குரியவர் இறக்கும்படி நேர்ந்தால் அத்தொகை சட்டப்படி அவருடைய வார்சாக இருப்பவரிடம் சேர்ப்பிக்கப்படும்.

4. இப்பரிசுத்தொகை பணமாகவேனும் செக்காக வேனும் அளிக்கப்பெறும். இந்தப் பரிசுத்தொகை எந்தக் காரணத்தைக் கொண்டாவது பகுக்கவோ குறைக்கவோ படாது. எந்த ஒரு வருஷத்திலேனும் அல்லது தொடர்ந்து பல வருஷங்களிலேனும் பரிசு கொடுக்கப்படாமல் இருந்தால் அங்ஙனம் கொடுக்கப்படாமல் இருந்த பரிசுத் தொகை முழுவதும் சேர்த்து, எந்த வருஷத்தில் பரிசு வழங்கப்படுகிறதோ அவ்வருஷத்தின் பரிசுக்குரியவருக்கே அளிக்கப்பெறும். பரிசுத்தொகைக்கு மேலே கிடைக்கும் தொகைதான் மூலதனத்தோடு சேர்க்கப்படும்.

5. வருஷந்தோறும் பரிசளிப்பு விவரம் பரிசுபெறுபவரின் பெயர், விலாசம் ஆகியவற்றோடு திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் ஸ்வாமிகளவர்களுக்கும், அவர்களுக்குப் பின்வரும் உரிமையுள்ளவர்களுக்கும் (Successors in Interest) தெரிவிக்கப்பட வேண்டும்.

6. பரிசு ஏற்படுத்தியவர்களுடைய நோக்கத்துக்கு வேறுபட்ட எந்தக் காரியத்துக்கும் இந்த நிதியை உபயோகிக்கக் கூடாது. இனி எப்பொழுதேனும் சர்வகலாசாலையாரின் 7-D விதிப்படியமைந்த தனித் தமிழ் வித்துவான் பட்டப் பரீக்ஷைக்குரிய விதிகள் மாறுபட்டாலும் பரிசை ஏற்படுத்தியவர்களுடைய நோக்கமாகிய தமிழ்க் கல்வி

யபிவிருத்திக்கு ஏற்றதென்று கருதும் வகையில் ஸிண்டிகேட் சபையார் இந்தப் பரிசை உரியவருக்கு அளிக்க ஏற்பாடு செய்யும் உரிமையைப் பெறுவார்கள்.

7. பரிசு கொடுத்ததுபோக எஞ்சும் வட்டித்தொகையையும், மூலதனத்தைக் கவர்ன்மென்டார் எப்போதேனும் திருப்பிக் கொடுக்க நேர்ந்தால் அத்தொகையையும், எந்தவிதமான பத்திரங்களிலேனும், வேறு வகையிலேனும் வைத்துப் பாதுகாக்கும் உரிமை ஸிண்டிகேட் சபையாருக்கு உண்டு.

காசி மடம்,
திருப்பனந்தாள் — **காசிவாசி சாமிநாத தம்பிரான்**
5.7.1939

குறிப்பு : மேலே கண்ட மூலதனம் (எண்டௌமென்ட்) சென்னை சர்வகலாசாலையாருடைய அங்கீகாரம் பெற்று, 1937-38-ம் வருஷத்திய யுனிவர்ஸிட்டி காலண்டர் பகுதி 2-ல் 129, 130-வது பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இவ்விரு அறிவிப்புகளும் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள் டாக்டர். உ.வே.சா. பதிப்பில் (1932) நூலின் முகப்பேட்டை அடுத்துச் சேர்க்கப்பெற்று வெளியாகி யுள்ளன.

ரூ. 40,000 ஆயுள்காப்பீடு மூலம் இவ்வறக்கட்டளையை 1928-இல் நிறுவினார்கள். காப்பீட்டு நிதி கைக்குவரப் பதினைந்து ஆண்டுகள் ஆகும். அதுவரை பொறுத்திராமல் கையிலிருந்தே ஆண்டுதோறும் ஆயிரம் ரூபாய் பரிசு கொடுப்பதை அடுத்த ஆண்டாகிய 1929-ஆம் ஆண்டே தொடங்கிவிட்டார்கள். அந்த ஆண்டு வி.மு. சுப்பிரமணிய ஐயர் 1000 ரூ பரிசு பெற்றார். அப்போது சாமிநாதசுவாமிகள் சின்னப்பட்டம்தான். மடத்தின் அதிபராகப் பெரியபட்டத்தில் இருந்தவர்கள் இவர்களது குருவாகிய சொக்கலிங்க சுவாமிகள். சீடரின் இப்பரிசளிப்பு விழாவைக் குருநாதரே தம்

வாழ்நாளில் கண்டுகளித்தார்கள். இதற்கு அடுத்த ஆண்டாகிய 1930-இல் தான் சொக்கநாத சுவாமிகள் சிவப்பேறு பெற்றார்கள். சாமிநாத சுவாமிகள் அதிபர் ஆனார்கள்.

ஒரு சமயம் 1000 ரூபாய் பரிசைப் பற்றிச் சில கருத்து வேறுபாடுகள் எழுந்தன. இந்த ஆயிரம் ரூபாயை இரண்டு மூன்று பகுதிகளாகப் பிரித்து முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு என்று கொடுக்கலாம் என்று பல பெரிய மனிதர்கள் காசிமடம் அதிபரிடம் கூறினார்கள். சுவாமிகள் ஐயரவர்களின் கருத்தைக் கேட்டார்கள். பிரித்துக் கொடுப்பதை ஐயரவர்கள் ஏற்கவில்லை. ''ஏழை வித்துவானுக்கு மொத்தமாக ஆயிரம் ரூபாய் கிடைப்பது என்பது அருமை. பரிசு பெற்றவர் தம் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்துகொண்டிருப்பார். வேண்டு மானால் இரண்டாம் மூன்றாம் பரிசுக்குத் தனி நிதி வைக்கலாமே தவிர முதல் பரிசு ஆயிரம் என்பதைப் பிரிக்கத் தேவையில்லை. இறைவனே ஞானசம்பந்தருக்கு ஆயிரம் கொடுத்ததாகத்தான் திருவாவடுதுறைத் தேவாரத்தில் வருகிறது 'ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடுதுறையனாரே' என்பது அது. ஆகவே முழுமையாக ஆயிரம் ரூபாய் வழங்குவதே சிறந்தது'' என்று ஐயரவர்கள் கூறினார்கள். ஐயரவர்களின் கருத்தை அதிபர் சுவாமிகள் ஏற்றுக்கொண்டு மகிழ்ந்தார்கள்.

இப்பரிசுத் திட்டம் தொடங்கியது முதல், அதனைச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் நிறுவுவது வரை பல ஆண்டுகள் காசிமடத்தின் பொறுப்பில் நேர்மேற்பார்வையில் ஐயரவர்களின் தலைமையில் ஆண்டுதோறும் பரிசளிப்பு விழா நிகழ்ந்தது. முதல் விழா 1929 செப்டம்பர் 15-ஆம் தேதி கும்பகோணம் போர்ட்டர் டவுன் ஹாலில் ஐயரவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. பின்னர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் மூலம் தொடர்ந்து இன்றளவும் 1000 ரூபாய் தமிழ்ப்பரிசளிப்பு ஆண்டுதோறும் நிகழ்ந்துவருகிறது. 1965-ஆம் ஆண்டில் வித்துவான் (இப்போது டாக்டர்) **இரா. செல்வ கணபதி** இப்பரிசைப் பெற்றார்.

ஆயிரம் ரூபாய் என்பது இன்று சிறிதாகத் தெரியலாம். ஆனால் 1928-இல் அது பெருந்தொகை. தமிழில் பெருந்தொகை என்றே ஒரு நூலுண்டு. பெருந்தொகை முதலியவற்றைப் படித்துத் தேறியவர்களுக்குச் சிறுதொகை பரிசு தரலாமா? சாமிநாத சுவாமிகளின் பெருந்தன்மை, பெரியமனம், பேருள்ளம் தமிழுக்கு 1000 ரூபாய் பரிசை நிறுவியது. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் அண்மைக்காலத்தில் ஏற்படுத்தியுள்ள 1,00,000 (லட்சம்) ரூபாய் பரிசுக்கு இணையாகச் சொல்லலாம். அக்காலத்தில் ஆயிரம் இன்று லட்சத்திற்குச் சமம்.

இப்படித் தமிழ்ப் படிப்பிற்குப் பெரும்பரிசில் நிறுவிய வர்கள் தமிழ் நூல்களைப் பதிப்பிக்க ஒரு பெருந்திட்டத்தை, அறக்கட்டளையை, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நிறுவினார்கள்.

தமிழ்நூல் வெளியீட்டுக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அறக்கட்டளை

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு 118 **ஏக்கர் நிலம் எழுதிவைத்து**, தமிழ் நூல் வெளியீட்டுக்கு ஓர் அறக்கட்டளையைச் சாமிநாத சுவாமிகள் 1940-இல் நிறுவினார்கள். வெளியிடும் நூலை அடக்கவிலைக்கு விற்ப தென்பதே பெரிது. ஆனால் சுவாமிகளோ **அடக்க விலையில் நான்கில் ஒரு பங்குக்கு** (கால்விலைக்கு), **எட்டில் ஒரு பங்குக்கு** (அரைக்கால் விலைக்கு) விற்கவேண்டும் என்கிறார்கள். இன்ன இன்ன நூல்களை வெளியிடலாம் என்று ஒரு பெரிய நீண்ட பட்டியலைத் தருகிறார்கள். இப்படி இப்படி அச்சிட்டு, இப்படி இப்படி பைண்டு செய்து வெளியிட வேண்டுமென்றும் விதித்திருக்கிறார்கள். இப்படி ஓர் அறக் கட்டளை இதற்கு முன்னும் தோன்றியதில்லை, இதற்குப் பின்னும் தோன்றியதில்லை. வேறு எந்த மடமும் யாரும் நிறுவியதில்லை. இவ்வறக்கட்டளைப் பத்திரம் தமிழ் வரலாற்றில் தங்கத் தகட்டில் (பொன்னேட்டில்) வைர வரி களில் பதிக்கத்தக்கது. அன்பர்கள் அதனை முழுமையாகக் கண்டுகளிக்குமாறு இக்காகித ஏட்டில் பதிக்கிறோம்.

தேவாரத் திருமுறைப் பரிசும், தமிழ் இலக்கிய இலக்கண வெளியீடுகளும் விவரமும் விதிகளும்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட இராஜராஜ அபயகுலசேகர சோழ மகாராஜா அவர்களின் ஞாபகார்த்த எண்டௌமெண்டின் தேவாரத் திருமுறைப் பரிசும், தமிழ் இலக்கிய இலக்கண நூல்களின் வெளியீடுகளும்.

தற்கால வருஷ வருமானம் ரூ. 500 + 1,250

தேவாரத் திருமுறைகளின் தமிழ் இசைக் கலையை அபிவிருத்தி செய்தலும், தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை வெளியிடுதலும் இதன் நோக்கமாகும். திருமுறைகளை வெளிப்படுத்தக் காரணமாயிருந்தவர்களான இராஜராஜ அபயகுலசேகர சோழ மகாராஜா அவர்களுடைய ஞாபகம் என்றும் குன்றா திருந்துவரும் பொருட்டு இந்தப் பரிசு, திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் ஏற்படுத்தப்பட்டது.

இதன் மூல சொத்து தஞ்சாவூர் ஜில்லா, கும்பகோணம் தாலுக்கா, 21-ம் நம்பர் சிறுகுடி, 23-ம் நம்பர் கீழ்மாந்தூர் இந்த வட்டங்களில், நாம் பட்டா மிராசுடன் சர்வ சுதந்திரமாக அனுபவித்து வருகிற, கயலூர் மேலச்சேத்தி கிராமத்தில் நன்செய் ஏக்கர் 114, செண்டு 3, புன்செய் ஏக்கர் 4, செண்டு 72 ஆக ஏக்கர் 118-ம் செண்டு 75-ம் ஆகும். அது ரூபா எழுபத்தை யாயிரம் (ரூ. 75,000) பெறுமானமுள்ளது. தற்கால நிலைமையை அனுசரித்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய் ஆயிரத்தெழு நூற்றைம்பது (ரூ. 1,750) வரை நிகர வருமானம் வரக்கூடியது. இந்த வருமானத்திலிருந்து ரூபாய் ஐந்நூறு (ரூ.500) ஒரு பரிசு கொடுக்க ஒதுக்கப்படவேண்டும். மூல சொத்தின் வருமானத்தின் எஞ்சிய தொகையை, இதனுடன் சேர்ந்திருக்கிற ஷெடியூல்களின்படி கீழ்க்கண்ட ஷரத்துக்களை அனுசரித்துத் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை அச்சிட உபயோகப் படுத்த வேண்டும்.

I. பரிசு அளிப்பதற்குரிய விதிகளும் நிபந்தனைகளும் வருமாறு :

1. இப்பரிசு ஆண்பாலகர் பெண்பாலகராகிய யாவருக்கும் ஜாதி, மத, தேச வேறுபாடு கருதாமல் அளித்தற்குரியது.

2. அண்ணாமலை யூனிவர்ஸிட்டியிலாவது, சென்னை யூனிவர்ஸிட்டியிலாவது, அல்லது இவைகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற தனித்தமிழ் வித்வான் பிரிலிமினரிப் பரீட்சையில் தேறினவரும், அண்ணாமலை யுனிவர்ஸிட்டி சங்கீத பூஷணத் தேவாரத் திருமுறை டைட்டில் முடிவுப் பரீட்சையில் முதல் முறையிலேயே தேறினவரும், பன்னிரண்டு திருமுறைகளிலும் பாடமாக வைக்கப்பெறும் ஆயிரத்திருநூறு (1,200)-க்குக் குறையாத செய்யுட்களைப் பாராயணம் (நெட்டுரு) செய்வதிலும் அவற்றிற்குரிய பண்முறைகளோடு பாடுவதிலும் முதல் வகுப்பில் முதல்வராக வருபவரும் ஆகிய ஒருவருக்கே இப்பரிசு அளிக்கப்படும்.

3. எல்லாப் பண்களும் அமைய ஒன்று முதல் ஏழு திருமுறைகளிலும் திருமுறை ஒன்றுக்குப் பாடல் நூறு விகிதம் எழுநூறும், ஏனை ஐந்து திருமுறைகளிலும் அத்திருமுறை நூல்களின் பாடல் மிகுதி குறைவுகளுக்கு ஏற்றபடி பாடல் ஐந்நூறுமாக ஆயிரத்திருநூறு (1,200)க்குக் குறையாத பாடல்கள் பாடமாக வைக்கப்படவேண்டும். அங்ஙனம் பாடமாக வைப்பது, ஆண்டுதோறுமாவது தொடர்ந்து சில ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது, ஷெ ஆயிரத்திருநூறு ஆகிய அளவுக்குக் குறையாதபடி, எல்லாப் பண்களிலுமாகத் திருத்தியமைக்கப்பட வேண்டும். ஷெ திருமுறை ஆயிரத்திருநூறு பாசுரங்களையும் எழுத்துப் பிழையில்லாமல் திருத்தமாகப் பாராயணஞ் செய்வதற்கு அம்சம் 50, பண்முறை பிறழாமல் ஒழுங்காகப் பாடுவதற்கு அம்சம் 40, பொருள் உணர்ச்சியுடன் பாடுவதற்கு அம்சம் 10 இவ்விதம் ஏற்படுத்த வேண்டும்.

4. எந்த வருஷத்திலாயினும் இருவரேனும், இருவருக்கு மேற்பட்டவரேனும் பரிசுக்குரியவரானால், சங்கீதப்

பிரிலிமினரிப் பரீட்சையில் பெற்ற அம்சங்களையும் சேர்த்துப் பார்த்து மொத்தத்தில் அதிக அம்சம் பெற்ற வருக்கு இப்பரிசு அளிக்கப்பெறும். அப்படியும் தீர்மானிக்க முடியாவிட்டால் அவர்களுடைய சங்கீத என்ட்ரன்ஸ் பரீட்சையின் அம்சங்களையும் (Marks) வயதையும் பார்த்து, அதிக அம்சம் உள்ளவருக்கும் வயதில் குறைந்தவருக்கும் பரிசைக் கொடுக்க ஸிண்டிகேட் சபையார் தீர்மானிப்பார்கள்.

5. ஸிண்டிகேட் சபைக் கூட்டம் ஒன்றில் இந்தப் பரிசு உரியவருக்கு வழங்கப்பெறும். எந்த வருஷத்திலேனும் பரிசுக்குரியவர் நேரில் வந்து பரிசைப் பெற்றுக்கொள்ள முடியாமற்போனால், ஸிண்டிகேட் சபையார் பரிசுத் தொகையை அவருக்கு அனுப்புவதற்குரிய ஏற்பாட்டைச் செய்வார்கள். பரிசு வழங்குவதற்கு முன் அப்பரிசுக்குரியவர் இறக்கும்படி நேர்ந்தால் அத்தொகை சட்டப்படி அவருடைய வாரிசாக இருப்பவரிடம் சேர்ப்பிக்கப்படும்.

6. இப்பரிசுத் தொகை பணமாகவேனும் செக்காகவேனும் அளிக்கப்பெறும். இந்தப் பரிசுத் தொகையை எக்காரணத் தாலாவது பகுக்கவும், குறைக்கவும், மாற்றவும் கூடாது.

7. எந்த ஒரு வருஷத்திலேனும், அல்லது தொடர்ந்து பல வருடங்களிலேனும் பரிசு கொடுக்கப்படாமலிருந்தால் அவ்வாறு கொடுக்கப்படாமலிருக்கும் பரிசுத் தொகை முழுவதும் சேர்த்து எந்த வருஷத்தில் பரிசு வழங்கப் படுகிறதோ அவ்வருஷத்தில் பரிசுக்குரியவருக்கே அளிக்கப் பெறும்.

II

1. மேற்கண்ட 1-வது அயிட்டத்திற்கண்ட பரிசுத் தொகை ரூபாய் ஐந்நூறு (ரூ. 500) போக மூல சொத்தின் வருமான பாக்கியை, இதனுடன் சேர்த்திருக்கிற அட்டவணையில் இருபத்தேழு (27) தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டி ருக்கிறபடி பன்னிரு திருமுறை முதலிய தமிழ் இலக்கிய இலக்கண நூல்களின் மூலங்களையும், மூல உரை

களையும் வசனங்களையும், அவைகளின் தகுதிக்கேற்பத் தொகுதி தொகுதியாகவும் அல்லது பிரித்தும் சேர்த்தும் பகுதி பகுதிகளாகவும் செய்யுட்களைச் சீர் பிரித்தும் கூடியவரை பெரிய எழுத்துக்களில் திருத்தமான இன்றி யமையாத பாடபேதங்களுடனும் லைப்ரரி எடிஷன் களாக வெளியிட உபயோகிக்க வேண்டும். ஷி வெளி யீடுகள் ஒவ்வொன்றையும் நல்ல உயர்ந்த காகிதத்தில் ராயல் சைசில் வால்யூம் ஒன்றுக்கு எழுநூற்றைம்பது (750) பக்கங்களுக்குக் குறையாமல் லைப்ரரிகளுக்கு உபயோகப்படும் தகுதியில் நல்ல உயர்ந்த பைண்டு செய்தல் வேண்டும். மேற்கண்ட வெளியீடுகளில் ஒவ்வொரு புத்தகத்திலும் பதிப்பிலும் இராஜராஜன் பிளாக்குடன் இந்த டீடும், ஐந்தாம் ஜார்ஜ் பிளாக்குடன் சென்னை யூனிவர்ஸிடியில் நம்மால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தியின் ஞாபகார்த்தமாக ஆயிரம் ரூபாய் தமிழ்ப் பரிசின் டீடும் சேர்க்கப்பட வேண்டும்.

2. இந்த டீடில் கண்ட விவரப்படி வெளியிடப்படும் ஒவ்வொரு புத்தகத்தின் ஒவ்வொரு பதிப்பிலும் ஐம்பது (50) பிரதிகள் விகிதம் நமக்கும் நமக்குப் பின் வரும் உரிமையுள்ளவர்களுக்கும் (Successors-in-interest) புத்தகங்கள் தயாரானவுடன் அனுப்பி வரவேண்டும். தவிர மீதி யிருக்கும் புத்தகங்களில் ஒவ்வொன்றும் அடக்க விலைக்கு நான்கில் ஒன்றாக விற்கப்பட வேண்டும்.

3. இந்த டீடில் கண்ட விவரப்படிக்குள்ள பரிசு கொடுப்பது, புத்தகங்களை வெளியிடுவது முதலிய காரியங்களை நிருவகிப்பதனால் ஏற்படும் நிருவாகச் செலவுகளை மூல சொத்தின் வருமானத் தொகையிலாவது, அதனுடைய விருத்தியாம்சம் முதலிய எவ்வித வருமானங்களிலாவது கழிக்கக்கூடாது.

4. மேற்கண்ட வெளியீடுகள் விற்ற வருமானம், ஷி புத்தகங்களை அச்சிடுவதற்கு வருஷந்தோறும் ஷி எண்டௌமெண்டின் வருமானத்திலிருந்து ஒதுக்கப்பட்டு

வரும் தொகையை வட்டியாகவுள்ள மூலதனத் தொகை யாகும் வரையிலும் சேர்க்கப்படல் வேண்டும்.

5. அப்படி ஒரு மூலதனத் தொகை ஏற்பட்ட பிறகு, **இராஜராஜத் திருமுறைப் பரிசை ரூபாய் ஆயிரமாகக்** கொடுக்கவும் புத்தக வெளியீடுகளை முன் சொல்லப் பட்ட கண்டிஷன்களுக்குட்பட்டு **அடக்க விலைக்கு எட்டில் ஒன்றாக விற்க வேண்டும்**. மேற்கண்டபடி ஆயிர ரூபாய் பரிசுத் தொகை போக ஷி எண்டௌ மெண்டிலிருந்து வரும் பாக்கித் தொகையையும், வட்டியையும், புத்தகங்கள் விற்ற வருமானங்களையும், புத்தக வெளியீடுகளுக்கே உபயோகப்படுத்த வேண்டும்.

6. இதனுடன் சேர்த்திருக்கிற அட்டவணையிற் கண்ட புத்தகத் தொகுதிகளின் வரிசைக்கிரமம் எவ்விதமிருந்த போதிலும், அந்தந்தக் காலங்களில் தேவைக்குத் தகுந்த படி எந்தத் தொகுதி எவ்வளவு வேண்டுமானாலும் எவ்வளவு பதிப்புக்கள் வேண்டுமானாலும் அச்சிட ஸிண்டிகேட் தீர்மானிக்கலாம். தனிப்பட்டவர்களாவது அல்லது ஒரு கூட்டத்தாராவது இந்த அட்டவணையிற் கண்ட தொகுதிகளில் எந்த தொகுதிப் புத்தகங்களை விரும்பினாலும், விலைக்கு ஐந்நூறு (500) காப்பிகளுக்குக் குறையாதபடி எடுத்துக் கொள்வதாகவும் அதற்கு முன் பணம் கொடுப்பதாகவுமிருந்தால், பொருள்நிலை இடம் கொடுக்கும் பட்சத்தில், முதல் பதிப்பாயிருந்தாலும் அதற்கு மேற்பட்ட பதிப்புக்களாயிருந்தாலும் அந்தத் தொகுதியை முன்னதாக அச்சிட ஸிண்டிகேட் தீர்மானிக்கலாம்.

7. அதன் பிறகு இதனுடன் சேர்த்திருக்கிற அட்டவணையிற் கண்ட புத்தகங்களின் தொகுதிகள் இருபத்தேழும் (27) அச்சிட்டுக் காப்பிகள் செலவழிந்த பின் ஷி அட்டவணையிற் கண்ட புத்தகங்களில் இன்றியமை யாதவைகளை அவைகளின் தகுதிக்கேற்றபடி அரும் பதவுரை முதலிய உரைகளுடன் மேற்கண்ட விவரங்களின்

படியே வெளியிட வேண்டும். பின்பு இந்த அட்டவணையிற் கண்டிராத வேறு எந்தத் தகுதியுள்ள தமிழ்ப் புத்தகங் களின் மூலங்களையும் - மூல உரைகளையும், வசனங் களையும், ஷ அட்டவணையிற் கண்ட புத்தகங்களை அச்சிடுவதற்கும், செலவழிப்பதற்கும் ஏற்பட்ட விவரப் படிக்குள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு ஸிண்டிகேட்டார் அபிப்பிராயப்படி வெளியிட்டு வரலாம்.

8. ஒவ்வொரு வருஷத்திலும் ஷ பரிசைப் பெறுபவரின் பெயர், விலாசம், போட்டோ இவைகளோடு அச்சிட்ட புத்தகத்தின் பெயரையும், அதன் பிரதிகளின் எண்ணிக்கையையும், அச்சிடப்படும் புத்தகத்தின் பெயரை யும், விற்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கையையும், மீதியிருக்கும் புத்தகங்களின் எண்ணிக்கையையும், புத்தக வெளியீடுகளின் கணக்கிற் கண்ட பணம் எவ்வித பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கிற தென்பதையும், ஒரு பிரபல தமிழ்த் தினசரிப் பத்திரிக்கையில் வெளியிடு வதுடன், நமக்கும் நமக்குப் பின்வரும் உரிமையுள்ள வர்களுக்கும் அனுப்பிவர வேண்டியது.

9. மேற்குறித்த பரிசுக்காகவும், வெளியீடுகளுக்காகவும் ஏற்படுத்தப்பட்ட எண்டௌமெண்டுகளையும் அவற்றின் விருத்தியாம்சங்களையும் இந்த டீடில் (Deed) கண்ட விவரப்படிக்குள்ள பரிசு கொடுத்தல், புத்தகங்கள் வெளியிடுதல் இவைகளைத் தவிர வேறு எந்தக் காரியத்திற்கும் உபயோகப்படுத்தக் கூடாது.

10. தேவாரப் பரீட்சைக்கு ஏற்படும் பரீட்சாதிகாரிகளில் ஒருவராகச் சேர்த்துக்கொள்ளும்படி தகுதியுடைய ஒருவரைக் குறிப்பிட்டு சிண்டிகேட்டாருக்குச் சிபாரிசு செய்ய நமக்கும் நமக்குப் பின்வரும் உரிமையுள்ளவர் களுக்கும் பாத்தியதையுண்டு.

11. இந்த எண்டௌமெண்டிலிருந்து கிடைக்கும் அந்த அந்த வருஷ நிகர வருமானத்திலிருந்து நூற்றுக்கு ஐந்து ரூபா

விகிதம் ரிசர்வ் பண்டாக இதன் மூல சொத்தின் ஒரு வருஷத்திய சர்க்கார் கிஸ்தி வகையறாவை வட்டியாக வுடைய முதல் தொகையாகும் வரை ஒதுக்கி வைக்க வேண்டும். அப்படி ஒரு மூலதனத் தொகை ஏற்பட்ட பிறகு அதனால் மிகுதிப்படும் தொகையைத் தேவாரத் திருமுறைப் பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்களில் எளிய தகுதியுடைய மாணவர்களுக்கு வகுப்பு ஒன்றுக்கு பன்னிரண்டு *(12)* பேர்கள் வீதம் நான்கு வகுப்புக்கும் நாற்பத்தெட்டு *(48)* பேர்களுக்கு இலவச உண்டி உறை யுளுக்காக (Stipend) பிரதி வருஷத்திலும் கொடுத்து வருவதற்கு வேண்டிய தொகையையும், இவ்வாறே தனித் தமிழ் வித்வான் பிரிலிமினரிப் பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்களில் வகுப்பு ஒன்றுக்கு இருபத்து நான்கு *(24)* பேர்கள் வீதம் இரண்டு வகுப்புக்கும் நாற்பத்தெட்டு *(48)* மாணவர்களுக்குப் பிரதி வருஷமும் கொடுத்து வருவதற்கு வேண்டிய தொகையையும் வட்டியாக வுடைய தனித்தனி முதல் தொகைகளாகும் வரை ஒதுக்கி வைக்கவேண்டும். மேற்கண்டபடி மூலதனத் தொகைகள் பூர்த்தியான பிறகு, இந்த எண்டௌமெண்டின் மூல சொத்தின் அந்த அந்த வருஷ வருமானம் முழுவதையும் முன் சொல்லப்பட்ட கண்டிஷன்களுக்குட்பட்டு புத்தக வெளியீடுகளுக்கே உபயோகப்படுத்த வேண்டும்.

12. மேற்கண்ட பன்னிரு திருமுறைத் தேவாரப் பரிசைப் பெறத் தகுதியுடையவர்கள் கிடைக்கும் வரையுள்ள முதல் நான்கு வருஷங்களுக்கு எண்டௌமெண்டின் வருமானத்திலிருந்து ஒதுக்கப்பட்ட பரிசுத் தொகையைப் புத்தக வெளியீடுகளுக்கும் பன்னிரு திருமுறைகளின் ஸெலக்ஷன்களுக்கும் (Selections) உபயோகப்படுத்தலாம்.

புத்தகங்களின் அட்டவணை

தொகுதி	தொகுதி 1-க்கு சங்கியை	புத்தகங்களின் விபரம்	
1	1	பன்னிரு திருமுறைகள் - மூலம்	
	2	பன்னிரு திருமுறைகள் அரும்பதவுரை முதலிய உரைகளுடனும் ஆராய்ச்சிகளுடனும்	
2	1	பெரியபுராணம்	
	2	திருவிளையாடற் புராணம்	பரஞ்சோதி முனிவர்
	3	கந்தபுராணம் - மூலம்	
	4	உபதேச காண்டம்	கோனேரியப்பர்
	5	கந்தபுராணச் சுருக்கம்	சம்பந்த சரணாலயர்
3	1	கம்பராமாயணம் - உத்தர காண்டத்துடன்	
	2	பாகவதம் - மூலம்	செவ்வைச்சூடுவார்
	3	வில்லிபுத்தூரார் பாரதம்	
	4	அரங்கநாத கவி பாரதம்	
	5	நல்லாப்பிள்ளை பாரதம்	
4	1	விநாயக புராணம்	கச்சியப்ப சுவாமிகள்
	2	தணிகைப் புராணம்	கச்சியப்ப சுவாமிகள்
	3	கோயிற் புராணம்	உமாபதி சிவாசாரியார்
	4	இலிங்க புராணம்	குலசேகர பாண்டியர்
	5	சிவதருமோத்தரம்	மறைஞான சம்பந்தர்
	6	வாயுசங்கிதை	வரதுங்கராமபாண்டியர்
	7	சூதசங்கிதை	தேவராஜபிள்ளை
	8	பிரமோத்தர காண்டம்	வரதுங்கராமபாண்டியர்
	9	கூர்ம புராணம்	அதிவீரராம பாண்டியர்
	10	காசி காண்டம்	அதிவீரராம பாண்டியர்
	11	சேது புராணம் - மூலம்	நிரம்ப அழகிய தேசிகர்
	12	திருப்பரங்கிரிப் புராணம்	நிரம்ப அழகிய தேசிகர்
	13	காஞ்சிப் புராணம்	சிவஞான சுவாமிகள், கச்சியப்ப சுவாமிகள்
	14	திருவானைக்காப் புராணம்	கச்சியப்ப சுவாமிகள்
	15	பேரூர்ப் புராணம்	கச்சியப்ப சுவாமிகள்

தொகுதி	தொகுதி 1-க்கு சங்கியை	புத்தகங்களின் விபரம்	
	16	திருக்குற்றாலத் தல புராணம்	திரிகூட ராஜப்ப கவிராயர்
	17	மாக புராணம்	அதிவீரராம பாண்டியர்
	18	மச்ச புராணம்	வடமலையப்பப் பிள்ளையன்
	19	திருப்பறியலூர்ப் புராணம்	வேலப்ப தேசிகர்
	20	திருவாப்பனூர்ப் புராணம்	கந்தசாமிப் புலவர்
	21	வசவ புராணம்	
	22	இரகு வமிசம்	அரசகேசரி
	23	சூளாமணி	தோலாமொழித் தேவர்
	24	மேருமந்தர புராணம்.	வாமன முனிவர்
	25	யசோதர காவியம்	வாமன முனிவர்
	26	சீறாப்புராணம்	உமறுப் புலவர்
	27	தேம்பாவணி	வீரமாமுனிவர்
5	1	திருக்குறள் முழுவதும் எல்லாருடைய உரையுமுள்பட மற்றப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் - உரைகளுள்பட	
6	1	சகலகலாவல்லி மாலை - மூலம் - பாக்கெட் சைஸ்	
	2	பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்	
7	1	நாளிதுவரையில் வெளியாயிருக்கிற காவியங்கள், நீதி நூல்கள் முதலிய இலக்கியங்களிலுள்ள திருக்குறளின் கருத்துகளமைந்த சிறந்த செய்யுட்களைத் திருக்குறள் அதிகாரஅடைவில் வகுத்து அமைத்த தொகுதி - மூலம்	
8	1	கந்தர் கலிவெண்பா	
	2	திருமுருகாற்றுப்படை	
	3	சகலகலாவல்லி மாலை - மூலம் - பாக்கெட் சைஸ்	
	4	ஆத்திசூடி முதலிய நூல்கள் - பதினொன்று மூலம்	
	5	பதினெண்கீழ்க்கணக்கிலுள்ள நீதிநூல்கள் - பதினொன்று	
9	1	பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் பிரபந்தங்கள் (அஷ்டப் பிரபந்தம்)	
	2	சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தங்கள்	
	3	சிவஞான சுவாமிகள் பிரபந்தங்கள்	

தொகுதி	தொகுதி 1-க்கு சங்கியை	புத்தகங்களின் விபரம்	
	4	குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்கள்	
	5	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள்	
	6	திருப்போரூர்ச் சந்நிதிமுறை - சிதம்பர சுவாமிகள்	
	7	திருத்தணிகைச் சந்நிதிமுறை - மூலம் - கந்தப்ப தேசிகர்	
	8	பிரபுலிங்க லீலை	சிவப்பிரகாச சுவாமிகள்
	9	பிரபோத சந்திரோதயம்	திருவேங்கட சுவாமிகள்
	10	திருவாதவூரர் புராணம்	கடவுண்மாமுனிவர்
	11	திருக்கூவப் புராண்ம்	சிவப்பிரகாச சுவாமிகள்
	12	சீகாளத்திப் புராணம்	கருணைப்பிரகாசர் சிவப்பிரகாச சுவாமிகள் வேலைய சுவாமிகள்
	13	திருநாகைக்காரோணப்புராணம்	மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள்
	14	திருவிடைமருதூர்த் தலபுராணம்	சிவக்கொழுந்து தேசிகர்
10	1	நாளிதுவரையில் வெளியாயிருக்கிற இலக்கியங்களிலுள்ள விநாயகர் தோத்திரம் முதலிய தோத்திரங்களின் சுவை யுள்ள பாடல் தொகுதி	
	2	தாயுமான சுவாமிகள் பாடல்	
	3	பட்டினத்தார் பாடல்	
	4	இராமலிங்கசுவாமிகள் பாடல்	
	5	மஸ்தான் சாகிப் பாடல்	
11	1	நாளிதுவரையில் வெளியாயிருக்கிற இலக்கியங்களிலுள்ள பாராயணம் (நெட்டுரு) பண்ணக்கூடிய சரித்திரச் சுவை யுள்ள பாகங்களின் செய்யுட்க்ளையும், சொற்சுவையுள்ள செய்யுட்களையும், பொருட்சுவையுள்ள செய்யுட்களையும், பக்திச் சுவை முதலிய சுவையுள்ள செய்யுட்களையும், மேற்கண்ட சுவைகளுள்ள தனிப்பாடல்களையுமுடைய தொகுதி - மூலம்	
12	1	கந்தர் கலிவெண்பா	
	2	திருமுருகாற்றுப்படை	
	3	சகலகலாவல்லிமாலை	
	4	நாலடியார்	

தொகுதி	தொகுதி 1-க்கு சங்கியை	புத்தகங்களின் விபரம்	
	5	நீதிநெறிவிளக்கம் - மூலம் - பாக்கெட் சைஸ்	
	6	திருக்குறள்	
	7	நன்னூல்	
	8	உவமான சங்கிரகம்	
	9	இரத்தினச் சுருக்கம்	
13	1	கோவை	1 முதல் ஐந்து முடிய 125 பிரபந்தங்கள் வரையில்
	2	உலா	
	3	தூது	
	4	கலம்பகம்	
	5	பிள்ளைத்தமிழ் - மூலம்	
	6	சூடாமணி நிகண்டு 11, 12 தொகுதிகளும்	
	7	திரிபு	7 முதல் 19 முடிய 125 பிரபந்தங்கள் வரையில்
	8	யமகம்	
	9	நிரோட்டகம்	
	10	பதிற்றுப்பத்து	
	11	வெண்பா அந்தாதி	
	12	கலித்துறை அந்தாதி மூலம்	
	13	சிலேடை	
	14	மடல்	
	15	குறவஞ்சி	
	16	குறம்	
	17	பள்ளு	
	18	பரணி	
	19	வண்ணம்	
	20	சதகம் - மூலம்	20 முதல் 27 முடிய 125 பிரபந்தங்கள் வரையில்
	21	மாலை	
	22	நான்மணி மாலை	
	23	மும்மணிக்கோவை	
	24	இரட்டைமணி மாலை	
	25	நவமணி மாலை	

தொகுதி	தொகுதி 1-க்கு சங்கியை	புத்தகங்களின் விபரம்
	26	பதிகம்
	27	சிறந்த சில்லறைப் பிரபந்தங்கள்
14	1	வேழமுகம்
	2	பிள்ளையார் சிந்தனை
	3	சரஸ்வதி சிந்தனை
	4	சகலகலாவல்லிமாலை
	5	ஆத்திசூடி
	6	கொன்றைவேந்தன்
	7	மூதுரை
	8	நறுந்தொகை
	9	உலகநீதி
	10	நல்வழி
	11	நன்னெறி
	12	நீதிவெண்பா
	13	அறநெறிச்சாரம்
	14	நீதிநெறி விளக்கம்
	15.	சோமேசர் முதுமொழி வெண்பா
	16.	விவேகசிந்தாமணி
	17.	நீதிசாரம்
	18.	நீதிநூல் - வேதநாயகம் பிள்ளை
	19.	குமரேச சதகம்
	20.	அறப்பளீசுவரர் சதகம்
	21.	சூடாமணி நிகண்டு 12 தொகுதிகளும்
	22.	வருஷாதி நூல்
	23.	திருப்புகழ்
	24.	நன்னூல் வசனச் சுருக்கம்
	25.	கந்தர் கலிவெண்பா
	26.	சரசுவதியந்தாதி
	27.	அருணகிரியந்தாதி
14	28.	அபிராமியந்தாதி
	29.	திருப்புகலூரந்தாதி

தொகுதி	தொகுதி 1-க்கு சங்கியை	புத்தகங்களின் விபரம்
	30.	திருவேங்கடத்தந்தாதி
	31.	பழமலையந்தாதி
	32.	மறைசையந்தாதி
	33.	கல்வளையந்தாதி
	34.	திருவரங்கத்தந்தாதி
	35.	திருச்செந்தில் நிரோட்டக யமகவந்தாதி
	36.	திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி
	37.	மதுரைப் பதிற்றுப்பத் தந்தாதி
	38.	கலைசைச் சிலேடைவெண்பா
	39.	சிங்கைச் சிலேடை வெண்பா
	40.	திருவரங்கத்துமாலை
	41.	சோணசைலமாலை
	42.	பெரியநாயகியம்மை திருவிருத்தம்
	43.	மதுரை மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை
	44.	சிதம்பர மும்மணிக்கோவை
	45.	நால்வர் நான்மணிமாலை
	46.	திருவாரூர் நான்மணிமாலை
	47.	செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்
	48.	முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்
	49.	அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்
	50.	மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
	51.	திருவிடை மருதூர் உலா
	52.	தஞ்சைப் பெருவுடையாருலா
	53.	நெல்விடுதூது
	54.	பணவிடுதூது
	55.	வருணகுலாதித்தன் மடல்
	56.	சித்திரமடல்
	57.	வெங்கைக்கலம்பகம்
	58.	மதுரைக் கலம்பகம்
14	59.	சமுத்திர விலாஸம்
	60.	சந்திர விலாஸம்

தொகுதி	தொகுதி 1-க்கு சங்கியை	புத்தகங்களின் விபரம்
	61.	கலிங்கத்துப்பரணி
	62.	ஏலாதி
	63.	சிறுபஞ்சமூலம்
	64.	நான்மணிக்கடிகை
	65.	திரிகடுகம்
	66.	இன்னா நாற்பது
	67.	இனியவை நாற்பது
	68.	ஆசாரக்கோவை
	69.	முதுமொழிக்காஞ்சி
	70.	பழமொழி நானூறு
	71.	நாலடியார்
	72.	திருக்குறள்
	73.	நன்னூல் காண்டிகையுரை
	74.	நன்னூல் விருத்தியுரை
	75.	பஞ்சலட்சணம், வச்சணந்திமாலையுடன் வசனம்
	76.	தஞ்சைவாணன் கோவை
	77.	வெங்கைக் கோவை
	78.	கோடீச்சுரக் கோவை
	79.	சீகாழிக்கோவை
	80.	கல்லாடம்
	81.	அருணாசல புராணம்
	82.	அரிச்சந்திர புராணம்
	83.	நைடதம்
	84.	நளவெண்பா
	85.	சிவராத்திரி புராணம்
	86.	ஏகாதசி புராணம்.
	87.	முக்கூடற்பள்ளு
	88.	கதிரைமலைப் பள்ளு
	89.	திருக்குற்றாலக் குறவஞ்சி
	90.	சரபேந்திர பூபாலக் குறவஞ்சி
	91.	அருணாசலக்கவி இராமநாடகக் கீர்த்தனை

தொகுதி	தொகுதி 1-க்கு சங்கியை	புத்தகங்களின் விபரம்
	92.	நந்தனார் சரித்திரக் கீர்த்தனை
	93.	குசேலோபாக்கியானம்
	94.	பாகவதம் - செவ்வைச் சூடுவார்
	95.	வில்லிபுத்தூரரார் பாரதம்
	96.	அஷ்டாவதானம் அரங்கநாத கவி பாரதம். நூல்களின் தகுதிக்கேற்பக் குறிப்புரை, அரும்பதவுரை, பதவுரை, பொழிப்புரை, கருத்துரை இன்றியமையாத இடங்களில் விசேட உரை முதலியன இனிய எளிய நடையில்.
15.	1.	நாளது வரையில் வெளியாயிருக்கிற இலக்கியங்களிலுள்ள பெருங்காப்பிய உறுப்புக்களின் செய்யுள் தொகுதி - மூலம்
16.	1.	தொல்காப்பியம் முழுவதும் எல்லாருடைய உரையுமுள்பட
17.	1.	சகலகலாவல்லிமாலை பாக்கெட் சைஸ் ஒரு பைண்டு
	2.	தொல்காப்பியம் - மூலம்.
18.	1.	கந்தர் கலிவெண்பா
	2.	திருமுருகாற்றுப்படை
	3.	சகலகலாவல்லிமாலை
	4.	தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்
	5.	தொல்காப்பியம் சொல்லதிகாரம் - மூலம் - பாக்கெட் சைஸ் ஒரு பைண்டு
	6.	நேமிநாதம்
	7.	வீரசோழியம்
19.	1.	சகலகலாவல்லிமாலை
	2.	நன்னூல்
	3.	நம்பி அகப்பொருள்
	4.	இறையனார் அகப்பொருள்
	5.	புறப்பொருள் வெண்பாமாலை
	6.	யாப்பருங்கலம் உரைகளுள்பட - டெம்மி சைஸ்
	7.	யாப்பருங்கலக்காரிகை
	8.	தண்டியலங்காரம்
	9.	வச்சணந்திமாலை

தொகுதி	தொகுதி 1-க்கு சங்கிலை	புத்தகங்களின் விபரம்
20.	1.	கந்தர் கலிவெண்பா சகலகலாவல்லிமாலை பஞ்சலட்சண மூலம் பாக்கெட் சைஸ் ஒரு பைண்டு - வச்சணந்திமாலை மூலம் வரையறுத்த பாட்டியல் உவமான சங்கிரகம் இரத்தினச் சுருக்கம்
21.	1.	எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, பாட்டியல் முதலியவைகளின் இலட்சணங்களைக் கூறச் சூத்திரங் களாகவும், செய்யுட்களாகவும், வசனங்களாகவும் நாளிது வரையில் வெளியாயிருக்கிற சிறந்த நூல்களுடன் அவற்றிற்குப் போதுமான தகுந்த உதாரணங்களோடு கூடிய நூற்றொகுதி.
22.	1.	நாளிது வரையில் வெளியாயிருக்கிற இலக்கிய இலக்கணங் களிலுள்ள உரைகளில் உதாரணங்களாகக் காட்டப்பட்டி ருக்கும் செய்யுட்களின் தொகுதி
	2.	பழைய சாசனங்களிலுள்ள செய்யுள் தொகுதி
	3.	தமிழ்ச் சாசனங்களின் தொகுதி
23.	1.	இந்த அட்டவணையிற் கண்ட நூல்களின் ஆசிரியர்கள், உரையாசிரியர்கள், இவர்களை ஆதரித்தவர்கள் முதலிய வர்களுடைய சரித்திரம், காலம், இவைகளைப் பற்றிய ஆராய்ச்சிகளின் தொகுதி.
	2.	இந்த அட்டவணையிற் கண்டிராத தமிழ் இலக்கிய இலக்கண நூல்களின் ஆசிரியர்கள், உரையாசிரியர்கள், இவர்களை யாதரித்தவர்கள் முதலியவர்களுடைய சரித்திரம், காலம், இவைகளைப் பற்றிய ஆராய்ச்சிகளின் தொகுதி.
	3.	தமிழ் இலக்கிய இலக்கண நூல்களைப் பற்றிய பலவித ஆராய்ச்சிகளின் தொகுதி
24.	1.	அன்னிய தேசங்களுள்பட இந்தியா முழுவதற்கும் கெய்டும் டைரக்டரியும் (நகரங்கள் விளக்கம்)
25.	1.	தருக்க சாஸ்திரம் (Logic)
	2.	தத்துவ சாஸ்திரம் (Philosophy etc.)

தொகுதி	தொகுதி 1-க்கு சங்கியை	புத்தகங்களின் விபரம்	
	3.	வான சாஸ்திரம் (Astronomy)	
	4.	கணிதம் (Mathematics etc.)	
	5.	பௌமிய சாஸ்திரம் (Geology etc.)	
	6.	பூகோளம் (Geography etc.)	
	7.	தாவர சாஸ்திரம் (Botany etc.)	
	8.	பிராணி வர்க்கம் (Zoology etc.)	
	9.	தேகதத்துவ நூல் (Physiology etc.)	
	10.	பிரகிருதி சாஸ்திரம் (Physics etc.)	
	11.	சுகாதார முறை (Sanitary Science etc.)	
	12.	இரஸாயனம் (Chemistry etc.)	
	13.	விவசாயம் (Agriculture etc.)	
	14.	தேச சரித்திரம் (History etc.)	தமிழில் கூடிய வரையில் சுருக்கமாகவும், விளக்கமாகவும், தமிழ் மட்டும் தெரிந்தவர்களுக்கு உபயோகப்படும் தகுதியில்
	15.	ராஜாங்க முறை (Politics etc.)	
	16.	அர்த்த சாஸ்திரம் (Economics etc)	
	17.	சங்கீதம் (Music etc)	
	18.	இயந்திர சாஸ்திரம் (Engineering etc.)	
26.	1.	தமிழ் அகராதி பிரயோகமுள்பட	(தமிழுக்குத் தமிழ்)
27.	1.	தமிழ் வித்யாமண்டபம்	(என்ஸைக்களோபிடியா)

ஷெடியூல்

தஞ்சாவூர் டிஸ்டிரிக்டு குத்தாலம் சப்ரிஜிஸ்டரைச் சேர்ந்த 21-ம் நம்பர் சிறுகுடி வட்டம் 132-ம் நம்பர் பட்டாவிலும், 23-ம் நம்பர் கீழ்மாந்தூர் வட்டம் 47-ம் நம்பர் பட்டாவிலும் உள்ள நன்செய் புன்செய்.

நிலங்களின் விபரம்

தொடர்ந்த நம்பர்	வட்டம் நம்பர், பெயர்	ரீசர்வே நம்பரும் உள் நம்பரும்	விபரம்	விஸ்தீர்ணம் ஏ.	செ.	ஆக மொத்தம் ஏ.	செ.
1.	21 நெ. சிறுகுடி	373-1	நன்செய்	5	40	-	
2.	,,	373-3	,,	0	4		
3.	,,	374-2	,,	2	4	-	
4.	,,	375-1	,,	5	7	-	
5.	,,	376-1	,,	2	76	-	
6.	,,	377-1	,,	2	79	-	
7.	,,	377-3	,,	0	48	-	
8.	,,	378-2	,,	1	91	-	
			ஆக நன்செய்			20	49

தொடர்ந்த நம்பர்	வட்டம் நம்பர், பெயர்	ரீசர்வே நம்பரும் உள் நம்பரும்	விபரம்	விஸ்தீர்ணம் ஏ.	செ.	ஆக மொத்தம் ஏ.	செ.
9.	21 நெ. சிறுகுடி	378-1	புன்செய்	0	22	0	22
	-	-	ஆக நன்செய், புன்செய்	-	-	20	71
10.	23 நெ. கீழ்மாந்தூர்	198	நன்செய்	4	91	-	
11.	,,	199	,,	3	59	-	
12.	,,	201-2	,,	3	46	-	
13.	,,	201	,,	6	7	-	
14.	,,	202-2	,,	3	8	-	
15.	,,	203-2	,,	4	41		
16.	,,	204-2	,,	5	56		
17.	,,	205-2	,,	3	51		
18.	,,	206	,,	4	40		
19.	,,	207-2	,,	4	8		
20.	,,	208-2	,,	3	68		

தொடர்ந்த நம்பர்	வட்டம் நம்பர், பெயர்	ரீசர்வே நம்பரும் உள் நம்பரும்	விபரம்	விஸ்தீர்ணம் ஏ.	விஸ்தீர்ணம் செ.	ஆக மொத்தம் ஏ.	ஆக மொத்தம் செ.
21.	23 நெ. கீழ்மாந்தூர்	209-2	நன்செய்	3	3		
22.	,,	210-2	,,	2	35		
23.	,,	211-2	,,	2	3		
24.	,,	213-1	,,	0	58		
25.	,,	214	,,	2	48		
26.	,,	215-4	,,	0	40		
27.	,,	216-2	,,	3	6		
28.	,,	217-2	,,	3	88		
29.	,,	218	,,	2	31		
30.	,,	219	,,	1	80		
31.	,,	221	,,	2	99		
32.	,,	222-2	,,	2	93		
33.	,,	223	,,	3	65		
34.	,,	227-2	,,	3	87		
35.	,,	228-2	,,	3	24		
36.	,,	239	,,	2	86		

தொடர்ந்த நம்பர்	வட்டம் நம்பர், பெயர்	ரீசர்வே நம்பரும் உள் நம்பரும்	விபரம்	விஸ்தீர்ணம் ஏ.	செ.	ஆக மொத்தம் ஏ.	செ.
37.	,,	240	,,	2	59		
38.	,,	241-2	,,	2	74		
	-	-	ஆக நன்செய்	-	-	93	54
39.	23 நெ. கீழ்மாந்தூர்	111-5	புன்செய்	0	53		
40.	,,	212-2	,,	1	18	கிட்டங்கி	
41.	,,	213-2	,,	1	3	வகையரா	
42.	,,	220	,,	1	76		
	-	-	நத்தம்				
	-	-	ஆக புன்செய்			4	50
	-	-	ஆக நன்செய் புன்செய்			98	4
	-	-	ஆக வட்டங்கள் இரண்டுக்கு	-	-	118	75

குறிப்பு : ''இந்த தஸ்தாவேஜி 1940-ம் வருஷம் அக்டோபர் மாதம் 24 உ பகல் 3 மணிக்குமேல் 4 மணிக்குள் குத்தாலம் சப்ரிஜிஸ்தராராபீஸில் தாக்கல் செய்யப்பட்டு 1 நெ. புத்தகம் 445-வது வால்யூம் 197 முதல் 215 வரையுள்ள பக்கங்களில் 1940 வருஷத்திய 2152-ம் நம்பராக ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.''

இவ்வறக்கட்டளையை முழுமையாகப் படித்தால்தான் இதன் அருமை பெருமை தெரியும் என்பதற்காக நூலின் பக்கங்கள் மிகுவதையும் செலவு மிகுவதையும் பொருட் படுத்தாமல் முழுவதும் அப்படியே இங்கு எடுத்துக்கொடுத் திருக்கிறோம்.

புத்தகங்களின் அட்டவணையைப் பார்த்தீர்களா? சைவ நூல்கள் மட்டுமல்ல. கம்பராமாயணமும் பாரதமும் சேர்ந்துள்ளன. சீறாப்புராணமும் தேம்பாவணியும் சேர்ந்துள்ளன. இராமலிங்கசுவாமிகள் பாடலும் சேர்ந்துள்ளது. ஆனால் திருவருட்பா என்று குறிப்பிடப்பெறவில்லை. இராமலிங்க சுவாமிகள் பாடல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சைவ மடங்கள் பலவற்றுக்கு வள்ளலாரைப்பற்றியும் திருவருட் பாவைப் பற்றியும் நல்லெண்ணமில்லாத காலம் அக்காலம். ஆயினும் இராமலிங்க சுவாமிகள் பாடல் புத்தக அட்ட வணையில் இடம்பெறுகிறது. இலக்கிய நூல்களேயன்றிக் கலைநூல்களும் சேர்க்கப்பெற்றுள்ளன. ஆராய்ச்சித் தொகுதிகள், அகராதிகள், என்சைக்ளோபீடியா என்ற அளவுக்கு நூற் பட்டியல் செல்கிறது. இவ்வறக்கட்டளை போன்றே இன்னும் நூற்பதிப்பு அறக்கட்டளைகள் சில பல உண்டு. பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, ஐம்பெருங்காப்பியங்கள் ஆகிய சங்க இலக்கியங்கள் சங்க மருவிய இலக்கியங்கள் அனைத்துமே ஓர் அறக்கட்டளையில் இடம்பெறுகின்றன. வேதாந்த நூல் களும் இடம்பெறுகின்றன. தமிழ் என்று வந்துவிட்டால் வேதாந்த நூல்களும் விலக்கல்ல, தேம்பாவணி, சீறாப் புராணம், மஸ்தான் சாகிபு பாடல்களையும் கூடச் சேர்த்துக் கொள்ளலாம் என்ற சாமிநாத சுவாமிகளின் பரந்த மனத்தை என்னென்று பாராட்டுவோம்.

> "லைப்ரரி எடிஷன்களாக .... நல்ல உயர்ந்த காகிதத்தில் ராயல் சைசில் வால்யூம் ஒன்றுக்கு எழுநூற்றைம்பது (750) பக்கங்களுக்குக் குறையாமல் லைப்ரரிகளுக்கு உபயோகப்படும் தகுதியில் நல்ல உயர்ந்த பைண்டு செய்யவேண்டும்."

என்கிறார்கள். நூல் வெளியீட்டில் எமக்கு 42 ஆண்டுகால அனுபவம். திருவருட்பா முழுவதையும், ஆறு திருமுறை களையும், ஒரே புத்தகமாக ராயல் சைசில் 1330 பக்கங்களில் வெளியிட்டவர் இத்தலைமுறையில் யாம் ஒருவரே. அப்படிப் பட்ட எமக்கே காசிவாசி சாமிநாத சுவாமிகளின் நூல் வெளியீட்டு அறக்கட்டளைகளைப் பார்க்கும்போது ''எற்றே இவர்க்குநாம் என்று'' என்று தோன்றுகிறது. **இது ராயல் (Royal) அறக்கட்டளை. இவர்கள் ராயல் சுவாமிகள்.** காசிமடம் அதிபர்களை **ராஜஸ்ரீ** என்று சிலர் சில சமயம் குறிப்பிட்ட துண்டென்றும் தெரிகிறது.

சிவஞானபோதம் மூலமும் சிவஞான சுவாமிகள் சிற்றுரையும்
ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை பதிப்பு - 1953

ஞானாமிர்தம் மூலமும் பழைய உரையும்
ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை பதிப்பு - 1954

பன்னிரு திருமுறை வரலாறு -
முதற்பகுதி. க. வெள்ளைவாரணம் - 1961

பன்னிரு திருமுறை வரலாறு -
2ஆம் பகுதி. க. வெள்ளைவாரணம் - 1961

திருவாசகம் - மூலம். நீ. கந்தசாமி பிள்ளை பதிப்பு - 1964

முதலிய பல நூல்கள் திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அறக் கட்டளைப் பதிப்பு என ராயல் அளவில் நூலகப் பதிப்பு களாகப் பதிப்பிக்கப்பெற்று அடக்கவிலையின் காற்பங்கு விலைக்கு விற்பனை செய்யப்பெற்றன. சிவஞானபோதச் சிற்றுரை ஒரு ரூபாய் எழுபத்தாறு காசு. பன்னிரு திருமுறை வரலாறு 1000 பக்கங்கள், மூன்று ரூபாய் எழுபத்தைந்து காசு. இவ்வளவு மலிவுவிலைக்கு விற்றதில் எவ்வளவோ நன்மை என்றாலும் ஓர் இடர்ப்பாடு, புத்தக வணிகர்கள் இவற்றை வாங்கி வெளியில் அதிக விலைக்கு விற்றார்கள்.

நூல் வெளியீட்டுக்காகப் புலவர்கள் பலருக்கும் நிறுவனங்கள் பலவற்றுக்கும் இவர்கள் பொருளுதவி

செய்தார்கள். ஐயரவர்களின் நூற்பதிப்புகள் பல இவர்களது கொடையால் வெளிவந்தன.

வடமொழி வேதங்களுக்குத் தமிழில் மொழிபெயர்ப்புகள் கிடைப்பது அருமை. திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடி (திருத்தவத்துறை) அருகே உள்ள மணக்கால் (மணற்கால்) என்ற ஊரினரான எம்.ஆர். ஜம்புநாதன் என்பவர் வேத மொழிபெயர்ப்புகளை வெளியிட்டார். சாமவேதம், அதர்வண வேதம் தமிழ் மொழிபெயர்ப்புகள் சாமிநாத சுவாமிகளின் பொருளுதவியால் வெளிவந்தன. யஜுர்வேத மொழிபெயர்ப்பு தருமபுர ஆதீனம் 24-ஆம் பட்டம் சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் பொருளுதவியால் வெளிவந்தது. எம்.ஆர். ஜம்புநாதன் அவர்களை நாம் அறிவோம். எம்மூர் சமயபுரத்திற்கும் அவரூர் மணற்காலுக்கும் இடையே உள்ள தூரம் பத்து அல்லது பன்னிரண்டு கிலோமீட்டர் தான். மணற்காலிற் பிறந்த அவர் சென்னையில் இருந்தார். பிற்காலத்தில் மும்பைக்குச் சென்றுவிட்டார். ருக்வேத மொழி பெயர்ப்பை வெளியிடும்படி நாம் தூண்டிக்கொண்டிருந்தோம். ருக் வேதம் முதற்பகுதி அவருடைய கடைசிகாலத்தில் வெளி வந்தது. பிற்பகுதி அவர் காலத்திற்குப்பின் அவரது துணைவி யாரால் வெளியிடப்பட்டது. காசிமடத்தின் கொடையில் அவர் வெளியிட்ட வேத மொழிபெயர்ப்புகள் இன்று கிடைக்கா.


திருப்பனந்தாள் காசிமடத்துக்குத் திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம் நகரில் ஒரு தோட்டமும் அதனுள் ஒரு பங்களாவும் இருந்தன. வைணவத் தலங்கள் 108-இல் முதல் தலம் திருவரங்கம். சிறந்த வைணவத் தலமான ஸ்ரீரங்கத்தில் சைவமடமான திருப்பனந்தாள் காசிமடத்திற்கு ஒரு தோட்டமும் பங்களாவும் இருந்ததே வியப்பு. வேறு எந்தச் சைவமடத்திற்கும் ஸ்ரீரங்கத்தில் சொத்து இல்லை. காசிமடம் தோட்டத்தை ஒட்டி ஸ்ரீரங்கம் ஹைஸ்கூல் ஏற்பட்டது. ஹைஸ்கூலுக்கு இடம் போதவில்லை. சுவாமிகள் தோட்டத்தின் ஒரு பகுதியைக் கொடுப்பாரா என்று எதிர் பார்த்தார்கள். பங்களா உட்படத் தோட்டம் முழுவதையும்

அங்கிருந்த அந்தச் சொத்து முழுவதையும் சுவாமிகள் ஸ்ரீரங்கம் ஹைஸ்கூலுக்கு அன்பளிப்பாகவே கொடுத்துவிட்டார்கள். இப்போது அது மேனிலைப்பள்ளியாக இருக்கிறது. காசிமடம் தோட்டம் பள்ளிவளாகத்தோடு சேர்ந்துவிட்டது. இப்போது தோட்டமாக இல்லை. கட்டிடங்களாகவும் திறந்த வெளி யாகவும் நடைபாதைகளாகவும் உள்ளது. பங்களா பழைமை மாறாமல் அப்படியே உள்ளது. பார்த்தாலே மடத்துக் கட்டிடம் என்று தெரியும். பள்ளியின் சுற்றுச்சுவரை ஒட்டிய தென்புற வீதி சிங்கப்பெருமாள் கோயில் சாலையில் Thirupanandal Kasi Mutt Gardens. The High School Srirangam என்று பொறிக்கப் பெற்ற வளைவும் (ஆர்ச்) அதன் இருபுறக் கட்டைகளில் ஒருபுறம் Gift by Kasivasi Swami Nadha Thambiran Swamigal 30-9-1938; மற்றொரு புறம் Opened by His excellency Lord Erskine Governor of Madras 31-10-1938 என்ற கல்வெட்டுகளும் இன்றும் உள்ளன. நாம் 1945 முதல் 1949-வரை திருவரங்கம் உயர் நிலைப்பள்ளி மாணவர். இளமையில் இயல்பாகவே எமக்கு இருந்த தமிழ்ப்பற்று மிகுவதற்குக் காசிமடத்தின் இந்த வளைவும் அதன் கல்வெட்டுகளும் அவற்றின் வரலாறும் காரணமாக இருந்தன. (அடுத்தபக்கம் படம் காண்க)

இப்படியெல்லாம் ஞானதானமே வாழ்வாகக் கொண் டிருந்த சாமிநாத சுவாமிகள் அன்னதானத்திலும் சிறந்து விளங்கினார்கள். திருப்பனந்தாள் காசிமடத்தில் இன்று கடைப்பிடிக்கப் பெற்று வரும் அன்னதான வண்ணங்க ளெல்லாம் இவர்கள் காலத்தில் வகுக்கப்பெற்றனவே.

குருபூஜை, மாகேஸ்வர பூஜையில் இன்ன இன்ன உணவு வகைகள், கறிவகைகள், பழவகைகள், இனிப்புகள் ஆகியவை படைக்கப்பட வேண்டும் என்பதைத் திட்டமிட்டுப் படைத்ததோடன்றி அவற்றை எல்லாம் பட்டியலிட்டு, வருங்கால நிர்வாகிகளும் அறிந்துசெய்யுமாறு கல்வெட்டாகவும் பொறித்துவைத்துள்ளார்கள். பூசைமடத்து நுழைவாயிலில் மேல்புறமும் கீழ்புறமும் இக்கல்வெட்டை 'அன்னதானக் கல்வெட்டை' இன்றும் காணலாம்.


THIRUPANANDAL KASI MUTT GARDENS
THE HIGH SCHOOL SRIRANGAM



அன்னதானக் கல்வெட்டு

வைகாசி மாதம் கிருஷ்ணபக்ஷம் திருதியை திதி மகேசுவர பூஜை திட்டப்படி (100) பேர்களுக்குள்ள திட்டம் - பதார்த்த வகை

1. எலுமிச்சங்காய் ஊறுகாய்
2. வெள்ளரிக்காய் தயிர்க்கோசும்பரி
3. பூசணிக்காய் வெல்லப்பச்சடி
4. வாழைக்காய்ப் பொரியல்
5. உருளைக்கிழங்கு வருகல்
6. புடலங்காய்ப் புளியில்லாக்கறி
7. பருப்பு
8. அன்னம்
9. நெய்
10. அப்பளம்
11. ரசம்
12. கத்தரிக்காய்ச் சாம்பார்
13. பூசணிக்காய் மோர்க்குழம்பு
14. சேமியா பாயசம்
15. ஜீனி
16. வடை
17. குஞ்சாலாடு 1-க்கு பலம் 1. 1/4
18. ஜிலேபி 1-க்கு ஷ 1
19. பழங்கள் வகையறா
20. மோர்
21. சுக்கு வெந்நீர்
22. இவைகளுக்கு மொத்த சாமான்

1.	அரிசி	மாகாணி	20 1/16
2.	அரிசிமாவு	ஷ	1/4
3.	துவரம்பருப்பு	ஷ	4
4.	உளுத்தம்பருப்பு	ஷ	1 13/16
5.	பச்சப்பருப்பு	ஷ	1/4
6.	கடலைப்பருப்பு	ஷ	5/8
7.	லவணம்	ஷ	18 1/32
8.	மல்லி	ஷ	3/8
9.	கடுகு	ஷ	11/32
10.	வெந்தயம்	ஷ	5/64
11.	ரவா	ஷ	3/16
12.	புளி	சேர்	5
13.	மிளகாய்	ஷ	3·15/16
14.	மிளகு	ஷ	9/16
15.	ஜீரகம்	ஷ	15/32
16.	மஞ்சள்	ஷ	21/32
17.	காயம்	ஷ	3/8
18.	வெல்லம்	ஷ	10
19.	சுக்கு	ஷ	1/8
20.	கடலைமாவு	ஷ	3 1/4
21.	சேமியா	ஷ	4 7/8
22.	முந்திரி	ஷ	3/8
23.	அ.சீனி	ஷ	29 1/2
24.	ஷ படைப்பதற்கு	ஷ	1/4
25.	திராட்சை	ஷ	3/4
26.	சீனா கற்கண்டு	ஷ	1/4
27.	குங்குமப்பூ	ஷ	1/64
28.	ஜாதிக்காய்	ஷ	1/64
29.	கிராம்பு	ஷ	1/16
30.	ஏலக்காய்	ஷ	25/64
31.	பவுடர்	ஷ	5/64
32.	பன்னீர்	ஷ	2 1/2
33.	நெய்	ஷ	13 9/16
34.	ஷ படைப்பதற்கு	ஷ	4 3/8
35.	ந.எண்ணெய்	ஷ	16 31/32
36.	இஞ்சி	ஷ	5/16
37.	ப.மிளகாய்	ஷ	1 7/16
38.	பச்சைக்கொத்தமல்லி	சேர்	1/4
39.	கறிவேப்பிலை	சேர்	3/4
40.	பால்	சேர்	30
41.	கட்டி தயிர்	மாகாணி	8
42.	அப்பளம்	மாகாணி	110
43.	தேங்காய்	மாகாணி	9
44.	எ.பழம்	மாகாணி	27
45.	வெள்ளரிப்பிஞ்சு	சேர்	3
46.	பூசணிக்காய்	சேர்	25
47.	வாழைக்காய்	சேர்	50
48.	உருளைக்கிழங்கு	சேர்	15
49.	புடலங்காய்	சேர்	15
50.	கத்திரிக்காய்	சேர்	12 1/2

1.	எலுமிச்சம்பழம்		25
2.	லவணம்	மாகாணி	3/16
3.	வெந்தயம்	மாகாணி	1/64
4.	கடுகு	மாகாணி	1/32
5.	மிளகாய்	பலம்	7 1/2
6.	மஞ்சள்	பலம்	1/2
7.	காயம்	பலம்	1 3/8
8.	ந.எண்ணெய்	பலம்	5 3/4

1.	நறுக்கிய வெள்ளரிப்பிஞ்சு	சேர்	3
2.	கட்டி தயிர்	மாகாணி	2
3.	லவணம்	மாகாணி	1/16

4.	கடுகு	மாகாணி	1/32
5.	இஞ்சி	பலம்	11/2
6.	ப.மிளகாய்	பலம்	1 1/2
7.	காயம்	பலம்	3/8
8.	ந.எண்ணெய்		1
1.	நறுக்கிய பூசணிக்காய்	சேர்	12 1/2
2.	வெல்லம்	சேர்	10
3.	முந்திரி பருப்பு	சேர்	1
4.	ஏலக்காய்		1/32
5.	பவுடர்	சேர்	1/32
6.	நெய்	சேர்	3/8
1.	மொந்தன்காய்		50
2.	உளுத்தம்பருப்பு	மாகாணி	1/4
3.	லவணம்	மாகாணி	3/16
4.	கடுகு	மாகாணி	1/16
5.	மிளகாய்	பலம்	2
6.	மஞ்சள்	பலம்	1
7.	ந.எண்ணெய்	பலம்	6
8.	கறிவேப்பிலை	பலம்	1
9.	தேங்காய்	பலம்	2
1.	உருளைக்கிழங்கு	சேர்	15
2.	லவணம்	மாகாணி	3/32
3.	மிளகாய்	பலம்	2 1/4
4.	காயம்	பலம்	3/4
5.	நெய்	பலம்	3
6.	ந.எண்ணெய்	பலம்	40
1.	நறுக்கிய புடலங்காய்	சேர்	15
2.	பச்சைப்பருப்பு	மாகாணி	1/4
3.	உளுத்தம்பருப்பு	மாகாணி	3/16
4.	கடலைப்பருப்பு	மாகாணி	1/4
5.	லவணம்	மாகாணி	1/4
6.	கடுகு	மாகாணி	1/32
7.	மிளகாய்	பலம்	4
8.	மிளகு	பலம்	2
9.	சீரகம்	பலம்	1/2
10.	மஞ்சள்	பலம்	1/2
11.	காயம்	பலம்	1/2
12.	முந்திரிப்பருப்பு	பலம்	5
13.	நெய்	பலம்	1
14.	ந.எண்ணெய்	பலம்	6
15.	கறிவேப்பிலை	பலம்	1
16.	தேங்காய்		2
1.	துவரம்பருப்பு	மாகாணி	1
2.	லவணம்	மாகாணி	1/16
3.	கடுகு	மாகாணி	1/64
4.	மஞ்சள்	பலம்	1/2
5.	ந.எண்ணெய்	பலம்	1/2
6.	கறிவேப்பிலை	பலம்	1/2
1.	அப்பளம்		110
2.	நல்லெண்ணெய் சேர்		4
1.	துவரம்பருப்பு	மாகாணி	1/2
2.	மல்லி	மாகாணி	1/8
3.	லவணம்	மாகாணி	1/4
4.	கடுகு	மாகாணி	1/16
5.	புளி	சேர்	1 1/2
6.	மிளகாய்	சேர்	3/8
7.	மிளகு	சேர்	1/8
8.	சீரகம்	சேர்	1/32
9.	நெய்	சேர்	1/4
10.	ந.எண்ணெய்	சேர்	1/8
11.	ப.கொ.மல்லி	சேர்	1/16
12.	கறிவேப்பிலை	சேர்	1/16
13.	பன்னீர்	சேர்	2/12
1.	நறுக்கிய கத்தரிக்காய்	மாகாணி	12 1/2
2.	துவரம்பருப்பு	மாகாணி	2 1/2
3.	கடலைப்பருப்பு	மாகாணி	1/8
4.	மல்லி	மாகாணி	1/4
5.	லவணம்	மாகாணி	1 1/2
6.	கடுகு	மாகாணி	1/16
7.	வெந்தயம்	மாகாணி	1/16
8.	அரிசிமாவு	மாகாணி	1/4
9.	புளி	சேர்	3 1/2
10.	மிளகாய்	சேர்	1 1/4
11.	மிளகு	சேர்	1/8
12.	சீரகம்	சேர்	1/32
13.	மஞ்சள்	சேர்	1/4
14.	காயம்	சேர்	1/8
15.	நெய்	சேர்	1/4
16.	ந.எண்ணெய்	சேர்	1
17.	ப.கொ.மல்லி	சேர்	1/8
18.	கறிவேப்பிலை	சேர்	1/8
1.	நறுக்கிய பூசணிக்காய்	சேர்	12 1/2
2.	கட்டி தயிர்	மாகாணி	4
3.	கடலைப்பருப்பு	மாகாணி	1/4
4.	லவணம்	மாகாணி	3/16
5.	கடுகு	மாகாணி	1/32
6.	மிளகாய்	பலம்	2 3/4
7.	சீரகம்	பலம்	2 3/4
8.	மஞ்சள்	பலம்	3/4
9.	ப.மிளகாய்	பலம்	1/2
10.	ப.கொ.மல்லி	பலம்	1/2
11.	கறிவேப்பிலை		1/2

12. நெய்	பலம்	2 1/2	4. முந்திரி பருப்பு	பலம்	6
13. தேங்காய்	பலம்	5	5. சீனாக்கற்கண்டு	பலம்	2
1. சேமியா	சேர்	4 7/8	6. கிராம்பு	பலம்	1/2
2. ரவா	மாகாணி	3/16	7. குங்குமப்பூ	பலம்	1/8
3. அ.ஜீனி	சேர்	9 3/4	8. பவுடர்	தோலா	1/8
4. முந்திரிப்பருப்பு	சேர்	1	9. ஜாதிக்காய்	தோலா 1/4	
5. திராட்சை	சேர்	3/4	10. நெய்	சேர்	5
6. பவுடர்	தோலா	1/2	1. உளுத்தம்பருப்பு	மாகாணி	3/9
7. குங்குமப்பூ	தோலா	1/8	2. பச்சரிசி	மாகாணி	1/16
8. ஏலக்காய்	சேர்	1/4	3. அ.ஜீனி	சேர்	9 3/4
9. நெய்	சேர்	12	4. குங்குமப்பூ	தோலா	1/8
10. பால்	சேர்	30	5. பவுடர்	தோலா	1/4
1. உளுத்தம் பருப்பு	மாகாணி	1	6. நெய்	சேர்	5
2. லவணம்	மாகாணி	1/16	1. கட்டித்தயிர்	மாகாணி	2
3. மிளகாய்	பலம்	1/2	2. லவணம்	மாகாணி	1/8
4. இஞ்சி	பலம்	1	3. கடுகு	மாகாணி	1/64
5. ப.மிளகாய்	பலம்	2	4. கறிவேப்பிலை	பலம்	1
6. கறிவேப்பிலை	பலம்	1/2	5. ந.எண்ணெய்	பலம்	1/2
7. ந.எண்ணைய்	சேர்	4	6. எலு.பழம்	பலம்	2
1. கடலை மாவு	சேர்	3/4	1. சுக்கு	பலம்	1
2. அ.சீனி	சேர்	10	2. ஏலக்காய்	பலம்	1/8
3. ஏலக்காய்	பலம்	5/8			

20-ஆம் பட்டம்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் (26.03.1944 - 16.05.1972)

பிறந்த ஊர் திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் அருகில் அரியநாயகிபுரம். நீதிநெறிவிளக்கம் பாடியதற்காகக் குமரகுருபரருக்குத் திருமலைநாயக்க மன்னர் முற்றூட்டாகக் கொடுத்த ஊர். பிறந்தநாள் : 03.09.1900, சார்வரி. இயற்பெயர் அப்பாசாமி. பள்ளிக்கல்வி - அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளியில். கல்லூரிக்கல்வி - திருநெல்வேலியி லுள்ள மதுரை திரவியம் தாயுமானவர் இந்து கல்லூரியில் இண்டர்மீடியட். இளமையிலேயே தாயாரை இழக்க நேர்ந்ததால் தாயன்புமிக்க சுவாமிகள் மிகவும் கலக்கமுற்றவராய்ப் போர்ப் படையில் (இராணுவத்தில்) சேர்ந்துவிட்டார்கள். அக்காலம் முதல் உலகப் பெரும்போர் நடந்துகொண்டிருந்த காலம். ஜபல்பூர், ஜோத்பூர், ஆக்ரா முகாம்களில் போர்வீரராகப் பணி யாற்றினார்கள். 1919-இல் இராணுவப் பணியிலிருந்து ஓய்வு.

இதன்பின் சில இடங்களில் அரசாங்க அலுவலகப் பணியிலும் இருந்தார்கள். ஒரு சமயம் விடுமுறையில் திருவண்ணாமலைக்குச் சென்று தங்கி வழிபட்டார்கள். விடுமுறைக் காலம் முடிந்துவிட்டது. திருவண்ணாமலையி லிருந்தவாறே அலுவலை இராஜினாமா செய்துவிட்டார்கள்.

பின்பு மதுரைக்கு வந்து வண்டிக்காரத் தெருவில் இருந்த சுப்புப்பட்டர் தேவாரப் பாடசாலையில் திருமுறைப்பயிற்சி. உடன் பயின்றவர் பிற்காலத்தில் பெரிய இசைப் புலவராகிய எம்.எம். தண்டபாணி தேசிகர்.

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சென்று சிலகாலம் தொண்டு. பின்பு தருமபுர ஆதீனம் சென்று சேர்ந்து 23-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளிடம் தீட்சையும் உபதேசமும் அருணந்தி என்ற தீட்சாதிருநாமமும் பெற்றுத் தம்பிரான் ஆனார்கள். திருக்கடவூர் திருவையாறு திருநள்ளாறு திருபுவனம் திருவாரூர் (இராஜன் கட்டளை) ஆகிய கோயில்களில் கட்டளைத் தம்பிரானாகத் திறம்படப் பணியாற்றினார்கள்.

திருப்பனந்தாள் காசிமடத்தின் 19-ஆம் அதிபர் காசிவாசி சாமிநாத சுவாமிகள் தாம் சிவப்பேறு பெறுங்காலம் நெருங்குவதை உணர்ந்து இவர்களைத் தம் பிற்றோன்றலாக நியமிக்கத் தருமபுர ஆதீனம் சந்நிதானத்தின் இசைவு பெற்று அழைத்துக்கொண்டார்கள். 04.03.1944-இல் தமக்குப் பின்வாரிசாக நியமித்து உயில் எழுதிப் பதிவு செய்து சாமிநாத சுவாமிகள் சிவப்பேறடைந்தனர். இவர்கள் 20-ஆம் பட்டம் அதிபராக அருளாட்சி ஏற்றருளினார்கள்.

26.03.1944-இல் அதிபராகப் பதவி ஏற்றார்கள். காசியில் 16.05.1972-இல் சிவப்பேறெய்தும் வரை 28 ஆண்டுகள் பதவியில் விளங்கினார்கள்.

இவ் 28 ஆண்டு ஆட்சியில் 526 அறக்கட்டளைகளை ஒன்றரைக் கோடி ரூபாய் மதிப்பிற்கு நிறுவியுள்ளார்கள்.

அறக்கட்டளைகள் (*Endowments*) என்று அவை 3 புத்தகங்களாக அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளன.

அறக்கட்டளை வகைகள்

காசி முதல் கன்னியாகுமரி வரை பல தலங்களில் அன்னதானம் செய்ய, காசிப் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தப் பேராசிரியர் நியமிக்க, கல்கத்தா, டெல்லி, அலகாபாத், லக்னோ, ஆக்ரா, அலிகார் பல்கலைக்கழகங்களில் சைவசித்தாந்தச் சொற்பொழிவுகளுக்கு, கல்கத்தா, திருவாங்கூர் பல்கலைக்கழகங்களில் பரிசளிப்பு, பழுத்த தமிழ்ப்புலவர் காசியாத்திரை நிதி (''பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து'' என்ற கந்தர்கலிவெண்பா அடி நினைவுக்கு வருகிறதன்றோ?), ஓதுவார்கள் சிவாசாரியர்கள் காசிக்குச் சென்றுவர, சில காலம் காசியில் தங்க, சிதம்பரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், மதுரை, திருக்குற்றாலம், சுசீந்திரம், பாபநாசம், ஸ்ரீ வைகுண்டம், இராமேஸ்வரம், திருக்காளத்தி, திருநாரையூர், கும்பகோணம், திருவதிகை, திருவெண்ணெய்நல்லூர் டெல்லி ஆகிய தலங்களில் ஓதுவார்கள் நியமித்துத் திருமுறை ஓத, பல தலங்களில் ‘சிவ சிவ’ ஒளிவளர் விளக்குகள், பன்னிரு திருமுறை, சைவ சித்தாந்த நூல்கள், திருக்குறள், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், பிற பல நீதிநூல்கள், தோத்திர நூல்கள் பதிப்பிக்க - இவ்வாறு பல்வேறு வகையில் மிகவும் பயனுள்ள நிரந்தர அறக்கட்டளைகள்.

தமிழ்ப் பண்பாட்டுக்குத் தமிழ்நாட்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போல், இந்துப் பண்பாட்டுக்கு வட இந்தியாவில் காசி இந்து பல்கலைக்கழகம் (பனாரஸ் ஹிண்டு யூனிவர்சிட்டி). டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் சில காலம் அதன் துணைவேந்தராக விளங்கினார். காசியில் சைவ சித்தாந்த மடங்கண்டார் குமரகுருபரர். அவர் வழிவந்த காசிவாசி அருணந்தி சுவாமிகள் காசியில் காசி இந்து பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்த பாடம் நடத்தவும் சொற்பொழிவாற்றவும் நிரந்தர அறக்கட்டளை நிறுவினார்.

அருணந்தி சுவாமிகளால் காசி பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தம் ஒலித்தது. கே. சிவராமன், டி.பி. சித்தலிங்கையா ஆகிய இருபேரறிஞர்களும் காசிப் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்தப் பேராசிரியர்களாக விளங்கினர்.

ஜி. சுப்பிரமணியபிள்ளை, ஆர். இராமானுசாச்சாரி, ம. பாலசுப்பிரமணிய முதலியார், எஸ். சச்சிதானந்தம் பிள்ளை, கே. வச்சிரவேல் முதலியார், டி.எம்.பி. மகாதேவன், வ.ஆ. தேவசேனாபதி, என். முருகேச முதலியார், திருவாசகமணி கே.எம். பாலசுப்பிரமணியம் முதலிய பேரறிஞர்கள், காசி, அலகாபாத் பல்கலைக்கழகங்களில் ஆங்கிலத்தில் சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகளாற்றினர். அவையெல்லாம் ஆங்கில நூல்களாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தால் காசி மடத்தின் அறக்கட்டளை வெளியீடுகளாக அச்சிட்டு வெளி யிடப்பெற்றுள்ளன. அழகிய அச்சு. உயர்தரப் பதிப்புகள்.

சிவஞானசித்தியார் சுபக்கம், கந்தர் கலிவெண்பா ஆகியவை தமிழ் இந்தி ஆங்கிலம் என மும்மொழிப் பதிப்பாகக் காசிமடம் வெளியீடாக வெளிவந்துள்ளன. **காசிமடம் அகில இந்திய மடம், மும்மொழி மடம், தேசிய ஒருமைப்பாட்டு மடம்.**

பன்னிரு திருமுறைப்பதிப்பு நிதி என்றும் திருக்குறள் பதிப்பு நிதி என்றும் தனித்தனியாக நிதிவைப்பு வைத்திருக் கிறார்கள். பன்னிருதிருமுறைகளும் பல பதிப்புகள் வெளி வந்துள்ளன. தஞ்சாவூரில் பெரிய கோயிலில் இராஜராஜ சோழன் நினைவு விழா இத்தலைமுறையில் முதல்முதலாக 31.10.1968 ஐப்பசித் சதயத்தில் நிகழ்ந்தது. அவ்விழாவில் மூவர் தேவாரம் அடங்கன்முறை (தலமுறை)ப் பதிப்பு ஒன்றைப் புதிதாக அச்சிட்டு 49 ஓதுவார்களுக்குக் காசிவாசி அருணந்தி சுவாமிகள் அன்பளிப்பாக வழங்கியருளினார்கள். விழாவுக்கு ஒரு நாள் முன்பு 29.10.1968-இல் நாமும் நமதன்பர் அருட்செல்வர் திரு. நா. மகாலிங்கம் அவர்களும் தரிசனத்திற்காகத் திருப்பனந்தாள் காசிமடத்திற்குச் சென்றோம். எங்களிருவருக்கும் மூவர்

தேவார அடங்கன் முறைப் பதிப்பை அன்பளிப்பாக வழங்கி வாழ்த்தியருளினார்கள்.

திருமந்திரத்திற்கு இதுவரை வந்துள்ள பதிப்புகளில் முதலில் வைத்து எண்ணத்தக்கது ஏ-1 சமாஜப்பதிப்பு. அடுத்தது ஏ-2 காசிமடத்துப் பதிப்பு (ஸ்ரீ வைகுண்டம் குமரகுருபரன் சங்கத்துப்பதிப்பு). திருக்குறள் உரைக்கொத்து, கிடைக்கும் எல்லா உரைகளுடனும் ஆங்கில மொழிபெயர்ப்புடனும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் மூன்றும் மூன்று தனித்தனி நூல்களாக வெளிவந்தன. மணக்குடவர் உரை மட்டும் தனியாக ஒரு பதிப்பு வெளிவந்தது. கந்தபுராணம் ஆறு காண்டங்களும் மூன்று புத்தகங்களாக வெளிவந்தன. கந்தபுராண உரைநடை, திருவிளையாடற்புராண உரைநடை வெளிவந்தன. அக்காலத்தில் திருப்பனந்தாளில் காசிமடத்தில் அச்சகம் இல்லை. நூல்களை வெளியில்தான் அச்சிட்டார்கள். பெரும்பாலும் ஸ்ரீ வைகுண்டம் குமரகுருபரன் சங்கப்பதிப் பாகவே வெளிவந்தன. நல்ல எழுத்து, நல்ல அச்சு, நல்ல தாள். அப்போது காசிமடத்திற்கு நூற்பதிப்பாசிரியர் திருச்சிராப்பள்ளி திருமுறைக்கலைஞர் வித்துவான் தி. பட்டுசாமி ஓதுவார் (எம் பூர்வாசிரம உறவினர்). அப்படிப்பட்ட பதிப்பாசிரியர் களும் பதிப்புகளும் இப்போது கிடைப்பது அருமை.

தமிழ்க்கல்லூரி தொடங்குதல் 1945

அதிபர் பொறுப்பை ஏற்றதற்கு அடுத்த ஆண்டிலேயே 1945-இல் ஒரு தமிழ்க் கல்லூரியைத் தமக்கு முன்னர் விளங்கிய சுவாமிகளின் பேரால் காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க்கல்லூரி என்ற பெயரில் தொடங்கினார்கள்.

ஸ்ரீவைகுண்டத்தில் பணிகள்

திருப்பனந்தாள் காசி மடத்திற்கு மூல மடமாகிய காசி குமாரசாமி மடத்தை நிறுவியருளிய குமரகுருபர சுவாமிகள் பிறந்தருளிய ஸ்ரீவைகுண்டத்தில் குமரகுருபரன் சங்கம், குமரகுருபரன் கலைக்கோயில், குமரகுருபரன் திங்களிதழ், குமரகுருபரன் கலைக்கல்லூரி முதலியவை தோற்றுவிக்கப் பெற்று அருமையாகப் பணி செய்தன.

ஸ்ரீவைகுண்டம் குமரகுருபரன் சங்கம் 31.10.1951-இல் பதிவு செய்யப் பெற்றது. குமரகுருபரரின் பூர்வாசிரம சகோதரரின் குடும்ப மரபில் பிறந்த தி. மு. குமரகுருபரன் பிள்ளை, பி.ஏ.பி.எல். அவர்கள் குமரகுருபரன் சங்கத்தின் நிரந்தரத் தலைவராக இருந்து பணி ஆற்றி வந்தார். குமரகுருபரன் சங்கம், குமரகுருபரன் கலைக்கோயில், குமரகுருபரன் கல்லூரி, குமரகுருபரன் திங்களிதழ் ஆகிய நான்கையுமே திருப்பனந்தாள் காசிமடத்தின் ஆதரவில் அவர்தான் நடத்தி வந்தார். குமரகுருபரரின் வம்ச பரம்பரையில் வந்தவராதலின் அவருக்கு இப்பணிகளில் அளவற்ற ஆர்வம் நிறைந்திருந்தது.

''குமரகுருபரன்'' திங்களிதழ் 1950-இல் தொடங்கப் பெற்றது. ஆசிரியர் டி.எம். குமரகுருபரன் பிள்ளை பி.ஏ.பி.எல். அவருக்குப்பின் அவர் மகனார் கு. சுப்பிரமணிய பிள்ளை கௌரவ நிர்வாக ஆசிரியர். சமய உலகில் வெளிவரும் இதழ் களில் குமரகுருபரன் சிறந்து விளங்கிற்று. 1972; 1973ஆம் ஆண்டுகளில் இதன் ஆண்டு சந்தா மூன்று ரூபாய். ஆண்டு தோறும் முதல் இதழ் (ஜனவரி இதழ்) ஆண்டு மலராக அதிகப் பக்கங்களுடன் வெளிவந்தது. ''குமரகுருபரன்'' 1977 டிசம்பர் இதழோடு நிறுத்தப்பெற்றுவிட்டது. மலர் 28, இதழ் 12, மார்கழி 1 (16.12.1977) இதழே இறுதி இதழ். இவ்விதழில் ''குமரகுருபரன் விடை பெறுகிறான்'' என்ற தலையங்கம் நமக்குப் பெரிதும் வருத்தமளித்தது.

ஸ்ரீவைகுண்டத்தில் குமரகுருபரன் கலைக்கல்லூரி 1960-இல் தொடங்கப் பெற்றது. இன்றும் காசிமடத்தின் ஆதரவில் நடந்து கொண்டிருக்கிறது. 1961-இல் திருப்பனந்தாளில் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கினார்கள். அது மேனிலைப் பள்ளியாக இப்போது உயர்ந்திருக்கிறது.

மணிவிழா மாண்பு

அகவை 60 நிறைந்து 61-ஆம் அகவைத் தொடக்கவிழா 11.09.1959-இல் வாரணாசியில் (காசியில்) குமாரசாமி மடத்தில் நிகழ்ந்தது. அதே நாளில் கும்பகோணம் போர்ட்டர் டவுன்

ஹாலிலும், மதுரை வடக்காடி வீதி கூட்டு வழிபாட்டு மன்றத்திலும், நாகர்கோயில் இந்துகல்லூரியிலும் நிகழ்ந்தது. ஸ்ரீவைகுண்டத்தில் 05.09.1959-ஒருவார விழாவாக நிகழ்ந்தது. 18.09.1959-இல் சுவாமிகள் காசியிலிருந்து திருப்பனந்தாள் வந்து சேர்ந்தார்கள். 18.09.1959-இல் திருப்பனந்தாளில் வரவேற்பு நிகழ்ந்தது. 61 கார்கள், 61 அன்பர்கள், 61 தாம்பாளங்களில் மலர் பழம் முதலிய 61 மங்கலப் பொருள்களுடன் அறுபத்தொன்று அறுபத்தொன்று என்று எல்லாம் 61-ஆக வரவேற்பு நிகழ்ந்தது. ஆங்கிலத்திலும் தமிழிலும் அழகாக அச்சிடப்பெற்ற மலர், டாக்டர் உ.வே. சாமிநாதையர் பதிப்புப் புகழ் சென்னை கபீர் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்று வெளியாயிற்று. தினமணி, சுதேசமித்திரன், தமிழ்நாடு, அமுதசுரபி (தீபாவளி மலர்), தேவஸ்தான பத்திரிகை ஆகிய தமிழிதழ்களும் ஹிண்டு, மெயில், சண்டேஸ்டாண்டார்டு, லீடர் ஆகிய ஆங்கில இதழ்களும், செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப் பொழில் ஆகிய திங்களிதழ்களும், மற்றும் பல நிறுவனங் களும் செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிட்டன.

சுவாமிகள் வாய்ச்சொல்வீரரல்லர்; **செயல்வீரர். An ounce of action is better than tons of speeches** என்ற ஆங்கில மொழியைச் சுவாமிகள் தமது ஏற்புரையில் நினைவுறுத்தி மிகச் சுருக்கமாக உரையாற்றினார்கள். சுவாமிகளைப் பற்றி எழுதிய ஒருவர் **அதீத எளிமை extremely simple life** என்று எழுதினார். ''**துறவு நிலைக்கு முன்பிருந்த உறவினர் உறவினராகார் என்னும் கொள்கையை** இவர்கள் வாழ்க்கை ஒன்றிலேயே நாம் காணலாம்'' என்று தினமணி இதழில் கட்டுரை எழுதியவர் எழுதினார். ஆதீனச் செல்வத்தை உறவினர்களுக்கு வழங்கி விவகாரங்களைத் தேடிக்கொண்டவர் களை நாம் காண்கிறோம். தமக்குப்பின் வாரிசாக அண்ணன் பிள்ளை தம்பி பிள்ளைகளை இளவரசாக நியமிப்பவர் களை நாம் காண்கிறோம். அருணந்தி சுவாமிகளைப் பற்றி தினமணி துணை ஆசிரியர் எழுதியதையும் அண்மைக் காலங் களில் நிகழ்வனவற்றையும் காணும்போது நெஞ்சு பொறுக்க வில்லை. மடத்தின் வரலாற்றிலேயே அன்பர்களின்

வற்புறுத்தலால் முதன்முதலாக நடந்த மணிவிழா நிகழ்ச்சி இதுவாகும்.

சுவாமிகள் குருபக்தி மிக்கவர்கள். *1945; 1950; 1965* ஆகிய மூன்று ஆண்டுகளிலும் தருமைக் குருமணியைத் திருப்பனந்தாளுக்கு அழைத்துப் பட்டணப் பிரவேசம் செய்வித்துக் கொலுவிருத்தி வழிபட்டுச் சிறப்பித்து மகிழ்ந்தார்கள். தருமபுர ஆதீன வளாகத்தில் வடக்குவீதியில் காசி மடத்திற்குச் சொந்தமாகக் கட்டப்பெற்றிருந்த வடக்கு மடத்தைக் குருகாணிக்கையாகத் தருமபுர ஆதீனத்திற்கே அர்ப்பணித்து மகிழ்ந்தார்கள் *(1948)*. கயிலைக் குருமணிக்குக் கனகாபிஷேகம் *(1961)* செய்வித்து மகிழ்ந்தார்கள்.

மடத்தின் பணியாளர் எட்டுப் பேருக்கு மடத்தின் செலவில் ஒரே நாளில் ஒரே நேரத்தில் (முகூர்த்தத்தில்) திருமணம் நடத்தி வைத்து வாழ்த்தினார்கள். இளமையில் இராணுவத்தில் பணி செய்யும் அளவுக்கு உடலுறுதி வாய்ந்த சுவாமிகள் அதே போல் உள்ள உறுதியும் பெற்றிருந்தார்கள். அவர்கள் செயல்கள் அனைத்திலும் ஒருவகை ஒழுங்கு, கட்டுப்பாடு, மிலிட்டரி டிசிப்ளின் காணப்பெற்றது. முந்திய சாமிநாத சுவாமிகள் கைத்துப்பாக்கி வைத்திருந்தவர்கள். பல்கலைக்கழகங்களில் அறக்கட்டளைகள் நிறுவுவதைப் பற்றி வேறு யாருமே சிந்திக்காத அந்தக் காலத்தில் முதன் முதலில் பல்கலைக்கழகங்களில் பெரிய அறக்கட்டளை களைச் சுவாமிநாத சுவாமிகளும் அருணந்தி சுவாமிகளும் நிறுவினார்கள். **சுவாமிநாத சுவாமிகள் அறக்கட்டளை மன்னர்** என்றால் அவரை அப்படியே பின்பற்றிய **அருணந்தி சுவாமிகள் அறக்கட்டளை மாமன்னர்.**

தமக்குப்பின்னும் காசியிலும் திருப்பனந்தாளிலும் மடங்கள் சிறந்து விளங்க, அறங்கள் ஓங்கத் தமக்குப் பிற்றோன்றலாக இப்போது அதிபராக விளங்கும் காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகளைத் தமது இறுதிக் காலத்துக்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தெரிந்

தெடுத்து 1960-இல் இளவரசாக நியமனம் செய்தருளினார்கள். தம் அறவழியில் 12 ஆண்டுகள் பழக்கியருளினார்கள்.

இறுதிக் காலத்தில் காசியிலேயே முத்தி பெற விரும்பினார்கள். 1972-இல் காசிக்கு எழுந்தருளிக் குமாரசாமி மடத்தில் கயிலைக்குருமணி முத்திக்காலத்தில் தங்கிய பகுதியில் தங்கியிருந்தவாறே விசுவநாதர் வழிபாடு கேதார நாதர் வழிபாடுகளையும் மடத்துத் தருமங்களையும் செய்து வந்தார்கள். தான் சிவப்பேறு பெற்றபின் பூத உடலைக் கங்கையில் ஜலசமாதி செய்துவிடப் பணித்தார்கள். 1972 - மே 16-ஆம் நாள் காசி குமாரசாமி மடத்திலேயே சிவப்பேறு பெற்றருளினார்கள். அவர்கள் விருப்பத்தின்படியும் ஆணையின் வண்ணமும் பூத உடல் கங்கையில் ஜலசமாதி செய்யப் பெற்றது.

ஆதிகுமரகுருபர சுவாமிகள் முதலாகச் சடையப்ப சுவாமிகள் வரை ஐந்து சுவாமிகளும் காசியிலேயே முத்தி பெற்றார்கள். அதன்பின் திருப்பனந்தாள் காசிமடத்து வரலாற்றில் திருப்பனந்தாளிலிருந்து காசிக்குச் சென்று முத்தி பெற்று ஜலசமாதியானவர்கள் காசிவாசி அருள்நந்தி சுவாமிகளே யாவார்கள். இது அவர்கள் பெற்ற பெரும்பேறு.

21-ஆம் பட்டம் அதிபர்

கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்

இப்போது அருளாட்சி செய்து வருபவர்கள்

1960-இல் இளவரசாக நியமனம் பெற்றது முதல் 12 ஆண்டுகள் அருள்நந்தி சுவாமிகளின் அடிச்சுவட்டில், அற வழியில், நேர்முகப்பயிற்சி பெற்ற இவர்களது அருளாட்சி, அருணந்தி சுவாமிகளின் முத்திக்குப்பின் 16.05.1972 முதல் மும்மடங்கு பொலிந்து வருகிறது.

இவர்கள் பிறந்த பெருநாள் 22.03.1931, பிரமோதூத, பங்குனி 9, ஞாயிறு, பரணிநாள். "பரணியிற் பிறந்தார் தரணி

யாள்வார்'' என்பது பழமொழி. சுவாமிகள் பரணியிற் பிறந்தவர்கள்.★ காசி குமாரசாமிமடத்து மகந்த் ஆகவும் திருப்பனந்தாள் காசித்திருமடத்தின் அதிபராகவும் இமய முதல் குமரி வரை அருளாட்சி செய்கிறார்கள். பிறந்த திருவூர் தென்னார்க்காடு மாவட்டம், இப்போது கடலூர் மாவட்டம் திருக்கழிப்பாலை என்னும் பாடல்பெற்ற திருத்தலத்துக்கு அருகிலுள்ள காரைமேடு. பிள்ளையாகப் பெறும் பேறு பெற்ற பெற்றோர்கள் மாணிக்கம்பிள்ளை, குஞ்சம்மாள். பிள்ளைத்திருநாமம் நடனசபாபதி. பள்ளிக்கல்வி சிதம்பரம் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி. அக்காலத்தில் தங்குமிடம் சிறிதுகாலம் சிதம்பரம் காசிமடம் தெருவில் உள்ள காசி மடத்தின் கிளைமடம், சிறிதுகாலம் பெற்றோருடன் சிதம்பரத்தைச் சார்ந்த சிதம்பரநாதன் பேட்டை. 1948 மார்ச் மாதம் 10-ஆம் வகுப்பில் தேர்ச்சி. தருமபுர ஆதீனத்தில் எழுத்தர் பணியில் இருந்த தமக்கையின் கணவர் மூலம் தருமபுர ஆதீனத்தில் எழுத்தராகப் பணியிற் சேர்தல். அப்பணியில் இவர்களுக்கு முன் இருந்தவர்கள் குன்றக்குடி அடிகளார். குன்றக்குடி அடிகளார் எழுத்தர் பணியிற் சேர்ந்து தம்பிரான் ஆகி மடாதிபதி ஆனார்கள். இவர்களும் அதே போல் எழுத்தர் பணியிற் சேர்ந்து தம்பிரானாகித் திருமடத்து அதிபரானார்கள்.

17.09.1953-இல் பரதேசிக் காஷாயம், துவராடை பூண்டு முத்துக்குமாரசாமி என்னும் தீக்கைத் திருப்பெயர் பெறல், 15.11.1953-இல் சமய தீக்கை. 23.11.1953-இல் சிவபூசை அருளப்பெறல். இரண்டு வாரத்திற்குப் பின் மந்திர காஷாயம். திருக்கொறுக்கை, மயிலாடுதுறை குமரக்கட்டளை, திருக்கடவூர், சீர்காழி, திருப்பனந்தாள் ஆகியவற்றில் கட்டளைத் தம்பிரான் பணி. தருமபுர ஆதீனப் பல்கலைக் கல்லூரியில் 1955-1959

★ அருட்செல்வர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் பிறப்பு பங்குனி பரணி, சன்மார்க்க உலகில் இல்லறத்தார் வரிசையில் முதல் ஸ்தானத்தில் (இடத்தில்) இருந்து ஆட்சி செய்கிறார்கள். இந்நூலாசிரியர் ஊரன் அடிகள் பிறப்பு வைகாசி பரணி. சன்மார்க்க உலகில் துறவறத்தார் வரிசையில் முதல் இடத்தில் இருந்து ஆட்சிபுரியும் பேற்றைப் பெற்றுள்ளார்.

நான்காண்டுகள் படித்துத் தமிழ் வித்துவான் பட்டம். இவ்வாறு தருமபுர ஆதீனத்தில் இவர்கள் சிறப்பாகப் பணியாற்றி வருங்காலத்தில், திருப்பனந்தாள் காசிமடம் 20-ஆம் பட்டம் அதிபர் காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் இவர் களைத் தமக்கு இளவரசாகக் கயிலைக் குருமணியிடம் ஒருமுறைக்கு இருமுறை வற்புறுத்தி வேண்டிப் பெற்று 1960-இல் காசிமடத்து இளவரசாக ஆக்கிக் கொண்டருளினார்கள்.

இளவரசாக ஆன புதிதிலும், பின்பு பட்டத்துக்கு வந்த புதிதிலும் தொடர்ந்து நீண்டகாலம் பெருவழக்கு ஒன்றை இவர்கள் சந்திக்கும் சோதனை நேரிட்டது. இவர்களை இளவரசாக நியமிக்குமுன் மகாலிங்கத்தம்பிரான் என்பவர்களை அருணந்தி சுவாமிகள் இளவரசாக நியமித்திருந்தார்கள். அவரும் நன்கு பணியாற்றிக் கொண்டிருந்தார். ஆனால் நாளடைவில் வரவர அவரது நடவடிக்கைகள் சரியாக இல்லை. நல்லொழுக்கத்தை மிகவும் வற்புறுத்தும் அதிபர் அருணந்தி சுவாமிகள் மகாலிங்கத் தம்பிரானை இளவரசுப் பட்டத்திலிருந்து நீக்கிவிட்டார்கள். தன்னை நீக்கியது சரி யல்ல என்று அவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். அவ் வழக்கு நிலுவையில் இருக்கும் நிலையில்தான் இவர்களை இளவரசாக அருணந்தி சுவாமிகள் நியமித்தார். இளவரசுப் பட்டத்திலிருந்து முன்பு நீக்கப்பெற்ற மகாலிங்கத்தம்பிரான் தொடுத்த வழக்கு அருணந்தி சுவாமிகள் சிவப்பேறு பெற்றதன் பின்னும் இவர்கள் 21-ஆம் பட்டமாக அதிபர் பதவியை ஏற்ற பின்னும் சில ஆண்டுகள் வரை நீடித்தது. மாவட்ட நீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்றம், டெல்லி உச்சநீதி மன்றம் எனப் படிப்படியாக நீதிமன்றங்களைக் கண்டது. வாதி மகாலிங்கத்தம்பிரானுக்குப் பின் திரைமறைவில் செல்வமும் செல்வாக்குமுள்ள பிரமுகர் ஒருவர் இருந்து சுயநலம் கருதி வழக்கை உச்சநீதிமன்றம் கொண்டு சென்றார். சமய மரபுகள் (சம்பிரதாயங்கள்) சம்பந்தப்பட்ட இவ்வழக்கைக் கீழ் நீதிமன்றமே மீண்டும் விசாரித்து விவரங்களை அளிக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றமும் இவ்வழக்கைக்

கீழ்நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தது. கீழ்நீதிமன்றத்தில் மறு விசாரணை நடந்து இவர்கள் பக்கம் சாதகமாக அதாவது அறத்தின் பக்கம் தீர்ப்பு வழங்கப்பெற்றது. தீர்ப்பு வழங்கியவர் நீதிபதி எம்.எம். இஸ்மாயில் அவர்கள்.

இறுதிவரை இளவரசை நியமிக்காமல், அல்லது இறுதிக் காலத்தில் நியமிக்காமல், முன்கூட்டியே இளவரசுப் பட்டத்துக்கு ஒருவரை நியமிப்பதில் இவ்வளவு சிக்கல் உள்ளது. வழக்கு முதலியவற்றைச் சந்திக்க நேர்கிறது. உயிருக்கே ஆபத்தான நிலைகள் உண்டாவதும் உண்டு. எல்லாருமே அவரவர்களுக் குரிய தகுதியில் ஒழுக்கத்தில் தர்மத்தில் நின்றால் எதைப் பற்றியும் கவலையில்லை. 21-ஆம் அதிபர் பட்டம் சம்பந்தமான வழக்கில் தர்மம் வென்றது. அருள்நந்தி சுவாமிகள் எது செய்தாரோ அதுதான் தர்மமாக இருந்திருக்கும். அவ்வியற்கை அறம் வென்றது.

''குமரகுருபரர்'' திங்களிதழ் தொடங்கியது

ஸ்ரீவைகுண்டத்தில் 1950-இல் தொடங்கப் பெற்ற திங்களிதழ் 1977 முடிய 27 ஆண்டுகள் நடைபெற்று 27-ஆம் ஆண்டு நிறைவில் நின்றுபோன செய்தி முன்னரே கூறப் பெற்றது. இந்நிலையில் புதிதாக ஒரு திங்களிதழைத் திருப்பனந்தாளில் தொடங்குவது இன்றியமையாததாயிற்று. 18.10.1978 ''குமரகுருபரர்'' என்ற பெயரில் ஒரு திங்களிதழ் திருப்பனந்தாள் காசிமடத்திலிருந்து அச்சிட்டு வெளியிடத் தொடங்கப்பெற்றது. இதழை அச்சிடவும் நூல்களை அச்சிடவும் சொந்த அச்சகம் ஒன்றும் தொடங்கப்பெற்றது. சொந்த அச்சகத்தில் அச்சிடப் பெற்ற முதல் இதழ் தொகுதி 2, பகுதி 3, 16.12.1979 இதழாகும். இன்றுவரை சிறப்பாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. 2009 மார்ச் இதழ் 14.3.2009, தொகுதி 31, பகுதி 6 ஆகும்.

தல யாத்திரை

பாடல் பெற்ற சிவத்தலங்கள் 274-இல் 272 தலங்களைத் தரிசித்திருக்கிறார்கள். கயிலை உட்பட 272 தலங்கள் தரிசித்

தாயிற்று. இதுவரை தரிசிக்காமல் இன்னும் தரிசிக்க வேண்டி யிருப்பவை இரண்டே இரண்டு தலங்கள். அவற்றை இதுவரை தரிசிக்காத காரணம் அவ்விரண்டும் ஈழநாட்டுத் தலங்கள். திருக்கேதீச்சரம், திரிகோணமலை. இலங்கை உள்நாட்டுப் பிரச்சனையால் அமைதியின்றி இருத்தலின் ஈழநாட்டுத் தலங் களின் யாத்திரையை மேற்கொள்ள இயலாது போயிற்று. இலங்கையில் அமைதி திரும்பி இவர்கள் ஈழநாட்டுத் தலங் களையும் தரிசித்து நிறைவு செய்யும் காலம் அண்மையில் வருவதாகுக என்று கேதீச்சரப் பெருமானையும் திரிகோணமலைப் பெருமானையும் வேண்டுவோம்.

பாடல்பெற்ற சிவத்தலங்களைத் தவிர, வைப்புத்தலங்கள் பலவற்றையும், திருவாசகத் தலங்கள், திருவிசைப்பாத் தலங்கள் அனைத்தையும், வைணவத் தலங்கள், முருகத் தலங்கள் பலவற்றையும் அகில இந்திய யாத்திரைத் தலங்கள் சுற்றுலாத் தலங்கள் பலவற்றையும், இமயமலைத் தலங்கள் பலவற்றையும் நேபாளத்தில் உள்ள பசுபதிநாதத்தையும் தரிசித்திருக்கிறார்கள். சுவாமிகள் **யாத்திரைச் செல்வர்.**

கயிலைமாமுனிவர் தேவாரத்திரட்டு

''அகத்தியர் தேவாரத்திரட்டு'' என்றொரு தேவாரத்திரட்டு வழங்குகிறது. சிவாலய முனிவரின் வேண்டுகோளுக்கிணங்க அகத்தியரால் தேவாரப் பதிகங்களில் முக்கியமானவற்றைத் திரட்டிச் செய்யப்பெற்றதென்பர். அதைப்போன்று மயிலாடுதுறை குருஞானசம்பந்தர் மன்றத்தார் வேண்டுகோளுக்கிணங்கப் பாடல்பெற்ற தலங்கள் 275-க்கும் தலத்துக்கு ஒரு தேவாரப் பாடலாகச் சிறப்பான பாடல்களை ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள் திரட்டிக் கொடுத்தருளினார்கள். குருஞானசம்பந்தர் மன்றம் அத்திரட்டைக் ''**கயிலைமாமுனிவர் தேவாரத்திரட்டு**'' என வெளியிட்டுள்ளது. தலயாத்திரைக்கு அது பெரிதும் உதவி யானது. எந்தத் தலத்திற்குச் சென்றாலும் அதில் ஓதுவதற்கு ஒரு பாடல் கயிலைமாமுனிவர் தேவாரத்திரட்டில் உண்டு.

கயிலாய தரிசனம் – "கயிலை மாமுனிவர்" எனப்பட்டம் பெறல்

தருமபுர ஆதீன குருமகா சந்நிதானங்களுள் திருக்கயிலாய யாத்திரை செய்து கயிலையைத் தரிசித்தவர்கள் 25-ஆவது குருமகாசந்நிதானம் கயிலைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஒருவரே ஆவார்கள். அதேபோல் திருப்பனந்தாள் காசிமடத்து அதிபர் களுள் திருக்கயிலாய யாத்திரை செய்து கயிலையைத்தரிசித்த வர்கள் 21-ஆவது அதிபர் நம் கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் ஒருவரே ஆவார்கள்.

கயிலைமாமுனிவர் கயிலை யாத்திரை தொடங்கிய நாள் 21.06.1982. கயிலைமாமுனிவருடன் சென்றவர்கள் தொண்டமண்டல ஆதீனம் 230-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளும், பேரூராதீனம் கயிலைமாமுனிவர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களும் ஈரோடு கயிலைச்செல்வர் அழகப்பமுதலியாரும் ஆவர். திருக்கயிலாய தரிசனம் செய்து அருள்பெற்ற நாள் 15.07.1982 துந்துபி, ஆனி, 31, பரணி நாளாகும். பரணியிற் பிறந்தவர்கள் ஒரு பரணி நாளிலேயே கயிலையைக் காணும் புண்ணியத்தைப் பெற்றார்கள்.

கயிலாய தரிசனம் பெற்ற காசிவாசி சுவாமிகளுக்குத் தருமையாதீன குருமகாசந்நிதானம் அவர்கள் "**கயிலை மாமுனிவர்**" என்னும் சிறப்புப் பெயரை வழங்கியருளினார்கள். கயிலைமாமுனிவர் என்னும் சிறப்புப் பெயர் விருது ஒரு கேடயத்தில் பொறித்து வழங்கப்பெற்றது. கேடயத்தின் வாசகம் பின்வருமாறு.

உ

குருபாதம்

''காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி''

நமது கண்மணியிற் சிறந்த காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரானுக்குப் பண்டாரத் திருவுள்ளத்தினாலே சிவக்ஞானம் மென்மேலும் உண்டாவதாக.

நாளது துந்துபி ஆண்டு ஆனித் திங்கள் 31-ஆம் நாள் (15.7.82) நவமி திதி, பரணி விண்மீன் கூடிய நன்னாளில் திருக்கயிலாய நாதனைத் தரிசித்துப் பெறுதற்கரிய பேற்றினைப் பெற்றதை முன்னிட்டு அங்குத்திக்கு

''கயிலை மாமுனிவர்''

ஸ்ரீகாசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்

என்னும் நாமம் நானிலம் எங்கும் நயப்புற மன்னுவதாக.

தருமை ஆதீனம்
16.8.82

கல்வி நிலையங்களின் தரத்தை உயர்த்தல், புதிய கல்வி நிறுவனங்கள் காணல்

காசிவாசி சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க்கல்லூரியைக் கலைக்கல்லூரியாக உயர்த்தினார்கள். மூன்று லட்ச ரூபாய் செலவில் புதிய கட்டிடங்களைக் கட்டினார்கள். உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தினார்கள். புதிதாகக் காலத்திற் கேற்ற முறையில் மெட்ரிக்குலேஷன் பள்ளி ஒன்றையும், ஆசிரியப்பயிற்சி நிறுவனம் ஒன்றையும் தொடங்கியருளினார்கள்.

குமரகுருபரர் 300 நிறைவுவிழா

குமரகுருபர சுவாமிகள் முத்திபெற்றருளிய ஆண்டு 1688 ஆதலின் 1988-இல் சரியாக 300 ஆண்டுகள் நிறைவுற்றது.

ஆதிகுருநாதரின் முத்தி 300-ஐச் சிறப்பாகக் கொண்டாடக் கயிலைமாமுனிவரவர்கள் விரும்பினார்கள். திருப்பனந்தாள் காசிமடத்தில் 04.06.1988 மே முதல் 1989 மே வரை ஓராண்டு முழுவதும் குமரகுருபரர் 300 விழா சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. தமிழ்நாட்டில் சென்னை முதல் கன்னியாகுமரி வரை பல நகரங்களிலும், கேரளத்தில் எர்ணாகுளம், கர்நாடகத்தில் பெங்களூர், வடக்கே வாரணாசி (காசி) ஆக 47 இடங்களில் குமரகுருபரர் 300 கொண்டாடப் பெற்றதற்கு ஒரு பட்டியலே உள்ளது.

மணிவிழா

ஆதீன குருமகாசந்நிதானங்கள் திருமடங்களின் தலைவர்கள் சிலருக்கு மணிவிழா நிகழ்ந்ததே ஒரு வரலாறு. திருக்கோவலூர் ஆதீனம் ஞானியார் சுவாமிகளுக்கும் திருப்பனந்தாள் காசிமடம் அதிபர் காசிவாசி அருள்நந்தி சுவாமிகளுக்கும் நமக்கு முந்திய சென்ற தலைமுறை மணிவிழாக் கண்டது. அன்பு, அதுவும் உள்ளன்பு, பொங்கித்ததும்பி வழிந் தோடிய விழாக்கள் அவை. இன்றைய நம் தலைமுறையில் நாம் கண்ணாரக் கண்ட மணிவிழாக்கள் 1. குன்றக்குடி அடிகளார் மணிவிழா 2. காசிவாசி கயிலைமாமுனிவர் மணிவிழா. இவ்விரு மணிவிழாக்களிலுமே நாம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் பேறு பெற்றோம்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி கயிலைமாமுனிவரின் மணிவிழா திருப்பனந்தாளில் 18.03.1991 திங்கள், 19.03.1991 செவ்வாய், 20.03.1991 புதன் ஆகிய மூன்று நாளும் நிகழ்ந்தது. இம் மணிவிழாவின் சிறப்புகள் மிகப்பல. எவ்வளவோ எழுதலாம். எல்லாவற்றிலும் மிகவும் முக்கியமான ஒன்றைக் கூறியே ஆகவேண்டும். அன்று மணிவிழா நிகழ்ச்சியிலும் அதைக் கூறினோம். இன்று இங்கும் அதைக் கூறுகிறோம்.

திருமுறைகள் 12-இல் ஒன்று கிடைத்தால் இன்னொன்று கிடைக்காது. சித்தாந்த சாத்திரங்கள் 14-இல் ஒன்று கிடைத்தால் மற்றொன்று கிடைக்காது. எல்லாம் சேர்ந்தாற்

போல் செட்டாகக் கிடைக்காது. திருமுறைகள் கிடைத்தால் சாத்திரங்கள் கிடைக்காது. சாத்திரங்கள் கிடைத்தால் திருமுறைகள் கிடைக்காது. இது கிடைத்தால் அது கிடைக்காது. அது கிடைத்தால் இது கிடைக்காது. எல்லாம் ஒருசேரக் கிடைக்காது. அரைகுறையாகவே கிடைக்கும். இது நீண்டகால நிலை, தமிழ்நாட்டின் தலையெழுத்து. ஒருநாள் இதற்கு ஒரு மாற்றமும் வந்தது. ஏமாற்றம் நீங்கியது. எல்லாமே ஒருசேரச் செட்டாகக் கிடைத்தன, குறைந்தவிலையில் மலிவு விலையில் கிடைத்தன. திருமுறைகள் 12, சித்தாந்தசாத்திரங்கள் 14, பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் ஆகிய முப்பெரும் புராணங்கள், திருக்குறள் உரைக்கொத்து மூன்று புத்தகங்கள் ஆக 12+14+3+3 = 32-ம் இவற்றோடு இன்னும் சிலவும் சேர்ந்து 32-க்கும் அதிகமாக, எல்லாம் ஒரே செட்டாகக் கிடைத்தன. விலை குறைவு, மலிவு. எல்லாம் சேர்ந்து 263 ரூ 50 காசுதான். எங்கே என்கிறீர்களா? இந்த மணிவிழாவில்தான். காசிவாசி கயிலைமாமுனிவரின் மணிவிழாவில்தான். ஏனைய எல்லாச் சிறப்புகளிலும் இந்த ஞானதானம்தான் பெருஞ்சிறப்பு. சைவ உலகின் வரலாற்றில் இப்படி எல்லா நூல்களும் ஒன்றாகக் கிடைத்தது என்றுமே இல்லை. கயிலைமாமுனிவரின் இம்மணிவிழாவில் நூற் பஞ்சம் தீர்ந்தது. அன்று இதை மேடையிற் கூறிப் பாராட்டினோம். இன்று அதை இங்கே பதிவு செய்கிறோம்.

குருமகாசந்நிதானங்கள் பலரின் தரிசனம், ஆசிபெறுதல், மெய்யன்பர்கள் பலர் சந்திப்பு, அளவளாவல்; அறுசுவை விருந்து, கை நிறையக் குறைந்த விலைக்கு மலிவு விலைக்குப் புத்தகங்கள் எல்லாம் ஒன்றாகக் கிடைத்தன. கண் நிறைந்தது, காதுகள் நிறைந்தன. வயிறு நிறைந்தது, மனம் நிறைந்தது. எல்லாமே நிறைந்தன. கயிலைமாமுனிவர் வாழ்க!

கிளைமடங்கள்

காசியில் கேதார கட்டத்தில் முதன்முதலில் நிறுவப் பெற்ற குமாரசாமி மடம் மூலமடம். அதன் தலைவர்கள் "மகந்த்" என்று வழங்கப்பெறுவர். திருப்பனந்தாளின் 1720-இல்

அமைக்கப்பெற்ற காசிமடம், அமைக்கப்பெற்ற காலத்தில் வாரணாசி மடத்தின் கிளைமடம் என்று சொல்லவேண்டும். இப்போது தலைமை நிலையமாக ஆகிவிட்டது. இதன் தலைவர்களை அதிபர் என்று வழங்குவது வழக்கம். எஜமான் சுவாமிகள் என்று பணியாளர்கள் கூறுவர். திருப்பனந்தாள் காசிமடத்தின் அதிபர் வாரணாசி (காசி) குமாரசாமி மடத்திற்கு மகந்த்தும் ஆவார்.

சிதம்பரம் (காசிமடம் தெருவில்)
இராமேஸ்வரம் (சந்நிதி வீதியில்)
ஆச்சிராமம் (நாகர்கோயில் - சுசீந்தரம் இவற்றின் இடையில்)
திருலோக்கி (திருவிசைப்பாப் பாடல்பெற்ற தலம்)
பைங்காட்டூர் (மன்னார்குடி அருகில்)
நீலப்பாடி (திருவாரூர் மாவட்டம்)
கீழ அய்யனார்குடி

ஆகிய இடங்களில் கிளைமடங்கள் உள்ளன. சிறப்பாகப் பராமரிக்கப் பெறுகின்றன. பணி செய்கின்றன.

கோயில்கள்

கேதாரீஸ்வரர் கோயில்	வாரணாசி (காசி)யில் கங்கைக் கரையில் கேதாரத்துறையில் (கேதாரகட்டத்தில்) உள்ளது. குமாரசாமி மடத்திற்குச் சொந்தமானது. தமிழ்நாட்டு முறைப்படி வழிபாடு.
விசுவநாதர் கோயில்	திருப்பனந்தாளில் காசிமடத்திற்குள் உள்ளது.
வெள்ளை விநாயகர் கோயில்	திருப்பனந்தாளில் காசிமடத்திற்குள் குளத்தின் நடுவில் வடஇந்தியக் கலை மரபில் கட்டப்பெற்றது. விநாயகர் - வெண்பளிங்குச் சிலை.

விநாயகர் கோயில்கள்	திருலோக்கி, ஐயனார்குடி, மணிக்குடி, பாண்டியபுரம் இப்படி இன்னும் சில ஊர் களில் உள்ளவை.
சிவன்கோயில்	பட்டம் (தஞ்சாவூர் மாவட்டம், செல்லியம்மன் கோயில், மாரியம்மன்கோயில், காளி யம்மன் கோயில், அய்யனார் கோயில், பிடாரி கோயில், - பைங்காட்டூர் (தஞ்சை மாவட்டம்).

காசியிலும் திருப்பனந்தாளிலும் மடத்தைச் சேர்ந்தும், மடத்திற்குள்ளும் இருக்கும் கோயில்கள் ஓரளவு பெரிய கோயில்கள். மடத்திற்குச் சொந்தமானவை. பிற கோயில்கள் சிறு கோயில்கள், மடத்திற்கு நிலங்கள் உள்ள ஊரில் இருப்பவை, பொதுக்கோயில்கள். ஆனால் இவர்கள் பராமரிப்பில் நடந்து வருபவை.

கல்வி நிலையங்கள்

திருப்பனந்தாளில் ஒரு கலைக்கல்லூரி,
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாதசுவாமிகள் கலைக்கல்லூரி.

திருப்பனந்தாளில் மெட்ரிக்குலேஷன் பள்ளி,
ஆசிரியப் பயிற்சி நிறுவனம்.

ஸ்ரீவைகுண்டத்தில் ஒரு கலைக்கல்லூரி,
ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் கலைக்கல்லூரி

இன்னும் இவ்வாறு சில.

காசிமடத்தின் அன்னதானம்

காசி அன்னபூரணித் தலம். காசியில் அன்னதானம் சிறப்பு. காசியில் குமாரசாமி மடமும் திருப்பனந்தாளில் காசிமடமும் ஏற்பட்ட காலங்களில் அரசர்கள் பலர் காசியில் அன்னதானம் செய்வதற்கென்றே முழுகிராமங்கள்

பலவற்றையும் ஏராளமான நிலங்களையும் இவ்விரு மடங்களுக்கும் எழுதி வைத்தனர்.

பண்டாரா

அடியார்களுக்கு அன்னம் பாலிப்பதை நாம் இங்கு மாகேஸ்வர பூசை என்கிறோம். வடநாட்டில் சாதுக்களுக்கு, துறவிகளுக்கு, அன்னம் பாலிப்பதைப் பண்டாரா என்பர். பண்டாக்களுக்கு, பண்டாரங்களுக்கு அன்னம் பாலிப்பது பண்டாரா என்ற பொருளில் அமைந்திருக்கிறது. கோயில் பூசகர்கள், சாதுக்கள், வடநாட்டில் பண்டா என வழங்கப் பெறுவர். நமது நாட்டில் பண்டாரம் என்பதுபோல. வட நாட்டில் சாதுக்களுக்கு மதிப்பு அதிகம். ''சாது மகராஜ்'' என்பார்கள். நம் ஊர் யாசகர்களெல்லாம் அங்கே சென்றால் மகராஜ்கள் தாம். சாது வேடம் பூண்டு வடக்கே சென்று ஆறு மாதங்கள் பிச்சையெடுத்தால் பிரபு ஆகிவிடலாம். தமிழ்நாட்டு மடங்கள், துறவிகள், சாதுக்கள் மரபுக்கும் வடநாட்டு மடங்கள் துறவிகள் சாதுக்கள் மரபுக்கும் வேறு பாடுண்டு. வடநாட்டு மடங்களுக்குச் செல்வவளம் மிகுதி, மக்களிடையே மதிப்பும் மிகுதி, அரசியல் செல்வாக்கும் உண்டு, வடநாட்டில் மடாதிபதிகள் சிலர், தனிப்பட்ட துறவிகள் சிலர் பாராளுமன்ற உறுப்பினர்களாகவே உள்ளனர். இங்கே குன்றக்குடி அடிகளார் ஒருவர் மட்டுமே சட்டமன்ற மேலவை நியமன உறுப்பினராக இருந்தது ஒரு வியப்பு. இது வடக்கே சர்வசாதாரணம். அங்கே தேர்தலில் நின்று போட்டியிட்டே வெற்றி பெற்றிருக்கிறார்கள். மடங்களின் மரபு, துறவற மரபு, இங்கும் அங்கும் வேறுபட்டிருப்பது போன்று உணவுமுறையிலும் வேறுபாடுண்டு.

பொதுவாகவே வடநாட்டவரின் உணவுமுறை தமிழ்நாட்டு உணவுமுறைக்கு வேறுபட்டது. அங்கே இனிப்புப் பண்டங் களை உண்பது மிகுதி. காசி, ஹரித்துவாரம், ரிஷிகேசம், கேதாரம் முதலியவற்றில் வாழும் துறவிகள், பண்டாக்கள், சாதுக்கள், கோயில் பூசகர்களுக்கு உணவளிக்கும் பண்டாரா நம்நாட்டு மாகேஸ்வர பூசையைவிடச் செலவுமிக்கது. பூந்தி,

லட்டு, ஜாங்கிரி, ஜிலேபி போன்ற இனிப்புப் பண்டங்களே அங்கு முக்கிய (பிரதான) உண. /. கோதுமை ரொட்டி; பூரி மிகுதியாக வழங்கப்பெறும். ரொட்டி என்றால் பிஸ்கட் அன்று, சப்பாத்தி என்கிறோமே அதுபோன்றது. கோதுமை ரொட்டி. உருளைக்கிழங்கைப் பயன்படுத்துவது மிகுதி. அங்கே தயிர் மிகவும் கெட்டியாக இருக்கும், தகரத் தகட்டுக் கத்தியால் வெட்டி எடுப்பார்கள். பருகும் பானம் பெரிய குவளைகளில் வழங்குவார்கள். பால்வளம் மிகுதி. தயிரில் சர்க்கரை போட்டுக் கலக்கிக் கெட்டிமோராக வெள்ளரிப் பிஞ்சு நறுக்கிப்போட்டு, சமீபகாலமாகப் பனிக்கட்டித் துண்டுகளும்(ஐஸ்)போட்டுப் பெரிய தம்ளர்களில் கொடுப்பார்கள். வடநாட்டுப் பண்டாராவை ஏழைகள் செய்ய இயலாது. செல்வர்களே செய்யஇயலும், தமிழ்நாட்டு மகாராஜாக்கள், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருவாங்கூர் மகாராஜாக்கள் போன்றவர்களே வடக்கே சாது மகராஜ்களுக்கு பண்டாரா நடத்த இயலும். அதுவும் தஞ்சை மன்னர் ஒரு சரபோஜி கொண்டு சென்ற பணம் போதாமல் குமாரசாமி மடம் மகந்த் அவர்களிடம் கடன் வாங்கியிருக்கிறார் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்.

காசிக் குமாரசாமி மடத்தில் பண்டாரா அடிக்கடி நிகழும். குருபூஜைநாளிலும் விழாக்காலங்களிலும் நிகழும். அதிபர் சுவாமிகள் கயிலைமாமுனிவர் தாமே நேரில் இருந்து பண்டாராவை நடத்துவார்கள். உண்பவரின் மனம் மகிழ நடத்துவார்கள். பண்டாரா முடிந்ததும் உண்டவரின் மனம் நிறைவு பெற்றதா என்பதை அவர்களின் முகக்குறிப்பால், மகிழ்ச்சியால் முகம் பொலிவதைக் கொண்டு, கண்டு மகிழ்வார்கள்.

பிராமண போஜனம்

காசி இராமேஸ்வரம் போன்ற தலங்களில் பிராமண போஜனத்திற்கு மதிப்பு மிகுதி. பிராமணபோஜனத்திற்கென்றே அந்நாளில் அரசர்கள் சொத்துகளை எழுதிவைத்திருக்கிறார்கள். பிராமணர்கள் கல்வியாளர்கள், மூளை உழைப்பாளிகள், அறிவு

ஜீவிகள். அதனால் அவர்களுக்கு உடலுழைப்புத் தொழில் விதிக்கப்பெறவில்லை. அந்தணர் கல்வித்துறை (எஜுகேஷன்). அரசர் - காவல்துறை (அட்மினிஸ்டிரேஷன்). வணிகர் - வணிகத்துறை (காமர்ஸ்). வேளாளர் - வேளாண்மை, தொழில் துறைகள் (அக்ரிகல்ச்சர், இண்டஸ்டரி). இதுதான் அக்காலத்திய சாதிப்பிரிவு. தொழிலால் ஏற்பட்ட சாதிப்பிரிவு பிற்காலத்தில் பிறப்போடு பின்னிக்கொண்டது. பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற பிரிவுக்கு மதிப்பு மிகவும் குறைந்து விட்டது. பார்வேர்டு, பேக்வேர்டு, மோஸ்ட் பேக்வேர்டு, ஷெடியூல்டு என்ற புதிய நால்வருணத்திற்கு மதிப்பு மிகவும் மிகுந்து விட்டது. கல்வி என்பது முற்காலத்தில் வேத உபநிடத ஆகம புராண இதிகாச நீதிநூற் கல்வியே. இவற்றில் முழுக்க முழுக்க ஈடுபட்டுள்ள அந்தணர்கள் சோற்றுக்குக் கவலை யின்றிக் கல்வி, பண்பாட்டுத்துறையிலேயே கவனஞ் செலுத்த வேண்டும். பார்ப்பார் சாதுவாக இருந்து கல்விப்பணி செய்ய வேண்டும். பசு சாதுவானது. பால்வளம் நல்குவது, தாய்ப் பாலுக்கு அடுத்துப் பசுவின்பால். இத்தகைய காரணங்களால் பார்ப்பாருக்கும் பசுவுக்கும் கொடுப்பது புண்ணியமாகக் கருதப்பெற்றது.

காசி குமாரசாமி மடத்திலும் திருப்பனந்தாள் காசிமடத் திலும், இராமேஸ்வரம் கிளைமடத்திலும் இன்றும் பிராமண போஜனம் உண்டு, நாள்தோறும் நிகழும். விழாக்காலங்களில் சிறப்பாக நிகழும்.

மாகேஸ்வர பூஜை

மாகேஸ்வர பூசை - அடியார்களுக்கு அன்னமளித்தல். மாகேஸ்வர பூஜையைப் பற்றித் திருவாவடுதுறையாதீன வரலாற்றில் ஓரளவு கூறியுள்ளோம். அவற்றை ஈண்டு நினைவு கொள்ளவேண்டும்.

அன்னம்பாலிப்பு, அன்னதானம்

அன்னம்பாலிப்பு, அன்னதானம் இவ்விரண்டிற்கும் சிறிது வேறுபாடுண்டு. விருந்தினர்களுக்கும் பொதுவாக அனை

வருக்கும் வழங்குவது அன்னம்பாலிப்பு. வறியவர்களுக்கு, ஏழைகளுக்கு, எளியவர்களுக்கு வழங்குவது அன்னதானம். வழங்கப்பெறுவோர் தரத்தில்தான் வேறுபாடு. வழங்கப் பெறும் உணவில் (உணவின் தரத்தில்) வேறுபாடில்லை. மடத்திற்கு, சத்திரத்திற்கு, சங்கங்களுக்குப் பலர் வருகிறார்கள். வரும் எல்லா வகையாருக்கும் வழங்குவது அன்னம் பாலிப்பு, கோயில், மடம், சத்திரம், சாவடி, சங்கங்களுக்கு உள்ளே வராது, உள்ளே நிகழும் நிகழ்ச்சிகளைக் கவனியாது, கலந்து கொள்ளாது, வெளியே நின்று பிச்சை ஏற்கும் யாசகர்களுக்கு வழங்குவது அன்னதானம்.

துறவிகளுக்கு, அடியார்களுக்கு - மாகேஸ்வர பூசை
சாதாரணமாக அனைவருக்கும் - அன்னம்பாலிப்பு
ஏழை, எளியவர், வறியவர், யாசகர்களுக்கு - அன்னதானம்.

இவ்வேறுபாட்டை இவ்வளவு நுண்ணிதின் உணரவேண்டும். பசி அனைவருக்கும் ஒன்றே. உணவில் வேறுபாடு கூடாது. வேறுபாடு வழங்கப்பெறுவோரின் நிலை, ஒழுக்கத்தரம், இவற்றில் மட்டுமே.

காசிமடத்தில் வடக்கே பண்டாராவும், பிற எல்லா இடங் களிலும் மாகேஸ்வர பூசை, அன்னம்பாலிப்பு, அன்னதானங் களும் நிகழும். இவற்றில் கலந்து கொள்வோரின், இவற்றால் பயன்பெறுவோரின், இவற்றில் உண்டு மகிழ்வோரின் அக மகிழ்வை அவர்களின் முகங்களிற்கண்டு மகிழ்வர் காசிமடத்து அதிபர்கள். அதில் தற்போதிய அதிபர் கயிலைமாமுனிவர் மிகவும் சிறந்தவர்.

குமரகுருபரர் இலக்கிய ஆய்வு மாநாடு – வாரணாசி 1999

குமரகுருபரர் ஆய்வு மாலை

தமிழ் உலகில் இது ஆய்வுக்காலம். மாநாட்டுக்காலம். ஆய்வு மாநாடுகள் பல ஆங்காங்கே கூட்டப்பெறுகின்றன.

திருப்பனந்தாள் காசித்திருமடமும் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஓலைச்சுவடித் துறையும் இணைந்து

நடத்திய குமரகுருபரர் இலக்கிய ஆய்வுமாநாடு வாரணாசியில் (காசியில்) குமரகுருபரரால் நிறுவப்பெற்ற குமாரசாமி மடத்தில் 1999 அக்டோபர் 4; 5; 6 மூன்று நாள்களில் நிகழ்ந்தது. மாநாட்டிற் கலந்து கொண்ட பேராளர்களுக்கும் பார்வை யாளர்களுக்கும் மூன்று நாள் காசியில் தங்கித் தரிசிக்கும் புண்ணியம் கிடைத்தது. மாநாட்டின் பயனாகக் குமரகுருபரர் ஆய்வுமாலை 3 தொகுதிகள் (283 கட்டுரைகள், 2114 பக்கங்கள் கொண்டது) தமிழ் உலகுக்குக் கிடைத்தது. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஓலைச்சுவடித்துறைத் தலைவர் முனைவர் த.கோ. பரமசிவம், பேராசிரியர் வே.இரா. மாதவன், ஆய்வாளர் மோ. கோ. கோவைமணி, திருப்பனந்தாள் ம.வே. பசுபதி ஆகிய நால்வரும் பதிப்பாசிரியர்கள். இம் மாநாட்டின் செலவுகளுக்காகக் கணிசமான ஒரு தொகையைக் காசித்திருமடத்து அதிபர் சுவாமிகள் மாநாட்டு ஏற்பாடு களின் தொடக்கத்திலேயே வழங்கியருளினார்கள். மாநாட்டு நிறைவில் வரவு செலவுக் கணக்குகளைப் பார்க்கும்போது ரூ. 50,000 (ஐம்பதாயிரம்) எஞ்சிற்று. அதிபர் சுவாமிகள் முன்னதாகவே பணம் கொடுத்ததால், பின்னால் இவ்வளவு தொகை எஞ்சுவதாயிற்று. எஞ்சிய தொகையைத் தாம் முன்னர் வழங்கிய தொகைக்கு ஈடாக அதிபர் சுவாமிகள் எடுத்துக் கொள்ளவில்லை. எஞ்சிய ஐம்பதாயிரத்தையும் அப்படியே ஓர் அறக்கட்டளையாகத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நிறுவிவிட்டார்கள். **காசிமடத்து அதிபர்கள் அறக் கட்டளை மன்னர்கள் என்பதை இதிலும் காண்பித்து விட்டார்கள்.**

"காசி குமரகுருபரர் மாநாட்டு நினைவு அறக்கட்டளை" என்ற பெயருடன் இவ்வறக்கட்டளை (ரூ. 50,000/-) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஓலைச்சுவடித்துறையில், திருமுறை நிகழ்ச்சிகள், நூல் வெளியீடு, கருத்தரங்குகள், சுவடிப் பாதுகாப்பு எனப் பல்வகைச் செலவுகளுக்கும் பயன் படுத்திக் கொள்ளுமாறு நிறுவப்பெற்றது. இவ்வறக்கட்டளை யின் தொடக்கவிழா 26.03.2002-இல் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள்

வரவேற்புரை, கயிலைமாமுனிவர் காசிவாசி சுவாமிகள் தொடக்கவுரை, சன்மார்க்கப் பேரொளி தவத்திரு ஊரன் அடிகளார் வாழ்த்துரை, திருமுறைக் கலாநிதி இசைப்பேறறிஞர் தருமபுரம் ப. சுவாமிநாதனின் திருமுறை இசை ஆகியவற்றுடன் இனிது நிகழ்ந்தது.

பெரியபுராண ஆய்வு மாநாடு திருப்பனந்தாள் காசித் திருமடமும் களம்பூர் கோவிந்தசாமி அடிகளார் அறக் கட்டளையும் இணைந்து வாரணாசியில் 2001 நவம்பர் 5; 6; 7 தேதிகளில் நடத்தப்பெற்றது. மாநாட்டுக் கட்டுரைகள் 225 தொகுக்கப்பெற்றுப் பெரியபுராண ஆய்வுமாலை 2-தொகுதிகள் (755 பக்கங்கள்) வெளிவந்தன. த.கோ. பரமசிவம், வே.இரா. மாதவன், ப. அருள்நமச்சிவாயன், கோ.ப. நல்லசிவம் ஆகிய நால்வரும் பதிப்பாசிரியர்கள்.

காசியில் அருளிலக்கிய ஆய்வு மாநாடுகள் (1999 முதல் 2008 வரை)

மேற்கூறிய இரண்டு மாநாடுகளைத் தொடர்ந்து ஆண்டு தோறும் ஒரு மாநாடாக இதுவரை மொத்தம் எட்டு மாநாடு களைத் திருப்பனந்தாள்காசிமடத்தினர் வாரணாசி குமாரசாமி மடத்தில் நடத்தியிருக்கிறார்கள். ஒவ்வொரு மாநாட்டிலும் அந்த அந்த ஆய்வுமாலை வெளியிடப்பெற்றுள்ளது. எல்லா வற்றையும் பட்டியலிட்டால்

1999 குமரகுருபரர் இலக்கிய ஆய்வு மாநாடு - மே 30, ஜுன் 1, 2.
குமரகுருபரர் ஆய்வு மாலை - 3 தொகுதிகள் வெளியீடு

2001 பெரியபுராண இலக்கிய ஆய்வு மாநாடு - நவம்பர் 5; 6; 7
பெரியபுராண ஆய்வு மாலை - 2 தொகுதிகள் வெளியீடு

2002 திருஞான சம்பந்தர் இலக்கிய ஆய்வுமாநாடு - நவம்பர் 30,டிசம்பர் 1; 2
திருஞானசம்பந்தர் ஆய்வுமாலை - 2 தொகுதிகள் வெளியீடு

2003 திருநாவுக்கரசர் இலக்கிய ஆய்வு மாநாடு - செப்டம்பர் 24; 25; 26

திருநாவுக்கரசர் ஆய்வு மாலை - 2 தொகுதிகள் வெளியீடு

2004 காசியில் குமாரசாமி மடத்தில் திருப்பணி வேலைகள் நடைபெற்றதால் மாநாடு நடத்தப் பெறவில்லை.

2005 சுந்தரர் இலக்கிய ஆய்வு மாநாடு - டிசம்பர் 7; 8; 9

சுந்தரர் ஆய்வு மாலை - 2 தொகுதிகள் வெளியீடு

இம்மாநாட்டில் நாம் (ஊரன் அடிகள்) அமர்வுத் தலைவராகக் கலந்து கொண்டோம்.

2006 மாணிக்கவாசகர் இலக்கிய ஆய்வு மாநாடு - நவம்பர் 3; 4; 5

மாணிக்கவாசகர் ஆய்வு மாலை - 2 தொகுதிகள் வெளியீடு

2007 ஒன்பதாம் திருமுறை & திருமந்திர ஆய்வு மாநாடு - அக்டோபர் 29; 30; 31

ஒன்பதாம் திருமுறை, திருமந்திர ஆய்வுமாலை - 2தொகுதிகள் வெளியீடு

2008 பதினோராம் திருமுறை ஆய்வு மாநாடு - நவம்பர் 10; 11; 12

பதினோராம் திருமுறை ஆய்வுமாலை - 2 தொகுதிகள் வெளியீடு

இவ்வாறு எட்டு மாநாடுகள் காசியில் நடந்துள்ளன. இவை தவிர இரண்டு மாநாடுகள் ரிஷிகேசத்தில் நடத்தப் பெற்றுள்ளன.

தமிழ் உணர்த்தும் பக்தி - ஆய்வு மாநாடு - 2005 மே 5; 6; 7

தமிழ் உணர்த்தும் பக்தி - ஆய்வு மாலை - 3 தொகுதிகள் (2 தமிழ், 1 ஆங்கிலம்) வெளியீடு

இந்திய மெய்ஞ்ஞானம் - பண்பாட்டு ஆய்வு மாநாடு - 2008 ஜுன் 1; 2; 3

இந்திய மெய்ஞ்ஞானம் - பண்பாட்டு ஆய்வு மாலை
2 தொகுதிகள் (இரண்டுமே தமிழ்)

காசி மாநாடுகள் அனைத்தும் திருப்பனந்தாள் காசித் திருமடத்தாலும், மடத்துடன் இணைந்து தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஓலைச்சுவடித் துறைத்தலைவர் த.கோ. பரமசிவம் அவர்களாலும் நடத்தப் பெற்றவை. பரமசிவனார் அமரராகிவிட்டபின் சில மாநாடுகள் களம்பூர் கோவிந்தசாமி சுவாமிகள் அறக்கட்டளை இணைந்து நடத்திற்று. நடத்தியவர் த.கோ. பரமசிவம் அவர்களின் திருமகனார் திரு. கோ.ப. நல்லசிவம் ஆவார். நல்லசிவம் திருப்பனந்தாள் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி, இப்போது தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருகிறார். தந்தையரர் பரமசிவனாரின் ஆய்வு மாநாட்டுப் பணிகளை அவருக்குப்பின் இவர் தொடர்ந்து செய்து வெற்றியை நிலைநாட்டியிருக்கிறார்.

ரிஷிகேசத்தில் நிகழ்ந்த மாநாடுகள் இரண்டும், திருப்பனந்தாள் காசித்திருமடமும், கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைகட்டியில் உள்ள ஆர்ஷவித்யா குருகுலத்தின் அதிபர் சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்களும் இணைந்து நடத்தினார்கள். ரிஷிகேசத்தில் தயானந்த சுவாமிகளது ஆசிரமத்திலேயே இவ்விரு மாநாடுகளும் நிகழ்ந்தன. பேராசிரியர் கோ.ப. நல்லசிவனாரே அமைப்பாளராக இருந்து இம்மாநாடுகளைச் சிறப்பாக நடத்தினார்.

காசியில் நிகழ்ந்த ஒரு மாநாட்டில் நாம் கலந்து கொண்டோம். ஆய்வு மாலைகளில் ஒன்றைதவிர பிற அனைத்திலும் எமது ஆய்வுக்கட்டுரை உண்டு.

குமரகுருபரரில் தொடங்கிப் பன்னிருதிருமுறைகளுக்கும், தமிழ் பக்தி, இந்திய மெய்ஞ்ஞானத்திற்கும் பத்து மாநாடு களை நடத்தி, ஆய்வுமாலை 22 தொகுதிகளை வெளியிட்டு, ஆய்வுலகுக்குப் பெருமை சேர்த்த நம் திருப்பனந்தாள் சுவாமிகளும் நல்லசிவமும் சைவத்தமிழுலகின் பாராட்டிற் குரியவர்கள்.

ஆதி குமரகுருபர சுவாமிகள் 320-ஆவது ஆண்டு மாகேசுவர பூஜைத் திருநாள் அன்னம்பாலிப்பு - 2008

குருமார்களின் நினைவுநாள் குருபூஜை எனக் கொண்டாடப் பெறும். ஏனைய ஆதீனங்களில் மடங்களில் குருபூஜையே. காசிமடத்தில் மட்டும் ஆதிகுமரகுருபரர் நாளை குருபூஜை எனக்கொண்டாடாமல் ''மாகேசுவர பூஜைத் திருநாள்'' எனக் கொண்டாடுகிறார்கள். அன்று நாடெங்கும் பல ஊர்களில் நிகழும் மாகேஸ்வரபூஜையை அன்னம்பாலிப்பு என்றே அழைப்பிதழில் குறிப்பிடுகிறார்கள். 22.05.2008-இல் நிகழ்ந்த ஆதிகுமரகுருபர சுவாமிகள் 320-ஆம் மாகேஸ்வர பூஜைத் திருநாள் அழைப்பிதழில் ''2008-ஆம் ஆண்டு ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் நினைவுநாள் அன்னம்பாலிப்பு கீழ்க்கண்ட இடங்களுக்குத் தொகை அனுப்பப்பட்டுள்ளது'' என்று ஒரு பட்டியல் கொடுக்கப் பெற்றுள்ளது. அப் பட்டியலை அப்படியே கீழே தருகிறோம்.

2008-ஆம் ஆண்டு

ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் நினைவுநாள் அன்னம்பாலிப்பு கீழ்க்கண்ட இடங்களுக்குத் தொகை அனுப்பப்பட்டுள்ளது.

	ரூ.		ரூ.
வாரணாசி அன்னம்பாலிப்பு, பண்டாரா	2300	ஸ்ரீகாளஹஸ்தி	700
பிரயாகை	500	கும்பகோணம்	500
ஹரித்வார்	700	திருநள்ளாறு	500
ரிஷிகேசம்	500	காரைக்கால்	500
கேதாரம்	500	சுவாமிமலை	500
திருப்புகலூர்	500	திருவெண்காடு	500
திருவாரூர்	700	உத்தரகோசமங்கை	500
நாகப்பட்டினம்	500	சென்னை	500
தருமபுரம்	500	விருத்தாசலம்	500
திருவிடைமருதூர்	500	திருநெல்வேலி	500
திருவிசநல்லூர்	500	திருக்குற்றாலம்	500
காஞ்சிபுரம்	700	பவானி	500
திருக்கழுக்குன்றம்	700	அவிநாசி	500
திருக்கச்சூர்	500	திருவாடானை	500
திருவொற்றியூர்	500	திருப்பெருந்துறை (ஆவுடையார்கோயில்)	500
திருத்தணி	700	பேரூர்	500

திருப்பத்தூர்	500	திருவண்ணாமலை	700
பழைய பாபநாசம்	500	திருக்கோவிலூர்	500
கொடுமுடி	500	திருவானைக்கா	700
திருப்பாதிரிப்புலியூர்	500	விராலிமலை	500
புதுடெல்லி	500	திருக்கடவூர்	500
வடதிருவாலங்காடு	500	மயிலாடுதுறை	600
சீர்காழி	500	திருவையாறு	500
ஆச்சாள்புரம்	500	கஞ்சனூர்	500
திருமாகறல்	500	திருவீழிமிழலை	500
வைத்தீசுவரன்கோயில்	700	சிவகாசி	500
ஆக்கூர்	500	ஸ்ரீவைகுண்டம்	700
வேதாரண்யம்	500	காவிரிப்பூம்பட்டினம்	500
இராமேஸ்வரம்	500	திருஈங்கோய்மலை	500
சிதம்பரம்	500	திருச்செந்தூர்	500
தில்லைவாழ் அந்தணர் அன்னம்பாலிப்பு	500	பழனி	700
		திருப்பனந்தாள்	25000
ஆச்சிராமம்	500	சித்தோடு	500
கன்னியாகுமரி	700	அரியநாயகிபுரம்	500
மதுரை	500	கழுகுமலை	1000
திருப்பரங்குன்றம்	500		

70 இடங்கள், 64,300 ரூபாய். நிலங்களில் குத்தகை வருவாய் சரியாக வராத இப் பஞ்சகாலத்தில் கிடைத்ததைக் கொண்டு இந்த அளவுக்குச் செய்கிறார்கள். இமயம் முதல் குமரி வரை அகில இந்தியாவிலும் குமரகுருபரரின் அன்ன தானம் நடைபெறுகிறது.

20-ஆம் பட்டம் அதிபர் அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் நிறுவிய அறக்கட்டளைகளின் எண்ணிக்கை 526. அதன்பின் இப்போது 21-ஆம் பட்டம் அதிபராக விளங்கும் கயிலை மாமுனிவர் காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் தொடர்ந்து ஏற்படுத்தி வரும் அறக்கட்டளை களையும் சேர்த்து நாளிதுவரை அறக்கட்டளைகளின் மொத்த எண்ணிக்கை 810.

தற்போதைய அதிபர் கயிலைமாமுனிவர் அவர்கள் மலேசியா சிங்கப்பூர் இலங்கை தென்னாப்பிரிக்கா ஆகிய கடல் கடந்த நாடுகளுக்கும் சென்று விழாக்களிலும் மாநாடு களிலும் கலந்து கொண்டுள்ளார்கள்.

காசிமடம் என்பதைக் காசித்திருமடம் என்றும் ஸ்ரீலஸ்ரீ என்பதைத் திருவளர்திரு என்றும் ஸ்ரீமத் என்பதைத் தவத்திரு என்றும் மாற்றி வழங்கத் தொடங்கியுள்ளார்கள். இம்மாற்றம் 06.02.1996-இல் நிகழ்ந்த கல்லூரிப் பொன்விழாவின் போது அறிவிக்கப்பெற்றது.

திருவாவடுதுறை தருமபுரம் ஆகிய இருபெரு ஆதீனங் களுக்கு அடுத்தபடி மூன்றாவது பெரிய மடமாக விளங்குவது திருப்பனந்தாள் காசித்திருமடம். அதன் ஆதி மடமாகிய காசியிலுள்ள குமாரசாமி மடத்திற்கு நேபாளத்திலும் மோரங்கி என்ற இடத்தில் ஒரு கிளைமடம் முற்காலத்தில் இருந்தது பிற்காலத்தில் நேபாள அரசின் மாற்றங்களால் பரிபாலிக்க இயலாத நிலை ஏற்பட்டுக் கைவிட்டுப் போயிற்று.

தமிழகத்திலும் காசியிலும் அரியபெரிய பணிகளைச் செய்துவரும் திருப்பனந்தாள் காசித்திருமடம் அகில இந்திய மடம் எனக் கூறலாம்.

இளைய ஆதிபர்
ஸ்ரீமத் சுந்தரமூர்த்தித் தம்பிரான் சுவாமிகள்

தருமபுர ஆதீன அடியவர் திருக்கூட்டத்தில் ஒருவராகிய ஸ்ரீமத் சுந்தரமூர்த்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களைத் திருப்பனந்தாள் காசித் திருமடத்தின் இளைய அதிபராக, தருமபுர ஆதீன குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாசி யுடன், திருப்பனந்தாள் காசித்திருமடத்தின் அதிபர் கயிலை மாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அண்மையில் நியமனம் செய்தருளி யிருக்கிறார்கள்.

இவர்கள் தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி உடனுறை அமிர்தகடேசுவர சுவாமி திருக்கோயிலில் திருமுறைப்பணி செய்த அமரர் திருமுறைக் கலாநிதி தி. சாமிஐயா தேசிகர் திருமதி ஞானாம்பாள் இணையருக்கு 12.03.1953 வியாழக்கிழமையன்று பிறந்தார்கள்.

பெற்றோர்கள் இட்ட பெயர் குருமார்க்கண்டன். சிவகுரு என அனைவரும் அழைப்பர்.

இவர்கள் திருக்கடவூரில் பள்ளிப்படிப்பைப் பயின்று மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரியில் பி.எஸ்.சி. பட்டம் பெற்றார்கள். இந்திய இரயில்வே பணித் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பெற்று, தென்னக இரயில்வே கோட்ட அலுவலகத்தில் 1975 முதல் 1995 வரை இருபது ஆண்டுகள் கண்காணிப்பாளராகப் பணிசெய்து, தன்னார்வப்பணி ஓய்வு பெற்றபின் 1996-ஆம் ஆண்டு தருமை ஆதீனத்தில் அடியவராகச் சேர்ந்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாசியால் துறவு பூண்டார்கள்.

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் தேவஸ்தானம், திருநெல்வேலி தென்மண்டல கட்டளை போன்றவற்றில் கட்டளை விசாரணைப்பணி செய்து வந்தார்கள். தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மருத்துவ சிகிச்சை பெற்ற காலத்தில் தருமை ஆதீனத்தின் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானை அபிஷேக ஆராதனை செய்து வழிபாடு செய்யும் நற்பேறு பெற்றார்கள்.

தருமை ஆதீனம் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் நடத்திவந்த சைவ சித்தாந்தப் புலவர் வகுப்பில் நான்கு ஆண்டுகள் முறையாகப் பயின்று ''சைவ சித்தாந்தப் புலவர்'' பட்டம் பெற்றுள்ளார்கள்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் சைவ சமய தோத்திர சாத்திரக் கருத்துகளைச் சொற்பொழிவாற்றும் திறமும், தேவாரத் திருமுறைப் பாடல்களைப் பண் ஒன்ற இசை யுடன் பாடும் வல்லமையும் பெற்றவர்கள். இவர்கள் பாடுவதைக் கேட்டுத் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் தமது பாராட்டினைத் தெரிவித்திருக்கிறார்கள்.

தென்னாப்பிரிக்கா, சீசல்ஸ் போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று சமயப் பணியாற்றியவர்கள்.

2007-ஆம் ஆண்டு டர்பனில் நடைபெற்ற தென்னாப்பிரிக்கா சைவ சித்தாந்தக் கழகத்தின் 70-ஆம் ஆண்டு நிறைவு விழாவில் பத்துத் தினங்கள் சைவசமய தோத்திர சாத்திரங்களை ஆங்கிலத்தில் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தி அயல் நாட்டிலும் சைவ சமயப் பணியாற்றியவர்கள்.

2004-ஆம் ஆண்டு முதல் திருப்பனந்தாள் ஸ்ரீகாசித் திருமடத்தில் ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள் அவர்களுடன் இருந்து அணுக்கத் தொண்டு புரிந்து வருகிறார்கள். குரு பக்தியும் சைவ சமயப் பற்றும் தோத்திர சாத்திரப் பயிற்சியும் ஆங்கில மொழி அறிவும் நிர்வாகத் திறமையும் உடைய ஸ்ரீமத் சுந்தரமூர்த்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களை தற்போது ஸ்ரீகாசித் திருமடத்தின் வாரிசாக, இளைய அதிபராக நியமனம் செய்து ஆசி வழங்கியருளிய திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் தேர்வு அருமையான தேர்வு.

தக்கவர்கள் ஒருவர் இளைய அதிபராக அமைந்து விட்டார்கள். இவர்களும் நமக்குப் பல ஆண்டுகள் பழக்கமானவர்களே.

சூரியனார்கோயில் ஆதீனம்

சூரியனார்கோயில்

வடக்கே சூரியன்கோயில் கோணாரக்.
தெற்கே சூரியனார்கோயில்.

ஏனைய ஆதீனங்கள் நந்தி பரம்பரை,
சூரியனார்கோயில் ஆதீனம் ஒன்றுமட்டும்
கந்தபரம்பரை.

கயிலையில் சிவபெருமானிடம்
கந்தப்பெருமான் உபதேசம் கேட்டார்.
அந்த மரபில் கந்த பரம்பரையில்
வருகிறது இவ்வாதீனம்.

இதன் ஆதிகுருமார்கள்
காசியில் வசித்தவர்கள்.

சூரியனார்கோயில் ஆதீனம்

சூரியனார் கோயில்

சூரியனார் கோயில் என்ற ஊரில் உள்ளதால் இவ் வாதீனம் சூரியனார்கோயிலாதீனம் என்று பெயர் பெற்றது. சூரியனார்கோயில் என்ற கோயில் உள்ளதால் இவ்வூர் சூரியனார்கோயில் எனப்பெயர் பெற்றது. கோயிலால் ஊரும், ஊரால் ஆதீனமும் பெயர் பெற்றன.

கோயில் - சூரியனார்கோயில்
ஊர் - சூரியனார்கோயில்
ஆதீனம் - சூரியனார்கோயில் ஆதீனம்

எனவே கோயில் வரலாறு, ஊர் வரலாறு, ஆதீன வரலாறு என ஒவ்வொன்றாகக் காண்போம்.

சூரியனார்கோயில் - கோயில் வரலாறு

சூரிய வழிபாடு

சூரியவழிபாடு மிகப் பழைமையானது. உலகம் முழுவதும் பொதுவாக எல்லா நாடுகளிலுமே இருந்து வந்திருக்கிறது. இப்போதும் இருக்கிறது. வேதங்களில் சூரிய வழிபாடு சொல்லப் பட்டுள்ளது. எனவே வேதகாலப் பழைமை எனலாம். தொல்காப்பியத்தில் ''கொடிநிலை கந்தழி வள்ளி என்ற வடு நீங்கு சிறப்பின் முதலன மூன்றும் கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே'' என்ற சூத்திரத்தில் கொடிநிலை என்பது சூரியன், வள்ளி என்பது சந்திரன், கந்தழி என்பது ஒரு பற்றுக்கோடும் இன்றி அருவாகித் தானேநிற்கும் தத்துவங் கடந்த பொருள். ''இம்மூன்றையும் வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்று'' என்று சொல்லியுள்ள அருமையை அறியவேண்டும்.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும், ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் என்று சந்திர சூரியர்களைப் போற்றியே நூலைத் தொடங்குகிறார்.

அக்காலத்தில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் காவிரிப்பூம் பட்டினத்தில் கோயில்கள் இருந்தன. சூரியன் கோயில் ''பகல்வாயில் உச்சிக்கிழான் கோட்டம்'' என்றும், சந்திரன் கோயில் ''நிலாக்கோட்டம்'' என்றும் சிலப்பதிகாரத்திற் சொல்லப்பெறுகின்றன.

சூரியனையும் சந்திரனையும் இலக்கியங்கள் இருசுடர் என்று கூறும். இவ்விரண்டோடு அக்கினியையும் சேர்த்து முச்சுடர் எனத் தத்துவ நூல்கள் கூறும். சோம சூரிய அக்கினி என்பன முச்சுடர். சோமன் - சந்திரன். பிண்டமாகிய நம் உடலில் தலை (மூளைப்பகுதி) சோமமண்டலம் (சந்திர மண்டலம்), இருதயம் சூரியமண்டலம், மூலாதாரம் அக்கினி மண்டலம். அண்டமாகிய உலகத்திற்கு ஒளிதருவன சோம சூரிய அக்கினியாகிய முச்சுடர்களே. இம்முச்சுடர்களைப் பற்றிய பல இயற்கை உண்மைச் செய்திகள் வேதங்கள் முதலாக வள்ளலார் பாரதியார் வரை சொல்லப்பெற்றுள்ளன. ''ஓங்கிய அண்டம் ஒளிபெற முச்சுடர் ஆங்கிடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி'', ''முச்சுடர்களும் ஒளி முயங்குற அளித்தருள் அச்சுடராம் சபை அருட்பெருஞ்ஜோதி'', ''சூரிய சந்திர சோதியுட் சோதி என்(று) ஆரியர் புகழ்தரும் அருட் பெருஞ்ஜோதி'', என்பன வள்ளலாரின் அருட்பெருஞ்ஜோதி அகவல் வரிகள் (581-2; 63-4; 283-4).

முச்சுடர்களில் சூரியனும் சந்திரனும் உருவம். அக்கினி அருவம். அக்கினி அருவமாய், ஒரு சக்தியாய், கண்ணுக்குப் புலப்படாது விளங்கும். விறகு, காய்ச்சிய இரும்பு, விளக்குத் திரி போன்று ஏதாவது ஒரு பொருளைப் பற்றிக் கொண்ட நிலையிலேயே அக்கினி கண்ணுக்குப் புலனாகும். சூரியனும் சந்திரனும் சிவபெருமானுக்கு இருகண்கள். மூன்றாவது கண்ணாகிய நெற்றிக்கண் (ஞானக்கண்) அக்கினி. மக்களாகிய

நமக்கு வலக்கண் சூரியஅம்சம், இடக்கண் சந்திரஅம்சம் என்பது தத்துவம். புருவமத்தியில் அக்கினி அம்சமாகிய நடுக்கண் நமக்கு மூடப்பெற்றிருக்கிறது. குருஅருளால் அது திறக்கப்பெற்றால் திருஅருள் ஞானம் கிடைக்கும்.

எல்லா ஆற்றல்களிலும் பெரியஆற்றல் பேராற்றல் சூரிய ஆற்றல். எல்லாம் வல்ல பரம்பொருளாகிய இறை சூரிய ஆற்றலைக் கருவியாகக் கொண்டுதான் உலகத்தை இயக்கு கிறது. சூரியஆற்றல் இன்றேல் உலக இயக்கமே இல்லை. சூரியன் இன்றேல் உலக வாழ்வே இல்லை. எல்லாம் இருள்மயமாகவே இருக்கும், மழை இராது, பயிர்கள் தோன்றா, உயிர்கள் வாழா. கண்கண்ட ஒளிகளில் சூரிய ஒளியே பேரொளி. அதனால்தான் கண்கண்ட தெய்வமாகப் பண்டையோர் கொண்டாடினார்கள்.

கிரகங்களில் ஒளிமிகுந்தது சூரியன், ஒளி குறைந்தது சனி. சனி இருள் கிரகம். அதைச் சுற்றி ஒரு கருவளையம் இருக்கும். தெய்வங்களைச் சூழ்ந்து ஒளிவட்டம் இருக்கும். சனிக்கு மட்டும் கருப்பு வட்டம். சனிக்கு வாகனம் காக்கை, அதுவும் அண்டங்காக்கை, ஆடை கருப்பு, அணிகலன் இரும்பு (கரும்பொன்), மலர் கருங்குவளை, அன்னம் எள், சுவை கசப்பு. சனிக்கு எல்லாமே கருப்பு. காரி என்று பெயர். மந்தன், தாமதகுணம் உடையவன்.

சனியைவிட ஒளி மிகுந்தது வெள்ளி.

வெள்ளியினும் ஒளி மிகுந்தது வியாழன்.

வியாழனினும் ஒளி மிகுந்தது புதன்.

புதனினும் ஒளி மிகுந்தது செவ்வாய்.

செவ்வாயினும் ஒளி மிகுந்தது திங்கள் (சந்திரன்)

திங்களினும் ஒளி மிகுந்தது ஞாயிறு (சூரியன்)

அதனால்தான், அது கிழமை வரிசையில் முதலாவதாக உள்ளது. சனி கடைசியாக உள்ளது. ஒளிதான் எல்லா வற்றுக்கும் அளவுகோல். ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்

வியாழன் வெள்ளி சனி என்ற கிழமை வரிசையே ஒளியால் தான் அமைந்தது. ஆங்கில மரபிலும் சண்டே முதலாக சாட்டர்டே ஈறாக இதே வரிசைதான்.

கிரகங்களிலெல்லாம் ஒளி மிகுந்தது சூரியன்

சூரியனினும் ஒளி மிகுந்தது அக்கினி.

சூரியனுக்கு ஒளியையும் சூட்டையும் அக்கினியே கொடுக்கிறது.

சூரியனுக்கு அதிதேவதை அக்கினி.

அக்கினிக்கு ஒளியையும் சூட்டையும் கொடுக்கும் மூலம் எதுவோ அதுவே அருட்பெருஞ்ஜோதி.

கீழே சனிவழிபாட்டில் ஆழ்ந்துகிடக்கும் நாம் மேலே அருட்பெருஞ்ஜோதி வழிபாட்டுக்கு ஏறவேண்டும். ஏற்ற வந்தவர்தான் வள்ளலார்.

சூரியனும் சந்திரனும் சிவபெருமானை வழிபட்டுப் பேறுபெற்றன. சூரியன் வழிபட்ட தலம், சந்திரன் வழி பட்ட தலம் என்று சொல்லப்பெறுவதைக் காணலாம். சூரிய தீர்த்தம், சந்திரதீர்த்தம் என்பன சூரிய சந்திரர்கள் மூழ்கி வழிபட்டனவே. நவக்கிரகங்களும் இவ்வாறே சிவபெருமானை வணங்கிப் பேறு பெற்றன.

சிவபெருமானுக்குரிய அட்டமூர்த்தங்களில் சூரியனும் ஒன்று. அட்ட மூர்த்தங்களாவன : பஞ்சபூதங்கள் ஐந்தும், சூரியன், சந்திரன், இயமானன் (ஆன்மா) என்ற எட்டுமாம். சைவம் சூரியனைச் சிவசூரியன் எனும். ''அருக்கனாவோன் அரனுரு அல்லனோ'' என்கிறார் திருநாவுக்கரசர். சிவசூரியன் என்பதைவிடச் சூரியநாராயணன் என்பதே பெருவழக்கு. சைவத்தில் சூரியன் முழுமுதற்கடவுள் அல்லன்.

சூரியனை முழுமுதற் கடவுளாகக் கொள்வது ''சௌரம்'' எனத் தனி ஒரு சமயமாகவே கூறப்பெறும். சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணாபத்யம், கௌமாரம் என்பன பிற்காலத்திய அறுவகைச் சமயங்கள்.

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொள்வது **சைவம்.**

விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொள்வது **வைணவம்.**

சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொள்வது **சாக்தம்.**

சூரியனை முழுமுதற் கடவுளாகக் கொள்வது **சௌரம்.**

கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொள்வது **காணாபத்தியம்.**

குமரனை (முருகனை) முழுமுதற் கடவுளாகக் கொள்வது **கௌமாரம்.**

இவ் அறுவகைச் சமயத்தை முக்கியமாக விளக்கியவர் சங்கரர். சூரியனை நடுவில் வைத்து, நாற்புறமும் விநாயகர், விஷ்ணு, சக்தி, சிவன் ஆகிய நால்வரையும் வைத்து வழி படும் பஞ்சாயதன வழிபாடு எனும் ஒருமுறையும் சங்கரரால் விளக்கப்பெற்றது.

சிவன் கோயில்களில் சூரியன் பரிவார தெய்வங்களுள் ஒன்றாக விளங்கும். ஆன்மார்த்த சிவபூசையில் சூரியனுக்கும் ஓர் இடம் உண்டு. அந்தணர்கள் சூரிய நமஸ்காரத்தை முக்கிய மாகக் கொள்வர். காலை உச்சி மாலைப் போதுகளில் சந்தியா வந்தனம் எனச் செய்வது சூரிய வழிபாடே. உண்மையில் சூரிய வழிபாடு, சூரிய நமஸ்காரம், சந்தியாவந்தனம் என்பது சூரிய ஆற்றலை நம் பொறிபுலன்களால், மூச்சால், உள்ளத்தால், உள்வாங்கிக் கொள்வதே, உட்கொள்வதே, வயப்படுத்திக் கொள்வதே ஆகும்.

சூரிய ஆற்றலால் இருப்புப்பாதை நிலையக் கைகாட்டி உயர்வதைக் காண்கிறோம். சூரிய ஆற்றலால் தண்ணீரை வெந்நீராக்கிக் கொள்கிறோம். சூரிய ஆற்றலால் வருங் காலத்தில் கார்கள் ஓடப்போகின்றன என்கிறோம். சூரிய ஆற்றல் இன்னும் என்னென்னவெல்லாமோ செய்யும். சூரிய ஆற்றலைப் பற்றி இன்றைய விஞ்ஞானிகள் அறிந்துகொண் டுள்ளதைவிட அதிகமாகவே அன்றைய ஞானிகள் அறிந்து கொண்டுள்ளனர், அதில் ஓரளவு கூறியும் உள்ளனர்.

நேரே சூரியனைக் கண்ணால் கண்டு வழிபடுவது ஒருமுறை. அவனுக்குக் கோயில்கட்டி உருவம் வைத்து வழி படுவது ஒருமுறை. அந்நாளைய அரசர்கள் பலர் தங்களைச் சூரியவம்சம் என்று சொல்லிக் கொண்டார்கள். இராமர் சூரியவம்சம். சோழமன்னர்கள் சூரியவம்சம். ஜப்பானிய சக்கரவர்த்திகளும் சூரியவம்சம் என்று சொல்லிக் கொண்டார்கள். சூரிய வழிபாட்டுக்காக மன்னர்கள் கோயில் களைக் கட்டினார்கள்.

இந்தியாவில் சூரியனுக்காகக் கட்டப்பெற்ற தனிக் கோயில்களில் சிறந்தவை நான்கு.

காஷ்மீரத்தில் மார்த்தாண்டர் கோயில் - 8-ஆம் நூற்றாண்டு

பரோடாவில் ஜோதிபுரி (ஜோத்பூர்) அருகில் ஓசியா என்ற இடத்தில் - 11-ஆம் நூற்றாண்டு

ஒரிசாவில் புரி (பூரி)க்கு அருகில் **கோணாரக்** - 13-ஆம் நூற்றாண்டு

தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் **சூரியனார்கோயில்** 12-ஆம் நூற்றாண்டு.

சூரியனார்கோயில்

தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் மயிலாடுதுறை சாலையில் திருவிடைமருதூருக்கு அருகில் திருமங்கலக்குடி என்னும் பாடல்பெற்ற தலம் உள்ளது. காவிரி வடகரைத் தலம். திருவாவடுதுறை ஆதீனக்கோயில். அத் திருமங்கலக் குடிக்கு அடுத்தாற்போல் அதை ஒட்டி உள்ளதே சூரியனார் கோயில் என்ற ஊர். திருமங்கலக்குடிக் கோயிலுக்கும் சூரியனார்கோயிலில் உள்ள கோயிலுக்கும் இடையே உள்ள தூரம் ஒரு கிலோமீட்டர் தான். சூரியனார்கோயிலும் திருவாவடுதுறை ஆதீனக் கோயிலே. அருகிலுள்ள தலம் ஆடுதுறை (தென்குரங்காடுதுறை). பாடல்பெற்ற தலம். அண்மைக் காலத்தில் வேளாண்மைப் பண்ணையால் புகழ் பெற்றது. அதற்கு அருகிலுள்ள தலம் திருப்பனந்தாள். பாடல் பெற்ற தலம். காசிமடம் உள்ள தலம். திருப்பனந்தாள்,

ஆடுதுறை, திருமங்கலக்குடி, சூரியனார்கோயில் ஆகிய நான்கும் அடுத்தடுத்து ஒருவரிசையில் உள்ளன.

தமிழ்நாட்டில் சூரியனுக்கென்று அமைந்த தனிக்கோயில் சூரியனார்கோயில் ஒன்றே. நடுவில் சூரியன்கோயில் பெரிதாகவும், சுற்றிலும் மற்ற எட்டுக் கிரகங்களுக்கும் சிறு சிறு தனிக்கோயில்களும் அமைந்துள்ளன. நவக்கிரகத்தலம். அண்மைக்காலமாக மிகவும் புகழ் பெற்றுச் செல்வநிலை யிலும் பிறநிலையிலும் ஓங்கிவருகிறது. வழிபடும் மக்கள் கூட்டம் பெருகிவருகிறது. சூரியனார்கோயிலுக்கு அருக்கவனம் என்பது புராணப்பெயர். அருக்கன் என்றால் சூரியன். அருக்கம் என்றால் வெள்ளெருக்கு. வெள்ளெருக்கமரம் இங்கே தல விருட்சம். கோணார்க் என்ற பெயரில் அர்க் என்பது அருக்கன், சூரியன். அருகில் உள்ள மற்ற இரு கோயில்களுடன் கோணத்தில் அமைந்திருப்பதால் கோணஅர்க்கம் - கோணாரக் என்று பெயர் பெற்றது. வடக்கே ஒரிசாவில் புகழ்பெற்ற சுற்றுலாத்தலம் கோணார்க் கலைப்புகழ், சிற்பப்புகழ். தெற்கே தமிழ்நாட்டின் புகழ்பெற்ற யாத்திரைத் தலம் சூரியனார் கோயில் நவக்கிரகப் புகழ், வழிபாட்டுப் புகழ். முதற் குலோத்துங்கசோழனால் கட்டப்பெற்ற கோயில். முதற் குலோத்துங்கன் காலம் கி.பி. 1079 - 1120. வடக்கே உள்ள கோணாரக் கங்கமன்னன் முதலாம் நரசிம்மனால் 1250-இல் கட்டப்பெற்றது. எனவே நம் சூரியனார்கோயில் ஒரிசா கோணார்க் கோயிலுக்கும் காலத்தால் முற்பட்டது.

சூரியனார்கோயில் ஆதீனம்

சூரியவழிபாட்டைப் பற்றியும் சூரியனார்கோயிலைப் பற்றியும் இதுவரை ஓரளவு விரிவாகக் கூறினோம். சூரிய வழிபாட்டிற்கும் சூரியனார்கோயில் ஆதீனத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. முழுக்க முழுக்க இது ஒரு சைவ ஆதீனம். சூரியனார்கோயில் என்ற ஊரில் உள்ளதால் சூரியனார்கோயில்ஆதீனம் எனப் பெயர்பெற்றது. ஏனைய ஆதீனங்களைப் போல இதுவும் திருக்கயிலாய பரம்பரை

தான். ஆனால் திருக்கயிலாய பரம்பரையிலேயே இது ஒரு தனிப்பரம்பரை. இதன் சந்தானம் வேறு.

கயிலாயத்தில் சிவபெருமானிடம் நந்தியம்பெருமான் உபதேசம் பெற்றார். நந்தியம்பெருமானிடம் சனகாதிநால்வர் உபதேசம் பெற்றனர். அகச்சந்தான குரவர் புறச்சந்தான குரவர் என்று இவ்வுபதேச மரபு வளர்ந்தது. இது நந்தி பரம்பரை, மெய்கண்டசந்தானம். இதன் வழியியல்தான் திருவாவடுதுறை, தருமபுரம், முதலிய ஆதீனங்களெல்லாம் வருகின்றன.

சிவபெருமானிடம் நந்தியம்பெருமான் உபதேசம் பெற்றதைப்போன்றே **கந்தப்பெருமானும்** உபதேசம் பெற்றார். கந்தப்பெருமானிடம் வாமதேவ மகரிஷி உபதேசம் பெற்றார். வழிவழியாகப் பலர் உபதேசம் பெற்றார்கள். இந்த உபதேச மரபில் வருவதுதான் சூரியனார்கோயில் ஆதீனம். கந்தப் பெருமானின் உபதேச மரபில் வருவதால் **ஸ்கந்த பரம்பரை** என்று வழங்கப்பெறும். கந்தப் பெருமானிடம் உபதேசம் பெற்ற வாமதேவ மகரிஷியின் வழியில் வருவதால் **வாமதேவ சந்தானம்** என்றும் வழங்கப்பெறும்.

ஏனைய ஆதீனங்களெல்லாம் திருக்கயிலாய பரம்பரையில் நந்தி மரபு, மெய்கண்ட சந்தானம். சூரியனார்கோயில் ஆதீனம் ஒன்று மட்டும் திருக்கயிலாய பரம்பரையில் ஸ்கந்த பரம்பரை, வாமதேவ சந்தானம்.

திருக்கயிலாய பரம்பரை என்பது எல்லாவற்றுக்கும் பொது. அதில் நந்தி பரம்பரை, ஸ்கந்த பரம்பரை என இரண்டு பரம்பரைகள் உண்டாயின. நந்தி பரம்பரையில் மெய்கண்ட சந்தானம் வழியாக ஏனைய ஆதீனங்களெல்லாம் வருகின்றன. ஸ்கந்த பரம்பரையில் வாமதேவ சந்தானத்தில் சூரியனார் கோயில் ஆதீனம் ஒன்று மட்டுமே வருகிறது. ஆதலின் இவ்வாதீனம் திருக்கயிலாய பரம்பரை 'ஸ்கந்த பரம்பரை வாமதேவ சந்தானம் என்று வழங்கப்பெறும்.

திருக்கயிலாய பரம்பரை

நந்தி பரம்பரை	ஸ்கந்த பரம்பரை
மெய்கண்ட சந்தானம்	வாமதேவ சந்தானம்
திருவாவடுதுறை தருமபுரம்	சூரியனார்கோயில்
முதலிய ஏனைய ஆதீனங்கள்	ஆதீனம் ஒன்று மட்டும்.

இவ்வேறுபாட்டை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். திருக்கயிலாயத்தில் ஸ்ரீகண்டபரமசிவனிடம் **ஸ்கந்தசுவாமி** உபதேசம் பெற்றார். ஸ்கந்தசுவாமியிடம் **வாமதேவ மகரிஷி** உபதேசம் பெற்றார். வாமதேவ மகரிஷியிடம் **நீலகண்ட சிவாசாரியர்** உபதேசம் பெற்றார். நீலகண்ட சிவாசாரியரிடம் **விஸ்வேஸ்வர சிவாசாரியர்** உபதேசம் பெற்றார். விஸ்வேஸ்வர சிவாசாரியரிடம் **சதாசிவ சிவாசாரியர்** உபதேசம் பெற்றார். சதாசிவ சிவாசாரியரிடம் **சிவமார்க்கப்பிரகாச சிவாசாரியர்** உபதேசம் பெற்றார். சிவமார்க்கப் பிரகாச சிவாசாரியரிடம் **சிவாக்கிரயோகிகள்** உபதேசம் பெற்றார். இச் சிவாக்கிர யோகிகளே சூரியனார்கோயில் ஆதீனத்தை நிறுவியவர். சிவாக்கிரயோகிகளுக்குச் சிவக்கொழுந்து சிவாசாரியர் என்றும் பெயர். இதுவரை வந்தவர்களைப் பட்டியலிட்டால்,

1. ஸ்ரீ ஸ்கந்தஸ்வாமி - இவரால் கந்த பரம்பரை என்ற பெயர் வந்தது.
2. ஸ்ரீ வாமதேவ மகரிஷி - இவரால் வாமதேவ சந்தானம் என்ற பெயர் வந்தது.
3. ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியர்
4. ஸ்ரீ விசுவேசுவர சிவாசாரியர்
5. ஸ்ரீ சதாசிவ சிவாசாரியர்
6. ஸ்ரீ சிவமார்க்கப்பிரகாச சிவாசாரியர்
7. **ஸ்ரீ சிவாக்கிரயோகிகள்** (ஸ்ரீ சிவக்கொழுந்து சிவாசாரியர்) இவர் சூரியனார்கோயில் ஆதீனத்தைத் தோற்றுவித்தவர்.

இவர்களது வரலாறுகளைச் சுருக்கமாகக் காண்போம். ஸ்கந்தஸ்வாமி - முருகப்பெருமான். முருகப்பெருமானைப் பற்றி அனைவரும் அறிவோம். வாமதேவ ரிஷியிலிருந்து சிவமார்க்கப் பிரகாச சிவாசாரியர் வரை உள்ள ஐவரைப் பற்றி ஒன்றிரண்டு சிறுகுறிப்புகளே கிடைக்கின்றன. ஆதீன நிறுவனர் சிவாக்கிரயோகிகள் வரலாறு ஓரளவு நன்கு தெரிகிறது.

ஸ்ரீ ஸ்கந்த ஸ்வாமி

ஸ்கந்த ஸ்வாமி என்ற பெயர் வடமொழி மரபு. முருகன் என்பது தமிழ் மரபு. ஸ்கந்தஸ்வாமி என்பதைத் தமிழில் கந்தசுவாமி, கந்தசாமி, கந்தன் என்கிறோம். ஸ்கந்தனின் வரலாறு கூறும் வடமொழிப் புராணம் ஸ்காந்தம். தமிழில் கந்தபுராணம், கந்தர்கலிவெண்பா. கந்தகோட்டம், கந்தவேள் என்னும் வழக்குகளைக் காண்க. தமிழ்நாட்டில் முருகன். வடநாட்டில் ஸ்கந்தன், கார்த்திகேயன். பழனியில் முருகன். சுவாமிமலையில் முருகன். கயிலாயத்தில் கந்தன். சுவாமி மலையில் முருகப்பெருமான் தந்தைக்கு உபதேசம் செய்தார். கயிலாயத்தில் கந்தப்பெருமான் தந்தையிடம் உபதேசம் கேட்டார். வாமதேவ முனிவருக்கு உபதேசம் செய்தார். கந்தமரபும் வாமதேவ சந்தானமும் இதனால் தோன்றின.

ஸ்ரீ வாமதேவ மகரிஷி

இவர் கயிலாயவாசி. கந்தப் பெருமானிடம் கயிலாயத்தில் உபதேசம் கேட்டவர். கேட்ட உபதேசம் 1. பிரணவார்த்தம், 2. சர்வஞ்ஞானோத்தரம். பிரணவார்த்தம் என்பது ஓங்காரத்தின் உட்பொருள். சர்வஞ்ஞானோத்தரம் என்பது ஓர் ஆகமம். ஸ்ரீகண்டபரமேசுவர் ஸ்ரீ சுப்பிரமணியருக்கு உபதேசித்தது என்று வழங்குவது. சுவாமிமலையில் முருகப்பெருமான் சிவபெருமானுக்குச் சொன்னதும் ஓங்காரத்துட்பொருள். கயிலையில் சிவபெருமானிடம் கேட்டதும் ஓங்காரத்துட் பொருள். அதனை வாமதேவருக்கு உபதேசித்திருக்கிறார். சிவபெருமான் கந்தப்பெருமானுக்கு உபதேசித்த சர்வஞ்

ஞானோத்தர ஆகமத்தைக் கந்தப்பெருமான் வாமதேவருக்கு உபதேசித்திருக்கிறார். சர்வஞ்ஞானோத்தரம் என்ற பெயரே பொருள்பொதிந்தது. சர்வஞான - உத்தரம். சர்வஞானங்களுக்கும் உத்தரமானது. பூர்வம் - முற்பகுதி. உத்தரம் - பிற்பகுதி, பூர்வத்தினும் உத்தரம் சிறந்தது. வள்ளலார் வடலூரை உத்தரஞான சிதம்பரம் என்றார். பூர்வஞானத்தினும் உத்தர ஞானம் சிறந்தது. சர்வஞானத்துக்கும் உத்தரமாக விளங்குவது சர்வஞ்ஞானோத்தரம்.

ஸ்கந்த பரம்பரையில் உபதேசிக்கப் பெற்ற ஞானத்திற்குத் தத்துவப் பெயர் என்ன என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். சங்க்ரர் மரபு, அத்வைதம். இராமானுஜர் மரபு, விசிட்டாத்வைதம். மத்வர் மரபு, துவைதம். மெய்கண்டார் மரபு, சுத்தாத்துவைதம். வாமதேவ மரபு **முக்கியாத்துவைதம்.** முக்கியாத்வைதம் என்ற பெயரை இதுவரை எங்காவது கேட்டிருக்கிறோமா? சிவபெருமானிடமிருந்து கந்தப் பெருமானுக்கும், கந்தப்பெருமானிடமிருந்து வாமதேவ முனிவருக்கும் வாமதேவ முனிவரிடமிருந்து அவர் சந்தானத்துக்கும் உபதேச வழியாக வருவது முக்கியாத்வைதம். (முக்கிய அத்வைதம்). வள்ளலார் ஓரிடத்தில் சமரசாத்துவிதம் (சமரச அத்வைதம்) என்று குறிப்பிடுகிறார். சைவசித்தாந்தம் சுத்தாத்வைதம் என்றால் வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கம் சமரசசுத்தாத்வைதம் எனலாம். இதுவும் கருதத்தக்கது. வாமதேச சந்தான தத்துவ மரபு முக்கியாத்துவிதம் என்பது சிவநெறிப் பிரகாசம் நூல் வரலாற்றால் தெரிகிறது. முக்கியாத் துவிதம் சுத்தாத்துவிதத்தினும் வேறன்று. சுத்தாத்துவிதம் எல்லாவற்றிலும் முக்கியம் ஆதலால் முக்கியாத்துவிதம் என்று சிவநெறிப் பிரகாசத்தில் கூறப்பெற்றது.

வாமதேவர் கயிலாயவாசி என்பதை முன்னமே சொன்னோம். அவர் சனகாதி நால்வரைப் போன்றவர். வாம தேவருக்குப்பின் சிவாக்கிரயோகிகள் வரை இடையிலுள்ள நால்வரும் வடநாட்டினர், அந்தணர்கள். ஆதீனத்தை நிறுவிய சிவாக்கிரயோகிகளுக்குப் பின் இரண்டாவது குருமகா

சந்நிதானமாக வந்தவர் வீழிச்சிவாக்கிரயோகிகள். இவருக்குப் பின் வந்தவர் நந்தி சிவாக்கிரயோகிகள். வீழிச்சிவாக்கிர யோகிகள் சிவநெறிப்பிரகாசம் என்று ஒரு நூல் செய்துள்ளார். நந்திசிவாக்கிரயோகிகள் அந்நூலுக்கு உரையெழுதியுள்ளார். உரையின் தொடக்கத்தில் நூல் வரலாறு கூறுமிடத்தில் வாமதேவசந்தான மரபைப் பற்றி அவர் கூறும் பகுதியை அப்படியே எடுத்துக் காட்டுகிறோம்.

> ''அவர்... நீலகண்ட சிவாசாரியருக்கு உபதேசிக்க, அவர் சிவராசதானியாகிற காசியிலே மணிகர்ணிகாதீரத்திலே பெரிய மடத்தில் நயிட்டிக வரியரான விசுவேசரு சிவாசாரியருக்கு உபதேசிக்க, அவர் ஆரியப்பிராமண வங்கிசத்திலே அவதரித்துச் சைவசந்நியாசியான சதாசிவ சிவாசாரியருக்கு உபதேசிக்க, அவர் கன்னடதேசத்திற் சிவமார்க்கப் பிரகாச சிவாசாரியருக்கு உபதேசிக்க, அவர் சோழதேசத்தில் மருதாந்தசோழபுரத்திலே அவதரித்தருளின சிவாக்கிர யோகிகள் என்னும் சிவக்கொழுந்து சிவாசாரியருக்கு உபதேசிக்க, அவர் தொண்டைமண்டலத்தில் அவதரித்தருளிச் சிவாகமங்களில் ஞானபாதத்திலே நாலுலட்சம் கிரந்தம் அத்தியயனம் பண்ணின அதிவர்ணாசிரம ஆசாரியவரிய சைவபரிபாலக சிவாக்கிர யோகிகளுக்கு அனுக்கிரகிக்க...''

என்பது அப்பகுதி. சந்தானத்தாரின் ஊர் பேர் குலமரபு முதலியன இதனால் தெரிகின்றன.

ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியர்

வாமதேவ முனிவரின் சீடர். அவரிடம் உபதேசம் பெற்றவர். சிவாசாரியர் என்பதால் அந்தணர். ஊர் தெரிய வில்லை. இவருக்கு அடுத்த பின்னவரும் இவரிடம் உபதேசம் பெற்றவருமான விசுவேசுவர சிவாசாரியர் காசிப்பதியினர் என்பதால் இவரது ஊரும் காசியாகவே இருக்கலாம். இவரது வரலாறு அதிகமாகத் தெரியவில்லை. பிரம்ம சூத்திரத்துக்கு நீலகண்ட பாஷ்யம் என்றொரு பேருரை உண்டு. வடமொழிச் சிவாகமங்களையும் ஏற்றுச் செய்யப் பெற்ற அது சைவபரமானது என்பர். முழுமையான சைவ

சித்தாந்தமன்று என்றும் கூறுவர். அதைச் செய்த நீலகண்டர், இவரா அல்லது வேறொருவரா என்று தெரியவில்லை.

ஸ்ரீ விசுவேசுவர சிவாசாரியர்

''சிவராசதானியாகிய காசியிலே மணிகர்ணிகாதீரத்திலே பெரியமடத்தில் நயிட்டிகவரியரான விசுவேசுர சிவாசாரியருக்கு...'' என்று இவர் குறிப்பிடப் பெறுகிறார். காசியில் கங்கைக்கரையில் மணிகர்ணிகைத் துறையில் இருந்த பெரியமடத்தில் இவர் இருந்தவர். நைட்டிக பிரமச்சாரி. ஊர் காசி என்பதற்கேற்பப் பேரும் விசுவேசுவரர் என்று பொருத்தமாக அமைந்தது. தமிழ்நாட்டளவில் சைவத்துக்குச் சிதம்பரம் தலைநகரம்; அகில இந்திய அளவில் காசி தலைநகரம். அகில உலக அளவில் கயிலை தலைநகரம். காசி சிவராசதானி என்று இங்குக் குறிப்பிடப் பெறுகிறது. நந்தி பரம்பரை கயிலையிலிருந்து நேரே தமிழ்நாட்டுக்கு வந்தது. கந்த பரம்பரை காசி வழியாகத் தமிழ்நாட்டுக்கு வருகிறது. காசியில் விசுவேசுவரரின் மடம் பெரியமடம் எனக் கூறப் பெறுகிறது. சைவமடங்கள், வீரசைவமடங்கள், வேதாந்தமடங்கள் எனப் பல்வேறு சம்பிரதாயங்களைச் சேர்ந்தவருக்கும் மிகப் பல மடங்கள் காசியில் இருந்தன. அவற்றுள் விசுவேசுவர சிவாசாரியரின் சைவமடம் பெரியமடம். பெரியமடம் என வழங்கும் மடங்கள் தமிழ்நாட்டில் இப்போதும் சில உள்ளன. சூரியனார்கோயில் ஆதீனத்தைப் பெரியமடம் என வழங்குவதுண்டு. விசுவேசுவர சிவாசாரியரின் காசிப் பெரிய மடத்தால் சூரியனார்கோயில் ஆதீனத்திற்கும் பெரியமடம் என்ற பெயர் ஏற்பட்டது. கும்பகோணம் வீரசைவமடம் பெரியமடம் எனப்படும். குடந்தையம்பதியில் கோதிலாப் பெரியமடந்தனில் வாழ் வீர மயேச்சுரர் வாழியே'' என்று ஒட்டக்கூத்தர் தக்கயாகப்பரணியில் பாடுகிறார். துறையூர் சிவப்பிரகாச சுவாமிகளின் வீரசைவ மடத்தையும் பெரியமடம் என்று வழங்குகின்றனர்.

ஸ்ரீ சதாசிவ சிவாசாரியர்

இவர் விசுவேசுவர சிவாசாரியரின் சீடர். அவரிடம் உபதேசம் பெற்றவர். ''ஆரியப் பிராமண வங்கிசத்திலே அவதரித்துச் சைவ சந்நியாசியான சதாசிவ சிவாசாரியர்'' என இவர் குறிப்பிடப்பெறுகிறார். ஆரியப் பிராமணர் என்றால் வேதப்பிராமணர், வைதிகப் பிராமணர், சுமார்த்தப் பிராமணர், வைதிக அந்தணர். சிவாசாரியர் என்றால் சைவ அந்தணர், ஆதிசைவர். வைதிக அந்தணருக்கு ஆகமத்தைவிட வேதமே முக்கியம். ஆதிசைவருக்கு ஆகமமே முக்கியம். ''ஆரியப் பிராமண'', ''சைவ சந்நியாசி'' என்ற சொற்கள் இவர் வரலாற்றுக் குறிப்பில் முக்கியமானவை. ஆரியப் பிராமணராகப் பிறந்த இவர் சைவத்துறவி ஆகிறார், சிவாசாரியர் ஆகிறார்.

சூரியனார்கோயில் ஆதீனத்தில் தொடக்ககாலத்தில் இருந்தவர்கள் அந்தணர்கள்; பின் வந்தவர்கள் வேளாளர்கள். குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தைத் தொடங்கிய வரும் ஓர் ஆதிசைவ அந்தணர், சிவாசாரியர். அது பின்னே அவ்வாதீன வரலாற்றிற் கூறப்பெறும்.

திருஞானசம்பந்தர் வைதிக அந்தணர்.
திருநாவுக்கரசர் சைவவேளாளர்.
சுந்தரமூர்த்திகள் ஆதிசைவர்.
கோயிற் பூசைக்குரிய சிவாசாரியர்.
மாணிக்கவாசகர் அமாத்தியப் பிராமணர்.
(அமைச்சர்குல அந்தணர்)
மெய்கண்டார் சைவவேளாளர்.
அருணந்திசிவம் ஆதிசைவர், சிவாசாரியர்.
மறைஞானசம்பந்தர் வைதிக அந்தணர்.
(ஆயினும் அதிவர்ணாசிரமியாக இருந்தவர்)
உமாபதிசிவம் தில்லைவாழந்தணர், தீட்சிதர்.
நாயன்மார்களெல்லாம் பல்வேறு சாதியினர்.

அடியார்களுக்குள் சாதி வேறுபாடு இல்லை. எல்லாரும் ஒன்றாகப் பழகினர், உடனுண்டனர், உடன் உறைந்தனர். ஒழுக்கம் ஒற்றுமையைத் தந்தது.

ஆரியப் பிராமணராகப் பிறந்து சைவ சந்நியாசி ஆகிய சதாசிவசிவாசாரியர் இறுதி நாள்களில் திருக்காளத்திக்கு எழுந்தருளி அங்கேயே வாழ்ந்து அங்கேயே சிவப்பேறு பெற்றார். காளத்தியில் வாழ்ந்ததால் அவருக்குக் காளத்திநாதர் ஆன்மார்த்த பூசாமூர்த்தியானார். அவர் வழிவருவோர்க்கும் அது தொடர்ந்தது. சூரியனார்கோயில் ஆதீனத்தார்க்கு இன்று நடராசப்பெருமானும் காளத்திநாதரும் வழிபடு கடவுளர்கள். (ஆன்மார்த்த பூசாமூர்த்திகள்). குன்றக்குடிக்கும் காளத்தி நாதரே.

ஸ்ரீ சிவமார்க்கப்பிரகாச சிவாசாரியர்

சதாசிவ சிவாசாரியரின் சீடர். அவரிடம் உபதேசம் பெற்றவர். கன்னட நாட்டினர். ஆதிசைவ அந்தணர், சிவாசாரியர்.

ஸ்ரீ சிவாக்கிர யோகிகள்

(ஸ்ரீ சிவக்கொழுந்து சிவாசாரியர்)

சூரியனார்கோயில் ஆதீன நிறுவனர்

இவர்தான் சூரியனார்கோயில் ஆதீனத்தை நிறுவியவர். இவருக்குமுன் விளங்கிய சிவமார்க்கப்பிரகாச சிவாசாரியரின் மாணவர், சீடர். அவரிடம் பாடங்கேட்டவர். உபதேசம் பெற்றவர். அக்கிரம் - வடசொல். கொழுந்து என்று பொருள். சிவாக்கிரம் என்றாலும் சிவக்கொழுந்து என்றாலும் பொருள் ஒன்றே. சிவாக்கிரம், வடசொல் வழக்கு. சிவக்கொழுந்து, தமிழ் வழக்கு. இவ்விரு பெயர்களாலும் இவர் வழங்கப் பெறுகிறார். வடநாட்டில் தொடங்கி வடமொழி மரபில் வந்ததனால் சிவாக்கிரயோகிகள் என்று வடமொழிப் பெயர் முன்னதாகப் பெருக வழங்குவதாயிற்று. சிவக்கொழுந்து சிவாசாரியர் என்ற தமிழ்ப்பெயர் அதனை அடுத்து அருகி வழங்குவதாயிற்று. ''சோழதேசத்திலே மருதாந்தசோழபுரத்தில் அவதரித்தருளின சிவாக்கிரயோகிகள் என்னும் சிவக்கொழுந்து சிவாசாரியருக்கு'' என்பது இவரைப் பற்றிய குறிப்பு. இதனால் இவர் சோழநாட்டில் மருதாந்தசோழபுரத்தில் பிறந்தவர் என்பது தெரிகிறது.

இவர் சைவ வேளாளச் செட்டியார். இல்லறத்தாராக இருந்தவர். சுவானந்த நாச்சியார் என்ற பெண் மகவும் உண்டு. சிவமார்க்கப் பிரகாச சிவாசாரியரிடம் உபதேசம் பெற்றபின் காவி உடுத்தித் துறவு பூண்டார். சூரியனார்கோயில் தெற்கு வீதியில் சிறிய அளவில் ஒரு திருமடம் அமைத்துக் கொண்டு மாணவர்களுக்குப் பாடஞ்சொல்லுதல் முதலிய சைவப் பணிகளைச் செய்துவந்தார். இதுவே சூரியனார்கோயில் ஆதீனத்தின் தொடக்கம்.

சூரியனார்கோயில் ஆதீன நிறுவனர் சிவாக்கிரயோகி களும், திருவாவடுதுறை ஆதீன நிறுவனர் நமசிவாயமூர்த்தி களும் சமகாலத்தவர்கள் என்றும், ஒருவரை ஒருவர் சந்தித்த தாகவும் ஒரு வரலாறு கூறப்பெறுகிறது. ஒரு சமயம் சிவாக்கிர யோகிகள் நமசிவாயமூர்த்திகளைக் காணத் திருவாவடுதுறைக்கு எழுந்தருளினாராம். அவர் திருவாவடுதுறைக்குள் புகுந்த சமயம் திருவாவடுதுறை யாதீனத் தம்பிரான்கள் சிலர் சைவர் வீதியில் பிச்சை ஏற்றுக்கொண்டு இருந்தனராம். யோகிகளைக் கண்டவுடன் ஓடிச்சென்று கையிலிருந்த பிச்சைப் பாத்திரத்தை ஒரு திண்ணையில் வைத்துவிட்டு வந்து, நிலந்தோய வீழ்ந்து வணங்கினராம். யோகிகள் நமசிவாயமூர்த்திகளிடம் உரையாடிக் கொண்டிருக்கும்போது, நம் ஆதீன அடியவர்களுக்கு இன்னும் போதிய பக்குவம் வரவில்லையே என்று கூறினாராம். குருவைக் கண்டதும் கண்ட உடனே அப்படியே அந்நிலை யிலேயே ஓடிச்சென்று வீழ்ந்து வணங்காமல், கையிலிருந்த பிச்சைப் பாத்திரத்தை வைக்கப் பத்திரமான ஒரு நல்ல இடந்தேடி ஒரு திண்ணையில் வைத்துவிட்டு வந்து வணங்கியது போதிய பக்குவமின்மைதான் என்று தேசிகர் தம்பிரான்களைக் கடிந்து கொண்டாராம். கூறப்பெறும் வரலாறு இதுவே. இருவரும் ஒரே காலத்தவரல்லர், வெவ்வேறு காலத்தினர், சந்திக்க வாய்ப்பில்லை எனக் கூறுவோரும் உண்டு.

சிவாக்கிரயோகிகளின் பெருமையை அறிந்த மன்னன் ஒருவன் வளமான ஒரு கிராமத்தை மானியமாக அளிக்க

விரும்பினான். யோகிகள் ஏற்க மறுத்துவிட்டார். பிச்சை ஏற்று உண்டே எளிய வாழ்வு வாழ்ந்தார். தொடக்கத்தில் சிறிய அளவில் அவருடைய மடம் அமைந்திருந்தது. பின்னர் நாளடைவில் பெரிய அளவில் வளர்ச்சிபெற்றது.

தொண்டமண்டலத்திலிருந்து பிராமணர் ஒருவர் இவரை அடுத்து வந்து சீடரானார். அவரே இவருக்குப்பின் இரண்டாவது குருமகாசந்நிதானமான வீழிச்சிவாக்கிரயோகிகள்.

சூரியனார்கோயில் ஆதீனத்தின் நிறுவனரும் குரு முதல்வருமாகிய ஆதி சிவாக்கிரயோகிகளின் சமாதிக்கோயில் ஆதீனத்தில் நடுநாயகமாக அமைந்துள்ளது. கோயிலின் கருவறையில் இவரது உருவச்சிலையே நிறுவப்பெற்றுள்ளது. தட்சிணாமூர்த்தி போன்று காலை மடித்து அமர்ந்த நிலை. மிக அழகான திருவுருவச்சிலை.

இரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ வீழிச்சிவாக்கிரயோகிகள்

வீழிச்சிவாக்கிரயோகிகளின் காலம் சூரியனார்கோயில் ஆதீனத்தின் பொற்காலம். இவர் தொண்டமண்டலத்தி லிருந்து வந்தவர், பிராமணர். சூரியனார்கோயிலுக்கு வந்து சிவாக்கிரயோகிகளை அடுத்துச் சீடரானார். யோகிகள் வேளாளர். வந்தவர் அந்தணர். அந்நாளில் அடியார்களிடையே, ஞானிக ளிடையே, சாதி வேறுபாடில்லை. வீழிச்சிவாக்கிர யோகிகள் அதிவர்ணாசிரமி என வழங்கப் பெறுகிறார். வருண வேறு பாடுகளைப் பாராட்டாமல், வருண (சாதி) வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு ஒழுகுவோர் அதிவர்ணாச்ரமி என வழங்கப் பெறுவர்.

சம்பந்தர் பிரமசாரி, அப்பர் துறவி, சுந்தரர் கிருகத்தர், மாணிக்கவாசகர் அதிவருணாச்சிரமி என்று கூறும் மரபு உண்டு. வீழிச்சிவாக்கிரயோகிகள் செய்த சிவநெறிப்பிரகாச நூலில் துர்வாசர், அகத்தியர், கௌதமர், ததீசி ஆகிய நான்கு முனிவர்களுக்கும் சமயகுரவர் நால்வருக்கும் வணக்கங்

கூறுகிறார். துர்வாசர் சந்நியாசி, அகத்தியர் வானப்பிரத்தர், கௌதமர் கிருகத்தர், ததீசி பிரம்மசாரி. பின்னாளில் சிறந்து விளங்கிய கோடகநல்லூர் சுந்தரசுவாமிகள் அந்தணராயினும் அதிவருணாசிரமி. அவர் அதிவருணாசிரமி என்பதைச் சிறப்பாகக் கூறுவர். வீழிச் சிவாக்கிரயோகிகளின் அதிவருணாசிரம ஒழுக்கம் (அதிவர்ணாஸ்ரம தர்மம்) எண்ணி எண்ணிப் பாராட்டத்தக்கது.

ஆதி சிவாக்கிர யோகிகளைப் போன்றே இரண்டாவது குரவரான வீழிச் சிவாக்கிர யோகிகளும் பிச்சை ஏற்று வாழ்ந்தார். அந்தணர் அரிசிப்பிச்சை ஏற்பர். அது உஞ்சவிருத்தி எனப்படும். வேளாளர் அன்னப்பிச்சை ஏற்பர். சைவர் வீடுகளில் மட்டுமே ஏற்பர். வீழியாரும் சைவர் வீடுகளில் அன்னபிட்சை ஏற்றே வாழ்ந்தார். பலருக்கு அறிவுபிட்சை (ஞானபிக்ஷை) வழங்கிய அவர் அன்னபிட்சை ஏற்று வாழ்ந்தார் என்றால், அவரது அருள் வாழ்வை என்னென்று போற்றுவோம்.

இவரது புகழ் நாடெங்கும் பரவிற்று. அதனால் இவர் அரசறிய வாழ்ந்தார். சம்பந்தரும் அப்பரும் திருவீழிமிழலை யில் பலநாள் தங்கி வழிபட்டுப் பஞ்சநிவாரணப் பணி செய்ததை நினைவுகூர்ந்து தாமும் அங்கு வசிப்பதை விரும்பினார். இவரது விருப்பத்தை அறிந்த தஞ்சை நாயக்க மன்னன் திருவீழிமிழலை தெற்கு வீதியில் ஒரு மடம் கட்டி யோகிகளை அதில் எழுந்தருளச் செய்தான். சூரியனார் கோயிலிலும் வீழிமிழலையிலுமாக இவர் இருந்துவந்தார். இதனால் வீழிச்சிவாக்கிரயோகிகள் என்றே பெயருண்டா யிற்று.

வீழிச்சிவாக்கிரயோகிகள் செய்த நூல்கள் பல. இவர்க ளுடைய பெருஞ்சிறப்பு வடமொழியிலும் பெருநூல்களைச் செய்ததே. வடமொழி தமிழ் ஆகிய இருமொழிப் புலமை யுடன் இவர்கள் விளங்கினார்கள்.

இவர்கள் செய்த வடமொழி நூல்கள் :

1. கிரியா தீபிகை
2. சைவ சந்நியாச பத்ததி
3. சிவஞானபோத லகுடீகை
4. சிவஞானபோத சிவாக்கிரபாஷ்யம்
5. சைவ பரிபாஷை

இவ்வைந்தும் இப்போது கிடைப்பன.

வடமொழிநூல் உரைகள் :

1. சர்வஞ்ஞானோத்தரம் - தமிழ் உரை
2. தேவிகாலோத்தரம் - தமிழ் உரை
3. சுருதி சூக்தி மாலை - தமிழ் உரை

இம்மூன்றும் இப்போது கிடைக்கவில்லை.

தமிழ் மூல நூல்

1. சிவநெறிப்பிரகாசம். இப்போது கிடைப்பது.

தமிழ்நூல் உரைகள் :

1. சிவஞானசித்தியார் பரபக்க உரை
2. சிவஞானசித்தியார் சுபக்க உரை

இவை எல்லாவற்றையும் பற்றி இங்குக் கூறப்புகின் இந்நூல் மிகவும் விரியுமாதலின் சிலவற்றைப் பற்றி மட்டும் சுருங்கக் கூறுவோம்.

கிரியாதீபிகை, சைவ சந்நியாச பத்ததி

இவ்விருநூல்களும் தோன்றிய வரலாறே சுவையானது. நான்காம் வருணத்தாராகிய சைவவேளாளர்களுக்குச் சந்நியாச உரிமையும் ஆசாரிய அதிகாரமும் இல்லை என்ற ஒரு கருத்து அக்காலத்திய வைதிக உலகில் அழுத்தமாக நிலவியிருந்தது. அதன் விளைவுதான் குகையிடி கலகம் போன்றவை. சுமார்த்த

சந்நியாசிகளுக்கும் சைவ சந்நியாசிகளுக்கும் (அந்தணத் துறவிகளுக்கும் சைவவேளாளத் துறவிகளுக்கும்) சந்நியாசம் (துறவு) பற்றிய வாக்குவாதம் அங்கங்கே அவ்வப்போது எழுந்து கொண்டுதா னிருந்தது. சுமார்த்தர்கள், சைவ வேளாளருக்குச் சந்நியாசம் கிடையாது, ஆசாரியத்தன்மை கிடையாது என்று வாதாடினர். வீழிச்சிவாக்கிரயோகிகள் காலத்திலும் ஒரு சமயம் இந்த வாக்குவாதம் முற்றி அரசன் வரை சென்றது. வீழிச்சிவாக்கிரயோகிகளின் வடமொழி தென்மொழிப் புலமையையும் பேரறிவாற்றலையும் நன்குணர்ந்திருந்த மன்னன் இவர்களே இதனை ஆராய்ந்து முடிவுகூறத்தக்கவர்கள் என்று கருதி இதனை இவர்கள்கண் விட்டான். இவர்களும் இதனை ஆதியோடு அந்தமாக அனைத்து ஆதாரங்களையுங்கொண்டு நன்கு ஆராய்ந்து சமன் செய்து சீர்தூக்குங்கோல் போல் அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி என்னும் இலக்கணத்திற்கேற்ப ஒருபாற் கோடாது, சந்நியாச உரிமை நால்வருணத்தாருக்கும் உண்டென்றும், நான்காம் வருணத்தாரும் சந்நியாசம் கொள்ளலாம் என்றும் ஆசாரியர் ஆகலாம் என்றும் முடிவு செய்து **கிரியாதீபிகை, சைவசந்நியாச பத்ததி** என்று இரு நூல்களை வடமொழியில் செய்தருளினார்கள். இவ்விரு நூல்களுமே இதைப் பற்றியதெனினும், சைவ சந்நியாச பத்ததி என்ற பெயரே, சைவருக்குச் சந்நியாசமும் ஆசாரியத் தன்மையும் உண்டென்று நிறுவப் பெறுவதை வெளிப்படை யாகக் காட்டுகின்றது. வீழிச்சிவாக்கிரயோகிகள் தாம் பிராமணராக இருந்தும் சைவவேளாளருக்குத் துறவுரிமையும் ஆசாரியத்தகுதியும் உண்டென்று நிறுவியது அவரது உண்மை உள்ளத்தைக் காட்டுகிறது.

கிரியாதீபிகைக்குச் சிவாக்கிர பத்ததி என்றும் ஒரு பெயருண்டு. 1929-ஆம் ஆண்டில் சூரியனார்கோயில் ஆதீனத்தாலேயே இந்நூல் கிரந்த எழுத்தில் அச்சிட்டு வெளியிடப் பெற்றுள்ளது. சைவ சந்நியாச பத்ததி 1932-ஆம் ஆண்டில் தரும்புர ஆதீனத்தால் அச்சிட்டு வெளியிடப் பெற்றுள்ளது. இதுவும் கிரந்த எழுத்தே.

சர்வஞானோத்தரம், தேவிகாலோத்தரம் ஆகிய இரண்டு வடமொழி நூல்களும் சூரியனார்கோயில் ஆதீனத்தின் பிரமாண நூல்கள். இவ்விரண்டு நூல்களுக்கும் வீழிச் சிவாக்கிர யோகிகள் செய்த தமிழுரை இப்போது கிடைப்ப தில்லை. தூத்துக்குடி முத்தையபிள்ளை உரை எழுதி, தேவகோட்டை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம் வெளியிட்ட சர்வஞானோத்தரம் தமிழ் உரை (1923), தேவி காலோத்தரம் தமிழ் உரை (1935)களே இப்போது வழக்கிலுள்ளன.

சிவநெறிப்பிரகாசம்

வீழிச்சிவாக்கிரயோகிகள் அருளிச் செய்த சைவ சித்தாந்த மூலநூல். தமிழில் 215 திருவிருத்தங்களைக் கொண்டது. இவரது குருவாகிய ஆதி சிவாக்கிரயோகிகளின் (சிவக்கொழுந்து சிவாசாரியர்) பூர்வாசிரம மகளார் சுவானந்த நாச்சியார் வேண்டிக் கொண்டதற்கிணங்கச் செய்யப் பெற்றது. சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் துகளறுபோதம், தத்துவப்பிரகாசம் ஆகியவற்றின் வரிசையில் அவற்றின் பின்னர் வைத்து எண்ணத்தக்கது; பயிலத்தக்கது. பதி, பசு, பாச இலக்கணங்களைக் கூறுவதோடு அமையாது, தீக்கை, அத்துவாசோதனை முதலியவற்றையும் இந்நூல் கூறுகிறது.

இந்நூல் பாயிரப் பகுதியில் கணபதி, சிவபெருமான், சக்தி, குமாரர், நந்திகேசுரர், வாமதேவர், துர்வாசர், அகத்தியர், கவுதமர், ததீசி, சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சதாசிவ சிவாசாரியர், சிவமார்க்கப் பிரகாச சிவாசாரியர், சிவக்கொழுந்து சிவாசாரியர் (சிவாக்கிரயோகிகள்) ஆகியோர் துதிகள் அமைந்துள்ளன. இவ்வமைப்பு கந்தபரம்பரை, வாமதேவ சந்தானம் என்பதற்குரிய அமைப்பு. இப்பரம்பரை யில் மெய்கண்டார் முதலிய சந்தானகுரவர் நால்வரும் சேரார் ஆகலின் அவர்களுக்கு வணக்கங்கூறப் பெறவில்லை. வீழிச் சிவாக்கிர யோகிகளின் சிவநெறிப்பிரகாசத்திற்கு, அவருக்குப்

பின் வந்த நந்தி சிவாக்கிரயோகிகள் அருமையானதோர் உரையை எழுதியருளினார்.

சிவநெறிப்பிரகாசம் மூலமும் உரையும் இரண்டு பதிப்புகள் வெளிவந்துள்ளன.

1. **சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்பு :** 1936-இல் வெளியானது. பதிப்பாசிரியர் சு. அனவரதவிநாயகம் பிள்ளை எம்.ஏ.,எல்.டி., பல்கலைக்கழகத்தின் தமிழாராய்ச்சித் துறைத் தலைவர். நல்ல எழுத்து, நல்ல அச்சு, நல்ல கட்டிடம், உயர்தரமான பதிப்பு. அனவரதவிநாயகம் பிள்ளையின் சிறந்த ஆராய்ச்சி முன்னுரை, சைவ சந்தானம், சைவ மடங்கள், சூரியனார்கோயிலாதீனம் பற்றிய வரலாறுகள் போன்ற பற்பல அரிய செய்திகள் இம்முன்னுரையால் அறியப்பெறுகின்றன. இவ்வளவு கௌரவமான பதிப்பு, அதுவும் பல்கலைக்கழகப் பதிப்பு வேறு எந்தச் சைவ நூலுக்கும் அமையவில்லை. அவ்வளவு அற்புதமான பதிப்பு.

2. **திருவாவடுதுறை ஆதீனப் பதிப்பு** 1969. பதிப்பாசிரியர் ஆதீன வித்துவான் த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை. இதுவும் சிறந்த பதிப்பே. அனவரதவிநாயகம் பிள்ளையின் சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்புக் கிடைக்கப் பெறாதவர்களுக்கு, அக்குறையை இப்பதிப்பு நீக்கும். நூலாசிரியர் வரலாறு, ஆதீன குருமரபு முதலியன அனவரதர் பதிப்பைப் பின்பற்றி இப்பதிப்பிலும் கொடுக்கப்பெற்றுள்ளன.

வீழிச் சிவாக்கிர யோகிகளுக்கு நந்தி சிவாக்கிரயோகிகள் என்பவர் மாணவராக வந்து சேர்ந்தார். அவரைத் தம் பிற்றோன்றலாக வைத்து, இவர்கள் திருவீழிமிழலையிலேயே உரிய காலத்தில் சிவப்பேறு பெற்றார்கள். அங்கு இவர்கள் சமாதி உள்ளது. இன்றும் ஆண்டுதோறும் இவர்களுக்கு அங்கு குருபூசை நிகழ்கிறது. இவர்கள் காலம் முதல் திருவீழிமிழலையும் முக்கியத்துவம் பெற்றது. குருமகா சந்நிதானம் சூரியனார்கோயிலிலும், இளவரசுப் பட்டத்தில்

இருப்போர் திருவீழிமிழலையிலும், இருப்பதென்னும் மரபு உண்டாயிற்று.

மூன்றாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ நந்தி சிவாக்கிரயோகிகள்

இரண்டாவது குருமகாசந்நிதானமான வீழிச்சிவாக்கிர யோகிகளை இளமையிலேயே அடுத்து அவர்பால் உபதேசமும் துறவும் பெற்றவர். பிராமணர். தம் ஆசிரியர் ஞானநூல்கள் பலவற்றை இயற்றியருளிய காலங்களில் அவர்களுடன் இருந்து பழகி மொழிப்புலமையையும் சமயப் புலமையை யும் சிறப்பாக வளர்த்துக் கொண்டவர். குருநாதர் வீழிச் சிவாக்கிர யோகிகளின் தமிழ் நூலாகிய சிவநெறிப் பிரகாசத்திற்குச் சிறந்ததொரு விரிவுரை எழுதினார். இவர் காலத்தில் ஆதீனத்தின் புகழ் முன்னையினும் மிகுதியாய் நாடெங்கும் பரவிற்று.

நான்காவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர்

நந்தி சிவாக்கிரயோகிகளின் மாணவராகிய இவரும் பிராமணர். பிராமணராகிய இவருக்குச் சிவக்கொழுந்து என்ற தமிழ்ப்பெயரும் தேசிகர் என்ற பட்டப்பெயரும் இயற்பெயராக இருந்திருக்க இயலாது. ஒருவேளை அபிடேகப் பெயராக இருக்கலாம். பிராமணர்கள் பலர் மடத்தில் வந்து தங்கி இவரிடம் மாணாக்கராயிருந்தார்கள். சில காலத்திற்குப் பின் ஊழ்வினைப்பயனால் இவருக்குத் தொழுநோய் உண்டாகி உடல்நலம் மிகவும் குன்றியது. நோயாளரான இவருடன் உடனிருக்க அஞ்சிப் பிராமண மாணவர்கள் ஒவ்வொருவராக மடத்தை விட்டு அகன்றனர். அருகிலுள்ள திருமாந்துறை என்ற ஊரிலிருந்து வந்திருந்த சொக்கலிங்கம் பிள்ளை என்ற ஒருவர் மட்டுமே தொழுநோயால் துன்புறும் ஆசிரியருக்கு அருகிலிருந்து பணிவிடை செய்துகொண்டு அகலாது இறுதி வரை இருந்தார். பிள்ளையின் அன்பையும் குருபக்தியையும் தொண்டையும் கண்ட ஆசாரியர் தமது இறுதிக்காலம்

நெருங்குவதை உணர்ந்து, சொக்கலிங்கப் பிள்ளையின் பரிபக்குவ நிலையையும் தகுதியையும் உளங்கொண்டு அவருக்கு உபதேசமும் அபிடேகமும் செய்து தமக்குப்பின் பிற்றோன்றலாக இருக்கச் செய்து சிவப்பேறு பெற்றார்.

ஐந்தாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ சொக்கலிங்க தேசிகர்

(திருமாந்துறைப் ப'ண்டார சந்நிதிகள்)

சூரியனார்கோயிலுக்கு அருகிலுள்ள திருமாந்துறை என்ற ஊரில் கார்காத்த வேளாளர் மரபில் செல்வக் குடும்பத்தில் தோன்றியவர். இளமையிலேயே சைவ ஒழுக்கமும் ஞான நாட்டமும் கொண்டு சூரியனார்கோயிலுக்கு வந்து ஆசாரியரை அடுத்துப் பணிவிடை செய்தும் பாடங்கேட்டும் வந்து, பின் பட்டத்திற்கு வரும் பேறுபெற்றார். இவர்கள் காலத்துக்குமுன் மடத்திற்குச் சொத்து இல்லை. ஆசாரியர்கள் பிச்சையேற்றே உண்டுவந்தனர். இவர்கள் காலத்தில் திருமாந்துறையிலிருந்து உணவுப் பொருள்கள் வந்தன. மடத்தின் பணிகளுக்கும் பராமரிப்புக்கும் அவை போதாமையால் குடும்ப சொத்தில் இவருக்குரிய பாகமான 16 வேலி நிலங்களை இவர்களது இரு சகோதரர்களும் இவர்களது விருப்பத்திற்கிணங்க மடத்திற்கு எழுதிக்கொடுத்தனர். இவர்களால் மடத்தின் பராமரிப்புக்கு நிரந்தரமாகச் சொத்து ஏற்பட்டது. திருவீழிமிழலைக் கிளை மடத்தைப் பராமரிக்கவும் அங்கு மூன்றுவேலி நன்செய் நிலம் வாங்கி வைத்தார்கள். இவர்கள் காலம் வரை (ஆதி சிவாக்கிரயோகிகள் ஒருவரைத் தவிர) அந்தணர்களே தலைவர் களாக இருந்த நிலை மாறி, சைவ வேளாளர் தலைமை இவர்கள் காலம் முதல் ஏற்பட்டது. திருமாந்துறையினின்றும் வந்து ஆதீன கர்த்தராகிச் சிறந்து விளங்கிய இவர்கள் திருமாந்துறைப் பண்டார சந்நிதிகள் என்றே வழங்கப் பெற்றனர். வீழிச் சிவாக்கிர யோகிகளின் காலம் ஆதீனத்தின் முதற்பொற்காலம் என்றால் திருமாந்துறைப் பண்டார சந்நிதி களின் காலம் இரண்டாவது பொற்காலம்.

ஆறு, ஏழு, எட்டாவது குருமகாசந்நிதானங்கள்

ஸ்ரீ சிதம்பரநாத தேசிகர், ஸ்ரீ வைத்தியலிங்க தேசிகர், ஸ்ரீ சண்முக தேசிகர்

இவர்களைப் பற்றிய செய்திகள் தெரியவில்லை.

ஒன்பதாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ நமசிவாய தேசிகர்

சைவ வேளாள மரபினர். பெரிதும் ஞான நாட்டமே கொண்டவர். உலகியல் நாட்டம் அற்றவர். பொதுவாக யாரிடத்திலும் அதிகமாகப் பேசுவதில்லை. அமைதியாகச் சிவ சிந்தினையில் இருப்பதே வழக்கம். இவர்களிடம் பூனை ஒன்று அன்போடு வளர்ந்து வந்ததாம். யாரோடாவது பேசுவதற்கு நேர்ந்தால் இப்பூனையை முன்னிலைப்படுத்தி அதனோடு பேசும் பாவனையிலேயே பேசுவார்களாம். இவ் வாதீனத்திற்குப் பூனைவளர்ப்பு வீழிச்சிவாக்கிரயோகிகள் காலத்திலிருந்தே தொடங்கிவிட்டதாகச் சொல்கிறார்கள். பல்வேறு தொல்லைகளுக்கு ஆளாகி யாத்திரை மேற்கொண்ட மன்னன் ஒருவனை ஒரு பூனை வழிமறித்து வழிகாட்டிச் சுவாமிகளிடம் அழைத்து வந்ததாம். சுவாமிகளின் சந்நிதி விசேடத்தாலும் அருளாசியாலும் தொல்லைகள் தீரப்பெற்ற மன்னன் சுவாமிகளுக்குப் பெரிய திருமாளிகையொன்று கட்டித்தர விரும்பினானாம். சுவாமிகள் ஏற்க மறுத்துவிடவே வளரும் பூனைக்குட்டிகளுக்காவது ஆகட்டும் என்று சொல்லி மானியமாகச் சில நிலங்களை எழுதி வைத்தானாம். பூனைக் குட்டி மானியம் என்றே அதற்குப் பெயர் ஏற்பட்டுவிட்டது. ஆதீனத்தில் பூனை வளர்த்துவரும் வழக்கம் நிலைபெற்று விட்டது. பூனைக்குட்டிகளுக்கும் இலைபோட்டு நிவேதனம் நடைபெறுகின்ற அளவுக்கு வளர்ந்துவிட்டது. சூரியனார் கோயில் ஆதீனகர்த்தர்கள் நல்லவர்களாக இருந்தார்கள், வல்லவர்களாக இல்லை. பூனையைப் போன்று இருந்தார்கள், புலியாக இல்லை. இதன் விளைவாகப் பிற்காலத்தில் பல கோயில்களின் நிர்வாகத்தையும் சொத்துகளையும் இழக்க நேர்ந்தது.

பத்தாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்

எண்பத்தொரு ஆண்டுகள் வரை வாழ்ந்திருந்த இவர்கள் நீண்டகாலம் ஆதீனகர்த்தர்களாக விளங்கினார்கள். முன்னவர் களைப் போன்றே உலக விவகாரங்களில் அதிகம் கருத்துச் செலுத்தாதவர்களாக இருந்தார்கள்.

பதினொன்றாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ அம்பலவாண தேசிகர்

திருவாவடுதுறை ஆதீனத்தில் பதினைந்தாம்பட்டம் அம்பலவாண தேசிகர் காலத்தில், அம்பலவாண முனிவர் என்ற பெயருடன் மாணாக்கர்களுக்குப் பாடஞ்சொல்லிக் கொண்டிருந்த இவர், திருவாவடுதுறையினின்றும் அம்பலவாண தேசிகரால் அனுப்பப்பெற்றுச் சூரியனார்கோயிலுக்கு வந்து ஆதீனத் தலைமையை ஏற்றார். இவரைப் பற்றிய செய்திகள் ஐயரவர்களால் பிள்ளையவர்கள் சரித்திரத்தில் கூறப்பெற்றுள்ளன (முதற்பாகம் பக்கம் 77-81).

பன்னிரண்டாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ மாணிக்கவாசக தேசிகர்

திருவாவடுதுறை ஆதீனத் தம்பிரானாக இருந்து மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்களால் அனுப்பி வைக்கப் பெற்றுச் சூரியனார்கோயிலுக்கு வந்து ஆதீனகர்த்தராகப் பட்டமேற்றார்.

பதின்மூன்றாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேசிகர்

திருநெல்வேலி மாவட்டம் கயத்தாறு என்ற ஊரில் கார்காத்த வேளாளர் மரபில் தோன்றியவர். இவரும் இவருடைய தம்பி பரமசிவம்பிள்ளையும் இளமையிலேயே திருவாவடுதுறைக்கு வந்து உபதேசமும் துறவும் பெற்றுப் புலமையிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினர். சில காலத்திற்குப்பின் முத்துக்குமாரசாமித் தம்பிரான் ஆசாரியா

பிடேகம் பெற்றுச் சூரியனார்கோயிலாதீனத் தலைமையை ஏற்றார்.

ஆதீனத் தலைமையை ஏற்பதற்குமுன் திருவாவடுதுறையிலிருந்த காலத்திலேயே சிவஞான மாபாடியத்தை நன்கு பயின்றிருந்தார். சூரியனார்கோயிலாதீனத் தலைமைக்கு வந்த பின் இவ்வாதீன நூல்களனைத்தையும் ஆழ்ந்து பயின்று சாத்திரப் புலமையிற் சிறந்து விளங்கினார்கள். இவர்கள் காலத்தில், இவர்களளவு ஞானசாத்திரப் புலமையுடையவர்கள் அரிது என்னும்படிச் சிறந்து விளங்கினார்கள். சிவாக்கிர யோகிகளே மீண்டும் ஞானபீடத்தில் எழுந்தருளியுள்ளார்கள் என்று சைவ உலகம் போற்றிப் புகழ்ந்தது. இவர்களைப் புகலடைந்து உபதேசம் பெற்றவர்கள் பிறவிப்பயனை அடைந்ததாகவே கருதினர்.

இவர்கள் காலத்தில் இவர்கள் பெயரையே உடைய **இலக்கணம் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள்** மிகச்சிறந்த இலக்கண இலக்கிய சாத்திரப் புலமையுடன் விளங்கினார். கிரியாதீபிகையை அச்சிட்டு வெளியிட்டார். **சிவஞானமாபாடியம் முதன்முதலாக இலக்கணம் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகளால் 1921-ஆம் ஆண்டில் இவர்களது ஆதரவில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.** இவர்கள் 30 ஆண்டுகள் அருளாட்சி செய்தார்கள். இவர்களாலும், தம்பிரானாலும், நூல் வெளியீடுகளாலும் சூரியனார்கோயில் ஆதீனத்தின் புகழ் நாடெங்கும் பரவிற்று. தமக்குப்பின் பட்டத்திற்கு வருவதற்கு ஸ்ரீ மீனாட்சி சுந்தரதேசிகரை நியமித்தார்கள்.

இலக்கணம் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள்

பதின்மூன்றாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ முத்துக் குமாரசுவாமி தேசிகரின் காலத்தில் முத்துக்குமாரத்தம்பிரான் என்றொரு தம்பிரான் சுவாமிகள் மிகவும் புகழோடு விளங்கினார்.

இலங்கை யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். துறவறம் மேற்கொள்ள விரும்பிப் பதினான்காம் அகவையிலேயே

தமிழ்நாட்டுக்கு வந்தார். தில்லைச் சிதம்பரம் இவருக்குப் பிடித்தமான இடமாக இருந்தது. சிதம்பரத்தில் ஈசானியமடம் இராமலிங்க சுவாமிகளிடத்தில் இலக்கண இலக்கிய சைவ சித்தாந்த பாடங்களைக் கேட்டுக் கல்வியறிவிற் சிறந்து விளங்கினார். மேலும் சாத்திர நூல்களைக் கற்கவும் துறவு பெறவும் சூரியனார்கோயி லாதீனத்தை நாடினார். குருமகா சந்நிதானம் முத்துக்குமாரசாமி தேசிகரிடம் தீக்கையும் துறவும் பெற்றார். கல்வியறிவிலும் நற்குண நற்செய்கையிலும் சிறந்து விளங்கினார். இலக்கண அறிவாற்றலை மிகுதியாகப் பெற்றிருந்ததாலும் சிவனடியார்களுக்குரிய இலக்கணங்களி லெல்லாம் சிறந்து விளங்கினமையாலும் **இலக்கணச்சாமி** என்ற பெயரும் இவருக்கு உண்டாயிற்று.

அதுவரை அச்சேறாதிருந்த சிவஞான மாபாடியத்தை முதன்முதலாக அச்சிட்டு வெளியிட்டார். முத்திநிச்சயமாபாடியம் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளியிடப் பெறுவதற்குக் காரணமாக இருந்தார். சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் எழுதிய பெரியபுராண உரை இவராற் பார்வை யிடப் பெற்ற பிறகே வெளிவந்தது.

தில்லையில் காரைக்குடி சொக்கலிங்க ஐயாவால் அமைக்கப்பெற்ற மெய்கண்ட சித்தாந்த வித்தியா சாலை யிலேயே பெரும்பாலும் தங்கியிருந்தார். கிடைத்தற்கரிய நூல்கள் பல்வற்றைச் சேர்த்து வைத்திருந்தார். அவற்றை யெல்லாம் ஒரு நூல்நிலையமாக அமைத்து அதனை நடத்து வதற்குத் தம்மிடமிருந்த பொருளையும் உரிமையாக்கினார். இறுதியில் ஞானாவரணம் நூலை அச்சிடுவதற்காக ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். அந்நூற்பணி முற்றுப்பெறுவதற்கு முன் தமது எழுபதாம் அகவையில் 22.04.1949-இல் இறைவன் திருவடிநீழலை அடைந்தார். இவருடைய உடல் சிதம்பரத்தில் ஞானப்பிரகாச தீர்த்தம் குளக்கரையில் சமாதி வைக்கப் பெற்றது.

மாதவச் சிவஞானமுனிவரனார் தம் கைப்பட வரைந்த மாபாடிய ஏடுகள் திருவாவடுதுறை ஆதீனத்தில் மறைவாக

வழிபாட்டில் வைத்துப் பாதுகாக்கப் பெற்றன. யாருக்கும் படிக்கக் கொடுப்பதில்லை. பார்ப்பதற்குக்கூடக் காட்டுவ தில்லை. அணுக்கராக இருந்தவர்களுக்குப் பார்க்கக் கொடுப்பதுண்டு. அவ்வாறு ஒரு சந்தர்ப்பத்தில் இவர்கள் கைக்குக் கிடைத்த மூல ஏட்டை மிகவும் சிரமப்பட்டுப் படி எடுத்தார். அதைக் கொண்டே சிவஞானபாடியும் முதற்பதிப்பு அச்சிடப்பெற்றது. இவர்கள் சிவஞானமாபாடிய ஏட்டைப் படிஎடுத்ததே ஒரு சுவையான வரலாறு.

இவர்கள் பதிப்பித்த கிரியாதீபிகையின் பதிப்புரை யினின்றும் ஒரு பகுதியை அப்படியே கீழே தருகிறோம்.

அச்சிடப்பட்ட ஸ்ரீ அகோரசிவாசாரியர் பத்ததியிலே அவ்வவ்வருணத்துக்கும் ஆச்சிரமத்துக்குமுரிய ஆசாரங்கள் கிளந்து கூறப்படாமலும் விரவிக் கூறப்பட்டுஞ் சைவ சந்நியாச விதி முதலியன கூறப்படாமலிருப்பது நோக்கி அவையெல்லாங் கிளந்துகூறும் பத்ததி யாதெனத் தேடும் போது, 'எங்கள் ஆதீன துவிதீய குருமூர்த்திகள் அருளிச் செய்த சிவாக்கிரபத்ததி என்னும் கிரியாதீபிகையே அவ்வாறு கிளந்து கூறுகின்றது, அதனை நீ தேர்ந்துகொள்க' என்று, ஒன்றும் போதா நாயேனையும் உய்யக் கொண்டருளிய பரமகருணாநிதியாகிய எங்கள் சற்குருநாத சுவாமிகள் இப்பத்ததியை அளித்தருளினார்கள். இதனைப் பெற்றுக் கொண்டு அப்பரமாசாரிய சுவாமிகளது சந்நிதியிலேயே படித்து வருங்காலத்தில் 'இதனை இயற்றியருளிய குருமூர்த்தி களே சைவசந்நியாசபத்ததி என நான்குவருணத்துச் சந்நியாசிகளுக்குமுரிய ஒழுக்கநெறியை விரித்துக்கூறும் பத்ததியொன்று செய்தருளினார்கள், அதனையும் நீ எழுதிக் கொள்க, என்று கட்டளையிட்டு அப்பத்ததியையுங் குருசுவாமிகள் அளித்தருளினார்கள்.

சைவசந்நியாச பத்ததி என்பதைக் கேட்டவளவில் பேராவலுடன் அதனையே எழுதத் தொடங்கினேன். அஃது அழகமைந்த நுண்ணிய எழுத்துக்களாலாய இருபத்திரண்டு வரிகளமைந்த ஏட்டுச் சுவடியாக விருந்தமையின் எழுதி முடித்தற்கு நீண்டகாலமாயிற்று. ஆனபின்னும் இந்நூலை ஆராயும்போது இதன்கண் காணப்படும் பிரமாண சுலோகங்கள் பல பிறழ்ந்துஞ் சிதைத்துங் குறைந்துங் காணப்பட்டன.

அவற்றுட் பல சுலோகங்கள் ஸ்ரீ சோமசம்பு பத்ததியிலுள்ளன வாகத் தெரிந்து அப்பத்ததியைத் தேடி எழுதிக் கொண்டு மீண்டும் இதனை ஆராயப்புக்கபோது ஸ்ரீ சிவாக்கிரபாடியம் அச்சிடும் பொருட்டு எங்கள் சற்குருநாத சுவாமிகளது திருமுன்பே வடமொழி வல்லுநர் சிலரொடு பலதேசத்துப் பிரதிகளையும் ஒப்புநோக்கும் பணியிலே சிறிதுகாலஞ் சென்றது. அதன்பின் எங்கள் குருசுவாமிகள் அடியேன்மீது பேரருள் சுரந்து திராவிட மாபாடியத்தை அளித்தருளி 'இதனைத் தனியேயிருந்து விரைவாக எழுதி முடிப்பாயாக' எனப் பணித்தருளலும் அப்பேரருட்பணியைச் சென்னிமேற் கொண்டு பிற பணியெல்லாம் மறந்து ஒடுக்கத்திலேயே யிருந்து அதனை எழுதி முடிப்பதற்கு ஓராண்டு சென்றது. ஆயுந்தொறுந்தொறும் இன்பந்தரும் அத்தமிழ்ப்பெரும் பாடியத்தையன்றிப் பிறிதொன்றையும் உள்ளம் நாடாமையால் இந்நூலாராய்ச்சி நடைபெறாதாயிற்று.

சாத்திர ஏடுகளைப் பற்றிய அரிய செய்திகள் இதனால் தெரிகின்றன. சைவசந்நியாச பத்ததி என்ற பெயரைக் கேட்ட அளவிலேயே பேராவலுடன் எழுதத் தொடங்கினார். அவ்வேடு நுண்ணிய எழுத்துகளால் இருபத்திரண்டு வரிகள் கொண்டதாக இருந்தது. திராவிட மாபாடியத்தைக் கொடுத்த போது 'இதனைத் தனியே இருந்து விரைவாக எழுதி முடிப்பாயாக' என்று கூறிக் கொடுக்கப் பெற்றது. 'தனியே இருந்து விரைவாக எழுதி முடிப்பாயாக' என்பது மிகவும் கவனிக்கத்தக்கது. அவ்வாறே இவர் மற்ற பணிகளை யெல்லாம் மறந்து ஒடுக்கத்திலேயே இருந்து அதனை எழுதி முடிப்பதற்கு ஓராண்டு ஆயிற்று.

சைவசித்தாந்தப் பேரறிஞர் க. வச்சிரவேல் முதலியார், சைவசித்தாந்த மகாசமாஜத் திங்களிதழ் ''சித்தாந்தம்'' 1963 அக்டோபர் இதழில் ''ஆராய்தற்குரிய சில உரைப்பகுதிகள்'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதில் மாபாடிய ஏடுகளைப் பற்றிச் சுவையான சில செய்திகளை எழுதியுள்ளார். அப்பகுதியையும் அப்படியே கீழே தருகிறோம். அது வருமாறு:



இலக்கணம் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் 22 வரிகள் கொண்ட நுண்ணேட்டைக் குறிப்பிடுகிறார்.

படத்திற்காண்பது 54 வரிகள் கொண்ட ஒரு நுண்ணேடு.
அளவு 17 செ.மீ. x 4.9 செ.மீ.

இந்நுண்ணெழுத்து ஒற்றை ஏட்டை எமக்குக் கொடுத்தவர்
சிதம்பரம் உலகமூர்த்திதேசிகர் மடம் ந. சிவப்பிரகாச தேசிகர்.

''காலஞ்சென்ற சைவப் பெரியோர் சிவத்திரு ஈசான சிவாசாரிய சுவாமிகள் நம் சைவ ஆதீனங்களில் ஏடுகள் வைத்துக் காத்து வந்த முறை பற்றிச் சில ரசமான செய்திகள் கூறியதுண்டு; மாபாடிய கருத்தரிடம் சிவஞானபோதச் சிற்றுரை பேருரைகளைப் பாடங்கேட்ட தம்பிரான்மார்கள் வேறு வேறு படிகள் எழுதிக்கொண்டு வந்திருக்கின்றார்கள்: அவற்றுட் சிலவே பிறருக்குக் கொடுக்கப்பட்டவை. யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்களால், கற்றுணர்தற்கும் பின் அச்சிடுதற்கும் கொடுக்கப்பெற்ற சிவஞானபோதச் சிற்றுரையும் அத்தகையதே. அதனாற்றான், அந்நூலின் பெரும் பிரிவுகள் சிவஞான சுவாமிகள் திருக்குறிப்பின்படி பொதுவதிகாரம், உண்மையதிகாரம் எனக் குறிக்கப் பெறாமல், பொதுவியல்பு, சிறப்பியல்பு என்னும் தலைப்புக் களால் குறிக்கப் பெறுபவை ஆயின.

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடம் பெற்ற ஒரு மாபாடியப்பிரதியை நெருக்கடியான நிலையில் ஓர் அறையில் மறைவில் பழைய கால விளக்கின் உதவி கொண்டு இலக்கணம் சுவாமிகள் எனப்படும் ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அரிதின் முயன்று செய்த காகிதப்படியே முதல் முதல் வெளிவந்த மாபாடியத்திற்கு மூலமாக இருந்தது. அவ்வெளியீட்டில் விடுபட்ட சிலவற்றை ஷி சுவாமிகளே சிவஞான சுவாமிகள் செய்துள்ள பிற நூல்களோடு ஒப்பிட்டு நிரப்பியும் திருத்தியும் உதவி வந்திருக்கிறார்கள்.

இன்னும் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பண்டார சந்நிதி களிடம் மகாவித்வான் ஸ்ரீலஸ்ரீ சபாபதி நாவலர் அவர்கள் ஒரு மாபாடியப் பிரதியைப் படித்தற் பொருட்டுப் பெற்றுப் பின் அதனை மடத்திற்குத் திருப்ப நேருமே எனக்கருதி மடத்திற்கே செல்லாமல் இருந்துவிட்டார் எனவும், அவரிடம் இருந்த மாபாடியப் பிரதி இப்போதிருக்கும் இடம் தெரியவில்லை எனவும் கூறக் கேட்டுள்ளேன்''.

''நெருக்கடியான நிலையில் ஓர் அறையில் மறைவில் பழையகால விளக்கின் உதவி கொண்டு அரிதின் முயன்று செய்த காகிதப்படியே முதல் முதல் வெளிவந்த மாபாடியத்

திற்கு மூலமாக இருந்தது'' என்று வச்சிரவேல் முதலியார் எழுதுவதைக் கவனிக்க வேண்டும். எழுதி முடிப்பதற்கு ஓராண்டு ஆயிற்று என்று எழுதிய முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிகளே கூறுகிறார். ஒடுக்கத்திலேயே இருந்து எழுதி யிருக்கிறார். வேறெங்கும் விருப்பம்போல் வசதிக்கேற்ப எடுத்துச் சென்று எழுதிக்கொள்ள இயலாதநிலை.

அந்தக் காலத்தில் இப்படி என்றால் இப்போது ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் வச்சிரவேல் முதலியாரின் கடைசி காலத்தில் அவரை, திருவாவடுதுறை ஆதீனத்தார் மாபாடிய மூல ஏடுகளை அச்சுப் பிரதிகளுடன் ஒப்புநோக்கி ஆராய்வதற்காகப் பணியில் நியமித்தார்கள். மிகமிகக் குறைந்த ஊதியம். ஆர்வத்தால் ஊதியத்தைக் கருதாது முதலியார் பணியிற் சேர்ந்தார். பல மாதங்கள் சென்றன. ஒன்றும் நடைபெறவில்லை. திருவாவடுதுறைக்கே சென்று முதலியாரைக் கண்டு நாம் பேசினோம். ஏமாற்றத் துடன் பேசினார். சில காலத்துக்குப்பின் அத்திட்டம் நின்று போயிற்று. நிறைவேறவில்லை.

பதினான்காவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ மீனாட்சிசுந்தர தேசிகர்

(1918-1947)

இவர்கள் திருநெல்வேலி மாவட்டம் சேற்றூரில் சைவ வேளாளர் மரபில் குவலயானந்தத்தைத் தமிழில் மொழி பெயர்த்த மீனாட்சிசுந்தரக்கவிராயர் பரம்பரையில் 1896-இல் பிறந்தவர்கள். இளமையில் முன்பட்டம் முத்துக்குமாரசுவாமி தேசிகரை அடுத்துப் பாடங்கேட்டு உபதேசமும் துறவும் பெற்றவர்கள். கிரியாதீபிகை, சைவசந்நியாச பத்ததி, சிவநெறிப்பிரகாசம் ஆகிய மூன்றும் உரையுடன் இவர்க ளுக்கு மனப்பாடம். இந்த நூல்களில் எந்த இடத்தில் விளக்கம் கேட்டாலும் கையில் புத்தகம் இன்றியே அவற்றின் பக்கம் வரி முதலானவற்றுடன் மிகச்சரியாக விளக்கங்கூறும் ஆற்றல் பெற்றவர்கள். முத்துக்குமாரசாமி

தேசிகருக்குப் பின் 14-ஆம் பட்டம் குருமகாசந்நிதானமாக 29 ஆண்டு காலம் அருளாட்சி செய்தவர்கள்.

இவர்களது புகழ் நாடெங்கும் பரவிற்று. அதைப் பொறுக்காத தியாகராசத்தம்பிரான் என்பவர் ஊரிலும் ஆதீனத்திலும் பெருங்கலகத்தை ஏற்படுத்தி இவர்களை விரட்டி விட்டார். இரவோடிரவாக இவர்கள் வெளியேற நேர்ந்தது. சூரியனார்கோயிலாதீனத்திற்குக் கெட்டகாலமான அது நாட்டுக்கு நல்லகாலமாயிற்று. சூரியனார்கோயில் ஆதீனத்தினின்றும் வெளியேறிய ஸ்ரீ மீனாட்சிசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் அன்னப்பன்பேட்டைக்குச் சென்று அங்கே தாயுமான சுவாமிகள் ஆதீனத்தில் பத்தாவது பட்டம் குருநாதராக அமர்ந்தார். பெயரளவில் அவ்வாறிருந்தார்களே யன்றி, தமிழ் நாடெங்கும் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று பல இடங்களில் தங்கிப் பன்னூற்றுக்கணக்கானவர் களுக்குச் சமய விசேட தீக்கைகள் செய்வித்தும், சிவபூசை எழுந்தருள்வித்தும் அருள்வதையே வாழ்நாட்பணியாகக் கொண்டிருந்தார்கள். இவர்களிடம் தீக்கை சிவபூசை பெற்றோர் எண்ணிக்கை நூற்றுக்கணக்கைத் தாண்டிற்று. இறுதிவரை இவர்களைச் ''சூரியனார்கோயில் ஆதீனம்'' என்றே நாடு அழைத்தது. இன்றைய மூத்த தலைமுறையினர்க்குச் சூரியனார் கோயில் ஆதீனம் என்றால் இவர்களே. பழனி ஈசான சிவாசாரியரிடம் தீக்கை பெற்றதாகச் சொல்லிக் கொள்வதும் சூரியனார்கோயிலாதீனத்திடம் (இவர்களிடம்) தீக்கை பெற்றதாகச் சொல்லிக் கொள்வதும் ஒரு பெருமையாகவே விளங்கிற்று, இப்போதும் விளங்குகிறது. திருத்தவத்துறை (லால்குடி) திருக்குறள்வேள் குரு. வரதராசபிள்ளை இவர் களிடம் சிவதீக்கையும் சிவபூஜையும் பெற்றவர். பெரும்புலவர் முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் காஞ்சிபுரம் தொண்டமண்டல ஆதீனகர்த்தராக, ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளாகப் பதவி ஏற்றபோது ஆசாரியா பிஷேகமும் ஞானாபிஷேகமும் செய்வித்தருளியவர்கள் இவர் களே. இறைஞானபோதம், ஆன்மார்த்த பூஜை விளக்கம், ஆன்மலாபதீபிகை என்ற மூன்று நூல்களை இயற்றியருளிய

இவர்கள் அன்னப்பன்பேட்டையில் 07.07.1983-இல் சிவப் பேறு எய்தினார்கள்.

பதினைந்தாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர்
1947 - 1959

பதினாறாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ முத்துக்குமார தேசிகர்
1959 - 1967

பதினேழாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ வேலாயுத தேசிகர்
13.03.1967 - 1973.

இம்மூவரும் திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து அனுப்பி வைக்கப் பெற்றுப் பட்டத்திலிருந்தவர்களே.

பதினெட்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ சிவகுருநாத தேசிகர்
11.03.1973 - 22.12.1974

திருப்பனந்தாள் காசிமடத்தில் காரியஸ்தராகப் பணி யாற்றித் திருவாவடுதுறையாதீனத்திற்கு வந்து துறவு பெற்று அங்கிருந்து அனுப்பப்பெற்றுப் பட்டத்திலிருந்தவர்கள்.

பத்தொன்பதாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ தெய்வசிகாமணி தேசிகர்
22.07.1974 - 04.09.1990

திருவாரூரில் அபிஷேகஸ்தர் மரபிற் பிறந்தவர். திருவாவடுதுறை ஆதீனத்தில் காரியஸ்தராகப் பணி புரிந்தவர். இல்லறத்தில் இருந்தவர். தோத்திர சாத்திரப் பயிற்சியும் துறவுள்ளமும் உடைய இவர்கள் திருவாவடுதுறையாதீனத்தில் துறவு பெற்றுச் சூரியனார்கோயிலுக்கு ஆதீனகர்த்தராக அனுப்பி வைக்கப் பெற்றார்கள். பதினாறு ஆண்டுகள் அருளாட்சி புரிந்தார்கள். அக்காலத்தில் நம்மோடு பழக்கமுடையவர்கள். பல மாநாடுகளில் நம்மோடு கலந்துகொண்டிருக்கிறார்கள்.

இப்போது

இருபதாவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி விளங்குபவர்கள்

ஸ்ரீலஸ்ரீ சங்கரலிங்க தேசிக பரமாசாரிய சுவாமிகள்

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் வட்டம் கோடரங்குளம் கிராமத்தில் பிறந்தவர்கள். இளமையிலேயே அருளியல் நாட்டங்கொண்டு திருவாவடுதுறை ஆதீனத்திற்கு வந்துசேர்ந்து துறவு பெற்றார்கள். திருவாவடுதுறை ஆதீனத்தின் மூத்த தம்பிரான் சுவாமிகளில் ஒருவராகிய இவர்கள் திருவெண்ணெய்நல்லூர்க் கிளைமடத்திலும் காஞ்சிபுரம் கிளைமடத்திலும் தம்பிரான் சுவாமிகளாக இருந்தார்கள். திருவெண்ணெய்நல்லூர்க் கிளைமடம் மெய்கண்டாரின் முத்தித்தலம். காஞ்சிபுரம் கிளைமடம் சிவஞானமுனிவரும் கச்சியப்பமுனிவரும் உறைந்த இடம். கச்சியப்பமுனிவரின் முத்தித்தலம். அவர் சமாதியுள்ள இடம். இவ்விரு கிளை மடங்களிலும் சிறப்பாகப் பணியாற்றிய இவர்கள் 01.03.1990 -இல் திருவாவடுதுறை ஆதீனத்தில் இப்போது குருமகா சந்நிதானமாக 23-ஆம் பட்டத்தில் எழுந்தருளி விளங்கும் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகளிடம் மந்திர காஷாயம் பெற்றுச் சூரியனார் கோயிலாதீனத்திற்கு அனுப்பப்பெற்றார்கள்.

சூரியனார்கோயிலில் 19-ஆம் பட்டம் ஸ்ரீ தெய்வ சிகாமணி தேசிக குருமூர்த்திகள் 04.09.1990-இல் சிவப்பேறு எய்தவே ஆதீன மரபின்படி ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் குருமூர்த்த கோமுகை அபிடேகம் பெற்றுப் பத்துநாள் குருமூர்த்தப் பூசையும் மாகேசுர பூசையும் செய்து 13.09.1990 அன்று முறைப்படி ஞானபீடத்தில் எழுந்தருளி அருளாட்சி செய்து வருகிறார்கள். (முன்னைய குருமூர்த்திகள் சிவப்பேறெய்திய நாளாகிய 04.09.1990-இல் இருந்தே இவர்கள் பட்டத்திலி ருப்பதாகக் கொள்ள வேண்டும்).

சைவசமய வளர்ச்சியிலும் ஆதீன மேன்மையிலும் அளப்பரும் ஆர்வங்கொண்ட இவர்கள் அதற்கேற்பப் பல்வேறு பணிகளைச் செய்து வருகிறார்கள். ஆதீன வரலாற்றைச்

சிறுநூலாக வெளியிட்டிருக்கிறார்கள். ஆதீன மடாலயத்திற்கு ஒரு முழுமையான திருப்பணியைச் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். சமய மாநாடுகளிலும் திருக்கோயிற் குடநீராட்டு விழாக்களிலும் கலந்துகொண்டு சிறப்பித்து அருளாசி வழங்குகிறார்கள்.

''சிவ சிவ'' (சூரியனார்கோயில் ஆதீனத் திங்களிதழ்) என்று ஒரு திங்களிதழ் 1999 செப்டம்பர் மாதம் முதலாக வெளியிடப் பெற்றுவருகிறது. நல்ல கட்டுரைகளும் பல்வேறு ஆராய்ச்சிக் குறிப்புகளும் இதில் வெளிவருகின்றன. இதழாசிரியர் தி. திருநாவுக்கரசு, பி.எஸ்.ஸி.

சுந்தரப்பெருமாள்கோயில் வித்துவான் திரு.மா. சிவகுருநாதப் பிள்ளையின் மகனார் **திரு சிவ. திருச்சிற்றம்பலம்** அவர்களும், ஜெயங்கொண்டசோழபுரம் **திரு தி. பாலசுப்பிரமணியன்** (முதல்வர், மாவட்ட ஆசிரியப் பயிற்சி நிறுவனம்) அவர்களும் ஆதீன வித்துவான்களாகத் தொண்டு புரிந்து வருகின்றனர்.

சூரியனார்கோயில் ஆதீன குருமரபு அட்டவணை

1. ஸ்ரீகண்ட பரமசிவம்
2. **ஸ்ரீ கந்தகுரு (கந்தஸ்வாமி)**
3. ஸ்ரீலஸ்ரீ வாமதேவ முனிவர்
4. ஸ்ரீலஸ்ரீ நீலகண்ட சிவாசாரியர்
5. ஸ்ரீலஸ்ரீ விசுவேசுவர சிவாசாரியர்
6. ஸ்ரீலஸ்ரீ சதாசிவ சிவாசாரியர்
7. ஸ்ரீலஸ்ரீ சிவமார்க்கப் பிரகாச தேசிகர்

1\. 8. **ஸ்ரீலஸ்ரீ ஆதி சிவாக்கிர யோகிகள்**
2\. 9. ஸ்ரீலஸ்ரீ வீழிச் சிவாக்கிர யோகிகள்
3\. 10. ஸ்ரீலஸ்ரீ நந்தி சிவாக்கிர யோகிகள்
4\. 11. ஸ்ரீலஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர்
5\. 12. ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்க தேசிகர்

6. 13. ஸ்ரீலஸ்ரீ சிதம்பரநாத தேசிகர்

7. 14. ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகர்

8. 15. ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிகர்

9. 16. ஸ்ரீலஸ்ரீ நமசிவாய தேசிகர்

10. 17. ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்

11. 18. ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்

12. 19. ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிகர்

13. 20. ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேசிகர்

14. 21. ஸ்ரீலஸ்ரீ மீனாட்சிசுந்தர தேசிகர்

15. 22. ஸ்ரீலஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர்

16. 23. ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார தேசிகர்

17. 24. ஸ்ரீலஸ்ரீ வேலாயுத தேசிகர்

18. 25. ஸ்ரீலஸ்ரீ சிவகுருநாத தேசிகர்

19. 26. ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி தேசிகர்

20. 27. **ஸ்ரீலஸ்ரீ சங்கரலிங்க தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

13.09.1990 முதல் எழுந்தருளி இப்போது அருளாட்சி செய்து வருகிறார்கள்.

ஆதீன நிறுவனர் முதலாகப் பட்டங்களின் எண்ணிக்கை கணக்கிடப்பெறுவதே பொதுவாக வழக்கத்திலுள்ளது. ஆனால் சூரியனார்கோயில் ஆதீனத்தார் மட்டும் ஸ்ரீகண்ட பரமசிவம் முதலாகவே பட்டங்களைக் கணக்கிட்டு இப்போது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருப்பவர்களை 27-ஆம் பட்டமாகக் கொள்கின்றனர். நிறுவனர் சிவாக்கிர யோகிகளை முதற்பட்டமாகக் கொண்டால் இப்போதுள்ள வர்கள் 20-ஆம் பட்டம். நாம் இந்நூலில் இப்படித்தான் கொண்டிருக்கிறோம். மேலே, குருமரபு அட்டவணையில் இருவகை எண்ணிக்கையையும் காட்டியுள்ளோம்.

தொண்டைமண்டல ஆதீனம்

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் என்றதுமே காமகோடிபீடம் சங்கரமடம்தான் எல்லாருக்கும் நினைவுக்கு வரும். காஞ்சிபுரத்தில் ஒரு பழைமையான சைவமடம் இருப்பதே பலருக்குத் தெரியாது. தொண்டை மண்டலத்தின் பண்பாட்டுத் தலைநகர் காஞ்சிபுரம். தொண்டை மண்டல சைவவேளாளர்களுக்குரிய குருபீடம் காஞ்சிபுரத்தில் உள்ளது. அதுதான் தொண்டைமண்டல ஆதீனம். தொன்மை யானது. இப்போது 232-ஆம் பட்டம்.

தொண்டைமண்டல ஆதீனம்

காஞ்சிபுரம்

தொண்டைமண்டலம்

பழங்காலத்தில் தமிழ்நாடு சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என மூன்று நாடுகளாக விளங்கிற்று. சேர மண்டலம், சோழமண்டலம், பாண்டியமண்டலம் என்றும் கூறப்பெறும். பின்னாளில் தொண்டைநாடு தொண்டை மண்டலம் என்று நான்காவது நாடு (மண்டலம்) ஒன்றும் உருவாயிற்று. இன்னும் பின்னாளில் நடுநாடு உருவாயிற்று. இதை நடுமண்டலம் என்று சொல்லும் வழக்கமில்லை. சேரநாட்டின் ஒருபகுதி கொங்குநாடு என்றும் கொங்கு மண்டலம் என்றும் பின்னாளில் வழங்கப்பெற்றது. சேர (கொங்கு), சோழ, பாண்டிய, தொண்டை, நடு என்று ஐந்து நாடுகளாக ஐந்து மண்டலங்களாகத் தமிழ்நாடு விளங்கிற்று.

சேலம் கோயம்புத்தூர் முதலிய மாவட்டங்கள் சேர மண்டலம். பின்னாளில் கொங்கு மண்டலம். இன்றைய கேரள மாநிலமும் அதில் சேர்ந்ததே. திருச்சிராப்பள்ளி தஞ்சாவூர் முதலிய கிழக்கு மாவட்டங்கள் சோழமண்டலம். மதுரை இராமநாதபுரம் முதலிய தென் மாவட்டங்கள் பாண்டிய மண்டலம். சென்னை செங்கற்பட்டு மாவட்டங்களும் அதற்கு வடக்கே வேங்கடம் (திருப்பதி) வரையும் தொண்டை மண்டலம். தென்னார்க்காடு மாவட்டமும் வட ஆர்க்காடு மாவட்டத்தின் பெரும் பகுதியும் நடுநாடு. அப்பரும் சுந்தரரும் பிறந்தருளியது நடுநாடு. வள்ளலாரின் வடலூர் நடுநாடு.

நீதிசதகங்கள் மண்டலசதகங்கள் எனச் சதக நூல்கள் இருவகை. குமரேசசதகம் தண்டலையார் சதகம் முதலியன

நீதிசதகங்கள். தொண்டைமண்டல சதகம், சோழமண்டல சதகம், பாண்டிமண்டல சதகம், கொங்குமண்டல சதகம், கார்மண்டல சதகம் ஆகியவை மண்டல சதகங்கள். மண்டல சதகங்களுள் சிறந்ததும் புகழ் பெற்றதும் தொண்டைமண்டல சதகமே. தொண்டைமண்டல சதகத்தை முதன்முதலிற் பதிப்பித்தவர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள். தொண்டை மண்டலம் என்ற பெயரிலேயே அக்காலத்தில் ஒரு விவாதம். தொண்டைமண்டலமா அல்லது தொண்டமண்டலமா, டகர ஐகாரமா அல்லது டகரமா என்பதே அவ்விவாதம். டகரம் தான், தொண்டமண்டலம் என்றே வழங்க வேண்டும், தொண்டைமண்டலம் என்று வழங்கலாகாது என்று வள்ளற் பெருமான் தொண்டமண்டல சதகப் பதிப்பில் நிறுவுகிறார். ஆயினும் தமிழுலகம் இன்றும் தொண்டைமண்டலம் என்றே வழங்கிவருகிறது. ஆதீனத்தாரும் அவ்வாறே வழங்கி வருகின்றனர். நாம் இந்நூலில், இன்று பொதுவாக வழங்கும் வழக்கையும் ஆதீன வழக்கையும் அனுசரித்துத் தொண்டை மண்டல ஆதீன வரலாறாகிய இப்பகுதியில் மட்டும் தொண்டை மண்டலம் என்று எழுதியிருக்கிறோம். நூலில் பிற இடங்களில் வள்ளற்பெருமானைப் பின்பற்றித் தொண்ட மண்டலம் என்றே கொண்டிருக்கிறோம்.

தொண்டைமண்டல ஆதீனம்

மண்டலத்தின் பெயரால் தொண்டைமண்டல ஆதீனம் என்று பெயர் விளங்கும் ஒரே ஆதீனம் இது. தொண்டை மண்டலத்தின் பண்பாட்டுத் தலைநகராகிய காஞ்சிபுரத்தில் உள்ளது. காஞ்சிபுரம் என்றதும் காமகோடிபீடம் சங்கரமடம் தான் எல்லாருக்கும் நினைவுக்கு வரும். காஞ்சிபுரத்தில் ஒரு பழைமையான சைவ ஆதீனம் உள்ளதென்பது பொதுவாகப் பலரும் அறியாதது. காஞ்சிபுரம் சங்கரமடத்தை உலகம் அறிந்துள்ள அளவுக்குக் காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனத்தை உலகம் அறியாது. இதுபோன்ற பல செய்தி களை அறிவிப்பதற்கென்றே இந்நூல் எழுதப்பெறுகிறது. சைவ வேளாளர்களில் ஒரு பிரிவினர் தொண்டைமண்டல வேளாளர் எனப்பெறுவர். சைவ முதலியார்கள் என்றும் தொண்டை

மண்டல முதலியார்கள் என்றும் வழங்கப் பெறுவர். தொண்டைமண்டல எல்லைக்குள் வாழ்ந்தாலும் அல்லது வேறு எங்கு வாழ்ந்தாலும் தொண்டைமண்டல சைவ வேளாளர் அனைவருக்கும் உரிய குருபீடம் இது. சேக்கிழார் தொண்டைமண்டல வேளாளர். அம்பி அறம்வளர்த்தான், அரியநாயக முதலியார் முதலானோர் இவ்வாதீனத்தைப் போற்றியவர்கள். முதலமைச்சர் பக்தவத்சலம், பெருந்தகை பி.டி. இராசன் முதலியவர்கள் தொண்டைமண்டல வேளாளர்கள். இவர்களுக்கெல்லாம் குருபீடம் இது. பழைமையான குருபீடம். இப்போது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி விளங்குபவர்கள் 232-ஆம் பட்டம் என்றால், இதிலிருந்தே இவ்வாதீனத்தின் பழைமையை அறியலாம்.

ஆதீன நிறுவனர் கச்சி ஞானப்பிரகாசர்

சீகாழிச் சிற்றம்பலநாடிகளைப் பற்றி முன்னே தருமபுர ஆதீன வரலாற்றில் கூறியுள்ளோம். சிற்றம்பலநாடிகளின் சீட பரம்பரையில் காஞ்சி (கச்சி) ஞானப்பிரகாசர் எனப் பலர் ஒருவர் பின் ஒருவராக வருகின்றனர். அவர்களில் ஒருவராகிய (கச்சி) ஞானப்பிரகாசரே காஞ்சிபுரத்தில் தொண்ட மண்டல ஆதீனத்தை நிறுவியவர். காலம் 14-ஆம் நூற்றாண்டு. இவ்வாதீன குருமார்கள் அனைவருக்குமே ஞானப்பிரகாசர் என்பது பொதுப்பெயராக விளங்குகிறது. மடமும் காஞ்சி ஞானப்பிரகாசர் மடம் என்று வழங்கப்பெறுகிறது. மடத் திலுள்ள கோயிலுக்கு மெய்கண்டார் கோயில் என்று பெயர். மெய்கண்டார் மடம் எனவும் மடத்தின் பெயர் வழங்கும். ஆதீனத்தின் ஆன்மார்த்த வழிபாட்டில் சிற்றம்பல நாடிக ளுக்கு முக்கிய இடம் உண்டு. தங்கள் ஆதீன மூல குரு மூர்த்திகளாகச் சிற்றம்பலநாடிகளையே இவ்வாதீனத்தார் கொள்கிறார்கள். சிற்றம்பலநாடிகளுக்குக் குருபூஜையும் உண்டு. மெய்கண்டார் கோயிலில் சிற்றம்பலநாடிகளின் கற் சிலையும் செப்புச்சிலையும் வழிபாட்டிலுள்ளன.

வழிவழி வந்த காஞ்சி ஞானப்பிரகாசர்களில் ஒருவர் புராணத்திருமலைநாதருக்குக் குருவாய் விளங்கியவர்.

இன்னொரு ஆசாரியரான கச்சி ஞானப்பிரகாசர் கிருஷ்ண தேவராயர் காலத்தில் ராயரால் நன்கு மதிக்கப்பெற்றவர். ராயரின் மீது மஞ்சரிப்பா பாடியவர். கச்சிக்கலம்பகம் பாடியவர்.

இவ்வாதீனம் ஒரு காலத்தில் மிகச் சிறப்பாக விளங்கிற்று. நாடெங்கும் 24 கிளை மடங்கள் இருந்தன என்பர். காஞ்சிபுரம் சபாபதி முதலியார், புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார், பூவை அட்டாவதானம் கலியாணசுந்தர முதலியார், மோசூர் கந்தசாமி முதலியார், இருக்கம் ஆதிமூல முதலியார், கொன்றைமாநகரம் அழகப்ப முதலியார், வல்லை சண்முகசுந்தர முதலியார், ஈக்காடு இரத்தினவேலு முதலியார் முதலிய பேரறிஞர்கள் இம்மடத்துச் சீடர்களே. முதலமைச்சர் பக்தவத்சலம், பி.டி. இராசன் முதலியவர் களுக்கு இதுவே குருபீடம் என்பதை முன்பே கூறியுள்ளோம். இவ்வளவு சிறந்த இவ்வாதீனம் இடைக்காலத்தில் சரியாகப் பராமரிக்கப்பெறவில்லை. 1963-க்குமுன் ஏறத்தாழ ஏழு ஆண்டுகள் ஆதீனகர்த்தரே இல்லாத நிலை. சொத்துகளும் ஆவணங்களும் பராமரிப்பின்றி மிகவும் பாதிக்கப்பெற்றன.

228 பட்டங்கள் முடிய வரலாறு சரியாகத் தெரிய வில்லை. ஏனைய ஆதீனங்களின் குருமரபுகளைவிட இவ் வாதீன குருமரபு நீண்டதாக உள்ளது. 232 பட்டங்கள் வரை நீள்கிறது. இப்போது எழுந்தருளியுள்ளவர்கள் 232-ஆம் பட்டம். ஏனைய ஆதீனங்களில் திருவாவடுதுறை 23-ஆம் பட்டம், தருமபுரம் 26-ஆம் பட்டம், திருப்பனந்தாள் 21-ஆம் பட்டம், சூரியனார்கோயில் 20-ஆம் பட்டம், மதுரை 292-ஆம் பட்டம், குன்றக்குடி 46-ஆம் பட்டம். மதுரை ஆதீனம் ஒன்றைத் தவிர மற்ற எதுவும் 50-க்கு மேற் போகவில்லை. சராசரி 25 எனலாம். குன்றக்குடி ஆதீனம் உமாபதி சிவத்துக்குப் பின் தோன்றாமல் அருணந்திசிவத்தின் நேர் மாணாக்கரிடமிருந்தே தோன்றுவதால் 46 பட்டம் ஆயிற்று. மதுரை ஆதீனம் திருஞானசம்பந்தர் காலத்திலிருந்தே தொடர் வதால் 292-ஆயிற்று. ஆனால் தொண்டைமண்டல ஆதீனம்

232 பட்டங்கள் வரை நீள்வது எப்படி? சிற்றம்பல நாடிகளின் மாணவர் கச்சி ஞானப்பிரகாசர். இவர் காலத்திலிருந்து கணக்கிட்டால் 25 பட்டத்திற்கு மேல் நீளாது. சிற்றம்பல நாடிகளுக்கு வெகு காலத்திற்கு முன்பிருந்தே பட்டம் கணக்கிடுகிறார்கள். இதற்கு வாய்மொழியாகச் சொல்லப் பெறும் காரணம் பழங்காலத்தில் இது குலகுரு மரபாகக் காஞ்சிக் கோயிலை ஒட்டி அமைந்திருந்தது, பின்பு கச்சி ஞானப்பிரகாசரால் இப்போது உள்ள இடத்தில் மடமாக (ஆதீனமாக) அமைக்கப்பெற்றது என்பதே. ஞானப்பிரகாசருக்கு முன்பு ஆதிமுதல் குலகுரு மரபாகத் தொடர்ந்து இருந்து வந்தவர்களையும் கணக்கிட்டு இப்போது 232-ஆவது பட்டம் என்று கொள்கிறார்கள். இது விஷயத்தில் இவ்வளவில் அமைவோம்.

228-ஆம் பட்டம் சுவாமிகள் சிவப்பேறு பெற்றபின் ஏறத்தாழ ஏழாண்டு காலம் ஆதீனம் சந்நிதானமின்றியே இருந்தது.

229-ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

1963 நவம்பர் - 28.07.1977

228-ஆவது குருமகாசந்நிதானத்தின் காலத்திற்குப் பின்பு ஏறத்தாழ ஏழாண்டு காலம் குருமகாசந்நிதானமாக யாரும் இல்லாத நிலையில் முறையான பராமரிப்பின்றியிருந்த ஆதீனத்திற்கு 1963-ஆம் ஆண்டில் ஒரு நல்லகாலம் வந்தது. மாபெரும் சைவத்தமிழறிஞர் வித்துவான் முத்து சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள் ஆதீனச் சீடர்களாலும் சமூகப் பெருமக்களாலும் குருமகாசந்நிதானமாகத் தெரிந் தெடுக்கப் பெற்று ஆதீனகர்த்தராகப் பொறுப்பேற்றார்கள். அதிலிருந்து ஆதீனத்தின் புதிய சகாப்தம், தற்கால வரலாறு, தொடங்குகிறது.

முத்து. சு. மா. அவர்கள் பரம்பரைப் புலவர் குடும்பத்திற் பிறந்தவர்கள். பிறந்த ஊர் வேலூர் மாவட்டம் ஆரணி

அருகிலுள்ள காமக்கூர். தந்தையார் காமக்கூர் முத்து. சுந்தர முதலியார் (16.11.1873-06.06.1941) அவர்களே பெருந்தமிழ்ப் புலவர். அவரது வரலாறே ஒரு சிறந்த வரலாறு.

முத்து. சு. மா. பிறந்தநாள் 22.10.1901. பெற்றோர் இட்ட பெயர் மாணிக்கவாசகம். சென்னைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டம் பெற்று ஆரணி போர்டு உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக விளங்கினார். சிலகாலம் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நூற்பதிப்புப் பணியாற்றினார். பிற் காலத்தில் தருமபுர ஆதீனப் புலவரானார். தருமபுர ஆதீனத் தமிழ்க்கல்லூரியில் பேராசிரியராகவும் முதல்வராகவும் திகழ்ந்தார். நூல்கள் பலவற்றைப் பதிப்பித்தார். அது 25-ஆம் பட்டம் சந்நிதானம் கயிலைக்குருமணியின் காலம். முத்து.சு.மா.வின் தமிழ்ப் பணிகளையும் சைவப்பணிகளையும் விரித்துக்கூறின் அதுவே ஒரு பெருங்கட்டுரையாகிவிடும். அவரது குடும்ப வரலாற்றை இரண்டொரு வரிகளிற் கூறின் மனைவியார் மாணிக்கம் அம்மையார்; மகன்கள் நால்வர். இனி அவர்கள் ஆதீனகுருமகாசந்நிதானமாக ஆனபின் ஆற்றிய பணிகளைக் காண்போம்.

1963 நவம்பர் விஜயதசமி நன்னாளில் தொண்டை மண்டலாதீன குருமகாசந்நிதானமாகக் காஞ்சி ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளாகப் பட்டமேற்று பீடத்தை அலங்கரிக்கத் தொடங்கினார்கள். 28.07.1977-இல் சிவப் பேறு பெறும்வரை 14 ஆண்டுகள் குருமகாசந்நிதானமாக விளங்கினார்கள். இவர்கள் பட்டமேற்பதற்குமுன் சீர்குலைந் திருந்த நிர்வாகம் இவர்கள் பட்டமேற்றபின் உடனடியாகச் சீர்திருத்தப் பெறும் நிலையில் இல்லை. சிறுது சிறிதாகவே செம்மையுறச் செய்யவேண்டியதாய் இருந்தது. ஆதலின் இவர்களது பெரும்பொழுது பாடஞ்சொல்வதிலேயே கழிந்தது.

திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாணதேசிக குரு மூர்த்திகள் பாடஞ் சொல்வதிற் சிறந்து விளங்கினார்கள். திருவாவடுதுறை ஆதீன ஒடுக்கமே அவர்கள் பாடஞ் சொல்லு மிடமாகத் திகழ்ந்தது. அம்பலவாணதேசிகருக்குப் பின்னர்

திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள் பாடஞ்சொல்வதிற் சிறந்து விளங்கினார்கள். இவ்விருவருக்குப் பின்னர் பாடஞ் சொல்வதிற் சிறந்து விளங்கியவர்கள் காஞ்சி ஞானப் பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகளேயாவர். காஞ்சியில் தமது ஆதீன ஒடுக்கத்திலேயே பாடஞ்சொன்னார்கள். வெளியிடங் களிற் பாடஞ்சொன்னால் அதிகமானோர் கேட்டுப் பயன் பெறுவர் என்பதால் வெளியே பல இடங்களுக்கும் சென்று தங்கிப் பாடஞ்சொன்னார்கள்.

சிதம்பரம் கனகசபை நகரிலுள்ள தருமபுர ஆதீனக் கிளைமடத்தில் தில்லைத் தமிழ்மன்றம் எஸ். திருநாவுக்கரசு பிள்ளையவர்களின் ஏற்பாட்டில் சிலகாலம் பாடஞ் சொன்னார்கள். சென்னையில் தெய்விகப் பேரவைக் கட்டிடத்தில் குன்றக்குடி அடிகளார் ஏற்பாட்டில் பலகாலம் பாடஞ் சொன்னார்கள். இவ்வாறே சேலம் வழக்கறிஞர் திரு.சு. இராமலிங்கம் பி.எஸ்ஸி. (அக்ரி) பி.எல். அவர்கள் இல்லம், கோயம்புத்தூர் திருமதி சுவர்ணா சோமசுந்தரம் அவர்கள் இல்லம் முதலியவற்றில் தங்கிப் பாடஞ் சொன்னார்கள். இலங்கைக்குச் சென்று கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் தங்கிப் பாடஞ் சொன்னார்கள். கோயம்புத்தூர் திருமதி சுவர்ணா சோமசுந்தரம் இவர்களது முக்கிய சீடர் களில் ஒருவர். பத்து ஆண்டுகள் பாடங்கேட்டதோடன்றிச் சுவாமிகளிடம் நிர்வாணதீக்கை வரை பெற்றவர். பாடஞ் சொல்ல வல்லோரெல்லாம் தீக்கை செய்தருள வல்லோராகார், தீக்கை செய்ய வல்லோரெல்லாம் பாடஞ்சொல்ல வல்லோராகார். சுவாமிகள் ஒருவரே இவ்விருவகையிலும் வல்லோராக விளங்கினார். மடாதிபதிகளில் சங்க இலக்கியப் புலமை யுடையவர்கள் இவர்கள் ஒருவரேயாவர். இவர்கள் பழைய கால முறையிற் பயின்ற தமிழ்வித்துவானாக இருந்து சைவ மடாதிபதியாக வந்தவர்களாதலின் இலக்கிய இலக்கணப் புலமை மிக்கவர்களாக விளங்கினார்கள். சிவகளை மு. சுப்பையா, ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ்., அதிகாரி மு. கிருஷ்ணன். பேராசிரியர் வே. குருசாமி, எம்.ஏ., ஈரோடு டாக்டர் எம்.சி. இராசமாணிக்கம் எம்.எஸ்., ஆகியோர் இவர்களிடம் பாடங் கேட்டவர்களாவர்.

இவர்கள் எழுதியருளிய நுட்பமும் திட்பமும் வாய்ந்த கட்டுரைகள் ஞானசம்பந்தம், சித்தாந்தம், செந்தமிழ்ச்செல்வி, திருக்கோயில், அருளோசை முதலிய இதழ்களில் வெளிவந்தன.

சுவாமிகள் தீக்கை செய்தருளும்போது சிவமாகவே இருப்பர். வாழ்நாள் முழுவதும் பாடஞ்சொல்லியே பயின்றவர்களாதலின் பின்னாளில் மடாதிபதிகளானபின் பாடஞ்சொல்லுங் காலங்களில் ஞானானுப முதிர்வு பெரிதும் காணப்பெற்றது.

திருச்சிராப்பள்ளியில் 1966-ஆம் ஆண்டில் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் (அந்நாளில் மகாசமாஜம்) 61-ஆம் ஆண்டுவிழா இவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. அவ் விழாவில் இவர்கள் நிகழ்த்திய தலைமைப் பேருரை (30.12.1966) மிகவும் அருமையானது. அக்காலத்தில் யாம் திருச்சிராப்பள்ளி நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தோம். அப்போதுதான் இவர்களுடன் எமக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அப்போது ஏற்பட்ட தொடர்பு சந்நிதானம் முத்திப்பேறு பெறும்வரை தொடர்ந்தது.

14 ஆண்டுகாலம் மடாதிபதிகளாக நிர்வாகம் செய்தும், பல இடங்களில் மிகப்பலருக்குப் பாடஞ்சொல்லியும் தீட்சையளித்தும் சிவமேயாகத் திகழ்ந்த சந்நிதானம் 28.07.1977 பிங்கள ஆடி 13 வியாழன் மூலநாளில் சிவமானார்கள். ஆதீனத்தின் தோட்டத்திலேயே குருமூர்த்தம் செய்யப்பெற்றார்கள்.

பேராசிரியர் வே. குருசாமி, திரு. மு. கிருஷ்ணன் (ஐ.ஏ.எஸ். ஓய்வு), திருமதி சுவர்ணா சோமசுந்தரம் ஆகியோர் இவர்களது நூல்களையும் உரைகளையும் கட்டுரைகளையும் வெளியிட்டு வருகிறார்கள்.

230-ஆவது குருமகாசந்நிதானம்
கயிலைப்புனிதர்
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
12.02.1978 - 21.05.1995

இவர்களது பூர்வாசிரமப்பெயர் துரை. ஞானசம்பந்த முதலியார். பெரியபுராண உரையாசிரியர் சிவக்கவிமணி

சி. கே. சுப்பிரமணிய முதலியாரவர்களின் உறவினர். இளமை முதலே பிரம்மச்சாரி. மருந்துக்கடை வைத்து நடத்தி வந்தவர். சைவப்பற்று மிக்கவர். திருமுறைகளையும், சி.கே.சு. பெரிய புராண உரையையும் கற்றுத் தேர்ந்தவர். ஆதீனச் சீடர்களாகிய சமூகப்பெருமக்கள் இவர்களைச் சந்நிதானமாகத் தெரிந்தெடுத் தார்கள். பட்டாபிடேக விழா 10.02.1978 முதல் 12.02.1978 வரை மூன்று நாள் விழாவாகச் சிறப்புற நிகழ்ந்தது. தருமபுர ஆதீன குருமகாசந்நிதானம் 26-ஆம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் எழுந்தருளி வாழ்த்தியருளினார்கள். 12.02.1978 அன்று பட்டமேற்று பீடத்தை அலங்கரிக்கத் தொடங்கினார்கள்.

அது முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களின் முந்திய ஆட்சிக்காலம். அக்காலத்தில் இந்துசமயப் பெருமக்களின் விருப்பத்திற்கிணங்க அரசின் இந்து சமய அறநிலையத்துறை ஒரு வாரியமாக மாற்றியமைக்கப்பெற்றது. வாரியத்தில் ஓர் உறுப்பினராகத் தொண்டைமண்டல ஆதீன சந்நிதானம் நியமிக்கப்பெற்றார்கள். மேலும் திருத்தணி முருகன்கோயிலின் அறங்காவலர் குழுத் தலைவராகவும் நியமிக்கப்பெற்றார்கள். இவ்விரு பணிகளிலும் இவர்கள் சிறந்து விளங்கி அரசின் பாராட்டையும் அன்பர் பலரது பாராட்டுகளையும் பெற்றார்கள். திருக்கயிலாய யாத்திரை செய்து கயிலைப் புனிதராக விளங்கினார்கள்.

புதிய வரலாற்றில் இவர்கள் இரண்டாவதாகப் பட்டத் திற்கு வந்தவர்கள். ஆதீனப் பொறுப்பை ஏற்றுச் சீர்திருத்தங் களைத் தொடங்குவதில் முந்திய சந்நிதானத்திற்குப் பலவிதமான இடையூறுகள் இருந்தன எனினும் செம்மைப்படுத்துவதைத் தொடங்கினார்கள். அவர்கள் காலத்தில் தொடங்கப்பெற்ற அப்பணி இவர்கள் காலத்தில் தான் முழுமைபெற்று நிறைவேறியது. ஆதீனத்திற்குரிய கிளை இடங்களையும் சொத்துகளையும் பார்வையிட்டுப் பராதீனமாகியிருந்த பல வற்றைச் சுவாதீனப்படுத்தினார்கள். ஆதீன வளாகத்தைச் செம்மைப்படுத்தினார்கள். மெய்கண்டார் கோயிலுக்குத் திருப்பணி செய்தார்கள். இவர்களும் நமக்கு நன்கு பழக்கமாக

இருந்தார்கள். விசுவ இந்து பரிஷத்தின் சமயப்பணிகளில் நம்மோடு இவர்களும் பங்குபெற்றார்கள்.

17-ஆண்டுகள் சிறப்பாக விளங்கி ஆதீனத்தையும் விளக்கஞ்செய்த இவர்கள் 21.05.1995 யுவ, வைகாசி, 6, ஞாயிறு அவிட்ட நாளில் சிவப்பேறு பெற்றார்கள். தருமபுர ஆதீனத்திலிருந்து சந்நிதானத்தின் உத்தரவின்படி ஸ்ரீமத் மௌன மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வந்திருந்து குருமூர்த்தம் செய்யும் பணியை நிகழ்த்துவித்தார்கள்.

231-ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

11.09.1995 - 11.09.1999

இவர்களின் பூர்வாசிரமப் பெயர் அமிர்தலிங்கம். தந்தையார் குஞ்சிதபாத முதலியார். பூர்வீக ஊர் திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடி வட்டம் பெருவளநல்லூர். 02.04.1925-இல் திருக்கடவூரில் பிறப்பு. இண்டர்மீடியட் வரை படித்து 1946 முதல் 1983 வரை இருப்புப்பாதைத் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்றார். மனைவியார் அமரராகிவிட்டார். குழந்தைகள் இல்லை. குடும்பப் பற்றின்றித் தனித்துச் சமயப்பணியில் ஈடுபடத்தக்கவராகத் திகழ்ந்த இவர்களை ஆதீனச் சீடர் களான சமூகப்பெருமக்கள் குருமகாசந்நிதானமாகத் தெரிந் தெடுத்தனர். தருமபுர ஆதீனத்தில் துறவும் சிலகாலம் முறைப்படி பயிற்சியும் பெற்றார்கள். 11.09.1995-இல் காஞ்சிபுரத்தில் ஆதீன மடாலயத்தில் பட்டமேற்பு விழா தருமபுர ஆதீன குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருமுன்னிலையில் நிகழ்ந்தது. நான்கு ஆண்டுகள் பட்டத்திலிருந்த இவர்கள் ஆதீனத்தை மேலும் செம்மையுறச்செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள்.

இவர்கள் சிவப்பேறு பெறுவதற்குச் சிலநாள்களுக்கு முன்புதான் ஆதீனத்திற்கு முதன்முதலாக மோட்டார் கார் வாங்கப்பெற்றது. அதன் பதிவு முதலிய வேலைகள்

முடிவதற்கு முன்னரே இவர்கள் சிலநாள் உடல்நலம் குன்றியிருந்து 11.09.1999-இல் சிவப்பேறு பெற்றார்கள். ஆதீன வளாகத்தினுள் தோட்டத்தில் குருமூர்த்தம் செய்யப் பெற்றது.

232-ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ திருவம்பல தேசிக ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள்

இப்போது அருளாட்சி செய்து வருபவர்கள்

இவர்கள் 21.02.2000 முதல் 232-ஆம் குருமகா சந்நிதானமாக எழுந்தருளி விளங்கி வருகிறார்கள்.

01.07.1933-இல் மதுரை மாவட்டம் காமயகவுண்டன் பட்டியில் பிறந்தவர்கள். தந்தையார் மு. முத்துச்சிதம்பர முதலியார். இவர்களது இயற்பெயர் மு. முத்தம்பலம். மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் படித்துப் புலவர் பட்டம் பெற்றவர்கள். சென்னை சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியில் படித்து ஆசிரியர் பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்கள். மதுரைப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. முதுகலைப்பட்டம் பெற்றவர்கள். மத்திய தொழிலாளர் கல்வி வாரியத்தில் தொழிலாளர் கல்வி ஆசிரியராகப் பணியாற்றியவர்கள். பின்பு தமிழ்நாடு மின்வாரியத் தில் கணக்கு மேலாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள்.

இவர்களின் பூர்வாசிரமத் துணைவியார் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் மாதிரி உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி நல்லாசிரியர் விருது பெற்றவர்கள். 10.10.1990-இல் அமரராகி விட்டார்கள். ஒரே மகள் திருமணமாகிக் கணவருடன் உள்ளார். மருமகன் சென்னையில் புகழ்பெற்ற ஆடிட்டர்.

உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெற்றும் குடும்பப் பற்றின்றியும் இருந்த இவர்கள் முழுநேரமும் சமயப்பணியில் ஈடுபடத் தொடங்கினார்கள். இமயம் முதல் குமரிவரை நாடு முழுவதும் உள்ள சைவ வைணவத் தலங்களுக்கு விரிவாக யாத்திரை செய்தார்கள். இளமை முதலே தமிழ் கற்றவ ராதலின் பின்னாளிலும் தமது தமிழ்க் கல்வியையும் சைவக்

கல்வியையும் நன்கு பெருக்கிக் கொண்டார்கள். நாம் இவர்களை இவர்களது பூர்வாசிரம காலத்திலேயே அறிவோம். மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் நாம் தொடர் சொற்பொழிவு செய்யுங் காலங்களில் இவர்கள் வந்திருந்து கேட்டு மகிழ்வார்கள். அப்போது பழக்கம் ஏற்பட்டது.

தகுதிவாய்ந்த இவர்களை ஆதீனச் சீடர்களாகிய சமூகப் பெருமக்கள் ஆதீன குருமகாசந்நிதானமாகத் தெரிந்தெடுத்தார்கள். தருமையாதீனத்தில் துறவும் உபதேசமும் பெற்ற இவர்கள் தொண்டைமண்டல ஆதீன குருமகாசந்நிதானமாக சீலத்திரு திருவம்பலதேசிக ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள் என்ற திருப்பெயருடன் 21.02.2000-இல் பதவி ஏற்றார்கள்.

தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளையும் நன்கறிந்த இவர்கள் இந்தியும் ஓரளவு அறிந்தவர்கள். தமிழகமெங்கும் இவர்களுக்கு அழைப்பு மிகுதி. அழைக்குமிடங்களுக்கெல்லாம் சென்று நிகழ்ச்சிகளிற் கலந்துகொண்டு சிறப்பிக்கிறார்கள். தாமே பல இடங்களுக்கும் யாத்திரை செய்கிறார்கள். இலங்கை அன்பர்களின் அழைப்பை ஏற்று இரண்டு முறை இலங்கைக்குச் சென்று சொற்பொழிவாற்றி வந்துள்ளார்கள்.

இலங்கை அரசின் இந்து சமய அலுவல்கள் அமைச்சு ஐந்தாவது உலக சேக்கிழார் மாநாட்டைக் கொழும்பு நகரில் 2005 செப்டம்பர் 9; 10; 11 மூன்று நாட்கள் மிகச் சிறப்பாக நடத்திற்று. தொண்டைமண்டலாதீன சந்நிதானமாகிய இவர்களும், பேரூராதீனமும் நாமும் (ஊரன் அடிகள்) இலங்கை மாநாட்டுக்கு அழைக்கப் பெற்றுச் சென்று கலந்துகொண்டோம். இலங்கை வானொலியிலும் உரையாற்றினோம்.

இவர்களது பவளவிழா காஞ்சிபுரத்தில் 04.10.2007-இல் ஆதீன அன்பர்களால் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. நாமும் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினோம்.

ஆதீன நிர்வாகம், சைவசமயப் பணிகள், நாடெங்கும் சென்று சைவசமய வளர்ச்சிக்கு ஊக்கமளித்தல் ஆகிய வகையில் சந்நிதானத்தின் பணி சிறப்பாக நிகழ்ந்து வருகிறது.

மதுரை ஆதீனம்

திருஞானசம்பந்தர் ஆதீனம்
மதுரை

மதுரை ஆதீனம் மற்ற எல்லா ஆதீனங்களையும்விடக் காலத்தால் முற்பட்டது. ஏனைய ஆதீனங்கள் தோன்றுவதற்கு ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியது. ஏனைய ஆதீனங்களெல்லாம் சந்தானகுரவர் வழியில் தோன்றியவை. மதுரை ஆதீனம் ஒன்றுமட்டும் சமயகுரவர் காலத்தில் தோன்றியது. சமயகுரவர்களில் முதல்வர் திருஞானசம்பந்தர். காலம் ஏழாம் நூற்றாண்டு. திருஞானசம்பந்தர் மதுரைக்குச் சென்றிருந்தபோது எழுந்தருளித் தங்கி யிருந்த திருமடமே திருஞானசம்பந்தர் ஆதீனமாய் இன்றளவும் தொடர்ந்து சிறந்து நிலவிவருகிறது. 1300 ஆண்டு கால ஆதீனம். 292-ஆம் பட்டம் ஆதீனகர்த்தர்.

திருஞானசம்பந்தர் ஆதீனம்

மதுரை

திருஞானசம்பந்தர்

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர் எனச் சைவ சமயகுரவர் நால்வர்.

நால்வருள் முதல்வர் திருஞானசம்பந்தர். திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் சமகாலத்தவர்கள். சம்பந்தரை விட நாவுக்கரசர் அகவையில் மூத்தவர். சம்பந்தருக்கு முன்பே பிறந்தவர். சம்பந்தர் முத்திபெற்ற பின்னும் இருந்தவர். ஆயினும் முதலில் பாடியவர் சம்பந்தர். முதலிற் பாடிய தாலும் முதலில் முத்தி பெற்றதாலும் சம்பந்தர் பாடல்கள் தேவாரத்துள் முதலில் வைக்கப்பெற்றுள்ளன. முதல் மூன்று திருமுறைகளாக வகுக்கப்பெற்றன. முதலிற் பாடியதாலும், முதலில் முத்தி பெற்றதாலும், பாடல்கள் முதலில் வைக்கப் பெற்றதாலும் சமயகுரவர் நால்வரில் சம்பந்தர் முதல்வரா கிறார். "**அருள்நெறியில் முதலரசியற்றிய துரையே**" என்று வள்ளலார் சம்பந்தரைப் போற்றுகிறார்.

திருஞானசம்பந்தர் பிறந்த ஊர் சீகாழி. தந்தையார் சிவபாதஇருதயர். தாயார் பகவதி. அந்தணர் குலத்தில் கவுணிய கோத்திரத்தில் பிறந்தவர். "கவுணிய" என்றதும் சங்க இலக்கியம் கற்றோர்க்குப் புறநானூற்றுச் செய்யுளொன்று நினைவுக்கு வரும். "சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயனை ஆவூர் மூலங்கிழார் பாடியது" என்னும் 166-ஆம் புறப்பாட்டு அது. சங்ககாலத்தில் ஒரு கவுணியன் விண்ணந்தாயன். தேவார காலத்தில் ஒரு காழிக்

கவுணியர். விண்ணந்தாயனையும் சம்பந்தரையும் பெறக் கவுணிய கோத்திரம் புண்ணியஞ்செய்தது. ஈராயிரம் ஆண்டு களுக்கு முன்பே ஒரு பார்ப்பான் கவுணியன் விண்ணந்தாயன் புலவர் பாடும் புகழைப் பெற்றுள்ளான், புலவராற் பாடப் பெறும் தகுதியைப் பெற்றுள்ளான். புகழும் புண்ணியமும் பெற்ற அக் கௌண்டின்னிய கோத்திரத்தில் சம்பந்தர் தோன்றுகிறார்.

அந்தணர் ஞானசம்பந்தரின் திருக்கூட்டத்தில் அரிசனர் ஆதிதிராவிடர் திருநீலகண்டயாழ்ப்பாணர் யாழ்வாசிப்பவராய் இடம்பெறுகிறார். அதுவும் தமது மனைவியார் மதங்கசூளா மணியாரோடும் இடம்பெறுகிறார். அந்தணர் சம்பந்தர் அரிசன யாழ்ப்பாணரையும் அவர் மனைவியாரையும் தம் தல யாத்திரைத் திருக்கூட்டத்தில் சேர்த்துக்கொண்டிருக்கிறார். சாத்தமங்கை என்ற ஊருக்குச் செல்லுகிறார்கள். அங்கு திருநீலநக்கர் என்னும் அந்தண அடியவர் இல்லத்தில் அனைவரும் தங்குகிறார்கள். நீலநக்கர் சாதாரண அந்தணர் அல்லர். நித்திய அக்கினிஹோத்திரி. நாள்தோறும் ஓமம் வளர்த்து வேள்வி செய்பவர். அன்றிரவு அனைவரும் படுக்கும்போது திருநீலகண்டயாழ்ப்பாணர் தம்பதிகளுக்கு வேள்விக்குண்டத்தின் அருகில் இடங்கொடுக்கப்பெற்றது. இத்தம்பதிகள் வேள்வி மேடை அருகே பள்ளிகொண்டதும், அதுவரை நீறுபூத்த நெருப்பாக இருந்த வேள்விக்குண்டத்தில் வேள்வித்தீ மூண்டு வலஞ்சுழித்து எழுந்து முன்னையிலும் ஒருபடி மிகுதியாக ஒளிவீசிற்றாம். சேக்கிழார் சொல்லுகிறார். சம்பந்தரும் பெரியபுராணமும் காட்டும் சாதி ஒழிப்பு இது. ஒழுக்கம் ஒத்திருந்தால் சாதி வேறுபாடு பாராட்டப்பெறு வதில்லை. அடியவர்களுக்குள் சாதிவேறுபாடு இருந்ததில்லை.

அந்தணர்கள் காயத்ரி மந்திரத்தை முக்கியமாகக் கொள்வர். சம்பந்தர் பஞ்சாக்கர மந்திரத்தை முக்கியமாகக் கொண்டார். உபநயனத்தின்போதும் திருவைந்தெழுத்தையே பாடினார். அந்தணர் வடமொழிக்கு முதன்மை அளிப்பர். தமிழின் அருமை பெருமைகளை மிகுதியாகப் பேசியவர்

திருஞானசம்பந்தர். தம்மைத் தமிழ்ஞானசம்பந்தன் என்று சொல்லிக்கொள்ளுகிறார்.

இதுபோன்று ஞானசம்பந்தர் செய்த புரட்சிகள் பல. ஞானசம்பந்தர் சாதாரண முதல்வரல்லர்; புரட்சி முதல்வர்.

ஞானசம்பந்தர் இறைவனால் ஆட்கொள்ளப்பெறும் போது, பாடத்தொடங்கும் போது அகவை மூன்று. முத்தி பெறும்போது அகவை பதினாறு. இடைநின்ற பதின்மூன்று ஆண்டுகளில் வடக்கே காளத்தி முதல் தெற்கே இராமேஸ்வரம் வரை யாத்திரை செய்து 110 தலங்களை 384 பதிகங்களால் 4181 பாடல்களாகப் பாடியுள்ளார். இப்பதின்மூன்றாண்டு காலத்தில் அவர் பெற்ற பேறுகள் பல, செய்த அற்புதங்கள் பல. சைவ உலகில் சம்பந்தரின் சாதனை மிகப்பெரிது.

குழந்தைப்பருவத்தில் மூன்றாம் ஆண்டிலேயே இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றார். இறைவியால் திருமுலைப்பால் அருத்தப்பெற்றார். ஞானப்பால் உண்டார்.

திருக்கோலக்காவில் பொற்றாளம் அருளப்பெற்றார்.

திருஅரத்துறையில் முத்துச்சிவிகை முத்துக்குடை முத்துச் சின்னங்கள் அருளப்பெற்றார்.

திருப்பாச்சிலாச்சிராமத்தில் கொல்லிமழவன் மகளைப் பற்றியிருந்த முயலக நோயை நீக்கியருளினார்.

பட்டீச்சுரத்தில் முத்துப்பந்தர் அருளப்பெற்றார்.

திருஆவடுதுறையில் தந்தையார் வேள்விக்காகப் பொற்கிழி ஆயிரம்பொன் அருளப்பெற்றார்.

தருமபுரத்தில் யாழ்மூரிபாடித் திருப்பதிய இசை யாழில் அடங்காமையைக் காட்டியருளினார்.

திருமருகலில் அரவம் தீண்டி இறந்த வணிகனை உயிர்ப்பித்தருளினார்.

திருவீழிமிழலையில் படிக்காசு அருளப்பெற்றுப் பஞ்ச நிவாரணப்பணி செய்தருளினார்.

திருமறைக்காட்டில் வேதங்களால் அடைக்கப்பெற்ற திருக்கதவம் (திறக்கவும்) மூடவும் பாடியருளினார்.

மதுரையில் பாண்டிய மன்னனின் வெப்பு நோயை நீக்கியருளினார்.

சமணரோடு செய்த அனல்வாதம் புனல்வாதங்களில் வென்றார். பாண்டிய மன்னனைத் தாய்மதம் திரும்பச் செய்தார்.

திருக்கொள்ளம்பூதூரில் ஆற்று வெள்ளத்தில் ஓடம் தானாகவே ஓடச் செய்தருளினார்.

போதிமங்கையில் புத்தநந்தியை வென்றார்.

திருஓத்தூரில் ஆண்பனை பெண்பனையாக்கினார்.

திருமயிலையில் எலும்பைப் பெண்ணாக்கியருளினார்.

மணப்பருவமாகிய பதினாறாம் ஆண்டில், திருமண நாளில், திருமண நிகழ்வின்போதே, திருமணங்காண வந்தார் அனைவரையும் முத்திபெறச் செய்து, தாமும் புதுமணப் பெண்ணோடு, முத்திபெற்றார்.

இப்படி ஒரு கூட்டத்தையே முத்திபெறச்செய்த வரலாறு அதற்கு முன்னும் இல்லை; பின்னும் இல்லை.

இப்படி ஒரு நிகழ்ச்சி உலகில் ஒரே ஒரு முறைதான் நிகழ்ந்தது, அதுவும் ஞானசம்பந்தர் வரலாற்றில்தான்.

இது ஞானசம்பந்தர் ஒருவருக்கே உரிய தனிச்சிறப்பு.

அருள்நெறிமுதல்வர்

மூவாண்டில் ஞானப்பால் உண்டவர்

முதல் நாளிலேயே கடவுட்காட்சியை அம்மையும் அப்பனுமாகக் கண்டவர்

ஓதாதுணர்ந்தவர்

சாதனங்களின்றியே சாதித்தவர்

பலருக்கும் தன்னோடு முத்தியளித்தவர்

முருகனின் அவதாரமாகவே கருதப்பெற்றவர். இத்தகைய காரணங்களால் பின்வந்தோர் பலர், ஞானசம்பந்தரைக் குருவாகக் கொண்டனர்.

கடவுளரில் தட்சிணாமூர்த்தியும் ஞானியரில் திருஞான சம்பந்தரும் குருபீடங்கள்.

சிவிகை (பல்லக்கு), சின்னங்கள், பக்கவாத்தியங்கள், பரிசனங்கள் முதலிய சிறப்பு மரியாதைகள் அமைந்ததும் குருபீடமாதல் கருதியே.

சம்பந்தரின் சிவிகையை அப்பரே தாங்கினார்.

சம்பந்தரையும் அப்பரையும் பின்வந்த சுந்தரர் புகழ்ந்து பாடினார்.

திருமுறைகள் வகுக்கப்பெற்றபோது சம்பந்தரின் அருளிச் செயல்களே முதன் மூன்று திருமுறைகளாக முன்னர் வைக்கப் பெற்றன. மூவர் முதலிகளில் முதல்வர் இவர்.

திருமுறைகளைத் தொகுத்து வகுத்த நம்பியாண்டார் நம்பிகள் பதினோராந் திருமுறையில் ஆறுபிரபந்தங்கள் சம்பந்தரைக் குறித்துப் பாடினார்.

பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர் புராணமே மிகப் பெரியது, மிக நீண்டது. பெரியபுராணம் 4286 பாடல்களில் 1256 பாடல்கள் திருஞானசம்பந்தர் புராணம். இவ்வளவு நீண்ட வரலாறு இவர் ஒருவரைத்தவிர வேறு யாருக்கும் இல்லை. "பிள்ளை பாதி புராணம் பாதி" என்ற பழமொழியும் இதனால் ஏற்பட்டது.

பின்னாளில் தோன்றிய சீகாழி வள்ளலார் ஆதீனத்தார், கண்ணுடைய வள்ளலார் முதலானோர் சம்பந்தரையே வழிபடு குருவாகக் கொண்டனர். சம்பந்தர் அவதரித்த சீகாழியில் அவரையே குருவாகக் கொண்டு வள்ளலார் ஆதீனத்தை

நிறுவினர். வள்ளலார் என்று அவர்கள் கொண்டது சம்பந்தரையே.

வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளாரும் ஞானசம்பந்தரையே தம் வழிபடு குருவாகக் கொண்டார். "சம்பந்த வள்ளலாங் கடவுளே" என்று சம்பந்தரை வள்ளலாகவும் கடவுளாகவும் பாடினார்.

சம்பந்தரை முருகன் அவதாரமாகக் கூறும் வழக்கமும் பழங்காலந்தொட்டே ஏற்பட்டுவிட்டது. ஒட்டக்கூத்தர் அருணகிரிநாதர் திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் வள்ளலார் இராமலிங்க அடிகள் மற்றும் சிலர் சம்பந்தரை முருகன் அவதாரமாகவே கூறினர். ஞானியரில் சம்பந்தரையன்றி வேறு யாரையும் முருகன் அவதாரமாகக் கூறும் வழக்கமில்லை.

சமயகுரவர் நால்வருள் சம்பந்தர் ஒருவருக்கே ஆதீனம் அமைந்து இன்றளவும் தொடர்ந்து சிறப்போடு விளங்கி வருகிறது. ஏனைய சமய குரவர்களின் பெயரால் இது போன்று பழைமையும் பெருமையும் வாய்ந்த ஆதீனங்கள் அமையவில்லை.

மதுரையில் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் தோற்றம்

சமயகுரவர்களின் காலத்தில் தமிழ்நாட்டில் சமயப் போராட்டம் மிகுந்திருந்தது. சமண பௌத்த சமயங்களின் ஆதிக்கம் மிகுந்து, சைவசமயம் குன்றும் நிலை ஏற்பட்டது. இந்நாளில் கிறிஸ்துவ இஸ்லாமிய மதப் பரப்பல்களும் மதமாற்றங்களும் மிகுந்திருப்பதுபோல அந்நாளில் சமண பௌத்த மதப்பரப்பல்களும் மதமாற்றங்களும் மிகுந்திருந்தன. மன்னர்களே மதம் மாறினர். பல்லவ நாட்டில் காஞ்சிபுரத்தில் பல்லவ மன்னன் மகேந்திர வர்மன் சைவத்தைவிட்டுச் சமணத்துக்கு மாறினான். பாண்டிய நாட்டில் மதுரையில் பாண்டியமன்னன் நின்றசீர் நெடுமாறன் சைவத்தைவிட்டுச் சமணத்துக்கு மாறினான். பல்லவ மன்னன் மகேந்திரவர்மனைத் திருத்தி ஆட்கொண்டு தாய்மதம் திரும்பச் செய்தார் திருநாவுக்கரசர். பாண்டியமன்னன் நெடுமாறனைத் திருத்தி

ஆட்கொண்டு தாய்மதம் திரும்பச் செய்தார் திருஞானசம்பந்தர். திருநாவுக்கரசரேகூட இளமையில் மருள்நீக்கியாராக இருந்த காலத்தில் சமண மதத்திற்கு மாறி, தருமசேனர் என்று அங்கே சிலகாலம் தலைவராக இருந்து, பின்பு தாய்மதம் திரும்பியவர்தான். மன்னர்கள், திருநாவுக்கரசர் போன்ற அறிவு ஜீவிகள் நிலையே இது என்றால் சாதாரணப் பொது மக்களின் நிலையை என்னவென்பது. மன்னன் மதம் மாறினாலும் அரசியார் மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் மதம் மாறவில்லை, சைவத்திலேயே இருந்தனர். ஞானசம்பந்தர் மதுரைக்கு வந்தால் நிலை மாறும், சைவம் தழைக்கும் என்றெண்ணிச் சம்பந்தரை மதுரைக்கு அழைத்தனர்.

சம்பந்தர் மதுரைக்கு வந்தார். மதுரை மாநகர எல்லையில் சம்பந்தருக்கு மாபெரும் வரவேற்பு. பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் மதுரை வாழ் சைவப்பெருமக்களும் சிவனடியார்களும் வரவேற்க, மதுரையுட்புகுந்த சம்பந்தர் நேரே ஆலவாய்க் கோயிலுக்குச் சென்று வழிபட்டார். கோயில் வழிபாடு நிறைவுற்றபின் சம்பந்தரை மதுரைத் திருவீதிகளின் வழியே ஊர்வலமாக அழைத்து வந்து தெற்கு ஆவணிமூல வீதியில் இருந்த ஒரு சைவ மடத்தில் தங்கவைத்தனர்.

அம்மடம், ஞானசம்பந்தரைத் தங்கவைப்பதற்காகப் புதிதாக அமைக்கப்பெற்ற மடமன்று, முன்பே இருந்த ஒரு சைவ மடம். மதுரையிற் சிறந்துவிளங்கிய அம்மடம், திருஞானசம்பந்தப்பெருமான் தம் திருக்கூட்டத்தோடு எழுந்தருளித் தங்கியிருக்க ஏற்றதென்று எண்ணி அமைச்சர் குலச்சிறையார் அம்மடத்தைத் தேர்வு செய்திருந்தார். அப்போது அம்மடத்திற்கு வழங்கிய பெயர் இன்னதெனப் பெரியபுராணம் குறிப்பிட்டுக் கூறவில்லை. பொதுவாகத் ''திருமடம்'' என்று மட்டுமே குறிப்பிடப்பெற்றுள்ளது.

அத்தி ருத்தொண்டர் தங்களுக்கு அருள்முகம் அளித்து
மெய்த்த காதலின் அவரொடும் புறத்தினில் மேவிச்
சித்தம் இன்புறும் அமைச்சனார் திருமடம் காட்டப்
பத்தர் போற்றிடப் பரிசனத்தொடும் இனிது அமர்ந்தார்.

- பெரியபுராணம் - 2579.

''அமைச்சனார் திருமடம் காட்ட, பத்தர் போற்றிட, பரிசனத்தொடும் இனிது அமர்ந்தார்'' - அமைச்சர் குலச் சிறையார் ஒரு திருமடத்தைக்காட்ட, பக்தர்கள் போற்றிட, ஞானசம்பந்தர் தம் பரிசனத்தோடும் அம்மடத்தில் இனிது அமர்ந்தார், இவ்வளவே பெரியபுராணம் கூறுவது.

ஆனால், பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய திருவிளையாடற்புராணமும், பரஞ்சோதிமுனிவர் இயற்றிய திருவிளையாடற்புராணமும், ஞானசம்பந்தரைத் தங்கவைத்த மடத்தின் பெயர் வாகீச சுவாமி மடம் என்று கூறுகின்றன.

நம்பி திருவிளையாடல்

இன்னருள்சேர் அமைச்சனார் இடங்காட்டப் போந்தினிய
தொன்னெறிசேர் வாகீச் சுவாமிமடத் தவதரிப்ப
அன்னதுகேட் டிருஞ்சமணர் திரண்டறிவான் விடுத்ததிறன்
முன்னிகழொற் றினர்சொல்ல முட்டுச்சஞ் சலமுற்றார்.

எனக் கூறுகிறது. (வெப்பத்தீர்த்த திருவிளையாடல் 32). இஃதன்றி 35-ஆம் திருப்பாடலிலும் ''வாகீசச் சுவாமி மடத் தவதரித்தான்'' என்று மடத்தின் பெயர் சொல்லப்பெறுகிறது.

பரஞ்சோதி திருவிளையாடல்

வேண்டுகொண் டருளைப் பெற்று மீளுமப் போது கண்டு
மூண்ட ஐம் பொறியும் வென்ற வாகீச முனிக ளென்ன
ஆண்டுளா ரொருவர் வேண்ட அவர்திரு மடத்தி லன்பு
பூண்டெழு காத லோடும் போயினார் புகலி வேந்தர்.

என்பது பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடல் (பாண்டியன் சுரந்தீர்த்த திருவிளையாடல் 39). ''வாகீச முனிகள் என்ன ஆண்டுளார் ஒருவர் வேண்ட அவர் திருமடத்தில்'' என்று மடத்தை வாகீசசுவாமி மடம் என்று பெயரிட்டுக்கூறாது,

மடத்தில் இருந்தவரை ''வாகீசமுனிகள் என்ன ஆண்டுளார் ஒருவர்'' என்று கூறுகிறது. ''என்ன'' என்பதற்கு இருவகையாகப் பொருள் கொள்ள இடந்தருகிறது. என்ன = போன்று; என்ன = என்று. வாகீச முனிகளைப் போன்று அம் மடத்தில் உள்ளார் ஒருவர் என்றும் பொருள் கொள்ளலாம். அம் மடத்தில் உள்ள வாகீசமுனிகள் என்னும் ஒருவர் என்றும் பொருள் கொள்ளலாம். வாகீசமுனிகளைப் போன்று ஒருவர் என்று, வாகீசரை உதாரணமாகவும் கொள்ளலாம். வாகீச முனிகள் என்னும் ஒருவர், இவருக்கே வாகீசமுனிகள் எனப் பெயர் என்றும் கொள்ளலாம்.

பெரியபுராணத்தில் கூறப்பெறாத பெயர் திருவிளையாடற் புராணங்கள் இரண்டிலும் கூறப்பெறுகிறது. திருவிளையாடற் புராணங்கள் இரண்டும் பெரியபுராணத்தைவிடக் காலத்தாற் பிற்பட்டவை. வடமொழி மகாத்மியங்களை ஆதாரமாகக் கொண்டு பாடப்பெற்றவை. வடமொழி மகாத்மியங்களில் மதுரை மடத்தின் பெயர் வாகீசமடம் என்றும், அம்மடத்துச் சுவாமிகளின் பெயர் வாகீசர் என்றும் கூறப்பெறுகின்றன. வாகீசர் என்பது திருநாவுக்கரசருடைய சிறப்புப் பெயருள் ஒன்று. அப்பெயருடைய ஒருவரும், அப்பெயருடைய மடம் ஒன்றும் அக்காலத்தில் மதுரையில் இருக்க வாய்ப்பில்லை. ஞானசம்பந்தப் பெருமான் தங்கியிருந்த மடத்தைச் சிறப்பித்துக் கூறும் நோக்கில் ஞானசம்பந்தருக்கு இணையான வாகீசரின் பெயரைப் பிற்காலத்தில் வடமொழி நூல்கள் அம்மடத் திற்குச் சூட்டியிருக்கலாம் என்பதே உண்மை.

அண்மையில் ஐம்பதாண்டுகளுக்குமுன் 1953-இல் மதுரை ஆதீன வித்துவான் இராமநாதபுரம் கே. சிவஞானம் பிள்ளை என்பவரால் பாடப்பெற்ற ''ஸ்ரீ ஞானசம்பந்த குருமரபின் வரலாறு'' என்னும் நீண்ட ஆசிரியப்பாவும், ஞானசம்பந்தர் மதுரைக்கு வந்த காலத்தில் அவரை வரவேற்றுத் தம் மடத்தில் தங்குமாறு வேண்டியவர் ''வாகீசர் எனவே உள சிவமுனிவர் ஒருவர்'' என்று கூறுகிறது.

''சிவபுரத் தரசும் சிவனைத் தொழுது
ஐவர் தங்களை யறுவ ராக்கும்
மனவலி யுளநம் வாகீச ரெனவே
உள சிவ முனிவ ரொருவர் வந்து
இம்மடத்திலே எழுந்தருள் வீரெனக்
குலச்சிறை யாரு மதனையே குறிக்கத்
தமிழ் விரகருமே தாமதற் கிசைந்து
அடியார் குழாத்தொடு அங்கே தங்கினர்''

என்பது அது. இம்மடத்தில் எழுந்தருள்வீர் என அம்மடத்தி லிருந்த சிவமுனிவர் வேண்ட, குலச்சிறையாரும் அதனையே குறிக்க என, மடத்திலிருந்த சிவமுனிவருக்கு இது முதன்மை தருகிறது.

அரசியார் அமைச்சர் ஆகிய இருவரின் அழைப்பிற் கிணங்கவே ஞானசம்பந்தர் மதுரைக்கு வருகிறார். அரசியாரும் அமைச்சரும் ஞானசம்பந்தரை வரவேற்றுத் தங்குவதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். மதுரையில் சிறந்து விளங்கும் மடமாதலின் இம்மடத்தை அமைச்சர் குலச்சிறையார் தேர்வு செய்கிறார். அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஞானசம்பந்தர் தம் திருக்கூட்டத்தாரோடும் அம்மடத்திற்கு எழுந்தருளித் தங்குகிறார். மடத்தை நிர்வகித்து வந்த சிவனடியாரும் (சிவமுனிவர்) ஞானசம்பந்தர் தமது திருமடத்திற்கு எழுந்தருளித் தங்குவதைப் பெரும்பேறாகக் கருதித் தாமும் அமைச்சரோடு சேர்ந்து வரவேற்று உடனிருந்து உபசரிக் கிறார். ஞானசம்பந்தருக்கு வேண்டிய எல்லாப் பணிவிடை களையும் தாமே செய்கிறார், எல்லாவற்றையும் தாமே கவனித்துக் கொள்கிறார். அதுவரை அடியவரின் எளிய திருமடமாக இருந்த அம்மடம், ஞானசம்பந்தர் எழுந்தருளித் தங்கிய அன்று முதல் அரசின் ஆதரவு பெற்ற பெரிய திருமடமாக ஆயிற்று. மடத்தில் நிகழும் விருந்து முதலிய வற்றிற்கான ஏற்பாடுகள் பாண்டிமாதேவியாராலும் குலச் சிறையாராலும் அன்போடு செய்யப்பெற்றன. ''அமைச்சனார் திருமடம் காட்டப் பத்தர் போற்றிடப் பரிசனத்தொடும் இனிதமர்ந்தார்'' என்பதற்கு அடுத்த செய்யுளாகிய,

பரவு காதலின் பாண்டிமாதேவியார் அருளால்
விரவு நண்பொடு குலச்சிறையார் விருந் தளிப்பச்
சிரபு ரத்துவந்து அருளிய செல்வர்அங் கிருந்தார்
இரவி மேல்கடல் அணைந்தனன் எல்லிவந்து அணைய.
- 2580

என்னும் பாடலால் இதனை அறியலாம்.

திருஞானசம்பந்தர் தங்கிய அன்றிலிருந்து அம்மடம் **திருஞானசம்பந்தர் மடம்** எனப்பெயர் பெற்றது. மக்களே அவ்வாறு வழங்கத் தொடங்கினர். இயல்பாகவே அப்பெயர் அமைந்துவிட்டது. சம்பந்தர் தங்கியதால் மடத்தின் புகழ் மேலும் ஒரு மடங்கு ஓங்கிற்று. அன்றிரவே சம்பந்தர் மடத்திற்குச் சமணர்கள் தீ வைத்தனர். இறைவன் அருளால் தீ பரவாது அணைந்தது. ஆனால் செய்தி பரவி மடத்தின் பேரும் புகழும் இருமடங்கு பெருகின. பாண்டியமன்னனை வெப்புநோய் பற்றல், சம்பந்தரால் அது தீர்தல், அனல் வாதம், புனல் வாதம், சம்பந்தர் வெற்றி, பாண்டியன் தாய் மதம் திரும்பல் முதலிய தொடர் நிகழ்ச்சிகளுக்குப்பின் மடத்தின் பேரும் புகழும் மும்மடங்கு பொலிவதாயிற்று. பாண்டிய மன்னர்களின் குருபீடமாகத் திகழ்வதாயிற்று.

திருஞானசம்பந்தர் எழுந்தருளித் தங்கியிருந்ததால் திருஞானசம்பந்தர் மடம் எனப் பெயர்பெற்ற அம்மடம், நாளடைவில் மன்னர்களின் அன்பினாலும் ஆதரவினாலும், மக்களின் போற்றுதல்களாலும் பெரிய அளவில் வளர்ந்து திருஞானசம்பந்தர் ஆதீனமாய் இன்றளவும் அதன் குருமரபு வளர்ந்து இன்றும் சேது மன்னர்களின் குருபீடமாய், இன்று 292-ஆம் பட்டம் குருமகாசந்நிதானம் அருளாட்சி செய்வதாய், சிறந்து விளங்கி வருகிறது. மதுரையில் திருஞானசம்பந்தராதீனம் தோன்றிய வரலாறு இதுவே.

மதுரை திருஞானசம்பந்தர் ஆதீன குருமரபு

திருஞானசம்பந்தர் மதுரைக்கு எழுந்தருளும்போது அம் மடத்திலிருந்தவர் ஒரு சிவமுனிவர். மதுரையில் சம்பந்தரை

வரவேற்றவர்களில் அவரும் ஒருவர். அவரது மடத்தில் சம்பந்தப்பெருமான் தங்கியது முதல் அச்சிவமுனிவர் சம்பந்தப்பெருமானுக்கு ஆட்பட்டு அவருக்கு வேண்டிய எல்லாப் பணிவிடைகளையும் தாமே செய்து நன்கு கவனித்துக்கொண்டார். சம்பந்தப்பெருமானின் அருளுக்கு முழுவதும் பாத்திரரானார்.

திருஞானசம்பந்தப்பெருமான் மதுரையைவிட்டுப் புறப்படும் போது, சிவமுனிவருக்கு அருள்பாலித்து, ஆனந்தம் நல்கி, தாம் சிவஞானசம்பந்தரானது போன்றே அவரையும் சைவ பரிபாலனம் செய்துவரப் பணித்துச் சோழநாட்டுக்குத் திரும்பியருளினார்.

திருஞானசம்பந்தப்பெருமானது திருவருளைப்பெற்ற சிவமுனிவர், சிவானந்த சிவஞானசம்பந்தராய், ஸ்ரீலஸ்ரீ சிவானந்த யோகீந்திர ஸ்ரீ சிவஞான தேசிக பரமாசாரிய சுவாமிகள் என்ற திருப்பெயருடன் திருஞானசம்பந்தராதீனத்தின் குருமுதல்வர் ஆனார். அவர் முதலாக இன்று வரை குருமரபு தொடர்ந்து வளர்ந்து வருகிறது. வளர்ந்துவரும் குருமரபில் இப்போது பட்டத்தில் உள்ளவர்கள் 292-ஆவது குருமகா சந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆவர்.**

குருமரபின் அட்டவணை

1. ஸ்ரீலஸ்ரீ சிவானந்த யோகீந்திர ஸ்ரீ சிவஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்.
2. ஸ்ரீலஸ்ரீ சிவஞான ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்
3. ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்
4. ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகர்
5. ஸ்ரீலஸ்ரீ சிதம்பர தேசிகர்
6. ஸ்ரீலஸ்ரீ பசுபதி தேசிகர்

7. ஸ்ரீலஸ்ரீ பரமானந்த தேசிகர்
8. ஸ்ரீலஸ்ரீ குருத்தம தேசிகர்
9. ஸ்ரீலஸ்ரீ பிரணவநாத தேசிகர்
10. ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிகர்
11. ஸ்ரீலஸ்ரீ நடனநாத தேசிகர்
12. ஸ்ரீலஸ்ரீ திருஞானப்பிரகாச தேசிகர்
13. ஸ்ரீலஸ்ரீ பசுபதிநாத தேசிகர்
14. ஸ்ரீலஸ்ரீ பாண்டியபூசித தேசிகர்
15. ஸ்ரீலஸ்ரீ ஏகாந்த தேசிகர்
16. ஸ்ரீலஸ்ரீ மகாலிங்க தேசிகர்
17. ஸ்ரீலஸ்ரீ சதாசிவ தேசிகர்
18. ஸ்ரீலஸ்ரீ உமாபதி தேசிகர்
19. ஸ்ரீலஸ்ரீ ஆனந்த சுந்தர தேசிகர்
20. ஸ்ரீலஸ்ரீ சிவாநந்த தேசிகர்
21. ஸ்ரீலஸ்ரீ சதாசிவ தேசிகர்
22. ஸ்ரீலஸ்ரீ பிரணவேச்சுர தேசிகர்
23. ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிகர்
24. ஸ்ரீலஸ்ரீ விஸ்வநாத தேசிகர்
25. ஸ்ரீலஸ்ரீ பரசிவவேதநாத தேசிகர்
26. ஸ்ரீலஸ்ரீ மகாதேவ தேசிகர்
27. ஸ்ரீலஸ்ரீ நித்யானந்த தேசிகர்
28. ஸ்ரீலஸ்ரீ சம்புநாத தேசிகர்
29. ஸ்ரீலஸ்ரீ சுயம்புநாத தேசிகர்
30. ஸ்ரீலஸ்ரீ மதுரைநாயக தேசிகர்
31. ஸ்ரீலஸ்ரீ சிதம்பர தேசிகர்
32. ஸ்ரீலஸ்ரீ கண்ணப்ப தேசிகர்
33. ஸ்ரீலஸ்ரீ மகாலிங்க தேசிகர்

34. ஸ்ரீலஸ்ரீ திரிகால சுகானந்த தேசிகர்
35. ஸ்ரீலஸ்ரீ சிவானுக்கிரக தேசிகர்
36. ஸ்ரீலஸ்ரீ சர்வஞான தேசிகர்
37. ஸ்ரீலஸ்ரீ சுந்தரலிங்க தேசிகர்
38. ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகர்
39. ஸ்ரீலஸ்ரீ மகாலிங்கநாத தேசிகர்
40. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகர்
41. ஸ்ரீலஸ்ரீ நித்தியானந்த தேசிகர்
42. ஸ்ரீலஸ்ரீ சுயம்பிரகாச தேசிகர்
43. ஸ்ரீலஸ்ரீ தெட்சிணாமூர்த்தி தேசிகர்
44. ஸ்ரீலஸ்ரீ பரஞ்சோதி தேசிகர்
45. ஸ்ரீலஸ்ரீ மந்திரேச்சுர தேசிகர்
46. ஸ்ரீலஸ்ரீ ஆத்மநாத தேசிகர்
47. ஸ்ரீலஸ்ரீ கைலாச தேசிகர்
48. ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகர்
49. ஸ்ரீலஸ்ரீ சதாசிவ தேசிகர்
50. ஸ்ரீலஸ்ரீ நிரதிசயானந்த தேசிகர்
51. ஸ்ரீலஸ்ரீ ஞானபோதக தேசிகர்
52. ஸ்ரீலஸ்ரீ உலகநாத தேசிகர்
53. ஸ்ரீலஸ்ரீ நந்தீச தேசிகர்
54. ஸ்ரீலஸ்ரீ உமாமகேச தேசிகர்
55. ஸ்ரீலஸ்ரீ தவப்பிரகாச தேசிகர்
56. ஸ்ரீலஸ்ரீ சிவானந்த தேசிகர்
57. ஸ்ரீலஸ்ரீ சபாநாத தேசிகர்
58. ஸ்ரீலஸ்ரீ சாமிநாத தேசிகர்
59. ஸ்ரீலஸ்ரீ சகலாகம தேசிகர்
60. ஸ்ரீலஸ்ரீ பரமஞான தேசிகர்

61. ஸ்ரீலஸ்ரீ யோகப்பிரகாச தேசிகர்
62. ஸ்ரீலஸ்ரீ நீலகண்ட தேசிகர்
63. ஸ்ரீலஸ்ரீ சித்தநாத தேசிகர்
64. ஸ்ரீலஸ்ரீ சத்தினிபாத தேசிகர்
65. ஸ்ரீலஸ்ரீ பரமானந்த தேசிகர்
66. ஸ்ரீலஸ்ரீ ஞானபோதக தேசிகர்
67. ஸ்ரீலஸ்ரீ வேதநாயக தேசிகர்
68. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகர்
69. ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிகர்
70. ஸ்ரீலஸ்ரீ கைலாய சற்குரு சுந்தரலிங்க தேசிகர்
71. ஸ்ரீலஸ்ரீ திரியம்பக தேசிகர்
72. ஸ்ரீலஸ்ரீ சபாபதி தேசிகர்
73. ஸ்ரீலஸ்ரீ சாம்பசிவ தேசிகர்
74. ஸ்ரீலஸ்ரீ சிவசுப்ரமணிய தேசிகர்
75. ஸ்ரீலஸ்ரீ நித்தியானந்த தேசிகர்
76. ஸ்ரீலஸ்ரீ தாண்டவராய தேசிகர்
77. ஸ்ரீலஸ்ரீ சத்தியஞான தேசிகர்
78. ஸ்ரீலஸ்ரீ மதுரைநாயக தேசிகர்
79. ஸ்ரீலஸ்ரீ தியாகராஜ தேசிகர்
80. ஸ்ரீலஸ்ரீ யோகப்பிரகாச தேசிகர்
81. ஸ்ரீலஸ்ரீ ஆனந்த சுந்தர தேசிகர்
82. ஸ்ரீலஸ்ரீ மந்திரேச்சுர தேசிகர்
83. ஸ்ரீலஸ்ரீ வேதநாயக மகாதேவ தேசிகர்
84. ஸ்ரீலஸ்ரீ தட்சிணாமூர்த்தி தேசிகர்
85. ஸ்ரீலஸ்ரீ சதாசிவ தேசிகர்
86. ஸ்ரீலஸ்ரீ சுயம்புநாத தேசிகர்
87. ஸ்ரீலஸ்ரீ உமாபதி தேசிகர்

88. ஸ்ரீலஸ்ரீ விசுவநாத தேசிகர்
89. ஸ்ரீலஸ்ரீ ஆனந்த சுந்தர தேசிகர்
90. ஸ்ரீலஸ்ரீ சுயம்புநாத தேசிகர்
91. ஸ்ரீலஸ்ரீ தியாகராஜ தேசிகர்
92. ஸ்ரீலஸ்ரீ சீகண்ட தேசிகர்
93. ஸ்ரீலஸ்ரீ சுந்தரலிங்க தேசிகர்
94. ஸ்ரீலஸ்ரீ ஆனந்தேஸ்வர தேசிகர்
95. ஸ்ரீலஸ்ரீ மீனாட்சிசுந்தர தேசிகர்
96. ஸ்ரீலஸ்ரீ சின்னமூர்த்தி தேசிகர்
97. ஸ்ரீலஸ்ரீ சாமிநாத தேசிகர்
98. ஸ்ரீலஸ்ரீ சித்தாந்தப் பிரகாச தேசிகர்
99. ஸ்ரீலஸ்ரீ அபிடேக சுந்தர தேசிகர்
100. ஸ்ரீலஸ்ரீ சின்மூர்த்தி தேசிகர்
101. ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிகர்
102. ஸ்ரீலஸ்ரீ நிரதிசயானந்த தேசிகர்
103. ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிகர்
104. ஸ்ரீலஸ்ரீ ஆனந்த பரவச தேசிகர்
105. ஸ்ரீலஸ்ரீ சதாசிவ தேசிகர்
106. ஸ்ரீலஸ்ரீ ஞானசர்வானுக்கிரக தேசிகர்
107. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகர்
108. ஸ்ரீலஸ்ரீ சுகானந்த சுந்தர தேசிகர்
109. ஸ்ரீலஸ்ரீ சந்திரசேகர தேசிகர்
110. ஸ்ரீலஸ்ரீ நின்மலோத்தம தேசிகர்
111. ஸ்ரீலஸ்ரீ சபாபதி தேசிகர்
112. ஸ்ரீலஸ்ரீ விஞ்ஞான தேசிகர்
113. ஸ்ரீலஸ்ரீ காளத்தீஸ்வர தேசிகர்
114. ஸ்ரீலஸ்ரீ பஞ்சநதேஸ்வர தேசிகர்

115. ஸ்ரீலஸ்ரீ சம்பந்த சரணாலய தேசிகர்
116. ஸ்ரீலஸ்ரீ சுயம்பிரகாச தேசிகர்
117. ஸ்ரீலஸ்ரீ கங்காதர தேசிகர்
118. ஸ்ரீலஸ்ரீ நித்தியஞான தேசிகர்
119. ஸ்ரீலஸ்ரீ கருணாலய தேசிகர்
120. ஸ்ரீலஸ்ரீ தேவநாயக தேசிகர்
121. ஸ்ரீலஸ்ரீ பிரமபுரேச தேசிகர்
122. ஸ்ரீலஸ்ரீ தவப்பிரகாச தேசிகர்
123. ஸ்ரீலஸ்ரீ உமாபதி தேசிகர்
124. ஸ்ரீலஸ்ரீ ஆனந்த தேசிகர்
125. ஸ்ரீலஸ்ரீ சுந்தர தேசிகர்
126. ஸ்ரீலஸ்ரீ மறைஞான தேசிகர்
127. ஸ்ரீலஸ்ரீ சிவபாத இருதய தேசிகர்
128. ஸ்ரீலஸ்ரீ வைராக்கிய தேசிகர்
129. ஸ்ரீலஸ்ரீ சுந்தரலிங்க தேசிகர்
130. ஸ்ரீலஸ்ரீ பரசிவஞான தேசிகர்
131. ஸ்ரீலஸ்ரீ பஞ்சானன தேசிகர்
132. ஸ்ரீலஸ்ரீ தர்மோபதேச தேசிகர்
133. ஸ்ரீலஸ்ரீ ஆனந்தேஸ்வர தேசிகர்
134. ஸ்ரீலஸ்ரீ குருத்தம தேசிகர்
135. ஸ்ரீலஸ்ரீ மறைஞான தேசிகர்
136. ஸ்ரீலஸ்ரீ பெருந்தேவ தேசிகர்
137. ஸ்ரீலஸ்ரீ காளத்தீஸ்வர தேசிகர்
138. ஸ்ரீலஸ்ரீ ஆச்சார்ய சரண தேசிகர்
139. ஸ்ரீலஸ்ரீ பரமசிவ தேசிகர்
140. ஸ்ரீலஸ்ரீ சுந்தரலிங்க தேசிகர்
141. ஸ்ரீலஸ்ரீ அருணாசலேச தேசிகர்

142. ஸ்ரீலஸ்ரீ வித்தியேசுவர தேசிகர்
143. ஸ்ரீலஸ்ரீ பரமேஸ்வர தேசிகர்
144. ஸ்ரீலஸ்ரீ சிதம்பர தேசிகர்
145. ஸ்ரீலஸ்ரீ பரமானந்த தேசிகர்
146. ஸ்ரீலஸ்ரீ கணபதீஸ்வர தேசிகர்
147. ஸ்ரீலஸ்ரீ பசுபதி தேசிகர்
148. ஸ்ரீலஸ்ரீ அம்பிகாபதி தேசிகர்
149. ஸ்ரீலஸ்ரீ உலகநாயக தேசிகர்
150. ஸ்ரீலஸ்ரீ சிவானந்த யோகீந்திர தேசிகர்
151. ஸ்ரீலஸ்ரீ கந்தப்ப தேசிகர்
152. ஸ்ரீலஸ்ரீ மீனாட்சி சுந்தர தேசிகர்
153. ஸ்ரீலஸ்ரீ சங்கரலிங்க தேசிகர்
154. ஸ்ரீலஸ்ரீ சதாசிவ தேசிகர்
155. ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்
156. ஸ்ரீலஸ்ரீ பஞ்சநத தேசிகர்
157. ஸ்ரீலஸ்ரீ திருச்சிற்றம்பல தேசிகர்
158. ஸ்ரீலஸ்ரீ நடேச தேசிகர்
159. ஸ்ரீலஸ்ரீ இராமேச தேசிகர்
160. ஸ்ரீலஸ்ரீ சட்டையப்ப தேசிகர்
161. ஸ்ரீலஸ்ரீ காழியப்ப தேசிகர்
162. ஸ்ரீலஸ்ரீ சொக்கநாத தேசிகர்
163. ஸ்ரீலஸ்ரீ முருகப்ப தேசிகர்
164. ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிகர்
165. ஸ்ரீலஸ்ரீ சௌந்தர தேசிகர்
166. ஸ்ரீலஸ்ரீ மகாலிங்க தேசிகர்
167. ஸ்ரீலஸ்ரீ ஏகநாத தேசிகர்
168. ஸ்ரீலஸ்ரீ ஆனந்த பரவச தேசிகர்

169. ஸ்ரீலஸ்ரீ தியாகராஜ தேசிகர்
170. ஸ்ரீலஸ்ரீ சதாசிவ தேசிகர்
171. ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்
172. ஸ்ரீலஸ்ரீ தோணிபுரேச தேசிகர்
173. ஸ்ரீலஸ்ரீ சுகானந்த தேசிகர்
174. ஸ்ரீலஸ்ரீ உமாபதி தேசிகர்
175. ஸ்ரீலஸ்ரீ நெல்லையப்ப தேசிகர்
176. ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர்
177. ஸ்ரீலஸ்ரீ மகாதேவ தேசிகர்
178. ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிகர்
179. ஸ்ரீலஸ்ரீ சிவலோகநாத தேசிகர்
180. ஸ்ரீலஸ்ரீ மதுரேச தேசிகர்
181. ஸ்ரீலஸ்ரீ சித்தநாத தேசிகர்
182. ஸ்ரீலஸ்ரீ கந்தப்ப தேசிகர்
183. ஸ்ரீலஸ்ரீ கங்காதர தேசிகர்
184. ஸ்ரீலஸ்ரீ சீகண்டதேவ தேசிகர்
185. ஸ்ரீலஸ்ரீ நித்தியானந்த தேசிகர்
186. ஸ்ரீலஸ்ரீ மகாதேவ தேசிகர்
187. ஸ்ரீலஸ்ரீ பாலறாவாய தேசிகர்
188. ஸ்ரீலஸ்ரீ மந்திரேச தேசிகர்
189. ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்
190. ஸ்ரீலஸ்ரீ நீலகண்ட தேசிகர்
191. ஸ்ரீலஸ்ரீ பசுபதி தேசிகர்
192. ஸ்ரீலஸ்ரீ வேதநாயக தேசிகர்
193. ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்
194. ஸ்ரீலஸ்ரீ கிருபாலய தேசிகர்
195. ஸ்ரீலஸ்ரீ சந்திரசேகர தேசிகர்

196. ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிகர்
197. ஸ்ரீலஸ்ரீ மகாதேவ தேசிகர்
198. ஸ்ரீலஸ்ரீ ஆனந்த பரவச தேசிகர்
199. ஸ்ரீலஸ்ரீ மதுரேச தேசிகர்
200. ஸ்ரீலஸ்ரீ சிவலோக தேசிகர்
201. ஸ்ரீலஸ்ரீ மறைஞானசம்பந்த தேசிகர்
202. ஸ்ரீலஸ்ரீ விஸ்வநாத தேசிகர்
203. ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்
204. ஸ்ரீலஸ்ரீ சுயம்புநாத தேசிகர்
205. ஸ்ரீலஸ்ரீ சிற்றம்பல தேசிகர்
206. ஸ்ரீலஸ்ரீ சின்னமூர்த்தி தேசிகர்
207. ஸ்ரீலஸ்ரீ தியாகராஜ தேசிகர்
208. ஸ்ரீலஸ்ரீ கந்தப்ப தேசிகர்
209. ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்க தேசிகர்
210. ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்
211. ஸ்ரீலஸ்ரீ சுந்தரலிங்க தேசிகர்
212. ஸ்ரீலஸ்ரீ கணேச தேசிகர்
213. ஸ்ரீலஸ்ரீ தட்சிணாமூர்த்தி தேசிகர்
214. ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்
215. ஸ்ரீலஸ்ரீ மதுரைநாயக தேசிகர்
216. ஸ்ரீலஸ்ரீ சம்பந்த சரணாலய தேசிகர்
217. ஸ்ரீலஸ்ரீ மதுரைநாயக தேசிகர்
218. ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகர்
219. ஸ்ரீலஸ்ரீ சம்புநாத தேசிகர்
220. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக தேசிகர்
221. ஸ்ரீலஸ்ரீ பசுபதி தேசிகர்
222. ஸ்ரீலஸ்ரீ சபாநாத தேசிகர்

223. ஸ்ரீலஸ்ரீ சுயம்பிரகாச தேசிகர்
224. ஸ்ரீலஸ்ரீ காளத்தீச தேசிகர்
225. ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிகர்
226. ஸ்ரீலஸ்ரீ சிவபாத தேசிகர்
227. ஸ்ரீலஸ்ரீ சரவணோற்பவ தேசிகர்
228. ஸ்ரீலஸ்ரீ விஸ்வநாத தேசிகர்
229. ஸ்ரீலஸ்ரீ கௌரிவல்லப தேசிகர்
230. ஸ்ரீலஸ்ரீ ஞானபோதக தேசிகர்
231. ஸ்ரீலஸ்ரீ பக்தவத்சல தேசிகர்
232. ஸ்ரீலஸ்ரீ ஆச்சார்ய சரண தேசிகர்
233. ஸ்ரீலஸ்ரீ சம்பந்த சரணாலய தேசிகர்
234. ஸ்ரீலஸ்ரீ பிரமபுர நாயக தேசிகர்
235. ஸ்ரீலஸ்ரீ நந்திகேஸ்வர தேசிகர்
236. ஸ்ரீலஸ்ரீ ஆத்மநாத தேசிகர்
237. ஸ்ரீலஸ்ரீ நித்தியேசுவர தேசிகர்
238. ஸ்ரீலஸ்ரீ வேலாயுத தேசிகர்
239. ஸ்ரீலஸ்ரீ திருவருள் தேசிகர்
240. ஸ்ரீலஸ்ரீ கடம்பவனசுந்தர தேசிகர்
241. ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிகர்
242. ஸ்ரீலஸ்ரீ மகேஸ்வர தேசிகர்
243. ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிகர்
244. ஸ்ரீலஸ்ரீ சாமிநாத தேசிகர்
245. ஸ்ரீலஸ்ரீ சுகுண தேசிகர்
246. ஸ்ரீலஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பல தேசிகர்
247. ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகர்
248. ஸ்ரீலஸ்ரீ சதாசிவ தேசிகர்
249. ஸ்ரீலஸ்ரீ சுந்தரலிங்க தேசிகர்

250. ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல தேசிகர்
251. ஸ்ரீலஸ்ரீ சந்திரசேகர தேசிகர்
252. ஸ்ரீலஸ்ரீ மறைஞான தேசிகர்
253. ஸ்ரீலஸ்ரீ சிற்றம்பல தேசிகர்
254. ஸ்ரீலஸ்ரீ பசுபதி தேசிகர்
255. ஸ்ரீலஸ்ரீ உமாமகேஸ்வர தேசிகர்
256. ஸ்ரீலஸ்ரீ கைலாய தேசிகர்
257. ஸ்ரீலஸ்ரீ மறைஞான தேசிகர்
258. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகர்
259. ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகர்
260. ஸ்ரீலஸ்ரீ தியாகராஜ தேசிகர்
261. ஸ்ரீலஸ்ரீ திரிகால தேசிகர்
262. ஸ்ரீலஸ்ரீ பாம்பணிநாத தேசிகர்
263. ஸ்ரீலஸ்ரீ ஏகநாத தேசிகர்
264. ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகர்
265. ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்
266. ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை தேசிகர்
267. ஸ்ரீலஸ்ரீ சரவண தேசிகர்
268. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக தேசிகர்
269. ஸ்ரீலஸ்ரீ சுந்தரலிங்க தேசிகர்
270. ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல தேசிகர்
271. ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல தேசிகர்
272. ஸ்ரீலஸ்ரீ சந்திரசேகர தேசிகர்
273. ஸ்ரீலஸ்ரீ மறைஞான தேசிகர்
274. ஸ்ரீலஸ்ரீ பசுபதி தேசிகர்
275. ஸ்ரீலஸ்ரீ உமாமகேஸ்வர தேசிகர்
276. ஸ்ரீலஸ்ரீ கைலாய தேசிகர்

277. ஸ்ரீலஸ்ரீ மறைஞான தேசிகர்
278. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகர்
279. ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகர்
280. ஸ்ரீலஸ்ரீ தியாகராஜ தேசிகர்
281. ஸ்ரீலஸ்ரீ திரிகால தேசிகர்
282. ஸ்ரீலஸ்ரீ பாம்பணிநாத தேசிகர்
283. ஸ்ரீலஸ்ரீ ஏகநாத தேசிகர்
284. ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகர்
285. ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்
286. ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை தேசிகர்
287. ஸ்ரீலஸ்ரீ சரவண தேசிகர்
288. **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக தேசிகர்**
289. ஸ்ரீலஸ்ரீ இராவ்பகதூர் சுவாமிநாத தேசிகர்
290. ஸ்ரீலஸ்ரீ ஜலதம்ப சுவாமிநாத தேசிகர்
291. ஸ்ரீலஸ்ரீ திருவருள் தவயோக சோமசுந்தர தேசிகர்
292. **ஸ்ரீலஸ்ரீ லோககுரு அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்.**

அண்மையில் விளங்கிய குருமகாசந்நிதானங்கள்

திருஞானசம்பந்தர் காலமாகிய ஏழாம் நூற்றாண்டு முதல் இன்றுவரை இந்த 1300 ஆண்டுகளில் 292 பட்டங்கள் வரை வளர்ந்து வந்துள்ள நெடிய குருமரபில் முற்காலத்தி லிருந்த பலரது வரலாறுகள் தெரிவதற்கில்லை. இடைக் காலத்தில் இருந்த இரண்டொருவரைப் பற்றிய குறிப்புகளும், அண்மைக் காலத்தில் 288; 289; 290; 291 - ஆம் பட்டங்களாக விளங்கியவர்களைப் பற்றிய செய்திகளுமே தெரியவருகின்றன.

233-ஆம் பட்டம் சம்பந்த சரணாலய சுவாமிகள்

இவர்கள் காலத்தில் சோழநாட்டில் துறையூர் மன்னன் வீரமார்த்தாண்டன் தொழுநோயால் வருந்தி மதுரைக்கு

மீனாட்சி சுந்தரேஸ்வரரை வழிபட வந்தபோது ஆதீனத்திற்கும் வந்து, இவர்களை வணங்கித் திருநீறு பெற்று நோய்தீரப் பெற்றான். சந்நிதானத்தைத் துறையூருக்கு அழைத்து வணங்கி நிலம் பொன் முதலியவற்றைக் காணிக்கையாக அளித்துச் சிறப்பித்து மகிழ்ந்தான்.

270 - ஆம் பட்டம் **பொன்னம்பல சுவாமிகள்**

விசுவநாத நாயக்கர் ஆட்சிக்காலம். ஆதீனகர்த்தர் பொன்னம்பல தேசிகரிடம் மதுரைக் கோயில் நிர்வாகத்தை நடத்தி வர நாயக்கமன்னர் கேட்டுக்கொண்டார். 285-ஆம் பட்டம் சுப்பிரமணிய தேசிகர் காலம் வரை மதுரைக் கோயில் நிர்வாகம் திருஞானசம்பந்தர் ஆதீனத்திலேயே இருந்தது.

287-ஆம் பட்டம் **சரவண சுவாமிகள்**

இவர்கள் திருவையாறு கிளைமடத்திலேயே பல காலம் எழுந்தருளியிருந்து அங்கேயே சமாதியானார்கள். திருவையாற்றில் கிளைமடம் உள்ள தெரு மதுரை மடத்துத் தெரு என்று இன்றும் வழங்குகிறது. பச்சையப்ப முதலியார் இவர்கள் காலத்தில் மடத்தின் சீடராகித் திருவையாறு கிளைமடத்துக்கு நிலம் பொன் முதலியன அளித்தார்.

288-ஆம் பட்டம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக ஸ்ரீ ஞானசம்பந்ததேசிக பரமாசாரிய சுவாமிகள்

இவர்கள் வள்ளலார் காலத்தவர்கள். வள்ளற் பெருமானுக்கும் இவர்களுக்கும் கடிதத் தொடர்பு இருந்திருக்கிறது.

1. வள்ளற்பெருமான் செய்யுள் நடையில் இவர்களுக்கு எழுதிய ஒரு திருமுகம் (1854)
2. மதுரை ஆதீனம் சிதம்பர சுவாமிகள் பதிப்பித்த சிதம்பரபுராணப் பதிப்பிற்கு வள்ளற்பெருமான் அருளிய சாற்றுக் கவிகள் (1855).

3. திருவருட்பா முதல் நான்கு திருமுறைகளின் முதற் பதிப்பிற்கு மதுரை ஆதீனம் சிதம்பரசுவாமிகள் பாடிய பாயிர வெண்பா - திருவருட்பா மகிமை *(1867)*.

4. கருங்குழி புருஷோத்தம ரெட்டியாரைப் பற்றி விசாரித்து எழுதிய கடிதத்தின் தொடர்பாக வரைந்த இலக்கணக் கடிதம் *(1869)*.

என நான்கு வகையில் வள்ளற்பெருமானுக்கும் மதுரையாதீனத்திற்கும் தொடர்பிருந்திருக்கிறது. இந்நான்கையும் ஒவ்வொன்றாகக் காண்போம்.

மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்
288-ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகத் திருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கு வரைந்த திரு/முகப் பாசுரம்

நிலைமண்டில ஆசிரியப்பா

திருச்சிற்றம்பலம்

*திருவளர் மார்பனும் திசைமுகத் தவனும்
உருவளர் தேவரும் உணர்ந்திடப் படாத
சச்சிதா னந்த சாக்ஷாத் கார
சொச்ச நித்திய சுயம்பிர காச
நிர்க்குண நிச்சல நிமல நிராமய
சிற்குண தற்பர சிற்பர சின்மய
அகள அற்புத அனந்தா னந்த
சகள மத்திய சத்திய சத்துவ
அகண்ட பூரண அருளா னந்த
மகண்ட விண்டல வாணர்கள் வந்தித
தத்துவ சொரூப தத்துவா தீத
தத்துவ காரண தத்துவ ரகித
விச்சுவ சொரூப விச்சுவ காரண
விச்சுவ ரகித விச்சுவா தீத
பிரணவ சொரூப பிரணவ காரண
பிரணவ ரகித பிரணவா தீத
பஞ்சாக் கரப்பொருட் பாங்குறு வடிவ*

எஞ்சாக் கருணை யெனுந்திரு வுருவ
நாத வடிவ நாதநா தாந்த
வேத வடிவ வேதவே தாந்த
உள்ளமர் ஒளிய ஒளியினுள் ஒளிய
கள்ளமில் அன்பர் கண்ணமர் வெளிய
பெரியதில் பெரிய் பெருங்குணக் கடல
அரியதில் அரிய அனாதி போதக
ஆகம வடிவ ஆகம முடிவ
ஆகம நிலய ஆகம காரண
சைவசித் தாந்த ஸ்தாபனஞ் செய்த'
தெய்வ மகத்துவ சிறப்புறு நெறிய
ஞான காரண ஞானமெய்ச் சொரூப
ஞான நாடக ஞானசம் பந்த
தேவ தேவ சிவசிவ சிவஎன
யாவரும் துதிக்க இனியதென் பாண்டி
நாட்டிடை மதுரா நகர்த்திரு மடாலயத்(து)
ஈட்டிய அருளால் எழிலருள் வடிவங்
கொண்டெமை அடிமை கொண்டருள் புரிந்த
தண்டமிழ் மறைமொழி தருந்தனி முதலே
மூவாண் டதனில் மூவுல கும்தொழத்
தேவாண்ட ஞானத் தெள்ளமு தருந்திய
மணியே என்கண் மணியே சைவ
மணியே தெய்வ மணியே அணியே
முத்துச் சிவிகையின் முளைத்தெழும் இளங்கதிர்
ஒத்துத் தனியமர்ந் தருளிய ஒளியே
சைவந் தழைக்கச் சமண்கழு வேறத்
தெய்வநீ றளித்த திருவருட் கன்றே
பிழைத்தலின் என்பைப் பெண்ணுரு வாக
அழைத்தருள் புரிந்த அற்புத அமுதே
சரியை யாதிய சாதுர்ப் பாதமும்
தெரியநல் லோர்க்குத் தெரித்தருள் தெளிவே
பாலொடு கலந்த பழம்போல் இனிக்க
நூலொடு மெய்ம்மொழி நுவன்றருள் பதியே
தவமே தவத்திற் சார்தரும் பயனே
நவமே சாந்த நகைமுக மதியே

செவ்விய கரும்பே தேனே கனியின்
திவ்விய சுவையே தெவிட்டா மருந்தே
அஞ்செழுத் துண்மையை அறிந்திட அடியேன்
நெஞ்சழுத் துறஅருள் நீள்தயா நிதியே
என்னொரு தாயே என்னையீன் றோனே
என்னுயிர்க் குயிரே என்பெரும் பொருளே
என்னுடை அறிவே என்னுளத் தன்பே
என்னுயர் கதியே என்னுடைக் குருவே
அடியேன் புரியும் ஆயிரம் பிழையும்
படியாற் பொறுத்துப் பாங்கருள் பரமே
எல்லாம் வல்ல இறையே அடைந்தவர்
பொல்லாங் கெல்லாம் பொறுத்தருள் பொறையே
முற்றும் உணர்ந்த முதலே உலகப்
பற்றை அகன்றநற் பண்பினர் உறவே
ஆனசம் பந்தநல் ஆறு முகத்திரு
ஞானசம் பந்த ஞானதே சிகனே
போற்றிநின் சேவடி போற்றிநின் பூம்பதம்
போற்றிநின் தாள்மலர் போற்றிநின் கழற்கால்
குற்றமும் குணமாக் கொண்டருள் புரியும்
பெற்றிநின் கருணைப் பெரும்பெயல் அதற்கு
அட்ட மாக அனந்தந் தெண்டன்
இட்டமா வடியேன் இட்டவிண் ணப்பம்
திருச்செவிக் கேற்றுத் திருவுளத் தெளியேன்
உருச்செவி அறியா உறுபிழை பொறுத்திட
வேண்டு நின்னருள் வேண்டுநின் கருணை
வேண்டும் வேண்டும் வேண்டும் என்னெனில்
என்னென உரைக்கேன் என்னென உரைக்கேன்
பொன்னன நினது பூம்பதம் தரிசித்(து)
அன்பர்கள் எல்லாம் அவ்விடை வாழ
நன்பயன் அறியா நாயேன் ஒருவனும்
நன்னிதி அனையநின் சந்நிதி அதனில்
மன்னுநின் கருணை வடிவக் காட்சியைத்
தரிசித் தின்பத் தனிக்கடல் ஆடப்
பிரியத் துடனே பெற்றிலா தந்தோ
தகவிலேன் நெடுநாள் தனித்துச் சேய்மையில்

புருடனைப் பிரிந்த பூவையைப் போல்
வாழ்விற் குறைந்து மனந்தளர் வெய்தித்

தாழ்வுறு நாணந் தலைக்கொள நின்றேன்
ஆதலாற் சுவாமிகள் அருளிற் புரிந்த
தீதிலாத் திருமுகத் தெய்வந் தன்னை★
தரிசித் துள்ளந் தழைத்து வணங்கிப்
பரிசித் தன்பொடு பரவிப் போற்றி

வணங்கி வணங்கி வாசித் துடம்பும்
உயிருந் தழைக்க உவந்தா னந்தக்
கூத்திது வரையிற் குயிற்றிநிற் கின்றேன்
என்னினும் அந்தோ என்செய்வேன் பிரிந்த
புன்னெறி நினைத்துப் போந்த நாணமும்

அச்சமும் என்னை அடிக்கடி தகைக்க
நச்சிய வித்தனை நாளும் விண்ணப்
பத்திரஞ் செய்து பரவத் தாழ்த்தேன்
குத்திர மனத்துக் கொடியேன் செய்பிழை
மலையினும் கடலினும் மண்ணினும் பெரிதே

நிலையினும் அறியா நெடும்பிழை எந்தாய்
என்செய்தால் தீரும்என் செய்வேன் எளியேன்
பொன்செய்தா லன்னநின் பொன்மலர் அடியை
இரவும் பகலும் இடைவிடா துன்னிப்
பரவும் பரிசே பரிசென அருளே.

சென்னைப்பட்டணத்தைச் சார்ந்த மயிலையில் — அடியேன் சிதம்பரம் **இராமலிங்கம்**

ஆனந்த ஞு புரட்டாசி மீ உ க வ†

வள்ளற்பெருமான் இளமையில் சென்னையில் வதிந்த காலத்தில் இத்திருமுகம் வரையப் பெற்றிருக்கிறது. ஓராண்டுக் குழந்தைப் பருவத்தில் அன்னையாரின் ஊராகிய பொன்னேரிக்கும் அங்கிருந்து சென்னைக்கும் அழைத்துச் செல்லப்பெற்ற பிள்ளைப்பெருமான் முப்பத்தைந்தாம் அகவை வரை 1858-ஆம் ஆண்டு வரை சென்னையில் வதிந்திருக் கிறார். சென்னையில் வதிந்த காலத்தில் கந்தகோட்டத்தையும் திருவொற்றியூரையும் திருத்தணிகையையும் பாடிப்

★ தமக்கு அனுப்பியதாக இங்குக் குறிப்பிடப்பெறும் திருமுகம் கிடைக்கவில்லை.

† இதற்குச் சரியான இங்கிலிஷ் தேதி 05.10.1854

பரவுவதையே பெரும்பணியாகக் கொண்டிருந்த இளைய வள்ளற்பெருமான் பாடஞ்சொல்லல், சிறுவர்களுக்குக் கல்வி பயிற்றல், நூல்கள் இயற்றல், பதிப்பித்தல், சாற்றுக்கவியளித்தல் முதலியவற்றிலும் ஈடுபடலானார்.

ஆண்டு	பணி
1851	ஒழிவிலொடுக்கம் பதிப்பித்தது.
1851	நிட்டானுபூதி உரைக்குச் சாற்றுக்கவி அளித்தது.
1854	மனுமுறை கண்ட வாசகம் இயற்றி வெளியிட்டது.
1854	மதுரையாதீன குருமகாசந்நிதானம் ஆறுமுகத் திருஞானசம்பந்ததேசிகருக்குச் செய்யுள் திருமுகம்.
1855	மதுரையாதீனம் சிதம்பர சுவாமிகளின் சிதம்பர புராணப் பதிப்புக்குச் சாற்றுக்கவியளித்தது.
1855	தொண்டமண்டல சதகம் பதிப்பித்தது.
1857	சின்மய தீபிகை பதிப்பித்தது.

இத்தகைய பணிகளால் சான்றோர்களின் தொடர்பும் அறிஞர்களின் தொடர்பும் ஏற்பட்டது. மதுரையாதீனம் சிதம்பர சுவாமிகளின் சிதம்பர புராணப்பதிப்பு 1855-இல் சென்னையில் அச்சிடப்பெற்றிருக்கிறது. அதற்கு வள்ளற் பெருமான் சாற்றுக்கவியளித்திருக்கிறார். பதிப்புப் பணிக்காகச் சிதம்பர சுவாமிகள் மதுரையிலிருந்து சென்னைக்கு வந்து தங்கியிருக்கவேண்டும். சிதம்பர சுவாமிகள் மூலமாக மதுரையாதீன குருமகாசந்நிதானத்தின் அறிமுகம், தொடர்பு ஏற்பட்டிருக்க வேண்டும். மதுரையாதீன குருமகாசந்நிதானத் திற்கு எழுதிய செய்யுட் கடிதத்தின் கீழ் இடமும் காலமும் குறிப்பிடப்பெற்றுள்ளன. "சென்னைப் பட்டணத்தைச் சார்ந்த மயிலையில் ஆனந்த வருடம் புரட்டாசி மாதம் 21-ஆம் தேதி'' என்பது அக்குறிப்பு. ஆனந்த புரட்டாசி 21-க்குச் சரியான இங்கிலிஷ் தேதி *1854* அக்டோபர் 5 ஆகும். சென்னைப் பட்டணத்தைச் சார்ந்த மயிலையில் என இடம் குறிப்பிடப் பெற்றுள்ளதால் இக்கடிதம் எழுதிய காலத்தில் வள்ளற்பெருமான் மயிலாப்பூரில் தங்கியிருந்தார் என்பது

பெறப்படும். சென்னை ஏழுகிணறு வீராசாமிபிள்ளை தெருவில் வதிந்த வள்ளற்பெருமான், அறிவுப்பணி, அறிஞர் கூட்டுறவு ஆகியவற்றிற்காகச் சிலபோது மயிலாப்பூருக்கு வந்து தங்கி யிருக்கவேண்டும். சென்னையில் மயிலை பண்பாடு மிக்க பகுதி. மயிலைக் கபாலீச்சரத்தை அடுத்துத் தெற்குமாட வீதியில் தெப்பக்குளத்தின் தென்கரையில் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் கிளைமடம் உள்ளது. மதுரையிலிருந்து சென்னைக்கு வந்த சிதம்பர சுவாமிகள் மயிலையில் குன்றக்குடி ஆதீனக் கிளைமடத்தில் தங்கி யிருக்கலாம். தெற்குமாட வீதியில் குன்றக்குடி ஆதீனக் கிளைமடத்தை அடுத்து வியாசர்பாடி விநாயக முதலியாரின் புகழ்பெற்ற சித்திரச்சத்திரம் இருக்கிறது. விருத்தாசலம் குமார தேவர் மடத்தின் கிளைமடமும் தெற்கு மாடவீதியிலேயே இருக்கிறது. இவையெல்லாம் அறிஞர்களும் சான்றோர்களும் கூடுவதற்கேற்ற சிறந்த இடங்கள். இவ்விடங்கள் வள்ளற் பெருமானுக்குப் பழக்கமானவையாக இருக்கலாம். எல்லா இடங்களிலும் மதுரையாதீனம் சிதம்பர சுவாமிகள் தங்கு வதற்கேற்ற இடம், தங்குவதற்குரிய இடம், குன்றக்குடி கிளைமடமேயாகலாம். அதில் அவருடன் அக்காலத்தில் வள்ளற்பெருமான் சிலபோது தங்கியிருந்தார் எனக் கொள்ளலாம்.

''திருவளர்'' என்று தொடங்கி நூற்றொன்பது அடிகளானி யன்று ''அருளே'' என்று நிறைவுறும் வள்ளற்பெருமானது திருமுகப்பாசுரம் மதுரையாதீனத்திற்குக் கிடைத்ததோர் மாணிக்க மாலையாகும். மதுரையாதீனத்தில் கல்வெட்டில் பொறிக்கவேண்டிய பாடல் இது. கண்ணாடி சட்டமிட்டு வைக்கவேண்டிய பாடல் இது. இதனுள் ஆதீனகர்த்தர் ஆறுமுகதேசிகரைத் திருஞானசம்பந்தராகவே பாவித்து, திருஞானசம்பந்தருக்குரிய சிறப்புகளையெல்லாம் ஆறுமுக சுவாமிகளுக்கு ஏற்றிக்கூறிப் போற்றிப் புகழ்ந்து பாடுகிறார் வள்ளற்பெருமான். வள்ளற்பெருமான் திருஞானசம்பந்தப் பெருமானை வழிபடு குருவாகக் கொண்டவர். திருஞான சம்பந்தரிடம் அளவற்ற ஈடுபாடும் பக்தியும் கொண்டவர்.

ஆதலின் திருஞானசம்பந்தரோடு தொடர்புடைய எல்லா வற்றையுமே திருஞானசம்பந்தராகக் காண்கிறார். மதுரை யாதீனம் குருமகாசந்நிதானம் ஆறுமுக தேசிகருக்கு வரைந்த இத்திருமுகப் பாசுரத்திலும், மதுரையாதீனம் சிதம்பர சுவாமி களின் சிதம்பர புராணப் பதிப்புக்கு அருளிய சாற்றுக்கவி களிலும், திருவோத்தூர் சிவஞானதேசிகரின்மீது பாடிய தோத்திரப் பாக்களிலும், இம்மூவரையும் திருஞானசம்பந்தராகவே பாவித்துப் பாடுவதைக் காணலாம்.

அண்மையில் வெளியான மதுரை ஆதீன வெளியீடுகள் சிலவற்றுள் வள்ளற்பெருமானை மதுரை ஆதீனச் சீடர் என்று குறித்துள்ளனர். மதுரை ஆதீனச் சீடர்களில் சிலர் என்ற பெயர்ப்பட்டியலில் வள்ளற்பெருமான் பெயர் முதலாவதாகக் குறிப்பிடப் பெற்றிருக்கிறது. மதுரை ஆதீனத்திற்கும் வள்ளலாருக்கும் குருசீட உறவு இல்லை. நட்புறவே இருந்தது. வள்ளற்பெருமானை மதுரை ஆதீனச் "சீடர்" என்பது பொருந்தாது. மதுரை ஆதீன அன்பர் என்பதே பொருந்தும். மதுரை ஆதீனத்தைப் போற்றிப் புகழ்ந்து பாடியவர் எனலாம்.

ஆதீனகர்த்தர் ஆறுமுக தேசிகரிடமிருந்து தமக்கு வந்த திருமுகத்தை வள்ளற்பெருமான் தம் திருமுகப் பாசுரத்தின் 91-92-ஆம் அடிகளிற் குறிப்பிடுகின்றார். அத்திருமுகத்திற்கு விடையாகவே இத்திருமுகப் பாசுரத்தை வள்ளற்பெருமான் வரைந்தனுப்புகிறார். ஆதீன குருமகாசந்நிதானத்திடமிருந்து வந்ததாக வள்ளற்பெருமான் குறிப்பிடும் திருமுகம் கிடைக்க வில்லை. கிடைக்கவில்லை என்பதை யாம் எழுதிய இராமலிங்க அடிகள் வரலாற்றுப் பெருநூலில் கூறியுள்ளோம் (இரண்டாம் பதிப்பு 1976-பக்கம் 113). ஆனால் அண்மையில் 02.11.1994-இல் வெளிவந்த "மதுரை ஆதீனத்தை நிறுவி யருளிய திருஞானசம்பந்த சுவாமிகள் வரலாறும் மற்றும் ஏனைய குறிப்புகளும்" என்னும் மதுரை ஆதீன வெளியீட்டில், "மதுரை ஆதீனம் 288-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

சிதம்பரம் இராமலிங்க அடிகளுக்கு எழுதியனுப்பிய திருமுகம்" என்று 20.09.1854-ஆம் தேதியிட்டு ஒரு கடிதம் காட்டப் பட்டிருக்கிறது. அக்கடிதத்திற் கூறப்பெறும் திருச்சிற்றம்பல ஞானியார், கருங்குழி புருஷோத்தம ரெட்டியார், கணக்கில வதானம் முத்துசாமிபிள்ளை, யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் செய்திகளெல்லாம் 1854-இல் நடவாதவை; 1854-க்குச் சிறிதும் சம்பந்தமில்லாதவை; 1867-க்கும் பிறப்பட்டவை. 1854-இல் வள்ளற்பெருமான் சென்னையில் வதிந்த காலத்திலுண்டான திருமுகத் தொடர்பு இது. 1858-இல்தான் வள்ளற்பெருமான் கருங்குழிக்கு வருகிறார். அப்படியிருக்க 1854 கடிதத்தில் கருங்குழி எவ்வாறு இடம்பெறும்? ஆறுமுக நாவலர் செய்தி, திருவருட்பா வெளியீடான 1867-க்குப் பிறபட்டதாகும். அப்படி யிருக்க அது 1854 கடிதத்தில் எப்படி வரும். அக்கடிதம் உண்மைக்குச் சிறிதும் பொருந்தவில்லை. கற்பனையாக அண்மைக்காலத்தில் புனையப்பட்டதே ஆகும். ஆதலின் விட்டுவிட்டோம்.

2. சிதம்பரபுராணப் பதிப்புக்கு வள்ளற்பெருமான் அருளிய சாற்றுக்கவி

புராணத் திருமலைநாதர் இயற்றிய சிதம்பர புராணத்தை மதுரை ஆதீனம் சிதம்பர சுவாமிகள் 1855 (இராட்சத, ஆவணி)-இல் அச்சிற் பதிப்பித்தார். அதன் முகப்பேடு வருமாறு:

> உ. சிவமயம். திருச்சிற்றம்பலம். சிதம்பர புராணம். இஃது வேதாகம சித்தாந்த சைவ சமயாசாரிய பீடமாக விளங்கு கின்ற மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம் சிதம்பரசுவாமிகளால் பலர்க்கும் பயன்படும் பொருட்டுத் திருத்தியருளல் வேண்டுமென்ற சாஸ்திர விளக்கச் சங்கத்தைச் சார்ந்த சைவ சுத்த சித்தாந்த சபையாரவர்கள் விண்ணப்பத்தின்படி திருத்தப்பட்டு ஷை சங்கத்தைச் சார்ந்த வித்தியானந்த அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. இராக்ஷத ஞு - ஆவணி மீ.

சிதம்பர புராணத்தைப் பதிப்பிக்கும்படி மதுரையாதீனம் சிதம்பர சுவாமிகளைக் கேட்டுக்கொண்டவர்கள் சென்னை சாஸ்திர விளக்கச் சங்கத்தைச் சார்ந்த சைவ சுத்த சித்தாந்த

சபையார் ஆவர். சாஸ்திர விளக்கச் சங்கம் என்ற பெயரே எப்படியிருக்கிறது? அருமையாக இருக்கிறதல்லவா! சாஸ்திரங்களை விளக்குவதற்கென்று ஏற்பட்ட ஒரு சங்கம். அச்சங்கத்தைச் சார்ந்த சைவ சித்தாந்த சபை. இதுபோன்ற நூற்றொண்டுகள் பலவற்றை இச்சங்கத்தார் இச்சபையார் செய்திருக்கின்றனர். மனுமுறைகண்ட வாசகத்தை இயற்றுமாறு வள்ளலாரைக் கேட்டுக்கொண்டவர்களும் இச்சாஸ்திர விளக்கச் சங்கத்தாரே. 1854-இல் வள்ளற்பெருமான் எழுதிப் பதிப்பித்த மனுமுறைகண்ட வாசகத்தின் முகப்பேடு வருமாறு.

> உ. சிவமயம். திருச்சிற்றம்பலம். மனுமுறைகண்ட வாசகம். இஃது பலருக்கு உபயோகமாகச் சாஸ்திர விளக்கச் சங்கத்தார் கேட்டுக் கொண்டபடி மநுநீதிகண்ட புராணத்தை விரிவுள்ள வாசக நடையாகச் சிதம்பரம் இராமலிங்கப் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டு பாளையம் சுப்பராயச் செட்டியாரவர்களால் மேற்படி சங்கத்தாரவர்களது வித்தியானந்த அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. ஆனந்த ஷு ஆனி மீ.

மனுமுறைகண்ட வாசகம் சிதம்பர புராணம் ஆகிய இவ்விரண்டும் ஒரே சங்கத்தாரால் ஒரே அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றுள்ளன. முதலாண்டில் மனுமுறைகண்ட வாசகத்தைப் பதிப்பித்தவர்களே அடுத்த ஆண்டில் சிதம்பர புராணத்தைப் பதிப்பித்திருக்கிறார்கள். இதிலும் ஒரு நல்ல தொடர்பிருக்கிறது.

சிதம்பர புராணப் பதிப்பிற்கு வள்ளற்பெருமான் சாற்றுக் கவி அருளியிருக்கிறார். சிதம்பரத்தின்மீது எல்லையில்லாத பற்றுக்கொண்டவர் வள்ளற்பெருமான். பெருமானது அம்பலப் பற்றுக்கு அளவே இல்லை. ''அம்பலப் பற்றே பற்றுமினோ எற்றும் இறவீரே'' என்று பாடியவர். தம் பெயருக்குமுன் சிதம்பரம் என்பதைச் சேர்த்துத் தம்மைச் சிதம்பரம் இராமலிங்கம் என்றே வழங்கும் வழக்கமுடையவர். சிதம்பரம் இராமலிங்கம் என்றே கையொப்பமிடும் வழக்கமுடையவர். தாம் புதிதாக ஞானசபையை ஏற்படுத்திய வடலூருக்கு உத்தரஞான சிதம்பரம் என்று பெயரிட்டவர். தாம் மிகுந்த பற்றுக் கொண்டிருக்கும் சிதம்பர தலத்தின் வரலாறாகிய

சிதம்பர புராணத்தைச் சிதம்பர சுவாமிகள் அச்சிடுவதில் வள்ளற் பெருமானுக்கு அளவற்ற மகிழ்ச்சி. சுவாமிகளின் பெயரும் சிதம்பர சுவாமிகள் என்று அமைந்ததில் பெருமானுக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

சிதம்பர சுவாமிகளின் சிதம்பர புராணப் பதிப்பிற்குச் சிதம்பரம் இராமலிங்கம் அருமையும் பெருமையும் மிக்க அழகிய சாற்றுக்கவிகளை அருளலானார். அவை வசனமும் கவிதையுமாக அமைந்த ஒரு காப்பாய், எழுபத்தோரடி களானியன்ற ஓர் ஆசிரியப்பாவாய், எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம் ஐந்தாய் முக்கூறாக அமைந்தன.

''சிதம்பர புராணம் இதம் பெறத் திருத்திய சிதம்பர முனிவன் பதம் பரவியது'' என்று காப்புப் போன்று வசன வடிவில் ஆசிரியப்பா தொடங்குவதற்குமுன் அச்சிடப் பெற்றுள்ளது. நூலில் இது அச்சிடப்பெற்றிருக்கும் அழகிய அமைப்பை அப்படியே காட்டவேண்டி நூலிலுள்ள அமைப்பில் அதனை அப்படியே கீழே தருகிறோம்.

சிதம்பரபுராணம்
இதம்பெறத்திருத்திய
சிதம்பரமுனிவன்
பதம்பரவியது.

இது உரைநடை. வசனம். இதனையே ஈரடிச் செய்யுளாக

சிதம்பர புராணம் இதம்பெறத் திருத்திய
சிதம்பர முனிவன் பதம்பர வியது.

என்று கொண்டால் குறள்வெண்செந்துறை. நான்கடிச் செய்யுளாக

சிதம்பர புராணம்
இதம்பெறத் திருத்திய
சிதம்பர முனிவன்
பதம் பரவியது.

என்று கொண்டால் வஞ்சித்துறை. வசனத்திற்கு வசனமாய், கவிதைக்குக் கவிதையாய் வசனகவிதையாய் வள்ளலார் இதனைச் செய்துள்ளார். இத்தொடக்கமே எடுப்பாக அமைந் துள்ளது. சாற்றுக்கவிகளுக்குக் காப்பாக அமைந்துள்ளது.

மதுரை யாதீனம் சிதம்பர சுவாமிகளின் சிதம்பரபுராணப் பதிப்புக்கு வள்ளற்பெருமான் அருளிய சாற்றுக்கவிகள்

காப்பு

குறள்வெண் செந்துறை

திருச்சிற்றம்பலம்

சிதம்பர புராணம் இதம்பெறத் திருத்திய
சிதம்பர முனிவன் பதம்பர வியது.

நிலைமண்டில ஆசிரியப்பா

செம்மலர்ச் செம்மலுந் திருத்தகு நிறத்தனும்
அம்மலர்க் கரத்திற் கம்மலர்க் கடவுளும்
படைத்திடல் முன்னாப் பயனுறு பெருந்தொழில்
நடைத்திற மூன்று நடாஅய்ப் பிறங்கிய
தத்தந் தலைமையிற் றாழ்வின்றி ஓங்குபு
சித்தந் திறமுறத் திருவருட் சார்த்திச்
சின்மய வடிவில் சிதாகா யத்திடைத்
தன்மய இன்பத் தனிநடம் புரியும்
காரண எண்குணா கார அகண்ட
பூரண பராபர புனித சிற்பர
சிவநிலை இஃதெனத் தெளிவித் தழியா
நவநிலை ஞாங்கர் நண்ணிய அனுபவத்
தனிச்சிவ ஞானந் தன்னைமூ வாண்டிற்
பனிப்பறச் சிவைமுலைப் பாலொடு மளாஅய்
ஊட்டிட உண்டிவ் உலகெலாந் தழைப்ப
வாட்டமில் அமுத வாய்மலர் மலர்ந்து
தோடுடை எனுமறைச் சொல்லமு தளித்து
நாடுடைத் தாதையை நயப்பித் தருளிப்
பற்பல சைவப் பதிதொறும் அணுகிச்
சொற்பல பதிகச் சுருதிகள் புனைந்து
பொற்றிருத் தாளமும் புதுமணிச் சிவிகையும்
கொற்றவர் புகழ்மணிக் குடையும் சின்னமும்
சுந்தரக் காளமும் சந்தநற் றாரையும்
சிந்தரும் வெண்மணிப் பந்தரும் காசும்

பரம்பரன் அளிக்கப் பண்புடன் பெற்றோன்
வரம்பெறு மழவன் மகட்பிணி சவட்டி
மருகலில் வசியன் வல்விடந் தீர்த்து
வருநெறி பற்பல மகத்துவம் புரியாக்
கூடலில் தென்னன் கூனும் குற்றமும்
வாடலில் அமணர்தம் மதமும் வாழ்க்கையும்
எளிதினின் முருக்கி இயல்புறும் ஆண்பனை
அளியுறு பெண்பனை யாகக் காட்டிஒண்
மயிலையில் என்பினை மங்கை யாக்கியுள்
அயர்வறு திருமணத் தடைந்தவர் தமக்கெலாம்
பெறலருஞ் சோதிப் பேருரு வளித்திவ்
வையமும் வானமும் மறையும் சைவமும்
உய்ய ஓங்கிய ஒருபெருங் குரவன்
ஞான சம்பந்த நாயகன் அருளால்
ஈன சம்பந்த மெல்லாம் ஒழித்தோன்
நரைவரும் என்றெணி நல்லறி வாளர்
இரைவுறு குழவி யிடத்தே துறந்தார்
என்னு நாலடிக்★ கிலக்கிய மானவன்
மன்னுமா தவரெலாம் வழுத்தும் அருந்தவன்
எல்லா உயிர்க்கும் இதஞ்செய லன்றிப்
பொல்லாமை ஒன்றும் புணராப் புண்ணியன்
வாய்மையும் மாண்பும் வயம்பெறு மனனும்
தூய்மையும் தெளிவும் சுற்றமாக் கொண்டோன்
கனவிலும் உலகைக் கருதாக் கருத்தினன்
நனவினிற் சுழுத்தி நண்ணிய திறத்தோன்
முப்பொருட் டிறனும் முழுதுணர் முனிவன்
எப்பொருட் கண்ணும் மெய்ப்பொருள் உணர்ந்தோன்
சிவமலா தொன்றும் சிந்தைவைத் தறியான்
பவமிலா நெறியே பற்றிய நிலையினன்
காமம் வெகுளி மயக்கெனும் கரிசினை

★ இங்கு மேற்கொண்டுள்ள நாலடியார்ச் செய்யுள்
நரைவரும் என்றெண்ணி நல்லறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார் - புரைதீரா
மன்னா இளமை மகிழ்ந்தாரே கோல்ஊன்றி
இன்னாங் கெழுந்திருப் பார். - இளமை நிலையாமை 1(11)

நாமங் கெடஉள் நலிவித்த வித்தகன்
துறவரில் துறவன் சுத்தமெய்ஞ் ஞானி
அறவரின் அறவன் அன்பரின் அன்பன்
திகழ்சிவ யோகி ஜீவன் முக்தன்
புகழிகழ் ஒன்றும் பொருந்தாப் புனிதன்

சிவநூல் முழுதும் தெளிந்த சத்துவன்
பவநூல் மறந்தும் பாராத் திறலோன்
என்போன் றவர்க்கும் இன்னருள் புரிவோன்
தன்போன் றவரிலாச் சாந்த வேந்தன்
சைவம் பழுத்த தனித்தரு நங்குல

தெய்வமாம் மதுரைச் சிதம்பர தேவன்
புண்ணிய சிதம்பர புராணந் தன்னை
நுண்ணிய அறிவால் நோக்குபு திருத்தம்
ஏர்பெற இயற்றி யாவரும் பயின்றுயப்
பாருறும் அச்சிற் பதிப்பித் தருளிய

உதவியை நினைந்துளம் உவந்து முப்பொழுதும்
பதமருள் அவனருட் பதமிறைஞ் சுதுமே.

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

உலகெலாம் புகழும் சிதம்பர வரலா
றுயிரெலாம் உணர்ந்துவீ டடைவான்
அலகுறா மடற்கண் எழுதுறா எழுத்தின்
அமைவித்த அருட்பெருங் கடலே
இலகுசீர்க் கூடன் மடாலயத் தமர்ந்த
எழிற்றிரு ஞானசம் பந்தத்
திலகசற் குருவின் அருள்பெறும் பொருளே
சிதம்பர மாதபோ நிதியே. 1

சிதம்பர வரலா றுலகெலா முணரத்
திருத்திஎம் போன்றவர் தமக்கும்
இதம்பெறும் அழியாப் பதம்பெற அளித்த
இன்பமே என்தனி அன்பே
கதம்பெறு மதங்கள் அதம்பெறப் புரிந்த
கவுணியற் கினியஉட் களிப்பே
சிதம்பெறு ஞானா முதம்தரு மதுரைச்
சிதம்பர மாதபோ நிதியே. 2

சத்திறை உயிர்தான் சத்தசத் தாகும்
தடைமல மசத்திவற் றிடைநீ
இத்திறை அபர நோக்கலை பரநோக்
கெய்துதி இறைநிறை வுறைவாய்
புத்திஈ தெனஎன் புத்தியைத் திருத்தும்
போதசின் மயஒளி மணியே
சித்திஎண் வகையும் பெறத்தரு மதுரைச்
சிதம்பர மாதபோ நிதியே. 3

மறைநெறிப் பொதுவும் ஆகமச் சிறப்பும்
வகுப்பது சிவத்தொடு மருவிக்
குறைநிறை வகலக் கூடுதல் இதனைக்
குறிப்பறக் குறியெனக் குறிக்கக்
கறைமிடற் றொளித்துச் சடைமுடி யோடும்
காட்சிதந் தருள்செழுங் கதிரே
சிறைமலம் அகற்றி அருள்தரு மதுரைச்
சிதம்பர மாதபோ நிதியே. 4

ஒன்றெனில் இரண்டாங் குறுமயல் அதனால்
ஒன்றெனக் குறித்தலும் ஒழித்தே
நின்றனை யெனில்நீ நின்றனை அறிதி
நெறியிதென் றுணர்த்திய நிறைவே
மன்றிலா னந்த வாரிவா யமுதம்
வாரியுண் டெழுஞ்செழு முகிலே
தென்றிசைக் கணிகொண் டோங்கிய மதுரைச்
சிதம்பர மாதபோ நிதியே. 5

திருச்சிற்றம்பலம்

சிதம்பர சுவாமிகளை வள்ளற்பெருமான் எப்படி யெல்லாம் பாராட்டுகிறார் என்பதைப் பாருங்கள். ஞானசம்பந்தர் வரலாறு முழுமையும் முதலிற் கூறப்பெறுகிறது. அற்புதங் களும் அனுபவங்களும் ஒன்றுவிடாமல் அடுக்கடுக்காகச் சொல்லப்பெறுகின்றன. ''ஞானசம்பந்த நாயகன் அருளால் ஈன சம்பந்த மெல்லாம் ஒழித்தோன்'' என்று சிதம்பர சுவாமிகள் போற்றப் பெறுகிறார்.

ஞானசம்பந்தரின் அருள் ஈனசம்பந்தங்கள் எல்லா வற்றையும் ஒழிக்கும் என்பது எப்பேர்ப்பட்ட பொன்மொழி.

நரைவரும் என்றெண்ணி நல்லறிவாளர்
குழவியிடத்தே துறந்தார் - புரைதீரா
மன்னா இளமை மகிழ்ந்தாரே கோல்ஊன்றி
இன்னாங் கெழுந்திருப் பார்.

என்னும் நாலடியார் (இளமை நிலையாமை 1)ச் செய்யுளுக்குச் சிதம்பர சுவாமிகள் இலக்கியமாகத் திகழ்கிறார் என்கிறார் (அடி 40-43). சிதம்பர சுவாமிகளை நம் குலதெய்வம் என்கிறார் (அடி 64 - 65).

எழுசீர் விருத்தங்கள் ஐந்தும் ஐம்மணிகளாக, பஞ்ச இரத்தினங்களாகத் திகழ்கின்றன. சிதம்பர புராணத்தைச் **சிதம்பர வரலாறு** என்கிறார். புராணத்தை வரலாறு எனல் புதுமைநோக்கு, வரலாற்று நோக்கு. வேதம் பொது, ஆகமம் சிறப்பு என்பது நான்காம் திருவிருத்தத்தின் முதலடி. சிதம்பர சுவாமிகள் ''தபோநிதி'' எனப் பாடல் தோறும் போற்றப் பெறுகிறார். தவமும் பெருந்தவம், மாதவம். சிதம்பர சுவாமிகள் மாதவர். ''சிதம்பர மா தபோநிதியே'' என்று பாடல்தோறும் போற்றப்பெறுகிறார். மதுரையைத் தென் திசைக்கு அணிகொண்டோங்கிய மதுரை என்பது ஐந்தாவது நிறைவுத் திருவிருத்தம்.

3. திருவருட்பாவுக்குச் சிதம்பரசுவாமிகள் செய்த சிறப்புப் பாயிரம்

வள்ளற்பெருமான் அருளிய திருவருட்பா முதல் நான்கு திருமுறைகளின் முதற்பதிப்பு 1867-இல் தொழுவூர் வேலாயுத முதலியாரால் பதிப்பிக்கப் பெற்றபோது மதுரை ஆதீனம் சிதம்பர சுவாமிகள் செய்த பாயிரம் **"திருவருட்பா மகிமை''** என்ற தலைப்புடன் இடம்பெற்றுள்ளது.

அதனைத் திருவருட்பா முதல் நான்கு திருமுறை தொழுவூர் வேலாயுத முதலியாரின் 1867-ஆம் வருடத்திய முதற்பதிப்பிலிருந்து அப்படியே இங்கெடுத்துக் காட்டுகிறோம். அது வருமாறு.

உ
சிவமயம்
சிவகணபதிதுணை
திருச்சிற்றம்பலம்

திருவருட்பாமகிமை

நேரிசை வெண்பா

தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோன் மாந்தர்கட
முண்ணீர் சிவம்விளங்க வோங்குவிக்குங் - கண்மணியா
நங்களி ராமலிங்க னல்லவருட் பாமுறையைத்
துங்கமுற மாணா தொழு.

திருச்சிற்றம்பலம்

இது - வேதாகம சுத்தசைவ சித்தாந்த
சமயசாரிய பீடமாய் விளங்குகின்ற
மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகளாதீனம்
சிதம்பர சுவாமிகளால்
அருளிச்செய்யப்பட்டது.

4. மதுரை ஆதீனத்திற்கு அனுப்பிய இலக்கணத் திருமுகம்

வள்ளற்பெருமான் வடலூரை அடுத்த கருங்குழியில் உறைந்த காலத்தில், பெருமான் உறைந்த வீட்டிலிருந்த புருஷோத்தம ரெட்டியார் என்பவர் ஒரு சமயம் அக்ஷய வருடத்தில் *(1866-1867)* குடும்பத்தினரோடு கோபித்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறிவிட்டார். அவர் மதுரைக்குச் சென்று திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் தங்கி யிருப்பதாகக் கேள்வியுற்ற குடும்பத்தினர், மதுரை ஆதீனத் திற்குக் கடிதம் எழுதி அவரை வருவித்துதவுமாறு வேண்டினர். பெருமான் மதுரையாதீனத்திற்குக் கடிதம் எழுதினார். அக் கடிதத்தைக் காண நேர்ந்த கணக்கிலவதானி தேவிபட்டினம் முத்துசாமிபிள்ளை என்பவர், ''இராமலிங்க பிள்ளை பெரிய வித்துவான் என்று சொல்கிறார்களே, அவருடைய படிப்பு இலக்கணமில்லாப் படிப்பு'' என்று எள்ளி நகையாடினார். அங்கிருந்த திருச்சிற்றம்பலஞானிகள் அதைக்கேட்டு வருந்தியவராய், வள்ளலார் விவகரிக்குங் காலத்தில் சிதறிய

இலக்கணத்தில் கோடியிலொரு கூறே இவ்வுலகில் வழங்கு கிறது என்றார். இருவர் கூற்றையும் கேட்டுக்கொண்டிருந்த ஆதீனகர்த்தர் வள்ளலாரிடமிருந்து இலக்கணச் சிறப்புடன் ஒரு திருமுகத்தை வருவித்து அனைவருக்கும் காட்டுமாறு கூறினார். திருச்சிற்றம்பலஞானிகள் வள்ளற்பெருமானுக்கு ஒரு கடிதமெழுதி அவ்விடத்திய செய்திகளை இலக்கண வகையால் தமக்குத் தெரிவிக்க வேண்டுமென விண்ணப் பித்தார். கடிதங்கண்ட வள்ளற்பெருமான் அதில் ஆர்வமற்றும் பராமுகமாகவும் இருந்தார். உடன் இருந்தவர்களின் வற்புறுத்தலுக்கிணங்கப் பெருமான் ஓரிருவரிகள் எழுத வேலாயுதனார் கடிதத்தை முடித்து அனுப்பினார். அவ் விலக்கணக் கடிதம் வருமாறு.

இலக்கணப் பத்திரிகை

உணர்ந்தோரா னியல் வகையவின்ன வென்றவற்றிற் பின்மொழி மதிக்கு முன்மொழி மறைக்கு முதலீறு விளங்க முடிப்பதாய பின்மொழியடைசார் முன்மொழி ஞாங்கர் விளங்கிய ஞானிகட்கு பொய்யற் கெதிர்சார்புற்ற மூலியொன்று வளைத்து வணக்கஞ்செய்த ககந நீரெழிலென்றும் வான் வழங்கு பண்ணிகார மென்றும் நாகச்சுட்டு மீனென்றும் வேறு குறிப்பதொன்று.

அண்மைச் சுட்டடுத்த வேழாவதன் பொருண்மை யும்மையடுத்த பல்லோர் வினாப் பெயர்ப் பொருள் குறிஞ்சியிறைச்சிப் பொருளொன்றனோடு புணர்ப சேய்மைச் சுட்டடுத்த வத்திறத்தியல் யாது.

இரண்டனுருபொடு புணர்ந்த தன்மைப் பன்மை யாறாவதன் பொருட்டாக்கினார்க் குய்த்த கற்பிய லதிகரிப்பின் வருந்தலைமக் கட்பெயர விரண்டினோ டிரண் டிரன் டூகக் கழிவிலைப் பெயரவு மகார வீற்று முதனிலைத் தனிவினைச் செயவென் வாய்ப்பாட்டு வினையெச்சத் தனவாகக் கலம்பகச் செய்யு ளுறுப்பாற் சிறத்தும்.

இரு வகை முதற்பொரு ளொன்றன் பாகுபாட்டுறுப்பிற் குறித்த வைம் பெரும் பூதத்தோர் விசேடணத் தெதிர்மறை நடுக்குறை யியற்சொற் பெயர வுயிர்ப் பெயராக

வெதிர்காலங் குறித்து நின்றது சில வினைச் சார்பான் விலங்கு சூடிய வரையில் வெளியாம்.

இதேனா டீரிரு வகைப்பட்ட வோர் சார் புது நிலஞ் செலவுய்த்தனம். வேண்டுழி வேண்டியாங் குய்க்க. மற்றைய பின்னர் வரைதும்.

இற்றே விசும்பிற் கணைச்சலம்

இங்ஙனம்
நங்கோச் சோழன் வீரமணி
சூடியார் திருவாணைப்படிக்கு

வள்ளற்பெருமானது மாணாக்கர்களி லொருவரான சமரச பஜனை ச.மு. கந்தசாமிபிள்ளையவர்களால் 1923-ஆம் ஆண்டு வெளியிடப்பெற்ற அவரது பிரபந்தத்திரட்டிலும், 1924-ஆம் ஆண்டில் அவரால் வெளியிடப்பெற்ற திருவருட்பாப் பதிப்பிலும் உள்ள இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் குறிப்பு களில் இவ்விலக்கணக் கடிதத்திற்கு "இலக்கண விய நடை வழக்கப்பாடுறுத்துவிக்கும் பத்திரிகை" என்னும் தலைப்புக் கொடுக்கப்பெற்றுள்ளது. இத்தலைப்பு ச.மு. கந்தசாமி பிள்ளையால் கொடுக்கப்பெற்றதேயாகும். கீழே கையொப்பம் "இங்ஙனம் நங்கோச்சோழன் வீரமணிச் சூடியார் திருவாணைப் படிக்கு அடிமை தொழுவூர் வேலாயுதம்" என்றிருக்கிறது. "பார்வதிபுரம், சுக்கில ஸ்ரீ துலாரவி உஎ உ" என இடமும் காலமும் குறிக்கப்பெற்றுள்ளன. திருவருட்பாவைப் பன்னிரண்டு பகுதிகளாக வெளியிட்ட ஆய்வுப் பதிப்பாளர் ஆ. பாலகிருஷ்ண பிள்ளை 1931-ஆம் ஆண்டில் வெளியிட்ட திருஅருட்பா உரைப்பகுதியில் ச.மு. கந்தசாமி பிள்ளை பதிப்பின்படியே தலைப்பு, கையொப்பம், இடம், காலம் ஆகியவற்றைப் பதிப்பித்திருக்கிறார். ஆனால் அவரே 1935-ஆம் ஆண்டில் வெளியிட்ட திருஅருட்பா வியாக்கியானப் பகுதி இரண்டாம் பதிப்பிலும் 1961-இல் வெளியிட்ட மூன்றாம் பதிப்பிலும் தலைப்பு "இலக்கணப் பத்திரிகை" என்று கொடுத்திருக்கிறார். கையொப்பம் "இங்ஙனம் நங்கோச்சோழன் வீரமணி சூடியார் திருவாணைப் படிக்கு" என்று மட்டுமே

இருக்கிறது. ''அடிமை தொழுவூர் வேலாயுதம்'' என்பது இல்லை. இடம் காலக்குறிப்புகளும் இல்லை.

''இவ்விலக்கணத் திருமுகத்தின் வரலாறு அடியில் கண்டபடி ஓர் பிரதியில் காணப்படுகிறது'' என்று ஆ. பாலகிருஷ்ணபிள்ளை குறிப்பிடுகிறார். அது வருமாறு.

> மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடத்தில் திருவருட்பிரகாச வள்ளலார் ஜக சகாப்தம் உ-ல் நிகழா நின்ற விபவ ஞு ஆவணி மீ த்தில் திருக்கழுக்குன்றம் திருச்சிற்றம்பலஞானிகள் போயிருந்த தருணத்தில், கடந்த அக்ஷய ஞுத்தில் கருங்குழி புருஷோத்தம ரெட்டியார் தன் வீட்டிலிருந்து கோபத்தால் மதுரைக்குப் போயிருந்த தருணத்தில் ஷியாரை யுபசரித்து இவ்விடம் அனுப்ப வேண்டுமென்று ஷி மடத்து சுவாமிகளுக்கு சி. இராமலிங்கம் பிள்ளையவர்களால் அனுப்பப்பட்ட கடிதத்தால் - ஒரு தருணம் நாவலர் மனுஷியர்களில் அங்கிருந்த சிலர் திருவருட் பிரகாச வள்ளலார் விசேஷ வித்வானென்று சொல்கிறார்களேய வருடைய படிப்பு இலக்கணமில்லாப் படிப்பு என்று சொல்லக்கேட்ட திருச்சிற்றம்பலஞானியார் புகன்றது. அவர்களால் விவரிக்கும் விவகாரத்தில் சிதறிய இலக்கணத்தின் மொழிகளில் கோடியிலொரு கூறு இவ் வுலகிலிருக்கின்றதென்று வாதிக்க அம்மடத்து சுவாமிக ளப்படியாகில் அந்த சுவாமிகளா லிலக்கண விதிப்படி யொரு கடித மனுப்பும்படிகேட்டு வருவிக்க வேணுமென்று கேட்டுக்கொண்டபடி - மேற்படி ஞானி யிவைகளைக் குறியாமல் சன்னிதானத்துக்கொரு கடித மனுப்பினார் - ஷி கடிதத்தினால் இவ்விடத்திய சுகுணங்களையும் அற்புதங்களையும் இலக்கண வகை யாற் றனக்குத் தெரிவிக்க வேண்டுமென்று பிரார்த்தித்ததால் - அதன் பொருட் டெழுதி விடுத்த குசல பத்திரிகை பின்புறங் காண்க.

இலக்கண பத்திரிகை

ச. ஆறுமுக முதலியார் வேலாயுத முதலியாரிவர்கள் குடியிருந்த முகப்பிலிருந்து அய்யா அவர்களாற் சில வரியும் மற்றவை ஆக்ஞையின் பேரில் வேலாயுத முதலியாராலும் எழுதியது.

இலக்கணத் திருமுகம் வடலூரிலிருந்து மதுரைக்குச் சென்று சேர்ந்தது. திருமுகத்தைப் பெற்ற திருச்சிற்றம்பல ஞானிகள் ஆதீனத்திலிருந்த அனைவருக்கும் காட்டினார். அவதானியார் முத்துசாமிப் பிள்ளைக்குக் கடிதத்தின் பொருள் விளங்காததால் ''வேணுமென்றே ஒரு வித்துவான் பூட்டுப்போட்டால் அந்த வித்துவான்தான் அதைத் திறக்க வேண்டும்'' என்றார். ''அப்படியென்றால் நீர் ஒரு பூட்டுப் போடும்'' என்றார் ஞானியார். அவதானியார்,

> தகரவரிக் கூந்தலர்கா மாதிமுந்நீர் தாமும்
> தகரவரி நாலைந்து சாடும் - தகரவரி
> மூவொற்றி யூர்பொருளை மூன்றுமங்கை யேந்துமொரு
> சேவொற்றி யூரனைச் செப்பு

என்ற வெண்பாவை இயற்றியனுப்பினார். பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பில் இவ்வெண்பா சிற்சில வேறுபாடுகளுடன் கொடுக்கப்பெற்றுள்ளது.

> தகர வரிக்குழல் கா மாதியைந்திற் றங்கும்
> தகரவரி நாலைந்து சாடும் - தகரவரி
> மூவொற்றி யூற்பதங்கள் மூன்றுமங்கை யேந்துமொரு
> சேவொற்றி யூர்பதத்தைச் சேர்

என்பது பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பிற் காண்பது. இவ்வெண்பாவுக்கு அவதானியார் கருதிய உரையையும், அவருக்கும் விளங்காத வேறு ஒரு தத்துவார்த்தமான உரையையும் வள்ளற்பெருமான் செய்துவிடுத்தார்.

அவதானியார் போட்ட பூட்டை வள்ளற்பெருமான் இரண்டு சாவிகளைப் போட்டுத் திறந்தார். அவதானியாரிடம் ஒரு சாவியே இருந்தது. வள்ளற்பெருமான் இருவகைப் பொருள்கூறி இரண்டு சாவிகள் கொண்டு திறந்துகாட்டியதும் அவதானியார் அயர்ந்தார். செருக்கொழிந்தவராகி வடலூருக்கு வந்து தெருக்கோடியிலேயே வண்டியிலிருந்து இறங்கி வீதியில் வீழ்ந்து வணங்கிக் கொண்டே வந்து வள்ளற் பெருமானைத் தரிசித்துப் பணிந்து ''வித்துவான் என மதித்திருந்தேன், பரிபூரண ஞானி என்று உணர்ந்திலேன்,

மன்னித்தருள வேண்டும்'' என வேண்டினார். வள்ளலாரின் மீது ஒரு தோத்திரப் பாடலையும் பாடிப்பரவினார். அப்பாடல் கிடைக்கவில்லை.

1967-இல் சென்னையில் நிகழ்ந்த இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு கருத்தரங்கில் எம்மைக்கண்ட சேலம் வேலூர் கண்டர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் ப. ரா. கந்தசாமி எம்.ஏ., பி.ஓ.எல். என்பவர் தாம் இவ்விலக்கணக் கடிதத்திற்கு உரைசெய்து வைத்திருப்பதாகக் கூறி அவ்வுரையையும் எம்மிடம் கொடுத்தார். அதனை நாம் ஆசிரியராக இருந்து நடத்திய இராமலிங்கர் பணிமன்ற முத்திங்களிதழ் மலர் 1 இதழ் 1-இல் 01.04.1968-இல் வெளியிட்டோம்.

வள்ளற்பெருமானுடைய வரலாற்றில் அறிஞர்களால் மட்டும் ஓரளவு அறியப்பெற்று, பொதுமக்களால் பரவலாக அதிகம் அறியப்பெறாத பகுதி இதுபோன்ற பலவாகும். வடலூரில் வள்ளலார் நாடகத்தைத் தம் இளமைக் கால முதலே நடத்திவரும் கவிஞர் ஆதி. கணேசன் வள்ளலார் நாடகத்தில் கருங்குழி நிகழ்ச்சிகளை விடாமல் சேர்த்து நடிக்கும் பழக்கமுள்ளவர். வடலூர் கவிஞர் கோவி. ஆறுமுகம் இவ்விலக்கணக் கடித நிகழ்ச்சியை ''வம்புக்கு வந்த கடிதம்'' என்று ஒரு சிறு நாடக நூலாகவே எழுதி வெளியிட்டார். நாடகமாகவும் அரங்கேற்றினார். அந்நூலுக்கு நாம் அணிந்துரை வழங்கியதோடு நூலாசிரியர் கோவி. ஆறுமுகத்திற்கு ''நாடக நம்பி'' என்ற பட்டத்தையும் வழங்கினோம்.

மதுரை ஆதீனமும் அருட்பா மருட்பா வாதமும்

திருவாவடுதுறை ஆதீனம் ஆறுமுக நாவலருக்கு ''நாவலர்'' பட்டத்தைத்தந்தது. குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் நாவலரைப் பாராட்டிப் பல்லக்கில் பட்டினப் பிரவேசம் செய்வித்தது. தருமபுர ஆதீனத்திற்கும் சூரியனார்கோயில் ஆதீனத்திற்கும் நாவலர் சென்று பாராட்டப்பெற்றார். மதுரையாதீனமும் நாவலரின் அருட்பா மருட்பா வாதத்தில் இடம்பெறுகிறது. அருட்பாவை மறுத்துப் ''போலியருட்பா மறுப்பு'' எழுதி வெளியிட்ட நாவலர் அம்மறுப்பின் ஈற்றில்,

மதுரை இராமசாமி பிள்ளையிடத்திலிருந்து தமக்கு வந்த கடிதமொன்றை எடுத்துக்காட்டி மறுப்பை முடிக்கிறார். அருட்பா மருட்பா வாதம் பற்றிய பேச்சு மதுரையாதீனத்தில் நிகழ்ந்ததை இராமசாமிபிள்ளையின் கடிதம் கூறுகிறது. மதுரையாதீன குருமகாசந்நிதானமும் சின்னப்பட்டம் இளவரசு சுவாமிகளும் நாவலரைப் பாராட்டித் தாம் அணிந்திருந்த ஆறுகட்டி சுந்தர வேடங்களைக் கழற்றி நாவலருக்கு அணிவித்ததாக ஓரிடத்தில் நாவலரே எழுதுகிறார். வள்ளலாரைப் போற்றிய மதுரையாதீனம் நாவலரையும் பாராட்டியுள்ளது. அருட்பா மருட்பா வாதமும், நாவலர் வள்ளலாரின்மீது தொடுத்த வழக்கும், பிற்காலத்தில் கதிர்வேற் பிள்ளை நிகழ்த்திய வாதங்களும் வழக்குகளும் தனியாக விரிவாக ஆராயத்தக்கவை. விரிவு இவ்விடம் வேண்டுவ தில்லை. இவ்வளவில் இங்கு அறிதல் போதுமானது.

289-ஆம் பட்டம்

ஸ்ரீலஸ்ரீ ''ராவ்பகதூர்'' சுவாமிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

மதுரை மீனாட்சிசுந்தரேசுவரர் கோயில் இராமநாதபுரம் இராமநாதசுவாமி கோயில் ஆகிய இரண்டின் நிர்வாகமும் இவர்கள் காலத்தில் மதுரை ஆதீனத்தின் வசம் இருந்தன. இவர்கள் நிர்வகித்து வந்தார்கள். அக்காலத்தில் இந்தியாவை ஆண்டு வந்த பிரிட்டிஷ் அரசாங்கம் இவர்களுக்கு ''ராவ்பகதூர்'' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. வைஸ்ராயும் கவர்னர் ஜெனரலுமாக இருந்தவர் 1893 ஜனவரி 3-இல் ராவ்பகதூர் பட்டத்தை வழங்கியுள்ளார். பாஸ்கர சேதுபதியும் பாண்டித்துரைத் தேவரும் இவரது சீடர்களாக விளங்கினர்.

தமக்குப் பிற்றோன்றலாகப் பட்டத்திற்குவரத் திருநள்ளாற்றில் சைவ முதலியார் மரபிற் பிறந்த சிறுவர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவருக்குத் தம் பெயராகிய சுவாமிநாதன் என்ற பெயரையே இட்டு ஜய ஆண்டு ஆனித்திங்களில் இளவரசுப் பட்டங் கட்டியருளினார்கள். மன்மத தைத்திங்களில் சிவப்பேறு பெற்றார்கள்.

290-ஆம் பட்டம்

ஸ்ரீலஸ்ரீ "ஜலதம்ப" சுவாமிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

289-ஆம் பட்டத்துச் சந்நிதானம் சிவப்பேறு பெற்ற காலத்தில் இளவரசாக இருந்த இவர்கள் மைனராக இருந்தார்கள். 11 வயதே நடந்து கொண்டிருந்தது. ஆதலின் அரசாங்கத்தார் இவர்களுக்கு மைனர் கார்டியன் நியமித்துத் தமிழ் ஆங்கிலம் சமஸ்கிருதம் முதலிய மொழிகளில் கல்விகற்றுப் புலமை பெறுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தனர். 1905 நவம்பர் மாதத்தில் இவர்களுக்கு மைனர் பருவம் நீங்கிப் பன்னிரண்டு வயது வந்தவுடன் மாவட்ட நீதிபதி மடத்திற்கு வந்து பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். இவர்கள் 290-ஆம் பட்டம் குருமகாசந்நிதானமாகப் பதவி ஏற்றருளினார்கள்.

பன்னிருதிருமுறைப் பாராயணம், சித்தாந்த சாத்திர பாடங்கள் மடத்தில் சிறப்புற நிகழவும் நாள்தோறும் கோயில் மண்டபத்தில் காலை மாலை தேவாரம் முதலிய திருமுறைகளை ஓதவும் ஏற்பாடு செய்தார்கள். மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலின் அறங்காவலர் குழுத் தலைவராக விளங்கினார்கள். 20.07.1929-இல் இவர்கள் அறங்காவலர்குழுத் தலைவராக இருந்திருக்கிறார்கள் என்பது, 1963-இல் வெளி யிடப்பெற்ற கும்பாபிஷேக மலரில் நிர்வாக அலுவலர் எழுதியுள்ள ஆங்கிலக் கட்டுரையிற் கூறப்பெற்றுள்ளது. ஆதீனக் கோயில்கள் நான்கிற்கும் திருப்பணி செய்யப் பெற்றது. குருபூஜையின் முதல்நாள் ஞானசம்பந்தர் பிறப்பு, இரண்டாம் நாள் ஞானப்பாலுண்ணல், மூன்றாம்நாள் திருமணம் சோதியிற் கலந்தது முதலிய காட்சிகளும், ஆவணி மூலத் திருநாளில் அறுபத்து மூவர் வீதிஉலாச் செய்வித்து ஆதீன முன்பில் ஆடைசாத்துதல் முதலிய சிறப்புகளெல்லாம் இவர்கள் காலத்தில் ஏற்படுத்தப்பெற்றன.

அடுத்த 291-ஆம் பட்டமாக வரும் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளை இவர்கள் காலத்திலேயே 28.05.1953-இல்

இளவரசாக நியமித்துப் பதவியில் அமர்த்திவிட்டார்கள். சாமிநாத சுவாமிகளின் 60 நிறைவு மணிவிழா 25.01.1956-இல் சிறப்பாக நிகழ்ந்தது.

291-ஆம் பட்டம்

"திருவருள்தவயோக" ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

இவர்கள் பிறந்த ஊர் திருநெல்வேலி மாவட்டம் குலசேகரன் பட்டினம். நட்சத்திரம் விசாகம். தந்தையார் வைரவநாதபிள்ளை. உடன்பிறந்தோர் இவர் உட்பட ஐவர். கே. வி. சோமசுந்தரம் என்னும் இவர்கள் இலங்கை கொழும்பில் சுந்தரம்ஸ் லிமிடெட் என்னும் தொழில் வணிக நிறுவனத்தை நிறுவி நடத்தி வந்தார்கள். தமிழ் ஆங்கிலம் சிங்களம் ஆகிய மும்மொழிகளையும் அறிந்தவர்கள். இலங்கையில் சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலின் நிர்வாகத் தலைவராகப் பல்லாண்டு பணியாற்றியவர்கள். குலசேகரன் பட்டினத்தில் திருவருள் தொண்டர் சபையும், திருவருள் உயர்நிலைப்பள்ளியையும் நிறுவியவர்கள்.

அடிக்கடி இலங்கைக்குச் சென்றுவந்த கிருபானந்த வாரியாரும் நாகர்கோயில் ஆறுமுகநாவலரும் இவர்களுக்கு நண்பரானார்கள். 28 தலைமுறைகளாகச் சிவபூஜை செய்து வரும் குடும்பத்திற் பிறந்த இவர்களுக்கு இளமை முதலே இயல்பாகவே ஆன்மிகத்தில் ஆர்வம் மிகுதி. மனைவியார் அமரராகிவிட்டபின், குடும்பப்பற்று அறவே, ஆன்மிகப்பற்று மேலும் மிகுந்தது, வாரியாரிடமும் நாகர்கோயில் ஆறுமுக நாவலரிடமும் தமிழ்நாட்டுக்கு வந்து சமயத்தொண்டு புரியும் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். மதுரை ஆதீனத்திற்கு வந்து இளவரசாக இருந்து பணிசெய்யலாம் என்று ஆதீனத்திலிருந்த சுப்பையா ஓதுவார் இவர்களை மதுரை ஆதீனகர்த்தருக்கு அறிமுகப்படுத்தினார். சோமசுந்தர தேசிகர் என்ற பெயருடன் 28.05.1953-இல் இவர்கள் இளவரசாக நியமிக்கப்பெற்று ஆதீனத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றருளினார்கள்.

இளவரசுப் பட்டத்தை ஏற்பதற்கு முன்பே மதுரை ஆதீனம் சந்நிதானத்தோடு தொடர்புகொண்டு, அவர்களையே தலைவராகக் கொண்டு 30.11.1951-இல் ''**ஒளிநெறிமன்றம்**'' என்றொரு சபையை நிறுவினார்கள். அதையே 30.3.1953-இல் ''**திருவருள் தவநெறிமன்றம்**'' என்று பெயர் மாற்றியமைத்துப் பதிவு செய்தார்கள். மன்றப் பணிகளுக்கு நிதியாக ரூ. 50,000/- வழங்கினார்கள். சுவாமிகளே மன்றத்தின் நிரந்தரத் தலைவர். கிருபானந்தவாரியாரும் நாகர்கோயில் ஆறுமுக நாவலரும் நிரந்தர அமைச்சர்கள். நிரந்தரப்பொருள் காப்பாளர் ஜெ.மு. குருநமசிவாயம். இவ்வமைப்பு அங்கங்கே பரவலாகப் பல தொண்டுகளைச் செய்தது.

இளவரசுப் பட்டத்திற்கு வந்த பின்பு 1955-இல் சென்னையில் ''**இந்து தர்மப் பிரசார சங்கம்**'' என்ற ஒரு பெரிய அமைப்பை நிறுவியருளினார்கள். இஃதொரு பேரமைப்பு. பெரும் பணிகளை இது மேற்கொண்டது. இவ்வமைப்பைப் பற்றிய அறிவிப்பு ஒன்று சித்தாந்தம் 1960 ஆகஸ்ட் இதழில் வெளிவந்துள்ளது. சங்கத்தில் எப்பேர்ப்பட்டவர்களெல்லாம் சேர்ந்திருந்தார்கள், எப்பேர்ப்பட்ட பெரும் பணிகளையெல்லாம் சங்கம் மேற்கொண்டது என்று அறிவதற்காக அதனை அப்படியே முழுமையாக இங்கெடுத்துக் காட்டுகிறோம். அது வருமாறு:

ஹிந்து தர்மப் பிரசார சங்கம்

சங்கத் தோற்றம்

மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனகர்த்தராக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், 1955-ஆம் ஆண்டு ஜூன் மாதக் கடைசி வாரத்தில் சென்னை தியாகராய நகரிலுள்ள தருமையாதீன மடாலய தேவாலயப் பிரசார நிலையத்திற்கு எழுந்தருளிய போது, அவர்கள் தலைமையில் ஹிந்து மதப் பேரறிஞர்கள் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் இச்சங்கம் தொடங்கப் பெற்றது.

ஹிந்து தர்மப் பிரசார சங்க செயற் குழுவினர்

தலைவர் : மதுரை - திருஞானசம்பந்தர் ஆதீனத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள். துணைத் தலைவர்கள்: (1) திவான்பகதூர் - வி. பாஷ்யம் ஐயங்காரவர்கள், எம்.எல்.சி., (2) திவான்பகதூர் - கே. வேங்கடசாமி நாயுடு அவர்கள், பி.ஏ., பி.எல்., (3) திவான் பகதூர் - கே.எஸ். ராமசுவாமி சாஸ்திரியாரவர்கள், பி.ஏ., பி.எல்., (4) தர்மரக்ஷாமணி - ஸ்ரீ. கே. பாலசுப்பிரமணிய ஐயரவர்கள், பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி., (5) திவான்பகதூர் - சி. திருவேங்கட முதலியாரவர்கள், பி.ஏ., (6) ஸ்ரீ என். ரகுநாத ஐயரவர்கள், எம்.ஏ., (7) ஸ்ரீ ஏ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள், எம்.ஏ. (8) ஸ்ரீ திருமுருக கிருபானந்தவாரியாரவர்கள், (9) ஸ்ரீ ஏ. பரசுராமன் அவர்கள், எம்.ஏ., (10) ஸ்ரீ பரசுராம் ஜெனகானந்த் அவர்கள். செயலாளர்கள் : (1) ஸ்ரீ. எஸ். சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், பி.ஏ., எல்.டி., (ஓய்வு பெற்ற மாவட்டக் கல்வி அதிகாரி), (2) ஸ்ரீ எம்.ஏ. ஸ்ரீநிவாச ஐயங்காரவர்கள், பி.ஏ., பி.எல்., (வக்கீல்). பொருட் காப்பாளர் : டாக்டர் வி. ராகவன் அவர்கள், எம்.ஏ., பிஎச்.டி. பிற அங்கத்தவர்கள் : (1) ஸ்ரீ ஏ.ஜி. வெங்கடாசாரியாரவர்கள், பி.ஏ., (2) ஸ்ரீ கே.வி. ஜெகந்நாதன் அவர்கள், எம்.ஏ., (3) ஸ்ரீ ஆர். விசுவநாத ஐயர் அவர்கள், எம்.ஏ., (4) ஸ்ரீ அய்யா சுப்பிரமணிய முதலியார வர்கள், (5) ஸ்ரீமதி - சகோதரி - ஆர்.எஸ். சுப்புலக்ஷ்மியம் மாளவர்கள், பி.ஏ., எல்.டி., (6) ஸ்ரீ ஜோதி வேங்கடாசலம் அவர்கள், எம்.எல்.சி., (7) ஸ்ரீ வீர. சிவசுப்பிரமணியமவர்கள், (8) ஸ்ரீ வி.எஸ். கோபாலகிருஷ்ண ஐயரவர்கள், பி.ஏ., எல்.டி., (9) ஸ்ரீ கே.இ. அருணாசல முதலியாரவர்கள்.

சங்க நோக்கம்

இச் சங்கத்தின் முக்கிய நோக்கங்களாவன: (1) ஹிந்து தர்மத்தின் அடிப்படைத் தத்துவங்களை மாணவர்கட்கும், எளிய ஹிந்து மக்கட்கும் ஏற்ற முறையில் எடுத்துரைத்தல், (2) ஹிந்து சமுதாயத்திற்குள் ஒற்றுமையை வளர்த்தல், (3) பயிற்சி தந்து, தக்க பிரசாரகர்களை நியமித்துப் பல இடங்களில் வருஷ முழுவதும் சிறந்த பிரசாரம் நடத்து

வித்தலும், தம் வாழ்க்கையை இத்தொண்டிற்கே உரிமையாக்க முன்வருபவர்களை ஆதரித்தலும், (4) கிளைச் சங்கங்களைப் பல ஊர்களில் ஏற்படுத்துதலும், முன்னமே உள்ள ஹிந்துமத சங்கங்களை இணைத்துக் கொள்ளுதலும், (5) மிகவும் ஏழ்மையான நிலையிலுள்ளோர்க்கு இயன்றவளவு சீவகாருணியத் தொண்டு புரிதல்.

சிறப்புக் கூட்டம்

நில உச்சவரம்புச் சட்டம் செய்வதற்காகச் சென்னை அரசாங்கத்தார் கொண்டு வந்துள்ள மசோதாவைப் பற்றி ஆராய்ந்து, ஆவன புரிவதற்காக, தியாகராயநகர் தருமையாதீனப் பிரசார நிலையத்தில் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் 13.5.1960-இல் கூடியது. அது செய்த தீர்மானத்தின்படி, 5.6.1960-இல் இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையில், ஹிந்துக்களின் பொது ஜனக் கூட்டம் திவான்பகதூர் கே. எஸ். இராமசுவாமி சாஸ்திரியாரவர்கள் தலைமையில் கூட்டப்பட்டது. திவான்பகதூர் ஆர். வி. கிருஷ்ண ஐயரவர்கள், ஸ்ரீ டி. புருஷோத்தம் அவர்கள், ஸ்ரீ எம்.ஏ. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்கள், ஸ்ரீ சுவர்ண வேங்கடேச தீக்ஷிதர்கள் ஆகியோர், இச்சட்டத்தால் இந்து கோயில்கட்கு விளையக்கூடிய கெடுதி களை விளக்கினர். ஒரு யாதாஸ்து தயாரித்து, சங்கச் சார்பில், ஷெ மசோதா ஆராய்ச்சிக் குழுவிற்கு அனுப்பப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

சென்னை மாகாண இந்து அறநிலையப் பாதுகாப்பு இலாகாவிற்கு அரசாங்கத்தார் நியமித்துள்ள ஆலோசகர் குழுவில் 12 பேர் உத்தியோகப் பற்றற்றவர்கள். இவர்களில் அறுவர் இச்சங்க நிருவாகசபை யுறுப்பினர். திருவருட் செயலாக வந்தெய்திய இவ்வாய்ப்பு நன்றியுடனும் மகிழ்ச்சி யுடனும் குறிக்கத் தக்கதாகும்.

வேண்டுகோள்

சங்கம் மேற்கொண்டுள்ள பணி பெரிய மலை போன்றுள்ளது. சங்கத்திற்குக் காரியாலயமும் அவசியமான

சிப்பந்திகளும் தேவை. பல பிரசாரகர்கட்கு ஊதியமோ சன்மானமோ அளிக்கவும், லக்ஷக்கணக்கில் துண்டுப் பிரசுரங் களும், சிறுவடிவ நூல்களும் அச்சிட்டு வழங்கவேண்டும். மிகவும் எளிய மக்கட்கு இன்னும் பல வகையில் உதவிகள் செய்ய வேண்டும். ஹிந்து சமுதாயம் முழுவதுமே இதற்குத் துணைபுரிய முன் வந்தாலன்றி, நம் பாரதப் பண்பாட்டைக் காப்பாற்றுதற்கு அத்தியாவசியமான இப்பணி இனிது நிறை வேறல் அரிது. ஆதலால், பல ஆயிரக்கணக்கில் ஹிந்துக்கள் அங்கத்தவர்களாகவும், ஆயுளங்கத்தவர்களாகவும் உடனே சங்கத்திற் சேர்ந்து அதைப் பலப்படுத்தலும், நமது மாநில ஹிந்துமத சங்கங்கள்யாவும் இச்சங்கத்தோடு தம்மை இணைத்துக் கொண்டு நம் சமுதாயத்தின் ஒற்றுமையையும் செல்வாக்கையும் வளர்த்துக் கொள்ளுதலும் மிக அவசியம்.

இப்படிப் பலரும் சேரவேண்டும் என்பதைக் கருதியே, சாதாரண அங்கத்தவர் ஆண்டுச் சந்தா மூன்று ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆயுள் சந்தா : ரூ. 100.

ஹிந்து மதத்தின் எல்லாப் பிரிவினர்களும் இவ்வாறு சங்கத்திற் சேரவேண்டும் என்றும், எல்லா ஆலய தர்மகர்த்தர் களும் திருமடத்தலைவர்களும், பொருளையும் நல்ல தொண்டர்களையும் போதிய அளவு தந்து, இப்புனிதத் திருப்பணியை வெற்றியுடன் தொடர்ந்து நிறைவேற்றிவரத் துணைபுரிய வேண்டுமென்றும் அன்புரிமையுடன் சங்கம் பெரிதும் வேண்டிக்கொள்கிறது. எல்லாம் வல்ல இறைவன், அவனையே நம்பித் தொண்டாற்ற முன்வந்துள்ள இச்சங்கத் திற்குக் கருணை பாலித்து, அளப்பரும் சிறப்பினையுடைய நமது ஹிந்து தர்மத்தைக் காத்து உலகுய்யச் செய்தருளுவானாக.

- ச. சச்சிதானந்தம்பிள்ளை, செயலாளர்.

இதில் இடம் பெற்றிருப்பவர்களெல்லாம் அந்நாளைய பெரிய மனிதர்கள். அவர்களைப் போன்ற பெரிய மனிதர்கள் இந்நாளில் இல்லை. இப்படி ஒரு அமைப்பு இன்று இருந்து செயற்பட்டால் எப்படியிருக்கும் என்று எண்ணிப்பாருங்கள்.

ஹிந்து தர்மப்பிரசார சங்கத்தின் கிளை ஒன்று மதுரையில் 1962 செப்டம்பர் மாதம் தொடங்கப்பெற்றது. ஞாயிறு தோறும் முன்னிரவில் மதுரையிலுள்ள பெரிய சிறிய சைவ வைணவக் கோயில்களுக்குச் சென்று இந்து மதத்தின் மாண்பைப் பற்றியும் விக்கிரக வழிபாட்டின் தத்துவத்தைப் பற்றியும் சைவ வைணவ ஒற்றுமையைப் பற்றியும் பிரசாரம் செய்யப்பெற்றது.

ஆண்டுதோறும் கோடைக் காலத்தில் சென்னைக்குச் சென்று, சென்னை தியாகராயநகர் உஸ்மான் சாலையிலுள்ள தருமபுர ஆதீன சமயப்பிரச்சார நிலையத்தில் ஒரு வாரம் அல்லது பத்து நாள்கள் தங்கி அங்கேயே நாள்தோறும் மாலையில் சொற்பொழிவுக்கூட்டம் நடத்துவதைச் சுவாமிகள் வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அப்படி ஒரு சமயம் சென்னையில் தங்கியிருந்து பிரச்சாரம் செய்த காலத்தில் தான் 1955-இல் இந்துதர்மப் பிரசார சங்கம் தோற்றுவிக்கப் பெற்றது.

சுவாமிகள் இரண்டு விஷயங்களில் மிகவும் அழுந்திக் கிடந்தார்கள். ஆழ்ந்து கிடந்தார்கள். மூழ்கிக் கிடந்தார்கள். 1. ஆவி உலகம், 2. ஏட்டு ஜோதிடம். சமயத்தலைவர்களில் அதுவும் ஆதீனகர்த்தர்களில் ஆவி உலகத்தில் ஈடுபட்டவர்கள் இவர்களைத் தவிர வேறு யாரும் இலர். மற்றபடி இந்து சமயம் விக்கிரக வழிபாடு இவற்றின் உண்மைகளைப் பரப்புவதில் மிகவும் தீவிரமாக இருந்தார்கள். இவை சம்பந்தமாகச் சில நூல்களையும் எழுதி வெளியிட்டார்கள்.

இறந்தவர்கள் வாழும் நிலையும் பேசும் முறையும். - 1955

மரணபயம் தீரும் வழி - 1965

அற்புதச் செயல்கள் - 1966

இந்துமதக் கொள்கைகளையே கிறிஸ்தவ வேத நூலும் இயேசுநாதரும் உணர்த்தியிருப்பதன் விளக்கம் - 1966

விக்ரக ஆராதனையின் விளக்கம் - 1967

சிந்தனையாளர்களது கேள்விகளுக்குத் தெளிவு தரும் விளக்கங்கள் - 1967

கடவுளுக்கும் உயிர்களுக்கும் உள்ள தன்மைகளும் உண்மையான உறவும் - 1968

இந்தியாவும் உலக சமாதானமும்

DELHI ADDRESS : The Soul and Spiritual Body. Read at the 21st Session of the Indian Philosophical Congress held at Delhi on 23rd, 24th & 25th December 1946.

இவர்களோடு நமக்கு நல்ல பழக்கம் இருந்தது. பல நிகழ்ச்சிகளில் நாங்கள் இருவரும் கலந்து கொண்டுள்ளோம்.

292-ஆம் பட்டம் குருமகாசந்நிதானம்
"லோககுரு" ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்ததேசிக பரமாசாரிய சுவாமிகள்

முன் சந்நிதானத்தின் காலத்திலேயே 27.05.1975-இல் இளவரசாகப் பட்டம் சூட்டப் பெற்றார்கள். முன் சந்நிதானம் சிவப்பேறடைந்தபின் 14.03.1980-இல் 292-ஆம் பட்டம் குருமகாசந்நிதானமாக எழுந்தருளினார்கள். இவர்கள் கருவிலே திருவுடையவர்கள். காரணம் இவர்களது பூர்வாசிரமத் தந்தையார் திரு. இராம. குமாரசுவாமி பிள்ளை அவர்கள் சுதந்திரப் போராட்டத் தியாகி. தேசபக்தி மிக்க அவர் தெய்வ பக்தியும் மிகுந்தவர். சைவ ஆதீனங்களில் சில காலம் எழுத்தராகப் பணியாற்றியவர். தியாகியின் திருக்குமாரராகப் பிறந்ததால் அவருடைய தேசபக்தியும் தெய்வபக்தியும் இவர் களது இரத்தத்திலும் ஊறியிருக்கிறது.

இளமையிலேயே இளவரசாகவும் தொடர்ந்து சந்நிதான மாகவும் பட்டமேற்ற சுவாமிகள் ஆதீனத்தைப் பன்மடங்கு அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். ஆதீனக் கோயில்களையும் அபிவிருத்தி செய்திருக்கிறார்கள்.

சுதந்திரப் போராட்டத் தியாகிகள் பலர் நமக்குப் பழக்கமானவர்கள். சிலர் நமக்கு நல்ல நண்பர்கள். தூத்துக்குடி ல. நாராயணன் என்ற சிறந்த தியாகி வடலூரில் சில காலம் நம்முடன் இருந்தார். அவரால் இவர்களது பூர்வாசிரமத் தந்தையார் தியாகி இராம. குமாரசுவாமி அவர்களின் பழக்கம் ஏற்பட்டது. சந்நிதானமவர்களும் அவர்களது இளமைக்கால முதலே நமக்குப் பழக்கமானவர்கள்.

சந்நிதானம் பேச்சாற்றல் மிக்கவர்கள். தமிழ்நாடெங்கும் பல முக்கிய நிகழ்ச்சிகளிற் கலந்துகொண்டு உரையாற்றி வருகிறார்கள். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், சீனா, ஹாங்காங், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய கடல்கடந்த நாடுகளுக்கும் சென்று உரையாற்றியிருக்கிறார்கள். மலேசியாவுக்கும் சிங்கப்பூருக்கும் மும்முறை சென்றிருக்கிறார்கள். அண்மையில் கூட 2008-இல் லண்டனுக்குச் சென்று அங்கு நிகழ்ந்த சைவ மாநாட்டிற்குத் தலைமை வகித்துச் சிறப்புரையாற்றித் திரும்பினார்கள். சந்நிதானத்தின் பேச்சில் பல சமயங்களில் தீவிரக் கருத்துகள் வெளிப்படும். மனத்திற் பட்டதை யாருக்கும் அஞ்சாது வெளிப்படுத்தி விடுவார்கள்.

மதுரையில் ஆதீன மடாலயமும் அதன் சுற்றுப்புறமும் இவர்கள் பட்டத்திற்கு வருமுன் இருந்த நிலையைப் பார்த்தவர்களுக்குத் தான், இவர்கள் பட்டத்திற்கு வந்தபின் எவ்வளவு அபிவிருத்திப் பணிகள் செய்திருக்கிறார்கள் என்பது தெரியும். பன்மடங்கு அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். பல சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். ஆதீனத்தின் வருவாயைப் பெருக்கியிருக்கிறார்கள். சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள்.

மதுரை ஆதீனக் கோயில்கள்

மதுரை ஆதீனத்தின் நிர்வாகத்தில் நான்கு கோயில்கள் உள்ளன. தேவாரப் பாடல் பெற்ற கோயில்கள் மூன்று - 1. திருப்புறம்பயம், 2. கஞ்சனூர், 3. கைச்சினம். திருவிசைப் பாப் பாடல் பெற்ற கோயில் ஒன்று - 4. திருமுகத்தலை.

1. திருப்புறம்பயம்

சோழநாட்டில் காவிரி வடகரைத்தலம். கும்பகோணத் திற்கு வடமேற்கே 8 கி.மீ. தொலைவில் மண்ணியாற்றின் வடகரையில் உள்ளது. சிறப்பான பெரிய கோயில். சம்பந்தர் அப்பர் சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப்பெற்றது. ''புறம்பய மதனில் அறம்பல அருளியும்'' என்று திருவாசகம் கீர்த்தித் திருவகவலில் மாணிக்கவாசகராற் குறிப்பிடப்பெற்றது.

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து மதுரைக்குத் திரும்பிய வணிகன் ஒருவன் பாம்பு தீண்டி இறந்தான். அவனோடு வந்த வணிகப்பெண்ணின் வேண்டுகோளுக்கிரங்கி புறம்பயத் திறைவன் வணிகனை உயிர்ப்பித்ததோடு அவ்விருவருக்கும் மணம் புரிவித்தார். வணிகன் புது மனைவியுடன் மதுரையை அடைந்தபோது அவனுடைய முதல் மனைவி பழித்து இரண்டாம் மனைவியை ஏற்றுக்கொள்ளவில்லை. அவளது ஐயத்தை நீக்கப் புறம்பயத்து இறைவன் வன்னிமரம் கிணறு மடைப்பள்ளியுடன் தோன்றிச் சாட்சி கூறினார். அதனால் சாட்சிநாதர், சாட்சிநாதேஸ்வரர் என்று பெயர் வழங்குகிறது. இச்செய்தி சிலப்பதிகாரத்தில் "வன்னிமரமும் மடைப்பள்ளியுஞ் சான்றாக முன்னிறுத்திக் காட்டிய மொய்குழலாள்" என்று சொல்லப் பெற்றுள்ளது. (29 வஞ்சினமாலை 5:6). பெரும்பற்றப் புலியூர் நம்பி இயற்றிய திருவிளையாடற்புராணம் 62 சான்றழைத்த திருவிளையாடலும், பரஞ்சோதிமுனிவர் இயற்றிய திருவிளையாடற்புராணம் 64 வன்னியுங் கிணறும் இலிங்கமும் அழைத்த படலமும் இவ்வரலாற்றைக் கூறுகின்றன. இந்நிகழ்ச்சி திருஞானசம்பந்தர் திருமருகலில் ப்ாம்பு தீண்டி இறந்த வணிகனை உயிர்ப்பித்ததனினும் வேறானது, அதற்கும் காலத்தால் முற்பட்டது. திருவிளையாடற் புராணங்கள் இவ்விரு நிகழ்ச்சிகளையும் மயங்கிக் கூறுகின்றன. புறம்பய நிகழ்ச்சி, ஞானசம்பந்தருக்கு முற்பட்ட சிலப்பதிகாரத் திலேயே குறிக்கப்பெறுகின்றது. திருமருகல் நிகழ்ச்சி ஞானசம்பந்தர் வரலாற்றில் நிகழ்ந்தது. புறம்பய நிகழ்ச்சியைத் திரும்புறம்பயப் புராணமும் கூறுகிறது. (செட்டிப்பெண் சருக்கம்).

புறம்பயம் சிலப்பதிகார காலத்திலேயே சிறந்து விளங்கிய பழம்பதி. புறம்பயம் ஒரு காலத்தில் போர்க்களமாகவும் திகழ்ந்தது. புறம்பயப்போர் புகழ்பெற்றது. வெற்றிபெற்ற ஆதித்தசோழன் புறம்பயத்திலிருந்த செங்கற்கோயிலைக் கருங்கற்கோயிலாகக் கட்டி ஆதித்தேச்சுரம் எனப் பெயரிட்டான். புறம்பயக்கோயிலுக்குச் சுமார் 230 ஏக்கர் நன்செய் புன்செய் தோப்புகள் உள்ளன என்று கல்வெட்டா ராய்ச்சியாளர் திரு. வை. சதாசிவ பண்டாரத்தார் திருப்புறம்பயத்

தலவரலாற்றில் எழுதுகிறார். அவர் எழுதிய வரலாறு திருப்புறம்பயம் தேவஸ்தானத்தால் 1946-இல் வெளியிடப் பெற்றது. சதாசிவ பண்டாரத்தார் இவ்வூரினர்.

2. கஞ்சனூர்

சோழநாட்டில் காவிரி வடகரைத்தலம். கும்பகோணம் வட்டத்தில் திருவாவடுதுறைக்கு அருகிலுள்ளது. சிறப்பான பெரிய கோயில். திருநாவுக்கரசரால் பாடப்பெற்றது. பிரமன் வழிபட்டுப் பேறு பெற்றதால் கஞ்சனூர் என்று பெயர் பெற்றது. கஞ்சன் – பிரமன். இறைவன் அக்கினீஸ்வரர். இறைவி கற்பகாம்பிகை. ஹரதத்த சிவாசாரியர் பிறந்த ஊர். வைணவக் குடும்பத்தில் பிறந்து சிவபரத்துவம் நிறுவிய அரதத்தர் பெரியமகான் என்று போற்றப்பெறுபவர்.

3. கைச்சினம்

சோழநாட்டில் காவிரி தென்கரைத் தலம். திருத்துறைப் பூண்டி வட்டத்தில் திருவாரூர் திருத்துறைப்பூண்டி வழியில் உள்ளது. மாடக்கோயில். சம்பந்தர் பாடல் பெற்றது. இந்திரன் மணலால் இலிங்கம் அமைத்து வழிபட்டு அதை எடுத்து வைக்கும்போது அவன் கை அடையாளம் சுவாமி மீது பதிந்ததால் கைச்சின்னம் என்று பெயர் பெற்றது. கைச்சின்னம் கைச்சினம் என மருவி அதுவும் இப்போது மக்கள் வாயில் கச்சனம் என வழங்குகிறது. இறைவன் கைச்சின்னேஸ்வரர், கரச்சின்னேஸ்வரர். இறைவி வெள்வளைநாயகி (சுவேதவளை நாயகி).

4. திருமுகத்தலை

திருத்துறைப்பூண்டி வட்டத்தில் திருத்துறைப்பூண்டி நாகப்பட்டினம் சாலை வழியில் உள்ளடக்கி உள்ளது. சிறிய கோயில், முகலிங்கம் இருந்ததால் முகத்தலை என்று பெயர். இப்போதும் உட்பிராகாரத்தில் முகலிங்கம் ஒன்று உள்ளது. பாம்பை அணியாகக் கொண்டதால் முகலிங்கத் திற்குப் பன்னகாபரணேஸ்வரர் என்று பெயர். பன்னக - ஆபரண - ஈஸ்வரர். பன்னகம் - பாம்பு. கருவூர்த் தேவரால்

திருவிசைப்பாப் பாடப்பெற்றது. முகத்தலை என ஊர்ப் பெயரும் பன்னகாபரணர் என இறைவன் பெயரும் கருவூர்த் தேவரின் திருவிசைப்பாவில் குறிப்பிடப்பெறுகின்றன. இப்போது மக்கள் வழக்கில் பன்னத்தெரு என ஊரின் பெயர் வழங்குகிறது.

பாண்டிய நாட்டிலுள்ள ஆதீனமாகிய மதுரையாதீனத் திற்குச் சோழ நாட்டில் பாடல்பெற்ற நான்கு திருக்கோயில் களின் நிர்வாகம் இருத்தல் பெருமைக்குரியது. இக்கோயில் களுக்கு மதுரை ஆதீனகர்த்தர்கள் பரம்பரை அறங்காவலராக இருந்து நிர்வகித்து வருகிறார்கள்.

குன்றக்குடி
திருவண்ணாமலை ஆதீனம்

செய்ய தமிழும் சிவநெறியும்
சிறக்கத் தொண்டு புரிந்திடுவோன்
ஐயன் குன்றக் குடிஅடிகள்
அருணா சலதே சிகநாதன்
தையல் பாகன் தண்ணருளால்
சமயச் செங்கோல் இனிதோச்சி
வையம் புகழப் பல்லாண்டு
வாழ்க! வாழ்க! வாழ்கவே!

– கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

குன்றக்குடி
திருவண்ணாமலை ஆதீனம்
குன்றக்குடி

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் திருவண்ணா மலையில் தோன்றியது, பின்னர் திருவண்ணாமலையிலிருந்து பிரான்மலைக்குச் சென்றது, அதன் பின்னர் பிரான்மலை யிலிருந்து குன்றக்குடிக்கு வந்து நிலைத்துவிட்டது. திருவண்ணாமலையில் தோன்றியதால் திருவண்ணாமலை ஆதீனம் என்றும் பின்பு குன்றக்குடிக்கு வந்து நிலைத்து விட்டதால் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் என்றும் பெயர் பெற்றது.

குன்றக்குடி, சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடிக்கு அருகே 10 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தைத் தோற்று வித்தவர் திருவண்ணாமலை தெய்வசிகாமணி சிவாசாரியர். ஆதிசைவ அந்தணர், சிவாசாரிய மரபினர், இல்லறத்தார். சந்தானகுரவர் நால்வரில் இரண்டாமவராகிய அருணந்தி சிவாசாரியரின் நேர் மாணாக்கர் (சீடர்). புரட்சி மடாதிபதி யான குன்றக்குடி அடிகளாரின் ஆதீனத்து நிறுவனர் குரு முதல்வர் அந்தணர் என்பதும் சிவாசாரியர் என்பதும் வியப்பாக இல்லையா! குருமுதல்வர் ஆதிசைவ அந்தணர் ஆதலின் அவர் வழியில் வழிவழியாக வரும் குருமகா சந்நிதானங்கள் அனைவரும் வழிபாட்டுக் காலங்களில் மட்டும் பூணூல் அணியும் வழக்கம் இன்றும் உள்ளது. பூசை நேரங் களில் குன்றக்குடி அடிகளாரும் பூணூல் அணிந்தவரே.

பூணூல் அணிவதன்றி நாள்தோறும் வேள்வி செய்யும் வழக்கமும் இவ்வாதீனத்திற்கு உண்டு.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீன குருமரபு

கயிலாயத்தில் சிவபெருமானிடம் உபதேசம் பெற்றவர் நந்தியம்பெருமான். நந்தியம்பெருமானிடம் உபதேசம் பெற்றவர்கள் சனகர் முதலான நால்வர். அவர்களுள் சனற்குமாரரிடம் உபதேசம் பெற்றவர் சத்தியஞானதரிசினிகள். அவரிடம் உபதேசம் பெற்றவர் பரஞ்சோதி மாமுனிவர். அவரிடம் உபதேசம் பெற்றவர் மெய்கண்டார். மெய்கண்டாரிடம் உபதேசம் பெற்றவர் அருணந்திசிவாசாரியர்.

அருணந்தி சிவாசாரியருக்குச் சீடர்கள் பலர். அவருள் ஒருவர் திருவண்ணாமலை தெய்வசிகாமணி சிவாசாரியர். இத்தெய்வசிகாமணி சிவாசாரியரே குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீன நிறுவனர்.

ஆதீன குருமுதல்வர் தெய்வசிகாமணி தேசிகர் வரலாறு

திருவண்ணாமலையில் மாதொரு பாகனார்க்கு வழி வழி அடிமை செய்யும் பெருமையுடைய ஆதிசைவ மரபிலே அவதரித்தவர் ஆதீன குருமுதல்வர் தெய்வசிகாமணி சிவாசாரியர். பதினாறாம் ஆண்டுப் பருவத்தில் ஒருநாள் தந்தையாருடன் திருக்கோயிலுக்குச் சென்ற இவர் கோயிற் கொடிமரம் மின்னக் கண்டார். இறைவனின் திருக்காட்சி கிடைத்தது. அந்தண வடிவில் தோன்றிய இறைவன் "அன்பனே! நீ திருத்துறையூரிலுள்ள அருள்நந்தியிடம் சென்று சேர்வாயாக" என்று திருவாய் மலர்ந்தருளி வாழ்த்தினார். திருத்துறையூரில் அருணந்திசிவாசாரியர் கனவிலும் இறைவன் தோன்றி "நமது அன்பன் தெய்வசிகாமணி திருவண்ணாமலையிலிருந்து உன்னை நாடி வருகிறான், அவனுக்கு ஞானோபதேசம் செய்வாயாக" என்று கூறி மறைந்தருளினார். அருள்நந்தியார் தெய்வசிகாமணியை எதிர்பார்த்திருந்தார். தெய்வசிகாமணியாரும் சென்று சேர்ந்தார். அருணந்தியார்

தெய்வசிகாமணியை வரவேற்று, சீடராக ஆட்கொண்டு சிவஞான உபதேசம் செய்தருளினார்.

இறைவனே சுயம்புவாகத் தமது ஆன்மார்த்த மூர்த்தி யாகப் பூசைக்கு எழுந்தருள வேண்டும் என்று தெய்வ சிகாமணியார் விரும்பினார். இவ்விருப்பத்தை ஞானாசிரியரிடம் விண்ணப்பித்துக்கொண்டார். ஞானாசிரியர் இறையருளைச் சிந்தித்து, திருக்காளத்திக்குச் செல்லுமாறு பணித்தார். தெய்வசிகாமணியார் அவ்வாறே திருக்காளத்திக்குச் சென்று வழிபட்டுக் கொண்டிருக்கும் நாளில் ஒருநாள் காளத்தியப்பர் கனவில் தோன்றி ''அன்பனே நாம் உனக்காகத் திருக்கோயில் அருகேயுள்ள புற்றிலே சிவலிங்க உருவாய்த் திகழ்கிறோம். நீ வந்து எடுத்துச்சென்று வழிபடுவாயாக!'' என்று அருளினார். தெய்வசிகாமணியார் புற்றைத் தேடிச் சென்று சிவலிங்கத்தை எடுத்துக்கொண்டு திருவண்ணாமலைக்கு வந்து அங்கே காளத்தியப்பராகிய அச்சிவலிங்கத்தை வழிபட்டு வருவாரா யினார்.

இவ்வாறு குருமுதல்வருக்காகச் சிவலிங்க வடிவாய் எழுந்தருளிய காளத்தியப்பரே, திருவண்ணாமலையில் அமைந்த ஆதீனத் திருமடத்திலும், பின் ஆதீனத் திருமடம் பிரான்மலையில் (பறம்புமலையில்) அமைந்தபோது அங்கும், அதன்பின் குன்றக்குடியில் ஆதீனம் அமைந்தபோது குன்றக்குடித் திருமடத்திலும் எழுந்தருள்விக்கப்பெற்று வழி வழியாக ஆதீன குருமூர்த்திகளால் வழிபாடு செய்யப்பெற்று வருகிறார்.

குருமுதல்வர் தெய்வசிகாமணிதேசிகர் திருவண்ணாமலை யில் எழுந்தருளியிருந்த காலத்தில் நிகழ்ந்த அற்புதங்கள் பல. அக்காலத்தில் திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்து வந்த மூன்றாம் வீர வல்லாள தேவன் ஒருநாள் குதிரைவீரர்கள் பலர் புடைசூழத் தனது பட்டத்துக் குதிரையில் பவனி வந்தான். பவனி வரும்போது அவனுடைய பட்டத்துக்குதிரை பதறி வீழ்ந்து வாயில் நுரை கக்கிச் சிறிது நேரத்தில் உயிரிழந்தது. இதனால் அப்பகுதி

யெங்கும் பரபரப்பாயிற்று. அரசன் மிகுந்த கவலையுற்றான். மக்கள் வருந்தினர். அப்போது அப்பக்கமாக தெய்வசிகாமணி குருநாதர் வந்தார். அரசன் அவரை அணுகி வணங்கித் தன் கவலையை விண்ணப்பித்துக்கொண்டான். இறந்து கிடந்த குதிரைமீது குருநாதர் திருநீற்றைத் தெளித்தார். குதிரை உயிர் பெற்றெழுந்தது. மன்னனும் மக்களும் கவலை நீங்கி மகிழ்ந்தனர். இவ்வற்புத வரலாறு திருவண்ணாமலை அருணாசலேசுவரர் திருக்கோயிலின் தெற்கு மதிற்சுவரில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளதை இன்றும் காணலாம். இன்னும் இதுபோன்ற அற்புதங்கள் பற்பல நிகழ்ந்தன. திருவண்ணாமலைக் காடுகளில் புலிகளும் பசுக்களும் ஒன்று கூடித் திரிந்தன. கொடிய விலங்குகளும் சாந்தமாகத் திரிந்தன.

இவ்வாறு அனுபூதிச் செல்வராகத் திகழ்ந்த குருமுதல் வரை நாடிச் சீடர் பலர் வந்தடுத்தனர். அவர்களுக்குச் சிவஞானச் செல்வத்தை வாரிவாரி வழங்கினார் குருநாதர். குருநாதர் மடம் அமைப்பதற்கு வல்லாள மன்னன் பெரும் பொருட் செல்வத்தைக் காணிக்கையாக அளித்தான். தெய்வ சிகாமணிதேசிகர் தம் அறுபதாம் அகவையில் ஏறத்தாழ கி.பி. 1310-இல் திருவண்ணாமலையில் ஆதீனத் திருமடத்தை நிறுவியருளினார். குருமுதல்வரின் காலம் கி.பி. 1250-1325, ஏறத்தாழ 75 ஆண்டுகள் என்று கொள்வது பொருந்தும் என்று ஆதீன வரலாற்றில் கூறப்பெற்றுள்ளது. குருமுதல்வர் தெய்வசிகாமணி தேசிக பரமாசாரிய சுவாமிகள் திருவண்ணா மலையிலேயே நிட்டைகூடிச் சிவப்பேறு பெற்றார்கள். அவர்களது குருமூர்த்தம் திருவண்ணாமலையில் வேட்டவலம் சாலையில் உள்ளது.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீன குருமரபு

குரு முதல்வருக்குப்பின் 45 குருமகாசந்நிதானங்கள் ஒருவர்பின் ஒருவராக எழுந்தருளி ஆதீன குருபீடத்தை அணிசெய்திருக்கிறார்கள். இப்போது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி விளங்குபவர்கள் 46-ஆம் பட்டம் குருமகா சந்நிதான மாவார்கள்.

1. ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி தேசிகர்
2. ஸ்ரீலஸ்ரீ தாண்டவராய தேசிகர்
3. ஸ்ரீலஸ்ரீ வினைதீர்த்த தேசிகர்
4. ஸ்ரீலஸ்ரீ கனகசபாபதி தேசிகர்
5. ஸ்ரீலஸ்ரீ வேலப்ப தேசிகர்
6. ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்
7. ஸ்ரீலஸ்ரீ உருத்திரகோடி தேசிகர்
8. ஸ்ரீலஸ்ரீ சதாசிவ தேசிகர்
9. ஸ்ரீலஸ்ரீ கண்ணப்ப தேசிகர்
10. ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர்
11. ஸ்ரீலஸ்ரீ சந்திரசேகர தேசிகர்
12. ஸ்ரீலஸ்ரீ குமரகுரு தேசிகர்
13. ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்
14. ஸ்ரீலஸ்ரீ அருணகிரி தேசிகர்
15. ஸ்ரீலஸ்ரீ கந்தப்ப தேசிகர்
16. ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிகர்
17. ஸ்ரீலஸ்ரீ நாகலிங்க தேசிகர்
18. ஸ்ரீலஸ்ரீ குமாரசாமி தேசிகர்
19. ஸ்ரீலஸ்ரீ திருச்சிற்றம்பல தேசிகர்
20. ஸ்ரீலஸ்ரீ சிதம்பரநாத தேசிகர்
21. ஸ்ரீலஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர்
22. ஸ்ரீலஸ்ரீ நமச்சிவாய தேசிகர்
23. ஸ்ரீலஸ்ரீ அகத்தீசுவர தேசிகர்
24. ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல தேசிகர்
25. ஸ்ரீலஸ்ரீ ஏகாம்பர தேசிகர்
26. ஸ்ரீலஸ்ரீ வைத்தியநாத தேசிகர்
27. ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை தேசிகர்

28. ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகர்
29. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக தேசிகர்
30. ஸ்ரீலஸ்ரீ திருச்சிற்றம்பல தேசிகர்
31. ஸ்ரீலஸ்ரீ மருதநாயக தேசிகர்
32. ஸ்ரீலஸ்ரீ தாண்டவராய தேசிகர்
33. ஸ்ரீலஸ்ரீ சிவசுப்பிரமணிய தேசிகர்
34. ஸ்ரீலஸ்ரீ சாம்பசிவ தேசிகர்
35. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக தேசிகர்
36. ஸ்ரீலஸ்ரீ அருணாசல தேசிகர்
37. ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல தேசிகர்
38. ஸ்ரீலஸ்ரீ பெரிய ஆறுமுகதேசிகர் 1860-1889
39. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக தேசிகர் 1889-1893
40. ஸ்ரீலஸ்ரீ தாண்டவராய தேசிகர் 1893-1902
41. ஸ்ரீலஸ்ரீ நடராச தேசிகர் 1902-1905
42. ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை தேசிகர் 1905-1928
43. ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல தேசிகர் 1928-1946
44. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக தேசிகர் 1946-1952
45. **திருவருள்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்** (தவத்திரு குன்றக்குடி அடிகளார்) 1952-1995
46. **திருவருள்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள்** (தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்) 15.04.1995 முதல்

இவ்வாதீன குருமகாசந்நிதானங்களின் பெயருக்குமுன் குருமுதல்வரின் பெயராகிய தெய்வசிகாமணி என்பதைச் சேர்த்து வழங்குதல், இவ்வாதீன மரபு.

1 முதல் 16-ஆம் பட்டம் வரை ஆதீனம் திருவண்ணா மலையில் திகழ்ந்தது.

17-ஆம் பட்டம் நாகலிங்க தேசிகர் காலத்தில் திருவண்ணாமலையிலிருந்து பிரான்மலைக்கு மாற்றப்பெற்றது.

17 முதல் 30-ஆம் பட்டம் வரை ஆதீனம் பிரான்மலையில் இருந்தது.

31-ஆம் பட்டம் மருதநாயக தேசிகர் காலத்தில் பிரான்மலையிலிருந்து குன்றக்குடிக்கு மாற்றப்பெற்றது. அது முதல் குன்றக்குடி யிலேயே ஆதீனம் நிலைத்துவிட்டது.

17-ஆம் பட்டம் குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ நாகலிங்க தேசிகர்
1660 - 1700

திருவண்ணாமலையிலிருந்து ஆதீனம் பிரான்மலைக்குச் செல்லல்

17-ஆம் பட்டம் நாகலிங்க தேசிக குருமூர்த்திகள் இராமேசுவரயாத்திரை செய்தார்கள். இராமநாதபுரம் மன்னர் இரகுநாத சேதுபதி (கி.பி. 1675 - 1710) திருச்சுழியலுக்கு வந்து அங்கெழுந்தருளிய குருமூர்த்திகளைத் தரிசித்தார். இராமேசுவர யாத்திரைக்குரிய ஏற்பாடுகளைச் செய்தார். தமது இராமநாதபுரம் சீமையிலேயே தங்கியிருந்து அருள்பாலிக்க வேண்டினார். மன்னரின் அன்பான வேண்டுகோளுக்கிணங்கக் குருமூர்த்திகள் பிரான்மலையைத் தலைமையிடமாகக் கொண்டு அருளாட்சி புரியத் தொடங்கினார்கள். 17-ஆம் பட்டம் முதல் 30-ஆம் பட்டம் வரை ஆதீனத் தலைமையிடம் பிரான்மலையாகவே திகழ்ந்தது.

பிரான்மலையிலிருந்து அருளாட்சி புரிந்த குருமூர்த்தி களில் பலர் மிகக் குறைவான காலமே அருளாட்சி புரிந்தனர். அவர்கள் காலத்தில் பிரான்மலையில் ஆதீனத் திருமடம் நிறுவப்பெற்றது. பிரான்மலை, (பிரான்மலை உட்கிடைக் கோயில் சதுர்வேதி மங்கலம்) திருப்புத்தூர், திருக்கோளக்குடி, குன்றக்குடி, தேனாட்சியம்மன்கோயில் ஆகிய ஐந்து கோயில் களுக்கும் பரம்பரை அறங்காவலர்களாக இருந்து அருளாட்சி புரிந்தனர். அன்று முதல் இன்று வரை குன்றக்குடி

திருவண்ணாமலை ஆதீன குருமூர்த்திகளே பிரான்மலை வகை ஐந்து கோயில்களின் பரம்பரை அறங்காவலர்களாக இருந்து அருளாட்சி செய்து வருகின்றனர்.

31-ஆம் பட்டம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ மருதநாயக தேசிகர்

பிரான்மலையிலிருந்து ஆதீனம் குன்றக்குடிக்கு வருதல்

28-ஆம் பட்டம் ஞானப்பிரகாச தேசிக குருமூர்த்திகள் காலத்திலேயே குன்றக்குடியின் பக்கம் நாட்டம் திரும்பி விட்டது. 28-ஆம் பட்டம் சுவாமிகள் குன்றக்குடி சண்முக நாதப் பெருமான் மீது மிகுந்த பக்தியும் ஈடுபாடும் கொண்ட வர்கள். இவ்வீடுபாடு காரணமாகவே அடுத்துவரவிருக்கும் 29-ஆம் பட்டம் குருமூர்த்திகளுக்கு ஆறுமுக தேசிகரெனத் தீட்சாநாமம் சூட்டினார்கள்.

28; 29; 30-ஆம் பட்டத்து குருமூர்த்திகள் பிரான்மலை யிலிருந்து கொண்டு அருளாட்சி செய்துவந்த போதிலும் குன்றக்குடி ஈடுபாடு வரவர மிகுவதாயிற்று. 31-ஆம் பட்டம் மருதநாயக தேசிக குருமூர்த்திகளின் காலத்தில் சிவகங்கைச் சீமையை ஆண்ட மருதுபாண்டியர்கள் குன்றக்குடி சண்முக நாதப்பெருமான் திருக்கோயிலுக்கு இப்போதிருக்கும் பெரிய அளவில் திருப்பணிகளைச் செய்தார்கள். சாந்துப்புலவரைக் கொண்டு மயூரகிரிக் கோவையும் செய்வித்தார்கள் (1778). 31-ஆம் பட்டம் மருதநாயக தேசிக குருமூர்த்திகள் பிரான் மலையிலிருந்து ஆன்மார்த்த வழிபடு கடவுள் காளத்தியப்பரைக் குன்றக்குடிக்கு எழுந்தருளச் செய்து குன்றக்குடியையே தலைமையிடமாகக் கொள்ளத் தொடங்கினார்கள். அதுமுதல் குன்றக்குடியே ஆதீனத்தின் தலைமையிடமாக நிலைத்து விட்டது. வரவர நாளடைவில் குன்றக்குடியில் இன்றுள்ள பெருநிலைக்கு ஆதீனம் வளர்ந்துவிட்டது.

38-ஆம் பட்டம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ பெரிய ஆறுமுக தேசிகர்

1860-1889

இவர்கள் காலத்தில் ஆதீனம் பெருவளர்ச்சி பெற்று மிகச் சிறந்து விளங்கியது. சபாபதி முனிவர் காறுபாறாக இருந்து சிறப்பாகத் தொண்டாற்றினார். ஆதீன மடாலயம் இப்போதிருக்கும் நிலையில் பெரிதாகத் திருப்பணி செய்யப் பெற்றது. ஆட்சிப் பொறுப்பு முழுவதையும் சபாபதி முனிவரிடமே விட்டுவிட்டு, சிவபூசை சிவஞான உபதேசம் முதலியவற்றிலேயே குருமகாசந்நிதானம் ஈடுபட்டு வந்தார்கள்.

ஆறுமுக நாவலருக்குப் பாராட்டு

திருவாவடுதுறை ஆதீனத்திற்கு வந்து நாவலர் பட்டம் பெற்ற ஆறுமுகநாவலர் சென்னை சென்றார். சென்னை யில் குன்றக்குடி ஆதீனக் கிளைமடத்தில் சின்னப் பட்டத்தி லிருந்த அருணாசல தேசிகரைக் கண்டு அளவளாவினார். அருணாசலதேசிகர் நாவலரை மிகவும் பாராட்டிக் குன்றக் குடிக்கு வந்து சிலநாள் தங்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். நாவலரவர்கள் தமது இன்றியமையாப் பணிகளின் காரணமாக யாழ்ப்பாணம் திரும்பவேண்டியிருப்பதால் பிறிதொரு சமயம் குன்றக்குடிக்கு வருவதாகக் கூறி விடை பெற்றார். இச்சின்னப்பட்டம் அருணாசலதேசிகரே பின்பு 36-ஆம் பட்டமாக எழுந்தருளியவர்கள்.

38-ஆம் பட்டம் பெரிய ஆறுமுகதேசிகர் காலத்தில் ஆறுமுகநாவலர் குன்றக்குடிக்கு வந்தார். ஆதீனத் திருமடத்தில் சிறந்த சைவச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். குருமகா சந்நிதானம் அவர்கள் ஆறுமுகநாவலரை நன்கு பாராட்டி, வேறு எந்த ஆதீனமும் செய்யாத வகையில் புதிதாகச் சிவிகை (பல்லக்கு) ஒன்று செய்வித்து அதில் ஆறுமுக நாவலரை அமர்த்திக் குன்றக்குடித் திருவீதிகளில் ஊர்வலம் (பட்டினப்பிரவேசம்) செய்யும் சிறப்பைச் செய்வித்தருளினார்கள். யாழ்ப்பாணத்துநல்லூர் ஆறுமுகம்பிள்ளையை ஆறுமுக நாவலராக்கிச் சிறப்பித்தது திருவாவடுதுறையாதீனம்.

நாவலருக்குப் பல்லக்கு மரியாதையும் பட்டினப்பிரவேச மரியாதையும் செய்து சிறப்பித்தது குன்றக்குடி திருவண்ணா மலை ஆதீனம். வேறு எங்கும் இத்தகைய சிறப்பை நாவலர் பெற்றதில்லை. ஆதீனகர்த்தருக்குச் சரிநிகர் சமானமான மரியாதையை, ஓர் ஆதீனகர்த்தருக்குரிய மரியாதையைக் குன்றக்குடி ஆதீனத்தில் நாவலர் பெற்றார். இது பெறற்கரிய பெருஞ்சிறப்பு.

மகாவித்துவான் பிள்ளையவர்களுக்குப் பாராட்டு

திருவாவடுதுறையாதீன மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் திருப்பெருந்துறைக்கு வந்து திருப்பெருந்துறைப் புராணத்தை அரங்கேற்றியபின் குன்றக்குடிக்கு வந்து குருமகாசந்நிதானத்தைத் தரிசித்தார். குருமகாசந்நிதானம் அவர்கள் பிள்ளையவர்களைச் சிலநாள் குன்றக்குடியில் தங்கவைத்துத் தக்கவாறு உபசரித்துச் சன்மானமும் வழங்கிக் காரைக்குடி வரையும் பல்லக்கு வைத்து அனுப்பி வைத்தருளினார்கள்.

திருவாவடுதுறை ஆதீனத்திற்கும் குன்றக்குடி ஆதீனத்திற்கும் இடையே தம்பிரான்கள் சின்னப்பட்டத்திற்குக் கொடுக்கல் வாங்கல்

ஒரு ஆதீனத்திலிருந்து இன்னொரு ஆதீனத்திற்கு இளவரசாகத் தம்பிரான்களைக் கொடுப்பதும், கொள்வதும் வழக்கமாக இருந்தது. குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் சென்னைக்கிளை மடமாகிய நாட்டுப் பிள்ளையார் கோயில்தெரு மடத்தில் ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகளிடம் படித்துக் கொண்டிருந்த குட்டித்தம்பிரான் அருணாசலம் என்பவரைத் திருவாவடுதுறை ஆதீனம் 16-ஆம் பட்டம் மேலகரம் சுப்பிரமணியதேசிகரின் விருப்பத்தின்படித் திருவாவடு துறைக்கு அனுப்பிவைத்தார்கள். அவர் திருவாவடுதுறை ஆதீனத்தில் சின்னப்பட்டம் இளவரசாக இருந்து, பின்பு 17-ஆம் பட்டம் அம்பலவாணதேசிகராகவும் ஆனார்.

அதேபோன்று திருவாவடுதுறை ஆதீனத்தில் பிள்ளைய வர்களிடம் பாடங்கேட்டுப் படித்துவந்த ஆறுமுகத் தம்பிரான்

சுவாமிகள் குன்றக்குடிக்கு இளவரசாக அழைத்துக் கொள்ளப் பெற்றார். பின்பு 39-ஆம் பட்டம் ஆறுமுகதேசிகராகவும் ஆனார்.

39-ஆம் பட்டம் குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக தேசிகர்
1889-1893

திருவாவடுதுறை ஆதீனத்தில் தம்பிரானாக இருந்தவர்கள். பிள்ளையவர்களிடம் பாடங்கேட்டுச் சிறந்தவர்கள். 38-ஆம் பட்டம் குருமகாசந்நிதானம் அவர்களால் திருவாவடுதுறையினின்றும் அழைக்கப்பெற்றுக் குன்றக்குடியில் சின்னப் பட்டமாக எழுந்தருள்விக்கப் பெற்றவர்கள். பின்பு 39-ஆம் பட்டமாகப் பட்டத்திற்கு வந்தவர்கள். பாடஞ்சொல்லும் ஆற்றல் மிக்கவர்கள். டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் ஏடுதேடுவதற்கு மிகவும் உதவிசெய்தவர்கள்.

40-ஆம் பட்டம் குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ தாண்டவராய தேசிகர்
1893 - 1902

கொடை வள்ளலாகத் திகழ்ந்தவர்கள். வரவு சிந்தியாமல் வாரி வழங்கியவர்கள்.

41-ஆம் பட்டம் குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ நடராச தேசிகர்
1902 - 1905

வெளியார் கைவசம் சென்றுவிட்ட சொத்துகள் இவர்கள் காலத்தில் அரும்பாடுபட்டு மீட்கப் பெற்றன.

42-ஆம் பட்டம் குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை தேசிகர்
1905 - 1928

சிறந்த சித்தர். சித்தர் நூல்களில் ஆழ்ந்த பயிற்சியுடையவர். உணவைக் குறைத்துக்கொண்டு, உரையாடாமல் மௌனமூர்த்தியாகப் பலகாலம் இருந்தருளினார்கள்.

குன்றக்குடி முருகனிடம் அயராத பக்தியுடையவர்களாகத் திகழ்ந்தார்கள்.

43-ஆம் பட்டம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல தேசிகர்

1928 - 1946

பராதீனமாயிருந்த சொத்துகள் பலவற்றை மீட்டார்கள். குன்றக்குடி சண்முகநாதப் பெருமான் கோயிலுக்குத் திருப்பணி செய்து குடநீராட்டு விழாச் செய்து மகிழ்ந்தார்கள். சைவத் திருமுறைகளில் நன்கு திளைத்தவர்கள். கீழ்வேளூர் சொக்கலிங்க ஐயா அவர்களிடம் தேவாரத் திருமுறைகளை நன்கு பயின்றவர்கள். பட்டத்திற்கு எழுந்தருளிய பின்னர் தமது ஆசிரியர் சொக்கலிங்க ஐயா அவர்களைக் குன்றக்குடியிலேயே தங்கச் செய்து அவர்களது இறுதிக்காலம் வரை ஆதரித்தார்கள். மடாலயத்து மேன்மாடியில் அமர்ந்தவாறே முருகன் சந்நிதியை நோக்கித் தேவாரப் பாக்களை வீணையில் வாசித்து மகிழ்வார்கள். தெய்வங்கள் இவர்களிடம் கனவில் பேசின. அடிகளார் தமது பிற்றோன்றலாக நியமித்த பொன்னம்பல அடிகளாருக்கு இவர்களது பெயரைத்தான் வைத்தருளினார்கள்.

44-ஆம் பட்டம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக தேசிகர்

1946 - 1952

ஆறு ஆண்டுகளே ஆட்சி புரிந்தார்கள். இவர்கள் காலத்தில் தான் தருமபுர ஆதீனத்தில் தம்பிரான் சுவாமிகளாக இருந்த கந்தசாமித் தம்பிரான் (குன்றக்குடி அடிகளார்) குன்றக்குடிக்கு அழைக்கப்பெற்று இளவரசுப் பட்டம் கட்டப்பெற்றார்கள்.

ஆதீன முனிவர்களும் தம்பிரான்களும்

ஞானப்பிரகாசமுனிவர்

(1550 - 1600)

ஆதீன அடியவர் திருக்கூட்டத்தில் மிகச் சிறப்பாக வைத்து எண்ணப்பெறுபவர். இவரது ஊர் இலங்கை

யாழ்ப்பாணம். இவர் ஆறுமுகநாவலரின் முன்னோர், பாட்டனார் முறையினர். அந்நாளில் யாழ்ப்பாணத்தைப் பிடித்து ஆண்டு வந்த போர்ச்சுகீசியர்கள் தங்கள் உணவுக்காக யாழ்ப்பாணக் குடும்பம் ஒவ்வொன்றும் நாள்தோறும் ஒரு பசுவைக் கொடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தினர். பசுக்கொலைப் பாவத்திற்கு அஞ்சிய ஞானப்பிரகாசர் நாட்டையே துறந்து தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டார். சிதம்பரத்தில் தங்கிச் சில காலம் வழிபட்டபின் திருவண்ணாமலைக்குச் சென்றார். அங்கிருந்து வடக்கே வங்கநாட்டுக்குச் சென்று சிலகாலம் இருந்து வடமொழியிற் புலமைபெற்று மீண்டும் திருவண்ணா மலைக்கு வந்து குன்றக்குடி ஆதீனத்தில் துறவு பெற்றார். பின்பு சிதம்பரத்திற்குச் சென்று நகரின் தென்கிழக்குப் பகுதி யில் ஒரு குளம் வெட்டி மடம் அமைத்துத் தங்கியிருந்தார். குளத்திற்கு **ஞானப்பிரகாசர் குளம்** என்றும் மடத்திற்கு **ஞானப்பிரகாசர் மடம்** என்றும் பெயர். இன்றும் கனகசபை நகர் அருகே ஞானப்பிரகாசர் குளம் உள்ளது. சுற்றிலும் இரு பக்கம் குடிசைவாசிகளின் ஆக்கிரமிப்பு. குளத்தின் கரையில் பல மடங்கள் இருந்தன. சில அழிந்துவிட்டன. இன்றும் சில மடங்கள் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி உள்ளன. சேக்கிழார் கோயில் இங்குதான் உள்ளது. கரந்தை ஜெயகாந்தம் துரைக்கண்ணு சேக்கிழார்விழா அறக்கட்டளையின் புதிய கட்டிடம் சேக்கிழார் மணிமண்டபம் ஞானப்பிரகாசர் குளம் வடக்குத் தெருவில் தான் கட்டியிருக்கிறார்கள். சிதம்பரத்தில் ஞானப்பிரகாசர் குளம் அமைந்துள்ள சூழல் சமயப்பண்பாடுமிக்குள்ள பகுதி. நாளடைவில் ஆக்கிரமிப்புகளும் அழிவும் பெருகிவருகின்றன. காப்பாற்றப்பெற வேண்டியது இன்றி யமையாதது. இறுதிக் காலத்தில் ஞானப்பிரகாசமுனிவர் சிதம்பரத்தில் தமது மடத் திலேயே சிவப்பேறு பெற்றார். அவரது மடமும் சமாதிக்கோயிலும் இன்று அடையாளங் காண இயலாத நிலையில் உள்ளன.

சங்கரலிங்க முனிவர்
(1710 - 1780)

இவர் காலத்தில் குன்றக்குடி சண்முகநாதர் கோயிலில் மருதுபாண்டியர்களின் திருப்பணி நிகழ்ந்தது. செம்பொன்மாரி

என்று பெயரிடப்பெற்ற கிராமம் மருதுபாண்டிய மன்னரால் ஆதீன ஆன்மார்த்த வழிபடுமூர்த்தி காளத்தியப்பருக்குக் காணிக்கையாகக் கொடுக்கப்பெற்றது. இதற்குக் காரணமாக இருந்தவர் சங்கரலிங்க முனிவரே.

ஆறுமுகத் தம்பிரான்

இவர் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். ஆறுமுகநாவலரிடம் கல்வி கற்றவர். யாழ்ப்பாணத்தில் ஆறுமுகநாவலர் நடத்திய பாடசாலையில் சிலகாலம் ஆசிரியராகவும் இருந்தவர். குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்திற்கு வந்து துறவு பெற்றவர். சென்னையில் நாட்டுப் பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள ஆதீனக் கிளைமடத்தில் இருந்து பாடஞ் சொன்னவர். திருவாவடுதுறை ஆதீனம் 17-ஆம் பட்டம் அம்பலவாண தேசிக குருமூர்த்திகள் இளமையில் சென்னை யில் இவரிடம் கல்வி கற்றவர்களே. ஆறுமுகத்தம்பிரான் பெரியபுராணம் முழுவதற்கும் உரை எழுதத் தொடங்கி பாதிக்குமேல் உரை எழுதினார். பெரியபுராணத்தின் தொடக்கத்தி லிருந்து ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணத்தின் 234-ஆம் செய்யுள் முடிய உரை எழுதினார். ஏனைய பகுதிக்கு உரை எழுதவில்லை. இவர் எழுதாதுவிட்ட ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் 235-ஆம் செய்யுள் தொடங்கிப் பெரிய புராணத்தின் முடிவுவரை சிதம்பரம் ஈசானியமடம் இராமலிங்க சுவாமிகள் உரையெழுதி நிறைவு செய்தார். இவையாவும் நான்கு நூல்களாக வெளிவந்தன. கடைசியாக வெளிவந்தது 1998-இல். முதற்புத்தகந்தவிர மற்ற மூன்று புத்தகங்களும் எமக்குக் கிடைத்தன. எமது நூலகத்தில் உள்ளன.

பெரியபுராண உரை எழுதிய ஆறுமுகத்தம்பிரான் கடைசி காலத்தில் கிறிஸ்துவராகிவிட்டார் என்றும், கிறிஸ்துவர் ஆன பிறகு இவருக்கு வெஸ்லி அப்ரகாம் என்று பெயர் ஏற்பட்டதென்றும், கிறிஸ்துவர் ஆன பிறகு இவர் கிறிஸ்துவ சமய நூல்கள் சிலவற்றை எழுதினார் என்றும் ஆராய்ச்சி அறிஞர் மயிலை. சீனி. வேங்கடசாமி 19-ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் என்னும் அவரது நூலிற் கூறுகிறார்.

(முதற்பதிப்பு 1942 - பக்கம் 264). பெரியபுராண உரை எழுதியவர் என்று கூறும் சீனி.வே. இவர் கருவூரில் பிறந்தவர் என்றும் தருமபுர ஆதீனத்தம்பிரான்களில் ஒருவர் என்றும் எழுதுகிறார். இச்செய்தி குழப்பத்தையளிக்கிறது. மயிலை. சீனி.வே.-யின் இக்கூற்றை மறுத்து, சைவசித்தாந்தப் பெருமன்றத்தின் திங்களிதழ் சித்தாந்தம் மலர் 55 இதழ் 8, 1982 ஆகஸ்ட் இதழில் திரு. ச. அம்பிகைபாகன் என்பவர், ''ஆறுமுகத் தம்பிரான் மதம் மாறினாரா'' என்றொரு கட்டுரையை எழுதியுள்ளார். அதில் மயிலை. சீனி.வே.யைப் போன்றே யாழ்ப்பாண அறிஞர் திரு. கு. பூரணானந்தா என்பவரும் நாவலர் மாநாட்டு மலரில் இம்மத மாற்றத்தை எழுதியிருப்பதாகக் குறிப்பிட்டு, மயிலை சீனி.வே; பூரணானந்தா ஆகிய இருவர் கூற்றையுமே மறுக்கிறார். அம்பிகைபாகன் கட்டுரை ஒரு நல்ல கட்டுரை, குழப்பத்தைத் தெளிவு செய்யும் கட்டுரை. பெரியபுராணத்திற்கு உரை எழுதிய குன்றக்குடி ஆறுமுகத்தம்பிரான் மதம் மாறவில்லை என்பது அம்பிகை பாகனால் நிறுவப்பெற்றுவிட்டது. நமது ஆய்வுமுடிவும் ஆறுமுகத்தம்பிரான் மதம் மாறவில்லை என்பதே. மயிலை. சீனி.வே.யின் நூலைப் படிக்க நேரும் அன்பர்கள் இவ் வுண்மையை உணர்ந்து தெளிக.

அமிர்தலிங்கத் தம்பிரான்

சென்னை மயிலாப்பூர் கிளைமடத்தில் இருந்தவர். திருமயிலைத் தலபுராணம் இயற்றியவர்.

சரவண சுவாமிகள்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். குன்றக்குடி திருவண்ணா மலை ஆதீனத்தில் துறவு பெற்று மயிலாப்பூர் கிளை மடத்தில் இருந்து பணியாற்றிவர். இவர்கள் காலத்தில் கிறிஸ்துவர்கள் சென்னைக் கடற்கரைப் பகுதியில் வாழும் மக்களுக்கு மருத்துவம் முதலிய உதவிகள் செய்து தமது சமயக்கருத்தை அவர்களிடையே பரப்பி வந்தனர். இதனைக் கண்ட இம்முனிவர் சித்த மருத்துவமுறையில் பல மருந்துகள் செய்து, கடற்கரைவாழ் அந்த மக்களுக்கு உதவிசெய்து,

நீண்டநேரம் விரிவுரைகளாற்றி அவர்கள் மனத்தில் சைவ சமயக் கருத்துகளைப் பதிய வைத்துள்ளார். இதனை நேரில் கேட்டு அனுபவித்த யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்கள் இப்பெரியாருக்குச் ''சபாப்பிரசங்க சிங்கம்'' என்னும் பட்டத்தை வழங்கினார்கள் என்றால் இவர்களது பேச்சாற்றலை நம்மால் கூறஇயலுமா? மேலும் நாவலர் அவர்கள் இவரை ''சிவசாத்திர பண்டிதர்'' எனவும் குறிப்பிட்டுள்ளார். இவர் அந்தக் கட்டளை மடத்தில் ஏறக்குறைய 50 ஆண்டுகள் எழுந்தருளி யிருந்தார். உ.வே.சா. அவர்கள் முதன்முதலில் சென்னைக்குச் சென்று தமிழ் இலக்கிய ஏடுகள் தேட முயன்றபோது தமது தள்ளாத 70-ஆவது வயதிலும் அவர்களுடன் சென்று ஏடு இருக்கும் இடங்களையெல்லாம் காட்டி, அவைகளைப் பெறும் முறைகளையும்கூறி உதவினார். இந்த உதவியை உ.வே.சா. அவர்கள் தாம் எழுதிய என் சரித்திரத்தில் பாராட்டி எழுதியுள்ளார்.

சபாபதி முனிவர்

38-ஆம் பட்டம் பெரிய ஆறுமுக தேசிக குருமூர்த்தி களின் காலத்தில் காறுபாறாக இருந்து பல தொண்டுகள் செய்தருளியவர். சிலேடைப்புலி வேம்பத்தூர் பிச்சு ஐயர் இயற்றிய சண்முகநாதர் உலாவில் இவரைப் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார். குன்றக்குடியில் இப்பொழுதுள்ள திருமடத்துக் கட்டிடங்கள் முழுவதும் இம்முனிவராலேயே கட்டப் பெற்றவையாகும். கும்பகோணத்திற்கு அருகில் ஆதீனத்திற்கு நன்செய் நிலங்கள் வாங்கி வைத்தவர்கள். இம்மாமுனிவரின் திருவுருவம் இவர்களது சொந்தப் பொறுப்பில் கட்டியருளிய ஆதீன முன்மண்டபத்தின் மேற்குப் பக்கத்துத் தூணில் புடைப்புச் சிற்பமாக உள்ளது. வைகாசி விசாக விழாவில் சண்முகநாதப் பெருமான் திருமடத்திற்கு எழுந்தருளும்போது இவர்களைப் போற்றும் வகையில் இவர்களது இத்திருவுருவத் திற்குப் பரிவட்டம் கட்டச்செய்து மகிழ்வார்கள்!

குமாரசாமி முனிவர், இராமலிங்கத்தம்பிரான், வேலாயுதத் தம்பிரான், தியாகராசத்தம்பிரான், கைலாசத்தம்பிரான் ஆகியோரும் சிறந்து விளங்கியோராவர்.

மேலே கூறிய ஞானப்பிரகாசமுனிவர், ஆறுமுகத்தம்பிரான், சரவணசுவாமிகள் ஆகிய மூவரும் யாழ்ப்பாணத்திலிருந்து குன்றக்குடிக்கு வந்து துறவும் தொண்டும் பூண்டவர்கள். ஏனைய ஆதீனங்களைவிடக் குன்றக்குடிக்கே யாழ்ப்பாணத் தொடர்பு மிகுதியாக இருந்திருக்கிறது. இவ்வாதீனத்தின் தனிச்சிறப்புகளில் இது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

ஆதீனப் புலவர்கள்

நாவலரும் பிள்ளையவர்களும் ஐயரவர்களும் பாராட்டப் பெற்றிருக்கிறார்கள். சாந்துப்புலவர், சிலேடைப்புலி வேம்பத்தூர் பிச்சுஐயர், யாழ்ப்பாணம் தில்லைநாத நாவலர், வெண்பாப்புலிக் கவிராயர், வீரபத்திரக் கவிராயர், கணேச பண்டிதர் முதலியோர் ஆதீனப் புலவர்களாகச் சிறந்து விளங்கியுள்ளனர்.

ஐயரவர்களின் ஏடுதேடும் முயற்சிகளுக்குக் குன்றக்குடி ஆதீனம் மிகுதியாக உதவியுள்ளது. எழுத்தராகவும் புலவராகவும் இருந்த அப்பா பிள்ளை என வழங்கும் சுவாமிநாத பிள்ளை மிகவும் உதவியுள்ளார். ஐயரவர்கள் இவற்றையெல்லாம் என் சரித்திரத்தில் நன்றியோடு எழுதுகிறார். ஐயரவர்களின் இவ்வெழுத்துகளால் நமக்கும் பழஞ்செய்திகள் பல தெரிகின்றன.

திருவம்பலத்தின்னமுதம் பிள்ளை என்றொரு பெரும் புலவர். அவரது வீடு மயிலாப்பூரில் குன்றக்குடி ஆதீனக் கிளைமடத்திற்கு அருகிலிருந்தது போலும். அவர் மயிலாப்பூரில் கிளைமடத்தில் இருந்து பாடஞ்சொல்லுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். பிள்ளையவர்கள் இளமையில் சென்னைக்குச் சென்றிருந்த காலத்தில் திருவம்பலத் தின்னமுதம் பிள்ளையிடம் பாடங்கேட்கச் செல்வாராம். ‘‘திருவம்பலத்தின்னமுதம் பிள்ளை வீட்டிற்குச் செல்லும் பொழுது கபாலீஸ்வரர் கோயில் வாயிலின் வழியேதான் செல்வேன். அப்பொழுது உள்ளே சென்று சுவாமியைத் தரிசித்துக்கொண்டு போகவேண்டுமென்னும் விருப்பம்

இருப்பினும் நேரமாய் விடுமேயென்னும் கவலையால் சந்நிதியில் நின்றபடியே அஞ்சலி செய்துவிட்டுச் செல்வேன்'' என்று பிள்ளையவர்கள் கூறியதாக ஐயரவர்கள் எழுதுகிறார் (பிள்ளையவர்கள் சரித்திரம், பாகம் 1, பக்கம் 60). திருஅம்பலத்து இன்னமுதம் பிள்ளை என்ற பெயரே எவ்வளவு நன்றாக இருக்கிறது. அவர் இருந்து பாடஞ்சொல்ல இடமாக இருந்திருக்கிறது மயிலாப்பூர்க் கட்டளைமடம். அதில் பிள்ளையவர்களும் பாடங்கேட்டிருக்கிறார் என்ற செய்திகள் கட்டளை மடத்தின் திசைநோக்கிக் கரங்குவியச் செய்கின்றன.

ஆதீன நூல்கள், உரைகள்

சண்முகநாதர் உலா (சிலேடைப்புலி வேம்பத்தூர் பிச்சு ஐயர்), தெய்வசிகாமணி நான்மணிமாலை, சிற்குருமாலை, அருணாசலதேசிக மாலை முதலியன ஆதீன தோத்திர நூல் களாம். சிவஞான சித்தியார் சுபக்க உரை (ஞானப்பிரகாச முனிவர்), பெரியபுராண உரை (ஆறுமுகத் தம்பிரான்) ஆகியவை உரை நூல்களாம்.

தமிழோடு வடமொழியும் வல்ல ஞானப்பிரகாசர் வட மொழி நூல்களையும் இயற்றியுள்ளார். அவை : சித்தாந்த சிகாமணி, பிரமாணதீபிகை, பிராசாததீபிகை, அஞ்ஞான விவேசனம், சிவயோக சாரம், சிவயோக ரத்னம், சிவாகமாதி மான்மிய சங்கிரகம் ஆகியனவாம்.

குன்றக்குடி ஆதீனக் கோயில்கள்

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்திற்குச் சொந்தமாக அதன் ஆட்சியில் ஐந்து கோயில்கள் உள்ளன. பிரான்மலை வகையறா ஐந்துகோயில் தேவஸ்தானம் என்பது பொதுவாகப் பெயர். இவ்வைந்து கோயில்களுக்கும் குன்றக்குடி ஆதீன கர்த்தர்கள் பரம்பரை அறங்காவலர்கள் ஆவர்.

1. பிரான்மலை - கொடுங்குன்றநாதர் கோயில்
2. திருப்புத்தூர் - திருத்தளிநாதர் கோயில்

3. திருக்கோளக்குடி - சுகோளபுரீசுவரர் கோயில்
4. தேனாட்சியம்மன் கோயில் - தேனாட்சியம்மன்
5. குன்றக்குடி - சண்முகநாதர் கோயில்

பாண்டியநாட்டில் பாடல்பெற்ற தலங்கள் 14-இல் 2 குன்றக்குடிக்கு உரியவை. 1. திருக்கொடுங்குன்றம் 2. திருப்புத்தூர். திருப்புகழ் பாடப்பெற்ற முருகத் தலங்களில் குன்றக்குடியும் ஒன்று. அது குன்றக்குடி ஆதீனத்திற்கு உரியது. இம்மூன்று தவிர ஏனைய இரண்டு கோயில்கள் உள்ளூர் கிராமக் கோயில்கள் என்று சொல்லத்தக்கவை.

1. பிரான்மலை

சங்ககாலத்தில் பாரிவள்ளல் ஆண்ட பறம்புமலை, சமயகுரவர் காலத்தில் திருக்கொடுங்குன்றம் ஆகித் தற்போது மக்களின் பேச்சு வழக்கில் பிரான்மலை ஆகிவிட்டது. வள்ளல் பாரி ஆண்ட பறம்புமலைப் பகுதியைக் குன்றக்குடி அடிகளார் ஆள்கிறார் என்றால் அது நமக்கு எவ்வளவு பெருமை! ஆதீனத்திற்கு எவ்வளவு பெருமை!!

பறம்புமலையில் (பிரான்மலையில்) மூன்று கோயில்கள் உள்ளன. ஊரை ஒட்டி மலையின் அடிவாரச் சரிவில் 30 ஏக்கர் பரப்பளவில் கொடுங்குன்றநாதர்கோயில். அதற்கு மேலே மலையின் இடைப்பகுதியில் பைரவநாத சுவாமி கோயில், அதற்கும் மேலே உச்சிப்பகுதியில் மங்கை பாகர் சுவாமி கோயில்.

கீழ்க்கோயில் - அடிவாரக்கோயில் - பாதளம்
நடுப்பகுதிக் கோயில் - பூமி
மேற்கோயில் - உச்சிக்கோயில் - கயிலாயம்

மேற்கோயிலாகிய மங்கைபாகர் கோயில் குடவரைக்கோயில்.

பிரான்மலைக் கோயில் திருவிழா 1973 வரை எல்லாக் கோயில் திருவிழாவைப் போன்றுதான் இருந்தது. 1973-இல்

பிரான்மலைத் திருக்கோயில் சித்திரைத் திருவிழாவில் ''பாரிவிழாவை'' அடிகளார் ஏற்படுத்தினார்.

2. திருப்புத்தூர்

திருப்புத்தூர்த் தேவாரத்தில் ஒரு பாடல் சங்ககாலத்தை, தமிழ்ச் சங்கத்தை, சங்கப்புலவராய்ச் சிவபெருமானே திகழ்ந்ததை நினைவூட்டும் பாடல்.

மின் காட்டுங் கொடி மருங்குல் உமையாட் கென்றும்
விருப்பவன்காண் பொருப்பு வரிச்சிலைக் கையோன்
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி (காண்
நற்கனகக்கிழி தருமிக்கு அருளினோன் காண்
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டுஞ் செழும் புறவில் திருப்புத்தூரின்
திருத்தளி யான்காண் அவன் என் சிந்தையானே.

- திருநாவுக்கரசர் தேவாரம்.

நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனகக்கிழி தருமிக்கு அருளினோன் காண் என்பதற்கேற்ப அடிகளார் திருப்புத்தூர்த் திருக்கோயிலில் திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கத்தை 1967-இல் நிறுவியருளினார்.

3. குன்றக்குடி

குன்றின்மேல் சண்முகநாதப்பெருமான் கோயில். குன்றின் அடிவாரத்தில் வரலாற்றுச் சிறப்புடைய குடவரைக் கோயில்கள்.

4. திருக்கோளக்குடிக் கோயில்

5. தேனாட்சியம்மன் கோயில்

இவை சிறு கோயில்கள். உள்ளூரளவில் சிறந்து விளங்குபவை.

பாரியின் பறம்புமலை, சங்கப்புகழ்த் திருப்புத்தூர், குன்றக்குடி இம்மூன்று கோயில்களும் முக்கியமானவை. ஜமீன் ஒழிப்பு, இனாம் ஒழிப்புச் சட்டம் வருவதற்குமுன் 1950-க்கு முன் குன்றக்குடி ஆதீனத்தின் ஐந்துகோயில் களுக்கும் திருப்புத்தூர் வட்டத்தில் ஒரு இலட்சம் ஏக்கர்

நிலத்திற்குமேல் இருந்தது என்று அடிகளாரின் செயலர் திரு. மரு. பரமகுரு எழுதுகிறார். இனாம் நிலங்களை அரசு எடுத்துக்கொண்டுவிட்டது. பெரும்பகுதி நிலங்கள் இனாம் ஒழிப்பில் போய்விட்டன.

ஐந்து கோயில்களுக்குமே அடிகளார் முழுமையாகத் திருப்பணி செய்து குடநீராட்டு நடத்தியிருக்கிறார். குன்றக்குடி ஆதீன ஆட்சியில் இவ்வைந்து கோயில்களின் வழிபாடும் பணிகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

45-ஆம் பட்டம் குருமகாசந்நிதானம்

திருவருள்திரு தெய்வசிகாமணி அருணாசலதேசிக பரமாசாரிய சுவாமிகள் (தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

அடிகளார் வாழ்வில் ஐந்து நிலைகள்

1. அரங்கநாதன்
2. கந்தசாமித்தம்பிரான்
3. ஸ்ரீமத் அருணாசலதேசிகர்
4. ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசலதேசிக பரமாசாரிய சுவாமிகள்
5. தவத்திரு குன்றக்குடி அடிகளார்

அரங்கநாதன்

எத்தனையோ அரங்கநாதன்கள், ஆயிரம் ஆயிரம் பல்லாயிரம் அரங்கநாதன்கள். அத்தனை அரங்கநாதன்களும் அடிகளார் ஆனார்களா? ஒரே ஓர் அரங்கநாதன் மட்டும் அடிகளார் ஆனார்! தஞ்சாவூர் மாவட்டத்தில் மயிலாடுதுறை திருவாளப்புத்தூர் அருகே நடுத்திட்டு என்று ஒரு நல்ல நன்செய் கிராமம். அதில் ஒரு நல்ல பரம்பரைச் சைவக் குடும்பம். சீனிவாசப் பிள்ளை, சொர்ணத்தாச்சி தம்பதிகள். கோபாலகிருஷ்ணன் பிள்ளை, பாண்டுரங்கன் பிள்ளை, திருமதி சிவானந்தம் என்று மூன்று பிள்ளைகள். அரங்கநாதன் கடைசிப் பிள்ளை. பிறந்த ஆண்டு 1925.

பள்ளியிறுதித் தேர்வு வரை படித்த அரங்கநாதன் படிக்குங் காலத்திலேயே 1942-இல் சுதந்தரப் போராட்டத்தில் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டார். வினோபாபாவே படிப்பகம் தொடங்கி நடத்தினார். செட்டிநாட்டில் இராயவரம் காகிதத் தொழிற்சாலையில் சம்பளமின்றிப் பயிற்சிப் பணி யாளராகச் சேர்ந்தார். ஊனியூரில் ஒரு மாதம் தொடக்கப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றினார்.

கந்தசாமித் தம்பிரான்

காற்று வேறு திசையில் அடித்தது. தருமபுர ஆதீனத் திற்குத் தள்ளிக் கொண்டு சென்றது. 1944-இல் 19-ஆம் அகவையில் தருமபுர ஆதீன அலுவலகத்தில் தபால் பதிவு எழுத்தர் (டெஸ்பாட்ச் கிளார்க்) வேலை கிடைத்தது. இரு வேளை உணவுடன் ஏழுரூபாய் சம்பளம். ஆதீனகர்த்தர் 25-ஆவது குருமகாசந்நிதானம் கயிலைக்குருமணி சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அரங்கநாதனை அதிகநாள் எழுத்தராக இருக்கவிடவில்லை. அடுத்த ஆண்டே பழுக்கவைத்துவிட்டார். தம்பிரானாக ஆக்கிவிட்டார். எழுத்தர் அரங்கநாதன் கந்தசாமித் தம்பிரான் ஆனார். இப்போது தருமபுர ஆதீனத்தில் 26-ஆவது பட்டம் குருமகாசந்நிதானமாக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அப்போது தருமபுரத்தில் தம்பிரான். அவர்கள் பெயர் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள். சோமசுந்தரத் தம்பிரானும் கந்தசாமித் தம்பிரானும் அந்நாளில் சக தம்பிரான்கள். இவ்விரு தம்பிரான்களும் தருமபுர ஆதீனத் தமிழ்க்கல்லூரியில் ஒன்றாக வித்துவான் பட்டத்திற்குப் படித்தார்கள். இப்போது திருப்பனந்தாள் காசித்திருமடத்தின் அதிபராக உள்ள காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகளும் அப்போது இவர்களுடன் வித்துவானுக்குப் படித்தார். கந்தசாமித் தம்பிரானாக இருந்த அடிகளார் சீகாழி, திருக்கடவூர், மயிலாடுதுறை கட்டளைத் தம்பிரானாகத் திறம்படப் பணியாற்றினார். 1945 முதல் 1949 வரை நான்கே நான்கு ஆண்டுகள்தான் தருமபுர ஆதீனத்தில் தம்பிரானாக

இருந்தார், காற்று திசை மாறிற்று. குன்றக்குடிக்கு ஈர்த்துச் சென்றது.

குன்றக்குடி இளவரசு அருணாசலதேசிகர்

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தில் 1948-ஆம் ஆண்டில் நிகழ்ந்த குருபூசை விழாவுக்குத் தருமபுர ஆதீனத்தின் பிரதிநிதியாகக் கந்தசாமித்தம்பிரான் சென்றார். குன்றக்குடி ஆதீனகர்த்தரின் கண், கந்தசாமித் தம்பிரான்மீது விழுந்துவிட்டது. இப்படிப்பட்டவர் நமக்கு இளவரசாகக் கிடைத்தால் நல்லது என்று எண்ணினார். குருபூசை முடிந்த சிலநாளில் தருமபுரத்துக்குத் தூது அனுப்பினார். வயது முதிர்ந்த தம்பிரான் ஒருவரும் காரியஸ்தர் ஒருவரும் தருமபுரத் திற்கு வந்தார்கள். கந்தசாமித்தம்பிரானைக் குன்றக்குடிக்கு இளவரசுப் பட்டத்துக்குத் தரவேண்டும் என்று சந்நிதானத்தில் காலில் விழுந்து வேண்டினார்கள். முதன்முறை பலன் தர வில்லை. கந்தசாமித் தம்பிரானுக்கும் தருமபுரத்தைவிட்டுச் செல்வதில் விருப்பமில்லை. இரண்டாவது முறையும் வந்து வேண்டினார்கள். இம்முறை பலன் கிடைத்தது. கந்தசாமித் தம்பிரான் குன்றக்குடிக்கு அனுப்பிவைக்கப் பெற்றார்.

ஸ்ரீமத் அருணாசலதேசிகர் என்ற திருப்பெயருடன் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் இளவரசாக 05.09.1949-இல் பட்டங் கட்டப்பெற்றார். இதிலிருந்து குன்றக்குடி ஆதீனத்தின் புதிய வரலாறு புதிய சகாப்தம் தொடங்குகிறது.

மூன்று ஆண்டுகள் இளவரசுப் பட்டத்தில் இருந்தார். அப்போதே அடிகளார் தம் வேலைகளைக் காட்டத் தொடங்கி விட்டார். குன்றக்குடி ஊருக்கு வேண்டிய சில புதிய வசதி களைச் செய்தார். ஆதீன வளாகத்தின் சுற்றுமதிற் சுவரை உயர்த்திக் கட்டினார். இப்படிச் சீர்திருத்தப்பணிகள் பலவற்றைச் செய்தார். திருவண்ணாமலையில் உள்ள ஆதீன குருமுதல்வரின் குருமூர்த்தக் கோயிலுக்குத் திருப்பணி செய்து குடநீராட்டு விழா நடத்தினார். செட்டிநாட்டரசர் இராசா சர் மு. அ. முத்தையா செட்டியார், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்,

சேவு. மெ. மெய்யப்பச் செட்டியார், ரசிகமணி டி.கே.சி. ஆகியோரைத் திருமடத்திற்கு அழைத்துப் பாராட்டுவிழா நடத்திச் சிறப்பித்தார். திருக்குறள் வகுப்பு நடத்தினார். திருமுறை வகுப்பு நடத்தினார். தமிழ்விழா நடத்தினார். அங்கங்கே சில முக்கியமான நிகழ்ச்சிகளுக்குப் பேசச் சென்றார். அடிகளார் பேச்சாளராக வளர்ந்த காலம் அது.

45-ஆம் பட்டம் குருமகாசந்நிதானம்

திருவருள்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்

26.06.1952 - 15.04.1995

சின்னப்பட்டத்தில் இளவரசாக முழுமையாக மூன்று ஆண்டுகள்கூட இருக்கவில்லை. 33 மாதங்களே இருந்தார். சந்நிதானம் ஆறுமுகதேசிகரவர்கள் சிவப்பேறெய்தி விடவே 26.06.1952-இல் அடிகளார் 45-ஆம் பட்டம் குருமகா சந்நிதானமாக எழுந்தருளினார்கள்.

குன்றக்குடி அடிகளார்

அடிகளார்

அடிகளார் அரங்கநாதனாக அரும்பி, கந்தசாமித் தம்பிரானாக மலர்ந்து, அருணாசல தேசிகராகவும், தெய்வசிகாமணி அருணாசலதேசிக பரமாசாரிய சுவாமிகளாகவும் காய்த்துக் குன்றக்குடி அடிகளாராகக் கனிந்தார்.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தைவிடக் குன்றக்குடி அடிகளார் புகழ் மிக்கவராக விளங்கினார். ஆதீனத்தால் அடிகளாருக்குப் புகழ் என்பதைவிட, அடிகளாரால் ஆதீனத்திற்குப் புகழ் என்று சொல்லவேண்டும்.

குன்றக்குடி ஆதீனகர்த்தர் என்றால் எல்லாருக்கும் தெரியாது. குன்றக்குடி அடிகளார் என்றால் எல்லாருக்கும் தெரியும். தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் என்றால் எல்லாருக்கும் தெரியாது. ஆதீனங்கள் மடங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்குத்தான் தெரியும். பொது

மக்களுக்குத் தெரியாது. குன்றக்குடி அடிகளார் என்றால் எல்லாருக்கும் தெரியும். பொதுமக்கள் அனைவருக்கும் தெரியும். ஆதீனத்தை விளக்கஞ்செய்ய வந்தவர் அடிகளார்.

அடிகளார் பட்டத்திற்கு வந்த மூன்றாண்டுகளுக்குப் பின் 1955-இல் 'தமிழ்நாடு' நாளிதழ் ''**தவத்திரு குன்றக்குடி அடிகளார்**'' என்று வழங்கத் தொடங்கிற்று. அதிலிருந்து குன்றக்குடி அடிகளார் என்ற பெயரே நிலைத்துவிட்டது. பின்னாளில் அதுவும் சுருங்கி ''**அடிகளார்**'' என்றாகிவிட்டது. ''பிள்ளையவர்கள்'' என்றால் அது திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஒருவரையே குறிக்கும். ''நாவலர்'' என்றால் அது ஆறுமுகநாவலர் ஒருவரையே குறிக்கும். ''ஐயரவர்கள்'' என்றால் அது டாக்டர் உ.வே. சாமிநாதையர் ஒருவரையே குறிக்கும். ''பாரதியார்'' என்றால் அது மகாகவி பாரதியார் ஒருவரையே குறிக்கும். இவ்வழக்காறுகளைப் போன்றே ''அடிகளார்'' என்றால் அது குன்றக்குடி அடிகளார் ஒருவரையே குறிக்கும்.

தெய்வசிகாமணி அருணாசலதேசிக பரமாசாரிய சுவாமி களைக் குன்றக்குடி அடிகளாராக்கிய பெருமையும் புகழும் புண்ணியமும் கருமுத்து தியாகராச செட்டியார் அவர்கள் தொடங்கி நடத்திய, எம். எஸ். பி. சண்முகம் என்பவரை ஆசிரியராகக் கொண்ட ''தமிழ்நாடு'' நாளிதழையே சேரும்.

அருள்நெறித் திருக்கூட்டம்

அடிகளார் பட்டத்திற்கு வந்த காலத்தில் தமிழ்நாட்டில் நாத்திகம் தலைவிரித்தாடிற்று, ஆத்திகம் தடம் புரண்டு சென்றுகொண்டிருந்தது. வறட்டு ஆத்திகத்தை முரட்டு நாத்திகத்தால் எதிர்த்தார் பெரியார் ஈ.வெ.ரா. அடிகளார் 26.06.1952-இல் பட்டத்திற்கு வந்தார். அடிகளார் பட்டத்திற்கு வந்து முழுமையாக இரண்டு மாதங்கள்கூட முடியவில்லை. அதற்குள் பெரியார் ஈ.வெ.ரா. பிள்ளையார் உடைப்புப் போராட்டத்தை 02.08.1952-இல் அறிவித்தார். பெரியாரின் இவ்வறிவிப்பு சமய உலகில் மக்களிடையே பெரும்பரபரப்பை ஏற்படுத்தியது. இப்படிப்பட்ட போராட்டங்களை வலுவிழக்கச்

செய்யவேண்டுமானால் காலத்திற்கேற்ற முற்போக்குச் சிந்தனையுடைய அறிவார்ந்த ஒரு சமய இயக்கம் வேண்டும் என அடிகளார் எண்ணினார். எண்ணிய எண்ணத்திற்கு உடனே செயல்வடிவம் கொடுத்தார். நாடெங்குமுள்ள சமய அறிஞர்களையும் சமயப்பேரன்பர்களையும் கூட்டிப் பேசினார். அடிகளார் தலைமையில் 11.08.1952-இல் அருள்நெறித்திருக் கூட்டம் அமைக்கப்பெற்றது. பிள்ளையார் உடைப்புப் போராட்டம் அறிவிக்கப்பெற்றது ஆகஸ்ட் 2-இல். அருள் நெறித்திருக்கூட்டம் தொடங்கப்பெற்றது ஆகஸ்ட் 11-இல் இடையில் ஒரே வாரம்தான், எட்டே நாள்கள்தான். அடிகளார் செயல்வீரர் என்பதற்கு இதைவிடச் சான்று வேறென்ன வேண்டும்.

"நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து" என்னும் சேக்கிழார் வாக்கின் வண்ணமே, தமிழ்நாட்டில் நன்மை பெருகுவதற்கு அடிகளாரின் அருள்நெறித்திருக்கூட்டம் வந்து அமைந்தது. நாடெங்கும் அருள்நெறித் திருக்கூட்டத்தின் கிளைகள் அமைக்கப்பெற்றன. நகரெங்கும் ஊரெங்கும், பட்டி தொட்டிகளிலெல்லாம்கூடச் சீர்திருத்த நோக்குடன் கூடிய அறிவார்ந்த சமயப்பிரச்சாரம் செய்யப்பெற்றது. எங்கும் திருவாசக சிவபுராணமுழக்கம், வாரவழிபாடுகள், கூட்டு வழிபாடுகள், அருள்நெறி சார்ந்த மக்கட்பணி, தீண்டாமை விலக்குப்பணி, சாதிபேதமற்ற சமுதாய அமைப்புப் பணி என்று செழித்து வளர்ந்தது. சாதிபேதமற்றது சமயநெறி, வல்லார்க்கும் மாட்டார்க்கும் எல்லார்க்கும் வாழ்வளிப்பது சமயநெறி என்பது மக்கள் உள்ளங்களிலெல்லாம் பதியலாயின. வேண்டாப் பழமைகள் ஒதுக்கப்பெற்றன. வேண்டும் புதுமைகள் ஏற்கப் பெற்றன. எங்கும் அருள்நெறி ஓங்கி வளர்ந்தது. தமிழ்நாட்டில் மட்டுமின்றி இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய கடல் கடந்த நாடுகளிலும் அருள்நெறித் திருக்கூட்டத்தின் கிளைகள் தோன்றின. அருள்நெறித் திருக்கூட்டக்கிளைகளின் தொடக்க காலத்து எண்ணிக்கை 45 என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

அடிகளார் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அருள் நெறியை வளர்த்தார், அருள்நெறித் திருக்கூட்டத்தால்

வளர்த்தார், அருள்நெறித் திருக்கூட்டத்தை வளர்த்தார். அடிகளாரின் சுற்றுப்பயணம் சூறாவளி சுற்றுப்பயணம். அது அருள்நெறித் திருக்கூட்ட காலத்திலேயே தொடங்கிவிட்டது. பட்டிமன்ற காலத்தில் மேலும் வளர்ந்தது. பின்னாளில் சுற்றுப்பயணம் குறைந்தது, அது குன்றக்குடி வட்டார வளர்ச்சியாக அபிவிருத்தியாக மாறிற்று. ஞானியாரடிகளின் பல்லக்கும் அடிகளாரின் காரும் நீண்ட நெடும் பயணங் களைக் கண்டவை. மடாதிபதிகளில் இவ்விருவரைத்தவிர இவ்வளவு சுற்றுப்பயணஞ் செய்தவர்கள் வேறு யாரும் இலர். ஞானியாரடிகளின் யாத்திரை பல்லக்கு யாத்திரை. அடிகளாருடையது கார்ப்பயணம். எனவே இது அதனினும் நீண்டது. தமிழகத்தில் அடிகளார் பாதம்படாத ஊர்களே இல்லை. அடிகளார் பாதம் பட்டது என்றால் உண்மை யிலேயே பாதம்பட்டது. பாதக்குறடு இன்றி வெறுங்காலுடன் செருப்புப் போடாமல் நடந்தார் அடிகளார்.

''தமிழகத்தில் அடிகளார்'' என்றொரு நூல் 1953-இல் வெளியாகியிருக்கிறது. மதுரையில் அடிகளார், தூத்துக்குடியில் அடிகளார், திருச்சிராப்பள்ளியில் அடிகளார், மதுரைத் தமிழரசுக்கழகத்தில் அடிகளார், சிவகங்கை கோகலே ஹாலில் அடிகளார் என்று அடிகளார் ஆங்காங்கே பேசிய பேச்சுகள் கட்டுரைகளாக இந்நூலில் உள்ளன. இந்நூலுக்கு ம.பொ.சி. அளித்துள்ள அருமையான அணிந்துரை வருமாறு :

> குன்றக்குடி அடிகளாரின் சொற்பொழிவுகளைத் தொகுத்து வெளியிட்டுள்ள இந்நூலைப் படித்தேன். இது வெறும் எழுத்தோவியமன்று. அடிகளாரின் இதயத் துடிப்பின் எதிரொலி எனலாம். அவருடைய தமிழ்ப் புலமையும், வாதத் திறமையும் இந்நூலில் வெளிப்படு கின்றன. சமயமும், தெய்வ நம்பிக்கையும் தோன்றிய முதல் நிலம் ''தமிழ் நிலம்'' என்பது எனது நம்பிக்கை.
>
> சமயமும், கடவுள் உணர்வும் பிற்காலத்தில் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். தற்காலத்திலும் சமயத்துறை களில் குற்றங்குறைகள் இருக்கலாம். ஆயினும் அந்தக் குறைகளைப் பெரிதாக எண்ணிக் கடவுள் உண்மையை மறுப்பது, ஒழுக்கத்தை மறுப்பதற்கு ஒப்பாகும்.

குன்றக்குடி அடிகளார் நடமாடும் சமயக் கல்லூரியாக விளங்குகிறார். கடவுள் ''இல்லை'' என்று சொல்லத் துணிவது சுலபம். மக்கள் அரைகுறை விழிப்புப் பெற்றுள்ள இந்நாளில் கடவுள் ''உண்டு'' என்ற கொள்கையை நிலை நாட்டுவது கடினம். இந்தக் கடினமான வேலையை அடிகளார் மேற்கொண்டுள்ளார். கடினத்தை எளிதாக்கும் ஆற்றல் அவருக்கு இருக்கிறது. நாத்திகத்தை எதிர்த்து வாதாடும் இடங்களில் அடிகளாரின் வாயில் வழுக்கியும் வன்சொல் இடம் பெறவில்லை.

குன்றக்குடி அடிகளார் என்னைப் பெரிதும் கவர்ந்து விட்டார். அவருடைய எளிய தொண்டும், இனிய பேச்சுமே என்னைக் கவர்ந்ததற்குக் காரணங்களாகும். போலி வைதீகத்தை அவர் வெறுக்கிறார். அதுபோலவே புரட்டு நாத்திகத்தையும் அவர் எதிர்க்கிறார். இரண்டுக்கும் அப்பாற் பட்டுள்ள உண்மை ஆத்திகத்தையே அவர் பரப்பி வருகிறார். அடிகளாரின் தொண்டுக்கு எனது மனமார்ந்த பாராட்டு.

இந்நூலை, ஒவ்வொரு தமிழரும் - ஏன்? - ஆத்திகர்-நாத்திகர் ஆகிய இருதரப்பாருமே வாங்கிப் படிக்கவேண்டும். இது எனது வேண்டுகோள்.

ம.பொ. சிவஞானம்

பிள்ளையார் உடைப்போடு கம்பராமாயண எரிப்பும் அக்காலத்தில் சேர்ந்து கொண்டிருந்தது. பிள்ளையார் உடைப்பும் கம்பராமாயண எரிப்பும் 55 ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்தவை. இன்றைய இளைஞர் உலகத்திற்கு இவை தெரியாது. இதோ அடிகளார் பேச்சின் சிலவரிகள் :

''பிள்ளையார் உடைப்பு - கம்பராமாயண எரிப்பு முதலிய வற்றால் இன்றைய மக்களிடம் புதியதோர் மறுமலர்ச்சி எழும்பியிருக்கிறது. .... இலக்கியப்பற்றும் திருவுருவ வழிபாடும் சமயப் பற்றும் வளர்ந்தோங்கியுள்ளன .... பிள்ளையார் உடைப்புச் செய்தவர்கள் யார் என்று சிந்தித்துப் பார்த்தால் நன்கு தெரியும். அவர்கள் நமது சாக்கிய நாயனார் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் ...... ''உண்மையுமாய் இன்மையுமாய்'' இருக்கின்ற ஆண்டவன் ''ஒளியாகவும் ஒலியாகவும் இருக்கின்ற ஆண்டவன்'' தின்கின்ற

> வெற்றிலையாகவும் உண்கின்ற சோறாகவும் காட்சி தருகின்ற ஆண்டவன்'' உடைப்பாரிடத்தும் எரிப்பாரிடத்தும் உறுதியாக அன்பு காட்டுவான். அவர்களின் செயலைக் கண்டு ஆத்திரப்படாதீர்கள். அடக்கம்தான் என்றும் நன்மையைத் தரும். உலகில் இருளை ஓட்ட யாரும் முற்படுவதில்லை. ஒளியினை உண்டாக்கினால் இருள் தானாக ஓடிவிடும்''

திராவிடர் கழகத்தார் அடிகளாரைக் கடுமையாக எதிர்த்தார்கள். மம்சாபுரம் என்ற ஊரில் அடிகளார்மீது திராவிட கழகத்தார் கல்வீச்சு நடத்தினார்கள். அக்காலத்தில் அடிகளார் வாரந்தோறும் ஆவுடையார் கோயிலுக்குச் சென்று வழிபடுவது வழக்கம். ஒருமுறை சென்றிருந்தபோது கோயில் வாசலில் திராவிடர்கழகக் கொடி பறந்து கொண்டிருந்தது. அடிகளார் திராவிடர் கழகத்தார் சிலரை அழைத்துப் பேசினார்கள். அவர்கள் திராவிடர் கழகக் கொடியை இறக்கிவிட்டு அந்த இடத்தில் அருள்நெறித் திருக்கூட்டத்தின் கொடியை ஏற்றினார்கள். பிரச்னை பெரிதாயிற்று. மீண்டும் அவ்விடத்தில் கழகக்கொடியை ஏற்றவேண்டுமென்றார்கள். அருள் நெறித் திருக்கூட்டத்தினர் திருவாசக விழா நடத்த ஏற்பாடு செய்தனர். காரைக்குடி சா. கணேசன், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் போன்ற பெரியோர்கள் திருவாசக விழாவிற் கலந்து கொண்டனர். எல்லாரும் திருவாசகத்தைப் பாடிக்கொண்டு ஊர்வலமாக மேடைக்கு வந்தனர். திராவிடர் கழகத்தார் கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்புக்கோஷம் போட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனைச் சகித்துக்கொள்ள இயலாத முத்து ராமலிங்கத்தேவர் திராவிடர் கழகத்தாரைக் காரசாரமாகத் தாக்கிப் பேசினார். இறுதியில் பேசிய அடிகளார், ''அவர்கள் தங்களுக்கு விருப்பமான கொடியைக் காட்டி நம்மை வரவேற்கிறார்கள். அதில் கோபப்பட என்ன இருக்கிறது'' என்று சாந்தமாகப் பேசினார்.

அந்தக் காலத்தில் அடிகளாருக்கும் பெரியாருக்கும் எழுத்து மூலமாகவும் வாதம் நிகழ்ந்தது. பக்தர்களுக்குப் பகுத்தறிவு வினாக்கள் என்று 30 கேள்விகளை ''விடுதலை''

நாளிதழில் பெரியார் வெளியிட்டார். அடிகளார் இக்கேள்வி களுக்குப் பதிலளித்தும் ''நாங்களும் கேட்கிறோம்'' என்று 20 கேள்விகளை முன்வைத்தும் ஒரு சிறு நூலாகவே அச்சிட்டு வெளியிட்டார்.

அருள்நெறித் திருக்கூட்டத்தின் முதலாவது மாநில மாநாடு தேவகோட்டையில் 1954 ஜுலை 10;11-இல் இருநாள் மாநாடாக நடந்தது. முதலமைச்சர் இராஜாஜி தொடக்க வுரையாற்றினார். எட்டு மாதங்களுக்கு முன்பே நிகழ வேண்டிய மாநாடு ராஜாஜி, கலந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே எட்டு மாதம் தள்ளி இப்போது நிகழ்ந்தது. இலஞ்சி ஐ. ஏ. சிதம்பரம்பிள்ளை அருள்நெறிக்கொடியை ஏற்றினார். திருக்கூட்டச் செயலாளர் அறிக்கை படித்தார். தொடக்க உரை ராஜாஜி. தலைமை : ஈரோடு எஸ். மீனாட்சி சுந்தர முதலியார். காந்தியடிகளின் படத்தைத் திறந்துவைத்து சி. சுப்பிரமணியம் பேசினார். திருமதி புஷ்பம் நடராசன், திருமதி நீலாவதி அம்மையார், பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம் ஆகியோர் சொற்பெருக்காற்றினர். ஈற்றில் அடிகளாரின் வாழ்த்துரை. அருமையான தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன. எல்லாவற்றையும் எடுத்துக்காட்ட ஈண்டு இடம் போதாது. ஒரேஒரு தீர்மானத்தை மட்டும் எடுத்துக்காட்டு கிறோம். அது வருமாறு :

> மதமாற்றம் இந்தத் தேசத்தில் ஒரு தொழிலாகிவிட்டது. பெரும்பாலும் இச்சக மொழிகளை நம்பியே மதமாற்றம் ஏற்படுகிறது. எனவே பாமர மக்கள் போகாமலிருக்க மதமாற்றம் செய்வதைச் சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்த வேண்டுமென மத்திய, இராஜ்ய அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

54 ஆண்டுகளுக்குமுன்பு நிறைவேற்றப்பெற்ற இத்தீர்மானம் இன்றைக்கும் பொருந்தும். சொல்லப்போனால் அன்றையவிட இன்றைக்குத்தான் அதிகப்பொருத்தம்.

அருள்நெறித் திருக்கூட்டம் தொடங்கப்பெற்ற காலத்தில் அடிகளார் 28 வயது இளைஞர். வளமான செட்டிநாட்டில்,

பொருள்வளம் மட்டுமின்றிப் பக்திவளமும் மிகுந்த செட்டி நாட்டில், பழமையான ஒரு சைவ மடத்திற்குப் புதிய மடாதிபதி, புதுமையான மடாதிபதி. அடிகளாருக்கும் அவர் நிறுவிய அருள்நெறித் திருக்கூட்டத்திற்கும் ஆதரவு மிகுந்தது. காரைக்குடி சா. கணேசன், ஈரோடு மீனாட்சிசுந்தர முதலியார், இலஞ்சி சிதம்பரம்பிள்ளை, கருமுத்து மாணிக்கவாசகம் செட்டியார், எல்.ஆர்.எம். இராமநாதன் செட்டியார், தமிழ்க் கடல் ராய. சொக்கலிங்கனார், பன்மொழிப்புலவர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம், அறிஞர் கி.வா. ஜகந்நாதன் ஆகியோர் அடிகளாருடன் முழுவதும் ஒத்துழைத்தனர். காரைக்குடி சா. கணேசன் அருள்நெறித் திருக்கூட்டத்தின் செயலாளராகவே பணியாற்றினார். ஈரோடு மீனாட்சிசுந்தர முதலியார் மிகப்பெரிய ஈடுபாட்டுடன் பணியாற்றினார்.

பின்னாளில் சமய சீர்திருத்தவாதியாகிய அடிகளாருக்கும் சமய எதிர்ப்பாளரும் சமூக சீர்திருத்தவாதியாகிய பெரியார் ஈ.வெ.ரா.வுக்கும் ஒருவகை இணக்கம் உண்டாயிற்று. **கருப்பும் காவியும்** இணங்கிப் பணியாற்றுகின்றன என்பது நாடெங்கும் பேச்சாயிற்று. இவ்விணக்கம் கூடாவிணக்கம் எனக்கருதிய ஈரோடு மீனாட்சிசுந்தரனார், கும்பகோணம் சுந்தரேசச் செட்டியார், காரைக்குடி சா. கணேசன் முதலிய வர்கள் அருள்நெறித் திருக்கூட்டத்தை விட்டு விலகினர்.

எனினும் அருள்நெறித் திருக்கூட்டம் தொடர்ந்து பற்பல நற்பணிகளைச் செய்தது. மாவட்ட அருள்நெறித் திருக்கூட்டங் களில் ஈரோடு திருச்சிராப்பள்ளி அருள்நெறித்திருக்கூட்டங்கள் முன்னின்றன. பெரியாரின் ஈரோட்டில் அருள்நெறித் திருக்கூட்டம் நல்ல வளர்ச்சியைப் பெற்றது, நன்கு பணியாற்றியது. திருச்சிராப்பள்ளி மாவட்ட அருள்நெறித் திருக்கூட்டம் அன்றும் சிறந்து பணி செய்தது. இன்றும் செய்து கொண்டி ருக்கிறது. **கயிலைச்செல்வர் சிவ ப. மூக்கப்பிள்ளை** அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்ட அருள்நெறித் திருக் கூட்டத்தின் தலைவராக இருந்து சிறப்பாகப் பணியாற்றினார்.

இன்றும் அதன் தலைவராக விளங்குகிறார். திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபை 1884-ஆம் ஆண்டில் நிறுவப்பெற்றது. 1984-ஆம் ஆண்டில் நூற்றாண்டு விழாவைக் கண்டது. இப்போது 125 ஆண்டுகள் ஆகிறது. அதற்கும் தலைவராக இருந்து பணி செய்பவர் சிவ ப. மூக்கப்பிள்ளை அவர்களே. அண்மையில் திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்திற்கும் தலைவராகியுள்ளார். பெரிய சைவ ஆதீனங்கள் அனைத்துக்கும் அடியவர். குன்றக்குடிக்கும் தருமபுரத்திற்கும் அணுக்கர். திருச்சிராப்பள்ளி யில் திரு சொ. கிருஷ்ணன் என்று ஒரு பெருந்தொண்டர். உண்மையிலேயே பெருந்தொண்டர். இப்போதும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருவானைக்காவில் வயது முதிர்ந்தவராக வாழ்ந்து வருகிறார். சிவநெறிச்செம்மல், திருமுறைச் செம்மணி, திருத்தொண்டர் என்று அவருக்கு மூன்று பட்டங்கள். திருத்தொண்டர் என்பதே அன்றும் இன்றும் சிறந்து விளங்கும் பட்டம் (சிறப்புப்பெயர்). சொ. கிருஷ்ணன் என்று முழுப் பெயரை யாரும் அக்காலத்தில் சொல்லமாட்டார்கள். **"சொ.கி."** என்ற இரண்டு எழுத்துகளால்தான் வழங்குவர். மாவட்ட அளவில் மட்டுமன்றி மாநில அளவிலும் அருள்நெறித் திருக் கூட்டத்தின் செயலாளராக அவர் பணி செய்தார். சொ.கி.யின் அருள்நெறித் திருக்கூட்டப் பணி அடிகளார் உட்பட சைவ மெய்யன்பர்கள் அனைவரையுமே சொக்கவைத்தது.

பின்னாளில் தெய்வீகப்பேரவை தோன்றி அதற்கு அடிகளார் தலைவராகிவிட்டபின், திருக்குறட்பேரவை முதலியவை தோன்றியபின், அருள்நெறித் திருக்கூட்டத்தின் அலை குறைந்துவிட்டது. இக்காலத்தில் மிகவும் குறைந்து விட்டது. ஓரளவுக்கே பணியாற்றிவருகிறது எனச் சொல்ல வேண்டும். தமிழ்நாட்டில் அருள்நெறித் திருக்கூட்டத்தின் வளர்ச்சியும் பணிகளும் குறைந்துவிட்ட போதிலும், கடல் கடந்த நாடாகிய மலேசியாவில் தொடங்கப்பெற்ற அருள்நெறித் திருக்கூட்டம் சிறந்த வளர்ச்சியைப் பெற்று இன்றும் சிறப்பாகவே, மிகச் சிறப்பாக, மிகமிகச் சிறப்பாகத் தொண்டாற்றி வருகிறது. அதைப்பற்றியும் சில வரிகள் கூறவேண்டும்.

மலேசியா அருள்நெறித் திருக்கூட்டம்

தமிழ்நாட்டில் அருள்நெறித் திருக்கூட்டம் தோற்றுவிக்கப் பெற்ற மூன்றாவது ஆண்டில் மலேசியா அருள்நெறித் திருக்கூட்டம் தோற்றுவிக்கப்பெற்றது. 1955-இல் அடிகளார் மலேசியா சென்றிருந்தார். அதற்கு முன்பே மலேசியாவில் சைவப்பெரியார் திரு கா. இராமநாதன், பி.ஏ., பி.எல்., அவர்கள் இந்துமதப் பிரசாரசபை என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்திச் சுவாமி சத்தியானந்தா அவர்களின் துணையுடன் சமயப்பிரசாரங்களும் சமயக் கூட்டங்களும் நடத்திவந்தார். இந்நிலையில் மலேசியாவுக்குச் சென்ற அடிகளார், முன்னரே அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த இந்துமதப் பிரச்சார சபையின் பணிகளை விரிவாக்கும் முறையில் மலேசியா அருள்நெறித் திருக்கூட்டத்தை 23.01.1955-இல் தோற்றுவித்தார். தோற்றுவிக்கப் பெற்றபோது மலேசியா அன்பர்களின் விருப்பத்திற்கிணங்க அடிகளாரே அதன் தலைவராக இருந்தார். அடுத்த ஆண்டு 15.08.1956-இல் மலேசியா அருள்நெறித் திருக்கூட்டம் சட்டப்படிப் பதிவு செய்யப்பெற்றது. வெளி நாட்டு நிர்வாகத் தொடர்பின்றி இருப்பது நலம் என்பதால் பதிவு செய்யுங்காலத்தில் திரு கா. இராமநாதன் அவர்களே தலைவராகத் தெரிந்தெடுக்கப்பெற்றார். தொடக்கத்திலிருந்து பன்னிரண்டு ஆண்டுகள் திருக்கூட்டத்தின் அலுவலகமும் பணிகளும் கோலாலம்பூர் ஸ்ரீ மகாமாரியம்மன் கோவிலிலேயே நடைபெற்றன. 1977-இல் இப்போதுள்ள சொந்தக் கட்டிடம் கட்டப்பெற்றது.

சமயச் சொற்பொழிவுகள், சிறுவர்களுக்குச் சமய பாட வகுப்பு, பெரியவர்களுக்குச் சைவ சித்தாந்த வகுப்பு, சைவ சித்தாந்த மாநாடுகள், கோயில்களில் கூட்டு வழிபாடு, இல்லங்கள்தோறும் வழிபாடு, ஆத்மசாந்தி வழிபாடு, சமய குரவர் சந்தானகுரவர் குருபூசைகள் எட்டு உட்பட 15 குருபூசைகள், கந்தர்சஷ்டி, பங்குனி உத்தரம், மகாசிவராத்திரி, விநாயகர் சதுர்த்தசி, தீபாவளி முதலிய விழாக்கள், அந்தர் யோகங்கள், தல யாத்திரைகள், மருத்துவமனையில்

நோயாளியைக் கண்டு ஆறுதல் கூறுதல் என அருள்நெறித் திருக்கூட்டத்தின் பணிகள் பலவாக விரிந்து பரந்துள்ளன.

மலேசியா நாட்டளவில் சைவசித்தாந்த முதலாவது மாநாடு கோலாலம்பூரில் 1975 அக்டோபர் 5, 6 சனி ஞாயிறு இருநாள் மாநாடாகவும், இரண்டாவது மாநாடு ஈப்போவில் 1980 மே 10, 11 சனி ஞாயிறு இரண்டுநாள் மாநாடாகவும் சிறப்புற நிகழ்ந்தன. 1982-இல் வெள்ளிவிழாவும், 1991-இல் முப்பத்தைந்தாம் ஆண்டு நிறைவுப் பவளவிழாவும் கொண்டாடப் பெற்றன. 1984-இல் தருமபுர ஆதீனத்தில் நிகழ்ந்த முதலாவது அனைத்துலக சைவ சித்தாந்தக் கருத்தரங்கிற்கு மலேசியாவி லிருந்து அருள்நெறித் திருக்கூட்டத் தலைவர் சைவபூஷணம் இ.வே. கந்தையா அவர்களும் மற்றும் அன்பர்கள் சிலரும் வந்து கலந்து கொண்டார்கள். 1986-இல் இரண்டாம் அனைத்துலகச் சைவ சித்தாந்தக் கருத்தரங்கை மலேசிய அருள்நெறித் திருக்கூட்டமும் அதனுடன் ஐந்து நிறுவனங்களும் சேர்ந்து கூட்டு ஏற்பாடாகத் தருமபுர ஆதீனத்திற்காக மலேசியாவில் நடத்திக் கொடுத்தார்கள். தமிழ்நாட்டிலிருந்து குன்றக்குடி அடிகளாரும் பேரூர் அடிகளாரும், காஞ்சி தொண்டமண்டல ஆதீன குருமகா சந்நிதானமும், பேராளர்கள் பலரும் மலேசியா சென்று வந்தார்கள்.

மதுரைப் பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தப்பெற்ற சைவ சித்தாந்தத் தத்துவத்துறை 1973-இல் மலேசியா அருள்நெறித் திருக்கூட்டத்தின் மூன்று இலட்ச ரூபாய் நிதி வைப்பினாலேயே ஏற்படுத்தப் பெற்றது. சென்னையிலுள்ள சைவசித்தாந்தப் பெருமன்றத்தின் நூல் வெளியீட்டுப் பணி களுக்கு ரூபாய் ஒரு லட்சம் நன்கொடை வழங்கியுள்ளது.

மலேசியா அருள்நெறித் திருக்கூட்டம் மற்றும் சில அமைப்புகளையும் சேர்த்துக்கொண்டு கூட்டு ஏற்பாட்டில் முதலாவது மலேசிய திருமந்திர மாநாட்டைக் கோலாலம்பூரில் 2000 மார்ச் 10 முதல் 12 தேதி முடிய மூன்று நாள் மாநாடாக நடத்தியது. திருவாவடுதுறை ஆதீனம் குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிகபரமாசாரிய சுவாமிகள் முதன்

முதலாகக் கடல்கடந்து சென்று திருமந்திர மாநாட்டிற் கலந்துகொண்டார்கள்.

மலேசியா அருள்நெறித் திருக்கூட்டம் நல்ல நூல்கள் பலவற்றையும் சிறந்த மலர்கள் சிலவற்றையும் வெளி யிட்டுள்ளது. அவற்றுள் முக்கியமான சில வருமாறு :

திருமுறைச் சிந்தனைகள் - டாக்டர் தேவபூபதி நடராஜா - 1991

சைவசமய சாத்திரக் கட்டுரைகள் - தொகுதி 1
டாக்டர் கோமதி சூரியமூர்த்தி - 1991

சைவசமய சாத்திரக் கட்டுரைகள் - தொகுதி 2
டாக்டர் கோமதி சூரியமூர்த்தி - 1996

சைவப்பெரியார் நினைவுமலர் - 1967

கட்டிடத் திறப்புவிழா, வெள்ளிவிழா மலர் - 1982

பவளவிழா மலர் - 1991

சைவபூஷணம் இ.வே. கந்தையா அவர்கள் நினைவுமலர் - 1994

சைவ சித்தாந்தக் கையேடு - டான் ஸ்ரீ மு. சோமசுந்தரம் - 2000

சைவப்பேரன்பரும் சைவப்பேரறிஞரும் சைவப் பெருந்தொண்டருமான **டான்ஸ்ரீ மு. சோமசுந்தரம்** அவர்கள் மலேசியா அருள்நெறித் திருக்கூட்டத்தின் தலைவராக விளங்குகிறார். அருமையாகத் தொண்டாற்றி வருகிறார். இவர் கா. இராமநாதன் செட்டியார் அவர்களின் மருமகனார் ஆவார். டான்ஸ்ரீ சோமசுந்தரம் அவர்கள் மலேசிய அரசின் பொருளாதார ஆலோசகராகப் பணியாற்றியவர். ''டான்ஸ்ரீ'' என்பது மலேசிய மாமன்னர் வழங்கும் மதிப்பு வாய்ந்த பெரும்பட்டம். மலேசியா வில் இப்பட்டம் பெற்றோர் மிகச்சிலரே. அண்மையில் சைவ சித்தாந்தக் கையேடு ஒன்றைத் தொகுத்து அழகாக அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். அளவால் சிறு நூல் எனினும் பொருளால் பெரிதும் பயனுள்ள நூல். கோலாலம்பூரில் ஜாலான் செக்கோர் சாலையில் சொந்தக் கட்டிடத்தில் அமைந்துள்ள

மலேசியா அருள்நெறித் திருக்கூட்டம் அருமையாகப் பணி செய்து வருகிறது. தமிழ்நாட்டு அருள்நெறித் திருக்கூட்டத் திற்குச் சற்றும் சளைத்ததன்று. இன்றைய நிலையில் தமிழகத் திருக்கூட்டத்தைவிட அது சிறந்து பணி செய்து விளங்கு கின்றது.

அதன் அற்புதப் பணிகளை நாம் நேரில் அறிவோம். 1980-இல் முதல் முறையாகவும், 2001-இல் இரண்டாம் முறை யாகவும், 2007 மே, நவம்பர் மாதங்களில் மூன்றாவது நான்காவது முறையாகவும் நாம் மலேசியா சென்று வந்தோம். நான்கு முறைகளிலும் அருள்நெறித் திருக்கூட்டத்தில் நாம் உரை யாற்றியுள்ளோம்.

அருள்நெறித் திருப்பணிமன்றம்

அருள்நெறித் திருக்கூட்டம் 1952-இல் தொடங்கப் பெற்றது. அதன்பின் கல்விப் பணிகளுக்காக என்றே அருள் நெறித் திருப்பணி மன்றம் 1955-இல் தொடங்கப்பெற்றது. இம்மன்றத்தின்வழி ஆதீனம் கல்வி அறக்கட்டளைகள் பலவற்றை நிறுவியுள்ளது. குன்றக்குடி, பிரான்மலை, தேவகோட்டை, ஈரோடு, நாங்குநேரி முதலிய ஊர்களிலும் தஞ்சாவூர் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் ஆகிய வற்றில் சில ஊர்களிலும் தொடக்கப்பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள், ஒரு கல்லூரி (திருவள்ளுவர் கல்லூரி, பொதிகையடி, பாவநாசம்) எனக் 16 கல்வி நிறுவனங்கள் அருள்நெறித் திருப்பணி மன்றத்தின் வாயிலாக நடைபெற்று வருகின்றன.

தமிழ் அருச்சனைப் போராட்டம்

தமிழ் அருச்சனைப் போராட்டம் என்றும் தீராப் போராட்டமாய் இன்றும் நடந்து கொண்டிருக்கிறது. தமிழருச்சனைப் போராட்டத்தை ஏறத்தாழ ஐம்பது ஆண்டு களுக்குமுன் முதன்முதலில் தொடங்கியவர் அடிகளார். அப்போது முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களின் ஆட்சிக் காலம். அறநிலையத்துறை அமைச்சரும் அவரே. சமயத் துறையில் நாத்திகர்கள் புகுந்து சீர்திருத்தம் பேசுவதைவிடச்,

செய்யவேண்டிய சீர்திருத்தங்களைச் சமயத்தலைவர்களாகிய நாமே செய்துவிடுவது நல்லது என்ற எண்ணத்தில் அடிகளார் தமிழருச்சனை இயக்கத்தைத் தொடங்கினார்.

அந்நாளில் திருக்கோயில்களில் சமஸ்கிருதத்தில் மட்டுமே அருச்சனை செய்யப்பெற்று வந்தது. சமஸ்கிருதத்தோடு தமிழிலும் அருச்சனை செய்யப்பெற வேண்டும் என்றார் அடிகளார். குன்றக்குடியில் ஒரு ஆடிக் கிருத்திகையன்று தமிழ் அருச்சனை தொடங்கியது. 1953-இல் கோவை மாவட்டத்தில் பேரூர்த் திருக்கோயிலில் சைவமெய்யன்பர் வி. சி. சுப்பைய கவுண்டரின் பெருமுயற்சியால் தமிழருச்சனை தொடங்கப்பெற்றது. தமிழருச்சனைக்கு ஆதரவு தொடங்கியது. தமிழருச்சனையை ஆதரிப்பவர்கள் எதிர்ப்பவர்கள் என்று சமய உலகம் (ஆத்திக உலகம்) இரண்டாகப் பிரிந்தது. தமிழ் அருச்சனையை எதிர்ப்பவர்கள் வடமொழி மட்டுமே அருச்சனை மொழி என்றனர். ''வடமொழியும் தென்மொழியும் மறைகள் நான்கும் ஆனவன் காண்'' என்ற திருநாவுக்கரசர் வாக்கையும், ''அருச்சனை பாட்டேயாகும்'' என்ற சேக்கிழார் வாக்கையும் முன்வைத்தார் அடிகளார். சீர்திருத்த ஆத்திகர்கள் தமிழ் அருச்சனையை ஆதரித்தனர். வைதிக ஆத்திகர்கள் எதிர்த்தனர். தமிழ் அருச்சனை இயக்கம் வளர்ந்தது. தமிழ் அருச்சனை கோருபவர்கள் பண்பாடில்லாதவர்கள் என்று முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும்போது சொல்லி விட்டார். சிலரது உணர்ச்சியை இப்பேச்சு தூண்டிவிட்டது. அருள்நெறித்திருக்கூட்டத்தினர் கண்டனம் செய்யத் தொடங்கினர். தந்திகள் பறந்தன. அடிகளார் எல்லோரையும் அமைதிப்படுத்தினார். முதலமைச்சரை நேரில் கண்டு பேசித் தீர்வுகாண முயன்றார். அடிகளாரும், அக்காலத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் திங்களிதழ் ''திருக்கோயில்'' ஆசிரியராக இருந்த சைவத்தமிழறிஞர் ந.ரா. முருகவேளும் சேர்ந்து தமிழ்அருச்சனை நூல் ஒன்றைத் தயாரித்து அச்சிட் டார்கள். எதிர்ப்பாளர்களுக்குரிய தெளிவான பதில் அதில் இருந்தது. அதையும், தமிழருச்சனைக்கு ஆதாரமாகத் திருமுறை களிலும், சைவ நூல்களிலும் காணப்படும் இடங்களில்

அடையாளம் வைத்து 52 நூல்களையும் ஒரு சிறு நூலகம் போலவே முதலமைச்சர் சந்திப்புக்கு ஒரு வாரத்திற்கு முன்பே அனுப்பி வைத்தார்கள். 12 கார்களில் 63 பேரைக் கொண்ட குழுவாய் முதலமைச்சரை நேர்காணச் சென்றார்கள். பேரூரா தீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார், தவத்திரு அழகரடிகளார் (அந்நாளில் இளவழகனார்), சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப் புலவர். ப. இராமநாதபிள்ளை, மகா வித்துவான், ச. தண்டபாணி தேசிகர், மகாவித்துவான் சி. அருணைவடிவேல் முதலியார் முதலியவர்கள் அறுபத்து மூவர் குழுவில் இருந்தனர். திருமுறை பன்னிரண்டுக்கு 12 கார்கள், நாயன்மார் அறுபத்துமூவருக்கு அறுபத்துமூவர் என்று தூதுக்குழு அமைந்தது. முதலமைச்சர் அகமும் முகமும் மலர வரவேற்றார். திருமுறைத் தமிழ்அருச்சனை தனக்கு உடன்பாடே என்று தெரிவித்தார். 04.10.1961-இல் மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் பி.டி. இராஜன் தலைமையில் அடிகளார் முன்னிலையில் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களே தமிழருச்சனையைத் தொடங்கி வைத்தார்.

திருக்கோயில்களில் வடமொழி தமிழ் இரண்டிலும் அருச்சனை செய்யும் நிலை ஏற்பட்டது. வடமொழி அருச்சனை பொதுவாகவும் தமிழருச்சனை வழிபடுவோரின் வேண்டு கோளின் பேரிலும் நடைபெற்றது. ''தமிழிலும் அருச்சனை செய்யப்பெறும்'' என்ற அறிவிப்புப் பலகை வைக்கப் பெற்றது.

அண்மைக் காலத்தில் மொழிப் போராட்டத்தின் ஓர் அங்கமாகத் தமிழருச்சனைப் போராட்டம் எழுப்பப்பெற்றது. வேறு சில கோயிற்சீர்திருத்தப் போராட்டங்களும் எழுந்தன. வழக்குகள் கீழ்நீதிமன்றம், உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் எனப் படிப்படியாகச் சென்றன. தமிழருச்சனை வேண்டுவோர், தமிழில் மட்டுமே அருச்சனை, விரும்புபவர்களுக்கு வடமொழி யிலும் செய்யலாம் என்ற அளவுக்குச் சென்றனர். அரசின் அறநிலையத்துறை தமிழருச்சனையை ஆதரித்தது. ஆயினும் பிரச்சனை தீர்ந்தபாடில்லை. அவ்வப்போது எழுவதும்

அடங்குவதுமாக இருந்துவருகிறது. அடிகளார் போன்ற அறிவார்ந்த தலைமை, ஆன்மிகத் தலைமை, சமயத் தலைமை இன்று இல்லை.

திருப்புத்தூர்த் தமிழ்ச்சங்கம்

''நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக்கிழி தருமிக்கு அருளினோன் காண்'' என்று திருநாவுக்கரசர் திருப்புத்தூர்த் தேவாரத்திற் பாடுகிறார். திருப்புத்தூர்க் கோயில் வரலாறு கூறுமிடத்து இத்தேவாரப் பாடலை முழுமையாக எடுத்துக்காட்டியுள்ளோம். சிவபெருமானே தமிழ்ப்புலவராய்ச் சங்கம் ஏறினார். தமிழ்ச்சங்கத்தின் தலைமைப் புலவர் சிவபெருமான். ''சங்கத் தமிழின் தலைமைப் புலவா தாலே தாலேலோ'' என்று பிள்ளைத் தமிழ் பாடுகிறார் குமரகுருபரர். அடிகளார் தமிழ்ப்பற்று மிக்கவர். சிவபெருமான் தமிழ்ப் புலவராய்ச் சங்கமேறிய செய்தி திருப்புத்தூர்த் தேவாரத்தில் வருகிறது. திருப்புத்தூர் அடிகளாரின் ஆட்சியிலுள்ள ஆதீனத்துத் தலம். சும்மாவிடுவாரா அடிகளார். திருப்புத்தூர்க் கோயிலில் ஒரு தமிழ்ச் சங்கத்தை நிறுவியருளினார். 63 நாயன்மார் நினைவில் 63 தமிழறிஞர்களை அதில் உறுப்பினராக்கி யருளினார். மகாவித்துவான் தண்டபாணிதேசிகர், மகாவித்துவான் அருணைவடிவேல் முதலியார், தவத்திரு அழகரடிகளார், உரைவேந்தர் ஔவை துரைசாமி பிள்ளை, திருமுறை ஆராய்ச்சி அறிஞர் க. வெள்ளைவாரணனார், பெரும்புலவர் அ. நடேசமுதலியார், கழகப்புலவர் ப. இராமநாதபிள்ளை முதலிய முதுபெரும்புலவர்கள் உறுப்பினராகத் திகழ்ந்தனர். ஆண்டுதோறும் திருவிழாவின்போது திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம் கூடும். இலக்கியம், தத்துவம், சமயம், இசை, நாடகம் முதலிய பல துறைகளிலும் ஆய்வுகள் சூடான விவாதங்கள் நிகழும். பயனுள்ள தமிழ்ப் பணிகள் பலவற்றைத் திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம் செய்தது.

தெய்விகப் பேரவை

இந்து சமய அறநிலையங்களின் விசாரணைக்குழு ஒன்று அனைத்திந்திய அளவில் டாக்டர் சர். சி.பி. இராமசாமி ஐயர்

தலைமையில் (1960-1962) அமைக்கப் பெற்றது. அக்குழு இந்தியா முழுவதும் பல மாநிலங்களுக்கும் சென்று விரிவாக விசாரணை செய்து தனது அறிக்கையை 1962-இல் மத்திய அரசுக்கு வழங்கிற்று.* அக்குழு தமிழகத்துக்கும் வந்து விரிவான விசாரணை நடத்திற்று. ஏனைய மாநிலங்களை விடத் தமிழ்நாட்டில் கோயில்களும் மடங்களும் மிகுதி. கோயில்களின் ஆட்சிக்கு, இந்து சமய அறநிலையத்துறை என்று ஓர் அரசுத்துறையே இருக்கிறது. மடங்களின் ஆட்சி அந்த அந்த மடத்தாரிடம் உள்ளது. எல்லா மடங்களுக்கும் இடையில் ஓர் இணைப்பாக அமைப்பு ஒன்று இருப்பது நலம் என்று தோன்றிற்று. தமிழ்நாட்டில் அது **பக்தவத்சலம்** ஆட்சிக்காலம். முதலமைச்சரான அவர் அறநிலையத்துறை அமைச்சராகவும் இருந்தவர். இந்து சமய அறநிலையத் துறையில் **உத்தண்டராமபிள்ளை** என்றொரு ஆணையர் இருந்தார். அக்காலம் அறநிலையைத்துறை நன்கு விளங்கிய காலம். பெரியார் ஈ.வெ.ரா.வின் நாத்திகப் பிரசாரமும் மிகுந் திருந்த காலம். பிள்ளையார் உடைப்பு, கம்பராமாயண எரிப்பு, கருவறை நுழைவுப் போராட்டம் முதலியவை தோன்றியிருந்த காலம். குன்றக்குடி அடிகளாரின் அருள்நெறித்திருக்கூட்டம், தமிழ் அருச்சனை வேண்டல் முதலியவையும் தோன்றியிருந்த காலம். அக்காலச் சூழ்நிலையில் தெய்விகப் பேரவை போன்ற ஓர் அமைப்பு அவசியம் (இன்றியமையாதது) என்று தமிழக அரசின் அற நிலையத்துறையே உணர்ந்தது. காஞ்சிபுரம் காமகோடி பீடம் ஜகத்குரு சங்கராசாரிய சுவாமிகள் முதலிய பெரியோர்களிடமும் கலந்தாலோசித்தது. தமிழக அரசின் இந்து சமய அற நிலையத்துறையே முன்வந்து ''தமிழ்நாடு தெய்வீகப் பேரவை'' என்ற பெயரில் ஓர் அமைப்பை ஏற்படுத்தியது.

★ இவ்வறிக்கை Report of the Hindu Religious Endowment Commission *(1960-62)* என்று 524 பக்கப் பெருநூலாக இந்திய அரசின் சட்ட அமைச்சகத்தால் 1962-இல் வெளியிடப் பெற்றுள்ளது. இந்து சமய வரலாற்றில் இஃதோர் முக்கிய ஆவணம். சமயத்தலைவர்கள், சமய அறிஞர்கள், சமய ஆய்வாளர்கள் அனைவரும் படிக்க வேண்டியது இன்றியமையாதது. தெய்விகப்பேரவை தொடங்கப்பெற்ற 1966-ஆம் ஆண்டிலேயே இதை நாம் வாங்கிப் படித்தோம்.

1966 ஜூன் 13-ஆம் தேதியன்று சென்னையில் தெய்வீகப் பேரவையின் அமைப்புக்கூட்டம் நிகழ்ந்தது. தமிழக அரசின் இந்துசமய அறநிலையத் துறையே இவ்வமைப்புக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது. அறநிலையத்துறையின் ஆணையர் மா.சே. சாரங்கபாணி முதலியார் முன்னின்று ஏற்பாடுகளைச் செய்தார். சைவ, வீரசைவ ஆதீனங்களின் குருமகாசந்நிதானங்கள் பலரும் காஞ்சி காமகோடி பீடம் சங்கராசாரிய சுவாமிகளும் கூட்டத்திற் கலந்துகொண்டார்கள். இவ்வமைப்புக் கூட்டத்தில் "தமிழ்நாடு தெய்வீகப் பேரவை" ஏற்படுத்தப்பெற்றது. பேரவைக் குரிய சட்டதிட்டங்கள் விதிகள் வகுக்கப்பெற்றன. 1966 ஜூன் 26-ஆம் தேதி "தமிழ்நாடு தெய்வீகப்பேரவை" சங்கங் களின் பதிவுச் சட்டத்தின்படிப் பதிவு செய்யப்பெற்றது. பதிவு எண் 107/1966.

தொடக்க காலத்தில் உறுப்பினராக இருந்த ஆதீன கர்த்தர்கள், மடாதிபதிகள் :

1. ஸ்ரீ திருவாவடுதுறை ஆதீனம்.
2. ஸ்ரீ தருமபுர ஆதீனம்
3. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்
4. ஸ்ரீ திருக்குறுங்குடி மடம்
5. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்
6. மதுரை ஸ்ரீ திருஞானசம்பந்தர் சுவாமிகள் ஆதீனம்
7. குன்றக்குடி ஸ்ரீ திருவண்ணாமலை ஆதீனம்
8. ஸ்ரீ வியாசராய மடம்
9. ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் மடம்
10. காஞ்சிபுரம் ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் ஆதீனம்
11. மயிலம் ஸ்ரீ பொம்மபுரம் ஆதீனம்
12. திருவண்ணாமலை ஸ்ரீ ஈசான்ய மடம்
13. பேரூர் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமி மடம்
14. கோயம்புத்தூர் ஸ்ரீ கௌமார மடம்

இப்பதினான்கு மடாதிபதிகளுடன் பதினைந்தாவது உறுப்பினராக அறநிலையத்துறை ஆணையரும் இருந்தார்.

தொடக்க கால நிர்வாகிகள் வருமாறு :

தலைவர்	: ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள். ஆதீன கர்த்தர், தருமபுர ஆதீனம்.
துணைத் தலைவர்	: திரு மா.சே. சாரங்கபாணி முதலியார் பி.ஏ., பி.எல்., ஆணையாளர், இந்துஅறநிலைய ஆட்சித்துறை, சென்னை.
செயலாளர் பொறுப்பு	: திரு. ஏ. சிதம்பரம், பி.ஏ., பி.எல்., துணை ஆணையாளர், (பொறுப்பு), இந்து அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.
செயலாளர்	: (பதவி ஏற்க இருப்பவர்) திரு ஏ. மார்க்கண்ட வேல்ராஜன், துணை ஆணையாளர், இந்து அறநிலையத்துறை, தஞ்சை.
அலுவலக இருப்பிடம்	: 21-பி, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 34.

பதிவு செய்வதற்கான சட்டதிட்டங்கள், விதிகள் வகுக்கப் பெற்றதில் ஒன்பது உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,
(ஆதீனகர்த்தர், தருமபுர ஆதீனம்)

ஸ்ரீமத் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள்

ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிகர்
(ஆதீனகர்த்தர், திருவண்ணாமலை ஆதீனம்)

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிகர்
(ஆதீனகர்த்தர், திருஞானசம்பந்தர் மடம், மதுரை)

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான்
(ஆதீனகர்த்தர், காசிமடம், திருப்பனந்தாள்)

ஸ்ரீலஸ்ரீ சுந்தர சுவாமிகள்
(ஆதீனகர்த்தர், கௌமார மடம், கோயம்புத்தூர்)

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
(ஆதீனகர்த்தர், ஞானப்பிரகாச சுவாமிகள் மடம், காஞ்சிபுரம்)

ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள்
(ஆதீனகர்த்தர், பொம்மபுரம் ஆதீனம், மயிலம், தென்ஆற்காடு)

ஸ்ரீலஸ்ரீ இராமநாத சுவாமிகள்
(ஆதீனகர்த்தர், ஈசான்யமடம், திருவண்ணாமலை)

சட்டதிட்டங்கள் விதிகள் பதிவுக்கு அனுப்பப் பெற்றபோது மூவர் கையொப்பமிட்டுள்ளனர்.

எம்.எஸ். சாரங்கபாணி - துணைத்தலைவர்

கயிலை சுப்பிரமணிய தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் - தலைவர்

ஏ. சிதம்பரம் - செயலாளர் (பொறுப்பு)

தெய்வீகப் பேரவையின் பணிகளுக்கு உதவியாக மாநில அறிவுரைக்குழு (ஆலோசகர் குழு) என்றொரு குழு அமைக்கப் பெற்றது. அதில் ஒன்பதின்மர் உறுப்பினர்களாக நியமிக்கப் பெற்றனர்.

1. திரு டி.எம். நாராயணசாமிபிள்ளை, எம்.ஏ., பி.எல்., திருச்சிராப்பள்ளி
2. திரு. பி.டி. இராஜன், மதுரை.
3. திரு வி. வைத்தியசுப்பிரமணிய ஐயர், சென்னை.
4. திரு எஸ். வெங்கடேஸ்வரன், ஐ.சி.எஸ் (ஓய்வு), சென்னை.
5. திரு ஜி.எம். முத்துசாமி பிள்ளை, ஐ.ஏ.எஸ் (ஓய்வு), சென்னை.
6. திரு என். மகாலிங்கம், எம்.எல்.ஏ., பொள்ளாச்சி.
7. திரு ஐ.ஏ. சிதம்பரம் பிள்ளை, எம்.ஏ., எம்.எல்.சி., இலஞ்சி.
8. திரு. ஏ. காசிநாததுரை, எம்.பி. இராமநாதபுரம்
9. திரு ஆர். கிருஷ்ணசாமி ரெட்டியார், திருச்சிராப்பள்ளி.

தெய்வீகப் பேரவையின், நூற்பதிப்பு, அறிக்கைகள் முதலிய பணிகளுக்கு உதவியாகப் பதிப்பாளர்குழு என்று ஒரு குழுவும் நியமிக்கப் பெற்றது. பேரவையின் தலைவரே பதிப்பாளர் குழுவிற்கும் தலைவர். பதிப்பாளர்குழு உறுப்பினர்கள் எண்மர் வருமாறு :

1. திரு கி.வா. ஜகந்நாதன், எம்.ஏ.
2. திருமுருக கிருபானந்தவாரியார்
3. திரு காரப்பங்காடு வேங்கடாசார்ய சுவாமி
4. திரு க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ.எல்.டி
5. திரு சி. இராமலிங்கம், எம்.ஏ.
6. திரு இராஜா எஸ். குருராஜாச்சாரியார்
7. திரு ஐயன்பெருமாள் கோனார்
8. திரு ச. தண்டபாணி தேசிகர்

தஞ்சாவூர், துணை ஆணையர் திரு மார்க்கண்டவேல் ராஜன் செயலாளராகப் பதவி ஏற்றார். மிகுந்த ஆர்வத்துடன் பணிகளைத் தொடங்கினார். மாவட்டக் குழுக்கள் ஏற்படுத்தப் பெற்றன. உள்ளூர்ச் சங்கங்கள் பல ஏற்படுத்தப் பெற்றன. கோயில் திருவிழாக்களிலெல்லாம் சமயப் பிரச்சாரம் நடை பெற்றது. சமயச் சொற்பொழிவுகள், திருமுறை இசையரங்குகள், வில்லுப்பாட்டு முதலிய கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

''இந்துசமய நம்பிக்கைகள் பழக்க வழக்கங்கள் ஆகிய வற்றிற்கு மாறாகச் செய்யப்படும் பிரசாரங்கள் அல்லது வேறு ஏதேனும் இகழுரைகள் பற்றிய தகவல்களை உள்ளூர் சங்கங்கள் மாவட்டக் குழுவிற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப் படும் பொருட்டு விரைந்து அனுப்புதல் வேண்டும்'' என்பது தெய்வீகப் பேரவையின் சட்டதிட்டங்கள் விதிகளிலேயே சேர்க்கப்பெற்றுள்ளது முக்கியமானதாகும்.

1966-இல் தோன்றியதிலிருந்து 1969 வரை மூன்று ஆண்டுகள் தருமபுரம் ஆதீனம் குருமகாசந்நிதானம் கயிலைக் குருமணி அவர்கள் தலைவராக விளங்கினார்கள்.

1969-இல் தமிழ்நாட்டில் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுடைய ஆட்சி நடைபெற்றது. அடிகளார் சட்ட மேலவை உறுப்பினராக (எம்.எல்.சி,யாக) நியமிக்கப்பெற்றார். தெய்விகப்பேரவைக்கும் அடிகளார் தலைவராக இருந்து நடத்துவது பொருத்தமானது என்று அனைவராலும் கருதப் பெற்றது. 20.12.1969-இல் அடிகளார் தெய்வீகப்பேரவையின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்கள்.

தெய்வீகப் பேரவைக்கு ஒரு பொற்காலம் உண்டென்றால் அது அடிகளாரின் தலைமைக்காலமே. அடிகளார் தலைமை ஏற்றபின் தெய்வீகப்பேரவை பன்மடங்கு வளர்ந்தது. முன்பு அருள்நெறித் திருக்கூட்டத்தின் அலை நாடெங்கும் வீசியது போல இப்போது தெய்விகப் பேரவையின் அலை நாடெங்கும் வீசிற்று. தெய்விகப் பேரவைக்குச் சென்னையில் ஆழ்வார் பேட்டை மகாராஜா சூரியராவ் சாலையில் சொந்தக் கட்டிடம் அமைக்கப்பெற்றது. அதில் ஒரு சொந்த அச்சகமும் அமைக்கப்பெற்றது. ''அருளோசை'', ''செய்திக்கதிர்'' என்ற இதழ்கள் தொடங்கப்பெற்றன. இலட்சக்கணக்கில் துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிடப்பெற்றன. சமய நூல்கள் அறநூல்கள் அச்சிட்டு வெளியிடப்பெற்றன. திருக்கோயில் களிலெல்லாம் வாரவழிபாடு கூட்டுவழிபாடு உழவாரப் பணிகள் நிகழ்ந்தன. பல திருக்கோயில்களில் திருப்பணி செய்யப் பெற்றுக் குடநீராட்டு விழாக்கள் நிகழ்ந்தன. 200-க்கு மேற்பட்ட சமயப் பரப்புநர்கள் நியமிக்கப்பெற்றனர். திருக்கோயில் விழாக் களிலெல்லாம் சமயச் சொற்பொழிவுகள், திருமுறை இசை யரங்கங்கள், கலையரங்கங்கள், பட்டிமன்றம், கவியரங்கங்கள் மிகுந்தன. இச்சமயத்தில் இந்து இளைஞர் மன்றம் என்ற ஒன்றையும் அடிகளார் தோற்றுவித்தார். இளைஞர் சுகி. சிவம் அதில் முன்னோடியாக இருந்து பணியாற்றினார். சுகி. சிவம் போன்ற இளைஞர் பலர் அடிகளாரால் உருவாக்கப் பெற்றார்கள்.

தெய்விகப்பேரவையின் மாவட்ட மாநாடுகள் பல நடந்தன. மாநில மாநாடுகளும் நடந்தன. 1973-இல் திருச்சிராப்

பள்ளியில் நிகழ்ந்த இரண்டாவது மாநில மாநாட்டில் சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன. 1975-இல் நாகர்கோயிலில் நடைபெற்ற மூன்றாவது மாநாடு மிகப்பெரிய அளவில் ஒரு பெரிய அரசியல் மாநாடு போலவே நடைபெற்றது. வரலாறு கண்டிராத மாநாடு! தமிழ்நாட்டின் சமய வரலாற்றில் அதற்குமுன் இப்படி ஒரு மாநாடு நடந்ததில்லை. பின்பும் நடக்கவில்லை. கண்திருட்டிப் பட்டுவிட்டது போலும். அடுத்த ஆண்டே தெய்விகப்பேரவை முடக்கப் பெற்றுவிட்டது.

அடிகளார் தலைவராக இருந்த காலத்தில் நாகர்கோயிலில் மூன்றாவது மாநில மாநாடு நிகழ்ந்த காலத்தில் 1975-இல் தெய்விகப்பேரவைக்கு 2606 கிளைகளும் 92669 உறுப்பினர் களும் இருந்தனர். ஏறத்தாழ ஒரு லட்சம் உறுப்பினர்களைக் கொண்டதாய் அடிகளாரின் தலைமையில் தெய்விகப்பேரவை மிகச் சிறப்பாகச் செயலாற்றி வந்தது. மிகச் சிலரைத் தவிரச் சைவ உலகம் ஆத்திக உலகம் முழுவதும் அடிகளாரின்பின் நின்றது. நாத்திக உலகும் அடிகளாரின் சீர்திருத்தப் போக்குக்கு ஆதரவாகவே இருந்தது. பேரூர் அடிகளாரும் கோயம்புத்தூர் சுந்தர சுவாமிகளும் அடிகளாருக்கு இரண்டு கரங்களாக விளங்கினார்கள். அடிகளாருக்கு அரசின் ஆதரவும் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் ஆதரவும் மிகுதியாக இருந்தன. அடிகளார் எம்.எல்.சி யாகவும் இருந்தார். தெய்விகப்பேரவை வெற்றிகரமாகச் செயற்பட இவையும் ஏதுவாயின.

அரசியல் சூழ்நிலைகளால் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் நடந்துகொண்டிருந்த தி.மு.கழக ஆட்சி கலைக்கப்பெற்றது. ஆளுநர் (கவர்னர்) ஆட்சி ஏற்பட்டது. சீர்திருத்தப் போக்கில் சென்றுகொண்டிருந்த தெய்விகப் பேரவைக்கும் இடையூறு ஏற்பட்டது. தெய்விகப் பேரவைக்கு அரசு ஆதரவு குறைந்தது, முடக்கப்பெற்று விட்டது.

அடிகளாரது வாழ்நாளின் இறுதிக்காலத்தில் ஒரு சமயம் தெய்விகப்பேரவை மீண்டும் புதுப்பிக்கப்பெறுவதற்கான முயற்சி தோன்றிற்று. வெற்றிபெறாது போயிற்று. அடிகளார்

காலத்திற்குப்பின்பும் ஒருமுறை இருமுறை முயற்சிகள் நடந்தன. பேரூர் அடிகளாரும், மயிலம் சுவாமிகளும், சிரவணபுரம் கௌமார மடம் சுவாமிகளும் குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரும் அறநிலையத்துறை ஆணையரும் கூடிப்பேசினர். இன்றுவரை ஒன்றும் நடைபெறவில்லை. தெய்விகப்பேரவை போனது போனதுதான் என்ற நிலை. அரசியல் மாற்றங்கள் ஆட்சிமாற்றங்கள் அடிக்கடி நிகழ்ந்து கொண்டுள்ளன. உள்ளேயே உள்ள உள்வயண அரசியல் (இன்னர் பாலிடிக்ஸ்), மாறி மாறி வரும் ஆட்சி அரசியல் ஆகிய இருவகையாலும் பாதிக்கப்பெற்று முடங்கிக்கிடக்கும் தெய்விகப் பேரவையைப் புதுப்பித்து நடத்தக் காலம் கனிய வேண்டும், கடவுள் அருள் புரியவேண்டும்.

திருக்குறள் பேரவை

தமிழிலுள்ள அறநூல்களிலெல்லாம் தலையானது திருக்குறள். அடிகளார் திருக்குறளில் ஆழ்ந்த ஈடுபாடுள்ள வர்கள். திருக்குறள்நெறி நாடெங்கும் பரவவேண்டும், பின்பற்றப்பெறவேண்டும் என்ற நோக்கில் திருக்குறளைப் பரப்பும் இயக்கமாக 11.06.1973-இல் திருக்குறள் பேரவையை அமைத்தருளினார்கள். ஏறத்தாழ இருநூறு கிளைகளுடன் இன்றும் நன்கு இயங்கிவருகிறது. மாவட்ட மாநாடுகள் மாநில மாநாடுகள் பல நிகழ்ந்துள்ளன. கூட்டுறவு முறையில் தொழில்களைத் தொடங்கிப் பலருக்கு வேலைவாய்ப்பளிக்கும் பணியையும் திருக்குறள் பேரவை செய்துவருகிறது. மதுரையில் திரு. ந. மணிமொழியன் அவர்களும் திருச்சிராப்பள்ளியில் திருக்குறள் நா. சண்முகனாரும் செயலாளராக இருந்து நன்கு பணியாற்றி வருகின்றனர். இரண்டு ஆண்டுகளுக்குமுன் உலகத் திருக்குறள் மாநாடு ஒன்றைத் திருச்சிராப்பள்ளித் திருக்குறள் பேரவை நடத்திற்று. 2001-இல் உலகத் திருக்குறள் பேரவை அமைக்கப்பெற்றது. தவத்திரு பொன்னம்பல அடிகளார் தலைவராகவும் திருக்குறள் நா. சண்முகனார் பொதுச் செயலாளராகவும் விளங்குகின்றனர். அடிகளார் தமிழ் நாட்டளவில் அமைத்த திருக்குறட்பேரவையின் பணிகள் இன்று உலக அளவில் விரிந்து வருகின்றன.

அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய அறக்கட்டளைச் சொற்பொழிவு திருவள்ளுவரைப் பற்றியது. தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் விருது வழங்குவதைத் தொடங்கியபோது முதன்முதலாகத் திருவள்ளுவர் விருது அடிகளாருக்கே வழங்கப்பெற்றது (1986). மணிவாசகர் பதிப்பகம் வெளியிட்டு வரும் குன்றக்குடி அடிகளார் நூல் வரிசையில் முதல் நான்கு தொகுதிகள், 1647 பக்கங்கள் திருக்குறளைப் பற்றியனவே.

திருவருட் பேரவை

மதமாற்றத்தாலும் வேறு சில பல காரணங்களாலும் தென்மாவட்டங்களில் அவ்வப்போது மதக் கலவரங்கள் இனக்கலவரங்கள் நிகழ்வது அண்மைக்காலத்தில் வழக்கமாகி விட்டது. 1982-இல் மண்டைக்காட்டில் ஏற்பட்ட மதக்கலவரம் எல்லாக் கலவரங்களிலும் கொடுமையானது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மண்டைக்காடு பகவதி அம்மன் கோயில் திருவிழா மிகவும் புகழ்பெற்றது. 1982 திருவிழாவின்போது இந்து கிறிஸ்துவ சமூகங்களுக்கிடையே மோதல் ஏற்பட்டது. பின் இஸ்லாமிய சமூகத்திற்கும் பரவியது. மிகக் கொடுமையான கலவரம். உயிர்ச்சேதம் பொருட்சேதம் மிகுதி. கலவரம் மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டிருந்த நிலையில் அடிகளார் அமைதிப்பணியில் இறங்கினார். கிறிஸ்துவப் பாதிரியார் களையும் இஸ்லாமியப் பெரியோர்களையும் சேர்த்துக்கொண்டு ஊர்தோறும் ஊர்வலமாக அமைதிப் பயணத்தை நடத்தினார். இந்த அமைதிப்பணியில் அடிகளார் உயிரையும் பொருட் படுத்தாது இரவு பகலாக உழைத்தார். கிறிஸ்துவப் பாதிரியார் களும் இஸ்லாமிய அன்பர்களும் முழுமையாக ஒத்துழைத்தனர். இந்து முன்னணியினர் தொடக்கத்தில் அடிகளாரின் அமைதிப் பணிக்கு உடன்படவில்லை எனினும் பின்னர் ஒத்துழைத்தனர். எல்லாத் தரப்பினரின் ஒத்துழைப்பையும் வேண்டிப்பெற்று மிகவும் கஷ்டப்பட்டு, கடைசியில் வெற்றிகரமாக அமைதிப் பணியை அடிகளார் நிறைவேற்றினார். மண்டைக்காட்டு வெற்றி வீரராய் அடிகளார் குன்றக்குடிக்குப் புறப்படும் சமயம் முதல்

நாள் இரவு கன்னியாகுமரியில் அனைத்துச் சமயத்தினரும் அடிகளாருக்கு விருந்தளித்துப் பாராட்டினர். அந்த விருந்தின் போது நடந்த கலந்துரையாடலில் பிறந்த இயக்கம்தான் திருவருட்பேரவை. பேராயர் எம். ஆரோக்கியசாமி அவர்களின் ஆலோசனையின்மீது தொடங்கப்பெற்றது. இந்து, கிறிஸ்துவம், இஸ்லாமியம் ஆகிய மூன்று சமயத்தின் தலைவர்களையும் கொண்டது திருவருட்பேரவை. அங்கங்கே சமய ஒற்றுமை நிலவச்செய்வதும், சமயக் கலவரங்கள் இனக் கலவரங்கள் ஏற்படாமல் பாதுகாப்பதும், ஏற்பட்டால் தடுத்து அமைதிப் பணியாற்றுவதும் திருவருட்பேரவையின் குறிக்கோளும், பணியும் ஆகும். இந்த நல்லமைப்பு இப்போது வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திண்டுக்கல், மதுரை, நாகர்கோயில் ஆகிய பெருநகரங்களில் அமைக்கப்பெற்றுப் பணியாற்றி வருகிறது.

குன்றக்குடி ஆதீனத்திற்கு வருகை புரிந்தவர்கள்

ஆசாரிய வினோபா, ராஜாஜி, காமராசர் முதலிய காங்கிரஸ் காரர்களும், பெரியார், அண்ணா, பாரதிதாசன் முதலிய திராவிட இயக்கத்தினரும், பி. இராமமூர்த்தி, ஜீவானந்தம், எம். கல்யாணசுந்தரம், நா. வானமாமலை, எஸ்.எஸ். டாங்கே, பி.டி. ரணதிவே, ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் முதலிய கம்யூனிஸ்ட் கட்சியினரும் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்திற்கு வந்துள்ளனர், அடிகளாரின் அன்பான வரவேற்பைப் பெற்றுள்ளனர். இந்தோ சோவியத் நட்புறவுக் கழகத்தின் தலைவராகவும் அடிகளார் விளங்கியிருக்கிறார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் கம்யூனிசத் தலைவர் ஜீவானந்தத்தால் தொடங்கப்பெற்றது. அவருக்குப்பின் அடிகளார்தான் அதற்குப் புரவலர். ஜெயகாந்தன் அடிகளாரின் குழுவில் ரஷ்யாவுக்குச் சென்றவர். பொன்னீலன் அடிகளார் வரலாற்றை எழுதியவர். காந்தியத்தையும் மார்க்சியத்தையும் சமரசப்படுத்திக் கண்டார் திரு.வி.க. சைவசித்தாந்தத்தையும் மார்க்சியத்தையும் சமரசப்படுத்திக் காண்கிறார் அடிகளார். சைவசித்தாந்தம் ஆழமான கடவுள் நம்பிக்கையுடையது. மார்க்சியம் அறவே கடவுள் நம்பிக்கையற்றது. இந்த வேறு

பாட்டைத்தவிர இரண்டிற்குமிடையே வேறு அதிக வேறுபாடில்லை என்கிறார் அடிகளார். **சைவம், தமிழ், காந்தியம், சர்வோதயம், சோசலிசம், கம்யூனிசம் ஆகியவற்றின் கலவை அடிகளார்.**

அடிகளாரும் வினோபாவும்

அடிகளாருக்கு வினோபாவிடம் அதிக ஈடுபாடு. அதீத ஈடுபாடு. பள்ளிப் பருவத்திலேயே அடிகளார் வினோபாபாவே வாசக சாலையைத் தொடங்கி நடத்தியவர். 1956-இல் வினோபா தமிழ்நாட்டில் பூமிதான யாத்திரை செய்தபோது அடிகளாரும் யாத்திரையில் பங்கேற்றார். இராமநாதபுரம் மாவட்ட யாத்திரையின் பொறுப்பை அடிகளார் தாமே ஏற்றுச்செய்தார். குன்றக்குடியில் வினோபாவுக்குச் சிறப்பான வரவேற்பளித்தார். வினோபா திருப்புத்தூரில் ஆதீனக் கிளைமடத்தில் தங்கியிருந்தபோதுதான் பூதான இயக்கம் கிராமதான இயக்கமாக உருவெடுத்தது. அனைத்திந்திய அளவில் தமது பணியில் சேர்ந்துகொள்ளும்படி வினோபா அடிகளாரை அழைத்தார். அடிகளார் மடாதிபதிப் பதவியைத் துறந்துவிட்டு வினோபாவுடன் செல்லவும் தயாரானார். ஆதீனப் பணியாளர்களின் உருக்கமான வேண்டுகோளால் அடிகளார் மடத்தைவிட்டு வினோபாவுடன் சேர்ந்துவிடுவது தவிர்ந்தது. 1968 அக்டோபரில் கயாவில் நிர்மாணப் பணியாளர்களின் கூட்டத்தை வினோபா கூட்டினார். அடிகளார் அழைக்கப் பெற்றுச் சென்றிருந்தார். தமது உரையை ஆங்கிலத்தில் தயாரித்து வைத்திருந்தார். அங்கு உரையாற்றியவர்களில் ஆங்கிலப் புலமையுடையோரும் இந்தியில் பேசியதால் அடிகளாரும் ஆங்கிலத்தில் பேசாமல் தமிழில் பேசினார். அடிகளாருடன் சென்றிருந்த சகோதரி கிருஷ்ணம்மாள் ஜகந்நாதன் அடிகளாரின் தமிழ்ப்பேச்சை இந்தியில் மொழிபெயர்த்தார். **வினோபாவின் தாக்கம் அடிகளாரிடம் நிரம்ப உண்டு.** பழகிய தாக்கத்தால் நமது ஆதீன நிலங்கள் இடைத்தரகர் வழி குத்தகைக்கு விடும் பழக்கம் தவிர்க்கப்பெற்றது. விவசாயிகளுக்கே நேரடியாகக் குத்தகைக்கு ஒப்படைக்கப்பெறும் நடைமுறை அறிமுகப் படுத்தப்பெற்றது'' என்று அடிகளாரே எழுதுகிறார். அடிகளார்

தமக்கு முன்மாதிரியாகவும் முன்னோடியாகவும் கொண்ட சிலருள் ஒருவர் வினோபா.

அடிகளாரும் பெரியாரும்

அடிகளார் சமயசீர்திருத்தவாதி. பெரியார் சமூக சீர்திருத்தவாதி. பெரியாரின் சமூக சீர்திருத்தத்தில் சமய எதிர்ப்பும் சேர்ந்திருந்தது. அவற்றிற்கெல்லாம் அடிகளார் பதில் சொல்லி வந்தார். அடிகளாரின் அருள்நெறித்திருக்கூட்டத் தாருக்கும் பெரியாரின் திராவிட கழகத்தாருக்கும் பல இடங் களில் சொற்போர் ஏற்பட்டது. ஏட்டுப்போர் ஏற்பட்டது. மிகச் சில இடங்களில் கற்போரும் (கல்வீச்சும்) ஏற்பட்டது. இரண்டு சீர்திருத்தவாதிகளும் ஒத்த சில விடயங்களிலாவது கூடிய வரை இணைந்து செயற்பட்டால் நன்றாக இருக்கும் என்று அன்பர் சிலர் கருதினர். ஈரோட்டில் சென்னியப்ப முதலியார் வீட்டில் இருவரும் சந்தித்துப்பேச ஏற்பாடாயிற்று. இருவரும் சந்தித்துப் பேசினர் (1956). இது முதல் சந்திப்பு. அடுத்த 1956 பெரியார் பிறந்தநாள் விழாவைத் திருச்சிராப்பள்ளி பொன் மலையில் திராவிட கழகத்தார் கொண்டாடினர். அடிகளாரை அதற்கு அழைத்தனர். அடிகளாரும் சென்று பெரியாருக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். இருவரும் சேர்ந்த முதல் மேடைத்தோற்றம் இது. இதன்பின்னர் எத்தனையோ முறை இருவரும் சந்தித்திருக்கிறார்கள். ஒரே மேடையில் பேசியிருக்கிறார்கள். பெரியாரிடம் பல நல்ல குணங்கள் உண்டு. மனிதர்களைத் தரம் அறிந்து தகுதி அறிந்து மதித்துப் பழகுவது அதில் ஒன்று. பெரியார் அடிகளாரை "மகா சந்நிதானம்" என்றுதான் வழங்குவார். குன்றக்குடி ஆதீனத்திற்குப் பலமுறை பெரியார் வந்திருக்கிறார். முதன்முறை வந்தபோது ஆதீனமரபின்படி அவருக்கு வரவேற்பு (மடத்து மரியாதை) வழங்கப்பெற்றது. அதில் திருநீறு அணிவித்தலும் ஒன்று. சின்னப்பட்டம் நடராஜதேசிகர் பெரியாரின் நெற்றியில் திருநீறு அணிவித்தார். பெரியாரும் தயக்கம் காட்டாமல் தலையை ஆட்டாமல் திருநீறு பூசியதை ஏற்றுக் கொண்டார். அதைப்பற்றிக் கேட்டபோது திருநீறு பூசிவிட்டதை ஏற்றுக் கொண்டது மகாசந்நிதானத்தைக் கௌரவிப்பதற்காக என்று

பதிலும் கூறினார். உடனே திருநீற்றை அழித்துவிடவில்லை. திராவிட முன்னேற்றக்கழக அரசு முதன்முதலில் பதவி ஏற்ற புதிதில் அமைச்சர் நெடுஞ்செழியன் சிதம்பரம் கோயிலுக்கு வந்தார். கொடுக்கப்பெற்ற திருநீற்றுப் பிரசாதத்தைக் கையை உதறிக் காற்றிற் பறக்கவிட்டார், தரையில் சிந்தினார். பெரியாரின் நாகரிகத்தை அவரைச் சார்ந்த ஏனையோரிடம் எதிர்பார்க்க இயலாது. திண்டுக்கல்லில் பெரியார் உருவச்சிலையை அடிகளார் திறந்துவைத்தார்.

அடிகளார் பெரியார் நட்பு, கூடா நட்பாக அந்நாளில் சிலர் பலரால் கருதப்பெற்றது. பெரிதும் விவாதத்திற்குள்ளானது. காலவெள்ளத்தில் வரவரச் சரியாய்ப்போயிற்று. இருவரின் இந்நட்புறவால் ஒன்றும் குடிமுழுகிப் போகவில்லை. தீமை எதுவும் ஏற்படவில்லை. நன்மைகள் பல விளைந்தன. அவரவர் நிலையில் இருவருமே பெரியவர்கள். இவ்விருவரது தனித்தனித் தொண்டுகளாலும் நாடு பயன்பெற்றது. இருவரும் கூடிச் செய்த பணிகளாலும் நாடு பயன்பெற்றது.

நாயன்மார் அடிச்சுவட்டில் அடிகளார்

நாயன்மார்கள் அறுபத்துமூவரும் திருத்தொண்டு செய்தவர்கள். அவர்களது தொண்டுகளைக்கூறும் திருத்தொண்டர் புராணம், தொண்டின் பெருமையால் பெரியபுராணம் எனப் பெயர் பெற்றது. நாடெங்கும் அறுபத்துமூவர் குருபூஜை வழிபாடாகவே சாப்பாடாகவே (மாகேசுவர பூசையாகவே) நடந்துவருகிறது. ஆனால் நம் அடிகளாரோ நாயன்மார் குருபூசையை நாயன்மார் அடிச்சுவட்டில் தொண்டுவிழாவாக நடத்தத் தொடங்கியருளினார். நாயன்மார் அடிச்சுவட்டில் என்ற பெயரில் திருத்தொண்டுக்கையேடு ஒன்றை 11.03.1972-இல் வெளியிட்டருளினார். ஆதீனத்தின் ஆட்சிக்குட்பட்ட திருக்கோயில்களில் அதை நடைமுறைப்படுத்தியும் அருளினார்.

திருக்குறிப்புத்தொண்ட நாயனார் நாளில் பரிவட்டத் தூய்மை, நமிநந்தியடிகள் நாளில் திருவிளக்குகள் சீர்மை செய்தல், திருநாளைப்போவார் (நந்தனார்) நாளில் தீண்டாமை

விலக்குப் பணி, சுந்தரமூர்த்தி சுவாமிகள் நாளில் சிவாசாரியர்களின் நிலை பற்றி ஆய்வு செய்து அவர்களுக்கு ஆவன செய்தல், குலச்சிறையார் நாளில் சமயப் பாதுகாப்பு, கண்ணப்பர் நாளில் பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்குக் கண் பரிசோதனை கண் மருத்துவம் கண்ணாடி வழங்கல், உருத்திர பசுபதியார் நாளில் உருத்திர செபம், ஆனாயர் நாளில் மங்கல இசைக் கருவிகள் சீரமைத்தல், அரிவாட்டாய நாயனார் நாளில் மடைப்பள்ளிப் பாத்திரங்கள் சீரமைத்தல், திருஞானசம்பந்தர் திருநாளில் தமிழ் வளர்ச்சிக்குரிய பணிகள், அப்பரடிகள் நாளில் உழவாரப்பணி, இவ்வாறு ஒவ்வொரு நாயன்மார் திருநாளிலும் அவரவர் செய்த திருத்தொண்டுகளைச் செய்தல் - என்றொரு நடைமுறைத் தொண்டை நாயன்மார் அடிச்சுவட்டில் ஏற்படுத்தி நடத்திவந்தார் அடிகளார். **பெரியபுராணத்திற்குச் செயல்வடிவம் கொடுத்தவர் அடிகளார்.**

அடிகளாரின் திருக்கோயில் சீர்திருத்தம்
இந்து சமயக் கோயில்கள்
அறநிலையங்களுக்குத் தனிவாரியம்

நம் நாட்டின் பண்பாடு கோயிற்பண்பாடு. தமிழ்நாட்டு அரசின் சின்னமே கோபுரச்சின்னம். ''ஆலயங்கள் சமுதாய மையங்கள்'' என்று அடிகளார் ஒரு நூலே எழுதினார். ''கோயிலைத் தழுவிய குடிகள், குடிகளைத் தழுவிய கோயில்கள்'' என்றொரு சூத்திரத்தை அடிகளார் வழங்கினர். இந்துசமயக் கோயில்கள் அறநிலையங்களின் ஆட்சி, சமயச்சார்பற்ற அரசின் ஒரு துறையாக இருக்கக்கூடாது, சமயச்சார்பான ஒரு தனி வாரியமாக இருக்கவேண்டும் என்பது அடிகளார் கொள்கை. சமயம் நேர்ந்தபோதெல்லாம் அடிகளார் இதைச் சொல்லி யிருக்கிறார், எழுதியிருக்கிறார்.

கோயில்களுக்கும் அறநிலையங்களுக்கும் அரசுத்துறை அல்லாத ஒரு தனி வாரியம் அமைக்கவேண்டுமென்று கன்னியாகுமரியிலிருந்து சென்னை ஆளுநர் மாளிகை வரை 1000 கிலோ மீட்டர் பாதயாத்திரை ஒன்று 01.05.1988 முதல் 31.5.1988 முடிய ஒரு மாத யாத்திரையாக விசுவ இந்து

பரிஷத் ஏற்பாட்டில் நடைபெற்றது. நாமும் பேரூரடிகளாரும் ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் சுவாமிகளும் அதில் முக்கிய பங்கு வகித்தோம். அப்போது ஆளுநராக இருந்த பி.சி. அலெக்சாண்டரிடம் கோரிக்கை மனுவைக் கொடுத்தோம். அடுத்த தேர்தல் வந்தபோது, நாங்கள் வெற்றி பெற்றால் தனிவாரியம் அமைப்போம் என்று ஜெயலலிதா அம்மையாரும் மூப்பனாரும் தேர்தல் அறிக்கைகளை வெளியிட்டனர். சமயத் தலைவர்களை அழைத்துப்பேசி ஆவன செய்வோம் என்று கலைஞர் கருணாநிதி அறிக்கை வெளியிட்டார். தேர்தலில் கருணாநிதி வெற்றிபெற்று அரசமைத்தார். சமயத் தலைவர் களை அழைத்துச் சென்னையில் கூட்டம் நடத்தினார் (10.03.1989). கூட்டத்தில் உடனடியாக ஒரு முடிவுக்குவர இயலவில்லை. ''இந்து சமய அறநிலையத்துறை ஆக்கப்பணி ஆலோசனைக்குழு'' என்று ஐவர் குழு ஒன்றை அமைத்து மூன்று மாத காலத்திற்குள் அறிக்கையளிக்கக் கேட்டுக் கொண்டார். ஐவர் குழுவில் அடிகளாரும், நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியாரும், திருவரங்கம் திரு. திருமலை ஐயங்காரும், காஞ்சி சங்கரமடம் வித்துவான் திரு. ஜெயசெந்தில் நாதனும், திருமதி ராதா தியாகராசன் அவர்களும் உறுப்பினர்கள். இவ்வைவர்குழு அருமையாகப் பணியாற்றியது. எல்லாம் அடிகளாரால் தான். தனிவாரியம் அமைக்கப்பெறவேண்டும் என்று விரிவான அறிக்கையை அளித்தது. முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களின் அரசு இந்த அறிக்கையை அப்படியே அமுக்கிவிட்டது. அறிக்கையின்மீது எந்த நடவடிக்கையும் இல்லை. அறிக்கையை வெளியிடவும் இல்லை.

இந்துசமயக் கோயில்கள் அறநிலையங்களின் ஆட்சி, அரசுத்துறையாக இல்லாமல், ஒரு தனி வாரியமாக முற்றிலும் சமயஞ் சார்ந்ததாக இருக்கவேண்டும் என்பதுதான் அடிகளாரின் முடிந்த முடிவான கருத்து. அடிகளாருக்கும் விசுவ இந்து பரிஷத் போன்ற இந்துசமயத் தொண்டு நிறுவனங்களுக்கும் இக்கருத்தில் மாறுபாடில்லை. அடிகளார் சொல்லியும் அரசு செவிசாய்க்கவில்லையே என்பதுதான் வருந்தத்தக்க நிலை.

அடிகளாரின் அயல்நாட்டுப் பயணங்கள்

அடிகளார் உலகஞ் சுற்றிய மடாதிபதி. கடல்கடந்த நாடுகளுக்குச் சென்றுவந்த முதல் மடாதிபதி. ''முந்நீர் வழக்கம் மகடூஉவொடு இல்லை'' என்பது தொல்காப்பியச் சூத்திரம். பெண்கள் கடல்கடந்து செல்லலாகாது என்பது இதன் பொருள். முந்நீர் வழக்கம் என்பது கடல்கடந்து செல்லும் வழக்கம். பெண்கள் கடல்கடந்து செல்லக் கூடாது என்று இருந்த பழைய வழக்கம் போன்றே இந்து சந்நியாசிகள் (துறவிகள்) கடல்கடந்து செல்லக்கூடாது என்னும் ஒரு பழமையான வழக்கம் இருந்தது. கடல் கடந்து செல்லாமை ஒரு துறவற மரபாகவே கடைப்பிடிக்கப்பெற்று வந்தது. பெண்களின் கற்புக்குக் களங்கம் ஏற்படக்கூடும் என்ற அச்சத்தாலும், துறவிகள் தங்கள் ஆசார அனுட்டானங்களை (ஆசாரம் - ஒழுக்கம்)க் கடல்கடந்த நாடுகளில் சரிவர, முழுமையாகக் கடைப்பிடிக்க இயலாமற் போகலாம் என்ற அச்சத்தாலும், அறிவு ஜீவிகளாகிய துறவிகள் அந்நியநாடு சென்றால், அங்கேயே ஒரு சமயம் தங்கிவிட நேரிட்டு விட்டால் நம் நாட்டில் அறிவுப்பஞ்சம், அறிவுக்குக் குறைவு ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தாலும் இவ்வழக்கங்கள் பழங்காலத்தில் ஏற்பட்டிருக்கலாம். ஞானியாரடிகளைத் தென்னாப்பிரிக்காவுக்கு அழைத்தார்கள். தமது இயலாமையை ஞானியாரடிகள் தெரிவித்துவிட்டார். இயலாமை என்ன? துறவிகள் கடல்கடந்து செல்லலாகாது என்ற மரபே.

இப்பழைய மரபை முதன்முதலில் உடைத்தவர் மீறியவர் அடிகளார். அப்போது அது வியப்பாக இருந்தது, விவாதத்துக் குரியதாகவும் இருந்தது. இப்போது சர்வ சாதாரணமாகி விட்டது. முதன்முதலில் கடல்கடந்து அயல்நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்யத்தொடங்கிய மடாதிபதி ஆதீனகர்த்தர் அடிகளார்தான். அடிகளார் பயணஞ் செய்யாத நாடுகள் ஆப்பிரிக்க நாடுகளும் ஆஸ்திரேலியாவும்தான். ஏனைய எல்லாக் கண்டங்களையும் அடிகளார் கண்டிருக்கிறார். அவையும் அடிகளாரைக் கண்டு மகிழ்ந்தன.

அடிகளாரின் கடல்கடந்த முதற்பயணம் இலங்கைப் பயணம். அடிகளார் 1952-இல் ஆதீனகர்த்தராகப் பட்டத்திற்கு வந்தார். அடுத்த ஆண்டே இலங்கைப் பயணம் அமைந்தது. அடிகளார் இளவரசுப் பட்டத்திற்கு வந்தது முதலே ஆற்றி வரும் தமிழ்ப்பணிகள், சைவப் பணிகள், அருள்நெறித் திருக்கூட்டத்தைத் தொடங்கியது போன்ற பணிகள் தமிழ் நாட்டுக்கு வெளியேயும், தமிழ்கூறு நல்லுலகெங்கும் பரவின. 1953-இல் இலங்கையில் தனிநாயக அடிகள் நடத்திய தமிழ் மாநாட்டிற்கு அடிகள் அழைக்கப்பெற்றுச் சென்றார். அதன்பின் பலமுறை இலங்கைக்குச் சென்றார். இலங்கைக்குக் கடைசிப் பயணம் 1968-இல். இப்பயணத்தில் யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப் பட்ட மக்களின் திருக்கோயில் நுழைவுக்காக உண்ணாநோன் பிருந்தார். அதன்பின் இலங்கை செல்லவில்லை. அங்கே தமிழர் களிடையே போதிய ஒற்றுமை இல்லை என்பதால் இனி இலங்கைக்கு வருவதில்லை என்று அறிவித்துவிட்டார். 1954-55-இல் மூன்று மாதங்கள் மலேசியா சிங்கப்பூர் தாய்லாந்து இந்தோனேஷியா நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தார். அப்போது தான் மலேசியாவில் அருள்நெறித் திருக்கூட்டத்தை ஏற்படுத்தினார்.

1971-இல் சோவியத் யூனியனில் (ரஷ்யா) 22 நாள் சுற்றுப்பயணம். ரஷ்யா கம்யூனிச நாடு. இரும்புத்திரைநாடு என்று அக்காலத்தில் சொல்வதுண்டு. அமெரிக்காவும் ரஷ்யாவும் அக்காலத்தில் நேர் எதிர் எதிர் நாடுகள். ஆத்திக உலகம் அமெரிக்காவைப் புகழும். நாத்திக உலகம் ரஷ்யாவைப் புகழும். திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. ரஷ்யாவுக்குச் சென்று வந்தார். அடிகளாரும் ரஷ்யாவுக்குச் சென்று வந்தார். கருப்புச் சட்டைக்காரர் ரஷ்யாவுக்குச் சென்று வந்ததில் வியப்போ விவாதமோ இல்லை. ஆனால் காவி வேட்டிக்காரர் ரஷ்யாவுக்குச் சென்று வந்தது வியப்பாகவும் விவாதத்திற்குரியதாகவும் இருந்தது. அடிகளார் மார்க்சீயத்தால் கவரப்பெற்றார். 1982-ஆம் ஆண்டில் மலேசியா, கொரியா, ஜப்பான், சீனா நாடுகளுக்குச் சென்று வந்தார். 1991-இல் இலண்டனுக்கும் அமெரிக்காவுக்கும் சென்றுவந்தார். அதே ஆண்டில் அரபு நாடுகளுக்கும் சென்றுவந்தார்.

சட்டமேலவை உறுப்பினர் அடிகளார்

கலைஞர் கருணாநிதி அவர்களின் ஆட்சிக்காலத்தில் அடிகளார் சட்டமேலவை உறுப்பினராக (M.L.C. எம்.எல்.சி. யாக) நியமனம் செய்யப்பெற்றார். அக்காலத்தில் அடிகளாரின் நெருங்கிய நண்பர்களாக விளங்கிய பேரூர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார், சிரவணபுரம் கௌமாரமடம் சுந்தர சுவாமிகள் ஆகிய இருவரது ஆலோசனைகளையும், தருமபுர ஆதீனம் குருமகாசந்நிதானமவர்களின் இசைவையும் பெற்ற பின்னரே சட்டமேலவை உறுப்பினராக இருக்க இசைந்தார். 1969 முதல் 1976 வரை சட்ட மேலவை உறுப்பினராகப் பதவி வகித்தார். வட மாநிலங்களில் மடாதிபதிகள் துறவிகள் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். பாராளுமன்ற உறுப்பினராக இப்போதும் மடாதிபதிகள் துறவிகள் சிலர் உள்ளனர். தமிழ் நாட்டில் அவ்வாறான வழக்கமில்லை. அடிகளார் ஒருவரே நியமன உறுப்பினராகப் பதவி வகித்தார். ஒரு சில விஷயங் களில் ஒரு சிலர் அடிகளாரின் சட்டமன்றப் பேச்சுகளை ஏற்க வில்லையெனினும் பொதுவாக அனைவரது பாராட்டுக்கும் உரியவராகவே சட்டமன்றப் பணிகளை அடிகளார் ஆற்றினார்.

ஊராட்சித்தலைவர் அடிகளார்

குன்றக்குடி ஒரு சிற்றூராட்சி கிராமம். கிராமப் பஞ்சாயத்து. குன்றக்குடி கோயிலையும் குன்றக்குடி ஆதீனத்தையும் ஆட்சி செய்யும் அடிகளார் ஒருமுறை குன்றக்குடி ஊரையும் ஆட்சி செய்யும் ஊராட்சிமன்றத் தலைவரானார். ஒரு முகமாக ஏகமனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

குன்றக்குடி அடிகளார் பஞ்சாயத்துத் தலைவராக இருந்த காலத்தில் மாநில அரசு நாடெங்கும் மலிவுவிலை மதுக் கடைகளைத் திறந்தது. குன்றக்குடியிலும் ஒரு மலிவு விலை மதுக்கடை திறக்க ஏற்பாடாயிற்று. ஏல அறிவிப்புச் செய்யப் பெற்றது. குன்றக்குடியில் மதுக்கடை திறக்கவேண்டாம், திறப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று அடிகளார் பஞ்சாயத்தில் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றி அரசுக்கு அனுப்பினார். அரசு செவி சாய்க்கவில்லை. மதுக்கடை ஏலம்விடும் ஏற்பாடும்

நெருங்கியது. அடிகளார் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துத் தடையாணை பெற்றார். ''குன்றக்குடி காட்டும் வழி'' என்று தினமணி நாளிதழ் (14.11.1990) துணைத் தலையங்கம் எழுதிப் பாராட்டிற்று. நாம் நடத்திவந்த ''சன்மார்க்க விவேக விருத்தி'' திங்களிதழிலும் ''குன்றக்குடி காட்டும் வழி'' என்று நீண்ட பல பக்கக் கட்டுரை ஒன்றை எழுதிப் பாராட்டினோம்.

பஞ்சாயத்துத் தலைவராக இருந்த ஒரே மடாதிபதி அடிகளார்தான். பஞ்சாயத்துத் தலைவராக இல்லர்த காலத் திலேயே அடிகளார் ஊருக்கு நன்மைகள் பல செய்தார். பஞ்சாயத்துத் தலைவராக வந்தால் இன்னும் பல நன்மை களைச் சுயேச்சையாகச் செய்யலாம் என்ற எண்ணத்திலேயே அடிகளாரை மக்கள் பஞ்சாயத்துத் தலைவராகத் தேர்ந் தெடுத்தனர். பல விஷயங்களில் வரலாறு படைத்த அடிகளார் பஞ்சாயத்துத் தலைவராவதிலும் வரலாறு படைத்தார்.

குன்றக்குடி மாதிரி அபிவிருத்தி
(KUNDRAKUDI PATTERN)

குன்றக்குடி ஒரு சிற்றூர், கிராமப் பஞ்சாயத்து. கோயிலாலும் ஆதீனத்தாலுமே குன்றக்குடி புகழ்பெற்றது. குன்றக்குடி என்றால் முதலாவது அதன் முருகன்கோயில், அடுத்தது குன்றக்குடி ஆதீனம். இவ்விரண்டையும் ஆள்வது குன்றக்குடி அடிகளார்.

அடிகளாரால் சும்மா இருக்கமுடியாது. அவர் கர்மயோகி. 1976-இல் தெய்விகப்பேரவை முடக்கப் பெற்றுவிட்டபின் அடிகளார் தன் முழு கவனத்தையும் குன்றக்குடியையும் அதன் சுற்றுவட்டார ஊர்களையும் அபிவிருத்தி செய்வதில் திருப்பினார்.

1977 அக்டோபர் 2-ஆம் நாள் காந்தியடிகள் பிறந்த நாளன்று குன்றக்குடி திட்டக்குழு உருவாயிற்று. கூட்டுறவு முறையில் தொழிற்சாலைகள் பல ஏற்படுத்தப்பெற்றன. குன்றக்குடி கிராமத்தில் கூட்டுறவில் உறுப்பினராகாத குடும்பமே இல்லை. வேலை வாய்ப்பில்லாத குடும்பமே இல்லை என்ற நிலை ஏற்படுத்தப்பெற்றது. குன்றக்குடி ஒரு முன்மாதிரி

(மாடல்) கிராமமாக ஆயிற்று. 1984-ஆம் ஆண்டு செப்டம்பர் 9-ஆம் தேதி ''இந்து'' ஆங்கில நாளிதழில் 'சமூக அடித்தள நிலையில் சில சாதனைகள்' என்ற தலைப்பில் குன்றக்குடி திட்டக்குழுவின் சாதனைகளைப் பற்றிய கட்டுரை ஒன்று வெளிவந்தது. இந்தியப்பிரதமர் இந்திரா காந்தி அதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தார். எல்லா கிராமங்களுக்கும் நான் விரும்பும் திட்டம் இதுவே This is what I should like for all villages என்று கூறினார். குன்றக்குடியை முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு மற்ற கிராமங்களிலும் இதைப்போன்ற திட்டங்களைச் செயற்படுத்துமாறு டெல்லியிலுள்ள மத்திய திட்டக்குழுவின் அலுவலகத்திற்கு எழுதினார். அடிகளாரின் குன்றக்குடி கிராமத் திட்டத்தை இந்திய கிராமங்களின் மேம்பாட்டிற்கு முன்மாதிரியாக மத்திய அரசு எடுத்துக் கொண்டது. மாநில அரசின் திட்டக்குழுவும் குன்றக்குடிக்கு வந்து பார்த்தது. காரைக்குடியில் செக்ரி (CECRI) என்றொரு மத்திய அரசு நிறுவனம். சென்ட்ரல் எலக்ட்ரோ கெமிகல் ரிசர்ச் இன்ஸ்டியூட், காரைக்குடி (Central Electro-Chemical Research Institute, Karaikudi) என்பது முழுப்பெயர். மின்வேதியியல் ஆய்வுநிறுவனம், மத்திய அரசின் நிறுவனம். இதுதான் குன்றக்குடித் திட்டத்தின் மூளை. கூட்டுறவு வங்கிகளும் பிறவங்கிகளும் இத்திட்டங்களுக்குக் கடனுதவியளித்தன. வாங்கிய கடன்கள் அனைத்தும் குறித்த தவணைகளில் திரும்பச் செலுத்தப்பெற்றன. குன்றக்குடி தன்னிறைவு பெற்றது.

குன்றக்குடியில் ஒரே ஒரு கந்து வட்டிக்காரர் கடை வைத்திருந்தார். அவரை வெளியேற்றத் தீவிர முயற்சிகள் செய்யப்பெற்றன. அவர் வெளியேற மறுத்தார். கிராமவாசி களில் யாரும் இனிமேல் கடன்வாங்கக்கூடாது என்று ஒரு கட்டுத்திட்டம் செய்யப்பெற்றது. ஒருநாள் கந்துவட்டிக்காரர் தானே வெளியேறி விட்டார்.

இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் (02.04.1988) குன்றக்குடித் திட்டத்தைப் பாராட்டிப் படங்களுடன் ஒரு முழுப் பக்கக் கட்டுரையை வெளியிட்டது. 01.11.1988 துக்ளக்

வார இதழ் "ஒரு மடாதிபதி செய்துவரும் மகத்தான தொண்டு" என்று 4 பக்கங்கள் படத்துடன் கட்டுரை வெளியிட்டது. 16.10.1993 தினமணி சுடர் "பெரியார் பெயரில் தொழிற் சாலை நடத்தும் குன்றக்குடி" என்று அட்டைப்படமும் 4 பக்கக் கட்டுரையும் படங்களுடன் வெளியிட்டது. பத்திரிகை களெல்லாம் இவ்வாறு பக்கம் பக்கமாக எழுதிப் பாராட்டின. அடிகளார் சுதேசிஅறிவியல் (விஞ்ஞான) இயக்கத்தைத் தொடங்கினார். "அறிக அறிவியல்" என்றொரு திங்களிதழைத் தொடங்கினார். அறிவியல் கருத்தரங்குகளை நடத்தினார். கண்காட்சிகளை நடத்தினார். பல்கலைக்கழக அளவிலும் பல்கலைக்கழகங்கள் பலவற்றில் அறிவியற் கருத்தரங்குகள் நடத்தப்பெற்றன. எல்லாவற்றிலும் அடிகளாரின் தனிமுத்திரையும் கடும் உழைப்பும் இருந்தன. சொன்னால் நம்பமாட்டீர்கள். அடிகளார் ஓர் உறவுப் பாலம் என்ற நூலில் ஏழாவது கட்டுரையாக டாக்டர் மி. நோயல் அவர்கள் எழுதியுள்ள "அறிவியல் உறவு" என்ற கட்டுரையை அன்பர்கள் பார்க்க வேண்டும். குன்றக்குடிக்குச் சென்று பார்க்கவேண்டும். இன்றைய குன்றக்குடி பழைய குன்றக்குடியன்று. அதைப் பன்மடங்கு வளர்த்திருக்கிறார் அடிகளார். "அரசியல்வாதிகள் செய்யவேண்டிய ஆனால் செய்யத் தவறிய வேலையை ஒரு மடம் தனது கவனத்தின்மூலம் சாத்தியமாக்கியிருக்கிறது என்பது பிரத்தியட்ச உண்மை" என்று தினமணி சுடர் எழுதி யிருப்பது உண்மையிலும் உண்மை (16.10.1993) அடிகளார் மறைந்துவிட்டார். அவர் தொடங்கிய பணிகள் மறைந்து விடவில்லை. இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுள்ளன.

அடிகளார் மணிவிழா

அடிகளாரின் மணிவிழா குன்றக்குடியில் 07.07.1985; 08.07.1985 ஞாயிறு திங்கள் இரண்டு நாள்கள் மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. ஆதீனகர்த்தர்கள், அறிஞர்கள், அமைச்சர்கள் என்று நூற்றுக்கு மேற்பட்டோர் நிகழ்ச்சிநிரலில் இடம்பெற்றனர். குன்றக்குடியே விழாக்கோலம் பூண்டிருந்தது. பல்லாயிரக் கணக்கான மக்கள் திருவிழாக்கூட்டம் போன்று திரண்டிருந்

தனர். குன்றக்குடியில் திருவிழாக் கூட்டம் போன்று மக்கள் திரண்டிருந்த காட்சி இருமுறை காணப்பெற்றது. ஒருமுறை அடிகளார் மணிவிழாவில். மற்றொரு முறை அடிகளார் சிவப்பேறு பெற்ற நாளில்.

அடிகளார் மணிவிழா நிகழ்ச்சிநிரல் தினமணி நாளிதழில் ஒரு முழுப்பக்கமாக வெளியிடப்பெற்றிருந்தது. நிகழ்ச்சி நிரலில் கடைசிப் பேச்சுக்கு முந்திய பேச்சாக எம் பெயர் அச்சிடப்பெற்றிருந்தது. எமக்குப் பின்னும் பேசுவோர் ஒருவர் இருந்தார். அவர்தான் சுத்தானந்த பாரதியார். பேச்சாளர் பட்டியல் ஊரன் அடிகள், சுத்தானந்த பாரதியார் என்று நிறைவுபெறுகிறது. தருமபுர ஆதீனம் குருமகாசந்நிதானம் தலைமை. யாரை முதலில் பேசச்சொல்லலாம் என்று சந்நிதானம் அடிகளாரைக் கேட்டார்கள். அடிகளார்தான் என்று அடிகளார் நம்மைச் சுட்டினார்கள். ஆதீனகர்த்தர்கள் வாழ்த்துரை அரங்கில் நம்முடைய உரை முதன்மை உரை. புரட்சியும் எழுச்சியும் மிக்க உரை. அடிகளார் பணிகளின் அருமைபெருமை களையெல்லாம் தொகுத்து வகுத்து அழகிய நடையில் அடுக்கடுக்காகக் கூறினோம். எமது பேச்சு, அவையோர் கரவொலி என்று மாறிமாறி அரைமணி நேரத்திற்குமேல் நீண்டது. பேச்சை முடிக்க மக்கள் விடவில்லை. இன்னும் பேசுங்கள் இன்னும் பேசுங்கள் என்றார்கள்.

தேசியக்கொடி, அருள்நெறிக்கொடி, கூட்டுறவுக்கொடி என்று மூன்றுகொடிகளை ஏற்றி வைத்துத்தான் அடிகளார் மணிவிழாவே தொடங்கிற்று. அடிகளார் தேசியத்தையும் அருள்நெறியையும் கூட்டுறவையும் ஏற்றிப்போற்றினார். மூன்று கொடியேற்றங்கள் நிகழ்ந்தன. ஒரு மடாதிபதியின் மணிவிழா இதற்குமுன் இப்படி மூன்று கொடி ஏற்றி நடந்ததே இல்லை. படாதிபதிகளின் மணிவிழாக்களைக் கண்டு மயங்கும் இன்றைய இளைஞருலகம் மடாதிபதி ஒருவரின் மணிவிழாவைக் கண்டு வியக்கிறது என்றுதான் நம் பேச்சைத் தொடங்கினோம். மடாதிபதிகளில் சிலர் மணிவிழாப் பருவத்துக்குப் பின்பே பட்டத்திற்கு வந்தார்கள். சிலர் மணிவிழாப் பருவத்துக்குமுன்பே பரமனடியைச் சேர்ந்து

விட்டார்கள். மணிவிழா வயதில் பட்டத்திலிருந்தோர், இருப்போர் மிகச்சிலரே, அவருள் சிறந்த ஒருவர் அடிகளார், என்று கூறினோம். அவையே கரவொலியால் அதிர்ந்தது. ஞானியாரடிகளின் மணிவிழா, காசிவாசி அருள்நந்திசுவாமி களின் மணிவிழா ஆகியவை நடந்த வண்ணத்தை எடுத்துரைத்தோம். அவை இன்றைய இளைஞருலகம் இளந் தலைமுறை அறியாதவை. அடிகளாரது பணிகளையெல்லாம் ஆதி முதல் அந்தம் வரை எடைபோட்டு எடுத்துக்காட்டினோம். எமது பேச்சு பாதி அவையோர் கரவொலி பாதி என்று ஒருமணி நேரப் பொழிவாய்ப் பொழிந்து அடிகளார் புகழ் வெள்ளம் பாயவிட்டோம். அடிகளாரின் பணிகள் ஒவ்வொன்றைப் பற்றியுமே ஒருமணி நேரத்திற்கு மேற் பேசலாம், ஒவ்வொன்றைப் பற்றியுமே ஒரு தனி நூல் எழுதலாம். ஒவ்வொன்றைப் பற்றியும் ஒரு டாக்டர் பட்டத் திற்கு ஆய்வு செய்யலாம்.

''நடந்ததும் நடக்க வேண்டியதும்'' என்று ஒரு 17 பக்க அறிக்கை ஒன்றை அடிகளார் தம் மணிவிழாச் செய்தியாக எழுதி அச்சிட்டு வழங்கினார். தன் உள்ளத்தில் உள்ளதை யெல்லாம் கொட்டித் தீர்த்திருக்கிறார். ஒன்றுக்கு இரண்டாக நாம் வாங்கி வைத்துக்கொண்டோம். ''இது உங்கள் ஆதீனம்! ஆதீனத் திருப்பணிக்கு அன்புடன் உதவுங்கள்'' என்றொரு அறிக்கையும் அச்சிட்டு அனைவர்க்கும் வழங்கப்பெற்றது. அதுவரை செய்துள்ள பணிகளின் பட்டியல் அது. திருவிழாக் காலங்களில் சோறுபோடும் சத்திரங்களே நிறைந்திருந்த குன்றக்குடியில் இருபத்தைந்துக்கு மேற்பட்ட சிறுதொழில் நிறுவனங்களை நிறுவி வேலையில்லாத் திண்டாட்டத்தை ஊரைவிட்டே விரட்டியவர் அடிகளார். அடிகளாரின் அற்புத சாதனைகளுக்கு ஒரு மணிமுடி அடிகளாரின் மணிவிழா. ஒரு சிறிய பஞ்சாயத்து கிராமத்தில் இருந்துகொண்டே அடிகளார் இவ்வளவு பெரும்பணிகளைச் செய்தார். தமிழ் நாட்டின் ஆட்சியை ஒரு ஐந்து வருடத்திற்கு அடிகளாரிடம் கொடுத்திருந்தால், இந்திய நாட்டின் ஆட்சியை ஒரு ஐந்து வருடம் கொடுத்திருந்தால், வேலையில்லாத் திண்டாட்டத்தை

நாட்டை விட்டே விரட்டியிருப்பார் அடிகளார். மாநில அரசும் மத்திய அரசும் மக்களும் அடிகளாரை முழுமையாகப் பயன் படுத்திக் கொள்ளவில்லை. அடிகளார் போன்றவர்களுக்கு ஆலோசனைப் பதவிகளை அளித்தாற் போதாது. அதிகாரப் பதவிகளையும் அளிக்கவேண்டும். அப்போதுதான் அவர்களாற் செய்யமுடியும். பெரியோர்களது பணிகளின் அருமை அவர் களது வாழ்நாளில் தெரியாது! போனபின்பும்தான் தெரியும். பாரதியார், திரு.வி.க. போன்றவர்களும் அப்படித்தான். அடிகளாரும் அப்படித்தான். **அடிகளார் ஒரு சகாப்தம்,** விக்கிரமசகாப்தம் போல சாலிவாகன சகாப்தம்போல குன்றக்குடி அடிகளார் சகாப்தமும் ஒரு சகாப்தம்.

அடிகளாருக்கு டாக்டர் பட்டம்

1989 டிசம்பர் 14-ஆம் தேதி சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வைரவிழா சீரும் சிறப்புமாக நிகழ்ந்தது. அப்போது அடிகளாருக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தால் கௌரவ டாக்டர் பட்டம் (D.Litt) வழங்கப் பெற்றது.

அடிகளாரின் நூல்கள்

18.09.1985-இல் கம்பத்தில் ஸ்ரீ முத்திவிநாயகர் பள்ளி களில் அடிகளாரின் மணிவிழாவை ஒட்டி ஒரு பாராட்டு விழா நிகழ்ந்தது. காலையில் நிகழ்ந்த பாராட்டு விழாவுக்கு நாம் தலைமை வகித்தோம். மாலையில் நிகழ்ந்த சமய ஒருமைப்பாட்டுக் கருத்தரங்கத்துக்கு அடிகளார் தலைமை வகித்தார். நாம் உரையாற்றினோம். கிறிஸ்துவப் பாதிரியார் ஒருவரும் இஸ்லாமியப் பேராசிரியர் ஒருவரும் உரை யாற்றினர். பாராட்டுவிழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் நூல்கள் என்றொரு பட்டியலை அச்சிட்டு விழாவிற் கலந்துகொண்டவர்களுக்கு வழங்கினர். இன்றும் பத்திரமாக அதனை நாம் வைத்திருக்கிறோம். அப்பட்டியலில் 29 நூல் களின் பெயர்கள் உள்ளன.

அடிகளாரது வரலாற்றை முதன்முதலில் நூலாக எழுதி வெளியிட்டவர் திரு. பா. சுந்தர் (ஜூன் 1987). நூலின் பெயர் "அருள்நெறித்தந்தை அடிகளார்" என்பது. சுந்தரின் எம்.பில். பட்ட ஆய்வேடு அது. அடிகளாரது நூல்கள் என்று 32 நூல்களையும், அடிகளார் முதலியோர் என்று ஒன்றையும், பிறரது தொகுப்பு நூல்கள் என நான்கையும் அகர வரிசையில் கொடுப்பதோடு சுந்தரின் நூல் நிறைவுறுகிறது.

அடிகளாரது நூல்கள்

1. அப்பர் விருந்து
2. அமுத மொழிகள்
3. அருளியலும் அறிவியலும்
4. அற வழிகாட்டி
5. எல்லோரும் வழிபடலாமா?
6. கவியரங்கில் அடிகளார்
7. குறட்செல்வம்
8. குறட்செல்வம் திறனாய்வு
9. குறள் தூது
10. சமய இலக்கியங்கள்
11. சமய மறுமலர்ச்சி
12. சிந்தனைச் செல்வம்
13. சொல்லமுதம்
14. தமிழகத்தில் அடிகளார்
15. தமிழும் சமயமும் சமுதாயமும்
16. திருவள்ளுவர்
17. திருவள்ளுவர் காட்டும் அரசியல்
18. திருவள்ளுவர் காட்டும் அரசு
19. திருவெம்பாவை – திருப்பள்ளியெழுச்சி விளக்கம்
20. நமது நிலையில் சமயம் சமுதாயம்

21. நாயன்மார் அடிச்சுவட்டில்
22. பாரதி ஒரு யுகசந்தி
23. பாரதியின் கனவுகள்
24. புனிதநெறி
25. பெரியார் ஈ.வெ.ரா. அவர்களுக்கு
    நமது விடைகளும் வினாக்களும்
26. பொங்கல் பரிசு
27. மண்ணும் விண்ணும்
28. மனம் ஒரு மாளிகை
29. முத்து மொழிகள்
30. மொழிவழிச் சிந்தனைகள்
31. வாழ்க்கை விளக்கு
32. வானொலியில்

அடிகளார் முதலியோர்

1. வள்ளுவர் உலகம்

பிறரது தொகுப்பு நூல்கள்

1. அடிகளார் உவமை நயம்
2. அடிகளார் பொன்மொழிகள்
3. ஈழத்துச் சொற்பொழிவுகள்
4. ஏழில் இருபது

1985 டிசம்பரில் வெளிவந்த திருவருட்சிந்தனை (கலைவாணி புத்தகாலயம் வெளியீடு) 380 பக்க நூல் சுந்தரின் பட்டியலில் எப்படியோ சேராது விட்டுப்போயிருக்கிறது.

அதன்பின் யாம் அறிந்தவரை பின்வரும் நூல்கள் வெளிவந்துள்ளன.

ஆலயங்கள் சமுதாய மையங்கள் – வானதி பதிப்பகம் – 1987.

வாக்காளர்களுக்கு வள்ளுவரின் அறிவுரைகள்
(32 பக்கச் சிறுநூல்)

சைவசித்தாந்தமும் சமுதாய மேம்பாடும். (இவ்விரண்டும் கலைவாணி பதிப்பகம்)

கடவுளைப் போற்று மனிதனை நினை.
(அருணோதம் வெளியீடு) 1991.

கடைசியாக வெளிவந்த **"மண்ணும் மனிதர்களும்"** அடிகளாரின் சுயசரிதம், ஆனந்தவிகடன் தொடர் கட்டுரை 1992.

பெரும்பாலும் அடிகளாரது சொற்பொழிவுகள், வானொலிப் பேச்சுகள், பல்கலைக் கழக அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நூல்களாக ஆக்கம் பெற்றுள்ளன. சில நூல்கள் நூல்களாகவே எழுதப்பெற்றவையாக இருக்கலாம். அடிகளாரது நூல்கள் பதிப்பகங்கள் பலவற்றால் வெளியிடப் பெற்றுள்ளன. அதிக நூல்களை வெளியிட்டுள்ளது கலைவாணி புத்தகாலயம் (சீனி. திருநாவுக்கரசு).

குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை

மணிவாசகர் பதிப்பகத்தின் அண்மைக்கால வெளியீடுகள்

அடிகளாரது நூல்கள் அனைத்தும் கிடைக்காத நிலை அண்மைக்காலம் வரை இருந்தது. சில கிடைத்தன. பல கிடைக்காதன. இந்நிலையில் அடிகளாரது நூல்கள் அனைத்தையும் தேடித் தொகுத்து வகை பிரித்து அடிகளாரின் நூல்வரிசை என ஒரே அளவான நூல்களாக (யூனிபார்ம் எடிஷன்களாக) வெளியிடும் பணியைச் சிதம்பரம் மணிவாசகர் பதிப்பகம் பதிப்புச்செம்மல் திரு ச. மெய்யப்பன் அவர்கள் மேற்கொண்டார். அடிகளாரின் நூல்கள் சிறியனவும் பெரியனவுமாக 54 நூல்கள் அவருக்குக் கிடைத்தன. அவற்றையெல்லாம் வகைதொகைப்படுத்திக் "குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை" என வெளியிடும் பணியைத் தொடங்கினார். பதிப்பாசிரியர் குழு எழுவரைக் கொண்டதாக அமைக்கப்பெற்றது.

முதன்மைப் பதிப்பாசிரியர்

தவத்திரு பொன்னம்பல அடிகளார்

பதிப்பாசிரியர் குழு

தமிழாகரர் தெ. முருகசாமி

நா. சுப்பிரமணியம்

எழுத்துச் செம்மல் குன்றக்குடி பெரியபெருமாள்

க. கதிரேசன்

மரு. பரமகுரு

செயலர்

பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன்.

குன்றக்குடி அடிகளார் நூல் வரிசை எனப் பதினாறு தொகுதிகள் வெளிவந்துள்ளன.

	பக்கங்கள்	அணிந்துரை	ஆண்டு
தொகுதி 1 திருக்குறள்	400	சிலம்பொலி செல்லப்பன்	டிசம்பர் 1999
தொகுதி 2 திருக்குறள்	352	சிலம்பொலி செல்லப்பன்	செப்டம்பர் 2000
தொகுதி 3 திருக்குறள்	512	தமிழண்ணல்	டிசம்பர் 2000
தொகுதி 4 திருக்குறள்	383	வா.செ. குழந்தைசாமி	செப்டம்பர் 2001
தொகுதி 5 இலக்கியம்	360	ஔவை. நடராசன்	டிசம்பர் 2001
தொகுதி 6 இலக்கியம்	472	சிற்பி பாலசுப்பிரமணியம்	டிசம்பர் 2001
தொகுதி 7 சமய இலக்கியம்	400	பேரூர் ஆதீனம்	டிசம்பர் 2001
தொகுதி 8 சமய இலக்கியம்	448	வை. இரத்தினசபாபதி	டிசம்பர் 2001
தொகுதி 9 சமய இலக்கியம்	352	தருமபுர ஆதீனம்	டிசம்பர் 2001
தொகுதி 10 சமய இலக்கியம்	382	ச.வே. சுப்பிரமணியன்	டிசம்பர் 2001
தொகுதி 11 சமயம்	440	கு. சுந்தரமூர்த்தி	டிசம்பர் 2001
தொகுதி 12 சமயம்	502	அமுதன் அடிகள்	நவம்பர் 2002
தொகுதி 13 பொது	588	ஊரன் அடிகள்	டிசம்பர் 2002
தொகுதி 14 பொது	472	இ. சுந்தரமூர்த்தி	டிசம்பர் 2002
தொகுதி 15 பொது	472	க.ப. அறவாணன்	டிசம்பர் 2002
தொகுதி 16 பொது	568	இரா. இளங்குமரன்	டிசம்பர் 2002

16 தொகுதிகளும் சேர்த்து 7200 பக்கங்கள். 13-ஆம் தொகுதிக்கு நாம் அணிந்துரை எழுதியுள்ளோம்.

அடிகளாரின் நூல்கள் எவ்வளவுக்கெவ்வளவு நாட்டில் பரவுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நாடு நலம் பெறும். பொது

நூலகங்களிலும் கல்வி நிலையங்களிலும் இன்றியமையாது இடம்பெற வேண்டிய நூல்கள் அடிகளாரின் நூல்வரிசை.

அடிகளாரின் நூல்களில் நமக்குப் பிடித்தமானவை

அடிகளாரின் நூல்கள் அனைத்துமே சிறந்தவை எனினும் நான்கு நூல்கள் நமக்கு மிகவும் பிடித்தமானவை.

1. நமது நிலையில் சமயம் சமுதாயம்
2. ஆலயங்கள் சமுதாய மையங்கள்
3. சைவ சித்தாந்தமும் சமுதாய மேம்பாடும்
4. கடவுளைப் போற்று! மனிதனை நினை!

நமது நிலையில் சமயம் சமுதாயம் என்பது அடிகளார் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு (1975). சமயம் சமுதாயம், சமய மறுமலர்ச்சி, சமய சமுதாய முறை என்று மூன்று நாள் மூன்று பொழிவுகள். அடிகளார் தம்முடைய எண்ணங்களை யெல்லாம் ஆதங்கங்களையெல்லாம் இதனுட் கொட்டித் தீர்த்திருக்கிறார். அறிஞர்களிடையே ஆற்றிய உரை. இதுவெறும் பேச்சன்று. இது ஒரு White Paper, சட்டமுன் வடிவு, சட்டமாக வரவேண்டியது என்பது எம் கருத்து. இந்நூல் சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாக வெளிவந்துள்ளது. இந்நூல் வெளிவந்த புதிதில் அடிகளாருக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் திருச்சிராப்பள்ளியில் உறையூர் மூக்கீச்சரம் பஞ்சவர்ணசாமி கோயிலில் நிகழ்ந்தது. எம்மையும் பேச அழைத்திருந்தார்கள். அடிகளாரின் திருவாசகப் பணிகளுக்காக எடுக்கப்பெற்ற பாராட்டுவிழா. தருமபுர ஆதீனம் தலைமை. பலர் பாராட்டிப் பேசினர். திருவாசகப் பணி போன்ற பழம்பெரும் பணிகளை முற்காலப் பணிகளைப் புகழ்ந்து பாராட்டிப் பேசினார்களே தவிர ஒருவராவது அடிகளாரின் நிகழ்காலப் பணிகளைக் குறித்துப் பேசவில்லை. நம்முடைய பேச்சில் நாம் அடிகளாரின் ''நமது நிலையில் சமயம் சமுதாயம்'' என்ற நூலைத் தலைக்குமேல் உயர்த்தி அவையோருக்குக் காட்டி, ''யாரை எப்போது எதற்காக எப்படிப் பாராட்டுவது என்று உங்களுக்

கெல்லாம் தெரியவில்லை, காரணம் சமய அன்பர்களுக்குச் சமய சிந்தனை உள்ள அளவுக்குச் சமுதாய சிந்தனை இல்லை, அடிகளாரைப் பாராட்ட வேண்டுமானால் இன்று இதற்காகத் தான் பாராட்ட வேண்டும், இது எல்லாப் புத்தகமும் போல சாதாரணப் புத்தகம் அன்று, இது ஒரு ஒயிட் பேப்பர், வெள்ளை அறிக்கை, சட்ட முன் வடிவு, சட்டமாக வர வேண்டியது இந்நூலின் 50 படிகளையாவது வாங்கி 50 அறிஞர்களுக்கு அனுப்பி இதனை நடைமுறைப்படுத்தக் கருத்துக் கேட்க வேண்டும்'' என்று கூறினோம். நூலின் நமது படியில் அங்கங்கே பல இடங்களில் அடிக்கோடிட்டு ஓரங் களில் குறிப்புகள் எழுதியிருந்தோம். சில குறிப்புகள் இரகசியக் குறிப்புகளும் கூட. அப்படியைத் தலைமை வகித்த தருமபுரம் சந்நிதானம் பார்க்கக் கேட்டு வாங்கிக் கொண்டது. நாம் இந்நூலை வாங்குங் காலத்தில் ஐந்து படிகளை வாங்கினோம். நமது இப்பேச்சு பக்தர்களேமிகுந்த அவையில் எவ்வளவு பேருக்குப் புரிந்ததோ புரியவில்லையோ?! ஒருவருக்கு நன்கு புரிந்திருக்கிறது. அவர்தான் அடிகளாரின் செயலாளர் அறிவார்ந்த அன்பர் மரு. பரமகுரு. நமது பாராட்டை ஓரிடத்தில் பொருத்தமாகக் குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

ஆலயங்கள் சமுதாய மையங்கள் : அடிகளாரின் பொழிவுத் தொகுப்பு. வானதி பதிப்பக வெளியீடு (1987). தமிழக அரசின் முதல் பரிசு பெற்ற நூல். 15.01.1989-இல் பரிசளிப்பு.

சைவசித்தாந்தமும் சமுதாய மேம்பாடும் : அடிகளார் மதுரை காமராசர் பல்கலையில் ஆற்றிய அறக்கட்டளைப் பொழிவு. கலைவாணி புத்தகாலய வெளியீடு (1990).

கடவுளைப் போற்று! மனிதனை நினை! : அடிகளாரின் பேச்சு எழுத்துத் தொகுப்பு. ''கடவுளை மற, மனிதனை நினை'' என்று பெரியார் பிரச்சாரம் செய்தார். அதற்கு மாற்றாக அடிகளார் ''கடவுளைப் போற்று! மனிதனை நினை!'' என்று இந்நூலை எழுதினார். அருணோதயம் வெளியீடு (1991) அதன் 1000-ஆவது புத்தகமாக வெளி வந்தது.

சமயத் தலைவர்களில் சமுதாய சிந்தனையாளர் மிகவும் குறைவு. அவர்களில் தலையாயவர், முதல்வர் அடிகளார். நம் காலத்துச் சமயத் தலைவர்களில் அடிகளாரிடம் சமுதாயச் சிந்தனை இருந்த அளவுக்கு வேறு யாரிடமும் இல்லை, இல்லை, இல்லவே இல்லை. ''நான் இந்து அல்ல'' என்று பத்திரிகைக்குப் பேட்டியளித்தவர் அடிகளார். ''இந்து இளைஞர் மன்றம்'' கண்டவரும் அடிகளார். பெரியாரைப் புரிந்து கொள்வது எப்படிக் கடினமானதோ, அப்படித்தான் அடிகளாரைப் புரிந்துகொள்ளுவதும் கடினமானது. **நாத்திக உலகின் நோக்கில் அடிகளார் மிதவாதி. ஆத்திக உலகின் நோக்கில் அடிகளார் தீவிரவாதி.** அடிகளாருக்கு இரண்டு பக்கமும் இடி இருந்தது. இருப்பினும் அடிகளார் வென்றார்.

அடிகளார் ஆற்றிய அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

1. **நமது நிலையில் சமயம் சமுதாயம்.** சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1975-இல் ஆற்றிய சொர்ணம்மாள் அறக் கட்டளைச் சொற்பொழிவு.
2. **திருவள்ளுவர்,** (திருவள்ளுவர் – வாழ்வியல் – சமயவியல் – அரசியல்) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1979-இல் ஆற்றிய சொர்ணம்மாள் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு.
3. **சைவ சித்தாந்தமும் சமுதாய மேம்பாடும்.** மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய ஏ.பி.சி. வீரபாகு அறக் கட்டளைச் சொற்பொழிவு.

இம்மூன்றும் நூல்களாக வெளிவந்துள்ளன. முதல் இரண்டும் பல்கலைக்கழக வெளியீடுகள். மூன்றாவது கலைவாணி புத்தகாலய வெளியீடு. இவை அறிவுலகத்திற்கு அடிகளார் அளிக்கும் விருந்து. இன்று காணப்பெறும் சமய சமுதாய சீர்கேடுகளுக்கு மருந்து. சமயம், சமுதாயம், அரசியல் ஆகிய மூன்றிலும் பணியாற்றுவோர் இவற்றைப் படிப்பது, அடிகளாரின் நூல்கள் அனைத்தையுமே படிப்பது நல்லது.

அடிகளாரைப் பற்றிய நூல்கள்

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீன வரலாறு இரண்டு நூல்கள் வெளிவந்துள்ளன. 1960–இல் முதன்முதலில் வெளி வந்தது தமிழாசிரியர் வித்துவான் சு.சுவர்ணகாளீச்சுரனால் எழுதப்பெற்றது. தமிழ்ப்புலவரும் சைவப்புலவருமான சுவர்ணாகாளீசுவரன் நன்றாக எழுதியுள்ளார். சுவர்ண காளீசுவரன் எழுதியதைவிட விரிவாக ஆதீன வரலாறு மரு. பரமகுரு அவர்களால் எழுதி 01.09.1990–இல் வெளியிடப் பெற்றது. பரமகுரு அடிகளாரின் செயலாளர். ஆதீனத்தின் தலைமைப் பணியாளர். அடிகளாரின் வெற்றிக்குரிய காரணங்கள் பலவற்றில் **பரமகுரு** செயலாளராக அமைந்ததும் ஒன்று. ஆதீன வரலாற்றை நன்றாக எழுதியுள்ளார்.

அருள்நெறித்தந்தை அடிகளார் என்று பா. சுந்தர் எழுதிய நூல் 1987–இல் வெளிவந்தது. எம்.பில். பட்ட ஆய்வேடு. அடிகளார் சிவப்பேறு பெறுவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு 1992–இல் ஆனந்தவிகடனில் **''மண்ணும் மனிதர்களும்''** என்ற தலைப்பில் தன் வரலாற்றை எழுதினார்கள்.

அடிகளார் சிவப்பேறெய்தியபின் நாமறிந்தவரை ஆறு வரலாறுகள் வெளிவந்துள்ளன. **“அடிகளார் ஓர் உறவுப்பாலம்''** வானதி பதிப்பக வெளியீடு 1966. அடிகளார் தொண்டில் உறவு கொண்ட அன்பர் பலரது கட்டுரைகளின் தொகுப்பு. தொகுப்பாசிரியர்கள் டாக்டர் மி. நோயல் (காரைக்குடி மைய மின்வேதியியல் நிலயத்தின் விஞ்ஞானி) மரு. பரமகுரு. **“நெஞ்சம் மறப்பதில்லை''** – அமுதன் அடிகள், திருச்சிராப்பள்ளி. **''தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார்''**– சி. நடராசன் (பொறுப்பாசிரியர், முரசு மலர், மாலை முரசு – மதுரை) அருள்நெறித் திருப்பணி மன்ற வெளியீடு 1966. **''தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழகத்தின் ஆன்மிக வழிகாட்டி''** பொன்னீலன். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு (1997). **''குன்றக்குடி அடிகளார் பணிகள்''** - முனைவர் பா. சுந்தர் - முனைவர் பட்ட ஆய்வுநூல் - சுமன் வெளியீடு (2003). **''அற்புதத் துறவி அடிகளார்''** - பேராசிரியர்

சொ. சேதுபதி, கபிலன் பதிப்பக வெளியீடு (2008). எல்லாருமே நன்றாக எழுதியிருக்கிறார்கள். அடிகளாரது திருவுள்ளத்தைப் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார்கள். பொது நூலகங்களிலும் கல்வி நிலையங்களிலும் இன்றியமையாது இடம்பெற வேண்டிய நூல்கள்.

அடிகளார் சிவப்பேறு

வாழ்நாளெல்லாம் சைவத்துக்காகவும் தமிழுக்காகவும் தமிழ்ச் சமுதாயத்துக்காகவும் ஓய்வின்றி ஓடிஓடி உழைத்த அடிகளார் இறுதிக்காலத்தில் சில நாட்கள் உடல்நலம் குன்றப் பெற்றார்கள். அப்போதும் இருந்த இடத்திலிருந்து பணியாற்றினார்கள். 15.04.1995-இல் 70-ஆம் அகவையில் சிவப்பேறு பெற்றார்கள்.

அடிகளார் சிவப்பேறெய்திய செய்தியைக் கேட்டு நாடே குன்றக்குடியில் திரண்டது. அமைச்சர்கள் அதிகாரிகள் பொதுமக்கள், ஆதீனகர்த்தர்கள் வந்து இறுதி மரியாதை செய்தார்கள். கிறிஸ்துவப் பாதிரியார்கள் பலர் வந்து கண்ணீர் மல்க இறுதிப் பிரார்த்தனை செய்தனர். அடிகளார் பட்டத்திற்கு வந்த அடுத்த ஆண்டே பல்லக்கில் பட்டணப் பிரவேசம் செய்வதை நிறுத்திவிட்டார்கள். பலகாலம் பயன் படுத்தப் பெறாமல் தூசடைந்த பல்லக்கு வெளியே கொண்டு வரப்பெற்றுத் தூசுதட்டி அடிகளாரின் பூத உடலை ஊர்வலமாக எழுந்தருளச் செய்யத் தான் பயன்பட்டது. தருமபுர ஆதீனம் குருமகாசந்நிதானத்தின் நேர் மேற்பார்வையில் வழிபாட்டுக்குப் பின் முறைப்படி அடிகளாரின் பூதஉடல் ஆதீனத்திற்கு எதிரிலேயே ஒரு தனி வளாகத்தில் குருமூர்த்தம் (ஞானசமாதி) செய்யப் பெற்றது.

பத்திரிகைகளெல்லாம் பக்கம் பக்கமாகப் படங்களுடன் இரங்கல் செய்தியை எழுதின, தலையங்கம் எழுதின. அதன் பின்னும் பலநாள் பல்வேறு துறைகளையும் சார்ந்த பெருமக்கள் பற்பலர் வந்து வந்து குருமூர்த்தத்தைக் கண்டு வழிபட்டு இரங்கலைத் தெரிவித்துச் சென்றார்கள். தமிழக சட்டப்

பேரவையும் புதுச்சேரி சட்டப்பேரவையும் இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றி மரியாதை செய்தன.

அடிகளார் குருபூசை

அடிகளார் சிவப்பேறு பெற்ற பத்தாம் நாள் 24.04.1995–இல் அடிகளாரின் குருபூசை விழா குன்றக்குடி ஆதீனத் திருமடத்தில் உரிய சிறப்புகளுடன் நிகழ்ந்தது. இந்து சமய ஆதீனகர்த்தர்கள் அருளாளர்கள் பலரோடு கிறிஸ்துவ இஸ்லாமிய சமயத்தலைவர்கள் பலரும் கலந்துகொண்டார்கள். அன்றே தவத்திரு பொன்னம்பல அடிகளார் அடிகளாரின் வாரிசாகப் பிற்றோன்றலாக, 46–ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளும் விழாவும் நிகழ்ந்தது. நாமும் கலந்து கொண்டு புகழுரையும் வாழ்த்துரையும் ஆற்றினோம்.

அடிகளார் மணிமண்டபம்

அடிகளாருக்கு அருளாலயம் மட்டும் போதாது. ஒரு மணி மண்டபமும் வேண்டும் என்பது அன்பர்களின் விருப்பம் போலும், ஆதீன மடத்தின் பிரதான கட்டிடத்திற்கு எதிரிலேயே அருளாலயத்தை அடுத்துத் தனியாக ஒரு மண்டபமும் கட்டப் பெற்றது. இதன் அமைப்பில் அன்பர்களது பங்களிப்போடு அரசின் பங்களிப்பும் பெரும்பகுதி உண்டு. அருளாலயம் சமயவழியில் வழிபாட்டுக்கு என்றால், மணிமண்டபம் சமுதாயப் பணிகளுக்கு எனலாம். அடிகளார் மணிமண்டபம் அடிகளாரிடம் பேரன்பும் பெருமதிப்பும் கொண்ட முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் 12.03.2001–இல் சபாநாயகர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் திறந்து வைக்கப் பெற்றது. அடிகளாரது வாழ்வில் நிகழ்ந்த அரிய பல நிகழ்ச்சிகளின் படங்கள் மணிமண்டபத்தில் வைக்கப் பெற்றுள்ளன. அனைவரும் காணவேண்டிய அரிய காட்சி.

அடிகளார் அருளாலயம்

அடிகளாரின் ஞானசமாதியின் மீது அடிகளாரின் குருமூர்த்தக் கோயில் அடிகளார் அருளாலயம் என்ற பெயரில் அன்பர்களின் காணிக்கைப் பொருளைக் கொண்டு உரிய

முறையில் அழகாகக் கட்டப்பெற்று 11.02.2002–இல் திருக்குட நன்னீராட்டு விழாச் செய்யப்பெற்றது. அடிகளாரின் பூத உடல் குன்றக்குடியில் அடிகளார் அருளாலயத்தில் கோயில் கொண்டுள்ளது. அடிகளாரின் புகழுடல் உலகெங்குமுள்ள பல்லாயிரம் தமிழன்பர்கள், சைவமெய்யன்பர்கள், அருள்நெறி அன்பர்களின் உள்ளங்களில் குடிகொண்டுள்ளது. அடிகளார் புகழ் வாழ்க!

46–ஆம் பட்டம் குருமகாசந்நிதானம்

திருவருள்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள்

(தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்)

இப்போது குருமகாசந்நிதானமாக 15.04.1995 முதல் எழுந்தருளி விளங்குபவர்கள்

அடிகளாருக்குப் பொருத்தமான வாரிசாகப் பொன்னம்பல தேசிகர் வாய்த்தார். பொன்னம்பல தேசிகரின் இயற்பெயர் கணேசன். பிறந்தநாள் 09.07.1964. பெற்றோர் கே.எஸ். சுப்பிரமணிய தேசிகர், முத்துலட்சுமி அம்மையார். பாட்டனார் சங்கரகுமாரதேசிகர் குன்றக்குடி ஆதீனத்தின் மதுரைக் கிளை மடத்தின் பொறுப்பாளராக (ஏஜண்ட் ஆக)ப் பணியாற்றியவர். பரம்பரையாக மூன்று தலைமுறைகளாகப் பணியாற்றி வரும் குடும்பம். தந்தையார் சுப்பிரமணிய தேசிகரும் மதுரைக் கிளைமடத்தில் பொறுப்பாளராகப் பணியாற்றினார். சுப்பிரமணிய தேசிகரின் இரண்டாவது மகனார் கணேசன் மதுரை யாதவர் கல்லூரியிற் படித்து பி.எஸ்.ஸி பட்டம் பெற்றவர். அதன் மேல் பி.எட். பட்டமும் பெற்றார். எல்.ஐ.சி. ஏஜண்டாகவும், பணியாற்றிக் கொண்டிருந்தார்.

ஆதீனத்திற்கு மூன்று தலைமுறைகளாகப் பணியாற்றி வரும் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர் திரு கணேசன் தமக்குப் பொருத்தமான வாரிசாக இருக்க இயலும் என்று அடிகளார் கருதினார். பெற்றோர் இசைவையும் கணேசனின் இசைவையும் பெற்று 22.06.1993–இல் கணேசனுக்கு உரிய தீட்சைகளைச் செய்து காவி உடையளித்துக் கந்தசாமித்

தம்பிரான் என்னும் தீக்கைத் திருப்பெயரும் வழங்கித் தம்பிரான் ஆக்கியருளினார்கள். ஆதீனக் கிளைமடத்தின் ஏஜண்டாக இருந்த இளைஞர் கணேசன் ஆதீனத்தின் தம்பிரானாகக் கந்தசாமித் தம்பிரானாக ஆனார். அடிகளாரும் தருமபுர ஆதீனத்தில் கந்தசாமித் தம்பிரான் என்ற பெயருடன்தான் விளங்கினார். கந்தசாமித் தம்பிரான் என்ற பெயருடன்தான் குன்றக்குடிக்கு வந்தார். அதே ராசியான பெயர் இளவரசாக வருபவருக்கு இடப்பெற்றது. 03.07.1993–இல் தவத்திரு கந்தசாமித்தம்பிரான் சுவாமிகளுக்குப் பொன்னம்பல தேசிகர் என்ற பெயருடன் அடிகளார் இளவரசுப் பட்டம் வழங்கி யருளினார்கள். சின்னப்பட்டம் வழங்கியருளப் பெற்ற பொன்னம்பல தேசிக சுவாமிகள் அடிகளாரிடம் நேர்முக மாகவே எல்லாப் பயிற்சிகளையும் பெற்றார்.

அடிகளார் 15.04.1995–இல் சிவப்பேறு பெற்றபின் சின்னப்பட்டம் பொன்னம்பலதேசிகர் தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் என்ற திருப்பெயருடன் 46–ஆம் பட்டம் குருமகாசந்நிதானமாக எழுந்தருளி அருளாட்சி புரிந்து வருகிறார்கள்.

தோற்றம் நடை உடை பாவனை சொல் செயல் பேச்சு எழுத்து என்று எல்லாவற்றிலும் அப்படியே அடிகளாரைப் பின்பற்றி வருகிறார்கள். அடிகளாருக்குச் சரியான வாரிசு என்பதை நிருபித்து வருகிறார்கள். ''அடிகளார் வழங்கிய அருட்கொடைகளில் தலையாயது அவரது வாரிசு பொன்னம்பல அடிகளார் ஆவார்'' என்று அன்பர் ஒருவர் தினமணி இதழுக்கு எழுதிய ஆசிரியர் கடிதத்திற் குறிப்பிட்டிருப்பது முற்றிலும் உண்மை.

அடிகளாரின் பல்வேறு பணிகளையும் அடிகளார் காட்டிய வழியில் அப்படியே தொடர்கிறார் பொன்னம்பல அடிகளார். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? என்பது பழமொழி. புலியால் கண்டெடுக்கப்பட்டது பூனையாகுமா? என்று நாம் சிறிது மாற்றிக் கொள்ளலாம். குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் தொன்றுதொட்ட வரலாற்றில் இவர்கள் 46–ஆவது

குருமகாசந்நிதானம். ஆனால் ஆதீனத்தின் நவீனகால வரலாற்றிலோ இவர் இரண்டாம் குன்றக்குடி அடிகளார். அப்படி அழைத்தால் மரபின் தொடர்ச்சி விளங்காது. ஆதலின் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் என்றே வழங்குகிறோம்.

அடிகளார் காலத்தில் 1988–இல் ஏப்ரல் 9, 10 தேதிகளில் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனமும் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகமும் இணைந்து "திருக்கோயில் சமயம் கலை சமுதாய ஆய்வுக் கருத்தரங்கு" என்றொரு கருத்தரங்கை நடத்தின. ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்துக் "கட்டுரைக் கோவை" என்றொரு மலரும் வெளியாயிற்று.

பொன்னம்பல அடிகளாரும் அதேபோன்று ஒரு திருக்கோயில் கருத்தரங்கத்தைப் பிள்ளையார்பட்டியில் 1997 ஜனவரியில் 3,4,5 தேதிகளில் நடத்தியருளினார்கள். குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம், காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகம், பிள்ளையார்பட்டி சிவநெறிக்கழகம் ஆகிய மூன்றும் சேர்ந்து கருத்தரங்கை நடத்தின. கட்டுரைகள் தொகுக்கப்பெற்று "ஆய்வுக்கோவை" என நூலாக அச்சிடப்பெற்று வழங்கப் பெற்றது.

1999 ஏப்ரலில் பொன்னம்பல அடிகளார் கார் விபத்து ஒன்றில் அகப்பட்டு இலேசாகக் காயமடைந்து மருத்துவம் செய்துகொள்ளும் நிலை ஏற்பட்டது. அப்போது இராமேஸ்வரம் பகுதியில் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு காரைக்குடி வந்த காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் குன்றக்குடிக்கு ஆதீனமடத்திற்கு எழுந்தருளிப் பொன்னம்பல அடிகளாரைச் சந்தித்து நலம் விசாரித்து அளவளாவிச் சென்றார்கள். சங்கராசாரிய சுவாமிகள் குன்றக்குடி ஆதீனத்திற்கு வந்தது இதுவே முதல்முறை. சங்கராசாரியார் பொன்னம்பல அடிகளார் சந்திப்பு இதுவே முதல் சந்திப்பு.

குன்றக்குடி பொன்னம்பல அடிகளாருக்கு இது 14-ஆவது ஆட்சியாண்டு. பட்டத்திற்கு வந்து இப்பதினான்கு ஆண்டுகளில் பல்வேறு சாதனைகளைப் புரிந்திருக்கிறார். அடிகளாரின் சாதனைகளைத் தொடர்கிறார். புதிய சாதனை

களையும் தொடங்கிச் செய்து வருகிறார். அவற்றையெல்லாம் ஆதீனகர்த்தர், முதலாகச் சில தலைப்புகளில் சுருக்கமாகக் காண்போம்.

ஆதீனகர்த்தர்

அடிப்படையில் அடிகளார் ஓர் ஆதீனகர்த்தர். 44 பட்டங்கள் வரை ஆதீனகர்த்தர் என்ற முறையில் மட்டுமே பேரும் புகழும் இருந்தன. 45-ஆம் பட்டம் தொடங்கி ஆதீனத்தையும் விஞ்சி ஆதீனகர்த்தர்களின் பேரும்புகழும் மேலெழுந்து விளங்குவதாயின. குன்றக்குடி அடிகளார் அப்படி. அவருக்குப் பின் அவரது பிற்றோன்றல் பொன்னம்பல அடிகளாரும் அப்படியே. இவ்விருவரும் ஆதீனகர்த்தர்கள் என்பதோடு மட்டுமன்றி, அப்பாலும் ஒரு தனிப்பேர் புகழுடன் விளங்குகிறார்கள். குன்றக்குடி அடிகளாருக்குப் பின் 46-ஆம் பட்டம் ஆதீனகர்த்தராக, குருமகாசந்நிதானமாகப் பொன்னம்பல அடிகளார் அவர்கள் ஆதீன ஆட்சியையும் பணிகளையும் குறை யின்றி நிறைவாகச் செம்மையாகச் செய்து வருகிறார்கள்.

ஆதீனக் கோயில்களின் பரம்பரை அறங்காவலர்

புகழ்பெற்ற முருகன் தலமாகிய குன்றக்குடி, தேவாரப் பாடல் பெற்ற தலங்களாகிய பிரான்மலை (கொடுங்குன்றம்), திருப்புத்தூர் உட்பட ஐந்து கோயில்கள் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் ஆளுகைக்குட்பட்டவை. ஐந்துகோயில் தேவஸ்தானம் என்றே ஆதீனத்திற்கு ஒரு பேருண்டு. ஐந்து கோயில்களுக்கும் ஆதீனகர்த்தரே பரம்பரை அறங்காவலர். அவ்வகையில் அடிகளாருக்குப்பின் பொன்னம்பல அடிகளார் ஐந்துகோயில்களையும் நிர்வாகம், விழாக்கள், வழிபாடுகள், திருப்பணி ஆகிய அனைத்து வகையிலும் சிறப்பாக நடத்தி வருகிறார்கள்.

கல்வி நிறுவனங்கள்

தொடக்கப்பள்ளிகள் 5, நடுநிலைப்பள்ளிகள் 2, உயர் நிலைப் பள்ளிகள் 2, மேல்நிலைப்பள்ளிகள் 4, தொழிற் பயிற்சி மையங்கள் 2, தொழிற் பள்ளிகள் 2, கலைக்கல்லூரி 1,

மகளிர் கல்வியியல் கல்லூரி 1 ஆகப் 19 கல்விநிறுவனங்கள் ஆதீனத்தின் கல்வி அறக்கட்டளையின்கீழ் செயற்பட்டு வருகின்றன.

இவற்றுள் குன்றக்குடியில் நடைபெற்றுவரும்

1. தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவுத் தொழிற்பயிற்சி மையம்
2. தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவுத் தொழிற்பள்ளி
3. தவத்திரு குன்றக்குடி அடிகளார் மகளிர் கல்வி யியல் கல்லூரி

ஆகிய மூன்றும் தம் குருநாதர் குன்றக்குடி அடிகளார் நினைவாகப் பொன்னம்பல அடிகளாரால் புதிதாக நிறுவப் பெற்றவை.

தொழிற்பயிற்சி மையம் (Industrial Training Centre - ITC) மத்திய அரசின் (NCVT - National Council For Vocational Training) அங்கீகாரம் பெற்றது. தொழிற்பள்ளி (Industrial School - I-S) மாநில அரசின் (SCVT - State Council For Vocational Training) அங்கீகாரம் பெற்றது. இவ்விரண்டில் தொழிற் பயிற்சி மையம் +2 தேர்ச்சி SSLC தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஓராண்டு இரண்டாண்டு கம்ப்யூட்டர் ஆபரேடிங், புரோகிராமிங், எலக்ட்ரானிக் மெக்கானிக், மோட்டார் வெகிக்கிள் மெக்கானிக் பயிற்சியளிக்கிறது. தொழிற்பள்ளி 10-ஆம் வகுப்பு 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர் தேர்ச்சி பெறாதவர் ஆகியவர் களுக்கு 6 மாதம் 1 வருடம் ஹவுஸ் வயரிங், பிளம்பிங், பிட்டர், வெல்டிங் பயிற்சிகளை அளிக்கிறது. எல்லா வற்றிற்கும் குறைந்த கட்டணமே. விடுதி வசதி உண்டு. தங்குமிடம் இலவசம். குன்றக்குடியிலும் சுற்றுப்புற ஊர் களிலும் உள்ள, மேற்படிப்புப் படிக்க வசதியும் வாய்ப்பு மற்ற மாணவர்களுக்குத் தொழிற்பயிற்சி பெற்று வாழ்க்கை வசதியை அமைத்துக்கொள்ள இவ்விரு தொழிற் பயிற்சி நிறுவனங்களும் மிகப் பயனுள்ளவையாக உள்ளன.

மகளிர் கல்வியியல் கல்லூரி பொன்னம்பல அடிகளாரின் அண்மைக்காலப் பணிகளுள் மிகவும் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்துடன் இணைப்புப் பெற்றது. பட்டப்படிப்பை முடித்த மகளிருக்கு ஆசிரியப் பயிற்சியை வழங்குவது. இது மகளிருக்கு மட்டுமே நடத்தப்படும் கல்வியியல் கல்லூரி. அரசு நிர்ணயித்த கல்விக்கட்டணம் மட்டுமே பெறுகிறார்கள். நன்கொடை பெறுவதில்லை. கல்வி வணிகமயமாகிவரும் இந்நாளில், தொண்டு நோக்கில் பொன்னம்பல அடிகளார் தொடங்கி நடத்திவரும் இக்கல்விப் பணி பெரிதும் பாராட்டத்தக்கது. பின்தங்கிய பிரதேசத்தில் வரட்சிமிக்க புன்செய்ப்பூமியில் கல்வியை (அதுவும் மகளிர் கல்வியை)யும் தொழிலையும் அடிகளார் வளர்க்கிறார்.

மக்கள் கல்வி நிறுவனம் (ஜன்சிக்ஷான் சன்ஸ்தான் - Janshikshan Sansthan) என்றொரு நிறுவனம் - இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறையின் ஆதரவுடன் - அடிகளார் நடத்தி வருகிறார். கிராமம் மற்றும் நகர்ப்புற மக்களுக்கு, ஓரளவு படித்தவர்களுக்கு, எழுத்தறிவு இல்லாதவர்களுக்கு இஃதோர் பெரிய வாய்ப்பு. சுயஉதவிக்குழுக்கள், கிராமப்புற இளைஞர்கள், பெண்கள் பயன்படுத்திக் கொள்வதற்கு ஏற்றவாய்ப்பு, தன்முனைப்பும் தன்னார்வமும் மட்டுமே தகுதி. குறைந்த கட்டணத்தில் ஒருமாதம் முதல் 6 மாதம் வரை குறுகிய காலப் பயிற்சி. தையல் பயிற்சி, கணிப்பொறிப் பயிற்சி, எலக்ட்ரிக்கல் வயரிங் பயிற்சி, வீட்டு உபயோகப் பொருள்கள் பழுதுபார்த்தல், உற்பத்தி, வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை சார்ந்த பயிற்சிகள் இப்படி 30 வகைப்பட்ட பயிற்சிகள்.

வேளாண் அறிவியல் நிலையம் (கிருஷி விஞ்ஞான் கேந்திரா Krishi Vigyan Kendra) என்ற ஒன்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாய் இயங்கி வருகிறது. வேளாண்மை, கால்நடை, காய்கறிகள் சாகுபடி, தரிசு நிலமேம்பாடு முதலிய பல

துறைகளில் இது கிராம மக்களுக்கு மிகவும் பயன்படு வதாகச் செயலாற்றி வருகிறது.

குன்றக்குடி எப்படி இருக்கிறது? குன்றக்குடியில் என்னென்ன நடக்கிறது? என்பதையெல்லாம் நேரில் கண்டு, கள ஆய்வு செய்து, அறிய வேண்டும் என்று அண்மையில் 28.09.2008-இல் நாம் குன்றக்குடிக்குச் சென்றோம். கண்டறி யாதன கண்டோம்! களி கொண்டோம்! இப்படி எல்லா ஊர் களிலும் நடந்தால், இப்படி எல்லா ஆதீனங்களும் செய்தால், நாடு எப்படியோ இருக்குமே! என்று எண்ணினோம். எல்லா வற்றையும் சொல்ல (எழுத) இடம் போதாது. ஆதலின் இவ்வளவில் நிறைவு செய்கிறோம்.

''மக்கள் பணியே மகேசன் பணி'' என்று எல்லாரும் சொல்கிறார்கள். ஆனால் செய்வதில்லை. மகேசனுக்குச் செய் கிறார்கள், மக்களுக்குச் செய்வதில்லை. மக்களை மறந்து விடுகிறார்கள். மக்கள் பணியே மகேசன் பணி என்று செய்தவர் குன்றக்குடி அடிகளார். மக்கள் பணி மகேசன் பணி ஆகிய இரண்டையுமே செய்தவர். மக்கள் பணி செய்கிறேன் என்று, மகேசன் பணியை விட்டுவிடவில்லை. குன்றக்குடி அடிகளார் செய்ததைப் பொன்னம்பல அடிகளாரும் செய்து வருகிறார். பழையனவற்றைப் புதுப்பித்தும் பெருக்கியும், முற்றிலும் புதிதாகவே சிலபலவற்றை உண்டாக்கியும் அடிகளார் வழியில் வீறுநடை நடந்து வருகிறார்.

புதிதாகத் தொடங்கியுள்ள குன்றக்குடி அடிகளார் மகளிர் கல்வியியல் கல்லூரியைப் பல இலட்சம் ரூபாய் செலவில் பெரிய கட்டிடங்களுடன் பெரிய அமைப்பாக உருவாக்கியுள்ளார்.

சமுதாயப் பணிகள்

உள்ளூர் அளவில் குன்றக்குடி கிராம திட்டக்குழுவின் தலைவராக இருந்து பணியாற்றுகிறார்கள். புயல், வெள்ளம், தீவிபத்துகள் போன்ற இயற்கை உற்பாதங்கள் நேரும் சமயங்களில் நாடெங்கும் சென்று துயர்துடைப்புப் பணி

யாற்றுகிறார்கள். மதக்கலவரங்கள் எங்கெங்கு நேரிடுகிறதோ அங்கெல்லாம் சென்று சமய நல்லிணக்கப் பணியாற்று கிறார்கள். இவ்வகையில், சமுதாயப் பணியில் மற்ற எல்லா ஆதீனங்களையும்விடத் தீவிரமாகப் பணிசெய்வது குன்றக்குடி ஒன்றே, குன்றக்குடி அடிகளார்களே.

திருக்கூட்டம், பேரவைகள்

அருள்நெறித்திருக்கூட்டம்

அடிகளார் நெறி அருள்நெறி. நாத்திக இருள் (மருள்) வளர்ந்தோங்கத் தொடங்கிய காலத்தில் அடிகளார் அருள்நெறித் திருக்கூட்டங் கண்டார். தாம் தொடங்கிய தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி களுக்கு அருள்நெறிப் பெயர்களை இட்டார். அருள்நெறிக் கொடி என்று ஒரு கொடியே கண்டார். அந்நாளில் அடிகளாரின் பணிகளுக்கெல்லாம் வலிவும் பொலிவும் ஊட்டியது அவர்கள் கண்ட அருள்நெறித் திருக்கூட்டமே. அருள்நெறித்திருக்கூட்டம் மாநில அமைப்பு. அதன் தலைவர் பொன்னம்பல அடிகளார் அவர்களே.

திருக்குறள் பேரவை

அடிகளார் திருக்குறட் பற்றாளர். அடிகளார் பேச்சுகளில் திருக்குறளைப் பற்றியனவே மிகுதி. அடிகளார் செயல்கள் திருக்குறளைப் பின்பற்றியதாகவே இருக்கும். மாநில அளவில் அடிகளாரால் தொடங்கப்பெற்ற திருக்குறள் பேரவை, இன்று பொன்னம்பல அடிகளார் காலத்தில் உலகத் திருக்குறள் பேரவையாக வளர்ந்திருக்கிறது. அதன் தலைவர் பொன்னம்பல அடிகளாரே. செயலாளர் திருக்குறள் நா. சண்முகனார். உலகத் திருக்குறள் பேரவையின் மூன்றாம் மாநாடு இரத்தினகிரியில் 2009 ஜுன் 20; 21 ஆகிய இரு நாள்களில் மிகப் பெரிய மாநாடாக நிகழ்ந்தது. இரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள் செய்திருந்த ஏற்பாடுகள் மிகப் பெரிய அளவில் இருந்தன. நாமும் கலந்து கொண்டோம்.

திருவருள் பேரவை

சமய நல்லிணக்கப் பணிகளுக்கென்றே அடிகளாரால் அமைக்கப்பெற்றது திருவருள் பேரவை. இதில் இந்து, கிறித்துவம், இஸ்லாம் ஆகிய முச்சமயத்தோரும் உண்டு. கிறிஸ்துவப் பாதிரியார்கள் உண்டு. இஸ்லாமியப் பெரியோர்கள் உண்டு. அடிகளார் மாநிலப் பொதுச்செயலாளராக இருக் கிறார்கள். தீபாவளி, கிறிஸ்துமஸ், ரம்ஜான் பண்டிகைகள் கொண்டாடப் பெறும். தஞ்சாவூரிலும் புதுக்கோட்டை யிலும் கிளைகள் உள்ளன.

ஆதீன இதழ்கள்

''மக்கள் சிந்தனை'', ''அறிக அறிவியல்'' என்று திங்களிதழ்கள் இரண்டு ஆதீன வெளியீடுகளாக வருகின்றன. மக்கள் சிந்தனை சமய சமுதாய இலக்கியத் திங்களிதழ். அறிக அறிவியல் என்பது விஞ்ஞான ஆய்வுகளைத் தமிழில் கொணர்ந்து தமிழுக்கு ஆக்கஞ் செய்வதாகும். காரைக்குடி யில் மைய மின்வேதியியல் ஆய்வக வளாகத்தில் அடிகளாரால் ஆய்வக ஆதரவுடன் தொடங்கப் பெற்றது சுதேசி விஞ்ஞான இயக்கம். அதன்மூலம் அறிக அறிவியல் வெளியிடப் பெறு கிறது. அடிகளார் சமயஞானியும் சமுதாய ஞானியும் சமூக விஞ்ஞானியும் ஆவார். மக்கள் சிந்தனை, அறிக அறிவியல் என்ற பெயர்களே குன்றக்குடி அடிகளார்களின் சமுதாய உணர்வையும் தனித்தன்மையையும் காட்டும். அறிவியல் இதழ் நடத்தும் ஒரே ஆதீனம் குன்றக்குடி ஆதீனம்தான். அறிவியல் கண்ணோட்டம் சமுதாயக் கண்ணோட்டம் உடைய வர்கள் குன்றக்குடி அடிகளார்களே. சமுதாயத்தில் குப்பை கூளங்களாக இருப்பவர்களை மணிகளாக (மாணிக்கங் களாக) ஆக்க உழைப்பவர்கள்.

பொன்னம்பல அடிகளார் வகிக்கும் பொதுநிலைப் பொறுப்புகள்

1. தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் உயர்நிலை ஆலோசனைக்குழு உறுப்பினர்.
2. தமிழக அரசு சமூக சீர்திருத்தக் குழு உறுப்பினர்.

3. தமிழக அரசு புராதன கட்டிடங்கள் பாதுகாப்புக்குழு உறுப்பினர்.
4. தமிழக அரசு ''அனைவரும் அர்ச்சகராகலாம்'' சட்டக் குழுவில் செயற்குழு உறுப்பினர்.
5. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழு உறுப்பினர் (ஆளுநர் நியமன வழி)
6. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - தமிழ் ஆராய்ச்சிப் பாடத்திட்டக்குழு உறுப்பினர்.

முதலிய பொதுநிலைப் பொறுப்புகள் பலவற்றைப் பொன்னம்பல அடிகளாரவர்கள் வகிக்கிறார்கள்.

பெற்ற விருதுகள்

1. தமிழக அரசின் ''**கலைமாமணி விருது**'' *(1999)*
2. இந்திய அரசின் விவசாயத்துறை அமைச்சகம் வழங்கிய ''**கிரிஷிக் சிரோண்மணி ஸம்மான்**'' விருது *(23.12.2002)*
3. மதுரை தமிழிசைச் சங்கத்தின் ''**முத்தமிழ்ப் பேரறிஞர்**'' விருது *(13.3.2002)*
4. சென்னை முத்தமிழ்மன்றம் சார்பில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் வழங்கிய ''**இயல் செல்வம்**'' விருது *(24.01.2007)*
5. தமிழக அரசின் ''**திருவள்ளுவர் விருது**'' *(2007) 16.01.2008*

இவ்விருதுகளில் கலைமாமணி விருதும் திருவள்ளுவர் விருதும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பெறும் பெரிய விருதுகள். பொன்னம்பல அடிகளாரின் இயற்றமிழ்ச் சொற்பொழிவுகளுக்காகக் கலைமாமணி விருது 1999-இல் வழங்கப் பெற்றது. அடிகளார் ஆயிரத்திற்கு மேற்பட்ட சொற்பொழிவுகளை ஆற்றியவர், ஆற்றி வருபவர். அவற்றில் திருவள்ளுவர் பற்றிய பேச்சு மூன்றில் ஒரு பங்குக்கு மேல் இருக்கும். அடிகளாரின் பொதுமேடைப் பேச்சுகள் வானொலிப் பேச்சுகள் ஆகியவை தொகுக்கப்பெற்று ''சமய வாழ்வு'', ''காற்றில்

வந்த கருத்து மழை'' என இரண்டு நூல்களாக வெளிவந் துள்ளன. குன்றக்குடி அடிகளாரைப் போன்றே பொன்னம்பல அடிகளாரும் சிந்தனைப் பேச்சாளர், சீர்திருத்தப் பேச்சாளர். இவர்கள் சிந்திக்கவும் பேசவும் செயலாற்றவும் பிறந்தவர்கள். குன்றக்குடிஅடிகளார் திருவள்ளுவர் விருது பெற்றவர். பொன்னம்பல அடிகளாரும் திருவள்ளுவர் விருது பெற்றவர். அவரினும் இளமையிலேயே இவர் விருதுகளைப் பெறு கிறார் என்பதொன்றே இவரது தகுதி திறமைகளைக் காட்டும்.

வெளிநாட்டுப் பயணங்கள்

குன்றக்குடி அடிகளார் வெளிநாட்டுப் பயணம் அதிகம் செய்தவர். பொன்னம்பல அடிகளாரும் மலேசியா, சிங்கப்பூர், லண்டன் ஆகிய நாடுகளுக்குச் சென்று சைவமும் தமிழும் மனிதநேயமும் பரப்பியுள்ளார்கள்.

சிங்கப்பூர் - திருக்குறள் பேரவை மாநாடு (2005)

மலேசியா - அருள்நெறித் திருக்கூட்டம் மாநாடு (2005)

இலண்டன் - ஒன்பதாவது சைவ மாநாடு, இலண்டன் இந்துத் திருக்கோயில் நிகழ்ச்சிகள் (2006)

மரபையும் மீறிய மனித நேயம்

எல்லாவற்றையும்விட மேலாகச் சொல்லவேண்டியது ஒன்றே ஒன்று இருக்கிறது. அதுதான் பொன்னம்பல அடிகளாரிடம் உள்ள மனித நேயம், மரபையும் மீறிய மனித நேயம். அதைச்சொல்லி நிறைவு செய்வோம்.

இந்து துறவிகளுக்கு, அதிலும் மடாதிபதிகளுக்கு (ஆதீன கர்த்தர்களுக்கு) என்று சில மரபுகள் உண்டு. அம்மரபுகளைச் சாதாரணமாக, பொதுவாக, யாரும் மீறுவதில்லை. ஆனால் பொன்னம்பல அடிகளாரோ மிகுந்த மனிதநேயத்துடன் செயற்படவேண்டிய நேரங்களில் மரபையும் மீறிச் செயற் படுகிறார். எடுத்துக்காட்டாக எத்தனையோ நிகழ்ச்சிகளைக் கூறலாம். ஒன்றேஒன்றை மட்டும் கூறுவோம். அதுவே அவர் களது மனிதநேய மாண்பைக் காட்டுவதற்குப் போதுமானது.

2004 - டிசம்பர் - 26. சுனாமி. தஞ்சாவூர் மாவட்டம் நாகப்பட்டினம் வேளாங்கன்னி கடற்கரைகளில் ஏராளமான உயிர்ச்சேதம். ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் ஆயிரக்கணக்கானோர் கடலின் கொடுஞ்சீற்ற அலைகளில் சிக்கி மாண்டனர். கொடூரக்காட்சி. கடற்கரை நெடுகிலும் பிணக்காடு. குடும்பங்கள் குலைந்தன. பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள். பெற்றோரை இழந்த பிள்ளைகள். கணவனை இழந்த மனைவி. மனைவியைப் பறிகொடுத்த கணவன். எங்கும் ஒரே ஓலம். இயற்கையின் கோர தாண்டவம். சங்கார காலம், பிரளய காலம் என்கிறார்களே இதுதானோ? என்று எண்ணிப் பெருமூச்சுவிடும் நேரம்.

அரசும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், தனியார் சிலர் பலரும் துயர்துடைப்புப் பணியில் களமிறங்கு கின்றனர். குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரும் புறப்படு கிறார். புறப்படுமுன் நாகப்பட்டினம் ஆட்சியருக்கு (கலெக்டருக்கு)த் தொலைபேசித் தொடர்பு கொண்டு, நான் அங்கு வருகிறேன், என்ன விதமான உதவிகள் வேண்டும், என்று கேட்கிறார்.

துணிமணிகள் போன்ற பொருள்கள், உணவுப்பொருள்கள் குவிகின்றன, பணமும் குவிகிறது, உருப்படியாகப் பணியாற்ற மனித ஆற்றல்தான் போதவில்லை. பிணக்குவியல்களை எடுத்து அடக்கம் செய்ய ஆள்கள் இல்லை என்று கலெக்டர் புலம்பாத குறையாகச் சொல்கிறார். மனிதஆற்றல் மனித சக்தி Man Power இவை செயல்பட வேண்டிய நேரம் இது வல்லவா என்று ஒருகணம் சிந்திக்கிறார் பொன்னம்பல அடிகளார். ஏறத்தாழ நூறுபேர் கொண்ட ஒரு இளந் தொண்டர் படையைத் திரட்டிக் கொண்டு நாகைக்குச் செல்கிறார். தானே களத்தில் இறங்குகிறார். துர்நாற்றம், காக்கை கழுகுகள் கொத்தி, நாய்கள் குதறி, ஆடைகள் கிழிந்தும் காணாமலும் போய் அலங்கோலமாகக் கிடக்கும் பிணக்காட்டுக்குள் புகுகிறார். மூக்கிலும் வாயிலும் துணிகளைக் கட்டிக்கொண்டு தொழிலாளர் பலர், தொண்டர்கள் சிலர் சவ அடக்கப்பணியில்

ஈடுபட்டுள்ளதைக் காண்கிறார். தாமும் மூக்கிலும் வாயிலும் துணியைக் கட்டிக்கொண்டு, சவ அடக்கப் பணியில் ஈடுபடுகிறார். உருக்குலைந்து நாறும் பிணங்களைத் தம் கைகளால் வாரியெடுத்துச் சவக்குழியில் சேர்ப்பித்து அழுத கண்ணீருடனும் பிரார்த்தனையுடனும் சவ அடக்கப் பணியைச் செய்கிறார். அடிகளாருடன் சென்றவர்களும் செய்கிறார்கள்.

துறவிகள் கலியாணங்களுக்கோ இழவுக்கோ செல்லலாகாது என்பது மரபு. இன்னொரு மடாதிபதியின் இழவுக்குப் போகலாம். பூர்வாசிரம குடும்பத்து இழவுக்குப் போகக்கூடாது. பொன்னம்பல அடிகளார் தம்மைப் பெற்ற தாயார் இறந்தபோதுகூடப் போய்ப் பார்க்கவில்லை. மரபைக் காப்பாற்றினார். யாரோ எவரோ ஆபத்தில் சிக்கி அநாதையாக இறந்து கிடந்தவர்களைத் தொட்டு எடுத்து அடக்கம் செய்கிறார். மரபைப்பற்றிக் கவலைப்படவில்லை. இதுதான் மனித நேயம், துயர்துடைப்புப் பணியில் உச்சம், எல்லை.

ஏனைய மடங்கள் பிரார்த்தனையோடு நிற்க, கோயில் கோபுரங்களில் மோட்ச தீபம் ஏற்றுவதோடு நிற்க, பொன்னம்பல அடிகளார் ஒருவரே பிரார்த்தனையையும் மோட்ச தீபம் ஏற்றுவதையும் ''பிராக்டிகலாகச்'' செய்தார். பொன்னம்பல அடிகளார் மனிதநேயப் பேச்சாளர் அல்லர், மனிதநேயச் செயல்வீரர், மனிதநேயப் ''பிராக்டீஷனர்'' என்பதற்கு இது ஒன்று போதாதோ!

தமிழ்த்தாள்கள், ஆங்கிலத் தாள்கள் பலவும் பாராட்டி எழுதின. நாமும் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்.

செங்கோல் ஆதீனம்

பெருங்குளம்

பாண்டிய மன்னர்களுக்குச்
செங்கோல் வழங்கும்
உரிமையை உடையதால்
இவ்வாதீனம்
செங்கோல் ஆதீனம்
எனப் பெயர் பெற்றது.

செங்கோல் ஆதீனம்

பெருங்குளம்

பெருங்குளம் என்ற ஊர் தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் உள்ளது. ஸ்ரீவைகுண்டத்தி லிருந்து வடகிழக்கே ஏறத்தாழ 10 கி.மீ. வைணவத்தலம். ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற 108 திவ்ய தேசங்களுள் ஒன்று, பாண்டிய நாட்டுப்பதிகள் 18-இல் ஒன்று. நம்மாழ்வாரால் மட்டும் ஒரே ஒரு பாடலால் மங்களாசாசனம் செய்யப்பெற்றது. வைணவ உலகில் இதன்பெயர் திருக்குளந்தை. திருக்குளந்தை என்றால் யாருக்கும் தெரியாது. பெருங்குளம் என்றால்தான் எல்லாருக்கும் தெரியும். இரண்டாவது நிலைப் பேரூராட்சியாக (நகரப் பஞ்சாயத்தாக) இப்போது உள்ளது. உக்கிரவழுதீஸ்வரர் கோயில் என்றொரு சிவன் கோயிலும் உள்ளது. பாடல்பெற்ற வைணவத் தலமான பெருங்குளத்தில் பழைமையான ஒரு சைவ மடம் இருப்பது பெருங்குளத் திற்குரிய மற்றொரு சிறப்பு.

செங்கோலாதீனத்தின் தொடக்க கால வரலாறு இருவேறு வகையாகக் கூறப்பெறுகிறது.

கயிலாயவாசியும் அகச்சந்தான குரவருள் ஒருவருமாகிய சத்தியஞானதரிசினிக ளிடமிருந்து வரலாறு தொடங்குகிறது. சத்தியஞானதரிசினிகள் கயிலை மலையிலிருந்து புறப்பட்டு அகத்திய முனிவரைக் காணப் பொதியமலைக்கு வருகிறார். வரும் வழியில் தில்லைச் சிதம்பரத்தில் நடராஜப்பெருமானைத் தரிசிக்கிறார். தரிசிக்கும்போது அவரது கூப்பிய கரங்களுக்குள் திருவருட்செயலால் ஒரு சிவலிங்கம் எழுந்தருளிவிடுகிறது. முறைப்படி அதனைப் பிரதிட்டை செய்து வழிபடுமாறு ஓர்

அசரீரிவாக்கும் எழுகிறது. சத்தியஞானதரிசினிகள் தில்லையிலேயே ஒரு திருமடம் நிறுவி, திருவருளால் கிடைத்த சிவலிங்கத்தை எழுந்தருளச் செய்து வழிபட்டு வருகிறார். அவருக்குப்பின் வழிவழியாகப் பதினேழு மடாதிபதிகள் வருகின்றனர்.

பதினெட்டாவது பட்டம் மடாதிபதியாகத் திகம்பர சித்தர் என்பவர் திகழ்கிறார். அவர் காலத்தில், கொற்கையைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டை ஆண்டு வந்த மன்னன் நடராஜ தரிசனத்திற்காகச் சிதம்பரத்திற்கு வருகிறான். சிதம்பரத்தில் சித்தரையும் தரிசிக்கிறான். தன்னுடன் பாண்டிய நாட்டுக்கு வந்து தங்கி அருள்புரியுமாறு வேண்டுகிறான். சித்தரும் உடன்பட்டு மன்னனுடன் பாண்டியநாட்டுக்கு வருகிறார். கல்லூர் என்னும் சிற்றூரில் பாண்டிய மன்னன் அமைத்துத் தந்த திருமடத்தில் தங்கித் தெய்வப்பணியும் சைவப்பணியும் ஆற்றிய வண்ணம் தம்மை வந்தடைந்த அன்பர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

சில காலத்திற்குப்பின் சோழமன்னன் ஒருவன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வந்து தலைநகர் கொற்கையைக் கைப்பற்றிக் கொண்டான். தோல்வியடைந்த பாண்டிய மன்னன் திகம்பர சித்தரிடம் வந்து சரண் புகுந்தான். படை பலத்தைப் பெருக்கிக் கொள்ளப் போதுமான பொருளில்லாத காரணத்தால் தோல்வியடைய நேர்ந்ததென்று கூறி வருந்தினான். கல்லூர்ச் சித்தர் செங்கற்களைத் தங்கக் கட்டிகளாக்கி அவனிடம் கொடுத்து இவற்றைக் கொண்டு உன்படை பலத்தைப் பெருக்கிச் சோழனோடு போரிட்டு வென்று வருவாயாக! என்று வாழ்த்தியனுப்பினார். சில நாளில் பாண்டிய மன்னன் சோழனோடு போர் தொடுத்து வென்றான். வெற்றிபெற்ற மன்னன் பெருங்குளத்தில் சித்தருக்கு ஆதீனம் அமைத்துக் கொடுத்தான். சித்தர் பெருங்குளத்திற்கு வந்து சேர்ந்தார். சித்தரின் ஆசியோடு மீண்டும் ஆட்சியைத் தொடங்கிய பாண்டிய மன்னன் சித்தர் பெருமானின் திருக்கரங்களால் செங்கோலைப் பெற்றுக் கொண்டான். அக்காலத்திலிருந்து கொற்கைப்

பாண்டியர்கள் முடிசூடும்போது பெருங்குளம் மடாதிபதிகளிடமிருந்து செங்கோலைப் பெற்றுக் கொள்ளும் வழக்கம் உண்டாயிற்று. ஆதீனத்திற்கும் ''செங்கோல் ஆதீனம்'', ''செங்கோல் மடம்'' என்று பெயருண்டாயிற்று.

மதுரைப் பாண்டியர்கள் மீனாட்சியம்மையிடம் செங்கோல் பெறும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். திருமலை நாயக்கர், அவருக்குப் பின்வந்த நாயக்க மன்னர்கள் வரை அவ்வழக்கம் தொடர்ந்தது. மதுரைக்கோயில் விழாவின் ஓர் அங்கமாக இன்றும் செங்கோல் வழங்குதல் நிகழ்கிறது. கொற்கைப் பாண்டியர்கள் பெருங்குளம் செங்கோல் மடத்தில் செங்கோல் பெறுவதை வழக்கமாகக் கொண்டார்கள். வேறு எந்த மடத்திற்கும் அமையாத தனிச்சிறப்பு இது. 18-ஆம் பட்டம் சித்தர் சுவாமிகளால் ஏற்பட்ட சிறப்பு.

மற்றொரு வரலாறு வேறு வகையாகக் கூறுகிறது. வேதாரணியம் என வழங்கும் திருமறைக்காட்டுத் திருத்தலத்தில் சுபவிரதன் – கோமளை என்னும் கணவன் மனைவியர் வாழ்ந்தனர். இவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். தருமன் எனப்பெயரிட்டு வளர்த்தனர். தருமன் பிறந்தது முதல் பேசாமலே மௌனமாக இருந்தான். தருமனுக்குப் பேச்சு வரவில்லை என்று பெற்றோர்கள் வருந்தினர். கயிலையிலிருந்து திருமறைக்காட்டுக்குச் சங்கரானந்தர் என்னும் ஞானமுனிவர் ஒருவர் வந்தார். திருமறைக்காட்டுத் திருக்கோயில் சந்நிதியில் சங்கரானந்த ஞானமுனிவர் சிறுவன் தருமனைக் காண நேர்ந்தது. முனிவரைக் கண்ட தருமன் வாய்திறந்து பேசினான், தன்னை ஆட்கொள்ள வேண்டினான். இவன் சிவதருமம் வளர்க்கப் பிறந்தவன் என்பதை அறிந்த ஞானமுனிவர் சங்கரானந்தர் தருமனைத் தம்முடன் தில்லைக்கு அழைத்துச் சென்றார். அங்கு அவனை வளர்த்து ஆளாக்கினார். ஞானதீக்கையும் ஞானோபதேசமும் செய்து ''சத்தியஞானி'' எனப்பெயர் சூட்டி வாழ்த்திப் பணிகளைத் தொடரப்பணித்து வடதிசைக் கயிலைக்கேகினார்.

நாள்தோறும் தில்லைச் சிற்சபையில் நடராஜப் பெருமானை வழிபட்டு வரும் சத்தியஞானி ஒருநாள் வழிபாட்டின்போது கூப்பிய கரங்களுக்குள் சிவலிங்கம் ஒன்று வந்திருப்பதைக் கண்டார். அழகிய அச்சிவலிங்கத்திற்கு ''அழகிய திருச் சிற்றம்பலவர்'' என்று பெயர் சூட்டித் தமது மடத்தில் வைத்து வழிபட்டு வந்தார். சத்தியஞானிகளின் தில்லைமடத்தில் அவருக்குப்பின் வாழையடி வாழையாகப் பதினேழு ஞானச்செல்வர்கள் மடாதிபதிகளாக வருகின்றனர்.

பதினெட்டாவது மடாதிபதியாக **யோகசித்தர்** வருகிறார். அவர் காலத்தில் கொற்கைப் பாண்டியன் தில்லைக்கு வந்து தரிசிக்கிறான். இதன்பின் வரலாற்றில் மாற்றம் இல்லை. அதே வரலாறு பெருங்குளம் வரை, செங்கோல் வழங்கும் வழக்கம் வரை தொடர்கிறது.

இவ்வாறு 18-ஆம் பட்டம் வரை இருவேறு வகையான வரலாறுகள் கூறப்பெறுகின்றன. இதன்பின் அண்மைக்காலம் 100-ஆவது பட்டம் வரை வரலாறு விளங்கவில்லை.

டாக்டர் உ.வே.சா. பார்த்த செங்கோலாதீனம்

டாக்டர் உ.வே. சாமிநாதையர் காலத்தில்கூடச் செங்கோல் ஆதீனம் இயங்கிக் கொண்டிருந்தது. ஆதீனகர்த்தர் இருந்திருக் கிறார். நாடெங்கும் ஏடுதேடி அலைந்து திரிந்து தமிழ் யாத்திரை செய்த ஐயரவர்கள் சிலப்பதிகார ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த காலத்தில் பெருங்குளம் ஆதீனத்திற்கும் ஏடுதேடிச் சென்றிருக்கிறார். ஐயரவர்களின் என்சரித்திரம் அத்தியாயம் 111 ''பல ஊர்ப் பிரயாணங்கள்'' என்ற தலைப்பில், பெருங்குளம் என்ற உட்டலைப்பில் ஐயரவர்கள் பெருங்குளம் சென்ற அனுபவத்தைச் சுவையாக எழுதியிருக்கிறார். அது வருமாறு:

> ஸ்ரீ வைகுண்டம் முதலிய இடங்களுக்குச் செல்ல எண்ணினேன். பெருங்குளமென்னும் ஊரில் செங்கோல் மடம் என்ற ஆதீனமொன்று இருக்கிறதென்றும் அதன் தலைவர் தமிழ்ப் பயிற்சியுள்ளவரென்றும் தெரிந்தது. அங்கே போய்ப் பார்க்கவும் கருதினேன். என் கருத்தை

யறிந்த என் நண்பராகிய வக்கீல் ஏ. கிருஷ்ணசாமி ஐயர் அந்த மடாதிபதிக்கு ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தார்.

ஸ்ரீ வைகுண்டம்

முதலில் ஸ்ரீ வைகுண்டத்தில் ஒரு கவிராயர் வீட்டுக்குச் சென்றேன். அங்கே எண்பது பிராயமுள்ள வைகுந்தநாதன் கவிராயரென்பவர் உட்கார்ந்திருந்தார். அவரிடம் பேசிக் கொண்டிருந்த போது பல பழைய தமிழ்ப் பாடல்களைச் சொன்னார். பிறகு நான் ஏடுதேட வந்திருப்பதை அவரிடம் சொல்லி அவர் வீட்டில் உள்ள ஏடுகளைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அந்த முதியவர் சிரித்தபடியே, ''இந்தக் காலத்தில் ஏட்டுச் சுவடிகளைத் தேடுபவர்களும் இருக்கிறார்களா? இங்கிலீஷ் படிப்பு வந்த பிறகு தமிழை யார் கவனிக்கிறார்கள்? தமிழ் ஏடுகளை யார் பாதுகாக்கிறார்கள்? எல்லாம் அச்சுப் புத்தகங்களாக வந்து விட்டனவே'' என்றார்.

''அச்சுப் புத்தகங்கள் எப்படி வந்தன? ஏட்டுச் சுவடி களை உங்களைப் போன்றவர்கள் பாதுகாத்து வைத்திருந் தமையால் அவற்றைப் பார்த்து அச்சிடுகிறார்கள். உங்கள் வீட்டிலுள்ள ஏடுகளைப் பார்க்கும்படி அனுமதி செய்ய வேண்டும்'' என்று கேட்டேன்.

''என்னிடம் பழைய ஏட்டுச் சுவடிகள் பல இருந்தன. என் பிள்ளைகள் இங்கிலீஷ் படித்து உத்தியோகத்துக்குப் போய் விட்டார்கள். இனிமேல் இந்த ஏடுகளை யார் காப்பாற்றப் போகிறார்களென்ற எண்ணத்தால் யார் யார் எது எதைக் கேட்டார்களோ அவர்களுக்கெல்லாம் கொடுத்து விட்டேன்.'' ''நாம் அப்பொழுதே வராமற் போனோமே'' என்று இரங்கினேன். கிழவர் தாம் படிப்பதற்காக வைத்திருந்த சில ஏட்டுச்சுவடிகளை எடுத்துக் காட்டினார். எனக்கு வேண்டியது ஒன்றும் கிடைக்கவில்லை.

பெருங்குளம்

அவரிடம் விடை பெற்றுக்கொண்டு பெருங்குளத்தை அடைந்து அங்குள்ள செங்கோல் மடத்துக்குப்போய் மடாதிபதியைக் கண்டேன். நான் போனபொழுது அவர் வீணை வாசித்துக் கொண்டிருந்தார். மிக்க அன்போடு பேசி என்னை உபசரித்தார். ''தங்களுக்கு யமகந்திரிபுகளில் நல்ல

தேர்ச்சியுண்டு என்று கேட்டிருக்கிறோம். சிலவற்றைச் சொல்ல வேண்டும்'' என்றார். எல்லாரையும் வசப்படுத்தும் கலையாகிய சங்கீதத்திலே இன்பம் காணும் அவர் மிகவும் சிரமப்பட்டுப் பொருள்தெரிதற்குரிய யமகந்திரிபுகளிலும் இன்பங் காணும் இயல்பினராக இருந்தமை எனக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. அவர் விரும்பிய பொருள் என்னிடம் நிரம்ப இருந்தது. ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்கள் இயற்றிய திரிபு யமக அந்தாதியிலிருந்து பல பாடல்களைச் சொன்னேன். 3 எழுத்து முதல் 13 எழுத்துக்கள் வரையில் யமகமாக அமைந்த செய்யுட்களையும் அவற்றின் பொருளையும் சொன்னேன். கேட்டுக்கேட்டு அவர் மகிழ்ச்சி அடைந்தார். நான் வந்த காரியத்தை அறிந்து தம்மிடமுள்ள ஏடுகளெல்லாவற்றையும் நான் பார்க்கும்படி செய்தார். பல பிரபந்தங்களும் புராணங்களும் அச்சிட்ட நூல்களும் இருந்தன. குறுந்தொகை மூலம் ஒரு பிரதி இருந்தது.

அன்று முழுவதும் அங்கே தங்கி அவருடன் சல்லாபம் செய்து கொண்டிருந்தேன். அவ்வூரிலுள்ள ஆலயத்திற்கு என்னை அழைத்துச் சென்று அதன் சிறப்பை அவர் எடுத்துரைத்தார். அங்கே உக்கிர பாண்டியர் அரசாட்சி செய்தாரென்றும், அவராற் பூசிக்கப் பெற்றமையின் அவ்வூர்ச் சிவபெருமானுக்கு உக்கிரவழுதீசுவரர் என்னும் திருநாமம் வழங்குகிறதென்றும் அறிந்தேன். அந்தப் பாண்டியர் முன்னிலையில் நக்கீரனார் முதலிய சங்கப் புலவர்கள் கூடிய இடத்தில் திருக்குறள் அரங்கேற்றம் நடைபெற்ற தென்றும் அங்ஙனம் நடந்த இடம் அதுவேயென்றும் கூறி, அதற்கு அடையாளமாகச் சிவாலயத்தில் 49 புலவர்களின் வடிவமும் உக்கிரபாண்டியர் வடிவமும் அமைந்துள்ள இடத்தை அவர் காட்டினார். 'இங்கே அவர்கள் இருந்தார் களோ இல்லையோ, தமிழ்ப் புலவர்களைத் தெய்வத்தோடு ஒன்றாக வைத்துப் போற்றும் வழக்கம் இந்த நாட்டில் இருப்பதை நாம் பாராட்டவேண்டும்' என்று நான் எண்ணினேன்.

இவ்வளவில் ஐயரவர்களின் பெருங்குளம் யாத்திரை, ஏடுதேடல் நிறைவு பெறுகிறது. ஐயரவர்கள் சென்றபோது மடாதிபதி வீணை வாசித்துக் கொண்டிருந்தார் என்பதே ஓர் இனிய செய்தி. இசைவிருப்பினராக, தாமே வீணை வாசித்து இன்புறக் கூடியவராக இருந்திருக்கிறார். யமகம் திரிபு ஆகிய

இனங்களையுடைய செய்யுட்களைச் சொல்லுமாறு கேட்டிருக்கிறார். தமிழறிவு உடையவரென்று தெரிகிறது. ஏட்டுச் சுவடிகளும் அச்சிட்ட நூல்களும் ஆதீனத்தில் இருந்திருக்கின்றன. மடாதிபதி ஐயரவர்களை பெருங்குளம் உக்கிர வழுதீஸ்வரர் கோயிலுக்கு அழைத்துச் சென்று காண்பித்திருக்கிறார். அது திருக்குறள் அரங்கேற்றம் நடைபெற்ற இடம் என்றும் கூறியிருக்கிறார். ஐயரவர்களின் இந்த 111-ஆவது அத்தியாயத்துக்கு முந்திய 110-ஆவது அத்தியாயத்திற்குத் தலைப்பு ''பயனற்ற பிரயாணம்'' என்பது. பெருங்குளம் பிரயாணம் அப்படிப் பயனற்ற பிரயாணமாக இல்லாமல் பயனுள்ள பிரயாணமாக இருந்திருக்கிறது. ஐயரவர்கள் பெருங்குளத்திற்குச் சென்றது 1890 அல்லது 1891 என்று அடுத்த சில பக்கங்களில் எழுதுவதால் தெரிகிறது.

1957-ஆம் ஆண்டில் பேரூர் ஆதீனத்தில் நிகழ்ந்த சத்வித்யா சன்மார்க்க சங்க ஆண்டுவிழாவுக்குச் செங்கோல் ஆதீன மடாதிபதி ஆறுமுக சத்தியஞான பண்டார சந்நிதிகள் தலைமை வகித்திருக்கிறார் என்பது அச்சங்கத்தின் பொன்விழா மலரால் தெரிகிறது. எம் இளமைக் காலத்தில் திருச்சிராப் பள்ளி மலைக்கோயில் நூற்றுக்கால் மண்டபத்தில் நடந்த நிகழ்ச்சியொன்றில் நாம் இவர்களைக் கண்டிருக்கிறோம்.

ஐயரவர்களின் காலத்தில் ஆதீனகர்த்தராக விளங்கியவர்கள் 100-ஆவது பட்டம் **ஸ்ரீலஸ்ரீ கல்யாணசுந்தர சத்தியஞான பண்டார சந்நிதிகள்.** அடுத்து 101-ஆவது பட்டமாகத் திகழ்ந்தவர் **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக சத்தியஞான பண்டார சந்நிதிகள்.**

இவர்கள் காலத்தில் ஒரு பெரிய மனிதரின் தூண்டுதலால் அரசின் இந்து சமய அறநிலைய்த்துறை ஆதீன நிர்வாகத்தில் தலையிட்டது. சிக்கல் உண்டாயிற்று. வெறுப்புற்ற ஆதீனகர்த்தர் பதவி துறந்தார். ஆதீன நிர்வாகம் சீர் குலைந்தது. அதன்பின் 35 ஆண்டுகளாக ஆதீனத்திற்கு ஆதீனகர்த்தர்கள் இல்லாத நிலை! யார் என்ன செய்வது?

அருகிலுள்ள ஆதீனம் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம். தென்னாட்டில் மிகுதியான கிளைமடங்களையும் சொத்துகளையும் உடைய செல்வாக்குமிக்க ஆதீனம் திருவாவடுதுறை ஆதீனம். தகுந்த ஒருவரை மடாதிபதியாக்கி ஆதீன நிலையைச் செம்மையுறச் செய்ய ஒரு சமயம் குன்றக்குடி அடிகளார் முயன்றார். எம்மிடமும் கூறினார். எதுவும் நடைபெறவில்லை. காலம் ஓடிற்று. அப்பகுதிச் சைவஅன்பர்கள் பலர் கவலையுற்றனர். ஒரு நல்ல காலம் வராதா என்று ஏங்கினர். அடிக்கடித் தென் மாவட்ட யாத்திரை செய்யும் திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்கள் செங்கோலாதீனத்திற்கு ஆதீனகர்த்தர் ஒருவரை ஏற்படுத்தத் தீவிர முயற்சிகளை மேற்கொண் டார்கள். தகுந்த ஒருவரைத் தேர்வு செய்து சொல்லும்படி அன்பர்களிடம் கூறிவந்தார்கள். எம்மிடமும் ஒருசமயம் கூறினார்கள். செங்கோலாதீனத்தைக் குருபீடமாகக் கொண்ட அப்பகுதிச் சைவமெய்யன்பர்கள் தக்க ஒருவரைத் தெரிந் தெடுத்தார்கள்.

102-ஆம் பட்டம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கலியாணசுந்தர சத்தியஞான பண்டார சந்நிதிகள்

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமரைச்செல்வி என்னும் ஊரிற் பிறந்தவர். பெற்றோர் மகாராஜபிள்ளை, பிச்சம்மாள். பரம்பரைச் சுத்தசைவக் குடும்பம். 1928-இல் பிறந்த அவர் பெயர் பேச்சியப்பன். இளமையிலேயே திருமுறைகளையும் சைவசித்தாந்த நூல்களையும் கற்றுத் தேர்ச்சி பெற்றவர். முப்பதாம் அகவையில் (1958) ஈசான சிவாசாரியரிடம் தீக்கையும் சிவபூசையும் பெற்றவர். திருநெல்வேலியில் ''அப்பர் அருட்பணி மன்றம்'' அமைத்துச் சைவப் பணியாற்றியவர். குன்றக்குடி அடிகளார், காஞ்சி காமகோடிபீடம் சங்கராசாரிய சுவாமிகள், மதுரையாதீனம் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், திருமுருக கிருபானந்தவாரியார் ஆகிய பெரியோர்களின் பாராட்டுக்குப்

பாத்திரமானவர். சிறந்த சமயப் பிரசாரகர். ''செஞ்சொல்மணி'' என்று கிருபானந்தவாரியார் அவர்களால் பட்டமளித்துப் பாராட்டப் பெற்றவர்.

அன்பர் திரு பேச்சியப்பனாரைச் சைவ மெய்யன்பர்கள் தேர்ந்தெடுத்தனர். உண்மையிலேயே தமக்குத் தகுதியுண்டா? திருவருட் சம்மதம் எப்படியிருக்குமோ என்றெண்ணிய பேச்சியப்பனார் அன்பர்கள் முன்னிலையில் பெரியபுராணத்தில் கயிறு சார்த்திப் பார்த்தார். ''பங்கயக்கண் அருவி நீர் பாயநின்று'' என்ற திருஞானசம்பந்தர் புராணப் பாடல் வந்தது.

''பங்கயக்கண் அருவிநீர் பாயநின்று
பரவும் இசைத் திருப்பதிகம்பாடி ஆடித்
தங்குபெரும் களிகாதல் தகைந்து தட்பத்
தம்பெருமான் கழல்போற்றும் தன்மைநீட
அங்கு அரிதிற் புறம்போந்து அங்குஅயன்மால் போற்ற
அரியார்தம் திருமலைக்கீழ் அணைந்து இறைஞ்சிப்
பொங்கு திருத்தொண்டர் மடம்காட்ட அங்குப்
புக்கு அருளி இனிது அமர்ந்தார் புகலி வேந்தர்.''

(திருஞானசம்பந்தர் புராணத்தில் 1024–வது பாடல்)

பாடலின் ஈற்றடி ''பொங்கு திருத்தொண்டர் மடம் காட்ட அங்குப் புக்கு அருளி இனிது அமர்ந்தார் புகலி வேந்தர்'' என்பது எவ்வளவு பொருத்தம் பாருங்கள்! பொருட் பொருத்தம் மட்டுமன்றி சொற்பொருத்தமும் நிறைந்திருக் கிறது. பொங்கு திருத்தொண்டர் – ஆர்வம் பொங்கும் சைவ மெய்யன்பர்கள், திருத்தொண்டர்கள், மடம் காட்ட – இதோ இச்செங்கோல் ஆதீனமடம் தாங்கள் புக்கு அருளி இனிது அமர்வதற்குரியது என்று காட்ட, பேச்சியப்பனாரும் செங்கோல் ஆதீன மடாதிபதியாகப் புக்கு அருளி இனிது பீடத்து அமர இசைவளிக்கிறார். சைவசபை, அப்பர் அருட்பணிமன்றம் முதலிய பல அமைப்புகள், பல ஊர்களிலுள்ள 68 அமைப்புகள் சேர்ந்து 02.06.1996–இல் பாளையங்கோட்டையில் பேச்சியப்பனாருக்குப் பாராட்டுவிழா ஒன்றைச் சிறப்பாக நடத்தினார்கள். அன்பர் குழாம் செஞ்சொல்மணி பேச்சி

யப்பனாரைத் திருவாவடுதுறைக்கு அழைத்துச் செல்கிறது. செயல்கள் வெகுவேகமாக நிறைவேறுகின்றன.

திருவாவடுதுறையில் 23-ஆவது குருமகாசந்நிதானமாக இப்போது எழுந்தருளியுள்ள சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் செஞ்சொல்மணி திரு பேச்சியப்பனாருக்கு 14.07.1996-இல் யாத்திரைகாஷாயமும், 01.09.1996-இல் மந்திர காஷாயமும், 02.09.1996-இல் திருவடிதீக்கையும் திருவாவடு துறையாதீனத்திலேயே அருளினார்கள். 15.09.1996 தாது ஆண்டு ஆவணித்திங்கள் 30-ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணிக்குமேல் 9.00 மணிக்குள் நன்னேரத்தில் பெருங்குளம் செங்கோல் ஆதீன மடத்தில் திருவாவடுதுறை யாதீன குருமகாசந்நிதானமவர்கள் ஆசாரிய அபிடேகமும் பீடாரோகணமும் செய்வித்தருளினார்கள்.

செஞ்சொல்மணி பேச்சியப்பனார் அவர்கள் செங்கோல் ஆதீனத்தின் 102-ஆம் பட்டம் ஆதீனகர்த்தராக, குருமகா சந்நிதானமாக **ஸ்ரீலஸ்ரீ கல்யாணசுந்தர சத்தியஞான பண்டார சந்நிதிகள்** என்ற திருப்பெயருடன் எழுந்தருளி அருளாட்சியைத் தொடங்கினார்கள். ஏறத்தாழ 35 ஆண்டுகாலம் குருமூர்த்திகள் இல்லாதிருந்த ஆதீனம் தகுந்த ஒரு குருமூர்த்திகளைப் பெற்றது. தலைமையும் உரிய பணியாளர்களுமின்றிச் சீர்குலைந்திருந்த ஆதீனத்தைச் செம்மைப்படுத்தச் சில காலம் ஆகுமாதலின் பட்டமேற்ற நாளிலிருந்து நான்கு ஆண்டுகள் திருநெல்வேலி நகரில் மேல ரத வீதியில் உள்ள திருவாவடுதுறை ஆதீனக் கிளைமடமாகிய ஈசான மடத்தில் முகாம் அலுவலகம் அமைத்துக்கொண்டு பெருங்குளம் செங்கோலாதீன நிர்வாகத்தை நடத்திவந்தார்கள். 15.09.2000 முதல் பெருங்குளத்தில் செங்கோலாதீன மடத்திலேயே எழுந் தருளியிருந்து அருளாட்சி செய்துவருகிறார்கள்.

கிளைமடங்கள்

திருநெல்வேலி, குற்றாலம், பாபநாசம், பாப்பாங்குளம் ஆகிய ஊர்களில் கிளைமடங்கள் உள்ளன. கீழக்கல்லூரில்

பள்ளியும், கீழாம்பூரிலும் பாளையங்கோட்டையிலும் நடுநிலைப் பள்ளிகளும், பாப்பாங்குளத்தில் உயர்நிலைப் பள்ளியும் உள்ளன.

சொத்துகள்

நன்செய் நிலம் சுமார் 80 ஏக்கர். புன்செய் நிலம் சுமார் 33 ஏக்கர். திருநெல்வேலியிலும் குற்றாலத்திலும் கட்டிடங்கள் உள்ளன.

ஆதிகுருமுதல்வர் சத்தியஞானதரிசினி என்ற பெயருடையவர் ஆதலின் இவ்வாதீன குருமூர்த்திகளின் பெயருடன் சத்தியஞான என்பதையும் சேர்த்து வழங்குவது மரபாக உள்ளது. ஆதீன வழிபடு கடவுள் அழகிய திருச்சிற்றம்பல முடையார். சிவலிங்கத் திருமேனி.

செங்கோலாதீனம் கயிலாய பரம்பரையே எனினும் மெய்கண்டசந்தானமன்று. மெய்கண்டாருக்குக் காலத்தால் மிகவும் முற்பட்ட அகச்சந்தானகுரவர் சத்தியஞானதரிசினிகளின் நேர்வழியில் இது வருகிறது.

இதன் முந்திய சந்நிதானங்களெல்லாம் பண்டார சந்நிதிகள் என்றே வழங்கப் பெற்றுள்ளனர். இப்போது 102–ஆம் பட்டமாக எழுந்தருளியுள்ளவர்களின் ஆசாரிய அபிடேக பீடாரோகண அழைப்பிதழில் பண்டார சந்நிதிகள் என்றே வழங்கப்பெற்றுள்ளது. பண்டார சந்நிதி என்பது பழைய வழக்கு. அவ்வாறு வழங்குவது பழைமையைப் போற்றுவதாகும். எனினும் காலத்திற்கேற்பப் பரமாசாரிய சுவாமிகள் என்ற புதிய வழக்கையும் ஏற்றுக் கைக்கொள்ள வேண்டியுள்ளது. இருவகை வழக்கிலும் ''தேசிக'' என்பது சேராதிருக்கிறது. அதனைச் சேர்த்து வழங்குவது சிறப்பாகும். கலியாண சுந்தர தேசிக சத்தியஞான பண்டார சந்நிதிகள் என்றும் கலியாணசுந்தர தேசிக சத்தியஞான பரமாசாரிய சுவாமிகள் என்றும் வழங்கலாம்.

26.06.2008 சர்வதாரி ஆனி 12 வியாழக்கிழமையன்று இவர்களுக்கு 80-ஆம் ஆண்டு நிறைவு சதாபிடேக விழா சிறப்பாக நிகழ்ந்தது. பல்லக்கில் பட்டினப்பிரவேசமும் நடந்தது.

பூர்வாசிரம காலத்திலேயே மிகச் சிறந்த சமயப் பிரசாரகராக விளங்கிய இவர்கள், சிறந்த பேச்சாளராகவும் திருமுறைப்பாக்களை இசையோடு பாடவல்லவராகவும் விளங்குகிறார்கள்.

ஆங்காங்கே நிகழும் சிறப்பு விழாக்களிலும் மாநாடு களிலும் பரவலாகக் கலந்து கொண்டு உரையாற்றுகிறார்கள்.

தோளில் உழவாரப்படை தாங்கிய இவர்களது முதிர்ந்த கோலம் அப்பர்பெருமானை நினைவூட்டுவதாக உள்ளது.

துழாவூர் ஆதீனம்

துழாவூர்

துழாவூராதீனம் நகரத்தார் பெண்களின்
குருபீடம். நாட்டுக்கோட்டை நகரத்தாரில்
பெண்கள் அனைவரும் இவ்வாதீனத்திலேயே
தீட்சை பெறவேண்டும்.
பிள்ளையார்பட்டிக்கும் குன்றக்குடிக்கும்
செல்வோர் அருகே உள்ள பழைமையான
துழாவூராதீனத்தையும் தரிசிக்க
வேண்டும்.

துழாவூர் ஆதீனம்

துழாவூர் குன்றக்குடிக்கு அருகில் உள்ளது. காரைக்குடி யிலிருந்து குன்றக்குடிக்குச் செல்லும் சாலையில் குன்றக்குடி ஊருக்குள் நுழையுமுன் மேற்கே செல்லும் கிளைச் சாலையில் 2 கி.மீ. தொலைவில் உள்ள அழகிய சிற்றூர்.

துழாவூரில் உள்ளதால் இவ்வாதீனம் துழாவூராதீனம் எனப் பெயர்பெற்றது. 16-ஆம் நூற்றாண்டில் நிரம்பஅழகிய தேசிகரால் நிறுவப்பெற்றது. நிரம்ப அழகிய தேசிகர் ஆதீனம் என நிறுவியவர் பெயராலும் இது வழங்கும்.

கமலை ஞானப்பிரகாசரைப் பற்றித் தருமபுர ஆதீன வரலாற்றில் கூறியுள்ளோம். கமலை ஞானப்பிரகாசரின் மாணாக்கர் பலரில் இருவர் முக்கியமானவர்கள். ஒருவர் குருஞானசம்பந்தர். இன்னொருவர் நிரம்பஅழகிய தேசிகர். குருஞானசம்பந்தரால் தருமபுர ஆதீனம் நிறுவப்பெற்றது. நிரம்பஅழகிய தேசிகரால் துழாவூர் ஆதீனம் நிறுவப்பெற்றது. கமலை ஞானப்பிரகாசர் இல்லறத்தார். நிரம்பஅழகிய தேசிகரின் ஆதீனமாகிய துழாவூர் ஆதீனம் இல்லறத்தார் ஆதீனம். வெள்ளை வேட்டி மடம். இதன் ஆதீன கர்த்தர்கள் (மடாதிபதிகள்) இல்லறத்தார். வெள்ளாடை அணிபவர்கள். தந்தைக்குப்பின் அவருடைய மூத்தமகன் ஆதீனகர்த்தராகப் பட்டத்துக்கு வருகிறார். பிள்ளையில்லாவிட்டால் சுவீகாரம் செய்து கொள்வது உண்டு. இவர்கள் சைவ வேளாளர் மரபினர். அபிஷேகஸ்தர். அதாவது ஆசாரிய அபிஷேகம் பெற்றவர். குருக்கள் எனச் சாதாரணமாக வழங்கப்பெறுவர்.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களில் பெண்மக்களுக்குத் துழாவூர் ஆதீனம் குருபீடம். ஆண்மக்களுக்குக் கலாமடமும்

பாதரக்குடி மடமும் குருபீடங்கள். அண்மைக் காலத்தில் கலாமடமும் பாதரக்குடி மடமும் ஒன்றாக இணைக்கப் பெற்றுப் பாதரக்குடி மடமே இப்போது ஆண்களின் குரு பீடமாக இருந்துவருகிறது. பாதரக்குடியும் குன்றக்குடிக்கு அருகில்தான் உள்ளது. முன்பு ஆதிசைவர் (சிவாசாரியர்) மடமாக இருந்த பாதரக்குடி மடம் அண்மைக் காலத்தில் சுமார்த்தர் வைதிக அந்தணர் தலைமை வகிக்கும் மடமாகி விட்டது.

நகரத்தார்களின் சமயக் கொள்கை மிகவும் பாராட்டத் தக்கது. செட்டிநாட்டார் நாட்டுக்கோட்டை நகரத்தார் சிவ வழிபாட்டில் சிறந்தவர்கள். சைவ சமயத்தில் உறுதியுள்ள வர்கள். திருக்கோயில் திருப்பணிகளில் இவர்களுக்கு இணையானவர்கள், இவர்களை விஞ்சியவர்கள் வேறு யாரும் இல்லை. பண்டைத் தமிழ் மன்னர்களுக்குப் பின்னர் கோயில் திருப்பணிகளில் சிறந்து விளங்குவோர் நாட்டுக் கோட்டை நகரத்தார்களே. ஆதலின் ''மன்னர் பின்னோர்'' என்று சிறப்பிக்கப் பெறுவர். தமிழ்நாட்டில் மட்டுமின்றி இந்தியா முழுவதிலும் கடல்கடந்த நாடுகளிலும் இவர்களது கோயிற்பணிகள், சத்திரப் பணிகள், அறப்பணிகள் இன்றும் சிறந்து விளங்குகின்றன.

நகரத்தார் தங்கள் வாழ்க்கை முறை நியாயங்களைக் கல்வெட்டாகவே வெட்டி வைத்துக் கொண்டு அதன்படி வாழ்பவர்கள்.

> "புருஷர்களும் பெண்களும் தங்கள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கிற குருஸ்தானங்களிலேயே தீட்சாகிரியை முதலியவைகள் வழக்கப்படி செய்துகொள்ளுகிறது.
>
> வேறொருவரிடத்தும் தீக்ஷாகிரியை முதலியவை செய்து கொள்ளக் கூடாது.
>
> சிவமதத்திலேயே யிருக்கிறது. அந்நிய மதங்களில் சேரக் கூடாது''

என்பது நகரத்தாரின் வேலங்குடிக் கல்வெட்டு.

''சிவமதத்திலேயே இருக்கிறது. அந்நிய மதங்களில் சேரக்கூடாது'' என்பது எப்பேர்ப்பட்ட திட்டம். செட்டி நாட்டாரின் சைவ சமய உறுதி எப்பேர்ப்பட்ட உறுதி. நாட்டில் இஸ்லாமிய ஆட்சிக்காலந்தொட்டு, ஐரோப்பியக் கிறிஸ்துவ இனங்களான போர்ச்சுகீசிய, டச்சு, பிரெஞ்சு, பிரிட்டிஷ் ஆட்சிக்காலந்தொட்டு ஆண்டாண்டு காலமாக மதமாற்றம் நடந்துகொண்டுதானிருக்கிறது. அதிலும் இந்தியா விடுதலை பெற்றபின் இவ்வறுபதாண்டு காலமாக மத மாற்றம் மதமாற்றம் என்று அது ஒரு தொழிலாகவே – ஒரு அரசியலாகவே – ஆகிவிட்டது. எல்லாச் சமூகத்தாரும் மதம் மாறிவிட்டனர். நகரத்தார் மட்டும் மதம் மாறுவதில்லை. வேளாளக் கிறிஸ்துவர், முதலியார் கிறிஸ்துவர், நாடார் கிறிஸ்துவர், வன்னியக் கிறிஸ்துவர், ஹரிஜனக் கிறிஸ்துவர் என்று இன்று பலரைக் காண்கிறோம். செட்டியார் கிறிஸ்துவர் என்று ஒருவரையாவது காணமுடியுமா. நகரத்தார்களில் பத்தாயிரத்தில் ஒருவர் கூட மதமாறியவர் இல்லை. நகரத் தார்களில் மதமாற்றம் அரிது அரிது. அவ்வளவு சமய உறுதி வாய்ந்தவர்கள் அவர்கள்.

நகரத்தார்களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித் தனி குருஸ்தானங்கள் ஏற்பட்டது ஏன்? பெண்களுக்குச் சைவவேளாள குருபீடம் ஏற்பட்டது ஏன்? என்பதை அறிய வேண்டாமா?

முன்னொரு காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த சோழமன்னனுக்கும் நகரத்தார்களுக்கும் கடுமையான கருத்து வேற்றுமையும் அதனால் பகையும் உண்டாயிற்று. நகரத்தார் அனைவரும் உயிர்துறக்கத் துணிந்தனர். ஆண்களும் பெண் களும் குழந்தைகளுமாக எண்ணாயிரம் குடும்பத்தார் ஒருசேர உயிர்துறந்தனர். உயிர்துறந்த சமயம் பள்ளிக்குச் சென்றிருந்த சிறுவர்களே உயிர் தப்பினர். சிறுமிகள் அக்காலத்தில் பள்ளிக்குச் செல்வது வழக்கமில்லையாதலின் சிறுமிகள் யாரும் தப்பவில்லை. பள்ளிக்குச் சென்றிருந்ததால் உயிர் தப்பிய சிறுவர்கள் வளர்ந்து ஆளாகி மணப்பருவம் அடைந்ததும்

அவர்கள் மணஞ் செய்துகொள்ள நகரத்துப் பெண்கள் யாருமே இல்லை. வேளாளப் பெண்களை மணக்க வேண்டிய தாயிற்று. நகரத்து ஆடவர்களை மணந்துகொள்ள வேளாளப் பெண்கள் ஒரு நிபந்தனை விதித்தனர். திருமணத்திற்குப் பின்னரும் எங்கள் குலகுருவே எங்களுக்குக் குருஸ்தான மாகத் தொடர்ந்து இருக்க வேண்டும், எதிர்காலத்தில் எக் காலத்திலும் நகரத்தாரில் பெண்களுக்கு எங்கள் குருபீடமாகிய நிரம்பிய அழகிய தேசிகர் ஆதீனமே குருஸ்தானமாக விளங்க வேண்டும் என்பதே அந்நிபந்தனை. இந்நிபந்தனையின்படி இன்றும் நகரத்தாரில் பெண்களுக்குத் துழாவூர் ஆதீனமே குருபீடமாகத் திகழ்ந்து வருகிறது.

துழாவூர் ஆதீனத்தைத் தோற்றுவித்தவர், குருமுதல்வர், **நிரம்பஅழகிய தேசிகர்.** நிரம்ப அழகிய தேசிகர் என்ற பெயரே நிரம்பவும் அழகிய பெயர். சிவபெருமானின் பெயர். ''நித்த மணாளர் நிரம்ப அழகியர்'' என்பது மாணிக்கவாசகரின் திருவாசகத்தொடர் (அன்னைப்பத்து–3). நிரம்பஅழகியரின் ஊர் ஸ்ரீவாஞ்சியம் என்பர். ஸ்ரீவாஞ்சியம் (திருவாஞ்சியம்) சோழநாட்டில் தேவார மூவராலும் பாடப்பெற்ற தலம். திருவாசகத்திலும் குறிப்பிடப் பெற்ற தலம். தலத்து இறைவன் இறைவி வாஞ்சிநாதேசுவரர், மங்களாம்பிகை. துழாவூராதீனத்தின் ஆன்மார்த்த பூசா மூர்த்தியும் வாஞ்சி நாதேஸ்வரர், மங்களாம்பிகை. நிரம்ப அழகியரின் ஊர் ஸ்ரீவாஞ்சியமே என்பதற்கு இது பொருத்தமாக இருக்கிறது. நிரம்ப அழகிய தேசிகர் செய்த நூல்கள்: சேதுபுராணம், திருப்பரங்கிரிப் புராணம், சிவஞானசித்தியார் உரை, திருவருட் பயன் உரை.

துழாவூராதீனத்தார் தங்கள் ஆதீனம் 1096 ஆண்டுப் பழைமையுடையது என்றும் கி.பி. 913–இல் நிறுவப் பெற்றது என்றும் இதுவரை 28 தேசிகர்கள் பட்டத்திலிருந்திருக் கிறார்கள் என்றும் இப்போதுள்ளவர் 29–ஆம் பட்டம் தேசிகர் என்றும் ஒரு நீண்ட பெயர்ப்பட்டியலைப் பட்டத்திலிருந்த ஆண்டுகளுடன் கொடுக்கிறார்கள். ஆதீனத்தார் 1994–இல்

வெளியிட்டுள்ள வரலாற்றிற் காணப்படும் அப் பட்டியலை அப்படியே மணிவாசகர் பதிப்பகம் நகரத்தார் கலைக் களஞ்சியத்தில் வெளியிட்டிருக்கிறார்கள் *(1998).* அது பின்வருமாறு :

துழாவூர் ஆதீன குருமரபு

		கி.பி.
1.	ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகர்	*913 – 943*
2.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகர்	*943 – 971*
3.	ஸ்ரீலஸ்ரீ சபாபதி தேசிகர்	*971 – 995*
4.	ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல தேசிகர்	*995 – 1026*
5.	ஸ்ரீலஸ்ரீ பூரணசுந்தர தேசிகர்	*1026 – 1058*
6.	ஸ்ரீலஸ்ரீ சபாப்தி தேசிகர்	*1058 – 1087*
7.	ஸ்ரீலஸ்ரீ பூரண சுந்தர தேசிகர்	*1087 – 1115*
8.	ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர்	*1115 – 1167*
9.	ஸ்ரீலஸ்ரீ நடராஜ குரு தேசிகர்	*1167 – 1198*
10.	ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர்	*1198 – 1226*
11.	ஸ்ரீலஸ்ரீ உதயமூர்த்தி தேசிகர்	*1226 – 1277*
12.	ஸ்ரீலஸ்ரீ சிதம்பர தேசிகர்	*1277 – 1335*
13.	ஸ்ரீலஸ்ரீ சபாபதிதேசிகர்	*1335 – 1388*
14.	ஸ்ரீலஸ்ரீ வடுகநாத தேசிகர்	*1388 – 1417*
15.	ஸ்ரீலஸ்ரீ உதயமூர்த்தி தேசிகர்	*1417 – 1449*
16.	ஸ்ரீலஸ்ரீ சத்தியஞான தேசிகர்	*1449 – 1498*
17.	ஸ்ரீலஸ்ரீ தாண்டேசுவர தேசிகர்	*1498 – 1541*
18.	ஸ்ரீலஸ்ரீ சத்தியஞான தேசிகர்	*1541 – 1597*
19.	ஸ்ரீலஸ்ரீ சிதம்பர தேசிகர்	*1597 – 1629*
20.	ஸ்ரீலஸ்ரீ தாண்டேசுவர தேசிகர்	*1629 – 1684*
21.	ஸ்ரீலஸ்ரீ சாமிநாத தேசிகர்	*1684 – 1735*
22.	ஸ்ரீலஸ்ரீ ஆபத்தோத்தாரண தேசிகர்	*1735 – 1768*

23.	ஸ்ரீலஸ்ரீ வடுகநாத தேசிகர்	1768 – 1799
24.	ஸ்ரீலஸ்ரீ ஆபத்தோத்தாரண தேசிகர்	1799 – 1828
25.	ஸ்ரீலஸ்ரீ சத்திய ஞான தேசிகர்	1828 – 1860
26.	ஸ்ரீலஸ்ரீ உதயமூர்த்தி தேசிகர்	1860 – 1880
27.	ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகர்	1880 – 1923
28.	ஸ்ரீலஸ்ரீ பால உதயமூர்த்தி தேசிகர்	1923 – 1987
29.	**ஸ்ரீலஸ்ரீ நிரம்பஅழகிய ஞானப்பிரகாச தேசிகர்**	1987 முதல்

ஊரின் பெயர் துழாவூர், துலாவூர் என இருவகையாக வழங்குகிறது. ழகர லகர பேதத்தைக் கவனிக்க. உள்ளூரிலும் ஆதீனத்திலும் செட்டிநாட்டிலும் துலாவூர் என்று வழங்கு கிறது. நூல்களிலும், இலக்கிய வரலாறுகளிலும், ஏனைய ஆதீன வரலாறுகளிலும் துழாவூர் என்று வழங்குகிறது. நாமும் இங்குத் துழாவூர் என்றே கொண்டோம்.

1990 வரை துழாவூராதீன வரலாறு விரிவாக வழங்க வில்லை. மிகச் சுருக்கமாகவே, சில குறிப்புகள் அளவிலேயே வழங்கிற்று. நிரம்பஅழகிய தேசிகர் வரலாறே முக்கியமாக அமைந்தது. அதையும் பலர் பலவகையாக எழுதினர். 1977–இல் இலக்கிய வரலாறு (நூற்றாண்டு வரிசையில்) எழுதிய திருச்சிற்றம்பலம் மு. அருணாசலம் அவர்கள் துழாவூரா தீனத்தைப் பற்றி ஓரளவே எழுதினார். சில குறிப்புகளே எனினும் தெளிவாக எழுதினார். அப்பொழுது அவர் துழாவூர் ஆதீனத்தை நேரில் பார்த்ததில்லை. நூலாராய்ச்சியைக் கொண்டே எழுதினார். அறிஞர் சோம.லெ. தெரிவித்ததென்றும் சில குறிப்புகளை எழுதினார். பின்னர் துழாவூருக்குச் சென்று ஆதீனத்தைக் கண்டு ஆதீனகர்த்தருடன் நேரில் அளவளாவி, சைவசித்தாந்தப் பெருமன்றத்தின் திங்களிதழ் சித்தாந்தம் 1982 ஆகஸ்ட் இதழில் 'துழாவூர் ஆதீனம்' என்று ஒரு கட்டுரை எழுதினார். களஆய்வு செய்து எழுதப்பெற்ற அக் கட்டுரை ஆதீனத்தின் அப்போதைய நிலையைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. 1984–இல் 'செட்டி

நாடும் செந்தமிழும்' எழுதிய சோம.லெ துழாவூராதீனத்தைப் பற்றிச் சுருக்கமாகவே எழுதினார். அதன்பின் துழாவூர் ஆதீனகர்த்தர் தமது ஆதீன வரலாற்றை ஓரளவு விரிவாகப் பதினான்கு பக்கங்களில் 06.12.1994–இல் எழுதியுள்ளார். அதையே நகரத்தார் கலைக்களஞ்சியம் வெளியிட்ட மணிவாசகர் பதிப்பகத்தார் பின்பற்றியுள்ளனர்.

1000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமை கூறுவதன் பொருத்தம் மேலும் ஆராய்வதற்குரியது.

16–ஆம் நூற்றாண்டில் நிரம்பஅழகிய தேசிகரால் இது மடமாக ஆதீனமாக அமைந்தது. அதற்குமுன் குலகுரு பரம்பரை என்ற அளவில் நிலவியிருந்தது என்று இப்போதிற்கு ஒருவாறு கொள்ளலாம்.

இவ்வாதீனகர்த்தர்கள் ஒவ்வொருவர் பெயருக்கு முன்பும் ''நிரம்ப அழகிய'' என்று ஆதி குருமூர்த்திகளின் பெயரைச் சேர்த்து வழங்குவது வழக்கம். இப்போது 29–ஆம் பட்டமாக **எழுந்தருளி விளங்குகின்ற நிரம்பஅழகிய ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள்** வாரிசு முறைப்படித் தந்தையாருக்குப் பின் 30.08.1985–இல் பட்ட மேற்று ஆதீனகர்த்தராக விளங்கி வருகிறார்கள்.

முற்காலத்தில் துழாவூராதீனத்திற்குச் சொத்துகளும் வருமானமும் நிரம்ப இருந்தன. மன்னர்கள் பலர் பல காலங் களில் ஆதீனத்திற்குச் சொத்துகளை எழுதி வைத்தார்கள். துழாவூர் முழுவதும் ஆதீனத்திற்குரிய இனாம் கிராமமாகவே இருந்தது. இனாம் ஒழிப்புச் சட்டத்தால் கிராமங்களைத் தமிழக அரசு எடுத்துக்கொள்ள நேரிட்டது. குறைந்த நஷ்ட ஈடு வழங்கப்பெற்றது. முன்பு வருவாய்க்கு வழி இருந்தது. இப்போது போதிய வருமானம் இல்லை. உபதேசம் பெறுவோர் அளிக்கும் காணிக்கையும் குருபூஜை போன்ற விழாக்களில் அன்பர்கள் அளிக்கும் காணிக்கைகளுமே வருமானமாகும்.

வருவாய் போதாத நிலையில், நித்திய பூசை நிரந்தர நிதித் திட்டமும், துழாவூர் நகரத்தார் அறக்கட்டளையும் ஏற்படுத்தப் பெற்றுள்ளன. தேவகோட்டை ஜமீன்தார் திருவாளர் அழ. அரு. சோம. நாராயணன் செட்டியார் அவர்கள் ஆதீனப் பணிகளிலும் வளர்ச்சியிலும் ஈடுபாடு மிக்கவர். அதுபோன்றே, காசிக்குப் பாதயாத்திரை செய்தவரும் பற்பல நூல்களை எழுதிய அறிஞருமான காசி ஸ்ரீஅரு. சோமசுந்தரம் செட்டியார் (அரு.சோ.) அவர்களும் ஆதீனத்தின்பால் ஈடுபாடுடையவர்கள். இவ்விருவரின், முயற்சியாலேயே நித்தியபூசை நிரந்தர நிதித்திட்டம் ஏற்பட்டது. இந்நிதியின் வட்டித்தொகையைக் கொண்டு நாள் வழிபாடு நன்கு நடைபெற்று வருகிறது. ஆண்டுதோறும் குறிப்பிட்ட நாளில் உபயதாரர் பெயரால் அருச்சனை செய்து திருநீற்றுப்பிரசாதம் அனுப்பப்பெற்று வருகிறது.

சுவாமிகளைத் தலைவராகவும் முற்குறிப்பிட்ட தேவகோட்டை நாராயணன் செட்டியார் அவர்களைச் செயலாளராகவும், கண்டரமாணிக்கம் திரு.செ.நி.நா.லெ. நாராயணன் செட்டியார் அவர்களைப் பொருளாளராகவும் கொண்டு துழாவூர் நகரத்தார் டிரஸ்ட் நிறுவப்பெற்றுள்ளது. இதன்மூலம் குருபூஜை, மாகேசுவர பூஜை, சைவசித்தாந்த வகுப்பு, இதர பொது தருமங்கள் நடைபெற்று வருகின்றன.

ஆண்டுதோறும் புரட்டாசி அமரபட்சம் பிரதமை திதியில் குருமுதல்வர் ஆதி நிரம்பஅழகிய தேசிக குருமூர்த்திகளின் குருபூசை சிறப்புற நடந்துவருகிறது. ஆண்டுதோறும் கோடை காலத்தில் ஒரு வாரம் சைவ சித்தாந்தப் பயிற்சி வகுப்பு அல்லது திருமுறை சமய வகுப்பு நடத்தப்பெற்று வருகிறது. தேவகோட்டை நாராயணன் செட்டியார் ஜமீன் பரம்பரையில் பிறந்திருந்தாலும் எளிமையாக வாழ்பவர். இராமகிருஷ்ண பரமஹம்சரின் பெயரில் ஒரு பள்ளியை நிறுவி மிகச் சிறப்பாக நடத்திவருபவர். அறிவுச் செல்வராக விளங்குபவர். கோயில் திருப்பணிகளிலும் இதுபோன்ற சைவம் பரப்பும் பணி களிலும் பேரார்வமுடையவர். இராஜரிஷியாகத் திகழ்பவர்.

வள்ளலாரிடத்தும் அன்புமிக்கவர். துழாவூர்ஆதீன பரம்பரையின் பணிகளுக்குத் தேவகோட்டை ஜமீன் பரம்பரை ஆதரவாக இருக்க வேண்டுமென்பது திருவருள் திட்டம் போலும்.

இப்போது 29-ஆம் பட்டமாக விளங்கி வருகின்ற ஸ்ரீ நிரம்பஅழகிய தேசிகராகிய ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் 08.10.1942-இல் பிறந்தவர்கள். தந்தையாராகிய 28-ஆம் பட்டம் பாலஉதயமூர்த்தி தேசிகரிடமே சமயதீட்சையும், விசேட தீட்சையும் சிவபூஜையும் நேர்முகப்பயிற்சியும் பெற்று வளர்ந்தவர்கள். இவர்கள் திருமண நாள் 06.06.1962. துணைவியார் சுசீலா அம்மையார். இவர்களுக்கு மூன்று பெண்களும் ஒருமகனும் உள்ளனர். பெண்கள் திருமணம் செய்து கொடுக்கப் பெற்றுவிட்டனர். மகனார் குன்றக்குடி ஆதீனப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகிறார். சுவாமிகளின் 60-ஆம் ஆண்டு நிறைவு மணிவிழா 2002-இல் நிகழ்ந்தது.

சுவாமிகள் மடாலய பூஜை முதலியவற்றைச் சிறப்பாகச் செய்து வருவதுடன் அவ்வப்போது துண்டுப் பிரசுர நூல் களையும் வெளியிட்டு வருகிறார்கள்.

நகரத்தார் பெண்மணிகளுக்கு முறைப்படி தீட்சையளித்து வருகிறார்கள்.

குணநலம் மிக்கவர்கள். பழகுதற்கு இனியவர்கள்.

[illegible]

வேளாக்குறிச்சி ஆதீனம்

திருப்புகலூர்

திருநெல்வேலி மாவட்டம்
வேளாக்குறிச்சியில் தோன்றிய
இவ்வாதீனம் இப்போதிருப்பது
தஞ்சாவூர் மாவட்டம் திருப்புகலூரில்.
துழாவூர் ஆதீனம் போன்றே இதன்
ஆதீனகர்த்தர்கள் இல்லறத்தார்.
தஞ்சாவூர் மாவட்டத்தில் திருமீயச்சூர்,
திருஇராமனதீச்சரம், திருப்புகலூர்,
திருச்செங்காட்டங்குடி ஆகிய நான்கு
கோயில்கள் இவ்வாதீன ஆட்சியில் உள்ளன.
திருவாரூர் தியாகராாசசுவாமி திருக்கோயிலின்
மிகப்பெரிய கட்டளைகளான
அபிஷேகக் கட்டளை, அன்னதானக் கட்டளை
ஆகிய இரண்டும் இவ்வாதீன நிர்வாகம்.

வேளாக்குறிச்சி ஆதீனம்

திருப்புகலூர்

வேளாக்குறிச்சி

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் வட்டத்தில் கல்லிடைக்குறிச்சி என்றொரு பேரூர் உள்ளது. தேர்வு நிலைப் பேரூராட்சி (செலக்ஷன் கிரேடு பஞ்சாயத்து). திருநெல்வேலியிலிருந்து 23 கிலோமீட்டர். சிறந்த சிவத் தலம். மானேந்தியப்பர் கோயில் என்ற புகழ்பெற்ற சிவன் கோயில் உள்ளது. திருமால் கோயிலும் உண்டு. கல்லிடைக் குறிச்சி திருவாவடுதுறை ஆதீனத்தாற் புகழ்பெற்றது. திருவாவடுதுறை ஆதீனக் கிளைமடங்களில் தொன்மை யானதும், தென் மாவட்ட சொத்துகளின் நிர்வாகத்திற்குரியதும், இளையபட்டம் சுவாமிகள் தங்குவதற்குரியதுமான கிளை மடம் கல்லிடைக்குறிச்சியில் தான் உள்ளது.

கல்லிடைக்குறிச்சியின் ஒரு பகுதியே வேளாக்குறிச்சி. வேளாளர்கள் மிகுதியாக வாழ்ந்த பகுதி வேளாக்குறிச்சி. வணிகர்கள் மிகுதியாக வாழ்ந்த பகுதி சிகாமணிபுரம். அந்தணர்கள் மிகுதியாக வாழ்ந்த பகுதி பார்ப்பார்க்குறிச்சி. இன்றும் கல்லிடைக்குறிச்சியின் மேற்குப்பகுதியில் அந்தணர்கள் மிகுதியாக வாழ்கின்றனர். புகழ்பெற்ற வரலாற்றறிஞர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியாரின் ஊர் கல்லிடைக்குறிச்சியே. கல்லிடைக்குறிச்சியின் ஒரு பகுதியாகிய வேளாக்குறிச்சியில் தோன்றியதே வேளாக்குறிச்சி ஆதீனம்.

வேளாக்குறிச்சி ஆதீனம்

வேளாக்குறிச்சியில் தோன்றிய இவ்வாதீனம் வேளாக் குறிச்சி ஆதீனம் எனப்பெயர் பெற்றது. இவ்வாதீனத்தைத்

தோற்றுவித்தருளியவர் திருக்கயிலாய பரம்பரையில் ஸ்ரீகண்டபரமசிவத்திடம் உபதேசம் பெற்ற மரபில்வந்த சத்தியஞான தேசிக தீர்க்கதரிசினிகள்.

திருக்கயிலாய பரம்பரையில் மெய்கண்டாருக்கு முன்னர் விளங்கிய அகச்சந்தான குரவர்களில் ஒருவர் சத்தியஞான தரிசினிகள். அவர் பெயரை இவர் (வேளாக்குறிச்சி ஆதீன நிறுவனர்) வைத்துக் கொண்டுள்ளார். அவர் வேறு, இவர் வேறு. அகச் சந்தானகுரவர்களில் ஒருவராகிய சத்தியஞான தரிசினிகள் வேறு, வேளாக்குறிச்சி ஆதீன நிறுவனராகிய இச் சத்தியஞானதேசிக தீர்க்கதரிசினிகள் வேறு என்பதை அறிய வேண்டும். வானவீதியில் சென்று கொண்டிருந்த பரஞ்சோதி முனிவர் கீழே பூமியில் சிறுவராக விளையாடிக் கொண்டிருந்த மெய்கண்டாரைக் கண்டு வானத்தினின்றும் இழிந்து பூமிக்குவந்து மெய்கண்டாருக்கு உபதேசித்தார். பரஞ்சோதிமுனிவரின் குரு சத்தியஞானதரிசினிகள். அப் பெயரை அப்படியே தமிழ்ப்படுத்தி மெய்கண்டாருக்குச் சூட்டினார். சத்தியஞானத்தைத் தரிசித்தவர் சத்திய ஞான தரிசினி. உண்மையைக் கண்டவர் மெய்கண்டார். சத்தியஞான தரிசினி என்ற பெயரின் தமிழாக்கமே மெய்கண்டார் என்பது. சத்தியஞான தேசிக தீர்க்க தரிசினிகள் என்று வேளாக்குறிச்சி ஆதீன நிறுவனர் பெயரை வழங்குகிறார்கள்.

வேளாக்குறிச்சி ஆதீன குருமகாசந்நிதானங்கள்

1.	ஸ்ரீலஸ்ரீ சத்தியஞான தேசிக தீர்க்கதரிசினிகள்	(ஆதீன ஸ்தாபகர்)
2.	ஸ்ரீலஸ்ரீ மகாதேவ பண்டார சந்நிதி	1575 – 1611
3.	ஸ்ரீலஸ்ரீ வைத்திலிங்க பண்டார சந்நிதி	1611 – 1644
4.	ஸ்ரீலஸ்ரீ அஜபா நடேஸ்வர பண்டார சந்நிதி	1644 – 1698
5.	ஸ்ரீலஸ்ரீ மகாதேவ பண்டார சந்நிதி	1698 – 1725
6.	ஸ்ரீலஸ்ரீ அஜபா நடேஸ்வர பண்டார சந்நிதி	1725 – 1742
7.	ஸ்ரீலஸ்ரீ மகாதேவ பண்டார சந்நிதி	1742 – 1763
8.	ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணிய தேசிக பண்டார சந்நிதி	1763 – 1779

9. ஸ்ரீலஸ்ரீ மகாதேவ பண்டார சந்நிதி 1779 – 1791
10. ஸ்ரீலஸ்ரீ வைத்திலிங்க பண்டார சந்நிதி 1791 – 1802
11. ஸ்ரீலஸ்ரீ அஜபா நடேஸ்வர பண்டார சந்நிதி 1802 – 1811
12. ஸ்ரீலஸ்ரீ மகாதேவ பண்டார சந்நிதி 1811 – 1821
13. ஸ்ரீலஸ்ரீ அஜபா நடேஸ்வர பண்டார சந்நிதி 1821 – 1844
14. ஸ்ரீலஸ்ரீ வைத்திலிங்க பண்டார சந்நிதி 1844 – 1893
15. ஸ்ரீலஸ்ரீ அஜபா நடேஸ்வர பண்டார சந்நிதி 1893 – 1920
16. ஸ்ரீலஸ்ரீ வைத்திலிங்க பண்டார சந்நிதி 1920 – 1953
17. ஸ்ரீலஸ்ரீ அஜபா நடேஸ்வர பண்டார சந்நிதி 1953 -2007
18. ஸ்ரீலஸ்ரீ சத்தியஞான மகாதேவதேசிக பரமாசாரிய சுவாமிகள் 2007 முதல்

ஆதீன மரபுகள்

இதுவும் துழாவூராதீனத்தைப் போன்றே இல்லறத்தார் ஆதீனம். இதன் ஆதீனகர்த்தர்கள் இல்லறத்தார். தந்தைக்குப் பின் மகன் (மூத்த குமாரர்), அவருக்குப்பின் அவருடைய மூத்தகுமாரர் என்று வழிவழியாக இதன் ஆதீனகர்த்தர்கள் வருவர். துறவறத்தார் ஆதீனகர்த்தர்களாக இருக்குமிடங்களில் சீடபரம்பரை. இல்லறத்தார் ஆதீனகர்த்தர்களாக இருக்குமிடங் களில் வம்ச பரம்பரை. ஆதீனகர்த்தரின் மூத்த மகனாருக்குப் பதினாறு வயதிற்குள் சமயதீக்கை விசேடதீக்கை ஆதீன கர்த்தரே செய்துவைப்பார். பின்னர் திருமணம், உரிய காலத்தில் நிர்வாணதீக்கை, ஆசாரிய அபிடேகம் செய்து வைக்கப் பெறும். ஆதீனகர்த்தர் பரிபூரணமடைந்த 13–ஆம் நாள் அவருடைய மூத்தகுமாரர் ஞானபீடம் ஏற்பார். அதாவது பட்டத்திற்கு வருவார். மடத்தில் பூஜை, மாகேஸ்வர பூசை, சிவாலய வழிபாடு, பல்லக்கில் பட்டினப்பிரவேசம் செய்து கொலுவீற்றிருந்து சீடர்களுக்கும் பக்தர்களுக்கும் ஆசி வழங்கி ஆதீனப் பணிகளைத் தொடங்குவது மரபு. ஆதீனகர்த்தர் களுக்கு ஆன்மார்த்த வழிபடுமூர்த்தி தியாகராஜசுவாமி.

ஆதீனக் கிளைமடங்கள்

ஆதீனத்தின் பிரதானமடம் திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் வட்டம் கல்லிடைக்குறிச்சி (வேளாக்குறிச்சி) யில் உள்ளது. பாபநாசம், திருக்குற்றாலம், சுசீந்திரம், திருச்சிராப்பள்ளி, திருவாரூர், திருப்புகலூர் ஆகிய இடங் களில் கிளைமடங்கள் உள்ளன.

ஆதீன சொத்துகள்

ஆதீனத்தின் நிர்வாகம், ஆன்மார்த்த வழிபாடு, மாகேசுவர பூசை, குருபூசை, முதலியவற்றிற்கான சொத்துகள் நன்செய் புன்செய் நிலங்கள் கட்டிடங்கள் முதலியனவே. திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைக்குறிச்சியிலும் கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரத்திலும், புதுக்கோட்டை மாவட்டம் வீரப்பட்டி வெள்ளாளர் கிராமத்திலும், தஞ்சாவூர் மாவட்டம் திருப்புகலூரிலும் திருவாரூரிலும் சொத்துகள் உள்ளன.

ஆதீனக் கோயில்கள்

திருநெல்வேலி மாவட்டத்தில் தோன்றிய இவ்வாதீனத் திற்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் முக்கியமான நான்கு பெருங்கோயில்கள் சொந்த நிர்வாகத்தில் உள்ளன. நான்கும் பாடல்பெற்ற தலங்கள்.

1. திருப்புகலூர்
2. திருஇராமனதீச்சரம்
3. திருச்செங்காட்டங்குடி
4. திருமீயச்சூர்

என்பன அவை.

1. திருப்புகலூர்

நன்னிலம் நாகப்பட்டினம் சாலையில் உள்ளது. சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப்பெற்றது. திருநாவுக்கரசராகிய அப்பர் சித்திரைச் சதய நாளில் முத்தி பெற்ற தலம். சுந்தரருக்கு இறைவன் செங்கற்களைப் பொன்னாக மாற்றித் தந்தருளிய தலம். முருகநாயனார் அவதாரம்

செய்தருளிய தலம். திருப்புகலூரில் முருகநாயனார் மடம் அமைத்துக் கொண்டு தொண்டு செய்தார். முருகநாயனார் திருமடத்தில் அவரோடு சம்பந்தர், அப்பர், சிறுத்தொண்டர், திருநீலநக்கர் ஆகியோர் தங்கியிருந்து வழிபட்டு மகிழ்ந்தார்கள். கோயிலின் முன்னால் வேளாக்குறிச்சி ஆதீனம் உள்ளது. இப்போது வேளாக்குறிச்சி ஆதீனம் உள்ள இந்த இடமே முன்னாளில் முருகநாயனார் திருமடமாக இருக்கலாம் என்று கருதப்பெறுகிறது.

மீயச்சூர் போன்றே திருப்புகலூரும் இரண்டு தலங்களாகக் கணக்கிடப்பெறுகிறது. திருப்புகலூர் ஒன்று. திருப்புகலூர் வர்த்தமானீச்சரம் மற்றொன்று. திருப்புகலூர்க் கோயில் வளாகத் தினுள்ளேயே வர்த்தமானீச்சரம் தனிக்கோயிலாக உள்ளது.

திருப்புகலூர் – இறைவன் : அக்கினிபுரீஸ்வரர். இறைவி : கருந்தார்குழலி. தலமரம் – புன்னை. தீர்த்தம் – அக்கினி தீர்த்தம். மூவராலும் பாடப்பெற்றது. சுற்றிலும் அகழி சூழ்ந்த பெரிய கோயில். அகழியே நாற்புறமும் தீர்த்தமாக உள்ளது. நடராச சபை மிகவும் அழகானது. உற்சவமூர்த்தி களில் அக்கினிமூர்த்தி 2 முகம், 4 கொம்புகள், தலையில் 7 ஜுவாலைகள், 7 கைகள், 3 திருவடிகள் கொண்ட தனிச் சிறப்பான திருமேனி.

திருப்புகலூர்க் கோயிலுக்குள்ளேயே மூலவருக்கு வலப்பால் உள்ள தனிக்கோயில் திருப்புகலூர் வர்த்த மானேச்சரம். இதன் சந்நிதியில் நுழைந்ததும் இடப்புறம் முருகநாயனார் சந்நிதி. கருவறையில் வர்த்தமானலிங்கம் அழகியது. அம்பிகை மனோன்மணி. வர்த்தமானீச்சரம் சம்பந்தர் பாடல் மட்டுமே பெற்றது.

திருநாவுக்கரசர் (அப்பர்) இத்தலத்தில் முத்திபெற்றது (சிவலிங்க ஐக்கியமானது) இத்தலத்தின் தனிச்சிறப்பு. இச் சிறப்பு வாய்ந்த தலம் வேளாக்குறிச்சி ஆதீனத்தின் ஆட்சி யிலுள்ளது ஆதீனத்திற்கு ஒரு தனிச்சிறப்பு. எங்கோ தொலைவில் பாண்டிய நாட்டில் தாமிரவருணிக் கரையில் திருநெல்வேலி மாவட்டத்தில் வேளாக்குறிச்சியில் தோன்றிய

ஆதீனம் சோழநாட்டில் காவிரிக்கரையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் திருநாவுக்கரசர் சிவலிங்க ஐக்கியமாகி முத்தி பெற்ற தலத்தைத் தம் ஆட்சியில் உடையது என்றால் அது இவ்வாதீனத்திற்கு எவ்வளவு சிறப்பு!

முருகநாயனாரின் அன்றைய திருமடமே, சம்பந்தரும் அப்பரும் சிறுத்தொண்டரும் நீலநக்கரும் முருகநாயனாரும் கூடியிருந்த திருமடமே இன்றைய வேளாக்குறிச்சியாதீனத் திருமடம் என்றால் அதனினும் வேறு சிறப்பு வேண்டுமோ!

2. திருஇராமனதீச்சரம்

திருச்செங்காட்டங்குடியிலிருந்து 3 கி.மீ. தொலைவி லுள்ளது. திருஞானசம்பந்தராற் பாடப்பெற்றது. இராவணனைக் கொன்ற கொலைப்பாவம் நீங்க இராமன் இத்தலத்தில் வழிபட்டதால் இராமனதீச்சரம் எனப் பெயர் பெற்றதென்பர். இவ்வூரிலுள்ள சௌரிராஜப்பெருமாள் கோயில் இப்பகுதி யில் புகழ்பெற்ற திருமால் தலம்.

3. திருச்செங்காட்டங்குடி

திருவாரூர் திருமருகல் சாலை வழியில் செல்லவேண்டும். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரும் சிவபெருமானுக்குப் பிள்ளைக்கறி சமைத்து அமுது படைத்தவருமான சிறுத் தொண்டநாயனாரால் புகழ்பெற்ற தலம். சிறுத்தொண்டர் பிறந்து வாழ்ந்து வழிபட்டு அருள்பெற்ற தலம். கோயிற் பெயர் : கணபதீச்சுரம். வாதாபிகணபதியால் புகழ்பெற்றது. இறைவன் – உத்தராபதீஸ்வர். இறைவி – குழலம்மை. தலமரம் – ஆத்தி. சம்பந்தர், அப்பர் இருவரும் பாடியருளிய தலம். ஊரின் நடுவில் கோயில். சுவாமி கருவறை அகழி அமைப்புடையது. உத்தராபதீசுவரரின் உற்சவத் திருமேனிக்கு நாள்தோறும் பச்சைக் கற்பூரமும் குங்குமப்பூவும் சாத்தப் பெறுகிறது. கோயிலின் பின்புற வீதியில் உள்ள மடாலயத்தில் சித்திரைப்பரணியில் உத்தராபதீஸ்வரர் அமுது படையல் விழா நிகழ்கிறது. அதன் அருகிலுள்ள சிறுத்தொண்டர் மாளிகை இப்போது கோயிலாக உள்ளது.

4. திருமீயச்சூர்

மயிலாடுதுறை திருவாரூர் சாலையில் பேரளம் வழியாகச் செல்லவேண்டும். மீயச்சூர்க் கோயில் பெரியது. அதற்குள்ளேயே மீயச்சூர் இளங்கோயில் என்றொரு கோயில் உள்ளது. இரண்டும் தனித்தனித் தலங்களாகக் கணக்கிடப் பெறும். மீயச்சூர் – சம்பந்தர் பாடல்பெற்றது. மீயச்சூர் இளங்கோயில் – அப்பர் பாடல் பெற்றது. இவ்விரண்டும் ஒரு வளாகத்திலேயே அடுத்தடுத்து உள்ளன. இளங்கோயில் என்பது கோயில் வகைகளில் ஒன்று. நன்னிலத்துப் பெருங் கோயில், கடம்பூர்க் கரக்கோயில், விளநகர் ஞாழற்கோயில், கருப்பறியலூர்க் கொகுடிக்கோயில், திருக்கச்சூர் ஆலக் கோயில், மீயச்சூர் இளங்கோயில். ஒருகாலத்தில் பாலாலய மாகச் செய்யப்பட்டு அப்படியே நிலைத்திருக்கலாம். பெரிய கோயில்களுக்குத் திருப்பணி செய்யும் போது தற்காலிக மாகச் செய்துகொள்வது பாலாலயம் (இளங்கோயில்).

இக்கோயில் அம்பிகையின் பெயர் லலிதாம்பிகை. புகழ்பெற்ற **லலிதா சகஸ்ரநாமம்** இவ்வம்பிகையின் மீது செய்யப் பெற்றது. இத்தலம் சிறப்புவாய்ந்த சக்தி ஸ்தலம்.

ஆதீனக் கட்டளைகள்

தஞ்சாவூர் மாவட்டக் கோயில்களில் பெரியகோயில் திருவாரூர்க்கோயில். கோயில் 5 வேலி, குளம் 5 வேலி, ஓடை 5 வேலி என்ற பெருமையுடையது. அளவாலும் சிறப்பாலும் சொத்துகளாலும் நிர்வாகத்தாலும் மிகப்பெரிய கோயில். தமிழ்நாட்டு அரசின் இந்து சமய அறநிலையத் துறையின் ஆட்சியிலுள்ளது.

இவ்வளவு பெரிய திருக்கோயிலின் வழிபாட்டையும் அறங்களையும் நடத்தப் பதின்மூன்று கட்டளைகள் உள்ளன. ஒவ்வொரு கட்டளைக்கும் தனித்தனியே அறங்காவலர்கள் உள்ளனர். தனித்தனியே சொத்துகளும் உள்ளன. 13 கட்டளைகளுள், அபிஷேகக் கட்டளை, அன்னதானக் கட்டளை, இராஜன் கட்டளை, உள்துறைக் கட்டளை என்ற நான்கு கட்டளைகள் முக்கியமானவை.

எல்லாவற்றிலும் பெரிய கட்டளை அபிஷேகக் கட்டளை. அதற்கு அடுத்தது இராஜன் கட்டளை. அபிஷேகக் கட்டளை வேளாக்குறிச்சி ஆதீனத்தின் ஆட்சியிலுள்ளது. இராஜன் கட்டளை தருமபுர ஆதீனத்தின் ஆட்சியிலுள்ளது. அன்ன தானக் கட்டளையும் வேளாக்குறிச்சி ஆதீனத்தின் ஆட்சியே. உள்துறைக் கட்டளை வடபாதிமங்கலம் தியாகராச முதலியார் குடும்பத்தின் ஆளுகையில் உள்ளது.

அபிஷேகக் கட்டளைக்கும் அன்னதானக் கட்டளைக்கும் வேளாக்குறிச்சி ஆதீனகர்த்தர் பரம்பரை அறங்காவலர். இராஜன் கட்டளைக்குத் தருமபுர ஆதீனகர்த்தர் பரம்பரை அறங்காவலர். உள்துறைக் கட்டளைக்கு வி.எஸ்.டி. குடும்பத்தார்.

அபிஷேகக் கட்டளைக்கு மட்டும் சொத்து 4500 ஏக்கர் நன்செய் நிலங்கள். வேறு எந்தக் கட்டளைக்கும் இவ்வளவு சொத்து இல்லை. இந்தக் கட்டளைக்கு வேளாக்குறிச்சி ஆதீனத்தார் பரம்பரை அறங்காவலர்களாக இருக்கிறார்கள். உண்மையைச் சொன்னால் இந்த அபிஷேகக் கட்டளைச் சொத்தின் வருமானத்தைக் கொண்டுதான் கோயிலின் நிர்வாகம் முழுவதுமே பெரும்பாலும் நடைபெறுகிறது. அவ்வளவு பெரிய கட்டளை, அவ்வளவு பெரிய சொத்து, அவ்வளவு பெரிய வரவு செலவு இது. இதற்குப் பரம்பரை அறங்காவலர்கள் வேளாக்குறிச்சி ஆதீனத்தார் என்பது எவ்வளவு பெரிய சிறப்பு!

தருமபுரம் ஆதீனமும் வேளாக்குறிச்சி ஆதீனமும் உண்டாவதற்கு முன்பு இக்கட்டளைகளைத் தருமபுர ஆதீன நிறுவனர் குருஞானசம்பந்தரின் குருநாதராகிய கமலை ஞானப்பிரகாசர் நிர்வகித்திருக்கிறார். கமலை ஞானப் பிரகாசரைப் பற்றித் தருமபுர ஆதீன வரலாற்றிற் கூறி யுள்ளோம். கமலை ஞானப்பிரகாசர் இல்லறத்தார். அவரது மாணாக்கர் குருஞானசம்பந்தர் துறவி. திருவாரூர்க் கோயில் இராஜன் கட்டளை நிர்வாகம் குருஞானசம்பந்தர் நிறுவிய தருமபுர ஆதீனத்திற்குச் சென்றது. அபிஷேகக் கட்டளையும்

அன்னதானக் கட்டளையும் வேளாக்குறிச்சி ஆதீனத்திற்குச் சென்றன. கமலை ஞானப்பிரகாசரும் இல்லறத்தார். வேளாக்குறிச்சி ஆதீனமும் இல்லறத்தார். கமலை ஞானப்பிரகாசர் வழியில் ஒரு இல்லறத்தார் பரம்பரையாகவே வேளாக்குறிச்சி ஆதீனம் தோன்றியிருக்கலாம்.

வேதாரணிய புராணம் பாடிய அகோர முனிவர் கமலை ஞானப்பிரகாசர் பரம்பரையில் வந்தவர் என்பர். அவருக்கு அகோரத் தம்பிரான் என்றும் பெயர். அவர் சிலகாலம் திருவாரூர் அபிஷேகக் கட்டளை அன்னதானக் கட்டளை களை நிர்வகித்துள்ளார். அகோரசிவத் தியாகராஜ பண்டாரம் எனக் கணக்குகளில் கையொப்பமிடுவாராம். தியாகராஜ பண்டாரம் என்பது கோயில் முத்திரை. இச்செய்தியை இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை சோமசுந்தர தேசிகர் கூறுகிறார்.

இன்னொரு செய்தியும் இங்கே கருதத்தக்கது. வேளாக் குறிச்சி ஆதீன குருமகாசந்நிதானங்களில் பலர், பெரும்பாலோர், அஜபா நடேஸ்வர பண்டார சந்நிதிகள் எனப் பெயர்பூண்ட வர்கள். அஜபா நடனம் திருவாரூர்த் தியாகராசப் பெருமானுக் குரியது. திருவாரூர் சத்த (ஏழு) விடங்கத் தலங்களுள் ஒன்று. ஏழிலும் முதலாவது. ஏழுவிடங்கத் தலங்களுக்கும் ஏழு நடனம் உண்டு. திருவாரூர்த் தியாகராஜருக்கு (வீதி விடங்கருக்கு) அஜபா நடனம். திருமால் தியாகராஜரைத் தமது மார்பில் (இதயத்தில்) வைத்து ஜபிக்கிறார் (தியானிக்கிறார்). அந்த ஜபம் வாயால் ஜபிக்காதது. ஜபா–ஜபிப்பது. அஜபா– ஜபிக்காதது, வாயால் ஜபிக்காதது. திருவாரூர்த் தியாகராஜரின் நடனம் அஜபா நடனம். திருமூலர் திருமந்திரத்தில் அசபை எனக்கூறப் பெறுவதும் ஈண்டறியத்தக்கது. திருவாரூர் தியாகராஜரின் நடனம் அஜபா நடனம். வேளாக்குறிச்சி ஆதீன கர்த்தர்கள் அஜபா நடேஸ்வர பண்டாரசந்நிதிகள். இரண்டிற்கும் உள்ள அஜபா சம்பந்தம் மிகப்பொருத்தமாக அமைந்துள்ளது.

1937–இல் திருவாரூர்க்கோயில் தமிழ்நாட்டு அரசின் இந்து சமய அறநிலையத் துறையின் ஆட்சிக்கு வந்தது. அறநிலையத்துறையாரால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்

பெற்று நீதிமன்றம் திட்டம் (கோர்ட் ஸ்கீம்) வகுத்தளித்தது. அதன்படிச் சிலகாலம் நடந்துவந்தது. அதன்பின் அபிஷேகக் கட்டளை அன்னதானக் கட்டளைகளின் சொத்துப் பொறுப்பைக் கோயில் நிர்வாகமே எடுத்துக்கொண்டது. வேளாக்குறிச்சி ஆதீனம் கட்டளை அறங்காவலராக உள்ளது. ஆனால் இராஜன் கட்டளை சொத்துப் பொறுப்பை அற நிலையத்துறை எடுத்துக்கொள்ளவில்லை. அதன் முழுப் பொறுப்பும் தருமபுர ஆதீனத்திடமே இன்றும் உள்ளது. திருமீயச்சூர், திருச்செங்காட்டங்குடி, திருப்புகலூர், இராமனதீசுவரம் கோயில்களுக்கும் திருவாரூர் அபிஷேகக் கட்டளை அன்னதானக் கட்டளைகளுக்கும் வேளாக்குறிச்சி ஆதீனத்தாரர் பரம்பரை அறங்காவலர்களாகத் தொடர்ந்து இருந்து வருகின்றனர்.

ஆதீன நிறுவனர் குருமுதல்வர்
ஸ்ரீ சத்தியஞான தீர்க்கதரிசினிகள்

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானத்தில் நான்காவது சந்தானாசாரியர் உமாபதி சிவாசாரியர். உமாபதி சிவத்தின் மாணவர் அருள்நமச்சிவாயர் (மச்சுச்செட்டியார்). அருள்நமச்சிவாயரின் மாணவர் காழி கங்கை மெய்கண்டார். அவர் மாணவர் காழி சிற்றம்பலநாடிகள். சிற்றம்பல நாடி களின் மாணவர் பழுதைகட்டி சம்பந்தமுனிவர். இச்சம்பந்த முனிவரின் மாணவர் காவை அம்பலநாத சுவாமிகள். காவை அம்பலநாதரின் மாணவரே சத்தியஞான தீர்க்கதரிசினிகள் (வேளாக்குறிச்சி ஆதீன நிறுவனர்).

சத்தியஞான தீர்க்கதரிசினிகள் தோன்றிய ஊர் கும்பகோணத்திற்கு அருகே உள்ள சிவபுரம். சிவபுரம் ஞானப் பிரகாசரும் சிவபுரம் தத்துவப் பிரகாசரும் இவ்வூரினர். இவர் காலத்தினர். வேளாக்குறிச்சி ஆதீன நிறுவனராகிய சத்திய ஞானிகளின் மீது ''சத்தியஞான பண்டாரம் பிள்ளைத் தமிழ்'' என்றொரு நூல் பாடப்பெற்றுள்ளது. பாடியவர் பெயர் தெரியவில்லை. தஞ்சாவூர் இராஜாசரபோஜியின்

சரஸ்வதிமகால் நூலகத்தில் அதன் ஏட்டுச் சுவடி உள்ளது. சரஸ்வதி மகால் வெளியீடாக அச்சிட்டு வெளியாகியுள்ளது.

வேளாக்குறிச்சி ஆதீன குருமரபு அட்டவணை

ஸ்ரீகண்டபரமசிவம்
திருநந்தி தேவர்
சனற்குமாரர்
சத்தியஞானதரிசினிகள்
பரஞ்சோதி முனிவர்
மெய்கண்டார்
அருணந்தி சிவாசாரியர்
மறைஞான சம்பந்தர்
உமாபதி சிவாசாரியர்
அருள்நமச்சிவாயர்

- சித்தர் சிவப்பிரகாசர்
  - நமச்சிவாய மூர்த்திகள் (திருவாவடுதுறை ஆதீன நிறுவனர்)
- காழி கங்கை மெய்கண்டார்
  - காழி பழுதைகட்டி சிற்றம்பல நாடிகள்
    - பழுதைக்கட்டி சம்பந்த முனிவர்
      - காவை அம்பலநாத சுவாமிகள்
        - சத்தியஞானதேசிக தீர்க்கதரிசினிகள் (வேளாக்குறிச்சி ஆதீன நிறுவனர்)
      - சிவபுரம் ஞானப்பிரகாசர்
        - சிவபுரம் தத்துவப் பிரகாசர்
        - செட்டித்தெரு பழுதைகட்டி ஞானப்பிரகாசர்
        - கமலை ஞானப்பிரகாசர்
        - குருஞான சம்பந்தர் (தருமபுர ஆதீன நிறுவனர்)
    - காஞ்சி ஞானப்பிரகாசர் (காஞ்சி ஆதீன நிறுவனர்)

17-ஆவது பட்டம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அஜபாநடேஸ்வர சத்தியஞான தேசிக பரமாசாரிய சுவாமிகள்

16-ஆவது குருமூர்த்திகளான ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க பண்டார சந்நிதிகள் திருமதி கமலாம்பாள் ஆகியோரின் அருந்தவப் புதல்வராக 16.11.1926 அட்சய ஆண்டு கார்த்திகைத் திங்கள் முதல்நாள் ரேவதி விண்மீன் கூடிய நன்னாளில் திருவாரூர்த் திருநகரில் பிறந்தருளினார்கள்.

கல்லிடைக்குறிச்சியில் அம்மான் பராமரிப்பில் வளர்ந்து தொடக்கக்கல்வி கற்றார்கள். திருப்புகலூருக்குத் திரும்பி நன்னிலம் நகரில் உயர்நிலைப்பள்ளிக் கல்வியைத் தொடர்ந்தார்கள். தந்தையாரிடம் சமய தீக்கை பெற்று, மயிலாடுதுறையில் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்களிடம் சாத்திர தோத்திர நூல்களை முறைப்படிப் பயின்றார்கள். வேத சிவாகம நூல்களைப் போலகம் பிரம்மஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரிகளிடமும் திருப்புகலூர் சிவஸ்ரீ குப்புசாமி சிவாசாரியரிடமும் கற்றுத் தெளிந்தார்கள். 17-ஆம் அகவையில் விசேடதீக்கை பெற்று சிவபூஜை செய்யத் தொடங்கினார்கள்.

26-ஆம் அகவையில் 13.10.1952 (நந்தன ஆனி 30)-இல் திருத்துறைப்பூண்டியில் திருமணம். நான்கு ஆண்மகாரும் நான்கு பெண் மகாரும் நன்மக்கட்பேறு.

திருமணத்தின்பின் நிர்வாணதீக்கை, ஆசாரியாபிடேகம், இளவரசுப்பட்டம், தஞ்சாவூர் மடத்தில் தங்கியிருக்கும் சந்நிதானத்திற்கு உதவியாக ஆதீன நிர்வாகப்பணி.

தந்தையார் 16-ஆவது குருமூர்த்திகள் 06.09.1953 விஜய ஆண்டு ஆவணித்திங்கள் 21-ஆம் நாள் தஞ்சாவூரில் சிவபரிபூரணம் எய்தவே அது முதல் ஆதீன மரபுப்படி 27-ஆம் அகவையில் திருப்புகலூர் திருமடத்தின் ஆதீனகர்த்தராகப் பட்டமேற்றருளினார்கள்.

ஆதீனக்கோயில்களுக்குத் திருப்பணிகளும் குடநீராட்டும் செய்வித்தார்கள். கிளைமடங்களுக்குத் திருப்பணியும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளும் செய்வித்தார்கள். சமயவகுப்புகள், ஆகமசதஸ்கள், திருமுறைமுற்றோதல் முதலியன நடத்திச் சமயபோதனாரத்தினம், சிரோன்மணி முதலிய பட்டங்களும் விருதுகளும் வழங்கும் வழக்கத்தை ஏற்படுத்தினார்கள்.

திருச்செங்காட்டங்குடிக் கோயிலுக்கு ஒரு முழுமையான திருப்பணியைச் செய்து பழுதுபட்ட பழைய இராஜகோபுரத்தை முற்றிலும் அகற்றிப் புதிதாக ஐந்து நிலை இராஜகோபுரம் கட்டி 25.05.1975-இல் குடநீராட்டு விழா நடத்தியதும், திருமீயச்சூர் கோயிலுக்குத் திருப்பணி செய்து 03.11.2000-இல் குடநீராட்டு நடத்தியதும் பெரும்பணிகள்.

சந்நிதானம் பட்டமேற்றருளிய (பீடாரோகண) வெள்ளி விழா 01.09.1978-இல் சிறப்புற நிகழ்ந்தது. 11.12.1886-இல் 60-ஆம் அகவை மணிவிழாவும், 26.11.1996-இல் 70-ஆம் அகவை நிறைவு பீமரதசாந்தி விழாவும், 27.11.2001-இல் 75-ஆம் அகவை நிறைவு பவளவிழாவும் சிறப்புற நிகழ்ந்தன. பீடாரோகணப் பொன்விழா 25.08.03-இல் குருபூஜை விழாவுடன் இணைத்துச் சிறப்புறக் கொண்டாடப் பெற்றது. பீடாரோகணப் பொன்விழா நினைவாகத் ''தத்துவப் பிரகாசம்'' திங்களிதழ் தொடங்கப் பெற்று அதன் வெளியீட்டு விழா 05.11.2003-இல் நிகழ்ந்தது.

அகவை முதிர்ந்து வருவதையும், பணிகளின் பழுவை யும் எண்ணித் தமது மூத்தகுமாரர் சத்தியஞான மகாதேவன் அவர்களுக்கு ஆசாரிய அபிடேகமும் பஞ்சாக்கர உபதேசமும் செய்து ஸ்ரீ சத்தியஞான மகாதேவ பரமாசாரிய சுவாமிகள் என்ற தீட்சாதிருநாமத்தையும் அருளி 23.08.2005 பார்த்திப ஆவணி 7 செவ்வாய்க் கிழமை இளையமடாதிபதியாக துவிதீய ஆசாரியராகப் பட்டாபிஷேகமும் பீடாரோகணமும் செய்வித் தருளினார்கள்.

அகவை 80 நிறைந்தது. 11.12.05 பார்த்திப கார்த்திகை 26-இல் திருப்புகலூர்த் திருமடத்தில் சதாபிடேகமும் 1008

பொற்பூக்களால் கனகாபிடேகமும் இளைய சந்நிதானமவர்களால் சிறப்பாகச் செய்விக்கப் பெற்றன.

53 ஆண்டுகாலம் அருளாட்சி நடத்திச் சதாபிடேகமும் கனகாபிடேகமும் கண்ட சந்நிதானமவர்கள் தாம் முத்திப் பேறு பெறும் நாளையும் நேரத்தையும் முன்னுணர்வுடன் முன்கூட்டியே குறிப்பாகத் தெரிவித்தருளினார்கள். அவ்வாறே 02.05.2006 விய சித்திரை 19 செவ்வாய்க்கிழமை சுக்கில பஞ்சமி திதியும் திருவாதிரை நட்சத்திரமும் கூடிய நன்னாளில் மாலை 5.00 மணிக்குத் திருப்புகலூரிலேயே பரிபூரணமாகி முத்திப்பேறு எய்தியருளினார்கள்.

18-ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சத்தியஞான மகாதேவதேசிக பரமாசாரிய சுவாமிகள்

(இப்போது 02.05.2006 முதல் அருளாட்சி செய்து வருபவர்கள்)

திருப்புகலூர் ஆதீனத் திருமடத்திலேயே 03.02.1962-இல் பிறந்தவர்கள். ஏனங்குடி உயர்நிலைப் பள்ளியில் படித்து, திருவாரூரில் அரசு கலைக்கல்லூரியில் பி.ஏ. பட்டம் பெற்றார்கள். மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் பொதுச்சட்டத்தில் இளங்கலைப்பட்டம் (பி.ஜி.எல்) பட்டம் பெற்றார்கள். இப்போது நம்மிடையே விளங்கும் ஆதீன குருமகாசந்நிதானங்களில் குன்றக்குடி அடிகளாரும் இவர்களுமே பட்டதாரிகள். அதிலும் இவர்கள் சட்டப் பட்டதாரி. *B.A., B.GL.,*

திரு. மு. சுப்பையா தேசிகரிடம் தோத்திர நூல்களைப் பயின்றும் திரு சொ. சிங்காரவேலனாரிடம் சாத்திர நூல்களைப் பாடங்கேட்டும் தோத்திர சாத்திரக் கல்வியிலும் அறிவு சிறக்கப் பெற்றார்கள்.

சிவஸ்ரீ வைத்தியநாத சிவாச்சாரியார் சிவஸ்ரீ சந்திரசேகர சாஸ்திரிகள் இவ்விருவரிடமும் வேதம் ஆகமம் காவியம் பாடங்கேட்டு அவற்றிலும் அறிவு சிறக்கப் பெற்றார்கள்.

முன்னைய சந்நிதானமும் திருத்தந்தையாருமாகிய 17-ஆம் பட்டத்துச் சுவாமிகள் முத்திப்பேறு பெற்ற பின்னர் 02.05.2006-இல் 18-ஆம் பட்டம் குருமகாசந்நிதானமாகப் பதவி யேற்று அருளாட்சி செய்து வருகிறார்கள்.

ஆதீனப் பணிகள் அனைத்தையும் திறம்படச் செவ்வனே நடத்தி வருகிறார்கள். நாடெங்கும் நிகழும் பெருவிழாக் களிலும் மாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்கள். தனிச்சொற்பொழிவாற்றுவதிலும் வல்லவராகத் திகழ்கிறார்கள். தகுதியுடையவர்களுக்குத் தீக்கையும் செய்வித்தருளுகிறார்கள்.

''தத்துவப்பிரகாசம்'' திங்களிதழ் நன்றாக வந்து கொண்டி ருக்கிறது. ஆதீனத்திலும், ஆதீனக்கோயில்களிலும் விழாக்காலங் களில் சமயஞான வளர்ச்சிக்கான ஆக்கப்பணிகள் தொடர்ந்து செய்வித்து வருகிறார்கள். ஒளிமயமான நீண்ட வருங்காலம் இவர்களுக்கு உள்ளது.

நாச்சியார்கோயில் ஆதீனம்

நாச்சியார்கோயில்

கும்பகோணம் அருகே

நாச்சியார்கோயிலில் உள்ள

இந்த ஆதீனம் இல்லறத்தார்களை

ஆதீனகர்த்தர்களாக உடையது.

தந்தை மகன் வழியில் பட்டத்துக்கு

வருகிறார்கள்.

நாச்சியார்கோயில் ஆதீனம்

நாச்சியார்கோயில்

கும்பகோணம் – திருவாரூர் சாலையில் 9–ஆவது கிலோ மீட்டரில் நாச்சியார்கோயில் உள்ளது. வைணவத் திருப்பதிகள் 108–இல் ஒன்று. 8–ஆவது கிலோமீட்டரில் திருநறையூர் உள்ளது. பாடல்பெற்ற சிவத்தலம். திருநறையூரும் நாச்சியார்கோயிலும் அடுத்தடுத்து உள்ளன. முன்னே இருப்பது திருநறையூர். அடுத்து இருப்பது நாச்சியார்கோயில். இரண்டுக்குமே திருநறையூர் நாச்சியார்கோயில் என்பன பொதுப்பெயர்கள். திருநறையூர் என்பது தேவார, திவ்வியப் பிரபந்த வழக்கில் தான் உள்ளது. மக்கள் வழக்கில் நாச்சியார்கோயில் என்பதே பெருவழக்காக உள்ளது.

திருநறையூர் மணிமாடம்	–	வைணவத்தலம். திருமங்கையாழ்வார் பாடல்
திருநறையூர்ச் சித்தீச்சரம்	–	சிவத்தலம். சம்பந்தர், சுந்தரர் பாடல்.

திருநறையூர்ச் சித்தீச்சரம் கோயிலுக்கு அடுத்து அமைந் துள்ளது நாச்சியார்கோயில் ஆதீனம்.

நாச்சியார்கோயிலாதீனத்திற்கு வள்ளல்சந்தான மடம் என்றும் மருதவாண சுவாமிகள் மடம் என்றும் பெயருண்டு. இதன் ஆதீனகர்த்தர்கள் இல்லறத்தார். தந்தை – மகன் என்று வம்ச பரம்பரையில் வருபவர்கள். வெள்ளாடை அணிபவர்கள்.

ஆதீன நிறுவனர், குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ மருதப்பதேசிகர். இவருக்குப் பின் நால்வர் பட்டத்திலிருந்திருக்கிறார்கள்.

இப்போது 6-ஆம் பட்டம் குருமகாசந்நிதானமாக எழுந்தருளி விளங்குபவர்கள் மருதவாணதேசிகர்.

ஆதீன குருபரம்பரை

1. ஸ்ரீலஸ்ரீ மருதப்பதேசிகர் (நிறுவனர், குருமுதல்வர்)
2. ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிகர்
3. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகர்
4. ஸ்ரீலஸ்ரீ சதாசிவ தேசிகர்
5. ஸ்ரீலஸ்ரீ சிவசுப்பிரமணிய தேசிகர்
6. **ஸ்ரீலஸ்ரீ மருதவாண தேசிகர்**
   (இப்போது பட்டத்திலுள்ளவர்கள்)

1. **ஸ்ரீலஸ்ரீ மருதப்பதேசிகர் :** இவருக்கு நாகலிங்கதேசிகர் என்ற ஒரு பெயரும் உண்டு. இவர் 95 வயது வரை வாழ்ந்தவர்.

2. **ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிகர் :** மருதப்பதேசிகரின் மகனார். அவருக்குப்பின் பட்டத்திற்கு வந்தவர். 90 வயது வரை வாழ்ந்தவர்.

3. **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகர் :** மாணிக்கவாசகதேசிகரின் மகனார். அவருக்குப்பின் பட்டத்திற்கு வந்தவர். 82/84 வயதுவரை வாழ்ந்தவர்.

4. **ஸ்ரீலஸ்ரீ சதாசிவ தேசிகர் :** சோமசுந்தரதேசிகரின் மகனார். அவருக்குப்பின் 1860-இல் பட்டத்திற்கு வந்தார். இவருக்குப் பிள்ளைப்பேறு (சந்ததி) இல்லை. சிவசுப்பிரமணியம் என்பவரைச் சுவீகாரம் தத்து எடுத்துக் கொண்டார். 70 வயது வரை வாழ்ந்தார்.

5. **ஸ்ரீலஸ்ரீ சிவசுப்பிரமணிய தேசிகர் :** சதாசிவதேசிகரின் சுவீகார மகனார். 1885 மே மாதத்தில் பிறந்தவர். 1904-மார்ச், சோபகிருது ஆண்டில் பட்டத்திற்கு வந்தார். 77 ஆண்டுகள் வாழ்ந்தார். 20.06.1962-இல் சிவப்பேறு பெற்றார்.

6. **ஸ்ரீலஸ்ரீ மருதவாண தேசிகர் :** இப்போது ஆறாம்பட்டம் குருநாதராக எழுந்தருளியிருப்பவர்கள். சிவசுப்பிரமணிய தேசிகரின் மகனார். பிறப்பு 1.11.1923, ருத்ரோத்காரி, ஐப்பசி 16 பூசநாள். சூரியனார்கோயில் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மீனாட்சிசுந்தர தேசிகரிடம் ஏறத்தாழப் பத்து ஆண்டுகள் (1933–1943) பாடங்கேட்டார். தந்தையார் சிவசுப்பிரமணிய தேசிகருக்குப் பின் 20.06.1962–இல் பட்டமேற்றார். தற்போது அகவை 79. துணைவியார் விருத்தாம்பாள் அம்மையார். இவர்களது மூத்த மகனார் திரு. **ம. சிவசுப்பிரமணியம்** 6.12.1953 மூல நாளில் பிறந்தவர் இளைய பட்டமாகப் பயிற்சிபெற்று வருகிறார். திருமணம் ஆகிவிட்டது. குழந்தைகள் உள்ளனர்.

ஆன்மார்த்த வழிபாடு

இவ்வாதீனத்தார்க்கு வழிபடு கடவுள் மருதவாணசுவாமி (கருப்புக்கல் சிவலிங்கம், கண்டகி சிலை). அம்பாயி அம்மன் (இரண்டே கைகளை உடையது. இரண்டு கைகள் உடைய விக்கிரகத்தை மனோன்மணி பிம்பம் என்பர்). இவை தவிர அண்ணாமலை ஈசுவரர் என்றொரு சிவலிங்கமும் உண்டு. நடராசரின் பெயர் சிதம்பரேசுவரர். இம்மூர்த்திகள் அனைத்தும் ஒரு வெள்ளிப் பேழையுள் உள்ளன. பூசைக்காலங்களில் வெளியே எடுத்துப் பீடத்திலமர்த்திப் பூசை செய்வர்.

மடமும் கோயிலும்

மடத்தின் நடுவில் முற்றத்தில் கோயில் உள்ளது. ஒரு ஆள் உயரத்திற்குக் கருங்கல்லாலும் அதற்கு மேல் செங்கல்லாலும் கட்டப்பெற்ற அழகியகோயில் விமானத்துடன் சிறப்பாக அமைந்துள்ளது.

சொத்துகள்

29 செண்ட் நிலம் நந்தவனத்திற்காக முற்காலத்தில் மன்னர்களால் கொடுக்கபெற்றுள்ளது. மடத்தின் பின்புறத் திலேயே இந்நந்தவன நிலம் உள்ளது. ஏறத்தாழ 5 ஏக்கர் நிலம்

ஆதீனத்தாரின் சொந்த சொத்தாக உள்ளது. இதைக்கொண்டே மடத்தை நிர்வகித்து வருகின்றனர்.

இன்றைய நிலை

ஆதீனகர்த்தரும் குடும்பத்தாரும் அன்பு நிரம்பியவராக உள்ளனர். மடமும் கோயிலும் பழைமையான கட்டிடங்கள். மடத்துக்குச் சீடர்கள் பலர் கும்பகோணம் வட்டாரத்தில் உள்ளனர். எல்லோரும் சேர்ந்து கோயிலுக்கும் மடத்துக்கும் ஒரு திருப்பணியும் குடநீராட்டும் செய்தல் நலமாகும்.

வரணி ஆதீனம்

வேதாரண்யம்

வரணி ஆதீனம் இலங்கையில்
யாழ்ப்பாணத்தில் உள்ளது.
இவ்வாதீன கர்த்தர்கள் இல்லறத்தார்.
தமிழ்நாட்டிலேயே அதிகம்
நிலச்சொத்து 13 ஆயிரம் ஏக்கர்
நிலங்களையுடைய வேதாரண்யம்கோயில்
இவ்வாதீன நிர்வாகம்.

இவ்வாதீன வரலாறு இதுவரை வெளிவராதது.
இப்போது இந்நூலில்தான்
முதன் முதலாக வெளிவருகிறது.

வரணி ஆதீனம்

வேதாரண்யம்

வேதாரண்யம் கடற்கரைத் தலம். வேதங்கள் வழிபட்ட தலம். வேதாரண்யத்திற்கு அருகே ''நாலுவேத பதி'' என்றொரு ஊர் உள்ளது. அவ்வூரில் வேதாரண்யம் கோயிலுக்கு நிலமும் உள்ளது. வேதாரண்யத்திற்கு வந்து வழிபட்ட வேதங்கள் திரும்பும்போது கோயிற்கதவை மூடிவிட்டுச் சென்றுவிட்டன. வேதங்கள் மூடிவிட்டுச் சென்றபின் பக்கத்தில் வேறு ஒரு வாயில் உண்டாக்கி அதன் வழியாகச் சென்று அனைவரும் வழிபட்டு வந்தனர். சம்பந்தரும் அப்பரும் வேதாரண்யத்துக்கு வழிபட வந்தார்கள். வேதங்கள் வழிபட்ட வாயிலின் கதவு அடைத்திருக்கக் கண்டார்கள். வேறு வாயில் வழியே சென்று வழிபட அவர்களுக்கு மனமில்லை. வேதங்கள் அடைத்த கதவை அப்பர் திறக்கப் பாடினார். சம்பந்தர் அடைக்கப்பாடினார். அது முதல் அக்கதவு திறக்கவும் அடைக்கவும் புழக்கத்திற்கு வந்தது.

வேதாரண்யம் சப்தவிடங்கத்தலம். இங்குள்ள தியாகராஜர் புவனிவிடங்கர். பச்சை மரகதலிங்கத் திருமேனி. விடங்கரின் நடனம் ஹம்சபாத நடனம். அன்னம்போல் அசைந்தாடும் நடனம். சம்பந்தர் அப்பர் சுந்தரர் - மூவரும் பாடிய தலம். தாயுமானவர் பிறந்தருளிய தலம்.

தாயுமானவரின் வம்சபரம்பரையில் எட்டாவது தலைமுறையில் வந்தவர் சர்தார் வேதரத்தினம்பிள்ளை. வேதாரண்யத்தில் இவர்கள் குடும்பம் ''ஸ்தலத்தார்'' என்று வழங்கப்பெறுவது. தாயுமானவர் பரம்பரையில் வந்த சர்தாருக்குத் தெய்விகமும் தேசியமும் இரு கண்கள். சுதந்திரப்

போராட்டத்தியாகியாகவும் உப்பு சத்தியாகிரக வீரராகவும் விளங்கிய அவர் வேதாரண்யத்தில் **கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம்** என்றொரு மகளிர் தொண்டு நிறுவனத்தை நிறுவினார். வேதரத்தினத்தின் மகனார் பத்மஸ்ரீ அப்பாக் குட்டி அவர்கள் அதனை நடத்திவந்தார். அவருக்குப்பின் சர்தாரின் பேரனும் அப்பாக்குட்டியின் மகனுமான அ. வேதரத்தினம் அவர்கள் கஸ்தூரிபா கன்யா குருகுலத்தை நன்கு நடத்தி வருகிறார். மேனிலைப்பள்ளி, ஐ.டி.ஐ., அச்சுப்பள்ளி, மின்னணுவியல் பயிற்சி முதலியன நடைபெறுகின்றன. இரண்டாயிரம் மாணவிகள் படிக்கிறார்கள். எண்ணூறு மாணவிகள் விடுதியில் தங்கிப் படிக்கிறார்கள். பழம் பெருமைமிக்க வேதாரண்யத்தில் புதுப்பெருமையும் சேர்ப்பது சர்தாரின் இக் கன்யா குருகுலம்.

தமிழ்நாட்டிலேயே அதிகமான நிலச்சொத்துடைய கோயில் வேதாரண்யம் கோயில்தான். 49 கிராமங்களில் மொத்தம் 13,051 ஏக்கர் 7 செண்ட் நிலம் கோயிலுக்குச் சொந்தமாக உள்ளது. மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகரால் எழுதப்பெற்றுத் திருக்கோயில் நிர்வாகத்தால் 1975-இல் வெளியிடப்பெற்றுள்ள திருக்கோயில் வரலாற்றில் சொத்துகளும் வருமானமும் என்ற பகுதியை அப்படியே கீழே தருகிறோம்.

சொத்துகளும், வருமானமும்

இந்த ஆலயத்திற்கும், இதைச் சார்ந்த உப ஆலயங் களின் கட்டளைகளுக்கும் கீழ்க்காணும் விபரப்படிக்கு 49 கிராமங்களில் 13,051 ஏக்கர் 7 செண்டு நஞ்சை, புஞ்சை நிலங்கள் உள்ளன. தமிழ்நாட்டிலேயே மிகவும் அதிகமான நிலப்பரப்புள்ள ஆலயம் இதுதான் என்று சொல்லலாம்.

வரிசை எண்.	கிராமத்தின் பெயர்	தலைமை யிடத்தி லிருந்து மைல்	ஏ.	செ.
1.	நாலுவேதபதி	12	36	11
2.	புஷ்பவனம்	8	30	76
3.	தேத்தாகுடி வடக்கு சேத்தி	6	117	46
4.	செம்போடை	7	68	53
5.	செட்டிபுலம்	13	31	84
6.	கரியாபட்டினம்	13	237	92
7.	கத்திரிப்புலம்	8	182	08
8.	செண்பகராயநல்லூர்	10	108	77
9.	தென்னம்புலம்	9	19	65
10.	மருதூர் வடக்குச்சேத்தி	14	345	98
11.	வடமழை, மணக்காடு	14	292	32
12.	வேதாரணியபுரம்	14	7	91
13.	மகாராஜபுரம் மேல்பாதி	15	15	04
14.	மகாராஜபுரம் கீழ்பாதி	14	11	42
15.	பெரிய குத்தகை	4	35	94
16.	ஜாம்புவானோடை	37	3	24
17.	தில்லிவிளாகம்	37	1	82
18.	வாய்மேடு	15	35	80
19.	குன்னலூர்	30	1559	43
20.	எக்கல்	30	1	91
21.	தகட்டூர்	15	34	90
22.	மருதூர் தெற்கு சேத்தி	10	1	58
23.	பன்னாள்	9	46	43
24.	கடினல்வயல்	8	152	63
25.	ஆதனூர்	4	298	39
26.	கோவில் தாழ்வு	4½	167	75
27.	அண்டர்காடு	4	371	19

வரிசை எண்.	கிராமத்தின் பெயர்	தலைமை யிடத்தி லிருந்து மைல்	ஏ.	செ.
28.	கருப்பம்புலம்	6½	682	61
29.	ஆயக்காரம்புலம் 3-வது சேத்தி	7	42	70
30.	ஆயக்காரம்புலம் 1-வது சேத்தி	9	2	51
31.	குரவப்புலம்	6	28	09
32.	தேத்தாகுடி தெற்கு சேத்தி	6	866	46
33.	வடகட்டளை	2	1305	64
34.	மறைஞாயநல்லூர்	2	665	45
35.	பள்ளிநேர்மொழியாள்புரம்	3	1339	73
36.	நெய்விளக்கு	3	22	59
37.	தோப்புத்துறை	2	5	56
38.	வேதாரணியபட்டினம்	-	191	10
39.	அகஸ்தியம்பள்ளி	2	1416	74
40.	கோடியக்காடு	8	9	65
41.	கோடியக்கரை	10	1704	36
42.	எட்டுகுடி	32	1	12
43.	நடுவிக்காடு	48	12	79
44.	திருவாரூர்	42	0	08
45.	தாமரைப்புலம்	9	29	83
46.	கொள்ளுக்காடு	50	156	11
.47.	சின்னமனை (கரிசைவயல்பிட் நெ2)	53	42	00
48.	அண்டகத்துறை	13	62	62
49.	மகாராஜபுரம் கீழ்பாதி	14	246	53
	நிலப்பரப்பு ஆகமொத்தம்	...	13051	07

மேற்கண்ட சொத்துக்களிலிருந்து சுமார் 8645 கலம் நெல்லும் (மதிப்பு 1,12,385/-) ரொக்கமாக சுமார் ரூ. 25,000-ம் தஸ்திக், மோகினி, உப்பளம் போன்ற அரசு நன்கொடைகள்

மூலம் சுமார் ரூ. 38,000/-ம் வருமானமும் கிடைக்கிறது. சொத்துக்களிலிருந்தும், இதர வகையிலும் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 2,50,000/- வருமானம் கிடைத்து வருகிறது.

இது முப்பத்துநான்கு ஆண்டுகளுக்கு முந்திய வருமானக் கணக்கு. பெருஞ்சொத்துடைய இப்பெருங்கோயிலுக்கு உப கோயில்களாக 13 கோயில்களும், 2 அறக்கட்டளைகளும் உள்ளன. அவற்றின் பட்டியலையும் திருக்கோயில் வரலாற்றி லிருந்து அப்படியே தருகிறோம்.

உப ஆலயங்களும், அறக்கட்டளைகளும்

இந்த ஆலயத்துடன் கீழ்க்காணும் விபரப்படி 13 உப ஆலயங்களும், 2 அறக்கட்டளைகளும் இணைந்துள்ளன.

உப ஆலயங்கள்

வ.எண்.	கிராமத்தின் பெயர்	ஆலயத்தின் பெயர்
1.	கோடியக்காடு	ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் ஆலயம்
2.	அகஸ்தியம்பள்ளி	ஸ்ரீ அக்னிபுரீஸ்வரர் ஆலயம்
3.	வேதாரணியம்	ஸ்ரீ களஞ்சியம்பிள்ளையார் ஆலயம்
4.	வேதாரணியம் அபிஷேகக் கட்டளை மடத்திலுள்ள	ஸ்ரீ உடையவர் ஆலயம்
5.	புஷ்கரணி	ஸ்ரீ பாஸ்கரேஸ்வர் ஆலயம்
6.	வேதாரணியம்	ஸ்ரீ தில்லைநாயக தம்பிரான் ஆலயம்
7.	ஏரிக்கரை	ஸ்ரீ வித்யேசுவரர் ஆலயம்
8.	தோப்புத்துறை	ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம்
9.	தோப்புத்துறை	ஸ்ரீ கைலாசநாதர் ஆலயம்
10.	தோப்புத்துறை	ஸ்ரீ வனதுர்க்கை அம்மன் ஆலயம்
11.	கரியாப்பட்டினம்	ஸ்ரீ கைலாசநாதர் ஆலயம்

12. சின்னாவடையார்கோயில் ஸ்ரீ ஆத்மநாதசுவாமி ஆலயம் (பட்டுக்கோட்டை வட்டம்)
13. கரிசவயல் ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் ஆலயம் (பட்டுக்கோட்டை வட்டம்)

அறக்கட்டளைகள்

1. வேதாமிர்தக்கரை அன்னசத்திரம், வேதாரணியம்,
2. கைலாசநகர அன்னசத்திரம், கரியாப்பட்டினம்.

மேற்கண்ட இரு அறக்கட்டளைகளுக்கும், சின்னாவடையார் கோயில் ஸ்ரீ ஆத்மநாதஸ்வாமி வகையறா ஆலயத்திற்கும் தனித்தனியே சொத்துக்கள் இருந்து வருகின்றன. அவைகளின் வருமானங்கள் அவைகளின் தேவைகளுக்கு மட்டுமே செலவழிக்கப்பட்டு, பிரத்தியேகமாக வரவு, செலவு கணக்குகள் வைக்கப்பட்டுள்ளன.

வேதாரண்யம் கோயிலுக்கு இவ்வளவு நிலங்கள் சொத்தாக வந்தது எவ்வாறு?! கோயிலில் மங்கலாக எரிந்து கொண்டிருந்த ஒரு விளக்கில் எண்ணெய் குடிப்பதற்கு ஒரு எலி வந்து வாயை வைத்தது. வாய்வைத்த வேகத்தில் விளக்கின் திரி தூண்டப்பெற்று, மங்கலாக எரிந்துகொண்டிருந்த விளக்கு பிரகாசமாக எரியலாயிற்று. விளக்கைத் தூண்டிய எலி அடுத்த பிறப்பில் மாவலிச் சக்கரவர்த்தியாகப் பிறந்தது. விளக்கைத் தூண்டிய புண்ணியத்திற்கே அரசப்பிறப்பு என்றால், விளக்கு வைக்கும் புண்ணியம் எத்தகைய பலனைத் தரும்! அரசர்கள் பலரும் வேதாரண்யத்தில் விளக்கெரிக்க நிலம் எழுதிவைக்கத் தொடங்கினார்கள். 49 கிராமங்களில் 13 ஆயிரம் ஏக்கர் நிலம் சேர்ந்துவிட்டது. வேதாரண்யம் கோயிலில் உள்ள 92 கல்வெட்டுகளில் பெரும்பாலானவை விளக்கெரிக்க நிலக்கொடைக் கல்வெட்டுகள் தான். திருவாரூர்த் தேரழகு, திருவிடைமருதூர்த் தெருவழகு, **வேதாரண்யம் விளக்கழகு** என்று பழமொழியே உண்டாகிவிட்டது.

பாடல்பெற்ற தலம், சப்தவிடங்கத் தலங்களில் ஒன்று, இன்னும் இதுபோல் பல்வேறு சிறப்புகளைப் பெற்ற தலம், 13 ஆயிரம் ஏக்கர் நிலம், 13 உபகோயில்கள், 2 அறக் கட்டளைகள். இவ்வளவு பெரிய நிர்வாகத்தை யார் நிர்வாகம் செய்கிறார்கள். யாழ்ப்பாணம் வரணியாதீனத்தார் நிர்வாகம் செய்கிறார்கள். வேதாரண்யம் கோயிலின் பரம்பரை அறங் காவலர்கள் யாழ்ப்பாணம் வரணி ஆதீனகர்த்தர்கள் ஆவர். கோயில் வரலாற்று நூலில். ''ஸ்ரீ வேதாரண்யேஸ்வரஸ்வாமி திருக்கோயில் வேதாரணியம், நிர்வாகம்'' என்ற தலைப்பில் உள்ளதை அப்படியே தருகிறோம்.

ஸ்ரீ வேதாரண்யேஸ்வரஸ்வாமி திருக்கோயில்
வேதாரணியம்
நிர்வாகம்

ஸ்ரீ வேதாரண்யஸ்வாமி திருக்கோயில்

ஆதியில் வடபாதிமங்கலம் திரு. வ.சோ. தியாகராஜ முதலியார் அவர்களின் முன்னோர்களின் பரிபாலனத்திலிருந்து வந்திருக்கிறது. 17-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிர்வாகம் அவர்களிடமிருந்து ஸ்ரீ-ல-ஸ்ரீ தில்லைநாயகத் தம்பிரான் அவர்கள் கைக்கு மாறியிருக்கிறது. அவர்கள் சுமார் 80 ஆண்டு காலம் நிர்வாகத்தைச் சிறப்பாகவும் திறமையுடனும் நடத்தி பல திருப்பணிகள் செய்துள்ளார்கள்.

அவர்கள் காலத்திற்குப் பிறகு இக்கோயிலின் நிர்வாகம் இவ் யாழ்ப்பாணத்திலுள்ள தனது குரு பரம்பரையினரைச் சேரவேண்டும் என அவர்கள் விரும்பிச் செய்த ஏற்பாட்டின் படி நிர்வாகம் வரணி ஆதீன சபையினரின் கைக்கு மாறியது. வரணி ஆதீன சபையினர் தங்கள் பிரதிநிதி ஒருவரை இங்கு அனுப்பி அவரைக் கோவிலின் பரம்பரை தர்மகர்த்தாவாக பணியாற்றி வரும்படி செய்தனர்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இதை ஆட்சேபித்து, கோவிலின் நிர்வாகம் தங்களிடம்தான் இருக்க வேண்டுமென வடபாதிமங்கலம் திரு. சோமசுந்தர முதலியார் அவர்கள்

சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து பல ஆண்டுகள் நீதி விசாரணைக்குப் பிறகு கோயிலின் நிர்வாகம் வரணி ஆதீன சபையினரிடம்தான் இருக்கவேண்டும் என 1923-இல் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதன்படி யாழ்ப்பாணம் வரணி ஆதீன சபையினரின் பிரதிநிதிகளே தொடர்ந்து பரம்பரை தர்மகர்த்தாக்களாகப் பணி யாற்றி வந்துள்ளனர். அரசு, வெளியார் எவர் தலையீடும் இல்லாமல், சர்வசுதந்திரமாக ஏகபோக உரிமைகளுடன், இந்த ஏராளமான சொத்துக்களையுடைய ஆலயத்தை, பரம்பரை தர்மகர்த்தா ஒருவரே நிர்வகித்து வந்ததில் நாளடைவில் நிர்வாகத்தில் பல ஒழுங்கீனங்கள் தலைகாட்ட ஆரம்பித்தன. இந்த நிலைமையில் நிர்வாகத்தில் அரசு தலையிடவேண்டிய அவசியமேற்பட்டது. 1949-ஆம் வருடத்தில் இந்த ஆலயம், 1926-ஆம் வருடத்திய இந்துசமய அறநிலைய சட்டம் பிரிவு 65-ன் கீழ் அறிக்கையிடப்பட்டு (Notify) பரம்பரை தர்மகர்த்தா அவர்களின் ஆதிக்கத்தையும் அதிகாரங் களையும் கட்டுப்படுத்தி, நிர்வாக · அதிகாரி ஒருவரை ஐந்தாண்டுக் காலத்திற்கு நியமித்து நிர்வாகத்தைச் சீர்செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஐந்தாண்டின் இறுதியில் மீண்டும் முன்போலவே நிர்வாகத்தைத் தன்னிடம் ஒப்புவிக்கவேண்டும் எனப் பரம்பரை தர்மகர்த்தா அவர்கள் கோர்ட்டில் வழக்காடி அதன்பேரில் 1953-ஆம் வருடம் சென்னை உயர்நீதிமன்றத்தின் 1923-ஆம் வருடத்திய தீர்ப்பை அனுசரித்து, நிர்வாக ஏற்பாடு ஒன்றை அமைத்து அதன்படி, பரம்பரை தர்மகர்த்தா அவர்கள் செயல் படவேண்டுமெனத் தீர்ப்பாகியது. அதன்படி ஓ.எ. 81/56 எண்ணுள்ள 7.7.1957 தேதிய நிர்வாக ஏற்பாடு அமைக்கப் பட்டது. இதன்படி இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அதிகாரி ஒருவர், பரம்பரை தர்மகர்த்தாவுக்கு உதவியாகப் பணியாற்றி வரவேண்டுமென்கிற நிலை உருவாகியது. மேற்படி ஏற்பாட்டில் நடைமுறையில் கண்ட சில குறைபாடு களை நிவர்த்தி செய்து, திருத்தப்பட்ட நிர்வாக ஏற்பாடு ஒன்று 1963-இல் அமுலுக்குக்கொண்டு வரப்பட்டது (ஓ.ஏ. 60/60

தேதி 6.4.63). அதன்படிதான் தற்சமயம் நிர்வாகம் இந்துசமய அறநிலைய இலாகா நிர்வாக அதிகாரி ஒருவரின் உதவியுடன், பரம்பரை தர்மகர்த்தா அவர்களால் நடைபெற்று வருகிறது.

- ச. தண்டபாணி தேசிகர்

தஞ்சாவூர் மாவட்ட கெசட்டீரில் (1906) வேதாரண்யத்தைப் பற்றிக் கொடுக்கப்பட்டுள்ள செய்தி பின்வருமாறு.

Vedaranniyam : In the south-east corner of the taluk, five miles north of Point Calimere. It is a union and contains a police-station, a local and dispensary, a private market, a vernacular lower secondary school for boys, two Sanskrit Schools and the officers of a deputy tahsildar and sub-registar. The name means 'the forest of the Vedas' and the place is considered very sacred. There are apparently no legends about it, except one to the effect that Rama lived some time in the forest here when he was invading Ceylon. Nevertheless orthdox Brahmans consider it second only to Rameswaram in sanctity. A bath in the sea here on the new moon days of Tai (December - January) or Adi (July - August) confers special holiness. The temple, which has a money allowance from Government of over Rs. 7,000 and over **23,000 acres of land, is managed by a Tamil family residing in Jaffna in Ceylon. The guru (Priest) is however said to be independent of these managers and to be himself hereditary**. The place possesses some industrial importance owing to its proximity to the ports of Topputtuarai and Point Calimere and the Vedaranniyam salt factory, and its position at the end of the Vedaranniyam canal. A good many merchants live here.

The adjoining village of Agastyampalli is remarkable possessing a temple to the sage Agastya, the mythical leader of the Brahman immigration to the south.

23-ஆயிரம் ஏக்கர் நிலம் என்று இதில் கூறப்பெற்றுள்ளது. 13-ஆயிரம் ஏக்கரை 23 ஆயிரம் ஏக்கர் என்று எழுதி விட்டார்களா, அல்லது அக்காலத்தில் 23 ஆயிரம் ஏக்கர் இருந்ததா என்பது ஆய்வுக்குரியது. யாழ்ப்பாணத்திலுள்ள

ஒரு தமிழ்க் குடும்ப குருவின் நிர்வாகம் என்றும் கூறப் பெற்றுள்ளது. பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் 1906-இல் வேதாரண்யம் கோயில் யாழ்ப்பாணம் வரணி ஆதீனத்தாரின் நிர்வாகத்திலிருந்ததென்பது இதனால் தெளிவாகத் தெரிகிறது.

கௌதமபுத்தர் அடிச்சுவட்டில், மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில் என்ற நூல்களை எழுதிப் புகழ்பெற்ற பயணநூல் வல்ல அறிஞர் சோ. சிவபாத சுந்தரம் ''சேக்கிழார் அடிச்சுவட்டில்'' என்றொரு நூல் எழுதியுள்ளார். அதில் வேதாரண்யத்தைப் பற்றி எழுதியுள்ளது வருமாறு.

''இந்தக் கோயில் ஓதுவார் சுப்பிரமணியத்துடன் பேசிக் கொண்டிருக்கும்போது பல தகவல்களை யறிந்தோம். வேதாரணியம் ஆயிரம் ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தார் மேற்பார்வையில் நடந்துவருகிறது. நாங்கள் போன சமயம் யாழ்ப்பாணம் வரணி ஆதீனம் கதிர்காமய்யா என்பவர் மடாதிபதியாக இருந்தார். யாழ்ப்பாணத்தார் வீதி ஒன்றுண்டு. கீழக்கோபுர வாயிலுக்கும் அனுப்பு மண்டபத்துக்குமிடையில் இலங்கையிலிருந்து கொண்டுவரப்பட்ட கற்களே தளமாகப் போடப்பட்டிருக்கின்றன. கிழக்குக் கோபுரத்திலுள்ள பல கல்வெட்டுகளில் யாழ்ப்பாணக் கிராமங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. திருப்பணி சமயத்தில் உதவியவர்களின் ஊர்ப் பெயர்கள் இவை.''

- சேக்கிழார் அடிச்சுவட்டில், பக்கம் - 211; 212.

வரணி ஆதீன வரலாறு

இலங்கை யாழ்ப்பாணத்திலுள்ள வரணி ஆதீனத்தார் வேதாரண்யம் கோயிலுக்குப் பரம்பரை அறங்காவலர்களாக இருக்கிறார்கள் என்பது மட்டுமே இதுவரை தெரிந்த செய்தி. வரணி ஆதீனத்தின் வரலாறு இதுவரை தமிழ்நாட்டுக்குத் தெரியாத செய்தி. கோயிலார் வெளியிட்ட வேதாரண்யம் தலவரலாறு, தஞ்சாவூர் ஜில்லா கெசட்டீர், சிவபாதசுந்தரம் எழுதிய சேக்கிழார் அடிச்சுவட்டில் ஆகிய மூன்றிலும் வரணி ஆதீனம், அதன் வேதாரண்யம் கோயில் நிர்வாகம் பற்றிக்

கிடைக்கும் குறிப்புகளை மேலே எடுத்துக்காட்டினோம். வரணி ஆதீனத்தைப் பற்றி ஆராய முற்பட்டபோது அவ்வாதீனத்தைச் சேர்ந்த திரு குமரேசமூர்த்தி என்பவரிடம் கடிதத் தொடர்பு கொள்ள நேர்ந்தது. அவர் எம்.ஏ. பட்டத்திற்கு வரணி ஆதீனத்தைப் பற்றி ஆய்வு செய்தவர். அவரது ஆய்வேட்டின் படி ஒன்றை எமக்கு அனுப்பினார். அதன் ஒரு பகுதியை அப்படியே கீழே தருகிறோம். இதன்பின் வருவது அன்பர் திரு குமரேசமூர்த்தியின் எம்.ஏ. பட்ட ஆய்வேட்டின் ஒரு பகுதியாகும்.

யாழ்ப்பாணம் ஸ்ரீ கரணவாய் வரணி ஆதீனத் தோற்றமும் வளர்ச்சியும்

முன்னுரை

யாழ்ப்பாணம் கரணவாய் வரணி ஆதீனம் என்னும் திருப்பெயரில் அமைந்துள்ள ஆதீனம் தோன்றுவதற்கான சூழ்நிலையும், தோற்றுவித்தோரும், அவர் வரலாறும், ஆதீனம் தோன்றிய காலமும், அதன் வளர்ச்சி நிலையும் இவ்வியலில் ஆராயப்பெறுகின்றன.

போர்த்துகீசியர் கொடுமையும், யாழ்ப்பாணம் தந்த நன்மணியும்

16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் போர்த்துகீசியர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சைவ மக்களுக்கு இழைத்த கொடுமைகளைச் சகிக்க முடியாமல் வரணியில் வாழ்ந்த தில்லைநாதத் தம்பிரான் என்பவர் பருத்தித்துறையில் பாய்மரக் கப்பல் ஏறி கோடிக்கரை வந்தடைந்து வேதாரண்யே சுவரர் ஆலயத்தின் அருகில் வாழ்ந்தார். இறை பக்தியுடன் வைத்தியம், யோகம், சித்து ஆகியவற்றில் தேர்ந்தவராக விளங்கினார்.

அருள் அரசும், மன்னனின் மாண்பும்

தில்லைநாதத் தம்பிரான் சுவாமிகளின் இறைபக்தியும், வைத்திய மேன்மையும், சித்துக்களின் சிறப்பும் இவரைப் பேரருளாளர் என்று புலப்படுத்தியது. அப்போது தஞ்சையை ஆண்ட மன்னன் தலயாத்திரை மேற்கொண்டு வேதாரண்யே

ஸ்வரரை வழிபட்டான். அது சமயம் சுவாமிகளின் பக்தி நெறியையும் அவரது சிறப்பையும் அறிந்து 18 கிராமங்களையும் அவற்றில் உள்ளடக்கிய 2500 ஏக்கர் நிலத்தையும் மானியமாக்கி இவ்வாலயத்தைத் தன் சார்பில் கவனித்துக் கொள்ளுமாறு ஒப்படைத்தான். தில்லைநாதத் தம்பிரான் சுவாமிகள் யாழ்ப்பாணம் கரணவாய், வரணி ஆதீனத்தை நிறுவித்திறம்படப் பரிபாலனம் செய்து வந்தார்கள். இவர்கள் காலம் சைவசமய வளர்ச்சியின் தொடக்கக் காலம் என்பது அறியலாகின்றது.

ஆதீனம் பெயர்க்காரணம்

இலங்கை நாட்டைச் சேர்ந்த யாழ்ப்பாணம் மாவட்டத்தில் **கரணவாய், வரணி** என்ற இரு கிராமங்களில் உள்ள தமது குருமார்கள் குடும்பத்தினர்களிடம் இந்நிர்வாகத்தை ஒப்படைத்ததால் யாழ்ப்பாணம் கரணவாய் வரணி ஆதீனம் என்று பெயர்பெற்றது. தில்லைநாதத் தம்பிரான் சுவாமிகள் தனது இயலாத காரணத்தால் மன்னனிடம் தாங்கள் அளித்ததை நிர்வாகத்தை எடுத்துக்கொள்ளும்படி வேண்ட மன்னன் கொடுத்ததை திரும்பப்பெறுவது மன்னர் மரபன்று என்று கூறி நீங்களே தகுந்த ஒருவரை நியமித்துவிடுங்கள் என்று கூறினார்கள். அதன்படி தனது குருமார்கள் குடும்பத்தினரிடம் ஒப்படைத்தார். அதனால் இப்பெயர்பெற்று இவர்கள் குருக்கள் பரம்பரைக்கு வந்தது என்பது அறியமுடிகின்றது.

சித்தியடைதல்

சுவாமிகள் 80 ஆண்டுகள் ஆதீனத்தைச் செம்மையாக செயல்படுத்தித் தனக்குப் பின் இவ்வாதீனத்தைக் கவனிக்க முறையாக வைதீக நெறியுடன் நடத்த தமது குருமார்களிடம் ஒப்படைக்க எண்ணி தமது குருமார்கள் குடும்பத்தாரிடம் ஒப்படைத்து நீங்கள் இதனைப் பரிபாலனம் செய்து வர வேண்டியது என்று கொடுத்தார்கள். அதன்பின் அந்த குருமார்கள் குடும்பம் இருபத்தைந்தும் ஒன்றாக இணைந்து தங்களுக்குள் ஒருவரைக் காலத்திற்குக் காலம் நியமித்து (ஐந்து ஆண்டுக்கு ஒருவராக) பரிபாலனம் செய்து வர

வேண்டியது என்று வரையறுத்து அதன்படி செயல்பட்டு வருகின்றனர். இதன் இடையில் தில்லைநாதத் தம்பிரான் சுவாமிகள் தமது 100 வயது கடந்த நிலையில் இறைவன் அருளுடன் சித்தியடைந்தார்கள் என்பது கர்ணபரம்பரைச் செய்தியாக உள்ளது. அதுமுதல் இவ்வாதீனம் செம்மையாகச் செயல்பட்டு வருகின்றது. இவ்வாதீனத்தில் குருபூஜை விழாச் சிறப்பாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகின்றது.

வரலாற்று மூலங்கள்

இவ்வாதீனம் பற்றிய செய்திகள் இன்றுவரை புத்தக வடிவில் வெளிவரவில்லை. இவை கர்ணபரம்பரை செய்தி யாகவே இருந்து வந்திருக்கின்றன. தில்லைநாதத் தம்பிரான் சுவாமிகள் காலத்தில் டைட்டில் டீட்ஸ் (தலைமைத் திட்டம்) ஒன்று ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றது. அதன் பிறகு 1913-ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கரணவாய் வரணி ஆதீனத்தாருக்கும், இந்தியாவைச் சேர்ந்த தஞ்சை மாவட்டம் வடபாதிமங்கலம் சாமியப்ப முதலியாருக்கும் தஞ்சை துணை ஆணையர் அலுவலகத்தில் 03.06.1913-இல் வழக்கு நடைபெற்றது. அதைத் தொடர்ந்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு நடந்து இறுதியில் லண்டனில் இருந்து வந்து ஜட்ஜ் திரு. இராமநாதன் துரை அவர்கள் தலைமை யில் ஜீ. ஜீ. பொன்னம்பலம் லண்டன் பாரிஸ்டர் அவர்கள் வாதாடி ஏ.எஸ். 121, 122/1919-இல் யாழ்ப்பாணம் கரணவாய் வரணி ஆதீனத்திற்குச் சார்பாக உத்தரவு பெறப்பட்டுள்ளது. அதன்பின் 1956-இல் சென்னை உயர்நீதி மன்றத்தில் அசல் வழக்கு எண். 8/1956 உத்தரவும் (5 பக்கங்கள்) உள்ளது. மேலும் நடைமுறை மாற்றம் ஓ.எ. 60/1960 (நீதிபதி திரு. சோமசுந்தரதேசிகர் அவர்கள் போட்ட உத்தரவு) என்ற மாற்றியமைக்கப்பட்ட திட்டமும், தற்போதைய நடைமுறை திட்டம் 71/72 என்பதும் நடைமுறையில் இருந்து வருகின்றது. இது தஞ்சை இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் கீழ்ச் செயல்பட்டு வருகின்றது. இவ்வாதீனத்தின் திருக்கோயில் முதன்மைத் தர கோயில்களுள் ஒன்று என்பது குறிப்பிடத் தக்கது. இது தவிர ஏனைய இவ்வாதீனத்தின் சந்நிதானங்

களின் உத்தியோகபூர்வ நியமனம் தொடர்பாக தஸ்தாவேஷுகள் (ஆதாரங்கள்) மேலும், ஆலயங்களின் கல்வெட்டும், கும்பாபிஷேக கல்வெட்டின் மூலமும் அறியமுடிகின்றது.

இவ்வாதீனத்தின் 21-வது பட்டம் மகாசந்நிதானத்திடம் நேரில் சென்று தரிசித்து அவர்கள் வாய்மொழியாகச் சொல்லிய செய்திகள் (பேட்டி) இவ்வாதீனத்தின் தலைமை (பிரதான) குரு அவர்கள் கூறிய செய்திகள் (பேட்டி) இவ்வாதீனத்தின் திருக்கோயில் தலைமை நிர்வாக அதிகாரி (இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை) அவர்கள் பேட்டி, இவைமூலம் அறியப்பட்டுள்ளன. மேலும் இவ்வூர்ப் பிரமுகர்கள் நேரடிப் பேட்டியும், கர்ண பரம்பரைச் செய்திகளும் உள்ளன.

ஆதீன வளர்ச்சியும், வரலாறும்

இவ்வாதீனம் தனது நேரடிக் கண்காணிப்பில் உள்ள 3000 வேலி நிலங்களையும் 27 கோயில்கள் மற்றும் இதர கோயிலையும் செம்மையாகக் காலங்காலமாகப் பரிபாலனம் செய்தும், கோயில்கள் கும்பாபிஷேகம் செய்தும், திருவிழா நடத்தியும் வருகின்றது. மேலும் ஆகமப் பாடசாலையும், தேவார பாடசாலையும் நடத்தி வந்தது. மேலும் ஆதீனத்தில் மடங்கள், கட்டளைகள் தோற்றுவித்தும் அதன்மூலம் செய்து வருகின்றது. 1. கைலாசநாத அன்னசத்திரம், 2. கரியாப்பட்டினம் வேதாமிர்தக்கரை அன்னசத்திரம் என்பன சத்திரங்களாகும்.

ஆதீனத்தார்கள் மடங்களைத் தோற்றுவித்தல்

இவ்வாதீனத்தார்கள் தமக்கு இங்குக் கைவழக்கச் செலவு செய்வதற்கு கோயில் பணத்தை எடுப்பது முறை யன்று என்பதால் அவர்கள் தங்களது சொந்த நாடாகிய இலங்கையில் உள்ள சொத்தை விற்று அதிலிருந்து கிடைத்த தொகையைக் கொண்டு இந்தியாவில் நிலங்களை வாங்கித் தங்களது பெயரில் பதிவுசெய்து அதன்பிறகு ஒரு மடத்தை நிறுவி அதில் சில தர்மங்கள் செய்தது போக மீதமுள்ள தொகை அவர்கள் சொந்த செலவுகள் எடுப்பது என்று கருதினர். இந்தியாவில் வேதாரண்யத்தில் இரண்டு பிரிவினர்.

அதாவது ஆண்வாரிசு, பெண்வாரிசு இருவரும், தனித்தனியே மடங்களை முறையே 1. ஸ்ரீ மாணிக்கவாசகர் மடம், 2. ஸ்ரீ ஆதிவாரமடம் என்றும் பெயர்கள் ஏற்படுத்தி இன்றும் செம்மையாகச் செயல்படுத்தி வருகின்றார்கள்.

1. ஸ்ரீ மாணிக்கவாசகர் மடம்

இம்மடம் வேதாரண்யம் மேலவீதியில் பெரிய கட்டிடத்தில் உள்ளது. இதுதவிர மனைப்பகுதியும், நன்செய், புன்செய் நிலங்களும் உள்ளன. கரியாப் பட்டினத்தில் 5 வேலி நிலம் உள்ளது. இதன் கட்டளை வேதாரண்யேஸ்வரருக்கு இரவு அபிஷேகமும், ஏறுபடியும் செய்து வரவேண்டியது. மாணிக்க வாசகர் குருபூஜை கொண்டாடப்படுகின்றது. மேலும் வேதாரண்யேஸ்வரருக்குச் சுக்கிரவார சதுர்த்திக்கு அபிஷேக ஆராதனையும், அதிதிகளுக்குத் தர்மங்கள் தங்குமிடம் முதலியன அளித்து உதவுதல் இதன் பணியாகும். இந்தச் செலவுகள் போக மீதமுள்ள தொகை தங்களது சொந்த செலவுகளுக்கு எடுத்துக் கொள்ளவேண்டியது. நிர்வாகம் இன்றுவரை சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

மாணிக்கவாசகர் மடத்தின் நிர்வாக கர்த்தர்கள்

இம்மடம் தோன்றி 108 ஆண்டுகள் ஆகின்றது. இம் மடம் ஆண் வாரிசு நலன் கருதி ஏற்படுத்தப்பட்டது.

1. ஸ்ரீலஸ்ரீ கைலாசநாத பண்டார சந்நிதி - தோற்று வித்தவர் - 1885.
2. ஸ்ரீலஸ்ரீ விஸ்வநாத பண்டார சந்நிதி - 13 ஆண்டுகள்
3. ஸ்ரீலஸ்ரீ கந்தையா பண்டார சந்நிதி
4. ஸ்ரீலஸ்ரீ கதிர்காம பண்டார சந்நிதி
5. ஸ்ரீலஸ்ரீ நமசிவாய பண்டார சந்நிதி
6. ஸ்ரீலஸ்ரீ சாமிநாத பண்டார சந்நிதி
7. ஸ்ரீலஸ்ரீ விஸ்வநாத பண்டார சந்நிதி
8. ஸ்ரீலஸ்ரீ குமாரசாமி பண்டார சந்நிதி
9. ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய பண்டார சந்நிதி

10. ஸ்ரீலஸ்ரீ பொன்னையா பண்டார சந்நிதி
11. ஸ்ரீலஸ்ரீ கனகசபை பண்டார சந்நிதி
12. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பண்டார சந்நிதி
13. ஸ்ரீலஸ்ரீ செவ்வந்திநாத பண்டார சந்நிதி
14. ஸ்ரீலஸ்ரீ கதிர்காம பண்டார சந்நிதி
15. ஸ்ரீலஸ்ரீ செவ்வந்திநாத பண்டார சந்நிதி

2. ஸ்ரீ ஆதிவாரமடம்

இம்மடம் வேதாரண்யம் ஏரி கீழ்க்கரையில் இயங்கி வந்தது. இம்மடத்திற்கு 100½ வேலி நிலமும் (நன்செய், புன்செய்) மனைப்பகுதிகள் ஆக ஒரு வேலியும் இருக்கின்றன. மடத்தின் கட்டிடங்கள் நாளடைவில் பழுதடைந்து இடர்ப் பாடுகளுடன் காணப்படுகின்றது. தற்போதைய மடத்தின் 20-வது சந்நிதானம் புதிய கட்டிடங்கள் கட்ட அடிக்கல் நாட்டுவிழாச் செய்தும் செப்பனிட்டும் வருகிறார்கள். மேலும் இம்மடத்தின் சார்பில் வேதாரண்யேஸ்வர சுவாமி கோயிலில் எழுந்தருளி இருக்கும் வரசித்தி விநாயகருக்குத் தைப்பூசத் திருநாளில் சிறப்பு அபிஷேகமும் வழிபாடும் அன்னதானமும் நடைபெறுகின்றது. இது அம்மடத்தினர் செய்யவேண்டிய தர்மமாகும். மேலும் ஞாயிற்றுக் கிழமைகளில் பசித்துவரும் ஏழைகளுக்கும் அன்னம் அளித்தலும் இதன் கடமையாகும். இந்த மடம் தோன்றி 119 ஆண்டுகள் ஆகின்றன.

ஸ்ரீ ஆதிவார மடம் நிர்வாக கர்த்தர்கள்

இம்மடம் பெண் வாரிசுகளின் நலன் கருதி ஏற்படுத்தப் பட்டது.

1. ஸ்ரீலஸ்ரீ கந்தப்ப பண்டார சந்நிதிகள் - தோற்றுவித்தவர். தோற்றுவித்த ஆண்டு ஆடி மாதம் 20-ஆம் தேதி 1872-ஆம் ஆண்டு.
2. ஸ்ரீலஸ்ரீ செவந்திநாத பண்டார சந்நிதி
3. ஸ்ரீமதி சுந்தரவள்ளி அம்மாள்

4. ஸ்ரீலஸ்ரீ சட்டநாத பண்டார சந்நிதி
5. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பண்டார சந்நிதி
6. ஸ்ரீலஸ்ரீ கனகசபை பண்டார சந்நிதி
7. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பண்டார சந்நிதி
8. ஸ்ரீலஸ்ரீ குமரேசமூர்த்தி பண்டார சந்நிதி 12.2.86 முதல் தற்போது நிர்வாகத்தில் உள்ளவர்கள்

யாழ்ப்பாணம் வரணி ஆதீனகர்த்தர் பரம்பரை

1. ஸ்ரீலஸ்ரீ தில்லைநாயகத் தம்பிரான் சுவாமிகள்

இவர்கள் ஆட்சிக் காலம் 80 ஆண்டுகள். இவர்கள் முதலாவது சந்நிதானம் ஆவார்கள். இவர்கள் காலம் தமிழ் நாட்டில் பிற சமயங்கள் பௌத்தம் சமணம் போன்றவை குன்றிச் சைவம் தழைக்கும் காலமாகும் என்பது ஆதாரத்துடன் காணமுடிகின்றது. பக்திப் பணிகள் செய்தவர்கள்.

2. ஸ்ரீலஸ்ரீ சட்டநாத பண்டார சந்நிதி

இவர்கள் ஆட்சிக் காலம் 19 ஆண்டுகள் ஆகும். இவர்கள் காலத்தில் கோயில்கள் திருப்பணியும் செப்பனிடுதலும் செய்யப்பட்டிருக்கிறது.

3. ஸ்ரீலஸ்ரீ சட்டயப்ப பண்டார சந்நிதி

இவர்கள் ஆட்சிக்காலம் 22 ஆண்டுகள் ஆகும். இவர்கள் காலத்தில் நிர்வாகம் சீராகச் செயல்பட்டு வந்திருப்பதை அறியமுடிகின்றது.

4. ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த பண்டார சந்நிதி

இவர்கள் ஆட்சிக்காலம் 18 ஆண்டுகள் ஆகும். திருமுறைகள் பாராயணம் திருவிழாக்கள் முதலியன சிறப்பாக நடைபெற்றிருக்கின்றன.

5. ஸ்ரீலஸ்ரீ அறிவானந்த பண்டார சந்நிதி

இவர்கள் ஆட்சிக்காலம் 17 ஆண்டுகள் ஆகும். இவர்கள் ஆட்சி, செவ்வனே செய்து கும்பாபிஷேகம் செய்தும்,

செப்பனிட்டும், புதிய மண்டபங்களும், கட்டிடங்களும் கட்டப் பட்டுள்ளன.

6. ஸ்ரீலஸ்ரீ செவ்வந்திநாத பண்டார சந்நிதி

இவர்கள் 25 ஆண்டுக்காலம் ஆட்சி செய்துள்ளார்கள். இவர்கள் காலத்தில் கும்பாபிஷேகம், கட்டிடங்கள் புதுப்பித்தல், செப்பனிடுதல் போன்றவை நடைபெற்று இருக்கின்றன.

7. ஸ்ரீலஸ்ரீ கைலாசநாத பண்டார சந்நிதி

இவர்கள் 25 ஆண்டுக்காலம் ஆட்சி செய்துள்ளார்கள். இவர்கள் காலத்தில் கும்பாபிஷேகம், கட்டிடங்கள் புதுப்பித்தல், செப்பனிடுதல் போன்றவை நடைபெற்று இருக்கின்றன.

8. ஸ்ரீலஸ்ரீ விஸ்வநாத பண்டார சந்நிதி

இவர்கள் 13 ஆண்டுகள் ஆட்சி செய்து வந்திருக்கிறார்கள். இவர்கள் காலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏதும் இல்லை.

9. ஸ்ரீலஸ்ரீ கந்தப்ப பண்டார சந்நிதி

இவர்கள் 12 ஆண்டுகள் ஆட்சி செய்து வந்திருக் கின்றார்கள். மேலும் இவர்கள் காலத்திலும் திருப்பணியும், கும்பாபிஷேகமும், விழாக்களும் சிறப்புடன் நடைபெற் றிருக்கின்றன.

10. ஸ்ரீலஸ்ரீ கதிர்காம பண்டார சந்நிதி

இவர்கள் காலம் 14 ஆண்டுகள் ஆகும். இவர்கள் காலத்தில் குறிப்பிட்டத்தகுந்த மாற்றம் ஏதும் இல்லை. வழக்கம்போல் நிர்வாகம் சீராகவும் சிறப்பாகவும் நடைபெற்றிருந்தன.

11. ஸ்ரீலஸ்ரீ நமசிவாய பண்டார சந்நிதி

இவர்கள் 16 ஆண்டுகள் ஆட்சி செய்து இருந்தார்கள். இவர்கள் காலத்தில் திருவிழாவும் கும்பாபிஷேகமும், செப்பனிடுதலும் நடைபெற்று இருக்கின்றன.

12. ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டார சந்நிதி

இவர்கள் 19 ஆண்டுகள் ஆட்சி செய்தார்கள். இவர்கள் ஆட்சிக்காலம் முறைகேடுகள் காணப்பட்டன. செம்மையாக

நிர்வாகம் நடைபெறவில்லை. குழப்பம் ஏற்பட்டு இந்தியாவில் உள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையகம் இதனைக் கவனத்தில் கொண்டு மேற்பார்வை செய்யத் தொடங்கியது.

13. ஸ்ரீலஸ்ரீ விஸ்வநாத பண்டார சந்நிதி

இவர்கள் ஆட்சிக்காலம் 25 ஆண்டுகள். இப்போதுதான் வழக்கு, உயர்நீதி மன்றத்தில் அரசு கட்டுப்பாடுகளுடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையகம் அசல் வழக்கு எண். 121/122-1919 என்ற திட்டம் உருவாகியது. இவர்கள் காலம் தொடங்கி இந்து சமய அறநிலையத்துறை மேற்பார்வை யுடன் ஆதீனம் செயல்படத் தொடங்கியது. இதுசமயம் பரம்பரை அறங்காவலர்களின் அதாவது ஆதீனகர்த்தர்களின் அதிகாரம் சற்று குறைக்கப்பட்டு சில கட்டுப்பாடுகளுடன் நடைமுறையில் கொண்டு வரப்பட்டது. இவர்கள் காலத்தில் மேலும் நிர்வாகம் ஒரு புத்துணர்ச்சி அடைந்து செம்மை யாகச் செயல்பட்டு கும்பாபிஷேகம், திருவிழா போன்றவை நடைபெற்று வந்திருக்கின்றன.

14. ஸ்ரீலஸ்ரீ குமரசாமி பண்டார சந்நிதிகள்

இவர்கள் ஆட்சிக்காலம் இரண்டு ஆண்டுகள். அப்போது தான் வேதாரண்யத்தில் வெள்ளையரை எதிர்த்து ராஜாஜி தலைமையில் உப்பு அறப்போராட்டம் நடந்தது. அதுசமயம் சர்தார் வேதரத்தினம் பிள்ளையுடன் இவர்களும் இணைந்து பல உதவிகள் செய்துள்ளமையும், யாழ்ப்பாணம் தலைமை மடத்தில் நால்வர் குருபூஜை மிகச் சிறப்பாக யாழ்ப்பாணம் மாவட்ட பெரிய அதிகாரிகளை அழைத்துச் செய்யப்பட்டது.

15. ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய பண்டார சந்நிதி

இவர்கள் ஆட்சிக்காலம் 14 ஆண்டுகள். இவர்கள் காலத்தில் கும்பாபிஷேகம், திருவிழாக்களும் சிறப்பாக கொண்டாடப் பட்டு வந்திருக்கின்றது.

16. ஸ்ரீலஸ்ரீ பொன்னையா பண்டார சந்நிதி

இவர்கள் ஆட்சிக்காலம் ஓர் ஆண்டு. இவர்களது காலத்தில் தான் கோவிலில் ஆலய பிரவேசம் நடைபெற்றுள்ளது

குறிப்பிடத்தக்கது. சாவகச்சேரி எல்லைக்கு உட்பட்ட கரம்பைக்குறிச்சி, வரண் குருக்கள் குடியிருப்பு பகுதியில் கந்தசாமியார் திருக்கோயில் இவர்களது நேரடிப் பொறுப்பில் இன்றுவரை நிர்வகித்து வருகின்றனர். இத்திருக்கோயில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் கற்குழு தீர்த்தம் உள்ளது. இங்கு அருகில் உள்ள கரம்பான் அருள்மிகு வீரகத்தி விநாயகருக்கு திருவிழாக் காலத்தில் தீர்த்தவாரியின்போது பெருமான் இக்குளத்தில் தீர்த்தம் கொடுத்து இக்கோவிலில் தங்கி இரவு திருவிழா சிறப்புடன் நடைபெற்று விநாயகர் கரம்பான் திருக்கோயிலுக்கு எழுந்தருளும் இவ்விழாவின்போது மக்கள் அனைவரும் பெருவிரதம், நேர்த்திகள் செய்து வழிபடுவது இன்றுவரை மக்களிடையே சிறப்பு வாய்ந்த பழக்கமாக உள்ளது. அதுசமயம் ஸ்ரீலஸ்ரீ பொன்னையா பண்டார சந்நிதி தான் சொந்த பொறுப்பில் அன்னதானம் இட்டுச் சிறப்பாக செய்து வந்தனர்.

17. ஸ்ரீலஸ்ரீ கனகசபை பண்டார சந்நிதி

இவர்கள் ஆட்சிக்காலம் 11 ஆண்டுகள். இவர்கள் ஆட்சிக் காலத்தில் 27 கோயில்களும், இதன் உபகோயில்களும் புதிதாகக் கட்டப்பட்டும், புதுப்பித்தும் கும்பாபிஷேகமும் நடைபெற்றுள்ளன. இவர்கள் காலத்தில் ஆகம பாடசாலையும், தேவார பாடசாலையும் தொடங்கப்பெற்று நடைபெற்று வந்திருக்கின்றன. மேலும் மறைக்கதவு பூட்டி அடைக்கவும் பாடப்பெற்ற பதிகங்களைக் கல்வெட்டு மூலம் பதிப்பித்து திருப்பணிகள் செய்யப்பட்டு இருக்கின்றன. இவர்கள் காலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் செய்யப்பட்டது.

18. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பண்டார சந்நிதி

இவர்கள் ஆட்சிக் காலம் ஓர் ஆண்டு. இவர்கள் 17வது சந்நிதானத்தின் அதிகாரத்தின் மூலம் ஓர் ஆண்டு ஆட்சி செய்தனர். இவர்கள் ஆட்சிக் காலத்தில் வேதாரண்யே ஸ்வரசுவாமி திருக்கோயிலின் தேர்த் திருவிழாவுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதன் பிறகு (தேரோட்ட உற்சவம்) இன்றுவரை நடைபெறவில்லை என்பது அறிய முடிகின்றது.

19. ஸ்ரீலஸ்ரீ செவ்வந்திநாத பண்டார சந்நிதிகள்

இவர்கள் ஆட்சிக் காலம் ஐந்து ஆண்டுகள். இவர்கள் காலத்தில் திருவிழாக்கள் செம்மையாக நடைபெற்றுள்ளன. தேர்த் திருவிழா (ஐதீக உற்சவமாக) நடைபெற்றது. மேலும் ஆதீனத்தின் 27 கோயில்களுள் ஒன்றான எட்டுக்குடி சுப்பிரமணியசுவாமி கோயில் திருப்பணியும், கும்பாபிஷேகமும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

20. ஸ்ரீலஸ்ரீ கதிர்காம பண்டார சந்நிதி

இவர்கள் ஆட்சிக் காலம் 21 ஆண்டுகள். கோயில் திருவிழாக்களும், செப்பனிடுதலும் நடைபெற்றுள்ளன. இவர்கள் காலத்தில் தமிழகக் கவர்னர் கனம் கே.கே.ஷா அவர்கள் வருகைதர இருந்தார்கள். அப்போது வேதராண்யே ஸ்வரர் கோவிலின் உட்பிரகாரங்கள், சிமெண்ட் பாதைகள் அமைத்தும், கிணறுகள் செப்பனிட்டும், வண்ண விளக்குகள் அலங்கரிப்பும் போன்றன செய்யப்பட்டு வந்திருக்கின்றன. மேலும் இவர்கள் காலத்தில் இறுதியில் இரண்டு ஆண்டுகள் திருவிழாக்கள் நடைபெறவில்லை. அப்போது வருமானங்கள் சரிவர வரவில்லை. நிர்வாகம் சீர்குலைந்து விட்டது. இவர்கள் வயது முதிர்ந்த நிலையில் தாயகம் செல்ல இயலவில்லை. அவர்கள் உடல்நிலை பாதிக்கப்பட்டு திருமடத்திலேயே 22.4.87 அன்று முக்தி அடைந்தார்கள்.

21. ஸ்ரீலஸ்ரீ செவ்வந்திநாத பண்டார சந்நிதி

இவர்கள் ஆட்சிக்காலம் எட்டு மாதம். இதன் பிறகு வரணி ஆதீனக் குடும்பத்தார்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டு வழக்குகள் நடைபெற்று, இறுதியில் இருதரப்பினருக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டு மேற்படி ஒப்பந்தம் ஸ்ரீலஸ்ரீ செவ்வந்திநாத பண்டாரசந்நிதி அவர்களை ஆதீன நிர்வாகத்தை கவனிக்கும்படி முடிவாயிற்று. அதன்பிறகு நாளது தேதி வரை இவர்களால் நிர்வாகம் செம்மையாகச் செய்யப்பெற்று வருகின்றது.

ஆதீனத்தின் அமைப்பு

இவ்வாதீன அமைப்பு திருப்பனந்தாள் காசிமடம் தலைமை மடம் காசியிலும் அதன் கிளை மடம் பனசையிலும் செயல்படுவதுபோல யாழ்ப்பாணம் கரணவாய் வரணி ஆதீனம் கரணவாயில் தலைமை மடத்தையும், இதன் கிளை மடம் வேதாரண்யத்திலும் அமைந்துள்ளது.

தலைமை மடம்

இதன் இருப்பிடம் ஸ்ரீலங்கா நாட்டில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 10 கல் தொலைவில் யாழ்ப்பாணம் பருத்தித்துறை நெடுஞ்சாலை கரணவாய் பகுதியில் அமைந்துள்ளது. இதன் பெயர் ''வேதாரண்யேஸ்வர வித்யாலயம்'' ஆகும். சுமார் இரண்டு ஏக்கர் பரப்பளவு கொண்டது. அருகில் கோயில்களும், பள்ளிக்கூடங்களும் அமைந்துள்ளன. இது ஆதீனச் செயலர், பொருளர் (காரியதரிசி) இவர்கள் மேற்பார்வையில் இயங்கி வருகின்றது.

கல்விப்பணி

தேவாரப் பாடசாலையும், ஆகம பாடசாலையும் பயிற்சி வகுப்புக்களுடன் நடைபெற்று வருகின்றன. ஸ்ரீலஸ்ரீ வைத்தியநாத பண்டார சந்நிதி நேரடிப் பார்வையில் சிறப்புற நடைபெறுகின்றது.

இங்கு ஆதீனப் புலவரும், ஆதீன உறுப்பினருமான ஸ்ரீலஸ்ரீ நமசிவாய பண்டார சந்நிதி அவர்கள் நன்முறையில் சங்கீதம், சமயம், தமிழ் சிறப்பாகப் போதித்து தனது பார்வையில் கவனித்து வருகிறார்.

சமூகப்பணி

சனசமூக நிலையம், நூல் நிலையம் போன்றவை இவ்வாதீனத்தில் செயல்பட்டு வருகின்றது. இவை ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணிய பண்டார சந்நிதி அவர்கள் நேரடிக் கண்காணிப்பில் நடைபெற்று வருகின்றன.

சமயப்பணி

இங்கு, பாடசாலைகள் மூலம் முறையே திருமுறைகளும், ஆகமங்களும் பயிற்றுவிக்கப்படுவதுடன், இவ்வாதீன கர்த்தர் நேரடிப் பார்வையில் உள்ள நெல்லையடி மூத்த விநாயகர் ஆலயம், கண்ணகி அம்மன் ஆலயம், கீராய்ப் பிள்ளையார் ஆலயம், வெற்றியக்காடு பிள்ளையார் ஆலயம் மேலும் கப்பூது சுப்பிரமணியசுவாமி ஆலயம் போன்ற ஆலயங்களில் நேரடி அனுபவப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது. மகா மண்டபத்தில் ஆதீனகர்த்தர்கள் விழாக்கால நிகழ்ச்சிகள் நிகழ்த்தப் பெறுகின்றன. கார்த்திகை சோமவாரம், சிவராத்திரி போன்ற காலங்களில் அன்பர்களைச் சைவநெறியில் கொண்டு வந்து சமயத்தில் ஈடுபடச் செய்து சமய அனுஷ்டானங்கள், சிவபூஜை போன்றவை உபதேசிக்கப்படுகின்றன. இதனை ஆதீனத்தின் மூத்த குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கி அருள்கின்றார்கள்.

மடத்தில் புராணச் சொற்பொழிவு

ஆண்டுதோறும் புராணச் சொற்பொழிவுகள் தொடர்ந்து நிகழ்த்தப் பெற்று வருகின்றன. கந்தசஷ்டி அன்று கந்தபுராண விளக்கமும், சிவன்ராத்திரி அன்று பெரியபுராண விளக்கமும், தைப்பூசத் திருநாளில் விநாயக புராண விளக்கமும் 21 நாட்கள் ''விநாயகர் பெருங்கதை'' சிறப்பாக விளக்கப்பட்டு பூஜைகள் செய்யப்பட்டு வருகின்றன.

வேதாரண்யத்தில் கிளை ஆதீன மடாலயம்

வேதாரண்யம் மேலவீதியில் கோயிலின் அருகில் இம் மடாலயம் அமைந்துள்ளது. இதன் பரப்பளவு சுமார் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பு கொண்டது. இதில் மடத்தின் நேரடியில் ஒரு ஏக்கர் தென்னை மரங்கள் தோப்பாக உள்ளன. மற்ற பகுதியில் ஆதீன மடாலய கட்டிடம் உள்ளது. இது குருமகா சந்நிதானம் அவர்கள் உறைவிடமாக உள்ளது. பழமையான செங்கல் கட்டிடம் ஓட்டு வில்லையும் மாடிக் கட்டிடமும் உள்ளது. இது பளிங்குக் கற்களால் ஆகிய இரண்டு பெரும் தூண்கள் அழகுறக் காட்சி அளிக்கும் மகாமண்டபம் உள்ளது.

பூஜை மடம்

மடத்தின் உட்பகுதியில், உடையவர் பூஜை மடத்தில் உள்ளது இவர்களது ஆன்மார்த்தமூர்த்தி வேதாரண்யேஸ்வரர் ஆவார். இங்குச் சிறப்பு வழிபாடுகளும் குருபூஜையும் நடை பெறுகின்றன. பூஜை மடம் பழமையான காலத்தில் உள்ள வளைவான ஒட்டு மண்டபம் அமைந்துள்ளது. இங்குக் கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம் போன்ற அமைப்பும் கொண்டு அமைந்துள்ளது. இதற்கு மகாசந்நிதானம் அவர்கள் சிறப்பு பூஜைகளை மடத்தின் பிரதான குருமகா சந்நிதானம் வெளி இடங்களுக்குச் சென்றால் அதனை ஆதீன பிரதான குருக்கள் செய்து வருகின்றனர்.

ஆதீன அலுவலகமும் பணியாளர்களும்

இவ்வாதீன அலுவலகம் அபிஷேகக் கட்டளை மடத்தின் எதிரில் அமைந்துள்ளது. இக்கட்டிடம் பழமையான மன்னர்கள் காலத்தின்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் நான்கு பெரிய மண்டபங்களும், இதனுடன் தானியக் கிடங்கும் ஒருங்கே அமையப் பெற்றுள்ளது. இங்கு இந்து சமய அற நிலையத் துறையில் முதல்தர நிர்வாகஅதிகாரி ஒருவரும், இதர பணியாளர்கள் 52 பேரும் பணியாற்றி வருகின்றனர். உள்துறை சிப்பந்திகள், புறக்கோயில் சிப்பந்திகள், அலுவலக சிப்பந்திகள், கிராமச் சிப்பந்திகள், பணியாற்றி வருகின்றனர். இவர்களின் மொத்த சம்பளம் ரூ. 17,652/- ஆகும்.

ஆண்டு வரவு செலவுக் கணக்கு

வரவினம்	ரூ.	10,54,158.40
செலவினம்	ரூ.	9,57,786.67

1492-ஆம் பசலிக்கான விபரம் ஆகும்.

முடிவுரை

யாழ்ப்பாணம் கரணவாய் வரணி ஆதீனத்தின் தோற்றமும் வளர்ச்சியும் என்னும் இவ்இயலில் ஆதீனம் தோன்று வதற்கான சூழ்நிலையும் ஆதீனத்தைத் தோற்றுவித்தவரின்

திருப்பெயரும் குறிப்பிடப்பெற்றன. ஆதீனத்தின் திருப்பெயர் விளக்கம் செய்யப் பெற்றது. ஆதீனத்தின் உள்ளடங்கிய நிர்வாக வசதிக்கென ஏற்பட்ட இரண்டு மடங்களின் தோற்றம் வளர்ச்சி கூறப்பெற்றன. வரணி ஆதீனத்தின் மடாதிபதிகளின் பரம்பரை சுட்டப்பெற்றது. இலங்கையில் உள்ள தலைமை ஆதீனத்தின் பணிகள் குறித்து நிறைவில் விளக்கப் பெற்றுள்ளது. ஆதீனம் ஆற்றிவரும் பணிகள் தொண்டுகள் மற்றும் திருப்பணிகள் கும்பாபிஷேகம் முதலியனவும் திருவிழாக்கள் முதலியனவும் சிறப்புற நடைபெற்று வருவது குறித்த விபரங்களும் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது.

இதுவரை மேலே எடுத்துக்காட்டியவை வேதாரண்யம் ஸ்ரீ ஆதிவாரமடத்தின் 8-ஆம் பட்டமாகத் தற்போதுள்ள ஸ்ரீலஸ்ரீ குமரேசமூர்த்தி பண்டார சந்நிதி என்பவரிடமிருந்து கிடைக்கப் பெற்றவை. மடத்திற்குப் பண்டார சந்நிதியாக இருக்கும் இவர் கல்லூரிகளில் விரிவுரையாளராகப் பணி யாற்றினார். இப்போது மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் தமிழக அரசு நடத்தும் அர்ச்சகர் பயிற்சி மையத்தின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றுகிறார். வரணி ஆதீனம் பற்றிய இவரது டாக்டர் பட்ட ஆராய்ச்சி அண்மையில் நூலாக வெளிவந்துள்ளது (2006). யாழ்ப்பாணம் கரணவாய் வரணியில் தலைமை இடத்தில் பண்டார சந்நிதிகளாகச் சிலர் இருக்கிறார்கள். அவர்களும் இவ்வாறே பலதுறைகளில் உத்தியோகம் பணிக்கிறார்கள்.

வேதாரண்யம் கோயில் மிகப் பெரிய நிர்வாகம். ஏராளமான நிலங்களைச் சொத்தாக உடையது. உப்பளங்களை உடையது. ஒருகாலத்தில் வேதாரண்யம் ஊர் முழுவதுமே வேதாரண் யேசுவரர் பேரில் பட்டாவாக இருந்தது. வேதாரண்யம் இனாம் என்று ஒரு கிராமமும் உண்டு. முன்காலத்தில் பிற சமயத் தார்க்கு வேதாரண்யத்தில் இடமே இல்லை. இப்போதும் இஸ்லாமிய மசூதி வேதாரணியத்தை அடுத்த தோப்புத்துறை என்னும் ஊரில்தான் உள்ளது. ஊர் முழுவதுமே கோயில்

சொத்தாக இருந்தது. கடைவீதி குடியிருப்பு வீடுகள் அனைத்தும் அனுபவபாத்தியத்தின் மீதே இருந்தன.

இவ்வளவு பெருமையும் தனிச்சிறப்பும் ஏராளமான சொத்து மதிப்பும் உள்ள இக்கோயிலுக்குக் கடல் கடந்து வந்த யாழ்ப்பாணத்து ஆதீனகர்த்தர்கள், அதிலும் துறவிகளாக இல்லாமல் இல்லறத் தாராக இருக்கும் ஆதீனகர்த்தர்கள் பரம்பரை அறங்காவலர்களாக இருந்து வருகின்றனர். அறங்காவல் உரிமையைக் குறித்துத் தொடர்ந்து வழக்கு களும் நடைபெற்று வருகின்றன. அறநிலையத்துறை வெளி யிட்டுள்ள கோயில் வரலாறு, அன்பர் குமரேசமூர்த்தியின் ஆய்வுக்கட்டுரை ஆகிய இரண்டிலுமே வழக்கு முதலிய வற்றின் குறிப்புகள் உள்ளன.

வரணி ஆதீனகர்த்தர்கள் வேதாரண்யத்தில் ஆதீன நிர்வாகத்தையும் கோயில் நிர்வாகத்தையும் செய்து வருகின்றனர். ஆதீனமும் அறநிலையத்துறையும் இணக்க மாகச் செயலாற்ற வேண்டும். மிகச்சிறப்பு வாய்ந்த ஒரு பெரிய தலத்தின் பெருமையைப் பேணுவது இருசாராரின் கடமையுமாகும்.

வள்ளலார் ஆதீனம்

சீகாழி

வள்ளலார் என்றாலே வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளைத்தான் முதலில் எல்லாருக்கும் நினைவு வரும். 500 ஆண்டுகளுக்குமுன்பே வள்ளலார் என்ற சிறப்புப்பெயர் பூண்ட மரபு இருந்திருக் கிறது. வள்ளலார்கள் பலர் அம்மரபில் வந்துள்ளனர். கண்ணுடைய வள்ளலார் அவர்களுள் சிறந்து விளங்கியவர். அம் மரபின் குருமுதல்வர். அவரது நூலை வடலூர் வள்ளலார் பதிப்பித்திருக்கிறார். வள்ளலார் ஆதீனத்தினர் இல்லறத்தார். முன்பு சிறந்து விளங்கிய இவ்வாதீனம் இன்று அழிந்தே போய் விட்டது. கண்ணுடைய வள்ளலாரின் ஆதீனம் அழிந்துபட்டதே என்று இன்று கண்ணீர் வடிக்கும்நிலை.

வள்ளலார் ஆதீனம்

சீகாழி

சீகாழியில் வள்ளலார் ஆதீனம் என்று ஓர் ஆதீனம் இருந்தது. அது இன்று இல்லை. அழிந்துபோய் விட்டது. இல்லறத்தார் ஆதீனம். வெள்ளைவேட்டி ஆதீனம். இவ் வாதீனத்தை நிறுவியவர் **காழிக் கண்ணுடைய வள்ளலார்.** இவர் திருஞானசம்பந்தரை வழிபடு குருவாகக் கொண்டவர். ஆதலின் ஞானசம்பந்தரின் ஊராகிய சீகாழியில் இவ் வாதீனத்தை நிறுவினார். நிறுவியவர் பெயர் கண்ணுடைய வள்ளலார் ஆதலின் இவ்வாதீனம் வள்ளலார் ஆதீனம் எனப் பெயர் பெற்றது. இவர் மரபில் வந்த அனைவரும் வள்ளலார் என்று பெயர் பூண்டனர். 64 வள்ளலார்கள் இருந்ததாகச் சொல்வர். இச்சந்தானத்தை வள்ளலார் சந்தானம் என்பர். நாச்சியார்கோயி லாதீனமும் வள்ளல் சந்தான பரம்பரை எனச் சொல்லப் பெறுவதை அவ்வாதீன வரலாற்றிற் குறிப்பிட்டோம்.

கண்ணுடைய வள்ளலார் இயற்றியருளிய நூல் **ஒழிவி லொடுக்கம்.** அருமையான ஞான நூலாகிய அதற்கு உரை எழுதியவர் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள். உரை எழுதச் சொன்னவர் பேரூர் சாந்தலிங்க சுவாமிகள். சீகாழி வள்ளலார் ஆதீன நிறுவனர் ஒழிவிலொடுக்க நூலை இயற்றினார். பேரூர் ஆதீன நிறுவனர் சாந்தலிங்க அடிகள் அதற்கு உரை எழுதச் சொன்னார். போரூர் ஆதீன நிறுவனர் அதற்கு உரை எழுதினார். இவ்வாறு மூன்று ஆதீனங்களின் தொடர்புடை யதான ஒழிவில் ஒடுக்கம் நூலை 1851-இல் முதன்முதலில் அச்சிற் பதிப்பித்தருளியவர் வடலூர் வள்ளலார் இராமலிங்க

அடிகள். கண்ணுடைய வள்ளலார் திருஞானசம்பந்தரைக் குருவாகக் கொண்டவர். இராமலிங்க வள்ளலாரும் திருஞான சம்பந்தரைக் குருவாகக் கொண்டவர். கண்ணுடைய வள்ளலார் நூலை இராமலிங்க வள்ளலார் பதிப்பித்தார்.

கண்ணுடைய வள்ளலார் வரலாறு சரியாகவும் விளக்க மாகவும் தெரியவில்லை. சீகாழி வித்துவசிகாமணி ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை செந்தமிழ்ச்செல்வியில் கண்ணுடைய வள்ளலார் வரலாற்றை எழுதினார். பெரும் பாலும் செவிவழிச் செய்திகளே. வள்ளலார் பதிப்புக்குப் பின்னர் பேராசிரியர் அனவரதவிநாயகம்பிள்ளை 1906-இல் ஒழிவிலொடுக்கத்தைப் பதிப்பித்தார். 1934-இல் சமாஜ விசேட மாநாட்டில் ஒழிவிலொடுக்கத்தைப்பற்றி நீண்ட உரை யொன்றை ஆற்றினார். சித்தாந்தம் இதழில் அது கட்டுரை யாகவும் வெளிவந்தது. ஆராய்ச்சி அறிஞர் திருச்சிற்றம்பலம் மு. அருணாசலம் அவர்கள் எழுதிய 14, 15-ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறுகளில் கண்ணுடைய வள்ளலாரைப் பற்றியும் வள்ளல் பரம்பரையைப் பற்றியும் எழுதியுள்ளார். எமது இராமலிங்க அடிகள் வரலாற்றுப் பெருநூலில் (முதற் பதிப்பு 1971; இரண்டாம் பதிப்பு 1975; மூன்றாம் பதிப்பு 2005) வள்ளற்பெருமானின் ஒழிவிலொடுக்கப் பதிப்பைப் பற்றிக் கூறுமிடத்தில் அனவரத விநாயகர் கட்டுரையையும், மு. அ. கூறுவனவற்றையும் எடுத்துக்காட்டி, நமது கருத்துகளையும் பன்னிரண்டு பக்கங்கள் எழுதியுள்ளோம். கண்ணுடைய வள்ளலார் வரலாறு கதை கதையாகச் சொல்லப்பட்டுள்ளது. எல்லாவற்றையும் இங்கு எழுதுவதாயின் மிகவும் விரியும். ஆதலின் இவ்வளவில் சுருக்கினோம். வள்ளலார் மரபில் கண்ணுடைய வள்ளலாரையும் சேர்த்து நான்கு வள்ளல்கள் தெரிகின்றனர்.

1. கண்ணுடைய வள்ளலார்
2. சுயம்பிரகாச வள்ளல்
3. சிவஞான வள்ளல்
4. சட்டைநாத வள்ளல்

1. கண்ணுடைய வள்ளலார்

சீகாழியில் வள்ளலார் ஆதீனத்தை நிறுவியவர். **ஒழிவிலொடுக்கம்** என்ற நூலை அருளியவர். மற்றும் சில செய்யுள் நூல்களையும், உரைநடை நூல்களையும், உரைகளையும் செய்தவர். இவரது காலம் 14-ஆம் நூற்றாண்டு.

2. சுயம்பிரகாச வள்ளல்

இவர் நூல் செய்ததாகத் தெரியவில்லை.

3. சிவஞானவள்ளல்

இவர் செய்த 20 சிறு நூல்கள் **வள்ளலார் சாத்திரம்** என ஒரு தொகுதியாக வழங்குகிறது.

1.	சத்தியஞான போதம்	11.	சுருதிசார விளக்கம்
2.	பதிபசுபாச விளக்கம்	12.	சிந்தனை வெண்பா
3.	சித்தாந்த தரிசனம்	13.	நிராமயவந்தாதி
4.	உபதேச மாலை	14.	அறுபத்துநாலு சங்கை
5.	சிவஞானப்பிரகாச வெண்பா	15.	தசவழக்குச் சிந்தனை
6.	ஞான விளக்கம்	16.	குருமரபு சிந்தனை
7.	அத்துவிதக் கலிவெண்பா	17.	அநுபவ சந்திரிகை
8.	அதிரகசியம்	18.	திருமுகப்பாசுரம்
9.	சிவாகமக் கச்சிமாலை	19.	அதிகாரப்பிள்ளை யட்டவணை
10.	கர்ணாமிர்தம்	20.	மரபட்டவணை

இவ்வள்ளலார் சாத்திரம் முற்காலத்தில் ஓரளவு நன்கு பரவியிருந்தது. இவ்வள்ளலார் சாத்திரத்தை இயற்றியவர் இராமலிங்க வள்ளலார் அல்லர், சிவஞான வள்ளலார் என்று சரியாக அறியாதார் சிலர், இதை வள்ளலார் இராமலிங்க அடிகள் இயற்றியதாகவே கருதி எம்மிடம் சொன்னவர்கள் உண்டு. பழம்பதிப்பு ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தவரும் உண்டு.

4. சட்டைநாத வள்ளல்

இவர் செய்த நூல் **சதாசிவ ரூபம்**. சைவ அறிஞர்கள் நெடுங்காலமாகப் பயின்று வரும் ஒரு பிரமாண நூல். பழைய உரையுடன் திருவாவடுதுறை ஆதீனப்பதிப்பு வெளி வந்துள்ளது (1954). பதிப்பாசிரியர் த.ச.மீ.

கண்ணுடைய வள்ளல் சைவசித்தாந்தியல்லர், ஐக்கியவாத சைவர், சுயம்பிரகாச வள்ளலும் சிவஞான வள்ளலும் வேதாந்திகள், சட்டைநாதவள்ளல் சைவசித்தாந்தி என்பது மு. அருணாசலனார் கருத்து. கண்ணுடைய வள்ளலாரை ஐக்கியவாத சைவராகக் கருத இயலாது, அவரது ஒழிவி லொடுக்க நூலில் ஐக்கியவாதக் கருத்து இல்லை என்பது அனவரதவிநாயகர் கருத்து. கண்ணுடைய வள்ளலாரும் அவர் சந்தானத்தாரும் வேதாந்த சித்தாந்த சமரசவாதிகள் என்று நாம் கொள்ளலாம்.

சீகாழி வள்ளலார் ஆதீனத்தின் இன்றைய நிலை

இவ்வாதீனத்தின் இன்றைய அழிநிலையைப்பற்றி அறிஞர் மு.அ. எழுதுபவை பின்வருமாறு :

"இவ்வள்ளல் ஆதீனமானது 1960 வரையிலும் பெயரளவில் இருந்தது, இவர்கள் கிரகத்தர்களாயிருந்தனர். இந்த இருபதாம் நூற்றாண்டில் இப்பரம்பரையில் வந்தவர் கல்வியறிவில்லாமல் சீரழிந்துபோனார். வள்ளல் போகவே, பரம்பரை என்ற பெயருக்கே இடமின்றி அவ்வாதீனமும் மறைந்து போய் விட்டது''

- மு.அ. தமிழ் இலக்கிய வரலாறு 14-நூ. பக்கம் 127.

''இவருடைய பரம்பரையானது 20-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை சீகாழியில் திருமடமும் வழிபாடும் பிற விருதுகளும் பெற்றதாய்ச் சிறப்புடன் நிலவியிருந்து, பின் அழிந்துபோயிற்று, அழிந்துபோனதற்குக் காரணம், இச் சந்தானத்தார் துறவிகளாய் இராமல், இல்லறத்தாராயிருந்தனர். வெள்ளை வேட்டிக்காரர் என வழங்குவர். இல்லறம் என்ற முறையால் சந்தானம் ஒரு குடும்பத்துக்கேயுரியதாய்ப் பிற

காலத்தில் ஆகி, க்ஷீணம் அடைந்தது. இதன் பெருமையை இலக்கிய வாயிலாக உணர்ந்தவர்கள், இதன் க்ஷீணத்தைச் சீகாழியில் நேரில் கண்டவர்களிடம் கேட்டறியும்போது மனம் வெதும்பாமலிருக்க முடியாது''

- மு.அ. தமிழ் இலக்கிய வரலாறு 15-நூ. பக்கம் 183; 184.

''இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இந்த ஆதீனம் மிகவும் இழிந்த நிலையிலிருந்து வந்து, இன்று அடியோடு மறைந்துவிட்டது என்று குறிப்பிட்டோம். இம்மடத்தின் தலைவனாய் இருந்த ஓர் இளம்பிள்ளை மடத்துக்குச் சொந்தமாயிருந்த நிலம், வீடு, மடம், பூசாத் திரவியங்கள், பூசைக்கான சிறப்புமிக்க நடராசமூர்த்தி முதலான மூர்த்தி வடிவங்கள், ஏட்டு வடிவிலுள்ள நூல்கள் முதலிய அனைத்தையும் விற்றுப் பொருளைத் துர்வினியோகம் செய்துவிட்டான் என்பர் பெரியோர். மிகச் சிறந்த பெரிய நடராசமூர்த்தி வடிவமொன்று கண்ணுடைய வள்ளலே பூசித்தது, சமீப காலத்தில் இவனால் விற்கப்பட்டது என்பர். இந்த மரபு இருந்த இடம் தெரியாமல் அழிந்துவிட்டது.''

- மு.அ. தமிழ் இலக்கிய வரலாறு, 15-நூ. பக். 187; 188

இவற்றையெல்லாம் படிக்கும்போது கண்ணீர்விடாமலிருக்க இயலவில்லை. சீகாழியில் இருந்த ஆதீனம், திருஞானசம்பந்தரை உபாசனா குருவாகக் கொண்ட ஆதீனம், வள்ளலார் ஆதீனம் என்று பெயர்பெற்ற ஆதீனம், வள்ளலார் என்று பெயர்பெற்ற குருபரம்பரை, எங்கள் வள்ளலார் இராமலிங்கப்பெருமான் பதிப்பித்த ஒழிவிலொடுக்க நூலை இயற்றியவர் நிறுவின ஆதீனம், அழிந்துவிட்டதை எண்ணுந் தோறும் எண்ணுந்தோறும் எம்மால் பொறுக்க முடியவில்லை.

சீகாழியில் திருஞானசம்பந்தர் அவதரித்தருளிய இல்லம் இப்போது காஞ்சி சங்கரமடத்தின் கிளையாக இருக்கிறது. நல்ல பணிகள் நடைபெறுகின்றன. சீகாழியில் திருவாவடுதுறை தருமபுர ஆதீனங்களின் கிளைமடங்கள் இன்றும் நன்னிலையில் பணிசெய்துகொண் டுள்ளன. சீகாழிக்கே

உரிய ஒரு சிறந்த ஆதீனம் அழிந்துவிட்டது. ஆதீன பரம்பரையில் வந்தவரே அறிவின்மையால் ஒழுக்கக் கேட்டால் அழித்துவிட்டார். இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் சமய உலகம் அறியவேண்டும். இப்படிப்பட்ட அழிவுகள் இனி வருங்காலத்தில் ஏற்படாதிருக்க ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாதீனம் சீகாழியில் ஆனந்ததீர்த்தக் குளக்கரையில் இருந்ததென்று தெரிகிறது. இலக்கிய ஆய்வும் ஆவண ஆய்வும் களஆய்வும் செய்து கண்டுபிடிக்க வேண்டும்.

சொர்க்கபுர ஆதீனம்

அம்பர்மாகாளம்

தருமபுரஆதீனத்திலிருந்து பிரிந்துசென்ற தம்பிரான் ஒருவர் நிறுவிய ஆதீனம். தொடக்க காலத்தில் சிறப்பாக விளங்கியது. இடைக்காலத்தில் சிறப்புக் குன்றியது. இப்போது நலிந்த நிலையில் உள்ளது.

சொர்க்கபுர ஆதீனம்

அம்பர்மாகாளம்

தருமபுர ஆதீனம் எட்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் காலத்தில் அவர்களுடன் இருந்த தம்பிரான் சுவாமிகள் ஒருவர் தனியே பிரிந்து சென்று பாடல் பெற்ற தலமாகிய அம்பர்மாகாளத்தில் சொர்க்கபுர ஆதீனம் என்று புதியதாக ஓர் ஆதீனத்தை நிறுவினார். தமது பெயரையும் அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் என்று வைத்துக்கொண்டார்.

அம்பர்மாகாளம் கீழைத்திருமாகாளம், மேலைத் திருமாகாளம் என இருபிரிவுகளை உடையது. கீழைத் திருமாகாளத்தில் சொர்க்கபுரம் என்னும் சிவன்கோயில் உள்ளது. சொர்க்கபுர ஆதீனமும் இங்குதான் அமைக்கப் பெற்றது. இவர் பிறந்த ஊர் இதுவே என்றும் கூறுவர்.

இவரது பெருமையை அறிந்த தஞ்சாவூர் மகாராட்டிர மன்னர் இரண்டாம் சரபோஜி பெரும் நிலப்பரப்பைத் தானமாக அளித்தார். இராணி சுஜானபாய் இவர் நிட்டையிலிருக்கும் கோலத்தைக் கனவில் கண்டு தரிசித்து மகிழ்ந்து, அதன்பின் நேரில் வந்து தரிசித்துச் சில நிலங்களை மானியமாக அளித்தார். இவ்வாறு நிலங்களும் சொத்துகளும் சேர்ந்தன.

தமது ஞானாசிரியன் மீது கிளிவிடுதூது என்னும் நூலைப் பாடினார். அறிவானந்த சமுத்திரம், அருட்பாமாலை, திருவுசாத்தானத் தோத்திரம், வினாவுரை, திரிபதார்த்ததீபம், சித்தாந்த நிச்சயம், அனுட்டானவிதி ஆகிய நூல்களையும்

இயற்றினார். உமாபதி சிவம் திரட்டிய தேவாரத் திரட்டை இவ்வாதீனத்திற்குரிய பாராயண நூலாகக் கொண்டார்.

இராணி சுஜானாபாய் நில மானியங்களைக் கொடுத்த காலம் கி.பி 1737 என்று தெரிகிறது. இவர்கள் 1748 விபவ ஆண்டு கார்த்திகைப் புனர்பூச நாளில் சிவப்பேறு பெற்றார்கள்.

ஆதீன நிறுவனர் அழகிய திருச்சிற்றம்பல தேசிகருக்குப் பின், வைத்தியலிங்க தேசிகர், தவப்பிரகாச தேசிகர், சரவண தேசிகர், பஞ்சாக்கர தேசிகர், சிவப்பிரகாச தேசிகர், சிவானந்த தேசிகர், சங்கிலிச்சாமியார், செட்டித்திருமேனி தேசிகர், ஞான தேசிகர், முத்துக்குமார தேசிகர், சதாசிவ தேசிகர், மருதவாணப் பிரகாச தேசிகர் எனப் பன்னிருவர் பட்டத்திற்கு வந்தனர் என்று தெரிகிறது.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை யவர்கள் அம்பர்ப்புராணம் பாடும்போது, அம்பர்மாகாளத்தில் சொர்க்கபுர ஆதீனத்தில்தான் தங்கியிருந்தார். சொர்க்கபுர ஆதீனத்திற்குத் திருச்சிராப்பள்ளியில் கீழைச்சிந்தாமணியில் ஒரு கிளை மடம் இருந்தது. அதிலும் சிலகாலம் பிள்ளையவர்கள் தங்கி யிருந்தார்.

சொத்துகளோடும் கிளைமடங்களோடும் தொடக்க காலத்திலும் இடைக்காலத்திலும் சிறந்துவிளங்கிய இவ் வாதீனம் பிற்காலத்தில் விளக்கம் குன்றி விட்டது. இப்போது இதன் பராமரிப்புக்குத் திருவாவடுதுறை குருமகாசந்நிதானம் உதவி செய்கிறார்கள்.

13-ஆவது குருமகாசந்நிதானம் சிவப்பிரகாசதேசிக சுவாமி களின் 42-ஆவது ஆண்டு குருபூஜை 19.2.2009-இல் கொண்டாடப் பெற்றது. இப்போது மருதவாண சுவாமி என்கிற கருணாகர தேசிக சுவாமிகள் நிர்வகித்து வருகிறார்.

ஆகம சிவப்பிரகாசர் ஆதீனம்

சிதம்பரம்

ஆகமஞானத்தில் சிறந்து விளங்கியதால்

ஆகம சிவப்பிரகாசர் என்றே

பெயர்பெற்ற சான்றோரால்

சிதம்பரத்தில் நிறுவப்பெற்ற

இவ்வாதீனம் இன்று இருக்குமிடங்கூடச்

சரியாகத் தெரியவில்லை.

ஆகம சிவப்பிரகாசர் ஆதீனம்

சிதம்பரம்

சைவ உலகில் சிவப்பிரகாசர் என்ற பெயருடன் விளங்கியவர்கள் மிகப்பலர். அவர்களுள் ஒருவராகிய இவர் ஆகமஞானத்தில் சிறந்து விளங்கியவ ராதலின் ஆகம சிவப்பிரகாசர் என்றே வழங்கப்பெற்றார்.

சிதம்பரத்தில் ஞானப்பிரகாசத் திருக்குளத்தின் வட கரையில் வெவ்வேறுகாலங்களில் சில மடங்கள் உண்டாயின. அவற்றுள் ஒன்று ஆகமசிவப்பிரகாசர் ஆதீனம். அது இன்ன தென இப்போது அறியக்கூடவில்லை. குளத்தின் வடகரை யில் சேக்கிழார் கோயிலுக்கு அருகே இவ்வாதீனமடம் இருந்திருக்கலாம்.

தாயுமானசுவாமிகள் ஆதீனம்

அன்னப்பன் பேட்டை

தாயுமானவர் பாடல்திரட்டை அருளிய
தாயுமானவரின் பரம்பரையில் பின்வந்த
மற்றொரு தாயுமானவர் இம்மடத்தை
நிறுவினார்.

தாயுமான சுவாமிகள் ஆதீனம்
அன்னப்பன் பேட்டை

தாயுமானவரின் பரம்பரையில் வந்த துறவிகள் அன்னப்பன்பேட்டையில் மடம் அமைத்துக்கொண்டு தொண்டு செய்து வந்தனர். பாடல் பெற்ற திருத்தலமாகிய கலிக்காமூர் இப்போது அன்னப்பன்பேட்டை என வழங்குகிறது. இந்த அன்னப்பன்பேட்டை வேறு. தாயுமானசுவாமிகள் ஆதீனம் உள்ள அன்னப்பன்பேட்டை வேறு. இது தஞ்சாவூர் மாவட்டம் தென்குடித்திட்டை அருகில் உள்ளது. அன்னப்பன்பேட்டை என்ற பெயரில் வேறு சில ஊர்களும் உள்ளன.

சூரியனார் கோயில் ஆதீனத்திலிருந்து நிர்ப்பந்தச் சூழ்நிலையில் வெளியேற நேர்ந்த ஸ்ரீலஸ்ரீ மீனாட்சிசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் அன்னப்பன்பேட்டைக்குச் சென்று தாயுமானவ சுவாமிகள் மடத்தில் 10-ஆம் குருநாதராகச் சிலகாலம் இருந்தார்கள். ஆதலின் இவர்களுக்கு முன் குருமார்கள் ஒன்பதின்பர் வழிவழியாக அங்கிருந்தனர் என்பது தெரிகிறது. அன்னப்பன் பேட்டை தாயுமான சுவாமிகள் மடத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் மீனாட்சிசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் இப்பொழுது திருவாவடுதுறை ஆதீனத்தில் திருவிடைமருதூர்க் கட்டளைத் தம்பிரான் சுவாமிகளாக இருந்து வருகிறார்கள். இவர்களது இயற்பெயர் தாயுமானவர் என்பது ஒருவகையில் பொருத்தம்மிக்கது. இவர்கள் பிறந்த நாள் : 19.05.1960. பெற்றோர் இரத்தினசபாபதி தேசிகர், பொன்னம்மாள். அன்னப்பன்பேட்டை தாயுமானவர் மடத்தில் 11-ஆம் பட்டம் தாயுமானவ சுவாமிகளாக இருக்கவேண்டிய இவர்கள் இளமை யிலேயே திருவாடுவடுதுறை ஆதீனத்திற்கு வந்து சேர்ந்து 26

ஆண்டு காலமாக, திருவாவடுதுறை ஆதீனத் தம்பிரான் சுவாமி களாக இருந்து வருகிறார்கள். இப்போது திருவிடைமருதூர் கட்டளை தம்பிரான் சுவாமிகளாக பணியாற்றி வருகிறார்கள். சீர்மன்னு மீனாட்சி சுந்தரத் தம்பிரான் சுவாமிகள் என்பது பெயர்.

அன்னப்பன்பேட்டை தாயுமானவ சுவாமிகள் மடம் சிறிய கூரைக்கட்டிடம். இப்பொழுது திருவாவடுதுறை ஆதீனத்தின் உதவியுடன் நடைபெற்று வருகிறது. தை விசாகத்தில் தாயுமானவர் குருபூஜையும் ஆனி அஸ்தத்தில் 10-ஆம் பட்டம் மீனாட்சி சுந்தர சுவாமிகளின் குருபூஜையும் நடைபெறுகின்றன. நாள் வழிபாடும், சிறப்பு வழிபாடும் நிகழ்ந்து வருகின்றன.

நீலப்பாடி ஆதீனம்

விளக்கங் குன்றியுள்ள

ஆதீனங்களில் இதுவும் ஒன்று

நீலப்பாடி ஆதீனம்

அபிதான சிந்தாமணியில் சுத்தசைவ பதினெண் ஆதீனங்கள் என்ற பெயர்ப்பட்டியலில் ''நீலப்பாடி ஆதீனம், தஞ்சாவூர்'' என்று உள்ள பெயரைத் தவிர வேறு எந்த வரலாறும் இதற்கு இல்லை.

திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர் நாகப்பட்டினம் நெடுஞ்சாலையில் திருவாரூரிலிருந்து 5 கிலோமீட்டரில் நீலப்பாடி என்ற ஊர் உள்ளது. அஞ்சலகம் கூத்தூர் 611 105. ஸ்ரீ நமச்சிவாய சுவாமிகள் என்பவர் ஏறத்தாழ 1820 ஆண்டளவில் நீலப்பாடியில் ஒருமடத்தை நிறுவித் தொண்டு புரிந்து வந்தார். மடத்திற்கு 5 வேலி நன்செய்நிலமும் 5 வேலி புன்செய்நிலமும் இருந்தன. சிவன்கோயில் ஒன்று சிறிய அளவில் உள்ளது. நமச்சிவாய சுவாமிகள் சமாதியும் உள்ளது. அவருக்குப்பின் நிர்வாகியாக இருந்த நடராச முதலியாரின் சமாதியும் உள்ளது. நடராச முதலியாரின் பரம்பரையினர் இப்போதும் உள்ளனர். சொத்துகள் அவர்களது மேற்பார்வை யில் உள்ளன. சொத்துகள் பெரும்பாலும் பராதீனம் செய்யப் பெற்றுக் குறைந்துவிட்டன. மடம் இடிந்து தகர்ந்து பெயரளவில் உள்ளது. தேசிகர் ஒருவர் வழிபாடு செய்து வருகிறார். மடத்தின் நிறுவனர் நமசிவாய சுவாமிகள், திருவாரூர் குருதட்சிணாமூர்த்தி சுவாமிகளின் காலத்தவர் என்றும் அவருடன் தொடர்புடையவர் என்றும் சொல்லப்பெறுகிறது. ஒருவரிகூட வரலாறு தெரியாதிருந்த இதற்கு இப்போது இவ்வளவில்தான் வரலாறு தெரிவிக்க இயல்கிறது.

திருப்பனந்தாள் காசித்திருமடத்திற்கு நீலப்பாடியில் சொத்துகள் உள்ளன. ஏஜண்ட் ஒருவர் அங்கிருந்து நிர்வகித்து வருகிறார்.

நீலப்பாடியில் திரு அரசுகண்ணையா என்றொரு சுதந்திரப் போராட்டத் தியாகி இருக்கிறார். வள்ளலார் இராமலிங்க அடிகளின் மீது பெரும்பற்றுக்கொண்ட அவர் ''அரசப்பிள்ளை வடிவாம்பாள் கருணை இல்லம்'' என்றொரு அற நிறுவனத்தை வள்ளலார் வழியில் நிறுவி நன்கு நடத்தி வருகிறார்.

நீலப்பாடி ஆதீன வரலாறு முழுமையாக மேலும் ஆராய்ந்தறிதற்குரியது.

நீலப்பாடி ஆதீனத்தின் பரம்பரையில் இப்போது உள்ள ஒருவர் திருவாவடுதுறை ஆதீன குருமகாசந்நிதானத்தை அணுகி, ஆதீனத்தை மீண்டும் நன்னிலைக்குக் கொண்டுவர முயல்வதாக அறிகிறோம்.

இராமேச்சுர ஆதீனம்

சிறந்த தலத்தில் சிறந்து விளங்கிய இவ்வாதீனம்
இன்று இருக்குமிடமும் தெரியவில்லை.

இராமேச்சுர ஆதீனம்

அபிதான சிந்தாமணியில் சுத்த சைவ பதினெண் ஆதீனங்கள் என்ற பெயர்ப்பட்டியலில் இராமேச்சுர ஆதீனம் என்ற பெயர்க் குறிப்பைத் தவிர வேறு ஒன்றும் இதன் வரலாறாகத் தெரியவில்லை.

திருவாவடுதுறை ஆதீனத்தின் கிளைமடம் இராமேஸ்வரத்தில் உள்ளது. திருப்பனந்தாள் காசித் திருமடத்திற்கு இராமேஸ்வரத்தில் ஒரு கிளைமடம் உள்ளது. இராமகிருஷ்ணமடம் போன்ற புதிய மடங்களும் இராமேஸ்வரத்தில் அண்மைக்காலத்தில் தோன்றியுள்ளன.

சிறந்த சிவத்தலமாகிய இராமேசுவரத்தில் முற்காலத்தில் இராமேசுவரத்தின் பெயரிலேயே இராமேசுவர மடம் என்றொரு மடம் விளங்கியிருக்கலாம். அதையே அபிதான சிந்தாமணி ஆசிரியர் இராமேச்சுர ஆதீனம் என்று குறிப்பிட்டிருக்கலாம். அது இன்னதென இப்போது தெரியவில்லை. அழிந்த நிலையிலாவது இப்போது உள்ளதா என்பதும் தெரியவில்லை.

பின் இணைப்புகள்

பின்இணைப்பு 1

18 சைவ ஆதீனங்களின் பெயர்ப்பட்டியலில் சேராத ஒரு மடம்

செப்பறைமடம்

திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலிக்குக் கிழக்கே ஐந்து மைல் தொலைவில் இராசவல்லிபுரம் என்னும் அழகிய சிற்றூர் ஒன்று உள்ளது. தமிழறிஞர் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை பிறந்த ஊர். இராசவல்லிபுரத்திற்கு அடுத்தது செப்பறை என்னும் ஊர்.

செப்பறை மடம் என்று பழைமையான மடம் ஒன்று உண்டு. இதுவும் மெய்கண்ட சந்தானத்தில் வருவதே.

<u>மெய்கண்டார்</u>

|

அருள்நந்தி சிவாசாரியர்

|

மறைஞானசம்பந்தர்

|

உமாபதி சிவாசாரியர்

|

அருள்நமச்சிவாயர்
(மச்சுறை வணிகயோகி)

|

திருவையாறு சந்திரசேகரர்

|

திருவையாறு சாமிநாதர்

|

நாகை பொன்னம்பல தேசிகர்

மெய்கண்ட சந்தானத்தில் நான்காவது சந்தான குரவர் உமாபதி சிவாசாரியர். உமாபதி சிவாசாரியரிடம் உபதேசம் பெற்றவர் அருள் நமச்சிவாயர். மச்சுச் செட்டியார் மச்சுறை வணிகயோகி என்றும் இவர் வழங்கப்பெறுவார் என்பதை முன்பே கூறியுள்ளோம்.

அருள்நமச்சிவாயரிடம் திருவையாறு சந்திரசேகரர் திருவையாறு சாமிநாதர் என்ற இருவரும் உபதேசம் பெற்றனர். இவ்விருவரும் ஆதிசைவ அந்தணர்கள் (சிவாசாரிய குலத்தினர்). இம்மரபில் அடுத்து வந்தவர் நாகை பொன்னம்பல தேசிகர். இவரே செப்பறை மடத்தின் நிறுவனர் என்று சொல்லப் பெறுகிறார். பொன்னம்பல தேசிகருக்குப் பின் 14 ஆசாரியர்கள் இருந்ததாக ஒரு பெயர்ப்பட்டியல் கிடைக்கிறது.

1. நாகை பொன்னம்பல தேசிகர், நிறுவனர்
   (கி.பி. 1560-இல் முத்தி)
2. நாகை கனகசபைநாத தேசிகர்
   செப்பறை கனகசபாபதி சிவாசாரியர் (சின்னப்பட்டம்)
3. இராசவல்லிபுரம் பொன்னம்பலதேசிகர் கி.பி. 1620-1646
   கொல்லம் ஆண்டு 821
4. கனகசபாபதி தேசிகர் கொல்லம் 856
5. பொன்னம்பல தேசிகர் கொல்லம் 880
6. அழகியகூத்த தேசிகர் கொல்லம் 927
7. சுப்பிரமணிய தேசிகர் கொல்லம் 932
8. அருணாசல தேசிகர் கொல்லம் 952
9. அழகியகூத்த தேசிகர் கொல்லம் 992
10. அருணாசல தேசிகர் கொல்லம் 1049
11. அழகிய கூத்த தேசிகர் கொல்லம் 1074
12. கனகசபாபதி தேசிகர் கொல்லம் 1088
13. அருணாசல தேசிகர் கொல்லம் 1090
14. 14-வது பட்டம் அழகியகூத்த தேசிகர் . கொல்லம் 1090 முதல்

செப்பறைக் கனகசபைநாதன் உலா பு.சி. புன்னைவனநாத முதலியார் பதிப்பில் (1953) இப்பட்டியல் காணப்படுகிறது. இரண்டாவது பட்டம் கனகசபைநாத தேசிகரின் மீது மூன்றாவது பட்டம் பொன்னம்பல தேசிகரால் பாடப்பெற்ற செப்பறைக் கனகசபைநாதன் உலா 649 கண்ணிகளால் இயன்ற நூல். 1953-இல் இந்நூலைச் செப்பறை மடாதிபதி இராசவல்லிபுரம் ஸ்ரீலஸ்ரீ அழகியகூத்த தேசிகர் வெளியிட்டுள்ளார். பு.சி. புன்னைவனநாத முதலியார் பதிப்பாசிரியர். பெருநாவலர் பு.சி. புன்னைவனநாத முதலியார் என்று அச்சிடப்பெற்றுள்ளது. பு.சி.பு. பதிப்புரையில் நூல் வரலாறும் செப்பறை மடத்து வரலாறும் சுருக்கமாகக் கூறப்பெற்றுள்ளன. செப்பறை மடாலய பரம்பரை என்று மேற்காட்டிய பட்டியல் கொடுக்கப் பெற்றுள்ளது. செப்பறை மடாலயம் 14-ஆவது பட்டம் திருவளர்திரு அழகியகூத்த தேசிகர் அவர்கள் என்று தேசிகரின் படமும் சிறிய அளவில் அச்சிடப்பெற்றுள்ளது.

செப்பறைத் தலபுராணம் என்றொரு உரைநடை நூல் இராசவல்லிபுரம் திருவள்ளுவர் மடத்தின் நிர்வாகக் குழுவினரால் 1969-இல் வெளியிடப் பெற்றுள்ளது (இத் திருவள்ளுவர் மடம் இராசவல்லிபுரம் சங்கரசுப்பிரமணிய பிள்ளை என்பவரால் சைவ சமய வளர்ச்சிக்காக ஏற்படுத்தப் பெற்றது. 1912-இல் தம்முடைய சொத்துகள் முழுவதையும் இத்திருவள்ளுவர் மடத்திற்குச் சங்கரசுப்பிரமணிய பிள்ளை எழுதி வைத்திருக்கிறார்). 1969-இல் வெளியான செப்பறைத் தலபுராண நூலிலும் திருவள்ளுவர் மடம் இந்நாள் டிரஸ்டிகள் எனக் குறிப்பிடப்பெற்றுள்ள ஐவர் பெயர்களில் ''திரு அழகியகூத்தக் குருக்கள், செப்பறை மடாதிபதி'' என்ற பெயர் முதலாவதாக உள்ளது.

1953; 1969-ஆம் ஆண்டுகளில் செப்பறை மடாதிபதியாக அழகியகூத்த தேசிகர் (அழகியகூத்த குருக்கள்) இருந்திருக்கிறார் என்பது மேற்குறித்த இரு நூல்களாலும் தெரிகிறது. நூற்றாண்டு வரிசையில் இலக்கிய வரலாறு எழுதிய அறிஞர் திருச்சிற்றம்பலம் மு. அருணாசலம் அவர்கள் 14-ஆம்

நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் மேற்குறித்த இரு நூல்களைக் கொண்டே செப்பறை மடத்தைப்பற்றி எழுதி யுள்ளார். (இவ்விரு நூல்கள் எம்முடைய நூலகத்திலும் உள்ளன - ஊரனடிகள் நூலகம்)

இலக்கணக் கொத்து சுவாமிநாத தேசிகர் இலக்கணக் கொத்து என்ற நூலை இயற்றியவர். இவர் திருநெல்வேலி ஈசான்ய மடத்திலிருந்து திருவாவடுதுறைக்கு எட்டாவது குருமகாசந்நிதானம் மாசிலாமணி தேசிகர் காலத்தில் வந்து அவரருள் பெற்றவர். இவர் திருநெல்வேலியில் இருந்த காலத்தில் செப்பறை சின்னப்பட்டம் கனகசபை சிவாசாரியரிடம் வடமொழிக் கல்விக் கற்றவர் என்பது இவர் செய்த இலக்கணக் கொத்தின் பாயிரப் பாடலால் அறியப் பெறுகிறது.

> ''செப்பறைப் பதியின் வாழ்சிவத் துவிஜன்
> கனக சபாபதி கருதுவட நூற்கடல்
> தபோதனர் புகழும் சைவாதி ராசன்
> உபய பதங்களை உண்மையொடு பணிவாம்''

என்பது சுவாமிநாத தேசிகர் இயற்றிய இலக்கணக் கொத்தின் பாயிரச் செய்யுள். இதனுள் செப்பறைப்பதி என ஊரும், சிவத்துவிஜன் எனக் குலமும், கனகசபாபதி எனப் பெயரும், வடநூற்கடல் என அவரது வடமொழிப் புலமையும் கூறப் பெறுகின்றன. சிவத்துவிஜன் என்பது ஆதிசைவ அந்தண சிவாசாரிய மரபு.

தொடக்க காலத்தில் இருந்த திருவையாறு சந்திரசேகரர் திருவையாறு சாமிநாதர் ஆகிய இருவரும் ஆதிசைவ அந்தணர் எனக் கூறப்பெறுகின்றனர். பின்பு சின்னப் பட்டத்தில் இருந்தவராகக் கூறப்பெறும் கனகசபையாரும் சிவாசாரியர் எனக் கூறப்பெறுகிறார். இலக்கணக் கொத்துடையார் இவரைச் சிவத்துவிஜன் எனத் துதிக்கிறார். 14-ஆம் பட்டத்திலிருந்த அழகியகூத்தரும் தேசிகர் குருக்கள் என இரு பெயர்களாலும் சுட்டப்பெறுகிறார்.

செப்பறைமடத்துக் குருமரபில் சிவாசாரியர்களும் தேசிகர்களும் கலந்தே மாறிமாறி வந்துள்ளனர். பெரும்பாலோர் தேசிகர்களே. சிவாசாரியர்கள் சிலரே. செப்பறைக் குருமரபின் தேசிகர்கள் அனைவரும் வேளாளர் இல்லறத்தார் என்றும் கூறப்பெறுகின்றனர். துழாவூர், வேளாக்குறிச்சி, நாச்சியார் கோயில், வரணி, வள்ளலார் ஆதீனங்கள் இல்லறத்தார்களே என்பதும் இவண் கருதத்தக்கது.

செப்பறை மடத்தின் வரலாறு இலக்கிய உலகிலும் சைவ உலகிலும் விளக்கமாக வழங்கவில்லை. அரிதின் சில செய்திகளே கிடைக்கின்றன. மடமும் இப்போது விளக்கமாக உள்ளதாகத் தெரியவில்லை. செப்பறை மடத்தின் வரலாறும் இன்றைய நிலையும் மேலும் ஆராய்ந்து அறிதற்குரியவை.

செப்பறை என்ற பெயரே மிகவும் நன்றாக இருக்கிறது. செப்பு-செம்பு. செப்பு-அறை = செப்பறை. பஞ்சசபைகளில் திருநெல்வேலி தாமிரசபை. திருநெல்வேலி அருகே செப்பறைத் தலம் அமைந்துள்ளது கவனிக்கத்தக்கது. திருநெல்வேலியில் செம்பொன்அம்பலம். அதற்கு அருகே செப்பறை. எவ்வளவு அருமையான அமைப்பு.

பின்இணைப்பு 2

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தோன்றிய ஒரு ஆதீனம்



திலகவதியார் திருவருள் ஆதீனம்

புதுக்கோட்டை

சாயிமாதா சிவ பிருந்தாதேவி அவர்களைத் தமிழுலகம் நன்கறியும். இளமையில் தலைசிறந்த பேச்சாளராகவும் சமூக சேவகியாகவும் திகழ்ந்த அம்மையார் பிற்காலத்தில் **திலகவதியார் திருவருள் ஆதீனம்** என்று ஒரு ஆதீனத்தைப் புதுக்கோட்டையில் புதிதாக நிறுவினார்.

ஆண்களில் குன்றக்குடி அடிகளார் எப்படியோ அப்படிப் பெண்களில் சாயிமாதா பிருந்தாதேவி. பேச்சிலும் செயலிலும் வீராங்கனை. இலக்கிய மேடைகளிலும் சமய மேடைகளிலும் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இவர் ஒரே பெண் பேச்சாளராக ஒப்பற்ற பேச்சாளராக விளங்கினார்.

1957-இல் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகளிர் இல்லம் என்றொரு மகளிர் தொண்டு நிறுவனத்தை நிறுவி அற்புதப் பெரும்பணிகள் பலவற்றைச் செய்தார். இவ்வில்லத்தைத் திராவிடர் கழகத் தலைவர் பெரியார், முதலமைச்சர் பக்தவத்சலம், காமராசர் முதலியவர்கள் பார்வையிட்டுப்

பாராட்டினர். இவ்வில்லத்தைப் பார்த்துப் பாராட்டாத தலைவர்களே இல்லை என்று சொல்லலாம்.

குன்றக்குடிக்குப் பெரியார் வந்தபோது திருநீறு அணிவித்து வரவேற்றது போன்றே, புதுக்கோட்டைக்குச் சாயிமாதாவின் தொண்டு இல்லத்திற்குப் பெரியார் வந்தபோதும் திருநீறு அணிவித்து வரவேற்பளிக்கப் பெற்றது.

சாயிமாதா புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை நகரத்தை அடுத்துள்ள திருக்கோகர்ணத்தில் பிறந்தவர். பிறந்த நாள் 31.01.1927, அட்சய தை 18 திங்கள் கிழமை. பெற்றோர் : புதுக்கோட்டை சமஸ்தான இசைப்புலவர் சிவராமநட்டுவனார், நல்லம்மாள். குழந்தைப் பருவத்தில் பெற்றோர் இட்ட பெயர் பிருந்தாவனம். பள்ளியில் சேர்த்தபோது பிருந்தாதேவி என மாற்றப்பெற்றது. புதுக்கோட்டையில் இராணியார் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் படித்தார். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இந்திய தத்துவஞானம் மூன்றாண்டுப் பட்டப்படிப்பில் சேர்ந்து தேர்ச்சி பெற்றார் (B.O.L). அறுபது ஆண்கள் படித்துக் கொண்டிருந்த வகுப்பில் இவர் ஒருவரே பெண். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசையறிஞர் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை இசையாசிரியராக இருந்தார். சைவப் பாதிரியார் எனப் பின்னாளில் புகழ்பெற்ற அறிஞர் ச. சச்சிதானந்தம் பிள்ளை பதிவாளராக இருந்தார். மாணவி பிருந்தாதேவிக்கு இவ்விருவர் பழக்கமும் ஆதரவும் நிரம்பக் கிடைத்தது. சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை வீட்டில் தங்கிப் படித்தார். சச்சிதானந்தம் பிள்ளை வீட்டிற்கு அவ்வப் போது சென்று அறிவைப் பெருக்கிக் கொண்டார்.

பி.ஒ.எல். பட்டப்படிப்பை முடித்ததும், தருமபுர ஆதீனத்தில் நிகழ்ந்த சைவசித்தாந்தப் பயிற்சி வகுப்பில் சச்சிதானந்தம் பிள்ளை சேர்த்துவிட்டார். ச. தண்டபாணி தேசிகர், முத்து சு. மாணிக்கவாசக முதலியார், க. வச்சிரவேல் முதலியார் முதலிய அறிஞர்கள் பயிற்சி ஆசிரியராக விளங்கினர். இம்மூவரது பாராட்டையும் . பிருந்தாதேவியார் பெற்றார். பயிற்சி வகுப்பைப் பார்வையிட்டு ஆசிகூற வந்த காஞ்சி

காமகோடி பீடம் பெரியவர்கள் ஜகத்குரு சங்கராசாரிய சுவாமிகளின் பாராட்டையும் ஆசியையும் பெற்றார்.

படிப்பு முடிந்தபின் இளமையிலேயே சிறந்த பேச்சாளராக விளங்கினார். தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை முதலிய பல்வேறு பழம்பெரும் சபைகளின் அழைப்பை ஏற்றுப் பெருஞ்சொற்பொழிவாளராக விளங்கினார். சென்னை யிலுள்ள லேடி வெல்லிங்டன் கல்லூரிக்குச் சென்று சொற்பொழிவாற்றினார். அந்நாளில் காங்கிரஸ் பேரியக்கத்தில் பெண்பேச்சாளராக விளங்கிய மிகச்சிலரில் நம் அம்மையார் சிவ. பிருந்தாதேவி அவர்களே சிறந்த பேச்சாளராக விளங்கினார்.

அந்நாளில் புதுக்கோட்டை மாவட்டம் ஒரு தனி சுதேச சமஸ்தானமாக இருந்தது. புதுச்சேரி மாநிலம் பிரெஞ்சு ஆட்சியில் தனி இராஜ்ஜியமாக இருந்தது. தமிழ்நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சி. தமிழ்நாடு, புதுச்சேரி, புதுக்கோட்டைத் தனி அரசு ஆகிய மூன்றிலும் சாயிமாதா அந்நாளிலேயே புகழ்பெற்று விளங்கினார்.

அகவை முதிர முதிர, அனுபவம் முதிர முதிர, ஆன்ம பக்குவமும் முதிர்ந்தது. இலக்கிய மேடை, பொதுமேடைகளில் பேச்சு, புதுக்கோட்டை சமூகப் பணி என்றிருந்த நிலை சமயப் பணிக்கு உயர்ந்தது. காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு பெரியவர்கள் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி மகா சுவாமி களின் அனுக்கிரகத்தைப் பெற்றுத் துறவறம் பூண்டார். சிவ. பிருந்தாதேவி, சாயிமாதா சிவ. பிருந்தாதேவி ஆனார். ஆந்திர மாநிலத்திலிருந்து வந்திருந்த விபூதிசாயிபாபா என்ற பெரியவரிடம் காவிஉடைத் துறவறம் பெற்றுக்கொண்டதால் சாயிமாதா சிவ பிருந்தாதேவி என்பது தீட்சாதிருநாமம் ஆயிற்று.

1972-இல் துறவுபூண்ட சாயிமாதா தன் பணிகளுக்கு ஓர் ஆதீனத்தை நிறுவ எண்ணினார். புதுக்கோட்டையில் திலகவதியார் திருவருள் ஆதீனத்தை நிறுவினார். 30.06.1983-இல் ஆதீனத் தொடக்க விழாவும் சாயிமாதா அம்மையார் ஆதீன கர்த்தராக அருளாட்சி ஏற்புவிழாவும் புதுக்கோட்டையில் சிறப்புற நிகழ்ந்தன. காஞ்சிபுரம் தொண்ட மண்டல

ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தலைமையில் விழா நிகழ்ந்தது. பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரும், சிரவணபுரம் கௌமாரமடம் தவத்திரு சுந்தர சுவாமிகளும் கலந்துகொண்டு ஆசாரிய அபிடேகம் பீட ஆரோகணம் முதலியவற்றை நடத்தி வைத்தருளினர். திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களும், மயிலை குருஜீ சுந்தரராம் சுவாமிகளும் இன்னும் பல பெரியோர்களும் சாதுக்களும் அறிஞர்களும் பிரமுகர்களும் பொதுமக்களும் திரளாகக் கலந்துகொண்டனர். நாம் வாழ்த்து அனுப்பிச் சிறப்பித்தோம். சைவ மங்கையர் மாநாடு, கருத்தரங்கம், கவியரங்கம் முதலிய பல்வேறு அங்கங் களுடன் ஒரு முழுநாள் விழாவாக இவ் விழா நிகழ்ந்தது.

திலகவதியார் திருவருள் ஆதீனம் என்பது மிகவும் பொருத்தமான இனியபெயர். ஷண்மத ஆஸ்ரமமாக இதை அம்மையார் அமைத்தார். ஒரே வளாகத்தில் சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணாபத்யம், கௌமாரம் ஆகிய ஆறு சமயங்களுக்கும் கோயில் - ஷண்மத ஆலயம் - கட்டினார். காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சங்கராசாரிய சுவாமிகள், தருமபுர ஆதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மற்றும் பெரியவர்களின் அருளாசியை சாயிமாதா பெற்றார்.

முதல் பெண் மடாதிபதியும் ஒரே பெண் மடாதிபதியும் ஆகிய சாயிமாதா உலகம் சுற்றிய பெண் மடாதிபதியும் ஆவார். இலங்கைக்கு இருபது முறையும் மலேசியாவுக்கு நான்கு முறையும் அமெரிக்காவுக்கு இரண்டுமுறையும் சுற்றுப் பயணம் செய்துள்ளார். ஜெர்மனிக்குச் சென்று வந்துள்ளார். மலேசியாவுக்குச் சென்ற சமயங்களில் சிங்கப்பூருக்கும் இந்தோனேஷியாவுக்கும் சென்றுவந்தார். உலக இந்து மகளிர் பேரவையின் தலைவராக விளங்கினார்.

அம்மையார் சில நல்ல நூல்களை எழுதினார். ''மனிதன் எங்கே போகிறான்'', ''மனிதனும் தெய்வமாகலாம்'' என்ற இருநூல்கள் அவற்றுள் சிறந்தவை.

சாயிமாதாவுக்கும் நமக்கும் ஏறத்தாழ 50 ஆண்டுகாலப் பழக்கம். எங்கள் இருவரது பூர்வாசிரம காலத்திலேயே பழக்கம் ஏற்பட்டது. அக்காலத்திலேயே அவர் வடலூரில் எமது தலைமையில் உரையாற்றினார். விசுவ இந்து பரிஷத் நடத்திய துறவியர் மாநாடு அனைத்திலும் அம்மையார் முக்கிய பேச்சாளராகத் திகழ்ந்தார். அம்மையார் பேச்சு இடம் பெறாத சமய மாநாடுகளே இல்லை எனலாம். வெறும் பேச்சாளராக மட்டும் இல்லாமல் செயல்களிலும் அம்மையார் சிறந்து விளங்கினார். திலகவதியார் மங்கையர்க்கரசியார் முதலிய சைவமங்கையர் வரிசையில் சாயிமாதாவும் சேர்க்கப்பெற வேண்டியவர்.

1927-இல் பிறந்த அம்மையார் 70 ஆண்டுகள் வாழ்ந்து பயன்மிக்க பணிகளைச் செய்து 27.11.1988-இல் முத்தி பெற்றார். புதுக்கோட்டையில் ஷண்மத ஆலய வளாகத்தில் பூத உடல் சமாதி வைக்கப்பெற்றது.

புதுக்கோட்டையில் மச்சுவாடி என்ற பகுதியில் திலகவதியார் திருவருள் ஆதீனம் அமைந்துள்ளது. புகழ் பெற்ற நடிகர் ஜெமினி கணேசன் குடும்பத்தார் வீடாக இருந்தது தான் இன்று சாயிமாதாவின் ஆதீனமாக அமைந்துள்ளது.

ஆதீனத்திற்குப் பெண்பால் பின்வாரிசு தகுதியாகக் கிடைக்கவில்லை. **தயானந்த சந்திரசேகரன்** என்று ஒரு நல்ல இளைஞர், அம்மையாரிடம் இளமையிலிருந்தே உதவியாளராக இருந்து பணிபுரிந்தவர், பயிற்சிபெற்றவர்; அவரிடம் ஆதீன நிர்வாகத்தை அம்மையார் ஒப்படைத்தார்கள்.

திலகவதியார் திருவருள் ஆதீனம், அதன் ஷண்மத ஆலயம், டாக்டர் அருள்மிகு சாயிமாதா பிருந்தாதேவி கல்வி அறக்கட்டளை, நூலகம், பத்மபூஷண் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகளிர் இல்லம் ஆகியவற்றை அன்பர் திரு **தயானந்த சந்திரசேகரன்** நிர்வாகியாக இருந்து நன்கு நடத்திவருகிறார். சாயிமாதாவின் வழியில் பணிகளைத் தொடர்ந்து செய்து வருகிறார்.

முதலாண்டு குருபூஜை விழா, திருப்பனந்தாள் காசித் திருமடம் அதிபர் கயிலைமாமுனிவர் திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையிலும், இரண்டாமாண்டு குருபூஜை விழா எமது தலைமையிலும் நிகழ்ந்தன.

தயானந்த சந்திரசேகரன் புதுக்கோட்டை திருக்கோகர்ணத்தில் 11.01.1966-இல் பிறந்தவர். பெற்றோர் : மு. பாலசுப்பிரமணியன், சோலைபாப்பா. உடன்பிறப்புகள் எழுவர். B.B.A. (நிர்வாக வியல்), PGDCA (கணிப்பொறி) படிப்பை முடித்தபின் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் கணிப் பொறி மையத்தில் கணிப்பொறி இயக்குநராகச் சில ஆண்டுகள் பணியாற்றினார்.

அன்னையார் சாயிமாதா அவர்களுடன் பல இடங் களுக்கும் நிகழ்ச்சிகளுக்காகச் சென்று உதவிவந்தார். அன்னை யாரின் பூர்வாசிரம உறவுக் குடும்பத்தினரான சந்திரசேகரன் நாளடைவில் அன்னையாரின் அன்பை முழுமையாகப் பெற்று, அன்னையாரின் இறுதி நாள்களில் சுவீகார புதல்வரானார். நீண்டகாலம் தமது உதவியாளராகப் பணிபுரிந்து வந்த இவரிடம் இறுதிக்காலத்தில் ஆதீனநிர்வாகப் பொறுப்பை அன்னையார் ஒப்படைத்தார்கள்.

தயானந்த சந்திரசேகரன் இனியதோர் இல்லறஞானி. 1944-இல் தங்கலட்சுமி என்னும் நங்கை நல்லாரைத் திருமணம் செய்துகொண்டு இல்லறம் பூண்டார். ரூபமதி சாருமித்ரா என்று இருமகள்கள் இவரது மக்கட் செல்வங்கள்.

தொடர்ந்து ஆண்டுதோறும் அன்னையாரின் குருபூஜை விழாவைச் சிறப்பாக நடத்திவருகிறார். அண்மையில் 10-ஆம் ஆண்டு குருபூஜை விழா சிறப்பாக நிகழ்ந்தது.

ஆண்டுவிழா, குருபூஜை, திருமுறைப்பாராயணம், பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, பரிசளிப்பு, வாழ்நாள் சாதனை யாளர் விருது வழங்கல் ஆகியவற்றோடு நிற்கவில்லை.

சிறந்த கருத்தரங்கங்களை அவ்வப்போது நடத்தி வருகிறார். சிறந்த நூல்களை வெளியிட்டு வருகிறார்.

"ஒரு பெண் துறவியின் சமயவாழ்வும் சமுதாய வாழ்வும் - முதல்பெண் மடாதிபதி புதுக்கோட்டை திலகவதியார் திருவருள் ஆதீனம் அருள்மிகு சாயிமாதா சிவ பிருந்தாதேவி" என்று ஒரு 500 பக்கப் பெருநூலை 2003-இல் வெளியிட்டார். அன்னையாரின் வாழ்வையும் பணிகளையும் பல்வேறு வண்ணப் படங்களுடன் முழுமையாகக் கூறும் ஒரு ஆவணம் இந்நூல். அன்னையாரின் கட்டுரைகளும், அன்பர்களது பாராட்டுரைகளும் வாழ்த்துரைகளும் இதில் சேர்ந்துள்ளன. சிறந்த அச்சு, நல்ல நல்ல அழகிய படங்கள், நல்ல கட்டமைப்பு, ஆதீனத்திற்கு நிலையான ஒரு வரலாற்றுக் களஞ்சியம்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களைப் பற்றியும் இவ்வாறு ஒரு நூல் வெளியிட்டுள்ளார். "மாதர் குலமாணிக்கம்" என்பது அந்நூலின் பெயர். உண்மையிலேயே அவ்வம்மையார் ஒரு மாதர் குல மாணிக்கம்.

தயானந்த சந்திரசேகரின் நூல் வெளியீட்டுப் பணிகளில் பின்வரும் மூன்று நூல்கள் குறிப்பிடத்தக்க சிறப்புடையவை.

1. திருவாசக ஆய்வுரைக் களஞ்சியம்

51 பகுதிகள், 51 ஆய்வுரைகள். சிவபுராணம் முதலாக அச்சோப்பதிகம் ஈறாகத் திருவாசகப்பதிகங்கள் ஐம்பத்தொன்றைப் பற்றியும் ஐம்பத்தொரு அறிஞர்கள் எழுதிய ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு. குன்றக்குடி பெரியபெருமாள் தயானந்த சந்திரசேகரன் இவ்விருவரும் பதிப்பாசிரியர்கள். அன்னை சாயிமாதா பவளவிழா வெளியீடு 2002. இதில் மூன்றாம் பதிகம் திருவண்டப்பகுதிக் கட்டுரை எம்மால் எழுதப் பெற்றது.

2. திருமந்திர ஆய்வுரைக் களஞ்சியம்

9 தந்திரங்கள், 97 ஆய்வுரைகள். திருமந்திரம் ஒன்பது தந்திரங்களிலும் தொன்னூற்றேழு அதிகாரங்களைப் பற்றித்

தொன்னூற்றேழு அறிஞர்கள் எழுதிய ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு. டாக்டர் வை. இரத்தினசபாபதி, நூற்கடல் தி.வே. கோபாலையர், பேராசிரியர் இரா. செல்வக்கணபதி முதலிய சிறந்த அறிஞர்கள் பலர் எழுதியுள்ளனர். பதிப்பாசிரியர் தயானந்த சந்திரசேகரன், ஆசியுரை - கயிலைமாமுனிவர் காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள், அணிந்துரை - அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம், வாழ்த்துரை - டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி. 2005 வெளியீடு. எமது ஆய்வுக் கட்டுரை ஒன்றும் இதில் உண்டு.

3. வள்ளலார் நோக்கில் நால்வர் பெருமக்கள்

வள்ளலார் நோக்கில் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரைப் பற்றியும் அறிஞர் நால்வர் எழுதிய நான்கு பெருங்கட்டுரைகளின் தொகுப்பு.

வள்ளலார் நோக்கில் ஆளுடைய பிள்ளையார் (திருஞானசம்பந்தர்)
- பேராசிரியர் டாக்டர் வை. இரத்தினசபாபதி

வள்ளலார் நோக்கில் ஆளுடைய அரசுகள் (திருநாவுக்கரசர்)
- பேராசிரியர் முனைவர் சோ. சத்தியசீலன்

வள்ளலார் நோக்கில் ஆளுடையநம்பிகள் (சுந்தரமூர்த்திகள்)
- பேராசிரியர் முனைவர் இரா. செல்வக்கணபதி

வள்ளலார் நோக்கில் ஆளுடைய அடிகள் (மாணிக்கவாசகர்)
- தவத்திரு ஊரன் அடிகளார்

அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அணிந்துரை, பத்மஸ்ரீ டாக்டர் நல்லிகுப்புசாமி செட்டியார் வாழ்த்துரையுடன் கூடிய இந்நூல் ஒரு நல்ல நூல். 2008-இல் அன்னை சாயிமாதாவின் 80-ஆம் அகவை நிறைவு நினைவு வெளியீடு.

2008-ஆம் ஆண்டு அன்னையாருக்கு 80-ஆம் ஆண்டு. அவர் தோற்றுவித்த ஆதீனத்திற்கு வெள்ளிவிழா ஆண்டு. 1983-இல்

தோற்றுவிக்கப்பெற்ற திலகவதியார் திருவருள் ஆதீனம் 2008-இல் இருபத்தைந்து (25) ஆண்டுகள் நிறைவுபெற்று, ஒரு வெள்ளி விழாக்காலம் சிறப்பான பணிகளைச் செய்துள்ளது. பணிகள் தொடர்கின்றன.

சாயிமாதாவின் வழியில் சமுதாயப் பணிகளையும் சமயப் பணிகளையும் பல்வேறு அறப்பணிகளையும் அறிவுப் பணிகளையும் திரு. தயானந்தசந்திரசேகரன் தொடர்ந்து மிகச் சிறப்பாகச் செய்து வருகிறார்.

''திலகவதியார் திருவருள் ஆதீனச் செய்திமடல்'' என்று ஓர் இதழை இரு திங்களுக்கு ஒருமுறை வெளிவரும் இதழாக வெளியிட்டு வருகிறார். ஆதீனச் செய்திகளும் நல்ல கட்டுரைகளும் அதில் வெளிவருகின்றன.

ஆதீனத் தொடர்பு முகவரி :

திலகவதியார் திருவருள் ஆதீனம்
1120, மச்சுவாடி
புதுக்கோட்டை - 622 001
புதுக்கோட்டை மாவட்டம்
தமிழ்நாடு
தொலைபேசி : 043 222 - 228024

நிர்வாகி : தவத்திரு தயானந்தசந்திரசேகரன்

பின்இணைப்பு 3

தஞ்சாவூர் மாவட்ட கெசட்டீரில் திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் பற்றிய குறிப்புகள்

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு மாவட்டத் திற்கும் வரலாறு, இயற்கையமைப்பு, நிர்வாகம், மக்கட்சமுதாயம், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, வேளாண்மை, நீர் ஆதாரங்கள், நீதித்துறை இன்னும் இவை போன்ற பல்வேறு துறை விவரங்களையும் தொகுத்து கெசட்டீர் (GAZETTEER) என்ற பெயரில் வெளியிட்டார்கள். இந்தியா முழுவதற்கும் பெரும்பாலும் எல்லா மாவட்டங்களுக்கும் கெசட்டீர்கள் வெளியிடப் பெற்றன. அக்காலத்தில் அரசாங்க அதிகாரி களுக்குப் பயன்படுவதற்காகத் தொகுக்கப் பெற்ற இக்கெசட்டீர்கள், இன்று ஆய்வாளர்களுக்கு மிகவும் பயனுடையதாக உள்ளன. மாவட்ட அளவில் மிகச்சிறந்த ஒரு ஆவணமாக, பல்வேறு செய்திகளையும் புள்ளிவிவரங் களையும் தரும் ஒரு சிறந்த பார்வை (ரெபரன்ஸ்) நூலாக இக்கெசட்டீர்கள் உள்ளன. தஞ்சாவூர் மாவட்ட கெசட்டீர்

MADRAS DISTRICT GAZETTEERS

TANJORE

BY F.R. HEMINGWAY, I.C.S., - EDITED BY W. FRANCIS, I.C.S.,

PRINTED BY :

THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS, MADRAS

1906

என்று 1906-இல் வெளியாகியுள்ளது.

அதில் திருவாவடுதுறை தருமபுரம் திருப்பனந்தாள் பற்றிக் கூறப்பெறும் பகுதியைக் கெசட்டீரிலிருந்து அப்படியே இதன்கீழ் எடுத்துக் காட்டுகிறோம். சைவத்தமிழ் மடங்கள், ஆதீனங்கள் அந்நாளில் **சூத்திரமடங்கள்** என வழங்கப் பெற்றனவென்பதை இதனால் அறியலாம். வேறு சிலபல அரிய செய்திகளும் குறிப்புகளால் இவற்றால் தெரிகின்றன.

TIRUVÁDUTURAI

Ten miles West-South-West of Máyavaram. Population 3,169. A travellers' bungalow. The old Siva temple is mentioned in the Puránas and is considered sacred; but the place is chiefly known for its **Súdra *math*.** This was founded by one Namasiváya Múrti at an unknown period. Like the institution at Dharmapuram, it is less strictly a *math* than an *ádhinam* with other institutions subordinate to it.[1] It has large endowments in the districts of Trinnevelly (25,000 acres), Madura (1,000 acres) and Tanjore (3,000 acres) as well as small possessions in others. The total annual income is estimated at two lakhs of rupees. The head of the *math* appoints the managers and priests of some fifteen temples in this and other districts, and controls their funds. Some of these temples are of great importance. The managers are appointed from among the disciples of the institution. There are about 50 disciples in this. The head of it is also the *guru* of a number of private persons in this district who visit him and give him presents on the anniversary day of the founder of the *mat*h. **Súdra Saivites** are fed everyday, and there is a choultry attached in which **Bráhmans** are fed. The institution possesses a good library of 3,000 volumes, both cadjan and printed books, in Sanskrit and Tamil. These have been catalogued and a list is kept at Tiruváduturai.

* See the footnote on page 229 above

DHARMAPURAM

Hamlet of Mannampandal (population 2,753), two miles east of Máyavaram. Contains an important Saivite *math*,[1] which was founded by a holy man called Gnána Sambandha Désikar at least 300 years ago. His holiness is said to have first been manifested by his having been miraculously kept dry while standing outside the house of his *guru,* or spiritual superior, on a wet night. The institution has an endowment of about 2,500 acres of land, all of which is in this district. The head of it supervises the managers of 27 temples in this and other districts, generally controls their endowments and appoints the priests in them. One of the disciples of this monastery has to be appointed to the headship of the Tiruppanandal *math* when that office falls vacant. The latter was founded in 1720 by a disciple of the Dharmapuram institution and another disciple established a similar institution at Benares about 1580. In the *math* are about 20 disciples (*tambiráns*) who have abandoned the world, besides a number of secular servants. It contains about 500 cadjan books in Tamil and Sanskrit, which are said to be more than 100 years old and are mostly of a religious nature, as well as a few printed books. The disciples are generally Vellálans; they must of course be vegetarians. The head of the *math* nominates his successor from among the disciples.

1 The institution is more correctly called an *ádhinam*, or central institution, from which the chief ascetic exercises control over subordinate *maths*. The Dharmapuram *ádhinam* is the religious superior of the *maths* at Tiruppanandal and Benares.

TIRUPPANANDÁL

Eleven miles east-north-east of Kumbakónam as the crow files. Population 3,426; police-station. The village is well-known for its richly endowed **Súdra** ***math***. This was founded about 1720 A.D. by a certain Tillanáyaka Tambirán who was a disciple of the central *math* of Dharmapuram and head of a similar institution started at Benares in 1580 by another disciple thereof. He established it as a kind of agency to his own monastery, for the collection of subscriptions thereto, but the head of the Dharmapuram *math* declared that he was only an agent of the latter institution and claimed to appoint his successors. The dispute went before the Courts, which ruled that the Tiruppanandál *math* was practically independent, that the head of it might appoint his own successor as long as he selected a disciple of the Dharmapuram *math*, but that he must see 'that the character of the Tiruppanandál *math* as a disciple *math* or centre of control is maintained its integrity according to ancient and recognised usage'. The institution at Benares is supported by subscriptions from that at Tiruppanandál, which are administered by agents appointed by and responsible to the head of the latter. This latter now contains twenty disciples. It has an income of Rs. 80,000 per annum from over 1,000 acres of land in this and other districts and Travancore. Its head appoints the managers to five temples in this taluk and another at Benares. The richest of these are the Benares temple, which has an income of Rs. 2,500 and the Tiruppanandál shrine, the revenue of which is Rs. 3,250. It possesses a library of 300 cadjan books in Tamil and Sanskrit, and 300 printed volumes of Tamil, Sanskrit, Telugu and English.

பின்இணைப்பு 4

ஆதீனம் – மடம்

பெயர் விளக்கம்

ஆதீனம் மடம் என்று இருவகைப் பெயர்களும் வழங்குகின்றன. ''மடம்'' என்பது மிகப் பழைய வழக்கு. ''ஆதீனம்'' என்பது இன்றைய சைவ ஆதீனங்கள் உண்டான காலந்தொட்டு வழங்கிவரும் வழக்கு.

திருமந்திரத்தில் குறிப்பிடப்பெறும் பழைய சைவ மடங்கள், பெரியபுராணத்தில் கூறப்பெறும் மடங்கள், கல்வெட்டுகளிற் காணப்பெறும் மடங்கள், பத்ததி நூல்களிற் கூறப்பெறும் மடங்கள், உலா நூல்களிற் குறிப்பிடப்பெறும் மடங்கள் மற்றும் வைணவ, மத்வ, வேதாந்த மடங்கள் ஆகிய அனைத்தும் ''மடம்'' என்றே பெயர் கூறப்பெறுகின்றன. ''ஆதீனம்'' என்று கூறப் பெறவில்லை.

கயிலாய பரம்பரையில் மெய்கண்டார் மரபில் சந்தான குரவர்களுக்குப்பின் தோன்றிய சுத்தசைவ மடங்கள் அவற்றின் தோற்ற காலத்திலிருந்தே மடம் ஆதீனம் என்னும் இருவகைப் பெயர்களாலும் வழங்கப் பெறுவனவாயின.

மடம் என்பது வடமொழி தமிழ் ஆகிய இரண்டுக்கும் பொதுவான வழக்கு. வடநாடு தென்னாடு ஆகிய இரண்டுக்கும் பொதுவான வழக்கு. அனைத்திந்திய வழக்கு. ஆதீனம் என்பது தமிழுக்கே உரிய, தமிழ்நாட்டுக்கே உரிய தனிச்சிறப்பான வழக்கு.

வடஇந்தியாவில் மடங்களை மடம் (Math, Mutt) என்றும், கோயில்களை மந்திர் (Mandir) என்றும் வழங்குவதை இன்றும் காணலாம். மந்திரம் என்பதே மந்திர் என மருவியது, ஈறு திரிந்தது. 'மட்', 'மந்திர்' (Mutt, Mandir) என்பது இன்றைய சமய உலகில் ஆன்மிக உலகில் வடஇந்தியாவில் பேச்சு வழக்கிலும் எழுத்துவழக்கிலும் அதிகம் காணப்படுவது.

இராமகிருஷ்ண மடம் பிர்லா மந்திர் போன்ற வழக்குகளைக் காண்க.

தமிழ்நாடு உட்பட அனைத்திந்தியாவிலுமுள்ள சங்கர மடங்கள், வைணவ ஜீயர் மடங்கள், மத்வ மடங்கள் ஆகியன வெல்லாம் மடங்கள் என்றே வழங்கப்பெற்று வருதலைக் காணலாம். ஆதீனம் என்று வழங்கப் பெறுவதில்லை.

தமிழ்நாட்டிலுள்ள சைவ மடங்கள் மட்டுமே ஆதீனம் என வழங்கத் தொடங்கின. பின்னாளில் வீரசைவமடங்கள் சிலவும் இதனைப் பின்பற்றின. அண்மைக்காலத்தில் கௌமார மடங்களும் அவற்றைப் பின்பற்றலாயின. மிக அண்மைக் காலத்தில் மிகச் சாதாரணச் சிறிய மடங்கள், ஆசிரமங்கள், அமைப்புகள்கூட ஆதீனம் பீடம் என்ற பெரும் பெயர் களைச் சூட்டிக் கொள்ளலாயின. பீடம் என்பது வேதாந்த மரபு. சிறப்பாகச் சங்கரவேதாந்த வழக்கு. சங்கரமடங்களே பீடம் எனப்பெயர் பெற்றவை. காஞ்சி காமகோடிபீடம் போன்ற வழக்குகளைக் காண்க. பீடம் ஆதீனம் ஆகிய பெரும்பெயர்கள் அறிவுத்தரத்தாலும் நிர்வாகத்தரத்தாலும் சொத்துகள் முதலியவற்றாலும் பெரியனவாய்க் கிளைமடங்கள், கிளை நிறுவனங்கள் பலவற்றை உடைய பெரும் நிறுவனங் களுக்குப் பொருந்துமே தவிரச் சிறுசிறு அமைப்புகளுக்குப் பொருந்தாது. அண்மைக் காலமாக நாட்டில் பட்டம் பதவிகள், விருதுகள் தகுதியை மீறிப் பெருகிவருவது நாட்டின் பண்பாட்டுக்கு நன்றன்று. எதிலும் அளவோடு இருத்தலே நன்று. மிகையாகச் செல்லல் நன்றன்று, அறிவுடைமை ஆகாது.................. அதிகம் கூறாது விட்டுவிடுவோம்.

"மடம்", "ஆதீனம்" என்ற பெயர்களுக்கு உரிய பொருளை இனிக் காண்போம். சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி (தமிழ் லெக்சிகன்) பின்வருமாறு கூறுகிறது.

<u>மடம்</u>[1] Matam, n. 1. Ignorance, folly; *அறியாமை. மடப்படலின்றிச் சூழுமதிவல்லார் (சீவக 1927).* 2. Simplicity, credulity, Artlessness, one of the four Makadu-

k-kunam மகடூக் குணம் நான்கனுள் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமையாகிய பேதைமை. *வாலிழை மடமங்கையர் (புறநா. 11)* 3. Beauty; அழகு. *மடக்கணீர்சோரும் (சிலப். 17, உரைப்பாட்டுமடை)* 4. Tenderness, delicacy; மென்மை. *தெளிநடைமடப்பிணை (புறநா. 23).* 5. Acquiescence; இணக்கம். *அஞ்சிறைய மடநாராய் (திவ். திருவாய் 1.4.1)*

<u>மடம்</u>² Matam, n. Matha. *1.* Hermitage; முனிவர் வாழிடம் *(பிங்.).* 2. Monastery, Convent for celibate Monks; நைஷ்டக பிரமசாரிகளும் சந்நியாசிகளுமான ஆசாரியர் வாழும் இடம். சிருங்கேரிமடம். திருவாவடுதுறை மடம். *3.* Choultry where pilgrims and religious mendicants are fed; சத்திரம் *(சூடா). 4.* Rest-House; சாவடி. Loc. 5. Temple; கோயில் *(யாழ்அக). 6.* Place; இடம் *(பிங்)* 7. Car; இரதம் *(யாழ்அக)*

மடம் என்ற சொல்லுக்குப் பல்வேறு பொருள்கள் இருப்பினும், முக்கியமான பொருள்கள் சிறந்த பொருள்கள் இரண்டு. 1. அறியாமை, பேதைமை, 2. முனிவர் வாழிடம். அறியாமை பேதைமை என்ற பொருள்களையுடைய ''மடம்'' என்ற சொல் முனிவர் வாழிடத்திற்குப் பொருந்துமோ? பொதுவாக மடம் (அறியாமை) குறையுடையதேனும், கொடைமடம் அறிமடம் போன்றவற்றில் நிறையுடையதாகவே உள்ளது. கொடைமடம்படுதல் சிறந்தது. ''அறிமடமும் சான்றோர்க்கு அணி''. அச்சம் நாணம் மடம் பயிர்ப்பு ஆகிய பெண்மைக் குணங்கள் நான்கும் மகளிர்க்குச் சிறப்புடையனவே. ''கொளுத்தக் கொண்டு, கொண்டது விடாமை'' என்பது அருமையான தொடர். மடம் என்னும் பெண்மைக் குணத்திற்கு இது நல்ல விளக்கம். பெண்கள், தெரிந்தும் தெரியாததுபோல் இருப்பர். அப்படி இருப்பதுதான் அறிமடம்.

உலகியலில் அறிமடத்தோடு இருந்துகொண்டு, தொண்டு வாழ்வும் துறவு வாழ்வும் வாழ்தல் என்ற பொருளில்

துறவியர் வாழிடத்திற்கு மடம் என்ற பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும் எனக் கொள்ளலாம்.

மடம், தமிழ்ச் சொல்லும் வடசொல்லும் ஆகும். ஆதலின் வடமொழியிலும் தமிழிலும், வடநாட்டிலும் தமிழ்நாட்டிலும் மடம் என்ற பெயர் வழங்குகிறது.

இனி, ''ஆதீனம்'' என்ற பெயருக்குரிய பொருளைக் காண்போம். ஆதீனம் என்பதற்குத் தமிழ் லெக்சிகன் பின்வருமாறு பொருள் கூறுகிறது.

> ஆதீனம் atinam, n. 1. Ownership, Possession, உரிமை. எல்லாம் அவன் ஆதீனமே. 2. Dependance; வசம். யாருடைய ஆதீனத்திலிருக்கிறாய்? 3. Saiva Monastery, a religious organization composed of ascetics with a head, usu. of great learning and spiritual attainments, who resides at the head quarters and initiates aspirants and in a general way, keeps control over the properties of the Matam; சைவ மடம். திருவாவடுதுறை ஆதீனம்.
>
> ஆதீனகர்த்தா Head of a Saiva monastery; சைவ மடாதிபதி.

ஆதீனம் என்ற சொல்லுக்கு உரிமை என்று பொருள். சுவாதீனம், பராதீனம் என்ற இரண்டு சொற்கள் பாமர மக்களின் பேச்சு வழக்கிலும் பெருவழக்காக உள்ளதை இன்றும் காணலாம்.

சுவ - ஆதீனம் = சுவாதீனம். தன்வசம், தனதுரிமை.

பர - ஆதீனம் = பராதீனம். பிறர்வசம், பிறர்உரிமை.

ஒரு சொத்து சுவாதீனத்திலுள்ளது, பராதீனமாகிவிட்டது என்ற வழக்குகளைக் காண்க. ஸ்வ ஆதீனம் - ஸ்வாதீனம். ஸ்வ - ராஜ்யம் = ஸ்வராஜ்யம். சுயாதீனம், சுயராஜ்யம்.

உரிமை என்ற பொருளுடைய ''ஆதீனம்'' என்ற சொல் சைவ ஆதீனங்களுக்குப் பெயரானது எங்ஙனம்?

சைவத்திற்கு உரிமையுடையது, சைவ ஒழுக்கத்திற்கு உரியது, சைவ தோத்திர சாத்திரங்களுக்கு உரிமையுடையது, சைவத்திருமுறைகளுக்கு உரிமையுடையது, சைவச் சரியை கிரியை யோக ஞானங்களுக்கு உரிமையுடையது, சைவ வழிபாட்டுக்கு உரிமையுடையது, சைவப் பரப்பலுக்கு உரிமையுடையது, சைவப் பாதுகாப்புக்கு உரிமையுடையது என்ற பொருளில் சைவ ஆதீனம் என்ற பெயர் ஏற்பட்டது.

வடமொழியில் ''அதினம்'' என்பதே சொல்லின் சரியான வடிவம் போலும். ''அதினம்'' என்பது வழக்கத்தில் முதல் நீண்டது என இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை ச. சோமசுந்தரதேசிகர் எழுதுகிறார். இந்நூல் ஐந்தாம் பக்கம் காண்க.

சைவ ஆதீனங்கள் தோன்றிய காலத்திலேயே ஆதீனம் என்ற பெயர் வழக்குக்கு வந்துவிட்டது. மடம் ஆதீனம் என்ற இரண்டு பெயர்களுமே வழங்கலாயின. கி.பி. 1752-இல் உண்டான ஒரு செப்பேடு திருவாவடுதுறை ஆதீனம் என்றே பெயர் குறிப்பிடுகிறது. பின்வந்த செப்பேடுகள் பலவற்றிலும் ஆதீனம் என்ற பெயர் வழக்கு உள்ளது.

பின்இணைப்பு 5

பண்டாரம், பண்டார சந்நிதி, குருமகாசந்நிதானம், பரமாசாரிய சுவாமிகள் என்னும் வழக்குகள்

பண்டாரம் என்பது ஓர் அரிய சொல். சரக்கறை, கருவூலம் எனப் பொருள்படும். பூச்சரம் கட்டிப் போட்டுச் சிறுதெய்வங்களுக்குப் பூசைசெய்யும் ஒரு குலத்தாருக்கும் பண்டாரம் என்ற சாதிப்பட்டப் பெயர் உண்டு. எளிய துறவிகளையும் பண்டாரம் என வழங்குவதுண்டு. ஆண்டிப் பண்டாரம் போன்ற வழக்குகளைக் காண்க. இவை யெல்லாம் சாதாரணப் பொதுப்பொருளில் வழங்குவன.

கால முண்டாகவே காதல் செய்துய்மின் கருதரிய
ஞால முண்டா னொடுநான்முகன் வானவர் நண்ணரிய
ஆல முண்டான் எங்கள் பாண்டிப் பிரான்தன் அடியவர்க்கு
மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே

என்று மாணிக்கவாசகர் அழைக்கிறார் *(திருவாசகம் 530-36, திருப்பாண்டிப் பதிகம் 5)*

இங்கு மூல பண்டாரம் என்பது இறைவன் திருவருள். இவ்வுயரிய பொருளில்தான் சைவத் துறவியர்களுக்குப் பண்டாரம் என்ற பெயர் ஏற்பட்டது.

"பண்டாரம்" என்பதற்குச் **சைவமடத்துத் துறவி** என்றும், **"பண்டார சந்நிதி"** என்பதற்குச் **சைவ மடத்துத் தலைமைத் துறவி** என்றும் லெக்சிகன் பொருள் கூறுகிறது.

திருவாவடுதுறை ஆதீனத் தலைவரும் தம்பிரான் சுவாமிகளும் செய்த சாத்திர நூல்கள் **பண்டார சாத்திரங்கள்** என்றே பெயர்பெற்றன. தருமபுர ஆதீன சாத்திரங்களும் அவ்வாறே. குமரகுருபரர் அவருடைய குரு மாசிலாமணி தேசிகரின் மீது இயற்றிய நூலுக்குப் **"பண்டார மும்மணிக் கோவை"** என்றே பெயர். வேளாக்குறிச்சி ஆதீனகர்த்தரின்

மீது பாடப்பெற்ற ஒரு பிள்ளைத்தமிழ் **சத்தியஞான பண்டாரம் பிள்ளைத்தமிழ்** எனப் பெயர்பெற்றது.

தருமபுர ஆதீன குருமரபை வெள்ளியம்பலவாண முனிவர் முத்திநிச்சயப் பேருரையில் மிக அழகிய நடையிற் கூறுகிறார். பெயர்களெல்லாம் பண்டாரம் பண்டாரம் என்றே கூறப்பெறுகின்றன.

> உமாபதி சிவாசாரியரும் மச்சுச் செட்டியாரும் மறைஞான தேசிகர்பால் அருள் பெற்றார். அவருள் மச்சுச் செட்டியார்பால் அருள் பெற்றார் காழிக்கங்கை மெய்கண்டார். அவர்பால் அருள்பெற்றார் காழிப்பழுதை கட்டிச் சிற்றம்பல **பண்டாரம்** முதலியோர். அப்பழுதை கட்டிச் சிற்றம்பலநாடி பண்டாரத்தின்பால் அருள் பெற்றார் சிவபுரம் ஞானப்பிரகாச பண்டாரம் முதலியோர். அச்சிவபுரம் ஞானப்பிரகாச பண்டாரத்தின்பால் அருள் பெற்றார் சிவபுரம் தத்துவப்பிரகாச பண்டாரம். அவர்பாலருள் பெற்றார் திருவாரூர்ச் செட்டித்தெருப் பழுதை கட்டி ஞானப்பிரகாச பண்டார முதலியோர். அச்செட்டித் தெரு பழுதைகட்டி ஞானப்பிரகாச பண்டாரத்தின்பால் அருள்பெற்றார் இந்நூல் செய்த குரவர்க்குங் குரவரான சிதம்பரநாத மாசிலாமணிக் கமலை ஞானப்பிரகாச பண்டார முதலியோர். அச் சிதம்பரநாத மாசிலாமணிக் கமலை ஞானப்பிரகாச பண்டாரத்தின்பால் அருள் பெற்றார் இந்நூல் செய்த குருஞானசம்பந்த பண்டார முதலியோர்.
>
> - முத்திநிச்சயப் பேருரை
> வெள்ளியம்பலவாண முனிவர்

எல்லார் பெயருமே பண்டாரம் என்றுதான் இங்குக் கூறப் பெறுகிறது. குருஞானசம்பந்தர் தருமபுர ஆதீன நிறுவனர். அவர் பெயரும் குருஞானசம்பந்த பண்டாரமே.

பண்டாரம் என்ற பெயர் எளிமையாக இருத்தலின் சிறப்பு-மதிப்பு-கௌரவம் கருதிப் பண்டார சந்நிதி என்ற

பெயர் ஏற்பட்டது. நாளடைவில் அது பண்டார சந்நிதிகள் ஆயிற்று.

சில ஆண்டுகளுக்கு முன்புகூடத் திருவாவடுதுறை ஆதீனத்தில் பண்டார சந்நிதி, பண்டார சந்நிதிகள் என்ற வழக்கம் இருந்து வந்தது. வீரசைவ ஆதீனங்களில் துறையூர் ஆதீனத்திலும் (விருத்தாசலம் குமார தேவர் மடத்திலும்) பண்டார சந்நிதிகள் என்ற வழக்கு இருந்தது.

அண்மைக் காலத்தில் எல்லா ஆதீனங்களிலுமே பரமாசாரிய சுவாமிகள், குருமகாசந்நிதானம் என்ற வழக்குகள் வந்துவிட்டன.

ஆசாரியன் - குரு. சமயாசாரியர், சந்தானாசாரியர் என்ற வழக்குகளைக் காண்க. பரமஆசாரியர் என்பதே பரமாசாரியர் என வழங்குகிறது. பரமாச்சாரியார் என்று 'ச்' சேர்த்து வழங்குவதும், ஆசாரியர் என்பதில் யகரத்தை யகர ஆகாரமாக வழங்குவதும் பிழை வழக்குகள்.

சரியான வழக்கு	பிழை வழக்கு
பரமாசாரியர்	பரமாச்சாரியர்
	பரமாச்சாரியார்

சங்கராசாரியர் என்பதே சரி. சங்கராச்சாரியர் என்பது பிழை. சங்கராசாரிய சுவாமிகள் என்றே வழங்கவேண்டும். சங்கராச்சாரிய சுவாமிகள் என வழங்குவது சரியன்று.

இராஜகோபாலாச்சாரியார், கிருஷ்ணமாச்சாரியார் என்ற வழக்குகள் வேறு. இங்கே ஆச்சாரி என்பது அய்யங்கார் களின் குலமரபுப்பட்டம். தச்சு ஆசாரிகளுக்கும் ஆச்சாரிப் பட்டம் உண்டு. இவற்றையெல்லாம் சைவ மெய்யன்பர்கள் கூர்ந்து நன்கறிய வேண்டும்.

ஆதீனங்கள், மடங்கள், திருக்கோயில்களின் விழா அழைப்பிதழ்களிலும்கூட இத்தகைய பிழைவழக்குகள் இன்று மலிந்து காணப்படுகின்றன. சந்நிதி, சந்நிதானம்

என்பதே சரியான வழக்கு. சன்னதி, சன்னிதானம் என்பன பிழை வழக்குகளே. தந்நகர றன்னகரப் போலியே. தூய தமிழ் வழக்கு என எண்ணலாகாது.

சந்நிதானம், மகாசந்நிதானம், குருமகாசந்நிதானம் என வழங்குதல் வேண்டும். பரமாசாரிய சுவாமிகள் குருமகா சந்நிதானம் என்ற இன்றைய சிறப்பு வழக்குகளே இக்காலம் வழங்கற்குரியவை. அவற்றையே வழங்குவோம்.

பண்டாரம் முதலிய பழைய வழக்காறுகளையும் அறிய வேண்டும் என்பதற்காகவே இவ்வளவு தூரம் எழுதினோம்.

பின்இணைப்பு 6

ஸ்ரீ-ல-ஸ்ரீ என்பதன் விளக்கம்

வடமொழியில் ''ஸ்ரீ'' என்பதும், தமிழில் ''திரு'' என்பதும் ஒப்புயர்வற்ற மங்கலங்கள். இவற்றிற்கு ஒப்பானவையும் உயர்வானவையும் வேறு இல்லை.

வடமொழியில் ''ஸ்ரீ''-க்குமேல் வேறெதுவுமில்லை

தமிழில் ''திரு''வுக்குமேல் வேறெதுவுமில்லை.

ஸ்ரீ-ல-ஸ்ரீ என்பது ஒரு லட்சம் ஸ்ரீ என்பதன் சுருக்கக் குறியீடு. ஸ்ரீ என்பது வேதம். வேதத்தில் ஒரு லட்சம் கிரந்தங்களை அத்தியயனம் செய்தவர் அல்லது செய்வித்தவர் (லட்சாத்யாயி) ஸ்ரீ லட்சம் ஸ்ரீ, ''ஸ்ரீலஸ்ரீ'' ஆவர்.

108 ஸ்ரீ, 1008 ஸ்ரீ என்ற வழக்குகள் சமணசமயத்திலும் உண்டு. இப்போதும் உண்டு.

சைவ ஆதீன குருமகா சந்நிதானங்களின் பெயருக்கு முன் ஸ்ரீலஸ்ரீ என்பதைச் சேர்த்து, ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், என்றும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் என்றும் வழங்குதல் மரபு.

ஐம்பது அறுபது ஆண்டுகளுக்குமுன் சாதாரணமாக எல்லாருடைய பெயருக்கு முன்பும் ஸ்ரீ சேர்த்து வழங்குவதே வழக்கமாக இருந்தது. தனித்தமிழ் எழுச்சிக் காலத்தில் ''ஸ்ரீ''-யின் இடத்தில் ''திரு'' இடம் பெற்றது. ஸ்ரீ-திரு ஆயிற்று. ஸ்ரீலஸ்ரீயை என்ன செய்வது?

சாதாரணமாக எல்லாரையும் திரு..... என்று குறிப்பிடுவது போன்று துறவியர் பெருமக்களையும் திரு........ என்று குறிப்பிடலாமா? குறிப்பிடுவது போதுமா? இன்னும் அதிகச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டாமா? என்ற கருத்து எழுந்த போது சிவத்திரு, அருட்டிரு, தவத்திரு என்பன வழக்கிற்கு

வந்தன. அருட்திரு மறைமலையடிகளார், சிவத்திரு அழகரடிகளார், தவத்திரு குன்றக்குடி அடிகளார் என்ற வழக்குகள் தோன்றி வழங்கின. முருகனடியார்கள் ''குகத்திரு'' எனப்பட்டனர். குகஸ்ரீ கிருபானந்தவாரியார் என்பதே பின்னாளில் நல்லதமிழில் திருமுருக கிருபானந்த வாரியார் ஆயிற்று.

சாதாரணமான துறவியர் பெருமக்களைத் தவத்திரு என்ற வழக்கம் ஏற்பட்டபின், ஆதீனகர்த்தர்களுக்கு மடாதிபதி களுக்கு அதுபோதுமா? இன்னும் சிறப்பாக வழங்க வேண்டாமா? என்ற எண்ணம் எழுந்தபோது ஸ்ரீலஸ்ரீ என்பதற்குப் பல்வேறு தமிழாக்கங்கள் தோன்றலாயின.

திருப்பெருந்திரு, திருஅருள்திரு, திருவார்திரு, திருவளர்திரு, சீலத்திரு, சீர்வளர்சீர் என்ற வழக்குகள் தோன்றின.

குன்றக்குடியில் திருவருள்திருவும், திருப்பனந்தாள் காசிமடத்தில் திருவளர்திருவும், காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனத்தில் சீலத்திருவும், திருவாவடுதுறையில் சீர்வளர்சீர் என்பதும் வழக்குக்கு வரலாயின. ஏனைய வற்றில் ஸ்ரீலஸ்ரீயே தொடருகிறது.

ஒவ்வொரு ஆதீனமும் ஒவ்வொரு வகையாக வழங்கி வருகின்றன.

திருவாவடுதுறை	- சீர்வளர்சீர்
தருமபுரம்	- ஸ்ரீலஸ்ரீ
திருப்பனந்தாள்	- திருவளர்திரு
சூரியனார்கோயில்	- திருவாவடுதுறையைப் பின்பற்றி, சீர்வளர்சீர்
தொண்டைமண்டல ஆதீனம்	- திருவாவடுதுறையைப் பின்பற்றி, சீர்வளர்சீர்
மதுரை	- ஸ்ரீலஸ்ரீ லோககுரு

குன்றக்குடி	-	திருவருள்திரு
துழாவூர்	-	ஸ்ரீலஸ்ரீ
வேளாக்குறிச்சி	-	ஸ்ரீலஸ்ரீ
செங்கோல்	-	திருவாவடுதுறையைப் பின்பற்றி, சீர்வளர்சீர்
நாச்சியார்கோயில்	-	ஸ்ரீலஸ்ரீ
வரணி	-	ஸ்ரீலஸ்ரீ

வீரசைவ ஆதீனங்களில்

மயிலம்	-	ஸ்ரீலஸ்ரீ
பேரூர் துறையூர் (விருத்தாசலம்)	}	திருவாவடுதுறையைப் பின்பற்றி, சீர்வளர்சீர்
திருப்போரூர்	-	ஸ்ரீலஸ்ரீ
திருக்கோவலூர்	-	சிவத்திரு
சிதம்பரம் கும்பகோணம்	} -	ஸ்ரீலஸ்ரீ

எம்மைப் பொருத்தவரை சைவ ஆதீனங்கள், வீரசைவ ஆதீனங்கள் ஆகிய இரு நூல்களிலும் பழைய வழக்காகிய ஸ்ரீலஸ்ரீ என்பதையே பின்பற்றியுள்ளோம்.

ஆயினும் சைவ ஆதீனங்கள், வீரசைவ ஆதீனங்கள் நூல் வெளியீட்டுவிழா அழைப்பிதழில் குருமகாசந்நிதானங்களின் பெயருக்குமுன் அவ்வவ்வாதீன வழக்கையே பின்பற்றிக் குறிப்பிடலானோம். பின்னிணைப்பு பதின்மூன்றிலும் அவ்வாறே.

ஆதீனங்கள் அனைத்தும் இவ்வகையில் ஒரு ஒருமைப்பாடு காணவேண்டுமென்பது எம் விருப்பம், வேண்டுகோளுங்கூட.

பின்இணைப்பு 7

ஆதீன மரபுகள்

திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், சூரியனார் கோயில், தொண்டைமண்டலம், மதுரை, குன்றக்குடி, செங்கோல் ஆகிய எட்டு ஆதீனங்களும் துறவற ஆதீனங்கள். இவற்றின் ஆதீனகர்த்தர்கள் துறவிகளாக இருப்பர். நைட்டிக பிரமச்சரியத்திலிருந்து நேரே துறவறம் மேற்கொண்டவர்களே ஆதீனகர்த்தர்களாக ஆதற்குரியர் என்பது இவ்வாதீனங்களில் கடைப்பிடிக்கப் பெற்றுவரும் மரபு, கண்டிப்பான விதி, நியதி. இவ்வாதீனங்களில் குருசீடமுறையில் வாரிசு அமையும். குருவுக்குப்பின் சீடர்களில் ஒருவர் குருவாகப் பட்டத்திற்கு வருவார்.

துழாவூர், வேளாக்குறிச்சி, நாச்சியார்கோயில், வரணி, வள்ளலார் ஆகிய ஐந்து ஆதீனங்களும் இல்லறத்தார் ஆதீனங்கள். இவற்றின் ஆதீனகர்த்தர்கள் இல்லறத்தார்களாக இருப்பர். வெள்ளாடை தரிப்பர். குடும்பத்துடன் வாழ்வர். தந்தை மகன் முறையில் வாரிசு அமையும். தந்தைக்குப்பின் மூத்தமகனார் பட்டத்திற்கு வருவார்.

துறவற ஆதீனங்கள் எட்டு, இல்லற ஆதீனங்கள் ஐந்து ஆக இப்பதின்மூன்றும் தவிர ஏனைய ஐந்து ஆதீனங்கள் விளக்கங்குன்றியனவும் அழிந்துபட்டனவும் ஆதலின் அவற்றைப்பற்றி இங்குப் பேசுவதற்கில்லை.

ஆதீனங்கள் அனைத்திற்கும் பொதுவான மரபுகளும் உண்டு. துறவற ஆதீனங்களாயினும் இல்லறத்தார் ஆதீனங்களாயினும் சைவ ஆதீனங்கள் அனைத்திலும் தலைவராக - குருமகாசந்நிதானமாக வருவதற்கும், அடியார் திருக்கூட்டமாக - தம்பிரான்களாக - வருவதற்கும், புலால் மறுத்த சைவ ஒழுக்கமுடைய பரம்பரைச் சுத்தசைவ வேளாளர்களே உரியர் என்பது அனைத்துச் சைவ ஆதீனங்களுக்கும் உரிய பொதுவான மரபு. இம்மரபை எல்லா ஆதீனங்களுமே கடைப்பிடித்து வருகின்றன.

தங்களுக்குத் தனித்தன்மை வேண்டும் என்பதற்காகச் சில ஆதீனங்கள் ஏற்படுத்திக் கொண்ட தனிமரபுகளும் உண்டு. நடை உடை பாவனை பழக்கவழக்கம் முதலிய வற்றில் ஆதீனங்களிடையே இவ்வகையில் சிலபல வேறுபாடு களும் உண்டு.

திருவாவடுதுறை ஆதீனமும் தருமபுர ஆதீனமும் மிகப்பெரிய ஆதீனங்கள். ஆதீனங்களின் வரிசை வைப்பில் முதலாவதாகவும் இரண்டாவதாகவும் திகழ்பவை. இவ் விரண்டிற்குமிடையே நடையுடை பாவனை பழக்கவழக்கங் களில் சிலபல வேறுபாடுகள் உண்டு.

திருவாவடுதுறை ஆதீனநெறி சிவஞானபோத நெறி. தருமபுர ஆதீனம் சிவஞான சித்திநெறி. இரண்டு ஆதீனங் களின் குருமரபு வாழ்த்துப் பாடல்களைப் பார்த்தாலே இது தெரியும். சிவஞானமுனிவர் பாடியருளிய திருவாவடுதுறை ஆதீனக் குருமரபு வாழ்த்துப் பாடல் ஈடிணையற்றது. அதனையே தமக்கேற்பத் திரித்து மேற்கொண்டது தருமபுர ஆதீனம். பின்னாளில் இன்றளவும் அதனையே தத்தமக்கேற்பத் திரித்து, சில சொற்களைக் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் ஏனைய ஆதீனங்கள், தமது குருமரபு வாழ்த்துப் பாடலை அமைத்துக் கொண்டுள்ளன.

திருவாடுதுறை ஆதீனம் முதலில் ஏற்பட்டது. அதற்கு ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்குப் பின் தருமபுர ஆதீனம் உண்டாயிற்று. முதலில் தோன்றிய ஆதீனம் முதல் நூலாகிய சிவஞானபோத நெறியைக் கொண்டது. அடுத்துத் தோன்றிய தருமபுர ஆதீனம் வழிநூலான சிவஞானசித்திநெறியை மேற்கொண்டது.

இவ்வாறே கோலத்திலும் வேறுபாடுண்டு. திருவாவடு துறை ஆதீன குருமகா சந்நிதானங்கள் மழித்த கோலத்தில் இருப்பர். தருமபுர ஆதீன குருமகாசந்நிதானங்கள் சடைமுடி தரிப்பர், தாடி மீசையுடன் திகழ்வர். இப்படியே உருத்திராக்கம் அணிதல், ஆடை அணிதல் (வேட்டிக்கட்டு), பந்தியில்

உணவு பரிமாறுதல் முதலியவற்றிலும் இரு ஆதீனங்களுக் கிடையே வேறுபட்ட மரபுகள் உண்டு. 96 வேறுபாடுகள் எனக் கணக்கிடுவர். இவையெல்லாம் தனித்தன்மை வேண்டி ஏற்படுத்திக் கொண்டனவாம்.

ஏனைய ஆதீனங்களெல்லாம் திருவாவடுதுறை தருமபுரம் இவற்றில் ஏதேனும் ஒன்றைப் பின்பற்றியே தங்கள் நடை உடை பாவனை பழக்கவழக்க மரபுகளை அமைத்துக் கொண்டன.

திருப்பனந்தாள் காசித்திருமடம் தருமபுர ஆதீனத்தின் சீடமடம், திருப்பனந்தாள் காசித் திருமடத்தின் அதிபர் தருமபுர ஆதீன அடியவர் திருக்கூட்டத்தில் - தம்பிரான் சுவாமிகளுள் - முதலாமவர் ஆவார். தருமபுரத்திற்கும் திருப்பனந்தாளுக்கும் உரிய இக் குருசீட உறவு தொடக்க கால முதல் இன்றளவும் முறையாகக் கண்டிப்பாகக் கடைப் பிடிக்கப்பெற்று வருகிறது. இடையில் முன் ஒருசமயம் இம்மரபில் வழு ஏற்பட்டபோது வழக்கு எழுந்து உயர்நீதி மன்ற நீதிபதி ஜஸ்டிஸ் முத்துசாமி ஐயரவர்களின் தீர்ப்பால் குருசீட மரபு உறுதிப்படுத்தப் பெற்றுள்ளது.

திருவாவடுதுறை தருமபுரம் போன்றே சூரியனார் கோயில் ஆதீனமும் ஒரு தனி ஆதீனம். சூரியனார் கோயில் ஆதீனமரபே ஒரு தனிமரபு. ஏனைய ஆதீனங்கள் போன்று அது மெய்கண்டார் மரபில் வருவதன்று. அதன் மரபு கந்த பரம்பரை ஆகும். எனினும் காலஅடைவில் அதற்கு ஒரு வகையில் திருவாவடுதுறைச் சார்பு ஏற்பட்டுவிட்டது தவிர்க்க இயலாததாகிவிட்டது. திருவாவடுதுறை ஆதீனத் தம்பிரான்கள் சூரியனார்கோயில் ஆதீனத்தலைவர்களாக ஆவது அண்மைக் காலத்தில் வழக்கமாகியுள்ளது.

தொண்டமண்டல ஆதீனத்தில் இடைக்காலத்தில் ஏற்பட்ட தொய்வால் ஆதீனகர்த்தரை தொண்டமண்டல வேளாளர் சங்கத்தார் நியமிப்பது அண்மைக்காலத்தில் வழக்கமாகிவிட்டது. குருசீடமுறை தவிர்ந்து விட்டது.

ஒருவகைத் தேர்ந்தெடுப்பு செய்து சங்கத்தார் ஆதீனகர்த்தரை நியமனம் செய்கின்றனர். ஆதீனகர்த்தர்கள் பிரமசாரியாக இருந்து துறவியானவராக இராமல், இல்லறத்தாராக இருந்தவர் களாய் தொழில் உத்தியோகம் செய்து ஓய்வு பெற்றவர் களாய் அமைந்துவிடும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது.

மதுரை ஆதீனம், ஏனைய எல்லா ஆதீனங்களையும் விடப் பழைமையானது. திருஞானசம்பந்தர் காலத்திற்கு முன்பே அது நிலவியிருந்தது. மதுரைக்கு வந்த திருஞானசம்பந்தரை அமைச்சர் குலச்சிறையாரும் அரசியார் மங்கையர்க்கரசியாரும் அம்மடத்தில் தங்க வைத்தனர். திருஞானசம்பந்தர் தங்கியிருந்ததால் அது திருஞானசம்பந்தர் மடம் என்ற பெயருடன் வளர்ச்சிபெற்று இன்றைய மதுரை ஆதீனமாய்த் திகழ்கிறது.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தில் ஆதீன கர்த்தர்கள் (குன்றக்குடி அடிகளார்கள்) பூஜை நேரத்தில் மட்டும் பூணூல் அணிந்து கொள்ளும் மரபு உண்டு. காரணம் ஆதீனநிறுவனர் ஆதிசைவ அந்தணர் (சிவாசாரியர்) என்பதே.

எல்லா ஆதீனங்களிலுமே சிறப்பாகக் குருபூஜை நடைபெறும். பெரிய ஆதீனங்களில் கொலு, பல்லக்கில் பட்டினப் பிரவேசம் முதலியவை உண்டு. சந்நிதானங்கள் நடந்து செல்லும்போது தம்பிரான் சுவாமிகள் கைலாகு கொடுத்துக்கொண்டு வருவதுண்டு.

ஆதீனங்களின் பல்வேறு நடைமுறைகள் சிறந்த அடிப்படையில் அமைந்தவை. எல்லாவற்றையும் விரித்துக் கூறப்புகின் மிகப் பெருகுமாதலின் இவ்வளவில் சுருங்கக்கூறி நிறைவு செய்கிறோம்.

பின்இணைப்பு 8

ஆதீனங்களின் பெருமையும் ஆதீனங்களால் சமுதாயத்திற்கு ஏற்படும் பயன்களும் ஆதீனங்களின் இன்றைய நிலையும்

ஆதீனங்களின் பெருமை, சிறப்பு

ஆதீனங்கள் மிகப்பெரிய சமய நிறுவனங்கள், குரு பீடங்கள். கோயில்களுக்கு அடுத்த நிலையில் இரண்டாவதாக ஆதீனங்களைக் கொள்ள வேண்டும்.

கோயில்கள் பக்தி நிலையங்கள். ஆதீனங்கள் யோக ஞான நிறுவனங்கள். சரியை கிரியைகளுக்குக் கோயில்கள். யோக ஞானங்களுக்கு ஆதீனங்கள் மடங்கள். கோயில்களை நிர்வகிக்கும் உரிமை ஆதீனங்களுக்கே உரியது.

சைவத்திலும் வைணவத்திலும் வேதாந்தத்திலும் இம் மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து வழங்கப்பெறும் இந்து சமயத்திலும் குருவின் பெருமை மிகப்பெரிது. கடவுளுக்கு அடுத்த நிலை, கடவுளுக்கு ஒப்பான - சமமான - நிலை குருவுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ‘‘குருவே சிவம்’’ என்கிறார் திருமூலர். ‘‘குருவே சிவம் எனக் கூறினன் நந்தி’’ என்பது திருமூலர் வாக்கு, திருமந்திரம்.

‘‘குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்’’ என்றொரு பழமொழி உண்டு. அதனோடு நாம் குருவையும் சேர்த்துக் கொள்ளலாம். ‘‘குழந்தையும் குருவும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்’’ என்று சொல்லலாம். தெய்வங்களைக் கொண்டாடுவது போன்றே குருவையும் கொண்டாடுவது இந்துசமயத்தில் ஒரு தனிச்சிறப்பு. தெய்வபக்திக்கு அடுத்தது குருபக்தி. தெய்வவழிபாட்டுக்கு அடுத்தது குரு வழிபாடு.

‘‘நன்றாக! குருவாழ்க! குருவேதுணை’’ என்பது முற்காலத்தில் பள்ளிப்பிள்ளைகள் அரிச்சுவடி படிக்கத் தொடங்குமுன் காப்பாகக் கூறித்தொடங்குவது.

"அறம், பொருள், இன்பம், வீடு" என்னும் நான்கு உறுதிப் பொருள்களுள் (புருடார்த்தங்களுள்) முதலும் ஈறும் ஆகிய அறத்திற்கும் வீட்டிற்கும் வாயிலாக விளங்குவன ஆதீனங்கள்

ஆதீனங்களால் சமுதாயத்துக்கு ஏற்படும் பயன்கள்

ஆதீனங்கள் மொழி கலை பண்பாடு முதலியவற்றை வளர்க்கும் ஞானப்பண்ணைகள். "சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக" என்பது ஒரு பழமொழி. ஆதீனங்களால் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கின. ஆதீனங்கள் தமிழை வளர்த்தன, சைவத்தை வளர்த்தன, கலைகளை வளர்த்தன, பண்பாட்டை வளர்த்தன. வளர்த்து வருகின்றன.

ஆதீனங்கள் தமிழ்க்கல்லூரிகளை நிறுவித் தமிழை வளர்த்தன. ஆதீனக் கல்லூரிகளில் பயின்று தமிழ் வித்துவான் பட்டம் பெற்றோர் ஆயிரக்கணக்கானவர்கள் நாடெங்கும் தமிழாசிரியர்களாகப் பணியாற்றினர். அவர்களது மாணவர்க்கு மாணவர் இன்று நாடெங்கும் கல்லூரிப் பேராசிரியர்களாய், பல்கலைக்கழகப் பேராசிரியர்களாய்த் திகழ்கின்றனர்.

தமிழ்க்கல்லூரி நிறுவித் தமிழை வளர்த்த ஆதீனங்கள் வேதபாடசாலைகளையும், ஆகமபாடசாலைகளையும், தேவார பாடசாலைகளையும் நிறுவிச் சைவத்தை வளர்த்தன.

குருபூஜை விழாக்களிலும் ஏனைய விழாக்களிலும் சிறந்த சொற்பொழிவுகளை அமைத்தும், அவ்வப்போது கருத்தரங்குகள் மாநாடுகளை நடத்தியும் அறிவைப் பரப்பின.

தமிழ்ப்புலவர்களையும், இசைக்கலைஞர்களையும் ஆதீன வித்துவான்களாக ஆக்கிப் புரந்து, அவர்களுக்குப் பட்டம் பதவி பரிசுகள் விருதுகளை வழங்கி மொழியையும் கலை களையும் வளர்த்தன. இராமநாதபுரம் போன்ற சமஸ்தானங் களில் அக்காலத்தில் ஆஸ்தான வித்துவான்கள் சமஸ்தான வித்துவான்கள் சிறந்து விளங்கினர். அதுபோன்றே ஆதீனங் களில் ஆதீன வித்துவான்கள் சிறந்து விளங்கினர். ஆதீன வித்துவான்கள் என்றாலே ஒரு தனிச் சிறப்பு. திருவாவடுதுறை

ஆதீன மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர் களைவிடப் பெரியவித்துவான் யாரும் இருக்க முடியாது. திருவாவடுதுறை ஆதீன சங்கீதவித்துவான் திருவாவடுதுறை இராஜரத்தினம் பிள்ளையைவிடப் பெரிய வித்துவான் யாரும் இருக்கமுடியாது. வித்தையில் முதல்தரமானவர்களெல்லாம் திருவாவடுதுறை ஆதீன வித்துவான்களாகவே இருந்தனர். ஆவடுதுறையின் ஆதீன வித்துவான் தேர்வு அப்படி.

கலைகளைப் புரந்தது தஞ்சை மண். கலைகளைப் புரப்பதற்குத் தஞ்சையில் ஒரு மன்னர் சரபோஜி என்றால், ஆதீனங்கள் மூன்று, ஆவடுதுறை தருமபுரம் திருப்பனந்தாள்.

ஆதீனங்கள் அந்நாளையப் பல்கலைக்கழகங்களாக விளங்கின. இன்று தமிழுக்குத் தஞ்சையில் ஒரு பல்கலைக் கழகம். அந்நாளில் மூன்று பல்கலைக்கழகங்கள், திருவாவடுதுறை தருமபுரம் திருப்பனந்தாள் ஆதீனங்கள்.

இன்று தமிழ்நாடு முழுமைக்குமே ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம். அன்று 18 பல்கலைக்கழகங்கள். ஆதீனங்கள் பதினெட்டுமே பல்கலைக்கழகம் போல் திகழ்ந்தன.

கல்வியையும் கலைகளையும் பரப்பிப் புரந்து ஞான தானத்தில் சிறந்து விளங்கிய ஆதீனங்கள் ஏழைகளின் பசியை நீக்கும் அன்னதானத்திலும் சிறந்து விளங்கின. ஞானதானமும் அன்னதானமும் ஆதீனங்களின் இருபெரும் தொண்டுக் கண்கள்.

இவ்வாறு ஆதீனங்களால் சமுதாயம் மொழிப்பயன், கலைப்பயன், இலக்கியப்பயன், சமயப்பயன், பண்பாட்டுப் பயன் முதலிய பல்வேறு பயன்களையும் பெற்றது. புலவர் களும் கலைஞர்களும் ஏழை எளியவர்களும் பொருளாதாரப் பயனையும் பெற்றனர்.

ஆதீனங்கள் பல்வேறு வகைகளில் சமுதாயத்திற்கு அன்றும் பயன்பட்டன. இன்றும் பயன்பட்டு வருகின்றன.

அண்மையில் விளங்கிய குன்றக்குடி அடிகளார் சமயப் பணிகளோடு சமுதாயப் பணிகள் பலவற்றையும் மிகுதியாகச் செய்து ''சமுதாய முனிவர்'' என்றே வழங்கப் பெற்றதை நாடறியும்.

ஆதீனங்களின் இன்றைய நிலை

முற்காலத்தில் ஆதீனங்கள் மிகவும் செழிப்பான நிலையில் விளங்கின. அன்றைய செழிப்பு இன்று இல்லை. ஆதீன வளாகங்கள், கல்லூரி வளாகங்கள் போன்றும் பல்கலைக்கழக வளாகங்கள் போன்றும் பரந்த நிலப்பரப்பை உடையவை. தருமபுர ஆதீன வளாகத்தின் நிலப்பரப்பு ஏறத்தாழ 500 ஏக்கர் இருக்கும். இவ்வளவு பெரிய நிலப்பரப்பையும் கலைச் சிறப்பு மிக்க பழங்காலக் கட்டிடங்கள் பலவற்றையும் கொண்ட பெரிய வளாகத்தைப் பராமரிப்பதே கடினம். ஆதீனங்களுக்குச் சொத்துகள் மிகுதி. ஆனால் வருமானமோ மிகக் குறைவு. ஆதீனச் சொத்துகள் பெரும் பாலும் நிலங்களே. குன்றக்குடி ஆதீனத்திற்கு ஒருகாலத்தில் ஒரு லட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் இருந்தன. இன்று இருப்பது நூற்றுக்கணக்கான ஏக்கர்களே. ஆதீன நிலங்கள் பல, இனாம் ஒழிப்பில் போய்விட்டன. திருவாவடுதுறை ஆதீனத்திற்கு ஆதீனச் சொத்துகள் (ஆதீனத்தின் பேரில் உள்ள சொத்துகள்) மிகுதி. தருமபுர ஆதீனத்திற்குக் கோயிற் சொத்துகள் (ஆதீனக் கோயில்களின் பேரில் உள்ள சொத்துகள்) மிகுதி. இவ்விரு ஆதீனங்களுக்கும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உண்டு. எல்லாமே நன்செய் புன்செய் நிலங்கள் அன்று. தோட்டங்கள், கரம்புநிலங்கள், காடுகரைகள் (காடு மேடுகள்) இப்படி எல்லாம் சேர்த்துத்தான். இவ்வளவு சொத்துகள் இருந்தும் உரிய வருமானம் இல்லை. இந்தக் காலத்தில் யார் குத்தகையை ஒழுங்காகக் கொடுக்கிறார்கள்.

திருவாவடுதுறை ஆதீனத்திற்கு நாடெங்கும், குறிப்பாகத் தென்மாவட்டங்களில் சொத்து மிகுதி. கிளை மடங்களும் மிகுதி. 300-க்கு மேற்பட்ட கிளைமடங்கள். அவ்வளவு கிளை மடங்களையும் பராமரிப்பதற்கு வருமானம் போதாது. தருமபுர

ஆதீன நிலையும் இப்படிப்பட்டதுதான். திருப்பனந்தாள் காசிமடத்தின் நிலையும் இப்படித்தான். சுருங்கச் சொன்னால் ஒருவரியிற் சொல்வதானால் இன்று எல்லா ஆதீனங்களின் நிலையும் இதுதான்.

பராமரிப்புக்கே போதாத நிலை என்றால் தொண்டு களுக்கு எங்கே போவது?

முற்காலத்தில் அரசாங்க ஆதரவு இருந்தது, தலையீடு இல்லை. நாடு சுதந்திரம் பெற்றபின் அரசாங்க ஆதரவு இல்லை. தலையீடுகள் மிகுந்துவிட்டன.

சமய உலகிலும் முற்காலச்சூழல், அன்றைய சூழல் இன்று இல்லை. அயற்சமயப் பெருக்கம் அன்று குறைவு, இன்று அதிகம். நாத்திகப்போக்கு அன்று இல்லை, மிகக் குறைவு. இன்று மிக அதிகம். இவற்றாலெல்லாம் ஆதீனங்கள் அதிகம் பாதிப்புக்கு உள்ளாகும் நிலை.

திருவாவடுதுறை தருமபுரம் போன்ற பெரிய ஆதீனங் களில் முற்காலத்தில் குறைந்தது ஐம்பதிற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் தம்பிரான்கள் இருந்தனர். இன்று ஐந்தாறு தம்பிரான்களே உள்ளனர் என்ற நிலை. ஒரு கோயிலுக்கு ஒரு தம்பிரான், பெரிய கிளைமடங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு தம்பிரான் என்றாலும் நூற்றுக்கு மேற்பட்ட தம்பிரான்கள் தேவை. தேவையை நிறைவு செய்யத்தக்க பக்குவிகள் கிடைக்க வில்லை. இன்று துறவுக்குப் பஞ்சம். நல்ல தம்பிரான்கள் கிடைப்பதில்லை. (இந்நிலை இராமகிருஷ்ண மடம் போன்ற புதிய வகைத் தொண்டு துறவு நிறுவனங்களிலும் உணரப்படு கிறது என்று தெரிந்தவர்கள் சொல்கிறார்கள்)

ஆதீனகர்த்தராக இருத்தல் எளிதன்று. தவஆற்றல், அறிவாற்றல், நிர்வாக ஆற்றல் ஆகிய முத்திற ஆற்றல்களையும் முழுமையாகப் பெற்றவர்களே ஆதீனகர்த்தர்களாக வெற்றி யுடன் திகழ முடியும். ஒரு ஆற்றல் குறையினும் ஊனமே.

சைவ ஆதீனச் சூழலில் உலகியல் அறிவு (லௌகீகம்) குறைவு, அருளியலே மிகுதி. பிறசமயச் சூழலில் காணப் படும் உலகியலறிவு சைவச் சூழலில் இல்லை. நமது சமயம் அப்படிப்பட்டது. இது நிறை என்றாலும் நிர்வாகம் என்று வரும்போது இஃது ஒரு குறையே.

இந்நிலையில் ஆதீனங்கள் பொன்னை வைக்கும் இடத்தில் பூவை வைத்துத் தங்கள் தொண்டுகளை இயன்ற அளவு குறையின்றிச் செய்து வருகின்றன. இன்றைய சமுதாய நிலையில் அரசியல் நிலையில் ஆதீனங்கள் இவ்வளவு செய்வதே போற்றத்தக்கது, ஊக்குவித்தற்குரியன.

பின்இணைப்பு 9

ஆதீனங்கள் நடத்தும் கல்லூரிகள்

முதன்முதலில் தமிழ்க்கல்லூரியைத் தொடங்கியது வீரசைவ ஆதீனமாகிய பொம்மபுர ஆதீனம்தான்.

பின்பு திருப்பனந்தாள் காசிமடமும் தருமபுரஆதீனமும் தமிழ்க் கல்லூரிகளைத் தொடங்கின. இவையெல்லாம் ஆதீனங்களே நடத்தும் கல்லூரிகள்.

குன்றக்குடி அடிகளார் சில அறக்கட்டளைகளின் சார்பில் கல்லூரிகளைத் தொடங்கித் தமது மேற்பார்வையில் நடத்தச் செய்தார். அண்மையில் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் மகளிர் கல்வியியல் கல்லூரி ஒன்றை ஆதீனக் கல்லூரி யாகவே தொடங்கி நடத்தி வருகிறார்.

திருப்பனந்தாள்
தருமபுரம் } ஆகிய சைவ ஆதீனங்களும்
குன்றக்குடி

மயிலம்
பேரூர் } ஆகிய வீரசைவ ஆதீனங்களும்

இன்று கல்லூரிகளை நடத்திவரும் ஆதீனங்களாகும்.

பின்இணைப்பு 10

ஆதீனங்கள் வெளியிடும் திங்களிதழ்கள்

ஆதீனச்சார்பில் முதன்முதலில் வெளிவந்த திங்களிதழ் ''குமரகுருபரன்''. அது குமரகுருபரர் பிறந்த ஸ்ரீவைகுண்டத்தில் அவருடைய மரபில் வந்த T.M. குமரகுருபரன் பிள்ளை அவர்களால் தோற்றுவித்து நடத்தப் பெற்றுவந்த குமரகுருபரன் சங்க வெளியீடாக வெளிவந்தது. பல ஆண்டுகள் வெளி வந்த அது ஒரு சமயம் நின்று போக நேர்ந்தது. அதன்பின் திருப்பனந்தாள் காசிமடமே ''குமரகுருபரர்'' என்று ஒரு திங்களிதழை வெளியிடத் தொடங்கிற்று.

முதன்முதல் திங்களிதழ் ஒன்றை நடத்தத் தொடங்கியது தருமபுர ஆதீனம். பெயர் : ஞானசம்பந்தம்

இன்றைய நிலையில் திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், சூரியனார்கோயில், குன்றக்குடி, வேளாக்குறிச்சி ஆகிய ஆறு ஆதீனங்கள் திங்களிதழை வெளியிடுகின்றன.

ஆதீனம்	திங்களிதழ்
திருஆவடுதுறை	மெய்கண்டார்
தருமபுரம்	ஞானசம்பந்தம்
திருப்பனந்தாள்	குமரகுருபரர்
சூரியனார்கோயில்	சிவசிவ
குன்றக்குடி	1. மக்கள் சிந்தனை 2. அறிக அறிவியல்
வேளாக்குறிச்சி	தத்துவப்பிரகாசம்

ஆதீனத் திங்களிதழ்களில் நல்ல நல்ல கட்டுரைகளும் ஆதீனச் செய்திகளும் வெளிவருகின்றன.

ஆதீன முகவரிக்கு எழுதி ஆண்டுசந்தா அல்லது ஆயுள் சந்தா செலுத்திச் சைவ மெய்யன்பர்கள் வருவித்துக் கொள்வது

மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆண்டு சந்தாவைவிட ஆயுள் சந்தா செலுத்தி ஆயுள் உறுப்பினராவதே மேல். வாழ்நாள் முழுவதும் ஆதீனத் தொடர்பு இருந்துகொண்டேயிருக்கும். நல்ல நல்ல செய்திகளையும் கட்டுரைகளையும் விளக்கங்களையும் அறிந்து பயன்பெறலாம்.

ஆதீன இதழ்கள் அனைத்திற்கும் நாம் ஆயுள் சந்தாதாரராக இருக்கிறோம். அனுபவத்தில் சொல்லுகிறோம். அன்பர்கள் ஆதீன இதழ்களை வருவித்துப் பயன் பெறுவார்களாக. சைவ மெய்யன்பர்களுக்கு சைவ ஆதீனத் தொடர்பு இருக்க வேண்டியது அவசியம் (இன்றியமையாதது) அல்லவா?

ஆதீன முகவரிகளைப் பின்னிணைப்பு 15-இல் காண்க.

பின்இணைப்பு 11

ஆதீனங்களின் பெயரட்டவணை

1. திருவாவடுதுறை ஆதீனம்
2. தருமபுர ஆதீனம்
3. காசித்திருமடம், திருப்பனந்தாள்
4. சூரியனார்கோயில் ஆதீனம்
5. தொண்டை மண்டல ஆதீனம், காஞ்சிபுரம்
6. திருஞானசம்பந்தர் ஆதீனம், மதுரை.
7. குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி
8. செங்கோல் ஆதீனம், பெருங்குளம்.
9. துழாவூர் ஆதீனம்
10. வேளாக்குறிச்சி ஆதீனம், திருப்புகலூர்.
11. நாச்சியார்கோயில் ஆதீனம்
12. வரணி ஆதீனம், வேதாரண்யம், யாழ்ப்பாணம் - இலங்கை.
13. வள்ளலார் ஆதீனம் - சீர்காழி.
14. சொர்க்கபுர ஆதீனம்
15. ஆகமசிவப்பிரகாசர் ஆதீனம்
16. தாயுமான சுவாமிகள் ஆதீனம் - அன்னப்பன்பேட்டை
17. நீலப்பாடி ஆதீனம்
18. இராமேசுவர ஆதீனம்

1 முதல் 12 ஆதீனங்களும் நல்ல நிலையில் செயல்பட்டு வருகின்றன. 12 முதல் 18 முடிய, பெயரளவில் உள்ளவை, நலிந்தநிலை அழிந்துபட்டநிலை.

பின்இணைப்பு 12

ஆதீனகர்த்தர்களது பட்டங்களின் எண்ணிக்கை எத்தனையாவது பட்டம் என்பது

திருவாவடுதுறை ஆதீனம்	- 23-ஆம் பட்டம்
தருமபுர ஆதீனம்	- 26-ஆம் பட்டம்
திருப்பனந்தாள் காசித்திருமடம்	- 21-ஆம் பட்டம்
சூரியனார்கோயில் ஆதீனம்	- 20-ஆம் பட்டம்
தொண்டைமண்டல ஆதீனம்	- 232-ஆம் பட்டம்
மதுரை ஆதீனம்	- 292-ஆம் பட்டம்
குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்	- 46-ஆம் பட்டம்
செங்கோல் ஆதீனம்	- 102-ஆம் பட்டம்
துழாவூர் ஆதீனம்	- 29-ஆம் பட்டம்
வேளாக்குறிச்சி ஆதீனம்	- 18-ஆம் பட்டம்
நாச்சியார்கோயில் ஆதீனம்	- 6-ஆம் பட்டம்
வரணி ஆதீனம்	- 21-ஆம் பட்டம்

பின்இணைப்பு 13

இப்போது குருமகாசந்நிதானங்களாக எழுந்தருளி விளங்குபவர்களின் பெயரட்டவணை

திருவாவடுதுறை ஆதீனம்

சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

தருமபுர ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருப்பனந்தாள் காசித்திருமடம்

திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்

சூரியனார்கோயில் ஆதீனம்

சீர்வளர்சீர் சங்கரலிங்க தேசிக பரமாசாரிய சுவாமிகள்

தொண்டைமண்டல ஆதீனம்

சீர்வளர்சீர் திருவம்பல தேசிக ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள்

மதுரை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்

திருவருள்திரு தெய்வசிகாமணி பொன்னம்பலதேசிக பரமாசாரிய சுவாமிகள் (தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்)

துழாவூர் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ நிரம்பஅழகிய ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள்

வேளாக்குறிச்சி ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சத்தியஞான மகாதேவ தேசிக பரமாசாரிய சுவாமிகள்

செங்கோல் ஆதீனம்

சீர்வளர்சீர் கல்யாணசுந்தர சத்தியஞான பண்டாரசந்நிதிகள்

நாச்சியார்கோயில் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ மருதவாண தேசிக சுவாமிகள்

வரணி ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ செவ்வந்திநாத பண்டார சந்நிதிகள்

பின்இணைப்பு 14

ஆதீன குருமூர்த்தங்களும் குருபூஜைகளும்

கோயில்களுக்குக் கருவறை போன்றது, ஆதீனங்களுக்கு அவற்றை நிறுவிய குருமுதல்வர்களின் குருமூர்த்தம். கோயிலில் நிகழும் பிரம்மோற்சவம் போன்றது ஆதீனங்களில் நிகழும் குருமுதல்வர் குருபூஜை.

திருவாவடுதுறை ஆதீனத்தின் நிறுவனர் குருமுதல்வர் ஸ்ரீநமசிவாயமூர்த்திகள். அவரது குருமூர்த்தம் (சமாதிக் கோயில்) ஆதீனத்திற்குள்ளேயே கருங்கற்கோயிலாக உள்ளது. ஆதீனத்தின் பிரதான ஸ்தானம் முக்கிய இடம் இதுவே. நமசிவாய மூர்த்திகளின் திருவுருவம் கற்சிலையாக எழுந்தருளுவிக்கப் பெற்றுள்ளது. தைமாதம் அசுவனி நட்சத்திரத்தில் குருபூஜை. மகரத் தலைநாள் விழா என நல்ல தமிழில் அழகாகக் கூறப்பெறும். மகரம்-தைமாதம். அசுவனி 27 நட்சத்திரங்களில் முதலாவது. ஆதலின் மகரத்தலைநாள் விழாவாயிற்று. குருபூசை விழா 11 நாள் விழாவாக மிகப் பெரிய அளவில் நிகழும். சிறப்பு வழிபாடுகள், சொற்பொழிவுகள், கருத்தரங்கம், இசையரங்கம், விருது வழங்கல் முதலிய பற்பல நிகழ்ச்சிகளோடு பெருவிழாவாக நிகழும்.

தருமபுர ஆதீனத்தில் குருமுதல்வர் ஸ்ரீ குருஞான சம்பந்தரின் குருமூர்த்தம் சிவாலயமாக உள்ளது. சிவலிங்க வடிவம். குருபூஜை 11 நாள் விழாவாகத் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு என்ற பெயருடன், திருவாவடுதுறைக் குருபூஜை போன்றே சிறப்பாக நிகழும். ஆவடுதுறைக் குருபூஜை நட்சத்திரத்தில் நிகழும். தருமையில் திதியில் நிகழும். குருமுதல்வரும் அவரது குருவும் பூர்வாசிரமத்தில் இல்லறத்தாராய் இருந்ததால் திதியில் குருபூஜை. திருப்பனந்தாள் காசித் திருமடம் தருமபுரத்தின் சீடமடம், நிறுவனர் குமரகுருபரர் தருமபுரத்தின் சீடர். ஆதலின் குரு பூசை இல்லை. மாகேசுவர பூஜையாகச் சிறப்புடன் நிகழும்.

சூரியனார்கோயிலில் குருமூர்த்தத்தில் கருங்கல் திருமேனி. காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனத்தில் சிவலிங்கத் திருமேனி.

ஞானசம்பந்தர் ஜோதியிற் கலந்ததால் குருமூர்த்தம் (சமாதிக்கோயில்) இல்லை. மதுரை ஆதீனத்தில் குருபூஜை உண்டு.

குன்றக்குடியில் இரண்டு இடங்களில் குருபூஜை. ஆதியில் ஆதீனம் நிறுவப்பெற்ற இடமாகிய திருவண்ணாமலையில் உள்ள மடத்தில் முதல்வரின் குருமூர்த்தம் உள்ளது. ஆதலின் திருவண்ணாமலை மடம், குன்றக்குடிமடம் ஆகிய இரண்டிலுமே குருபூஜை நிகழும். அண்ணாமலையில் வழிபாடு. குன்றக்குடியில் சிறப்பு நிகழ்ச்சியோடு குருபூஜை.

குருமூர்த்தங்கள் அமைப்பதில், உருவத்திருமேனி, சிவலிங்கத்திருமேனி, திருவடிகள் என மூன்றுவகை உண்டு. குருபூஜை நட்சத்திரத்தில் நிகழ்வது, திதியில் நிகழ்வது என்ற வேறுபாடும் உண்டு. சில இடங்களில் மட்டுமே திதி. நட்சத்திரமே பெரும்பான்மை.

குருமூர்த்தம், குருபூசை இவற்றைப் பற்றிய மரபுகள், நடைமுறைகள் தனியாக விரிவாக அறிதற்குரியவை. விரிக்கில் பெருகும் என்பதால் சுருங்கக் கூறினோம்.

பின்இணைப்பு 15

ஆதீன முகவரிகள்

அன்பர்களின் பயன்பாட்டிற்காக ஆதீனங்களின் முகவரியை இங்கே கொடுத்திருக்கிறோம். அன்பர்கள் கடித உறைகளில் முகவரி எழுதும்போது ஆதீனங்களின் பெயருக்குமுன் **குருமகாசந்நிதானம் அவர்கள்** என்றோ அல்லது **அலுவலக மேலாளர்** என்றோ ஒரு வரியைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அயல் மாநிலங்களிலிருந்து எழுதுவோர் முகவரிகளில் கடைசி வரியாகத் தமிழ்நாடு என்று சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அயல்நாடுகளிலிருந்து கடிதம் எழுதுவோர் தமிழ்நாடு இந்தியா என்ற இரண்டு வரிகளைக் கடைசியாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை - 609 803
நாகப்பட்டினம் மாவட்டம் தொலைபேசி : *(04364) 232021*

தருமபுர ஆதீனம்
தருமபுரம்
மயிலாடுதுறை - 609 001
நாகப்பட்டினம் மாவட்டம் தொலைபேசி : *(04364) 223207*

காசித் திருமடம்
திருப்பனந்தாள் - 612 504
தஞ்சாவூர் மாவட்டம் தொலைபேசி : *(0435) 2456655*

ஸ்ரீ சிவாக்கிர யோகிகள் ஆதீனம்
சூரியனார்கோவில்
திருமங்கலக்குடி - 612 102
தஞ்சாவூர் மாவட்டம்

தொண்டைமண்டல ஆதீனம்
உபதலைவர் பரமசிவம் தெரு
பெரிய காஞ்சிபுரம் - 631 502
காஞ்சிபுரம் மாவட்டம் தொலைபேசி : *(04112) 223679*

மதுரை ஆதீனம்
தெற்காவணிமூலவீதி
மதுரை - 625 001 தொலைபேசி : (0452) 4377116; 4381005
மதுரை மாவட்டம்

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்
குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம் தொலைபேசி : (04577) 264227

செங்கோல் ஆதீனம்
பெருங்குளம் - 628 752
தூத்துக்குடி மாவட்டம் தொலைபேசி : (04630) 271411

துலாவூர் ஆதீனம்
துலாவூர்
கொரட்டி (அஞ்சல்)
குன்றக்குடி (வழி)
சிவகங்கை மாவட்டம் - 630 206 தொலைபேசி : (04577) 264446

வேளாக்குறிச்சி ஆதீனத் திருமடம்
திருப்புகலூர் - 609 704
நாகப்பட்டினம் மாவட்டம் தொலைபேசி : 9443113025

திருநறையூர் மடம்
வள்ளல் சந்தான மடத்துத் தெரு
திருநறையூர் (நாச்சியார் கோயில்)
கும்பகோணம் - 612 602
தஞ்சாவூர் மாவட்டம்

வரணி ஆதீனம்
மேலவீதி
வேதாரண்யம் - 614 810
நாகப்பட்டினம் மாவட்டம்

பின்இணைப்பு 16

இன்று நம்மிடையே சிறந்து விளங்கும் சைவத் தமிழறிஞர்கள்

தமிழ் மண்ணின் சமயம், சைவம்; மொழி, தமிழ். தமிழ் வேறு, சைவம் வேறு அன்று. தமிழே சைவம். சைவமே தமிழ். ''என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'' என்கிறார் திருமூலர் (திருமந்திரம்). ''சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக'' என்று ஒரு பழமொழி நீண்ட காலமாகவே வழங்கிவருகிறது.

எனினும் ''இருவேறு உலகத்து இயற்கை'' என்பது போல, மொழிப்புலமை வேறு, சைவப் புலமை வேறு என்பதாகவே இன்றைய நிலை உள்ளது. தமிழறிஞர்களில் மிகப் பலருக்குச் சைவப்புலமை இல்லை. சைவப் புலவர் பலருக்கு மொழிப்புலமை போதாது.

இன்றைய இந்நிலையில் முனைவர் கு. சுந்தரமூர்த்தி, முனைவர் இரா. செல்வக்கணபதி போன்ற மிகச்சிலரே தமிழ்ப்புலமை சைவப்புலமை ஆகிய இரண்டையும் ஒருங்கே உடையவர்களாய்ச் சிறந்து விளங்குகின்றனர். அத்தகைய சிலரைப்பற்றிய குறிப்புகளை இவண் தருகிறோம்.

முனைவர் கு. சுந்தரமூர்த்தி

முனைவர் இரா. செல்வக்கணபதி

முனைவர் மு. சிவச்சந்திரன்

பேராசிரியர் தா.ம. வெள்ளைவாரணம்

புலவர் மு. வைத்தியநாதன்

புலவர் தா. குருசாமிதேசிகர்

புலவர் நீ.சீ. சுந்தரராமன்

முதுமுனைவர் தி.ந. இராமச்சந்திரன்

அறிஞர் இரா. இராஜசேகரன்

பண்டித வித்துவான்
முனைவர் கு. சுந்தரமூர்த்தி

மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதம், சென்னைப் பல்கலைக்கழகத்து வித்துவான், முனைவர் (பி.எச்டி) ஆகிய முப்பெரும் தகுதியையும் பெற்ற முதுபேரறிஞர் இவர்.

பிறந்த நாள் : *14.04.1930*

பெற்றோர் : குப்புசுவாமி முதலியார்,
நாகரத்தினத்தம்மையார்

பிறந்த ஊர் : தொட்டியம்

கல்வித்தகுதி : பண்டித, வித்துவான், எம்.ஏ., பிஎச்.டி.,

மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டித பட்டம் அந்நாளில் மிகவும் மதிப்பு மிக்கது. பிரவேசம் (எண்ட்ரன்ஸ்), பால பண்டிதம், பண்டிதம் என்று மூன்று ஆண்டுப் படிப்பு. பாடத் திட்டம் தமிழ் நூற் பரப்பில் முக்கால்வாசிக்குமேல் அடங்கியது. ஆழமும் அகலமும் கொண்ட படிப்பு. மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டித பட்டம் பெற்றோர் இன்றைய நாளில் மிக அரியர். அண்மைக்காலம் வரை நம்மிடையே விளங்கிய நூற்கடல் தி.வே. கோபாலையர் அவர்களும், இன்று நம்மிடையே நிலவும் கு. சுந்தரமூர்த்தி அவர்களும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டித பட்டம் பெற்றோர்.

பண்டித பட்டம் போன்றே, சென்னைப் பல்கலைக் கழகத்து வித்துவான் பட்டமும் அந்நாளில் மதிப்புமிக்கது. பண்டித பட்டமும் வித்துவான் பட்டமும் பெற்ற நம் சுந்தரமூர்த்தி அவர்கள் பின்னாளில் எம்.ஏ., பட்டமும், அதன்பின் பி.எச்.டி பட்டமும் பெற்றுத் திருப்பனந்தாளில் பணியைத் தொடங்கி இலண்டன் வரை சென்று சைவமும் தமிழும் பரப்பும் பணியில் சிறப்பவரானார்.

திருப்பனந்தாள் காசிமடத்தில் காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரியில் (கே.வி.எஸ்.எஸ். கல்லூரி)

1945 முதல் 1950 வரை படித்துப் பட்டம் பெற்றார். தான் படித்த அக்கல்லூரியிலேயே 23 ஆண்டுகள் பேராசிரியராகவும், 14 ஆண்டுகள் கல்லூரி முதல்வராகவும் பணியாற்றினார். 4 ஆண்டுகள் தாளாளராகவும் பணியாற்றினார். 23+14=37+4 = 41 ஆண்டுகள் ஒரே கல்லூரியில் பணியாற்றிய பெருமைக்குரியவர். அதிலும், தான் படித்த கல்லூரியிலேயே பணியாற்றிய பெருமைக்குரியவர்.

சென்னைப் பல்கலைக்கழகத்திலும், திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலும் கல்விக்குழு உறுப்பின ராகவும் ஆளவை உறுப்பினராகவும் விளங்கினார்.

இங்குக் குறிப்பிடப்பெறும் அனைவரிலும் இவருடைய பதிப்புப் பணிகளே மிகவும் அதிகம். இலக்கணம், இலக்கியம், திருமுறைகள், சாத்திரங்கள் ஆகிய நான்கு வகையிலுமே ஐம்பதின் மிக்க பதிப்புகளை இவர் செய்துள்ளார்.

தொல்காப்பியம் முழுமையும், எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களும், நச்சினார்க்கினியர், சேனாவரையர், இளம்பூரணர், பேராசிரியர், கல்லாடர் உரைகளுடன், இவரது விளக்கவுரையுடன், பல பகுதிகளாய், சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சொந்தப் பதிப்பு ஆகிய பதிப்புகளாய் வெளிவந்துள்ளன. தண்டி யலங்காரம் விளக்கவுரையுடன் சொந்தப் பதிப்பு. முத்துவீரியம் உரையுடன் கழகப்பதிப்பு.

இலக்கியப் பதிப்புகளில் இவரது திருக்குறள் உரைத் திறன் மிகப்பெருநூல்; சொந்தப்பதிப்பு. திருமுருகாற்றுப் படை உரைத்திறன் இரத்தினகிரி பாலமுருகன் திருக்கோயில் பதிப்பு. நீதிநெறிவிளக்கம், கந்தர்கலிவெண்பா, அபிராமிஅந்தாதி, இவை விளக்கவுரையுடன் காசிமடத்துப் பதிப்பு. திருக்குறள் மணக்குடவர் உரையும் கந்தர்அனுபூதி உரையும் காசி மடத்துப் பதிப்புகளே. திருவிளையாடற்புராணம் குறிப்புரை யுடன் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துப் பதிப்பு. தருமபுர ஆதீனத்திற்காகப் பதிப்பித்தனவும் சில உண்டு.

சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவர் தேவாரத் திருமுறை களையுமே வரலாற்று முறையில் பதிப்பித்துள்ளார். சிவகாசி சிவனடியார் அறநெறிக்கழகத்து வெளியீடு.

சித்தாந்த சாத்திரம் பதினான்குமே தனித்தனியாக இவரது பதிப்புகள் வெளிவந்துள்ளன.

பெற்ற பட்டங்கள், விருதுகள், சிறப்புகள்

தருமபுர ஆதீனப்புலவர்	- தருமபுர ஆதீனம்
சைவசித்தாந்த வித்தகர்	- குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்
சித்தாந்த நன்மணி	- மதுரை ஆதீனம்
தொல்காப்பியச் செல்வர்	- தொண்டைமண்டல ஆதீனம் (முன்னாள் முத்து சு.மா. ஆதீனகர்த்தராக இருந்த காலம்)
செம்பொருட்செல்வர்	- அறநெறிக்கழகம், லால்குடி
முத்தமிழ் வித்தகர்	- சைவசித்தாந்தசபை, திருச்சிராப்பள்ளி
ரூ. 10,000/- பரிசும் பாராட்டும்	- சேக்கிழார் ஆய்வு நிறுவனம், சென்னை.

உண்மையிலேயே இவர் தொல்காப்பியச் செல்வர், திருக்குறட் செல்வர், திருமுறைச் செல்வர், சித்தாந்தச் செல்வர். இவற்றை முழுமையாகப் பதிப்பித்தவர், பாடஞ் சொன்னவர். முதுபெரும்புலவர் முத்து சு.மா. பின்னாளில் தொண்டமண்டல ஆதீனகர்த்தராக விளங்கிய காலத்தில் வழங்கிய தொல்காப்பியச் செல்வர் என்ற பட்டம், உண்மை யிலேயே அறிந்து சுவைத்து உணர்ந்து வழங்கிய பட்டம். "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்", "பாம்பின்கால் பாம்பறியும்" என்பதற்கேற்ப வழங்கப்பெற்ற பட்டம்.

தருமையாதீனத்திற்கும், திருப்பனந்தாள் காசிமடத்திற்கும் இவர் அன்றும் புலவர், இன்றும் புலவர், என்றும் புலவ்ர்; வாழ்நாட் புலவர்.

இன்றைய தருமபுர ஆதீன 26-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், தருமபுர ஆதீனத்தில் 'அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தை 1984-இல் நிறுவியருளியபோது சுந்தரமூர்த்தி அவர்களைத்தான் ஆராய்ச்சிப் பேராசிரியராக நியமித்த ருளினார்கள். தொடக்க காலம் முதல் இன்றுவரை இவ்விருபத்தைந்தாண்டுகளாக, ஒரு வெள்ளிவிழாக்காலம் ஆராய்ச்சிப் பேராசிரியர் பணியை (பதவியை) அணிசெய்து (அலங்கரித்து) வருபவர் இம்மூதறிஞர்.

சொற்பொழிவு என்ற வகையில் இவரைவிட அதிக எண்ணிக்கையில் சொற்பொழிவாற்றியவர் இவர் ஒருவரைத் தவிர வேறுயாரும் இலர். தனிச்சொற்பொழிவுகளும் தொடர் சொற்பொழிவுகளுமாக ஆண்டுக்கணக்கில் பல்வேறு ஊர் களில் அமைப்புகளில் மாதந்தோறும் இன்ன கிழமைகள் என்று அமைத்துக்கொண்டு, போக்குவரத்து முதலிய பல்வேறு இன்னல்களையும் பாராது, வயது முதிர்ந்த காலத்திலும் அலைந்து திரிந்து சொற்பொழிவுப் பேராறாய்த் திகழ்ந்தவர் இவர். (அகவை முதிர்ச்சியால் இப்போது சற்று ஓய்வு என்று எண்ணுகிறோம்).

சொற்பொழிவுக் கூட்டத்தில் எதிரே இருப்பவர்களைப் பார்க்க ஒரு கண்ணாடி, மேசையின்மீது இருக்கும் திருமுறை நூலைப்படிக்க ஒரு கண்ணாடி (இது மிகவும் கனத்த கண்ணாடி - மேக்சிமம் பவர் கிளாஸ்) என்று இரண்டு கண்ணாடிகளை மாற்றி மாற்றி அணிந்து கொள்ள வேண்டிய நிலைக்கு எழுத்து, படிப்பு, அச்சு, புரூப் பார்க்கும் பணிகள் ஆளாக்கின. மிகக் கடும் உழைப்பு. பழைய காலத்துப் பண்டிதர். இக் கால இளைஞர் உலகினரைப் போன்று கற்ற கல்வியைக் காசாக்க அறியாதவர்.

தொண்டமண்டல ஆதீனகர்த்தராக இருக்க இவர்களை அழைத்தார்களாம். வயதுமுதிர்ந்த காலத்தில் துணைவியாருக்கு உதவியாக இருக்க இயலாதே, இல்லறக் கடமையாயிற்றே எனக்கருதி, மறுத்து விட்டாராம். "எம்மிடம் பணியாற்றி

வணங்கி நிற்கும் நீங்கள் ஆதீனகர்த்தரானால், எம்மால் வணங்கப் பெறும் நிலையை அடைவீர்கள், தகுதி மிகுதியும் உள்ளது, தயங்காது ஏற்றுக்கொள்ளுங்கள்'' என்று காசிமடத்து எஜமான் சுவாமிகளே கூறினார்களாம்.

முத்து. சு. மா. தொண்டமண்டல ஆதீனகர்த்தராகித் தமிழ்க் கடலாகவும் சைவக்கடலாகவும் விளங்கினார். அவ்வகையில் அவருக்கு அடுத்த நிலையில் இவர் (சுந்தரமூர்த்தி) கருதப் பெறுவார் ஆதீனகர்த்தராக ஆகியிருந்தால். ஆதீன குருமகா சந்நிதானமாக ஆகாதது சைவ உலகுக்குத்தான் நட்டம். இவர்களுக்கு நட்டமன்று.

ஆண்டாலும் அறிவாற்றலாலும் இவரினும் இளையர் பலர் கடல்கடந்த வெளிநாடுகளுக்குச் சென்று வரும் நிலையில் இவர்கள் இன்னும் வெளிநாடு செல்லும் வாய்ப்பு நேரவில்லையே என்ற ஒரு குறை இருந்துவந்தது, அதுவும் சில காலத்திற்குமுன் நிறைவாயிற்று. இலண்டன் மாநகரச் சைவமெய்யன்பர்களின் அன்பான அழைப்பை ஏற்று ஆசிரியரவர்கள் இலண்டன் மாநகர் சென்று 28 நாள்கள் இருந்து பற்பல கோயில்களில் உரையாற்றியும் இரண்டுநாள் சைவமாநாட்டிற் சொற்பெருக்காற்றியும் லண்டன் அன்பர்களை மகிழ்வித்துத் திரும்பினார்கள்.

இவர்களை அறிந்த காலந்தொட்டு, நமக்கு இவர்கள் மீது ஒரு நன்மதிப்பு உண்டு. 27.04.1990-இல் மயிலாடுதுறையில் நிகழ்ந்த மணிவிழாவில் மாலை வாழ்த்தரங்கம் எம்முடைய தலைமையில்தான் நிகழ்ந்தது. எமது தலைமை உரையை (எட்டுப்பக்கம்) அச்சிட்டு அவையோர் அனைவருக்கும் வழங்கினோம். பேச்சாகவும் எழுத்தாகவும் அமைந்த அத் தலைமையுரையில் வீறார்ந்த நடையில் வெளிப்படையாகப் பலவிடயங்களை விளம்பியுள்ளோம்.

மயிலாடுதுறை செல்வோர், தருமபுரம் சாலையில் 135 எண்ணுள்ள ஆவினன்குடியகம் இல்லத்தில் பண்டிதரவர்களைக் கண்டு வணங்கியும் வாழ்த்துப்பெற்றும் மகிழலாம்.

''செந்தமிழ் வாரிதி''
முனைவர் **இரா. செல்வக்கணபதி**

திருவாரூர் மாவட்டம் காட்டூரில் 08.09.1940-இல் பிறந்தவர். தந்தையார் - இராசகோபால்பிள்ளை. தாயார் - பார்வதி அம்மாள். உடன்பிறந்தோர் சகோதரர் மூவர், சகோதரி நால்வர்.

திருவாரூரிலும் மயிலாடுதுறையிலும் கல்வி கற்று வித்துவான் (தமிழ்), எம்.ஏ (தமிழ்), பி.எட் (கல்வியியல்), பி.எச்.டி(ஆய்வு)ப் பட்டங்களைப் பெற்றவர். வித்துவான் தேர்வில் மாநிலத்திலேயே முதல்வராகத் தேர்ச்சி பெற்று திருப்பனந்தாள் காசிமடத்து 1000 ரூபாய் தமிழ்ப்பரிசை அந்நாளிலேயே பெற்றவர் (1965).

தருமபுரம் ஆதீனம் தமிழ்க்கல்லூரியில் 31 ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகவும், துறைத்தலைவராகவும், முதல்வராகவும் சிறப்பாகப் பணியாற்றியவர்.

தருமபுர ஆதீன வித்துவான் என்னும் சிறப்புப் பெற்றவர். இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் கயிலைக் குருமணி சுப்பிரமணிய தேசிகர், இன்றைய 26-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆகிய இரண்டு சந்நிதானங்களின் முழுமையான அன்பையும் ஆசிகளையும் பெற்றுச் சிறந்தவர்.

''தருமபுர ஆதீனமும் தமிழும்'' என்பது இவரது முனைவர் (டாக்டர்) பட்ட ஆய்வுத்தலைப்பு. ''தமிழ் வளர்க்கும் தருமபுரம்'' என்று அது நூலாகவும் வெளிவந்தது. தருமபுர ஆதீனத்திற்கு ஒரு சிறந்த அணிகலன்.

தமிழ் வளர்க்கும் தருமபுரம், நீறுபூத்த நெருப்பு மலர்கள், விடை தேடும் வினாக்கள், தமிழ் இலக்கியங்களில் சில புதிய பார்வைகள், கம்பனில் பெண்ணியம் முதலிய 12 நூல் களை எழுதியுள்ளார். எல்லாமே சிந்தனையைத் தூண்டும் நூல்கள். விடைதேடும் வினாக்கள், புதிய பார்வைகள்

போன்ற தலைப்புகளே அவற்றின் உட்பொருளின் ஆழத்தைக் காட்டும். இவரது நூல்கள் எமக்குப் பிடித்தமானவை. இப்படிப்பட்ட புதிய சிந்தனைகள்தான் இன்றைய தேவை. மூத்த பழைய தலைமுறைக்கும் இன்றைய இளைய புதிய தலைமுறைக்கும் இவர் பாலமாக விளங்குபவர்.

செந்தமிழ்வாரிதி (யாழ்ப்பாணம்), செழுஞ்சொல் வித்தகர் (திருவாவடுதுறை), தமிழாகரர் (குன்றக்குடி), சிவஞானக் கலாநிதி (லண்டன்), கலைமாமணி (தமிழகஅரசு) உட்பட இவர் பெற்ற பட்டங்களின் எண்ணிக்கை இதுவரை பதினாறு. பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழும் இவர் இன்னும் பற்பல பட்டங்களையும் பெறுவார்.

தமிழ்நாடு, இந்திய மாநிலங்கள், கீழை மேலை நாடு களில் 1965 முதல் இன்று வரை இவர் ஆற்றிய சமய-இலக்கியச் சொற்பொழிவுகள் சற்றேறத்தாழ 3500.

பணி ஓய்வுக்குப்பின் மயிலாடுதுறையிலிருந்து இவர் சென்னைக்குக் குடிபெயர்ந்தார். சென்னைவாழ் சைவத் தமிழ்ப் பெருமக்களுக்கும் உலகத் தமிழர்களுக்கும் ஒரு நல்ல காலம். தருமபுரம் பேராசிரியர் தருமமிகு சென்னையில் பெரும் பேராசிரியராய் உலகப்புகழ்ப் பேராசிரியராய்த் திகழ்கிறார்.

செல்வகணபதியார் சென்னையை வாழ்விடமாகக் கொண்டதில் எமக்குப் பெருமகிழ்ச்சி. இவரது அரும்பெரும் பணிகளால் சென்னை பெருமையுறுகிறது.

சென்னையில், **"தெய்வச் சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை"** என்றொரு அறக்கட்டளையை நிறுவி அரிய பெரிய பணிகளைத் தொடங்கிச் செய்துவருகிறார். அறக் கட்டளையின் பெயரில் ''மனிதவள மேம்பாடு'' என்பதைச் சேர்த்ததுதான் ஒரு தனிச்சிறப்பு, ஒரு புதிய பார்வை. இந்திய நாட்டின் இன்றைய தேவை மனிதவள மேம்பாடுதான். நடுவணரசு அப்பெயரில் ஒரு துறையையே ஏற்படுத்திச் செயற் படுத்துகிறது. நம் செல்வகணபதியார் தெய்வச் சேக்கிழாரின் பெயரால், சேக்கிழார் அடிப்படையில் மனிதவளமேம்பாட்டுக்கு

ஓர் அறக்கட்டளையே நிறுவி, சேக்கிழார் எல்லாவற்றினும் பெரிய பெரியபுராணத்தைச் செய்ததுபோல, செல்வகணபதியும் பெரிய பெரிய பணிகளைத் தொடங்கியுள்ளார், எல்லாம் காலத்திற்கேற்ற புதியவகை அறிவுப் பணிகள்.

அறக்கட்டளை வாயிலாகப் பெரியபுராண ஒலிக் களஞ்சியம் (63 நாயன்மார்கள் வரலாறு முழுவதும் : 52 மணிநேரம்), திருமந்திரப் பேருரை (20 மணி), பன்னிரு திருமுறைகள் ஒலிக்களஞ்சியம் (30 மணி), கோளறு திருப்பதிகம் (2 மணி), ஆறுமுக நாவலர் வாழ்வும் வாக்கும் (3 மணி) முதலிய ஒலிப்பேழைகளையும், ஒலிக்குறுந்தகடு களையும் வெளியிட்டுள்ளார். தமிழகத்திற்கு வெளியே உலக நாடுகள் பலவற்றிலும் உலகத்தமிழரிடையே இவை பரவி வருகின்றன. சைவத்தமிழுக்குப் பெரியதோர் ஆக்கப்பணி.

தற்போது இவர் ஆற்றிவரும் பணி எல்லாவற்றினும் மிகப் பெரிய பணி, **சைவசமயக் களஞ்சியம்** தயாரிப்பு. பல்கலைக்கழகம் போன்ற ஒரு பெருநிறுவனம் செய்வதற் குரிய பெரும்பணி. ஓய்வுபெற்ற தமிழ்ப்பேராசிரியர் தனி ஒருவராய் அறக்கட்டளை நிறுவிச் செய்து வருகிறார்.

சைவசமயக் கலைக்களஞ்சியம் 9 தொகுதிகள் கொண்டதாக அமையும்.

1. சைவ சமயம் - தமிழகம்
2. சைவ சமயம் - உலகம் (தமிழகம் நீங்கலாக)
3. சைவத் திருமுறைகள் -
4. திருமுறைத்தலங்கள் -
5. பிற்காலத்தலங்கள் - திருமுறைத்தலங்கள் நீங்கலாக
6. சைவ சமய அருளாளர்கள் - அறுபத்துமூவர் மற்றும் திருவருட்செல்வர்கள் வரலாறுகள் மட்டும்

7. சைவ-சமய நூல்கள் - திருமுறைகள் அல்லாத பிற அருள்நூல்கள் அனைத்தும்
8. சைவ சித்தாந்தம் -
9. சைவ அமைப்புகள் - திருமடங்கள், சைவ மன்றங்கள் சைவத் தொண்டர்கள்.

9 தொகுதிகளும் ஏறத்தாழ 5500 பக்கங்கள், 26 ஆயிரம் செய்திகளைக் கொண்ட பல்வண்ண நூல்களாக உருவாக்கி வருகிறார். தோரணவாயில் உட்பட 10 தொகுதிகளாய் 2010 செப்டம்பரில் வெளியிடத் திட்டமிட்டு அதற்குரிய பணி களைச் செய்து வருகிறார்.

செப்டம்பர் 2010-இல் செல்வகணபதியாருக்கு அகவை 70 நிறைவுறும். 70 நிறைவு முத்துவிழாவில் இப்பணி முத்தாய்ப்பாக விளங்க வேண்டும் என்பது எம் வாழ்த்து. இப்பணியில் யாம் ஆலோசகருள் ஒருவராகவும், 9-ஆம் தொகுதித் துணைஆசிரியர்களில் ஒருவராகவும் உள்ளோம்.

தமிழக அரசின் பலவேறு உயர்மட்டக் குழுக்களில் நம் பேராசிரியப் பெருமான் அங்கம் வகித்து வருகிறார். சென்னை வாழ்வால் தமிழக அரசுக்கும் பயன். சைவ உலகில் இந்த நூற்றாண்டின் சாதனை மனிதர் இவர்.

தொடர்பு முகவரி :

செந்தமிழ் வாரிதி இரா. செல்வக்கணபதி அவர்கள்
தெய்வச் சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை
(Saint Sekkizhaar Human Resource Development Charitable Trust)
H.15/2, கரிகாலன் தெரு, கலாசேத்திரா காலனி
பெசண்ட் நகர், சென்னை - 600 090
தொலைபேசி : 0091-44-24916888

நாவரசர், தமிழருவி
டாக்டர் மு. சிவச்சந்திரன்

சைவத் தமிழறிஞர்களில் முதுபேரறிஞர் கு. சுந்தரமூர்த்தி பேராசிரியர் இரா. செல்வக்கணபதி ஆகியோருக்கு அடுத்த நிலையில் மூன்றாமவராக இன்று பேரோடும் புகழோடும் விளங்கி வருபவர் டாக்டர். மு. சிவச்சந்திரன்.

முன் இருவரைப் போன்றே இவரும் நமக்குப் பிடித்த மானவர். அறிஞர்களில் இராமச்சந்திரன்கள் பலர், ஆனால் சிவச்சந்திரப் பெயர் கொண்டவராய் இவர் ஒருவரே ஒருவர் தான் இருக்கிறார். பெற்றோர் நல்ல பெயராக வைத்திருக் கிறார்கள். இன்னொன்றும் நமக்குப் பிடித்தது. இவர் சுந்தரமூர்த்தி அவர்களின் சொந்த மருமகன். சுந்தரமூர்த்தி அவர்களை நன்மாமனாராகப் பெற்றபேறு போலும் இவரும் அவர் வழியில் சைவத்தமிழறிஞராக விளங்குவது. மருமக்கள் தாயம் என்று யாம் நகைச்சுவையாகக்கூறி மகிழ்வதுண்டு. மாமனாரையும் மருமகனாரையும் ஒரே மேடையிற் காணும் போது கண்ணேறு (கண்திருட்டி) பட்டுவிடப் `போகிறது என்று கூறுவதுண்டு.

சிவச்சந்திரன் பிறந்தநாள் 08.01.1950. பிறந்தஊர் - திருச்சிராப்பள்ளி மாவட்டம் அருங்கால் என்னும் சிற்றூர். பெற்றோர் - முத்தையா முதலியார், பர்வதவர்த்தினி அம்மையார். வித்துவான், எம்.ஏ., பி.எச்டி., என்பவை இவரது கல்வித் தகுதிகள். ''சமய மொழிவளர்ச்சியில் காசிமடத்தின் பங்கு'' என்பது இவரது டாக்டர் பட்ட ஆய்வுத் தலைப்பு. இவர் பயின்ற கல்லூரி திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி. பணியாற்றிய கல்லூரி தருமபுர ஆதீனம் கலைக்கல்லூரி. 35 ஆண்டுகள் பேராசிரியராக, தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிய காலத்திலேயே தருமையாதீனப் புலவராகவும் பணியாற்றிச் சிறந்தவர். தொடர்ந்து ஆதீனப்புலவராக விளங்கி வருபவர். சென்ற ஆண்டு 2007-இல் மதுரையில் நிகழ்ந்த நான்காவது உலக சைவ சித்தாந்த மாநாட்டிலும் ஒருங்கிணைப்

பாளராக்ச் சிறப்பாகப் பணியாற்றியவர். மாநாட்டு நிகழ்ச்சிகளைத் தொகுத்து தருமையாதீனத் திங்களிதழ் ஞானசம்பந்தத்தில் தொடர் கட்டுரைகளாக எழுதியவர்.

தருமை ஆதீனப் புலவர், சைவத் தமிழுரை நம்பி, இலக்கியச் செம்மல், சமய இலக்கியக் கலாநிதி, சிந்தனைச் செல்வர், செஞ்சொற்கொண்டல், நாயன்மார்சீர்பரவுவார், நாவரசர், தமிழருவி என்பன இவர் பெற்ற பட்டங்கள்.

தொடர்சொற்பொழிவு, பட்டிமன்ற நடுவர், வழக்காடு மன்றம், சுழலும் சொல்லரங்கம், வினாவிடை அரங்கம், சிந்தனைமேடை ஆகியவற்றை இலக்கிய உத்திகளாகக் கொண்டு - பன்னிருதிருமுறைகள் - பதினான்கு சாத்திரங்கள் - பெரிய புராணம் - கம்பராமாயணம் - கந்தபுராணம் - திருவிளையாடற்புராணம் - வில்லிபாரதம் - சங்க இலக்கியங்கள் - திருக்குறள் - பாரதியார் கவிதைகள் முதலியவற்றில் நாடு முழுவதும் பரவலாகச் சொற்பொழிவுப் பணியைச் சிறப்பாகச் செய்துவருகிறார்.

மதுரைத் திருவள்ளுவர் கழகம், திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம், டெல்லி தமிழ்ச்சங்கம், காரைக்கால் சேக்கிழார் பன்னிரு திருமுறை மன்றம், பாண்டிச்சேரி சித்தாந்த சைவத் திருத்தொண்டு மன்றம், சென்னை இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை, ஆஸ்திக சமாஜம், அன்ன தான சமாஜம் (பெரம்பூர்), தமிழ்ஞானப் பேரவை, (பெரம்பூர்), சின்மயா இயக்கம், (அயன்புரம் சேத்துப்பட்டு) முதலியன இவர் தொடர்சொற்பொழிவாற்றிய இடங்களில் சில.

2004-இல் சிங்கப்பூர் மலேசியா ஆகிய நாடுகளுக்குச் சென்று பன்னிருதிருமுறை சைவசித்தாந்தம் காப்பியங்கள் கந்தபுராணம் பெரியபுராணம் முதலிய தலைப்புகளில் உரையாற்றியுள்ளார். வகுப்புகளும் நடத்தியுள்ளார். 2006-இல் இலண்டன் மாநகருக்குச் சென்று ஒருமாதம் தங்கிச் சொற்பொழி வாற்றித் திரும்பினார்.

உழவாரம் இயக்கம், டாக்டர் உ.வே.சா. தமிழ்ப்பேரவை, (மயிலாடுதுறை) முதலியவற்றின் தலைவராக இருந்து,

அவற்றின் வழிப் பல்வேறு சமய சமுதாயப் பணிகளை ஆற்றி வருகிறார்.

வானொலியிலும், சன், பொதிகை, ஜெயா தொலைக் காட்சிகளிலும் உரையாற்றிய அனுபவமும் உடையவர்.

ஏராளமான கட்டுரைகளை எழுதியுள்ளார். தருமபுர ஆதீனத் திங்களிதழ் ஞானசம்பந்தத்தில் தொடர்ந்து எழுதி வருகிறார். சென்னையில் ''அரனருள்'' அமைப்பினர் அண்மை யில் சென்ற ஆண்டில் (2008-இல்) தொடங்கி நடத்திவரும் ''அரனருள்'' திங்களிதழுக்குச் சிறப்பாசிரியராக இருந்து பணியாற்றி வருகிறார். அதில் இவர் எழுதும் முதன்மைக் கட்டுரைகள் நன்றாக உள்ளன.

இவரது ஒரே நூல் ''புனிதராக்கும் போதமும் சித்தியும்'' என்பது சிவஞானபோதத்தையும் சிவஞானசித்தியாரையும் ஒருங்கே அறிய, ஒப்பிட்டு அறிய ஒரு சிறந்த நூல். எளிமையான உரையும் விளக்கமும் கொண்டநூல்.

தமிழ்ச்சைவ உலகில் பழைமைக்கும் புதுமைக்கும் இவர் ஒரு பாலம்.

சங்க இலக்கியம், திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள் போன்ற பழந்தமிழ் நூல்களின் கருத்துகளை, இன்றைய வாழ்வியல் நோக்கில் இணைத்துக் கூறும் இச்சிறந்த சொற்பொறிவாளரைச் சைவ அமைப்புகளும் தமிழ் அமைப்பு களும் தங்கள் நிகழ்ச்சிகளுக்கும், வகுப்பு, தொடர்சொற்பொழிவு முதலியவற்றுக்கும் அழைத்துப் பயன்பெறலாம்.

தொடர்பு முகவரி :

டாக்டர் மு. சிவச்சந்திரன், எம்.ஏ., பி.எச்டி., பி.எட்
49/97, தருமபுரம் சாலை
மயிலாடுதுறை - 609 001
தொலைபேசி : 04364 / 224863
அலைபேசி : 94439 85686

திருவாவடுதுறை ஆதீனப்புலவர்
சைவத் தமிழ் நாவலர்
கோடிபஞ்சாக்கரம் **தா.ம. வெள்ளைவாரணம்**

சைவத் தமிழுலகில் புகழ்பெற்ற வெள்ளைவாரணர்கள் இருவர். ஒருவர் புகழ்பெற்ற ''பன்னிருதிருமுறை வரலாறு'' நூலின் ஆசிரியர் வித்துவான். க. வெள்ளைவாரணனார். இன்னொருவர் இவர். தா.ம. வெள்ளைவாரணம்.

இவர் குடந்தையம்பதியில் கோதிலாச் சோழபுரம் சைவச் செட்டியார் மரபில் பிரபவ ஆவணி 21, 06.09.1927-இல் பிறந்தவர். இதுகாறும் கூறிய அனைவரினும் மூத்தபெருமகனார் இவரே.

பெற்றோர் தா. மகாலிங்கம் செட்டியார், ஜகதாம்பாள் அம்மையார். இவ்விணையருக்குத் திருமணமாகி ஆறு ஆண்டுகள் வரை மகப்பேறு வாய்க்காமையால், கும்பகோணத்திற்கு மேற்கே பாடல்பெற்ற சிவத்தலமாகவும் புகழ்பெற்ற விநாயகத் தலமாகவும் விளங்குகின்ற திருவலஞ்சுழியில் வெள்ளை விநாயகரைச் சங்கடஹரசதுர்த்தசி தோறும் ஒருவருடம் வழிபட்டு விரதமிருந்து பெற்ற பிள்ளைக்கு வெள்ளை விநாயகரின் பெயராகிய வெள்ளைவாரணம் என்ற பெயரையே சூட்டினர்.

கும்பகோணம் நகராட்சியின் தொடக்க நிலைப் பள்ளியில் தொடக்கநிலைக் கல்வியும், சிறியமலர் உயர்நிலைப் பள்ளியில் பதினோராம் வகுப்பு முடியவும் கற்றார்.

உயர்நிலைப்பள்ளி மாணவராக இருந்தபோதே கும்பகோணம் பி.டி.எஸ். குமாரசாமி செட்டியாரிடமும் திருவாவடுதுறை ஆதீனப் புலவர் குடந்தை த. ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடமும் முறையே பெரியபுராணம் திருவிளையாடற் புராணங்களைப் பாடங் கேட்டார்.

திருப்பனந்தாள் காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரியில் சேர்ந்து நான்காண்டுகள் பயின்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் வித்துவான் தேர்வு எழுதி முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார் (1950). அக்காலத்தில் கல்லூரி முதல்வராக இருந்தவர் திரு. கா. ம. வேங்கடராமையா அவர்களாவார். வித்துவான் ச. தண்டபாணி தேசிகரும் பண்டித வித்துவான் தி.வே. கோபாலையரும் இவரது பேராசிரியர்கள்.

வித்துவான் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றதால் முதல்வர் கே.எம். வேங்கடராமையா அவர்கள் பரிந்துரையின் பேரில், தாம் படித்த திருப்பனந்தாள் கல்லூரியிலேயே ஆசிரியராக அமர்த்தப் பெற்றார். 1950 முதல் 36 ஆண்டுகள் தொடர்ந்து பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

திருப்பனந்தாள் கல்லூரியில் பாடங்கற்பிக்கும் காலத்தில் மாணவர்கள் இலக்கண பாடங்களை எளிதாகத் தெரிந்து கொள்ளுவதற்காக இலக்கண வினாவிடைகளை வெளியிட்டார். தொல்காப்பியம், நன்னூல், நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பா மாலை, தண்டியலங்காரம், யாப்பருங்கலக்காரிகை வினாவிடைகள் இவ்வாறு வெளிவந்தன.

மாணவர்களில் கவிதை எழுத விரும்புவோருக்காக வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமையில் யாப்பு வகுப்பு எனத் தனிவகுப்புகளை நடத்தினார். இதனால் பலர் கவிதை எழுதும் திறம் பெற்றனர். அவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர். ம. வே. பசுபதி ஆவார் (கா.ம. வேங்கடராமையா அவர்களின் திருமகனார். பின்பு, திருப்பனந்தாள் கல்லூரியின் முதல்வ ராகவும் விளங்கியவர். இப்போது சென்னையில் டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகத்தின் காப்பாட்சியராக விளங்குபவர்)

மாணவர்களில் சமயப்பற்றுக் கொண்டவர்களைத் திரட்டி, திருப்பனந்தாள் தாடகையீச்சுரம் கோயிலில் வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் வாரவழிபாடு நடத்தினார். அவ்வச் சந்நிதிகளில் உரிய பாடல்களை இசையோடு பாடப் பயிற்சியளித்தார். வாரம்தோறும் ஒரு மாணவரைச் சமயச்

சொற்பொழிவாற்றச் செய்தும் பழக்குவித்து சொற்பொழிவுத் திறத்தை வளர்த்தார். ஆண்டு நிறைவில் வாரவழிபாட்டு மாணவர்கள் அனைவருக்கும் சிறந்த சமய நூல்களை வாங்கி வழங்கினார். இப்படி இவரால் பழக்கப் பெற்றவர்கள் இன்றும் தத்தம் ஊர்களில் வாரவழிபாடு நடத்தி வருகிறார்கள். இவர் எழுதிய நூல்கள் 27 (இருபத்தேழு)

1. தேவாரம் பாடியவாறு அட்டவணை
2. நாகூர் நாகநாத சுவாமி ஆலயத்தலபுராணம் - உரைநடை ஆக்கம்
3. அபிராமி அந்தாதியும் பதிகங்களும் - உரையுடன்
4. திருப்பெருந்துறைத் தலவரலாறு.
5. கருவூர்த்தேவர் திருவிசைப்பாப் பதிகங்கள் - உரையுடன்.
6. ஆணைநமதே திருப்பதிகங்கள் - உரையுடன்
7. திருந்செந்தூர் அகவல் - உரையுடன்
8. திருந்துதேவன்குடித் தலவரலாறு
9. பெரியபுராணத்தால் அறியவரும் அடியார்களுக்கு அமுது செய்விக்கும் மரபுகள்
10. திருக்காளத்தித் தலவரலாறு
11. திருக்குடந்தைத் தலபுராணம் - உரையுடன்
12. ஹரதத்தர் வரலாறு.
13. மூவர் தேவாரப் பாடல்கள், பண்வழித் திரட்டு - உரையுடன்
14. தேவார அருள்முறைத்திரட்டு - உரையுடன்

என்பன அவற்றுட் சில.

இவர்களுக்கு வழங்கப் பெற்ற பட்டங்கள்

1. திருமுறைச்செம்மல் - மதுரை ஆதீனம் 1959
2. மதுரகவி - திருப்பனந்தாள் காசித்திருமடம் - 1960 (காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்)

3. பண்டித ரத்னா	-	ஆரோக்கியாசிரமம் மாம்பலம், சென்னை - 1969
4. சைவத்தமிழ் நாவலர்	-	மணிவாகச மன்றம் செம்பொன்னார்கோயில் 1997
5. சைவத்தமிழ்மணி	-	திருப்பனந்தாள் காசித்திருமடம் (காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்) 1998
6. திருவாவடுதுறை ஆதீனப் புலவர்	-	திருவாவடுதுறை ஆதீனம் 2003
7. தொல்காப்பியச்செம்மல்	-	தொல்காப்பிய ஆய்வு மாநாடு 2004
8. சைவத் தமிழ் அறிஞர்	-	திருச்சிராப்பள்ளி திருமுறை மன்றம் - 2005
9. சைவத் தமிழ்ச் சீராளர்	-	திருவாவடுதுறை ஆதீனம் - 2006
10. கோடிபஞ்சாக்கரம்	-	மணிவாசக மன்றம் செம்பொன்னார்கோயில் - 2007

ஆதீனங்களில் பெரியதும் முதலில் வைத்தெண்ணப் பெறுவதுமான திருவாவடுதுறை ஆதீனம் (இன்றைய குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்) இவர்களைத் தமது ஆதீனப் புலவராக ஆக்கி அருளியிருக்கிறார்கள். 2003-ஆம் ஆண்டு முதல் இவர்கள் திருவாவடுதுறை ஆதீனப்புலவராக விளங்கி வருகிறார்கள்.

கோடிபஞ்சாக்கரம்

நாள்தோறும் 10,000 உருவீதம் 1000 நாள்களில் (29.02.2000 - 24.11.2002) சூக்குும பஞ்சாக்கர மந்திரத்தை ஒரு கோடிமுறை உருவேற்றி நிறைவு செய்த இவர்களைப்

பாராட்டிச் செம்பொன்னார்கோயில் மணிவாசக மன்றத்தினர் ''கோடி பஞ்சாக்கரம்'' என்னும் பட்டத்தை இவர்களுக்குச் சூட்டிச் சிறப்பித்துள்ளனர்.

திருவாவடுதுறை ஆதீனப் புலவர் கோடிபஞ்சாக்கரம் தா.ம. வெள்ளைவாரணார் அவர்களது 80-ஆம் அகவை நிறைவு முத்துவிழா 24.08.2007-இல் கும்பகோணம் அறுபத்து மூவர் திருமண மண்டபத்தில் சிறப்புற நிகழ்ந்தது.

சிதம்பரம், சீர்காழி, கும்பகோணம், திருவாரூர், செம்பொன்னார்கோயில் முதலிய தலங்களில் பேராசிரியர் அவர்கள் தொடர்சொற்பொழிவுகளும் வகுப்புகளும் நடத்தி வருகிறார்கள். இதுவே இவர்களது இன்றைய பணி. முதிர்ந்த வயதிலும் இப்பணியைக் குன்றாது செய்து வருகிறார்கள்.

இன்று நம்மிடையே சிறந்து விளங்கும் சைவத் தமிழறிஞர்கள் என்ற இவ்வரிசையில் கு. சுந்தரமூர்த்தி அவர்களை முதலில் வைத்து எழுதியுள்ளோம். ஒருவாறு புகழ் வரிசை அது. உண்மையில், அவரினும் அகவையால் மூத்தவர் இவரே. இப்பெருமகனாரிடம் சைவ மெய்யன்பர்கள் தங்கள் ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறலாம். இவர் களைப் போன்றவர்களைக் கண்டு (தரிசித்து) வணங்கி வாழ்த்துப் பெறுவதே ஒரு புண்ணியமாம்.

நாகப்பட்டினம் மாவட்டம், பொறையாறு (P.O. 609 307) சிவன் தெற்குவீதி 18-ஆம் எண் இல்லம் இவர்கள் வாழ்வது. சைவத்தமிழ் வாழ்வது தமிழ்ச் சைவம் வாழ்வது.

சைவ சமய சம்பந்தமாக ஐயந்தெளிவதற்கு இச்சைவத் தமிழ்ப் பேராசானை நாடலாம். சிறந்த மூதறிஞர்.

தருமபுர ஆதீனப் புலவர்

புலவர் மு. வைத்தியநாதன்

திருச்சிராப்பள்ளி

பிறப்பு : 10.02.1941

பெற்றோர் : கிராமமணியம் பி.ச. முத்துகுமரப்பிள்ளை
திருநாவுக்கரசி அம்மாள்

திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் ''வித்துவான்'' பட்டக்கல்வி.

1959 - மாநிலத் தகுதியுடன் தேர்ச்சி.

திருச்சிராப்பள்ளி உருமு தனலெட்சுமி மேல்நிலைப் பள்ளியில் 40 ஆண்டுகள் தமிழ்ப்பணி.

பல நூல்களைப் பதிப்பித்தவர். பல நூல்களின் ஆசிரியர்.

பல மலர்களைத் தொகுத்து வெளியிட்டவர்.

ஆய்வுக் கட்டுரையாளர்.

தமிழ்-சமய, தொடர் விரிவுரையாளர்

மாலைநேரக் கல்லூரி வழியாகப் பல ''சித்தாந்த கலாநிதி'' களையும் ''சித்தாந்தப் புலவர்''களையும் உருவாக்கியவர்.

பல விருதுகளைப் பெற்றவர்.

பின்னாளில் தமிழ் எம்.ஏ. பட்டம் பெற்றவர்.

பல கருத்தரங்குகளை நடத்தியவர்

காஞ்சிமாமுனிவர் பீடமேறிய நூறாண்டு விழாவில் பொற்கிழி பெற்றவர்.

திரிசிரபுரச் சைவசித்தாந்த சபையின் செயலர்.

திருச்சிராப்பள்ளித் திருமுறை மன்றத்தின் செயலர்

உறையூர் வாகீச பக்த ஜனசபைச் சமரச சுத்த சன்மார்க்க சங்கம், திருத்தவத்துறை (லால்குடி) அறநெறிக்கழகம் முதலிய பல அமைப்புகளின் நெறியாளர்.

தருமபுர ஆதீனக் குருமூர்த்திகளின் 80 நிறைவு கனகாபிடேக விழாவில் ''தருமைஆதீனப் புலவர்'' விருது பொற் பதக்கத்துடன் பெற்றவர்.

மிகவும் அடக்க ஒழுக்கம் வாய்ந்தவர். அதிர்ந்து பேச மாட்டார். அதிர்ந்து நடக்க மாட்டார். ஆரவாரமின்றி அமைதி யாகப் பணி செய்பவர். பலர் முன்னுக்கு வருவதற்கும் புகழ் பெறுவதற்கும் இவர் மறைமுகக் காரணமாக இருந்தவர் இருப்பவர் என்பதை நாம் நேரில் அறிவோம்.

தாயுமானவரும் பிள்ளையவர்களும் வசித்த மலைக் கோட்டை தெற்கு வீதியில் இவர் சிலபல காலம் வசித்தார். அ.ச.ஞா. அவர்களும் சில காலம் அவ்வீதியில் வசித்ததுண்டு. அண்மைக்காலம் வரை அவ்வீதியில் வசித்த இவர் இப்போது காவிரிக்கரை அருகே சஞ்சீவி நகரில் சொந்தவீடு கட்டிக் கொண்டு வசிக்கிறார். தெருவின் பெயர் தாயுமானவர் தெரு என்று அமைந்ததும் திருவருள் அமைப்பு.

இவருக்கும் நமக்கும் முப்பது ஆண்டுகளுக்கு மேற் பட்ட நட்பு உண்டு. திருச்சிராப்பள்ளி ஜோதி பிரிண்டர்ஸ் அச்சகத்தில் நம் நூல்களும் பதிப்புகளும் அச்சான காலங்களில் இவர் மெய்ப்புத் திருத்தி உதவியவர். நாம் திருச்சிராப்பள்ளி சென்று தங்கும் சமயங்களிலெல்லாம் புலவரைக் காணவிரும்பி, அழைத்துப் பேசி மகிழ்வதுண்டு. சைவ ஆதீனங்கள் முதற் பதிப்பு 2002, இந்த இரண்டாம் பதிப்பு 2009, ஆக இரண்டு பதிப்புகளுக்குமே மெய்ப்புத் திருத்தி உதவியவர் நம் புலவர் மு.வை. அவர்கள்.

தருமபுரம், திருப்பனந்தாள் இவ்விரு இடங்களிலும் இவருக்கு ஒரு அந்தரங்க மதிப்பு உண்டு என்பதை நாம் நன்கு அறிவோம்.

சைவ சித்தாந்தப் பேராசிரியர் மு. சுந்தரேசம்பிள்ளை இவருடைய மூத்த தமையனார்.

தொடர்பு முகவரி :

புலவர் மு. வைத்தியநாதன் அவர்கள், எம்.ஏ.,
34, தாயுமானவர் தெரு
சஞ்சீவி நகர், திருச்சிராப்பள்ளி - 620 002
தொலைபேசி : 0431 - 2730367

தருமபுர ஆதீனப் புலவர்

புலவர் **தா. குருசாமி தேசிகர்**

மதுரை

ஓதுவார் தமிழ்ப்புலவர் என்னும் இருபெருந் தகுதிகளையும் உடைய இவர் மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலின் பரம்பரை ஓதுவாரும் தருமபுர ஆதீனப் புலவரும் ஆவார்.

ஓதுவார் மரபில் இவர் பதினெட்டாவது தலைமுறை.

தருமபுர ஆதீன நிறுவனரும் குருமுதல்வருமான குருஞானசம்பந்தரின் குரு கமலை ஞானப்பிரகாசர். கமலை ஞானப்பிரகாசரின் தங்கையார் சிவகாமி அம்மாளின் திருமகனார் அலங்கார ஓதுவார். விசுவநாத நாயக்கர் ஆட்சிக் காலத்தில் தளவாய் அரியநாயக முதலியாரின் அழைப்பின்படித் திருவாரூரிலிருந்து திருமுறைப் பணிக்காக மதுரைக் கோயிலுக்கு அழைத்து வரப்பெற்றுப் பணி செய்தவர். அலங்கார ஓதுவார் முதலாக இவரது பரம்பரை தொடங்குகிறது. மதுரைக்கோயில் பரம்பரை ஓதுவாராக இப்பரம்பரையினர் இன்றளவும் பணி செய்து வருகின்றனர்.

திருமலை நாயக்கர் ஆட்சிக்காலத்தில் ஓதுவாராக இருந்த தாண்டவமூர்த்தி ஓதுவாருக்கு, **செங்குளம்** என்ற கிராமத்தைச் சர்வமானியமாகச் செப்புப்பட்டயம் செய்து கொடுத்தார் திருமலைநாயக்கர். அதன்பின் அவ்வூர் ''**ஓதுவார் செங்குளம்**'' என்றே பெயர் பெற்றது. திருமலைநாயக்கர் வழங்கிய செப்புப்பட்டயம் இன்றும் நம் புலவர் தா. குருசாமிதேசிகர் அவர்களிடம் உள்ளது. இந்திய சுதந்திரத்திற்குப் பின் 1950-இல் ஜமீன் இனாம் ஒழிப்புச் சட்டத்தால் ஓதுவார் செங்குளம் மானிய கிராமம் இப்பரம்பரையார் கையை விட்டு அகன்றது. ஆயினும் அதற்குரிய நட்ட ஈட்டுத் தொகை இன்றும் இப்பரம்பரையார்க்கு உரிமையாக உள்ளது.

புலவர் குருசாமி தேசிகரின் தந்தையாரும் ஒரு தாண்டவமூர்த்தி ஓதுவார். ஆதலின் தா. குருசாமி தேசிகர் என இவருக்குப் பெயர்.

இவர் பிறந்த நாள் 14.02.1932. தந்தையாரிடமே திருமுறை ஓதுவார் பயிற்சியைப் பெற்றார். தருமபுரம் வேலாயுத ஓதுவாரிடமும் திருக்களர் சுந்தரேச தேசிகரிடமும் பயின்றார். புகழ்பெற்ற ஓதுவார் தருமபுரம் சுவாமிநாதன் அவர்கள் இவருக்குச் சிறிது முன்பு பயின்றவர். இவரையும் தம் ஒரு சாலை மாணாக்கர் என்று அன்புடன் கூறுவாராம். திருமுறை ஓதுவார் பயிற்சியுடன் கர்நாடக சங்கீதமும் பயின்றவர் நம் புலவர்.

குன்றக்குடி அடிகளார் குன்றக்குடியில் இளவரசாக இருந்த காலத்தில் இவர் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீன ஓதுவாராகச் சிலகாலம் பணியாற்றியும் இருக்கிறார்.

1965-இல் மதுரைக்கோயில் பரம்பரை ஓதுவாராகப் பணி ஏற்றார். இப்போது இவரது மகனார் மணிகண்ட ஓதுவார் மதுரைக் கோயிலில் பரம்பரை ஓதுவாராகப் பணியாற்றி வருகிறார். பேரனும் பணிசெய்ய வந்துவிட்டார். இவருடைய வீட்டில் இப்போது மூன்று தலைமுறை ஓதுவார்கள் இருக்கிறார்கள். பாட்டனாரான இவர் மூத்த தலைமுறை, மகன் மணிகண்ட ஓதுவார் இன்றைய தலைமுறை, பேரன் இளந் தலைமுறை. இவ்வாறு மதுரைக்கோயில் பரம்பரை ஓதுவார் பணி தொடர்கிறது.

ஓதுவார்கள் தமிழ்ப்புலவர்களாக இருப்பதும், தமிழ்ப் புலவர்கள் ஓதுவாராக இருப்பதும் அருமை, அரிது. எமக்குத் தெரிந்தவரை இவர் ஒருவரே, புலவர் பட்டம் பெற்ற தமிழாசிரியராகவும், திருக்கோயில் பரம்பரை ஓதுவாராகவும் இருக்கிறார்.

1950 முதல் 1954 வரை தருமபுர ஆதீனத் தமிழ்க் கல்லூரியில் தமிழ் பயின்று சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் (2D) தேர்வில் இரண்டாம் வகுப்பில் (IInd Class)

தேர்ச்சி பெற்றார். திருநெல்வேலி மதுரை மாவட்டங்களில் அரசுப் பள்ளிகளிலும், நிறைவாக மதுரை மாநகராட்சி உயர் பள்ளிகளிலும் 32 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றி நல்லாசிரியர் விருது பெற்று ஓய்வு பெற்றார்.

அகவை 75ஐக் கடந்து 77-ஆம் அகவையில் இருக்கும் இவர், ஓதுவாராகவும் தமிழ்ப்புலவராகவும் நீண்டகால அனுபவம் பெற்றவர். முந்தைய பழைய தலைமுறைச் செய்திகள் பலவற்றை இவர் வாயிலாக இன்று நாம் அறியலாம். தருமபுரம் 25-ஆவது சந்நிதானத்தை இவர் அறிந்தவர். இன்றைய 26-ஆம் சந்நிதானத்துக்கு அணுக்கர். முந்தைய குன்றக்குடி அடிகளாரிடம் பழகியவர். மதுரை ஆதீனத்திலும் சில காலம் பணி செய்தவர். அண்மையில் தருமபுர ஆதீன குருமகாசந்நிதானத்தின் சதாபிடேக விழா கனகாபிடேக விழாக்கள் நிகழ்ந்தபோது சந்நிதானம் இவருக்குத் ''தருமபுர ஆதீனப் புலவர்'' என்ற விருதை வழங்கியருளினார்கள்.

தருமபுர ஆதீனத்தின் மதுரைக் கிளை மடம் மதுரையில் வடக்கு மாசி வீதியில் உள்ளது. அதற்கும் இவர் பொறுப்பாளராக இருந்து பணி செய்து வருகிறார்.

செப்புப் பட்டயம் பெற்ற பரம்பரை ஓதுவார்
வித்துவான் பட்டம் பெற்ற தமிழ்ப்புலவர்
தமிழாசிரியராகப் பள்ளிகளில் பணியாற்றியவர்.
ஆதீனக் கிளைமடத்தின் கண்காணிப்பாளர்

ஆகிய நான்கு வகையில் இவர் பணி சிறப்பாக நடைபெற்று இன்றும் தொடர்கிறது.

இவர் ஆய்வு மனப்பான்மையும் ஆய்வு அறிவும் உடையவர். தான் பணியாற்றிய ஊர்களைப் பற்றியும் அவற்றின் பெயர்களைப் பற்றியும் ஆராய்ந்து சுவையான செய்திகளைக் கட்டுரைகளாக அவ்வப்போது வழங்கியுள்ளார். அவையனைத்தையும் தொகுத்து ''தமிழக ஊரும் பேரும்'' என்று ஒரு நூலாகவே 2007-இல் வெளியிட்டுள்ளார். நல்ல

நூல், வரலாற்றுச் செய்திகள், பலர் அறியாத செய்திகள், சுவையான செய்திகள் இதன்கண் பல உள.

ஞானசம்பந்தம், குமரகுருபரர், மக்கள் சிந்தனை, தத்துவப்பிரகாசம் முதலிய ஆதீன இதழ்களிலும் மதுரையிலிருந்து புலவர் நீ.சி. சுந்தரராமன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் உழவாரம் இதழிலும் தனிக்கட்டுரைகள் தொடர்கட்டுரைகள் எழுதி வருகிறார்.

தொடர்பு முகவரி

வித்துவான் தா. குருசாமி தேசிகர்
தருமபுரம் ஆதீனம் மடம்
397, வடக்கு மாசி வீதி
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 3951868

தருமபுர ஆதீனப் புலவர், சிவநெறிச்செம்மல்
புலவர் நீ. சீ. சுந்தரராமன்

தஞ்சாவூர் மாவட்டம் நீடாமங்கலம் இவரது பூர்விக ஊர். மதுரையில் மூன்று தலைமுறையாக வசித்து வரும் குடும்பம். பிறந்தநாள் 12.12.1935. திருவிடைமருதூரில் திருவாவடுதுறை ஆதீனப்பள்ளியில் படித்தவர். மயிலம் தமிழ்க் கல்லூரியிலும் பின்பு மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் செந்தமிழ்க் கல்லூரியிலும் பயின்று வித்துவான் பட்டம் பெற்றவர். மதுரையில் 33 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். குன்றக்குடி அடிகளார் தொடங்கிய அருள்நெறித்திருக்கூட்டத்தில் தொடக்ககாலத்திலிருந்தே தொண்டர். மதுரையில் பன்னிரு திருமுறை மன்றத்தின் செயலாளராகத் தொடர்ந்து 29 ஆண்டுகள் பணியாற்றி வருகிறார். ''உழவாரம்'' என்றொரு சமய இலக்கியத் திங்களிதழை 24 ஆண்டுகளாகத் தொய்வின்றி நடத்தி வருகிறார். சிறந்த சமயச் சொற்பொழிவாளர். ஒரு நல்ல தொண்டர். சிவநெறிச் செம்மல் என்பது மதுரை ஆதீனம் (முன்னாள்) சந்நிதானம் சோமசுந்தரதேசிக பரமாசாரிய சுவாமிகள் வழங்கிய பட்டம். அண்மையில் தருமபுரம் சந்நிதானத்தின் சதாபிடேக (கனகாபிடேக) விழாவில் தருமபுர ஆதீனப் புலவர் என்ற விருதை வழங்கப் பெற்றுள்ளார் (2006). இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக இவர் நமக்குப் பழக்கமானவர். நற்குண நற்செயல்கள் மிக்க நற்புலவர். ''கூடல் சுந்தரன்'', என்பது இவரது புனைபெயர்.

முகவரி

புலவர் நீ. சீ. சுந்தரராமன்
திருவருள்
I.G.II நிர்மல் அக்ரிணி வளாகம்
78, திருப்பரங்குன்றம் சாலை
(டி.பி.கே. சாலை)
மதுரை - 625 003
தொலைபேசி : (0452) 2300405

சைவத் தமிழ் ஆங்கிலப் பேரறிஞர்
சேக்கிழார் அடிப்பொடி
முதுமுனைவர் தி. ந. இராமச்சந்திரன்
(டி.என்.ஆர் - T.N.R)

டி.என்.ஆர். என்று மூன்று எழுத்துகளால் அன்பாக அழைக்கப்பெறும் இவர் இருப்பதால் தஞ்சாவூருக்கே ஒரு தனிப்பெருமை.

தி. ந. இராமச்சந்திரன் (திருநெய்த்தானம் நடராச ஐயர் இராமச்சந்திரன்) தஞ்சாவூர் மாவட்டம் திருநெய்த்தானத்தில் நடராச ஐயர் காமாட்சி அம்மாள் தம்பதியர்க்கு 18.08.1934 பவ ஆவணி அனுட நாளில் பிறந்தார். கோனேரிராஜபுரம் என்னும் திருநல்லத்தில் பாட்டி வீட்டில் பிறப்பு நிகழ்ந்து, திருநெய்த்தானம் சப்தஸ்தானத் தலங்களில் (எழூர்த் திருத்தலங்களில்) ஏழாவதானது. திருவையாற்றில் ஆண்டு தோறும் நிகழும் சப்தஸ்தான விழா (எழூர்த்திருவிழா) மிகவும் புகழ்பெற்றது. பழங்கால நடராசர் திருவுருவச் சிலைகளில் கோனேரிராஜபுரம் நடராசர்தான் உலகத்திலேயே பெரியது. கோனேரிராஜபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட டி.என்.ஆர். பின்னாளில் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்பவரானார்.

தந்தையார் நடராச ஐயர் வேளாண்மை, அரிசி அரைவை ஆலை, பேருந்துப் போக்குவரத்து என்ற மூன்று தொழில் களையும் நடத்தி வந்தார். டி.என்.ஆர் இளமையிலேயே கல்வியிற் சிறந்து விளங்கினார். பி.காம்., பி.எல்., பட்டம் பெற்று, சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டார் (09.08.1956). 13.9.1956-இல் திருமணம். தஞ்சையில் புகழ்பெற்ற குற்றவியல் வழக்கறிஞர் ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களின் மகள் கல்யாணி அம்மையார் வாழ்க்கைத் துணையானார். சம்பந்திகள் இருவருமே பெரிய மனிதர்கள். பெரிய இடங்களின் திருமணமாக இவர்

திருமணம் பல்வேறு சிறப்புகளுடன் நிகழ்ந்தது. பண்டித வித்துவான் தி. வே. கோபாலையர் இத்திருமணத்தையொட்டி ஒன்பது நாள்கள் கம்பராமாயணம் சொற்பொழிவாற்றினார்.

1967-இல் தந்தையார் காலமானார். அதன்பின் அரிசி ஆலை மோட்டார் போக்குவரத்து ஆகிய இரண்டையும் இவர் தவிர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முழுமையாக வழக்கறிஞர் தொழிலிலேயே ஈடுபடலானார். பின்னாளில் அதையும் படிப்படியாகக் குறைத்துக் கொண்டார். பின்பு அதையும் அறவே நிறுத்திக் கொண்டு, இப்போது முழுநேர சைவ ஆன்மிக அறிவுப் பணியாளராகத் திகழ்கிறார்.

திருமுறைகளிலும் சைவசித்தாந்தத்திலும் இவர் வல்லவர். திருவாசகத்தை இவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக் கிறார். சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கில் பத்து நூல் களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். இவரது ஆங்கிலப் புலமையை ஆங்கிலப் பேராசிரியர்களே வியந்து போற்றுகின்றனர். இவரது ஆங்கில மொழிபெயர்ப்புகள் மேலை நாடுகளிலும் மிகுபுகழ்பெற்றவை.

தமிழ்நாட்டிலுள்ள தனியார் நூலகங்களில் இவருடைய நூலகமே பெரியது. 40,000 (நாற்பதாயிரம்) நூல்களைச் சேகரித்து வைத்திருக்கிறார். அவற்றுட் பல இன்று கிடைத்தற்கரிய பழைமையான நூல்கள். அகராதிகள் மட்டும் ஐந்நூறுக்குமேல் இருக்கும். பாரதி நூல்கள் மட்டும் ஐந்நூறுக்குமேல் இருக்கும்.

சைவப் பேரறிஞராகத் திகழும் இவர் பாரதியிலும் அந்த அளவுக்குப் பேரறிஞராகத் திகழ்கிறார். "பாரதிக்கு இவர் ஒரு பரிமேலழகர்" என்று இவரைப் பற்றிச் சொல்லப் பெறுவது உண்மை. பாரதியாரின் குயில்பாட்டு தத்துவக்கருத்துகள் அடங்கிய அற்புதக்காவியம். இவர் அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்.

இவர் இதுவரை எழுதியுள்ள நூல்கள் 28. பதிப்பித்த நூல்கள் 6. வெளியிட்ட நூல்கள் 23. இது ஐந்தாண்டுகளுக்கு

முந்திய எண்ணிக்கை. அதன்பின் இவர் எழுதியவை வெளியிட்டவை, பதிப்பித்தவை பல. எல்லாம் சேர்ந்து அறுபதுக்கு மேல் ஆகும். எழுதியுள்ள கட்டுரைகள் ஏராளம்.

''கலாசம்ரக்ஷண சங்கம்'' என்று ஒரு அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம், இன்று கிடைக்கவே கிடைக்காத அரிய பழைய நூல்களை இவர் பதிப்பித்து வெளியிட்டு வருகிறார். காசிவாசி செந்திநாதையரின் ''தேவாரம் வேதசாரம்'', ''சிவஞானபோத வசனாலங்கார தீபம்'', சோளங்கிபுரம் சிவ. அருணகிரி முதலியாரின் ''விபூதி ருத்ராக்ஷ மஹத்வ விளக்கம்'', ''வேதோக்த சித்தாந்த விளக்கம்'', எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளையின் Ravana the great (இராவணா தி கிரேட்) முதலிய நூல்கள் அவ்வாறு வெளியிடப் பெற்றவை. சிறந்த வேதாந்தத் தமிழ் நூலாகிய கைவல்லிய நவநீதம் சார்லஸ்கிரால் என்பவருடைய ஆங்கில மொழிபெயர்ப்புடன் 1885-இல் இலண்டனில் வெளியிடப்பட்டது. 140 ஆண்டுகளுக்குப் பின் அதை இவர்தான் மறுபதிப்புச் செய்து வெளியிட்டார். இப்பணிதான் கலாசம்ரட்சண சங்கத்தின் முதற் பணி. இன்று இப்படிப்பட்ட பணிகளைச் செய்வதற்கு இவரை விட்டால் வேறு ஆள் இல்லை.

தருமபுர ஆதீனத்தில் 1984-இல் அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் தொடங்கப் பெற்றது. 1987-இல் இன்றைய சந்நிதானம் இவர்களைக் கௌரவ இயக்குனராக நியமித்தார்கள். இன்றளவும் அதன் மதிப்புறு இயக்குனராக இருந்து நன்கு நடத்தி வருகிறார்.

திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள் காசிமடம் ஆகிய மூன்றின் குருமகா சந்நிதானங்களையும் இவர் பெருமதிப்புக் கொண்டு போற்றி வருபவர். தருமபுர ஆதீனத்தைத் தம் அம்மையப்பர் என்றும் குரு என்றும் கூறிப் போற்றி வணங்கி வருபவர். மூன்று சந்நிதானங்களுமே இவரைப் பெரிதும் மதித்துப் பாராட்டு பவை. காஞ்சி காமகோடிப் பெரியவர்களும் இவருக்குச் சிறந்த மதிப்பளித்துப் பாராட்டியுள்ளார்.

''சைவ சித்தாந்த கலாநிதி'' என்பது தருமபுரம் சந்நிதானம் வழங்கிய விருது (1984). ''சித்தாந்த சைவச் செம்மணி'' விருது திருவாவடுதுறை ஆதீனம் வழங்கியது (2004). சென்னையிலுள்ள சேக்கிழார் ஆராய்ச்சி மையம் 1996-ஆம் ஆண்டில் ரூ. 10,000 (பத்தாயிரம்) பொற்கிழியும் சேக்கிழார் விருதும் வழங்கிப் பாராட்டியது. சென்னையில் அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் இயங்கிய பாரதியார் சங்கம் 2001-இல் மகாகவி பாரதி விருது வழங்கிச் சிறப்பித்தது.

தஞ்சைப் பெரிய கோயிலில் வாரம் ஒருநாள் சைவ சித்தாந்தச் சொற்பொழிவு, அமாவாசைதோறும் திருவையாற்றில் பெரியபுராண வகுப்பு, கார்த்திகைதோறும் தஞ்சை இராஜராஜ சமய சங்கத்தில் கந்தபுராண, பெரியபுராண வகுப்பு, தஞ்சை பிரம்மஞானசபையில் மாதம் ஒருநாள் சைவசித்தாந்த வகுப்பு, வீட்டிலேயே வாரம்தோறும் ஆங்கில வகுப்பு, ஷேக்ஸ்பியர் நாடக வகுப்பு, இவை இவரது தொடர் பணிகள்.

தஞ்சைப் பல்கலைக்கழகம் தொடங்கப் பெற்ற காலத்திலிருந்தே இவர் அதனோடு தொடர்புடையவர். நிர்வாகக் குழு முதலிய குழுக்களில் பல்கலைக்கழகம் இவரை உறுப்பினராக்கிக் கொண்டது. பல்கலைக்கழகத்தால் இவருக்கு கௌரவம் என்பதைவிட, இவராலும் பல்கலைக்கழகத்திற்கு ஒரு கௌரவம் என்றால் மிகையாகாது. தொடக்க காலத் துணைவேந்தர் வ.அய். சுப்பிரமணியம் அவர்கள் தொடங்கி இன்றைய துணைவேந்தர் வரை துணைவேந்தர்கள் அனைவருமே இவரது தொடர்பையும் நட்பையும் விரும்பிப் போற்றி வருபவர்கள்.

இவரைச் சுற்றி எப்போதும் ஒரு அறிஞர் கூட்டம் இருந்துகொண்டே இருக்கும். இவர் நடத்தும் சமய, ஆன்மிக வகுப்புகளுக்குத் தவறாமல் தொடர்ந்து வந்து கேட்டுப் பயன்பெறும் அறிஞர் கூட்டமே ஒன்று உண்டு. அவ்வளவு பேரும் அவரவர் துறையில் சிறந்த அறிஞர்கள், நிபுணர்கள். கல்லூரி, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பலர். ஓய்வு பெற்ற உயர் அதிகாரிகள் பலர்.

நாற்பது ஆண்டுகளுக்குமுன் திருச்சிராப்பள்ளியில் திருலோக சீதாராம் என்றொருவர் இருந்தார். உபநிடத வித்தகர். பாரதி பித்தர். தத்துவத் தமிழ்க்கவிஞர், சிறந்த சொற்பொழிவாளர். ''பொற்காசுப் புலவர்'', ''பொற்காசுக் கவிஞர்'' என்று அவரைச் சொல்வர். பவுன்காசு கொடுத்தால் தான் பேச வருவார். அந்நாளிலேயே அரைப்பவுன் ஒரு பவுன் வாங்கினார். ஒரு சமயம் ''தேவசபை'' என்றொரு சபையை அமைத்தார். அதில் திருச்சிராப்பள்ளி பேராசிரியர் எம்.எஸ். நாடார், ஜி. சி. பட்டாபிராமன், ஜி. வன்மீகநாதம் பிள்ளை, தஞ்சாவூர் பள்ளியகரம் நீ. கந்தசாமி பிள்ளை முதலியவர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். சேக்கிழார் அடிப்பொடியும் உறுப்பினரானார். திருலோக சீதாராமருக்கும் சேக்கிழார் அடிப்பொடிக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. தேவ சபையில் இவர் முக்கிய இடம் பெற்றார். திருலோக சீதாராமின் பாரதிபற்று இவரைப் பற்றிக் கொண்டது. நாம் பூர்வாசிரமத்தில் திருச்சிராப்பள்ளிவாசியாக இருந்த காலத்தில் திருலோகம் நமக்கும் பழக்கமானவர். திருலோகரும் சேக்கிழார் அடிப்பொடியும் கொண்ட நட்பால் இருவருமே பயன்பெற்றனர். நூற்கடல் பண்டித வித்வான் தி. வே. கோபாலையரவர்கள் திருலோக சீதாராமின் தேவசபையில் உறுப்பினராக இருந்தார். தேவசபை உறுப்பினர்கள் வாழ்நாளிலேயே அமரர்களாக விளங்கியவர்கள். உண்மையிலேயே தேவர்கள்.

டி.என்.ஆர். பிறப்பால் வேதாந்தி. வாழ்வால் சித்தாந்தி. இவர் வழிபடும் தெய்வம் சேக்கிழார். கம்பனடிப்பொடி கம்பனை வழிபட்டதுபோல இவர் சேக்கிழாரை வழிபடு பவரானார். ''சேக்கிழார் அடிப்பொடி''யானார்.

தருமபுர ஆதீனம் இன்றைய குருமகாசந்நிதானம் இவருக்கு ''அம்மையப்பர்.''

ஒருசமயம் நண்பர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்த போது, ''அடுத்த பிறவியில் நீங்கள் எந்தக் குடியில் பிறக்க விரும்புவீர்கள்'' என்று நண்பரைக் கேட்டார். ''இறைவனைத் திருமேனி தீண்டிப் பூசை செய்யும் சிவாசாரியர் குடியிற்

பிறக்க விரும்புவேன்'' என்று அவர் பதில் கூறினார். பின்பு அவர் அதே கேள்வியை இவரைக் கேட்டார். ''தமிழ்ச் சைவத்துக் குரிய வேளாளர் குடியிற் பிறக்க விரும்புவேன்'' என்று இவர் பதில் கூறினார். இதுதான் டி.என்.ஆர். சாதிஅந்தணர் சைவ வேளாளராகப் பிறக்க விரும்புகிறார். இவரன்றோ உண்மை அந்தணர். திருலோகசீதாராம், தி. வே. கோபாலையர், டி.என்.ஆர். ஆகியோர் இப்படிப்பட்ட அந்தணர்கள்.

''சம்ஸ்கிருதம் தேவ பாஷைதான், ஆனால் தமிழோ மகாதேவபாஷை'' என்று இவர் சொல்லுகிறார். பல இடங் களில் இதை அழுத்தந்திருத்தமாக எழுதியிருக்கிறார். பெரிய புராணம் திருமுறைகளின் கவசம் என்ற நூல் ஓர் இடம். இந் நூல் நமக்கு மிகவும் பிடித்தமான நூல். (உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு 2005) ஐந்தாவது உலக சேக்கிழார் மாநாட்டுக்கு யாம் இலங்கை சென்றிருந்தபோது இந்நூலின் படிகள் சில வாங்கிச் சென்று இலங்கை அன்பர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினோம்.

இளமையிலிருந்தே எமக்குப் பாரதியில் ஈடுபாடுண்டு. இவரது பாரதி ஈடுபாடு எம்மைக் கவர்கிறது. ''வழிவழி பாரதி'', ''பாரதி பற்றிய எதிர்கால ஆய்வுகள்'' என்ற இவரது நூல்கள் நாம் படித்து மகிழ்ந்த நல்ல நூல்கள்.

சைவராகிய இவருக்கு வைணவத்திலும் புலமையுண்டு. சைவர் பலரிடத்தில் வைணவக் காழ்ப்பைக் காண்கிறோம். சைவம் வைணவம் என்ற இரண்டிலும் ஈடுபாடுடையவர்கள் மிகச்சிலரே. சைவப்புலவர்கள் வைணவப் புலமையும் உடையராயிருப்பது அருமை. கோபாலையரும் இவரும் அப்படிப்பட்டவர்கள். எமக்கு வைணவத்துவேஷம் இல்லை. யாம் வைணவத்தையும் ஏற்ற பெற்றிப் போற்றுவதுண்டு.

சுருங்கக் கூறினால் டி.என்.ஆர். ஒரு ''நடமாடும் கலைக் களஞ்சியம்''. டாக்டர் பிரேமாநந்தகுமார் இப்படிக் கூறி யிருப்பது உண்மை.

இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (University of Jaffna, Srilanka) 06.10.2001-இல் இவருக்கு முதுமுனைவர் (Doctor of Letters - D.Litt) பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

இவரது யாழ்ப்பாண விஜயம் ஒரு வெற்றிப் பயணம். யாழ் பல்கலைக்கழகத்தில் இவர் ''பெரியபுராணத்தில் சமுதாய சிந்தனைகள்'' என்ற தலைப்பில் பேருரையாற்றினார். முதுமுனைவர் (டாக்டர்) பட்டம் வழங்கப் பெற்றார். ஆறுமுக நாவலர் பிறந்த ஊரில் பிறந்த இடத்தில் அமைந்துள்ள சபையில் ''ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் பெருவாழ்வு'' என்ற தலைப்பில் உரையாற்றினார். நாவலர் பிறந்த நல்லூர்ச் சிவன்கோயிலில் ''அருட்பெருஞ்சோதி'' என்ற தலைப்பில் உரையாற்றினார்.

நாவலருக்கும் வள்ளலாருக்கும் இடையே கருத்து வேறுபாடும் வழக்கும் நிலவியதைக் குறிப்பிட்டு அன்பர்கள் சிலர் வருத்தம் தெரிவித்தபோது, இவர் அவர்களைச் சமாதானப்படுத்தினார். ''பெரியவர்களின் கருத்து வேற்றுமை நம்மை பாதிக்கக்கூடாது. அறுபத்து மூன்று நாயன்மார்களில் சுந்தரருக்கும் ஏயர்கோன் கலிக்காமருக்கும் கருத்து வேற்றுமை உண்டு. ஆனால் இருவருமே நாயன்மார்கள் தாம். அவர்களுடைய பெருமைக்குக் குறைவில்லை. ஆகவே பெரியவர்களின் கருத்து வேற்றுமை தொண்டர்களை பாதிக்கக்கூடாது'' என்று டி.என்.ஆர் விளக்கமளித்தார். அன்பர்கள் உண்மை விளக்கம் பெற்றனர்.

அறிஞராகவும், ஆய்வாளராகவும், சிறந்த சிந்தனையாளராகவும், விமர்சகராகவும், தத்துவவாதியாகவும், மொழிபெயர்ப்பாளராகவும், பதிப்பாசிரியராகவும் பல்வேறு நிலைகளில் இந்த 75-ஆம் அகவையிலும் தேனீ போன்று சுறுசுறுப்போடு படிப்பதும், எழுதுவதும் சொற்பொழிவாற்றுவதுமாக இருக்கும் இவரைப்பற்றி இன்னும் எவ்வளவோ எழுதலாம். ஒரு நூலே எழுதலாம். எழுதியிருக்கிறார் அறிஞர் இரா. சுப்பராயலு. ''சேக்கிழார் அடிப்பொடி'' என்றே அதற்குப் பெயர்.

டி.என்.ஆர். அவர்களின் வாழ்வையும் பணிகளையும் கூறும் 141 பக்க நூல்.

இவரது 76-ஆம் பிறந்த நாள் விழாவும் ''சேக்கிழார் அடிப்பொடி முதுமுனைவர் தி. நா. இராமச்சந்திரன் சைவ சமய அறக்கட்டளை'' தொடக்கவிழாவும், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தத்துவ மையத்தில் இரண்டு நாள் கருத்தரங்கமாக 12,13.09.2009 சனி, ஞாயிறு கிழமைகளில் சிறப்புற நிகழ்ந்தன. நூல்கள் பல வெளியிடப் பெற்றன. ஆய்வறிஞர்கள் பலர் ஆய்வுரை வழங்கினர்.

தஞ்சாவூரில் செல்வம்நகரில் வடக்குத் தெருவில் 5-D எண்ணுள்ள இல்லம் இவரது வாழிடம். வீட்டுவாசலில் ஊஞ்சலோடும், வீடு நிறைய நாற்பதாயிரம் நூல்களோடும், அருமைத்துணைவியாரோடும், வாய் நிறைய வெற்றிலைப் பாக்கோடும் வாழும் இவரது தமிழ்ச் சைவ வாழ்வு ஒரு செம்மாந்த வாழ்வு.

வாய்ப்பு நேரும்போது சென்று காணுங்கள். திருமுறைகள் சித்தாந்த சாத்திரங்கள் இவற்றோடு, வள்ளுவர், இளங்கோ, கம்பர், சேக்கிழார், பாரதியார் முதலியவர்களோடு, ஷேக்ஸ்பியர், மில்டன், கோல்டுஸ்மித், டென்னிசன், ஷெல்லி, கீட்ஸ், பைரன் ஆகியோரையும் இவரிடம் கண்டுகேட்டு மகிழும் புண்ணியத்தைப் பெறுங்கள்.

முகவரி

சேக்கிழாரடிப்பொடி
முதுமுனைவர் தி. ந. இராமச்சந்திரன்
5, D, செல்வம் நகர்
தஞ்சாவூர் - 613 007
தஞ்சாவூர் மாவட்டம்
தொலைபேசி : (04362) 236842

செந்தமிழ்ப்புரவலர் ஞானபாஸ்கரன்
சைவ வரலாற்று வள்ளல்
பூம்புகார் **இரா. இராஜசேகரன்**

பூம்புகார் இராஜசேகரன் சாதாரண இராஜசேகரன் அல்லர். **சைவ இராஜசேகரன்** ஆகிய இவர் கருவிலே திருவுடையவர். இவரது தந்தையார் திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருத்தவத் துறை (லால்குடி) திரு. ஜி. வரதராஜ பிள்ளை அவர்கள் திருக்குறள் திருமந்திரம் திருவாசகம் ஆகிய மூன்றுக்கும் உரை எழுதியவர். இம்மூன்று நூல்களையும் வள்ளலார் கண்ட தமிழ்ப்பிரஸ்தானத்திரயம் என்று நாம் கூறுவதுண்டு. வரதராஜபிள்ளை எமக்கு நண்பர். சிறந்த சைவச் செல்வரும் மேற்குறித்த மூன்று நூல்களுக்கும் உரை எழுதியவருமான வரதராஜ பிள்ளை யவர்களின் செல்வத் திருமகனாராகப் பிறந்ததனாலே இராஜசேகரன் கருவிலே திருவுடையவர்.

பி.எஸ்.சி., பி.எல்., பட்டம் பெற்ற இவர் பூம்புகார் காவிரிப்பூம்பட்டினம் தாசில் பண்ணை திரு. கே.எஸ். இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்குச் சுவீகார மகனாகச் சென்றார். பிறந்த வீடு சுவீகாரம் புக்க வீடு என்ற இரண்டாலும் சிறந்தவர் இவர். முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் கண்ணகி கோவலன் நினைவுச் சின்னங்களை எழுப்புவதற்கு முன்னமேயே பத்தினிக்கோட்டம் என்ற பெயரில் கண்ணகிக்குச் சிலை எடுத்தது தாசில் பண்ணை குடும்பம்.

இராஜசேகரனார் எழுதிய நூல்கள் பதினான்கு, பதிப்பித்த நூல்கள் ஆறு. பெற்ற பட்டங்கள் விருதுகள் :

''செந்தமிழ்ப் புரவலர்'' - தருமபுர ஆதீனம்
''சிவத்திருத்தொண்டர்'' - திருவாவடுதுறை ஆதீனம்
''ஞானபாஸ்கரன்'' - ஸ்ரீரங்கம் ஜீயர் சுவாமிகள்
''சைவ வரலாற்று வள்ளல்'' - ஊரன் அடிகள்

காவிரிப்பூம்பட்டினம் மேலையூரில் ஸ்ரீநிவாசா மேல் நிலைப்பள்ளி, மதுரம் தொடக்கப்பள்ளி, இவர் நடத்தி வரும் நல்ல கல்விக்கூடங்கள்.

15.08.1942-இல் பிறந்த இவருக்கு 2002-இல் அகவை 60 நிறைந்து மணிவிழா நிகழ்ந்தது. மணிவிழா நெருங்கும் சமயத்தில் தொடங்கி, 2008 வரை ஏறத்தாழ ஆறு ஆண்டுகளில் இவர் செய்த பணிகள்தான் பெரும்பணிகள். இக்கால கட்டத்தில் இவர் சைவ உலகுக்கு ஐந்து பெரு நூல்களை வழங்கியிருக்கிறார்.

1. சைவப் பெருவெளியில் காலம் (2003)
2. என்றுமுள சைவம் (2006)
3. சைவத் தோரணங்கள் (2008)
4. ஊரெல்லாம் சிவமணம் (2008)
5. சொற்றமிழ்ச் சூடுவார் (2008)

1. சைவப் பெருவெளியில் காலம்

வேறு யாராவதாக இருந்தால் ''காலந்தோரும் சைவம்'' என்றுதான் பெயரிட்டிருப்பார்கள். இவர் சைவப் பெரு வெளியில் காலம் என்று பெயரிட்டு ஒரு புரட்சியே செய்துள்ளார். புதுமையான தலைப்பு. சைவம் ஒரு பெருவெளி. அளக்கவொண்ணா அப்பெருவெளி காலந்தோறும் எப்படி எப்படி எல்லாம் விரிந்து வளர்ந்து வந்துள்ளது என்பதைக் கூறுவதே இந்நூல். தொண்மைக் காலந்தொட்டு இன்று வரை சைவம் வளர்ந்த வரலாற்றைக் கூறுவது. கிரவுன் ¼ அளவில் 406 பக்கங்கள். கிடைத்தற்கரிய படங்கள் பலவற்றுடன்.

2. என்றுமுள சைவம்

சைவம் வளர்த்த தமிழறிஞர்கள் ஆதீனங்கள் அமைப்பு களின் வரலாறும் வளர்ச்சியும். கிரவுன் ¼ - 314 பக்கங்கள்.

இதில், சைவ ஆதீனங்கள் பதினெட்டின் வரலாற்றையும் யாம் எழுதிய சைவ ஆதீனங்கள் (2002 முதற் பதிப்பு) நூலி லிருந்து அப்படியே 30 பக்கங்களில் சுருக்கிக் கொடுத்திருக்கிறார்.

3. சைவத் தோரணங்கள்

இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்த சைவ நூல்களின் தொகுப்பு. கிரவுன் ¼ - 472 பக்கங்கள். இந்நூலுக்கு எம்முடைய அணிந்துரையும் உண்டு.

4. ஊரெல்லாம் சிவமணம்

சைவம் வளர்த்த தமிழறிஞர்கள், சிவத்தொண்டர்கள் (தொண்டை மண்டலம், கொங்கு மண்டலம், சென்னை நகரம் சார்ந்த) அமைப்புகளின் வரலாறும் வளர்ச்சியும். கிரவுன் ¼ - 464 பக்கங்கள்.

5. சொற்றமிழ் சூடுவார்

தமிழக ஓதுவா மூர்த்திகளின் வரலாறும் திருமுறைப் பணிகளும். கிரவுன் ¼ - 160 பக்கங்கள்.

ஐந்து நூல்களுமே பெரிய எழுத்தில் நல்ல அச்சு. நல்ல நல்ல படங்கள். நன்கு கட்டிடஞ் செய்யப் பெற்றவை (நல்ல பைண்டு). இவ்வைந்தில் 1; 2; 4 ஆகிய மூன்று நூல்களும் சென்னை, நர்மதா பதிப்பக வெளியீடு. 3;5 ஆகிய இரண்டு நூல்களும் பூம்புகார் பத்தினிக்கோட்டம் பதிப்பகம் வெளியீடு (நூலாசிரியரின் சொந்த வெளியீடு)

இவ்வைந்து நூல்களையும் ஒருவர் படித்துவிட்டாலே போதும் சைவ உலகத்தின் நீள அகல ஆழங்களை, பரப்பை, அறிவதற்கு.

இராஜசேகரனாரின் இவ்வைந்து நூல்களும் காலத்திற் கேற்ற பெருங்கொடை. இக்கொடை வள்ளலுக்கு நாம் **"சைவ வரலாற்று வள்ளல்"** என்ற விருதை எம் அணிந்துரையிலேயே வழங்கியிருக்கிறோம். அதுமட்டுமல்ல, சைவ உலகில் பெயருக்கு முன் "சைவ" என்று ஒரு சிறப்பு அடை சேர்க்கப்பெற்றவர் சைவ எல்லப்ப நாவலர். அவரைப் போன்று இவரையும் **சைவ இராஜசேகரன்** என்று நாம் அழைக்கிறோம். அன்பர்கள் அனைவரும் இனி இவரைச் சைவ இராஜசேகரன் என்று அழைக்க வேண்டும் என்பது எம் ஆசை. இதனையும் அணிந்துரையிற் கூறியுள்ளோம்.

சைவ இராஜசேகரனார் முகவரி

பத்தினிக் கோட்டப் பதிப்பகம்
4/149, மேலத் தெரு, மேலையூர்
பூம்புகார் - 609 107
தொலைபேசி : 04364 - 256118

பின்இணைப்பு 17

இன்று நம்மிடையே சிறந்து விளங்கும் ஓதுவார்கள் (ஓதுவாமூர்த்திகள்)

தேவார திருவாசகங்கள் திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்ற காலத்தைத் தொடர்ந்தே திருக்கோயில்களில் வழி பாட்டுக் காலங்களில் இறைவன் திருமுன்னர் திருமுறை விண்ணப்பம் செய்யும் (ஓதும்) வழக்கம் இருந்து வருகிறது.

வேதபாராயணத்தோடும் தேவாரதிருவாசகத் திருமுறைப் பாராயணத்தோடும் வழிபாடு நிறைவுபெறும். வழிபாட்டு நிறைவாக இவ்விரு பாராயணங்களும் நிகழும்.

வேதம்வல்ல வேதியர்கள் (வைதிக அந்தணர்கள்) வேத பாராயணம் செய்வர். திருமுறைகள் வல்ல சைவ ஓதுவார்கள் திருமுறைகளை ஓதுவார்கள் (விண்ணப்பம் செய்வார்கள்).

ஓதுவார்கள் எல்லாரும் பரம்பரைச் சுத்தசைவ வேளாள மரபினர். தேசிகர் என்பதும் ஓதுவார் என்பதும் அவர்களுக் குரிய குலமரபுப் பட்டப்பெயர்கள். எம்.எம். தண்டபாணி தேசிகர், திருக்களர் சுந்தரேசதேசிகர், திருக்கடவூர் சாமிஐயா தேசிகர், திருப்பனந்தாள் சோ. முத்துக்கந்தசாமிதேசிகர், தருமபுரம் வேலாயுத ஓதுவாமூர்த்திகள், திருத்தணி என். சுவாமிநாத ஓதுவார் முதலிய பெயர்களைக் காண்க.

திருக்கோயில்களிலும் திருமடங்களிலும் (ஆதீனங் களிலும்) ஓதுவார்களுக்குச் சிறப்பிடம் உண்டு. ஓதுவார்களை **''ஓதுவாமூர்த்திகள்''** எனச் சிறப்பாக வழங்குவதுண்டு. ஆதீன குருமகாசந்நிதானங்களைக் ''குருமூர்த்திகள்'' என்று வழங்குவதுபோல ஓதுவார்களை ''ஓதுவாமூர்த்திகள்'' என்று வழங்குவதுண்டு.

''மூர்த்தி தலம்தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே''

என்பது தாயுமானவர் பாடல், பராபரக்கண்ணி.

மூர்த்தி - தெய்வத்திருமேனி, இறைவன் திருவுரு

தலம் - திருவூர்

தீர்த்தம் - புண்ணிய நீர்நிலைகள். கங்கை காவிரி போன்ற ஆறுகள், சோமகுண்டம் சூரியகுண்டம் மகாமகக்குளம் போன்ற திருக்குளங்கள்

சிவபெருமானின் திருவடிவங்களை மாகேசுவர மூர்த்தங்கள் என்று வழங்குவர். தட்சிணாமூர்த்தி, கல்யாண சுந்தரமூர்த்தி, சோமாஸ்கந்த மூர்த்தி, மூலமூர்த்தி, உற்சவ மூர்த்தி முதலிய வழக்குகளைக் காண்க.

சிவபெருமானும் மூர்த்தி
குருமகாசந்நிதானங்களும் மூர்த்தி (குருமூர்த்தி)
ஓதுவார்களும் மூர்த்தி (ஓதுவாமூர்த்தி)

என்றால் ஓதுவாமூர்த்திகளின் சிறப்புதான் என்னே!

இன்று நம்மிடையே சிறந்து விளங்கும் ஓதுவா மூர்த்திகள் பலர். அவர்களுள் மூத்த ஓதுவாமூர்த்திகள் நால்வரைப்பற்றியும், இளைய ஓதுவாமூர்த்திகள் இருவரைப் பற்றியும் சில குறிப்புகளை இவண் தருகிறோம்.

மூத்த ஓதுவாமூர்த்திகள்

1. தருமபுரம் ப. சுவாமிநாதன்
2. திருப்பனந்தாள் சோ. முத்துக்கந்தசாமி
3. திருத்தணி என். சுவாமிநாதன்
4. இலண்டன் சாமி. தண்டபாணி

இளைய ஓதுவாமூர்த்திகள்

1. பழனி ஜி. வெங்கடேசல்
2. சென்னை மயிலை பா. சற்குருநாதன்

தருமபுரம் சுவாமிநாதன்

''தேவார இசைமணி'', ''சங்கீதபூஷணம்'', ''இசைப்பேரறிஞர்'', ''கலைமாமணி'', ''இசைக்கலைச்செல்வர்'', ''பண்ணிசைத் தமிழ்மாமணி'', ''அரசவைக் கலைஞர்''

தருமபுரம் ப. சுவாமிநாதன் அவர்கள்

தருமபுரம் சுவாமிநாதன் அகிலஉலகப் புகழ்பெற்ற ஓதுவார். ஓதுவார் உலகில் இவர் ஒரே சக்கரவர்த்தி, ஏகச்சக்கராதிபதி.

தருமபுரத்தில் ஒரு சைவ ஆதீனம் இருக்கிறது என்பதைத் தெரியாதவர்களும் தருமபுரம் சுவாமிநாதனைத் தெரிந்திருப் பார்கள். ஆதீனத்தாற் புகழ்பெற்ற தருமபுரம், ஓதுவார் சுவாமிநாதனாலும் புகழ்பெற்றது. தருமபுர ஆதீனத்தைப் பண்டிதரே அறிவர். தருமபுரம் சுவாமிநாதனைப் பாமரரும் அறிவர். தருமபுரத்தின் பெயர் அதன் ஆதீனத்தால் சிறப்புறு கிறது, ஓதுவார் சுவாமிநாதனாலும் சிறப்புறுகிறது. தருமபுரத்தின் பெயர் விளங்க உண்டானது தருமபுர ஆதீனம், தருமபுரத்தின் பெயரை விளங்கச் செய்யப் பிறந்தவர் தருமபுரம் சுவாமிநாதன்.

சுவாமிநாதன் பிறந்த ஊர் : வீராக்கண், நன்னிலம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். பிறந்த பெருநாள் : 29.05.1923, உருத்ரோத்காரி, வைகாசி 16, செவ்வாய். பிள்ளையாகப் பெரும் பேறுபெற்ற பெற்றோர் : மு. பஞ்சநத முதலியார், பார்வதி அம்மையார். பிள்ளைத் திருநாமம் (இயற்பெயர்) இராசகோபால்.

இராசகோபால் இளமையிலேயே பள்ளிப் பருவத்திலேயே இசைவிருப்பினராக விளங்கினார். அந்தக்காலத்தில் கிராம போன்தான். அதில் பாட்டுக்கேட்பதில் இராசகோபாலுக்கு விருப்பம் மிகுதி. எஸ். வி. சுப்பையா பாகவதர், எஸ்.ஜி. கிட்டப்பா, எம். கே. தியாகராஜ பாகவதர், எம்.எம். தண்டபாணி தேசிகர், பி. யூ. சின்னப்பா இவர்களின் திரை இசைப் பாடல்கள் இளைஞர் இராசகோபாலை ஈர்த்தன.

அவற்றை அப்படியே பாடிப் பழகினார். இராசகோபால் இசைகோபாலாக ஆனார்.

12-ஆம் வயதில் தந்தையார் தருமபுர ஆதீனத்தில் இராசகோபாலைச் சேர்த்து விட்டார். அது 24-ஆவது குருமகா சந்நிதானத்தின் ஆட்சிக்காலம். சந்நிதானம் இராசகோபாலை அணுக்கத் தொண்டராக ஆக்கிக் கொண்டார்கள். 24; 25; இன்றைய 26 ஆக மூன்று குருமகா சந்நிதானங்களைக் கண்டவர் அன்றைய இராசகோபால், இன்றைய தருமபுரம் சுவாமிநாதன்.

தருமபுர ஆதீனத்திலும் கிராமபோன் இருந்தது. நல்ல நல்ல இசைத்தட்டுப் பாடல்களை அதில் ஒலி பரப்புவார்கள். இராசகோபால் விருப்பத்துடன் கேட்பான். அதைப்போலவே பாடியும் பழகுவான். எம். எம். தண்டபாணி தேசிகரின் ''பட்டினத்தார்'' படப்பாடல்கள், எம். எஸ். சுப்புலட்சுமியின் ''சகுந்தலை'' படப்பாடல்கள், பி.யு. சின்னப்பாவின் ''கண்ணகி'' படப்பாடல்கள் இராசகோபாலை ஈர்த்தன. எம். கே. தியாகராஜ பாகவதரின் ''சிந்தாமணி'' திரைப்படம் வந்தது. அதில் பாகவதர் பாடிய ''ஞானக்கண்'' பாடல் இராசகோபாலின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. அப்பாடலை இராச கோபால் அப்படியே பாடிப்பாடிப் பழகினான். ஒருநாளைக்கு எத்தனை தடவை பாடுவது என்று ஒரு கணக்கே கிடையாது. நினைத்த நேரமெல்லாம் ''ஞானக்கண்'' பாடலைப் பாடிப் பாடி மகிழ்வான்.

ஸ்ரீமத் அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அப்போது தருமபுர ஆதீனத்தில் தம்பிரானாக இருந்தார்கள். இராசகோபால் ''ஞானக்கண்'' பாடலைப் பாடுவதைக் கேட்டு மகிழ்வார்கள். தேவாரப் பாடல்களைப் பாடப் பழக்குவித்தார்கள். தேவாரத்தில் ஈடுபாட்டை உண்டாக்கினார்கள்.

ஒருநாள் (02.04.1942) ''ஞானக்கண் கோபால்'' என்று அழைத்தார்கள். முறையாகத் தேவாரம் படிக்கும்படி அன்புடன் அறிவுறுத்தினார்கள். சந்நிதானத்திடம் பணி செய்துகொண்டே தேவாரபாடசாலைக்கும் சென்று இராசகோபால் பயின்று

வந்தான். இந்நிலையில்தான் இராஜகோபாலைச் சுவாமிநாதன் ஆக்கினார்கள் தம்பிரான் சுவாமிகள்.

தருமபுர ஆதீனத்தில் குருபூஜை வந்தது. எம்.எம். தண்டபாணி தேசிகர் சென்னையிலிருந்து வந்து இசைக் கச்சேரி செய்தார். தேசிகரின் இசையில் மயங்கிய இராசகோபால் சுவாமிநாதன் தனக்குப் பாடம் கற்பிக்க வேண்டினார். இராசகோபாலைப் பாடச் சொல்லிக் கேட்ட தேசிகர் தம்முடன் சென்னைக்கு அழைத்துச் சென்றார். நாள்கள் சில சென்றன. தேசிகரின் இசை வெள்ளத்தில் திளைத்த சுவாமிநாதனின் ஆர்வத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வந்தது. தேசிகர் என்ன நினைத்தாரோ, ''எனக்கு இப்போது அவகாச மில்லை, நீ தருமபுரத்திற்கே சென்று தேவார பாடசாலையிற்படி, பின்னொரு சமயம் அழைத்துக் கொள்கிறேன்'' என்று கூறிவிட்டார்.

சுவாமிநாதன் மீண்டும் தருமபுரம் வந்தார். மகா சந்நிதானத்தின் பணி கிடைக்கவில்லை. அரும்பாடுபட்டுத் தேவாரபாடசாலையில் படிக்க இடம் கிடைத்தது. அதுவும் அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளின் ஆசியால். பாட சாலையிற் சேர்ந்து வேலாயுத ஓதுவாமூர்த்திகளிடம் ஆறு ஆண்டுகள் பயிற்சி பெற்று, முதல்மாணவனாகத் தேர்ச்சி யடைந்து ''தேவார இசைமணி'' பட்டம் பெற்றார்.

பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக் கல்லூரியில் சேர்ந்து நான்கு ஆண்டுகள் பயின்று ''சங்கீத பூஷணம்'' பட்டம் பெற்றார். அதன்பின் தருமபுரத்திற்கே திரும்பி ஆதீனத் தேவாரபாடசாலையில் ஆசிரியராகப் பணி யேற்றார். இரண்டே இரண்டு ஆண்டுகள்தான் பணிபுரிந்தார். 1968-இல் தேவாரபாடசாலைப் பணியிலிருந்து நீங்கினார். அதே ஆண்டில் (1968) தருமபுர ஆதீனத்தை விட்டும் வெளிப்பட்டார்.

வெளிப்பட்டது தமிழிசைஉலகுக்கு ஒருவகையில் நல்ல காலம்தான். வீராக்கண் இராசகோபாலாகப் பிறந்து, தருமபுரம் சுவாமிநாதனாக ஆனவர், இன்று அகிலஉலக தருமபுரம் சுவாமிநாதனாக விளங்குகிறார்.

ஆதீனத் தொடர்பை நீத்தபின், நாடெங்கும் நகரெங்கும் சிற்றூர்பேரூர்களுக்கு, பட்டிதொட்டிகளுக்கெல்லாம் சென்று, கோயில்விழாக்கள், பொதுவிழாக்கள், தனியார் விழாக்கள், திருமணங்கள் என்று எல்லா இடங்களுக்கும் சென்று, அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்த் திருமுறை இசையைத் தமிழிசையைப் பரப்புபவரானார். இந்த எண்பத்தேழாம் அகவையிலும் குறைவின்றி நிறைவாகப் பணிசெய்து வருகிறார். அக்காலத்தில் ''ரேடியோ புகழ்'' என்று சொல்வார்கள். ஓதுவாமூர்த்திகளில் முதல்முதல் வானொலி ரேடியோ புகழ் இவர்தான். முதன்முதல் டி.வி. புகழும் இவர்தான்.

கோயில்களுக்குள்ளும் மடங்களுக்குள்ளும் முடங்கிக் கிடந்த திருமுறை இசையை, விழாக்காலங்களில் மட்டும் வீதிக்கு வந்த திருமுறை இசையை, திருவீதிகளுக்கு மட்டுமே வந்த திருமுறை இசையை, நாடு நகரமெங்கும் ஊர் உலக மெங்கும் பட்டிதொட்டிகளெங்கும், மூலை முடுக்கு முச்சந்தி நாற்சந்திகளெங்கும் அங்கிங்கெனாதபடி எங்கும் பரப்ப வந்த முதல்வர் இவர்தான் - தருமபுரம் சுவாமிநாதனார் தாம்.

இவருக்குமுன் தேவார இசை என்பது பக்திமான் களுக்கு மட்டுமே தெரிந்தது. இவரால் அது பொதுமக்கள் அனைவருக்குமே எல்லாருக்குமே தெரியவந்தது.

''சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்'' என்பதுபோல, பாடும்பாட்டின் பொருள் தெரியச் சொற்களைப் பிரித்தும் அடுக்கியும் சேர்த்தும் பாடலின் பொருள் முழுமை யாகக் கிடைக்கும்படிப் பாடுவதில் இவருக்கு நிகர் இவரே. தருமபுரம் சுவாமிநாதனாருக்கு நிகர் தருமபுரம் சுவாமிநாதனாரே.

திருமுறை இசையைப் பாடுவதில் இவருக்கென்று ஒரு புதிய பாணி - வெண்கலக்குரல், அழுத்தமான உச்சரிப்பு, தெளிவான உச்சரிப்பு, பொருள் விளங்கும் வகையில் கொண்டு கூட்டு - இவை இவர் பாணி.

இடையிடையே விளக்கங்களும் கூறுவார். அது, பொருள் விளக்கமாகவும் இருக்கும், வரலாற்று விளக்கமாகவும் (நிகழ்ச்சி

விளக்கமாகவும்) இருக்கும். பாட வேறுபாடுகளைக்கூடச் சிலசமயம் விளக்குவார். இயற்புலவர்களும் அறிதற்கரிய செய்திகளை, பொருள்களை, விளக்கங்களை இவ்விசைப் புலவர் கூறுவது அருமையிலும் அருமை.

சென்னையில் தமிழிசைச்சங்கத்தில் 1950 முதல் 59 ஆண்டுகளாகத் திருமுறை இசை பாடிவருகிறார். இதற்கே ஒரு மணிவிழாக் காலம் வைரவிழாக்காலம் ஆகிறது.

ஒலிநாடாக்கள், ஒலிப்பேழைகள், குறுந்தகடுகள் என்று ஏறத்தாழ ஒரு ஆயிரத்திற்குமேல் இவர் சைவத் தமிழுலகுக்கு - திருமுறை உலகுக்கு - வழங்கியுள்ளார். சைவத் திருமுறைகளுக்கு அப்பால், வள்ளலாரின் திருவருட்பாத் திருமுறைகளிலும் இவரது பணிகள் நிரம்ப உண்டு.

தமிழிசைச் சங்கம் போன்ற ஆய்வரங்குகள் பலவற்றில் இசை சம்பந்தமான ஆய்வுக்கட்டுரைகளைப் படித்த முதல் திருமுறைவாணர் இவரே. தேவாரத்தை, திருமுறைகளை எழுத்தெண்ணிக் கற்று ஆய்ந்து தோய்ந்தவர் இவரினும் மிக்கார் இன்று யாருமிலர். இவருக்கு ஒப்பாரும் இலர்.

திருமுறையிசையுலகில் இவருடைய சாதனை இமாலய சாதனை. ஓதாமல் ஒருபொழுதும் இவர் இருந்ததில்லை. ''ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்'' என்ற ஔவை வாக்கை இவர் திறத்தில் ஓதாமல் ஒருபொழுதும் இருக்க வேண்டாம் என்று மாற்றிக்கொள்ள வேண்டும். இவரது வாழ்வும் வாக்கும் திருமுறையே. இவர் ஒரு தேவாரப் பல்கலைக்கழகம், தமிழிசைப் பல்கலைக்கழகம்.

இருபதுக்கு மேற்பட்ட விருதுகள் இவரை அணி செய்கின்றன.

1. ''தேவார இசைமணி'' - தருமபுர ஆதீனத் தேவார பாடசாலை வழங்கியது
2. ''சங்கீதபூஷணம்'' - அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துப் பட்டம்

3. ''இசைப்பேரறிஞர்'' - தமிழிசைச்சங்கம் வழங்கிய பட்டம்
4. ''கலைமாமணி'' - தமிழ்நாடு அரசின் பட்டம்
5. ''அரசவைக் கலைஞர்'' - தமிழ்நாட்டரசு அளித்த சிறப்பு
6. ''டி.டி.கே. விருது'' - மியூசிக் அகாடெமி வழங்கியது
7. ''இசைக்கலைச்செல்வர்'' - இராமலிங்கர் பணி மன்றம் வழங்கிய பட்டம்
8. ''பண்ணிசைத்தமிழ்மாமணி'' - பொங்குதமிழ்ப் பண்ணிசை மன்றம் வழங்கிய பட்டம்

இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் பிறந்தநாள் விழாப் பரிசளிப்பாக இவரைப் பாராட்டி ரூபாய் ஒரு லட்சம் இவருக்கு வழங்கினார்கள். ஒரு லட்சம் ரூபாயையும் அப்படியே தருமபுர ஆதீனத் தேவார பாட சாலையின் வளர்ச்சிக்காக என ஆதீனத்தில் ஒப்படைத்து விட்டார். அங்கே படித்து, அங்கேயே ஆசிரியராகப் பணி யாற்றி ஆளானதை எண்ணிச் செய்த நன்றிக் காணிக்கை.

தருமபுர ஆதீனத்தில் இப்போது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருநாவுக்கரசர் பிறந்தருளிய திருவாமூரில் திருநாவுக்கரசர் பிறந்த இடத்தில் திருநாவுக்கரசருக்கு .(அப்பருக்கு) ஒரு கோயில் கட்டினார்கள். அதை ஒட்டித் தேவார பாட சாலையொன்றையும் கட்டி அப்பாடசாலைக் கட்டிடத்தைத் தருமபுரம் ப. சுவாமிநாதன் அவர்களைக் கொண்டே திறந்து வைக்கச் செய்தருளினார்கள். பாடசாலையைத் தொடங்கி வைக்கவும் செய்தார்கள் (28.04.2000). இந்நூல் 265-ஆம் பக்கத்தில் அச்செய்தியையும் சுவாமிநாதனாரின் வரலாற்றுக் குறிப்பையும் காணலாம்.

வாழ்வில் நீண்டகாலம் பிரமச்சாரியாகவே இருந்துவிட்ட இவர் அறுபது வயதை நெருங்கும் சமயத்தில் திருமணம் செய்து கொண்டார் (1981). துணைவியார் சுலோசனா அம்மையார். அதே ஆண்டில் குன்றத்தூரில் ஒரு வீட்டை விலைக்கு வாங்கித் துணைவியாருடன் குன்றத்தூரிலேயே வாழ்ந்து வருகிறார்.

குன்றத்தூர், சேக்கிழார்பெருமான் பிறந்த மண் ஆயிற்றே! சும்மா இருப்பாரா இவர்! குன்றத்தூரில் சேக்கிழார் அவதரித்த இடத்தில் அமைந்துள்ள சேக்கிழார் திருக்கோயிலுக்கு மூன்று முறை திருப்பணிகளையும் குடநீராட்டுவிழாவையும் நடத்தினார் (1989; 1999; 2001)

திருக்கழுக்குன்றத்தில் சென்னை சிவனடியார் திருக்கூட்டத்தார் நடத்திவரும் திருமுறை விழாவில் அம்மையார் ஒருவர் மிகவும் சிரமத்துடன் அன்னம்பாலிப்புப் பணியைத் செய்துவந்ததைக் கண்ட இவர், பொறுக்கப் பெறாராய் அப்பணியைத் தாமே ஏற்றுப் பன்னிரண்டு ஆண்டுகள் சிறப்பாகச் செய்து வந்தார். உடல்நிலை காரணமாக அப் பணி பின்பு தொடரவில்லை. இவ்வாறு இன்னும் பற்பல பணிகள். புலவரான இவர் சிலபல சமயங்களில் புரவல ராகவும் இருந்து பணி செய்பவர்.

திருமுறை உலகில் இவருடைய சாதனை யாரும் சாதிக்காத மாபெரும் சாதனை. இவர் பெற்ற பெருமைகள் யாரும் பெறாத பெருமைகள். இவருக்குப் பொன்னால் செய்த தாளங்களை வழங்கிச் சிறப்பித்த ஆறுமுகம் என்னும் அன்பர் பொற்றாளம் ஆறுமுகம் என்றே பெயர் பெற்றுவிட்டார். தாளம் பெற்ற இவர் பெற வேண்டிய பொற்றாளப் பெயரைத் தாளம் கொடுத்த அவர் பெற்றுவிட்டார். குடியரசுத்தலைவர் முதலாகச் சாதாரணக் குடிமகன் வரை இவரைப் பாராட்டிப் போற்றிப் புகழாதார் இலர்.

காசித்திருமடம் ஆஸ்தான வித்துவான்
''கலைமாமணி'' ''திருமுறைக் கலாநிதி''
திருப்பனந்தாள் **சோ. முத்துக்கந்தசாமி தேசிகர்**
திருச்சிராப்பள்ளி

பிறந்த ஊர் : திருக்கோடிக்காவல், தஞ்சாவூர் மாவட்டம்

பெற்றோர் : சோமசுந்தரதேசிகர், சிவபாக்கியத்தம்மாள்

பிறந்த நாள் : .... பிரமாதி ஆண்டு வைகாசி 2-ஆம் நாள்

தருமபுர ஆதீனத் தேவார பாடசாலையிற் பயின்று ''தேவார இசைமணி'' பட்டம் பெற்றவர். 50 ஆண்டுகளுக்கு மேலாகத் திருமுறைப் பணி செய்து வருகிறார். இவர் பாடும் திறன் தனித்தன்மையும் திட்டமிட்ட அமைப்பும் உடையது. தருமபுர ஆதீனத்தின் ''திருமுறைக் கலாநிதி'' பட்டமும் தமிழக அரசின் ''கலைமாமணி'' விருதும் பெற்றவர்.

சிறந்த இசை ஆய்வாளர், பண்ணாராய்ச்சியாளர். தமிழிசைச் சங்கத்திலும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலும் ஆய்வுக் கட்டுரைகள் பல படித்துள்ளார், படித்தும் வருகிறார். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பாடத்திட்டக்குழு உறுப்பினராகவும் நியமிக்கப் பெற்றுள்ளார்.

தமிழிசைச் சங்கத்தில் இவர் வாசித்த ''ஓதுவித்த வாய்மையும் ஓதிவந்த வாய்மையும்'' என்னும் கட்டுரை நூறுக்கு மேற்பட்ட ஓதுவா மூர்த்திகளைப் பற்றியும் தேவாரப் பண்முறையைப் பற்றியும் கூறும் ஓர் அரிய பெருங்கட்டுரை. அது அப்பெயரிலேயே நூலாகவும் வெளிவந்துள்ளது.

இவர் எழுதித் தொகுத்த பல நிகழ்ச்சிகள் திருச்சிராப்பள்ளி சென்னை பாண்டிச்சேரி வானொலி நிலையங்களில் ஒலிபரப்பப் பெற்றுள்ளன. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பாடத்திட்டக் குழு உறுப்பினராக நியமிக்கப் பெற்ற முதல்

திருமுறைவாணர். இலண்டன் மலேசியா சிங்கப்பூர் இலங்கை ஆகிய நாடுகளுக்குச் சென்று திருமுறை இன்னிசை நிகழ்த்தி வந்துள்ளார். இலங்கைக்கு இதுவரை 46 முறை சென்று வந்துள்ளார். இலண்டனுக்கு முதலாவதாகச் சென்ற திருமுறை வாணர் இவரே. இலண்டனுக்கு இரண்டு முறை சென்றுள்ளார். இலண்டனில் பலருக்குப் பண்ணிசைப் பயிற்சி யளித்து ஆளாக்கியுள்ளார். இவரது லண்டன் மாணவி திருமதி மாதினி சிறீக்கந்தராஜா அவர்களைப் பாடச்செய்து "பண்ணிசைப் பாமாலை" ஒலிநாடாவாகவும் வெளி வந்துள்ளது. இவரிடம் பயின்ற மாணவர்கள் பலர் வெளி நாடுகளில் பாடி வருகின்றனர்.

ராஜா அண்ணாமலைச் செட்டியார் பிறந்தாள் விழா விருதையும் ஒரு லட்சம் ரூபாய் பரிசையும் இவர் பெற்றுள்ளார். திருப்பனந்தாள் காசித் திருமடத்து அதிபர் கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள் அவர்கள் இவரைக் காசித்திருமடத்தின் ஆஸ்தான வித்துவான் ஆக்கி அருளியிருக்கிறார்கள். திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை ஸ்ரீ தாயுமானசுவாமி திருக்கோயில் ஓதுவாராக இவர் திருப்பனந்தாள் காசித்திருமடத்து அதிபரால் நியமிக்கப் பெற்றுத் திருச்சிராப்பள்ளியில் பணியாற்றி வருகிறார்.

இவரிடம் பயின்ற மாணவர்களில் குமாரவயலூர் டி. பாலச்சந்திரன் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பண்ணிசை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார்.

"திருமுறைக் கலாநிதி", "கலைமாமணி"
திருத்தணி என். சுவாமிநாத ஓதுவார்

இவர் பிறந்த ஊர் திருக்கருகாவூர் அருகில் உள்ள ஆலத்தூர். இவரது தந்தையார் நாகரத்தின முதலியார், அன்னையார் சம்பூர்ணம் அம்மையார். இவர் பிறந்த நாள் 06.07.1945.

திருக்கடவூர் பிச்சைக் கட்டளை தேவார பாடசாலை யிலும் பின்னர் தருமபுர ஆதீனத் தேவார பாடசாலையிலும் பயின்றவர். குன்றக்குடி ஆதீனத்திலும், அவ்வாதீனத்தைச் சார்ந்த பிரான்மலைத் திருக்கோயிலிலும் ஏழு ஆண்டுகள், தருமபுர ஆதீனத்தின் மயிலாடுதுறைக்கோயில் குமரக் கட்டளையில் ஐந்து ஆண்டுகள், திருத்தணி முருகன் திருக்கோயிலில் 26 ஆண்டுகள் திருமுறைப்பணி. நீண்ட காலம் திருத்தணியிற் பணியாற்றியமையால் திருத்தணி சுவாமிநாதன் என்ற பெயர் ஏற்பட்டுவிட்டது.

தற்பொழுது சிதம்பரம் தெற்குவீதியில் உள்ள வி.எஸ். டிரஸ்ட் (வெ. சா. அறக்கட்டளை) தேவார பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

தருமபுர ஆதீனத்தின் "திருமுறைக்கலாநிதி" பட்டத்தை யும் சேக்கிழார் ஆய்வு மையத்தின் சேக்கிழார் விருதையும் தமிழக அரசின் "கலைமாமணி" விருதையும் பெற்ற இவர் மரபுவழியிலும் புதுமையாகவும் பாடும் சிறப்பினர். இவர் பாடிய தேவார இசை ஒலிநாடாக்கள் பல வெளி வந்துள்ளன. மலேசியா சிங்கப்பூர் இலங்கை ஆகிய நாடுகளுக்குப் பலமுறை சென்று பணியாற்றியுள்ளார்.

நற்குண நற்செயல்கள் நிரம்பப் பெற்ற நல்ல ஓதுவார்.

''தேவார சங்கீத பூஷணம்'', ''திருமுறைக் கலாநிதி'', ''பண்ணிசை அரசு''

அரனருள் **சாமி. தண்டபாணி**

தஞ்சாவூர் மாவட்டம் (இப்போது நாகப்பட்டினம்) மாவட்டம் திருக்கடவூரில் சாமிஐயா தேசிகர் ஞானாம்பாள் தம்பதியருக்கு மகனாக 11.4.1955-இல் பிறந்தவர்.

தந்தையார் சாமிஐயா தேசிகர் புகழ்பெற்ற ஓதுவார். திருக்கடவூர்த் திருக்கோயிலில் பேரோடும் புகழோடும் திருமுறைப் பணி செய்து வந்தவர். சிறுவர் தண்டபாணி, பிள்ளைப் பருவத்திலேயே தந்தையாரிடம் திருமுறை இசை பயிலத் தொடங்கினார்.

1965 முதல் 1970 முடிய ஐந்து ஆண்டுகள் சென்னையில் மயிலாப்பூர் கபாலீஸ்வரர் தேவஸ்தான தேவார பாடசாலை யில் திருமுறை வித்தகர் திருக்களர் சுந்தரேச தேசிகரிடம் திருமுறை இசை பயின்றார். 1971 முதல் 1974 முடிய நான்கு ஆண்டுகள் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக்கல்லூரியில் வாய்ப்பாட்டு கர்நாடக சங்கீதம் பயின்று ''சங்கீதபூஷணம்'' பட்டம் பெற்றார். 1975 முதல் இரண்டு ஆண்டுகள் திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம் நடத்திய தேவார இன்னிசைப் பயிற்சியில் தமது சிறிய தந்தையார் கலைமாமணி தி. சுப்பிரமணிய தேசிகரிடம் பயிற்சி பெற்றார்.

திருச்சிராப்பள்ளி உறையூர் திருமூக்கீச்சரம் கோயில், தருமபுர ஆதீனக் கோயிலாகிய திருபுவனம் திருக்கோயில், சென்னையில் தருமபுர ஆதீன சமயப் பிரச்சார நிலையம், சென்னையில் வடபழனி முருகன் ஆலயம், சென்னையில் தமிழிசைச் சங்கத்தின் தமிழிசைக்கல்லூரி ஆகியவற்றில் பேரோடும் புகழோடும் திருமுறைப்பணி செய்தார்.

அகில இந்திய வானொலியில் பி. ஹைகிரேடு கலைஞராகப் பல ஆண்டுகள் பாடியுள்ளார்.

மரபுவழியுடனும் இசைத்திறனோடும் பாடக்கூடியவர். பண்மாறாமல் தாளம் மாறாமல் பாடுவார்.

இப்போது பன்னிரண்டு (12) ஆண்டுகளாக இலண்டன் சிவன் கோயிலில் (லூஷியம் என்ற பகுதியில் உள்ள அண்ணாமலையார் கோயில்) ஓதுவாமூர்த்திகளாகத் திருமுறைப் பணிசெய்து வருகிறார். இலண்டனில் மாணவர்கள் பலருக்குப் பண்ணிசை பயிற்றுவித்தும் வருகிறார்.

சென்னையில் "**அரனருள்**" என்ற அறக்கட்டளை அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி, ஆண்டுதோறும் பன்னிரு திருமுறை இசைவிழாவைப் பன்னிரண்டு நாள்கள் நடத்துகிறார். சென்னையில் ராஜா அண்ணாமலை மன்றத்தில் இவ் விழா நிகழ்கிறது. "திருநெறிய தெய்வத் தமிழிசை மன்றம் - ஆறாம் ஆண்டு, திருமுறை இசை ஆராதனைவிழா, வேத சிவாகம புராண இதிகாச தோத்திர சாத்திர சைவ சமயக் கருத்தரங்கம்" என்று இவ்வாண்டு ஆறாவது ஆண்டாக 13.03.2009 வெள்ளிக்கிழமை முதல் 24.03.2009 செவ்வாய்க் கிழமை முடியப் பன்னிரண்டு நாள்கள் நிகழ்ந்தது. காலை முதல் முன்னிரவு முடியப் பன்னிரண்டு நாளும் முழுநேர விழா - முழுநாள் விழா. நாள்தோறும் குருமகாசந்நிதானம் ஒருவர் தலைமை. இவருடைய கணக்கில் நாமும் ஒரு குருமகாசந்நிதானம் போலும். நாம் இரண்டு ஆண்டுகள், ஒவ்வொரு நாள் தலைமை வகித்து ஆய்வுரை அருளுரை நிகழ்த்தியுள்ளோம். திருமுறை இசையோடு கருத்தரங்கம் தொடர்சொற்பொழிவு ஆகியனவும் உண்டு. சிறந்த அறிஞர் பெருமக்கள் உரையாற்றுவர். சந்நிதானங்களைக் கொண்டு, வேண்டிய அன்பர்களுக்கு, தகுதியுடைய அன்பர்களுக்கு தீட்சையளிப்பதும் உண்டு.

இப்படி ஒரு விழாவை, 12 நாள் விழாவை, அதுவும் சென்னையில், லண்டன் ஓதுவாரால்தான் செய்ய முடியும். நம்மூர் ஓதுவார்களால் செய்ய இயலாது. தருமபுரம் சாமி தண்டபாணி லண்டனுக்கு ஓதுவாராகப் போனாலும் போனார், தமிழ்நாடு, தமிழிசை, திருமுறைஇசை நலம்பெற்றது.

இவரால் நிறுவப் பெற்ற அரனருள் அறக்கட்டளை அமைப்பு ''அரனருள்'' என்றே ஒரு திங்களிதழைச் சென்ற ஆண்டு 2008-இல் தொடங்கி வெளியிட்டு வருகிறது. சிறப்பாசிரியர் தருமபுர ஆதீனப்புலவர் முனைவர் மு. சிவச்சந்திரன் அவர்கள். அரனருள் இதழ் நல்ல நல்ல கட்டுரைகளுடனும் செய்திகளுடனும் கண்ணுக்கும் கருத்துக்கும் இனியதாய் வெளிவருகிறது. சிவச்சந்திரனின் ஆசிரியக் கட்டுரைகள் மிகவும் நன்றாக இருக்கின்றன.

அரனருள் அமைப்பின் நிறுவனர் செயலாளர் :
திரு சாமி. தண்டபாணி.

தலைவர் திரு எஸ். சண்முகசுந்தரம், பி.ஏ.,

முகவரி :

அரனருள்
எண் 95, இரண்டாவது தெரு
ஸ்ரீ கிருஷ்ணா நகர்
மதுரவாயல்
சென்னை - 600 095
தொலைபேசி : 23782333 செல் : 9444156335
E-mail : aranarul@yahoo.co.in

பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஓதுவார்
தேவாரஇசைமணி க. வெங்கடேசன்

பாடல் பெற்ற திருத்தலமாகிய திருமுதுகுன்றத்திற்கு (விருத்தாசலத்திற்கு) அண்மையிலுள்ள சாத்துகுடல் என்ற ஊரில் பரம்பரைச் சுத்தசைவ வேளாளர் மரபில் கணபதி பிள்ளை ரஞ்சிதம் அம்மாள் இணையரின் மகனாக 22.05.1965-இல் பிறந்த இவர், இளமையிலேயே தேவாரபாடசாலையில் திருமுறை இசையை முறையாகக் கற்றுத் தேர்ந்தார். சென்னையில் அருட்செல்வர் பத்மபூஷன் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள் நிறுவி நடாத்தி வரும் இராமலிங்கர் பணிமன்றத்தில் அந்நாளைய பெருஞ்சொற்பொழிவாளர் கீதாபோதகர் அருட்பா அரசு திரு. நா. கிரிதாரிப் பிரசாத் அவர்களுடைய சொற்பொழிவுகளில் இடைஇடையே திருவருட்பாப் பாடல்களைப் பாடும் பணி இவருக்கு வாய்த்தது.

இவருக்குமுன் அப்பணியைச் செய்து வந்தவர் புலவர் கோ. முருகையா என்பவர். தமிழ்ப்புலவர். தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். இசைப்பயிற்சியிலும் சிறந்தவர். அந்நாளில் கிரிதாரிப் பிரசாத் அவர்களின் சொற்பொழிவு எவ்வளவு பாராட்டுதல்களைப் பெற்றதோ, அவ்வளவு பாராட்டு களையும் இடைஇடையே பாடும் இவரது இசையும் பெற்றது. பிரசாத்தின் சொற்பொழிவுகளுக்குப் புலவர் முருகையாவின் இசை மெருகூட்டிற்று. காலஅடைவில் புலவருக்கு அகவை முதிரவே அவரிடத்திற்கு இளைஞர் வெங்கடேசன் அமர்த்தப் பெற்றார். புலவர் முருகையா அவர்களுக்குப் பின்பு இவர் அப்பணியை ஏற்றதால் இவரை இளம்புலவர் என்று பிரசாத் அவர்கள் அழைத்தார்கள். "இளம்புலவா!" என்றே செல்லமாக அழைப்பார். எல்லாருமே அப்படி வழங்கத் தலைப்பட்டனர். இளம்புலவர் வெங்கடேசன் என்பது இவர் பெயராயிற்று.

கோயம்புத்தூர் மாவட்ட சன்மார்க்க சங்கத்திற்கு அடுத்த வீடு பிரசாத் அவர்களின் வீடு. சங்கத்தில் தங்கிக்கொண்டு, கோவை சென்னை ஆகிய இரு இடங்களிலும் அருட்செல்வர்

நடாத்தும் விழாக்களில் இவர் பாடிக்கொண்டிருந்தார். பிரசாத்திடம் செல்லப் பிள்ளையாக வளர்ந்தார். ஒருகாலத்தில் பிரசாத் அவர்கள் வயது முதிர்ச்சியால் சொற்பொழிவாற்றுவது குறைந்து, பின்னர் அறவே தவிர்ந்தது. இளம்புலவர் வெங்கடேசன் இசைப்பணியில் புலவர் முருகையாவுக்குச் சற்றும் குறை வில்லாதவராக விளங்கினார்.

அருட்செல்வரின் இராமலிங்கர் பணிமன்ற விழாக்கள் பெரிய மனிதர்கள் மிகப்பலர் கலந்துகொள்ளும் பெருவிழாக்கள். அவ்விழாக்களுக்கு இளம்புலவர் தம் இசையால் பொலிவு சேர்த்தார். விழாக்களாலும் இவர் புகழ் பெற்றார்.

பிரசாத் அவர்களின் பொழிவு ஓய்வுக்குப்பின் இளம் புலவருக்குப் போதுமான அளவு வேலை இல்லாதிருந்தது. இந்நிலையில் பழனித்திருக்கோயிலில் ஓதுவார் பணிக்கு விண்ணப்பஞ் செய்ய நேர்ந்தது. யாருடைய பரிந்துரையும் எவ்வித பரிந்துரையும் இன்றியே தகுதி திறமைகளால் இவர் அப்பணிக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். பழனி தண்டாயுதபாணி திருக்கோயில் ஓதுவாராக நியமனம் பெற்றார்.

1996-ஆம் ஆண்டு யாம் 45 நாள்கள் தென்னாப்பிரிக்காவில் சொற்பொழிவு சுற்றுப்பயணம் செய்தோம். சைவ சபைகள் பலவற்றிலும் சன்மார்க்க சங்கங்களிலும் சொற்பொழி வாற்றினோம். தென்னாப்பிரிக்கா முழுவதும் நாடு தழுவிய விரிவான சுற்றுப்பயணம் இது. தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பும்போது மொரிஷியஸ் வழியாகத் திரும்பினோம். மொரிஷியசில் ஒரு வாரம் தங்கினோம். இச்சுற்றுப்பயணத்தில் பழனி ஓதுவார் வெங்கடேசனையும் அழைத்துச் சென்றிருந்தோம். தென்ஆப்பிரிக்கா மொரிஷியஸ் நிகழ்ச்சிகள் அனைத்திலும் பன்னிரு திருமுறைப் பாடல்களையும் திருப்புகழ்ப் பாடல் களையும் திருவருட்பாப் பாடல்களையும் பாடி அவையோரை அயர்த்தினார் இளைஞர் வெங்கடேசன். வெங்கடேசனின் இசை அலை அதற்குப்பின்னும் நீண்டகாலம் தென்னாப்பிரிக்கா வில் நாடெங்கும் வீசிக் கொண்டிருந்தது. அங்கேயே ஓதுவாராக வைத்துக் கொள்ளுகிறோம் என்ற அளவுக்குத் தென்னாப்பிரிக்கா

அன்பர்கள் வந்துவிட்டனர். முன்னாள் அமைச்சர் ஒருவரே ஈடுபாடு காட்டினார். நாம் விட்டாலும் பழனி விடுவது அரிது. தகுந்த ஒருவரை அனுப்பி வைக்கிறோம் என்று சமாதானம்கூறித் திரும்ப அழைத்துவர வேண்டியதாயிற்று.

இவ்வளவுக்கும் பின்னர் தான் இவருக்குத் திருமணம் நிகழ்ந்தது. திருமணநாள் 18.01.1998. மணமகள் தமிழ்ச் செல்வி தேசிய விடுதலை வீரர் கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரம் பிள்ளை குடும்பத்துப் பெண். நல்ல சம்பந்தம்.

பழனியில் இவரினும் மூத்த ஓதுவார் திரு. ப. சண்முக சுந்தர தேசிகர். அவரும் இவருமாகச் சேர்ந்து, இசை நிகழ்ச்சிகளை ஆங்காங்கே நடத்தி வருகின்றனர். "தேவார இசைமணிகள்", "பண்ணிசை மணிகள்" என்று இருவருக்கும் பேர். வெங்கடேசன் தேவார இசைமணியோடு திருவருட்பா இசைமணியும் ஆவார்.

2000-இல் நாம் குவைத் நாட்டிற்குச் சென்றிருந்தபோது இசைக்கலைச்செல்வர் திரு. மா. கோடிலிங்கம் அவர்களை அழைத்துக் கொண்டு சென்றிருந்தோம். கோடிலிங்கம் தம் இசையால் குவைத் நாட்டின் தமிழ்ச்சூழலை ஒரு கலக்குக் கலக்கினார். இரண்டாவது முறையாக 2001-இல் குவைத்துக்கு அழைத்தார்கள். இம்முறை புதிதாக ஒரு இசைக்கலைஞரை அறிமுகம் செய்ய வேண்டினார்கள். வெங்கடேசனை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்திருந்தோம். இரண்டாவது பயணம் அப்போதிற்குத் தவிர்ந்துவிட்டது. இன்னும் நேரவில்லை.

ஓதுவார் வெங்கடேசன் பழனித் திருக்கோயிலில் புகழ் பூத்த ஓதுவாராகப் பணியாற்றிக் கொண்டு வருகிறார். லண்டன் முதலிய கடல்கடந்த நாடுகளுக்கும் சென்று வந்துள்ளார்.

முகவரி

தேவாரஇசைமணி க. வெங்கடேசன்
இசைத்தமிழ் இல்லம்
170/1, பாட்டாளி வீதி
அடிவாரம், பழனி - 642 601
தொலைபேசி : 04545 - 240867
செல் : 9443140867

சென்னை, மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயில் ஓதுவார் திருவாசகச் செந்நாவலர் **பா. சற்குருநாதன்**

தமிழ்நாட்டின் தலைநகரம் தருமமிகு சென்னை. தருமமிகு சென்னையின் தலைமைக்கோயில் எனத்தகுவது மயிலைக் கபாலீசுவரர் கோயில். அக்கோயிலின் புகழ்பூத்த ஓதுவார் பா. சற்குருநாதன்.

''திருவாசகச் செந்நாவலர்'' என்பது இவருக்குரிய பட்டம். இவர் திருவாசகம் ஓதினால் (திருமுறைகள் அனைத்தும்தாம்) நாளெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கலாம் போலத் தோன்றும்.

இவர் பிறந்த ஊர் சோழநாட்டுத் திருத்தலமாகிய திருவீழிமிழலை அருகே உள்ள ஆண்டார்பந்தி. பெற்றோர் : பாலசுப்பிரமணிய தேசிகர், ஞானாம்பாள். பரம்பரைச் சைவக் குடும்பம். 09.02.1974-இல் பிறந்த இவர் இளமையில் தேவார இசை பயின்றது தேவார இன்னிசைவேந்தர் திருவாவடுதுறை து. சோமசுந்தர தேசிகர் அவர்களிடம். அவர் இவருக்குப் பெரிய தந்தையார்.

பின்னர் சிதம்பரத்தில் வி.எஸ். டிரஸ்ட் தேவார பாடசாலையில் பயின்று தேர்ச்சி பெற்றார். தனியே கர்நாடக சங்கீதமும் பயின்றார்.

புகழ்பெற்ற மயிலைக் கபாலீச்சுரத்தில் புகழ்பூத்த ஓதுவாராகப் பணியாற்றி வருகிறார். சென்னையில் தியாகராயநகர் உஸ்மான்ரோடில் அமைந்துள்ள தருமபுர ஆதீன சமயப்பிரச்சார நிலையத்தில் மாணவர்களுக்குத் தேவாரம் பயிற்றுவிப்பதைப் பகுதி நேர மதிப்பியற் பணியாகவும் செய்து வருகிறார்.

நற்குண நற்செயல்கள் மிக்கவராய் பழகுதற்கு இனியராய் உள்ள இவ்விளந்தலைமுறை ஓதுவாருக்கு ஒளிமயமான ஒரு நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது.

முகவரி : **''திருவாசகச் செந்நாவலர்'' பா. சற்குருநாதன்**
7/4, வாயிலார் நகர்
மயிலாப்பூர், சென்னை - 600 004
அலைபேசி : 94444 82725

பின்இணைப்பு 18

ஊரன் அடிகள் இயற்றிய சைவ ஆத்திசூடி

அன்பே சிவம்	வழிபாட்டு நெறி நில்
ஆணவம் தவிர்	உழவாரப்பணி செய்
இறைபணி செய்	அளவறிந்து உண்
ஈதலே இன்பம்	அறக்கருணை காட்டு
உழைப்பே உயர்வு	தன்னிறைவு கொள்
ஊருக்கு உழை	கங்கை யாடு
எட்டிரண்டறி	காசி யாத்திரை செய்
ஏகான்மவாதம் தவிர்	கிரமந் தவறேல்
ஐந்தெழுத்தோது	கீழோரோ டிணங்கேல்
ஒழுக்கத்துடன் வாழ்	குருவை நாடு
ஓங்காரம் ஓது	கூட்டுவழிபாடு செய்
ஔவையைப் போற்று	கெடுதல் எண்ணேல்
அஃறிணைக்கும் இரங்கு	கேடற்றன செய்
கயிலையை தரிசி	கைங்கரியம் புரி
எங்கும் சிவமயம்	கொள்கைவழி நில்
சங்கமரைப் போற்று	கோயில்வழிபாடு செய்
பஞ்சபுராணம் பாடு	சச்சிதானந்தம் அறி
அட்டமூர்த்தம் அறி	சாத்திரப் பயிற்சிகொள்
உணர்வுடன் வாழ்	சித்தாந்த நெறிநில்
தத்துவவிசாரம் செய்	சீவவதை செய்யேல்
நந்தி நெறி நில்	சுயநலம் குறை
பண்டாரசாத்திரம் பயில்	சூழ்ந்தாரைத் தாங்கு
மடங்களை வழிபடு	செருக்கு அறு
யகரத்தை உணர்	சேக்கிழாரைப் போற்று
ரசோகுணம் தவிர்	சைவஉணவு கொள்
லிங்கவழிபாடு செய்	சொல்லியபாட்டின் பொருளுணர்

சோகம்பாவனை செய்	பூசனை தவறேல்
தலயாத்திரை செய்	பெரியோரைப் பிழையேல்
தாவரஉணவு கொள்	பேய்களுக் கஞ்சேல்
திருமுறை ஓது	பையில் நூல் வை
தீக்கை பெறு	பொதுநலம் வளர்
துறந்தாரைப் போற்று	போலிப்பெருமை தவிர்
தூய்மை கடைப்பிடி	மந்திரம் செபி
தென்னாடுடையசிவன் எந்நாட்டவர்க்கும் இறை	மாகேஸ்வரபூசை செய்
	மித்திரனாய் இரு
தேகப்பயிற்சி செய்	மீட்டிங்குவாரா நெறி அறி
தைரியங்கொள்	முப்பொருளுண்மை தேர்
தொண்டுபல செய்	மூவாசை குறை
தோத்திரம் தவறேல்	மெய்கண்டார் வழிநில்
நந்தவனப் பணிசெய்	மேன்மக்களோடிணங்கு
நால்வர் வழிநில்	மைத்திரிபாவனை செய்
நியமந் தவறேல்	மொழிப்பயிற்சி கொள்
நீரில்லா நெற்றிபாழ்	மோகம் அகற்று
நுண்ணுணர்வு கொள்	வம்பு தவிர்
நூல்நுட்பம் உணர்	வாது புரியேல்
நெஞ்சுரங்கொள்	விருந்தோம்பு
நேர்வழி செல்	வீணுரை தவிர்
நைவேத்தியம் செய்	உருத்திராக்கம் அணி
நொந்து கொள்ளேல்	ஊழையும்வெல்ல முயல்
நோன்பு இரு	வெண்ணீறு அணி
பரபரக்க வேண்டாம்	வேண்டாதன செயேல்
பாசப் பற்றறு	வைதாரையும் வாழ்த்து
பிராணாயாமம் செய்	ஒப்புரவு கொள்
பீடம் போற்று	ஓடும்செம்பொனும் ஒக்கநோக்கு
புலைகொலை தவிர்	

பின்இணைப்பு 19

ஊரன் அடிகள்
இயற்றிய
சன்மார்க்க ஆத்திசூடி

அருட்பெருஞ்ஜோதி	பசித்திரு, தனித்திரு, விழித்திரு
ஆண்டவன் ஒருவனே	மனத்தைக் கட்டு
இயற்கைத் தொன்மையே சன்மார்க்கம்	அயலார்பொருள் நயவேல்
ஈதலே இன்பம்	இரக்கத்தோடிரு
உயிர் நலம் பரவுக	உலகுயிர்கள் பொது
ஊழையும் உப்பக்கம்காண்	வழிபாடு தவறேல்
எம்மதமும் சம்மதம்	உழைப்பே உயர்வு
ஏகாந்தம் இனிது	அளவறிந்து உண்
ஐந்தெழுத்துண்மைதேர்	இறந்தாரைச் சமாதிசெய்
ஒருமைப்பாடு கொள்	அன்னதானம் செய்
ஓருலகம் காண்	கர்மகாரியங்கள் வேண்டா
ஔடதம் குறை	காது குத்தேல்
அஃகி அகன்ற அறிவுபெறு	கிரமமாய் ஒழுகு
கருணையும் சிவமுமே பொருள்	கீழ்மை அகற்று
	குண்டலிப் பயிற்சிசெய்
எங்கும் ஒளிமயம்	கூடித்தொழு
சன்மார்க்கம் நன்மார்க்கம்	கெடுமதி விலக்கு
விஞ்ஞான உணர்வுகொள்	கேள்விஞானம் பெருக்கு
உடம்புளே உத்தமனைக் காண்	கையாந்தகரை தூதுளை உண்
	கொலைபுலை தவிர்
அண்டத்திலுள்ளது பிண்டத்தில்	கோபம் பாவம்
	சங்கத்தில் சேர்
தத்துவ வெற்றிகொள்	சாகாக்கலை பயில்
இந்திரியம் அடக்கு	சிறுதெய்வம் சேரேல்

சீவகாருண்யம் கொள்
சும்மா இரு
சூக்குமம் உணர்
செயலாண்மை கொள்
சேவையே இன்பம்
சைவ்உணவு கொள்
சொல்வதுபோல் செய்
சோதியை வழிபடு
தன்னை அறி
தானென்றிராதே
திருஅருட்பா ஓது
தீங்கை மற
துன்பத்துள் இன்பம்காண்
தூக்கம் குறை
தெய்வந் தெளி
தேகசித்தி பெற முயல்
தைப்பூசங் காண்
தொண்டனாய் இரு
தோழமை பேண்
நடுநிலை தவறேல்
நாத்திகம் பேசேல்
நிந்தை செய்யேல்
நீர்மையாய் ஒழுகு
நுட்பமாய் உணர்
நூலாய்வு செய்
நெஞ்சம் கோயிலாக்கு
நேரம் போற்று
நைட்டிகனாய் இரு
நொந்தார்க் குதவு
நோவன செய்யேல்
பரோபகாரம் செய்
பாடிப்பணி

பிரமசரியம் போற்று
பீடுநடை கொள்
புருவமத்தியில் நில்
பூவினைப் பறியேல்
பெருந்தன்மை கொள்
பேதம் தவிர்
பையில் நூல்வை
பொதுநலம் வளர்
போகத்தில் அளவாயிரு
மரணபயம் தவிர்
மாமிசம் விலக்கு
மிகுபொருள் விரும்பேல்
மீதானம் சேர்
முட்டையும் அசைவமே
மூடப்பழக்கவழக்கந் தவிர்
மென்மையாய் ஒழுகு
மேன்மைபெற முயல்
மைதுனம் குறை
மொழிபல கல்
மோனம் கடைப்பிடி
வள்ளலார் வழிநில்
வாயுவைக் கட்டு
விந்துவைக் கட்டு
வீடுபெற விரும்பு
உயிரனுபவம் பெறு
ஊர்த்துவரேதஸ் ஆக்கு
வெறுப்பன செய்யேல்
வேறுபாடு கருதேல்
வையம் பொதுமைசெய்
ஒருமையில் இருமையும் பெறு
ஓதியபடி ஒழுகு

பின்இணைப்பு 20

இந்நூலாசிரியர் ஊரனடிகளார் வாழ்வும் பணிகளும்

பெயர்	:	ஊரன் அடிகள்
சிறப்புப் பெயர்	:	(தீட்சா திருநாமம்) சன்மார்க்கதேசிகன்
முகவரி	:	தபால்பெட்டி எண். 2 வடலூர் - 607 303 - கடலூர் மாவட்டம் (இது சுருக்கமான முகவரி) மனை எண். 64, முருகேசன் சாலை. என்.எல்.சி. ஆபீசர்ஸ் நகர், வடலூர் - 607 303, கடலூர் மாவட்டம். (இது இருப்பிட முகவரி)
தொலைபேசி	:	04142 - 259382; செல் : 94437 29881
பிறப்பு	:	22.05.1933, வைகாசி 9, பரணி
ஊர்	:	நரசிங்கமங்கலம், சமயபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்
பெற்றோர்	:	இராமசாமி பிள்ளை நாகரத்தினம் அம்மையார்
மரபு	:	பரம்பரைச் சுத்தசைவ வேளாளர் மரபு
கல்வி	:	இண்டர்மீடியட், பொறியியல் சான்றிதழ்
பூர்வாசிரமப்பணி	:	நகரமைப்பு ஆய்வாளர் (டவுன் பிளானிங் & பில்டிங் இன்ஸ்பெக்டர்) ஸ்ரீரங்கம், வேலூர், திருச்சிராப்பள்ளி நகராட்சிகள் (பதின்மூன்று ஆண்டுகள் 1955-67)
துறவு	:	22.05.1967. 35-ஆம் அகவைத் தொடக்க நாளில் துறவு. துறவு யாரிடமும் பெற்றதன்று. தாமே பூண்டது.

குரு : (இளமையில்) வித்தியாகுரு -
தாய்வழிப் பாட்டனார்
ஆ. சுப்பாபிள்ளை, ஆசிரியர்.
யோககுரு - காசிசுவாமிகள் சமயபுரம்.
ஞானகுரு
திருவருட்பிரகாச வள்ளற்பெருமான்
இராமலிங்க சுவாமிகள்

வடலூர்ப் பணிகள் : துறவு பூண்டபின் 1969 முதல் நாற்பதாண்டுகளாக வடலூர் வாழ்க்கை.

1969 முதல் 13 ஆண்டுகள் வடலூரில் முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் நிறுவிய சுத்த சன்மார்க்க நிலையத்தின் கௌரவச் செயலாளர். தற்போது துணைத்தலைவர்.

1970 முதல் தொடர்ந்து 32 ஆண்டுகள் வள்ளற்பெருமான் நிறுவியருளிய சத்திய தருமச்சாலை சத்தியஞானசபை முதலிய வள்ளலார் தெய்வநிலையத்திற்கு, அறங்காவலர், அறங்காவலர்குழுத் தலைவர், தக்கார், திருப்பணிக்குழுத் தலைவர்.

ஆய்வு நிலையம் : 1955.05.22-இல்
இருபத்திரண்டாம் அகவை நிறைவு நாளில் சொந்த ஊர் சமயபுரத்தில் சமரச சன்மார்க்க ஆராய்ச்சிநிலையம் ஏற்படுத்தி, தொடர்ந்து இன்றுவரை ஆய்வுப்பணி.

வெளியிட்ட நூல்கள் : **சன்மார்க்க நூல்கள்**

1. வடலூர் வரலாறு
2. இராமலிங்கரும் தமிழும்
   2 பதிப்புகள்
3. இராமலிங்க அடிகளின் சிதம்பர
   அனுபவங்கள்

4. புள்ளிக்குவேளூரில் வள்ளலார்
5. வடலூர் திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையங்களின் வரலாறு
6. இராமலிங்க அடிகள் வரலாறு
   தமிழக அரசின் பரிசுபெற்ற நூல்
   3 பதிப்புகள்
7. இராமலிங்க அடிகள் வரலாறு, கொள்கைகள், பாடல்கள் (சிறுநூல்)
8. வள்ளலார் மறைந்தது எப்படி - சாகாக்கலை ஆராய்ச்சி
9. வள்ளலார் கண்ட முருகன்
10. வடலூர் ஓர் அறிமுகம்
11. வள்ளலார் வாக்கில் ஓங்காரமும் பஞ்சாக்கரமும்
12. புரட்சித்துறவி வள்ளலார்
    4 பதிப்புகள்
13. வள்ளலார் உபதேசித்த நித்திய கருமவிதிகள்
14. அன்னதான பலன்
15. மனிதநேயமும் ஆன்மநேயமும்
    2 பதிப்புகள்

சைவ நூல்கள்

பாடல்பெற்ற திருத்தலத்து இறைவன் இறைவி போற்றித் திருப்பெயர்கள் (சிறுநூல்)

திருவைந்தெழுத்தின் திறவு (பஞ்சாக்கர விளக்கம்)

சைவ ஆத்திசூடி
சன்மார்க்க ஆத்திசூடி } (சிறு நூல்கள்)

சைவ ஆதீனங்கள்
வீரசைவ ஆதீனங்கள் } (பெரு நூல்கள்)

ஒப்பாய்வு நூல்கள்

சைவ சித்தாந்தமும் சமரச சுத்த சன்மார்க்கமும்

கம்பரும் வள்ளலாரும்

'வாழையடி வாழை' வரிசை

1. மகாவீரரும் வள்ளலாரும்
2. புத்தரும் வள்ளலாரும்
3. வள்ளுவரும் வள்ளலாரும்
4. திருமூலரும் வள்ளலாரும்
5. சம்பந்தரும் வள்ளலாரும்
6. அப்பரும் வள்ளலாரும்
7. சுந்தரரும் வள்ளலாரும்
8. மாணிக்கவாசகரும் வள்ளலாரும்
9. தாயுமானவரும் வள்ளலாரும்
10. வள்ளலாரும் காந்தியடிகளும்
11. வள்ளலாரும் பாரதியாரும்

பொது நூல்கள்

வள்ளலார் காந்தி பணியில் அருட்செல்வர்

சாதியும் மதமும்

பதிப்புகள்

திருஅருட்பா 6 திருமுறைகளும் ஒரே புத்தகமாக (1330 பக்கங்கள்)

திருஅருட்பா
முதல் ஐந்து திருமுறைகள்
(3 பதிப்புகள்)

திருஅருட்பா ஆறாம் திருமுறை
(3 பதிப்புகள்)

திருஅருட்பா ஊரன் அடிகள் திரட்டு
(2 பதிப்புகள்)

திருஅருட்பா உரைநடைப்பகுதி (வள்ளலாரின் உரைநடை நூல்கள் அனைத்தும் ஒரே தொகுதியாக)

பிறவகை

சொற்பொழிவு நூல்கள், மாநாடுகளில் அச்சிட்டு வழங்கியவை.

விழா மலர்கள் முதலிய வகையில் பல

அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்	:	அண்ணாமலை, சென்னை, அழகப்பா பல்கலைக்கழகங்களில் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் பல. மதுரை, புதுவைப் பல்கலைக்கழகங்களில் கருத்தரங்க அமர்வுத் தலைமையும் பல.
அயல்நாட்டுப் பயணங்கள்	:	மலேசியா (நான்கு முறை - 1980, 2001, 2007-இல் இருமுறை) சிங்கப்பூர் 1980 இலங்கை (இரண்டு முறை - 1994, 2005) தென் ஆப்பிரிக்கா 1996 மொரிஷியஸ் 1996 பாரிஸ் (இரண்டு முறை - 1997, 2005) லண்டன் 1997 ஜெர்மனி 1997 குவைத் 2000
பட்டங்கள் - விருதுகள்	:	அருள்விளக்க சீலர் புதுடெல்லி சன்மார்க்க சங்கம் தத்துவவித்தகர் - மலேசிய அன்பர்கள் ஒளிநெறிப்பிழம்பு முத்தமிழ் மன்றம், வாணியம்பாடி

		தர்மப்பிரசாரசாகரம் - காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள்
		அருளியல் ஞானி தமிழ் இலக்கிய மன்றம், குவைத்
		சன்மார்க்க சீலர் தருமபுர ஆதீனம் குருமகாசந்நிதானம்
தற்போதிய பணிகள்	:	மூத்த துணைத் தலைவர் சுத்த சன்மார்க்க நிலையம் (முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூரார் நிறுவணங்கள்) வடலூர்.
		மூத்த துணைத்தலைவர் தமிழக இந்து துறவியர் பேரவை
		பாடத்திட்டக்குழு உறுப்பினர் தத்துவத்துறை சென்னைப் பல்கலைக்கழகம்
குறிக்கோள்	:	என் கடன் பணிசெய்து கிடப்பதே
எதிர்காலத் திட்டங்கள்	:	திருஅருட்பா ஆறு திருமுறைக்கும் உரை எழுதி வெளியிடுதல். திருஅருட்பாவுக்குப் பொறப்திப்பு (அசல் 24 கேரட் தங்கமுலாம் பூசிய பதிப்பு) ஒன்றை வெளியிடுதல். ஆய்வு நூல்கள் பலவற்றை எழுதி வெளியிடுதல் மற்றும் பல

பின்இணைப்பு 21

சைவ ஆதீனங்கள்

முதற்பதிப்பு வெளியீட்டு விழா அழைப்பிதழ்

"சைவ ஆதீனங்கள்" நூல் வெளியீட்டு விழா

22.05.2002

சர் பிட்டி தியாகராயர் கலையரங்கம்
ஜி.என். செட்டி சாலை
தியாகராய நகர், சென்னை - 600 017.
(கண்ணதாசன் சிலை அருகில்)

அன்புடையீர்!

வாழ்க! வாழ்க!!

சைவ ஆதீனங்கள் அனைத்தின் வரலாறுகளும் ஒரே நூலாக இதுவரை வெளிவந்ததில்லை. முதன் முதலாக இப்போது நாம் வெளியிடுகிறோம். 18 சைவ ஆதீனங்கள், 12 வீரசைவ ஆதீனங்கள், 2 கௌமார மடங்கள் ஆக 32 ஆதீனங்களின் வரலாறுகள் இதனுட் கூறப்பெறுகின்றன. இதன் வெளியீட்டுவிழா நூலாசிரியரின் 70-ஆம் அகவைத் தொடக்கநாளில் (22.05.2002) மேற்குறித்த இடத்தில் நிகழவிருக்கிறது. அனைத்து ஆதீனங்களின் வரலாறு என்பதற்கேற்ப அனைத்து ஆதீனங்களின் குருமகாசந்நிதானங்களும் எழுந்தருளி முன்னிலை வகித்து வாழ்த்தத் திருவுளம் பற்றி அருளியிருக்கிறார்கள். வெளியீட்டுவிழாவில் கலந்துகொண்டு மகிழவும் பயன்பெறவும் தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

வாழ்க! வாழ்க!!

ஊரன் அடிகள்
சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம்
தபால் பெட்டி எண் : 2
வடலூர் - 607 303
கடலூர் மாவட்டம்
தொலைபேசி : 04142 - 259382

நிகழ்ச்சி நிரல்

22.05.2002, வைகாசி 8, புதன்

மாலை 4.00 - 5.00	: திருமுறை திருஅருட்பா இசை (துணைக்கருவிகளுடன்) பெரும்பாணநங்கை டாக்டர் களக்காடு **ஆர். சீதாலட்சுமி அம்மையார்,** இசை ஆசிரியர், இராணி மேரி கல்லூரி, சென்னை.
மாலை 5.00 இறைவணக்கம்	: பெரும்பாணநம்பி **மா. கோடிலிங்கம்,** பி.ஏ.,
வரவேற்புரை	: பேராசிரியர் **அரங்க இராமலிங்கம்**
நூல் அறிமுகஉரை	: **ஊரன் அடிகள்**
தலைமை	: திருவாவடுதுறை ஆதீனம் குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் **சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்**
முன்னிலை	: **அனைத்து ஆதீன குருமகாசந்நிதானங்கள்**
நூல் வெளியீடு	: திருப்பனந்தாள் காசித்திருமடம் அதிபர் திருவளர்திரு **காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்**
முதற்படி பெறுபவர்	: அருட்செல்வர் டாக்டர் **நா. மகாலிங்கம்** கலைமாமணி டாக்டர் **நல்லி குப்புசாமி செட்டியார்**
சிறப்புரை	: குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் குருமகாசந்நிதானம் தவத்திரு **பொன்னம்பல அடிகளார்** பேரூர் ஆதீனம் குருமகாசந்நிதானம் தவத்திரு **சாந்தலிங்க இராமசாமி அடிகளார்**
வாழ்த்துரை	: **அனைத்து ஆதீன குருமகாசந்நிதானங்கள்**
நூலாசிரியர் நிறைவுரை	: **ஊரன் அடிகள்**
நன்றியுரை	: புலவர் **சி.வெ. சுந்தரம்**
முன்னிரவு 9.00 நிறைவு வாழ்த்து	: பெரும்பாணநம்பி **மா. வைத்தியலிங்கம்**

முன்னிலையும் வாழ்த்தும்

திருவாவடுதுறை ஆதீனம் குருமகாசந்நிதானம்

சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம் ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருப்பனந்தாள் காசித்திருமடம் அதிபர்

திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்

சூரியனார்கோயில் ஆதீனம் குருமகாசந்நிதானம்

சீர்வளர்சீர் சங்கரலிங்க தேசிக பரமாசாரிய சுவாமிகள்

தொண்டைமண்டல ஆதீனம் குருமகாசந்நிதானம்

சீலத்திரு திருவம்பல தேசிக ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள்

மதுரை ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் குருமகாசந்நிதானம்

திருவருள்திரு தெய்வசிகாமணி பொன்னம்பலதேசிக பரமாசாரிய சுவாமிகள் (தவத்திரு பொன்னம்பல அடிகளார்)

துழாவூர் ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ நிரம்ப அழகிய ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள்

வேளாக்குறிச்சி ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அஜபாநடேஸ்வர பண்டார சந்நிதிகள்

செங்கோல் ஆதீனம் குருமகாசந்நிதானம்

சீர்வளர்சீர் கல்யாணசுந்தர சத்தியஞான பண்டார சந்நிதிகள்

நாச்சியார்கோயில் ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ மருதவாண தேசிக சுவாமிகள்

வரனி ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ செவ்வந்திநாத பண்டார சந்நிதிகள்

மயிலம் பொம்மபுர ஆதீனக் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்

பேரூர் ஆதீனம் குருமகாசந்நிதானம்

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

சிரவையாதீனம் கௌமார மடாலயம் குருமகாசந்நிதானம்

தவத்திரு குமரகுருபர சுவாமிகள்

திருவண்ணாமலை துறையூர் ஆதீனம் திருமுதுகுன்றம் குமாரதேவர் மடம் குருமகாசந்நிதானம்

சீர்வளர்சீர் கல்யாணசுந்தர சிவப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள்

திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சிவஞான சுவாமிகள்

கும்பகோணம் ஸ்ரீ சாரங்கதேசிகேந்திர சுவாமிகள் பெரியமடம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ ஜெகத்குரு நீலகண்ட சாரங்க தேசிகேந்திர மகாசுவாமிகள்

திருக்கோவலூர் ஆதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம் குருமகாசந்நிதானம்

சிவத்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்

சிதம்பரம் மௌனசுவாமிகள் மடாலயம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ மௌன சுந்தரமூர்த்தி சுவாமிகள்

சிதம்பரம் புதுச்சேரி அம்பலத்தாடையர் மடம்

ஸ்ரீலஸ்ரீ கனகசபை தேசிக பரமாசாரிய சுவாமிகள்

நூற்படிகள் பெறுவோர் (தொடர்ச்சி)

ப. மூக்கப்பிள்ளை, *தலைவர், சைவசித்தாந்த சபை, திருச்சிராப்பள்ளி.*

வேளாண்மாமணி **கே. முத்துமல்லா ரெட்டியார்,** *புலம்பாக்கம்*

இல்லறஞானி **நா. பூமலை,** *பரவளூர்*

சி.எஸ். குப்புராஜ், *பி.ஈ., சைவ-சன்மார்க்க சிந்தனையாளர் மேடை*

எஸ். தியாகராசன், *பி.ஈ., சதர்ன் அலாய் பவுண்டரீஸ்.*

எம்.ஆர். தாமோதரன், *பொறியாளர் (ஓய்வு)*

ஏ. மோகன், *பி.எஸ்.ஸி., எப்.சி.ஏ., ஆடிட்டர், கல்வியாளர்*

சைவ ஆதீனங்கள் முதற்பதிப்பின் வெளியீட்டு விழாவுக்கு எழுந்தருளிச் சிறப்பித்த குருமகாசந்நிதானங்கள்

சைவ ஆதீனங்கள்

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் குருமகாசந்நிதானம்

திருவளர்திரு தெய்வசிகாமணி பொன்னம்பலதேசிக பரமாசாரிய சுவாமிகள் (தவத்திரு பொன்னம்பல அடிகளார்)

திருப்பனந்தாள் காசித்திருமடம் அதிபர்

திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்

தொண்டைமண்டல ஆதீனம் குருமகாசந்நிதானம்

சீலத்திரு திருவம்பல தேசிக ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள்

துழாவூர் ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ நிரம்ப அழகிய ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள்

நாச்சியார்கோயில் ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ மருதவாண தேசிக சுவாமிகள்

வேளாக்குறிச்சி ஆதீனம் இளவரசு

ஸ்ரீமத் சத்தியஞான தேசிக சுவாமிகள்

திருவாவடுதுறை ஆதீனம் சார்பில் காஞ்சிபுரம் கிளைமடம்

சீர்மன்னு சுந்தரமூர்த்தித் தம்பிரான் சுவாமிகள்

தருமபுர ஆதீனம் சார்பில்
சென்னையிலுள்ள தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையத்தின் மேலாளர்

வீரசைவ ஆதீனங்கள்

பேரூர் ஆதீனம் குருமகாசந்நிதானம்

சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

திருவண்ணாமலை துறையூர் ஆதீனம்
திருமுதுகுன்றம் குமாரதேவர் மடம் குருமகாசந்நிதானம்

சீர்வளர்சீர் கல்யாணசுந்தர சிவப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள்

திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சிவஞான சுவாமிகள்

திருக்கோவலூர் ஆதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம் குருமகாசந்நிதானம்

சிவத்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்

சிதம்பரம் மௌனசுவாமிகள் மடாலயம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ மௌன சுந்தரமூர்த்தி சுவாமிகள்

பின்இணைப்பு 22

சைவ ஆதீனங்கள் - இரண்டாம் பதிப்பு
வீரசைவ ஆதீனங்கள் - முதற் பதிப்பு

வெளியீட்டு விழா அழைப்பிதழ் 29.09.2009

சைவ ஆதீனங்கள், வீரசைவ ஆதீனங்கள்,
புரட்சித்துறவி வள்ளலார்,
பத்மபூஷண் அருட்செல்வர், பத்மஸ்ரீ நல்லி

நூல்கள் வெளியீட்டு விழா

மாண்புமிகு அமைச்சர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்
தினமலர் ஆசிரியர் டாக்டர் இரா. கிருஷ்ணமூர்த்தி
பத்ம விருது பெற்ற பெருந்தகையாளர்கள்
சன்மார்க்க சங்கங்கள், சன்மார்க்க அன்பர்கள்

பாராட்டு விழா

நூலாசிரியர் ஊரன் அடிகளார் பவளவிழா

29.09.2009 செவ்வாய்க்கிழமை
மாலை 5.00 - 9.00 மணி
நாரத கான சபா
ஆழ்வார்பேட்டை, சென்னை - 18.

தவத்திரு ஊரன் அடிகளார்
சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம்
தபால்பெட்டி எண். 2,
மனை எண். 64, முருகேசன் சாலை,
என்.எல்.சி. ஆபிசர்ஸ் நகர்,
வடலூர் – 607 303, கடலூர் மாவட்டம்.
தொலைபேசி : (04142) - 259382, செல் : 94437 29881

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி - தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

அன்புடையீர்! வாழ்க! வாழ்க!!

சைவ ஆதீனங்கள் முதற்பதிப்பு 2002-இல் வெளிவந்தது. சென்னையில் நிகழ்ந்த வெளியீட்டு விழாவில் 13 ஆதீனகர்த்தர்கள் எழுந்தருளிச் சிறப்பித்தார்கள். விழா மேடை சிவலோகக் காட்சியாக இருக்கிறதென்று அருட்செல்வர் முதலாக அன்பர்கள் எல்லாரும் பாராட்டி மகிழ்ந்தனர்.

சைவ ஆதீனங்கள் இரண்டாம் பதிப்பும், **வீரசைவ ஆதீனங்கள்** முதற் பதிப்பும் இப்போது வெளிவருகின்றன.

புரட்சித்துறவி வள்ளலார் நான்காம் பதிப்பு வெளி வருகிறது.

பத்ம விருது பெற்ற நம் நண்பர்கள் நால்வரைப் பாராட்டுகிறோம். **பத்மபூஷண் அருட்செல்வர், பத்மஸ்ரீ நல்லி** என்ற இருநூல்களையும் வெளியிடுகிறோம்.

ஆழ்வார்கள் ஆய்வுமையம் நிறுவியும், ஒரு பல்கலைக் கழகத்தையே நிறுவியும் பெரும் பணிகளைச் செய்துவரும் அன்பர் **மாண்புமிகு டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்** அவர்கள் இப்போது மத்திய அமைச்சராகியுள்ளார். அவரை இவ் விழாவில் பாராட்டி மகிழ்கிறோம்.

தினமணி, தினமலர் ஆகிய இரு இதழ்களுக்கும் நாம் ஐம்பதாண்டு கால வாசகர். **தினமலர் ஆசிரியர் டாக்டர் இரா. கிருஷ்ணமூர்த்தி** அவர்கள் உலகப் புகழ்பெற்ற நாணயவியல் நிபுணரும் ஆவார். அவரது பல்துறைப் புலமைக்காகவும் பணிகளுக்காகவும் அவரை இவ்விழாவில் பாராட்டி மகிழ்கிறோம்.

தமிழ்ப்பேராசிரியரும் சைவப்பேரறிஞரும் சிறந்த சொற்பொழிவாளருமான நம் நண்பர் **பேராசிரியர் டாக்டர் இரா. செல்வக்கணபதி** அவர்கள் சைவக்கலைக்களஞ்சியம் ஒன்றைப் பெரிய அளவில் தொகுத்து வருகிறார். வரும் 2010-இல் அது வெளியாக இருக்கிறது. மிகப்பெரிய

பணியை எடுத்துக்கொண்டு செய்துவரும் பேராசிரியரும் இவ்விழாவில் பாராட்டப் பெறுகிறார்.

சென்னையில் சிறப்பாகப் பணியாற்றி வரும் சன்மார்க்க சங்கத்தினரும், சன்மார்க்க அன்பர்களும், வடலூரில் சிறப்பாகப் பணியாற்றிவரும் அன்பர்களும் பாராட்டப்பெறுகின்றனர்.

நம் 75 நிறைவுப் பவளவிழா 22.05.2008-இல் நடைபெற வேண்டியது. இந்த நூல்கள் அப்போது எழுதி முடியாமல் இருந்ததால், ஏற்பாடு செய்யப்பெற்ற பவளவிழாவையே தள்ளிவைக்க நேரிட்டது. இப்போது இந்நூல்களின் வெளியீட்டுவிழாவுடனும், அன்பர்களுக்கு அளிக்கும் பாராட்டு விழாவுடனும், பவளவிழாவும் சேர்கிறது.

ஆதீன குருமகாசந்நிதானங்கள் அனைவரும் இவ்விழாவுக்கு எழுந்தருளிச் சிறப்பிக்கத் திருவருள் கூட்டுவித்துள்ளது. சென்னையில் மீண்டும் ஒரு சிவலோகக் காட்சியை அன்பர்கள் கண்டு மகிழ அழைக்கிறோம்.

வாழ்க! வாழ்க!!

கே.ஆர். சுப்பிரமணியம், திருப்பூர் — அன்பன்

குறிஞ்சி ஞான. செல்வநாதன் — *ஊரன் அடிகள்*

விழா அமைப்பாளர்கள்

29.09.2009 செவ்வாய் மாலை 5.00 - 9.00 மணி

நாரதகான சபா, ஆழ்வார்பேட்டை, சென்னை.

கடவுள் வாழ்த்து	: மா. கோடிலிங்கம்
வரவேற்புரை	: மா. வைத்தியலிங்கம்
அறிமுக உரை	: ஊரன் அடிகள்
தலைமை	: திருவாவடுதுறை ஆதீன குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

முன்னிலை : **சைவ ஆதீனங்கள்,**
வீரசைவ ஆதீனங்களின்
குருமகாசந்நிதானங்கள்

தொடக்கவுரை : மயிலம் பொம்மபுர ஆதீன
குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள்

மலர் வெளியீடு : **பத்மபூஷண் அருட்செல்வர்**

மலர் பெறுவோர் : **பத்மஸ்ரீ நல்லி**
இல்லறஞானி **நா. பூமலை,** பரவலூர்
சித்ரா மு. இராமசாமி, திருப்பூர்
கே.ஆர். சுப்பிரமணியம், திருப்பூர்
குறிஞ்சி **ஞான. செல்வநாதன்,** குறிஞ்சிப்பாடி
புலவர் **சுப. இராமச்சந்திரன்,** மதுரை

நூல் வெளியீடு

1. சைவ ஆதீனங்கள்

வெளியிடுவோர் : தினமலர் **இரா. கிருஷ்ணமூர்த்தி**

பெறுவோர் : **முனைவர் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்**
தருமபுர ஆதீனம்

சுந்தரமூர்த்தித் தம்பிரான் சுவாமிகள்
இளைய அதிபர், திருப்பனந்தாள் காசித்திருமடம்

சிவ. ப. மூக்கப்பிள்ளை
தலைவர், திரிசிரபுரச் சைவசித்தாந்த சபை
தலைவர், திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கம்

2. வீரசைவ ஆதீனங்கள் கௌமார மடங்கள்

வெளியிடுவோர் : **பத்மபூஷண் அருட்செல்வர்**

பெறுவோர் : **தவத்திரு மருதாசல அடிகளார்**
பேரூராதீனம் இளைய பட்டம்

தவத்திரு குமரகுருபர சுவாமிகள்
சிரவை ஆதீனம் கௌமார மடம்

கவிஞர் ஆ. திருவாசகன்
ஆசிரியர், "வீரசைவமுரசு"

3. புரட்சித்துறவி வள்ளலார்

வெளியிடுவோர் : அருளாளர் **இராம. வீரப்பன்**

பெறுவோர் : மாண்புமிகு டாக்டர் **எஸ். ஜெகத்ரட்சகன்**

4. பத்மபூஷண் அருட்செல்வர்

வெளியிடுவோர் : மாண்புமிகு **எஸ். ஜெகத்ரட்சகன்**

பெறுவோர் : **பத்மஸ்ரீ நல்லி**

5. பத்மஸ்ரீ நல்லி

வெளியிடுவோர் : டாக்டர் **ஔவை நடராசன்**

பெறுவோர் : **பத்மபூஷண் அருட்செல்வர்**

பாராட்டப்பெறும் பெருந்தகையாளர்கள்

மத்திய இணை அமைச்சர்

மாண்புமிகு டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்

உலகப் புகழ்பெற்ற நாணயவியல் நிபுணர்

தினமலர் ஆசிரியர் **டாக்டர் இரா. கிருஷ்ணமூர்த்தி**

பாராட்டப்பெறும் பத்ம விருதாளர்கள்

பத்மபூஷண் அருட்செல்வர் **டாக்டர் நா. மகாலிங்கம்**

பத்மஸ்ரீ **டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார்**

பத்மஸ்ரீ **டாக்டர் சீர்காழி கோ. சிவசிதம்பரம்**

பத்மபூஷண் **டாக்டர் வை. கணபதி ஸ்தபதியார்**

பாராட்டப்பெறும் ஆய்வு நிறுவனங்கள்

ஆழ்வார்கள் ஆய்வு மையம்

நிறுவனர் செயலர் மாண்புமிகு டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்

சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை

நிறுவனர் ஆய்வாளர் பேராசிரியர் டாக்டர் இரா. செல்வக்கணபதி

பாராட்டப்பெறும் சன்மார்க்க சங்கங்கள், சன்மார்க்க அன்பர்கள்

சிந்தாதிரிப்பேட்டை சமரச சுத்த சன்மார்க்க அறக்கட்டளை,
சிந்தாதிரிப்பேட்டை

வள்ளலார் தொண்டு நிறுவனம் - சன்மார்க்க சங்கம், நெசப்பாக்கம்
(கன்னியப்ப சுவாமிகள்)

அருள்ஞானப் பெருவெளி, கோடித்தண்டலம் (நடராசபுரம்) மற்றும் **கிளைகள்**

செங்கை இறையருள் மன்றம் - வள்ளலார் அன்னதான அறக்கட்டளை, செங்கற்பட்டு

வள்ளலார் கோட்டம், அம்பத்தூர் (சிவ. திருவேங்கடம்)

வி.எஸ். அருணாசலம், எஸ்.எஸ். அண்ணாமலை எண்டர்பிரைசஸ், திருவான்மியூர்

பு.மு. கிருஷ்ணமூர்த்தி, (அருட்பண்ணை)

தி.கு. செல்வராஜ், (தமிழ்நாடு செக்யூரிட்டி & டிடக்டிவ் பீரோ)

அரிமா **க. துரைராஜ்** (சன்மார்க்க சங்கப் புரவலர்)

வடலூரில் சிறப்பாகப் பணியாற்றும் அன்பர்களுக்குப் பாராட்டு

ந. கிருஷ்ணமூர்த்தி ரெட்டியார், பெரும்புரவலர்

டாக்டர் இரா. செல்வராஜ், தாளாளர், ஓ.பி.ஆர். கல்வி நிறுவனங்கள்

மு. இராமலிங்கம், அறங்காவலர்குழுத் தலைவர், வள்ளலார் தெய்வ நிலையம்

வெ. இராமானுஜம், பா. ஜோதி, திருவருட்பா இசைச்சங்கம், செயலர், பொருளர்

என். அர்ச்சுனன், தலைவர், பேரூராட்சி, வடலூர்.

வெளியிடப்பெற்ற நூல்களின் திறனாய்வு

பேராசிரியர் முனைவர் **டாக்டர் இரா. செல்வக்கணபதி**

பாராட்டப்பெற்றோர் சார்பில் ஏற்புரை

தினமலர் ஆசிரியர் **டாக்டர் இரா. கிருஷ்ணமூர்த்தி**

மாண்புமிகு அமைச்சர் **டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்**

வாழ்த்துரை

மதுரை ஆதீனம் குருமகாசந்நிதானம் லோககுரு

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

விழாப் பேருரை

திருவருள்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

குருமகாசந்நிதானம், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்

நன்றிநவிலல்

புலவர் முனைவர் **சி.வெ. சுந்தரம்**

முன்னிலையும் அருள்வாழ்த்தும்

திருவாவடுதுறை ஆதீனம் குருமகாசந்நிதானம்

சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம் ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருப்பனந்தாள் காசித்திருமடம் அதிபர்

திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்

சூரியனார்கோயில் ஆதீனம் குருமகாசந்நிதானம்

சீர்வளர்சீர் சங்கரலிங்க தேசிக பரமாசாரிய சுவாமிகள்

தொண்டைமண்டல ஆதீனம் குருமகாசந்நிதானம்

சீலத்திரு திருவம்பல தேசிக ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள்

மதுரை ஆதீனம் குருமகாசந்நிதானம்

லோககுரு ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் குருமகாசந்நிதானம்

திருவருள்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (தவத்திரு பொன்னம்பல அடிகளார்)

செங்கோல் ஆதீனம் குருமகாசந்நிதானம்

சீர்வளர்சீர் கல்யாணசுந்தர சத்தியஞான பண்டாரசந்நிதிகள்

துழாவூர் ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ நிரம்பஅழகிய ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள்

வேளாக்குறிச்சி ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சத்தியஞான மகாதேவ தேசிக பரமாசாரிய சுவாமிகள்

நாச்சியார்கோயில் ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ மருதவாண தேசிக சுவாமிகள்

வரணி ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ செவ்வந்திநாத பண்டார சந்நிதிகள்

மயிலம் பொம்மபுர ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்

பேரூர் ஆதீனம் குருமகாசந்நிதானம்

சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

சிரவையாதீனம் கௌமார மடாலயம் குருமகாசந்நிதானம்

தவத்திரு குமரகுருபர சுவாமிகள்

திருவண்ணாமலை துறையூர் ஆதீனம்,
திருமுதுகுன்றம் குமாரதேவர் மடம் குருமகாசந்நிதானம்

சீர்வளர்சீர் கல்யாணசுந்தர சிவப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள்

திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சிவஞான சுவாமிகள்

திருக்கோவலூர் ஆதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம்
குருமகாசந்நிதானம்

சிவத்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்

கும்பகோணம் ஸ்ரீ சாரங்கதேசிகேந்திர சுவாமிகள் பெரியமடம்
குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ ஜெகத்குரு நீலகண்ட சாரங்க
தேசிகேந்திர மகாசுவாமிகள்**

சிதம்பரம் மௌனசுவாமிகள் மடம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

புதுச்சேரி அம்பலத்தாடையர் மடம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கனகசபை சுவாமிகள்

**தெளிவு குருவின் திருமேனி காண்டல்;
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்;
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்;
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே. - திருமந்திரம்**

சைவ ஆதீனங்கள் முதற்பதிப்பின் வெளியீட்டு விழாவில் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பேச்சு 22.05.2002

(குமுதம் ஜங்ஷன், ஜூன் 1-15, 2002)



சைவ சமயத்தையும், தமிழ் மொழியையும் இரண்டு கண்களாகக் கருதி வளர்த்தவர்கள் சைவ மடாதிபதிகள். பிரச்சனை என்னவென்றால், இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துருவம். ஆனால் கடந்த வாரம் அந்த அதிசயம் நடந்தது. பதினைந்துக்கும் மேற்பட்ட மடாதிபதிகள் ஒரே மேடையில் ஒன்றாகக் காட்சியளித்தார்கள்!

அந்த அற்புதத்தை நிகழ்த்திக் காட்டியவர், வடலூர் சமரச சன்மார்க்க சங்கத்தைச் சேர்ந்த ஊரன் அடிகள். சைவ ஆதீனங்கள் மற்றும் மடாலயங்களின் வரலாற்றை எழுதி, இரண்டு தொகுதிகளாகப் பதிப்பித்திருக்கிறார் அடிகள். அன்று அந்த வெளியீட்டு விழா.

தமிழகத்தில் உள்ள ஒரு பெரிய கோயிலில் குடமுழுக்கு விழா. இதை யார் நடத்தி வைப்பது என்பதில் மடாதிபதிகளுக்குள் போட்டி. குடமுழுக்கு விழாவே நின்று போய் விடுமோ என்கிற அளவுக்கு அப்போது பரபரப்பு ஏற்பட்டது. இப்போது ஒரு சேர இத்தனை மடாதிபதிகள் இணைந்து நிற்பது காணக் கிடைக்காத காட்சி. இது போன்ற சந்திப்புகள் அடிக்கடி நிகழ வேண்டும் என்று பேசினார் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்.

ஆதீனகர்த்தர்கள் ஒன்று சேருவதில், அவர்களைவிட அன்னைத் தமிழுக்குத்தானே அதிக பூரிப்பு?

ஸ்ரீஸ்ரீ

முதல் பூரிப்பு